YM 21, N08 VB
N15
219316

# விவேகபோதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி IX { நள ௵ ஆனி ௴ : 1916-௵ ஜூலை ௴ } பகுதி 1

## சிந்தனை மொழிகள்

### STRAY THOUGHTS

பல குருடர்கள் ஒரு யானையைக் கண்டு பேசிய பெருமை யார்க்குந்தெரியும் அல்லவா? ஒருவன் முறம் போலிருக்கும் என்றான்; ஒருவன் தூண்போல் இருக்கு மென்றான்; ஒருவன் துடைப்பம் போலிருக்கும் என்றான்.—இவ்விதம் அவ்வந்தகர் யானையுருவை அனுபவித்தனர். அவர்களைக் கண்ட கண்ணுடையவன் "மடையர்கள்!" என்று சிரித்தான். முறம்போலிருக்கு மென்றவன் காதைமாத்திரம் உணர்ந்தவன்; தூண் போலிருக்கு மென்றவன் காலை மாத்திரங் கருத்திலறிந்தவன்; துடைப்பம் போலிருக்கு மென்றவன் வாலை மாத்திர முணர்ந்தவனென்று அவன் அவர்க்குப் பிரஸங்கித்தான். "எங்கள் தெய்வந்தான் பெரிது; எங்கள் மதந்தான் பெரிது" என்று சொல்லும் ஸமயவாதிகளெல்லாம் அவ்வந்தகர் நிலையில்தான் இருக்கின்றனர் அல்லவா? உலகத்திற்கு மூலாதாரமாக இருக்கும் பரம்பொருள் ஒன்றே என்று எல்லா மதமும் பஹிரங்கமாக முழங்குகின்றன. ஆனால் அவை கூறுவதுண்மையானால், அவை குறிப்பிக்கும் பொருள் ஒரே வஸ்துவாக இருக்கவேண்டும். அல்லது, ஒவ்வொரு மதத்தினரும் கடவுளின் சில குணங்களை மாத்திரம் அனுபவித்தவராக வேண்டும். அப்படியிருந்தால் இவர்களால் கருதப்படும் கடவுள்தன்மையை எல்லாம் அங்கமாக உடையவரே மூலமுதற்பொருளென்றிருக்க வேண்டும் அல்லவா? அவ்வளவு தெரிந்தால் மனச்சம்மதம் தானாக நேர்ந்து எம்மதமும் ஸம்மதமாக நாடும் நிலை வந்துவிடு மல்லவா? இந்த உண்மையை உணராது குருட்டுத்தனமாக எத்தனை ஸமயவாதிகள், கட்சி, குத்து, வெட்டு, இவைகளுக் குட்பட்டுத் திண்டாடுகின்றார்கள். கடவுள் பெயரை முன்னிட்டு என்ன கோர கிருத்தியங்கள் அவர்களால் செய்யப்படுகின்றன! அவர்கள் மனதில் ஞானோதய மாவதெப்படி?

※※

தன்னயம் என்பது மனிதனோடு அவதாரஞ் செய்தது. அதன் ஜீவியகாலம் ஸாதாரணமாக அவனுடைய வாழ்க்கையோடு முடியும். ஆனால் சிலர் அதன் காலகெடுவை மாற்றக்கூடிய சக்தியுடையவர்களாயு மிருக்கிறார்கள். அவர் அதன் உயிரை ஆட்டக்கூடிய சக்தியை எப்படிப் பெறுகிறார் என்பதுதான் பாமரர்க்குப் பெரும் விந்தை. சிந்தித்து உணரக்கூடியவர்க்கு அது அவ்வாறு தோன்றாது. தன்னயம் கருதுபவர்களுடைய ஞானமெல்லாம் கிணற்றுத் தவளையின் ஞானம்போலக் குன்றித்தானிருக்கும். அவர் கண்கள், இருந்தும் காணக்கூடியனவல்ல. தன்னயம் அந்தகத் தன்மையை யூட்டும் பொறியேயாகும். தன்னயம் கருதாதவர் ஞானம், கடல்போலப் பரந்து கிடக்கும்; ஸாரமிக்க நதிகள் போன்ற ப்ரபுடபோத ஸாரங்களை இழுக்குந் தன்மையுடையது. தன்னயம் குட்டையிற்றங்கிய நீர்போல் எளிதில் குழம்பி வறண்டுவிடும்; பெருங்கஷ்டங்களை எதிர்த்து நிலைக்க முடியாது. தன்னயமின்மை கடல்போல் குழம்பாது, எவ்விதக் கஷ்ட நிலைக்கும் அடங்காது விளங்கும்.

பிறரது குற்றத்தைக் கவனிப்பது எவ்வளவு ஸுலபமான வேலை? அதில் என்ன ஸந்தோஷம் உண்டாகின்றது? தனக்குள்ள தப்பைச் சொன்னால் என்ன கோபம்? என்ன நிஷ்டூரம்? பிறரை மாத்திரம் எவ்விதமும் நாம் பேசலாம்; அப்பொழுது நாக்கிற்கு நரம்பென்பதே கிடையாது. நம்மைப்பற்றிப் பிறர் ஒரு தவறான அபிப்பிராயமும் மூச்சுவிடக்கூடாது. நமது ஸத்ய வழி எவ்வளவு பெருமையுடையது! இந்த நிலையை உணர்ந்துதான் தன்னைப்போலப் பிறரைப் பார்க்கவேண்டுமென முதுமொழி ஏற்பட்டதுபோலும்!

⁂

பெருங் காடுகளெல்லாம் பட்டணங்களாக மாறுகின்றன. புழுங்கிப் புதரடர்ந்து முட்செடிகள் நிறைந்து பாம்பு புலி வாழத் தகுந்த பாழிடங்களெல்லாம் மனிதனுடைய மனதின் வியாபாரத்தால் முட்செடிகள் நீங்கி, கொடிய மிருகங்களற்று, நல்ல தீர்த்தம் ஊறுந் தடாகங்கள் நிறைந்து, ஸத் ஜனங்கள் வாழும் வாஸஸ்தானமாக மாறுகின்றன. மனிதனுடைய முயற்சியின் பெருமையினாலல்லவா இவ்வாறு உண்டாவது? நமது மனமும் கெட்ட எண்ணங்கள் பொதிந்து, அக்கிருத்தியங்களில் பாய்ந்து, கொடுங்குணங்கள் அடர்ந்து விளங்கும் அகோர வனமாக இருக்கின்றது. அதையும் முயற்சி என்னும் ஆயுதத்தால் துரபிப்ராயங்களைக் களைந்து, துர்க்குணங்களை ஓட்டி, வைராக்கிய நிலையால் ஸத்குண வாஸஸ்தானமாக்கலாம். இதைக் கடைப்பிடிப்பதற்கு மன உறுதிதான் வேண்டும். விரும்பினால் வேம்பும் காய்க்கு மல்லவா?

⁂

ஒற்றுமையில்லாவிடில் ஸுகமெப்படி ஏற்படும்? வீடு இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம். இதன் உண்மையைப் பலரும் நன்குணர்ந் தாரில்லை போலும்! வீட்டிலேற்படும் கஷ்ட ஸுகங்களை மனத்திலடக்காது நடுத்தெருவிலுடைப்பதால் எத்தனை வீடுகள் ஸுகமற்று விளங்குகின்றன? வீட்டுக்கு வீடு வாசற்படி இல்லாமல் இராது. ஒவ்வொரு வீட்டிலும் மண்ணடுப்பன்றி பொன்னடுப்பில்லை. வீண் கவலைக்கிடந்தந்து சிந்தனை தேக்கி, வீட்டில் நடக்கும் சிறு ஸம்பவங்களைப் பெரிதாகப் பாவித்து உயிர்ப்பிணங்களாகித் தயங்குவது மனதிற்குப் பொறுமை நிலை இல்லையென்பதையே வெளியிடும். வெளியில், இப்படி எண்ணுவர், அப்படி எண்ணுவர் என்பதைக் கவனியாது, உண்மையாக உழைத்தால், ஒரு நாளும் கெடுதியுண்டாக இடமிராது. பிள்ளை பிறக்கும்போதுண்டாகும் வலி குழந்தையைப் பெற்றபின் தோன்றுமா?

⁂

அத்யந்த நேசரிருவருடைய அன்பைக் கண்ட ஒருவன், அவர்களைப் பிரிக்கவே முடியாதென்றான். அதைக் கேட்டுக் கொண்டிருந்த மற்றொருவன் பேதிப்பது பெருங்காரியமல்லவென்று சொல்லி, நேசன் ஒருவனை மற்றொருவன் காணும்படிக் கூவிக், காதில் மெதுவாக "நெல்லுக்குள் அரிசி" என்றான் மற்றவன் தன் நேசனை "அவன் என்ன சொன்னான்?" என்றான். "நெல்லுக்குள் அரிசி என்று சொன்னான்" என்று அவன் சொல்லியதை நம்பாது, மாற்றான் "என்னிடம் நீ ஒளிக்கின்றனை..." என்று சொன்னான். பின் வரவர அவர்க்குப் பேதம் தானே விருத்தியாகிவிட்டது. இது உலக வழி. பிறர் வாழ்ந்தால் அதைக் கெடுக்கவென்றே சிலர் கங்கணங் கட்டிக்கொண்டு ஸதா ஒழிவின்றி விடாமுயற்சியுடன் உழைப்பார். ஏதாவது சிறிது லாபம் உத்தேசித்தாவது அவர் செய்கிறார்களா? அதுவுமில்லை. அந்தக் காரியத்தில் அவர்க்கென்ன ஆனந்தம் உண்டாகின்றது! மனமே! அந்த வழியில் ஓட ஆரம்பித்தால் கடைசியாகக் கற்பாறையில்தான் மோதிக் கொள்ளவேண்டும்; பின் திரும்பிப் பார்த்தால் ஏறமுடியாத வழவழப்பான செங்குத்தான பாழும் வழி கண்ணிற்படும். அப்போது வயிற்றில் கபில் என்று எரிச்சல் மண்டுவதற்கிடம் கொடாது, ஸன்மார்க்க வழியில் நடக்க எப்போதும் திடமாக இரு; ஜாக்ரதை!



விவேக போதினி

தொகுதி 9] நள ௵ ஆனிமீ [பகுதி 1

# மறுபிறப்பு

## REBIRTH

மறுபிறப்பு என்ற சொல்லில், முன் இவ்வுலகப் பிறப்புக்களில் செய்துள்ள கர்மாக்களின் முதிர்ச்சியால் இவ்வுலகில் ஏற்படும் பிறப்புக்கள் என்ற பொருள் அடங்கியுள்ளது. இதற்கு வடமொழியில் ஜன்மாந்தரம் (வேறுபிறப்பு) என்று பெயர். இவ்வுலகில் ஒருமனிதன் இறந்ததும் அவனுக்கு ஏற்படவேண்டிய லோகாந்தரங்கள் (வேறு உலகங்கள்) விஷயானுபவம் ஏற்பட்டபிறகு மிகுந்துள்ள கர்மாக்கள் முதிர்ச்சியால் இவ்வுலகில் ஏற்படுவதே மறுபிறப்பு. ஜன்மாந்தரம் லோகாந்தரம் இவைகளை அடைவதைப் பொதுவாக நமது சாஸ்திரங்களில் தேஹாந்தர ப்ராப்தி என்று கூறுவது வழக்கம். இப்பொருளில்தான் கீதை II-ம் அத்யாயம் 13-ம் ச்லோகத்தில் இச்சொல் உபயோகிக்கப் பட்டுள்ளது. இதைக்கொண்டு சிலர், இறந்ததும் இங்கு பிறப்புக்தான், லோகாந்தரமே இல்லை என்று குதர்க்கம் செய்வர்.

கர்மாக்கள் பயன்பட்டுக் கழிந்துவிட, லோகாந்தரம், ஜன்மாந்தரம் இரண்டும் வேண்டியதுதான். கர்மாக்கள் பாகுபாடுகளைப்பற்றிக் கூறியவிடத்தில் கர்மாக்கள் அத்யுத்கடம் என்றும், பலமானவை என்றும், ஸாதாரணம் என்றும் மூவகைப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இவைகளுள் அத்யுத்கடம் (மிகபலமானது) உடனே பலிக்கத் தொடங்கி லோகாந்தரத்திலும் விரிந்து நிற்கும் என்றும், பலமானவைகள் அனுபவகாலம் உலகில் உள்ள மானிட ஆயுளைவிட அதிகமாயும், அவைகளுக்கு ஏற்பட வேண்டிய அனுபவபலம் இவ்வுலகில் ஏற்படக்கூடியவைகளைவிட அதிகமாயும் இவை இருப்பதால் அவைகளை அனுபவித்துத் தீர்க்க லோகாந்தர அனுபவம் வேண்டும் என்றும், இவைகள் ஒழிந்த மற்றைய ஸாதாரண கர்மாக்களுக்கு இவ்வுலகப் பிறப்பே போதும் என்றும் காட்டப்பட்டது. கர்மா சிறுகாலத்தில் சிறு இடத்தில் நடைபெறுவதாயினும் அதன் தன்மைக்கு ஏற்ப அதன் பலகாலமும், பல இடமும் விரிந்தேதான் இருக்கும் என்பது உலகில் நம்மனுபவத்திலேயே உள்ளது. உதாரணமாகச் சமையலையும், அதன் அனுபவமான சாப்பாட்டையும் எடுத்துப் பார்க்கலாம். இவ்வுலகில் உள்ள ஸ்வதந்திர உணர்வு, ஸுகதுக்க வலுக்குறைவு, பின் வரும் விஷய உணர்வின்மை இவைகளால் இங்கு ஏற்படும் ஸுகதுக்கம் சில சிறந்த நற்செயல்களுக்கும் தீச் செயல்களுக்கும் போதா என்றே ராஜாங்கத்தார், பட்டப் பெயர் கொடுத்தல், சிறைச்சாலையிலடைத்தல் முதலியவைகளை ஏற்படுத்தியுள்ளார். இப்படியிருக்க, இவ்வுலக ஸுகதுக்கம் பலமான கர்மாக்களின் பலன்களாகிவிட எப்படிப் போதுமானவைகளாக இருக்கும்? இதுபற்றியே ஈச்வரன் ஸ்ருஷ்டியில் லோகாந்தரங்கள் அமைந்துள்ளன. இவைகளில் ஒரு ஜீவன், முன் மானிட ஜன்மத்தில் செய்ததாயுள்ள அத்யுத்கட, பலமான கர்மாக்களின் பலன்களை அனுபவித்துத்தீர்த்த பின்பு மிகுந்த முக்ய அவாந்தரப்பாகுபாடுகளுடன் கூடிய ஸாதாரண கர்மாக்களின் பலன்களை அனுபவிக்க இவ்வுலகில் மறுபிறப்பை அடைவன். ஆகவே கர்மகதிப்படி அனுபவித்துத் தீர்க்கவேண்டிய கர்மபலன்களுக்காக முன் தொடக்கமில்லாது அநேக லோகாந்தர ஜன்மாந்தர ப்ராப்தியும், அப்பொழுதுள்ள மானிட ஜன்மத்தில் ஏற்படுவதான கர்மாக்களின் அனுபவ விஷயத்தில் ஓயா முடிவில்லாத்தேஹாந்தர ப்ராப்தியும் இருத்தல் அவசியம் என்பது வெளியாகும்.

இவ்வாறு கூறப்பட்டுள்ள மறுபிறப்பு

யாருக்கு என்ற சங்கை உண்டாகலாம். இது மானிட தேவாதி ஜீவனுக்கே. இவன் தன் புண்ய முதிர்ச்சியால் மேல் லோகம் மோக்ஷ ஆசை இவைகளை அடைவன்; பாப முதிர்ச்சியால் நரகாதி லோகங்களையும் புல் பூண்டு, ஊர்வன, நடப்பனவாகிய ப்ராணிகள் பிறப்பையும் அடைந்து முடிவில் பாப புண்யம் ஒழிந்து ஸாதாரண கர்மா ஸமப்படுங்கால் மானிடப் பிறவியையும் அடைவன். ஆகவே உலகில் உள்ள ஜீவராசிகள் உடலெல்லாம்,உயர்ந்ததோ, தாழ்ந்ததோ ஆன மானிட ஜீவன் தேஹங்களே. இதுபற்றியே எல்லா ப்ராணிகளிடத்திலும் ஜீவகாருண்யம் இருத்தல்வேண்டும் எனவேதங்கள் கூறும்.இந்தஎண்ணமின்றி ப்ராணிகளிடம் உபயோகம் முதலியவைகளைக்கருதி ஏற்படும் ப்ராணிதயை ஸரியான ஜீவகாருண்யமே அல்ல. அது ஸமயத்திற்குத் தகுந்தபடி மாறிச் சில ஸமயங்களில் பெருத்த ஜீவஹிம்ஸையாகவும் முடியும். இதற்கு உதாரணமாக தமக்கு உழைத்துப் பாடுபட்டு வரும் குதிரை, நாய் முதலியவைகளை அவைகளின் உபயோக காலம்வரையில் அன்புடன் வளர்த்து, அவைகளின் வயது முதிர்ச்சி, நோய் முதலிய காலங்களில் கூசாது இக்காலத்தவர் சுட்டுக்கொல்வதை எடுத்தாராய்ந்து பார்க்கலாம்.

இக்காலத்தில் இம் மறுபிறப்பு மானிட ஜீவனுக்கு என்பதை மறந்து ஒரு உயிர், தாழ்ந்த நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்குப் படிப்படியாகத் தேஹாபி விருத்தியால் மாறிச்செல்கிறது என்று கூறும் போட்டி ஒழுங்கு மேனுட்டாரிடம் காணப்படுகிறது. இதற்கு,வெளிப்பட்டு ஓங்கும் ஒழுங்கென்று பெயர் (Evolution Theory). இதில் பல குற்றங்கள் உள்ளன. இதில் ஏற்றம் மாத்திரம் உண்டே ஒழியத் தாழ்வு இருக்க இடமில்லை: இது உலகானுபவத்திற்கு முற்றிலும் விரோதம். இது தேஹாபிவிருத்தியைக் கவனிப்பதே ஒழிய மறுபிறப்பு ஒழுங்கைப்போல ஜீவவிருத்தியைக் கருதுவதேயல்ல. மேலும் பார்த்திவ சரீர விருத்தி மாத்திரந்தான் இதற்கு விஷயம் ; மற்றைய முவ்வகை உடல்களைப் பற்றிய ஆராய்ச்சியே இதில் இல்லை. படிப்படியாக உயர்ந்துவரும் ப்ராணிக்குத் திடீரென மனமும், விவேகமும் எப்படி மானிட நிலைவருங்கால் வந்துவிடும் என்ற இது போன்ற விடைதரமுடியாக்கேள்விகள் பல இதில் உண்டாகி மனதைக் குழப்பும். மறுபிறப்பு ஒழுங்கைப்போல மஹான்களால் நிஷ்டையில் தெளிந்து வெளியிடப்பட்டதல்ல; இந்த வெளிப்படை விருத்தி ஒழுங்கு: இது நம் போன்ற பாமரரில் சிறிது தேர்ந்தவரது வெளி விஷய ஆராய்ச்சி மாத்திரத்தில் ஏற்பட்டது. மறுபிறப்பு ஒழுங்கைப்போல ஜீவகாருண்யம், ஈச்வரபக்தி, விஷய வெறுப்பு, தத்துவஞானம் இவைகளுக்கு இடமே கொடாத, இக்காலத்திய நாகரீக வெளிப்படை விருத்தி ஒழுங்கு வெறும் மனக்கொதிப்பாகமாத்திரம் தான் முடியும். ஆதலால் மறுபிறப்பு ஒழுங்குக்கு, இக்காலத்திய நாகரீக ஒழுங்கு எப்படி நிகராகும்? இதுபற்றி இது ஒதுக்கத் தகுந்ததே.

முன்னர்காட்டியபடி முன் மானிட ஜன்மத்தில் செய்த அத்யுத்கடமானதும், பலமானதுமான கர்மாக்களின் பலன்களை முன் மானிட ஜன்மத்திலும் அதன் பின்வந்த லோகாந்தரங்களிலும் அனுபவித்த பின்னர், மிகுந்துள்ள ஸாதாரண முக்ய அவாந்தர கர்மாக்களின் பலன்களை அனுபவிக்க ஜீவன் இவ்வுலகில் மறுபடி வந்து பிறக்கிருன். இதில் ஒரு முக்ய கர்மாவை ஒட்டிய பல அவாந்தரகர்மாக்கள் சேர்ந்து ஒரு பிறவியை உண்டாக்கும். இவன் கர்மாக்கள் எல்லாம் சிறந்த புண்யமாகில் இந்த மறுபிறப்பு லோகாந்தரங்களிலும் ஏற்படலாம். இவைகளால் ஏற்படும் மறுபிறப்பு விசேஷ வேற்றுமைகளை வாஸுதேவ மனனத்தில் பின்வருவாறு எடுத்தாராயப் பட்டிருக்கிறது:—

புண்யகர்மா:—சிறந்ததாக இருந்தால் அது பிரஹ்மா பிருஹஸ்பதி முதலிய மேலான தேவாதி தேவசரீரங்களைத்தரும்: ஸாதாரணமாக இருப்பின் இந்திரன் வாயு யமன் முதலிய தேவசரீரங்களைக் கொடுக்கும்: தாழ்ந்ததாக இருப்பின் தேவ தூதர்கள், யக்ஷர், ராக்ஷஸர், பிசாசர் முதலியவர்களது சரீரங்களைத் தரும்.

பாபகர்மா:—சிறந்ததாக இருந்தால் உயிர்ப் பிராணிகளுக்குத் துன்பத்தை உண்டாக்கும் முள், விஷக்கொடி, செடி, கொடியப்ராணி இவைகள் உடலும்; ஸாதாரணமாக இருந்தால் பலருக்கு உபயோகமாகவிருக்கும் செடி,கொடிய ப்ராணிகள், நாட்டுப்ராணிகள் இவைகளது உடலும்; தாழ்ந்ததாக இருந்தால் அரசுபோன்ற பரிசுத்த மரங்கள், பசுக்கள் போன்ற பரிசுத்த ப்ராணிகள் உடலும் ஏற்படும்.

மிச்ரகர்மா:—சிறந்திருந்தால் ப்ரஹ்ம க்ஷத்ரியர் போன்ற மோக்ஷவழியில் நேரிட நடந்து நற்கதியடையக் கூடிய உடலும்; ஸாதாரணமாக இருந்தால் காம்ய கர்மாக்கள் மிகுந்தபற்றுடன் செய்து கர்மாக்களை நுட்பம் விளங்காது அனுஷ்டிக்கக் கூடியதான வைச்ய, சூத்ர, ஸ்திரீ உடலும்; தாழ்ந்ததாக இருந்தால் வைதிககர்மாக்களுக்கு அதிகாரமே இல்லாத நான்கு வருணத்திற்கு வெளிப்பட்டவர் உடலும் ஏற்படும்.

இந்தப் பாகுபாட்டிலிருந்து மானிடஜன்மம் மறுபிறப்பாக ஏற்படுங்கால் ஸாதாரண கர்மாக்களுள் அவாந்தர கர்மாவில் பாப புண்யக் கலப்பு ஸமமாக ஏற்பட்டிருக்க வேண்டும் என்று தெரியவரும். இதற்கு முன் ஏற்பட்டிருந்த மறு பிறப்புக்களாலோ அல்லது ஸ்வர்க்க வாஸத்தாலோ எல்லாவித பலமான பாப புண்ய கர்மாக்களும் ஓய்ந்துபோயிருக்கும்: ஆகவே வைதிக மானிட ஜன்மம் பெற்றவன் ஒவ்வொருவனும் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கும் கர்மானுஷ்டான முறையே கெட்ட வாஸனைகளைத் தடுத்தும், கர்மவாஸனைக் குழப்பம் ஏற்பட்டுக் கெட்டவாஸனை புதிதாக மனதில் ஏற்படவொட்டாது விடா முயற்சியால் தடுத்தும், வரவேண்டும். இப்படிமாத்திரம் செய்யாமல் ஒருவனிருந்தால் அவனை உலகம் கழுதையாக்கி மேல்மேலும் கெட்ட முக்ய அவாந்தரகர்மாக்களும் வாஸனைகளும் ஏற்பட்டு நரகில் விழுந்து திண்டாடும்படியாக்கும். ஆதலால் இந்த மறுபிறப்பு ஒழுங்கை உணர்ந்த புத்திமான்கள் ஓயாது ஈச்வரன் ஒழுங்கான கர்ம மறுபிறப்பு விதிகளுக்கு ஏற்ப, விடாமல் மேல்மேலும் உயர்ந்த மானிடப் பிறவி வாய்த்து வருவதற்குச் சாஸ்திரங்களில் காட்டியுள்ள வழியை விடாதுபற்றி முயல்வதையே தமது வாழ்க்கைத் தொழிலாகக்கொண்டு நிற்பர். இதற்கு இசையவே கர்போபநிஷத்திலும் வைதிக மானிடப்பிறவி ஏற்படுங்கால்மாத்திரம் அன்னைவயிற்றில் குழந்தைகளுக்குப் முற்பிறவிகள் உணர்வு ஏற்பட்டுப் புலம்பி மேல் ஸந்மார்க்கத்தில் விடாது நடப்பதாகச் செய்யும் நல்லுணர்வுக்கட்டுரை காட்டப்பட்டுள்ளது. வைதிக மானிடப் பிறவி அடைந்துள்ளவன் ஒவ்வொருவனும் இவைகளை நன்கு கருதி மோக்ஷத்திற்கே மனப்பூர்வ முயற்சிசெய்யக் கூடிய சீக்கிரத்தில் சாஸ்திரீய வழியில் முயலத் தொடங்க வேண்டும்.



இந்த மறுபிறப்பு விஷயமாகக் கீதையில் பின்வரும் விஷயம் VIII-ம் அத்யாயம் 5, 6-ம் ச்லோகங்களில் காணப்படும்.

யாவனுயிர் நீங்குறபோழ் தென்றனையே சிந்தித்து, மேவும் உடல் விட்டொழித்தும் செல்லுமோ—தாவிலவன், மெய் வடிவம் என்னதையே மேவுகிற்பன் இத்திறத்தில், ஐயமிலை யாதும் அறி.

எப்பொருளைச் சிந்திப்பான் இவ்வுடல்விட்டேகும்போ, தப்பொருளை யே ஒருவன் ஆர்ந்திடுவன்-- பொற்பினவன், எப்பொழுதும் சிந்தித் திருந்திடலால் அந்நினைப்பைச், செப்பிய இவ் வுண்மையினைத் தேர்.

இவைகளைக்கொண்டு சிலர் லோகாந்தரம் இல்லை, வெறும் மறுபிறப்பு இங்கே மாத்திரந்தான் அது மரண காலத்தில் ஒருவனுக்கு வெளிப்படும் எண்ணத்திற்கு ஏற்ப உண்டாகும் என்று குதர்க்கம் பேசுவர். லோகாந்தரமும், ஜன்மாந்தரம்போன்ற ஒருவித தேஹாந்தர ப்ராப்திதான் என்ற சாஸ்திர உண்மையை ஞாபகப்படுத்திக்கொண்டால் இது வெறும் குதர்க்கம் என்று உடனே விளங்கிவிடும். இங்கு காட்டப்பட்டுள்ள முதல் பாட்டில் ஸந்மார்க்கத்தில் நடந்து முதிர்ந்த ஞானிகள் மரணகாலத்தில் தூக்கம் போன்ற மயக்கத்திற் கிடங்கொடாது, குவிந்து வரும் இந்திரிய மனதிகளை, ஹ்ருதயத்திலும் தங்கவொட்டாது, அலை பாய்ந்து விஷயப் பதிவுகளிலும் செல்லவொட்டாது தகைந்து, மண்டைக்கு ஏற்றி, ஸாதாரண காலங்களில் அவர் செய்துவந்த ஈச்வர த்யானத்தில் மனப்பூர்வமாக நிறுத்தி

உடலை விட்டு வெளியேறி நற்கதி அடைவார்களென்பது குறிக்கப் பட்டுள்ளது. இதையே VIII அத்யாயம் 12—13ம் ச்லோகங்களில் வெளிப்படையாகவும் கூறப் பட்டுள்ளது. இரண்டாம் பாட்டின்விஷயம் பொது. இதில்இறப்பவர்மரண காலத்தில்மனப்பூர்வ ப்ரயத்தனமே இல்லை: ஆனால் மரணம் ஏற்படுங்கால் மேல் பலிக்கப் போகும் ஸஞ்சித கர்மா ப்ராரப்தமாகித் தலைதூக்கிவிட்டிருக்குமாதலால் எல்லோர் மனதிலும் மரண காலத்தில், தமது பலிக்கத் தொடங்கும் கர்மாவுக்கு ஏற்ற எண்ணம் இயற்கையாக உண்டாகும். அது மேல்வரும் உடலுக்கு இசைந்ததாகவே இருக்கும் என்பதுதான் இரண்டாம் பாட்டின் கருத்து. வைதிகமானிடர் ஒழிந்த மற்றைய மானிடர் முதலிய எல்லா ஜீவராசிகளுக்கும் இவ்வெண்ணம் இவ்வுலகமறுபிறப்பிற்கு இசைந்ததாகவே இருக்கும்; வைதிகவரம்புள் பிறந்துள்ளவர்களுக்கு மாத்திரம் முடிவு எண்ணம், தாம் மேலே பற்றப்போகும் லோகாந்தரகமன உடலாகிய வாயவீயாதி சரீரங்களுக்கு ஏற்றதாகவே இருக்கும். இந்த ஒழுங்கு இவர்கள் லோகாந்தரத்திலிருந்து இங்கு மறுபிறப்பிற்கு வருங்கால் ஏற்படும் உடல் மாற்ற விஷயத்திலும் பொருத்தமாகத்தானிருக்கும். ஸ்வர்காதி புண்யலோகங்களிலிருந்து நழுவும் ஜீவனுக்கு மாத்திரம் தேஹம் சிதையுங்கால் மனப்பூர்வ வைராக்கிய எண்ணமிருக்கும். நரகஜீவர்களுக்கு அவர்கள் ப்ரஞ்ஞையற்ற நிலையில் அடுத்த ஜன்மத்திற்கேற்ற எண்ணம் இயற்கையாக உதிக்கும்.

இதுவரையில் கூறப்பட்டுவந்த கர்மகதி மறுபிறப்பு ஒழுங்குகளில் கிடந்துழலும் ஜீவர்கள் யோகஸூத்ரம் II பாதத்தில் காட்டியுள்ளபடி (அவித்யாதி) பஞ்சக்லேசங்கள், கர்மா (ஸஞ்சிதம்), விபாகம் (ப்ராப்தம்) ஆசயம் (வாஸனை) இந்த நான்குவித பந்தத்திற்கு ஆளாகிறபர். இவர்கள் இந்த வைதிகப் பழக்கத்தால் இக்கட்டுத் தளரப் பெற்று மனப்பூர்வமான மரண ஈச்வர ப்ரஞ்ஞைக்கு ஆளாவர் என்பதை மேல் எடுத்து விவரிப்போம்.

# ராஜா ஸர் மாதவராயர்

## RAJA SIR T. MADHAVA RAO, K. C. S. I.

*(A life sketch)*



### பிரவேசம்

ராஜாங்கவிஷயங்களை நன்காராய்ந்துமதியூகத்துடன் விளக்கிவைத்த மஹான்களது கோஷ்டியில் ராஜா ஸர் தஞ்சை மாதவராயர் முந்தி விளங்குபவர் என்பது திண்ணம். அவரது பலவகைப்பட்ட சாதுரியமும், செயல்வன்மையும், மதியூகமும், பொதுஜனங்களுடைய கஷ்டங்களை நிவாரணஞ் செய்வதிலும், ராஜாங்கத்தாரது அபிப்பிராயங்களின் உண்மை நோக்கத்தை வெளியிடுவதிலுமேயே உபயோகப் படுத்தப்பட்டன என்பது யாவருமறிந்த விஷயம். ராஜ்யபாரவன்மையை, ஆள்பவர்க்கும் ஆட்படுபவர்க்கும் இணங்க நடத்தும் தன்மையில் நுண்ணிய அனுபவமுடையவர். மற்றுக் கல்வி விஷயத்திலோ தனது முழுகவனத்தையுஞ் செலுத்தி, படிப்பின் அபிவிருத்திக்கென்றே யுழைத்தவர். எவ்வகையிலும் சென்ற நூற்றாண்டில் நமது பொதுஜனவானத்தில் அழியாப் பிரகாசத்துடன் விளங்கிய பெருஞ்சோதியாக அவர் இருந்தனரென்பதை நாடுமிடத்து அவரைப்பற்றிய விஷயங்களை நாம் அறிந்துகொள்வது இழுக்காகாது. நமதுயிராக வாழ்ந்த பெரியோரது வாழ்க்கை ஒழுங்கை அறிவது நமக்கு அத்



யாவச்யகம். பெரியோரது அனுபவங்களைக் கொண்டு நமது வாழ்க்கையில் நேரும் சில கஷ்டங்களை ஒழிக்கச் சாதனமதனால் உண்டாகும் என்பது திண்ணம்.

### இளம் பருவம்

நமது ராயருடைய பெருமைக்கு அவர் பிறந்த குல்மு மாதார மில்லாமல் இருக்கவில்லை. அவர் 1828௵ தஞ்சை ஜில்லாவில் கும்பகோணத்தில் மஹாராஷ்டிர பிராஹ்மணகுலத்தில் பிறந்தவர். அவரது முன்னோர்கள், மஹாராஷ்டிரர்களால் தஞ்சை ராஜ்யம் 16-வது நூற்றாண்டில் ஜயிக்கப்பட்டபோது தஞ்சையிலேயே காயமாகநிலைத்தனர். நமது ராயரது தகப்பனாராகிய ரங்கராயர் திருவாங்கூர் ஸமஸ்தானத்துத் திவானாக இருந்தார். ரங்கராயரது உடன் பிறந்தவராகிய வேங்கடராயரும் அந்த ஸமஸ்தானத்துத் திவானாக நன்குழைத்தனர். இவ்வம்சத்தில், இராஜதந்திரமதியூகம் நிறைந்த நமது ராயர் பிறப்பது அதிசயமாகாது. இளமையிலேயே இவர் வெகு புத்திசாலியாக விளங்கினர். இக்காலத்தவரைப் போலல்லாமல் நமது ராயருக்கு அவர் தாய்ப்பாஷையாகிய மஹாராஷ்டிரத்தில் முதலில் நன்கு கல்வி கற்பிக்கப்பட்டு அதில் பக்குவ ஞானமடையும்படியாகப் பயிற்றப்பட்டது. இவர் பதின்மூன்று வயதில் தமது தாய்ப்பாஷையில் பூர்ணபாண்டித்திய மடைந்தது யாவர்க்கு மாச்சரிய மூட்டத்தக்கது. பதின்மூன்றும் வயதில் சென்னை ராஜாங்க ஹைஸ்கூலில் சேர்ந்து ஆங்கிலம் படிக்க ஆரம்பித்தார். வெகு கூர்மையாகப் பாடங்களைப் படித்துக், கணித சாஸ்திரத்தில் அத்யத்புத ஞானமடைந்தார். இவர் இராஜாங்கக் கலாசாலையில் போதனை செய்வதில் பெரும் புகழ் பெற்ற சீமானாகிய மிஸ்டர் ஈ. பேடன்பவல் என்பவரின் கீழ்ப் படித்துத் தனது படிப்பின் பெருமையால் அவர் அன்பிற்குப் பாத்திரரானர். 1846-ம் ௵ ராயர் முதல் வகுப்பில் டிக்ரி பெற்றனர்.

### பெருமையின் முதற்றேற்றங்கள்

மிஸ்டர் ஈ.பி. பவெல், ஸி.எஸ்.ஐ. அவர்கள் சென்னை ராஜாங்கக் கல்விச் சாலையிலிருந்து நடுவில் கொஞ்சநாள் இல்லாதிருந்தபோது அவர், மாதவராயர் அவர்களையே தனக்குப் பதிலாக வேலைசெய்யும்படியாக நியமித்தார். அதன்பின் 1847—1848-ம் வருஷங்களில் சென்னை அகௌண்டண்ட் ஜெனரல் ஆபீஸில் வேலைசெய்து வந்தார். இதன் பிந்தி அவர் திருவாங்கூர் ஸமஸ்தானத்து அரசமக்களுக்குப் பாடஞ் சொல்விக்கும்படியாக ஏற்படுத்தப் பட்டனர். அப்பொழுது அவர்க்கு வயது இருபத்தொன்றே. அந்நிலையிலிருக்கும்போது அவர் வேலையைக் கண்டு அதிசயித்த மஹாராஜா அவர்கள் அவரைத் தமது ராஜாங்கக்கச்சேரியில் உபபேஷ்காரராக 1853௵ நியமித்தனர்.

அக்காலம் திருவாங்கூர் ஸமஸ்தானம் நல்ல நிலையில் இருக்கவில்லை; இந்தியாவின் கவர்னர் ஜனரலாகிய டேல்ஹௌஸி பிரபுவே இதைப்பற்றிக் கண்டிப்பான உத்தரவுகள் பிறப்பிக்கும் படியான ஸ்திதியிலிருந்தது. இச்சமயத்தில் மாதவராயர் அந்த ராஜாங்கத்துக் கச்சேரியில் வேலைக்கமர்ந்தனர். ஆயினும், தான் வெகு சிறிய வயதினராயும், அநேக பெரியவர்களுக்குக் கீழிருந்தவராயும் இருந்தபோதிலும், அந்த ஸமஸ்தானத்தைப்பற்றிச் சில சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென மஹாராஜாவிடம் தெரிவித்தனர். அவரும் அதை ஏற்று, அச் சீர்திருத்தங்களை நிறைவேற்றும்படி மாதவராயரைத் தென் ஜில்லாக்களின் தலைமையில் வைத்தனர். அங்கு அவர் யாவரும் கொண்டாடும்படியாக நடந்து திருவாங்கூர் ஸமஸ்தானத்து ராஜாங்கத்தைப்பற்றிய தப்பு அபிப்பிராயத்தை மாற்றும்படியாக உழைத்தார்.

### திருவாங்கூர் திவானாக வேலை செய்தது

1857௵ திருவாங்கூர் ஸமஸ்தானத்துத் திவானாகவிருந்த கிருஷ்ணராயர், காலமானார். அப்போது மாதவராயருக்கு வயது முப்பதுதான். ஆயினும் இவரை மஹாராஜா அவர்கள் தமது ஸமஸ்தானத்துத் திவானாக நியமித்தார். அவர் தமது வேலையை ஒப்புக்கொண்டதும் ராஜாங்கத்தில் பல தவறான காரியங்கள் நடப்பதையும் அரச உரிமை செம்மையாக நடத்தப்படாமையையும் கண்டார்; இவற்றை எல்லாம் சீர்திருத்தத் தமது கவனத்தைச் செலுத்தினர். முதலில் பிராஹ்மணர்களுக்கும்

சாணார்களுக்கு மிருந்த பரஸ்பர மனவேறுபாட்டை ஒழிக்க ஏற்பாடுகள் செய்தனர். ஆனால் இவ்வாறு செய்வதில், தர்மச் செலவையாவது, ஊட்டுப்புரைகளின் நிலையையாவது அவர் குறைக்கவேயில்லை. வியாபார விஷயத்திலும் கவனத்தைச் செலுத்திச் சில அநீதவரிகளை ஒழித்து, மிளகு வியாபாரத்தைப் பற்றி இருந்த தவறான வழக்கங்களை ஒழித்து, ஏற்றுமதி செய்யப்படும் மிளகின் மேல் வரி ஏற்படுத்தினார். இன்னும் சில விஷயங்களிலும், வரிகளை ஒழித்து, ஸமஸ்தானத்திற்கும் பிரிட்டிஷ் இந்தியாவிற்கும் பரஸ்பரம் புகையிலை வியாபாரத்தில் ஸ்வதந்திர வியாபார முறை கொண்டாடும்படி செய்தனர். மற்று ராஜாங்க விஷயத்தில், கைக்கிள்ளுங் கோளாற்றை ஒழிக்கவென்றே, போலீஸ் உத்யோகஸ்தர்கள், நியாய இலாகா உத்யோகஸ்தர்கள் இவர்களுடைய சம்பளத்தை அதிகப்படுத்தும்படி செய்து, படிப்பு, பொதுவேலை இலாகாக்களை மேலான பதவியடையும்படியும் செய்தார். நியாய இலாகாவை முழுதும் செம்மைப்படுத்தி, ஸமஸ்தானத்து ஹைகோர்ட்டுக்கு பிரதான ஜட்ஜ் பதவியைப் புதிதாக உண்டாக்கினார். நிலவரியை ஏராளமாகக் குறைத்து, இச்சைப்படி பூமிகளைப் பிரித்துத் தீர்வைபோடும் முறையை ரத்து செய்து, ஸாமான்யமான வழியே தீர்வை யேற்படுத்தும் வழிகளை விதித்துக் கிருஷிகர்களுக்கு நன்மையையும் அவர் ஏற்படுத்தினார். பல ஆங்கிலப் பள்ளிக்கூடங்களும், சுயபாஷைப் பள்ளிகளும், பெண் பள்ளிக்கூடங்களும் பலவிடங்களிலும் ஸ்தாபித்து உயர்ந்தபடிப்பைத் தரக்கூடிய ராஜாங்கக்கலாசாலை ஒன்றும் ஸமஸ்தானத்தில் ஏற்படும்படிச் செய்தனர். அவர் திவானாக ஆவதற்கு முன் ஸமஸ்தானத்தில் ஒரே ஆங்கிலப் பள்ளிக்கூடந்தான் இருந்தது என்பது யாவரும் அறிவது இங்கு தவறாகாது. இச்சீர்திருத்தங்கள் அல்லாமல் ஜனங்களுக்குத்தக்க வைத்ய உதவி ஏற்படவும், போக்குவரவு ஸாதனங்கள் ஏற்படவும் கவனத்தைச் செலுத்தினார். இவ்வாறெல்லாம் சீர்திருத்தியும் ராஜாங்க பொக்கிஷத்தில் வரவு குறையாது அதிகமே ஆனது புகழத்தக்கது. பதினான்கு வருஷம் யாவரும் புகழ, தன் நிலையைக் காப்பாற்றி அவர் 1872௵ தமது வேலையை ராஜீநாமா செய்தனர். மஹாராஜா அவர்களும், ராயர் அவர்களுடைய பெருஞ்செயல்களுக்கு மெச்சி அவர்க்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 1000 பென்ஷன் அளித்தார்.

### இந்தோரில் திவானாவதற்கு முன்

திருவாங்கூர் தர்பாரிடமிருந்து பென்ஷன் பெற்றதும், அப்போது இந்தியா கவர்னர் ஜனரலாக இருந்த நேபியர் பிரபு, மாதவராயரை இந்திய ராஜாங்கச் சட்டசபையின் அங்கத்தினராக நியமித்தனர்; ஆனால் ராயர் தமது குடும்ப விஷயங்களை உத்தேசித்து அப்பதவியை மறுத்தனர். அப்பொழுது லண்டன் நகரத்தில் கூடிய இந்திய நாணய கமிஷன் முன் சாக்ஷியங்கொடுக்கும்படி ராயர் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனராயினும் அவர் ஒப்புக்கொள்ளவில்லை. இதற்குள் ராயர் அவர்களுக்கு ராஜாங்கத்தாரால் ராஜா என்னும் பட்டம் அளிக்கப்பட்டது. 1866௵ இவர்க்குக் கே. ஸி. எஸ். ஐ. என்னும் இந்திய தாரகாவகைப் பட்டமும் கொடுக்கப்பட்டது.

### இந்தோர் திவானாக வேலை செய்தது

ராயர் அவர்களது பெருமையைப்பற்றி அதிகமாகக் கேள்விப்பட்ட இந்தோர் அரசராகிய மஹாராஜா துல்ஜிராவ் ஹோல்கார் அவர்கள், ராயர் அவர்களைத் தனது நாட்டின் திவானாக ஏற்படுத்தினார். இப்பதவியை ராயர் 1873௵ ஒப்புக்கொண்டனர். இவ்வேலையை அவர் மூன்றுவருஷம் நடத்தி வந்தனர். இதற்குள் அவர் ஜனங்களுடைய பல கஷ்டங்களை நிவாரணஞ் செய்யும்படியான முறைகளை ஏற்படுத்தினார். நிற்க, பரோடா ராஜ்யத்தில் அநீதியாக நடந்துகொண்ட மஹாராஜா மல்ஹார்ராயரை அப்பதவியிலிருந்து நீக்கித் தற்காலம் மிகப் பெருமையுடன் விளங்கும் ஸ்ரீ ஸயாஜீராயரை அக்காலத்துக் கவர்னர் ஜனரலாக இருந்த நார்த்கோட் பிரபு மஹாராஜாவாக நியமித்து, அவர்க்குத் தக்க மந்திரி வேண்டுமென யோசித்து, மாதவ ராயரே, அப்பதவிக்குத் தகுந்தவரென நியமித்தனர்.



### பரோடா திவானாக விளங்கியது

1875௵ ராஜா ஸர் மாதவராயர் பரோடா திவான் பதவியைப்பெற்று ராஜாங்க விஷயத்தைக் கைக்கொண்டனர். இவ்விடத்திலும் திருவாங்கூரில் நடந்த விதமே நடந்து பல சீர்திருத்தங்களைச்செய்து தேசத்தில் அமைதியை ஏற்படுத்தினார். முன் அரசனை ராஜபதவியிலிருந்து நீக்கியதற்காக அதிருப்தி அடைந்தவர்களைப் பலவிதத்தினால் ஸமாதானப்படுத்தி, ராஜ்யத் தலைமைக்காக முந்திக்கொண்டவர்களுடைய ஆத்ரத்தையெல்லாம் ஏராளமான கொடைகளால் அடக்கினார். வரிகளைக் குறைத்தும், போலீஸ் நியாய இலாகாக்களைச் செம்மைப்படுத்தியும், படிப்பு, வைத்ய உதவி, பொது வேலை இவற்றை விஸ்தாரப்படுத்தியும், ராஜாங்க வருமானங் குறையாதிருக்கும்படியாகவும் வேலைசெய்தனர். எட்டுவருஷம் அவர் இந்த ஸமஸ்தானத்தில் வேலைசெய்து தமது பதவியை ராஜீநாமா செய்தார்.

### பொதுஜன உழைப்பு

1883௵ மாதவராயர் பரோடா திவான் வேலையை விட்டதும், தமது எஞ்சிய ஆயுளை முற்றும் பொதுஜன விஷயங்களில் செலவிட்டனர். பொதுஜன இயக்கங்கள் எவற்றிலும் தலையிட்டு, சென்னையிலேயே இருந்தனர். பல முறை அவர் தமது அபிப்பிராயங்களை "ஸ்வதேசயூகி" "ஸ்வதேசதிருஷ்டியன்" என்னும் கைந்நாட்டுடன் பத்திரிகைகளில் வெளியிட்டுக்கொண்டே இருந்தனர். அவர் சென்னை ஸர்வ கலாசங்கத்துக் கான்வோகேஷனில் பேசியபோது பட்டம்பெற்ற மாணாக்கர்களுக்குச் சொல்லிய உபதேச மொழிகள் யாவரும் கவனிக்கத்தக்கன. மற்றும் அவர் வெளியிட்ட பிரஸங்கங்களில் முக்கியமானவை இரண்டுண்டு. ஒன்று 1884௵ கனம் ரிப்பன் பிரபுவின் அரசாட்சியைப் பற்றியது; 1887௵ இந்தியன் நாஷனல் காங்கிரஸ் மூன்றாவது முறை சென்னையில் கூடியபோது வரவேற்கைத் தலைவராகப் பேசியது மற்றொன்று. இவ்விரண்டு பிரஸங்கங்களும் இப்பொழுதும் படிப்பவர் மனதை மயக்குந் தன்மையன.

### கடைசிகாலம்

ராயர் அவர்கள் தமது கடைசி நாட்களை ஆசாரசீர்திருத்த விஷயமாகவும் செலவிட்டு வந்தனர். இளம்வயதில் செய்யும் கல்யாணங்களைத் தடுக்க ஏற்பாடு செய்ய அவர் வற்புறுத்தினார். மற்று விதவைகளின் துக்கங்களைக் குறைக்கவேண்டிய முறைகளையு முண்டாக்க வேண்டுமென்றும் பலமுறை வெளியிட்டிருக்கிறார். ஆயினும், அவர் இச்சீர்திருத்தங்கள் ஜனங்களுடைய இஷ்டத்திற்கொப்பச் செய்வதே சிலாக்கியமென அவரது மனதை விசாலப்படுத்துவதே தமது தர்மமாக நினைத்துழைத்தார். இதற்குள் அவர் 1891௵ ஏப்ரல்௴ தேகத்தை நழுவும்படி நேர்ந்தது. அவரது தேகவியோகம் எங்கும் துக்கத்தை யுண்டாக்கியது. அவரது ஞாபகார்த்தமாக உருவச்சிலைகள் பலவிடத்தில் ஏற்படுத்தப்பட்டன என்பது அவர் புகழுக்குப் பெருமையைத் தரும்.

### பின்னுரை

ஸ்வபாவத்தில் மாதவராயர் வெகுதீரர்; மனஸ்ஸாட்சிக்கொப்ப நடப்பவர்; தீரயோசித்து, வரும் காரியங்களைநாடி வினைசெய்பவர். அவர் யாவரது மனத்திற்கு மொப்ப நடந்தவர்; ஆள்பவர் ஆளப்படுபவர் இருவரது நன்மையையும் இணங்க மதியூகத்தை உபயோகப்படுத்தியவர். பெண் கல்வி விஷயத்தில் அவர் படிப்பு மேல்நாட்டாரது வழியைக் குருட்டுத்தனமாக அப்யஸிக்காது நமது வீட்டிற்கும் குலத்திற்கும் நாட்டிற்கும் ஏற்றதாக இருக்கவேண்டுமென்றே அவர் ப்ரௌட அபிப்பிராயங் கொண்டிருந்தனர். அவரது அபிப்ராயங்கள் வியாசங்கள் பிரசங்கங்கள் இவை யாவும் ஒரு புத்தக வடிவம் பெறவில்லையாயினும் அவற்றையெல்லாந் தொகுத்து வெளியிடுவது பொது ஜனங்களுக்கு மிக்க பயனைத்தரும் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. இத்தகைய புத்தகத்தை வெளியிடுவதை அவர் ஸந்ததியார் மேற்கொண்டுசெய்வது அவர்க்கும் பெருமை, நம்மிந்திய ஜனங்கட்கும் பேருதவியாகும்.

# சந்திரன்

## THE MOCN

சந்திரனைப்பற்றிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளுவது மிகவும் சுலபம். ஏனென்றால், அதை நன்றாய் நாம் எளிதில் கவனிக்கலாம். ஒருநாள் சாயங்காலத்தில் சந்திரனைக் கவனிப்போம். அதன் பக்கத்திலுள்ள நட்சத்திரங்களையும் கவனிப்போம். அதன் பிரகாசத்தால் பக்கத்திலிருக்கும் நட்சத்திரங்கள் நமக்குத் தெரிவதுகூடக் கஷ்டம். ஆனால் ஒரு பிரகாசமான பெரிய நட்சத்திரமாயிருந்தால் நமக்குத் தெரியும். அப்பொழுது இச்சந்திரனைக் கவனித்தால், இது நட்சத்திரங்களைவிட மெதுவாக வானத்தில் செல்லுவதாகத் தெரிகிறது. அதாவது, மறுதினம் கவனித்தால், பக்கத்திலிருந்த நட்சத்திரத்திலிருந்து இது கொஞ்ச தூரம் கிழக்குப் பக்கமாக ஒதுங்கியிருக்கும். ஆகையால் நாளுக்கு நாள் நேரம் சென்று உதயமாகும். ஒவ்வொரு தினமும் சுமார் இரண்டு நாழிகை அளவு பிந்தி உதயமாகும். கடைசியில் சூரியன் உதயமாவதற்குச் சற்று நேரத்திற்கு முன் காலையில் உதயமாகிறது. மறுதினம் இரவில் சந்திரன் தெரிகிறதேயில்லை. இரண்டு தினங்களுக்குப் பிறகு சாயங்காலத்தில் மேற்கில் இதை நாம் பார்க்கலாம். அதாவது, இப்பொழுது சூரியன் உதித்துக் கொஞ்சம் நேரமானவுடன் இது உதிக்கிறது. இப்படிக் கிழக்கில் பின் தங்குகிறது. இம்மாதிரியே இதன் அளவும் குறைந்து கொண்டேயாவது, அதிகரித்துக் கொண்டேயாவது வரக் காணப்படுகிறது இதன் பிரகாசமும் வித்தியாசப்பட்டுக் கொண்டே வருகிறது. இப்படிச் சந்திரன் சாயங்கால வேளையில் முன் ஒருதரமிருந்த இடத்திலேயே அதே அளவுடனும் பிரகாசத்துடன் அதே காலத்தில் காணப்படச் சுமார் 29 தினங்கள் ஆகின்றன. சந்திரனில் உண்டாகும் இவ்வித மாறுபாடுகள் எல்லாம் 'டெல்லூரியன்' என்னும் கருவியைச் சுற்றிப்பார்த்தால் நன்றாய்த் தெரியும். அல்லது சூரியனுக்குப் பதிலாக ஒரு விளக்கையும், பூமிக்குப் பதிலாக ஒரு பந்தையும், சந்திரனுக்குப் பதிலாக மற்றொரு சிறிய பந்தையும் வைத்துக்கொண்டு இப்பந்துகளைச்சுற்ற இவ்விஷயங்கள் தெரியும்.

சந்திரன் பூமியைச் சுற்றிவரும் ஒரு 'உபகிரஹம்.' சூரியனைச் சுற்றிவரும் கிரஹங்களைச் சுற்றும் சிறிய கிரஹங்களுக்கு 'உபகிரஹங்கள்' என்று பெயர். இப்படிச் சந்திரன் சுற்றும்போது, சில சமயங்களில் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் இது வருமல்லவா? அப்பொழுது சூரியன் உதயமாகி அஸ்தமிக்கும்போதே சந்திரனும் உதயமாகி அஸ்தமிக்குமல்லவா? கிரஹ நட்சத்திரங்களின் உதயமும் அஸ்தமனமும் பூமி தன்னைத் தானே பம்பரம்போல் சுற்றுவதால் உண்டாகின்றன என்று முன்பார்த்தோம். ஆகையால் சூரியனும் சந்திரனும் ஒரே பக்கத்தில் இருக்கும்போது இவை இரண்டும் ஏறக்குறைய ஒரேசமயத்தில் உதித்து ஒரேசமயத்தில் அஸ்தமிக்கும். சந்திரன் வரவர கிழக்கே ஒதுங்குவதால், இரண்டு தினங்களுக்கெல்லாம் சூரியன் உதயமாகிக் கொஞ்ச நேரம் சென்று சந்திரன் உதயமாகும், அப்படியே சூரியன் அஸ்தமித்த பிறகு சந்திரன் அஸ்தமிக்கும். ஆகையால் இத்தினங்களில் நாம் சந்திரனைச் சாயங்காலத்தில் மேற்கில் பார்க்கலாம். பிறகு சூரியனோடு உதித்த தினத்திலிருந்து ஏறக்குறைய 14 தினங்களானவுடன் சூரியனைவிட சுமார் 12-மணி நேரம் பின் தங்குகிறது. அதாவது சூரியன் அஸ்தமிக்கும்போது சந்திரன் உதயமாகும்; மறுதினம் சூரியன் உதிக்கும்போது சந்திரன் அஸ்தமிக்கும். இக்காலங்களில் சூரியன், சந்திரன், பூமி இம்மூன்றும் சரியான ஒரே நேர் கோட்டில் இருக்கவில்லை.

இவைகளோடு மற்றொரு விஷயம் கவனிக்கவேண்டும். இக்காலங்களில் சந்திரனுடைய அளவை அல்லது நமக்குக் காணப்படும் சந்திரனுடைய பிரகாசமான பாகத்தைப்பற்றிக் கவனிக்கவேண்டும். முதலில் சந்திரன் சூரியனுக்கும் பூமிக்கும் இடையிலிருக்க, இவையிரண்டும் ஒரே காலத்தில் உதித்து அஸ்தமித்தன. அன்றிரவு, சந்திரனே காணப்படவில்லை. அன்றைய தினத்தைத்தான் நாம் அமாவாஸ்யை என்கிறோம். வரவரச் சந்திரன் கிழக்கில் ஒதுங்க, சுமார் 14-தினங்களுக்குப் பிறகு, சந்திரன் சூரியனுக்கு எதிராக வரச் சூரியனுக்கும் சந்திரனுக்குமிடையில் பூமியிருக்கும். அப்பொழுது, சூரியன் அஸ்தமித்தவுடன் சந்திரன் உதயமாகும். அன்றிரவு முழுவதும் அது பிரகாசிக்கும். சந்திர பிம்பமும் பூர்ணமாகக் காணப்படும். இந்த தினத்தைப்பௌர்ணமி என்று சொல்லுகிறோம். இத்தினத்திற்குப் பிறகு சந்திரனுடைய பிரகாசமான பாகம் வரவரக் குறைந்துவரும்; பிறகு அதிகரித்தும் வரும். இதற்கெல்லாம், என்ன காரணம்? இதற்கு இரண்டு காரணங்களுண்டு. சந்திரன் பூமியைச்சுற்றிவருவதும், சந்திரனுக்குச் சுபாவத்திலேயே வெளிச்சம் இல்லாததும் தான் இந்தக் காரணங்கள்.

சந்திரன் பூமியைச் சுற்றும்போது, சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் சந்திரன் ஒரு சமயம் வருகிறது. அன்றுதான் சூரியனும் சந்திரனும் ஒரே சமயத்தில் உதயமாகின்றன. மறுபடி 14 தினங்கள் கழித்துச் சந்திரன் பூமியின் மறுபக்கத்துக்குப் போக, சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமியிருக்கும். அதாவது, அன்றிரவு முழுவதும் சந்திரன் தெரிகிறது என்று பார்த்தோம். இப்பொழுது சந்திரன் ஒரு தரம் பூமியைச் சுற்றிவரப் பிடிக்கும் காலம் எவ்வளவு என்று நாம் அறிந்துகொள்ளலாம். ஒரு அமாவாஸ்யையிலிருந்து மறுஅமாவாஸ்யை வரையிலுள்ள தினங்கள், அல்லது ஒரு பௌர்ணமியிலிருந்து மறு பௌர்ணமி வரையில் உள்ள தினங்கள் ஆகின்றன. ஆனால் சந்திரன் ஒரு நட்சத்திரத்துடன் உதித்து அஸ்தமித்து மறுபடி அதே நட்சத்திரத்துடன் உதித்து அஸ்தமிக்க சுமார் 27 நாள் 8 மணி பிடிக்கும். ஆகையால், உண்மையில் சந்திரன் ஒரு தரம் சுற்றிவர, இந்த 27 நாள் 8 மணியே பிடிக்கின்றது. ஆனால் இக்காலத்திற்குள் பூமிதான் தன்னைச்சுற்றி வரும் பாதையில் கொஞ்ச தூரம் போகின்றது. இப்படிக் கொஞ்சதூரம் சென்ற பூமியைப் பின்தொடர்ந்து வர சுமார் இரண்டு நாளாகின்றது. ஆகையால்தான் உண்மையில் சந்திரன் பூமியை 27 நாள் 8 மணியில் சுற்றினபோதிலும் நமக்கு இந்தக் காலம் சுமார் $29\frac{1}{2}$ தினங்களாகக் காணப்படுகிறது.



நட்சத்திரங்கள் அவ்வளவு வேகமாக நகர்வதாகக் காணப்படாமையால், சந்திரன் ஒரு நட்சத்திரக் கூட்டத்துடன் உதித்து மறுபடி அதே நட்சத்திரக் கூட்டத்துடன் உதிக்க 27 நாள் 8 மணி ஆகிறது.

இப்பொழுது சந்திரன் ஏன் நாளுக்கு நாள் நேரம் கழித்து உதயமாகிறதென்று நாம் எளிதில் அறியலாம். சூரியனோ இருந்தவிடத்திலேயே இருக்கிறது. ஆகையால் சுமார் 24-மணி நேரத்தில் ஒருதரம் பூமி சுற்றும்போது ஒவ்வொரு தினமும் ஏறக்குறைய அதே நேரத்தில் சூரியன் உதயமாகிறது. ஆனால் இந்த நேரத்தில் சந்திரன் முதல் நாளிருந்த இடத்திலிருந்து தான் பூமியைச் சுற்றிவரும் பாதையில் கொஞ்சதூரம் நகர்ந்துவிடுகிறது. ஆகையால், தினத்திற்குத் தினம் கொஞ்ச நேரம் சென்றுதான் நமக்குத் தெரியும். அதாவது வரவரக் கிழக்கில் ஒதுங்குவதுபோல் காணப்படும்.

இப்பொழுது சந்திரனுடைய பிரகாசமான பிம்பம் வரவரத் தேய்வதற்கும், பிறகு வரவர வளர்வதற்கும்காரணம் என்னவென்று பார்ப்போம். நாம் முன் சொன்னதுபோல் சந்திரனுக்குச்சுபாவத்திலேயே பிரகாசிக்கும் சக்தியில்லையென்று தெரிகிறது. அப்படியிருந்தால் எல்லாத் தினங்களிலும், இது எப்பொழுது உதயமானபோதிலும் நமக்குத்தெரியும்போதெல்லாம் சந்திரனுடைய முழுப்பாகமும் பிரகாசமாகக் காணப்படவேண்டுமல்லவா? நாம் அதைப் பார்க்கும்போது நமக்குச் சந்திரனே காணப்படுகிறது. ஆனால் ஒரு பாகம் மாத்திரம் பிரகாசமாகக் காணப்படுகிறது. மற்றைய பாகம் பிரகாசமில்லாமல் இருட்டாயிருப்பதால் நமக்குத் தெரிவதில்லை. ஆனால் இளம்பிறை காலங்களில் இதன் இருண்ட பாகமும் நமக்குத் தெரிகிறது.

ஆனால், சந்திரன் எப்படி ஒளியுடையதாய்க் காணப்படுகிறது? ஒரு கண்ணாடியை நாம் வெயிலில் சாய்த்துப்பிடித்து இங்கும் அங்கும் திருப்பி, கண்ணாடியால் பிரதிபிம்பிக்கப்பட்ட சூரிய வெளிச்சம் ஒரு ஜன்னலின் வழியாக ஓரறையில் விழச்செய்வோம். இப்பொழுது அறையிலுள்ள ஒருவனுக்கு இக்

கண்ணாடி பிரகாசமான வஸ்துவாகவும், அதினின்று வெளிச்சம் வருவதுபோலும் காணப்படுமல்லவா? ஆனால் கண்ணாடிக்குத் தானே வெளிச்சம் கொடுக்கும் சக்தியிருக்கிறதா? இல்லை. சூர்யவெளிச்சத்தைத் திருப்புகிறது. சூர்ய வெளிச்சமில்லாவிட்டால், இது வெளிச்சத்தைத் தராது. கண்ணாடிக்குப் பதிலாக ஒரு வெண்மையான பந்தையும், சூர்யனுக்குப் பதிலாக ஒரு விளக்கையும் எடுத்துக்கொள்ளுவோம். ஒரு இருட்டான அறையில் இவை யிரண்டையும் வைக்க, விளக்குக்கு நேராயுள்ள பந்தின் பாதி பாகமாத்திரம் பிரகாசமாயிருக்கும். பின் பக்கம் இருட்டாயிருக்கும். இப்பொழுது விளக்கை வெகு தூரத்தில் வைத்துவிட்டு நாம் பந்தைச் சுற்றிவந்தால், அதற்கு முன் பக்கம் வரும்போது பந்து முழுவதும் பிரகாசமாகவும், பின் பக்கம் வரும்போது இருட்டாகவும், மற்றவிடங்களில் பந்தின் பிரகாசமான பாகம் குறைவதையும் அதிகரிப்பதையும் நாம் பார்க்கலாம். நாம் ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு, பந்து நம்மைச் சுற்றிவந்தாலும், பந்தின் தோற்றம் இம்மாதிரியே தானிருக்கும்.

ஆகையால், சந்திரன்பூமியைச்சுற்றுவதாலும், சந்திரனுக்கு இயற்கை வெளிச்சமில்லாமல் சூர்ய வெளிச்சத்தைத் திருப்புவதாலும் இம்மாதிரி விஷயங்கள் சம்பவிக்கின்றன. இப்பொழுது சந்திரன் பூமியை $29\frac{1}{2}$ தினங்களுக்கு ஒரு தரம் சுற்றுவதால் இந்த தினங்களுக்கு ஒரு தரம் இவ்விஷயங்கள் சம்பவிக்கின்றன. அதாவது அமாவாஸ்யையிலிருந்து 14 நாள் சந்திரன் வளர்ந்து பௌர்ணமியன்று பூர்ண சந்திரனும் காணப்பட, பிறகு மறுஅமாவாஸ்யைவரையில், சந்திரன் தேய்ந்துகொண்டும் வருகிறது. ஆகையால் அமாவாஸ்யையிலிருந்து பௌர்ணமி வரையில் ‘வளர்பிறை’ அல்லது ‘சுக்லபட்சம்’ என்றும், பௌர்ணமியிலிருந்து அமாவாஸ்யை வரையில் ‘தேய்பிறை’ அல்லது ‘கிருஷ்ணபட்சம்’ என்றும் பெயர்.

# திராவிடக் கதைகள்

## SOUTH INDIAN FOLKLORE

### ஆயிரம்பொன்கொண்டு அம்மணமாய்வந்தகதை

ஓர் ஊரில் பெருங்குடியானவனொருவனிருந்தான். அவனுக்கொரு மகன். அவனுடைய மனோ விசாலத்தையும், புத்திபுத்தியையும் கண்டு அவனைப் பெரிய இடத்தில் ஸம்பந்தம் செய்விக்கவேண்டுமென்று மிராசுதாரன் மகளொருத்தியைத், தன் மகனுக்குக் குடியானவன் மணஞ்செய்வித்தான். சில நாள் கடந்ததும், குடியானவன் இறந்தான்; சிறுவன் வீட்டிற்கு முதலாளியானான்.

கொஞ்சகாலமானதும், அவன் தனது மாமனார் வீட்டிற்குப் போனான். மிராசுடனிராமல், அவர் வியாபாரத்தால் பணத்தின்மேல் பணஞ் சேர்த்துக்கொண்டிருந்தார். அவரது மகள் தனது கணவனது புத்திசாலித்தனத்திற்கு மெச்சிப் புகழ்ந்து, மகிழ்ந்து, அவனை “நீங்கள் ஏன் வியாபாரஞ்செய்யக்கூடாது?” என்று கேட்டாள். “நான் வியாபாரஞ் செய்தால் எல்லாரும் ஓடவேண்டியதுதான்” என்றுடனே அவன்பதில் சொன்னான். “எங்களப்பாவை ஆயிரம் பூவராகன் தரச்சொல்கிறேன். நீங்கள் எல்லாம் வியாபாரஞ்செய்யலாம்” என்று தன் கணவனுக்கு உபதேசம் செய்தாள். “எனக்குப் பணமேகிடையாது! உங்களப்பன் வீட்டுப் பணந்தானே எனக்குக் கதி” என்று சிரித்துக்கொண்டு அவன் பதில்சொன்னான். “என்ன கிராக்கி; கொடுத்தால் வாங்கிக்கொள்ள முடியாதோ? பணம் என்றால் பிணமும் வாய்திறக்குமென்பாரே. இது என்ன கிராக்கி!” என்று மனைவி கேட்டாள். “ஆமாம், நான் பிணம் போல வாயைத் திறக்கவேண்டுமென்பது உனக்கிஷ்டம்! போகட்டும்; வலியவந்த சீதேவியை வேண்டாமென்று யார் சொல்வார்? பணத்தை மாத்திரம் நீ வாங்கி வந்துவிடு. நான் வியாபாரஞ் செய்துவிடுகிறேன். நான் நேராகப் பணம் வாங்கமுடியாது” என்று குடியானவன் மகன் மிடுக்குடன் பதில் கூறினான்.

மனைவி வாங்கிக்கொடுத்த பணத்தைக் கொண்டு குடியானவன் மகன், வியாபாரஞ் செய்யப் போனான். ஆயிரம் வராஹனைக் கலகல வென்றோசை செய்துகொண்டவன் இரண்டு கைகளையும் வீசி வெகு மிடுக்குடன் நடந்துகொண்டிருந்தான். போகும் வழியில், ஒரு யானைப்பாகன், யானைமேல் ஸவாரி செய்துகொண்டிருந்தான். அவனைப் பார்த்து “யானையின் விலை என்ன?” என்று கேட்டான். “ஓகோ! தெரியாதா? யானை செத்தாலு மாயிரம் பொன்னென்று? யானை கறுத்திருந்தும் ஆயிரம் பொன் பெறுமென்றுந் தெரியாதா?” என்று சொன்னான் யானைப் பாகன். “ஆ? அப்படியா? ஆனால் ஸரி” என்றுகொண்டு தன் விராஹன் மூட்டையைத் தளர்த்தி யானைப்பாகனிடம் சேர்ப்பித்துவிட்டு யானையைப் பெற்றான். அசமஞ்சன் கையில் பணம் பட்டால் கிள்ளுக்கிரண்டு கீரைக்கிரண்டு என்றது கேட்டதில்லையா?

யானையை நடத்திக்கொண்டு வரும் வழியில், ஒருவன் குதிரை ஸவாரி செய்வதைப் பார்த்தான். “அப்பாடி! இந்த யானையைக் கட்டிக்கொண்டு யார் மாரடிப்பார்? அந்தக் குதிரை கிடைத்தால் போதுமே! இவ்வளவு கஷ்டமில்லை” என்று எண்ணிக்கொண்டு ஸவாரி செய்பவனைக் கூப்பிட்டு “யானைக்குங் குதிரைக்கும் பரிவர்த்தனை செய்துகொள்ளலாமே” என்றுகேட்டான். “ஐயோ பாவம்! கஷ்டப்படுகிறாற்போல விருக்கிறது. ஈவிரக்கம் இல்லாதவன் மனிதனா? ஏதோ நீங்கள் கேட்டால் இல்லை என்று சொல்லக்கூடாது. இதுவரையும் நான் யாருக்கும் இல்லையென்று சொன்னதே கிடையாது. காட்டிலிருந்த கோட்டானைக் கொடுத்துக் கோழியைக் கொண்டேன். கோழியைமாற்றிக் குதிரையைக் கைக்கொண்டேன். நீங்கள் யானையைத் தந்தால் வேண்டாமென்று சொல்வேனோ” என்று சொல்லி இஷ்டமில்லாதவன்போல யானையுடன் தன் வழியே போனான்.

குடியானவன் மகனுக்குக் குதிரை ஏறத் தெரியாது. என்ன செய்வான்? கடிவாளத்தைப் பிடித்து அதை நடத்திக்கொண்டு வரும்பொழுது, ஆனந்தபுரமென்னு மூரை யடைந்தான். அங்கு பலபேர் கூடி ஆட்டுச்சண்டை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். நமது குடியானவனும் அங்கு நெருங்கி, நடப்பதை ஆவலுடன் பார்த்தான். சின்னஞ் சிறுநாளில் கோலி, பம்பரம், பலின்சடுகுடு, கிளிக்குந்தம் முதலிய விளையாட்டில் மிகு தேர்ச்சியடைந்தவனாகையால் அவனுக்குச் சிறு நாள் ஞாபகம் வந்துவிட்டது. “ஆகா! என்ன ஆட்டம்! இந்தக் குதிரை எதற்குபயோகம்? அந்த ஆடிருந்தால் சண்டைவிட்டு விளையாடலாம்” என்று ஆவென்றண்ணாந்து வாயிலும் மூக்கிலும் ஈபோனது தெரியாமல் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான். ஆட்டம் முடிந்ததும், “என் குதிரையைத் தருகிறேன்; உன் ஆட்டை எனக்கேன் கொடுக்கக்கூடாது?” என்று ஆட்டின் சொந்தக்காரனைக் கேட்டான். “ஏனா? எங்காவது குதிரை மூட்டுமா? உன் குதிரைக்கென்ன கொம்பா முளைத்திருக்கு?” என்றவன்சொன்னான். கடைசியாக மன்றாடிக் குதிரைக்குப் பதிலாக ஆட்டை வாங்கிக்கொண்டான்.

இதற்குள் அங்கு ஒரு சேவல் போர் ஆரம்பித்தது. மயங்கி அங்கேயிருந்தவன் சேவலைத் தனது ஆட்டிற்குப் பதிலாகக் கொடுக்கும்படிக் கோழிக் குடையானைக் கேட்டான். “உன் ஆடு, பொழுது விடியுமுன் தலை நிமிர்ந்து எச்சரிக்கை யிடுமா? ஜாமப்பொழுதைக் காட்டுமா? ஒரு நிலையிலுமிருக்காத ஆட்டை வைத்துக்கொண்டு என்ன செய்வது? —” என்றவன் மிடுக்குடன் சொல்லவே, குடியானவன் “தயவு செய்யவேண்டும், தயவு செய்யவேண்டும்” என்று கெஞ்சினான். பின் அவன் கொடுக்க இணங்கவே, சேவலைப் பெற்றுக்கொண்டு அதைத் தோள்மேல் வைத்து நடந்துகொண்டிருந்தான்.

வழியில் ஒரு அம்பட்டன் துலுக்கனொருவனுக்கு க்ஷவரஞ் செய்துகொண்டிருந்தான். துலுக்கனை முன்பாராதவனாகையால் அவனுக்குத் தாடியையும் மீசையையும்மட்டும் விட்டுச் சிரைத்தது குடியானவனுக்கு அதிசயமாகத் தோன்றியது. உடனே இச்சைப்பேயா லாட்டப்பட்டவனாகி “அவனுக்குச் செய்தாற்போல் எனக்கும் க்ஷௌ

ரஞ்செய்தால் என்ன தரவேண்டும்" என்று அம்பட்டனைக் குடியானவன் கேட்டான். "கையிலிருக்கும்அந்தக்கோழியைக் கொடுத்தால் செய்கிறேன்" என்று பரியாரி பதில் சொன்னான். அவ்வாறே க்ஷெளரஞ்செய்து கொண்டு பரியாரிக்குச் சேவலை ஸமர்ப்பணஞ் செய்துவிட்டுக் குடியானவன் குளத்தில் முழுகப்போனான்.

ஆனால், வழியில் எதிரில் வருபவரைக் கணியாமல், கையையுந் தலையையும் ஆட்டிக்கொண்டு ஒருவன் தனக்குள்ளே தான்தான் வித்வானென்று எண்ணிக் கையில் சிட்டிகை போட்டுக்கொண்டு பாடிய வண்ணமாக நடந்து கொண்டிருந்தான். அவனைக் குடியானவன் தன் தொண்டையைக் கிழித்துக்கொண்டு கூவினான். அவன் பார்த்தாலல்லவா? பாட்டுமுன், வேறுலோகமேது? குடியானவன் தன்னை அவன் எட்டிக்கூடப் பார்க்கவில்லையென்று அவன் பின்னே ஓடி அவன் மேல்வேஷ்டியைப் பிடித்திழுத்தான். 'ஆனால் பாடகன் கையை உதர அதுகுடியானவன்வாயில்நுழைந்துவிட்டது. கைக்கும் வாய்க்கும் வந்த சண்டையிலிருந்து ஸமாதானமுண்டாகத் "தயவுசெய்து சிட்டிகையெப்படிப்போடுவதென்று சொல்லிக்கொடும்" என்று குடியானவன் வேண்டிக்கொண்டான். "சிட்டிகையின் பெருமையுமக்கென்ன தெரியும்? தாளஞ் சொல்லிக்கும்; நல்ல ஆளையுஞ் சேர்ப்பிக்கும். சிட்டிகைப் பொடியின் மகிமை யார்க்குத்தான் தெரியாது" என்று அப்பாடகன் பதிலுரைத்தான். மேலும் "உன்னைப் பார்த்தால் சொல்லிக்கொடுக்கவேண்டுமென்று தானே எனக்குத் தோன்றுகிறது. நீ சொல்லிய படியே செய்கிறேன்" என்று கடைசியாக ஒப்புக்கொண்டான்.

அவன் கட்டைவிரலை நடு விரல்மேல் வைத்து அழுத்திச் சிட்டிகை போடச் சொன்னான்; அதற்காகக் குடியானவனிடமிருந்து கைக்காப்புங் கொலுசும் இனாமாகப் பெற்றான். பின் குடியானவன் குளத்தில் போய் ஸ்நானஞ்செய்தான். ஆனால்சிட்டிகை போட்டால் ஓசை கேட்கவில்லை. சிட்டிகை போய்விட்டதென்று குளமெல்லாந் தேடிப் பார்த்தான். அது ஏன் கிடைக்கும்? ஓயாது அவன் தேடிக்கொண்டே இருந்தான். அப்பொழுதங்கொரு வழிப்போக்கன்வந்து 'என்ன தேடுகிறீர்?' என்றவனுடன் கேட்டான். 'ஐயோ! வந்த சிட்டிகையைக் கெட்டுப் போக்கிவிட்டேன். என்ன தேடியுங் கிடைக்கவில்லை. அதைத் தேடிக் கொடுத்தால், என் கடுக்கன் மேல்துணி எல்லாம் கொடுப்பேன்' என்ற பதில் அவனுக்குக் கிடைத்தது. 'இன்றைக்கு நரிமுகத்தில் விழித்தேன் போலிருக்கிறது. வலிய வந்த சீதேவியைத் தள்ளுவானேன்?' என்று எண்ணிக்கொண்டு 'இங்கு வாரும் நான் சிட்டிகை போடுகிறேன்' என்றான் வழிப்போக்கன். ஸந்தோஷத்துடன் குடியானவன்வந்தான். அவனுடைய கைகளைத் தனது உலர்ந்த துணியால் துடைத்துச் 'சிட்டிக்கை போடு. இப்பொழுது இதோ உன்னிடம் வந்துவிட்டது. இந்தத் துணியுள் அது ஒளிந்திருந்தது' என்று குடியானவனைச் சிட்டிகை போடச் சொன்னான். அவனும் போட்டான். வழிப்போக்கன் தனக்குக் கொடுக்கவேண்டிய பொருளைக் கேட்டான். குடியானவன் தனது கௌபீனந் தவிர எல்லாம் கொடுத்தான்.

கடைசியாக வீட்டைக் குடியானவன் அடைந்து, அடியே! என்று கதவைத்தட்டினான். அவன் மனைவி கதவைத்திறந்து தன் கணவனது ஸர்வாங்க லக்ஷணத்தைக் கண்குளிரக்கண்டு மூக்கின்மேல் கைவைத்து, "என்ன! ஆயிரம் விராகன் கொண்டு அம்மணமாக வந்தீர்?" என்றுகேட்டாள். "என்ன வியாபாரமா! நாம் ஊர் விட்டுப்போகலாம் என்று அப்பொழுதே சொன்னேனே. அப்பொழுது நம்பவில்லை. எத்தனை வியாபாரம்; ஒன்றா? இரண்டா?—கேள்; என்று தன் பெருமையை

> யானைகுதிரை யாடுகோழி தாடிசிட்டிகை பாரடீ
> மானேதேனே மிராசிப்பெண்ணே கட்டிக்கரும்
> [பென்சீரடீ

என்று உல்லாசமாய்ப் பாடிக்கொண்டு உள்ளே சென்றான்.

எனக்குக் கதை சொல்லிக்கொண்டிருந்த பெரியபாட்டி ஏனோ தெரியாமல் ஓடிப் போய்விட்டாள். ஒருவேளை கதை முடிந்திருக்குமென்று நானும் தேடவில்லை.



## உளவறியும் இராஜாங்க இலாகாக்கள்

## THE GOVERNMENT INTELLIGENCE DEPARTMENT

*எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்*
*வல்லறிதல் வேந்தன் தொழில்.*

ஐரோப்பா கண்டத்தில் வல்லரசுகளான இங்கிலாந்து, பிரான்ஸ், ருஷ்யா, ஜெர்மனி ஆகியஇவைகள்ஒவ்வொன்றும் உளவறியும் ராஜாங்க இலாகாக்கள் ஸ்தாபித்திருக்கின்றன. இந்த இலாகாக்களுக்குச்சேர்ந்த உளவாளிகள் ஐரோப்பாமுழுவதும் பரவியிருக்கிறார்கள். இங்கிலாந்தின் உளவறியும் இலாகா இந்தியாவில் சிறந்ததாயிருந்த போதிலும், ஐரோப்பாவில் அவ்வளவு ஒழுங்கும், வேலைத்திறமையுமுள்ள தல்லவாம். என்றாலும், அதுவும் இப்பொழுது நல்ல வேலை செய்து வருகிறதாம். பிரான்ஸ் தேசத்தின் இலாகா, இங்கிலாந்தின் இலாகாவைவிட கொஞ்சம் உயர்ந்ததென்றே சொல்லலாம். ருஷியாவின் இலாகா இவை யிரண்டினும் சிறந்தது. ஜெர்மனியின் இலாகாவோ, இவை யெல்லாவற்றிலும் சிறந்ததென்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஏனெனில், ஜெர்மன் இலாகாவின் அமைப்பும், அதன் நடவடிக்கைகளின் ஒழுங்கும், அது தற்காப்புக்கும் சண்டைதொடுப்பதற்கும் ஒருங்கே பயன்படுமாறு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஜெர்மனியின் இலாகா தன் சொந்த ராஜாங்க அதிகாரிகளையும் ஜனங்களையும் வெகு ஜாக்கிரதையாகக்கவனித்துவருகிறது. ஆகையினால் ஜெர்மனியின் இலாகா இரண்டு பிரிவுகளுள்ளது. ஒன்று உள்நாட்டு உளவறியு மிலாகா, மற்றொன்று வெளி நாட்டு உளவறியு மிலாகா. இந்நான்கு ராஜாங்க இலாகாக்களையும் தவிர, ஸர்வ தேச ஸம்பந்தமான உளவறியும் உத்தியோகசாலையொன்று பெல்ஜியத்தில் ப்ரஸ்ஸல்ஸ் நகரில் உண்டு. ஆனால் இப்பொழுது அது ஜெர்மானியரால் அழிக்கப் பட்டிருக்குமென்பதில் சந்தேகமில்லை. பொதுவாக இந்த ப்ரஸ்ஸல்ஸ் உளவாளிகள், புதுமாதிரியான பீரங்கிகள் அல்லது புதிய கோட்டைகள் அல்லது அரண்கள் இவைகளின் படங்களைச் சம்பாதித்துக் கொடுப்பார்கள்.

இந்த உளவறியும் இலாகாக்களுக்காக வேலைசெய்வது எப்பொழுதும் அபாயகரமானதே. ஒரு ராஜாங்கத்திற்கும் மற்றொன்றிற்கும் சிநேகமும் உடன்படிக்கை சம்பந்தமும் இருந்தாலும், ஒன்றன்மேலொன்றுக்கு ஸம்சயமுமிருந்து கொண்டேயிருக்கும். ஆகையால், ஒரு ராஜாங்க உளவாளி ஒரு காரியம் செய்ய ஆரம்பிப்பதை, மற்ற ராஜாங்க உளவாளிகளில் எவர்களாவது அறிந்தால், அதற்குத் தடைசெய்து நிறைவேறாமல் செய்துவிடுவார்கள். ஊசிக்கு ஊசி பாயுமா? ஜெர்மன் உள்நாட்டு உளவறியுமிலாகாவைச் சேர்ந்த உளவாளிகள் வேறு தேச உளவாளிகளைக் கண்டுபிடிப்பதில் சமர்த்தர்களாம். ஜெர்மன் உள்நாட்டு இலாகாவின் திறத்தைப்பின் வரும் ஸம்பவம் இனிது விளக்கும்.

ஒரு பிரெஞ்சு படைத்தலைவன் உளவறிய பேர்லினுக்கு அனுப்பப்பட்டான். ரயில்வே எஞ்சினீரான தன் சகோதரன் பெயருக்கு 'பாஸ்போர்ட்' அதாவது பயணச்சீட்டு வாங்கிக்கொண்டு பெர்லின் நகரத்துக்குப் போக ரயிலேறினான். அவன் பாஸ்போர்ட் எல்லா விஷயத்திலும் உண்மையாயும் கிரமமாயுமிருந்தபோதிலும், அதனோடு சகோதரன் போடோகிராப் படத்துக்குப் பதிலாக இவன்படம் வைக்கப்பட்டிருந்தது. அவன் பெர்லின் போய்ச்சேர்ந்த மறுநாட் காலமே, தான்இறங்கியிருக்கும் ஹோட்டலுக்கு முன்பாக ஒரு ஸ்திரீ நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். அவள் அழகுவாய்ந்த ஒரு யௌவன ஸ்திரீ. படைத்தலைவன் ஹோட்டலுக்குள் புக, இந்த ஸ்திரீயும் அங்கே புகுந்து அவன் சமீபத்தில் போஜனத்துக்குட்கார்ந்தாள். இருவருக்கும் சிநேகமுண்டாயிற்று. அவள் அவனைத் தன் வீட்டிற்கு அழைக்க, படைத்தலைவன் அழகால் மயங்கி அவள் பின்சென்று அன்றிரவை அவள் வீட்டில் கழித்தான்.

மறுநாளிரவு அப்பெண், படைத்தலைவன் இறங்கியிருக்கும் ஹோட்டலின் அறைக்கே தன்னை அழைத்துப் போகும்படி வேண்டிக்கொண்டாள். படைத்தலைவன் அவ்வாறே செய்தான். மறுநாட் காலை 9½-மணிக்கு, அப்பெண்மணி தான்

வெளியில் போய்விட்டுக் காலை போஜனத்திற்கு ஒரு மணி நேரங்கழித்துத் திரும்பி வருவதாகப் படைத்தலைவனிடம் சொல்லி விடைபெற்றுச் சென்றாள். பிறகு 10½மணிக்கு ஹோட்டல் வேலையாள் படைத்தலைவன் அறைக் கதவைத் தட்டி, "ஐயா, உம்மை ஒருவர் காண கீழேவந்து காத்திருக்கிறார்" என்றான். படைத்தலைவன் "யார்" என்று வினவ, "ஒரு சீமாட்டி உம்மைக் காண விரும்புகிறாள். அந்த அம்மாள் இன்னாரென்று தங்களுக்கே தெரியுமாம்" என்று வேலையாள் கூறினான். படைத்தலைவன் உடனே கூடத்தில் வந்துபார்க்க, மூன்று மனிதர்கள் எதிரில் நின்றார்கள். அவர்களில் ஒருவர் படைத்தலைவனுக்கு வந்தனம் செய்து, மிகவும் வினயத்துடன் "பிரான்ஸ் ரயில்வே எஞ்சினீர் பி—என்பவர் தாங்கள்தாமோ?" என்றார்.

படைத்தலைவன் அதற்கு "ஆம். தாங்கள் யார், தெரியவில்லையே" என்றான்.

அவர் "நானா? என்று சொல்லிக்கொண்டே தன் மேல்சட்டைப் பொத்தான்களைக் கழற்றி, தன் அதிகாரத்துக்கு அறிகுறியான தங்கக் குஞ்சங்களையும் விருதுகளையும் வெளியே தெரியவிட்டுக்கொண்டு "நான்தான் போலீஸ் கமிஷனர்" என்றார்.

படைத்தலைவன் திக்பிரமை அடைந்தான். உடனே போலீஸ் கமிஷனர், "நீர் எஞ்சினீர் அல்ல" என்றார்.

படைத்தலைவன் "என் பாஸ்போர்ட் சரியாய்க் கையெழுத்து செய்யப்பட்டு ஒழுங்கு பிசகாமலிருக்கிறதே" என்றான்.

போலீஸ் கமிஷனர் "பிடிவாதம் செய்யாதேயும். நீர் எஞ்சினீருடைய சகோதரர். உம் பெயர்—ஏ. நீர் 'க்ரேநோபிள்' என்னும் இடத்திலுள்ள காலாட்படையின் தலைவர். நீர் யுத்த கலாசாலையினின்றும் தேறியவர். நீர் வின்ஸென்ஸ் என்னும் ஊரிலுள்ள தோட்டாக்கள் செய்யும் தொழிற்சாலைக்கு— இன்ன வருஷத்தில்—இன்ன தேதியிலிருந்து— இன்ன தேதிவரை அதிகாரியாயிருந்தீர்.— நீர் இன்ன தேதியில் க்ரேநோபிளை விட்டு, இன்ன ட்ரெயினில், இன்ன நம்பர் வண்டியில் வந்திருக்கிறீர். நீர் ஒரு பிரெஞ்சு உத்தியோகஸ்தர். பொய் சொல்லாதேயும்" என்றார்.

படைத்தலைவன் இதைக்கேட்டு ஆச்சரியமடைந்தான். பின்னர் புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டே தன் மேற்சட்டைப்பையிலிருந்து வெள்ளைகைக்குட்டை யொன்றையும், இன்னொரு சட்டைப்பையிலிருந்து ஒரு கடிதாசியையும் எடுத்து "இவைகள் உம்முடையனவா" என்றார். அந்தக் கைக்குட்டையின் ஒரு நுனியில் 'ஏ' என்ற எழுத்திருந்தது. அந்தக் கடிதாசி ப்ரெஞ்சு படைத்தலைவன் என்று ரூபிக்கும்ஸர்டிபிகேட்; படைத்தலைவன் இரண்டும் தன்னுடையதென்று கண்டான். மனக்கலக்கத்துடன், போலீஸ் கமிஷனரிடமிருந்து இரண்டையும் பெற்றுக்கொண்டான். போலீஸ் கமிஷனர், புன்சிரிப்புடன் படைத்தலைவன் முதுகைத் தட்டிக்கொடுத்து, "நேற்றிரவு, உன் பெட்டியின் கள்ள அறையிலிருந்து இவைகளை நாங்கள் எடுத்தோம். இந்த விஷயத்தில் நாங்கள் வெகுமரியாதையாக நடந்துகொண்டிருக்கிறோம் என்று அறியும். நீர் பெர்லினில் வந்து இறங்கின உடனேயே உம்மைச் சோதனை செய்து, விலங்கிட்டு உம்மைத் தொந்தரவுசெய்திருக்க எங்களுக்கு அதிகாரமுண்டு. ஆயினும், நாங்கள் அப்படிச் செய்யாமல், எவரையும் மயக்கும் அழகுவாய்ந்த அப்பெண்மணியைக்கொண்டு உம்முடைய காலம் சுகமாகக் கழியுமாறு ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆகையால் உடனே பிரான்ஸுக்குத் திரும்பும்" என்றார். படைத்தலைவன் மேற்சொன்ன ஜெர்மன் உத்தியோகஸ்தர்களோடு ரயில்வே ஸ்டேஷன் சென்று 20 நிமிஷத்திற்கெல்லாம் பிரான்ஸுக்குப் போகும் வண்டியில் ஏறி உட்கார்ந்தான். போலீஸ் கமிஷனர், படைத்தலைவனை மறுபடியும் பெர்லின் மார்க்கத்தில் திரும்பாதிருக்கும்படி வேண்டிக்கொண்டார். வண்டி ஸ்டேஷனை விட்டு நகரும்போது "க்ரேநோபிளிலுள்ள உம் பிரிய நாயகியாகிய— இன்னாளிடத்தில், சென்ற இரண்டு இரவுகளையும் யாருடன் எந்த விதமாய்க் கழித்தீரென்பதை மெய்மறந்து சொல்லிவிடாதேயும்" என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே போலீஸ் கமிஷனர் நின்றார்.



இந்த உளவறியும் இலாகாக்களினால் ஒவ்வொரு ராஜாங்கத்துக்கும் மிகுந்த பணச்செலவுண்டாகும். உளவாளிகளுக்குக் கொடுக்கும் சம்பளங்களும் வெகுமதிகளும் அதிகமேயாயினும், அவர்கள் படும் சிரமத்துக்கும், செய்யும் அபாயகரமான வேலைக்கும், அதனாலுண்டாகும் பிரயோஜனத்துக்கும் இன்னும் அதிகம் வேண்டுமென்றாலும் கொடுக்கலாம். ஜெர்மனியானது உளவறிதலில் அபாரச் செலவுசெய்கிறது. ஜெர்மனி அதைச் செலவு அன்றென்றும், அது முதலாகுமென்றும் அது வட்டிக்குப்போடப்பட்டிருக்கிறதென்றும் அபிப்பிராயப்படுகிறது. பின்வரும் விஷயத்தால் உளவறிதலாலுண்டாகும் செலவும்பயனும் தெளிவாகும்.

சில வருஷங்களுக்கு முன் ஸ்விட்ஜர்லாந்தில் கூடியிருந்த ருஷ்ய கலககாரர்கள் இன்னார் என்பதும் அவர்களுடைய அங்கமச்ச அடையாளங்கள் இன்ன என்பதும் ருஷ்ய ராஜாங்கத்தாருக்குத் தெரியவேண்டியிருந்தது. இதற்காகத் தந்திரமுள்ள ஒரு பெண்ணும் மற்றொரு உளவாளியும் ஸ்விட்ஜர்லாந்துக்கு அனுப்பப்பட்டார்கள். அந்தப் பெண்ணுக்குத் தமையனென்றுசொல்லிக்கொண்டு உளவாளி அப்பெண்ணுடன் ஸ்விட்ஜர்லாந்தில் ருஷ்யக் கலககாரர்கள் இருக்கும் இடம் போய்ச்சேர்ந்தான். இருவரும் சீக்கிரத்தில் கலககாரர்களின் தலைவன் இன்னானென்று கண்டுபிடித்தார்கள். அவனுக்கு 22-வயதுள்ள ஒரு குமாரன் இருந்தான். தமையன், தங்கை என்று சொல்லி உளவறியும் நோக்கத்துடன் வந்த இருவரும் ஒரு பெரிய பங்களாவை வாடகைக்கு வாங்கி மிகுந்த செல்வவந்தர்கள் போல பிரமாதமான ஆடம்பரத்துடன் வசித்துவந்தார்கள்.

கூடிய சீக்கிரத்தில், அப்பெண்ணுக்கும் கலககாரர்களின் தலைவன் குமாரனுக்கும் பரஸ்பர நேசம் ஏற்பட்டது. தினந்தோறும் இருவரும் தனியாக ஒதுங்கி நின்று பேசிக்கொண்டிருப்பார்கள்; 'தமையனும்' கலககாரர்களின் தலைவனும் சிறிது தூரத்தில் நின்று வேடிக்கையாகப் பேசிச் சிரித்துக்கொண்டிருப்பார்கள். அப்பெண்மணியும் நாளுக்கு நாள் அதிகக் காதல் கொண்டவளாகக் காணப்பட்டாள். ஆகையால் அவளுக்கும் அக்கலககார்ரன் குமாரனுக்கும் விவாகம் நிச்சயிக்கப்பட்டது. கலககாரன் குமாரனுக்கு உண்டான சந்தோஷம் இவ்வளவு அவ்வளவு அல்ல. விவாகத்துக்கு முந்திய நாள் ஒரு பெரிய விருந்து பணச்செலவைக் கவனிக்காமல் தமையனால் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. இந்த விருந்துக்குத் தன் காதலனுடைய சிநேகிதர்களெல்லோரையும் வரவழைக்க வேண்டுமென்று அப்பெண்மணி தன் காதலனை நோக்கி "என் காதலா! விருந்துக்கு எல்லோரையும் அழைக்கவேண்டு மென்னும் அவா எனக்கு அதிகமிருக்கிறது. ஆகையினால் உன் சிநேகிதர்களில்ஒருவரையும் மறக்காமல்அவர்களுடைய பெயர் விலாசம் முதலியவைகளைக் குறித்துக் கொடுக்க வேண்டுகிறேன். அவர்களுக்கெல்லாம் விருந்துக்கு அழைப்புப் பத்திரிகை அனுப்பவேண்டியிருக்கிறது" என்று அன்புடனும் புன்சிரிப்புடனும் கூறினாள். காதலன் அவள் மாயவலையில் சிக்கித் தன் கைப்படவே தன்சிநேகிதர்களின் பெயர்விலாஸமடங்கியஜாப்தாஒன்றுஎழுதிக்கொடுத்தான்.

விருந்து வெகு ஆடம்பரத்துடன்நடந்தது; அதற்கு எல்லாரும் வந்திருந்தார்கள். விருந்து முடியும் தருணத்தில் அப்பெண்மணி எழுந்து நின்று, விருந்தாளிகளை நோக்கி "ஐயன்மீர்! எனக்கு இன்று அடங்காமகிழ்ச்சியுண்டாகிறது. இந்தத்தினமே எனக்கு ஆநந்தமான சுதினம். இந்தத் தினத்தை என்றும் மறவாமலிருக்க ஆசை கொண்டேன். இனி விருந்தாளிகளாகிய உங்களையெல்லாம் ஒருங்கே என்று காண்பேனோ? இந்தச் சுபதின ஞாபகார்த்தமாக நாமெல்லோரும் ஒருங்கே நின்று ஒரு புகைப்படம்பிடித்துக்கொள்வோம்" என்றுபுன்சிரிப்புடனும், சந்தோஷத்தினால் மலர்ந்த முகத்துடனும் வேண்டிக்கொண்டாள். விருந்தாளிகளில் போடோகிராப் படம் பிடிப்பதில் மனமில்லாதவர்கள் வெகு சிலரே. எல்லோரும்பங்களாவின்மைதானத்தில்வரிசையாய் நின்றார்கள். போடோகிராப் பிடித்தவுடன் அப்பெண்மணி எல்லார் காதிலும் விழும்படி போடோகிராப் பிடிப்பவனை நோக்கி "படங்களையெல்லாம் கூடிய சீக்கிரம் என் காத

லரின் தகப்பனரிடம் கொடுத்துவிடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்" என்ருள். ஸம்சயப் பட்ட சில விருந்தாளிகளுக்கு இது திருப்தி யை உண்டாக்கியது. அன்றிரவே போடோ கிராப் பிடிப்பவனிடமிருந்து படங்களையெல் லாம் வாங்கிக்கொண்டு தமையனும் தங் கையும் ஸ்விட்ஜர்லாந்தை விட்டோடினர் கள். ருஷ்ய ராஜாங்கத்துக்கு அவர்கள் கோரியது கிடைத்துவிட்டது. ஆனல் செலவு மட்டும் ஆயிரக்கணக்கான 'பவுன்'.

---

# துரைத்தனப் பிரிவுகள்

## DEPARTMENTS OF GOVERNMENT

| சட்ட நிருபணம் செய்தல் | சட்டபரிபாலனம்செய்தல் | நியாய விசாரணை செய்தல் |
|---|---|---|
| அரசன் ஜனப்பிரதிநிதிச் சபை (Parliament)<br>1. பிரபுக்கள் சபை (House of Lords)<br>பிரஜைகள் பிரதிநிதிச்சபை (House of Commons) | அரசன் ப்ரிவி கவுன்ஸில் (Privy Council)<br>காபினட் (Cabinet) | கோர்ட்டுகள்<br>இங்கிலாண்டு கோர்ட்டுகள்<br>ஸ்காட்லண்டு ,,<br>ஐர்லண்டு ,, |

## ஜனப்பிரதிநிதி சபை (பார்லிமெண்ட்)

### 1. கீழ் அங்கம் (House of Commons) இவ்வங்கத்தின் தொகை மொத்தம் 670

| | | | |
|---|---|---|---|
| இங்கிலாந்துக்கு | ... | 465 | மொத்தம் 670 |
| வேல்ஸுக்கு | ... | 30 | |
| ஸ்காட்லந்துக்கு | ... | 72 | |
| ஐர்லந்துக்கு | ... | 103 | |

இவ்வங்கத்தின் மெம்பர்கள் ஐந்து வரு ஷத்திற் கொருமுறை மாறவேண்டும். இம் மாதிரி ஐந்து வருஷத்திற் கொருமுறை ஜனங்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுப்பதை ஜனரல் எலக்ஷன் (General election) என்று சொல்லுவது. மத்தியில் மெம்பர்கள் ஏதாவது சில காரணங்களால் இச்சபையை விட்டு அகன்ருல், அவர்கள் ஸ்தானங்களுக்கு வேறு பிரதிநிதிகளை ஜனங்கள் நியமனம் செய்ய வேண்டும்: இதைப் பை-எலக்ஷன் (By-election) என்று கூறுவது வழக்கம். இச்சபையின் காரியங்களைச் சரிவர நடத்தவும், ஷை சபை யின் மீட்டிங்குகளுக்கு அக்கிராசனுதிபதியா யிருக்கவும் நியமனம் செய்யப்பட்டு, வேலை பார்த்து வருபவர்க்கு ஸ்பீகர் (Speaker) என்று பெயர். சில சமயங்களில் இச்சபை மீட்டிங்குகளில் இவருக்குப் பதிலாகக் கம் மிட்டி சேர்மன் (Chairman of the Committees) அக்கிராசனம் வகிப்பார். இச்சபை



மெம்பர்களுக்குச் சில சுவதந்தரங்கள் உண்டு. அவர்கள் எதைப்பற்றி வேண்டு மானலும் தாராளமாய்ப் பேசலாம். சபை யில் மெம்பர்களாயிருக்கும் வரையில் அவர் களைக் கவர்ன்மெண்டார் தண்டனை செய்யக் கூடாது. இம்மெம்பர்களில் ஒருவரும் சர்க் கார் உத்தியோகம் ஒன்றையும் ஒப்புக்கொள் ளக்கூடாது. அப்படி சர்க்கார் உத்தியோகம் விரும்பும் மெம்பர் உடனே இச்சபையிலி ருந்து நீங்கிவிட வேண்டும். மறுபடியும் சபையில் இருக்க அவர் விரும்பினல், ஜனங் கள் அவரை மறுபடியும் நியமனம் செய்ய வேண்டும்.

யார் இப்பிரதிநிதிச் சபையோரைத் தேர்ந் தேடுப்பது:—வோட்டர்கள் (Voters)—

சர்க்காருக்கு வரி கொடுக்கும் கிரகஸ்தர் கள் யாவரும் பிரநிதி சபையாரை நியமனம் செய்யலாம். அப்படி நியமனம் செய்வதில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரதிநிதியைத் தான் நியமனம் செய்யவேண்டியது. ஒவ்



பார்லிமெண்ட் மஹாஸபை, லண்டன்

வொரு இடத்திலும், இம்மாதிரி வோட்டு செய்ய லாயக்காயுள்ளவர்களின் ஜாப்தா ஒன்றை கவர்ன்மெண்டார் தயார்செய்து வைத்திருக்கிருர்கள்.

எலக்ஷன் செய்யும் விதம்:—

எலக்ஷன்குறித்த ஒருதினத்தில், எல்லா விடங்களிலும் நடக்கும். குறித்த தினத் தில், ஒரு ஊரிலிருக்கும் வோட் கொடுக்கக் கூடியவர்களெல்லாம் அவ்வூர்அதிகாரியிடம் போகவேண்டும். அவ்வதிகாரி யிடத்தில் வோட்டர்களின் ஜாப்தாவும், பிரதிநிதி சபைக்கு வருவதாகச் சொல்லி முன்வந்தி ருக்கும் நபர்களின் பெயர்களும் இருக்கும். பின் சொல்லப்பட்ட நபர்களின்பெயர்களையு டைய கடிதம் ஒவ்வொருவோடருக்கு ஒன்று வீதம் கொடுக்கப்படும். அச்சடிக்கப்பட்டிருக் கும் ஒவ்வொரு வோட்டரும் மேற்சொல்லிய அதிகாரியிடத்திற்குப் போய் தன்னுடைய வோட்டிங் கடிதத்தை (Voting paper) எடுத்து யாரை நியமனஞ்செய்யத் தனக்கு விருப்பமுளதோ அவரின் பெயருக்கு எதி ரில் X என்ற குறியைப்போட்டு ஷை

வோட்டிங்கடிதத்தைநன்றாகமூடி, அவ்விடத்தில் வைத்திருக்கும் பெட்டியில் போட்டுவிட வேண்டும். இம்மாதிரி ஒவ்வொருவரும் செய்தபிறகு வோட்டிங் கடிதங்களுள்ள பெட்டியை, அவ்வதிகாரி இன்னும்சில அதிகாரிகளை வைத்துக்கொண்டு, திறந்துபார்த்து, யாருக்கு அதிகமாய் வோட்கிடைத்திருக்கிறதோ அவரைச் சட்டசபையில் தங்கள் பிரதிநிதியாக ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

## கட்சிகள் (Parties)

இச்சபை மெம்பர்கள் இரண்டு முக்கியக் கட்சிகளாகப் பிரிந்தேயிருப்பார்கள். அக்கட்சிகளைத்தான் லிபரல்ஸ் (Liberals) என்றும் கன்ஸர்விடிவ்ஸ் (Conservatives) என்றும் சொல்லுகிறார்கள். முற்கூறிய லிபரல் கட்சியைச் சேர்ந்தவர்கள், அரசாட்சியில் அடிக்கடி சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்று வற்புருத்துவார்கள். இதற்கு விரோதமாயிருப்பவர்கள், பின் சொல்லப்பட்ட கன்ஸர்விடிவ் கட்சியைச் சேர்ந்தவர்கள். காமன்ஸ் மஹா ஸபையில் நடக்கும் (House of Commons) ஒவ்வொருஜெனரல் எலக்ஷனில் இக்கட்சிகளில் ஏதாவது ஒரு கட்சியார்பலமாய் நின்றுவேலைசெய்து ஜெயிப்பார்கள். அப்படி ஜெயிக்கும் கட்சிக்காரர்களினின்றுதான் மந்திரிகள் நியமனம்செய்யப்படுகிறார்கள்.

இரண்டாவது அங்கம் (House of Lords) இவ்வங்கத்தினர்மொத்தம் 600. இவ்வங்கத்தில் கீழ் சொல்லப்படும்பிரபுக்களும், பிஷப்புக்களும் இருக்கிறார்கள்.

(1) இங்கிலாந்து சர்ச்சைச் சேர்ந்த பிஷப்புக்கள்.

(2) பரம்பரையாக வரும் பிரபுக்கள். இவர்கள் மொத்தம் 44.

ஸ்காட்லந்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும் 16 பிரபுக்கள்.

ஐர்லந்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும் 24 பிரபுக்கள். இவர்கள் தங்கள் ஆயுள் காலம் வரை மெம்பர்களாக இருக்கலாம்.

(3)அப்பீல் பிரபுக்கள் (Lords of Appeal) இச்சபைக்கும் அக்கிராசனாதிபதியுண்டு. அவர்தான் லார்டு சான்ஸலர் (Lord Chancellor.)

## சென்ட்ரல் கவர்ன்மெண்டு

ஒரு அரசன் தன் தேசத்தில் இராஜாங்கக்காரியங்களைச் செய்வதில் தனக்கு உதவியாகச் சில மந்திரிமார்களை நியமித்து, அவர்கள் உதவியைக்கொண்டு இராஜ்யத்தை ஆண்டுவருகிறார். இங்கிலாந்தில் அரசனுக்கு அரசாட்சி விஷயங்களில் தக்க ஆலோசனை கூறவும், இன்னும் வேண்டிய உதவிகளை அரசருக்குச்செய்யவும் ஒருகவுன்ஸில்ரொம்ப நாளாக இருந்துவருகிறது. இதுதான் ப்ரிவி கவுன்ஸில் என்பது. இதில் பல பிரிவுகள் உண்டு. அவைகளுக்குத்தான் அரசாட்சியில் முக்யமான சம்பந்தம் உண்டு. ஷை பிரிவுகளில் முதன்மையாயும் மிக்க செல்வாக்கையுடையதாயுமிருக்கும் காபினெட் (Cabinet) என்னும் கம்மிட்டிதான் இப்பொழுது இராஜ்ய பரிபாலனத்தைத் தன்னிடத்தில் வகித்துக்கொண்டிருக்கிறது.

காபினெட் மந்திரிகள் (The Cabinet):–இது எப்படி ஏற்படுகிறது என்பதைக் கவனிப்போம். மேலே கூறியபடி சட்ட நிருபண சபையின் கீழங்கமாகிய காமன்ஸ் மஹா ஸபை மெம்பர்களை 5 வருஷங்களுக்கு ஒரு முறை பொறுக்கி யெடுக்கும்போது அச்சபையில் எந்தக் கட்சிக்காரர்கள் அதிகமாயிருக்கிறார்களோ அக்கட்சியின் தலைவரை அரசர் வரவழைத்து அவரை முக்கிய அல்லது பிரதான மந்திரியாக நியமனஞ்செய்து, பாக்கி வேண்டிய மந்திரிகளை நியமிக்க அவருக்கு அதிகாரத்தைக் கொடுத்து காபினெட் மெம்பர்களைத் தீர்மானம் செய்யும்படிச் சொல்லுவார். இம்மந்திரி உடனே தன் கட்சியைச் சேர்ந்தவர்களில் தன் மனதிற்கிசைந்த நபர்களை, அதாவது எவர்கள் தன்னுடன் சேர்ந்து வேலைபார்க்கத் திறமையுடையவர் என்று தன் மனதில் தோன்றுகிறதோ, அவர்களை அழைத்து அவர்களுக்குச் சங்கதியைத் தெரிவிப்பார். அவர்கள் ஒப்புக்கொண்டால், அவர்களை நியமனம் செய்துஅரசாட்சியைஅவர்களுக்குள் பிரித்துவிடுவார். ஆனால் இவர்கள் காமன்ஸ் மஹா சபையின் உதவியை எவ்வளவு காலம் அடைகிறார்களோ அது வரைக்குந்தான் அதிகாரம் செலுத்தலாம்.



## இதிலடங்கிய மந்திரிகள்

இது ப்ரிவிகௌன்ஸில் கமிட்டிகளில் ஒன்றாகையால் இதில் அக்கவுன்சில் பிரசிடெண்டுஎப்பொழுதும்ஒருமெம்பராக இருப்பார். பாக்கி மெம்பர்கள் அடியில் சொல்லும் மந்திரிகள் —

லார்டு சான்ஸலர், * சான்ஸலர் ஆப் தி எக்ஸ்செகர், உள்நாட்டு ராஜீய கார்யதரிசி, அயல்நாட்டு ராஜீய கார்யதரிசி, இந்திய கார்யதரிசி, குடியேற்ற நாடுகளின் கார்யதரிசி, யுத்த கார்யதரிசி, நாவாய்ப்படையின் பிரதமப் பிரபு.

Lord Chancellor, the Chancellor of the Exchequer, the Secretaries of State for Home Affairs, Foreign Affairs, for India, for the Colonies & for War, the First Lord of the Admiralty.

இவர்களோடுகூட இன்னும் பிரதான் மந்திரியால் நியமிக்கப்பட்டுவரும் முக்யமானவர்களாகிய வியாபாரவிஷயச் சபையின் அக்கிராசனாதிபதி, கல்விச்சபையின் அக்ராசனாதிபதி, உள்நாட்டு ஆட்சி சபையின் அக்ராசனாதிபதி.

President of the Board of Trade, President of the Board of Education, President of the Local Government Board.

இங்கிலாந்தின் மந்திரிமார்கள் சபையைப் பற்றி கவனிக்கவேண்டிய சில விஷயங்கள்:–

ஒவ்வொரு மந்திரியும், தான் கவனித்து வரும் 'டிபார்ட்மெண்டில்' நடக்கும் விஷயங்களுக்கு உத்தரவாதம் சொல்லவேண்டும். மேலும் ஒவ்வொரு மந்திரியும் மற்ற மந்திரிகளின் செய்கைகளையும் அவர்கள் அரசாட்சி சம்பந்தமாய்ச் செய்துவரும் காரியங்களையும் அங்கீகாரம் செய்து எல்லோரும் ஒருமிக்க இராஜ்ய பரிபாலனத்தை நடத்தி வரவேண்டியது. ஏதாவது ஒரு மந்திரி மற்றவர்களோடு இணங்காமலும் அவர்கள் செய்வதை ஒப்புக்கொள்ளாமலுமிருந்தால் அவர் உடனே அக்காபினெட் கவுன்சிலை விட்டு விலகவேண்டும். ஆனால் காமன்ஸ் மஹாஸபை ஏதாவது ஒரு மந்திரி செய்யும் காரியத்தைஅங்கீகாரம் செய்யாமல் அவரை அதற்காகக் கண்டனம்செய்தால் காபினெட் கவுன்சில் கலைந்துவிடும். இன்னும், இம்மந்திரிமார்கள் சபை கூடுவதும், அச்சபைகளில் நடக்கும் விஷயங்களும் ஒருவருக்கும் தெரியாது. அதன் நடவடிக்கைகளை ஒரு புஸ்தகத்தில் எழுதுவதும் கிடையாது. மேலும் இம்மந்திரிமார்கள் சட்ட நிருபண சபையின் பிரிவாகிய காமன்ஸ் மஹா சபையாரின் உதவியில்லாமல் இராஜாங்கக் காரியங்களை நடத்துவது கடினம். ஏனென்றால் எல்லா விஷயங்களுக்கும் வேண்டியது பணம். அப்பணம் சம்பந்தமான விஷயங்களெல்லாம் இவ்வங்கத்தினர்களால் அங்கீகரிக்கப்படவேண்டும். ஆகையினால், ஒவ்வொரு மந்திரியும் தான் செய்வதாக உத்தேசிக்கும் காரியங்களை ஷை சபை மெம்பர்களுக்கு நன்கு விளக்கவேண்டும்.

---

**புண்ணியம்.**—பொன்னும் பொருளும் புகழும் நீ உடையவனாயினென்ன? ஊரார்அஞ்ச உத்தியோகம் வகித்தென்ன? வனப்பில்மிக்க இளம்பெண்ணை மணந்தென்ன? பெட்டிவண்டியில் போயென்ன? குதிரை சவாரிசெய்தென்ன? பலர் கால்பிடித்து உபசரிக்கக் கட்டிலில் படுத்துக் காப்பிகுடித்தென்ன? உள்ளகாலத்தில் உன்னை நாடும் உறவினர் கூடியிருந்தென்ன? உன் தலையசைந்தால் தரணியாடியென்ன? "மனையாளு மக்களும் வாழ்வுந் தனமுந் தன் வாயின்மட்டே இனமான சுற்றமயான மட்டே" என்றபடி இவையனைத்தும் சுடுகாடுமட்டுமன்றோ? மற்றுன்னைப்பற்றித்தொடருவனயாவை? புண்ணிய பாவங்களென்ற இருவினைகளன்றோ! இவ்வுண்மையை யறிந்தும் அறியாமலும் நீ யேன் நிலையற்ற செல்வம், அதிகாரம், சுற்றத்தாரிவற்றைச் சதமெனக்கொண்டு அஞ்ஞானக் கடலிலாழ்ந்து அநீதங்கள் செய்து பட்டுழலவேண்டும்?

---

* இவர் ராஜ்யத்தின் வரவு செலவு கணக்கைக் கவனிக்கவேண்டும்.

# ஜீவஜந்துக்களின்பாஷைகள்

## LANGUAGES OF ANIMALS

மனிதர்களுக்கும், அந்தந்த ஜாதி மிருகங்களுக்கும், நன்றாய்க் கேட்கும்படி உரத்துக் கூவுகின்ற பசு, பக்ஷி, மிருகம் முதலிய உயர்ந்த ஜாதி ஜந்துக்களுக்குத் தமது கருத்தை வெளியிடத்தக்க பாஷை ஒன்று உண்டென்பது நம்மெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இது ஒரு அற்புதமன்று; பசு, பக்ஷி, மிருகங்களுக்கு இருப்பதுபோல், நாம் காதுகொடுத்துக் கேட்கத்தக்க தொனியொன்று இல்லாத ஈ, எறும்பு, பூச்சி, புழு முதலான அற்புத ஜந்துக்களுக்குக் கூட அந்தந்த ஜாதிகளுக்குள்ளே அவ்வவற்றின் கருத்தை வெளியிடத்தக்க பாஷை யொன்று உண்டு. அதை நாம் நம்பக் காரணங்கள் அநேகமிருக்கின்றன. அந்தப் பாஷை ஒருவகைச் சத்தமாயிருந்தாலும் இருக்கலாம், அல்லது, பரிசமானாலுஞ் சரிதான்; வேறு எந்தவிதக் குறிப்பானாலுஞ்சரிதான். எந்த ஜந்துவுக்கும் தன் கருத்தை வெளியிடத்தக்க வழி ஏதோ ஒன்று உண்டென்பது அவ்வவற்றின் வழக்கங்களையும் செய்கைகளையும் பூரணமாய்ப் பார்த்து அறிந்திருப்பவர்களுக்கு நன்றாய்த் தெரியலாம். மேற்சொன்ன ஜந்துக்களுக்கு ஒரு விதமான சத்தமுண்டாயிருந்தாலும் கருத்தை வெளியிடும் திறமை மாத்திரம் அந்தச் சத்தத்தில் அடங்கியிருப்பதாய்த் தெரியவரவில்லை. முக்கியமாய் அவற்றின் பரிசேந்திரியத்திலேதான் அது பொருந்தியிருக்கின்றது. இந்தச் சக்தி எறும்புக்கும் ஈக்கும் அவற்றின் தும்பி அல்லது மீசையில் அடங்கியிருக்கின்றது. அவற்றின் தும்பிகளுக்கு உண்டாயிருக்கிற திறமை மனிதருடைய இந்திரியங்களுக்குக் கூட இல்லையென்று சொல்லலாம். ஒவ்வொரு ஸமயங்களில் அவற்றின் ஓசைகூட ஒவ்வொரு செய்திக்கு அறிகுறியாகின்றது. இந்த ஜந்துக்களின் திறமையைப் பலபேர் பலவிதமாய்ப் பரிசோதித்திருக்கிறார்கள். அதில் முக்யமான இரண்டொரு உதாரணங்களை அடியிற் குறிக்கிறோம். ஒருக்கால் வெல்லப்பானை ஒன்று ஒரு அறையில் வைத்திருந்தது; அதை எப்படியோ அறிந்துகொண்டு அளவற்ற எறும்புக்கூட்டம் அதற்குள் புகுந்து வெல்லத்தைக் கோலாகலமாய்த் தின்றுகொண்டிருந்தது. அந்த வெல்லத்துக்கு உடையவன் எறும்பு வந்து தின்பதைப் பார்த்து அவைகளை ஒன்றில்லாமல் ஓட்டிவிட்டு இனி இதைக் கீழே வைத்தால் பத்திரமாயிராதென்று அந்தப் பானையை இறப்பிலேகட்டித் தூக்கிவிட்டான். அவன் எறும்போட்டினபோது தப்பித்தவறி ஒரு எறும்பு அதில் நின்றுவிட்டதோ என்னவோ? அந்தப் பானையைக் கட்டித்தூக்கின கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஒரு எறும்பு அதினின்றும் புறப்பட்டுக் கயிற்றுவழியாயேறி இறப்பிற்சென்று சுவர்மார்க்கமாயிறங்கித் தன் புற்றுக்குள் சென்றது. அது போன அரைநாழிகைக்கெல்லாம் அந்தப் புற்றினின்றும்எறும்புப்பட்டாளமொன்று புறப்பட்டுச் சுவர்வழியாயேறி இறப்பிற்சென்று கயிற்றுவழியாய்ப் பானைக்குள் இறங்கி, வெல்லத்தை வேண்டுமளவு புசித்தது. புசித்துவிட்டு அந்தப்பட்டாளம் பானையைவிட்டுப் புறப்பட மற்றொரு பட்டாளம் வந்து அதற்குள் இழிந்தது. இப்படியே அந்தப்பானை வெல்லமெல்லாம் ஆய்ப்போமளவும் அந்தக்கயிற்றில் எறும்புசாரி ஓயாமல் போவதும் வருவதுமாகவே யிருந்தது. இதைப் பார்க்கும்போது முன் அந்தப்பானையில் தங்கியிருந்த ஒரு எறும்புபோய் இவ்வளவு எறும்புக்கும் செய்தி சொல்லி அவைகளை அழைத்துக்கொண்டு வந்ததென்பதற்குச் சிறிதாயினும் சந்தேகமுண்டோ? எறும்புகளுக்கு பாஷையுண்டென்பதற்கு இன்னொரு திருஷ்டாந்தம் பாருங்கள். ஒரு எறும்புப்புற்றை அடைத்துப் போட்டோமானால் அப்போது இது நன்றாய் விளங்கும்; தங்கள் புற்றுக்குள்போக வழியில்லையென்பதைத்தெரிந்துகொண்டவுடனே எந்தமூலையில் எங்கே இடம் அகப்படுமோவென்று ஒவ்வொரு எறும்பும் ஒவ்வொரு பக்கமாகப் போய்த் திரிந்துபார்க்கும்; உள்ளே புகும்படியாய் எங்கேயாவது ஒரு புற்று ஏதாவது ஒரு எறும்புக்கு அகப்படுமானால், அது அந்த க்ஷணமே திரும்பித் தன் கூட்டாளிகளண்டைவந்து தன் தும்பியை அசைத்துச் சங்கதி



யறிவித்து அந்தப்புற்றுக்குப் போகவேண்டிய வழி இன்னதென்று சொல்லிவிட்டு மற்றத் தோழர்களையும் தேடிக்கொண்டு போனாலும் போகும்; அதைக்கூட அழைத்துக் கொண்டுபோய்ப் வழியைக் காட்டினாலும் காட்டும். இப்படியே எல்லா எறும்புகளையும் அது அந்தப் புற்றுக்குள் கொண்டு வந்து சேர்க்கும்.

எறும்புகள் ஏதாவது ஒரு வேலை செய்யப் புகுந்தால் அப்போது அவைகளுக்குத் தலைவனாயிருக்கும் ஒரு எறும்பு தன் தும்பியை அசைத்து ஒருவிதமான கூச்சலிடுகின்றது. அதைக்கேட்டவுடனே வேலையிலிழிந்திருக்கிற மற்ற எறும்புகளெல்லாம் தாமும் ஒருவிதமாய்க்கூச்சலிட்டு முன்னிலும் அதிகமாய் உழைத்து வேலைசெய்ய ஆரம்பிக்கின்றன. அதைப்பார்த்தால் முதலில் தலைமையாயிருந்த எறும்பு இட்ட கூச்சல் நன்றாய் வேலை செய்யும்படியாகச் செய்த கட்டளை போலவும், பின்பு உண்டான மற்ற எறும்புகளின் கூச்சல், அதற்கு அங்கீகார வார்த்தை போலவும் தோன்றுகின்றனவல்லவா?

ஒரு ஜாதி எறும்பு, மற்றொரு ஜாதி எறும்பின் மேல் படையெடுத்துப் போம்போதும் இவ்வகையான குறிகள் அநேகம் காணப்படுகின்றன; முதலில் சேனைத்தலைவனாயிருக்கும் எறும்பு ஒருவிதமாய்க் கூவ, அதைக்கேட்டவுடனே எறும்புப் படைகள் விசேஷமாய் வந்து கூடிப்போகின்றன. போதுமான சேனைவந்து கூடினபிறகு, பகையாளி நிலையை வேவு பார்த்துக்கொண்டு வரும்படி தூதனுப்பிச் செய்தி தெரிந்துகொண்டு அணிவகுத்து ஒழுங்காய்ச் செல்ல ஆரம்பிக்கின்றன. அப்படி சேனை நடந்துகொண்டிருக்கும்போது முன்னணிக்கும் பின்னணிக்கும் போக்குவரவு ஓயாமல் நடந்துகொண்டேயிருக்கும். சத்துரு சேனையண்டை போனவுடனே சண்டை ஆரம்பமாகின்றது. பாதி சண்டை நடக்கையில், சேனை போதாதென்று தெரிந்தால் புதுப்பட்டாளங்கள் வரவழைக்கப்படும். இப்படியே அவை தமக்குத் துன்பம், வருத்தம், பயம், அபாயம் முதலியவை நேரிடப் போவதாயிருந்தால், அவைகளைக்கூட முன்னதாய்த் தெரிந்துகொண்டு ஒன்றுக்கொன்று தெரிவித்துக்கொண்டு பத்திரமாய்க் காத்துக்கொள்ளமாட்டும். ஒருவகை யாராவது தாண்டிப் போகக்கண்டால் அவனைத் துரத்திக்கொண்டுபோய்க் கடித்துக் கொல்லாமல் விடுவதில்லையாம்.

இப்படிப்பட்ட காரியங்களெல்லாம் எவ்வளவு யுக்தியும் ஆலோசனையுமிருந்து நடந்தேறவேண்டும்! ஒன்றின் கருத்தை மற்றொன்றுக்குத் தெரிவிக்கத் தக்க பாஷையொன்றில்லாமல் இந்தச்செய்கைகள் ஒருக்காலும் நடவாதென்பது, மேற்கூறிய விஷயங்களால் யாவர்க்குந் தெளிவாய்த் தெரிந்ததுதான். அந்தப் பாஷையும் இப்படிப் பட்டதென்று ஒருவாறு தெரியவருகின்றது. தமக்கு நேரிடும் அபாயத்தை வெளியிட வேண்டுமானாலும், தமக்கிருக்கிற கோபத்தைக் காட்டவேண்டுமானாலும், அப்போது எறும்புகள் வளைத்து வளைத்தோடி எதனுடன் செய்திதெரிவிக்க வேண்டுமோ, அதன் தும்பியிலும் அடிவயிற்றிலும் தமது தலையினாலும் தாடையினாலும் முட்டுகின்றன. எல்லாக் காரியத்திற்கும் எறும்புகளுக்கு முக்கியமாயிருக்கிற கருவி தும்பியொன்றுதான். அவற்றின் சேனை படையெடுத்துச் செல்லவேண்டுமானால் அவை ஒன்றுக்கொன்று தும்பியால் முட்டிக்கொள்கின்றன. இதுதான் படையெடுக்க வேண்டுமென்பதற்கு அடையாளம். ஏனெனில் இவவிதமாய்ச் செய்தி தெரிந்துகொண்டவுடனே அவையெல்லாம் ப்ரயாணப்படக் காண்கிறோம். தமக்குப் புதிதாய் தெரிந்த செய்தியை மற்றொன்றுக்கு அறிவிக்க வேண்டுமானால் அப்போது ஒருவகைக் குறிப்போடு, தும்பியாலும் முகத்தாலும் முட்டிக் காட்டுகின்றன. பசித்து இரை தேவையாயிருந்தாலும் எதனிடத்தினின்றும், இரைபெற வேண்டுமோ, அதன் தும்பியைத் தமது இரண்டு தும்பியையும் அதிக சுறுசுறுப்பாய் அசைத்துக்கொண்டுபோய்த் தட்டுகின்றன. இவ்வகையாகவே அநேகம் ஜீவன்கள் குறிப்பு காட்டிப் பேசிக்கொள்ளுகின்றன.

தேனீயும் எறும்பைப்போலவே தன் கருத்தை ஒன்றுக்கொன்று வெகுதிறமை

யாய்த் தெரிவித்துக்கொள்ளுகின்றது. எல்லாக்காரியங்களுக்கும் முக்கியமான உறுப்பு அவைகளுக்கும் தும்பிதான். ஒரு ஈக்கூட்டம் ஓரிடம் விட்டு மற்றோரிடம் போக வேண்டுமானால் முதலில் நல்லதாய் ஓரிடம் பார்த்துவரும்படி ஒரு தூதனை யனுப்பும். அந்த தூதன் புறப்பட்டுப்போய் நாலா மூலையும் சுற்றிப்பார்த்து நல்லதாய் ஓரிடங் கண்டுபிடித்துக்கொண்டு அந்தக் கூட்டத்தண்டை ஓடிவரும்; அது வந்தவுடனே அந்தச்சேனையெல்லாம் இருப்பிடம் விட்டுப் பறந்தோடும்; தூதன் பார்த்துவந்த விடம் எல்லாவற்றிற்கும் பிடித்திருந்தால் அங்கே கூடுகட்ட ஆரம்பிக்கும். தேன் கூட்டின் பெருமை நேராய்ப் பார்த்து நன்றாய்ப் பரிசோதித்தவர்களுக்கல்லது மற்றவர்களுக்கு இப்படிப்பட்டதென்று தெரியாது. சிற்ப சாஸ்திரத்தைக் கரைகண்ட பெரும் பண்டிதர்களாலேகூட இப்படிப் பட்டதென்று உத்தேசிக்கக் கூடாத வினோதக் கட்டடத்தை அமைக்கின்ற ஈக்களின் திறமை எப்படிப்பட்டதா யிருக்கவேண்டும்! கூடு கட்டியானபிறகு வேறு இனத்துப் பறவை யொன்றும் அதனுள் வந்து நுழையாதபடி ஒரு ஈயைப் பத்திரமாய் அந்தக் கூட்டுவாயிலில் காவல்வைத்து மற்றவை யெல்லாம் தேன்தேடிக்கொண்டுவர வெளியே போகும். இப்படியே இப்பூமண்டலத்திலுள்ள ஒவ்வொரு ஜந்துவும் அதனின் காரியத்தைச் சரியாகவே நடத்தி இவ்வுலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்தக் காரியங்களெல்லாம் பாஷையில்லாமல் என்றைக்காவது நடக்கக்கூடுமா?

பிடிவாதமின்றிப் பொதுவாய்த் தத்துவ சாஸ்திரி யொருவன் இவ்வுலகத்தைப் பரிசோத்துப் பார்ப்பானானால், ஆக்கல், அளித்தல், அழித்தல் என்னும் முத்தொழிலுமுள்ள கருணைக்கடலான கடவுள், இப்பூமண்டலத்து பிராணிகள் எல்லாவற்றிற்கும் சுகதுக்கங்களை அனுபவிக்கத்தக்க திறமையை அளித்திருப்பது மாத்திரமேயன்றி, தகங்ள் தங்கள் சுகம், துக்கம், விருப்பு, வெறுப்பு, சந்தோஷம், வியஸனம், எண்ணம், ஆசை முதலியவைகளை வெளியிடத்தக்க திறமையையும் அளித்திருக்கிறாரென்பதை உறுதியாய் ஸ்தாபிப்பானென்பதற்குச் சந்தேகமில்லை.

சிறிதாகட்டும், பெரிதாகட்டும், எந்த ஜந்துவுக்கும் பேசுந்திறமை அடியோடு இல்லவே யில்லையென்று மறுத்துரைக்க ஒருவராலும் ஆகாது. ஒளிக்கு மூலாதாரமான சூரியன் இப்பூமண்டலமெங்கும் வெளிச்சமுண்டாகும்படி மிகவும் பளபளப்பாய்ப் பிரகாசிக்கின்றான். ஒருசிறு விளக்கு சிறு வீட்டில் ஒரு சிற்றறைக்குள்ளே மாத்திரம் மினுமினுக்கின்றது. ஆயினும் இவ்விரண்டும் ஒளியேயொழிய வேறல்ல. அப்படியே மனிதர்களுடைய புத்தி சாதுரியத்திற்கும் மிருகங்களுடைய புத்தி சாதுரியத்திற்கும் அவர்களுடைய பாஷைக்கும் உள்ள வேற்றுமை, நல்ல நடுப்பகல் சூரியன் ஒளிக்கும் ஒரு சிறு விளக்கு ஒளிக்கும் உள்ள வேற்றுமைக்கு ஒப்பானதுதான். மிருகங்களுக்கு ஆலோசனைத்திறமை எவ்வளவு சொற்பமானதா யிருந்தாலும் அதனின் அளவுக்கு அதது ஆலோசனைத் திறமை தானே? மனிதர்களுக்குள்ளே ஒருவன் சிற்றறிவுடையவனாகவும், ஒருவன் பேரறிவுடையவனாகவும் இருப்பதுபோலவே, மிருகங்கள் அற்பமான அறிவுடையவையாயும், மனிதர்கள் விசேஷமான அறிவுடைவர்களாயும் இருக்கின்றார்களேயன்றி வேறல்ல.

---

**கோவிலும் குளமும்.**—கோவிலைக்கட்டியென்ன? குளத்தை வெட்டி யென்ன? அதிதிகளுக்கன்ன மிட்டென்ன சிவபூசை செய்தென்ன? சிதம்பரம் போயென்ன? திருநீறு பூசி யென்ன? உருத்திராக்கம் அணிந்தென்ன? வேதாந்தம்பேசியென்ன? அகந்தூய மாயினன்றோ ஆத்தனருள் உண்டாகும்! பரிசுத்தமான ஹிருதயத்துடன் நாம் கடுகளவே செய்யும் கைங்கரியத்தைக் கடவுள் மலையளவாய்க் கொண்டு விலையற்ற வரப்பிரசாதங்களை யளிப்பார். அவ்வாறின்றி, "கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன்றெண்ணப், பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால் கமழ, மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான், செய்கின்ற பூசை யெவ்வாறு கொள்வாய் வினைதீர்த்தவனே" என்றபடி நாம் பிறர்குடியைக் கெடுக்க ஆண்டி வேடம் பூண்டு செய்யும் ஆர்ப்பாடக்கைங்கரியங்கள் அவருக்கு ஏற்குமோ? நமது பாபத்தைத்தீர்க்குமோ? நல்வழியில்சேர்க்குமோ?



# மோட்டார் விபத்து

## A MOTOR-CAR ACCIDENT

(ஒரு சிறிய கதை)

மெதுவான ஒரு சப்தம் கேட்டது. யாரோ கதவைத் தட்டுவதுபோ லிருந்தது. சற்று உற்றுக் கேட்டான். படுக்கையி னின்றும் எழுந்து கண்ணைப் பிசைந்து கொண்டான். 'சங்கரா! சங்கரா!' என்று மெதுவாகக் கேட்டது. கதவைத் திறந்தவுடன் மீனாம்பாள் மிகவும் பயந்தவளாய் உள்ளே நுழைந்தாள். 'அண்ணா! ஏதோ அபாயம் நேர்ந்திருக்கிறது.'

'என்ன விசேஷம்? மெதுவாகச் சொல்.'

'ஐயோ! நமது வண்டியின் நம்பரைத் தெரிந்து கொண்டார்கள். இன்று காலை பேபரில், விஷயங்கள் எல்லாம் வெளிவந்து விட்டன. ஐந்தாறு பேபர் ரிபோர்டர்கள் கீழே காத்திருக்கிறார்கள். சித்தப்பா வருவதற்குள் ஏதேனும் ஏற்பாடு செய்.'

கடியாரத்தைப் பார்த்தான் சங்கரன்.

'மணி ஏழுதானே. சித்தப்பா எட்டுமணிக்குத்தான் கீழே வருவார்.'

'ஐயோ அவருக்குத் தெரிந்து விட்டதானால்—' என்று முகத்தின்மேல் கைகளிரண்டையும் தேய்த்துக்கொண்டு கீழே உட்கார்ந்துவிட்டாள்.

'நாம் ஒரேயடியாய் மறுத்துவிட வேண்டியதே. வேறு வழியில்லை. ஏன் நாம் பத்து மணிக்குப் படுக்கச் சென்றதை நமது சித்தப்பாதான் பார்த்தாரே?'

'ஐயோ! அப்படிச் சொன்னால் போராதே! மோடார் வண்டியைப் பார்த்தவுடன் அடையாளம் தெரிந்துவிடும்.'

சங்கரன் பேசவில்லை. மீனா பெருமூச்சு விட்டு மறுபடியும் 'நீ சொன்னபடி கேட்காவிட்டால் உனக்கிருக்கும் பாத்யத்தை ரத்து செய்துவிடுவதாகச் சொல்லியிருக்கிறார். என் கதியோ—'

இதற்குள் வெளியே ஏதோ அரவம் கேட்டது. உடனே சங்கரன் 'நான் வெளியே சென்று அவர்களை அனுப்பிடப் பார்க்கிறேன். சித்தப்பா வருவதற்குள் முடித்துவிட்டால் நலம்' என்றுகூறி வெளியே ஹாலில் உட்கார்ந்திருக்கும் ரிப்போர்டர்களைக் காண வந்தான். அவர்கள் யாவரும் இவனைக்கண்டதும் எழுந்தார்கள். எட்டு மனிதர்கள் இருந்தார்கள். காலைவந்தனம் செய்துவிட்டு 'ஏது! அதிகாலையில் இவ்வளவு தூரம் வந்தது?' என்றான். உடனே அவர்களில் ஒருவன்,

'ஸார்! நாங்கள் நேற்றிரவு நடந்த மோடார் வண்டி மோதின விஷயமாக வந்தோம். தாங்கள் அவ்வளவு அவசரமாக ஓடிவந்ததற்குக் காரணத்தையும் அறிய வந்தோம்.'

'எனக்கொன்றும் தெரிய வில்லையே! நான் நேற்றிரவு பத்து மணிக்குப் படுக்கச் சென்றேன். இப்பொழுதுதான் எழுந்தேன். நேற்று இரவு எனது சித்தப்பாவுடன் சாப்பிட்டுவிட்டுச் சற்று நேரம் சதுரங்கம் ஆடினோம்—'

ரிபோர்ட்டர்கள் எல்லாவற்றையும் குறித்துக்கொண்டார்கள். ஒருவன் 'சரிதான். அந்த மோடார் வண்டியின் நம்பர் 1057. அந்த வண்டி ஓட்டுபவன் முரட்டுத்தனமாக ஓட்டினான். எதிர்த்து நின்ற ஒரு வண்டியை மோதித் தள்ளிவிட்டது. அதில் இருந்தவர்கள் அந்த வண்டி ஓட்டுபவன் நன்றாகக் குடித்திருந்ததாக எண்ணுகிறார்கள்.'

'எனக்கென்ன! அவையெல்லாம்! ஏதோ நம்பர், தவறுதலாய்ச் சொல்கிறீர்கள்.'

'ஆனால் உமது மோடார் வண்டியை நேற்றிரவு நீர் உபயோகப்படுத்தவில்லையா?'

'இல்லையென்றுதான் சொன்னேனே."

'ஐயா! நேற்றிரவு பனிரெண்டு மணி முதல் மூன்றுமணி வரையில் உமது வண்டி வெளியே சென்றிருக்கிறது. இரவு இரண்டு மணிக்குச் சம்பவம் நடந்தது.'

சங்கரன் திகைத்து நின்றான்.

'என்ன! ஒரே இரைச்சலாயிருக்கிறது!' என்று அதிகாரத்துடன் கேட்டுக்கொண்டே ஒருவர் உள்ளே நுழைந்தார். எல்லாரும் அவரைத் திரும்பிப் பார்த்தார்கள். அறுபது வயதுள்ள ஒரு நெட்டையான கிழவர் தனது மூக்குக்கண்ணாடியின் இடுக்கு வழியே அவர்களை உற்றுநோக்கி 'என்ன நீங்களெல்லாரும் அதிகாலையில் இப்படியா சந்தை கூடுகிறது?' என்றார். உடனே ஒருவர்,

'எசமான் மன்னிக்கவேண்டும். ஏதோ தவறிவிட்டோம். நீங்கள் பேபரைப் பார்த்தீர்களா?'

'பேப்பரைப் பார்ப்பானேன்! நீர்தான் சொல்லும்.'

'நேற்றிரவு இரண்டுமணிக்கு மவுண்டு ரோட்டில், சைதாப்பேட்டைக் கருகில், சங்கரய்யரவர்கள் மோடார்வண்டி மற்றொரு மோடாரின்மேல் மோதி அந்த வண்டியைச் சுக்கு நூறாக உடைத்து, அதிலிருந்த ஜனங்களுக்குப்பலமான காயம். சங்கரய்யர்வண்டி ஓட்டினவன் சற்றுக்கூடத் திரும்பிப் பார்க்காமல் ஒரே வேகமாக ஓடிவிட்டான்.'

கிழவர் கோபத்துடன் சங்கரனை நோக்கித் திரும்பினார். மறுபடியும் ரிப்போர்டர்—'சங்கரய்யர் இப்பொழுது சொல்வதென்னவென்றால்—'

'நான் பத்துமணிக்கே படுக்கச் சென்றதாக உனக்குத் தெரியுமே சித்தப்பா!' என்றான் சங்கரன்.

'நம்பரைப்பற்றி யாதொரு பிசகுமில்லை என்று நிச்சயமாய்ச் சொல்லுவீர்களா?'

'சங்கரய்யர் வண்டி வெளியே போயிருந்தது, எங்கள் சந்தேகத்தை ஊர்ஜிதப் படுத்துகிறது.'

'உன்னைக் கேட்காமல் உன் மோடாரை யார் வெளியே எடுத்துச்செல்லலாம்? சங்கரா என்ன?'

'யாரு எடுப்பன்? வண்டி ஓட்டுகிறவன்—நாராயணன்.' உடனே கிழவர் இவர்களைப் பார்த்து,

'நீங்கள் நாராயணனைப்போய்ப் பாருங்கள். அவன் விஷயங்களைச் சொல்லுவான்.'

'அவன் விலாசம் தெரியாது! இங்கே குடியிருக்கின்றான் என்று எண்ணினோம்.'

'இல்லை— சற்று இருங்கள். இங்கே எங்காவது குறித்து வைத்திருக்கிறேனோ பார்க்கிறேன்' என்று சங்கரன் சொல்லிவிட்டு உள்ளே சென்றான்.

கிழவர் உட்கார்ந்தவண்ணம் கேட்கத் தொடங்கினார்.

'எப்பொழுது நடந்தது?'

'இரவு இரண்டுமணிக்கு. மற்றொரு வண்டியில் இருந்தவர்களுக்குத் தங்கள்மேல் மோதினவண்டியில் இருந்தவர்கள் யாவரென்று தெரியவில்லை.

அதற்குள் இன்னொருவன், 'அவ்வண்டியில் மூன்று நான்கு பேர்கள் இருந்ததாக மட்டும் தெரியவந்தது. வண்டி ஓட்டினவன் அதிகமாகக் குடித்திருந்ததாக எண்ணுகிறார்கள்.'

'நம்பர் நிச்சயம் தானே!'

'ஆம்!'

உள்ளே சென்ற சங்கரன் உட்கார்ந்து யோசித்தான். 'இதேதடா பெரிய வம்பாயிருக்கிறது. இருதலைக் கொள்ளி எறும்பு போல மாட்டிக்கொண்டேனே. ஒரே அடியாக இல்லை என்று விட்டேன். சரி நாராயணனுக்குச் சொல்லி, தற்புத்தி பண்ணவேண்டியது. அவனை எப்படிக் காண்பது? நாம் வெளியில் செல்வதோ முடியாத காரியம். சுந்தரத்திற்குச் சொல்லி அவனை விட்டு நாராயணனை எச்சரிக்கவேண்டும்' என்று தீர்மானித்து எழுந்தான். உடனே டெலிபோன் மணியை அடித்துவிட்டுக் குழாயைக் காதில் வைத்துக்கொண்டான். மெதுவாக 'சுந்து! சுந்து!' எனக் கூப்பிட்டான். யாரோ உத்தரம் அளிப்பதாகத் தெரிந்தது. 'என்னடா பேபரில் பார்த்தாயா! உடனே வந்து சேரு இங்கே' என்றான். உடலெல்லாம் பயத்தால் நடுக்கலுற்றது. இதற்குள் வெளியே கூப்பிடுங்குரல் கேட்டது. வெளியே எழுந்து வந்தான்.

'ரிப்போர்டர்கள் தொலைந்த பாடில்லை. நல்லதுதான் இருக்கட்டும்' என்று எண்ணிக்கொண்டு 'நீங்களெல்லாம் கொஞ்சம் காபியும் ஆகாரமும் சாப்பிட வருகிறீர்களா' என்று கூப்பிட்டான். இருவர் உடனே எழுந்து நின்றார்கள். இன்னொருவர்,

'நான் காலை ஆறு மணிக்கே சாப்பிடுகிற வழக்கம். அதில்லாவிடில் காரியம் நடப்பதில்லை.'

'ஆம் காபிதான் கலிகாலத்து அமிர்தம்.'

'சரி! எப்பொழுது கொடுத்தாலும் வேண்டாம் என்று சொல்லவது அழகில்லை' என்று மற்றொருவர் எழுந்தார்.

எல்லாரும் உள்ளே சென்று உட்கார்ந்தார்கள். அவ்விடம் மீனும்பாளுமிருந்தாள். விஷயங்களை அவளுக்கு எடுத்துரைத்தான்.

'என்ன அதிசயம்! அதற்கு நம்மகிட்டேயா வரணும்!'



'இல்லை அம்மா! நாராயணன், வண்டி ஓட்டுபவனைத் தேடி வந்தோம்.'

'அதற்குத்தான் நான் பிணை என்று சொன்னேனே' என்றான் சங்கரன். யாவரும் சிறிது உப்புமா சாப்பிட்ட பிறகு, காபி குடிக்கத் துவக்கினார்கள்.

உடனே டெலிபோன் மணி அடித்தது என்று வேலையாள் சொல்ல, சங்கரன் எழுந்து கதவைச் சாத்திக்கொண்டு வெளியே சென்றான். 'சுந்தரம்! விஷயங்கள் எப்படியாய் விட்டது பார்த்தாயா? இப்பொழுது பண்ணுவது என்ன?'

'நீ என்ன பண்ணினாய்! அதைச்சொல்.'

'நான் அந்த வண்டியில் இல்லவேயில்லை யென்று ஒரே அடியாய்ப் புளுகிவிட்டேன். நாமெல்லாரும் இருந்தோமென்று தெரிந்ததோ நம் கதி என்னவென்று உனக்குத் தெரியுமே! ஆகையினால் இப்பொழுது நாராயணன்தான் கழுவுக்கேற்ற கோமுட்டி. நீ சென்று அவனை எப்படியாவது சரிப்படுத்து. குற்றத்தை அவன் தலையில் போட்டு-விடுவோம். என்ன யோசனை?'

'அந்தப் பயலை வழிக்கு எப்படிக்கொண்டு வருகிறது?'—

'எல்லாம் பணம். பணம் என்றால் குணத்தை விற்க எவனும் தயங்கமாட்டான்.'

'சரி வேலையை முடித்து விடுகிறேன்' என்று சொல்லிவிட்டுச் சுந்தரம் சென்றான்.

உள்ளே சென்று சங்கரன் 'பெரிய கஷ்டம்! ஒவ்வொருவரும் சமாசாரம் என்னவென்று டெலிபோனில் நச்சறிக்கிறார்கள்.'

ஒரு ரிப்போர்டர், 'அடிபட்டவர்களுக்கு இன்னும் பெரிய கஷ்டம்—' என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது ஒருவர், 'பரசுராமய்யர்! இன்றைக்கு எனக்கு மிகவும் கெட்ட காலம். என்ன கஷ்டம்' என்று சொல்லிக்கொண்டு உள்ளே நுழைந்தார். அவர் சற்றுப் பருமனும் குள்ளமாயுமிருந்தார். ஆனால் பரசுராமய்யரை விட வயதானவர்போல் தோன்றிற்று. உடனே கிழவர், 'என்ன சாம்பசிவா! நீயா! உனக்கென்ன வந்தது?' என்றுசொல்லி எழுந்து வந்தவரை ஒருநாற்காலியில் உட்காரவைத்தார். வந்தவர் அறையைச் சுற்றிப்பார்த்துவிட்டு! 'என்னவா? உன் மோடார் வண்டியைக் கேள்.'

'நீயா! அந்தஅடிப்பட்டவண்டியில் இருந்தாய்! அடடா! என்ன பலமான அடியோ' என்று பரசுராமய்யர் சொல்ல, மீனும்பாள் 'நீங்களா! அந்த வண்டியில் ஐயோ! எனக்கு ரொம்பவருத்த மாயிருக்கிறது.'

சாம்பசிவய்யர்—'வருத்தம் வந்த வினையை ஓட்டிவிடுமா? என்போன கண்ணைக் கொடுக்குமா?' என்று சொல்லிவிட்டுச் சங்கரனைநோக்கி 'நேற்று வண்டியை யார் ஓட்டிச் சென்றார்கள்?'

'வண்டிக்காரன் என்று எண்ணுகிறோம். நீர்கேட்பதைப் பார்த்தால் என்மேல் நீர் சந்தேகப் படுவதாகக் காண்பிக்கிறீரே! நான் இரவு பத்து மணிக்கே படுக்கைக்குச் சென்றேன்.'

'ஆமாம்! சாம்பசிவா! நீமவுண்டுரோட்டில் இரவு இரண்டு மணிக்கு என்ன பண்ணினாய்' என்று பரசுராமய்யர் கேட்க, 'நான் எனது மாப்பிள்ளை பங்களாவிலிருந்து வந்து கொண்டிருந்தேன். வழியில், சக்கரத்தில் காற்றுப் பிசகு வந்தது. உடனே ரிபேர் செய்துகொண்டிருந்தோம். மற்ற வண்டி வெகு மூர்க்கமாக மோதிக்கொண்டு சென்றது. எங்கள் வண்டி துண்டு துண்டாய் விட்டது. அந்த வண்டியின் நம்பரை நானும் பார்த்தேன். என் வண்டிக்காரனும் பார்த்தான். அவ்வண்டியில் இரண்டு மூன்று பேரிருந்தார்கள்.'

'உமது வண்டியில் பின்விளக்கு ஏற்றப் படவில்லையோ என்னமோ! அல்லது இருட்டில் நின்று கொண்டிருந்தீர்களோ ஒருகால்' என்று மீனு ஆவலுடன் வினவ, 'அதெல்லாம் ஒன்றுமில்லை. அந்த வண்டி ஓட்டினவன் குடித்திருந்ததாக எண்ணுகிறேன். இல்லாவிடில் திரும்பிக்கூடப் பாராமல் செல்வனா? சாதாரண அறிவுள்ளவன், மன்னிப்புக் கேட்காமல் செல்வனா?'

'நாராயணன் அவ்வளவு அயோக்கியனில்லை. அவன் ஒரு குடும்பஸ்தன். அவனுக்குப் பிள்ளை குட்டிகள் இருக்கிறார்கள். அவன் குடிப்பதில்லை.'

'எனக்கென்ன! அந்த வண்டி ஓட்டினவனை நான் லேசில் விடமாட்டேன்! பார்ப்பமே ஒருகை!'

‘என் சாம்பசிவா! பேசாமல் என்னைப் போல் பத்து மணிக்குப் படுக்கச்சென்றால் இந்தத் துன்பமெல்லாம் வருமா? இந்தக் காலத்து ஜனங்களெல்லாம் இப்பொழுது ரொம்ப கெட்டுப்போய் விட்டார்கள். நாடகக் கொட்டகை யெங்கே, ஹோட்டல் டியாஞ்சலிஸ் எங்கே, வெள்ளைக்காரர்கள் குதிக்கும் இடம் எங்கே என்று இரவெல்லாம் அலைந்துவிட்டுப் பகலெல்லாம் தலையை வலிக்கிறதே, என்ன டாக்டர் ஒரு டானிக் கொடுங்கோ என்று அழுவதும் சகஜமாய்விட்டது. போராததற்குக் காபிஹோட்டல்கள் என்ற காராகிரஹத்தில் நுழைந்து வெளியே வந்து வாந்தியெடுத்துவிட்டு, உடம்பெல்லாம் என்னமோ போலிருக்கு என்று மொணக்கறது. ஏதோ நம்ம விட்டில் அகப்பட்டதைச் சாப்பிட்டுவிட்டுச் சௌக்யமாகப் பத்துமணிக்குப்படுப்பதை விட்டு,—’

‘அதெல்லாம் உம்மை யாரையா கேட்டார்கள். எனக்குத் தூக்கம் வரல்லை. நான் வெளியே சென்றேன். உமக்கு என்ன?’

உடனே சேவகன் யாரோ மூவர் வெளிக் காத்திருப்பதாகச் சொல்ல, அவர்களை ‘உள்ளேவரச்சொல்’ என்றான் சங்கரன். சற்று நேரத்திற் கெல்லாம் மூவர் உள்ளே நுழைந்தார்கள். சற்றுப் பருமனாகக் கையையும் காலையும் ஆட்டிக்கொண்டும் பல்லைக் கடித்துக்கொண்டும் ஒருவர் முன் வந்தார். அவர் பின்னால் நெட்டையான ஒரு வாலிபன் கையில் ஒரு புஸ்தகத்தை வைத்துக் கொண்டு நின்றான். முன்னால் சென்ற பெரியவர் ஒரு மிஷனரி வெள்ளைக்காரர். அவர் அங்குமிங்கும் பார்த்துவிட்டு, ‘சங்கரய்யர்வாள்! என் பெயர் சாமுவேல் ஜோன்ஸ். நாங்கள் மூவரும் நேற்றிரவு நடந்த மோடார் வண்டி சம்பவத்தைப் பற்றி விஷயங்களைத் தெரிந்து வருமாறு அனுப்பப் பட்டிருக்கிறோம். ஜனங்களை மோடார் வண்டி விபத்துகளிலிருந்து தப்புவிக்கவே நாங்கள் பாடுபடுவது. சொல்லுகிறார் இயேசு ஓரிடத்தில்—உடனே பரசுராமய்யர் ‘அதெல்லாம் என்ன! வந்த காரியத்தைச் சொல்லும்.’ ‘அதுதான் சொல்கிறேன். இனிமேல் அவ்வாறு சம்பவங்கள் நேரிடாவண்ணம் இப்பொழுது அதற்குக் காரணமானவனை தண்டிக்க வேண்டியது.’

“‘பலே!’ என்று சாம்பசிவய்யர் குதித்தார். மறுபடியும் ஜோன்ஸ் மிகவும் திருத்தமாகத் தமிழில் பேசத் துவக்கினார்.,

‘இன்றைய பேபரில் அவ்வண்டி ஓட்டினவன் குடித்திருந்ததாகச் சொல்லப்படுகிறது! சங்கரய்யர் குடிப்பதுண்டோ?’

‘மிஸ்டர் ஜோன்ஸ்; ஜாக்கிரதை! நான் அந்த வண்டியில் இல்லை என்று சொல்கிறேன்!’ என்று கோபத்துடன் சங்கரய்யர் கூற, சாம்பசிவய்யர்,

‘நான் சொல்வதெல்லாம் என்ன? அந்த வண்டி ஓட்டினவனைத் தண்டிக்கவேண்டியது. இப்போது நீர் சொல்கிறபடி உமது வண்டிக்காரன் உமக்குத் தெரியாமல் உமது வண்டியை உபயோகப்படுத்தி யிருந்தால் அவன் திருடன்.’ உடனே ஜோன்ஸ் இரு கைகளையும் வீசிக்கொண்டு ‘ஆம் ஐயா! அவன் திருடன். அவனைத் தண்டிக்கவேண்டியது அவசியம். உமக்குத் தெரியாவிட்டால் நான் சொல்லுகிறேன். திருடல் பஞ்சமா பாதகங்களில் ஒன்று!’ என்று கர்ஜித்துக் கொண்டு இருகைகளையும் குவித்து மேஜையின்மேல் அறைந்தார். மேஜையின் பேரில் இருந்த கண்ணாடி மசிக்கூடுகள், பூக்கள் வைத்திருக்கும் தம்ளர் எல்லாம் எழுந்து குதித்தன. பரசுராமய்யருக்கு வந்த கோபத்தைப் பார்க்கமுடியாது.

‘இனி அவ்வாறு செய்யாதேயும்! என் மேஜையை உடைக்கவா உள்ளே வந்தீர்? உம்மைவிடத் தமிழ் எங்களுக்கு நன்றாய்த் தெரியும். நீர் சொல்வது எங்களுக்குத் தெரிந்துகொள்ள முடியும்’ எனக் கூவினார்.

நாராயணன் வந்திருக்கிறான் என்று சொன்னான் சேவகன். யாவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

நாராயணன் தான் வழக்கமாக அணிந்து கொள்ளும் சட்டையும், குல்லாயும் தரித்து உள்ளே நுழைந்தான்.

‘ஆ! அகப்பட்டுக் கொண்டானையா!’ என்றார் சாம்பசிவய்யர். ஒன்றும் புரியாமல் விழித்தான் நாராயணன். உடனே சங்கரன் வெகு கடூரமாக,



‘நேற்றிரவு நீ வண்டியை வெளியே கொண்டுபோ யிருப்பதாகத் தெரியவருகிறது. நீ அப்படிப்போனாயா?’

நாராயணன் ஊமைபோல் திகைத்து நின்றான்.

‘பதில் சொல்! நீ வண்டியை வெளியே கொண்டு போனாயா இல்லையா?’

‘ஆம் ஐயா! கொண்டுபோனேன்’ என்றான் மிகவும் பயத்துடன். ‘அவன் ஒத்துக் கொள்ளுகிறானே! எவ்வளவு சாந்தமாக’ மறுப்டியும் சங்கரன்—

‘யாருடைய உத்திரவின்மேல் நீ வண்டியைக் கொண்டுபோனாய்? நேற்றுப்பகலில் எனது சித்தப்பா முன்னிலையில் நீ இனி வீட்டுக்குப்போகலாம் இனிமேல் நாளைக்கு வந்தால் போருமென்று சொல்லவில்லையா?’

‘ஆம்.’

ரிப்போர்டர்கள் வெகு தீவிரமாய் எழுதிக் கொண்டார்கள்.

‘நீ உன் இஷ்டப்படிதானே செய்தாய்?’

‘ஆம்.’

‘எங்கே சென்றாய்! பரங்கிமலைக்கா?

‘ஆம். மவுண்டுக்கு.’

‘தனியாகவா, அல்லது இரண்டு மூன்று பேருடனா?’

‘இரண்டு மூன்று பேருடன்.’

‘அவர்களுக்கு இனாமாக விட்டாயா? அல்லது கூலிபெற்றுக்கொண்டாயா?’

‘கூலி யில்லை.’

‘அப்பொழுது அவர்கள் உன் சிநேகிதர்களா?’

‘ஆம் ஒரு விதத்தில்.’

‘யார் வண்டி ஓட்டி வந்தது?’

‘நான் தான். ஆனால்—’

‘எப்பொழுது விபத்து நேர்ந்தது?’

‘இல்லை, விபத்து நேர்ந்தபொழுது ஒரு பெண் வண்டி ஓட்டினாள். அவளுக்குத் தெரியாது. ஆனால் மிகவும் ஆசைப்பட்டாள். தவறுதலாய்த் திருப்பிவிட்டாள். மற்றொரு வண்டிக்குப் பக்கத்தில் போவதற்குப் பதிலாக அவ்வண்டிமேலே ஏறிவிட்டது.’

‘ஏறி உள்ளே சென்றுவிட்டது. நீ தலை திருப்பாமல் போனாய்? ஹூங்’ என்று குதித்தார் சாம்பசிவய்யர்.

‘நீ ஒன்றுந் தெரியாத ஒருவளை வண்டி விடச் சொன்னாய். அப்படியா?’

‘ஆம்.’

‘நீ குடித்திருந்தாயா?’

‘காப்பி மட்டுந்தான்.’

‘நீ எங்கே சென்றாய்?’

‘மவுண்டில் வெள்ளைக்கார ஆட்டத்திற்கு.’

‘அப்படியா! இந்தமாதிரி எத்தனைதரம் நீ வண்டியைக் கொண்டுபோயிருக்கிறாய்?’

‘அநேகமாய் ஒவ்வொரு இரவும்.’ சங்கரனுக்கு நிஜமாகவே ஆச்சரியமாக இருந்தது.

‘ஒவ்வொரு இரவும்?’

‘சரி நான் உனக்கு இவ்வளவு நன்மைகள் செய்து வைத்திருந்தால் நீ மிஞ்சிப் போகிறாய். உன்னை வைக்கவேண்டிய நிலைமையில் வைத்திருந்தால் உனக்குச் சரியாக இருக்கும். சரி! இன்றுமுதல் நீ போகலாம். சட்டையைக் கழற்றிக் சேவகனிடம் கொடுத்துவிட்டுச் செல்.’

மிகவும் வருத்தத்துடன் திரும்பினான் நாராயணன். சாம்பசிவய்யர் ‘இவ்வளவுதானா இவனுக்குத் தண்டனை!’

உடனே சங்கரன் ‘என்ன ஐயா! உமக்கு ஈவு இரக்கம் பச்சத்தாபம் கிடையாதா? பாவம்! அவனுக்கு இனி பிழைப்புக்கு வழி ஏது? அவன் மூன்று குழந்தைகள் சோற்றுக்குத் தவிக்குமே!’

‘அவனுக்கே அந்த புத்தி இல்லையே! எனக்குமட்டும் இருக்குமா? என் மோடாரை இன்ஷியூர் பண்ணி யிருக்கேன். ஆனால் இன்ஷியூரன்ஸ் கம்பெனிக்காரர்கள் என்னமா மோடார் உடைந்தது என்று விசாரிப்பார்கள். அவாள் பார்த்துக் கொள்வார்கள். நான் வருகிறேன்.’

‘நீ வரவேண்டாம் போ! என்றார் பரசுராமய்யர்.

(இக்கதை அடுத்த சஞ்சிகையில் முடிவுபெறும்.)

# ஆங்கிலர் சரித்திரம்

## தேச அமைப்பு

பூமியிலுள்ள நிலப்பாகம் ஐந்து பெரிய கண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவை ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா எனப்படும். இவைகளில் ஐரோப்பாவும், ஆசியாவும், ஆபிரிக்காவும், ஒரே நிலப்பாகத்திலுள்ளன. ஆசியாவை ஐரோப்பாவிலிருந்து பிரிப்பவை யூரல் மலைகளும், காஸ்பியன் கடலும், கருங்கடலுமாம்.

ஐரோப்பா கண்டத்தின் படத்தை நாம் பார்ப்போமானால், ப்ரிட்டிஷ் தீவுகளின் நிலைமை நன்கு புலப்படும். ப்ரிட்டிஷ் தீவுகள், ஐரோப்பாக்கண்டத்தைச் சற்று ஒட்டினாற் போலிருந்த போதிலும், இங்கிலீஷ் ஜலசந்தி, வடகடல் முதலிய வற்றால் பிரிக்கப்பட்டிருப்பது, அத்தீவுகளிலுள்ளவர்களுக்கு மிகவும் அநுகூலமாயிருக்கின்றது. ஐரோப்பாவிற்கு நெருங்க இருப்பதனால், பெரிய ஜலப்பாகத்திலுள்ளவர்களுடன் போக்குவரவு செய்யவும் அங்குள்ள விஷயங்களைக் கற்கவும் ஸுலபமாகின்றது. இங்கிலாந்தின் கீழ்ப்பாகம், ஐரோப்பாக் கண்டத்தின் மிகவும் செழிப்பான நிலங்களை நோக்கியிருப்பது விளைபொருள்களுக்குக் கஷ்டமில்லாமலிருக்கச்செய்கிறது. ஜலசந்தியினால் பிரிக்கப்பட்டிருப்பதனால் இங்கிலாந்து முதலிய தீவுகள்மேல் ஸுலபமாய் அந்நியர்களால் படையெடுக்க முடிவதில்லை. கடற்படையில் சிறந்தவனே ஆங்கிலேயரை ஜயிக்கமுடியும். இந்த வசதியினால்தான் 120 வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தின்மீது படையெடுக்கவேண்டுமென்று விருதுகூறி வந்த நெபோலியன் என்னும் ப்ரெஞ்சு வீரன் ஆங்கிலேயரிடம் தோல்வியடைந்தான்.

உலகபடத்தை வைத்துக்கொண்டு ப்ரிட்டிஷ் தீவுகளின் நிலைமையைப் பார்ப்போம். அது அமெரிக்காவுடனும் ஐரோப்பாவுடனும் மற்ற தேசங்களுடனும் ஸுலபமாய் வியாபாரஞ் செய்யக்கூடிய இடத்திலிருக்கிறது. இதனாலேயே ஆங்கிலேயர்கள் வியாபாரத்தில் சிறந்தவர்களாயிருக்கிறார்கள். இங்கிலாந்து பல உலோகங்கள் (முக்யமாய் இரும்பு, நிலக்கரி) உடையது. இவை வியாபாரத்திற்கு முக்யமானவை. ஆதலால் பல யந்திரசாலைகளும் தொழிற்சாலைகளும் இங்கு இருக்கின்றன. இங்கிலாந்தின் கடலோரத்தைக் கவனித்துப் பார்த்தால், அதன் வியாபாரம் அதிகரித்திருப்பதற்கு மற்றொரு காரணம் வெளிப்படும். கடற்கரை நேரேயிராமல் மிகுந்த வளைவுகளுள்ளதாயிருக்கின்றது. இவை கப்பல்கள் தங்குவதற்குத் தகுந்த துறைமுகங்களாகப் பிரயோசனப்படுகின்றன. இந்தியாவின் படத்தைப் பார்த்தால், நம்தேசத்தில் அதிக துறைமுகங்களில்லாததற்குக் காரணந் தெரியவரும். நம் தேசத்திலுள்ள நதிகள் பல, (ஹிமாலய மலைகளில் உதிப்பவைகள் தவிர) வெயிற்காலத்தில் வற்றிப் போகின்றன. அதனால் படகுகளும் கப்பல்களும் நதிகளில் செல்வதற்கில்லை. ஆனால் பிரிட்டிஷ் தீவுகளில் உள்ள நதிகள் எப்பொழுதும் நீருள்ளவைகள். அதனால் கப்பல்களும் படகுகளும் நதிகளின் மூலமாய், தேசத்திற்குள் வெகுதூரம் செல்கின்றன. இத்தீவுகளில் சீதோஷ்ண ஸ்திதி சமமாயிருப்பதால் ஜனங்கள் வெகு நேரம் சிரமமில்லாமல் வேலை செய்யலாம். ஆசியாவின் கிழக்கேயுள்ள ஜப்பான் தீவுகள் பலவிதங்களில் பிரிட்டிஷ் தீவுகளை ஒத்திருப்பதால் அவைகளைக் கிழக்கத்திய பிரிட்டன் என்றழைப்பதுமுண்டு.

இவ்வளவு வசதிகளோடு கூடிய பிரிட்டிஷ் தீவுகளிலுள்ளவர்கள் தங்களுடைய ஊக்கம், முயற்சி முதலிய குணங்களால் இப்பொழுது பூமியின் 5-ல் 1 பாகம் நிலப்பாகத்தில் ஆண்டு வருகின்றனர். பூமியில் மொத்த ஜனத்தொகையில் 3-ல் 1 பாகமும் அவர்களால் ஆளப்பட்டு வருகின்றது. ஆனால் இவ்வாறு ஆதிகாலந் தொடங்கி ஆண்டு வரவில்லை. இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லண்டு, அயர்லண்டு முதலிய தேசங்களுக்கு வெவ்வேறு அரசர்கள் இருந்தனர். இவர்கள் அடிக்கடி ஒருவரோடொருவர் யுத்தஞ் செய்துகொண்டிருந்தனர். இந்த யுத்தங்களெல்லாம் நீங்கி, எப்படி எல்லாம் ஒரு அரசனுக் கடங்கினவென்பதையும், உலகத்தில் பலவிடங்களில் ராஜ்யங்களை எவ்வாறு ஜயித்து இப்பொழுது ஆண்டு வருகின்றனர் என்பதையும் சுருக்கமாக இனிக் கூறுவோம்.



இங்கிலாந்தில் இப்போது வசிக்கும் ஜனங்களின் முன்னோர், முதலில் அத்தேசத்திலேயே யில்லை. ஆனால் நம் தேசத்தில் ஆரியர்கள், துராணியர்கள் முதலிய ஜாதியார்கள் படையெடுத்து வந்ததுபோல், ஐபீரியர்கள், கெல்டுகள், ப்ரைத்தானியர்கள் முதலியவர்கள் இங்கிலாந்தின்மேல் படையெடுத்துக் குடியேறினார்கள்.



புராதன ப்ரிடன் ஜாதியார்

இந்த மூன்று ஜாதியார்கள் இங்கிலாந்தில் முதன் முதலில் குடியேறினதாகத் தெரிகிறது. அதற்குமுன் தேசமுழுதும் காடாயிருந்தது. ஓநாய்களும் கரடிகளும் அநேகமிருந்தன. பூர்வ பிரித்தானியர் நாகரீகமற்ற ஜாதியார்கள். மிருகங்களை வேட்டையாடியும், லேசான பின்னல் படகில் ஆறுகளைக் கடந்தும், குகைகளில் குடியிருந்தும் வந்தார்கள். ஐபீரியர்கள் குறுகின தலையும், கறுத்த தேகமுமுடையவர்கள். அவர்கள் கல்லினாலும் சகிமுகிக் கல்லினாலும் கத்தி, கோடரிமுனை, ஈட்டிமுனை முதலியவை செய்து வேட்டையாடினார்கள். இரண்டு கற்களைத் தேய்ப்பதனால் நெருப்பும் உண்டாக்க அறிந்திருந்தார்கள். இவர்கள் கற்கால மனிதர் என்றுசொல்லப்படுவார்கள்.

இரண்டாவது ஜாதியார் ஆரிய வம்சத்தில் ஓர் பிரிவினர்: சில ஆரியர்கள் தங்கள் சொந்த தேசத்திலிருந்து கிழக்கும் தெற்கும் சென்று இந்தியா, பாரஸீகம் முதலிய தேசங்களில் குடியேறினார்கள்; வேறு சிலர் மேற்கே ஐரோப்பாவிற்குச் சென்றனர். இவர்களில் ஒரு பிரிவாகிய கேல்ட் ஜாதியார் இங்கிலாந்தின்மேல் படையெடுத்து ஐபீரியர்களை ஜயித்தார்கள். இந்த கெல்ட்டுக்கள் உயரமும், அழகும் உடையவர்கள்; இவர்களுக்கு வெண்கலத்தினால் ஆயுதங்கள் செய்யத்தெரியும். ஆனால் கல்லாயுதங்களையும் உபயோகித்து வந்தார்கள்; இவர்கள் ஆடுமாடுகளை வளர்த்து வந்தார்கள்; சிறந்த குதிரை வீரர்கள்; வஸ்திரங்கள் நெய்யவும் அறிந்திருந்தார்கள்; பொன் வெள்ளி நகைகளின்பேரில் ப்ரியமுடையவர்களாகவுமிருந்தார்கள். எதிரிகள் தங்களை ஸுலபமாக எதிர்க்காமலிருக்கும்படிக்குக் குன்றுகளின் பேரில் தங்கள் கோட்டைகளைக் கட்டி இவர் வந்தார்கள்.

ப்ரைதன் என்ற ஜாதியாரும் இந்த கெல்ட்டுக்களைச் சேர்ந்தவர்களே. ஆனால் கெல்ட்டுக்களுக்குப் பிறகு வந்தவர்கள். இவர்களுக்கு இரும்பின் உபயோகம் தெரியும். கேய்லிக் என்னும் இவர்கள் பாஷை, இப்பொழுதும் ஸ்காட்லாந்தில் குன்றுகளில் வசிக்கும் ஜனங்களால் வழங்கப்படுகிறது. இந்த ஜாதியாரினால் இங்கிலாந்திற்கு 'ப்ரிடன்' என்னும் ஒரு பெயர் வந்தது.

இந்த கெல்ட் ஜாதியார்கள் பல சிறு பிரிவுகளுள்ளவர்கள். ஒரு பிரிவிலுள்ளவர்கள் மற்றொரு பிரிவிலுள்ளவர்களோடு அடிக்கடி சண்டை செய்துகொண்டிருந்தார்கள். தெய்வ பக்தி இவர்களுக்கு அதிகம். பல தேவதைகளைப் பணிந்து வந்தார்கள். இவர்களுடைய குருக்களுக்கு துருயிதர்கள் என்று பெயர். துருயிதர்கள் மற்றவர்களைவிடப் படித்தவர்கள். கவி பாடுவதில் வல்லவர்கள். தங்கள் வீரர்களுடைய பராக்ரமச் செய்கைகளைப்பற்றிக் காவ்யங்கள் செய்து அதைப் பாடுவார்கள்.

பூர்வகாலந்தொடங்கி கையாளப்படும் சில வழக்கங்கள், அவற்றின் உண்மைப் பொருள் மறைந்தபின்பும் ஜனங்களால்அனுஷ்டிக்கப்படும் என்று சரித்ராசியர்கள் கூறு

வர். இக்குணம் ஆங்கிலேயரிடமும் காணப்படுகின்றது. துருயிதர்கள் ஓக் என்னும் மரத்தை பரிசுத்தமானதாக எண்ணியிருந்தார்கள். வருஷத்திற்கொருமுறை, அதற்கு பூஜை செய்து, அம்மரத்தின்மீது படரும் மிஸில்டோ எனப்படும் புல்லுருவியை பக்தியுடன் எடுத்து வருவார்கள். இப்புல்லுருவி சிறந்த மூலிகையாகக் கருதப்பட்டமையால் வீட்டில் தொங்க விடுவார்கள். ஆங்கிலேயர் கிறிஸ்தவர்களான பிறகும், நெடுநாளாய்க் கைக் கொண்டிருந்த வழக்கத்தை விடவில்லை. கிறிஸ்துமஸ் காலங்களில் (டிஸம்பர்மீ) மிஸிஸ்டோவைக் கொண்டு வந்து தம் விட்டில் தொங்க விடுகின்றனர்.



ஸ்டோன்ஹெஞ்சு

ஆங்கில வீரர்கள் புதைக்கப்பட்ட இடங்களுக்குமேல் மண்மேடாவது கற்கம்பங்களாவது ஏற்படுத்துவது அக்கால வழக்கம் இம்மாதிரியான பல சமாதிக்கற்கள் ஸ்டோன்ஹேஞ்சு என்னுமிடத்தில் இப்பொழுதும் காணப்படுகின்றன. இம்மாதிரியான இடங்களில் பூர்விக மனிதர்களுடைய எலும்புகளும் ஆயுதங்களும் ஸாதாரணமாகக் காணப்படுகின்றன. இவைகள் அக்காலத்து மனிதர்களுடைய சரீர அமைப்பு, தொழில், பழக்கங்கள் முதலியவற்றை நாம் அறிவதற்கு மிகவும் பயன்படுபவைகளாயிருக்கின்றன.

## யுலிஸ்ஸிஸ்

### ULYSSES

(மொழி பெயர்ப்பு.)

புல்வள மற்றவிப் பாறைகள் சூழ்ந்தவிவ்
வில் வழி நற்றெழி லொன்றுமில் லரசனுய்
ஆயுண் மூத்த அரிவைபோ டமைதிசேர்
ஆயுள் வாழ்ந்து, அடைபொரு ளீட்டலும்,
துஞ்சலும் உண்ணலுந் தொலையாராகி,
எஞ்சலி லென் மன மென்று முணரா அ,
நாக ரீக மடைந்திலா வினரர்
விவேகமற்ற விதிகளை யுன்னி,
விதித்தி ருத்தல் வீண்டொழில்! வீண்டொழில்!
சஞ்சரித் தல்லது சும்மா விரேன் யான்.
ஆயு ளீயு மனுபவ மெல்லாம்
காய்ம் போம் வரைக் காணுவல். பற்பல
நாள்க ளெல்லாம் நேயர்க ணெவ்விலும்
தோள்களேதுணை யாகவும், வாருதி
அங்கரை மீதினும், அணிமழையாற் கடல்
பொங்கும் வேளையும், புளகமென் துக்கமென்
கண்டுளே னென் பெயர் காசினி போந்தது.
மண்டு மோர் மன்னுடன் மண்மிசைச் சென்று
கண்டது முணர்ந்ததுங் கணக்கிடலரிதே.
பல்வகை மன்பதை வாழுமா நகரமும்
பல்வகைத் தேயமுஞ் சங்கமு மரசும்
பார்வை யிட்டுப் பண்பும் பெற்றுளேன்.
ஆர்வ மோடுள அன்பரோ டாயிடை,
கால்வளர் ட்ராய் பெருங் கானிடை, பூசலின்
மேல்வளர் களிமிக முகந்து பருகினேன்.
பழகிய பல்வகைப் பொருள்களி னெவ்வோர்
அழகிய பாகமே அடைந்துளேன் யானும்.
ஆயினும் அனுபவ மென்பதோர் குகைவழி
வாயிடைத் தோன்றும் வளமிகு முலகெலாம்.
செல்லச் செல்லச் சென்றிடு மதனடி.
மெல்ல விருத்தலே மேன்மை யென்றுன்னி,
உயிர் முடி வடைவான் உட்கார்ந்திருத்தல்
பயனில தந்தோ! பளிச்செனத் திகழாது,
தூசி மூடத் தூங்குத விழிவே.
ஆசி லாயு ளனேகம் பெறினும்
அத்தனைப் பொழுது மங்கைய தளவே.
நம்முடை யாயுளில் நிற்பது மற்பமே.
ஆயினுமுழைப்பால் அச்சிறு வேளையைப்
போயெடுத்தடைந்து பயன் கொளுவேம்யாம்,
மனமதற் கெட்டா, மாண்பொடு விளங்கி,



இன்னென வொளிரு மறிவினை யடைவான்
என்றும் விரும்பு மதியு மிருக்கத்
துன்றுஞ் சின்னுள் தூங்குத விழிவே.
இங்குள னென்மக னினிய டெலாமகன்,
செங்கோ லவற்கே கொடுப்பனித் தீவுடை
என்மனத் தின்பது. இத்தொழின் முற்றுந்
தன் மனத்துணர் வோன். தகைமையில் குடிகளைச்
சிறிது சிறிதா யுயர்த்தி யம் முடிவினில்
பெருமை கொள்ளப் பெருக்கு நற்குணவான்.
கடமைகள் பலவுங் கழிகிலா தியற்றி,
நடலை யகற்றி, நன் மனங் கொண்டு,
யானகன் றுலு மென்னில்வதி கடவுளர்க்
கான வந்தனை அன்புட னளிப்பன்.
அவன் தொழிலவன் செய்வான். யானுமதுவே.
உவண் துறை யுள்ளது. ஓங்கு நாவாய்
கவன்று தன் பாயைக் காற்றெடு விரிக்குமால்.
பார்ந்து கறுத்த பாவையு மதோபார்.
சிறந்தவென் மாலுமிச் செல்வர்காள்! என்னொடு
முயன்றுங் கவன்று முந்திய வீரர்காள்!
அஞ்சுத லகற்றி அசனியும் வெயிலையும்
எஞ்சலின் மனத்தொடு மிகழ்ந்து நகைத்துளீர்.
நீரு மியானு நேர்ந்தோ மூப்பை.
வாருமஞ்சன்மின். வயோதிக மஃதும்
பெருமையும் பாடும் பெற்றியுமுளதால்.
மரண நம்மை மறைப்பது திண்ணமேல்,
வருவதன் முன்னர் வண்மையா மொரு தொழில்
வகையுடன் செய்வோம். வானவர் குருவுடன்
இகல் செயலுற்றவர் இன்றே யாமும்.
பாறைகள் மீது பல வொளி பிறங்கும்
நீண்ட நாளும் நேர்ந்தது அந்தியை.
ஈண்டுச் சோமனு மேறுமென் கதியுடன்.
ஆழியும் பற்பல அரவமோ டலம்பும்.
சூழுமின் நண்பர்காள். சொல்லுவன் கேண்மின்!
இன்னும் வேற்றுலக மடைந்திட இன்றை
நன்கு மூத்துளோ மென்று நினையன்மின்.
சென்மினேருடன். வங்கமிருந்து
தொனி மிகு திரைகளைத் துடுப்பா லோட்டுமின்.
ஏனெனில் யானும், என்று மறைவதற்
கப்பாற் றூரகை யாழ்ந்துளவ் விடஞ்செல
அப்புமீ துயிரொழி வரையுமே யூர்வல்.
வாருதி யெம்மை வதைக்கினும் வதைக்கும்.
ஒரொளிர் தீவிடைச் சேரினுஞ் சேருவோம்.
நண்பன் அக்கிலிஸை நாடினும் நாடுவம்.
திண்வலி மிக்குத் தொலைந்ததே யாயினும்
எஞ்சிய தின்று மெளிதிலை. முன்னர்
விஞ்சைய நரையும் விரிந்த மண்ணையும்
நிலை பெயர்த்துள்ள வலியிலே மாயினும்
நிலைத்துள தின்றும் நம்மிடத்துள்ளது.
கலங்கா நெஞ்சக் காவலர் யாமெலாம்
விலங்கலின் விதியினும் வளர்ந்த நாளினும்
வலியிழந்துளே மெனினும் நன்மனவலி
நண்ணி, ஊக்கி, நாடிய தடைந்து,
விளங்குவ தன்றி, வீரமற் றுள்ளம்
துளங்கோம்; வணங்கோம்; துகளில் தோழரே!

# Children's and Ladies' pages

## சிறுவர் ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

### காந்த சக்தி MAGNETISM

சிறுவர்களே! உங்களுக்கு நான் சில ஸமாசாரங்கள் சொல்ல நினைத்திருக்கிறேன். நீங்கள் சற்றுக் கவனத்துடன் கேளுங்கள். முதலில் காந்தத்தைப்பற்றிச் சொல்லுகிறேன்.

காந்த சக்தி என்பது என்ன?— நீங்கள் காந்தம் என்பதைப் பார்த்திருக்கிறீர்கள்; காந்தக் கல்லையும் பார்த்திருக்கிறீர்கள். இதில் எதாவது ஒன்றை இரும்புத்தூளில் வைத்தீரானல் இரும்புத்தூள் இக் காந்தத்தின் முனைகளில் பற்றிக்கொள்ளும். இவ்வாறு காந்தத்தால் இரும்புத்தூள்கள் இழுக்கப்படும் சக்திக்குத்தான் காந்தசக்தி என்று பெயர்.

காந்தமேன்பது என்ன?— இரும்புத்தூளை இழுக்கும் காந்தசக்தி யுடைய இரும்பு அல்லது எஃகுத் துண்டிற்குத்தான் காந்தமென்று பெயர். எல்லா எஃகுத் துண்டு

களும் காந்தமா யிருக்காது. ஆனால் அவ்வைகளைக் காந்தமாகச் செய்யமுடியும்.

எஃகுத்துண்டைக் காந்தமாக்குவ தெப்படி? ஒரு நீள எஃகுத்துண்டோ அல்லது ஊசியோ எடுத்துக் காந்தத்தின்மேல் மேல்பக்கத்திலிருந்து கீழ்பக்கமாக ஒரே வழியாகத் தேய்த்தால், அத்துண்டு காந்த சக்தியைப் பெறும். அதை இரும்புத்தூளில் வைத்தால் அத்தூள் கீழ்விழாது, அதன்மேல் ஒட்டிக்கொள்ளும். ஜலத்தில் மிதக்கும் இரும்புத்துண்டுகளிடம் கொண்டு போனால் அவற்றை அசையச்செய்யும். நீரில் இரும்பு மிதக்காதல்லவா? எவ்வாறு அதை மிதக்க வைப்பது தெரியுமா? ஒரு தைக்கும் ஊசியை எடுத்து மிதக்கும் தக்கையின்பேரில் வைத்தால் அதனோடு ஊசியும் மிதக்கும். இவ்வாறு மிதப்பதற்குத் தக்கைத்துண்டு தகுந்த கனமுடையதாக இருக்கவேண்டும்.

காந்தத்தின் உருவம் எப்படி இருக்கும்?—ஒரு எஃகுத்துண்டைப் பார்த்ததும் இது காந்தம், இது காந்தமல்ல என்று சொல்ல முடியாது. ஸாதாரணமாக, காந்தங்கள் குதிரைக் குளம்புபோலச் செய்யப்படுகின்றன; (1) என்று காட்டப்பட்ட படத்தைப் பார்க்கவும். முனைகளில் தவிர, அவற்றின் மேல் சிகப்புச் சாயம் பூசியிருக்கும். அதன்



(படம் 1)

முனைகளைத் தாங்க, ஒரு இரும்புத் துண்டுண்டு; படத்தில் காட்டப்பட்டுள்ளது. இது தனித்துண்டு; காந்தத்தோடு சேர்ந்ததல்ல. அதற்குக் காப்பாற்றுந் துண்டென்று பெயர். அதனால் காந்தத்திலிருக்கும் சக்தி வெளிப்போகாது தடுக்கப்படுகிறது. இதனால்தான் அதற்கு அந்தப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த இரும்புத்துண்டை, அக்காந்தம் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்கிறது. அக்காந்தத்தின் சக்தி இவ்வளவு என்று அந்தக் காப்பாற்றும் துண்டை வேறாய் எடுக்க, நீ உபயோகப்படுத்தும் சக்தியால் தெரியும். காந்தங்கள் வேறு உருவங்களோடும் செய்யப்படுகின்றன. தட்டைக்காந்தம் (2) என்று குறிப்பிக்கப்பட்ட படத்தில் காட்டப்பட்டிருக்கிறது.



(படம் 2)

காந்தத்தில் அதன் சக்தி எங்கிருக்கிறது?—காந்தத்தில் விளங்கும் காந்தசக்தி அதன் முனைகளில்தான் அதிகம்; நடுவில் இல்லையென்றே சொல்லாம். இரும்புப்பொடி நிறைந்த குவியலில் ஒரு காந்தத்தைப் புதைத்து ஜாக்ரதையாக எடுத்தால் இது தெரியும். இரும்புப்பொடிகள் முனைகளில் அடையடையாக ஒட்டிக்கொள்ளும்; நடுவில் மாத்திரம் ஒட்டிக்கொள்ளாது. காந்தத்தின் இரண்டு முனைகளுக்கும் த்ருவங்கள் என்று பெயர்.

காந்தத்தின் முனைகளுக்குத் த்ருவமென்று பெயர்வரக் காரணமென்ன?—காந்தத்தை எடுத்து நடுவில் ஒரு நூலில் கட்டித் தொங்க வைத்தால், அது எப்போதும் ஒரே நிலையில் அமைகிறது. ஒருமுனை வடக்கையே நோக்கும்; வேறொரு முனை தெற்குத்திசையே நோக்கும். வடக்குத் திசையில் த்ருவ நக்ஷத்திரமிருக்கும் இடத்தில் நாம் வசிக்கும் பூமியின் அச்சு ஆகாயகோளத்தில் முட்டுகிறது. ஆதலால் பூமியின் அச்சின் வடமுனைக்கு வடத்ருவம் என்று பெயர். தென்முனைக்கு தேன் த்ருவம் என்று பெயர். காந்தமும், வேறொரு தடங்கலும் இல்லாமல் ஒரு நூலால் தொங்கவைத்தால் இந்த த்ருவங்களின் பக்கத்தையே காட்டுகின்றது. அதனால்தான் அதன் வடக்குக்காட்டும்முனைக்கு வட த்ருவம் என்றும், தெற்குக்காட்டும் முனைக்குத் தேன் த்ருவம் என்று பெயர்.



காந்தம் வடக்கு தெற்குக் காட்டுவது.—ஒரு காந்த ஊசியை (3)-வது படத்தில் காட்டிய



(படம் 3)

படி நூலால் தொங்கவைத்தால், அது வடக்கும் தெற்கும் காட்டுமென்பது நன்றாகத்தெரியும். முன்சொல்லிய பிரகாரம் நீரில் காந்த ஊசியைத் தக்கைமேல் மிதக்கவைத்தால் அப்பொழுதும் வடக்கும் தெற்கும் காட்டும்.

காந்தத்தின் உபயோகம்.—காந்தம் வடக்கும் தெற்கும் காட்டுவதால் முன் காலத்திலிருந்து அது ஜனங்களுக்கு உபயோகமாக இருக்கிறது. முக்கியமாகக் கடல் பிரயாணஞ் செய்பவர்களுக்கு அது திசையை அறிய, பெரிய ஸாதகமாக இருக்கிறது. கீழ்க் காட்டப்பட்ட உருவம் யாத்ரிகர்களுடைய காந்தமுள். இதை ஆங்கிலத்தில் மாரினர்ஸ் காம்பஸ் (Mariner's Compass)என்பார்கள். இதன் முகத்தில் திசைகள் நன்றாய்க் காட்டப்பட்டிருக்கின்றன.

அம்முகத்தின்மேல் ஒரு காந்த ஊசி ஒரு முனையின்மேல் கடியாரக்கைபோல் ஸ்வேச்சையாய் அசையும்படியாக அமைக்கப்பட்டிருக்கிறது. எவ்விடத்தும், இதை ஸமமான பூமியின்மேல் வைத்தால் திசைகளை நன்கு அறியலாம். அதனால்தான் திசைதெரியாது கடல்மேல் போவதற்கு அது மிகவும் உபயோகம். அதனாலேதான் அதற்கு யாத்ரிகர்களுடைய காந்த முள் என்றும் பெயர் கொடுக்கப்பட்டது.

முன் காலத்தில், இவ்வகைய முள்ளை ஜனங்கள் உபயோகப்படுத்தவில்லை. காந்



தக்கல்லைக்கொண்டு திசைகளைக் கண்டுபிடித்துக்கொண் டிருந்தனர். இந்தக் காந்தக்கல் இயற்கையில் அகப்படும் கற்களில் ஒன்று; சிகப்பாய் இருக்கும். அது காந்தம்போல் வடக்கும் தெற்கும் காட்டும்.

காந்தம் யாத்ரிகர்களுக்கு மாத்திரம் உபயோகமல்லாமல் பலவகை யந்திரங்களிலும் ஸாதனமாக இருக்கின்றது. அது சில சமயங்களில் மின்சாரத்தை உண்டாக்கும் ஸ்வபாவத்தையுடையது.

---

## நமது சந்தா நேயர்களுக்கு

திருவல்லிக்கேணியி லிருந்த நமது விவேக போதினி ஆபீஸை, மயிலாப்பூருக்கே ஸ்திரமாய் மாற்றிவிட்டோம். சந்தாநேயர்கள் இனி தாங்கள் எழுதும் கடிதங்களை "மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை" என்று எழுதக் கோருகிறோம். 8-ம் தொகுதியைப் பயிண்டு செய்து கொள்ளப் பிரியப்படுகிறவர்கள், ஏதாவது சஞ்சிகைகள் குறைந்தால் நமக்கெழுதிப் பெற்றுக்கொள்ளவும். போதினி பயிண்டு செய்த தொகுதிகள் 1 முதல் 8 வரையில் நமது ஆபீஸில் கிடைக்கும். மொத்தமாய் ருபாய் கொடுத்து வாங்கமுடியாதவர்கள், போதினி மானேஜருடன் ஏற்பாடு செய்துகொண்டு, தாங்கள் செலுத்த வேண்டிய ருபாயை மாதாமாதம் தவணையில் செலுத்தலாம். 8-ம் தொகுதி பயிண்ட் செய்யாத 12 மாதங்களின் பத்திரிகைகளும் சில காப்பிகளே கிடைக்கும். ஒரு வருஷக் காபபிகளின் விலை ரூ. 3. தபால செலவு பிரத்தியேகம்.

மானேஜர்,
விவேக போதினி,
மயிலாப்பூர், சென்னை.

# பிரபஞ்ச அபிவிருத்தி

# PROGRESS OF THE WORLD

யுத்தம் ஆரம்பித்து இருபதின்மூன்று மாதங்களாகின்றன. இப்போதைய யுத்தப் போக்கில் வரவர விசேஷங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அநேக நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட ஆங்கிலப்படையின் அடு போர் (Offensive) ஆரம்பித்தது ஜர்மானியரது வீழ்ச்சிக் குறிகுறியே யாகும். ஈப்ரஸ் என்னுமிடத்தில் ஜர்மானியர் வெர்டனில் செய்த சூழ்ச்சிகளையே செய்துகொண்டிருக்கின்றனர். ஆயினும் நமது துருப்பின் கனேடியப் பெருவெள்ளம் ஜில்லாபேக் என்னுமிடத்திற்குத் தென்கிழக்காக ஜர்மானிய முதல் காவல் அரண் முனைகளைத் தாக்கி, அவர்களது வேறு யுத்தரங்கங்களிலிருந்து பெரும்படைகளை ஆங்கிலப் பார்சவ முனைக்குக் கொண்டுவரும்படி வெருட்டியது. ஆஸ்ட்ரேலிய வீரரது அழியாவிறலும், ஹூக் என்னுமிடத்தில் வரவர முந்திக்கொண்டிருந்த ஜர்மானியப் படையைப் பின் வாங்கும்படி செய்தது. கிவஞ்சி என்னுமிடத்தும் வெல்ஸ் பஸ்லியர்கள் ஜர்மானிய ஆணவத்தை அடக்கினர். லென்ஸ் என்னுமிடத்திலும் ஜர்மானிய வீரமழிந்து விளங்குகிறது. இவ்வாறு வடகடல் முதல், சாம்பேன் வரை நமது ஆங்கிலப் பீடை ஜர்மானியப்படைமேல் அடுபோரிட்டு ஜர்மானியரது முதல்காவல் அரண்தொடர் நிலைகளைமுற்றுங் கவர்ந்துள்ளது. இம்முனையில் போர் உக்கிரமாக நடந்துவருகிறது; நமதுபடை கைப்பற்றிய மான்டபான் என்னும் ஊர்க்கருகாமை ஆன்கர், ஸோம் என்னுமிரண்டு நதிகளுக்குமிடை இவ்வடுபோர் வெகு உக்ரகதியிலேயே நடக்கிறது. இடைவிடாது முயன்று மாமெட்ஜ், ப்ரீகோட் என்னுமிடங்களைக் கவர்ந்ததும், லீபாஸே என்னுமிடத்தைக் கவர வெகு சமத்காரமாக நமது படை காரியஞ் செய்து வருகிறது. அவ்வூரை, அதையிழந்து மீண்டும் கைக்கொண்ட ஜர்மானியரை நமது சேனை அதனின்று வெளிப்படுத்திக் கவர்ந்தது. இவ்வாறு செய்தபோது ஆங்கிலப்படையும் பிரெஞ்ச் படையும் முனையொன்றி ஒரே முனையாக நெருங்கின. தீப்வால் என்னுமிடத்தில் பகைவர் சேனை, நமது சேனையை அப்புறப்படுத்தியதாயினும், மீண்டும் கைப்பற்றப்பட்டது. இதற்குள் நமது சேனை ஜர்மானியரது இரண்டாவது அரண் தொடர்களைக் கவரத் தமது படையை முன்னிட்டு லிப்ஜிக் அரண் கோட்டையைத் தமதாக்கியதும், நமது துருப்பு ஆலிவர்ஸ் என்னுமிடத்திற் கருகாமையிலுள்ள பாகங்களையும் கவர்ந்தது. மற்றும்ஜர்மானிய முனையில் இரண்டாவதாக அமைக்கப்பட்ட அரண் தொடர்களை வாயுள் போட்நிக்கொள்ள ஆலிவேர்ஸ் என்னுமிடத்தையும் முற்றுகையிட்டுக் கவர்ந்தது. லாபாஸே என்னுமிடத்திலும் சண்டை வெகு மும்மரமாக நடப்பது ஆங்கில சேனையின் பெருமையை விளக்கும்.

வெர்டனிடம் சண்டை ஒருவாறு ஒழிந்ததென்றே சொல்லலாம். ஆயினும் அவ்விடம் போர் ஓயாமல் நடந்து வருகிறது. மியூஸ் நதிக்கரையோரம் சண்டை ஒழிந்தபாடில்லை. வெர்டனருகு தியோமான்ட் என்னுமிடத்தை ஜர்மானியர் கவர்ந்தனராயினும் மறுபடியும் வெம் போரிட்டுப் பிரஞ்சுசேனை அதை



மீண்டும் தனதாக்கியது. மார்ட்ஹோம் என்னுமிடத்திலும் ஜர்மானியர் வெளியாக்கப்பட்டனர். ப்ளூரி என்னுமிடத்தில் சில பாகங்களை ஜர்மனியர் கவர்ந்தனர்; ஆயினும் இதன்பின் சில காலம் வெர்டன் முனையில் வேலை மந்தமாகவே நடை பெற்றது. இதற்குள் நேவ்ஷேபல் என்னுமிடத்தில் பிரஞ்ச் சேனை ஜர்மன் படையுள் பாய்ந்து அதைப் பிரிந்து விளங்கச்செய்து, தமது முனைக்குப் பலத்தை ஏற்படுத்தியது. இதற்குள் ஆங்கிலப் பிரஞ்ச் முனைப்படைகள் ஒன்று சேர்ந்துவிட்டபடியால் சோம் நதிக் கரையில் முறியடைந்த ஜர்மானிய வீரம் வெர்டனில் மீண்டும் உக்கிரமாகத் தாக்க யத்தனித்து, காரணமின்றி வெகுதூரம்குண்டுகளை விழ்த்தக்கூடிய பீரங்கிகளுடன், ஜர்மானியர் வெர்டனில் விளங்கும் பெரிய மாதா கோயிலை முற்றுகையிட்டுக் கொண்டிருக்கின்றனர். மீசையில் மண் படவில்லையென்றுற்போல என்ன வீரம்!

நடு அரங்கத்தில், ருஷியர்கள் மத்தகஜங்கள்போல் எதிர்ப்பாரற்று ஆஸ்ட்ரியப் படையைக் காலால் தேய்த்துக்கொண்டே முன்னேறுகிறது. க்ஹெர்ஜேவிட்ஸ்மேல் படையெடுத்தவர் அதை முற்றுகையிட்டுக் கவர்ந்துமேல்கடந்து ப்ரூத்நதியைத்தாண்டிக் கோவில் பக்கமாகப் படையெடுத்தனர். இதற்குள் ஜர்மானியர் பல முனைகளில் ரஷியரைத் தாக்கி அவரது காரியத்திற்குத் தடையுண்டாக்க முயன்றனர்; அது பயன்படாதே போயிற்று. இதற்குள் ஆங்கில பிரஞ்ச் படைகளும் ரஷியப் படைகளும் ஒன்று சேரும்படியாக மார்க்கம் ஏற்பட்டு விட்டது. நிற்க, ஜாலெட்சிகி என்னுமிடத்தில் குதிரைப் போரில் ரஷியர் வெற்றி கொண்டனர். பகைவர் க்ரவோ என்னும் பட்டணத்தைக் கவர்ந்ததை அதிசீக்கிரத்தில் மீண்டு மடைந்து, ஆஸ்ட்ரியர்களை ஸோகுல், ஸ்விட்நிகி என்னுமிடங்களில் முறியடித்து, அவரைப் பின்பற்றி ராடாட்ஜ் என்னும் கோட்டையைக் கவர்ந்து, கிம்போலங், குடீ என்னுங் கோட்டைகளையும் கவர்ந்தனர். இவ்வாறு அவர் புகோவினு முழுதையும் தற்காலம் தமது கைக்கீழ் கொண்டிருக்கின்றனர். இதனோடு இராமல், கார்பேதியன் மலையைத் தாண்டி, ஹங்கரி நாட்டுள் செல்லவும் பிரயத்தன மெடுத்தனர்; புகோவினுநாட்டின் ரயில் பாதைகளுக் கெல்லாம் சேரு மிடமாகிய கோலோமியா என்னு மிடத்தையும் கவர்ந்தனர். இதனால் ஹங்கரிக்குள்ள ரயில் போக்கு வரவு ஸாதனங்கள் நிலைக்கப்பட்டன. இவற்றை யெல்லாம் கண்ட பகைவர் கிம்போலங்கிற்கு வடக்கில் பெருஞ் சேனையுடன் வந்து லினேவ்கா என்னுமிடத்தைப்பற்றினர்; நீமன் நதியையுந் தாண்டினர். மேலும், வேறிடங்களிலும் போர்க்கு முனைகள் ஏற்படுத்தினர். ஜர்மானியர் ஜயம் சாயாதிருக்கும்படியே ரஷியர் நடந்து வருகின்றனர்.

இடாலிய முனையில், போர் மும்முரமாக நடந்தேறி வருகிறது. இடாலியர் லகர்ஜே ஸுகனு கணவாய்களில் பாரயுத்தம் செய்து சத்துருக்களை ஹதஞ்செய்து வருகின்றனர். ஆஸியாகோ என்னு மிடத்தில் எதிர்த்த ஆஸ்ட்ரிய சேனையின் சாயம் வெளிப்படும்படிச் செய்தனர். ஆஸ்ட்ரியர் கவலை அளவிட முடியாது. இஸ்ஸான்ஸோ முனையில் சண்டையிட முடியாது, ஆஸ்ட்ரியர்கள் தமது சேனையை அல்பேனியாவிலிருந்து இம்முனைக்கு வரவழைக்கும்படியாகக் கஷ்டங்கள் ஏற்பட்டுவிட்டன. அந்நாடு நாலா பக்கங்களிலும் பகைவர் வாயில்பட்டுத் தத்தளித்த வண்ணமாக விளங்குகிறது. ஆடிஜ், ப்ரண்டா என்னு மிவற்றின் இடை தமது நிலையைச் செம்மைப்படுத்திக்கொண்டதும், இடாலியர் மான்பல்கோன் என்னு மிடத்தைக் கவர்ந்தனர். மற்று, அம்முனையில் கடும்போர் நடப்பினும், விசேஷமாக ஒன்றும் ஏற்படவில்லை. ஆனால் ஆஸ்ட்ரியர்களுடைய வீரர் அழிவோ சொல்லமுடியாத் தன்மையதாயிருக்கிறது.

ஆசியத் துருக்கியில், ரஷியர் படையெடுப்பைத் தடுப்பதன் வியாஜமாகத் துருக்கியவனர்களை ட்ரேபிஜாண்ட் பட்டணத்திலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் வெளியேற்றினது பயங்காளித் தன்மையையே வெளியிடும். பாக்டாட் பார்சவமாகத் துருக்கர் தோல்வியடைந்து கலாய்ஸ்டாஹின் என்னும் பட்டணத்தை நாடி ஓடலானார். ருஷியரும் ட்ரேபிஜாண்டுக்கு அருகாமையிலும்

துருக்கரை அபஜயமடையச் செய்து, மேல் சோரோக் என்னுமிடத்திலும் அவர்மேல் படையெடுத்துத் தோல்வியடையச் செய்தனர்.

மெஸபடோமியாவில் யூப்ரேடிஸ் கரையோரம், ஜெனரல் லேக் என்பவர் மிகப் பிரயாசை கொடுத்துவந்த பகைவர்களை எதிர்த்துக் கைநியாக்கினர். ஈஜிப்டில் ஸுயன் ஊயத்துக் கருகாமை பகைவர்கள் வெடிகுண்டுகளை விசினார்கள்; ஆனால் அவற்றால் நமக்கொன்றும் நஷ்டமென்பதில்லை; மேலும் கன்தாரா என்னுமிடத்திலும் யிட்டும் ரோமானி என்னுமிடத்திலும் வெடிகுண்டுகளைப் பகைவர் ஆகாயக் கப்பல்களிலிருந்து விசினர்; சேதமென்பது மிக அற்பம்.

கிழக்காப்பிரிக்காவில், ஜெனரல் ஸ்மட்ஸ் ஹான்டினிக்குத் தெற்கில் லுகீகுரா என்னும் நதியின்கரையில் பகைவரது சேனையை அபஜயப்படுத்தினர்; நியாஸா ஏரிக்கருகிருக்கும் லாங்கன்பர்க் என்னும் பட்டணமும் ஜர்மானியரிடமிருந்து கைப்பற்றப்பட்டது.

* * *

வழக்கம்போல வியாபாரக் கப்பல்களை த்வம்ஸம் செய்யும் ஜர்மானியக் கொடுமையின் உக்ரம் குறையவில்லை. அவர்கள் இப்பொழுது புதுவழியாக வியாபாரஞ்செய்ய ஆரம்பித்திருக்கின்றனர். நீர்க்குள்ளேயே வெளித்தோன்றாது போகக்கூடிய வியா

**ஜர்மனி**

பாரக் கப்பல்கள் செய்திருக்கின்றார்கள். இது ஸப்மேரின் என்னும் வகுப்பில் சேர்ந்தது. அத்தகைய கப்பல் ஒன்று ஜர்மனியிலிருந்து அமெரிக்கா சென்றது. அதை எவ்வகைக் கப்பல்களில் சேர்ப்பதென ஸந்தேகம் வந்து, அமெரிக்காவில் வியாபாரக் கப்பலெனத் தீர்ப்பு செய்யப்பட்டது. இம்மாதிரி சென்ற கப்பலின் பெயர் ட்யூஷ்லண்ட்.

* * *

ஐயர்லாந்த் குழப்பத்தைப்பற்றி விசாரணைகள் நடந்துவருகின்றன. இராஜத்துரோ

**கேஸ்மண்ட்**

கத்திற்காக விசாரிக்கப்பட்ட ஸர்ரோஜர்கேஸ்மண்ட் குற்றவாளியாகத் தீர்மானிக்கபபட்டு, அவரது அப்பீல் மறுவும் தள்ளப்பட்டது. அவரை இன்னும் தூக்கிற் போடவில்லை.

* * *

எல்லாத்தேசப் பொருளாதாரக் கான்பரன்ஸ் பாரீஸ் நகரத்தில் கூடியபோது நமது நாட்டின் பிரதிநிதியாக அங்கு யாரும் நியமிக்கப்படவில்லையானாலும், நமது ஆங்கிலராஜாங்கத்தில்கூடும் நாடுகளின் கான்பரன்ஸில் பிர

**பொருளாதாரக் கான்பரன்ஸ்**

திநிதிகளால் இந்தியாவின் தரப்புப் பேசப்படுமென்பது ஸந்தோஷத்திற் கிடந்தராதிராது. ஷை பொருளாதாரக் கான்பரன்ஸில் நேசராஜ்யங்கள் சத்ருக்களிடம் வியாபாரஞ் செய்யாதிருத்தலைப் பற்றியும், நேசதேசங்களின் கடமை, வியாபார ஏற்பாடு, வியாபார விஷயத்தில் ஒன்றிற் கொன்று ஸஹாயஞ் செய்தல் இவற்றைப் பற்றியும், பரஸ்பர உபகார முறைகளைப் பற்றியும் பேசப்பட்டன. இவ்வழிகளால் நேசராஜாங்கங்கள் தமது நேசபாவத்தையும் வாழ்க்கை வியாபார விருத்தியையும் ஓங்கச் செய்யச் செய்வதே அவற்றின் நோக்கம்.

* * *

சைனாவில் ராஜாங்கத்தின் நிலை அமைதியற்றிருக்கிறது. மெக்ஸிகோ ராஜ்யத்திற்கும், யுனைடட் ஸ்டேட்ஸ் ஐக்ய மாகாணங்களுக்கும்

**வெளிநாடுகள்**

இருந்த மனஸ்தாபங்களும் செயல்களும் வரவர ராஜியாய்விடுமெனத் தோன்றுகிறது.

* * *

இன்டர்மீடியட் பரீட்சை விமரிசையைப்பற்றி, கனம் ஸ்ரீ சேஷகிரி அய்யர் அவர்கள் கொண்டுவந்த பிரேரேபணையைப்பற்றித்

**சென்னை சர்வ சலாசங்கம்**

தீர்மானமொன்றும் ஏற்படாது, சென்னை ஸர்வகலா சங்கத்தின் ஸெனட் கூடியபோது வேறு விஷயத்தைப்பற்றிப் பேசிக் காரியமுடிந்தது துன்பத்தையே தரும். மீண்டும் சிலர் ஷை பிரேரேபணைகளைக் கொண்டுவந்துஸெனட்கூட்டத்தைக்கூட்டுவரென நம்புகிறார்கள். அப்படிநடந்தால் பெருமைக்கே இடந்தரும். பி. எல். பரீட்சையை மூன்று வருஷப்படிப்பாக ஏற்பட்டதை, முன்போல் இரண்டு வருஷப் படிப்பாக



ஏற்படுத்த யோசனைகள் நடப்பது ஸந்தோஷத்திற் கிடந்தரும்.

* * *

கனம் கவர்னர் ஜர்னல் அவர்களின் சட்டசபையின் பம்பாய் அங்கத்தினராக மஷ்ரல்ஹக் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். ஸ்ரீ காசி விச்வவித்யாலத்தின் கலா

**நியமனங்கள்**

சாலைத் தலைவராக ஸ்ரீ. பி. சேஷாத்ரி அவர்கள் நியமிக்கப்பட்டது நம்மவர்க்குப் பெருங் கௌரவமாகும். நமது சென்னை சட்டசபையின் அங்கத்தினராய ஸ்ரீ கேசவப் பிள்ளை தேர்ந்தெடுக்கப்படாது போனது வியஸனத்தையே தரும்.

* * *

கோரைப்பாய்த் தொழிலை அபிவிருத்தி செய்ய மைஸூர் தர்பார் கவனஞ்செலுத்தி,

**கோரைப்பாய் தொழில்**

மைஸூர் பொருளாதாரக் கான்பரன்ஸில் ஸ்ரீ பாலராஜ அரசைப் பாலக்காட்டிற்குப் போய்க் கோரைப்பாய் வேலையைப் பரிசோதனை செய்து, வேலைக்குகந்த ஆட்களையும் சேர்க்க நியமித்திருக்கிறது. பாலக்காடு, பண்டைநாள் முதல் பாய்க்குப் பேர் போனது. சீமையில் கூடிய பொருட்காட்சியிலும் சிலாகிக்கப்பட்டது. ஆனால் சீனா, ஜப்பான் தேசத்தின் போட்டியில் முன்னிட்டு நிலைக்க முடியாது தத்தளித்துக்கொண்டிருக்கும் வேலையைச் செய்பவரின் காரியதிட்பமான செயலைக்கண்ட அரசர் தமது நாட்டிற்குத் தக்க தொழிலாளிகளை அழைத்துச் சென்றனர். மைஸூரில் கோரைப்புல் ஏராளம். பாலக்காட்டுக் கோரைத் தொழிலாளிகளுக்கும் இனி பிழைப்பும் ஸுகமாக ஏற்படும்.

---

நான்கு அணா லஞ்சம்.—வங்காள தேசத்தில் **சொரம்பூர்** என்னும் ஊரிலுள்ள ஸ்மால்காஸ் கோர்ட்டில், ஒரு நாள், வக்கீல் குமாஸ்தா ஒருவர் தன் பிரியாதைக் கோர்ட் சேவகனிடம் கொடுக்கும்போது அதனுடன் ஒரு நாலணாவையும் சேர்த்துக் கொடுத்ததை அக்கோர்ட் நியாயாதிபதிஎப்படியோ பார்த்துவிட்டார். அவர் அவ்விருவரையும் உடனே தம்மிடம் கூப்பிட்டு ஷை காரியத்தின் விபரங்களைக் கேட்டு, திருப்தியடையாததால், இருவரையும் சட்டப்படி தண்டிக்கஉத்தரவு செய்துவிட்டார். பார்க்கப்போனால்நாலணாதான். அது செய்யும் வேலையோ அநந்தம்.

# புஸ்தக விமர்சனம்

## REVIEWS OF BOOKS

தனிச் செய்யுட் சிந்தாமணி.—*இது பல வித்வான்களது தனிப்பாடல்களை அடக்கியுள்ளது. ஸ்ரீமான் புழ். சி. ஷண்முகஞ்செட்டியாரின் விருப்பத்தின்படி மதுரை விவேகபானு பத்திராதிபர் ம-ா-ா-ஸ்ரீ மு. ரா. கந்தசாமி கவிராயரால் தொகுக்கப்பட்டது. முன் இராமநாதபுரம் போன்னுசாமிதேவரால் தொகுக்கப்பட்ட தனிப்பாடற்றிரட்டை விஸ்தாரப்படுத்திப்பலபுதிய வித்வான்களுடையதனிப் பாடல்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பொழுது விமர்சனஞ் செய்யப்படும் புஸ்தகம் தலைப்பில் காட்டப்பட்ட நூலின் முதற்பாகமே. இதிலடங்கியுள்ள பாடல்கள் தமிழ்நாட்டின் பூஷா பொக்கிஷமாகும்; நம் முன்னோரது புத்தி, சமத்காரம், வர்ணனை விஸ்தாரம், மதியூகம், அடங்காப்படிப்பு முதலிய விஷயங்களின் பெருமையை ஒன்றுசேர்த்த பண்டாரமாகும். யாவர் மனத்தையும் உத்ஸாகப் படுத்துவதுடன், நமது நாட்டுப் படிப்பின் பெருமை,விஸ்தாரம்,போக்கு இவற்றை இப்புஸ்தகம் நன்கு விளக்கும். ஆழ்ந்து படிப்பவனுக்கு அடங்கா மகிழ்ச்சியும், கஷ்டமடைந்த மனதிற்குச் சாந்தியையும், வேடிக்கையாகப்படிப்பவனுக்குவிநோதமும்,பெரியோர் சிறியோர் ஆண் பெண் என்ற பேதமில்லாமல் யாவர்க்கும் ஒரே ஸமயத்தில் ஆநந்தம் உண்டாக்க இப்புத்தகத்தால்தான் முடியும். இத்தகைய புத்தகம் வெளிவர உதவிபுரிந்த ஷண்முகஞ் செட்டியாரிடம் தமிழுலகு பெருமையாராட்டாதிருக்கமுடியாது. இப்புத்தகம் ஒவ்வொரு மனையிலும் இருப்பதல்லாமல் எல்லாப் பாடசாலைகளிலும் இருந்தாலன்றி அவ்விடங்கள் பெருமை பெறமுடியாது என்பது திண்ணம்.

விலை ரூ. 3.

ஸ்ரீகாளத்திபுராணம்.*—இது ஸ்ரீகாளஹஸ்தியின் புராண விவரத்தைக்கூறும் கிரந்தம். செய்யுள் நடையில் சகோதரர்களாகிய கரு

---

*இப்புத்தகங்கள் வேண்டுவோர். விவேக போதினி மானேஜருக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஞானப்பிரகாசச் சுவாமிகள், தமிழிற் சிறந்த கவியாகிய சிவப்பிரகாசச்சுவாமிகள், வேலைய சுவாமிகள் மூவரும் சேர்ந்தியற்றிய நூல். பாடல்களின் கருத்தும் பெருமையும் நன்கு விளங்கு வண்ணம், மஹாவித்வான் காஞ்சீபுரம் இராமாநந்த யோகிகள் இதற்கு உரையியற்றியதல்லாமல், ஒவ்வொரு சருக்கத்தின் முடிவிலும் அச்சருக்கத்தின் கதையை வசன ரூபமாகவும் சேர்த்துள்ளார். தமிழபிமானிகளுக்கும், அறிஞர்களுக்கும், இப்புத்தகம் பேருதவியாகும். மற்றுந் தமிழ் கற்கும் மாணாக்கர்கட்கும் உபயோகமாகும்; பாடசாலைகளைச் சேர்ந்த புத்தகசாலைகளிலும், தமிழ்ப் பண்டாரங்களிலும்இப்புத்தகமில்லாதிருக்க இயலாதென்றே சொல்லலாம். புத்தகமும் செம்மையாக நல்ல காகிதத்தில் சுத்தமாக அச்சிடப்பட்டு நன்றாகக் காலிகோ கட்டடத்தில் பயிண்ட் செய்யப்பட்டுப் பல படங்களடங்கியுள்ளது. விலை ரூ. 2—8—0.

***

கோவிந்தன் அல்லது மாயாஜயம்† —இப்பெயருடைய கற்பனைக்கதை ஒன்று வெளி வந்துள்ளது. இதில் தற்காலத்தில் ஈசல் கணக்காக வெளிவந்து, வாசிப்போர் மனதைக் கொள்ளை கொள்ளும் தமிழ் கற்பனைக்கதைகளைப்போலச் சில பாகங்கள் லௌகிகமாக இருப்பினும், வைதிக வேதாந்த பாகங்கள் ஏராளமாக உள்ளன. உபநிஷத் பாகங்கள் கதா காலக்ஷேப பாகங்கள் எல்லாம் வெகு அழகாக அமைந்துள்ளன. இதற்கு முகவுரை எழுத முன் வந்த இவர் நண்பர் மாத்திரம் தமது தத்காலத்திய தான்தோன்றி சீர்திருத்தக் கொள்கையை நுழைத்து எழுதி, ஆவலுடன் வாசிப்போர்மனதைச்சற்று விரஸப்படுத்தி விடுகிறார். கதையின் பலவித ரஸத்தையும் வேதாந்தச் சிறப்பையும் கண்டு ஈடுபடும் விவேகிகள் இந்த முகவுரை ஆசிரியரதல்லாததால் இதை மன்னித்து மறந்து மற்ற விஷயத்தில் நல்லதாக அமைந்திருக்கும் இப்புத்தகத்தை நன்குமதித்துப்பாராட்டுவார்கள் என் நம்புகிறோம். விலை அணா 10

† ஆசிரியர் N. V. விச்வநாதய்யர் அவர்கள்
நாகப்பட்டணம்

## விசேஷக் குறிப்புகள்

### NEWS AND NOTES

**ஒரு புதிய கவர்ன்மெண்ட் காலேஜ்.**—பல்லாரி, கடப்பை, கர்நூல், அனந்தப்பூர் இந்த நான்கு ஜில்லாக்களுக்கும் சேர்த்து ஒரு காலேஜ், அனந்தப்பூரில் ஜூலைமீ 8உ முதல் ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று வருகிறது.

***

**பிளேக்** என்னும் கொடிய வியாதி.—இந்த வியாதி இந்தியாவுக்கு வந்து இருபது வருஷகாலமாகிறது. ஏனெனில் 1896-ம் வருஷந்தான் பிளேக்கினால் முதல் முதல் மரணமேற்பட்டது. சைனா தேசத்தில் இவ்வியாதி மிகப்பரவி ஜனங்களை உபத்திரவித்து வந்ததென்றும், சைனாவிலுள்ள ஹாங்காங் என்னுமிடத்திலிருந்து இந்தியாவுக்கு ஜனங்களை ஏற்றிவந்த கப்பல், வைத்திய முறைப்படி நன்கு சுத்தி செய்யப்பட்டு, ஜனங்களை பந்தோபஸ்தில் வைத்து வியாதி பரவுவதைத்தடுக்க யத்தனங்கள் எடுத்தும், அக்கப்பலில் வந்தவர் ஒருவர் பம்பாயில் பிளேக் வியாதியால் மரித்தார். கொஞ்சகாலத்திற்கெல்லாம், அனேகர் இவ்வியாதிகண்டு இறந்தார்கள். முதல் முதல் வியாதி பம்பாயில் பரவியது. இப்பொழுது இந்தியாமுழுவதும் முக்கியமான இடங்களுக்கு வந்து குடிகொண்டுவிட்டது.

***

**லால்குடி கல்விப் பொருட்காட்சி.**—முன் சஞ்சிகையில் எழுதியபடி, இப் பொருட்காட்சி லால்குடியில் நடக்காமல் திருச்சினாப்பள்ளி ஸெயிண்ட் ஜோஸப் காலேஜிலும், நாஷனல் ஹைஸ்கூலிலும் ஆகஸ்ட்மாதக்கடைசியில் நடைபெறும். திருச்சினாப்பள்ளியைத் தேர்ந்தெடுத்தது எவ்விதத்திலும் சிலாக்கியமென்றே சொல்லவேண்டும். கல்வியபிவிருத்தியிலும் தொழில்அபிவிருத்தியிலும் அக்கரை கொண்டவர் யாவரும் தங்களாலியன்றதைச் செய்யக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

***

**விவேக போதினி ஆபீஸ்.**—திருவல்லிக்கேணியிலிருந்த நமது ஆபீஸை, மயிலாப்பூருக்கே ஸ்திரமாய் மாற்றிவிட்டோம். நமது சந்தா நேயர்கள் தயவுசெய்து விலாஸ மாற்றலைக் கவனிப்பார்களாக.



கனம் ஸர். பி. எஸ். சிவஸ்வாமி அய்யர், கே. ஸி. எஸ். ஐ.,
கவர்ன்மெண்ட் நிர்வாக சபை மெம்பரும்,
மதராஸ் யூனிவர்ஸிடி வைஸ் சான்ஸலரும்.

# விவேக போதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி IX { நளஹு ஆடிமீ : 1916-ஹு ஆகஸ்ட்மீ } பகுதி 2

## சிந்தனை மொழிகள்

### STRAY THOUGHTS

பச்சோந்தி ஒன்றை வெவ்வேறு ஸமயத்தில் சிலர் பார்த்தார்கள். அவர்கள் கூடிக்கலந்து பேசியபோது, அதன் வர்ணம் வெளுப்பென்றான் ஒருவன்; மற்றொருவன் "ஓந்தி வெளுப்பாவது! அது கறுப்பாய்த்தான் இருக்கும்". என்றான்; இன்னொருவன் "சுத்தப் புளுகு! அது மஞ்சள் என்பது யாருக்குந் தெரியும்" என்று மறுத்தான்; "போங்களையா! உமக்குச்சிறிதும் அறிவென்பதேயில்லை. பச்சோந்தி என்ற பெயரே அது பச்சையாக இருக்குமென்பதைத் தெரிவிக்கும்பொழுது, வெளுப்பு, கறுப்பு, மஞ்சள் என்று மன்றாடுகிறீர்கள். வாரும் அதோ அங்கு ஓர் ஓந்தியிருக்கிறது. எல்லாரும் சேர்ந்துபோய், அதன் வர்ணத்தை நேராகக்கண்டு சித்தாந்தப்படுத்திவிடலாம்" என்று தன்னோடு சேர்ந்தவர்களைக்கூப்பிட்டான். அவ்வாறே அவர்கள் போய்ப் பார்த்தார்கள். ஆனால் ஓந்தி அப்பொழுது சிகப்பாகத்தோன்றியது. ஸரிதான் என்றுகொண்டவர் தமது விஷயங்களை வழிப்போக்கர் ஒருவரிடம் சொல்லிக்கொண்டனர். ஆனால் அவர் "நீங்கள் ஒவ்வொருவரும் ஸரி; ஒவ்வொருவரும் தவறு" என்று வெளியிட்டார். மேலும் "ஓந்தி வர்ணம் மாறிக்கொண்டேயிருக்கும்; க்ஷணத்திற்கொருமுறை அதன் வர்ணம் வேறுவிதமாகக் கண்ணிற்குப் புலப்படும்" என்று ஸமாதானஞ் சொன்னார். மதவாதிகளின்படியே கடவுள் தன்மையைக் காண்கிறார்கள். சிலர் தமது கடவுளைச் சாந்தமூர்த்தி என்பர்; சிலர் கருணைக்கடல் என்பர்; சிலர் தருமத்தின் வேரென்பர்; சிலர் அன்பாழி என்பர்; சிலர் நன்மையின் உருவென்பர். மற்றுஞ் சிலர் அவர்க்கு உருவே இல்லை என்பர்; சிலர் கடவுள் உருவுடையார் அல்லர், அவரை அவ்வாறு வழிபடல் பிசகென்பர். சிலர் கடவுளை இப்படித் தியானம் செய்தால்தான் நம்மைக் காப்பாரென்பர். இம்மாதிரியாக ஒவ்வொருவர் எண்ணினும் அவ்வவர் மனப்பக்குவத்திற்கும் எண்ணத்திற்கு மேற்ப எண்ணியார் எண்ணியாங்கு கடவுள் தோன்றுவரென்பது முற்றுணர்ந்த பெரியோர்களது அனுபவ வழியாகும்.

* * *

ஹிமயமலையைக் கண்ட தருமர், "நாம் ஒரு பொருளும் தராதிருக்க, தனது அழகிய பிராந்தியங்களைக் காட்டி நமது மனத்திற்கு இம்மலை சந்தோஷத்தைக் கொடுக்கிறது; நாம் கைம்மாறாக ஏதேனும் கொடுத்தாலும் பெற்றுக்கொள்ளாது" என்றார். அம்மலையின் நிலைமையே பரம சாந்தரின் மனோநிலைமையாகும். அவர் யாவர்க்கும் சாந்தியைத் தரும் காட்சியர்; நம்மிடம் ஒன்றையுங் கருதாது நம்மைச் செம்மை செய்ய உழைப்பவர்; தாம் உழைத்ததிற்கும் பயனைப் பெறார். அவர்களது பெருமையைச் சொல்லவுந் தரமா?

* * *

"சும்மா இருக்கின்ற ஸுகமரிது" என ஒருவர் பாடிக்கொண்டிருந்தார். அதைக் கேட்ட மற்றொருவர், "சோம்பேறி வேலை ஸுகமெப்படியாகும்?" எனக் கேட்டார்

“மனோவியாபாரங்களை அடக்கி, வெளியில் செய்யும் வேலையைத் தடுத்துச் சும்மாயிருத்தல் சுகந்தானே கொடுக்கும்” என்று முதலவர் விஸ்தரித்தார். “அது வெகுப் பிரயாஸம்” என்று வெளியிட்டார் இரண்டாவதவர். வீண்வம்பு, கூத்துக் கச்சேரி, இவை முதலானவைகளிடம் மனஞ்செல்லாது சும்மாயிருப்பதவர்க் கெப்படி முடியும்? ஆவலிருந்தாலல்லாமல், ஆத்ம ஸுகம் எப்படி ஏற்படும்?

***

ஸ்நேஹிதர்கள் பலரிருந்தால் நலமல்ல. பொறுக்காயும் உண்மையுமான சிலரே இருத்தல் நலம். முகஸ்துதி செய்து, சிரிக்கப் பேசித் தமது காரியங்களினிமித்தம் நேசிக்கும் நேசர்களை நன்கறிய வேண்டியது எவர்க்கும் பெரும் செயலேயாகும். காக்கையின் வாயிலிருந்த ஊனைக்கவர, அதன் குரலைப் புகழ்ந்து பேசிய நரிபோன்றவர்களை இச்சிக்காது, தம்முயிரையுங் கொடுத்துக் காக்கக் கூடியவரையே நேசிக்க வேண்டும். பழகியறிந்த பின்பே, ஒருவரை நேசிக்க வேண்டும்.

***

அல்பனுக்கு ஐச்வர்யம் வந்தால், அர்த்தராத்திரியில் குடைபிடிப்பான் என்பார்கள். புதிய பதவியை யடைந்தால் பழைய நண்பர்களை மறப்பது ஸஹஜம். ஆயினும் தமது நண்பர்கள் வந்தால் “உங்களை எங்கோ முன் பார்த்தாற்போல இருக்கிறது. உம் பெயர் கோவிந்தனல்லவா?” என்று அவன் பெயர் கேசவன் என்று அறிந்திருந்தும் கேட்பர். இது பதவியின் பெருமை. பதவி பெறினும், வீணாக மனத்தைக் கெடுக்காது வாழ்பவரே பெருமையில் முந்துவர்.

***

கடவுள் பக்தியில் சிறந்த பெரியவர் ஒருவர் தினந்தோறும் கோயில் சென்று மெய்ம்மறந்து கடவுளைத் துதிப்பர். வேதாந்தம் பயின்று சிறந்து விளங்கிய பண்டிதரொருவர் அவரைக் கண்டு, “முட்டாள்! கோயில் போவது, குளிப்பது, முழுக்காடுவது இதனால் கடவுளைக் கண்டுவிட முடியுமானால் எத்தனை பேர் கண்டிருக்கவேண்டியது” என்று பரிகாஸம் செய்தார். பெரியவர், அப்பண்டிதனுடைய மொழிகளைக் கேட்டுச் சிறிதும் வருந்தவில்லை. கொஞ்ச நாளைக்கெல்லாம், பண்டிதர் வீட்டுக் குழந்தைக்கு உடம்பு அசௌகர்யமாய், எல்லா வயித்தியர்களும் கைவிட்டனர்.

அப்பொழுது பண்டிதர் தமது மனதை அடக்கமுடியாமல் அநேக தெய்வங்களுக்கு எடுத்து முடியும்படியாகச் செய்தார். அப்பொழுதும் குழந்தையின் உடம்பு ஸ்வஸ்தமடையவில்லை; மூடியகண் மூடிய வண்ணமாகவே இருந்தது. வீட்டுப் பெண்டிர்கள் முற்சொன்ன பெரியவரைத் தருவித்து விபூதி போடும்படி வேண்டிக்கொண்டனர். ஆயினும் வேதாந்த பித்துப்பிடித்த பண்டிதன், அதற் கிணங்காது, கடைசியாகக் கட்டாயப்படுத்தப்பட்டுத் தருவித்தான். பெரியவர் வந்தார். அவரை வேதாந்தியார் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. ஆயினும், அவர் குழந்தையைப்பார்த்து ‘அப்பா’ என்றழைத்ததும் குழந்தை தலையை யசைக்க வீடு முழுதும் எல்லார்க்கும் உடம்பில் மயிர்க்கூச்சிட்டது. வேதாந்தியார்மாத்திரம்வெறுப்புடனிருந்தார். விபூதியை எடுத்து மந்திரித்துக் குழந்தையின் நெற்றியிலும் மார்பிலும் கிழவர் ஊதினார். அக்குழந்தை கண்ணை விழித்துப் பார்த்தது. உடனே அவர் அக்குழந்தையைத் தடவிக்கொடுத்து “எல்லாம் நல்லதே ஆகட்டும்; உலகத்தில் ஸுகமே நிலைக்கட்டும். கடவுள் அருளால் நன்மையே உண்டாகு” மென்று பண்டிதரிடம் சொல்லி விட்டுப் புறப்பட்டுப்போனார். அவரது சுகந்தத்தையும் பெருமையையும் கண்டாராயினும், வேதாந்தியாரது வீம்பு அவற்றை மதிக்கவில்லை. குழந்தைக்கு அன்று தேஹம் சற்றுச் சௌக்கியமடைந்தது. வேதாந்தியார் இது காகதாளீய நியாயம் என்று சிரித்தார். இவ்வேதாந்திபோல் உலகத்தில் பலர் உண்டு. ஒவ்வொருவரும் அனுபவமில்லாவிடினும், எல்லா முணர்ந்தவர்போல் வேஷம்போடுவர். பிறரைத் தூறேற்றுவதும் பரிகஸிப்பதுமே அவர் வேலை. இவர்களைக் கற்றறிமோழைகளென்று நாமகரணமிடாது வேறெவ்வகையாக அழைப்பது என்பது யாரால் நிச்சயிக்க முடியும்?



விவேக போதினி

தொகுதி. 9] நளஹு ஆடிமீ [பகுதி. 2

# ஸ்வதர்மம்

## RELIGIOUS DUTIES

இதுவரையில் கர்மம் என்ற சொல்லின் மூன்றும் பொருளாகிய முன் செய்துள்ள செயலின் பயன் என்ற பொருள் எடுத்து விவரிக்கப்பட்டது. இனி கர்மம் என்ற சொல்லின் இரண்டாம் பொருளான வேதவிதிப்படி ஒவ்வொருவனுக்கும் ஏற்பட்டுள்ள ஸ்வதர்மம் என்பதை இங்கு எடுத்து விவரிக்கப் புகுவோம். இதையே ஸ்வகர்மம் என்றும் சாஸ்திரங்களில் எடுத்துக் கூறப்படும். இந்தப் பொருளின் சிறப்பையே ஆதாரமாகக் கொண்டது ஸ்ரீமத் பகவத்கீதை. இப்பொருள் நுட்பம் உணராவிடில், பகவத்கீதையே உள்ளபடி விளங்காது.

தர்மம் இரண்டுவிதம்: ஸாமாந்யம் என்றும் விசேஷம் என்றும். இதில் ஸாமாந்யம் எல்லோருக்கும் பொதுவாக உள்ளவை. வருத்தாமை, பொய்யுறையாமை, திருடாமை, பிறன்மனைவியை விரும்பாமை, கிடைத்ததைக்கொண்டு திருப்தியடைதல்முதலியவை போன்ற இவை பெரும்பாலும் மனதைப் பற்றியவையாகவே இருக்கும். விசேஷமோ, ஜபம், தபம், ஆசாரம், சாஸ்திரீய கர்மானுஷ்டானம்போன்ற ஒவ்வொருவனுக்கும் வெவ்வேறு விதமாகச் சிறப்பாகவே உள்ளவை: இவை பொதுவாக மனம், வாக்கு, காயம் மூன்றையும் பற்றியவையாக விருக்கும். இவைகளில் பல, வைதிக மதத்திற்கே சிறப்பானவை: வேறு மதங்களிலிருக்க இடமே இல்லை. இதுபற்றிப் பலர் ஸாமாந்ய தர்மம் மாத்திரம் ஒருவனிடம் இருந்தால் போதும், விசேஷ தர்மம் வேண்டியதில்லை என்று குதர்க்கம் பேசுவர். ஸாமாந்ய தர்மம் விசேஷ தர்மம் நிலைப்பதற்கே ஒழிய, தனியாக அவைகளுக்குப் பலமே இல்லை: ஆதலால் விசேஷ தர்மம் இருக்கும் ஒருவனிடம் ஸாமாந்ய தர்மம் இருந்தே தீரும். அப்படி இல்லாததுபோலக் காணப்படும் ஆசாரக் கள்ளர்களிடம், அவர் பின்பற்றும் விசேஷ தர்மம் நிலைத்திராது என்பதே சாஸ்திர நுட்பம். உதாரணமாக, பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் சொற்படி நடக்கவேண்டும் என்பது மாணாக்கர்கள் பள்ளிவேலைக்காரர்கள் எல்லோருக்கும் பொதுவான தர்மம். ஆனால் பாடத்தைக் கருத்துடன் படிக்க வேண்டுமென்பது மாணாக்கர்கள் விசேஷ தர்மம். உபாத்தியாயர் சொற்படி மாத்திரம் நடந்து அவருக்கு ஊழியம் மாத்திரம் செய்தாற்போதும், பாடம் படிக்கவேண்டியதே இல்லை என்று கூறுவது போன்றதுதான், நன்னடக்கை மாத்திரம் இருந்தால்போதும், ஒருவனுக்கு ஸ்வதர்மானுஷ்டானம் வேண்டியதில்லைஎன்பதும். ஆகவேஸாமாந்யதர்மங்கூட விசேஷ தர்மத்தின்பொருட்டே யாதலால், நமது சாஸ்திரங்களில் கர்மா என்னும் சொல்லுக்குப் பொதுவாக இரண்டுவித தர்மமும் பொருளாயினும், பெரும்பாலும் முக்கரணத் தொழிலாகவிருக்கும் ஒவ்வொருவனுக்கும் சிறப்பாக ஏற்பட்டுள்ள விசேஷவைதிக சாஸ்திரீய தர்மங்களே முக்யமானபொருள்.

பொதுவாக விசேஷ தர்மங்களான ஸ்வகர்மங்களை ஒருவன் அனுஷ்டித்துவந்தால், மனச் சஞ்சலம் வரவரக் குறைந்து சாஸ்திரீய ஸந்மார்க்கப் பழக்கம் அவனுக்குப் பலத்துக்கொண்டுவந்து, கர்ம மறுபிறப்பு விதியில் அழுத்தும் நான்கு விதமான கர்ம பந்தம் தளர்ந்துகொண்டே வரும். இது பற்றித்தான் இந்த ஸ்வகர்மாக்கள் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ளன. இக்காலத்தில் ஒவ்வொருவனுக்கும் வயிற்றுப்பிழைப்பிற்கு ஏற்பட்டுவிடும் தொழிலைப் பலர் சாஸ்திரீய ஸ்வகர்மா எனக்கருதி கீதாசாஸ்திரத்தையே தலைகீழாகப் படித்துக் குழம்புகின்றனர். மற்றும் சிலர், ஒவ்வொருவன்

நிலையில் பொது நன்மைக்குத் தக்கதாகவும் தன்னால் செய்யக்கூடியதாகவும் அவனுக்குக் காணப்படும் கர்மாக்கள் எல்லாம் ஸ்வகர்மா என்றுகொண்டு ராஜத்துரோகம், கொலைபுரிதல் முதலியவைகளைக் கூசாது செய்து கீதையை ஆதாரமாகக்காட்டிக் குதர்க்கம் செய்கின்றனர். இப்படிப்பட்ட கர்மாக்களெல்லாம் ஸ்வகர்மாக்கள் அல்ல என்பது அவைகள் பலனான மனச்சஞ்சலம், பந்தம் பலப்படுதல் முதலியவையாலும், சாஸ்திரங்களில் குறிக்கப்படாமையாலும், நன்குவிளங்கும். இக்காலத்தவர்கள் ஸ்வகர்மாவாகக் கருதும் தொழில்கள் மூலமாக வைதிகவழியை அணுகவேமுடியாது; அதை பகவான் கூறுவதுபோல் ஈச்வர பூஜையாக எப்படிச்செய்யமுடியும்? ஆகவே, ஒருவன் தன் தொழில்களுள் எவ்விதத் தொழிலைச்சாஸ்திரங்களில் கூறியபடி, பலன் தோற்றம் ஏற்படாது, கடவுள் வழிபாடாகச் செய்ய முடியுமோ, அவைகளே அவனுக்கு ஸ்வகர்மாக்கள்.

இந்த ஸ்வகர்மாக்கள், ஒவ்வொருவன் ஜாதி பேதமாகிய வர்ணாச்ரமங்களைப் பொருத்தவை. இவையில்லா ஜனங்களுக்கு ஸ்வகர்மா என்பதற்கு ஏற்ற பொருளே இல்லை. ஆகவே, வைதிக தர்மம் தவிர மற்றைய மதங்களில் இதற்குப் பொருளே இல்லை. அவர்களிடம் காணப்படும் கடவுள் வழிபாட்டிற்குப் பூர்வாங்கமான தொழில்கூட வெறும் உடலை அலங்கரித்தல் முதலிய லௌகிகத் தொழிலாக, அவர்கள் வழிபாடே வெறும் போலி பக்தியாகவே முடியும். ஸ்வகர்மா உடைய வைதிக மதத்தானுக்கோ அவன் லௌகிகத் தொழிலான உண்ணுதல் முதலியவைகள்கூட ஸ்வகர்மத்தில் சேர்ந்து கடவுள் வழிபாடாகி விடும். வர்ணாச்ரம தர்மங்களைப்பற்றிய ஸ்வகர்ம விஷயங்களைப் பின்னர் விவரமாக எடுத்து விவரிப்போம். இங்கு பொதுவாக வைதிக மதத்தார் ஸ்வகர்மாக்களை எடுத்துக்காட்டி அவைகளால் ஏற்றமான பிறவி ஏற்படும் விஷயக் குறிப்புடன் இதை முடிப்போம்.

முன்னரே இந்த ஸ்வகர்மாக்கள், நித்ய, நைமித்திக, காம்யம் என மூன்று வகைப்படும் என்று கூறியுள்ளோம். இவைகள் எல்லாவற்றையும் சாஸ்திரத்தில் காட்டியுள்ள பலன்களில் கருத்தை வைத்துக் கலங்காது, சாஸ்திர விதிக்குக் கீழ்ப்படிதல் அவைகளை நமது அபிவிருத்திக்காக கடவுள் ஏற்படுத்தியுள்ளார், அவை ஈச்வரனது வழிபாடு, என்ற நிஷ்காம்யக்கருத்துடன் அனுஷ்டித்தால், அவைகள் எல்லாம் மோக்ஷ ஸாதனமான சித்த சுத்தியைத் தரும்: அப்படியில்லாமல், பலன்களில் இச்சைவைத்து அவைகளை நடத்தினால் பரலோக ஸுகங்கள் ஏற்படும். அவைகளுள் காம்ய கர்மாக்கள் பெரிய ஸுக ஆசையுடனாவது, அல்லது ஏற்படக்கூடும் துக்க நிவர்த்தியையாவது முன்னிட்டுச் செய்யும் ப்ரயத்தனமாக விருக்கும். உலகில் ஏற்படும் துக்கம் பல காரணங்களால் உண்டாகலாம். அவையாவன: ப்ராரப்த கர்மா, அத்யுத்கட கர்மா, அவிஹிதா நிஷித்தகர்மா, உபேக்ஷித கர்மா, நமது பூர்வ ஜன்ம பந்துக்கள் கர்மாக்கள் செய்யாமை ஆகிய இவைகளே. இவைகளில் முன்னிரண்டும், என்ன தடுத்தும் நிற்கா. கடைசியிலுள்ளவை சிலகாம்யகர்மாக்களாலும் ஹோமங்களாலும் தடைபட்டுவிடும். இடையிலுள்ள இரண்டும் லௌகிக முயற்சியான வைத்யம் பார்த்தல், எதிர்ப்பழக்கம் செய்தல் முதலியவைகளால் தடைபடும். ஸாதாரணர்களான நமக்கு வரும் துக்கம் இன்ன காரணத்தால் வருவதென்று உணர முடியாததாலும், விதிவழி வரும் துயரம் ஸரிவரப் பகுத்துணர முடியாததாலும், எல்லாவற்றையும் நீக்க சாஸ்திரம் முயல இடங்கொடுத்துள்ளது சாஸ்திரீய வழியில். துக்கம் தடைபட்டு நின்றாலும் நில்லாவிடினும் சாஸ்திரீய கர்மானுஷ்டான ஸுவாஸனை ஏற்படுவதே பெரிய காரியம் என்றே சாஸ்திரம் புருஷ முயற்சியை ஸ்வகர்மா வழியில் தூண்டுகிறது.

ப்ராரப்த கர்மா அதாவது விதி என்பதனால் ஏற்படும் துயரம் ஒழிந்த மற்றவைகளைத் தடுத்து வரவர மனதுள் புதிய துர்வாஸனைகள் பதிய இடங்கொடாதிருப்பதற்கே சாஸ்திரங்கள் நித்ய நைமித்திக் கர்மாக்களை ஒருவன் ஜாதிக்கு ஏற்ப விதித்துள்ளன. இவைகளை, ஒருவன் விடாது செய்து கொண்டு சாஸ்திரீய வழியில் வயிறு வளர்த்



துக்கொண்டு வருவானாகில், அவிஹிதா நிஷித்தம் முதலிய இடையிலும் கடையிலுமுள்ள காரணங்களால் ஏற்படும் துயரம் நீங்கிவிடும், அவைகள் ஏற்படுவதற்கு வேண்டிய கர்ம மனோநிலைகளுக்கே அவகாசம் இல்லாமல் போய்விடுவதால். ஆகவே, இப்படிக் கர்மாவை அனுஷ்டிக்கும் வைதிக மதத்தவனுக்கு ப்ராரப்த துக்கந்தான் மிஞ்சி நிற்கும். அதை நீக்க இவன் முயற்சிக்கவேண்டியதில்லை. அதுவருங்கால் கர்மானுஷ்டானத்தால் சுத்தப்பட்டுக்கொண்டு வரும் மனத்தை உடையவனை, பாமரநிலையில் அது தாக்குவதுபோலத் தாக்கமுடியாமல் போக, அந்த துக்கங்கூட வலிமையில் குறைந்துவிடும். ஆதலால் ஸ்வகர்மானுஷ்டானம் செய்பவன் ஒருவன்தான், துக்கநீக்க முயற்சிசெய்து கலங்காதிருப்பவன். மற்றையவர்கள் எல்லாம் என்ன துக்கம் வருமோ என்ற ஏக்கத்துடன் பற்பல முயற்சிசெய்து 'நமது முயற்சி பலிக்குமோ' என்று மனதைப் புண்படுத்திக்கொண்டு துக்கத்துக்கு முடிவில் இரையாகி, வர வர அதோகதிக்கு இறங்கவேண்டியதுதான். இப்படிக் கீழேயே இருந்துவிடாது விவேகவைதிகர்களைக் கைதூக்கிவிட நித்ய நைமித்திக கர்ம ஒழுங்கு ஈச்வரனால் வேதத்தில் வெளியிடப்பட்டது.

நைமித்திக கர்மாக்களில் முக்யமாகக் கவனிக்கவேண்டியவை ப்ராயச்சித்தம், பிதிர் கர்மா இவைகளே. ப்ராயச்சித்தம் என்ற சொல்லுக்கு நம்பிக்கையுடன் (சித்தம்) செய்யும் தவம் (ப்ராய:) என்று பொருள். சாஸ்திரங்களில் இன்ன பாபங்களுக்கு இன்ன மாற்றுக்கர்மா என்று குறிக்கப்பட்டுளதோ அதை நம்பித் தகுந்தபடி அனுஷ்டித்தலே ப்ராயச்சித்தம் எனப்படும். பாபங்களுக்கு ப்ராயச்சித்தங்கள் கிருச்ர சாந்தராயணங்களை அளவைகளாகக் கொண்டு சாஸ்திரங்கள் விதித்திருக்கும். இவை, சில நாள் வரையில் மிகுந்த ஆசாரத்துடன் இருக்கவேண்டிய ஆஹார உபவாஸ ஒழுங்குகளே. இவைகளின் விவரத்தை மனுஸ்மிருதியில் முறையே XI-ம் அத்யாயம் 211 முதல் 226 வரையிலுள்ள ச்லோகங்களில் கண்டு கொள்க. இவைகள் அனுஷ்டிக்குங்கால் தேஹத்திலுள்ள பூத அணுக்களே மாறிச் சுத்தப்பட, மனமும் பாப உணர்வாலும், பச்சாத்தாபத்தாலும் பாப வெறுப்புடன் இருக்க, பாப கர்மப் பதிவுகளான ஸஞ்சிதகர்ம வாஸனைகளே அடியோடு மாறிவிடும்: மேல் அவைகளிலுள்ள ஸஞ்சித கர்மா ப்ராரப்தமாகவே மாட்டாது. வெறும் பச்சாத்தாபம், தாம் செய்த குற்றத்தைப் பலர் அறியச்சொல்வது எல்லாம் வாஸனையை அணுகிக் கெடுக்கும் ஸாமாந்ய தர்மங்களே: எல்லோருக்கும் பொது. இவைகட்கு ஸஞ்சித பாப கர்மப்பதிவுகளை ப்ராரப்தமாக வொட்டாமல் அழிக்கும் திறனில்லை. பாப காரியங்களில், மேல் மூளைய இடம் இல்லாமல் மாத்திரம் இவை செய்து பாப வெறுப்பை வளர்க்கும். மூளையிலும் மனதிலும் பதிந்து பின்னர் துக்க ப்ராரப்தமாகக் கூடிய ஸஞ்சிதப் பதிவை ப்ராயச்சித்தங்கள்தான் தேஹ அணுமாற்ற வழி அழிக்கும் திறனுடையவை. இவை மானிடன் பிறக்கும் ஜாதிக்கு ஏற்பவும், செய்த பாபத்திற்கேற்பவும் வெவ்வேறு விதமாக இருக்கும் உணவு விஷய ஒழுங்கான விசேஷ கர்மா. உலகிலுள்ள மதங்களில் ஸாமாந்ய பச்சாத்தாபமும், நமது வைதிக மதத்தில் இதனுடன் விசேஷதர்மமான ப்ராயச்சித்தமும் காணப்படும். இந்த ப்ராயச்சித்தங்களைப் பாப உணர்வுடன் பெரியோர்களைக் கேட்டு தகுந்த பாப விஷயத்தில் செய்தால் அவைகளால்ஏற்பட்ட ஸஞ்சிதப் பதிவுகளை இவை நீக்கி மனதை ஸுவாஸனைகளால் நிறையும்படிச் செய்யும்: அப்படி இல்லாது தபஸாக, பாபத்தை நோக்காது செய்தால் சித்தசுத்தியாகிய மோக்ஷ ஸாதநமுமாகும். இக்காலத்தில் உணவு ஒழுங்கு ப்ராயச்சித்தங்கள் அனுஷ்டிப்பது அஸாத்யம். நாம் அன்னகத ப்ராண (சோற்றளவு உயிர்) நிலையி லிருப்பதால் அவற்றிற்குப் பதிலாக அவை நடைபெற வேண்டிய நாட்கள்வரை மஹாமந்திர ஜபத்தையும், தீர்த்தயாத்திரையையும் சாஸ்திரங்களே விதித்துள்ளன. இவைகளில் ஸ்நாநாதி தேஹசுத்தி ஆசாரங்களும், கர்மானுஷ்டானாதிகளும் ஸரிவர நடத்தப்படல் வேண்டும். ப்ராயச்சித்தாதிகள் செய்வதால், உள்ள பாபம் நீங்குமே ஒழிய, புதிய புண்யப்பதிவு அதிகப்படாது. தெரியாது

மனதில் மறைந்துகிடக்கும் பாபப்பதிவுகளைப் புத்திமான் ஈச்வரபக்தியாலுணர்ந்து தகுந்த ப்ராயச்சித்தங்களைத் தெரிந்தவர்களிடமிருந்து கேட்டு அனுஷ்டித்தல் வேண்டும். என்றும் பதினாறாக இருக்க பகவத் அனுக்ரஹம்பெற்ற மார்க்கண்டேயரும் பின்னர் பகவத்பக்தி வழி தம் மனத்தில் மறைந்துகிடந்த பாபங்களையுணர்ந்து தகுந்தபடி ப்ராயச் சித்தங்கள் அனுஷ்டித்தார் என்று புராணங்கள் கூறும். நாம் எதிர்பாராத கெட்ட ஸ்வப்நங்கள் நம்மனத்துள் மறைந்துகிடக்கும் கொடிய வாஸனை கர்மப் பதிவுகளின் தன்மையை வெளிப்படுத்துவதால் அந்தப் பதிவுகளை வேரறநீக்கச் சாஸ்திரங்களில் ப்ராயச்சித்தங்கள் காணப்படும். இவைகளை ஸரிவர அனுஷ்டிப்பது ஸ்வகர்மத்தைச் சேர்ந்ததே.

இனி கவனிக்கவேண்டியவை பிதிர் கர்மாக்கள். ஒரு வைதிகன் இறந்ததும், அதிர்ஷ்டஜ சரீரங்கள் ஏதாவதொன்றைப் பற்றிக்காலதேவதாவசத்திலோ, பிதிர்யான தெய்வயான மார்க்கத்திலோ இருப்பன். மரணத்திற்குப் பின் ஒருவனுக்குச் செய்ய வேண்டிய அபரக்கிரியைகள், பொதுவாக வாயவீய சரீரம்பெற்று நரகம்போய் காலதேவதைகள் வசம் 10 நாள் ஒப்புவிக்கப்படும் பாபஜீவர்கள் விஷயத்தையே முக்யமாகக் கொண்டவை. ஆயினும் அவை மற்றைய புண்ய ஜீவர்களுக்கும் தகுந்தவையாகவே அமைக்கப்பட்டுள்ளன. கருடபுராணம் இதை அர்த்தவாத ரூபமாக ஒவ்வொருநாளும் இங்கு செய்யப்படும் கர்மாக்களால் இறந்தவன் தேகம் வளருவதாகக் காட்டி இவைகளைச் செய்தே தீரவேண்டும் என்பதை வற்புறுத்துகிறது. இவைகளால் இறக்கும் ஜீவர்களுக்கு ஆகவேண்டிய பெரிய காரியம் இல்லாவிடினும், இவைகளின் சிறு பயனை உணர்ந்து, ஸந்தோஷித்து அனுக்ரஹிக்கவோ, அல்லது வந்து சேராவிடில் சபிக்கவோ, ஆற்றல்,இறந்து நரகிலுள்ள ஜீவர்களுக்குங்கூட உண்டு. அவர்களுக்குத் தமது கர்மா கர்மபலன் தேவதாஸந்நிதானம் பச்சாத்ததாபத்தால் சுத்தப்படும்மனம் இவைகளுடன்பெரியப்ராயச்சித்தமான தண்டனை அனுபவம் இவை இருப்பதால், இந்தத்திறன் அவர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது. பத்தாம் நாளுக்குப் பின்னர் செய்யப்படும் 3-நாள் கர்மாக்கள், மேல் நடக்கவேண்டிய வருஷகர்மச்சுருக்கமும், போகும் ஜீவனுக்கு ஒருவாறு ஸஹாயமாகவும் இருப்பதற்கே. அமாவாஸைத் தர்ப்பணாதிகள் சந்திர மண்டலத்தின் பின்புறமிருக்கும் பிதிர்க்களுக்கும், பிதிர் தேவதைகளுக்கும் கொடுக்கப்படும் தின ஆஹாரமாகும். அங்கு நமது பிதிர்க்கள் ஜலீய சரீரத்துடனிருந்தால் அவரிடம் போய்ச்சேர இவை செய்யப்படுபவை. வருஷ ச்ராத்தாதிகள், வருஷத்தை ஒரு நாளாக உடைய ஸ்வர்காதி புண்யலோக வாஸிகளில் நமது பிதிர்க்களிருந்தால் அவர்களிடம் போய்ச் சேரச் செய்யப்படுபவை. தேவதைகளுக்குக் காலை மார்கழிமாஸம்; மாலை ஆனிமாஸம். இவ்விரு காலங்களில் அவர்கள் ஈச்வர பூஜை செய்வர். இதை முன்னிட்டே நமது கோயில்களில் ஆருத்ரா தர்சனம்,வைகுண்ட ஏகாதசி, ஆனித் திருமஞ்சனம், மார்கழி மாதக் காலை பூஜை முதலியவை ஏற்பட்டுள்ளன. இதுபற்றியே, பகவானும் கீதையில் மாஸங்களுள் நான் மார்கழியாக உள்ளேன் என்கிறார். கிரஹணாதி புண்ய காலங்கள் தேவதைகளுக்கு விடுமுறை நாள் போன்றவை. அன்று நரக ஜீவர்களும் சற்றுக் கரையேற்றப்படுவர். அன்று தர்ப்பணாதிகள் விதிக்கப்பட்டுள்ளன. இப்படியே தீர்த்த யாத்திரா காலங்கள் விஷயமும்.இந்த பிதிர் கர்மாக்களில்.ப்ராஹ்மணர்களை வழியாகக் கொண்டு பிதிர் தேவதைகள் அவர்களை தேவ பாஷையான ஸம்ஸ்கிருதத்தால் அழைக்கப்படுவர். அவர் திவ்ய ச்ரோத்ர ஸித்தி காமரூப ஸித்திகளால் அழைப்புக்களைக்கேட்டு அவிர்பவித்து,ப்ராஹ்மணர் வழி பிண்டாதிகளை ஏற்று, நமது பிதிர்க்களிடம், எந்நிலையில் அவர் இருப்பினும் அதற்கு ஏற்றபடி, கொண்டு சேர்ப்பர். நமது பிதிர்க்கள் முக்தி பெற்றிருந்தால் கர்மாபலன் எல்லாம் நம்மிடமே திருப்பப்படும். இது ராஜாங்கத் தபால் ஒழுங்குபோன்றது. மணியார்டர் போன்றது நாம் கொடுக்கும் தர்ப்பணாதிகள். ப்ராஹ்மணர்கள், தபால் உத்யோகஸ்தர்போலவும், பிதிர்தேவதைகள் தபால்



மேலதிகாரி போலவும் உள்ளவர். இந்த ஈமக் கடன்களில் நமது முன்னோர்கள் நேராக ஆராதிக்கப்படாது, நாம் இக்கடன்களை ஸரிவரச் செய்கிறோமோ என்று மேல் பார்வையிடுவதற்கும், இவைகளை நமது முன்னோரிடம் தகுந்தபடி கொண்டுசேர்ப்பதற்கும், ஏற்பட்டுள்ள பரம ஈச்வர பக்த சிகாமணிகளான பிதிர் தேவதைகளே நேராக ஆராதிக்கப்படுபவர். ஆகவே, இவை அவர்கள் உள்ளேயும் உள்ள பரம் பொருளையே சென்றடைவதால் ஈச்வராராதன பேதமே. ஆதலால் இந்த பிதிர் கர்மாக்களை நமது முன்னோருக்கு என்று செய்வதுடன் ஈச்வர ஆராதனையாகவும் செய்து தீர்க்கவேண்டும். செய்யாது விட்டால் நம் முன்னோர்கள் கோபம், பிதிர்க்கள் சாபம், ஈசன் கட்டளையைமீறிய பாபம் இவைகளுக்கு ஆளாகி வைதிக வழியே மோக்ஷத்தை அணுக இடமில்லாமலே போய்விடும்.

இதுவரையில் கூறிவந்த ஸ்வகர்மா என்பது ஒருவன் பிறவிக்கு ஏற்ப அவன் செய்ய வேண்டியதாகச் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ள நித்ய, நைமித்திக, ப்ராயச்சித்த காம்ய கர்மாக்களே.இவை ஒழிந்த மற்றைய கடமையான வயிற்றுப் பிழைப்புத் தொழில் எல்லாம் விசேஷ தர்மமான ஸ்வகர்மாவில் சேராது ஸாமாந்ய கர்மாக்களான நன்னடக்கை ஒழுங்கில் சேரும். ஸ்வகர்மாக்கள் ஏற்பட முக்கியமாகத் தொடர்ச்சியாயும் வரவர மேலானதாயும் உள்ள மானிடப் பிறவியோ அல்லது தேவதாப் பிறவியோ ஈச்வரன் கிருபையால் ஏற்பட இடம் உண்டாகிவரும்.வாஸனைகளில் இழுபட்டு, கர்மாக்களைச் செய்து பாப புண்யங்களுக்குக் கட்டாயத்தின்பேரில் ஆளாகும் கையறு நிலை மாறிக்கொண்டே வரும். முன்காட்டப்பட்ட நான்குவிதமான க்லேச, கர்ம, விபாக, ஆசயக்கட்டுத் தளர்ந்துகொண்டேவரும்.

இப்படி வருங்கால் ஏற்படும்படியான மேல்ஜாதிப் பிறப்பால் நாம் இறுமாந்து போய், மேல்முயற்சி குன்றிவிட இடங்கொடுத்துவிடக் கூடாது. மேல்ஜாதிப்பிறப்பு மாத்திரத்தில் இறுமாப்பும், கீழ்ஜாதி வெறுப்பும் கொண்டுவிட்டால் ஸ்வகர்மானுஷ்டானம் தடைபட்டு அடுத்த ஜன்மம் மானிட ஜன்மமாக ஏற்படுவதே ஸந்தேஹத்தில் வந்து விடும். இப்படியேதான் கீழ்ஜாதிப் பிறவி வாய்ந்தவன் மேல்ஜாதியானை நோக்கிப் பொறாமைகொள்வதும் பெருங்கேடு விளைவிக்கும். ஆதலால் பிறவியில் ஏற்பட்டுள்ள வைதிகஜாதி ஸ்வகர்மானுஷ்டானம் செய்து எல்லோரும் மோக்ஷம் நோக்கி ஸரிவரப் போவதற்கே ஒழிய ஒருவரை ஒருவர் இறுமாந்தோ பொறாமையுடனோ நோக்கிச் சண்டை சச்சரவு செய்து அதோகதி அடைவதற்கல்ல.

# Kalâmoor Veeravalli Ranganatha Sastri

## களமூர் வீரவல்லி ரங்காத சாஸ்திரி

*(A life-sketch)*

முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

என்ற பொய்யாமொழி, பொய்யாதென்பது. பெரியோர்களுடைய சரிதைகளால்தான் தெரியும். கனியாத பழத்தைத் தடியாலடித்தாலும் பழுக்காது; அது வெம்பிக் கெட்டுவிடும். பக்குவமாகும்படியான செயல்களைநாடி மனத்தைக் கனியச்செய்து பெரிய காரியங்களைச் செய்வதற்கு ஊக்கமும் அடங்கா மனமும் அத்யாவசியகம். அவையிருக்குமானால் பெருமை தானாக முந்திவிடும். இது பொய்யல்ல. இவ்வாறு நடந்துவந்த களமூர் வீரவல்லி ரங்கநாத சாஸ்திரியாரது வாழ்க்கை வழி நன்கு விளக்கும்.

பால பருவம்

அவர் 1819௵ சித்தூர்க் கருகிலிருக்கும் ஒரு சிறிய கிராமத்தில் பிறந்தவர். அவர் தந்தை ஏழையானாலும், வடமொழியில் மஹா பண்டிதர்; பரமசீலர். ஏழ்மைகுலாவ ரங்கநாதர் வளர்ந்திருப்பினும், அவர் மனத்தில் சிறு நாள் முதல் தாழ்மை குலாவியதில்லை. ஆங்கிலப்படிப்பை அவர் தந்தை

யால் அவர்க்குக் கற்பிக்க முடியா விடினும், எட்டு வயதிற்குள் ஸம்ஸ்கிருதத்தில் நல்ல ஞானமூட்டி எழுதவும், படிக்கவும், பேசவும் செய்துவைத்தார். சிறுநாள்களில் சாஸ்திரியாருக்கு விளையாட்டென்றால் கொண்டாட்டம். அவர் ஏறாத மரமில்லை; குதிக்காத குளமில்லை; தாண்டாத மதிலில்லை.' அவ்வாறு பத்து வயதுவரை தான் நடந்ததாக அவர் தனது பிற்காலத்தில் பெருமையாகச் சொல்லிக் கொள்வர். நிற்க, தெருக்களில் சிறுவர்களுடன் கூடிக்குலாவிக் கூத்தாடுவதென்றால் அவர்க்கு அத்யந்த ஸந்தோஷம். துள்ளுகிற மாடு பொதி சுமக்கும் என்பதற்கு இது ஒரு அத்தாட்சி யல்லவா?

அத்ருஷ்ட ஸம்பவம்

இவ்வாறு விளையாட்டில் மனதைச்செலுத்தியவரானாலும், வீட்டில் ஜாதி நித்யகர்மானுஷ்டானங்களிலாவது, பெற்றோர் வழிபடல் முதலிய நமது ஆரியதர்மங்களையாவது சிறிதும் கைசோரவிட்டு நடந்தவரல்லர். அவரது பெருமை நம்முள் யாவருக்கும் இருக்குமெனச் சொல்ல முடியாது.

"மகன் தந்தைக் காற்று முதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்"

என்ற பெரியார் வாக்கை அவர்போல் பன்னிரண்டு வயதில் அவர்போன்ற வயதிலிருக்கும் சிறுவர்கள் செய்வரெனச் சொல்லமுடியாது. நிலம் சாவியாகிவிட்டதால், தீர்வை கட்டாமைக்காக அக்காலத்துச் சட்டப்படி இவர் தந்தை ஸிவில் ஜெயிலில் வைக்கப்பட்டிருந்தனர். அப்போது சாஸ்திரியார்க்கு வயது பன்னிரண்டு. அவ்வாறிருக்கும் பொழுது, ஒரு நாள் அவர் தாய் அழுவதைக் கண்டதும் அதன் காரணத்தைக் கேட்டார். தனது மாமனாருடைய வருஷச்சிராத்தம் இன்னுஞ் சில நாட்களுள் வருவதையும் தனது கணவன் ஜெயிலில் இருப்பதையும் தன் தாய் எண்ணி மனம் நொந்ததை அறிந்ததும், சாஸ்திரியார் தன் தந்தையை விடுவித்துவர மனத்தில் தீர்மானங் கொண்டார். உடனே சித்தூரடைந்தார். அங்கு மிஸ்டர் காஸாமேஜர் என்று பெயர்கொண்ட ஜில்லா ஜட்ஜைக் கண்டு உள்ளதைச் சொல்லித் தன் தந்தையை விடுவிக்கும்படி கேட்டார். தகுந்த ஜாமீனில்லாவிடில் விடமுடியாதென்று ஜட்ஜ் சொன்னார். "ஜாமின் வேண்டும்? என்னால் என்ன கொடுக்கமுடியும்? நான் ஜெயிலில் இருக்கிறேன்; என் தந்தையைத் தயவுசெய்து அனுப்பும்" என்று ரங்கநாதர் வேண்டினார். இதைக்கேட்டதும், மிஸ்டர் காஸாமேஜரின் மனமிளகிவிட்டது; இப்படி ஒரு சிறுவனுண்டா என்றவர் வியந்து சாஸ்திரியவர் தந்தையை விடுதலைசெய்யும்படியாக உத்தரவு பிறப்பித்தார். அவ்வுத்தரவைச்சாஸ்திரியார் தானே எடுத்துப்போய் ஜெயிலில் அதிகாரியிடம் கொடுத்துத் தந்தையை மீட்டுத் தன் பெற்றோர்களுடைய அன்பிற்குப் பாத்திர ரானார்.



களமூர் வீரவல்லி ரங்கநாத சாஸ்திரி

ஆங்கிலப் பயிற்சி

நிற்க, உத்தரவு பிறப்பித்தபோது காஸா மேஜர், சாஸ்திரியாரைஅடுத்தநாள் தன்னை வந்து காணும்படியாகச் சொல்லியிருந்தார். அவ்வாறே அவரும் வந்து கண்டார். மேஜரவர்கள் ரங்கநாதரைக் குடும்ப விஷயங்களைப்பற்றி விசாரித்து அறிந்து அவரை ஆங்கிலம் படிக்கும்படிக்குத் தூண்டித் தானே அவர்க்கு அதைக் கற்பித்தார். அதிசீக்ரத்தில் சாஸ்திரியார் அதைக் கற்பதைக் கண்டு சில மாஸமானதும் தானே நேராக இனிசொல்லிவைக்க முடியாதென்றெண்ணி மிஸ்டர் க்ரவ்ஸ் என்னும் பாதிரியாரிடம் அனுப்பி, அவரைச் சாஸ்திரியாருக்குப்



பாரிப் படிப்பைச் சொல்லிவைக்கும்படிச் செய்தார். க்ரவ்ஸும் அவர் மனைவியும் தமது புதிய சிஷனிடம் அன்பு பாராட்டிக் காலைப்பொழுது முழுதும் அவர்க்குப் பாடஞ்சொல்லித் தருவர். ஒருநாள் காலை சாஸ்திரியார் வந்ததும், அவர் முகத்தின் களையைக்கண்டு பாதிரியாரின் மனைவியார் "குழந்தாய்! நீ காலை ஏதேனும் அல்ப ஆஹாரம் எடுத்துக்கொண்டாயா?" என்று கேட்டாள். ரங்கநாதர் 'இல்லை' யென்று காட்டும்படித் தலையை யசைத்தார். இதைக் கேட்டதும் அந்த அம்மாள் பொறுக்காளாகித் தனது பால்காரனைக் கூப்பிட்டுத், தினம் அவர்க்கு வந்ததும் அரைப்படி பால்கொடுக்கும்படித் திட்டம் செய்தனர். இத்தகைய் அன்புக்குப் பாத்ரரான தனது பாக்கியத்தைச் சாஸ்திரியார் எக்காலத்திலும் மறந்தவரில்லை. கணித சாஸ்திரத்தில் அதிநுட்பமான புத்தி விசாலம் சாஸ்திரியார்க்கு இருப்பதைக் கண்டதும், அதில் மஹாப்ரவீணராகிய க்ரவ்ஸ் துரை, அவரை அதில் ஓங்கி விளங்கும்படிச் செய்தனர். இரண்டு வருஷங்கள் இவ்வாறு கழிந்ததும், காஸா மேஜர் அவர்கள் சாஸ்திரியாரது அபார புத்தியைக்கண்டு அவரைச் சென்னையில் படிக்கவைக்க எண்ணங்கொண்டார். முதலில், பெற்றோர் தம் பிள்ளையைப் பிரிய இணங்கவில்லை. ஆனால் மேஜர் அவர்களின் கட்டாயத்திற் குட்பட்டுத் தமது மகனைச் சென்னையில் படிக்க அனுப்பினர்.

பள்ளியில் படித்தல்

சென்னை பிஷப் காரி கிராமர் ஸ்கூலின் தலைவராகிய மிஸ்டர் கேர் என்பவருக்குத் தனது கையால் எழுதிய நிருபத்துடன் சாஸ்திரியாரை மேஜர் அவர்கள் சென்னைக்கு அனுப்புவித்தனர். அவரிடமும் ரங்கநாதர் நன்கு ஒழுகி தமது ஞானத்தை விருத்திசெய்தனர். சாஸ்திரியாரது குணவிசேஷங்களைக் கேர் துரையவர்கள் கண்டு அதிசயித்துத், தாம் எழுதிய பல புஸ்தகங்களிலும் நிருபங்களிலும் அவரைக் கொண்டாடாத இடமில்லை. அவரைத் தமது மாணாக்கனாக அவர் வைத்துக் கொள்ளும்படியான நிலைமையில் ரங்கநாதர் படிப்பிருக்கவில்லை; அவரை ஸ்மான நேசனாகக்கொண்டாடும்படிச்செய்துவிட்டது. சென்னையில் ரங்கநாதர் இருக்கும்போது காஸாமேஜர் அவர்கள் அவரிடம் மிகக் கவலை எடுத்து விசாரித்துக் கொண்டே யிருந்தனர்; கேர் துரைக்குச், சாஸ்திரியாருக்குவேண்டிய எவ்வகைய புத்தகங்களையும் விலையைக் கணிசியாது வாங்கிக் கொடுக்கச் சொன்னார்; ஆனால் அவருக்கே சொந்தமாக வாங்கியதாக வெளிக்காட்டாது அவர் படித்துத் திரும்பும்போது அவைகளை அவரிடம் சேர்ப்பிக்கும்படி எழுதினார். இவ்வாறு அவர் எழுதியது சாஸ்திரியார் புஸ்தகங்களைக் கேர் துரையாரதென்று எண்ணி ஜாக்கிரதையாக உபயோகிப்பதற்காகவே. 1839-ல் காஸாமேஜர் சென்னை ஸதர் திவானி அடலட்டில் (அப்பொழுது ஹைகோர்ட் என்ற பெயரில்லை) ஜட்ஜாகச் சென்னைக்கு மாற்றப்பட்டனர். அதே ஸமயம் கேர் துரையும் கல்கத்தாவுக்கு வேலையாகச் சென்றார். இதன்பின் மேஜரவர்க்குச் சாஸ்திரியாரைப் பிஷப்காரி க்ராமர் ஸ்கூலில் வைப்பதில் இஷ்டமில்லை. ஒரு முகாந்தரக் கடிதத்துடன் அவரைப் பழைய ஹைஸ்கூல்(தற்காலத்தியராஜாங்கக்கலாசாலை) தலைவராகிய பேடன் பவல் துரையிடம் அனுப்பினார். அவர் சாஸ்திரியாரைப் பள்ளியில் சேர்த்துக்கொண்டனர்; கொஞ்ச நாளாக அவரது அபாரபுத்தியையும், கணிதசாஸ்திர நிபுணத்வத்தையுங் கண்டார். அதுவே அவரை ரங்கநாதரைக் கீழ் வகுப்புக்களிற்குக் கணக்குப் பயிற்றுவைக்கும்படி உபயோகிக்கச் செய்ததும்! ரங்கநாதர் பாடஞ் சொல்லிய காலத்து, ராஜா ஸர் மாதவராயர் அவரிடங் கற்றமாணாக்கர்களில் ஒருவராவர். 1842-ல் ப்ரோபிஷியண்ட் பட்டம்பெற்று, மிக்கக் கீர்த்தியுடன் சாஸ்திரியார் தேறினார். அவர் ஒருவரே அவ்வருஷம் தேறியவர். பட்டம் பெற்றதும் தன்னிடம் அன்புகொண்டு ஏராளமாகச் செலவிட்ட மஹானாகிய மேஜரவர்களிடம் தனது தேர்ச்சியை உடனே வந்து தெரிவித்தனர். அவர் விரித்த கையுடன் அவரை அணைந்து அத்யந்த ஆநந்தமடைந்தனர். வித்யாதானஞ் செய்ததின் பெருமையை அவரல்லவா அனுபவித்தவர்?

உத்யோக முதற் பிரயத்தனம்

ரங்கநாத சாஸ்திரியார் தேர்ச்சியடைந்த

காலத்தில் சென்னை ஸர்வகலாசங்கம் ஏற்படும் ஸமயமாக இருந்தது; அதில் உபாத்யாயராக விளங்கவேண்டுமென்பதே அவரது கோரிக்கை. அப்போது மிஸ்டர் ஜார்ஜ் நார்ட்டன் தான் அந்தக் கலாசங்க ஏற்பாட்டுக் கூட்டத்தின் அத்யக்ஷராக இருந்தார். அவரும், மேஜரவரும், பவல் துரையவர்களும் சாஸ்திரியாரை, அக்காலம் ஏற்படுத்தும்படியாக உத்தேசிக்கப்பட்ட இஞ்சினியரிங் காலேஜில் கணிதபோதகராகச் சிபார்சு செய்திருந்தனர். ஆனால் மதராஸ் கவர்ன்மெண்டார் ௸ காலேஜைப்பற்றிய ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்ளாமையால் சாஸ்திரியாரது அபீஷ்டம் நிறைவேறாதாயிற்று. பவல், மேஜர் இவர்களிருவருடைய பிரயத்தனமும் சாஸ்திரியாருக்கு ஹைஸ்கூலில் வேலை கொடுக்க முடியாதாயிற்று.

இதற்குள் தந்தைக்கு உடம்பு ஸரியாக இல்லாமையால் சாஸ்திரியார் சித்தூருக்குப் போகும்படியாக நேர்ந்தது. ஏதாவது ஒரு வேலை ஸம்பாதிக்க வேண்டியதென்று சாஸ்திரியார் கவலை கொண்டார்; தன் தந்தையின் வயோதிக காலத்தில் அவருடன் இருந்து அவர்க்குச் சிச்ருஷை செய்ய வேண்டுமென்பதே அவரது பெரிய எண்ணம். உடனே மேஜர் அவர்களின் உதவியால் சித்தூர் ஸப்கோர்ட்டில் அவர்க்கு ரூ. 70 சம்பளங்கொண்ட ஹெட் கிளார்க் வேலை கிடைத்தது. இங்கு அவர்க்கு ஓய்வு வேளை அதிகமாகக் கிடைத்தபடியால், காலத்தை வீணாக்காது தெலுங்கு, ஹிந்துஸ்தானி, கன்னடம், பார்ஷியன் பாஷைகளைக் கற்க ஆரம்பித்து அவற்றில் நல்ல ஞானமும் அடைந்தார். தாமிருந்த கோர்ட் தஸ்தாவேஜுகளை எல்லாம், சாஸ்திரியார் தாமே பாஷாந்தரப் படுத்துவர்; இதை ஜட்ஜிகளில் கொண்டாடாதவரில்லை.

உத்யோக ஏற்றம்

நிற்க, அவர் தந்தை இறந்ததும் சாஸ்திரியார்க்குச் சித்தூரை விட்டு விட்டுச் சென்னை ஸதர் கோர்ட்டில் வேலைக்கமர பெரும் அவா உண்டாகியது. அதற் கேற்ப அப்போது அக்கோர்ட்டில் சீப் இண்டர்பிரட்டர் வேலை காலியாகவிருந்தது. அவ்வேலைக்கு வெளியிலிருந்து விண்ணப்பக்காரர்க ளிடமிருந்து ஆளைத் தேர்ந்தெடுப்பதாக ஜட்ஜ்கள் நிச்சயித்திருந்தனர். காஸா மேஜரவர்களும் ரங்கநாதரை அதற்கு ஒரு மனுகொடுக்கும்படி எழுதியிருந்தனர். மனுதார்கள் எல்லாம் ஓரே நாளில் அழைக்கப்பட்டுப் பாஷைகளைப் பேசுந் திறமறியும் பொருட்டுப் பரீட்சிக்கப்பட்டதும், சாஸ்திரியார் தமிழ், தெலுங்கு, மராதி, கன்னடம், ஹிந்துஸ்தானி, பார்ஷியன், ஆங்கிலம் முதலிய பாஷைகளில் தேர்ச்சியோடு விளங்க, சீப் இண்டர்பிரட்டர் வேலைக்குகந்தவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இப்போதிய அல்ப சம்பளத்துடன் அக்காலத்து சீப் இண்டர்ப்ரடர்கள் விளங்கவில்லை. அப்பொழுது கமிஷன் மூலமாக அவர்க்குச் சம்பளம் கொடுக்கப்பட்டு வந்தது; சராசரி மாதம் ரூ 2500 அல்லது ரூ 2000க்குக் குறையாமல் வரும். இவர் இங்கிலையிலிருக்கும்போது இவரது குணாதிசயங்களை ஜட்ஜிகளெல்லோரும் கண்டு அவரிடம் மரியாதையுடன் விளங்கினர். ஒருநாள் ப்ரஞ்சிபாஷையில் பாவங்களை வெளியிடக்கூடிய இண்டர்பிரட்டர் ஒருவர் வேண்டுமென்று ஜட்ஜ் கேட்டபோது, 'பயப்படவேண்டாம்; நானே உமக்கு உதவி செய்வேன்' என்ற பதில் அவர்க்கு அதிசயத்தை யுண்டாக்கியது. மேலும் ரங்கநாதர் பேசிய ப்ரஞ்ச் பாஷையைக் கேட்டதும், ஜட்ஜிகள் ஆச்சரியத்துடன் விளங்கினார்கள். அவர்கள் அவரிடம் கொண்டபெரும்அபிப்பிராயத்திற்கு, ஹிந்து சட்ட வ்யவஹார நுட்பவிஷயங்களைப்பற்றி இவரைக்கேளாது அவர்களொதும் செய்யார் என்பதே அத்தாட்சி. அவர்களின் உதவியால் சாஸ்திரியார் சென்னை சர்வகலா சங்கம் ஏற்பட்ட அந்தக் காலத்து ௸ சங்கத்தினங்கத்தினராக எடுக்கப்பட்டனர்.

பெருமையில் முந்தல்

1859௵ ஸர் சார்லஸ் ட்ரவிலென் நமது ராஜதானிக் கவர்னராகச் சென்னையில்விஜயமானபோது ஜட்ஜ்களில் ஒருவராகிய ஸர் கிருஸ்டேபர் ராலின்ஸன் என்பவர் கனம் கவர்னர் அவர்களிடம் "இவ்விந்திய நாட்டின்கண் விசாலபாவத்துடன் விளங்கும்நாகரீகத்திற் சிறந்த பெரியவர் இவர்தான்" என்று முகாந்திரமாகப் பேசி ரங்கநாத சாஸ்திரியாரைத் தெரிவித்தனர். வரவரப் படிப்பின்



பெருமையால் அவர்க்கும் கவர்னருக்கும் மனப்பொருத்தம் உண்டாகிவிட்டது. இவ்வாறிருக்க, 1859-௵ சென்னை ஸ்மால் காஸ்கோர்ட்டில் பிரதான ஜட்ஜ்வேலை காலியாக, பலபேர் மறுத்ததையும் கவனியாது, அதில் சாஸ்திரியார் விளங்கும்படியாகச் செய்தனர். அவ்வேலையில் அவர் நடந்த விதத்தைக் கண்டு, புகழாதவரில்லை. 1863 ௵ ௸ வேலை சாஸ்திரியார்க்குக் காயமாக்கப்பட்டது. இப்பதவியி லிருக்கும்போது ஓய்வுகால மதிகமாக ஏற்பட்டதால் அராபிக் பாஷையைப் படிக்க ஆரம்பித்து அதில் நல்ல ஞானமுண்டாக்கிக் கொண்டனர். அவரது ஞானமும், ஒழுக்கமும், நன்னடக்கையும், அவரிடம் ஒவ்வொரு கவர்னரும் அன்பு பாராட்டும்படிச் செய்தன. பக்கிங்ஹாம் பிரபு வந்த காலத்து அவரது பாஷாஞானத்தைக் கண்டு வியந்து ஜர்மன் பாஷையையும் கற்கும்படிச் செய்தனர்.

தேகவியோகம்

1867௵ சாஸ்திரியார் பச்சையப்பமுதலியார் தருமங்களின் டிரஸ்டியாகஏற்படுத்தப் பட்டனர். பத்து வருஷங்கள் கடந்த பிறகு 1877-ம்௵ டெல்ஹிராஜாங்கஸபை கூடியபோது இவர் வரவேற்கப்பட்டு ஒரு தங்கப் பதக்கமும், நம்பிக்கை நற்சாட்சிப்பத்திரமும் அளிக்கப்பட்டனர். 1880-ம் ௵ அவர் வேலையை ராஜீநாமா செய்தார். அவர் செய்த வேலையை உத்தேசித்துக் கவர்ன்மெண்டார் அவரைச் சட்ட சபையின் பொது ஜன அங்கத்தினராக நியமித்தனர். அவ்வருஷமே ஸர் ஸாலர் ஜங் பஹதூர் மாதம் ரூ 2500 சம்பளத்துடன் தனது கார்யஸ்தராகும்படி வேண்டினார். ஆனால், கடைசிக் காலத்தைப் படிப்பில் செலவிட்டு விளங்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அதைச் சாஸ்திரியார் மறுத்தார்; தமது பௌத்ரர்களை விருத்திக்குக் கொண்டுவரவென்றும் இருக்கலாம். அக்கோரிக்கையை நிறைவேற்றுமுன் 1881௵ ஜூலைமீ 5௳ அவர் தேகவியோகமானார்.

சாஸ்திரியாரது பெருமை

சாஸ்திரியார் உருவில் திடகாத்ரமும் கட்டமைந்த சரீரமும் உடையவர்; வெகு கண்டிப்பான பழக்க வழக்கங்களை அப்பியாஸத்தில் கொண்டுவந்தவர். அவர்க்கு ஸ்வதேசத் தேகப்பயிற்சியில் மிக்க நம்பிக்கை யுண்டு. அதையே அவர் அப்யஸித்து, காலையில் 4-மணிமுதல் 5மணிவரையில் தவறாமல்தேகப் பயிற்சி செய்வர்; பின் குதிரை ஸவாரி செய்வர்; அவர் வீட்டிற்குத் திரும்புவதற்கு மணி 7 ஆகும்; ஸாயங்காலங்களில் வெகு தூரம் நடப்பர்—இவ்வாறவர் தேகத்தைக் கெடாது போஷித்தார். மற்றும், படிப்பு விஷயத்திலும் ஒவ்வொரு நாளும் தவறாது ஆறு அல்லது ஏழு மணி நேரம் படிப்பார். சாகும்பொழுதும் புஸ்தக பாணியாகவே உயிரை விட்டனர். எதைப் படிப்பினும் ஸந்தேஹமறப் படிப்பதே அவர் வேலை. அவர் ஹிந்துஸ்தானி பேசுவதைக் கேட்டு மூல்விகளே மயங்குவர்; அவர் ப்ரஞ்சில் பேசிய பாஷையின் சுத்தத்தைப் பிரெஞ்சுக்காரர்களே கொண்டாடுவர்; அராபிக் பாஷையிலோ மஹா கவிகளின் வாக்கைச் சரமாரியாகக் கொட்டுவர்; மற்றுச்சொந்த பாஷையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அவர்க்குத் தெரிந்த பாஷைகள் பதினான்கு: தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், மராதி, ஹிந்துஸ்தானி, பார்ஷியன், அராபிக்; ஸம்ஸ்க்ருதம், லத்தீன், க்ரீக், பிரெஞ்ச், ஜெர்மன்; பதினைந்தாவதாக ஹீப்ரு பாஷையைக் கற்பதற்குள் அவர் இவ்வுலகத்தை விடவேண்டிய தாயிற்று. பல பாஷைகளின் பெருமையையும் அழகையும் அனுபவிக்க வேண்டுமென்றால் அவரிடம் சேர்வதே தகும். அவர் வாய்வரும் மொழிக ளெல்லாம் கர்ணாம்ருதமாகவே இருக்கும்.

மற்று ஆத்ம விசாரத்திலோ, அவர் தீர்ந்த அபிப்பிராயத்துட னிருந்தவர்; பரம வேதாந்தி; பழக்க வழக்கங்களில் முற்றும் ஹிந்து; தனது பாவங்களைவெளியிடுவதிலோ வெகு கண்டிப்பு; ஒருவரிடமும் அடங்கும் ஸ்வபாவமே கிடையாது. எவ்வகுப்பினராயினும்அவர்க்கு ஒன்றே; வர்ண பேதமென்பதே கிடையாது. அவர் பேசும் பேச்சோ எவ்வளவு வேண்டுமோ அவ்வளவே; ஒருவரைப் பற்றியும் தவறான வார்த்தை சொல்பவரல்ல. தனதுமதத்தைப்பற்றியாவது நாட்டைப்பற்

றியாவதுஅறியாது பிறர்யோசியாதுதவறான மொழிகள் கூறினால்,அவரை லேசில்விடார். அவரைக் கண்டால் எவரும் ஸிம்ஹத்தைக் கண்டாற்போல் நடுங்குவர். ஒரு பார்ப்பனச் சிறுவனைக் கிருஸ்தவப்பாதிரி மதாந்தரப்படுத்த, அதைத் தடுத்து மீட்பிக்க அவருழைத்ததை யாரறியார்?

நடவடிக்கையில் அவரை நெருப்பென்றே சொல்லவேண்டும். டம்பமென்பதே அவரறியார். ஏத்தமேறுவர்; நீர்ப்பாய்ச்சுவர்; தோட்டமெல்லாம் செப்பனிடுவர்; ஆயினுங் கீழ்மையான காரியம் ஒன்றும் செய்யார். தீவட்டித் திருடர்கள் மடக்கியபோது, தான் ஒரு கோலைவைத்துச் சுழற்றி அவர்களுடன் கலந்து கோல்வாங்கி அவரை ஓட்டினார் என்பது வதந்தியாயினும் அவரது பெருமையையே வெளியிடும்.

பின்னுரை

அவர் படிப்பு விஷயத்திலும், உழைப்பு விஷயத்திலும், ஒழுக்க விஷயத்திலும், ஆத்ம விஷயத்திலும், நன்கு விளங்கியவர். மற்றுப் பூஜ்யமான நிலையிலு மிருந்தவர். பின்னும்அவரே, முதல்முதல் "ப்ரொபிஷ்யண்ட்" பட்டம் பெற்றவர்; அவரே சர்வகலாசங்கத்தின்முதன்முதல்இந்தியஅங்கத்தினர்; அவரே சென்னை ஸ்மால்காஸ் கோர்ட்டில் முதன்முதல் இந்தியப்பிரதான ஜட்ஜியாக வந்தவர்; அவரே இந்தியருள், அதுவும் இவ்விராஜதானியில்,முதன்முதல் பதினாங்கு பாஷையில் பாண்டித்யமடைந்தவர்; அவரே ஐரோப்பியராலும் நம்மவராலும் ஸிம்ஹம்போலப் பாவிக்கப்பட்டுப்பிரபலமாகப் புகழப்பட்டவர்; அவரே முயற்சியைக்கொண்டு முதன்மை பெற்றவர்; அவரைக் கடிகாரமென்று சொல்வது அக்கால வழக்கம்; அதாவது அவர் செய்யும் வேலையைக் கொண்டு மணியைச் சொல்லும்படியான அளவுடன் தனது காரியங்களை நடத்துபவரென்பதே. அத்தகைய வாழ்க்கையைப் பின்பற்றி நடப்பது எக்காலுமெவ்விடத்து மெதற்கேனும் மெவர்க்கும் போகாது! இது ஸத்யம்.

தெய்வத்தா லாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

# கடவுள்

## GOD

கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில். எவற்றையுங் கண்ணெதிரிற் காட்டியபிறகே உண்டென்று ஒத்துக்கொள்ளும் இக்காலத்திற் கண்ணாற் பார்க்க முடியாத ஒருபொருளைக் குறித்துச் சொல்லுவது பொருத்தமாகாதாயினும், இது அத்தன்மைத்தான விஷயங்களுள் ஒன்றாகாமையானும், கடவுள் ஒருவர் உண்டென்பதே நமது கொள்கையாகையாலும், இங்கு அக்கடவுளைப்பற்றிச் சிறிது கூறுவோம்.

'கடவுள்' கடத்தல் என்னும் பொருளைத் தரக்கூடிய விகுதிபெற்ற தொழிற்பெயராம். எனவே, ஆறறிவுடைய மாந்தர்களது மனத்தைக் கடந்தவர்—அதாவது மனத்தால் அறியப் படாதவர்—என்று எல்லோராலும் புகழ்ந் துரைக்கப்பெற்ற சர்வல்லமையுள்ள கருணா நிதியாகிய பரம்பொருள் எனப் பொருள்படும்.

இவ்விஷயத்தை, முதலிற் கடவுள் ஒருவர் உண்டென்பதை உதாரணமுகத்தாற் காட்டி விளக்கிப், பின்னர் அவரது குணங்களையுஞ் செய்கைகளையுங் கூறி, அதன்பின் அவருக்கு நாம் செலுத்தவேண்டிய கடமைகளைக் கூறி முடிப்போம்.

### கடவுள் உண்டெனல்

பல்வேறு கட்டிடங்களைப் பார்த்தவர்கள் இக்கட்டிடங்களைக் கட்டிய தச்சன் ஒருவனும், பலவகைப்பட்ட ஆபரணங்களைக்கண்டோர் இவ்வாபரணங்களைச் செய்த தட்டான் ஒருவனும், பலவித ஆடைகளைக் கண்டோர் இவ்வாடைகளை நெய்த கைக்கோளன் ஒருவனும் இருந்திருக்க வேண்டுமென்று நிச்சயித்தலாலும், எழுதுபவனின்றித் தானே சித்திரம் அமையாதாகலாலும், ஆட்டுபவனின்றி உயிரில்லாதபாவை தானே ஆடாதாகலாலும், மீட்டுபவர் (வாசிப்பவர்) இன்றித், தானே வீணைமுதலிய வாத்தியங்கள் இனிமையான கானத்தைத் தாராதலாலும், காற்றின் உருவம் ஒருவராலும் பார்க்க முடியாதாயினும் மர முதலியன அசைதலாற் காற்று உண்டென்று தீர்மானித்தலாலும், நேரிற் பார்க்க முடியாவிடினும் புகையைக்கண்டு அப்புகை வரும் இடத்திற்குக் கீழே நெருப்பிருக்க வேண்டுமென ஊகித்தலாலும், நல்ல மணத்தை முகர்வதனால், பக்கத்தில் அம்மணம் வீசும் நல்ல மணமுடைய புஷ்பங்களிருக்க வேண்டுமெனத் தீர்மானித்தலாலும், இவ்வண்டங்களைக் காணும் நமக்கு இவ்வண்டங்களைச் சிருஷ்டித்தவரும் சராசரங்களை ஆட்டிவைப்பவருமாகிய கடவுள் ஒருவர் இருக்கவேண்டு மென்பது நன்கு விளங்குகின்றதல்லவா?

நிற்க, இவ்வண்ட முதலியன இயற்கைப் பொருள்; இவைகள் இருப்பதுகொண்டு மட்டில் இவற்றிற்காதாரமான கடவுள் ஒருவர் இருக்கவேண்டுவது அவசியமா என்று, சூரியனிடம் ஒளியில்லை என்று சொல்லுபவர் போலவும்,எதிரிலே கிடக்குங் கை தவறிய பொருளைப் பார்க்கத்தெரியாது துன்பத்தை அனுபவிப்பவர் போலவும், கேட்குஞ் சிலருக்கு நாம் சமாதானஞ் சொல்ல வேண்டிய தவசியமாயினும், மேகமின்றி மழையும், நிலமின்றி விளைவும், பசுவின்றிக் கன்றும், நெருப்பின்றி ஒளியும், அரசனின்றிக் காவலும், தாயின்றிப் பிள்ளையும் இல்லையென்பதுபோலக் கடவுளின்றி இவ்வுலகமில்லை என்பது நமக்கு நிச்சயமாகையாலும், மரத்திலேறியவன் அவ்விடத்திலே, தான் நிற்பதற்கு ஆதாரமாகப் பற்றிய கொம்பை விட்டுவிடுவனென்பதும், தன் தாயை மலடியென்று சொல்லுவதும், பயிர்களைப் பூமியில்லாதனவென்று சொல்லுவதும் எவ்விதம் பொருந்தாவோ, அவ்விதமே அன்னார் கூறும் கூற்றும் பொருந்தாதென்றும், அவ்விதஞ் சொல்லுபவர்தான் இவ்வுலகிலே பிரத்தியட்சத்தில் இருந்தும் இராதவரென்றுங் கூறி மறுக்க.

இனி அக்கடவுளது குணங்களைப்பற்றிக் கூறுவாம். அற்பவித்தையைக் கற்றுச் செப்படி வித்தைகளைச் செய்து நம்மை மயக்கிச் சிறுகல்லை ஒரு நொடிப்பொழுது ஆகாயத்தே ஒரு மனிதன் நிறுத்துவானாயின், நாம் அம்மனிதனை எவ்வளவோ உயர்ந்தவனென்று புகழ்கின்றோம். இப்படியிருக்கக் கடவுளோ ஆகாயத்தை எவ்வித ஆதாரமுமின்றி மேலே நிறுத்தியிருக்கிறார். எவ்வித பாத்திரமுமின்றித் தண்ணீரை நிறைத்துவைத்தல் போல மேகங்களை ஆகாயத்திலே நிறுத்திப் பூவுலகிற்குதவியிருக்கிறார். காற்றைப் பிடித்துக் கரகத்துள்ளடைத்தல் போல ஒன்பது துவாரத்தையுடைய சரீரத்துட் பிராணவாயுவை அடக்கியிருக்கிறார். குளிர் முதலியவற்றால் உடலுக்கு ஏதேனும் தொந்தரவு நேரிடில், மனிதர்கள் போர்வை முதலியவற்றாற் காத்துக்கொள்ளச் சக்தியுடையவர்களென்பது கருதி மெல்லிய தோலையும், விலங்குகளுக்குக் காத்துக்கொள்ள வேறு வழியில்லாததால் அழுத்தமான மயிரடர்ந்த தோலையுங் கொடுத்திருக்கிறார். மனிதர்கள் தங்கள் எதிரிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ள ஆயுதங்களை வைத்துக்கொள்ளலாம்; விலங்குகளால் முடியாது. இது கருதியே, அவைகளுக்குக் கொம்பு, நகம், பல் முதலிய உறுப்புகளைக் கூர்மையாயும், பலமுடையனவாயும் அமைத்திருக்கிறார். இன்னும் இவை போன்ற எத்தனையோ பேருபகாரங்களைச் செய்திருக்கிறதுடன், எவ்விதம் தான் விழுந்த நிலங்களுக்கேற்றவாறு தண்ணீர் தன் குணத்தில் மாறுபாடடைகிறதோ அவ்விதமே கடவுளும், சீவகோடிகளது பக்குவாபக்குவங்களுக்கேற்ப ஒவ்வொருவருடைய மனத்திலுமிருந்து, பொன் எவ்விதம் தன்னை வைத்திருப்பவனிடமிருந்து ஒருவித பிரயோசனத்தையுமெதிர்பாராதுதான் மாத்திரம் அவனுக்குப் பிரயோசனப்பட்டு வருகிறதோ அதுபோல அவ்வப்பொழுது வேண்டுவனவற்றையுஞ் செய்து வருகிறார்.

கடமையோவெனில், "எந்நன்றிகொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற வாக்கியத்தை உணர்ந்த நாம், புல், மரம் முதலியஓரறிவுயிர்களும், விலங்கு முதலிய ஐயறிவுயிர்களும் தம்மைப் பயிர் செய்தவர்களுக்கும் வளர்த்தவர்களுக்கும் முறையே பலன்களாலும் இட்ட வேலைகளைச் செய்தலாலும் உதவுகின்றன. இவற்றை அறிந்துங்கூட எவ்விதம் நாம் அப்பேருபகாரியாகிய கடவுளுக்குப் பிரதி உபகாரஞ் செய்யாமலிருக்கக் கூடும்?

ஆகையால், கரும்பு தின்னக் கைக்கூலி கருதல்போலச் சஞ்சீவியுண்ணத் தாமதி

யாது, சிந்தா குலந்தீர்க்குஞ் செல்வம் போன்றவனும், எல்லா நலங்களையுந் தந்தாளுங்கற்பகம் போன்றவனும், தொடர்ந்த அன்பர்க்குரியவனும், அன்பிலார்க் கரியவனும், தொண்டரென்னும் பயிரைத் தழைக்கச் செய்யும் மேகம் போன்றவனும், அத்தொண்டர்களது உள்ளத்தாமரையை மலரச் செய்யுஞ் சூரியன் போன்றவனும், மும்மலங்களை வேரறுக்குஞ் சண்டமாருதம் போன்றவனும், பாவமாகிய நெருப்பை அவிக்குந் தண்ணீர் போன்றவனும், தீயோரைச் சுடும் நெருப்புப் போன்றவனும், நல்லோருக்கு நிழல் போன்றவனும் ஆகிய பரம்பொருளாகிய கடவுளை ஆசையுடன் நித்த நித்தம் மன்மொழி மெய்களால் நினைத்துத் துதித்து வணங்கி வழிபட்டுத் தீமையை யகற்றி நன்மையை யடைந்து சுகமாக வாழ்வோமாக.

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சார்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில்"

—திருவள்ளுவர்.

வேங்கடராமையர்.

# English History

## ஆங்கிலர் சரித்திரம்

### ஜூலியஸ் ஸீஸரும், ரோமர்களும்

### JULIUS CAESAR AND THE ROMANS

இடாலி தேசத்தின் முக்யப் பட்டணத்திற்கு ரோம் என்று பெயர். இந்த ஊரிலிருப்பவர்கள் புத்தியிலும், பலத்திலும் சிறந்தவர்கள். அதனால் இடாலி தேச முழுவதையும் ஜயித்துத் தாங்களே ஆண்டார்கள். பிறகு ப்ரான்ஸ், ஸ்பெயின் முதலிய தேசங்களையும் ஜயித்தார்கள்.

ப்ரான்ஸ் தேசத்திற்கு அக்காலத்தில் கால் என்று பெயர். இந்தக் கால் தேசத்தாருக்கு இங்கிலாந்திலுள்ள ப்ரித்தானியர்கள் உறவினர்கள். ரோம் நகரத்து வீரர்களிற் சிறந்தவனான ஜூலியஸ் ஸீஸர் என்பவன் கால் தேசத்தை எதிர்த்து ஜயித்தான். தம் உறவினர்களுக்கு ப்ரிடனிலுள்ள ஜனங்களும் உதவிசெய்ய வந்தனர். இதனால் காலை ஜயித்த பிறகு, இங்கிலாந்தின் மீதும் ஸீஸர் படையெடுத்தான். முதலில் அவன் ஜயிக்கவில்லை. அடுத்த வருஷம் அவன் மறுபடியும் வந்து, ப்ரித்தானியர்களைத் தோற்கடித்துத் தன் தேசத்தாருக்குக் கப்பம் கட்டும்படிச்செய்தான். ஸீஸர், தான் இங்கிலாந்தில் கண்டவைகளைப்பற்றிதன் குறிப்பில் எழுதியிருக்கிறார். அதுதான் இங்கிலாந்தைப்பற்றிய முதல் சரித்ரமாகும். இந்தப் புத்தகத்தில் தாம் கண்ட ப்ரிடன்களின் குணகுணங்களையும் அவர்களுடைய ஆட்சி முறைமைகளைப் பற்றியும் எழுதியிருக்கிறார். இப்புஸ்தகத்தினால்தான், அக்காலத்து ப்ரிடன் ஜாதியார்களைப்பற்றிக் கொஞ்சமாவது நாம் அறிகிறோம்.



ஜூலியஸ் ஸீஸர்

ஸீஸருக்குப் பிறகு பல ஸேனாதிபதிகள் பெருத்த சேனைகளுடன் வந்து இங்கிலாந்தை ஜயித்தனர். ஸ்காத்லாந்தின் கீழ்ப்பாகம் வரைக்கும் ரோமரின் ராஜ்யம் பரவியது. இப்புதிய ராஜ்யத்தைக் காண ரோமசக்ரவர்த்திகள் சிலரும் வந்தனர். இந்த ராஜ்யமானது ஸ்காத்லாந்திலிருந்த பிக்ட் ஜாதியார்களாலும், அயர்லாந்து தீவிலுள்ள ஸ்காட் ஜாதியாராலும் எதிர்க்கப்பட்டு வந்தது. இவர்கள் பலமுறை ரோமப்ரிடன்மீது படையெடுத்துச் சூறையாடினர். இவர்களைத் தடுக்கும்படி மதில்கள் ஸ்காத்லாந்தின் கீழ்ப்பாகத்தில் இருமுறை கட்டப்பட்டன. இப்பொழுதும் அவைகளின் இடிந்த சில பாகங்கள் காணப்படுகின்றன.



கிலமான ரோமன் மதில்கள்

#### வீரமுள்ள ப்ரிடன் ராணி

ரோமர்கள் ப்ரிடனைப் பிடித்த போது, தாம் வென்றவர்களை மிகவும் தயவாய் நடத்தின போதிலும், அவர்களில் சிலர் மிகவும் குரூரமாக ப்ரித்தானியர்களை நடத்தினார்கள். இதனால் ப்ரித்தானியர்கள் பல முறை கலகஞ் செய்தனர். ரோமர்கள் கடைசியில் வெற்றியடைந்த போதிலும், இம்மாதிரி கலகங்களில் இருதிறத்தாரிலும், பலர் இறந்தார்கள். ஒரு தேசத்தை ஆள்பவர்கள் தம் கீழிருப்பவர்களை அன்புடன் நடத்த வேண்டுமென்பதையும் மேற்கூறிய கலகங்கள் காட்டின.

ப்ரித்தானியர்கள் பல ஜாதிகளாகவும் பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களின் ஒரு பிரிவிற்கு ஐஸீனி என்று பெயர். (நாம் கூறும் காலத்தில் பிரித்தானிய அரசர்கள் ரோமருக்குக் கப்பம் கட்டி வந்தனர்). இவர்களது அரசன் தன் சொத்துக்களில் பாதி ரோமர்களுக்கும், மிகுதி தன் மனைவி மக்களுக்கும் உயிலெழுதி வைத்து இறந்தான். ஆசைமிகுந்த ரோமர்கள் தமக்கும் அவன் சொத்தில் பாகமிருப்பதால், தன் மக்களுக்கும் மனைவிக்கும் அவர்கள் ஒத்தாசையாயிருப்பார்களென்றே அவன் அப்படிச் செய்தது.

ஆனால் அவனிறந்த பிறகோ, இறந்த அரசனின் சொத்துமுழுவதையும் அபகரித்ததோடு ரோமர்கள் அவன் மனைவி போடிஸீயாவையும், மக்களையும் மிகவும் வருத்தி மானபங்கம் செய்தனர்.

ராணி போடிஸீயாவினால் இக்குரூர நடத்தையைப் பொறுக்க முடியவில்லை. துக்கமும் கோபமும் நிறைந்து, அவள் தன் ப்ரஜைகளை அழைத்து ரோமர்களோடு யுத்தஞ் செய்யத்தூண்டினாள். "ரோமர்களுக்கு அடங்கிடப்பதால் உங்களுக்கு என்ன கிடைக்கிறது? அவமதிப்பும், அவமானமுமே. ஸுகமாய் வாழ ஒருவருக்குக் கீழடங்கியிருந்து காலங் கழிப்பதைக் காட்டிலும் ஸ்வயேச்சையாக இருக்க முயன்று, அதற்காக உயிரைக் கொடுப்பதே மேலாகும். உங்கள் அரசனின் மனைவியாகிய நானும், என் புத்ரிகளும் அடைந்த அவமானங்களைப் பற்றி நினைத்தாலே மனம் நடுங்குகின்றது; வாய் கூசுகின்றது. உங்கள் ராணிக்கு நடந்த அவமரியாதைகளுக்குப் பழிவாங்குவது உங்கள் கடமையேயாகும்" என்று மேலும் கூறினாள். இதைக் கேட்ட ஐஸீனி ஜாதியாருக்குக் கோபம் மூண்டது. கத்தியுருவின கையுடையவர்களாய், "த்ரோஹம் செய்த பாவிகளைப் பழிவாங்குவோம்" என்று சபதம் செய்தனர். ஸமயமும் ஒத்ததாயிருந்தது. மோனா என்னும் தீவிலுள்ள துருவிதர் என்னும் ப்ரித்தானிய குருக்களை எதிர்க்க ரோம ஸேனாதிபதி மேற்கே தன் சேனையுடன் சென்றிருந்தான். பிரித்தானியர்கள் உடனே ஒன்று கூடிப் புறப்பட்டு அருகில் இருந்த ரோம ஸேனையின் இருப்பிடத்தை எதிர்த்தார்கள். அவ்விடத்தில் இருந்தவர்கள் வயது சென்றவர்கள். ப்ரித்தானியர் அவர்களைத் தோற்கடித்து, அங்கிருந்த ஆண், பெண், குழந்தை ஆகிய ரோமர்களையெல்லாம் சங்காரம் செய்தனர். ரோமர்க

ளுடைய அதிகாரம் சிலகாலம் இல்லையென்றே சொல்லலாம். இதைக்கேட்ட ரோமஸேனாபதி மோனாவிலிருந்து திரும்பி வந்தான். வரும்பொழுது அங்கங்கிருந்த சிறு ரோமப் படைகளையும் சேர்த்துவர, 10,000 வீரர்கள் கூடிய ஸேனையாயிற்று. இவனை 20,000 ப்ரித்தானியர் எதிர்க்கத் தயாராயிருந்தனர். ஆனால் ரோமர்கள் மிகுந்த பல சாலிகள்; யுத்தப் பயிற்சியும், கொண்ட காரியத்தை முடிக்கும் வன்மையு முள்ளவர்கள். ப்ரித்தானியர்களோ தொகையில் அதிகமான போதிலும் யுத்தப் பயிற்சியும் ஒற்றுமையும் போதாதவர்கள். ப்ரித்தானியர்களில் சில வீரர் மிகுந்த வேகமாய்ச் செல்லும் ரதங்களின்மீது நின்று சண்டை செய்வது வழக்கம். இந்த ரதங்களின் இருசுகளில் அரிவாளைப் போன்ற கூர்மையான வாள் பதிக்கப்பட்டிருக்கும். வண்டி வேகமாகப் போகும்பொழுது ரதத்தின் அருகே வருபவர்கள் துண்டு துண்டாக வெட்டப்படுவார்கள். இம்மாதிரியான ரதமொன்றில் ஏறிக்கொண்டு போடிஸீயா யுத்தஞ் செய்தாள்.

ஆனால் ப்ரித்தானியர் தோல்வியடைந்தனர். ரோமர்கள் கையில் அகப்படுவதை விட இறத்தலே சிறந்ததென்று போடிஸீயாவிற்குத் தோன்றியது. அதனால் அவள் தானும் விஷமுண்டு தன் புத்ரிகளுக்கும் விஷங்கொடுத்து இறந்தாள் என்று அவளைப்பற்றிச் சொல்லப்படுகிறது.

போடிஸியா இறந்தபோதிலும், அவள் மரணம் வீணாகப் போகவில்லை. பலாத்காரத்தினால் மாத்திரம் செலுத்தப்படும் அதிகாரம் நெடுங்காலம் நிற்காது என்பதை இது நன்கு காட்டிற்று. இறற்குப் பிறகு ரோம ப்ரதிநிதிகள் ப்ரித்தானியர்களை மரியாதையுடனும் அன்புடனும் நடத்திவந்தார்கள்.

### ரோம ராஜ்யத்தின் சீர்குலைவு

ரோமர்களுடைய ப்ரித்தானிய ராஜ்யம் கி. பி. 450 வருஷம்முதல் சீர்குலைய ஆரம்பித்தது. இடாலிக்கு வடக்கே ஜர்மன் ஜாதியார்கள் குடி இருந்தனர். அவர்களில் ஒரு ஜாதியாராகிய கோத் என்பவர்கள் இந்தக் காலத்தில் மிகுந்த பல முள்ளவர்களாய் இருந்தார்கள். அவர்களுக்கு நாகரீகமென்பது கிடையாது; நரபலி கொடுப்பது அந்த ஜாதியார்களுடைய கொடிய வழக்கம். இவர்கள் ரோமர்களின் ராஜ்யத்தின் மேல் பலமுறை படையெடுத்து அநேகர்களைக் கொன்றனர். இவர்களை யடக்க ரோமர்கள் பலதடவை முயன்றார்கள். ஆனால் பலக்குறைவாலும், நெடுநாளாக யுத்தப்பயிற்சியில்லாததாலும், ரோமர்களால் இந்தக்கோத்ஜாதியாரை ஜயிக்கமுடியவில்லை. கடைசியில் இக்கோதர்கள் இடாலி தேசத்தையே எதிர்க்க ஆரம்பித்தார்கள். இதனால் தங்களுடைய சொந்த தேசத்தைக்காப்பாற்ற மற்ற தேசத்திலுள்ள யுத்த வீரர்களையும் இடாலிக்கு ரோமர் அழைத்தனர். இங்கிலாந்திலுள்ள போர்வீரர்களும் போய்விடப் பிரித்தானிய நாட்டின்மீது உடனே வேறு ஜாதியாகள் படையெடுத்தனர். ப்ரிடன்களால்ரோமர்கள் இங்கிலாந்திற்குவந்த பிறகு யுத்தப் பயிற்சியில்லாத இவர்களை எதிர்க்க முடியவில்லை. தம்மைத் தற்காத்துக் கொள்ளமுடியாதவர்கள் பிறரை யன்றோ தமக்கு உதவியாக அழைக்கவேண்டியிருக்கின்றது? அதனால் டேன்மார்க் முதலிய தேசங்களிலிருந்த ஜாதியார்களை அழைத்தார்கள். ஹெங்கிஸ்ட், ஹார்ஸா என்று இந்த ஜாதியாரின் தலைவர்களுக்குப் பெயர். இப்புதிய ஜாதியார்கள் பிக்டுகளையும், ஸ்காட்டுகளையும், துரத்தி யடித்தார்கள். ஆனால், உடனே காரியம் முடிந்ததும் தம் தேசத்திற்குத் திரும்பிப் போகவில்லை. இங்கிலாந்து டேன்மார்க்கைவிடச் செழிப்பாகவும் ஆரோக்யமாகவும் இருந்தது. அதனால் எல்லாரும் இங்கிலாந்திலேயே இருக்க ஆசைப்பட்டார்கள். தங்களை அழைத்தவர்களையே ஜயித்து, அவர்களை அடிமைகளாக்கியும், கொன்றும் நாட்டை அடைந்தார்கள். ப்ரித்தானியர்களில் சிலர் மேற்கே கார்ன்வால் என்னுமிடத்திற்கும், வேல்ஸிற்கும், கம்பர்லாந்து என்னுமிடத்திற்கும் சென்றுவிட்டார்கள். ரோமருடைய ராஜ்யமும் பாழாகப் போயிற்று.

### ரோமர்கள் செய்த நன்மைகள்

ரோமர்கள் இங்கிலாந்தில் பல நல்ல மாறுதல்கள் உண்டாக்கினார்கள். அவர்கள் காடு



களை வெட்டித் தங்களுக்குப் பெரிய அரண்மனைகளும் கோட்டைகளும் கட்டிக்கொண்டார்கள். இவ்விடங்களில் இருந்துகொண்டு சுற்றிலுமுள்ள நிலங்களைப் பயிரிட்டு வந்தனர். சுதேசிகளாகிய ப்ரித்தானியர் தங்கள் அதிகாரிகளுக்குச் சேவகம் செய்துவந்தனர். பயிர்த்தொழில் மிகவும் சிறந்து, தான்யம் நிரம்ப விளைந்ததால், இங்கிலாந்திற்கு உத்தரதான்யக் களஞ்சியம் என்னும் பெயர் வந்தது. முக்யமாக ரோம ராஜ்யத்தின் மற்ற தேசங்களில் சண்டை செய்யும் வீரர்களுக்கு இங்கிருந்தே கோதுமை அனுப்பப்பட்டது. இங்கிலாந்தில் நிகழும் கலகங்களை அடக்கவும் வேறு தேசங்களிலிருந்து படையெடுப்பவர்களை எதிர்த்துத் துரத்தவும், சேனை வீரர்கள் முக்யமான இடங்களில் வைக்கப்பட்டனர். இவர்கள் ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்திற்குப் போவது சுலபமாகும்படிப் பாதைகள் இங்கிலாந்தின் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு ஏற்படுத்தப் பட்டன. இவை வியாபாரம் பரவுவதற்கும், பிரயாணம் செய்வதற்கும் வசதிகளாயிருந்தன. திருடர்களும் கொள்ளை அடிப்பவர்களும் தண்டிக்கப்பட்டார்கள்.

ரோமர்கள், நீதி சாஸ்திரத்தில் நிபுணர்கள். அவர்கள் ஏற்படுத்தின விதிகளும் நியாய விசாரணை வழிகளும் இக்காலத்திலும் அநேகமாக உபயோகமாகின்றன. அவர்கள் ஆண்ட ராஜ்யங்களில் தங்களுடைய முறைமைகளையும் கொண்டுவந்தனர். இங்கிலாந்திலும் இம்முறைகள் வெகுகாலம் கையாளப்பட்டு வந்தன. இங்கிலாந்தில் உள்ள தாவர வர்க்கங்களான தகரம், இரும்பு, நிலக்கரி முதலியவையும் தோண்டி எடுக்கப்பட்டன. பிரான்ஸ், இடாலி முதலிய தேசங்களோடு வ்யாபாரமும் அதிகரித்தது. கிறிஸ்தவ மதமும் ரோமப்பாதிரிகளால் இங்கிலாந்திற்கு முதலில் கொண்டுவரப்பட்டது. பிரித்தானியர்களில் பலர் கிறிஸ்தவர்களானார்கள். காடு அடர்ந்த ஒரு தேசத்தில் நாகரீகமற்ற ஜாதியாருக்கு மாறாகப் பாதைகளும் செழிப்பான நிலங்களும், நீதியும், நாகரீகமும், வ்யாபாரமும், தேர்ச்சியுமுள்ள ஜாதியாருமிருக்க ரோமர்கள் காலத்தில் நாம் காண்கிறோம்.



# செஞ்சிக் கோட்டை

## FORTRESS OF GINJEE

தென்னிந்தியாவிலுள்ள சரித்ர சம்பந்தமான இடங்களுள் பேர்போனதும், அழகிய கோட்டை தளவாடங்களுமுள்ளதும், குழந்தைகள் முதல் எல்லா வயது ஜனங்களும் கேள்வியுற்றதும், நிரச்செயலுக்குப் பிரதான ஸ்தலமுமானது செஞ்சிக்கோட்டை. இது திண்டிவனத்திற்கு மேற்கே 16 மைல் தூரத்திலுள்ளது.

ஐரோப்பிய ஆதிவர்த்தக ஸ்தலமான சென்னைக்கும், புதுவைக்கும் நருக்க நவாப்புக்கு இடமான ஆற்காட்டுக்கும் மத்தியிலுள்ளது. 6 மைல் தூரத்துக்கிப்பாலேயே வானத்தை யோங்கி யளாவும் மலைச்சிகரக் கோட்டை தென்படும், இப்படி அணுகமுடியாத மலையுச்சியில் எவ்விதம் தளவாடங்கள் கட்டப்பட்டனவென்பது ஆச்சர்யத்தை யுண்டுபண்ணும். ஆதிகாலந் தொடங்கி சரித்ர சம்பந்தமான இவ்விடம், மூன்று முக்ய மலைத் தளவாடங்களுள்ளது. வடக்கே கிருஷ்ணகிரி என்னும் கச்சேரிமலையும், தெற்கே சந்திரியன் துர்க்கம் என்னும் சிப்பாய்கள் வாஸ ஸ்தலமும் உள்ள மலையும், மேற்கே எல்லாவற்றிலும் உயரமுள்ள ராஜகிரி என்னும் மலையும் முக்கோண வடிவமாய் அமைக்கப்பெற்றுள்ளன. இச் செஞ்சிக்கோட்டையில் இம்மலைகள் பெரும்பாறைகளால் அடுக்கப்பட்டுள்ளதாகையால் உயரே ஏறுவது ப்ரயாசை. இம்மலைமேல் வரிசை வரிசையாகச் சுவர்கள் சூழப்பட்டு அவற்றில் பீரங்கி மேடையும் துப்பாக்கிகள் வைத்தடிக்க த்வாரங்களும், மனிதர் உள்ளேசெல்ல வலுவான வாசற் கதவுகளும் உள்ளன. இம்மூன்று மலைகளும் 60 அடி அகலமுள்ள கனமான மதில்களால் அடைபட்டிருப்பதுடன் அம்மதில்களுக்கு வெளியே 80 அடி அகலமுள்ள அகழி சூழ்ந்திருக்கிறது. இவ்விதம் அடைக்கப்பட்ட முக்கோண வடிவக் கோட்டை மூன்றுமைல் சுற்றளவுள்ளது—இது தான் கீழ்க் கோட்டை.

இதன் மூன்று கோணங்களிலுமுள்ள மலைகள் மூன்று மலைக்கோட்டைகள் கீழ்க்

கோட்டைபோக இரண்டு வாசல்களுண்டு. ஒன்றுக்குப் புதுவை வாசல் என்றும், மற்றொன்றுக்கு வேலூர் வாசல் என்றும் பெயர். ராஜகிரிதான் ராஜனது வாஸஸ்தலம். கிருஷ்ணகிரி, கச்சேரி செய்தவிடம். இது தவிர சக்கிலி துர்க்கம் ஒன்று உண்டு. ராஜகிரியின் உச்சி சமுத்திர மட்டத்துக்கு மேல் 968 அடி உள்ளது; பக்கத்திலுள்ள ஊர்க்குமேலே 800 அடி உயரமுள்ளது; மற்ற இரண்டு சிகரங்களுக்குமேல் 400 அடி உயரத்திலுள்ளது. இம்மலை முழுவதும் பெரும்பாறைகள் இயற்கையாய் அடுக்கியிருப்பதால் ஏறுவது அசாத்தியம். இம்மலை பாதியுயரத்தில் ஒரே பாறை. இப்பாறையின்மேல் 400 அடி உயரத்தில்தான் ராஜகிரி கட்டப்பட்டிருக்கிறது. வரிசை வரிசையாக 25 அடி உயரமுள்ள மதில்கள் கட்டப்பட்டிருப்பதால் இதில் ஏறுவது அசாத்தியம். இவ்விதம் இயற்றப்பட்டிருக்கும் வழியே போனால், ராஜகிரியில் ஏறுவதற்கு முன்னமே 24 அடி அகலமுள்ள ஒரு பெரிய பாறைப் பிளவு இருக்கிறது. இதைத் தாண்டுவது ப்ரயாசை. ஆனால் முற்காலத்தில் ஒரு சிறு தூக்குப்பாலம் போடப்பட்டிருந்தது. இதன்கீழ் 200 அடி பள்ளமுள்ள பாறைப்பிளவு பயங்கரமாயிருக்கும். இந்தப் பிளவு தாண்டினால்தான் ராஜகிரியில் சேரலாம். இந்தப் பக்கத்தில் ராஜகிரிக்கு வலுத்த கதவுள்ள வாசல் உண்டு. இந்தவிடத்தில் 10 பேர் நின்றுகொண்டாலும் 1000 பேரைத் தாக்கலாம். இப்பொழுது இவ்விடத்தில் மரப்பாலம் ஒன்று போட்டிருக்கிறார்கள். இதன் உச்சியில் ஏறிப்பார்த்தால் 26 மைலுக்கப்பாலுள்ள திருவண்ணாமலையும், இதன் மேல்புறத்தில் அடர்ந்த பசுமையான ரிஸர்வுகாடும் மனதை ரம்யப்படுத்துகின்றன. பாறைகளின் பக்கங்களில் தேன்கூடுகள் விசேஷம். இவ்விதம் அமைக்கப்பட்ட கோட்டையின் சரித்ரத்தைச் சிறிது கூறுவோம்.

பழையகாலத்தில் இக்கோட்டையின் சரித்திரம் ஒன்றும் வெளிவரவில்லை. 16-ம் நூற்றாண்டில் விஜயநகரராஜ்யம் செழித்த காலத்தில் இக்கோட்டை அந்த ராஜ்யத்தின் நாயகர்களுக்குச் சரியான வாஸஸ்தலம் என்றெண்ணி இதை ராஜதானியாக்கிக் கொண்டார்கள். இதன் பிறகு விஜயநகர ராஜ்யம் சீர் குலைந்ததும், இந்நாயகர்கள் தனித்தனி ராஜாவாய்விட்டார்கள். இவ்விஜயநகரராஜாக்கள்தான் இவ்விதம் கோட்டை கட்டியிருப்பார்களென்று நாம் எண்ணவேண்டியிருக்கிறது. இவ்விதம் செஞ்சிராஜ்யம் ப்ரத்யேகமானதும், விஜயநகர ராஜ்யத்தை நாசஞ்செய்த கோல்கொண்டா ஸுல்தான் இதைப்பிடிக்க முயன்றான். அக்காலத்து மதுரைக் கதிபதியான திருமலை நாய்க்கன், தனது நண்பனுக்குதவிசெய்ய எண்ணி, கோல்கொண்டாவின் பகைவனான பீஜபூர் சுல்தான் உதவியையடைந்தான். ஆனால் பீஜபூரிலிருந்து அனுப்பிய ஸைந்யங்கள் தங்கள் மதஸ்தர்களான கோல்கொண்டா துலுக்கர்களுடன் சேர்ந்து தாங்கள் காப்பாற்றவந்த கோட்டையைப் பிடித்துக்கொண்டனர். 1644-ம் ௵ இதிலுள்ள பெருஞ்செல்வத்தை பீஜபூரார் கொள்ளையடித்தார்கள். 1677-ல் இக்கோட்டை சிவாஜீ மகாராஜாவால் பீஜபூர் கவர்னரான அம்பர்கானிடமிருந்து தந்திரமாகப் பிடிக்கப்பட்டது. பீஜபூர் துலுக்கர்கள் இக்கோட்டையை வைத்திருந்த காலத்தில் இன்னும் வலுவாக கட்டப்பட்டதென்று சில பாரசீகச் சிலாசாசனங்களினால் விளங்குகிறது.

அவுரங்கசீபு பீஜபூர் கோல்கொண்டாவைக் கைப்பற்றிய பிறகு மகாராஷ்ட்ர ராஜ்யத்தில் ஸிவாஜீயின் மகன் ராம்ராஜ் இச்செஞ்சிக்கோட்டையில் ஒளித்துக் கொண்டான். அதன்மேல் மகாராஷ்ட்ர அதிகாரத்தை நசுக்கச்செய்து, தான் ஜயிக்கும் ராஜ்யத்தைக் காப்பாற்றிக்கொள்ளத் தகுதியான இடமான இச்செஞ்சிக்கோட்டையைக் கைப்பற்றவேண்டுமென்று அவுரங்கசீப் பிரயத்தனம் பண்ணி, ஸுல்பிகர்கான் என்னும் தனது சைன்யத் தலைவனை அனுப்பினான். ஆனால் இந்த சுல்பிகர்கான், தனக்குத்தானே இதைக் கைப்பற்றி ராஜ்யபரிபாலனஞ்செய்ய எண்ணங் கொண்டானாகையால் உண்மையாக முயற்சியெடுத்து இக்கோட்டையைக்கைப்பற்றாமல் காலதாமதம் செய்துவந்தான். மேலும், வயதான அவுரங்கசீப் இறந்ததும், தனது மனோபாவத்தை நிறைவேற்றக் காத்துக்கொண்டிருந்தான்.



இந்தச் சமாசாரத்தை அவுரங்கசீபு ரகஸ்ய ஒற்றர்களால் அறிந்து, ஸுல்பிகர்கானை அவமானத்திற் குட்படுத்த எண்ணிய விஷயத்தைத்தனது நண்பர்களால் ஸுல்பிகர்கான் அறிந்து, உடனே கோட்டையைப் பிடித்துவிட்டான். ராம்ராஜ் வேலூருக்கு ஓடிவிட்டான். செஞ்சியில் ராஜபுத்ரகவர்னர் சுருப்சிங் என்ற ஒருவனைச் சுல்பிகர்கான் நியமித்தான். இந்தச் சுருப்சிங் மகன், டேஜீசிங். இவன் ஆர்காட் நவாபின்கீழ்க் கப்பங்கட்ட சம்மதிக்காமையால் ஆர்க்காட் நவாப் ஸாடல்லாகான், செஞ்சிக்கோட்டையை 1713 ௵த்தில் முற்றுகை போட்டான். இம்முற்றுகையின் சரித்ரம் தான் தென்னிந்தியா முழுவதும் ராஜா தேசிங்கு கதை என்று தெரிகிறது. 1713ம்௵த்திலிருந்து 1750௵ வரையில், கோட்டை துருக்கர் கையிலிருந்தது. பிறகு ப்ரெஞ்ச் ஜனரல் புஸி இதைப் பிடித்துக் கொண்டான்.

1752௵ மேஜர் லாரென்ஸ் என்னும் இங்கிலீஷ் ஜனரல் இதைப் பிரஞ்சுக்காரர் கையினின்றும் பிடிக்க மேஜர் கினியர் என்பவனை அனுப்ப, அவர் அவருடைய சேனையுடன் விக்ரவாண்டியில் முறியடிக்கப்பட்டதால், 1762௵வரையில் செஞ்சிக்கோட்டை ப்ரெஞ்சுக்காரர் வசமிருந்தது. இங்கிலீஷ்காரர்வசம் கர்னல் ஸ்மித் என்பவரால் பிடித்து ஒப்புவிக்கப்பட்டது. பிறகு 1780-ம் ௵ ஐதர் ஆலியால் இக்கோட்டை பிடிக்கப்பட்டது. பிறகு 1803-ம் ௵ இங்கிலீஷ்காரர் கைக்கு வந்ததும் அக்காலத்துக் கவர்னர் இக்கோட்டையை இடித்தெறிய வேண்டுமென்று எழுதியது நல்லகாலமாக நிறைவேறவில்லை.

க்ருஷ்ணகிரியில் விசேஷமாக ஒன்றுமில்லை. இரண்டு பெரிய களஞ்சியங்களும், ஒரு சபாமண்டபமும் இருக்கிறது. காலியாயிருக்கும் ரங்கநாதர்கோயில் ஒன்றுள்ளது. ராஜகிரிக்குப் போகும்வழியாய் பல புளியமரங்கள் இருக்கின்றன. இவ்விடத்தில் காணப்படும் பாறைகள் மிகப்பெரியனவாகவும் ஒன்றின் மேலொன்றாகப் படிந்துகிடப்பது இயற்கை விநோதத்தை விளக்குகின்றது. போகும் வழியில், கமலக் கண்ணியம்மன் கோயில் ஒன்றும் இருக்கிறது. அதற்கு எதிரே ஒரு கல்லில்ஆட்டின் தலைஒன்றும் எருமைத்தலை ஒன்றும், நான்கு மனிதர் தலையும் செதுக்கப்பட்டிருக்கின்றன. இதற்குக்கிடாமாடுகள்பலி கொடுப்பது வழக்கம். இக்கமலக்கண்ணியம்மன் கோவில், கோட்டை கட்டுவதற்கு வெகு காலத்திற்கு முன்னமேயே யிருந்ததாகச் சொல்லுகிறார்கள். இதற்கு எதிரே ஒரு சுனையில் எப்பொழுதும் சுத்தஜலம் இருக்கிறது. இந்த ராஜகிரியின்மேல் இரண்டு களஞ்சியங்களும், ஒரு மண்டபமும், ரங்கநாதர் கோயில் ஒன்றும், கஜானா அறையென்னும் ஓர் நிலவறையும் இருக்கிறது. இவ்விடத்தில் இருபாறைகளுக்கு உள்ளே சுனை யிருக்கிறது. இங்கே வருபவர்களுக்குக்குடிக்கத்தண்ணீர் இது தான். இத்தண்ணீரை அடிக்கடிபரிசோதித்துக்குடிக்கநல்லதாஎன்றறிந்து குடிதண்ணீர் என்று அதிகாரிகள் நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். இதில் 11-அடி நீளமும் ஏழடி சுற்றளவுமுள்ள ஒரு பீரங்கி யிருக்கின்றது. இவ்வளவு பெரிய பீரங்கியை இவ்வளவு உயரத்தில் எப்படித்தான் கொண்டு சேர்த்தனரோ! இப்பீரங்கியில் சில இங்கிலீஷ் எழுத்துக்களும் சில க்ரந்த எழுத்துக்களும் செதுக்கப்பட்டிருக்கின்றன.

கீழ்க்கோட்டையில், ஆதியில் வீடுகள் விசேஷமாக இருந்தன. ஆனால் தற்காலம் ஒன்றும் கிடையாது. நிலங்களில் புன்செய்ப் பயிர்கள் செய்யப்படுகின்றன. இதில் மசூதிகள், கோவில்கள், குளங்கள், ஜீர்ணஸ்திதியில் இருக்கின்றன. புதுச்சேரி வாசல்வழியாகச் சென்றால், அர்த்த சந்திரவடிவமான கட்டடம் ஒன்று பிரெஞ்சுக்காரரால் கட்டப்பட்டிருக்கின்றது. இதைத்தாண்டினால் தென்புறமாக வெங்கிடரமணஸ்வாமி கோயில் ஒன்றிருக்கிறது. இக்கோயிலிலுள்ள விசேஷ வேலைப்பாட்டமைந்தகற்களும்சிலைகளும்புதுச்சேரிக்கும், ஜைனமடமான சித்தாபூருக்கும், இக்கோயிலிலிருந்து கொண்டு போகப்பட்டன. புதுவையில் டூப்ளே ஸ்தம்பத்தின் கற்களும் சித்தாபூர் ஜைனக் கோயிலிலுள்ள கல்யானையும்இக்கோயிலிலிருந்துகொண்டு போகப்பட்டன.

கோவர்த்தனகிரி, தசாவதாரவிசேஷக்கற்களும் இருக்கின்றன. பட்டாபிராமஸ்வாமி கோவிலில் அற்புதமான மண்டபமொன்றிருக்கிறது. வெங்கடரமணஸ்வாமி கோவிலி

லிருந்து மேற்கே திரும்பினால் செட்டிகுளம் என்றும், சக்கரக் குளம் என்றும் இரண்டு குளங்களிருக்கின்றன. இவ்விரண்டுக்கும் மத்தியில் 8-அடி உயரமுள்ள ஆஞ்சநேயர் சிலையிருக்கிறது. இது மிகவும் சக்தியுள்ளதென்று சொல்லுகிறார்கள். ராஜகிரிக்கு நுழையுமிடத்தில் பஜனமண்டப மொன்றிருக்கிறது. அதில் வேணுகோபால ஸ்வாமியின் உருவம் சின்னாபின்னப்பட்டிருக்கிறது. இதற்கு எதிரே 12 அடி சதுரமுள்ள மழமழப்பான கல் ஒன்றிருக்கிறது. சின்னாபின்னப்பட்டுப் போனபோதிலும் வேணுகானம் செய்துகொண்டு ருக்மணி ஸத்யபாமா சூழப்பட்ட க்ருஷ்ண விக்ரஹம், அதிக ஆச்சர்யத்தை யுண்டுபண்ணும் அற்புத சிலா வேலையென்று ஒப்புக்கொள்ளக்கூடும். இதன் சமீபத்தில், 82 × 28 × 29 அடி உயரமுள்ள மூன்று அறைகளுள்ள களஞ்சியம் இருக்கிறது. அதன் பக்கத்தில் கரடிக் கொட்டகை ஒன்றிருக்கிறது. அது 82 × 29 × 47 அடி உயரமுள்ளது. அதன் பக்கம் ராஜக்ரீடைசெய்யும் கூற்சிலைகள் இரண்டு இருக்கின்றன. அதில் பெரிது 15 அடி சதுரமுள்ளது, உடைந்து போய்விட்டது. பிறகு கல்யாண மஹால் என்று சொல்லும் அழகிய 80 அடி உயரமும் 8 அடி அகலமு முள்ள ராணி வாஸம் செய்யுமிடம் வெகுஅழகுள்ள கட்டடம். இதில் தண்ணீர்க்குழாய் கீழேயிருந்துமாடிக்குப் போனதாகச் சொல்கிறார்கள். ஆனால் இது உண்மையாயிருக்க முடியாது. இவைதான் செஞ்சிக்கோட்டைக்குள் பார்க்க வேண்டிய அம்சங்கள். இதற்கு 2 மைல் வடக்கே சிங்கவரம் ரங்கநாத ஸ்வாமி கோயில் ஒன்று, பள்ளிகொண்ட திருக்கோலத்திலிருக்கிறது. இதுதான் தேசிங்க ராஜனுக்கு, குடும்ப தேவதை. இவையனைத்தும், கர்ஸன் பிரபு ராஜப்ரதிநிதியாயிருந்த காலத்தில் ஏற்படுத்திய "புராதன கட்டிடப் பாது காப்புச் சட்ட"ப்படி கவர்ன்மெண்ட் ஆர்க்யலாஜிகல் டிபார்ட்மெண்டாரால் காப்பாற்றப்பட்டும், பழுது பார்க்கப்பட்டும் வருகின்றன. இன்னும் இக்கோட்டைக்குள் விசேஷப் புதையல் அகப்படுமென்று சில காலத்திற்கு முன்பு ஜனங்கள் தோண்ட பழைய கட்டடங்கள் அகப்பட்டிருக்கின்றன. இவைகளெல்லாம் 200,300 வருஷங்களுக்கு முன்னே செழித்தோங்கிய ராஜ்யசின்னங்கள் என்று விளங்கும். தற்காலம் புன்செய் பயிரிடுமிடமும் ஜன நெருக்கமுள்ள மாடமாளிகை அமைக்கப்பெற்ற தென்பதற்குத் தடையில்லை. இதன் நடுவே நின்றுகொண்டால், அரசகவியாகிய அதிவீரராம பாண்டியர் இயற்றிய

ஏழுநிலை மாடம் கால் சாய்ந்தக்கால்
கழுதைமேய்பாழாகினுமாகும்

என்பதின் உண்மையைவிளக்குகின்றது. தற்காலம் செஞ்சிக்கோட்டைக்கு வெளியேயுள்ளது, செஞ்சிக்ராமம். இது 1911ம் வருஷமுதல் இதில் தாசில்தார் வாஸஸ்தலமாகையால்; தாலுக்கா கச்சேரி, போலீஸ்ஸ்டேஷன், சப்ரிஜிஸ்ட்ரார்ஆபிஸ்இவைகள் இருக்கின்றன. இச்செஞ்சிக்குக் கிழக்கே செட்டிபாளையம் போகிறவழியில் தாலூக்கா போர்டு ஸ்கூல் என்று புதிய கட்டடம் ஒன்று ஏற்படுத்தி செம்மையாய் நடந்துகொண் டிருக்கிறது. செட்டிப்பாளயத்தில் வெள்ளிக்கிழமை சந்தை கூடும். இவ்வூருக்குக் கிழக்கில் அரை மைல் தூரத்தில் சங்கராபரணியாறு ஓடுகின்றது.

S.பஞ்சாபகேச சர்மா, பீ.ஏ., எல்.டி.

## ஐரோப்பிய மஹா யுத்தம்

கிருஷிகன் எழுதுவது.—பார்த்தவுடன் கண்ணைக் கவரும் விதமாக அச்சிடப்பட்டிருக்கிறது. அதற்கேற்பவே, உள்ளடங்கிய விஷயமும் சிலாகிக்கத்தக்கவாறு அமைந்திருக்கிறது. ஐரோப்பிய தேச சரித்திரஸம்பந்தமான பல விஷயங்களையும் விவரித்திருப்பதால், ஐரோப்பாவைப்பற்றியவிஷயங்களை ஸாமான்ய ஜனங்கள் அறிய இது சிறந்த ஸாதனமாகும் என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். பேபர்களில் ராய்ட்டர் தந்திகள் வருவதுபோல், யுத்தஸம்பந்தமான விஷயங்களை ஸம்பந்தம் சிறிதுமில்லாது அடுக்கிவிடாமல், ஒழுங்குபடுத்தி, நேர்த்தியாயும் கதைப்போக்காயும். காரியகாரண ஸம்பந்தம் விளங்கும்படியும் எழுதியிருப்பதால், முன்னுரையில் கூறியபடி படிப்பவர்க்கு மனோத்ஸாகத்தை யுண்டுபண்ணும்படியும், அரிய விஷயங்கள் பல சிரமமின்றி அறியும்படியுமிருக்கிறது. 256 பக்கங்கள்: 58 ஆப்டோன் படங்கள் கொண்டது. அழகாய் அச்சிடப்பெற்றது. ரூ. 1-4-0. வேண்டுவோர் விவேகபோதினி மானேஜருக்கெழுதிக்கொள்ளவும்.



# இந்தியாவும் கைத்தொழிலும்

## INDIA AND HER INDUSTRIES

"மனம் உண்டானால் மார்க்கம் உண்டு" இது பூர்வ வாக்கு. இந்த வாக்கியத்தை அநுசரித்து ஒன்றைச் செய்ய மனமானது நிச்சயப்படுத்தியே அந்தக் காரியத்தைச் செய்து முடிக்க வேண்டியிருக்கிறது. அப்படிச் செய்யப் பிரயத்தனப்படுங்கால் அது நன்மையான காரியமாயின் அதற்கு அநேக இடையூறுகள் வருவதுண்டு. அந்த இடையூறுகளை எல்லாம் சரிப்படுத்தி எடுத்த காரியத்தைத் தவறாமல் செய்து முடிக்க மன உறுதி வேண்டும். ஆனால், நாம் ஒன்று செய்யவல்லவரென்று எண்ணுவது, அக்காரியத்தின் முடிவிற்கு அறிகுறியாகும்.

ஈச்வர சிருஷ்டியில் மேன்மைபொருந்திய மனித சரீரத்தை வகித்த நாம், நம் வாழ்நாட்களை வீண் நாட்களாக்காமல் என்றென்றும் சுகமாயும் சந்தோஷமாயும் கழிக்க எண்ணில் இந்திய மக்களாகிய நாம், நம் தேசத்தின் கைத்தொழி லபிவிர்த்தி செய்தும், பொது நன்மைக்காக வேண்டிய காரியங்களில் உழைத்தும், மற்றப் பிரதேசங்களைப் போல் முன்வரவேண்டியது அவசியம். ஆனால் நம்முன்னோர்கள் அன்னிய தேசங்களைவிடக் கைத்தொழிலிலும் நாகரீகத்திலும் முன்னேற்றமடைந்து இத்தேசத்திய சாமான்களைப் பிரதேசங்களுக்கு ஏற்றுமதியும் செய்துகொண்டிருந்தார்கள். அவ்வளவு உன்னத ஸ்திதியிலிருந்த நம் இந்தியாவைத் தற்சமயம் பார்த்தாலோ, ஒவ்வொரு சாமானையும் பிற தேசத்திலிருந்தே நாம் அடையவேண்டி யிருக்கிறது. இப்படி நமக்குப் பின்னடைந்திருந்த பிறதேசங்கள் கைத்தொழி லபிவிர்த்தியால் முன்னேற்றமடைந்து நம் தேசத்திற்கு ஏற்றுமதிசெய்து அதனால் அடையும் லாபமோ மிகவும் அதிகம். இப்படி அன்னிய தேசங்கள் ஒவ்வொன்றும் கைத்தொழிலினால் முன்னேற்றமடைந்து லாபமடைகிறதைக் கல்விமான்கள் அறிந்திருந்த போதிலும், இப்பொழுது இந்த மஹாசண்டையின் காரணமாகப்பாமரர்கள் கூட ஒவ்வொரு சாமானும் பிரதேசத்திலிருந்து வருகிறதாக அறிகிறார்கள். இந்த யுத்தமானது நம் இந்தியாவில் படித்தவர்களையும் இப்பொழுது கைத்தொழி லபிவிர்த்தியின் முயற்சியில் பிரவேசிக்க இடம் உண்டாக்குகிறது. இப்பொழுது நம் தேசத்திலிருந்து ஏற்றுமதியாகும் சரக்குகளானது ஏற்றுமதியாகாமல் அதனால் வியாபாரிகள் நஷ்டமடைவதை ஒவ்வொருவரும் அறிகிறார்கள். இந்தக் கைத்தொழில் ஸ்தாபனங்களை ஏற்படுத்துவார்களானால், எல்லோருடைய காரியமும் கிடைக்கும்; ஏற்றுமதியாகாமல் விலை குறைந்துபோகும் சரக்குகளானது உள்நாட்டில் உபயோகமாகும் வஸ்துக்களாகச் செய்வதாக இருந்தால் ஏற்றுமதியாகாமல் இருப்பதின் நஷ்டத்திற்கு லாபமும் கைத்தொழிலின் கூலியும் ஆக இரண்டுவிதமாக லாபத்தையும் அடையலாம். இந்த இரட்டை லாபத்தையும் நாம் இப்போது அமெரிக்கா, ஜப்பான் தேசங்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். நம்தேசத்தில் பல தொழில்கள் செய்வதற்குச் சௌகர்யங்கள் இருக்கின்றனவாயினும் அத்தொழில்களை மூலதனம்போட்டுச் செய்யத் தைரியமாய் முன் வரக்கூடிய முதலாளிகள் இல்லை. அப்படி யாராவது ஒரு தொழிலில் இறங்கி, நஷ்டம் வந்துவிட்டால் அவர்களைப் பரிகாசம் செய்யும் தொகைக்கும் குறைவில்லை. ஆரம்ப முயற்சியில் நஷ்டமும் பரிகாசத்திற்கிடமும் உண்டாகக்கூடும். அதை பொருட்படுத்தாது மன உறுதிகொண்டு தொழில்களை அநுபோகத்திற்குக் கொண்டுவர வேண்டியது அவசியம்.

கைத்தொழில்கள் அநுபோகத்திற்கு வரவும் குறையாமல் இருப்பதற்கும், ஒவ்வொரு ஜில்லாவிலும் தொழிலாளிகளுடைய சங்கங்கள் இருக்கவேண்டும். பிரஸிடென்ஸி பாங்குகளில் டைரெக்டர்களாய் இந்தியர்களும் இருக்கவேண்டும்: ஏதோ சிலர் அன்னிய நாட்டிற்குப்போய் தொழிற் படிப்புப் படித்து வருவதினாலேயே ஒருக்காலும் நம் நாடு தொழிலபிவிர்த்தி யடையாது. நாம் பிறதேசங்களின் தொழிற்சாமான்களை எதிர்பார்க்கும் வரை நமக்குள் இருக்கும் ஊக்கமும் உற்சாகமும் குறையும். தற்காலம் எவ்வளவோ தொழிற்சாலைகள் நின்றுபோயும் ஐரோப்பியர் கையில் ஒப்பிவிக்கப்பட்டு

இருக்கின்றன. இதற்குக் காரணம் நம்முள் இருக்கும் அக்கரையின்மையும், முதலின்மையும், உள் சண்டைகளுமே. இவைகளை எல்லாம் ஒருவாறு நிவர்த்திசெய்து மறுபடியும் நடத்த முயல்வதே சிரேஷ்டம். தேசம் தொழிலபிவிர்த்தியால் செல்வமடைதலால் நாம் தற்காலம் முயன்றுவரும் ஆசாரச் சீர்திருத்தம் ஜாதிவேற்றுமையின்மை எல்லாம் தானே உண்டாய்விடும் என்பதை யாவரும் ஒத்துக்கொள்ள வேண்டியதே. எல்லா முன்னேற்றத்திற்கும் செல்வம் காரணமாய் இருப்பதால் கைத்தொழிலை விருத்தி செய்து, அதன் மூலமாய் நமது நாட்டு வியாபாரங்கள் விருத்தியாகி, தனலக்ஷ்மி கூத்தாட நமது தேசம் செழிக்கச் செய்வதே நமது கடமை.

சிவன்ஜோதி.

---

# சந்திரன்

# The Moon

(12-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி பூமி சூர்யனைச் சுற்றிவரும் பாதையையும், சந்திரன் பூமியைச் சுற்றிவரும் பாதையையும்பற்றிக் கவனிப்போம். இந்த இரண்டு பாதைகளினுடைய மட்டங்களும் ஒரே சமமாயிருப்பதாக் வைத்துக்கொள்ளுவோம். இப்படியானால், அமாவாசையன்று சூர்யனுக்கும் பூமிக்கும் இடையில் சந்திரன் வரும்போது, இவை மூன்றும் ஒரே நேர்கோட்டிலிருக்கும், அப்பொழுது சூர்ய வெளிச்சத்தைச் சந்திரன் தடுக்கும். அதாவது சூர்யகிரஹணம் உண்டாகவேண்டும். அப்படியே ஒவ்வொரு அமாவாசை தினமும் சூர்ய கிரஹணம் உண்டாகவேண்டும். இம்மாதிரியே ஒவ்வொரு பௌர்ணமியன்றும் சூர்யனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமிவர, சூர்ய வெளிச்சம் சந்திரன்மேல் படாமல் பூமி தடுக்கவேண்டும். அப்பொழுது சந்திரன் பிரகாசமாய்க் காணப்படாது. அதாவது ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் சந்திர கிரஹணம் உண்டாகவேண்டும். ஆனால் இப்படியெல்லாம் சம்பவிக்கின்றனவா ? இல்லை. எப்பொழுதாவது ஒரு அமாவாசையன்று சூர்ய கிரஹணமும், எப்பொழுதாவது ஒரு பௌர்ணமியன்று சந்திர கிரஹணமும் உண்டாகின்றன. ஆகையால் பூமியின்பாதையும்சந்திரனின் பாதையும் ஒரே சமமட்டத்திலில்லையென்று நன்றாய்த் தெரிகிறது. சந்திரனுடைய பாதையின் மட்டம் பூமியினுடைய பாதையின் மட்டத்திற்குக் கொஞ்சம் சாய்ந்திருக்கிறது. ஆனால் சூர்ய கிரஹணம் அமாவாசையன்றும், சந்திரகிரஹணம் பௌர்ணமியன்றுந்தான் உண்டாகவேண்டுமென்றும் நாம் அறியலாம். ஆகையால் "எந்த அமாவாசையில் சூர்யன், சந்திரன், பூமி ஆகிய இம்மூன்றும் ஒரு நேர்கோட்டில் வருகின்றனவோ, அன்றையதினம் சந்திரன் சூர்யனைமறைக்க, சூர்யகிரஹணம் உண்டாகும். அப்படியே எந்த பௌர்ணமியில் இம்மூன்றும் ஒரே நேர்கோர்ட்டில் வருகின்றனவோ, அன்றையதினம் சூர்ய வெளிச்சம் சந்திரன்மேல் படாமல் பூமி தடுக்கச் சந்திர கிரஹணம் உண்டாகும். இதர அமாவாசை பௌர்ணமி தினங்களில்; சந்திரன் பூமியின் பாதைக்கு மேலும் கீழுமாயிருக்கும். அதாவது இம்மூன்றும் ஒரே நேர்கோட்டில் இரா. இவை ஒரு கணக்கான காலத்திற் கொருதரம் ஒரே நேர்கோட்டில் வருகின்றன. ஆகையால்தான் கிரஹணங்கள் ஒரு கணக்கான காலத்திற்கு ஒரு தரம் சம்பவிக்கின்றன.

சூர்யன், பூமி, சந்திரன் ஆகிய இம்மூன்றும் வெவ்வேறு அளவுடன் உள்ளவை. பூமியின் குறுக்களவு சுமார் 7,918 மைல் என்று பார்த்தோம். சூர்யனின்குறுக்களவு 8,66,400 மைல். சந்திரனின் குறுக்களவு சுமார் 2163 மைல். அதாவது சந்திரனைவிட பூமி சுமார் நான்குமடங்கு பெரியது. பூமியைவிட சூர்யன் ஏறக்குறைய 110 மடங்கு பெரியது. இப்படி அளவில் மிகவும் வித்தியாசப்படும் இக்கோளங்கள் மூன்றும் நேர் கோட்டில் வருவதென்றால் என்ன ? இவைகளின் மையப்புள்ளிகள் மூன்றும் ஒரே நேர்கோட்டில் வரவேண்டும். இப்படி வருவதால் உண்டாகும் கிரஹ



ணங்கள் பூர்ண கிரஹணங்கள். இவைகளின் மையப்புள்ளிகள் ஒரே நேர்கோட்டியில்லாமல் கொஞ்சம் மேலும் கீழுமாயிருந்தபோதிலும், பூமிக்கும் சூர்யனுக்கும் இடையிலுள்ள சந்திரனின் பாகம் அதே நேர்கோட்டிலிருப்பதால், இது சூர்யனின் ஒரு பாகத்தை மறைக்கும். இம்மாதிரியே பூமியின் பாகம் சந்திரனின் மேல்படும் சூர்ய வெளிச்சத்தின் ஒரு பாகத்தை மறைக்கும். இம்மாதிரியான கிரஹணங்களை நாம் அடிக்கடி பார்க்கிறோம். இவைகளை பின்னக்கிரஹணங்கள் அல்லது முக்கால்கிரஹணம், அரைக்கிரஹணம், கால்கிரஹணம் என்று சொல்லுகிறோம். இக்கிரஹணங்கள் சாதாரணமாக மூன்று மணி முதல் ஐந்து மணிநேரம் வரையில் காணப்படும். பூமியும்சந்திரனும் விடாமல் நகர்ந்து கொண்டேயிருக்கின்றன. இவைகள் ஒன்றையொன்று மறைத்துக்கொண்டிருந்த இடங்களிலிருந்து ஒதுங்கும் வரைக்கும் கிரஹணம்காணப்படும். பிறகு முதலிலிருந்தாற்போல் சூர்யனோ, சந்திரனோ பிரகாசிக்கும். சூர்ய கிரஹணத்தில் இன்னொரு விதமுண்டு. சந்திரன் பூமியிலிருந்து தூரத்திலிருக்கும்போது இது சூர்யனைவிட மிகச் சிறியதாகையால், சில சமயம் சூர்யனின் மத்திய பாகத்தை மாத்திரம் மறைக்கும். அப்பொழுது சூர்யன் மத்தியில் இருட்டாயும், அதைச்சுற்றி ஒரு பிரகாசமான வளையமிருப்பதுபோலும் காணப்படும். இதற்கு கங்கண கிரஹணம் என்று பெயர். இம்மாதிரி கிரஹணம் சந்திர கிரஹணங்களில் இல்லை. ஏனென்றால், சந்திர கிரஹணம் பூமி சந்திரனை மறைப்பதால் உண்டாகிறதென்று முன்பார்த்தோம். பூமி சந்திரனைவிடப் பெரிதாகையால் கங்கண சந்திரகிரஹணம் சம்பவிக்காது.

## தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்த்தல்

சந்திரன் பூமியிலிருந்து 238,000 மைல் தூரத்திலிருக்கிறது. இதன் குறுக்களவு பூமியின் அளவைப்போல் ஏறக்குறைய கால்பங்குள்ளதென்று பார்த்தோம். நமக்கு ஆகாய மண்டலத்தில் தெரியும் கிரஹ நட்சத்திரங்களுக்குள் இதுதான்மிகச் சமீபத்திலுள்ளது. ஒரு நிமிஷத்திற்குச் சுமார் $37\frac{1}{4}$ மைல் வேகத்துடன் இதுபூமியைச்சுற்றிவருகிறது. இதைச் சாதாரணமாக நாம் பார்க்கும் பொழுது இதன் நடுவில் கொஞ்சம் மங்கலான பாகங்கள் காணப்படுகின்றன. இக்களங்கங்களோடு கூடிய சந்திரன் சிலருக்கு ஒரு முகம்போல் காணப்படும். சந்திர முகத்திற்கு இக்களங்கங்கள் இரண்டு கண்களும் ஒரு மூக்காகவும் காணப்படும். ஆனால் நாம் எப்படியெல்லாம் நினைக்கிறோமோ, அப்படியெல்லாம் இந்த ரூபம் காணப்படும். சிலருக்கு ஒரு மான்போலவும், முயல்போலவும், சிங்கம்போலவும் காணப்படுவதுண்டு. இவ்விதமெல்லாம் நமது வெறுங்கண்ணிற்குத் தோன்றுகின்றன.



தூரதிருஷ்டிக் கண்ணாடியில் சந்திரனின் தோற்றம்

இப்பொழுது இதைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்ப்போம். இக்கண்ணாடி, தூரத்திலிருக்கும் வஸ்துக்களைச் சமீபத்தில் காண்பிப்பதோடு கூட, அவைகளைப் பெரிதாக்கியும் காண்பிக்கும். இரண்டாயிரம் மடங்கு பெரிதாக்கும் சக்தியுள்ள ஒரு தூர

திருஷ்டிக்கண்ணாடி சந்திரனைச் சுமார் 120 மைல் தூரத்திற்குள் கொண்டுவந்து காண்பிக்கும். இப்பொழுது சந்திரனைப்பார்த்தால் எவ்வளவு சந்தோஷத்துடனும் ஊக்கத்துடனும் அந்த நாம் கவனிக்கலாம்! அதன் பாகங்களெல்லாம் மிகத்தெளிவாய்த் தெரியும். ஆனால் சந்திரனின் பரப்பைக் கண்டறியஒரு சிறிய தூரதிருஷ்டிக்கண்ணாடியே போதும்.

நாம் ஒரு விஷயம் கவனிக்கவேண்டும். சந்திரன் தன்னைத் தானே சுற்றிக்கொண்டே பூமியைச் சுற்றவில்லை. இப்படி தன்னைத்தானே சுற்றுததால், சந்திரனின் முழு பாகமும் நமக்குத் தெரியவில்லை. எப்பொழுதும் சந்திரனின் ஒரு பாதியே நமக்குக் காணப்படுகிறது. கோளத்தின் மற்றொரு பாகம் நமக்குத் தெரிகிறதேயில்லை. ஆகையால் இந்தப் பாதியைப்பற்றி நமக்கு அதிகமாகத் தெரியாது. நமக்குத் தெரியும் பாதியில், சமநிலங்களும் வளையம் போன்ற குன்றுகளும் காணப்படுகின்றன. இக்குன்றுகளின் சரிவான பக்கங்கள் வெகு தூரம் வரையில் காணப்படுகின்றன. அநேக மலைகளும், குன்றுகளும், பள்ளத்தாக்குகளும் காணப்படுகின்றன. இம்மலைகளுக்கும் நாம் நமது பூமியில் பார்க்கும் மலைகளுக்கும் அதிக வித்தியாச முண்டு. பூமியிலுள்ள மலைகளெல்லாம் அநேகமாய் புல் பூண்டுகளால் மூடப்பட்டு ஒரே பச்சையாகக் காணப்படுகின்றன. சந்திரனில் காணப்படும் மலைகளோ, உலர்ந்து புல் பூண்டு ஒன்றுமில்லாத பாழானவையாய் காணப்படுகின்றன. இவைகள் கக்குதல் அடங்கின எரிமலைகளின் வாய்கள். ஆகையால் இவைகள் * சக்கரவடிவமா யிருக்கின்றன. சந்திரனில் சமுத்திரமாவது, ஏரியாவது, ஆறுகளாவது இருப்பனவாகக் காணப்படவில்லை. ஆகவே, அதில் ஜீவராசிகளுமிருப்பனவாகக் காணப்படவில்லை.

இம்மாதிரியான சந்திரன் எப்படிசுபாவத்திலேயே பிரகாசிக்கக் கூடும்? அதன்மேல் படும் சூர்ய வெளிச்சத்தை நமக்குத் திருப்புகிறதால்தான் அது பிரகாசமான வஸ்துப்போல் காணப்படுகிறது. இம்மாதிரியே சூர்யனைச் சுற்றிவரும் மற்றைய கிரஹங்களும் சூர்ய வெளிச்சத்தை நமது பக்கம் திருப்புகின்றனவாதலால், அவைகள் பிரகாசிக்கின்றன. நாம் பூமியைவிட்டு வேறு கிரஹங்களுக்குப் போனால், இப்படியே நமக்குப் பூமியும் பிரகாசிப்பதுபோல் காணப்படும். அல்லது, மற்றைய கிரஹங்களில் மனிதர்களிருந்தால், அவர்களுக்குப், பூமிப் பிரகாசிப்பது போல் காணப்படும்.

* எரிமலைகளுக்கு இம்மாதிரியானவடிவம் இருப்பதற்குக் காரணங்களையும், அதைப்பற்றின மற்றைய விஷயங்களையும் நமது 'பூதத்வ போதினி' என்னும் புத்தகத்தில் விளக்கியிருக்கிறோம்.

# தாபாய் அல்லது தர்ப்பாவதி நகரம்

# Dabhoi or the City of Grass

மேனாட்டு நாகரிகத்திற் சிறந்தவைகளைக் கைக்கொண்டுவரும் பரோடா ராஜ்யத்தில் புராதன நகரங்கள் சில இருக்கின்றன. பட்டணம், ஸித்தபூர், மோதரா என்பவை வட கூர்ஜரத்திலும், தாபாய், சந்தோதி, தென் கூர்ஜரத்திலும், பூர்விக ஹிந்து மஹம்மதிய அரசர்கள் காலத்தின் சிறந்த அறிகுறிச் சின்னங்களாக விளங்குகின்றன. மேற்கூறப்பட்டவைகளுள் சிற்பசாஸ்திரச் சின்னங்கள் பல நிறைந்து விளங்கும் தர்ப்பாவதியே, அதிர்ஷ்டவசத்தினாலும் பூர்விக கட்டடங்களிருப்பதனாலும் சிறந்து விளங்குகின்றது.

பரோடா நகரத்திற்குத் தென்கிழக்குத் திசையில் 20 மைல் தூரத்திலிருக்கும் இத் தர்பாவதி நகரத்தின் பூர்வசரித்ரம் நன்கு விளங்காது மறைந்து கிடக்கின்றது. கிறிஸ்து பிறந்த ஆறும் நூற்றாண்டில் வழங்கிவந்த ரோமக ஸித்தாந்த மென்னும் வானசாஸ்திர நூலில், வைதிக கர்மங்களுக்குபயோகமாகும் தர்ப்பைப் புல்லிலிருந்து, தர்ப்பாவதி என்னும் பெயர் இப்பொழுது தாபாய்



என்றழைக்கும் நகரத்திற்கு, வந்ததாகத் தெரியவருகிறது. ஆனால் இந்த வருஷத்தில் தான் நகர மேற்பட்டதென்று கூறுவது அஸாத்யமாக விருக்கின்றது. எதெப்படியிருப்பினும், தாபாய் நகரம் பிரஸித்தியடைவதற்குப் பல காரணங்களுள்ளன. சந்தோதி, கர்னாலி என்னும் புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு, வட கூர்ஜரத்திலிருந்து செல்லும் பாதை, தாபாய்வழியே போகின்றது. யாத்திரிகர்களுக்குத் தங்குவதற்கு இடமானதாலும், நகரத்தின் நடுவிலிருந்த அழகிய தடாகத்தின் விசேஷத்தாலும் தாபாய் நகரம் சீக்கிரத்தில் விருத்தியடைந்தது. இந்நகரம் சாலுக்ய அரசர்களின் (கி. பி. 961–1242) கூர்ஜர ராஜ்யத்தின் எல்லையி லிருந்தபடியால், ராஜ்யத்திற்குக் கிழக்கே சூறையாடிக்கொண்டிருந்த பீல், கோலி ஜாதியாரிட மிருந்து தொந்தரவில்லாம லிருப்பதற்கும், சாலுக்ய அரசர்களால் இங்கே கோட்டை கட்டப்பட்டிருக்கலாம்.

இந்நகரத்தின் ஸ்தாபனத்திற்குக் காரணமாகப் பூர்விக கதை யொன்றுண்டு. வெகு காலத்திற்கு முன்பு, ஜயஸிம்ஹனாகிய ஸாதர ஜயசிங்கன், பட்டான் நகரத்தை யாண்டு வந்தான். அவனுக்குப் பட்ட மஹிஷிகளும் மனைவியரும் எண்ணிறந்தவர்களாயினும், அழகிலும்,குணத்திலும்சிறந்த ரத்னாவளியே அரசனின் பிரிய நாயகியாக விருந்தாள். அரசனுக்கு இவளிடம் மாத்திரமே அன்பு மிகுந்திருந்தது. சக்களத்திகளிதைச் சிறிதும் பொறுக்கவில்லை. போதாக் குறைக்கு ரத்னாவளி கர்ப்பவதியாகி, பட்டத்திற் கிளவரசனைப் பெறும் நிலைமையிலிருந்தாள். தன் சக்களத்திகளின் பொறாமையை நன்குணர்ந்த ரத்னாவளி, தனக்கு யாது கெடுதிநேரிடுமோவென்றஞ்சி, நருமதை நதியின் தீரத்திலிருந்த ஆலயங்களி லொன்றில் கடவுளைத் தொழுது வருவதாகக்கூறி, பட்டான் நகரத்தைவிட்டு நீங்கினள். மிகவும் கஷ்டத்துடன் பிரயாணஞ்செய்த ராணி ஒருநாள் சாயந்திரம் நருமதா நதிக்குப் பத்து மைல் தூரத்திலிருந்த ஏரிக்கரையிலுள்ள ஒரு தோப்பை யடைந்தாள். அங்கு தங்கியிருக்கும்படி ஸந்யாசியொருவர்கூற அவளும் அவ்வாறே செய்தனள். சிலகாலங் கழிந்தபிறகு ஸத்புத்ரனும் பிறந்தான். தான் யாதொரு கஷ்டமுமில்லாமல் பிரஸவித்த இவ்விடத்திலேயே தங்கியிருக்க உத்தரவளிக்கும்படி ராணி வேண்டினதற்கு, அரசன் இசைந்ததோடு, தடாகத்தைப் பெரிதாகச் செய்து மாட்மாளிகைகளும், கூட கோபுரங்களுமுள்ள சிறந்த நகரம் ஒன்றை அவன் அங்கு கட்டுவித்தான். ராணிக்குப் பிறந்த விசாலதேவனென்னும் புத்திரன் தன் ஜன்மநகரத்திலேயே சிலகாலம் வசித்து ஆட்சிபுரிந்தான். இந்த நகரத்தைக் கட்டின தாபாயென்னும் சிற்பி, தன் பெயராலேயே, தான் கட்டின நகரம் அழைக்கப்பட வேண்டுமென்று வேண்டிக்கொள்ள விசாலதேவன் ஸம்மதித்தான். இதனாலேயே அந்நகருக்குத் தாபாய் என்னும் பெயர் வந்தது.

மற்றும், தாபாய் என்னும் சிற்பி இந்நகரத்தைநிர்மாணித்தபிறகு,விசாலதேவன்,எங்கு தன் பகையாளிகளுக்குத் தாபாய், தன் திறமையைக் காட்டுவானோ வென்று பயந்து, காளிகா மாதாவின் ஆலயத்தின்கீழுள்ள அறையில் சிற்பியை அடைத்து வைத்தானென்றும் சொல்லப்படுகிறது. இப்படிக் காவலில் வைக்கப்பட்ட சிற்பி, ஒரு வருஷம் சிறையிலிருந்தான். பதிபக்தி மிகுந்தஅவன் மனைவி, அக்கால முழுவதும் தன்னுயிர்க்குத் துணிந்து, கணவனுக்கு இரஹஸ்யமாக உணவளித்து வந்தாள். சிலகாலங் கழித்து, இச்சிற்பியின் உதவி அவச்யமா யிருக்கவே, முன்னமே குகையிலடத்துத் தாபாயைக் கொன்றுவிட்டோமென்று விசாலதேவன் மிக்க இரக்கங்கொண்டான். ஆனால் தாபாய் உயிருடன் இருப்பதையறிந்ததும்சந்தோஷமடைந்து, அவனுதவியால் தனக்கு வேண்டிய கார்யங்களை விசாலதேவன் நிறைவேற்றிக் கொண்டானென்று அங்குள்ள கிராமத்தார் இன்னும் கூறுகின்றனர்.

இவைகளெல்லாம் கட்டுக் கதைகளேயன்றி வேறொன்று மில்லையெனச் சரித்ராசிரியர்கள் கூறுகின்றனர். ஆகவே இந்நகரத்தைக் குறித்துக் கூறப்படுபவை நிச்சயமானவைகளென்று சொல்வதற்கில்லை. ஆனால் கி.பி. 746 முதல் 941 வரை ஆண்ட சபோத்காதர்கள் என்னும் அரசர்களுடைய

ஆட்சி தாபாய் வரைக்கும் பரவியிருந்திருக்கலாம். கி. பி. 807-888 வரையில் தென் கூர்ஜரத்தை ஆண்டுகொண்டிருந்த ராஷ்ட்ரகூடர்களின் இராஜ்யத்தின் ஒரு பாகமாக இந்நகரம் இருந்திருக்கக்கூடும். தாபாய்க் கோட்டையை முதலில் கூறியபடி சாளுக்ய அரசர்கள் கட்டியிருக்கலாமென்று எண்ண இடமிருக்கிறது. சாளுக்ய மன்னர்களிற் சிறந்த ஸித்தராஜ ஜயஸிங்கன், கோட்டை கொத்தளங்களையும், வாயில்களையும் கட்டினதாகச் சொல்லப்படுகிறது. இவ்விஷயம் முற்றிலும் நம்புவதற்கு இடந்தராமற் போனபோதிலும், நம் மனுஸ்மிருதியிற் கட்டடங்களின் பாதுகாத்தலைப் பற்றிக் கூறியபடி, அரசன் மேற்கூறிய கட்டடங்களை ஜாக்ரதையாகப் காப்பாற்றிவந்தானென்று நாம் கூறலாம்.

ஸித்தராஜனும், அவனுக்குப் பிறகு குமாரபாலனும் ஆண்டபிறகு சாளுக்யர்கள் பலங் குறைந்தது. தோல்காராணாவின் குமாரனும் வாசேல வம்சத்தைச் சேர்ந்தவனுமான விசாலதேவன் பட்டத்திற்குவந்தான். இவ்விசாலதேவன் (1243-1261 கி.பி.) தாபாயிற் பிறந்தானென்றும், அங்கு ஒரு யாகம் நடத்தினானென்றும் சொல்லப்படுகிறது. மற்றும் பல தேவாலயங்களை நிருமாணித்துக் கீர்த்தியடைந்த தேஜபாலன், வஸ்துபாலன் என்னும் ஜயின ஸஹோதரர்களின் சிலாசாஸனமொன்று கீர்நாரிலுள்ள ஆலயத்திலிருக்கின்றது. வஸ்துபாலன் தாபாயிலுள்ள சில ஆலயங்களை மிகவும் பக்தியுடன் பாதுகாத்தானென்று அச்சாஸனத்தால் நாமறிகிறோம். அங்குள்ள தேவாலயங்களைப் புதிப்பித்தது (புதியவைகளை நிருமாணிக்காமற்போனபோதிலும்) விசாலதேவனேயென்று கர்ண பரம்பரையாக வந்த சரித்ரம் கூறுவதைப் பர்கஸ் என்னும் சரித்ராசிரியர் ஒத்துக்கொள்கிறார். கி. பி. 1308௵த்தில் எழுதப்பட்ட வஸ்துபால சரித்ர மொன்று இருக்கின்றது. இந்நூலின்படி, விசால தேவமன்னனின் மந்திரி தேஜபாலன், கோத்ராவின் அரசனான கோகலனைச் சிறைபிடித்து, கோகலனுக்கும் மற்ற அரசர்களுக்கும் புத்திவரும்படி ஓர் கூண்டிற்குள் ளடைத்துக்கொண்டு தாபாய் நகரத்தையடைந்தான். தாபாய் நகரத்து ஜனங்கள் தம்நகரத்தருகே வஸித்துக்கொண்டிருந்த சூறையாடும் பகைவர்களுக்குப் பயந்துகொண்டிருந்தனர். விசாலதேவன் இவர்களுடைய பயத்தைப்போக்கி, ஸ்ரீபரசநாதருக்கும், ஸ்ரீவைத்யநாதருக்கும் ஆலயங்கள் கட்டுவித்தான்.

ஆனால் 1298ம்௵ கூர்ஜரம் மஹம்மதியர்களின் வசம் சென்றது. வெகு காலமாக ஹிந்துக்களிடமிருந்த தாபாயும் மஹம்மதியர்களின் ஆட்சிக் கடங்கியது. இவர்கள் தாபாய்க்கு வந்ததின் காரணமும் ஒரு கதையால் பரம்பரையாகச் சொல்லப்படுகின்றது. ராணிரத்னாவளியின் காலம் முதற்கொண்டு மஹம்மதியனொருவனும், அந்நகரத்திற்குள் வசிக்கவாவது குளத்தில் ஸ்நானஞ் செய்யவாவது விடப்பட்டதில்லை. ஒருநாள் மஹம்மதியர்களுக்குப் புண்ய க்ஷேத்ரமான மெக்காவிற்குச் செல்லும் ஸையத்புல்லா என்பவன், தன்னன்னையுடன் தாபாயில் தங்க நேரிட்டது. ஊருக்குப் புதியவனாயிருக்கவே, நகரத்தைச் சுற்றிவர அங்குள்ள பெருந்தடாகத்தைக் கண்டு அதனில் ஸ்நானஞ் செய்தனன். இதையறிந்த அவ்வூரார், புல்லாவின் கைகளை வெட்டிவிட்டனர். மைந்தனைத் தன்னுயிரினும் அருமையாக எண்ணியிருந்த முதியவள், பழிவாங்குவேனென்று சபதஞ்செய்துவிட்டுச் சென்றனள். தன்னரசனிடஞ்சென்று, முஸல்மானொருவனைக் கொலைசெய்த பாதகர்களை வதைக்கும்படி அவள் கூற, அவ்வரசனும் 'தாபாய் நகரத்தை முற்றுகையிட்டு நிர்மூலமாக்கினான். முற்றுகை நடந்தபோது இறந்த ஸையத்தின் தாய் மாமாடோகர் பட்டணத்தின் கீழ்வாசலுக்கு வெளியே புதைக்கப்பட்டாள். அவள் மசூதி இன்னமு மிருக்கின்றது.

மஹம்மதியர்களால் சூறையாடப்பட்ட பிறகும் தாபாய் தலையெடுத்து டெல்லி அரசர்கள் (1297—1403), அமெதாபாத்து அரசர்கள் (1403—1573), மொகலாய அரசர்கள் (1573—1760) ஆகிய இவர்களுடைய ராஜ்யங்களின் ஒரு பகுதியாக இருந்தது. மீரத்-இ-ஆமெதீ என்னும் நூலில், ஏறக்குறைய கி. பி. 1571-ல் தாபாய் நகரம் பரோடா ஸர்க்காரில், ஒரு மஹால்கொண்ட



பர்க்கானா (ஜில்லாபோன்ற ஒருபிரிவு) வென்றும், 44 கிராமங்களும், 8,00,009 சாங்கஸிங் (ஒருவகை நாணயம்) தீர்வைகொண்டதாகவும் கூறப்பட்டிருக்கிறது. ஆக்பர் சக்ரவர்த்தியின் அன்பார்ந்த நண்பனும் மந்திரியுமான அபுல்பாஸல் எழுதிய அயீனீ அக்பாரி என்னும் நூலிலும், நிலம், நிலத்தீர்வை, ஸேனாபலம் முதலிய விவரங்களோடு தாபாய்குறிக்கப்பட்டிருக்கின்றது. இதற்குப் பிறகு 1725-ம்௵, கயிக்வாத்தின் படைத்தலைவனான த்ரியம்பக ராவ் தாபேதே தாபாயைத் தன் தலைநகராகக் கொண்டான். பீஷ்வாவின் ப்ரியனான உதாஜி பாவார், இவ்விடத்திலிருந்து தாபேதேயைத் துரத்தினபோதிலும், கயிக்வாத் 1727௵த்தில் தாபாயை மறுபடியும் பிடித்து, தன் மகன் தாமாஜியை அதற்குத் தலைவனாக்கினான். 1732௵ கயிக்வாத் பரோடாவில் கொல்லப்பட்டபோதும், அவனைச் சேர்ந்தவர்கள் தாபாயைத் தம்வசத்தில் வைத்திருந்தனர். அது முதற்கொண்டு தர்ப்பாவதி கைக்வார்களின் ஆட்சியிலேயே யிருக்கின்றது.

ஆங்கிலேயரிடம் தாபாய் கொஞ்சகாலம் இருந்த பொழுது, போர்ப்ஸ் என்பவர் கலெக்டராக 1780—1783௵ வரையில் அங்கு வசித்துவந்தார். அவ்விடத்திலிருந்த அழகிய தடாகமும், குளிர்ந்த சோலைகளும், நிச்சப்தமான தெருக்களும், கவர்னருடைய மாளிகையிலிருந்து தோன்றும் காட்சிகளும் போர்ப்ஸின் மனதை வசீகரித்தன. அவ்வூரைவிட்டுநீங்கும்பொழுது "தாபாய் போய் வருகிறேன்" எனத் துயரத்துடன் கூறிக்கொண்டே சென்றதாகச் சொல்லப்படுகிறது.

புராதன நகராகிய தர்ப்பாவதி, இப்பொழுது மிகவும் மாறியிருக்கின்றது. தர்ப்பாவதி ஸ்டேஷனுக்கடுத்தாற் போலவேயிருக்கும் பஞ்சாலைகளிலிருந்து வெளிக்கிளம்பும் புகை தற்காலதடபுடலை நன்றாய்க் காட்டுகின்றது. ஸ்டேஷனைவிட்டு நீங்கினதும், புராதன தாபாய் நகரம் நம்முன் தோன்றும். பூர்வீக மதில்களின் மிஞ்சின பாகம் ரயில்வே ஸ்டேஷனுக்கு அடுத்தாற்போலயிருக்க இம்மதில்களில் வெட்டப்பட்டவழியாய் நாம் உள்புக வேண்டி யிருக்கின்றது. சிறந்த பலமான கற்களால் கட்டப்பட்ட அரண்களை நாம் பார்க்கும்போது வெகுகாலமாகக்காப்பாறற்றுக்கிடந்தும்அவைமாறுதலில்லாமல் இருப்பதுநமக்குஓர்ஆச்சர்யமாகவிருக்காது. மேற்கே திரும்பினால் பரோடாவாயிலை அடைவோம். இந்நகரில் நாம் அழகிலும், பலத்திலும், சிற்ப சாஸ்திர நிதர்சனங்களாய் விளங்கும் நான்கு கோட்டைவாயில்களைக் காண்போம். இவைகளில் ஒன்று இலமாகவும், மற்றவை மூன்றும் நல்ல ஸ்திதியிலுமிருக்கின்றன. மஹாதேவருடைய ஆலயம் இலமடைந்து விட்டது. ஆனால், காளிகா தேவியின் கருணாலயம் இன்னமும் பக்தர்களுடைய சேவைக்கிடந்தந்து விளங்குகின்றது. இவ்விடத்திலும் தற்கால ஓவியன் தன்திறமையைக் காட்டியிருக்கிறான். தாபாய் நகரத்து மூன்றாம் காட்சி சுற்றளவில் முக்கால்மைலும், நாலு பக்கங்களிலும் கற்படிகளுங்கொண்டு அவ்வூரிலுள்ளோருக்கு ஸ்நான கட்டமும் பொதுஸ்தலமுமாகும் தடாகமே. அதன் கீழ்ப்பாகத்திலுள்ள சிறுதிட்டையில் பாதி நீரிலமிழ்ந்த கோயிலிருக்கின்றது. இதற்குப் பின்னிருக்கும் உத்யானத்திலுள்ள வசதியில் பழைய முஸல்மான் தலைவர்கள் வசித்துவந்தனர். ஐந்துலக்ஷம் ரூபாய் குளம் வெட்ட செலவாயிற்றென்றுகேட்டதாகப்போர்ப்ஸ்எழுதியிருக்கிறார். குளத்தின் அழகைக் கவனிக்கும்போது ரூபாய்கள் அபூர்வமான அக்காலத்திலும், இத்தொகை அதிகமாகாது.

* * * *

தர்ப்பாவதியைப்போன்ற சில நகரங்கள் புராதனமாயினும், அந்நகரங்களின் பூர்வீக நிலைமையையும், அப்பொழுது வாழ்ந்த சீலர்கள் சிலரையும்பற்றி நினைக்கும் இந்தியன் எவன்தான் மகிழ்ச்சியடையான்?

இது மாடர்ன் ரெவ்யுவிலுள்ள வியாஸமொன்றைத் தழுவி எழுதப்பட்டது.

சென்னை, பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதர் பிரஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய வே. சாமிநாதய்யரவர்கள்:—** நீதிகளைக் கற்பிக்கும் சிறு கதைகளும், புதிய நாடகங்களும், சில மொழிபெயர்ப்புகளும், தற்காலத்திற்கேற்ற நாகரீக விஷயங்களும் இப்பத்திரிகையில் மிக எளியநடையில் எழுதப்பெற்றிருக்கின்றன.

## நாணயமும், அவற்றைச் செய்யும் விதமும்

### COINS AND HOW TO MAKE THEM

வெகுநாளாய் நாணயங்கள் வழங்கி வருகின்றன என்பது யாவருமறிந்த விஷயமே. 2600 வருஷங்களுக்கு முன்னிருந்த நாணயங்கள் இப்பொழுது கண்காட்சிச் சாலைகளிலிருப்பனவாகத் தெரியவருகிறது. நாணயங்கள் ஏற்படுவதற்குமுன், மனிதர்கள் சாமான்களை மாற்றிக் கொண்டிருந்தார்கள். தம்மிடமிருக்கும் சாமான்களைகொடுத்துஅதற்குப்பதிலாய்த்தமக்குதேவையானசாமான்களை வாங்கிக்கொண்டு வந்தார்கள். இவ்விதமாகவே இன்றைக்கும் சில நாகரீகமற்ற ஜனங்கள் செய்துவருவதாகத் தோன்றுகிறது. சாமான்களை மாற்றிக்கொள்வது சுலபமான காரியமல்ல. ஒரு சாமான் பளுவாயிருக்கும்; ஒன்று இலேசாயிருக்கும். தனக்குவேண்டும் சரக்கைவைத்திருப்பவன் தான் கொடுக்கும் சரக்கை ஏற்றுக்கொள்ள இஷ்டமில்லதாவனுயிருக்கலாம். ஒரு இடத்திலிருந்து வேறு இடத்திற்கு வஸ்துக்களைக் கொண்டுபோகும் சிரம மதிகம். பொருள்களை மாற்றிக் கொள்வதில் நாம் யாருடன் வியாபாரம் செய்கிறோமோ அவரிடம் நமக்குவேண்டிய பொருள் இருக்கவேண்டும். அவரும் அதற்குப் பதிலாக நாம்கொடுக்கும் பொருளைப் பெற்றுக் கொள்ளவேண்டும். மனிதர்களுக்கு அவசியமான பொருள் சுவல்பமாயிருந்தாலும் சமீபத்திலிருப்பவர்களுக்குத்தான் இவ்விதம் செய்வது சாத்தியமாயும் சுலபமாயுமிருக்கும். ஒரு இடமிருந்து ஊர் ஊராய்ச் செல்லும் வியாபாரிகளுக்குத்தான் நாணயத்தின் அவசியம் நன்கு புலப்படும். நாணயங்களில்லாமல்வியாபாரம் செய்வது அசாத்தியமாயுமிருக்கும். இக் காரணங்கள் பற்றியே நாணயங்கள் அவசியமாகக் கருதப்பட்டன. பணத்தின் முக்கிய உபயோகம், சாமான்களை மாற்றிக் கொள்வதற்கு ஏற்ற சாதனமாயிருப்பதுதான் (Medium of Exchange). முன்னர், நாட்டுப்புறங்களி லெல்லாம் வேலைசெய்வதினாலோ அல்லது தான்யங்களினாலோ தான் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்டன. தற்காலத்திலுங்கூட கிராமாந்தரங்களில், கொல்லன், தச்சன், முதலியவர்களுக்கு வயலில் தான்யம் கொடுக்கிறது வழக்கம். கலப்பை முதலிய கருவிகளைக் குடியானவர்களுக்கு அவர்கள் செய்து கொடுக்கவேண்டும். நார்மன் ஜாதியார் இங்கிலாந்தைஜயித்த பிறகு சிலர் நாணயங்களை உபயோகிப்பதும், சிலர் மேற் கூறியவாறு பொருள்களை மாற்றிக் கொள்வதுமாகவிருந்தனர். அக்காலத்திலும்சிறியவெள்ளிநாணயங்கள் ஏற்பட்டிருந்தன. அவைகளை வியாபாரிகளும் லண்டன் முதலிய பெரிய பட்டணங்களிலுமிருந்தவர்களுந்தான் உபயோகித்து வந்தார்கள். ஆக்பர் நாளிலும் ஜனங்கள் வரிக்காக இவ்வளவு தான்யம் கொடுக்க வேண்டுமென்ற விதியிருந்தது என்று சரித்திரங்கள் கூறுகின்றன. அந்த நாளில் அடிக்கப்பட்ட நாணயங்கள் கண்ணிற்கு ஒழுங்காகக்காணப்படுவதில்லை. நிறைவித்தியாசமாயிருக்கும்; கணக்குகள் வைப்பதும் நாணயங்களைச் சரிபார்த்து வாங்குவதும் வெகு கடினமாயிருந்தக்கால் இங்கிலாந்தில் ஏற்பட்டநாணயம் வெள்ளிப் பென்னி ஒன்றுதான். அரைப்பென்னியும் பார்திங்கும்13-வது நூற்றுண்டுவரைநாணயங்களாக ஏற்படவில்லை. அதுவரைவெள்ளிப்பென்னியைத் துண்டுகளாக்கி அவைகள் செய்யப்பட்டன. மூன்றுவது ஹென்றிதான் தங்க நாணயம் அடித்தது. மூன்றுவது எட்வார்ட் நாளில்தான். தங்க நாணயங்கள் பிரபலமாய் உபயோகிக்கப்பட்டு வந்தன. ஏழாவது ஹென்றிதான், ஷில்லிங்கையும் பவுன்களையும் ஏற்படுத்தினது. நாணங்களை அக்காலத்தில் நறுக்கி எடுத்து விடுவார்கள். ஓரங்களெல்லாம் அரும்பு அரும்பாக செய்யப்படவில்லை. நாணயங்களைக் தேய்த்து வெள்ளியை எடுத்து விடுவார்கள். மோசமான நாணயங்களை உபயோகிக்கிறவர்கள் வலது கையை ஒடித்துவிடுகிறதென்று முதலாவது ஹென்றி ஏற்பாடு செய்தார்.

அநேக இடங்களில் நாணயங்கள் அடிக்கப்பட்டன. அநேக பிரபுக்களுக்கு (Barons) நாணயமடிக்கும் சுதந்தரமிருந்தது. இக் காரணங்கள்பற்றி நாணயங்கள்செய்வதைச்



சரியானபடி மேற்பார்வை பார்க்கக் கூடவில்லை. பல காலங்களில் பல வஸ்துக்கள் நாணயங்களுக்காக உபயோகப்பட்டுவந்தன. ஆதிகாலங்களில் தோல் நாயணங்கள் இருந்ததாகக் கேள்விப்படுகிறோம். தற்காலத்தில் தங்கம், வெள்ளி, செம்பு, நிக்கல் இவைகள்தான் நாணயங்கள் செய்வதற்கு உபயோகப்படுத்தப் படுகின்றன. தங்கத்தை உபயோகிக்கிற தேசத்தின் நாணயங்களின் மதிப்புத்தான், என்றும் குறையாது. நாணயங்களுக் குபயோகிக்கப்படும் வஸ்துவானது அபூர்வமாயும் இலேசாயும் அதிகநாள் அழியாம லிருக்கக்கூடியதாயும், சுலபமாய்க் கொண்டுபோகக் கூடியதாய்ம் சுத்தமாயு மிருக்கவேண்டும். இக்காரணங்கள் பற்றியே தங்கமும் வெள்ளியும் நாணயங்களுக்கு உபயோகிக்கப் படுகின்றன. கொஞ்சம் சரக்கு வாங்குபவர்களும் ஏழை ஜனங்களும் மதிப்பதிகமான நாணயங்களை உபயோகித்தல் சாத்திய மில்லாமையால், சிறிது மதிப்புள்ள நாணயங்களும் அவசியம். அதுபற்றியே, செம்பு வகையரா நாணயங்கள் செய்யப்படுகின்றன. நாம் உபயோகிக்கும் பவுன்கள் எவ்வாறுகச் செய்யப்படுகின்றன என்று இச்சஞ்சிகையில் கவனிப்போம். அவைகளைப்போல்தான் ரூபாய் நாயணங்களும் செய்யப்படுகின்றனவென்று நாமறியலாம். நாணயம் செய்யும் சுதந்தரம் அரசர்களுக்கு மட்டுந்தானுண்டு. ஒவ்வொரு அரசனும் கிரீடந்தரித்துக் கொள்ளும்பொழுது புதுநாணயங்கள் அடிக்கப்படும். ஆனல் இங்கிலாந்தில், எட்டாவது ஹென்றி காலம்வரை, சில அத்தியக்ஷ குருக்களுக்கும், சில பிரபுக்களுக்கும் இச்சுதந்தரம் இருந்தது. நாணயங்கள் செய்துகொடுப்பதில் லாபம் பலகாலங்களில் பலவிதமாயிருந்தது. ஆறுவது ஹென்ரி நாளில் பவுனுக்கு 6-பென்ஸாகவும், முதலாவது எட்வர்ட் நாளில் பவுன் 1-க்கு 1ஷில்லிங் $2\frac{1}{2}$ பென்ஸாகவு மிருந்தது. பிற்பாடு தங்க நாணயங்கள் செய்து கொடுப்பதற்கு லாபம் ஒன்றும் எடுத்துக் கொள்வதில்லை. இங்கிலாந்தில் அடிக்கப்படும் பவுன்களெல்லாம் லண்டன் டவருக்கு அருகாமையில் தேம்ஸ் நதிக்கரையில் அரசாங்கத் தங்கசாலையில் (Royal Mint) அடிக்கப்படுகின்றன. ஆஸ்திரேலியாவுக்கு வேண்டிய பவுன்கள் அடிக்க ஸிட்னியில், (Sydney) 1853-வது வருஷத்திலும் மேல்போர்னில் (Melbourne) 1869-வது வருஷத்திலும் தங்கசாலைகள் ஏற்படுத்தப்பட்டன. லண்டன் நகரத்துத் தங்கசாலையான துபொக்கிஷதார் (Chancellor of the Exchequer) என்ற உத்தியோகஸ்தரின் அதிகாரத்திற்குட்பட்டது. இவருக்குத் தங்கசாலையின் எஜமானனென்று பெயர். இங்கிலாந்தில் கவர்ன்மெண்ட் மாறும்பொழுதெல்லாம் இவர் மாறவேண்டியவ ராகையால்அவருக்குக்கீழ் டிப்டிஎஜமான் (Deputy Master) ஒருவருண்டு. இங்கிலாந்தில் தங்கத்தைக் கொண்டுபோய்க் கொடுத்தால் அதை நாணயமாக்கிக் கொடுக்கவேண்டியது தங்கசாலையின் கடமை. இந்தியாவிலும் முன் இவ்விதமாகத்தா னிருந்தது. கர்ஸன் (Curzon) பிரபு நாளில்தான் ஜனங்களுக்கு நாணய சாலைகளில் வெள்ளியைக் கொடுத்து ரூபா யாக்கிக்கொள்ளும் சுதந்தரம் அநேக காரணங்களை முன்னிட்டு எடுத்துவிடப்பட்டது. ஆனல் பணம் பல இடங்களில் பிரபலமாய் உபயோகப்படுவதற்கும் அரசருக்குச் சுலபமாய் வரி வசூலிப்பதற்கும் அநேக ஊர்களில் நாணயங்கள் அடிக்கப்பட்டு வந்தன. ஒரு விதமான அச்சுகள்தான் எல்லாத் தங்க சாலைகளிலும் உபயோகிக்கப்பட்டன; என்றலும், அச்சுகள் சுத்தமாயில்லாத காரணத்தினல் நாணயங்களும் சுத்தமாக இருப்பதில்லை; கெடுத்து விலை மதிப்பைக் குறைப்பதும் சுலபமாயிருந்தது. ஆகவே, அரசர்களுக்கு வரவேண்டிய தொகை சரியாக வந்ததாவென்று பார்க்க வேண்டியு மிருந்தது. ஒவ்வொருவரும் எவ்வளவு செலுத்த வேண்டுமோ அவ்வளவு தொகையையும் பென்னிகளாகச்செலுத்தச் செய்தால் கெட்ட நாணயங்கள் அநேகம் வரும். ஒவ்வொரு நாணயத்தையும் பரிசோதிப்பதும் சாத்தியமாகாது. ஒவ்வொருவரும் செலுத்தவேண்டிய ஒவ்வொரு பவுனுக்கும் ஒரு ஆறு பென்ஸ் சேர்த்துச் செலுத்த வேண்டுமென்று முதலில் தீர்மானிக்கப்பட்டது. இதுவும் போதுமானதாகக் காணப்படவில்லை. ஆகவே, ஒவ்வொரு பவுனையும்நிறுத்துக்குறைந்ததைச்செலுத்த

வேண்டியவர்களிடம் வசூல் செய்தார்கள். இல்லாவிடில் அவர்களிடமிருந்து பவுன் ஒன்றுக்கு ஒரு ஷில்லிங் வீதம் சேர்த்து வாங்கி விடுவார்கள். இவ்விதம் செய்வது நிறைக்குப் போதுமானதா'யிருந்தாலும் நாணயங்களைக் கெடுத்து விடுவதைத் தடுக்கவில்லை. முதலாவது ஹென்ரி காலத்தில் வேறு விதம் செய்தார்கள். ஒருவர் செலுத்தும் பணக்குவியலிலிருந்து 44 ஷில்லிங் மதிப்புள்ள நாணயங்களைஎடுத்துப் பரிசோதிப்பவனிடம் ஒரு பவுண்டு நிறையுள்ளதைக் கொடுக்க அவன் அவைகளை உருக்குவான். சுத்தமாயாகும்வரை உருக்கி மறுபடி நிறுப்பான். நிறை சரியாயிருந்தால் நாணயங்கள் சரியானதாகக் கருதப்படும். இல்லையேல், ஒரு பவுண்டுக்கு எவ்வளவு குறைவோ அவ்வளவு வீதம் அவன் செலுத்தவேண்டியது. இவ்விதம் பலவித கஷ்டங்களை அனுபவித்து வந்தவர்களுக்குத் தற்காலம் நாணயங்கள் செய்யப்படும் விதத்தையும் அவைகளின் அழகையும் ஒன்றுக்கொன்று வித்தியாசமில்லாமலிருப்பதையும்,மயிரிழைகூட நிறை பேதமில்லாம லிருப்பதையும் பார்க்க, முன் நாணயங்களிருந்த நிலைமையே தோற்றது. 16-வது நூற்றுண்டுவரை உபயோகிக்கப்படும் உலோகம் துண்டுகளாக அடிக்கப்பட்டும்,சதுரங்களாக நறுக்கப்பட்டும், பின் உருண்டைவடிவமாகச்செய்யப்பட்டும், பின் இரண்டு உருக்கு வார்ப்புகளின்கீழ் வைக்கப்பட்டு,ஒரு செம்மட்டியால் அடிக்கப்பட்டும் வந்தன. இவ்வாறுகச்செய்யப்படும் நாணயங்கள் பழுதுள்ளவைகளாகவே காணப்பட்டன. இப்பொழுது நாணயச் சாலையில் தங்கமானது முத்திரைக் கட்டிகளாக(Ingots)கொண்டுவரப்படுகின்றன. ஒவ்வொரு தங்கக் கட்டியின் (Ingot) நிறை 200 முதல் 400 அவுன்ஸ் வரையிலிருக்கும். நாணய சாலையில் வந்ததும், ஒவ்வொரு கட்டியும் பரிசோதிக்கப்படுகிறது. கணக்குப்படி செம்புசேர்த்துப் பின் காரியத்தில் செய்த 1200 அவுன்ஸ்கள் போடும்படியான குவளைகளில் இக்கட்டிகள் உருக்கப்படுகின்றன. உருக்கின் பின், பக்கங்களிலிருக்கும் வார்ப்புகளில் (Moulds) ஊற்றப்படும். இவ்வார்ப்புகள், தங்கத்தை 21 அங்குல நீளமும் $1\frac{3}{4}$ அங்குல அகலமும் $\frac{3}{4}$ அங்குல கனமும் உள்ள துண்டுகளாகச் செய்து விடுகின்றன. இத்துண்டுகள் நீராவியால் ஓட்டப்பட்ட ஜோடி சக்கரங்களின் இடையில் சேர்க்கப் படுகின்றன. இச்சகடுகள் கடினமான உருக்கினால் செய்யப்பட்டவை. துண்டுகளிவ்வாறு உருகும் பொழுது மெல்லியவைகளாயாகும். எவ்விதமான கனமும் நீளமும் தேவையோ, அவ்விதம் செய்யப்பட்டவுடன் அவைகளைத் துண்டுகளாகச் செய்வார்கள். இத்துண்டுகளுக்குப் பில்லெட்ஸ் (Fillets)என்று பெயர். பரிசோதனைக்காரனுக்கு ஒரு துண்டு அனுப்பப்பட்டு அவன் ஒரு நாணயத்தை நறுக்கிப்பார்த்து ஒப்புக்கொண்டதின்மேல் வேறொரு இயந்திரத்திற்கு இந்தத் துண்டுகள் கொண்டுபோகப்படும். அந்த இயந்திரம் துவாரமிடு மியந்திர மென்னலாம். ஸ்டாம்புகளுக்குத்துவாரமிட நாமுபயோகிக்கும் இயந்திரத்தில் ஒரு கெட்டிக் கடிதத்தைக் கொடுத்தால் எப்படித்துவாரம் செய்கையில் ஒரு வட்டமான துண்டு கீழ் விழுமோ, அவ்விதமாகவே இந்தத் தங்கத் துண்டுகளிலிருந்து பவுனோ அரைப்பவுனோ அல்லது வேறு நாணயமோ அவைகளுக்குத் தக்க அளவின்படிக்கும் வட்டவடிவமாகவும் அந்த இயந்திரம் செய்துவிடுகிறது. ஓரங்களி லிருந்து விழுந்த துண்டுகளெல்லாம் மறுபடியும் உருக்கப்படுகின்றன. இந்த வட்டவடிவமான துண்டுகளுக்குப் பிளாங்குத் துண்டுகள் (Blank Pieces) என்று பெயர். ஏனெனில், அவைகளில் எழுத்துக்கள் ஒன்றும் அடிக்கப் படவில்லை. இந்தப் பிளாங்குத் துண்டுகள் மறுபடியும் காய்ச்சிப் பதப்படுத்தப்பட்டுக் கந்தகத் திராவகத்தில் நனைக்கப்பட்டுச் சூடாயிருக்கும் இரம்பத்தூளில் காய வைக்கப்படுகின்றன. பிறகு இத்துண்டுகள் (Milling Machine) அரும்பிடுமியந்திரத்துக்கு அனுப்பப்படுகின்றன. இந்த யந்திரம் துண்டுகளின் ஓரங்களை அரும்பு அரும்பான வரந்தைகளாக்குகிறது. இதற்கப்பால் இரு பக்கங்களிலும் உருவமும் எழுத்துக்களும் அடிப்பதற்காக நாணய அறைக்குக் கொண்டு போகப்படுகிறது. நாணயங்களில் உருவத்தைப் பதிக்கச் செய்யும் இயந்திரத்தி லிருக்கும் ஒரு உருக்குத் தட்டில் ஒரு துவாரமுண்டு. அத்துவாரத்தினளவு நாணயத்தினளவுக்குச் சொல்பம் அதிகமா யிருக்கும். நாணயம் அதின் வழியாய்ச் செல்லும். செல்லுகையில் மேல் ஒரு அச்சில் நாணயத்தின் ஒரு பக்கத்தில் அடிக்கவேண்டிய எழுத்துகள் எழுதப்பட்டிருக்கும். கீழ் ஒரு அச்சில் இன்னொரு பக்கத்தில் அடிக்கப்பட வேண்டிய உருவம் பதிக்கப் பட்டிருக்கும். நாணயம் துவாரம் வழியாக விழுந்தவுடன் மேல் அச்சு நாணயத்தை, கீழ்அச்சின்மேல் மிகப்பலத்துடன் அழுத்தும். தங்கம் உருக்கைக் காட்டிலும் மெல்லிய தாகையால் பலத்துடன் அழுத்தப்படும் பொழுது இரு பக்கங்களிலும் எழுத்துக்களும் உருவங்களும் அதில் நன்ருய்ப்பதிக்கப்படுகின்றன.உடனே உலோகத்தைக்கொஞ்சம்குறைக்கவே நாணயங்கள் சரியான விதமாய் வெளியே எடுக்கப்படும். இவ்விதம் நிமிஷம் ஒன்றுக்கு120நாணயங்கள் தயாராகும். பிறகு இந்த நாணயங்கள் திராசில் நிறுக்கப்படும். ஒவ்வொரு நாணயமும் இவ்வளவு நிறை இருக்கவேண்டியதென்று சட்டமுண்டு. இந்நாணயங்களை நிறுக்க 1864-வது வருஷத்தில், வில்லியம் காட்டன் என்ற ஒருவர் ஒரு அற்புதமான திராசைச் செய்தார். இத்திராசில் நாணயங்களைப்போட அவைகளை மூன்று விதமாகத் தானகவே பிரித்துவிடும். மிகவும் லேசானதை ஒரு புறமாகவும், மிகவும் கனமானதை ஒருபுறமாகவும், சரியாயிருப்பவைகளை ஒரு புறமாகவும்தள்ளிவிடும். இதுநிமிஷத்திற்கு 23 நாணயங்கள் நிறுக்கும்.

ஆனல் சரியாயில்லாதிருப்பவைகள் மிகவும் சொல்பமாகத்தானிருக்கும். ஏனெனில் இயந்திரங்களெல்லாம் வெகு நுட்பமாக வேலை செய்யும். சரியாயில்லாதவைகளையெல்லாம் மறுபடியும் உருக்க வேண்டும். பிளாங்கு துண்டுகளின் நிறையும், இந்நாணயங்களின் நிறையும் சரியாயிருக்கிறதாவென்றுபார்ப்பார்கள். இல்லாவிடில் நாணயங்கள் கீழே விழுந்து கிடக்கிறதாவென்று தேடிப்பார்ப்பார்கள். இங்கிலாந்தில் பவுன் நாணயங்களெல்லாம், அநேகமாய் இங்கிலாந்து பாங்கிக்கே அனுப்பப்படுகின்றன. முக்கியமாய் அப்பாங்கியிலிருந்துதான் முத்திரைத் தங்கக்கட்டிகள் வருகின்றன. ஒவ்வொருவரும் தங்கத்தை அனுப்பி நாணயமாக்கிக் கொள்ளலாம். ஆனல் கொஞ்ச காலம் தாமதமாகும். தங்கக்கட்டியை தங்கசாலையில் கொடுத்தால் ஒரு அவுன்சுக்கு £ 3-17-$10\frac{1}{2}$ வீதம் தேறும். ஆனல் இங்கிலாந்து பாங்கி ஒரு அவுன்ஸுக்கு £ 3-17-9 உடனே கொடுக்கும். நஷ்டம் சொல்பமாகையால் ஜனங்கள் தங்கள் தங்கக் கட்டிகளை இங்கிலாந்து பாங்கியிலேயே கொடுத்து விடுவார்கள். வெள்ளி நாணயங்கள் 100 பவுன் மதிப்படங்கியவைகளிலும், வெண்கல நாணயங்கள் 5 பவுன் மதிப்புள்ளவைகளிலும் கட்டப்பட்டுத், தேவையானபொழுது வெளியி லனுப்பப்படும். ஒவ்வொரு அரசனும் பட்டத்துக்கு வரும் பொழுது முத்திரைகள் மாற்றப்படும். வருஷா வருஷம், முத்திரையில் வருஷம் மட்டும் மாறுதல் செய்யப்படும். இப்படி நாணயங்களடிக்கும் சுதந்தரம் அரசர்களுக்குத்தானுண்டு. இராஜாதிபத்யத்தின் முக்கியஅங்கங்களில் இதுவும்ஒன்று. வேறெவரும் நாணயம் அடிக்கக்கூடாது. அடித்தால் அது பெருங்குற்றமாகும். 1905-வது வருஷம் மட்டும் இங்கிலாந்துத் தங்கசாலையிலிருந்து £ 6,500,000 தங்க நாணயங்களும், 510, 095 பவுன் மதிப்புள்ள 12,316,280 வெள்ளி நாணயங்களும், 100,325 பவுன் மதிப்புள்ள 31,672,800 வெண்கல நாணயங்களும் செய்து வெளியிலனுப்பப்பட்டன. நேரில் போய்ப்பார்த்தால் இந்த இயந்திரங்கள் வேலைசெய்யும் விதம் மிகவும் ஆச்சரியமாயிருக்கும்.

ஜி. சுந்தரேசய்யர். பி.ஏ., எல்.டி.

---

போதினியைப்பற்றி லோகோபகாரி எழுதுவது.—* * * இதில் ஸ்திரீ புருஷ, பாலகபாலிகைகளுக்கு மிகவும் யுக்தமான விஷயங்கள் எழுதப்படுகின்றன. இவை தமிழ்நாட்டு ஜனங்களுக்கு மிகவும் பிரயோஜனத்தை விளைவிக்கும் என்பதிற் சந்தேகமில்லை. வியவசாஸம், வித்யாபிவிருத்தி, ஸ்திரீகளின் பாதிவிரத்யம், அநேக கதைகள், தேச விதேசீய விஷயங்கள்வெகு நன்ருய் வெளிவந்திருக்கின்றன.

# இயற்கைப் பால போதம்

## FIRST LESSONS IN NATURE

பாலர்க்குப்போதிக்கும் முறைகளில் கிண்டர்கார்ட்டன் போதனுமுறையே சிறந்ததாகும். குழந்தைகளின் சுபாவகுணங்களுக்குத் தக்கபடி அறிவை ஊட்ட வழி தேடுவதே கிண்டர்கார்ட்டன் உபாத்தியாயரின் கடமை. அவ்வழிகள், கட்டாயப் பக்ஷமான கடின பாட முறையாயிருக்கலாகாது. விளையாட்டின் மூலமாகவே அறிவை விருத்தி செய்ய முயலவேண்டும். உபாத்தியாயர் குழந்தைகளோடு பேசி, சம்பாஷணையினுலும் தொழில் முறையினுலும் எழுத்து, படிப்பு, கணிதம் இவைகளைப் போதிக்க வேண்டும்.

மேற் சொல்லிய மூவகைத்தான் அறிவும் பழக்கமும் போதுமா? மற்றைய அறிவு விருத்தியாக வேண்டாமா? என்ற கேள்வி பிறக்கிறது. மனிதன் தன்னைச் சுற்றிலுமிருக்கும் பொருள்களைப் பற்றி ஆராய்ச்சி செய்தாலொழிய, லோக வியவகாரத்தையறிய இடமிருக்காது. ஆகையால் லோக விவகாரங்களை அறிவிக்கும்பொருட்டு இயற்கை யறிவு விருத்திக்காகப் பூமி சாஸ்திரம் கொஞ்சம் கற்பித்துக் கொடுப்பது அவசியமாயிருக்கிறது. இந்த சாஸ்திரம் எவ்வாறு ஆரம்பிக்கலாம்? எந்தெந்த வகுப்புகளில் என்னென்ன விஷயங்கள் சொல்லி வைக்கலாம்என்பதைமுந்தித்தெரிவித்துக்கொள்வதவசியம். பூமி சாஸ்திரம், சாதாரணமாய் மூன்ருவது, நான்காவது வகுப்புகளுக்குப் பிரத்தியேகமாய் எடுத்துப் போதிப்பது வழக்கமா யிருக்கிறது. ஆனபோதிலும், சாஸ்திரத்துக்கு வேண்டிய பீடிகை பாடங்களாகப் பின் வருவனவற்றைக் கீழ் வகுப்புகளுக்குக் கற்பிக்கலாம். இங்கு கிண்டர்கார்ட்டன் வகுப்புகளாகிய பாலர், ஒன்ருவது வகுப்புகளுக்குப் பூமி சாஸ்திர விஷயமாய் விவரிப்போம்.

### குழந்தையும் வீடும்

பள்ளிக்கூடம் வரு முன்னமேயே குழந்தைகளுக்குப் பலவித மனப்பயிற்சி உண்டென்பது உபாத்தியாயர் முதலில் அறிய வேண்டும். தாய், தகப்பன், உற்ருர், வேற்ருர் என்று குழந்தை விவரிக்கும்; தன் வீடு எதென்று அறியும்; வீட்டுப் பொருள்களின் பெயர்கள், உபயோகங்கள், தெருவிலும், வீட்டிலும், தோட்டத்திலுமிருக்கும் செடி, கொடிகள், மரம் முதலியன; ஆடு, மாடு முதலிய கால் நடைகள்; காகம், கிளி, கோழி, வாத்து; பாம்பு, பல்லி, தேள், எறும்பு; ஈ, கொசு முதலியவைகளையும் ஒருவாறு அறியும். தன் வீடிருக்கும் தெரு, அதில் தன்னேடு விளையாடும் தோழர்கள், அவர்களின் வீடுகள் இவைகள் சாதாரணமாய் எந்தக் குழந்தைக்கும் நன்ருய்த்தெரிந்திருக்கும். ஆகையால் மேற்கூறிய விஷயங்களைப்பற்றி சம்பாஷிப்பதே பூமிஅறிவுக்குப் முதல் அப்பியாசமாகும்.

### குழந்தையும் பள்ளிக்கூடமும்

பள்ளிக்கூடம் என்பது வீடு போன்ற ஒரு கட்டிடம் தான். அதில் சற்றேறக்குறைய தன் வயதுள்ள குழந்தைகளையும் அவர்களுக்குத் தோழனுக இருந்து கற்பிக்கும் உபாத்தியாயரையும் காணலாம். அங்கு இருக்கும் சாமான்களும், பெஞ்சு, நாற்காலி, போர்டு, சாக்கு முதலியவைகள் வீட்டுச் சாமான்களினின்றும் வித்தியாசப்பட்டுக் காணும் வஸ்துக்களை வைத்துக் கொண்டு வீட்டில் விளையாடினதுபோல, பள்ளிக்கூடங்களிலும், சிலவித கிண்டர்கார்ட்டன் விளையாட்டுக்கள் விளையாடுகிருர்கள். பள்ளிக்கூடக் கட்டிடம், சாமான்கள், விளையாடுமிடம், விளையாட்டுச் சாமான்கள், இவைகளைப்பற்றிச் சம்பாஷித்துக் குழந்தைகளின ஞாபக சக்திகளையும், ஒத்திட்டுப்பார்க்கும் திறமையையும் விருத்திசெய்யலாம். பள்ளிக்கூடத்தையும் வீட்டையும் சம்பந்தப்படுத்தும் சந்து, தெருவு, சாலைகள், வீடுகள், சாலைமரங்கள், இவைகளைப்பற்றிப் பேசி விஷயங்களை உற்றுநோக்கி ஞாபகம் வைக்கும்படிச் செய்வதோடும் கூட, இவ்வித மார்க்கங்கள் மனிதர்கள் செல்லவும், வண்டிகள் போகவும், போக்கு வரவுக்குச் சாதனங்களாகவும் இருப்பதை அறிவிக்கலாம்.

குழந்தைகளுக்கு முன், பின், வலம், இடம்,மேல்கீழ் என்பவைகளை அறிவிப்பது



அவசியமானது. இவைகளைக்கொண்டுதான் வஸ்துக்களுக்கும் தனக்கும் இருக்கும்,சம்பந்தத்தையும் இட மாறுபாடுகளையும் அறியவும் கூடும். , திசைகள் நான்கையும் பிறகு கற்பிக்கலாம். பகல், இரவு என்பதைச் சூரியோதயம், சூரியாஸ்தமனம். இவைகளைக் கவனிக்கச்சொல்லித் தெரிவிக்கலாம். பகல் வெளிச்சத்திற்கும் இரவின் இருட்டிற்கும் காரணம் கேட்கலாம். இரவில் சொற்ப வெளிச்சத்துடன் மின்னும் நக்ஷத்திரங்களையும் சில நாட்களிற் தோன்றும் நிலவையும் கவனிக்கச்சொல்லி நக்ஷத்திரங்களும், சில நாட்களிற் சந்திரனும் இரவில் வான மண்டலத்திற் தோன்றுவதைக் கற்பிக்கலாம்.

### வானமண்டலம் என்பது யாது?

பகலிலும் இரவிலும் அதன் தோற்றமும் நிறமும் கவனிக்கலாம். மேகங்கள், அவைகளின் ஓட்டம் அல்லது கதிகள், வெண்மேகம், செம்மேகம், கறுமேகம், இவைகள் எப்பொழுது வானத்திற் தோன்றும் என்பதையும், காற்று, மழை, மின்னல், இடி இவைகளின் செய்கைகளையும் சம்பாஷணை மூலம் விவரிக்கலாம். மேற்சொல்லியவைகளில் உட்புகுந்து காரணங்களை விவரிக்கப் புகலாகாது. சம்பவங்கள் மாத்திரம் கவனித்து உற்றுநோக்கப் படவேண்டு மென்பவைதாம் இப்பிரதம பாடங்களின் கருத்து.

### மழைஜலம்

மழை பெய்கிறது, ஜலத்தைப் பூமி உருஞ்சுகிறது. பிறகு தெருவில் ஜலம் வழிந்தோடுகிறது. சாக்கடை முதலிய கால்வாய்கள் பெருகி ஊர் வாய்க்கால் அல்லது ஆற்றினிடம் சேர்ந்து பிரவாகிக்கிறது. ஊர்க்குளம் அல்லது ஏரி நிறைகிறது. மழை ஜலத்தின் நிறம், வழிந்தோடும் ஜலத்தின் நிறம்,ஆற்று ஜலம் குளத்து ஜலம் இவைகளின் நிறம், இவைகளைப் பரீக்ஷித்து உற்றுநோக்கும் படிச்செய்யலாம். மேகத்துக்கும் மழைக்கும் இருக்கும் சம்பந்தத்தையும் கவனிக்கச் சொல்லலாம்.

### கடல்

குழந்தைகளிருக்குமிடம் கடலோரமாயிருந்தால் கடற்கரைக்கு அழைத்துச் சென்று மணற்கரை, உப்பு ஜலம்,அலைகள், கடலில் வசிக்கும் மீன்கள், நத்தை, நண்டு முதலிய ஜீவராசிகளையும் உற்று நோக்கச் செய்யலாம். கடலுக்கு அக்கரை தெரியாததையும் கடலையே நம்பிப்பிழைக்கும் செம்படவர்கள், கப்பலோட்டிகள், வர்த்தகர்கள் இவர்களைப்பற்றியும் தெரிவிக்கலாம்.

### ஊர்மலை, குன்று

சாலைகள் கெட்டிப்படுத்தக் கற்கள்வேண்டும்படி, தூண், அம்மி, குழவி, உரல் முதலியவைகள் மலைகளிலிருந்து கிடைக்கும் கற்பாறைகளிலிருந்து வெட்டி எடுக்கப்பட வேண்டும். மேற்சொல்லிய வழிகளாற் சம்பாஷித்துப் பக்கத்திலிருக்கும் குன்றுகளுக்கோ அல்லது மலைகளுக்கோ அழைத்துச் சென்று குழந்தைகளின் அறிவை விருத்தி செய்யவேண்டும்.

### ஊர்க் கட்டிடங்கள்

ஊரில் பெரிய கட்டிடங்கள், கோவில், சத்திரம், ஆபீஸ், ஊரிலிருக்கும் பெரிய மனுஷ்யர்கள் வசிக்கும் வீடுகள் இவைகளைக் குழந்தைகள் அறிவார்கள். கடைத்தெருவு சந்தை, இவைகட்குப் போயிருந்த போதிலும், அவைகளில் நடக்கும் விஷயங்களைக் குழந்தைகள் கவனித்தறிய மாட்டார்கள். சுற்றுப் பிரயாணமாக ஒரு நாள் குழந்தைகளுடன் போவோமாயின் அவர்கட்கு வியாபாரச் சரக்குகளில் முக்கியமானவைகளின் பெயரையும்,உள்ளூர் சரக்கு வெளியூர்சரக்கு என்னும் விவரத்தையும் கண்டறியும்படித் தெறிவிக்கலாம். கடைசியாகச் சொன்ன விஷயம் விலைவாசி விவரமாய்க் காரணங்களுடன் மேல் வகுப்புகளிற்ருன் போதிக்கலாம். உள்ளூர் தானியங்கள் பருப்புகள் இவைகள் விளையும் இடங்களையே உற்று நோக்கச் செய்யவேண்டும். இவைகளின் மூலம்,ஜனங்களின் கைத்தொழில்கள் என்னென்னவை என்பதைத் தெரிய இடமுண்டாகும்.

மேற் சொல்லியவாறு விஷயங்களைச் சம்பாஷணைப் பாடமாகவும், உற்று நோக்கும் பாடமாகவும்,சுற்றுப் பிரயாணங்களின் மூலமாகவும் குழைந்தைகட்கு உலக ஞானத்தை ஊட்டலாம். ஊரை யறிந்தவன் உலகத்தை யறிவான் என்ற பழமொழியே இவ்வகைக் கல்வி அவசியத்திற்குப் போதுமான அத்தாட்சியாகும்.

N. S. ஜம்புநாதய்யர், B. A., L. T., F. Z. S.

# மோடார் விபத்து

## A MOTOR-CAR ACCIDENT

(29-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓரறையில் சங்கரனும் மீனும்பாளும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

'சங்கரா! நாராயணன் சரியான வேஷம் போட்டானே!'

'எல்லாம் சும்மாவா, நான்செய்யும் வேலையைப்பார்த்து மதிப்பவர் யார்தான்? நிழலருமை வெயிலில் போனால்தானே தெரியும்!'

மெதுவாக அறையின் கதவு திறக்கப்பட்டது. பார்வதி உள்ளே நுழைந்தாள். 'ஆ! உங்களிருவரையும் தூக்குமேடையில் காண்பதாக எண்ணியிருந்தேன். நேற்றிரவு முழுவதும் எனக்குத் தூக்கமேயில்லை.. உங்கள் சித்தப்பா என்ன சொன்னார்?'

'சொல்வதென்ன! நான் சரியாக ஏற்பாடு செய்து விட்டேன். நாராயணன் தமாஷாக வண்டிவிட்டுச்சென்றதாக யாவரும் எண்ணியிருக்கிறார்கள். சுந்து எங்கே?'

'அவள் உன்னிடம் இருக்கும்பொழுது அவள் அண்ணாவைப்பற்றி என்ன எண்ணம்' என்று சிரித்துக்கொண்டு மீனு சொல்ல, பார்வதி சற்று வெட்கி,

'ஹூங்! அப்படியா? சுந்துவைக் காணமே; நீ அழுகிறது எனக்குத் தெரியும்' என்று சிரித்தாள்.

'நேற்றிரவு உன்னை வண்டிவிட நான் விட்டிருக்கக்கூடாது. என்ன பாரு! ஆனால் ஆரம்பத்தில் நன்றாக ஓட்டினாயே!'

'அதெல்லாம் என்ன இப்பொழுது. எனக்கு இன்னம் பயமாயிருக்கிறது. அடிபட்டவர்கள் அழுகை தொனி இன்னும் என் காதண்டையிலேயே இருக்கிறது. யாரையாவது நாம் கொன்றுவிட்டோம் என்று நிச்சயமயாய் எண்ணினேன்—'

இதற்குள் சுந்தரம் உள்ளே நுழைந்தான். மீனும்பாள் முகத்தில் சந்தோஷக்குறி தோன்றிற்று.

'சங்கரா! உன் சித்தப்பா எங்கே! அப்பாடா! இன்று நான் செய்தவேலை அப்பப்பா. ஏதோ கொலை செய்தவன்போலப் பயந்து பதுங்கிப் பதுங்கி வரவேண்டியிருந்தது. நாராயணனை வழிக்குக் கொண்டுவர ரொம்ப கஷ்டப் பட்டேன்'

'நீ நன்றாய் ஜோடித்திருந்தாய்! எங்கள்மேல் அணுவளவேனும் சந்தேகம் தோன்றாமலிருந்தது' என்றாள் மீனு.

'சரிதான். அவனுக்கு மாசம் இருபது ரூபாய் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறேன். ஏன் அவன் இன்னும் கேட்டிருந்தாலும் நாம் கொடுக்கவேண்டியதே—' என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே 'ஸார்' என்று ஹீனமான குரல் கேட்டது. உடனே கதவு திறந்தது. நாராயணன் உள்ளே நுழைந்தான். கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் அவன் காதில் விழுந்திருக்கக்கூடும்; ஆனால் அவன் அப்படிக் காட்டிக் கொள்ளவில்லை. ஏதோ மிகவும் அபாயமான நிலைமையில் இருப்பதாகத் தோன்றியது. 'ஐயா! என் மனைவி பயமுறுத்துகிறாள். தனக்கு நடந்த விஷயங்கள் தெரியுமென்றும், கோர்ட்டில் பிராது பண்ணுவதாயும் சொல்கிறாள்.'

'என்ன!'

'அந்த ரிப்போர்டர்கள் வந்து அவளைக் கலைத்து விட்டார்கள்.'

'நீ பயப்படாதே! சுந்து நீ போய் வேலையை முடிக்கணும். அவளை நம் வழிக்குக் கொண்டுவா. நான் போவது முடியாது.

சுந்தரம் எழுந்து சென்றான்.

நாராயணனை சாமானுள்ளில் ஒளித்து வைத்தார்கள். ஒருமணி நேரம் சென்றது; சுந்தரம் திரும்பி வந்தான். அவனுடன் யாவரும் விஷயத்தைக் கேட்டார்கள்.

'நாராயணன் மனைவி சம்மதிக்கவே மாட்டேன் என்று சொல்லி விட்டாள். 'இன்னொருவன் செய்த குற்றத்திற்கு என் கணவன் உத்திரவாதியோ? அவன் நல்ல பேரும் கண்ணியத்தையும் இழக்க விடுவேனா என்று வீரம் பேசினாள். பிறகு ஐந்நூறு ரூபாய்க்குச் சம்மதித்தாள். நாராயணனுக்கு மாசம் முப்பது ரூபாய் கொடுக்க ஒப்புக்கொண்டேன்.'

'என்னடா இது சுந்து' அன்று மவுண்டுக்கு வேடிக்கை பார்க்கச் சென்றது அநர்த்தமாகும் போலிருக்கே. பணம் அதிகம் செலவு ஆகிறதே.'



'நாம் நாராயணனை அனுப்பி விடுவோம். அப்புறம் ஏதேனும் சங்கடம்நேரும்'என்று பார்வதி சொல்ல, சங்கரன் 'சரி நான் போய்ச் சொல்கிறேன்' என்று கதவைத் திறந்தான். திறக்கு முன், கதவை யாரோ திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார். அவர் சாம்பசிவய்யர்.

'ஐயா சங்கரய்யர்வாள்! நாராயணன் விலாசத்தைச் சொல்லும். என் வண்டிக்காரன் இறந்து போவான் போலிருக்கு. கொலைக்காக நாராயணனைக் கைது செய்யப் போலீசார் தேடுகிறார்கள்.'

உடனே பார்வதி பயந்து விட்டாள்.

'என்ன கொலையா?'

சாம்பசிவய்யர் விலாசத்தை எழுதிக் கொண்டு சென்றார். பார்வதி சங்கரனைப் பார்த்து 'நான் செய்த குற்றத்திற்கு நாராயணனைத் தூக்கு மேடைக்கு அனுப்ப நான் ஒப்பமாட்டேன்.'

'அடி அசடே! அந்த வண்டியை நீ வேண்டுமென்றா ஒருவன்மேல் ஓட்டினாய்?'

ஒன்றுந் தோன்றாதவனாய் அங்குமிங்கும் உலாவினான் சுந்தரம்.

'தூக்கில் போடமாட்டார்கள். இரண்டொரு மாசம் ஜெயில் வாசம் கிடைக்கும்.'

'அப்பொழுது நாராயணனுக்கு இன்னும் கொஞ்சம் பணம் கொடுத்து அவனை சம்மதிக்கச் சொல்லவேண்டும்.'

உடனே நால்வரும் எழுந்து ஓடினார்கள். நாராயணன் மிகவும் சௌக்யமாக ஒரு நாற்காலியில் படுத்த வண்ணம் சுருட்டு பிடித்துக் கொண்டிருந்தான். இவர்களைக் கண்டதும் சற்று வெட்கினவனாய் எழுந்து,

'என்ன! ஏதாவது வழிக்குவந்தாளா?'

'அவள் வருவதற்கு யாதொரு கஷ்டமுமில்லை. அந்த வண்டிக்காரன் இறந்து போவான்போலிருக்கிறது. போலீஸ்காரர் உன்னைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.'

'யாரை? என்னையா! இந்தச் சமயத்தில் நான் பேசாமல் இருக்கலாமா சொல்லும். என்னைத்தூக்கில்போட உமக்குச்சம்மதமா?

'ஏன்! நீ புதுச்சேரிக்கு ஓடிப்போக ஏற்பாடு செய்கிறோம்'

'என்ன! நானா புதுச்சேரிக்கு ஓடவேண்டும்! எதற்காக?'

'சரி! நீ இங்கே கோர்ட்டில் இருந்து அனுபவி. உனக்குப் புத்தியிருந்தால் நான் சொல்லுகிறவழி உனக்கு நல்லபணம் வரும்.

'பணம்! மானத்தை இழந்தபிறகு பணம்!'

'ஆம்! பணம். வெளியே வந்தபிறகு ஒரு பிரபுபோல் வசிக்கலாம், வைரமோதிரம் போட்டுத் திரியலாம்.—'

'எல்லாம் சரிதான். ஜெயிலில் இருக்க வேண்டுமே.'

'நீ எல்லாவற்றிற்கும் ஒத்துக் கொண்டாயே—'

'ஜெயிலுக்குப்போக ஒத்துக் கொள்ளவில்லை.—'

'அப்படியா! பணம்பறிக்கவழியா இது? போனாற்போகிறது உனக்கு நான் இரண்டாயிரம் ரூபாய் தருகிறேன்.'

'இரண்டாயிரம்' என்று சொல்லிக் கொண்டு நாராயணன் மறுபடியும் சங்கரனைப் பார்க்க,

'இஷ்டமிருந்தால் ஒத்துக்கொள். இல்லாவிட்டால் எங்களுக்கு ஒரு கஷ்டமுமில்லை. நீ இன்று காலை அத்தனை பேர்களுக்கெதிரில் ஒப்புக்கொண்டாய்—'

மிறளமிறள விழித்தான் நாராயணன். இதற்குள் நாராயணன் மனைவி வெகு அவசரமாக ஓடிவந்து, 'ஐயா போலீஸ்காரன் வந்து துன்பப்படுத்துகிறானே. கொலை! ஐயா! கொலையாம்—'

நாராயணன் உடனே "அப்படித்தான் வரும்போலிருக்கு. என்னை ஜெயிலுக்குப் போகச் சொல்கிறார்கள்."

'ஜெயிலுக்கா'

'ஆம் இரண்டாயிர ரூபாய் கொடுக்கிறார்களாம்!

'எப்படியிருந்தாலென்ன? குழந்தைகளின் கதி என்ன? ஜெயிலுக்குச் சென்றவன் பிள்ளைகள், ஐயோ!'

உடனே சுந்தரம் 'சரிதான் நீங்கள் இருவரும் ஆரமாற யோசியுங்கள். வந்து பதில் சொல்லுங்கள்' என்று சொல்லிவிட்டு நால்வரும் தங்கள் அறைக்கு வந்துவிட்டார்கள்.

அரைமணி நேரங்கழித்து நாராயணனும் அவன் மனைவியும் வந்தார்கள். சுந்தரம் கேட்டான்.

‘என்ன முடிவு பண்ணினீர்கள்?’

‘நாலாயிரத்தைந்நூறு ரூபாயும், மாசம் முப்பது ரூபாயும் கொடுத்தால் சரி!’

சங்கரன் சுந்தரத்தை நோக்கினான். உடனே,

‘சரி! எனக்குக் கொஞ்சம் யோசிக்க நேரம் கொடு’

‘அப்படியே. அந்த வண்டிக்காரன் இறக்கும் வரையில்’ என்று சொல்லிவிட்டு நாராயணனும் அவன் மனைவியும் வெளியே சென்றார்கள்.

சங்கரன் யோசித்தான். மே மாதம் 10-ந் தேதி தனக்குச் சொத்துக்களெல்லாம் வந்து சேரும். தனது சித்தப்பா அதிகாரம் முடிந்துவிடும். என்னவாயிருந்தாலும் ஐயாயிரம் ரூபாய் வீணாகக் கொடுக்க மனம் வரவில்லை.

‘என்னடா, நாம் இவன் கையில் சிக்கிக் கொண்டதாக எண்ணியிருக்கிறான்.’

‘இப்பொழுது நாம் இணங்கிவிட்டால் இனிமேல் எப்பொழுதும் நம்மை பயமுறுத்திப் பணம் வாங்குவான்’

‘ஹா! ஒரு நல்ல யோசனை!’

‘உனக்குத்தான் எப்பொழுதும் யோசனை!

‘என் கப்பல் ஒன்று வந்திருக்கிறது. அது தென் அமெரிகாவுக்கு நாளை காலை புறப்படப்போகிறது. இன்று இரவு நாராயணனை மெதுவாகக் கட்டி அனுப்பி விடுவோம். அங்கே அவனுக்குச் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்துவிடுகிறேன். எப்படி!

‘பலே! அவன் அப்படிப் போய்விட்டால் சந்தேகம் அவன்மேல் பலமாக ஏற்படும்” என்றான் சங்கரன்.

‘பேஷான யுக்தி! ஆச்சரியம்’ என்று குழறினாள் மீனாம்பாள். உடனே சங்கரன் ‘மீனா மெச்சாவிடில் சுந்தரம் வேலை சரியாகச் செய்யமாட்டான்.’

* * *

இரவு ஒன்பது மணி. சென்னை ஹைகோர்ட்டுக்கடுத்த சமுத்திரக்கரை யோரத்தில் மூவர் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். சந்திரன் வெகு மந்தஹாஸமாக ஒளி வீசிக் கொண்டிருந்தான். எங்கு பார்த்தாலும் ஒரே நிச்சப்தமாயிருந்தது.

‘எங்கே சுந்தரம் இன்னும் வரவில்லை!

‘அதோ ஒருவன் வருகிறான் பார்’ என்று மீனா கை காட்டினாள். பார்வதி ‘உனக்குத்தான் சுந்திரம் வருவது கண்தெரியும்’

‘இரண்டுபேர் வருகிறார்கள்!’

சற்றுநேரம் சென்றது. இருவரும் நெருங்கிவந்தார்கள். ஒருவன் சுந்தரம். மற்றொருவன் அந்தக் கப்பலதிகாரி.

‘வேலை முடிந்துவிட்டது. கொண்டுவந்துவிட்டார்கள் அவனை.’

‘சரி ஒரு வார்த்தை பேசின பிறகு அவனை நீங்கள் பிடித்துக் கப்பலில் ஜாக்கிரதையாய் வைத்திருங்கள்’ என்று சங்கரன் சொல்ல,

கப்பலதிகாரி ஒரு கீச்சென்ற சப்தம் போட்டான். சற்று தூரத்துக்கப்பாலிருக்கும் ஒரு மரத்தடியிலிருந்து இருவர் ஒரு மனிதனைத் தள்ளிக்கொண்டு வந்தார்கள். அவன் மிகவும் பலமாகக் கையையும் காலையும் உதைத்துக்கொண்டான். ஆனால் நன்றாய்க் கட்டப்பட்டிருந்தான். வாயிலும் துணி அடைக்கப்பட்டிருந்தது. நால்வரும் வெகு ஆவலாய்க் காத்திருந்தார்கள். ‘பாவம் நாராயணன்’ என்றாள் பார்வதி, உடனே திக்பிரமித்து நின்றுவிட்டாள். யாரது! நாராயணனைக் காணோம், பரசுராமய்யர் கட்டுண்டு கிடக்கிறார்!

உடனே ஓடினான் சங்கரன். கட்டை அவிழ்த்து விட்டான். ‘இப்பொழுது சற்றுத் தேவலையா?’

‘தேவலையா! என்ன வேலை போட்டீர்கள் என்னடா?’ என்று கூவினார்.

‘எனக்கு ஒன்றும் தெரியாதே’ என்று உளறினான் சங்கரன். ‘நீதான் சொல்லேன் சுந்தரம்?’ என்று மறுபடியும் சங்கரனை நோக்கி ‘நீ எதற்காக நாராயணனை இங்கு வரும்படி சொல்லியனுப்பினாய்?’ என்று வினவ,

பார்வதி முன் வந்து ‘மாமா! நான், விஷயத்தைச் சொல்லி விடுகிறேன்—’

‘ஐயோ வேண்டாமே’ எனக் கெஞ்சினான் சங்கரன்.

‘பேசாதே மடையா!’

மறுபடியும் பார்வதி, ‘நான் உங்களை மாமா என்று கூப்பிட்டேனே! தெரிந்து கொண்டீர்களா?’

மற்றவர்கள் சிரிக்க முடியாமல் சிரித்



தார்கள். பரசுராமய்யர் பல்லைக்கடித்துக் கொண்டார்.’

‘அதாவது நான் சங்கரனைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிறேன்.

‘அப்படியா, சரி!’ என்று பெரு மூச்சு விட்டார்.

‘கலியாணத்துக்கு பணம் வேண்டியது!

‘ஓஹோ! பணத்துக்காக என்னைத் தொலைத்துவிட வழி பார்த்தீர்களோ!’

‘சே! அப்படியில்லை! நாங்கள் நாராயணனைப் பிடிக்க ஏற்பாடு செய்தோம்.’

‘நாராயணனை! எதற்கு?’

உடனே சுந்தரம், அவரை மெதுவாகக் கீழே உட்கார வைத்தான்.

‘மாமா! நீங்கள் சங்கரனையும் மீனாவையும் ஜெயிலில் போட்டிருக்கும் மாதிரி வைத்திருந்தீர்கள்.’

‘ஜெயில்! அவ்வளவு கொடுமையா?’

‘ஒரு விளையாட்டு கூடாது, வெளியே செல்லக்கூடாது. வீட்டில் பொழுது போக்குக்கு ஏதும் கிடையாது’

‘வீட்டில் அடைத்து வைத்திருந்தீர்கள், ஆகையால் நாங்கள் உங்களை ஏமாற்றும்படி ஏற்பட்டது’ என்றாள் மீனாம்பாள்.

‘என்ன பண்ணினீர்கள்?’

‘நாடகக் கொட்டைகளுக்கும் பயாஸ்கோப், எக்ஸிபிஷனுக்கும், காபிஹோட்டல்களுக்கும், சென்றோம்.’

‘ஆனால் அப்பாவைப் போல் அவ்வளவு முரட்டுத்தனமாக இல்லை. சாதாரணமாகக் குழந்தைகள் இருப்பதுபோலிருந்தோம்.

பெரியவர் சற்றுயோசனையிலாழ்ந்தார். உடனே சுந்தரத்தை நோக்கி ‘இதில் உனக்கு என்ன சம்பந்தம்?’ என்று வினவ, உடனே மீனா ‘நான் அவரைக் கலியாணம் செய்துகொள்ளப் போகிறேன்’

பரசுராமய்யர் தன் நெற்றியைத் தடவிக் கொண்டார். ‘ஓகோ நீங்கள் நால்வரும் தான் அன்று வண்டியில் சென்றீர்களோ! நாராயணன் பேரில்—’

‘ஒரு குற்றமுமில்லை. எங்களை மறைக்க நாங்கள் அவனுக்குப்பணம் கொடுத்தோம். ஆனால் பணப்பேய்பிடித்த அவன், விலையை உயர்த்திச் சென்றான். ஆகையால்—’

உடனே பார்வதி ‘மாமா! சென்றதெல்லாம் மறந்துவிட்டு இனிமேல் சந்தோஷமாய் இருப்போம். எங்களை மன்னித்து ஆசிர்வதியும்.’

‘எனக்கு வேறு வழியில்லை! அப்படியே’

* * *

ஒரு சுப முகூர்த்தத்தில் இரண்டு கலியாணங்களும் வெகுவிமரிசையாக நடந்தேறின. பரசுராமய்யர் இப்பொழுது முன்னைய மனிதரன்று. அவர் சிடுசிடுப்புப் பறந்துவிட்டது.

நாராயணனே அதிர்ஷ்டசாலி. காயமடைந்த வண்டிக்காரன் இறக்கவில்லை. நாராயணன் சௌக்யமாக இருக்கிறான்.

V. N. பரத்வாசன்

# பிரபஞ்ச அபிவிருத்தி
# Progress of the World

கடந்த மாதமுதல் நமது நேசத்துருப்புகளின் அடுபோர் வெகு உக்ரமாக நடந்து வருகிறது. ஆங்கில முனையில், வேலை வெகு யோசனை யுக்தி இவைகளுடன் செய்வதால் நாம் கவர்ந்த பாகங்களைப் பகைவர்களால் சிறிதும் அசைக்கமுடியாவண்ண மிருக்கிறது. பாஜியர்ஸ் கோட்டையைத் தகர்த்துக் கவர்ந்து, பாஸ்டியன் பிராந்தியத்தில் அச்சேனை பகைவரை நொக்கிக் கொண்டிருக்கிறது; மேலும் பல சிறந்த அரண் பிரதேசங்களைக் கவர்ந்து விளங்குகிறது. பாஜியர்ஸ், பஜண்டின்-லா-கிரான், பெஜண்டின்

லா-பெடே, லாங்கிவால் இவை யாவும் அசைக்கமுடியா வண்ணம் ஆங்கிலேய சேனையின் வலியபிடிக்குள் அகப்பட்டுக் கொண்டுவிட்டன.

பிரெஞ்ச் முனையில் சண்டை ஒரேவித மாக நடந்துவருகிறது. ஸோம் பிராந்தியத்தில் எஸ்ட்ரீ பாகத்தில் கடும்போரிட்டுப் பகைவரது தடைகள் முற்றையும் நேசத்துருப்புகள் கவர்ந்தன; ஹேம் காட்டிற்கும்மோனகுவுக்கு மிடையுள்ள அரண்களையும் கைப்பற்றின. மற்று வெர்டன் பலிபீடத்தில், பிரெஞ்சுப் படையும் ஜர்மானியப் படையும் ஒன்று மாறி யொன்று இடைவிடாது தமது வீரர்களைக் களப்பலியிட்டுக்கொண்டே இருக்கின்றன.

ரஷ்ய ஜயபேரிகை முழக்கம் ஓயாமல் பரவிக் கொண்டே யிருக்கிறது. ஸ்டிர் நதிக் கரையிலிருக்கும் பேரடஸ்கோ நகரைப்பற்றி அதிலிருந்து அவர் ஹங்கரி வெளியுள் நுழையப் பிரயத்னப் படுகின்றனர். பகைவர்களை ஸ்டானிலா நகர்ப்புறம் ஒதுக்கி, துமாக்ஜ், ஒட்டினியா என்னும் பட்டணங்களைக் கவர்ந்து திஸ்மினிகாவையும் கைப் பற்றி, ஸ்டானிலா கோட்டையை அபகரித் தனர்; சிர்ப்லின் என்னும் ரயில் மூலஸ்தானத்தையும் பற்றிக்கொண்டனர். மற்று ஸ்டோகாட் நதியிலிருந்து புறப்பட்ட ரஷ்ய சேனை, ப்ரோடி பக்கம்நடந்து, லிபாஷ்வோ என்னுமிடத்தைக் கடந்து, கோவலுக் கருகிலிருந்த அரண்களிலிருந்து பகைவரைவெளியேறச் செய்தது. ஆயினும் ஹங்கரிவெளியிலிருந்து வந்த பகைவர் சேனை, அதன் நடையைச் சற்று டெலாடின் பக்கம் தடுத்தது. ஆயினும் அந்த ரஷ்யசேனை செரத் என்னும் பேரரண் பட்டணத்திலிருந்து பகைவரைப் பின்வாங்கச் செய்து அவர்க்குப் பெரும் நஷ்டத்தையுண்டாக்கியது.

ஆர்மீனியாவில் பால் பட்டணத்தைக் கவர்ந்த ரஷ்யர், எர்ஜிஞ்ஜான் பக்கம் தமது சேனையைக் குவித்து, அப்பெரும் பேரரண் தலத்தைத் தமதாக்கினர். பின் சிவாஸ் பக்கம் பகைவரைப் பின்பற்றி எர்ஜரம், டியாலெக் கோட்டைகளுக் கிடையிருக்கும் ஒக்நட் பதியைக் கவர்ந்து, கார்பாட் திசையில் நடந்தனர்.

கேல்டிக், சிப்ட்லிக் என்னு மிடங்களில் தூருக்கரை தடுத்து, அவரை முஷ்-பிட்-லிஸ் பிராந்தியத்தில் ஓங்காமல் இருக்கச்செய்தது டன், ட்ரெபிஜாண்ட் பட்டணத்துக் கருகிலிருந்த எல்லென் என்னும் துறைமுகப் பட்டணத்தையும் ரஷ்யர் பிடித்துக்கொண்டனர்.

ரைகா பிராந்தியத்தில் வேலை செய்யும் ரஷ்ய சேனை ஜர்மானியரைத்தாக்கி யவரது முதற் காவல் அரண்களைக் கைப்பற்றியது. மற்றுவேறு முனைகளிலும் அப்பகைவரைத் தாக்கிக்கொண்டிருக்கிறது.

இடாலியர்கள் ரோல் கணவாயைக் கைப் பற்றி அதன் மூலமாக முன்னேறி, செட்டெகொம்முனோ மேட்டைத் தகர்த்தனர். லிமோனி நகரத்தைக் கவர்ந்து, ஆடிஜ் ஆஸ்டிகோ நதி பிராந்தியங்களில் ஆஸ்டிரியர்களைத் துவம்ஸம் செய்தனர். பெனிபெக்கிஸ் கிராமத்தைக் கவர்ந்து, பாஸ்னியா பிராந்தியத்திலும் கார்ட்டினு பிராந்தியத்திலும் படர்ந்து, இஸ்ஸான்ஸோ போர் முனையில் கடும் அடும்போரிட வாரம்பித்த ஆஸ்டிரியரைத் தகர்த்தனர்; ஸான்மிக்காலே, ஸமோடினோ முடிகளையும்கவர்ந்தனர். பலபெரும் நஷ்டத்தைப் பகைவர்க் குண்டாக்கிக் கொரிஜியா பிராந்திய முற்றும் பகைவரிட மிருந்து கவர்ந்தனராகித் தற்காலம் விளங்குகின்றனர்.

ஸலோனி காவிலிருக்கும் பிரெஞ்சப்படையும், பெல்ஜியன் படையும் பல்கேரியரை மானஸ்டர் பக்கம் தாக்கிக் கொண்டிருக்கின்றன.

ஆப்ரிகாவில் ஜெனரல் நார்தி, ரொடீஸியாவிலிருந்து ஜர்மானியப்படை மலன்கலியை விட்டு வெளியேறச் செய்தனர். ஜெனரல் ஸ்மட்ஸ் கிழாப்பிரிக்காவில் டெரிடாமாவைப் பற்றினர்; உஸம்பார் நாட்டின் தென்புறமிருந்த பகைவரை ஓட்டி போர்ட் பங்காளியைக் கவர்ந்தனர்.

விக்டோரிய பேரேரியில் வேலை செய்யும் ஆங்கில, பெல்ஜியத் துருப்புகள் செவ்வனே வேலை நடத்துகின்றன; அவை உஜ்ஜிஜ்ஜீ என்னும் பதியைப் பற்றின. ஜெனரல் நார்தி ஸான்ஸிபார் த்வீபத்திற் கருகாமை சில வியவஹாரங்களையும் நடத்திவருகின்றனர்.

மற்றுக் கொள்ளைப் பறிவிஷயங்கள் கடலின் மேல் ஜர்மானிய கப்பற்திருடர்கள் நடத்திக் கொண்டிருக்கின்றனர். ஆங்கிலரும், ஜர்மானியரும் ஆகாய விமானங்களில் வெடிகுண்டுகளைப் பகைவரது துறைமுகப் பட்டணங்களின்மேல் சில சில வேளை போட்டுக்கொண்டிருக்கின்றனர்.



***

ஸர் ரோஜர் கேஸ்மெண்ட் குற்றவாளியெனத்தீர்மானிக்கப்பட்டு தூக்கில் போடப் பட்டனர்.

***

காங்கிரஸ் அக்கிராஸனத்தைப் பற்றிப் பலவிதமான அபிப்பிராயங்க ளிருக்கின்றன. யார் நியமிக்கப் படுவரென்பது இன்னும் நிச்சயமாகவில்லை.

***

ஸர் தாமஸ் ஹாலண்ட் நமது நாட்டு வியாபார விருத்தியின் விஷயத்தைப்பற்றி வெகு தெளிவாக சில ஸமாசாரங்கள் சொன்னார். இது பின்னர் விஸ்தரிக்கப்படும்.

***

இண்டர்மீடியட் பரீக்ஷையைப்பற்றியமீட்டிங் செனட்டில் கூடியபோது பெரும் துரத்ருஷ்ட ஸம்பவமாக முடிந்துவிட்டது. கொண்டுவந்த பிரேரேபணை ஏற்கவும் படவில்லை; தள்ளவும் படவில்லை— திரிசங்கு ஸ்வர்கமாய், இருக்குமிடமில்லாமல் தத்தளித்தது. பெரியோர் நிறைந்த இந்நகரில் அதை மீண்டும் கவனிப்பாரற்று விளங்குவதுஎன்னபரிதாபம்! ஆனால், பி. எல். பரீக்ஷை இரண்டு வருஷப் படிப்பாக மாற்றப்பட்டது யாவர்க்கு மின்பந்தரும்.

---

**கும்பகோணம் ஸ்ரீகாஞ்சி காமகோடிபீடம் லக்ஷார்ச்சனைலக்ஷதீபம் கமிட்டியாரின்வேண்டுகோள்.**—தற்காலத்திலுள்ள உத்பாத ஸம்பவங்கள் நீங்கி, நமது காருண்ய சக்கிரவர்த்தி அவர்களும் அவர்களால் ஆளப்படும் மஹாஜனங்களும் சத்ருபாதை, ரோகபாதை முதலியவை நீங்கி ஸுகித்து வாழ்ந்துவர வேண்டுமென்ற கோரிக்கை பரிபூர்ணமாவதற் பொருட்டு நாளது ஆனி நவராத்திரி புண்யகாலத்தில், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிப ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய மஹாஸ்வாமிகளவர்களால் லக்ஷார்ச்சனை, லக்ஷதீபம் முதலிய சுபகாரியங்களை நடத்த உத்தேசித்திருக்கிறதென்றும் இந்தக் கைங்கர்யத்திற்கு ஒவ்வொரு தேசாபிமானியும், கலந்துழைத்துப் பொருளுதவிசெய்து இச் சுபகாரியத்தை நன்கு நடைபெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## CHILDRENS' AND LADIES' PAGES

### மீதூண் விரும்பேல்

ஓர் ஊரில், ஒரு பிராமணரிருந்தார். அவருக்கு போஜனத்தில் வெகுப் பிரியம். அவர் ஏழை. தினந்தோறும் பிச்சையெடுத்து தம்மையும், மனைவிமக்களையும் காப்பாற்றிவந்தார். வீட்டில்கஞ்சி அகப்படுவதே கஷ்டம். இதனால் பிராமணர் அங்கங்குள்ள கல்யாண வீடுகள் முதலிய இடங்களுக்குத் தம்மை அழைத்தாலும் சரி, அழைக்காவிட்டாலும் சரி, போய் நன்றாய் சாப்பிட்டுவிட்டுத்தான் திரும்புவார்.

இந்தப் பிராமணர் ஊருக்குக், காதவழி தூரத்தில், வேறொரு ஊர் இருந்தது. அந்த ஊரில் பணக்காரரான மிராசுதார் ஸமாராதனை நடத்துவதாக அக்கம்பக்கத்து ஊரிலுள்ளபிராமணர்களுக்குச் சொல்லியனுப்பினார். இந்த விஷயம் நம் பிராமணருக்கும் தெரியவந்தது. அன்று நம் பிராமணர் ஸ்நானம் ஜபம் முதலியவைகள் செய்துவிட்டு "அடியே அந்த ஸமாராதனைக்குப் போகிறேன் நீ எனக்காக கார்க்கவேண்டாம், சாப்பிடு" என்று மனைவியிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டார். கொஞ்சதூரம் போகையில் ஸமாராதனைக்கு என் குழந்தை கோபாலனையும் ஏன் அழைத்துக்போகக்கூடாது" என்று நினைத்துத் திரும்பிவந்தார். ஆனால் வெகு தூரமாயிற்றே என்று நினைத்துக் கடைசியில் தான்மாத்திரம் போனார்.

ஸமாராதனையில் $10\frac{1}{2}$ மணிக்கு இலை போடுவதாக சொல்லியிருந்தார்கள். பிராமணர் போகும்போது 11-மணிக்குமேலாய் விட்டது. பிராமணர்கள் எல்லாரும் உட்கார்ந்துவிட்டார்கள். நம் பிராமணருக்கு இடமில்லை. அங்குமிங்கும் அலைந்தார். ஒரு இலை கூட பாக்கியில்லை. மிராசுதார் பிராமண பக்தியுள்ளவர். பிராமணர் தத்தளிப்பதைக் கண்டு, "இரண்டாம் பந்தியில் நாம் ஒன்றாய் உட்காரலாம்" என்றுசொல்ல பிராமணரும் வேறு வழியில்லையென்று ஒத்துக்கொண்டார். முதல் பந்தியிலேயே பக்ஷணங்கள் முதலியவை எல்லாம் ஆய்விடுமென்றும், தான் நேரமாய் வந்தது தன்

குழந்தையாலென்றும் அதைப்பற்றி நினைத்துக்கொண்டு காத்திருந்தார்.

முதல்பந்தி முடிந்ததும், இரண்டாம் பந்திக்குப் பிராமணரும் மிராசுதாரரும் உட்கார்ந்தார்கள். மிராசுதார் முன்னமேயே இரகசியமாய்ப் பரிசாரகர்களைக் கூப்பிட்டு பிராமணருக்கு மனதார பக்ஷணங்கள் முதலியவைகளை போடச் சொல்லிவிட்டார். அப்படியே பரிசாரகர்களும் வடை, பூரி, அப்பளம் முதலியவைகளை நிறைய நிறைய பிராமணருக்குப் பரிமாறினார்கள். பிராமணரும், தம்மாலானவரைக்கும் விலாப்புடைக்கச்சாப்பிட்டார். ஆனால் இன்னும் அவருக்கு அதிருப்திதான் முதல்பந்தியிலுள்ளவர்களுக்குப் போட்ட மீதியைத்தான், இரண்டாம் பந்தியிலுள்ளவர்களுக்குப் போடமுடியும். சில பக்ஷணங்கள் முதல் பந்தியிலேயே ஆய்விடும். "இரண்டாம் பந்தியிலேயே இவ்வளவு விமரிசையாய் நடக்கிறதே, எல்லாம் நளபாகமாயிருக்கிறதே! முதல் பந்தியில் இன்னும் நன்றாயிருந்திருக்குமே,நாம் துரதிஷ்டசாலி. அந்தக் குழந்தையால்தான் இவ்வளவு கஷ்டமும்" என்று வருத்தப் பட்டுக்கொண்டே எழுந்தார்.

பிராமணர் சாப்பிட்டாயிற்று; கையலம்ப வெளியில் வந்தார். வயிறு பர்வதாகாரமாய் ஏற்றச்சால்போல் முன்னே தெரிகிறது. கழுத்தைத் திருப்பவும், குனியவும் முடியவில்லை. கையலம்ப முடியவில்லை. அந்த தெருக்கோடியில் ஒரு குளம். அந்த குளத்திற்குப்போய் கையலம்பி வருவதாகச் சொல்லி புறப்பட்டார். குளத்தில்மாத்திரம் கரைமேலிருந்துகொண்டு குனியாமல் கையலம்பமுடியுமா? அதனால்பிராமணர் இடுப்பளவு ஆழத்தில் இறங்கி, முன் பார்த்த ..ன்னமேகையலம்பினார். நாட்டுப்புறமானதால், வழக்கம்போல அந்த ஊர் மாடுமேய்க்கும் பையன்கள் எருமைகளை, பன்னிரண்டு மணி வெயிலுக்கு குளத்தில் ஓட்டிவிட்டு சாப்பிடப்போவார்கள். எருமைகளும் குளத்தில் புரண்டு நீந்திக்கொண்டிருக்கும். நம் பிராமணர் கையலம்பினபோது, எருமையொன்று மூச்சுவிட்டுக்கொண்டு, புரண்டது. பிராமணருக்கு மூச்சுவிட்ட சப்தமும், அலைகளின் சப்தமும் கேட்டது. யார் இதற்குக் காரணம் என்று தெரிவதற்குக் குனிந்து பார்த்தால் தானே தெரியும்? பிராமணர் தம்மைப்போலவே பிறரையும் எண்ணியிருந்தபடியால், இப்படிப் பெருமூச்சுவிடுவதும், தம்மைப்போல ஸமாராதனைக்கு வந்த ஒருவர் என்று எண்ணிக்கொண்டார். உடனே "ஓஹோ! நீர், முதல் பந்தியில் சாப்பிட்டீராக்கும். இரண்டாம் பந்தியில் சாப்பிட்ட எனக்கே குனியமுடியவில்லை.நீர்எப்படி குளத்தைவிட்டு கரையேறப்போகிறீர்' என்றார்.

கலியாணம், பண்டிகை ஏதாவது வந்தால் நீயும் நம் பிராமணரைப்போல சாப்பிடுவதுண்டோ?

கதை கேட்டவன்

## விசேஷக் குறிப்புகள்

### NEWS AND NOTES

**ஸர் ஹாரோல்ட் ஸ்டுவர்ட்.**—சென்னை கவுன்ஸில் மெம்பர்களில் ஒருவராகிய ஸர் ஹாரோல்ட் ஸ்டுவர்ட் அடுத்த அக்டோபர்மாதம் தம்முடைய ஜன்மதேசம் போகிறார்.

***

**வாழைநாரின் உபயோகம்.**—வாழைநாரிலிருந்து மெல்லிய ஆடைகள் செய்யப்படுவது தவிர, அந்நார் காகிதஞ் செய்வதற்கும் உபயோகமாகுமென்று சொல்லப்படுகிறது.

***

**போர்முனையில் துருப்புகளுக்குக் கடிதங்கள்.**— இங்கிலாந்திலிருந்து பிரான்ஸில் போர்முனையிலிருக்கும் துருப்புகளுக்கு வாரந்தோறும் சுமார் 100-லக்ஷம் கடிதங்களும், 7-லக்ஷம் பார்சல்களும் அனுப்பப்படுகின்றன.

***

**லால்குடி காட்சிசாலை.**—1916-ம் வருஷம் செப்டம்பர் மீ 16 உ காலையில், சென்னை கவர்ன்மெண்ட் நிர்வாகசபையின் மெம்பராகிய கனம் ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயரவர்களால், திருச்சிக்கோட்டை **நாஷனல் ஹைஸ்கூலிலும், லாலி ஹாலிலும்,** யுத்தசகாய நிதிக்காகத் திறக்கப்பட்டு, 6-நாள் நடைபெறும். அச்சமயம், தக்கவர்களால் கல்வி சம்பந்தமான அநேக பிரசங்கங்கள் நடைபெறும்.

***

**ரயில்வே வருமானம்.**— கவர்ன்மெண்ட் ரயில்வேகளிலும், கவர்ன்மெண்ட் உதவிபெற்ற ரெயில்வேகளிலும் 1916-ம் வருஷம் ஏப்ரல் மீ 1 உ முதல் ஆகஸ்ட் மீ 26 உ வரையிலும் சென்ற வருஷம் இதே காலத்தில் கிடைத்த வரும்படியைக் காட்டிலும் 2-கோடியே 29லக்ஷத்து நாலாயிரத்து நூற்றெட்டு ரூபாய் அதிகம் கிடைத்திருக்கிறது.

---

# விவேக போதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி IX { நள வருஷம் ஆவணி மீ : 1916-வருஷம் செப்டம்பர் மீ } பகுதி 3

## சிந்தனை மொழிகள்

### STRAY THOUGHTS

அலைகளெல்லாம் ஓயாமல் தம்மையாக்கியோனை, குதித்துக் கூத்தாடி வாயெடுத்து வாழ்த்துகின்றன. இரவு முழுவதும் நக்ஷத்திரங்கள் தவறாமல் அவன் பெருமையையளந்துகொண் டிருக்கின்றன. காலை முதல் மாலைவரை கெடுதவறாமல் சூரியன் அப்பெரியோனது பொலிவை விளக்கி வாழ்த்துகின்றான். ஓய்வில்லாமல் நாள் தவறாது அவனிட்ட ஆணையைப் பிசகாது வானசோதியர் எவரும் நடத்துகின்றனர். நாமு மவற்றை எல்லாம் கண்டும் தூண்போல் கவனியாமல், அவற்றின் பொருளைக் கருதாது, ஊண், உறக்கம், மயக்கம் என்னும் முக்காற் பலகையில் வீற்றிருந்து, மனத்தை மந்தியாக்கிச் சிந்தையழிந்து காலத்தைக் கரியாக்கி நமது பாபத்தைப் பேராக்குகிறோம். மனத்தை ஜயித்து ஓரே நிலையில் விளங்கத் தூங்காமற் றூங்கிச் சுகம்பெறு நாள் எந்நாளோ?

***

பல கிளை நதிகள் ஓரே நதியில் விழுகின்றன. பல பெரு நதிகள் ஓரே கடலில் பாய்கின்றன. பல வழிகள் ஓரே ஊரில் சேர்கின்றன. பல மணிகள் ஓரே நூலில் நுழைகின்றன. பல ஜீவராசிகளுள் உள்ள ஆத்மாக்களும் அப்படியே ஓரே பொருளைச் சேர்கின்றன.

***

நாஸ்திகன் ஒருவன், எங்கு சென்றாலும் கடவுளென்பதே கிடையாது என்று விதண்டாவாதம் செய்துவந்தான். ஒருநாள், அவன் கால்நடையாகப்பிரயாணஞ்செய்தபொழுது, வழியில் இளைப்பாற ஆலமரத்தின் கீழ்ப் படுத்தான். அப்பொழுது ஒரு ஆலம்பழம் அவன் கண்மேல் விழுந்தது. அது விழுந்த வலியைப் பொறுக்கமுடியாது, அவன் "இப் பழத்திற்கு இவ்வளவு துன்பஞ் செய்யும் சக்தி எங்கிருந்து வந்தது? அதற்கு அவ் விசையைக் கொடுத்தெவன்?" எனப் பல விதமாராய்ந்து தன் கருத்தாலெல்லா மெண்ணியும் ஒரு சரியான முடிவைப் பெறாமல் "இவ்வாறு வலியைக் கொடுக்க ஆதிகாரணமான பொருளைக் கடவுளென்று பிறர் கூறுகின்றனர் போலும்!" என்று எண்ணிக்கொண்டே எழுந்து வெளிச்சென்றான்.

***

பாற்கடலில் மந்தரமலையை நட்டு அதைத் தூளெழும்படிக் கடைந்தபோதும், அமுதத்தையே அது தேவர்க்குக் கொடுத்தது. பெரியோர்களும், தம்மை யிகழ்ந்து தொந்தரை செய்பவராயினும், அவரிடம் பகைகொள்ளார்; அவர்க்கும் நன்மைசெய்வர். அன்பு, பகை என்பதில்லாமல் ஓரே தன்மையாக விளங்குவதே பெரியோர் வழி.

***

ஆற்றுநீர்க்காலால்வரும் நீரைக்கொண்டு வயலிற் பாய்ச்சுவர். அவ்வாற்றிலிருக்கு நீரில் ஸ்நானஞ் செய்வர். மற்றந்நீரையே மனைக்கெடுத்துப்போய்ப் பானஞ்செய்வர். ஆக, ஓரே இடத்திலிருக்கும் நீர் பலவிதமாகக் கொண்டாடப்படுகிறது; அவ்வாறு கொண்டாடப்படுதலையும் எல்லாரும் அறிகிறார்கள். கடவுளும் அவ்விதமே கொண்டாடப்படுவது மாத்திரம் ஸமரஸமாக யாவராலும் பாவிக்கப்படுவதில்லை. கடவுளின் தன்மைக்கேற்ப

வேறுவிதங் கொண்டாடப்படும் கடவுளர் யாவரும், எல்லாம் வல்ல இறைவனது ஓருருவமே என்றும், பலராலும் தமக்கே சொந்தமாகக் கொண்டாடப்படும் கடவுளெல்லாமொன்றே என்றும் நமக்கு ஞான மாத்திரம் வருவதேயில்லை. அவ்வாறில்லாதிருப்பதாகக் கருதுவது நமது புத்தியின் பேதத்தாலே யன்றி, வேறு உண்மை பேதத்தாலல்ல.

***

இனிக்கப் பேசுவதென்றால் எல்லார்க்கு முடியும். ஆனால் சொல்லியவண்ணம் எல்லாஞ் செய்வது அபூர்வம். முன் இங்கிலண்ட் தீவில் ஸாம்யுவல் ஜான்ஸன் என்னும் பெரும் பண்டித சிகாமணி யிருந்தார். அவர் இங்கிலீஷ்ப் பதங்களைச் சேர்த்து ஒரு அகராதி செய்யப் பாரிப்பிரயத்தனஞ் செய்தார். அவரோ ஏழ்மையின் தலையிற் குடியிருந்தார்; ஒரு மஹாப்ரபுவை அண்டி அவரது உதவியைக் கொண்டு அகராதிக் குயிர்கொடுக்க எண்ணினார். அவர் வீட்டைப் பலநாள் தேடிச்சென்றார். ஆனால் உள் யாராவது விட்டால்தானே! பலநாள் நடந்து, அவர் காலும் மனமும் தேய்ந்துகொண்டே இருந்தன. ஆயினும், தான் எடுத்த பிரயத்தனத்தைக் கைசோரவிடாது வெகு கஷ்டத்துடன் செய்து முடித்தார். பிரபுவாள் அப்பொழுது ஜான்ஸனாரைக் கவனிக்கத் தலை நிமிர்ந்தார். ஆனால் பண்டித சிகாமணியார் "நான் ஆதரவு விரும்பிய நாளில் கவனிப்பாரற்றிருந்தேன். கவனிக்கு நிலைக்கு நானே முந்தியதும் தமது ஆதரவு எனக்கு ஆவச்யகமில்லை. இப்பொழுதிருக்கு மன்பு முன்னமே இருந்திருக்குமாயின் நான் உமக் கெவ்வளவோ கடமைப்பட் டிருப்பேன்" எனப் பதிலெழுதியனுப்பினார். அவ்விதம் கஷ்டகாலங்களில் கவனியாது, தமது விடாமுயற்சியால் முந்தி முன்னிலைக்கு வந்தவரைக் கவனிப்பார்போலக் காட்டி அவர் முந்தியதற்குத் தாமாதரவானதாக மதிக்கும்படிக்குச் சில பணம் பெருத்தவர் நடப்பர். அவர் மனோநிலை வழி திராசுகோல் போல் நடுநிலைவிட் டசையாததல்லவா!

***

நாய் காவலிருந்தும், திருடர் வந்தபோது குரைக்காதிருக்க, தனது எஜமானிடம் கொண்ட பக்தியால் தன் பெருங்குரலை எடுத்துக் கழுதை கத்தி என்ன ஸுகம் பெற்றது? தடியால் அடிமேலடிபட்டது. ஆகையால் நாம் நமது காரியங்களைவிட்டுப் பிறரது காரியங்களில் தலையிடுவது கஷ்டத்திற்கே ஆளாக்கும்.

***

நாடகக் கொட்டகையில் நந்தன் வேஷம் போட்டாடினவன் வெகு நன்றாக ஆடினான் என்று கொண்டாடினார்கள். அவன் ஜனங்களை ரஸிக்கச் செய்யவென்று தன் மனத்தை அவர் மனத்துக் கியைய ஆள்வதினால் அப்புகழ் பெற்றான். ஆனால் தன் மனத்தையே ரஸிக்க அவ்வாறு ஒழுகுவானானால், தானே நந்தன் நிலையை அடைவானல்லவா? தன் மனத்திற்கு ஐயமற உண்மை ஸுகமுண்டாக்க உழைத்திடுவானானால் எல்லார் மனமும் தாமே அவனிடம் அன்பு கொள்ளுமல்லவா? அப்போதவன் மனம் வெளிவேஷம்போடும் கூத்திற் செல்லாதன்றோ? அவன் நாட்டம் அப்பொழுது உள்ளே தான் நாடும். மனங்குவிந்தால், அதில் விளங்கும் அறிவு எல்லா மனத்திலும் ஐயமற விளங்குவதால் யாவர் மனமும், தன்னினஞ் சேர்வதுபோல், காந்தத்தால் இழுக்கப்படும் உருக்குபோல் அவன் மனத்தை நாடிக் கொண்டாடுகிறது.

***

அமெரிக்காக் கண்டத்தில் பிரான்க்லின் என்னும் நிபுணர் ஒருவரிருந்தார். அவர் சிறிய நாளில் துஷ்டகுணங்களை ஒவ்வொன்றாக ஒழிக்க நன்கு அப்யஸித்தவர். ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு துர்குணத்தை விடமுயன்றார். ஆனால் விட்டதை மற்றும் பற்றுவதென்பதே வழக்கம் கிடையாது. இவ்வாறு தமது நடத்தையை ஒழுங்குபடுத்தியும், ஐம்புலன்களை ஒடுக்கியும் வந்ததனால் அவர் கடைசியில் ஞானியராகிச் சிறந்து விளங்கினார். நாமும் அவர் போல் நமது பழக்க வழக்கங்களைச் செம்மைப்படுத்திச் சிறப்புற ஐம்புலன்களை அடக்குவது இழுக்காகாது.



விவேக போதினி

தொகுதி. 9] நள ஆவணி [பகுதி. 3

## வர்ணாச்ரமம்

### YARNASRAMA

முன் எடுத்து விஸ்தரித்துள்ள ஸ்வகர்மாக்களுக்கு முக்ய ஆதாரமாக உள்ளது வர்ணாச்ரமம் என்பது முன்னரே குறிப்பாகக் காட்டப்பட்டது. இங்கு அந்த வர்ணாச்ரமத்தின் தன்மையை ஆழ்ந்து ஆராயப் புகுவோம்.

வர்ணம் என்ற சொல்லுக்கு ஸாதாரணமாக நிறம் என்ற பொருள் உண்டு. இதைக் கொண்டே அவஸரப்பட்டு மேனாட்டைச் சேர்ந்து, நம்ம நாட்டைச் சேர்ந்துள்ள நம் மதவிஷயஆராய்ச்சி செய்வோர் "வர்ணபேதமாகிய ஜாதிபேதம் நிறத்தையே பொருத்தது; ஆகவே ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ர ஜாதிகளைச் சேர்ந்தவரெனப்படுவோர் முறையே வெளுப்பு, சிவப்பு, மாநிறம், கறுப்பு ஆகிய நிறத்துடனிருப்பர். இந்த நிறத்தைத் தவிர வேறு ஜாதிபேதம் இல்லை" என்பர். இவர்களால், ப்ராஹ்மணாதி ஜாதிகளில் காணப்படும் நிறக்கலப்பிற்குத் தகுந்த முகாந்திரம் கூறமுடியாது. ஆபாஸமான வர்ணக்கலப்பான பாபத்தையோ அல்லது கலப்பு வர்ணமுடையவர் அந்தந்த ஜாதியில் தாழ்ந்தவர் என்றோ கொடுமையாகத்தான் இவர்கள் கூறவேண்டி வரும். வர்ணம் என்பதற்கு ஜாதி என்றும் ஒரு பொருள் உண்டு. இவ்விருவகைப் பொருளுக்கும் ஒருவாறான பொருத்தமும் உண்டு. உலகிலுள்ள வஸ்துக்கள் எல்லாம் மனதில் தெளிவை உண்டாக்குவன, சுறுசுறுப்பை உண்டாக்குவன, மயக்கம் உண்டாக்குவன என்றும், மனங்களோ தெளிவாயும், சுறுசுறுப்பாயும், மயக்க முடையனவாயும் ஸமய பேதங்களுக்கு ஏற்பத் தோன்றும் என்றும் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். உலகில் உள்ள எவ்வித அறிபடு பொருளையும் அறிவுப் பொருளையும் இம்மூன்றன் கூட்டத்துள் அடங்கிய கலப்பில் பகுத்துக் காட்டிவிடலாம். இவைகளாக விளங்க மூலகாரணமாக உள்ளதற்குச் சாஸ்திரங்களில் குணங்கள் என்று பெயர். இப்பெயருக்கும், வஸ்துக்களின் குணங்கள் என்ற சொல்லுக்கும் மிக்க வேற்றுமை உண்டு. இங்கு கூறப்படும் குணங்கள், மனதைமாற்றும் காரணப்பொருள்கள்; ஸாதாரண குணங்கள் வஸ்துவுடன் இணைபிரியாது இந்திரியங்களால் உணரப்படும் தன்மைகள். இந்த முக்குணங்களுக்கு முறையே ஸத்வம் (தெளிவு), ரஜஸ் (பரபரப்பு), தமஸ் (மயக்கம்) என்று பெயர். இவ்வைகளின் தன்மையையும், கலப்பு விசேஷங்களையும், பின்னர் ஞானயோகத்தைப் பற்றி விஸ்தரிக்குங்கால் எடுத்து விளக்குவோம். இங்கு இவைகளின் தன்மையை ஒருவாறு எடுத்து அலங்காரவழி காட்ட நிறங்களில் வெளுப்பை ஸத்வத்திற்கு நிகர் என்றும், சிவப்பை ரஜஸ்ஸிற்கு நிகர் என்றும், கறுப்பைத் தமஸிற்கு நிகரென்றும் சாஸ்திரங்கள் கூறுவதுண்டு. இந்தப் பரிபாஷையை அறியாதுதான் முற்கூறிய ஆராய்ச்சியாளர்கள் வர்ண விஷயப் பொருள்களில் உபமானத்தை உபமேயமாகவே கொண்டு மதிமோசம் போனது. சாஸ்திரங்களிலோ வர்ணங்களால் விளக்கப்படும் இக்குண ஏற்றத்தாழ்வுக்கு ஏற்ப வைதிக ஜீவர் பிறப்பில் ஏற்படும் வகுப்புப் பேதத்திற்கு வர்ணம் என்ற பெயர் இடப்பட்டுள்ளது. ஆதலால் பிறவியில் வைதிகர்களுக்கு ஏற்படும் ஜாதிபேதம் என்பதுதான் வர்ணம் என்ற பதத்தின் பொருள்.

இந்த வர்ணபேதம் குணபேதத்தால் எப்படி ஏற்படுகிறது என்பதை இனி விவரிப்போம். தாமஸ குணம் மயக்க நிலையுடன் சேர்ந்ததாதலால், அக்குண ஏற்றமுடைய

வர் தாமாக ஒருவிதத் தொழிலையும் தம் சிறப்பு நோக்கிச் செய்யாது வெளி விஷயச் சிறப்பில் மாத்திரம் ஈடுபட்டுத் தொழிற்படுவர். வெளிவிஷயங்கள் வெறுப்பை உண்டாக்குபவையாயின், அவை எவ்வளவுதான் நன்மை பயப்பனவாயினும், அவைகளுடன் ஸம்பந்தப்பட்டுத் தொழிற்பட இவர்களுக்கு மனம் வராது. இவ்வாறு தாமே தொழிற்பட்டு நிற்க இயலாது, எடுப்பார் கைப்பிள்ளை போல, வெளி விஷயங்களை மாத்திரம் பொருத்துத் தொழிற்படும் தன்மைமேலிட்டுள்ள ஜாதி சூத்ரவர்ணம் எனப் பகுக்கப்பட்டுநிற்கும். இப்படியே ராஜஸ தாமஸக்கலப்பு ஏற்றமாக உள்ள வகுப்பு, வைதிகர்களிடம் தாமாகவே தொழிற்படும் தன்மையோடும், எப்பொழுதும் தம் நயம் கருதித் தொழிற்படும் தன்மையோடும் காணப்படும்: இந்த வைச்ய நிலையில், தொழிற்படுவோன் திறம் சற்று வெளியாகும். ஸத்வ ரஜஸ்கலப்பு ஏற்றமாகவுள்ள வகுப்பாரான வைதிகர்களுக்கு நன்மைபுரியத் தொழிற்படும் ஆற்றலோடு பெரும்பாலும் தம் நன்மையை ஒதுக்கி வைதிக முறைப்படி பிறர் நன்மையைப் பகுத்தறிந்து தொழிற்பட்டுத் திருப்தி அடையும் ஆற்றல் உண்டாகும். இந்த க்ஷத்ரிய நிலையில் தொழிற்படுவோன் தன்மை நன்றாக வெளிப்படினும், அவன் உண்மையான நிலை ரஜஸ்ஸால் ஏற்படும் பரபரப்பால் நன்றாக விளங்காது. ஸத்வம் ஏற்றமாகவுள்ள வைதிகர்களுக்கோ முன்னவர்கள் ஆற்றலுடன் வைதிகவழியேநன்மை புரிய வேண்டும் என்ற ஸ்ப்ருஹையும் (முன் ஆவலும்), நன்மைபுரிந்த பின்னர் இவ்வளவு செய்துவிட்டோம் என்ற உத்வேகமும் (கர்வாதிகளும்), இல்லாது தகுந்த தருணங்களை அனுதரவு செய்யாது வைதிக வழிப்படி ஸ்வகர்மாக்களைச்செய்துதீர்க்கும் ஆற்றல்காணப்படும். இந்நிலைகளிலெல்லாம் தமது செயலற்ற உண்மை நிலையான ஈச்வரன் நிலை இவர்கள் மனதில் மாறாது குடிகொண்டிருக்கும். இந்த ப்ராஹ்மண நிலையில் தொழில் செய்பவன்போலக் காணப்படுபவனுக்கும் நடைபெறும் தொழிலுக்கும் யாதொரு பொருத்தமும் இல்லையென்பது நன்கு விளங்குவதாகிய தொழிலில் தொழிலற்றவனைக் காணுவதான கர்மாவில் அகர்மாவைப் பார்க்கும் தன்மை ஏற்படும்.

இதுவரையிலும் கூறியதிலிருந்து காட்டப்பட்ட தன்மைகள் நான்கும், நான்கு வர்ணங்களிலும் தனித்தனிக் காணப்படும். மற்றவர்ணங்களில் அவை இரா என்று குதர்க்கம் செய்வதாகாது. இங்குகாட்டப்பட்ட நான்கு தன்மைகளும் நான்கிலும் உண்டு. ஆனால் ஒவ்வொன்றே ஏற்றமாக இருக்கும். இன்னும் ஆராய்ந்து பார்க்கின், சூத்ரன் தன்மையால் அந்தஜாதியில் ஏற்படக் கூடிய நற்குணங்களாகிய அமைதி அடக்கங்கள் வைச்ய ஜாதியிலும், இவ்விரு ஜாதியால் ஏற்படக் கூடிய அமைதி அடக்க லௌகிக ஸாமர்த்யாதிகள் க்ஷத்ரியஜாதியிலும், இம்மூன்று ஜாதிகளில் ஏற்படக்கூடிய பிறரை அடக்கி நன்மைவிளைய நடத்தலுடன் சேர்ந்த முற்கூறிய நற்குணங்கள் ப்ராஹ்மண ஜாதியிலும், இயற்கைக் குணமாகவும் அமைந்து காணப்படும். அதாவது, தாழ்ந்த ஜாதியின் சிறப்பு, மேல் ஜாதியின் இயற்கை குணமாகவே இருக்கும் என்பதுதான்.

இங்கு கூறப்பட்டுள்ள வர்ண பேதம் உலகிலுள்ள மானிடர்கள் எல்லோருக்கும் பொருந்தாதோ என்ற சங்கை இப்பொழுது ஏற்படலாம். இதற்குப் பொதுவாக ஒருவித ஸமாதானம் கூறிவிடலாம். வைதிகர்கள் ஒழிந்த மற்றைய மானிடர்கள் தமது மதத்திற்கு மூல ஆதாரம் என்று கூறும் நூல்களில் இந்த ஜாதி பேதமும் இதன் காரணமும் எடுத்துக் காட்டப்படாததால் இவை அவர்களுக்குப் பொருந்தா என்பதே. இதை ஆழ்ந்து விசாரித்தால் வைதிகம் ஒழிந்தமற்றைய மதங்களில் மனதைச் சுத்தப்படுத்தக்கூடிய தொழில்கள் சில உள என்ற உணர்வே காணப்படவில்லை. மனதை, அவர்கள் மதவிஷய எண்ணம் நம்பிக்கைகளால் மாத்திரம் சீர்படுத்தவேண்டுமே ஒழிய எத்தனைவித வெளிக் கர்மாக்களாலும் அதை அணுக்வே முடியாது என்பது அவர்கள் கொள்கை. இதுபற்றித் தேஹத்திற்கும் மனத்திற்கும் உள்ள பொருத்தத்தை நன்கு மதித்து ஏற்படக்கூடிய மனதை நல்வழிப்படுத்தும் தேஹத் தொழில்களையே ஆதாரமாகக் கொண்டுள்ள வர்ணபேதம் அவர்களிடம் இருக்க நியாயமேயில்லை. நமது வர்ணபேத நுட்பத்தை எடுத்து அவர்களிடம் கூறப் புகுந்தாலும், தேஹத் தொழில்களால் மனதைத் தாக்கமுடியும் என்ற மூலக்கொள்கையே அவர்கள் மனதில் ஏறாது. இதுபற்றியே அவர்கள் தேஹ விஷயத்தையும் மனோ விஷயத்தையும் வரம்புகட்டிப் பிரித்துவிட அவர் மதக்கொள்கைகள் எல்லாம் நடத்தையை நேரிடத்தாக்காத வெறும் மனக்கொதிப்பாகவும், அவர்கள் தேஹத் தொழில்கள் எல்லாம் இவ்வுலக ஸுகத்தையே நோக்கி ஏற்படக் கூடிய ஸாரமற்ற வ்யாபாரம் போட்டி முதலியவைகளைப் பொறுத்தனவான வெறும் லௌகிகத் தொழில்களாகவும் ஏற்பட்டுள்ளன. இவ்விரண்டையும் பொருத்தி தேஹச் சிறப்பை ஓங்கி வளரச்செய்யும் ஆற்றலில்லா வெளி மதத்தவர்களிடம் இந்த ஒழுங்கையே ஆதாரமாகவுடைய ஜாதி எவ்வளவு பொதுவாயினும் இருக்க இடமேயில்லை.

நம்முள் நுட்ப புத்தியுடைய குதர்க்கிகள் சிலர் 'வர்ணபேதம் மனதின் தன்மையைப் பொருத்தது போலவே காணப்படுவதால் அது தனித்தனி வகுப்பாரை ஒட்டிப் பிறவியில் அமைந்து, பிறவி மாத்திரத்தில் இறங்கி வருவதாக இருப்பானேன்? எந்த மனிதனுக்கு எந்தத் தன்மை எப்பொழுது ஓங்குமோ அவன் அவ்வகுப்பைச் சேர்ந்தவனாக இருப்பன் என்பதே வேதத்தின் கருத்து என்னலாகாதா? அதைவிட்டு ப்ராஹ்மணாதி வர்ணங்கள் தனி ஜாதிக்கூட்டம் என்று கொள்ளுவானேன்?" என்பர். இப்படிப் பொதுவாக இவைகளை மானிடர் தன்மை எனக்கொண்டால் முன்னர் எடுத்துக் காட்டப்பட்ட குற்றம் முதலில் ஏற்படும். இந்த ஒழுங்கு இல்லாதவர்களாகிய வேதத்திற்கு வெளிப்பட்ட மற்றைய மதத்தவர்களிடம் இதை வீணே ஏற்றிக் குதர்க்கம் செய்ய வேண்டிவரும். மேலும் 'குணவேற்றுமைக் கலப்பால் ஜாதி வகுப்புப் பிறவி மாத்திரமே ஏற்படுகிறது: அப்படி ஏற்படும் வகுப்பில் சேர்ந்தவர் இன்ன தர்மங்களைப் பின்பற்ற வேண்டும்' என்று வேதம் வெளிப்படையாகச் சுருக்கிக் காட்டியுள்ளது. ஸ்மிருதிகள் இவைகளையே விஸ்தாரமாகவும் விளக்கமாகவும் எடுத்தாளுகின்றன. இதுபற்றியே வர்ணபேத ஆதாரமான குணபேதக் கலப்பு எவ்வளவு பொதுவாயினும் வெறும் தன்மை மாறுபாடு விஷயமே ஒழிய, பிறவி ஜாதிக்கூட்ட வகுப்பு அல்ல என்று கொள்ள இடமேயில்லை. இங்கு காட்டியபடி குதர்க்கம் தொடங்குபவர் மேனாட்டார் குதர்க்கப்படி 'வர்ணபேதம் வேதத்தில் இல்லை, ஸ்மிருதியில் ப்ராஹ்மணர்கள் தமது பிழைப்பிற்காகக் கட்டிவிட்ட வெறும் புளுகு' என்று வற்புறுத்தப் புகுவர். வர்ணபேதம் வேதத்தில் காட்டப்பட்டுள்ளது என்பதைத்தகுந்த வேதமேற்கோள்களால் வர்ணாச்ரம தர்மம் என்ற பத்திரிகையில் வெகு விஸ்தாரமாகக் காட்டப்படுகிறது. ஆகவே இவைகளைக்கொண்டு, ஜாதி பேதம் வேதத்தில் நன்றாகக் கூறப்பட்டுள்ளது. அது இன்றுவரையில் பிற வழியிலேயே காப்பாற்றப்பட்டு வந்துள்ளது என்பதை நன்குணர்ந்து வர்ண பேதம் மானிடர்களுக்குப் பொதுவான மனத்தன்மையே யல்ல, வைதிகர்களுள் ஏற்பட்ட பிறவி வகுப்புக் கூட்டம் என்றே தெளியவேண்டும். தமது ஸுகஸௌகரியங்களைக் கருதி இந்த வைதிகக் கொள்கைக்கு விரோதமாகக் கொள்கை கொள்பவர், வேதத்தில் இதற்காதாரமே இல்லையென்று நிலை நிறுத்தச் செய்யும் முயற்சி எல்லாம் வீண் விழலுக்கிறைத்த நீர்தான் என்பதை நன்றாக உணர்ந்து, அவர்கள் யுக்திவாதம் போன்ற மொழிகளில் ஈடுபட்டுத் தத்தளிக்கவே கூடாது.

'வர்ண மாற்றம், தகுந்தவர் விஷயத்தில் ஒரே பிறவியில் ஏற்படலாம் எனப் புராணங்கள் கூறும். இதே இந்த ஒழுங்குப் பிறவியை மாத்திரம் பொருத்ததல்ல என்பதைக் காட்டும்' என்பர் முற்கூறிய குதர்க்கிகள். இதற்கு, விச்வாமித்ரர் க்ஷத்ரியராகப் பிறந்து ப்ராஹ்மணரானதை உதாரணமாகக் காட்டுவர். இது முற்றும் தவறு. விச்வாமித்ரர் க்ஷத்ரியத் தாய்க்கு, ப்ராஹமணர் தபோவேகச் சருவால் விசித்ரமாக உண்டானவர். ஆகவே, அவ பிறவியில் க்ஷத்ரியத் தன்மையால்மூடப்பட்ட ப்ராஹ்மணர். இதனால்தான் அவர், பின்னர் ப்ராஹ்மணராகி விட முடிந்தது. க்ஷத்ரியத் தகப்பனுக்கே

பிறந்தவரானல் இவரால் இவ்வாறு செய்ய முடிந்திராது. ஆதலால் வர்ணபேதம் பிறவியையே பொருத்தது.

இக்காலத்தில் இந்த வர்ண ஒழுங்கைப் பற்றி வேறு ஒரு அபிப்ராயமும் பலமாக ஏற்பட்டுள்ளது. அது; 'இந்தவர்ண ஒழுங்கு ஸமூக வாழ்க்கையில் பொதுநன்மைக்காகப் பலர் சேர்ந்து தொழில்களைத் தம்முள் பிரிந்து ஸரிவர எளிதில் செய்வதற்கே ஏற்பட்டுள்ளது. எல்லோராலும் எல்லாத் தொழில்களைச் செய்யக் காலமும் போதாது, ஆற்றலும் இராது என்பதே இதற்குக் காரணம். இவ்வளவுதானே ஒழிய, வேறு மதவிஷயப் பொருத்தமும் மனதை விசாலப்படுத்தும் ஆற்றலும் இந்த ஒழுங்கிற்கு இல்லை. ஆகவே இது முற்காலத்திற்கு இசைந்திருந்த மானிட ஏற்பாடான லௌகிக ஒழுங்கே ஒழிய வேறு ஒன்றுமல்ல. வெறும் வேலைப் பாகுபாட்டிற்காக ஏற்படுத்தப்பட்டது' என்பதே. இங்கு எடுத்துக் காட்டப்பட்ட வேலைப்பாகுபாடு விஷயம் வர்ணபேதத்திற்கு ஆதாரமல்ல; அதனால் ஏற்படும் பல நன்மைகளுள் ஒன்றேஒழியவேறல்ல. இக்காலத்தவர் ஆதாரம் நன்மை இவைகளைக் குழப்பிக்கொண்டு திண்டாடுகின்றனர். உதாரணமாக, ஒருவன் நல்வழி நடப்பதற்குக் காரணம் அவன் ஸ்வபாவகுணமும் உணர்வுமாக இருக்கும்; அதனால் பிறருக்கு நன்மையும் அவனுக்குக் கீர்த்தியும் உண்டாகலாம். இதைக்கொண்டு அவன் தன் கீர்த்தியைக் கருதியே நல்வழி நடக்கிறான் என்று உறுதியாகக் கூறிவிட முடியுமா? இதுபோல வர்ணபேதத்திற்கு ஆதாரம் ஒன்றாயும், அதனால் விளையும் நன்மைகள் பலவாயும் இருக்கலாம். இதைக்கொண்டு விளையும் நன்மைகளில் ஏதாவது ஒன்று மாத்திரமே அதற்கு மூலகாரணம் ஆதாரம் என்று சாதிப்பது வீண் அறியாமை யல்லவா? வர்ணபேதத்தின் மூலகாரணத்தை முன்னர் எடுத்துக்காட்டியாகிவிட்டது. அதன்வழி வைதிகர்களான நான்கு வர்ணத்தாரையும் எல்லாம் கடந்து நிற்கும் மோக்ஷம் கைகூடச் செய்யவேண்டும் என்பதே வேதத்தின் நோக்கம், இந்த வர்ணபேதத்தை விளக்கிக் காட்டுவதில்.

எல்லோரும் வைதிகவழி பின்னடையாமலே கடைத்தேறுவதே வர்ணபேதத்தின் உண்மை நோக்கம் என்பதைக் காட்டவே ஒவ்வொரு வர்ணத்திலும் ஏற்படக்கூடிய நிஜ அபிவிருத்தியை வரையறுத்துக் காட்ட வர்ணபேத முகாந்தரத்தையே பொருத்தமாக வேதம் அவைகளுள் ஆச்ரம ஒழுங்கைக் காட்டியுள்ளது. இந்த ஆச்ரமங்கள் நான்கு. அவையாவன: (1) ப்ரஹ்மசரியம்: விஷய ஈடுபாட்டால் ஏற்படும் முதல்விதத் தொழில்களை மேல்பட்டவர் (குரு) கட்டளைக்கு இணங்க நடந்து ஒழுங்குபடுத்தி மேல் உள்ள ஆச்ரமங்களில் ஸரிவரப் புகுத்துவதற்கு ஏற்பட்டுள்ளது; (2) இரண்டாவதான கார்ஹஸ்த்யம்: தம்நயம் கருதும் தொழில்களை ஒழுங்குபடுத்திப் பிறர் நன்மையைக்கவனிப்பதற்குவேண்டிய ஆற்றலை ஊட்டும்ஒழுங்குகளுள்ளது; (3) மூன்றாவதான வானப்ரஸ்தம்: தம் நயம் கருதாத் தொழில்களில்பழகி அமைதியுடன் நற்றொழில்களையே செய்யும் ஆற்றலால், நான்காவதுவிதத் தொழிலைச் செய்யாமற்செய்யும் வழியை அனுஸரிக்கும் ஆற்றல் ஏற்படுத்திக்கொள்ள உண்டானது; (4) நான்காவதான ஸந்யாஸம் தொழிலையும் தாண்டி அப்பாற்பட்டுள்ள பரம முக்திநிலையில் அமரும் ஆற்றலை உண்டாக்கிக்கொள்ள ஏற்பட்டது—ஆகிய இவைகளே. இந்த நான்கு ஆச்ரமங்கள் நான்கு வர்ணங்களுள் அமைந்து கிடக்கும் விதந்தான் நான்கு வர்ணங்களும் மோக்ஷம் மனப்பூர்வமாகப்பாடுபட்டு அடையும் ஒழுங்கையே பொருத்தமென்பதை நன்கு விளக்கும். சூத்ரவர்ணத்திற்கு ப்ரஹ்மசரியத்தினது அடக்கநடத்தையுடைய கார்ஹஸ்த்யம்ஒன்றுதான் உண்டு. வைச்யனுக்கு முதல் இரண்டு ஆச்ரமம்; க்ஷத்ரியனுக்கு முதல் மூன்று ஆச்ரமம்; ப்ராஹ்மணருக்குத்தான் நான்கு ஆச்ரமங்களும். இவ்வாறு வைதிகமதப்படி ஆச்ரமங்கள் வர்ணங்களுள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை உணராத மயக்கத்தினால்தான் இக்காலத்தில் வேதபாஹ்யரான பல கிளை ஜாதியர்கள் மலிந்து பெருங்குழப்பம் ஏற்பட்டுவிட்டது. இந்த வர்ணாச்ரமப் பொருத்தத்தை நன்குணர்ந்தவர்கள், வர்ண பேதம் வெறும் லௌகிக



ஸங்கத்தைப் பொருத்தது என்று குதர்க்கம் பேசவேமாட்டார்கள். அது மோக்ஷத்தை நேர்மையான மனப்பூர்வ முயற்சியால அணுகுவதற்கேஎக்காலும் வைதிகமதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு அநேக இஹபர ஸௌகர்யங்கள் பலன்களாகக் கிணைப்படலாம். இவை இரண்டையும் குழப்பி வர்ணபேத மூலகாரணம் உணராது திண்டாடக்கூடாது.

இங்கு காட்டப்பட்ட ஆச்ரம பேதம் எப்படி வர்ணபேதத்துள் ஒன்றிரண்டு மூன்று நான்குமாகப் புகுந்து அமைந்துள்ளதோ, அப்படியேதான் சாஸ்திரங்களில் கூறப்படும் நான்கன் கூட்டமான ஸத் விஷயங்களும் வர்ணபேதத்தில் பிரிந்து தொகுத்து அமைந்துகிடக்கும். இப்படிப்பட்ட நான்கின் கூட்டங்களாவன: (1) சாதன சதுஷ்டயம் (விவேகம், வைராக்யம், ஆறுநற்குணங்கள், மோக்ஷ ஆசை) (2) சதுர்விதபுருஷார்த்தம் (தர்ம, அர்த்த, காம, மோக்ஷம்) (3) சித்த சுத்தி: (தர்ம, ஞான, வைராக்ய, ஐச்வரியம்) (4) பகவத் பக்தி: (ஆர்த்த, அர்த்தார்த்தி, ஜிஞ்ஞாஸு, ஞான பக்திகள்) (5) வாஸனை அடக்கும் விதம்: ஆலம்பன நீக்கம் (விஷய ஒதுக்கம்), ஆச்ரய நீக்கம் (மன அழுக்கு நீக்கம்), பலநீக்கம் (எண்ணம், தொழில் முதலியவை நீக்கல்); ஹேதுநீக்கம் (ஆணிவேரான மயக்க நீக்கம்) இவை போன்றவை. இவைகள் எல்லாம் வர்ணபேதத்திற்கேற்ப ஒவ்வொன்றாக மேற்பட்ட சேர்க்கையாக ஒருவனுக்கு வந்தமையும். ஆதலால் வர்ணபேதம் வெறும் கட்டுப்பாடேயல்ல. வைதிகரெவரும் பரம முடிவான மோக்ஷமடையமுழுமனதுடன் முயற்சிக்கத்தகுந்த ஆற்றலுக்கேற்ப, அவர்பிறவியாரம்பத்திலேற்பட்ட வகுப்புப்பாகுபாடே. ஆகையால், எவரும், பிறரது வர்ணத்தாழ்வு ஏற்றத்திடம் வெறுப்பு, பொறாமையுறாது, தன் வருண மோக்ஷ முயற்சி தர்மத்தை விடாது, தற்காலப் பிறவி நீங்குமளவும் சிரத்தையுடன் பின்பற்றினல், அடுத்த பிறவி மேற்பட்டதேயாகும்; அல்லது அவர் இங்கோ, லோகாந்தரத்திலோ ப்ராஹ்மணப் பிறவிபெற்று மேலான நிலை பெறுவர்.

❀

# பண்டிட் அஜோத்ய நாதர்

## PUNDIT AJUDHYA NATH

பண்டிட் அஜோத்ய நாதர் 1840-ம௵ ஏப்ரல்மீ 8உ ஆக்ரா நகரத்திற் பிறந்தவர்; காச்மீர நாட்டுப் பிராஹ்மண ஜாதியைச் சார்ந்தவர். அவர் தந்தை, பெருந்தனிகர்; கேதார நாதர் என்னும் பெயரினர்; வியாபாரத்தில் உழைத்துக் குவியில் குவியலாகச் சேமநிதி சேர்த்தவர்; சிலகாலம் ஜாப்ஹார் நவாபின் பிரதான மந்திரியாக இருந்தவர்.



பண்டிட் அஜோத்ய நாதர்

சிறுநாள் முதல், அஜோத்ய நாதர் ப்ரஷியன் அராபிக் பாஷைகளை அன்போடு படித்தார்; ஆக்ரா காலேஜில் 13-வது வயதில் படிக்கச் சேர்ந்தார். அவர் படிப்பின் பெருக்கின் பெருமையைப்பற்றி 1860, 1861-வது வருஷத்திய தேசப் படிப்பைப்பற்றிய ரிபோர்ட்டில் சிலாகிக்கப்பட்டிருக்கிறது. 1862-௵ காலேஜிலிருந்து வெளிவந்து, வக்கீல் வேலையில் பிரவர்த்தித்தார். ஆக்ரா நகரத்துப் பிரமுகர்களை முன்னிட்டு விக்டோரியா காலேஜை ஸ்தாபனஞ் செய்ய முன்னின்றுழைத்தார். சில நாளானதும், ராஜதானியின் பிரதான ஸ்தானம் ஆக்ராவிலிருந்து அலஹாபாத்திற்கு மாற்றப்பட்டது. அஜோத்ய நாதரும் பட்டணம் பட்டணமாக மாறிக்கொண்டிருந்தனர். இதற்குள் 1869-௵ அவர் ஆக்ரா நகரத்து நியாய போதகராக நியமிக்கப்பட்டனர்.

வக்கீலாக அஜோத்ய நாதர் பிரமுகராக விருந்து பெருநிதி சேர்த்தனர். ப்ரஷியன் அராபிக் பாஷைப் படிப்புடன் அநேக ஆங்கில நூற்களைக் கற்றுணர்ந்து, 1879-௵ அலஹாபாத்தில் பிரசுரிக்கப்பட்ட "இந்தியன் ஹெரல்ட்" (இந்திய தூதன்) என்னும் பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்து வந்தார். அப்பத்திரிகை நீடித்து நிலைக்கவில்லை. ஆதலால் 1890-௵ "இண்டியன் யூனியன்" (இந்திய ஐக்யம்) என்னும் பொது ஜனப் பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்ய ஆரம்பித்தனர். இவைபோன்ற செயலால் அவர் முந்தியதைக்கண்ட ராஜாங்கத்தாரும் அவரை வடமேற்கு மாகாணத்துச் சட்டசபையின் அங்கத்தினராக நியமித்துக் கௌரவித்தனர். அம்மாகாணத்தில் அவர்தான் அவ்வாறு கௌரவிக்கப்பட்ட முதல் இந்தியர். அலஹாபாத், கல்கத்தா ஸர்வகலாஸங்கங்களாலும் அவர் "பெல்லோ" என்னும் அங்கத்தினராக எடுக்கப்பட்டனர். ஆனால் இந்தியன் நாஷனல் காங்கிரஸில் உழைத்தபோதுதான் அவர் இந்தியா முழுதும் பிரக்யாதிஅடைந்தார். அவர் அம்மஹாநாட்டை இயங்கச்செய்த மூல புருஷருள் ஒருவரல்லாவிடினும், அச்சபையின் பெருஞ் சேவகராக உழைத்தவர். அவருடைய அடங்காமனவமைப்பும்பெருமையுமே 1888-௵ ௸ சபையை அலஹாபாத்தில் வரவேற்கும்படிச் செய்தன. அவர் மனக்கிளர்ச்சியில்லாது வெறுப்புடன் விளங்கிய தனது நகரவாசிகள் வரவேற்புக்கு வேண்டியபணத்தைச் சேர்த்து, வரவேற்புப் பெருமைக்கு விரும்பாராகில், அப்பெருமை முற்றும் தனதாக்கிக்கொள்ள எல்லாப் பணமும் தானே தருவேன் என்று சுடச்சுடப் பேசித் தனது நகரத்தாரதுமனத்தைக்கலக்கியமொழிகளை மறந்தவரெவர்? வரவேற்புக் கமிட்டியின் தலைவராக அவர்அத்யத்புதமாகப்பேசினார்.

காங்கிரஸ் கப்பலின் முதன் மாலுமியாக நடத்திய காலஞ்சென்ற ஏ. ஓ. ஹ்யூம் அவர்கள் தமது ஜன்ம தேசமாகிய இங்கிலண்டிற்குச் சென்றபோது இவர்தான் யாவராலும் காங்கிரஸின் பொதுக் கார்யஸ்தராக அவர்க்குப் பதிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அடுத்த வருஷம் நாகபுரத்துக் காங்கிரஸ் கூடியகாலத்து இவரையே அக்ராஸனாதிபதியாக்க நியமித்திருந்தனர். ஆனால் கடைசி சமயத்தில் வேறொருவருக்கு அப்பதவியளிக்கப்பட்டது; அடுத்த வருஷம் பண்டிதற்கே என்றும் நிச்சயிக்கப்பட்டது. அப்பதவியை அவர் பெறக் கொடுத்துவைக்கவில்லை. நாக்புரத்திலிருந்து தம்மூரடைந்ததும், சில நாள்களுக்குள் தேஹ அசௌக்யமடைந்து, 1892-௵ ஜனவரி௴ 11௳ பேரின்பப் பதவிக்குப் பாத்திரரானார்.

பண்டிதர் அடங்காத் தீரர். அவர் பேசும் வகையே விநோதம்; கையையுங் காலையும் ஆட்டிக்கொண்டு பலவித அபிநயங்கள் செய்து பேசுவர்; அவர் மனத்துள்ளூறும் பாவங்களின் வேகத்தின் குறியே யவை. அவர் நடத்தை மிகச் சிறந்தது; அவர் ஸாமர்த்தியம் அபாரம். அவரிடம் அலஹாபாத் ஹைகோர்ட்டில் வைத்திருந்த மதிப்புக்கு ௸ கோர்ட் ஜட்ஜாகிய நாக்ஸ் துரை அவர்கள், பண்டிதர் சவத்தைக்கொண்ட ஆசந்தியிலணிய புஷ்பமாலை யனுப்பியதும், ௸ கோர்ட்டின் பிரதானஜட்ஜ் அவர்கள் "அவர்மொழியைக் கேட்பதெமக்கானந்தம். அவர் வாதங்களால் நாம் பெற்ற பயன்பல. நியாயவிஷய தர்மஸங்கடங்களில் மனமலையுங் காலத்துச் சடாரென அவர் வெளியிட்ட பேரபிப்பிராயங்களால் நாம் பெற்ற நன்மையைப் பாராட்டாதிருக்க முடியாது" எனக் கொண்டாடியதும் அறிகுறிகளாகும். அவர்க்குக் கல்வி அபிவிருத்தியில் பேரன்புண்டு. அலஹாபாத் ஸர்வகலாசங்கத்து உபஅக்ராஸனாதிபதியார் கூறியவாறு, அவர் "எந்த நாடும் எந்தஜாதியும் தம்மவரென்று கொண்டாடிச் செருக்கடையத் தகுந்த பெருமை வாய்ந்தவரே" ஆவர்.

---

**சந்தா நேயர்களுக்கு.**—பினங், சிங்கப்பூர், நேடால் முதலிய இடங்களிலுள்ள சந்தா நேயர்களிற் பலர், தங்கள் சந்தா பாக்கியை, பலமுறை எழுதியும், அனுப்பாமலிருப்பது நமக்கு மிகுந்த அசவுகர்யத்தை யுண்டுபண்ணுகிறது. யுத்தம் காரணமாக, காகிதம் முதலிய சாமான்கள் ஒன்றுக்கு நான்கு பங்காய் விற்கும் இக்காலத்தில் இது நமக்குச் சோதனைபோல் இருக்கிறது. சந்தா நேயர்கள் தயவு செய்து, தங்கள் சந்தா பாக்கியை இனிச் சிறிதும் தாமதியாது அனுப்புவது, போதினியின் மேன் மேன் விருத்திக்கு உதவியாகும். மானேஜர்.



# பூர்வீக இந்தியாவில் சப்த சாஸ்திரத்தின் அபிவிருத்தி

## THE STUDY OF PHONETICS IN ANCIENT INDIA

நமது பூர்வீகர்கள் புத்தியிலும், ஆண்மையிலும் இன்னும் மற்ற நற்குண நற்செய்கைகளிலும் பேர் போனவர்கள் என்பதற்குச் சற்றும் ஐயமே இல்லை. உதாரணமாக, அவர்கள் அருளிச் செய்திருக்கும் வேதங்களென்ன, புராணங்களென்ன, சாஸ்திரங்களென்ன இவைகளெல்லாவற்றையும் மற்ற தேசத்தவர்கள் பார்த்து மனமகிழ்ந்து "இந்த நூல்களைப்போல் மகிமை யுடையவைகள் வேறெங்குமில்லை" என்று சொல்லி ஸ்தோத்திரம் செய்திருக்கிறார்கள். இன்னும் அவர்கள் மனுதர்ம சாஸ்திரத்திலும், யாக்ஞவல்க்யர் அருளிச்செய்த ஸ்மிருதிகளிலும் நமது நித்திய கர்மானுஷ்டானத்துக்காக என்னென்ன நியமங்கள் வைத்திருக்கின்றார்களோ, அவைகளெல்லாம் நமது தேகாரோக்கியத்தின் பொருட்டே யன்றி வேறல்ல என்பதும் ஸ்பஷ்டமாய் விளங்குகின்றது. அப்படியிருக்க, இப்போது சுமார் நாற்பது, ஐம்பது வருஷங்களாக ஐரோப்பியர்கள் சப்த சாஸ்திரத்தில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதிற் சிலர் "மத விஷயங்களிலும், சிற்ப சாஸ்திரம், ஜோதிஷ சாஸ்திரம், கணித சாஸ்திரம் முதலியவைகளிலும் ஹிந்துக்கள் பேர் பெற்றிருக்கலாம். சப்த சாஸ்திரம் இது வரையில் அவர்களுக்குத் தெரிந்தது என்று சொல்வதற்கு நியாயமில்லை" என்று சொல்லக் கேள்வி யுற்றிருக்கின்றனன். அந்த மாதிரி நினைப்பது ஸரியல்ல என்று எல்லோருக்கும் தெரியும் வண்ணம் இந்த வியாஸம் வரையலானேன்.

இவ்விடத்தில் சப்த சாஸ்திரம் என்றால் சங்கீதத்திலிருக்கும் ஸா, ரீ, கா, மா, பா, த, நீ, என்ற ஸப்த ஸ்வரங்களைப்பற்றிச் சொல்லும் சாஸ்திரமல்ல. பொதுவாக, நாம் பேசும்வார்த்தைகளிலிருக்கும் ஒவ்வொருஎழுத்தும் எவ்விதமாக உச்சரிக்கவேண்டுமென்று சொல்லும் சாஸ்திரமேயாம். அதாவது ஒவ்வொரு சப்தத்தை உச்சரிக்கும்பொழுதும் நமது நாக்கின் அடியும், நுனியும், மேற் பல்லும் கீழ்ப்பல்லும் எவ்விடத்தி லிருந்தால் ஸரியாய் உச்சரிக்க முடியும் என்று சொல்லும் சாஸ்திரத்துக்குத்தான் சப்த சாஸ்திரம் என்று பெயர். "ஒவ்வொருவருக்கும் உச்சரிக்கத் தானே வருகின்றதே, இதைப்பற்றி ஒரு சாஸ்திரம் வேண்டுமா" என்று சிலபேர் கேட்கக்கூடும். ஆனால் நன்றாய் வார்த்தைகளை உச்சரிப்பதும் பலர்க்கும் தெரியும்படி வாசிப்பதும் எளிய சங்கதிகளல்ல. நமது தமிழ்ப் பாஷையில் குடை, கொடை, என்ற இரண்டு பதங்கள் உள. வேகமாய்ப் பேசும்பொழுது ஒன்றுக்கொன்றைச் சொல்வது ஸகஜமானதே. இந்த ஸ்வர சாஸ்திரத்தைஅறிந்தால் இந்த விதமான பிழைகளைத்தீர்க்கலாம். இன்னும் தந்நகரத்துக்கும், றன்னகரத்துக்கும்(ந, ன) இடையின ரகரத்துக்கும் வல்லின றகரத்துக்கும் (ர, ற) வித்தியாஸம் என்ன, அவைகளை எங்கே உபயோகப்படுத்தவேண்டும் என்ற விஷயங்களெல்லாம் பலபேருக்குத் தெரிந்திருக்கிறதில்லை. இதனால் பொருள் பேதம் உண்டாகிவிடும். இதற்காகத்தான் சப்தசாஸ்திரம் வாசிப்பது அவசியம் என்று பெரியோர் சொல்லுகின்றனர்.

ஸம்ஸ்க்ருத பாஷையில் இந்த சப்தசாஸ்திரத்தைப்பற்றிப் பாணினி என்பவர் அவர் அருளிச் செய்த வியாகரணத்தில் நன்றாய் உரைத்திருக்கின்றனர். அதே மாதிரியாகத் தமிழில் இதைப்பற்றிச் சொல்லியிருக்கும் நூல்கள் இரண்டு உள: அவையாவன;— தொல்காப்பியமும் அதை முதநூலாகக் கொண்டு பவணந்தி மாமுனிவர் செய்திருக்கும் வழிநூலாகிய நன்னூலுமேயாம். இப்பவணந்தி மாமுனிவர் சீயகங்கன் என்ற அரசன் காலத்தவர் என்பதாலும், அச்சீயகங்கன் இற்றைக்கு 720 வருஷத்துக்கு முற்பட்டவனாதலாலும் இவர் சுமார் 720 வருஷத்துக்கு முன்னே இருந்தவர் என்று நன்கு விளங்குகிறது. இவர், எழுத்தியலில் எழுத்தின் அகத்திலக்கணம் பத்தையும் சொல்லி வருவதில், 'பிறப்பு' என்ற பகுதியில் இந்த ஸ்வரசாஸ்திரம் முழுவதையும் சங்கிரகமாய் உரைத்திருக்கிறார்.

முதன்முதலில் பிறப்பின் பொது விதியைச் சொல்லப்புகுந்து "உள்ளே நின்ற

உதானன் என்ற காற்றானது, மார்பும்கழுத்தும் தலையும் மூக்கும் ஆகிய நான்கிடத்தும் பொருந்தி, உதடும், நாக்கும், பல்லும், வாயும் ஆகியநான்கின் முயற்சியால் வெவ்வேறு ஒலிகள் பிறப்பன" என்று சொல்லியிருக்கிறார். அதாவது வெவ்வேறு ஒலிகளின் முதற்காரணமானது உள்ளிருந்து வெளிவரும் காற்று என்பதும், நாக்கு, பல், வாய் இவைகளின் முயற்சி துணைக்காரண மென்பதும் விளங்குகின்றன.

பிறகு சிறப்பு விதிகளைக்கூறுங்கால்

"ஆவி யிடைமை யிட மிட றாகும்,
மேவுமென்மை மூக்கு உரம்பெறும் வன்மை"

என்றார். அதாவது, உயிரெழுத்துக்களும், இடையின எழுத்துக்களும் கழுத்தை ஆதாரமாக வுடையனவாம்; மெல்லினம் மூக்கையும், வல்லினம் மார்பையும் இடமாகப் பொருந்தும் என்பதாம்.

அவற்றுள் அ, ஆ, என்ற இரண்டெழுத்தும் வாயைத் திறந்தவுடனே பிறப்பனவாம்; இ, ஈ, எ, ஏ, ஐ என்ற ஐந்தெழுத்தும் வாயைத் திறந்து, மேற்பல்லை அடிநாக்கின் நுனியானது நன்றாய்ப்பொருந்த வருவனவாம்; உ, ஊ, ஒ, ஓ, ஔ என்ற ஐந்தெழுத்தும், வாயை நன்றாய்த் திறவாமல், உதடுகளை முன் கொண்டுவந்து குவித்ததால் பிறக்கும் ஒலிகளாம்.

இவை யெல்லாவற்றையும் நன்கு அறிய வேண்டுமானால் எதிரில் ஒரு கண்ணாடியை வைத்துக்கொண்டு ஒவ்வொரு எழுத்தையும் நின்று உச்சரித்தால் தெரியும்.

ஆகவே, இம்மூன்று சூத்திரத்தால் உயிரெழுத்துப் பன்னிரண்டின் பிறப்பைச் சொன்னார். இது விஷயத்தைப்பற்றி இங்கிலீஷ் சாஸ்திரத்தில் சொல்லப்படுவது என்னவெனில்:— அ, ஆ என்ற இரண்டெழுத்துக்களையும் உச்சரிப்பதென்றால் வாயை நன்றாய்த் திறக்கவேண்டும்; ஆனால் ஆ என்பதை உச்சரிக்கும்பொழுது 'அ' என்பதைச் சொல்லும்போது நாக்கு எவ்விடமிருக்கிறதோ, அதைப் பார்க்கிலும் கொஞ்சம் பின்னே நகரவேண்டு மென்பதாம். இந்த நுட்பமான விஷயத்தை நன்னூலார் சொல்லவில்லையே என்று யோசிக்க வேண்டாம். ஏனெனில், 'பிறப்புக்குப் புறநடை' என்ற சூத்திரத்தில் 'எடுத்தல்; படுத்தல், நலிதல்' என்றவற்றுள் இதையும், இதைப்போன்ற பலவற்றையும் அடக்கியிருக்கின்றனர்.

(2) ஐ என்பது ஒரே ஒலி அல்ல; அ, இ என்ற இரண்டும் வேகமாய் உச்சரித்தால் ஐ என்பது தானாகவே வரும் என்று ஐரோப்பியர்கள் கூறியிருக்கின்றனர்.* இதைக் கண்டுபிடிப்பதற்கு ரொம்பநாள் வரையில் விவாதம்இருந்தது, சிலபேர் உண்டு என்றும் சிலபேர் இல்லையென்றும் சொல்லி இப்போதுதான் நவீனமாக இதை ஸ்தாபித்திருக்கிறார்கள். இந்த விஷயம் நன்னூலில் கூறப்பட்டுள்ளதா என்று சிலர்கேட்கலாம்.

'ஆம்; இதையும் நன்னூலார் சொல்லியிருக்கின்றார். எங்கெனில்:—ஒவ்வோரெழுத்துக்கும் இனவெழுத்தைச் சொல்லும்போது 'ஐ'க்கு இனம் 'இ' என்று கூறியிருக்கிறார். அதாவது 'ஐ' என்பதை உச்சரிக்கும்போது அதன் இரண்டாம் பாகம் 'இ' என்பது நன்கு விளங்குகிறது. தவிரவும், மொழிமுதற் போலியைப்பற்றிக் கூறுங்கால் 'அ,ஐ முதலிடை யொக்கும்' என்றார். இதிலிருந்து ஐகாரத்தின் முதற்பாகம் அகரம் என்பதும் தெரியவருகிறது. (உதாரணம் மஞ்சு, மைஞ்சு; ஐந்து, அஞ்சு முதலியன).

ஆதலால் ஐரோப்பியர்களுக்கு நூதனமாய் இருபது முப்பது வருஷங்களுக்கு முன்னேதான் விளங்கிய விஷயமானது நம் முன்னோர்க்கு 720 வருஷங்களுக்கு முன்னேயே தெரிந்திருந்தது என்பதற்கு ஐயமேயில்லை.

(3) இதே மாதிரியாக ஐரோப்பியர்கள் 'ஔ' என்பது அ+உ ஆகிய இரண்டு எழுத்துக்களையும்வேகமாயுச்சரிப்பதால் உண்டாகுமெழுத்து என்று சொல்லுகிறார்கள். இதையும் 'ஔ'க்கு இனவெழுத்து 'உ' வென்றும், போலியில் அகரமும் உகரமும் சேர்ந்தால் ஔ என்பதைப்போல் ஒலிக்கும் என்றும் கூறியிருத்தலால், நம் முன்னவர்கள் அறிந்திருக்கிறார்கள் என்பது ஏற்பட்டது.

(4) வார்த்தைகளைச் சாதாரணமாய் உச்சரிக்கும்பொழுது சில எழுத்துக்களை அழுத்த

* Daniel Jones's English Pronunciation.



மாய் உச்சரித்துச் சிலவற்றை மேலோடு விட்டு விடுகின்றோமல்லவா? அப்படியிருக்கும்போது மேலோடு விட்டுவிடுகிற எழுத்துக்களுக்கு நாம் முழு மாத்திரை கொடுக்கக் கூடாது என்று வெகு சிரமப்பட்டு ஐரோப்பியர்கள் நூதனமாய்க் கண்டுபிடித்திருக்கிறார்கள்.* இந்த ரகசியம்கூட நம் பூர்வீகர்கட்குத் தெரிந்ததே தவிரப் புதிதல்ல. இதை மனதில் வைத்துத்தான் குற்றியலிகரம் என்றும், குற்றியலுகரமென்றும் ஏற்படுத்தியிருக்கின்றனர். இதற்காகக் கொடுக்கப்படும் உதாரணங்கள் எல்லாவற்றையும் கவனித்துப்பார்த்தால் குற்றியலுகரம், குற்றியலிகரம் இவைகளை நாம் அழுத்தி உச்சரிக்க இடமில்லாமல் மேலோடுதான் உச்சரிக்க வேண்டியதாயிருக்கின்றது. இதனால்தான் முற்றுகரம், முற்றிகரம், குற்றியலுகரம், குற்றியலிகரம் என்று நான்குவகை யுள்ளன. இவைகளில் முற்றுகரம், முற்றிகரம், இவ்விரண்டுக்கும் ஒவ்வொரு மாத்திரை; குற்றியலிகரம், குற்றியலுகரம் இவ்விரண்டுக்கும் அரைமாத்திரை என்பது எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம்.

(5) வார்த்தைகளில் மேலோடு உச்சரிக்கும் பாகங்களில் நெட்டெழுத்துக்கள் வந்தால் அந்த நெட்டெழுத்துக்கள் குறுகிவிடும். இந்த விஷயத்தை முதல் முதலில் கண்டுபிடித்தவர், ஜர்மானிய தேசத்து வியாகர்ணிகளில் பெரும் புகழ் படைத்த ஒருவர். அவர் அதற்கு "அப்லௌட் க்ரெடேஷன்" *என்று பெரும்பெயரையும் இட்டிருக்கிறார். ஆனால் சற்று ஆலோசித்துப் பார்க்குங்கால் இந்த அரிய பெரிய விஷயம் கூட நம்மவர்கட்குத் தெரிந்திருந்தது. ஏனெனில் நன்னூலார் ஐகாரம், ஔகாரக் குறுக்கங்களைப்பற்றிப் பேசுங்கால் இவ்விஷயம் வெளிவருகிறது. நன்னூலார் கொடுத்திருக்கும் உதாரணங்களைக் கவனித்துப் பார்த்தால் அவையெல்லாம் மேலோடு உச்சரிக்கும் பாகங்கள்தான். ‡

இன்னும் இது போன்ற பல விஷயங்களுள. விரிவஞ்சிச் சுருக்கமாய்ச் சிலவற்றையே இங்கே கூறலானேன்.

ஆதலால் உயிரெழுத்தைப்பற்றி நாம் பேசியிருக்குமளவில் ஐரோப்பியர்கள் அதிநூதனமாய்க் கண்டுபிடித்த விஷயங்களெல்லாவற்றையும் நாம் 700 வருஷங்களுக்கு முன்னமே அறிந்தோமானால், அவைகளை நன்கு விளங்கும்படி சொல்லியிருக்கின்ற நன்னூல் முதலிய அரிய நூல்களைப் படித்தல் நமது கடமையன்றோ?

பின்னர், மெய்யெழுத்துக்களைப்பற்றி நன்னூலார் என்ன கூறுகிறாரென்றும், ஐரோப்பியர்கள் என்ன கூறுகிறாரென்றும் பார்த்துத் தாரதம்யங்கள் பார்ப்போமாக.

N. R. கேதாரி ராவ், B. A. (HONS.)

* The Neutral Vowel ə; full vowels reduced to i and then to ə in unaccented syllables.

* Ablaut Gradation. Extended grade, (or full grade.) weak grade, Vanishing grade, Example ei, i, ə.

‡ Unaccented syllablos.

# சுகாதார விதிகள்

# The Laws of Health

மனிதனுடைய வாழ்நாளை நான்குவகுப்புகளாகப் பிரிக்கலாம். அவை குழந்தைப் பருவம், பாலியம், கௌமாரம், மூப்பு எனப்படும். இந்நான்கு காலங்களிலும் நோயினால் வருந்தாமல் சுகமாய் வாழவேண்டுமானால் மனுஷ்யன் அனுஷ்டிக்க வேண்டியவைகள் முக்கியமாய்ச் சிலவுள. அவைகளை இங்கே சுருக்கமாய் ஆராய்வோம். குழந்தை பிணியின்றி வாழவேண்டுமானால், தாயின் மதியுள்ள பரிபாலனமே இன்றியமையாதது. குழந்தைகளுக்குத் தாயே பால் கொடுக்க வேண்டும். ஸ்தனப்பாலிலிருந்தே அநேகம் தீராதநோய்கள் குழந்தை இரத்தத்தில் கலக்கிறபடியால், பால் கொடுக்கிற ஸ்திரீ ஆரோக்கியமுள்ளவளாயும், மதியூகியாயும், ஸத்வ குணமுள்ளவளாகவு மிருக்க வேண்டும். அவ்விதம், குழந்தையின் அபிமானம்பற்றித் தன்னுடைய ஆகார வியவ

காராதிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற உணர்ச்சி தாயைத்தவிர, வேறொருவருக்கும் இருக்க வொண்ணாது. ஆதலால், தாய்க்குப் பாலில்லாமலும், வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தாலும், தேகத்தை ஒழுங்காய்ப் பாதுகாத்துக் கொண்டிருக்கிற ஸ்திரீயைக் குழந்தைக்குப் பால் கொடுக்க நியமிக்கலாமேயொழிய மற்றெவளையும் எந்தக் காரணத்தினாலும் நியமிக்கக் கூடாது. சில நாகரிகம்வழங்கும் தேசங்களில், தாய்ப்பால் கொடுக்காமல் குழந்தைகளைப்பிறந்தவுடன் (Nurse) வேறு ஸ்திரீயைப் பால் கொடுக்க ஏற்படுத்திவிடுகிறார்கள். அது சுகத்துக் கேற்றதல்ல. தாய்ப்பால் அருந்தவியலாதானால், வியாதியில்லாத பசுவின் பாலே சிரேஷ்டம். அதில் கொஞ்சம் சர்க்கரையைப் போட்டு கொடுப்பது நல்லது. பாலிலுள்ள ஆடை (Creafn) சிசுக்களுக்குஜீரணமாகிறது கஷ்டமாகையால் அதில் நீர் கலந்து பொங்கவைத்து, நீர் சுண்டின பிறகு, பாலை ஆற்றிக்கொடுப்பதும் வழக்கம்.

வயிற்றில் கல்மஷம் உண்டாகாமலிருப்பதற்கு சிறிது சுக்கும், புழுக்கள் அல்லது கிருமிகள் உண்டாகாம லிருப்பதற்கு உப்பும் போடுவார்கள். புதிதாய்க் கறந்த பசுவின் பாலைவிட, வேறொன்றும் குழந்தைகளின் சம்ரட்சணைக்கு ஏற்றதல்ல. பால் எல்லாத் தேசங்களிலுமே முக்கியமான உணவு. இந்தியாவில் விசேஷமாய், உணவுமட்டுமன்றி ஆசாரகிருத்தியங்களுக்கும் அதாவது பூஜை முதலானவைகளுக்கும் உபயோகப்படுவதால், பசுவை தெய்வமாகக்கொண்டாடுகிறார்கள். பொதுவாகவே ஜலரூபமாயுள்ள வஸ்துக்களிலுள்ள கிருமிகளை நாசஞ்செய்யவே, பொங்கவைத்து உட்கொள்வது நலம். பொங்கவைத்த பால் அல்லது நீர், நன்றாய் ஆற வேண்டும். ஆற்றுவது சுத்தமான பாத்திரத்திலேயிருக்கவேண்டும். இல்லாவிடில் பொங்க் வைத்ததின்பிரயோஜனம் வீணாய்விடும். முட்டைகளிலுள்ள அனுகுணமான பதார்த்தங்கள் பாலிலிருப்பதால், பாலை நல்லுணவாகக் குழந்தைகளுக்கும், வியாதியஸ்தர்களுக்கும், எடுக்கப் பட்டிருக்கிறது. பாலில் அல்புமினாய்டு (Albumenoid) என்றது 4·8 பாகமும், 3·3 பாகம் ஆடையும் 4.2 பாகம் சர்க்கரையும், 87 பங்கு நீரும் 0·8 பாகம் உப்பும் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

குழந்தைகளுக்கு அடிக்கடி ஆகாரம் கொடுப்பது தவறு. ஏனென்றால், அதிகமாகச் சாப்பிட்ட குழந்தைகள் அஜீரண வேதனையால் அழுகிறதேயன்றி, ஆகாரக் குறைவால் அழுகிறதில்லை. இது விஷயத்தில் தாய் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். ஏனெனில், அஜீரணம் காரணமாகக்கொண்டு குழந்தைகள் மரிப்பது சகஜம். ஆகாரம் கொடுக்கும் நேரங்கள் மூன்று மணி நேரத்துக்கொருமுறையாவது இருக்கவேண்டும். எட்டு மாதங்களிலிருந்தே குழந்தை, தாய்ப்பாலருந்துவதை மறக்கப் பழக்கவேண்டும். பல் முளைக்க வாரம்பிப்பது அநேகமாய் அப்பருவம்தான். சிறிது கஞ்சிகொடுத்து முதலில் பழக்க வேண்டும். ஜீரணிக்கக்கூடிய பதார்த்தங்கள் கொடுத்து அப்பியசிக்க வேண்டும். வயதுள்ளவர்கள் வயிறு புடைக்க உண்பது போல் குழந்தைகளுக்கு ஆகாரம் கொடுக்கலாகாது. தின்பண்டங்கள் அதிகமாய்க் கொடுக்கக்கூடாது. குழந்தைகளுக்கு ரத்தவிர்த்திக்கு அல்லது நித்திரைக்கென்று கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களைச் சேர்ந்த லேகியம் முதலியவைகள் கொடுக்கக்கூடாது.

இந்துக்கள், குழந்தைகளுக்கு நீராட்டும் போது காற்றில் வைத்துக்கொண்டு, அதிக உஷ்ணமுள்ள ஜலமாவது, தண்ணீர்கலந்த வெந்நீராவது, ஊற்றுவது வழக்கம். இது கெடுதி. ஜலதோஷம் முதலிய ரோகங்கள் இதினாலேயே ஏற்படுகின்றன. அப்படிச் செய்யாமல் காற்றில்லாத விடத்தில் நீராட்டி உடனே உலர்ந்த துண்டினால் துடைத்து, ஒரு சட்டை போடவேண்டும். பெரியவர்களை விட சிறுவர்களுக்குச் சீதோஷ்ணம் பாதிக்குமாதலால் கூடியவரை குழந்தைகளைப்போர்த்து வைக்கவேண்டும். குழந்தைகள்மேல் குளிர் காற்றடித்தால், சுவாசப்பை சம்பந்தமான ந்யூமோனியா (Pneumonia) என்ற வியாதி வருகிறது. அவ்வியாதிக்குத் தப்பிப் பிழைப்பது அரிது. குழந்தைகளுக்குத் தேக வருத்தம் வாய் திறந்து சொல்ல சக்தியில்லாமையாலும், தங்களைப் பாதுகாத்துக் கொள்ள சக்தியில்லாமையாலும், அவைகளைக்கூர்மையாய் கவனித்துவருவது தாயின் பிரதான கடமை.



# மற்றைய கிரஹங்கள்

## OTHER PLANETS

சந்திரனுக்குப் பிறகு சூரியனைப்பற்றி நாம் கவனிக்கவேண்டியது நியாயமாயிருந்த போதிலும், பூமியின் தோழர்களாகிய மற்றைய கிரஹங்களைப்பற்றித் தெரிந்துகொண்டு, பிறகு இக்குடும்பத்திற்குத் தலைவனான சூரியனைப்பற்றிப் பார்ப்போம்.

முக்கியமான பெரிய கிரஹங்கள் எட்டு இருக்கின்றனவென்று முன்னமேயே பார்த்தோம். அவையாவன: புதன், சுக்ரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்தியூன். நெப்தியூன் எல்லா கிரஹங்களையும் விடச் சூரியனிடத்திலிருந்து தூரத்திலுள்ளது. மற்றவைகள் சூரியனிடத்திலிருந்து உள்ள தூரத்தின் வரிசைப் பிரகாரம் எழுதப்பட்டிருக்கின்றன.

அதாவது பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் புதனும், சுக்ரனும் இருக்கின்றன. இவை சூரியனைச் சுற்றிவருவதால் சிற்சில சமயங்களில் நமக்கும் சூரியனுக்கும் இடையிலும், சிற்சில சமயங்களில் நமக்கு எதிர்ப்பக்கத்திலும் அதாவது நமக்கும் இவைகளுக்கும் இடையில் சூரியனும் இருக்கும்.

இச்சமயங்களில் இவை சூரியனோடு ஒரே நேர்கோட்டில் இருந்தால், இவை சூரியனோடு உதித்து அஸ்தமிக்கும். இக்காலங்களில் இவைகளை நாம் பார்க்கமுடியாது. சூரியனையும் பூமியையும் சேர்க்கும் கோட்டிற்கு நேர் கோணத்தில் (Right angle) இவையிருக்கும்போது, சூரியனுக்கு முந்தியும் பிந்தியும் உதிக்கும். அதாவது, இவைகளைக் காலையில் சூர்ய உதயத்திற்கு முந்தியும், மாலையில் சூர்யஅஸ்தமானத்திற்குப் பிறகும்நாம்பார்க்கலாம். இவை நமக்கும் சூரியனுக்கும் இடையிலிருக்கும்போது கொஞ்சம் சமீபத்திலிருப்பதால் பெரிதாகக் காணப்படும். நமக்கும் இவைகளுக்கும் இடையில் சூரியன் இருக்கும்போது இவை தூரத்திலிருக்கின்றன. ஆகையால் முன்னைவிடச் சிறியனவாகக் காணப்படும். அல்லாமலும், கொஞ்சம் யோசித்துப் பார்த்தால், இவை ஒரு நாளும் இரவு முழுதும் காணப்படாவென்றும், சந்திரனைப்போல் இவைகளுக்கும் பிறைகளுண்டென்றும் நன்றாய்த் தெரியும். ஆனால் பூமிக்கு வெளியிலிருக்கும் கிரஹங்களாகிய செவ்வாய், வியாழன் முதலிய கிரஹங்களின் பிறைகள் நன்றாய்த் தெரிவதில்லை. சில காலங்களில் இவை சூர்யன் அஸ்தமித்ததும் உதயமாகி இரவுமுழுதும் தெரியும். இந்த கிரஹங்களில் ஒன்றுக்கும், சூரியனுக்கும் இடையில் பூமிவர் சூர்யன் அஸ்தமித்தவுடன் இந்தக் கிரஹம் உதிக்கும். அல்லது பூமிக்கும் கிரஹத்திற்கு மிடையில் சூர்யன் இருந்தால், கிரஹம் சூரியனோடு உதிக்க, சூர்ய பிரகாசத்தில் மறைந்துவிடும். இதர காலங்களில் கிரஹம் கொஞ்ச நேரத்திற்காவது தெரியவேண்டும். ஆனால் தூரத்திலிருக்கும்போது வெறுங்கண்ணிற்குத் தெரியாமலிருக்கும். இனி இவைகளைப்பற்றித் தனித்தனியாக்ப் பார்ப்போம்.

### புதன்

சில நாட்களில் சூர்ய உதயத்திற்குக் கொஞ்சம் முன்னும், சில நாட்களில் சூர்யஅஸ்தமனத்திற்குக் கொஞ்சம் பின்னும், சிறிது நேரமே காணப்படும் சற்றுச்சிவந்த நட்சத்திரம்போன்ற வஸ்துவை நாம் ஆகாயத்திற் பார்க்கலாம். இதைக் கண்டறிவது சுலபமே. காலையில் கிழக்கிலும், மாலையில் மேற்கிலும் சிறிது நேரமே இது காணப்படும். இது சூர்யனுக்குச் சமீபத்தி லிருப்பதால் ஏறக்குறைய சூர்யனுடனே உதித்து அஸ்தமிக்கிறது. ஆகையால்இதைப் பார்ப்பதற்குச் சூர்ய உதயத்திற்குக் கொஞ்சம் முன்னும், சூர்ய அஸ்தமனத்திற்குக் கொஞ்சம் பின்னும் ஒரு மைதானமான இடத்தில் நின்று பார்க்கவேண்டும். இதுதான் புதன் என்னும் கிரஹம்.

நமக்கும் சூர்யனுக்குமுள்ள தூரம் 929லட்சம் மைல். புதனுக்கும் சூர்யனுக்குமுள்ள தூரம் 360-லட்சம் மைல்தான். இதைக் காட்டிலும் சுமார் 2½மடங்கு தூரத்தில் நாமிருக்கிறோம். இவ்வளவு தூரத்திலுள்ள நமக்கே சூர்ய உஷ்ணமும் வெளிச்சமும் தாங்கமுடியாமலிருக்கும்போது, நாம் புதனிலிருந்தால் உஷ்ணத்தால் இறக்கவேண்டியதென்றே தோன்றுகிறது!

ஆனால் அதில் நம்மைப்போன்ற மனிதர்கள் இருக்கிறார்களென்றாவது, இல்லையென்

றுவது நமக்குத்தெரியாது. இதைப்பற்றி நாம் என்ன நிச்சயமாய் நினைக்கக்கூடும்? சமுத்திர ஜலத்தின் அடியில் வாழும் மீன்கள் தரையில் வந்தால் இறக்கவில்லையா? தரையில் வாழும் ஜீவராசிகள் தண்ணீரின் அடியில்போக இறக்கவில்லையா? ஆகையால் தண்ணீரில் தவிர, நிலத்தில் ஜீவராசிகள் வசிக்க முடியாது என்று தண்ணீரில் வாழும் மீன்கள் நினைக்ககூடுமா? அல்லது நிலத்தில் வாழும் நாம் நிலத்தில் தவிர தண்ணீரில் ஜீவராசிகள் வசிக்க முடியாதென்று நினைப்பதுதான் சரியா? இல்லையல்லவா? அதுபோலவே, நம்மைப்போன்றவர்களுக்குப்புதனில் வசிக்கமுடியாதே தவிர, அங்கே வேறுவிதமான ஜீவராசிகள் இருக்கக் கூடுமென்றே நினைக்கலாம். இம்மாதிரியே ஒவ்வொரு கிரஹத்திலும் ஜீவராசிகள் இருக்கக்கூடும்.

ஆனால் புதனைப்பற்றி விசேஷமாயொன்றும் தெரியாது. அங்கிருப்பது நிலமோ, ஜலமோ, ஆவியோ ஒன்றும் தெரியாது. உஷ்ணத்தினால் ஒவ்வொரு வஸ்துவும் வாயுரூபமாக மாறியிருத்தல் வேண்டுமென்றே நினைக்கலாம்.

ஆனால் உஷ்ணத்தைத் தடுக்கும் சக்தியுள்ள நெருக்கமான வாயுமண்டலம் அதை மூடிக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. நாம் இதைத்தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்த்தால், இதற்கும் கலைகள் உண்டென்று விளங்கும். பூமியைப் போலல்லாமல் இதன் ஒரு பாதியே எப்பொழுதும் சூரியன் பக்கம் திரும்பியிருப்பதாகக் காணப்படுகிறது. இம்மாதிரியே சந்திரன் பூமிக்குக் காணப்பட்டதல்லவா?

புதன் பூமியைவிடச் சிறியது. இதன் குறுக்களவு சுமார் 3000மைல். இது சூர்யனை ஒருதரம் சுற்ற சுமார் மூன்று மாதங்கள் அல்லது 88 தினங்கள் ஆகின்றன. புதனிலிருந்து பூமியைப் பார்த்தால், பூமி ஒரு பெரிய கிரஹமாகவும், பக்கத்தில் சந்திரனாகிய சிறு கிரஹத்தோடும் பிரகாசிக்கும். பூமி புதனிலிருந்து கவனிக்கப்படுமானால் சுக்கிரன் தெரிவதுபோல் வெகுப்பிரகாசமாக விளங்கும். ஆனால் அதன் பக்கம் சந்திரனாகிய கிரஹமும் காலவரையிற்பட்டுச் சுழல்வதாகவும் காணப்படும்.

## லால்குடி கல்விப் பொருட்காட்சி
## LALGUDI EDUCATIONAL EXHIBITION

இம்மாதம், திருச்சிராப்பள்ளிக்குச் சமீபத்திலுள்ள லால்குடியில் நடப்பதாக ஏற்படுத்தப்பட்ட கல்விப் பொருட்காட்சி, பல சவுகர்யங்களை முன்னிட்டுத் திருச்சிராப்பள்ளியில், ஸெயிண்ட் ஜோஸப் கலாசாலையைச் சார்ந்த லாலி ஹாலிலும், நாஷனல் ஹைஸ்கூலிலும் 16வ காலை 8½–மணிக்கு கனம் ஸர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யரவர்களுடைய அக்கிராசனத்தின்கீழ் வெகு விமர்சையுடன் திறந்து வைக்கப்பட்டது. அப்பொழுது அனேகம் பிரமுகர்கள் ஜில்லாத்தலைவர்களுள்பட விஜயஞ்செய்திருந்தனர். படிக்கும் சிறுவர்கள் நல்வரவுப் பாட்டுகள் பாடிய பிறகு, பொருட்காட்சி ஆலோசனை சபையின் தலைவரான திவான் பஹதூர் டி. தேசிகாசாரியார் நல்வரவுப் பத்திரம் வாசித்துக் கனம் சிவஸ்வாமி அய்யரவர்களைக் காட்சிச் சாலையில் விஜயஞ் செய்ததற்காகப் புகழ்ந்து பேசினர். பிறகு திருச்சிராப்பள்ளி ஸ்கூல் அஸிஸ்டண்ட் இன்ஸ்பெக்டரும், இப்போது விவரிக்கப்படும் காட்சிச் சாலையின் ஒழுங்குகளை ஏற்படுத்த முதலாளியாக உழைத்தவருமான ம–ள–ள–ஸ்ரீ, பி. பார்த்தஸாரதி நாயக்கரவர்கள் லால்குடி ரேஞ்சிலுள்ள உபாத்தியாயர் சங்கத்தின் ரிபோர்ட்டைப் படித்தார். பிறகு ஸ்ரீரங்கம் ராஜாங்கப் பெண் பாடசாலைப் பெண்கள் மதுரமான கீதங்களுடன் கொம்மியடித்தனர். லால்குடி போர்ட் ஹைஸ்கூல் தலைவரான ம–ள–ள–ஸ்ரீ, நடராஜ சர்மா அவர்கள் பொருட் காட்சியின் வரலாற்றை விவரித்து ஷை விஷயத்துக்கு அனுகூலமாக விருந்து உதவிசெய்த ஆண்டிப்பட்டி ஜமீன்தார் ம–ள–ள–ஸ்ரீ பெத்தாச்சி செட்டியாரவர்களுக்கும் மற்றையவர்களுக்கும் வந்தனமளித்தார்.

கனம் சிவஸ்வாமி அய்யரவர்கள், பொருட்காட்சிச்சபையைச் சிறக்கச்செய்ய உழைத்த கிராமாந்தர பள்ளிக்கூட உபாத்தியாயர்களுடைய உத்ஸாகத்தைக் கொண்டாடினர். "இவ்விதக் காட்சிப் பொருள்கள் சேகரிக்கப்பட்டது உபாத்தியாயர்களுக்குள்ளிருக்கும் பரஸ்பர அபிவிருத்தியை ஏற்படுத்தும்; இதில் சந்தேகமில்லை. ஆள்பவரும், ஆளப்படுபவரும் முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயங்கள் கல்வியும், ஸுகாதாரமுமே. அவற்றுள் கல்வி மிகவும் முக்கியம்; பாலபோதனா அஸ்திவாரத்தின்பலத்தினால்தான் பாரிப்படிப்பெல்லாம் நிலைத்திருப்பது; படிப்பைத்தகுந்தவிதம் போதிக்ககூடியஉபாத்தியாயர்கள் கிடைப்பதரிது. ஏற்கெனவே ராஜாங்கத்தார் தங்களாலியன்றவரை, பணத்தைச் செலவிடுகின்றனர். இன்னும், செலவு செய்தாலும் பால போதனைக்குத் தக்க உபாத்தியாயர்களைச் சம்பாதிப்பது அரிதான காரியம். மற்று மேற்படிப்பிற்கும் இது அமையும். பாலபோதனா உபாத்தியாயர்களின் வருமானத் தொகையை உயர்த்தி அவர்களைச் செம்மைப்படுத்துவதே நல்ல வழி. * * நமது சிறுவர்களுக்கு அனுபவஞானத்தையும், கவனத்தையும் விசாலப்படுத்தக்கூடிய படிப்பு, அத்யாவசியகமானது. நமது சிறுவர்களுடைய கண்கள் இயற்கை அமைப்பின் சுகங்களைக் கண்ணாரக்கண்டு களிக்கும்படியாகச் செய்யவேண்டியது. தற்காலம் நம் சிறுவர்கள் புஸ்தகங்களைத் தவிர்த்து வேறொன்றையும் கவனிப்பதில்லை. அவ்வாறின்றி, எழுதா நூலாகிய இயற்கையமைப்பைக் கண்ணாரக்கண்டு, மிக்க அவாவுடன் உட்கொள்ளுமாறு அவர்களை உற்சாகப்படுத்தவும் வேண்டும். ஏற்கெனவே படிப்பு இலாகாவில் தோட்டப்படிப்பு, பள்ளிக்கூடப் பொருட்காட்சிச் சாலை, கைத்தொழில்கள் இவைபோன்றவைகளில் கவனம் செலுத்தப்படுகின்றது. ஆனாலவற்றை ஒழுங்காகப் பள்ளிகளில் வழிபடவில்லை போலும்" என இவ்வாறு பேசி பள்ளிக்கூடங்களில் பொருட்காட்சி சாலைகளை ஏற்படுத்தும்படியாகவும் தூண்டினர். அய்யரவர்கள் பேசி முடித்ததும், நாஷனல் ஹைஸ்கூலில் சரஸ்வதி ஹாலில் ஏற்படுத்தப்பட்ட பொருட்காட்சியைத் திறக்க அழைத்துக்கொண்டு போகப்பட்டனர். அங்கு சென்றதும், கூடலூரிலிருந்து வந்த சிறுவர்கள் ஸ்வீடிஷ் தேகப்பயிற்சி (Swedish Drill) செய்வதைக் காட்டப் பெற்றனர். ஷை சாலையில் அத்யத்புதமான பல பொருள்கள் அநேகம் அமைக்கப் பெற்றிருந்தன. அவை எல்லா மனப்பாங்கிற்கும் ஒப்ப பலபிரிவுகளுடன் ஜனங்களது பின்னருசிக்கேற்ப, பலவகைத்தாக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன.

மாலை, 8½–மணிக்கு ஐயரவர்களின் அக்கிராசனத்தின்கீழ் "வெனீஸ் வர்த்தகன்" எனும் நாடகம் "ஸ்டார் ஆப் இந்தியா" டிரமாடிக் சபையாரால் ஆடப்பட்டது. அன்றிரவு வந்த வருமானம் முழுதும், அச்சபையாரால் ஏழைப்பிள்ளைகளின் படிப்பிற்குபயோகமாக விநியோகிக்கப்பட்டது.

பொருக்காட்சிச் சபையாரால் ஏற்படுத்தப்பட்ட முதலிரண்டு பிரசங்கங்களும் 16வ மாலை நடைபெற்றன. அவற்றுள் முதலாவது விஷயம் "கை, கண் இவற்றின் உபயோக முறை" என்பதே. இதைப்பற்றிப் பேசிய எஸ்.பி.ஜீ. காலேஜ் தலைவரான ரெவரண்ட் ஏ. எப். கார்டனர் என்பவர், "பார்வை ஸ்பர்ச இந்திரியங்களைநன்கு உபயோகித்தல் அதி அவச்யம்; அவற்றைச் செம்மையாக உபயோகப்படுத்த சிறுவர்களுக்குச் சின்ன நாள் முதல் வழக்கப்படுத்த வேண்டும். எவ்வித செயலைச்செய்யவும் பார்வை இன்றியமையாதது. அதை நுட்பமாக உபயோகப்படுத்துவதற்கு வெகு கவனம் வேண்டியிருக்கும். முக்கியமான விஷயங்களையும் தக்க விஷயங்களையுமே அவரைக் கவனிக்கும்படிச் செய்யவேண்டியது; இதில் பெற்றோரும் உபாத்தியாயர்களும் ஊக்கம் கொள்ள வேண்டும். ஆனால்எந்த விஷயத்தைச் சிறுவர் கவனிக்க வேண்டுமென்றும் கவனித்துச் செய்யவேண்டும் என்பதைப்பற்றிவெகு ஜாக்கிரதையாக அவர் தேர்ந்து கவனிக்கச்செய்யவேண்டியது. பார்த்தவற்றை மீண்டுஞ் சிந்தனையால் சிறுவர்களை வெளியிடச் செய்யச் சிறுவரைத் தூண்ட வேண்டியது, மூளை விருத்திக்கு வழியாகும். கண்ணாற் பார்த்ததைக் கையாற் செய்வதற்கும் கையுங் கண்ணும் உபயோகத்தில் ஒன்றோடொன்று பிரியாது விளங்கும். ஆகையால் அவற்றைக் கவனத்துடன் உபயோகித்துப் பொருள்களை நுட்பமாக மயக்கமின்றிக் கண்ணால் பார்வையிடவும், கண்ணாற் கருதியதைக் கையால் ஒழுங்குபெறச் செவ்வனே செய்யவும் சிறுவர்களைத் தூண்டி முயற்சி

யுடன் உழைக்கச் செய்வது உபாத்தியாயர்கள் பெற்றோர்கள் இவர்களது கடமையாகும்" என்று விஸ்தரித்துக் கூறினார்.

டாக்டர் ஸி. பீ. ராமராவ் அவர்கள் கிராம ஸுகாதாரத்தைப் பற்றி விளங்கப் பேசினார். "ஸுகாதாரம் ஒவ்வொருவர்க்கும், சேர்க்கைச் சமூகத்திற்கும், இன்றியமையாதது. குப்பைகளின் சேர்க்கையும், காற்று அடைபட்ட வீடுகளும் புழுங்கும். காற்றைக் கல்மஷஞ் செய்யும். நல்லகாற்றும், சுத்தஜலமும் பலகொடிய வியாதிகளைத் தடுக்கும். அவற்றை மலக்கூட்டச் சேர்க்கையால் நாமே வரவேற்பதை விட முயற்சிக்க வேண்டும். சுவர் எழுப்ப உதவ கிராமங்களில் வீட்டுப் புறக்கடைகளில் மண்ணை வெட்டிப்பள்ளஞ் செய்வது கெட்ட பழக்கம். அவ்வாறு செய்வது ஸமயத்தில் ஏதோ சிக்கனத்திற்கிடந்தரினும், பெருங்கொடிய வியாதிகளைப் பரவச் செய்யும் ஸாதனங்களாகின்றன. இவற்றை ஒழிக்க முயல்வது பெரும் நன்மைக்கிடந் தரும்" என்று அவர் பேசினார்.

17வ காட்சிச்சபையின் ஆதரவின் கீழ் உபாத்தியாயர்கள் கூட்டம் கூடியது. அப்போது திருச்சினாப்பள்ளி ஜில்லா ஜட்ஜாகிய கனம். ஸ்ரீ A. S. பாலசுப்ரமண்ய அய்யரவர்கள் அக்கிராஸனம் வஹித்தார். பலவிதமான பிரேரேபணைகள் அப்பொழுது ஏற்கப்பட்டன. முக்கியமானவை உபாத்தியாயர்களின் ஸ்திதியை உயர்த்துவதையும் அவர்க்குப் பிராவிடண்ட் பண்ட் ஏற்படுத்துவதையும் பற்றியன. உபாத்தியாயர்களை ஸ்கூல்களின் மூல மல்லாமலே வேறு இந்திய ஸர்வகலாசங்கப் பரீக்ஷைகளுக்குப் போகும்படியாகவும், ஸெகண்டரீ ஸ்கூல் பரீக்ஷையைச் சீர்திருத்தும்படியாகவும், தற்காலம் பொதுப் பரீக்ஷைகள் மார்ச்சுமாதத்தில் நடப்பது உஷ்ணாதிகத்தால் கஷ்டந் தருவதால் நவம்பர் மாஸத்திலேயே நடத்தும்படியாகவும் பிரேரேபணைகள் கொண்டுவந்து ஏற்கப்பட்டன.

18வ "விவசாயம், அதற்கு வேண்டியவையும் வழியும்" என்பதைப்பற்றி நாகப்பட்டினம் ம-ள-ள-ஸ்ரீ ராவ்பஹதூர் கே. எஸ். வேங்கடராமய்யர் வெகு விளக்கமாகப் பேசினார். பிறகு விவசாய இலாகா அஸிஸ்டண்ட் டைரக்டராகிய ம-ள-ள-ஸ்ரீ கே. ராமசாஸ்த்ருலு நாயுடு அவர்கள் விவசாய சீர்திருத்த வழிகளைப்பற்றிப் பேசியதும், டாக்டர் பி. எஸ், சந்திரசேகர் அவர்கள் டுபர்குலாஸிஸ் என்னும் மூளைநோயைப் பற்றி விரிவாகவும் தெளிவாகவும் பேசினார். ஷை வியாதியைத் தடுப்பதற்கு முக்கியமாக வேண்டியவை "(1) பட்டணங்களிலும் கிராமங்களிலும் ஸுகாதார விருத்தி, (2) ஷை நோக்கத்துடன் கிராம சேர்க்கை ஏற்படுத்தல், (3) எங்கும் வீட்டமைப்பின் வழியைச் செம்மைப்படுத்தல், (4) தொத்து வியாதிகளைத் தடுக்கும் வழிகளைப்பற்றி ஜனங்களுக்குப் போதித்தல், (5) பள்ளியிலிருக்கும் பிள்ளைகளின் தந்தைகளுக்கு விடுமுறை நாட்களில் ஸுகாதாரத்தைப்பற்றி உபாத்தியார்களும் ஸுகாதார உத்தியோகஸ்தர்களும் தேசபாஷையில் போதித்தல், (6) பத்திரிகைகளில் ஷை விஷயங்களை நன்கு பிரசாரஞ் செய்தல், (7) ஷை விஷயங்களைப் பள்ளியில் பாடமாகப் போதித்தல், (8) ட்ரெயினிங் பள்ளிக்கூடங்களில் உபாத்தியர்களுக்குப் பாடமாக ஏற்படுத்தல், (9) ஷை வியாதிகளைத் தடுக்கத் தக்க ஏற்பாடுகளைக் கவர்ன்மெண்டார் செய்தல், (10) க்ஷயம் டுபர்குலாஸிஸ் இவற்றிற்குச் சிகித்ஸைசெய்யும் ஆஸ்பத்ரிகளை ராஜதானியில் ஆங்காங்கேற்படுத்தல் வழிக"ளென விஸ்தரித்தார்.

அடுத்ததினம் பிரொபெஸர் ம-ள-ள-ஸ்ரீ கோயில் பிள்ளை, M. A., L. T., பள்ளியில் ஒழுக்கத்தைப்பற்றிநன்குவிளங்கவைத்தார். பின், பிரொபெஸர் நியூடன் அவர்கள் தோட்டப்படிப்பைப்பற்றிப் பேசி ஒவ்வொரு பள்ளியிலும் அப்படிப்பு சிறுவர்களின் விஷய ஞானத்திற்குச் சாதனமென வற்புறுத்தினார். முனிஸிபாலிடிகளிலும் லோகல் போர்ட்டுகளிலும் ஜில்லாவின் பிரதான ஸ்தானத்தில் நல்ல மியூஸியங்களை ஏற்படுத்தும்படிப் பிரேரேபணை அவர் கொண்டுவந்து சபையின் கமிட்டியார் ஏற்கும்படி வற்புறுத்தினார். வழக்கம்போல் மங்கல வாழ்த்து, பாட்டு, கோலாட்டம் முதலியவற்றுடன் சபையின் காரியங்கள் செவ்வனே முடிவுபெற்றன. சுபம்.



## ஜெர்மனியின் உளவறியும் இலாகா

## THE GERMAN INTELLIGENCE DEPARTMENT

ஜெர்மனியின் உளவறியும் இலாகாவானது உள்நாட்டு இலாகாவென்றும், வெளிநாட்டு இலாகாவென்றும் இரண்டு பிரிவுகளுள்ளதென்று முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விலாகா, இன்னும் ராணுவப்பிரிவு, கடற்படைப் பிரிவு, ராஜ தந்திரப் பிரிவு, ஸ்திரீ புருஷப்பிரிவு என நான்கு கிளைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ராணுவ கடற்படைப் பிரிவுகள் "ஜெனரல் ஸ்டாவ்" என்னும் பொது அதிகார இலாகாவின் விசாரணைக் குட்பட்டிருக்கின்றன. ராஜதந்திர, ஸ்திரீ புருஷப் பிரிவுகள், ஜெர்மன் அந்நிய தேச இலாகாவாலாவது, சக்ரவர்த்தியினாலேயே யாவது, பிரிவி கௌன்சில் முதல் மெம்பராலாவது, மேற்பார்வை பார்க்கப்பட்டு வருகின்றன. ராணுவப் பிரிவானது சைன்யங்கள், தளவாடங்கள், கோட்டைகள், பிளான்கள் முதலியவைகளைப்பற்றிய இரகசிய சமாசாரங்களைக் கிரஹிப்பதிலும், கடற்படைப்பிரிவும் அம்மாதிரியே அதற்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களை அறிந்துகொள்வதிலும், ராஜதந்திரப் பிரிவானது மந்திரிகள், பெரிய ராஜாங்க அதிகாரிகள் சபை கூடுவதைப் பற்றியும் சந்தித்துப் பேசுவதைப்பற்றியும் உளவறிதலிலும், ஸ்திரீ புருஷப் பிரிவானது முக்கியமான ஸ்திரீ புருஷர்களின் நடவடிக்கைகளைக் கவனித்தறிதலிலும் எப்பொழுதும் கண்ணுங் கருத்துமாயிருக்கின்றன. இந்த ஸ்திரீபுருஷப் பிரிவானது பிரிவி கௌன்சில் முதல்மெம்பரின் ஆளுகைக்குட்பட்டுத் தனக்கு வேண்டிய விசேஷ காரியங்களிலெல்லாம் ஜெர்மன் சக்ரவர்த்தியால் கையாளப்பட்டு வருகிறது. இந்தப் பிரிவே எல்லாவற்றிலும் உயர்ந்தது. இதில் சம்பளமும் அதிகம்.

ராணுவம், கடற்படை, ராஜதந்திரம் ஆகிய இவைகளைப்பற்றிய உளவறியும் பிரிவுகளில் விசேஷ சாஸ்திரப் பயிற்சியுள்ள உளவாளிகளே வேலை செய்வார்கள். ஸ்திரீ புருஷப் பிரிவிலோ எல்லா வகுப்புகளைச் சேர்ந்த ஸ்திரீ புருஷர்களும் வேலை செய்வார்கள். இப்பிரிவிலே, ராஜ குமாரர்கள், பிரபுக்கள், வக்கீல்கள், வைத்தியர்கள், நடர்கள், நடிகள், நெறிதவறிய ஸ்திரீகள், ஏவலாட்கள், வாயிற்காப்போர்கள் முதலிய பலவிதமானவர்களும் சமயத்துக்குத் தகுந்தபடி கையாளப்படுவார்கள். இவர்களைத் தவிர, பிரசித்திபெற்ற பாடகர்களும், நாட்டியப் பெண்களும், சித்திர வேலைக்காரர்களும் அடிக்கடி உளவறியுந் தொழிலில் அமர்கிறார்கள்.

ஜெர்மன் உளவறியுமிலாகாவானது, ஆயிரக் கணக்கான உளவாளிகளை உலகமெங்கும் ஏவியிருக்கிறது. இவ்வுளவாளிகள் இல்லாத இடமே யில்லை. இங்கிலாந்து, பிரான்ஸ், ருஷ்யா முதலான தேசங்களில் பத்தாயிரக் கணக்காயிருக்கிறார்கள். பிரான்ஸ் தேசத்தில் மாத்திரம் 30,000 ஜெர்மன் உளவாளிகளுக்குமேல் இருப்பதாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது. இங்கிலாந்திலும், வேலையாட்களாகவும், அம்பட்டர்களாகவும், ரொட்டி செய்பவர்களாகவும் இன்னும் வேறு பல தொழில்களில் அமர்ந்தும் அநேகர் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. நம்மிந்தியாவிலும் பல ஜெர்மன் உளவாளிகள் இருப்பதாகத் தெரியவருகிறது. இவர்களைப்பற்றிய விஷயங்களைப் பின்னர் கவனிப்போம். ஜெர்மன் உளவறியும் இலாகா, ஜெர்மானியர்களை உளவாளிகளாக நியமிப்பதுமல்லாமல், ஸ்விட்ஜர்லாண்ட், பெல்ஜியம், ஹாலண்ட் ஆகிய இந்த தேசத்தார்களையும் உளவாளிகளாக உபயோகப்படுத்துகிறது. இந்தத் தந்திரத்தினால் ஜெர்மன் உளவாளிகள் இன்னாரென்று கண்டுபிடிப்பது அசாத்தியமாகிறது; அவர்களைச் சந்தேகிக்கக்கூட இடமில்லாமற்போகிறது. உளவறிவதற்காக ஸ்திரீகளையும்ஜெர்மன் இலாகா மிகுதியாக உபயோகப்படுத்துகிறது. இவ்வுளவாளிகள் ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு தொழிலிலும், ஒவ்வொரு அதிகாரியின் வீட்டிலும், காபிகிளப், ஹோட்டல், சங்கீதசாலை, நாடகசாலை முதலியவைகளாகிய பலர் ஒன்றாய்க்கூடும் பொது இடங்கள் ஒவ்வொன்றிலும, சர்வ வியாபகர்க

ளாக இருக்கிறார்கள். ஆகவே, ஜெர்மன் உளவறியுமிலாகாவின் அறிவின் பெருக்கமும், தெளிவும், நுட்பமும் பிரமிக்கத்தக்கதாயிருக்கின்றன.

ஜெர்மன் மஹா யுத்த யந்த்ரமென்று சொல்லப்படும் சேனா சமூகத்தினை நடத்தும் சக்தியே இந்த உளவறியுமிலாகாவாகும். இதனுடைய விசேஷ அறிவின் மிகுதியினாலேயே அந்த யந்திரம் விசைகொண்டு சுழன்றது. வெடி மருந்து, பீரங்கி, வெடிகுண்டு முதலிய யுத்த தளவாடங்கள், ஸ்தல விவரம், யுத்த தந்திரம் இவைகளின் ஆராய்ச்சி முதலியவைகளைப்பற்றிய சாஸ்திர ஞானமே உளவறியுமிலாகாவின் முக்கியத் தொழிலாயினும், வேறு ராஜாங்கத்தாரால் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும் யுத்த சாதனங்கள், ப்ளான்கள், படங்கள் முதலியவைகளைச் சம்பாதிப்பதும் உளவறியுந் தொழிலின் பிரதான அம்சமாகும். இந்த இலாகாவிலே சாமர்த்தியமும் பால்யவயதுமுள்ள உத்தியோகஸ்தர்களும் அனுபோகமுள்ள வயது முதிர்ந்த அதிகாரிகளும் மிகுந்திருக்கின்றார்கள். ஆயுள் முழுதும் அதே தொழிலாய்ப் படித்தறிய வேண்டியிருக்கும் விசேஷ சாஸ்திர ஞானமும் பயிற்சியுமுள்ளவர்கள் பலர் இவ்விலாகாவில் உண்டு.

சொந்த தேசமாகிய ஜெர்மனியைப் பற்றித் தங்களுக்கு எவ்வளவு தெரியுமோ, அவ்வளவு, உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்தைப்பற்றியும் அறிந்துகொள்ள வேண்டுமென்பதே இவ்விலாகா அதிகாரிகளின் நிர்வாக முறையாகும். 1870-ம் வருஷத்தில் ஜெர்மனிக்கும் பிரான்ஸுக்கும் நடந்தயுத்தத்தில், ஜெர்மானிய சேனாதிபதிகள், தளகர்த்தர்கள் ஆகிய இவர்களொவ்வொருவரிடத்திலும் பிரான்சு தேசத்தின் ஒவ்வொரு மாகாணத்தைப்பற்றியுமுள்ள விவரங்களும், ப்ளான்களும், உண்மையான விஷயங்களும் ஒழுங்காகவும் திருத்தமாகவும் இருந்தனவென்று வெளியாயிற்று. அவ்வளவு விவரங்களும் விஷயங்களும் அந்தந்தத்தேசத்து ராஜாங்கத்தாரால் தயாரிக்கப்படும் ப்ளான்களில்கூடக் காண்பது அரிதாகும். இதற்கு உதாரணமாக, ஜெர்மன் பொது அதிகார இலாகாவின் உத்தியோகஸ்தர் ஒருவருக்கும் ஒருதேசத்தை நன்றாய்ச் சுற்றிப்பார்த்திருக்கும் உளவாளி ஒருவனுக்கும் அந்நாட்டு ஜில்லா வொன்றின் கரையிலுள்ள இரண்டு ஊர்களில் ஒன்றிற்கொன்றுள்ள தூரத்தைப்பற்றி உண்டாகியவிவாதம் விசேஷமாய்க் கவனிக்கத்தக்கது. உடனே அந்த உத்தியோகஸ்தர் 64ம் இலக்கப்படத்தையும் அதற்குச் சம்பந்தப்பட்ட வேலைகளைக் கவனிக்கும் உத்தியோகஸ்தனையும் வரவழைத்தார். அந்த உத்தியோகஸ்தனுக்கு வயது 25-க்குமேல் இராது. அந்த ஜெர்மன் உத்தியோகஸ்தன் அக்கரையின் விவரங்களைப்பற்றி அந்த உளவாளியோடு தருக்கித்தான். அக்கடற்கரையிலுள்ள பாதை, சாலை, சந்து, குன்று, திட்டு, வீடு, தோட்டச்சாலை, கொல்லன் உலைக்களம் ஆகிய ஒவ்வொன்றைப்பற்றியும் பிசகின்றித் திருத்தமாக அவனுக்குத் தெரிந்திருந்தது. அக்கடற்கரையின் ஸ்தலவிவரங்களையெல்லாம் அவ்வளவு தெளிவாக அறிந்திருந்ததினால் அவ்வுத்தியோகஸ்தன் அந்த ஸ்தலங்களில் பலவருஷம் வசித்து அவ்விடங்களை யெல்லாம் சுற்றிப் பார்த்திருந்திருக்க வேண்டுமென்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஆனால் அவ்வுத்தியோகஸ்தன் ஜெர்மனியைவிட்டு ஒருபொழுதும் வெளிக்கிளம்பியவனே யல்லவாம். இவ்விஷயம் அவ்வுளவாளிக்கே ஆச்சரியமாயிருந்ததென்றால் நாம் அதிசயிக்கக் கேட்பானேன்? இங்கிலாந்து, பிரான்ஸ், ருஷ்யா இந்த மூன்று தேசங்களையும் அநேக சிறு பாகங்களாகப் பிரித்து, ஒவ்வொரு பாகத்தையும்பற்றிய விஷயங்களை யெல்லாம் சேகரித்து அவைகளை நன்றாய் அறிந்து பரிச்சயம் செய்துகொள்வதற்காக இரண்டு உத்தியோகஸ்தர்களையும் ஒரு காரியதரிசியையும் நியமித்து, அவர்களினுதவியைக்கொண்டு ப்ளான்கள் தயாரித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒவ்வொரு சிறு பாகத்தையும் பல நூற்றுக்கணக்கான சிறுசமசதுரங்களாயும் பகுத்து, ஒவ்வொருசதுரத்திற்கும் கரென்ஸி நோட்டுகள் மாதிரி நம்பர் கொடுத்திருக்கிறார்கள். யுத்தகாலங்களில் இந்த ப்ளான்கள் ஒவ்வொரு உளவாளியிடத்திலும் தளகர்த்த



ரிடத்திலும் இருப்பதுண்டு. இன்ன சதுரத்தில் அதாவது உதாரணமாக 1°E. 7 என்னும் சதுரத்தில் எதிரிகள் இருப்பதாக, உளவாளி, தளகர்த்தனுக்குத் தெரிவித்தால், அந்தச் சதுரத்தை நோக்கிப் பீரங்கி பிரயோகம் செய்யப்படும். ஸ்தல விவரங்களில் ஏதேனும் மாறுதலுண்டாயின் உளவாளிகள் உடனே அதைத் தெரியப்படுத்துவார்கள். அம்மாறுதல்களெல்லாம் ப்ளான்களில் அடிக்கடி குறிக்கப்படும்.

மேலும் ஒவ்வொரு ராஜாங்கத்தின் கடற்படை, தரைப்படை ஆகிய இவைகளில்வேலை செய்யும் அதிகாரிகள் ஒவ்வொருவனுடைய குணதிசயம், நடவடிக்கைகளடங்கிய சரித்திரமும் இவ்விலாகாவில் உண்டு. ஒவ்வொரு அதிகாரியினுடைய வழக்கங்கள், அற்ப விளையாட்டுகள், பிரியமான தொழில்கள், அபிப்பிராயங்கள், கொள்கைகள் முதலியனவெல்லாவற்றையும்பற்றி அறிந்திருத்தல் யுத்த களத்தில் அனுகூலமாயிருக்கும். ஒவ்வொரு தளகர்த்தனும் தன் குணம், குற்றங்குறைகளின்படியே சைன்யத்தை நடத்தலாகும். இவ்விஷயம் முக்கியமென் றறிந்தவர்களில், ஜெர்மன் உளவறியுமிலாகாக்காரர்களே முதலாவர்.

மேற்குறித்தவைகளைத் தவிர இந்த இலாகாவில் இங்கிலீஷ் கடற் படையிலுள்ள "டிரெட்நாட்" கப்பல், சாதாரணப் போர்க்கப்பல், டார்ப்பிடோ வெடிப் படகுகள், அவைகளை யழிக்கும் கப்பல்கள், நீரின்கீழ் மூழ்கிச் செல்லும் கப்பல்கள், முதலியவைகளில் ஒவ்வொன்றைப்பற்றிய படங்களும் விவரங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. இக்கப்பல்கள் ஒவ்வொன்றிற்கும் பெயர்களுண்டு. ஒவ்வொரு கப்பலின் பெயர்களுக்குப் பதிலாக இந்த இலாகா, ஒவ்வொரு நம்பர் கொடுத்திருக்கிறது. இரவிலும் மூடுபனியிலும் அதிகாலையிலும் இந்தக் கப்பல்களின் பெயர்களை அறிய முடியாது. ஆகையினால் ஒவ்வொரு விதமான கப்பல்களின் உருவத்தையும் நன்றாய் அறியவேண்டியது அவசியமாகும். தூர இருந்துபார்த்து ஒரு கப்பலின் உருவத்தால் இது இன்னமாதிரியான கப்பல் என்று உடனே நிச்சயிக்கும் சக்தி உளவாளிகளுக்குப் பலவிதங்களில் பிரயோசனப்படும். இந்த சக்தியினால், மற்றைய கடற்படையின் நடமாட்டத்தை உளவாளிகள் அறிந்துகொண்டு பலசாதனங்களினால் ஜெர்மன் உளவறியும் இலாகாவுக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

உளவாளிகளுடன் கடிதப் போக்கு வரவு செய்ய, இந்த இலாகாவானது ஒரு ரகஸ்ய பரிபாஷை யேற்படுத்தியிருக்கிறது. அதன் உதவியால் வேறு ராஜாங்கத்தாருக்குச் சந்தேகமுண்டாகாமலிருக்கும்படி தந்திமூலமாயும் தூரத்திற் பேசுங்கருவி மூலமாயும் பகிரங்கமாகச் சமாசார மனுப்பலாம். இப்படியனுப்பப்படும் ஒவ்வொரு செய்திக்கும் சாதாரணமாகவேறுபொருள் உண்டு. இந்தச் சாதாரணப்பொருளானது குடும்ப விஷயங்களைப் பற்றியதாகவும் வியாபார விஷயங்களைப் பற்றியதாகவும் அல்லது சந்தேகிக்க இடமில்லாத வேறு விஷயங்களைப் பற்றியதாகவும் காணப்படும். மேலும் இச்சமாசாரங்கள் நேராக ஜெர்மன் உளவறியும் இலாகாவுக்கு ஒருபொழுதும் அனுப்பப்படமாட்டா. பலபேர்கள் கையேறி, பலதேசங்களின் வழியேசென்று, கடைசியாக உளவறியு மிலாகாவுக்கு இந்தச் சமாசாரமெட்டும்.

ஜெர்மன் உளவறியுமிலாகாவில் அநேக விஷயங்களுக்கு நம்பர்கள் கொடுத்திருப்பதாக முன்னமேயேசொல்லப்பட்டிருக்கிறது. போலீஸ்காரருக்கும், சிறைச்சாலைக் கைதிகளுக்கும் நம்பர் கொடுக்கப்பட்டிருப்பது போலவே உளவாளி ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு நம்பர் உண்டு. உளவாளி தன் மேலதிகாரிகளுக்குச் செய்யும் அறிக்கைகளிலெல்லாம் தன் நம்பரைத் தெளிவாய் எழுத வேண்டும்.

உளவறியு மிலாகாவின் பொதுவிதிகள் பலவுள. இலாகாவிற்கு வேண்டியசமாசாரங்களை உளவாளிகள் சம்பாதிக்கவேண்டும். உளவறியு மிலாகாவின் காரியம் சித்தியாக வேண்டும் என்பதே அதன் அதிகாரிகளின் முக்கிய நோக்கமாகும். ஆகவே உளவாளிகள் சமாசாரங்களைச் சம்பாதிக்கும்வழி சன்மார்க்கமோ, துன்மார்க்கமோ, எம்மார்க்கமோ என்பதை அவ்வதிகாரிகள் கவனிப்பதே

யில்லை. ஒரு விஷயத்தைப்பற்றி யறிவதற்காக, முன்னமேயே அவ்விஷயத்தைப் பற்றித் தெரிந்தவைகளையும், அதற்குச் சம்பந்தப்பட்டவைகளையும் உளவாளிகளுக்கு அறிவிப்பதும், பொதுவாக விஷயங்களை ஆய்ந்தறிவதற்கு வேண்டிய சௌகரியங்களையும் சாதனங்களையும் போதிப்பதுமே தவிர வேறுவிதமான உதவியொன்றும் இலாகா அதிகாரிகள் ஒருபொழுதும் செய்யார்கள். ஒரு விஷயத்தை அறிய உளவாளிகள் உபயோகிக்கும் வழிகளினாலே, அவர்களுக்குச் சங்கடங்களோ, அபாயங்களோ அல்லது கடுங்காவலோ, கொடுந் தூக்கில் மரணமோ சம்பவிப்பதாயிருந்தால், ராஜாங்க மூலமாகவாவது, வேறு அந்தரங்க வழிகளினாலாவது உளவறியு மிலாகா அதிகாரிகள் யாதொரு உபகாரமும் செய்யமாட்டார்கள். எப்பொழுதும் உளவாளிகள் சந்தேகமுண்டாகும்படி எவரையும் கேள்விகள் கேட்கக்கூடாது; எவரிடத்திலும் அதிகமாகப் பேசவுங்கூடாது. தாங்கள் ஒரு இடத்துக்கு அனுப்பப்பட்டிருப்பது எந்த விஷயத்தை உத்தேசித்து என்பதை உளவாளிகள் ஒருபொழுதும் வெளியிடக்கூடாது.

உளவறியு மிலாகாவில் தங்கள் தொழிலுக்குச் சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளிடத்திலோ அல்லது ஒரு விஷயத்தைக் குறித்து எந்த அதிகாரியிடத்திலாவது அனுப்பப்பட்டால் அவரிடத்திலே பேசலாமே தவிர இலாகாவின் கீழதிகாரிகளோடு பேச்சு வார்த்தை கூடாது. ஞாபகக் குறிப்புகளும் காகித பத்திரங்களும் எப்பொழுதும் உளவாளிகளிடத்தில் இருக்கக்கூடாது. அவைகளை அவர்கள் அதிகமாக உபயோகிக்கவுங்கூடாது. ஒரு உளவாளி தன் நடவடிக்கைகளைப்பற்றி மற்றொரு உளவாளியுடன் பேசல்கூடாது. ஒரு உளவாளி இன்னொரு உளவாளியுடன் சிநேகஞ் செய்யவுங்கூடாது, சமீபத்தில் நெருங்கவுங் கூடாது. உளவாளிகள் மதுபானஞ் செய்தலும் லாகிரிவஸ்துக்களை உபயோகித்தலும் கூடாது. உளவாளிகள் பொதுவாக ஸ்திரீகளிடம் சிநேகமும், அவர்களிடம் யாதொரு விதமான சம்பந்தமும் செய்யலாகாது.

உளவாளிகளின் வேலைக்குத் தக்கபடி அவர்களுக்கு சம்பள மேற்படுத்தப்பட்டிருக்கிறது. சாதாரணமாக வருஷத்துக்கு 200 பவுன் சம்பளம் கொடுக்கப்படும். வேலை செய்துகொண்டிருந்தாலுஞ்சரி, சும்மாவிருந்தாலுஞ்சரி; தினசரி சாப்பாடுமுதலிய செலவுகளுக்காகச் சாதாரணமாக அரைப் பவுன் கொடுக்கப்படும். ஒரு நாளைக்கு அரைப்பவுனுக்குமேல் செலவு செய்யலாமாயினும் தினசரிச்செலவு 2 பவுனுக்குமேலேறக்கூடாது. உளவாளி செய்யும் ஒவ்வொரு தனித்தனி வேலைக்கும் வெகுமதி யொன்றளிக்கப்படும். அதன் தொகையானது வேலையின் கஷ்டத்தைப் பொறுத்தது. ஒவ்வொரு வேலைக்கும் வெகுமதி யின்னதென்று முன்னமேயே ஏற்படுத்தப்படும்.

இவ்விதமாக ஒவ்வொரு உளவாளிக்கும் கிடைக்கும் மொத்தத்தொகையில் மூன்றில் ஒரு பங்கை இலாகாவிலே பிடித்து வைத்து அதற்கு நூற்றுக்கு ஐந்து வீதம் வட்டி கொடுப்பார்கள். ஏனெனில் பணஞ்சேர்த்து வைப்பது உளவாளிகளால் சாதாரணமாக முடியாத காரியம். இப்படிப் பணஞ்சேர்த்து வைப்பது அவர்களுக்குச் சமயத்துக்கு உதவும். இதுவுந் தவிர இப்படிச் செய்வதில் உளவாளிகள்மேல், இலாகாவுக்கு ஒரு உறுதியான பிடிப்பு ஏற்படுகிறது. மேலும் உளவாளிகளுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் இந்தப் பணம் அவர்கள் குடும்ப சம்ரக்ஷணைக்கு உபயோகமாகும். உளவாளிகள் இறந்துபோனால் இந்தப் பணம் அவர்களின் வார்சுதார்களுக்குக் கொடுக்கப்படும்.

இவ்வண்ணம் உளவறியுந் தொழிலில் வரும்படி அதிகமாயினும், சங்கடங்களும் ஆபத்துகளும் அநேகம். உளவாளிகளுக்கு ஆபத்துக்காலத்தில் உதவுவாரெவருமில்லை. அவர்களின் கதி அதோகதியே. தேக சிரமத்தினாலும் மன வருத்தத்தினாலும் வியாதிஸ்தர்களாய் அநேகர் உயிரிழக்கிறார்கள். சிலர் வேறு ராஜாங்கத்தாராலும் சாதாரண ஜனங்களாலும் இரகசியமாய்க் கொலைசெய்யப்பட்டோ அல்லது பகிரங்கமாய்த் தூக்கிவிடப்பட்டோ மரணமடைகிறார்கள். இவைகளைத் தவிர, திடீரென்று ஆச்சரியமாய்ச் சிலர் "காணமற் போய்விடுகிறார்கள்". சிலர் "தற்கொலை செய்துகொள்ளுகிறார்கள்; அல்லது சிலர் தனிப்போரில் கொல்லப்படுகிறார்கள்." இப்படி மரணமடைகிற உளவாளிகளெல்லாம் ஜெர்மன் உளவறியு மிலாகாவுக்கு இனி உபயோகமில்லாதவர்களாகவும், இலாகாவின் ரகசியங்கள் முழுவதையும் அறிந்துகொண்டு விட்டபடியால் அதற்கு அபாயத்தை உண்டாக்கக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். ஒரு உளவாளி திடீரென்று காணமற் போய்விடுதலாவது, ரகஸ்யமாகக் கொலைசெய்யப்பட்டு அடக்கஞ் செய்யப்படுவதே; தற்கொலை செய்து கொள்வதாவது, விஷம் வைத்து கொல்லப்படுவதே; தனிப்போரில் இறப்பதாவது, வேண்டுமென்றே சுட்டுக் கொல்லப்படுவதாகும். இவைகளையெல்லாம் செய்வது யாரெனின், ஜெர்மன் உளவறியும் இலாகாவே.



---

### THE MIND AND NATURE

What soul was his when from the naked top
Of some bold headland he beheld the sun
Rise up and bathe, the world in light! He looked—
Ocean and earth, the solid frame of earth
And ocean's liquid mass, beneath him lay
In gladness and deep joy. The clouds were touched
And in their silent faces did he read
Unutterable love. Sound needed none,
Nor any voice of joy; his spirit drank
The spectacle; sensation, soul and form
All melted into him; they swallowed up
His animal being; in them did he live
And by them did he live; they were his life
In such access of mind, in such high hour
Of visitation from the Living God'
Thought was not; in enjoyment it expired,
No thanks he breathed, he proffered no request
Rapt into still communion that transcends
The imperfect offices of prayer and praise,
His mind was a thanksgiving to the Power
That made him; it was blessedness and love!

—*Wordsworth.*

### உள்ளமும் உலகும்

நேரே நிமிர்ந்த வோர்முனை முக[illegible]
செடிமர மில்லா முடிமிசை நின்று
மாயிரு ஞாலம் வாலொளி மூழ்க[illegible]
மேலெழும் பரிதியின் கோலங் கா[illegible]
மவனுள நிலைமை யெவனென நுவல்[illegible]!
வேலையு நிலனும் வேட்புறக் கண்டனன்—
மண்ணின் றிண்மை மன்னிய வுருவமும்
வெண்டிரை வேலையின் வியனீர் வெள்ளமும்
முகமலர்ந் தாழ்ந்த வகமகிழ் வெய்தி
நிரம்ப வவன்கீழ்ப் பரந்து கிடந்தனவால்;
மழைக்குழாம் விழைந்து குழைந்து தழுவின,
அவைதாம், மோன நிலைக்கண் முகனெலாம் விளங்கு
முரைகடந்த வன்பின் கரைகடந் தனவே.
இன்னிசை வேண்டிலன், மகிழ்குரல் வேண்டிலன்;
உணர்வெலாங் காட்சியி னுவகை யுண்டன;
உள்ளமு முருவமு முணர்வு மொருங்கே
கரைந்துள் ளுருகி யவன்கண் ணொடுங்கின
அவனுயி ரெல்லா மாங்கே விழுங்கின;
அவனே யவைவயி னாழ்ந்திருந் தனனே;
அவைதந் திறத்தான் வாழ்ந்திருந் தனனே,
அம்மனப் போங்கி லவனுயி ரவையே,
விளங்குதனிக் கடவுளின் வீடு தரிசனஞ்
சிறந்திடு சமயஞ் சித்த மொடுங்கி
இன்ப வீடுபட் டிணங்கி யொழிந்ததுவே.
அதனால், வழுத்தலுஞ் செய்கிலன்; வரமும்வேண்டிலன்
போற்றியும் வேண்டியு மேற்றிடு நிறைவறும்
பேறெலாங் கடந்து தானது வாகி
மோன நிலைக்கண் பரவச மான
மனமே யவனை வனைந்திங் கருளிய
சிவசத்தி தனக்குச் சீர்புகழாமே;
யருள்[illegible]வன் புநிலைய துவே!

K. G. ஸ்ரீனிவாஸன், B.A.

219316
219316

# ராஜாங்க முறைகள்

## FORMS OF GOVERNMENT

### ஜனப்பிரதிநிதிசபை கூடும் காலம்

### Sessions of Parliament

சபையானது வருஷத்திற்கு ஒரு முறை கூடும். சாதாரண விஷயங்களைக் கவனிக்க ஷெ சபை வருஷாவருஷம் பிப்ரவரிமாதம் முதல், ஆகஸ்டுமாதம் வரையில் கூடும். சில சமயங்களில், ஏதாவது விசேஷ காரியங்களைச் சபையோர் கவனிக்கவேண்டுமானாலும் இச்சபை கூடும். இதுதான் ஆடம் ஸெஷன் (Autumn Session) என்பது.

எவ்வாறு சபைகூடுவது.—பார்லிமெண்டு மெம்பர்கள் அரசன் கட்டளையின்பேரில் சபைக்குக் குறித்தநாளில் வந்து கூடுவார்கள். அப்படி அவர்கள் கூடினவுடனே பிரபுக்கள் சபை (House of Lords)யில் அரசன் சில முக்யமான இராஜாங்க விஷயங்களைப்பற்றியும் அவ்விஷயங்களை அனுசரித்து இனி காரியங்களை நடத்தும் வழிகளைப்பற்றியும் பேசுவது வழக்கம். இதைத்தான் ஆங்கிலத்தில் ராஜ வாக்கு (King's Speech) என்று சொல்லுகிறார்கள். அரசனே நேரே வந்து இதைச் சொல்லலாம். அரசன் வர முடியாமலிருந்தால் லார்ட் சான்ஸலர் (Lord Chancellor) அரசன் வாக்கை வாசிப்பார். சபையோர்கள் தங்கள் மீட்டிங்கில் முதல்முதல் கவனிக்கும் விஷயம், நிரம்பவும் முக்கியமானதாகிய பட்ஜட் (Budget) வரும் வருஷத்திற்குச் சுமாரான வரவுசெலவு மதிப்பு என்ற விஷயமே. இது சான்ஸலர் ஆப் தி எக்ஸ்சகரால் (Chancellor of the Exchequer) சபை மெம்பர்கள் ஆலோசனைக்குக் கொண்டுவரப்படும். அப்பொழுது அவர் சொல்லும் மொழிகளைக்கேட்க ஜனங்கள் நிரம்பவும் ஆவலுடன் அச்சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். பட்ஜட் மதிப்பில் செலவுபோக பாக்கிப்பணம் மீதியிருந்தால் அந்த வருஷத்திற்கு வரிகளைக் குறைக்கலாம்; செலவுக்கே பணம் போதாமலிருந்தால் அதற்கு வேண்டிய பொருளைச் சம்பாதிக்க வரிகளை அதிகப்படுத்தலாம்—இவைகளை, சான்ஸலர் ஆப் தி எக்ஸ்சகர் செய்யவேண்டியது. சபையின் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்ட விஷயங்களில் இவ்விஷயம் முதன்மையானது. ஆகையினால் சபைமெம்பர்கள் இதை முக்யமான விஷயம் என்று கருதி ஷெ பட்ஜட்டை ஆலோசனைசெய்ய வெகுகாலம் எடுத்துக் கொள்ளுவார்கள். சபையில் இது விஷயத்தைப்பற்றி வாக்குவாதம் அதிகமாய்விட்டால் உடனே சபை கமிட்டியாக மாறிவிடும். அப்பொழுது ஸ்பீகர் (Speaker) அக்கிராசனம் வகிக்கமாட்டார். இம்மாதிரி முக்யமான விஷயங்களைக் கவனித்துப்பார்க்க, முழு சபையே கமிட்டியாகவிருந்து ஷெ விஷயத்தை அங்கீகாரம் செய்வது வழக்கம். பிறகு சபைகூடி, இக்கமிட்டி செய்யும் ரிபோர்ட்டை அனுசரித்துச் சபையோர்கள் தங்கள் தீர்மானங்களைச் செய்வார்கள். பண விஷயமாக ஏற்படும் கமிட்டிகளைச் சப்ளை கமிட்டி, வரவுவழி ஏற்படுத்தும் கமிட்டி (Committee of Supply) (Committees of Ways and Means) என்று சொல்லுகிறார்கள். முதற் கூறிய கமிட்டியார், பட்ஜட்டில் குறித்திருக்கிறபாகங்களுக்கு வேண்டிய பணத்தொகைகளைத் தீர்மானம் செய்கிறார்கள். முதல் கமிட்டியாரால் ஏற்படுத்தப்பட்ட பட்ஜட் தொகைகளை அடையும் வழிகளை உண்டுபண்ணி, அத்தொகைகளை அங்கீகாரம் செய்வது இரண்டாவதுசொன்ன கமிட்டியாரின்பொறுப்பு. பிறகு இவ்விரண்டு கமிட்டிகள் செய்யும் ரிபோர்டை ஆதாரமாகக்கொண்டுஅதில் குறித்திருக்கும் விஷயங்களை ஒன்றாகச் சேர்த்து அப்ரோப்ரியேஷன் பில் (Appropriation Bill) என்ற ஒரு மசோதா தயார்செய்து ஷெ மசோதாவை மேலங்கமாகிய பிரபுக்கள் சபைமெம்பர்கள் சம்மதத்திற்கு அனுப்புவார்கள். மசோதா, சபை ஆலோசனைக்குக் கோண்டுவரப்பட்ட நியாய சாசனங்கள், கவர்ன்மெண்ட் மெம்பர்களும் இவர்களல்லாத இதர மெம்பர்களும் சபையினாலோசனைக்கு நியாயசாசனங்களைக் கொண்டுவரலாம். ஆனால் கவர்ன்மெண்டில் சம்பந்தமில்லாத மெம்பர்கள் கொண்டுவரும் நியாய சாஸனங்களைக் கவனிப்பவர் ஒருவருமில்லை. கவர்ன்மெண்ட் மெம்பர்கள் கொண்டுபோகும் சாஸனங்களோ அம்மா



திரி கதியை யடையாமல் எல்லோராலும் நன்கு கவனிக்கப்படுகின்றன. ஏனென்றால் இவைகளைக் கொண்டுவரும் மெம்பர்தனக்கு வேண்டிய மந்திரியின் உதவியை நம்பி ஷெ மசோதாவைச் சட்ட ஸபை முன்பாகக் கொண்டு வருகிறார்.

மேற்சொன்ன நியாய சாஸனம் எவ்வாறு சட்டமாவது—முதல்முதல்ஒரு நியாயசாஸனமானது காமன்ஸ் மஹா ஸபையில் ஒரு மெம்பரால் கொண்டுவரப்படுவதாக எடுத்துக்கொள்ளவோம். முதல் மீட்டிங்கில் சபையோர்களுக்கு இதை வாசிப்பது (First Reading of the Bill); பிறகுஇரண்டாவது தடவையில் இதில் அடங்கியிருக்கும் விதிகளை மெம்பர்களுக்குச் செம்மையாக எடுத்துரைப்பது. மெம்பர்கள் பிறகு அவைகளைப்பற்றிப் பேசுவார்கள். இதற்காக முதல் வாசிப்பு முடிந்தவுடன், ஷெ நியாய சாஸனத்தை அச்சிட்டு மெம்பர்களுக்கு அச்சிட்ட நகல் ஒன்று கொடுக்கப்படும். ஒவ்வொருவரும் அதை நன்றாகப் பார்த்துக் கொண்டுவந்து சபையில் தம் அபிப்பிராயத்தை நன்குவிளக்கித் தம்தீர்மானத்தைக் கொடுக்கவேண்டும். இதுவே மசோதாவின் இரண்டாம்வாசிப்பாகும் (Second Reading) இதற்குப் பிறகு கமிட்டிகள் ஏற்படுத்துவது. இக்கமிட்டிகள், நியாயசாஸனத்தைப் பாகம் பாகமாக எடுத்துக்கொண்டு பரிசோதனை செய்து, சபைக்குத் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடுவார்கள் (Committee Stage). இது முடிந்தவுடன் சபைகூடி ஸ்பீகர்(Speaker)அக்கிராசனம் வகித்து ஷெ கமிட்டிகள் செய்யும் அபிப்ராயங்களை ஆலோசனைசெய்து கடைசியாக 3-வது தடவையில் மெம்பர்கள் தீர்மானத்திற்குக் கொண்டு வருவதுண்டு (Third Reading). இதில் அங்கீகாரமானவுடன் இந்த நியாயசாஸனம் மேலங்கத்தினர் ஆலோசனைக்கு அனுப்பப்படும். இச்சபையிலும் இரண்டாவது மூன்றாவது ரீடிங் ஆகிய இரண்டு மீட்டிங்குகளில் இதைச் சபையோர் ஒப்புக்கொண்ட பிற்பாடு சாஸனம் அரசன் சம்மதத்தைப் பெற்று நியாய சாஸனமாக அல்லது சட்டமாக வெளிவருகிறது (Law of the Land).

E. நரசிம்மய்யர், பீ.ஏ., எல்.டி.

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### பூர்வீக எகிப்து

### Ancient Egypt

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் சிறந்துவிளங்கின ராஜ்யங்களில் எகிப்து ஒன்றாகும். அதற்குப் பிறகு வேற்றரசர்களின் படையெழுச்சியினாலும், அரசர்களுடைய மனத் திண்மையினாலும், அந்நாடு சீர்கேடடைந்தது. ஆனால் எகிப்து சிறந்து நின்றபொழுது கட்டப்பட்ட பெரிய நகரங்களின் கிலமான ஸ்தலங்களும், கல்லறைகளும், மிகப்பெரிய சமாதிகளும் இப்பொழுதும் இருக்கின்றன. அவைகளினாலும், சிலா சாஸனங்களாலும், சித்திரங்களினாலும், பூர்விக எகிப்தியர் எழுதிய புஸ்தகங்களினாலும் நாம் அக்காலத்து எகிப்தியருடைய நிலைமையையும் வாழ்க்கையும் நன்கு அறிகிறோம்.

எகிப்து தேசத்தின் நடுவில் நைல் நதி ஓடுகின்றது. இந்நதியினாலேயே,எகிப்து நிலைத்து நிற்கின்றது எனக் கூறலாம். ஏனெனில், எகிப்திற்கு மேற்கிலும் கிழக்கிலும் பாலைவனங்க ளிருக்கின்றன. மழையும் மிக சொற்பம். நைல்நதி உற்பத்தியாகுமிடத்தில் நல்ல மழை பெய்வதனால் அது பருவகாலங்களில் வெள்ளம் கொண்டு, கலங்கல் நீரை நதிப் பாய்ச்சலுள்ள வயல்களின்மீது செல்லும்படிச் செய்கின்றது. இப்பிரவாகம் அடங்கினபின்பு, கரைகளின்மீது தங்கியிருக்கும் வண்டல், சிறந்த எருவாகி நிலத்திற்குச் செழுமை கொடுக்கின்றது. தானியங்களுக்கு எகிப்து பேர்போனதென்று வெகு காலத்திற்கு முன்னரே பலதேசத்தார்கள் அறிந்திருந்தனர். நம் தேசத்திலுள்ள பூர்விக பட்டணங்களைப் போலவே எகிப்திலும் நகரங்கள் நதிக்கரையில்—நைல் நதிக்கரை—கட்டப்பட்டிருக்கின்றன. இவைகளிற் சில கிலமடைந்து போயினும் தற்காலமிருப்பவை முற்காலத்துச் சிற்பவன்மையை நன்கு தெரிவிக்கின்றன.

எகிப்தில் மனிதரது கண்களைக்கவருவன அங்குள்ள பழைய கட்டடங்களேயாம். நமது தேசத்திற்போலவே எகிப்திலுள்ள கோவில்கள் மிகவும் உயர்ந்த கோபுரங்கள் உள்ளவை. இவைகளுக்கெதிரே, உயர்ந்த கல் ஸ்தம்பங்கள் நிற்கின்றன. இவைகள் ஒரே கல்லிற் செதுக்கப்பட்டு, பளிங்கு போன்ற பளபளப்புடன் 70 முதல் 100 அடிவரை உயரமுள்ளவைகளா யிருந்தன. இவைகளினருகே, அக்கோவில்களைக் கட்டின அரசர்களது சிலைகளைக் காணலாம். தீப்ஸ் நகரத்தருகே உள்ள கோவில்களொன்றின் முன், இரண்டாம் ராமஸிஸ் அரசனின் சிலை உடைந்து கிடக்கின்றது. அது பூர்ணமாயிருந்தபோது 57 அடி உயரமும், 1,000 டன் கனமும் உள்ளதாயிருந்திருக்க வேண்டும். இச்சிலை முழுவதும் ஒரே பாறையிலிருந்தே செதுக்கப்பட்டது.

எகிப்து தேசத்து அரசர்களை, இறந்த பின்பு, தேகம் கெடாமலிருக்கும்படி தைலங்களில் ஊறவைத்துப் பிறகு அச்சவங்களைப் பாறைகளில் வெட்டப்பட்ட குகைகளிலாவது, பிரமிட் என்று கூறப்படும் சதுர அடிப்பாகமும் சாய்வான பக்கங்கள் ஓர் முனையில் கூடும்படியாயும் நிருமாணிக்கப்பட்ட கல்லறைகளிலாவது வைப்பது வழக்கம். இவைகளிலொன்றான சீயோப்ஸ் பிரமிட் என்பது தற்காலம் 450 அடி உயரமுள்ளது. அதன் அடிப்பாகம் 12 ஏகரா விஸ்தீர்ணமுள்ளது. 40 முதல் 50-டன் வரையில் கனமுள்ள பாறைகளினால் கட்டப்பட்ட பிரமிட்டின் பாகங்கள், ஒரு கடிதம் கூட நுழையாதபடி மிகவும் நேர்த்தியாய்ச் செதுக்கப்பட்ட கற்களால் சுண்ணாம்பின்றிக் கட்டப் பட்டிருக்கின்றன. நம் தேசத்திலுள்ள சில கோட்டைகளின் சுவர்களும் இவ்வாறு கட்டப்பட்டிருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். இந்தப் பிரமிட்டுகளிலும், மலைக் குகைகளிலும் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் சவங்களோடு, அவ்வக் காலத்துச் சாமான்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. கற்குகைகளில் அரசனது வீரச்செயல்கள் வர்ணந்தீட்டின சித்திரங்களால் வரையப்பட்டிருக்கின்றன. இரண்டாம் பிரமிட்டிற்கு அருகே மானிட முகமும், ஸிம்ஹ உடலுமுள்ள உருவம் ஒன்று 70 அடி உயரம் நிற்கின்றது. அதன் உடம்பும் பாதங்களும் சுமார் 200 அடி நீளம் மணலின் மீது செதுக்கப்பட்டிருக்கின்றன.

மிகப்பெரிய கட்டடங்களைக் கட்டுவித்த எகிப்தியரின் கல்வியையும், அவர்களுடைய சாஸ்திரங்களையும் நாம் முழுவதும் அறிய முடியாதாயினும், பைபில் முதலிய வேறு நூல்களிலிருந்து, வான சாஸ்திரம் முதலியவற்றில் எகிப்தியர் சிறந்தவர்கள் என்று அறிகிறோம். எகிப்திய அரசர்களின் சேனை மிகவும் வலிமைபெற்றது. இஸ்ரவேலர் என்னும் யூத ஜாதியாரைச் சிறைபிடித்து வந்ததாகவும் அவர்களை எகிப்தியரிடம் அடிமைகளா யிருப்பதிலிருந்து நீக்குவதற்கே மோசே தோன்றினாரென்றும் பைபில் கூறுகின்றது. போரில் பிடிக்கப்பட்ட அடிமைகளின் உழைப்பாலேயே எகிப்தியர் வாழ்ந்து வந்தனரென்றும், பிரமிட்டு முதலிய கட்டடங்கள் அடிமைகளாலேயே கட்டப்பட்டனவென்றும் சிலர் கூறுகிறார்கள்.

அரசர்களின் பிரேதங்களை இவ்வளவு கவலையுடன் புதைப்பதற்குக் காரணம், எகிப்தியர்களுக்குத் தம் அரசர்களின் மீதிருந்த பக்தியே. தெய்வ பக்தியும், இராஜ பக்தியும் நிறைந்த எகிப்தியர்கள் தம் பெற்றோரையும் பேணி வந்தனர். அன்னையிடம் அவர்களுக்கு அன்பு மிகவும் அதிகம். 'தாய் சொற்றுறந்தால் வாசக மில்லை' என்னும் முதுமொழி எகிப்தியர்களுக்குச் சிறுவயது முதல் போதிக்கப்பட்டது. மாதா வயிறெரிந்தால் மகனுடைய கதி மிகத் தாழ்ந்ததாகுமென்று அவர்களுடைய பெரியோர் கூறினர்.

தேவாம்சம் ஒவ்வொரு அரசனிடமுமுண்டு என்று எகிப்தியர் எண்ணியிருந்தபடியால், அரசன் உயிருடனிருக்கும் பொழுது அவனைப் பிரத்யக்ஷ தெய்வமாகப் பாவித்தும், இறந்த பிறகு தேவதைகளி லொருவனாக எண்ணியும் கோவில்கள் கட்டி அங்கு பூஜை செய்துவந்தனர். எகிப்திய ஸ்திரீகள் எகிப்தை ஆளுவது வழக்கமில்லையாயினும், நமக்குத்தெரிந்தமட்டில் ராணி ஹடாப்ஷட் என்பவள் தேசத்தைச் செவ்வையாக ஆண்டு



வந்தாள். அவள் ஆளுகையில் வேற்று தேசங்களை யறிந்துவருவதற்கு ஒரு கப்பற்படை யனுப்பப்பட்டு, அது தன் காரியத்தை முடித்துக்கொண்டு, சௌக்யமாய் எகிப்து வந்து சேர்ந்தது. மத்யதரைக்கடலையும், செங்கடலையும் ஒன்று சேர்ப்பது ஸூயெஸ் கால்வாய். இது சென்ற நூற்றாண்டில் வெட்டப்பட்டது. ஆனால் எகிப்திய நூல்படி நைல் நதிக்கும் செங்கடலுக்கும் வெகுகாலத்திற்கு முன்பே ஒரு கால்வாய் இருந்திருக்கவேண்டும்.

வெகு காலத்திற்கு முன்னமேயே எகிப்தில் பபைரஸ் என்னும் நாணற் புல்லிலிருந்து காகிதம் சுருள் சுருளாக செய்யப்பட்டு வந்தது. இதனாலேயே 'பேபர்' 'பைபில்' என்னும் வார்த்தைகள் உண்டாயின. சிலாசாஸனம் முதலியவை, கற்களில் செதுக்கப்பட்டும், சித்திரமெழுதப்பட்டும் வந்தன. எகிப்திய லிபிகள் சித்திரங்களா லானவை. ஒரு வஸ்துவைக் குறிக்க, அவ்வஸ்துவைப்போன்ற சித்திரம் போடப்படும். பிறகு காலமாகவாக, அச் சித்திரம் வஸ்துவுக்குச் சம்பந்தமான வேறொரு பொருளையுங் குறித்தது. ஓர் எகிப்தியன் புஸ்தகம் அப்பாஷை யறியாதவனுக்குப் பல சிறு சித்திரப்படங்கள் நிறைந்ததாகத் தோன்றும்.

எகிப்தியருடைய தேவதைகளில் முக்யமானவர் ஆஸிரிஸ்ஸும் அவன் தேவி ஐஸிஸ்ஸுமாம். புண்ணியர்களுக்கு மோக்ஷமும் பாபிகளுக்கு நரகமும் உண்டென்று எகிப்தியர் எண்ணினர்.

எகிப்தியரால் மிகவும் கொண்டாடப்பட்டு வந்தவை லிகிதமெழுதுதல், யுத்த ஸேவை. பிற் கூறிய தொழிலையே சிலாகித்துக் கூறினாலும், எழுதவும் படிக்கவும் தெரிந்திருப்பது சிறந்ததாகக் கருதப்பட்டு வந்தது. தேவார்ச்சனை செய்ய விரும்புபவன், நூல்களில் பாண்டித்திய முள்ளவனாக இருக்கவேண்டும். அர்ச்சகத் தலைவன் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தமையால், அரசர்களும் அவனை வீணாக எதிர்க்கமாட்டார்கள்.



## சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## CHILDREN'S AND LADIES' PAGES

### ஹரிஹரன்

நாராயணவனம் என்ற ஊரில் ஹரிஹரன் என்ற ஒரு சிறுவனிருந்தான். அவனிடத்தில் அவன் தாய் தந்தையர்களுக்கு ப்ரியம் அதிகம்; மிகவும் செல்வமாய் வளர்த்தார்கள். அவனுக்குத் தகுந்தவயது வந்ததும், அடுத்த ஊரிலுள்ள பள்ளிக்கூடத்தில் கல்வி கற்கும்படி அனுப்பினார்கள். ஆனால் ஹரிஹரனுக்குப் படிப்பென்றால் பிடிக்கிறதில்லை. விளையாடுவதிலும் சோம்பேறியாய்த் திரிவதிலும் மிகவும் சந்தோஷம். ஆனாலும், மிகவும் கெட்டிக்காரப் பையன். எப்பொழுதும் சிரித்தமுகமாகவே யிருப்பான். ஹரிஹரன் என்றால் எல்லாச் சிறுவர்களுக்கும் மிகவும் ஆனந்தம். ஆட்டத்திற்கு முதலில் வந்துவிடுவானல்லவா?

இவனை அனுப்பிய பள்ளிக்கூடத்திற்கு வேலவர் என்ற உபாத்தியாய ரிருந்தார். அவருக்குக் குழந்தைகளைக் கண்டாலும் போதும். அவர்களைக் கூப்பிட்டுத் தட்டிக் கொடுத்து நல்ல வார்த்தைகளைப் பேசி, அவர்களுடன் விளையாடுதல் போலவேயே பாடங்களைச் சொல்லிக்கொடுப்பார். ஆனால் ஹரிஹரன் மாத்திரம் இவரிடத்தில் ஸஹஜமாய் இருக்கவில்லை. இவரிடம் பாடம் கற்றுக்கொள்வதில் ஹரிஹரனுக்குச் சற்றேனும் பிரியமில்லை. சற்றுநேரமாவது சிறு பிள்ளைகளுடன் விளையாட விடாமல் ஏதாவது பாடம் கேட்டுக்கொண்டே யிருப்பார்.

சில நாட்கள் நம் ஹரிஹரன் வழக்கம் போல் பள்ளிக்கூடம் போனான். ஒருநாள் அங்குபோக அவனுக்கு ப்ரியமில்லை. எல்லாருடனும் பள்ளிக்கூடத்திற்குச் சிறிதுதூரம் வரையில் சென்று ஒரு சுவர் மறைவில்சற்று நேரம் ஒளிந்துகொண்டிருந்து பிறகு திரும்பி ஓடிவந்தான். பட்சிகள் வெகு இனிமையாய்ப் பாடிக்கொண்டிருந்தன. புஷ்பங்கள் மலர்ந்து நல்ல வாசனை வீசின. ஆகாயம் நிர்மலமாய் இருந்தது. வயல்களில் நெற்கதிர்கள் வெகு அழகாய்ச் சாய்ந்து தலையாட்டிக் கொண்டிருந்தன. ஹரிஹரன் சோம்

பேறியாய்த் திரியலாமென்று ஓடினான். இவன் பத்தடி தூரம்போவதற்குள், ஒரு பெரியவர் நின்றுகொண்டிருந்தார். ஏதோ யோசனைசெய்துகொண்டிருப்பவரைப்போலிருந்தது. இவன் ஓடிவருவதைக்கண்டு அவர் கூப்பிட்டார். அவன் ஏன் அப்படி ஓடிவருகிறான் என்று கேட்க, ஹரிஹரன், தனக்கு வேலவரைப் பார்க்கக்கூடப் பிடிக்கவில்லையென்றும் ரொம்ப வேலை கொடுக்கிறார் என்றும் தான் விளையாடுவதற்கும் தூங்குவதற்குங்கூட விடுகிறதில்லையென்றும் சொன்னான்.

“பையா நீ பயப்படவேண்டாம். நானும் உன்னுடன் உங்கள் வீட்டிற்கு வருகிறேன்” என்று அவன் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு போனார்.

சற்றுதூரம் போனதும், ஓரிடத்தில் தாள் போரடித்து வைக்கோல் உலர்த்திக் கொண்டிருந்தார்கள். ஹரிஹரனுக்கு அதில் போய்க் குதித்து, கரணம்போட்டு விளையாட வேண்டுமென்று தோன்றியது. கிட்டேபோனான். அங்கே வேலவர்போன்ற ஒருவர் இருந்து வேலை செய்துகொண்டிருந்ததையும் மற்றவர்களை அதட்டியும் நயமாகப்பேசியும் வேலைவாங்கிக்கொண்டிருந்ததையும் கண்டான்; திடுக்கிட்டான். “அப்பப்பா அதோ வாத்தியார் இருக்கிறாரே! போனால் என்னைப் பிடித்துக்கொள்வார். நாம் அங்கே போகவேண்டாம்” என்றான். பெரியவர் “இல்லை இல்லை. இவர் வேலவரின் தம்பி. ஜாஸ்தி நிலம் இவருக்கிருக்கின்றது. இவர் உன்னை ஒன்றும் செய்யமாட்டார்” என்றார். பையன்: “வேண்டவே வேண்டாம். நாம் போகலாம்” என்றான்.

இருவரும் இன்னும் கொஞ்சதூரம் நடந்துபோனார்கள். அங்கு பெரிய வீடு ஒன்றிருந்தது. அதைச் சுற்றிலும் மர ஸாமான்கள் வைக்கப்பட்டிருந்தன. லொட், லொட், சர், சர் என்ற ஓசை வந்துகொண்டிருந்தது. ஹரிஹரன், “இந்த வேடிக்கையைப் பார்க்க வேண்டாமா? உளி, இழைப்புளி, வாச்சி இவைகளைக் கொண்டு வேலை செய்வது ரொம்பவும் வேடிக்கையாயிருக்குமல்லவா? நானும் இந்த மாதிரி விளையாடவேண்டும்” என்று சொல்லிக்கொண்டே அவ்வீட்டு வாசற்படிக்குள் நுழைந்தான். அங்கே சிலபேர் செதுக்கிக்கொண்டும், சிலர் இழைத்துக்கொண்டும் தச்சுவேலை செய்து கொண்டிருந்தார்கள். இவர்களுக்குப் பின்னால் மட்டப் பலகையும் சுற்றுநூலையும் கையில் வைத்து, மர அளவுகளை எடுத்துக்கொண்டு ஒருவர் உரத்த குரலில் அதிகாரம் செலுத்திக் கொண்டிருந்தார். இவரைக் கண்டதுதான். ஹரிஹரன் பின்னுக்கு வாங்கினான். ‘அம்மாடி; இங்குகூட வாத்தியார் வந்திருக்கிறாரே! என்னைக் கூட்டிக்கொண்டு போய் விடுவார். நாம் இங்கு போகவேண்டாம். போகலாம்’ என்று ஆரம்பித்தான். “குழந்தாய், இவர் உன் வாத்தியார் அல்ல, அவருக்கு இன்னொரு தம்பியிருக்கிறார். அவர் தச்சுவேலை செய்கிறார். அவர்தான் இவர். உன்னை ஒன்றும் செய்யமாட்டார். பயப்படாதே!” என்றார்.

ஆனாலும் ஹரிஹரன் “அவரைப் பார்த்தாலே பயமாயிருக்கிறது. நாம் போகலாம்” என்றான். அப்படியே மறுபடியும் கொஞ்ச தூரம் போனார்கள். அங்கே ஒரு வீடு தோன்றிற்று. வெளியில் ‘விளையாட்டுச் சாமான்கள்—வெகு நயம்—வந்து பார்க்கலாம்—வெகு நயம்’ என்று தடித்த எழுத்தில் போட்ட விளம்பரப் பலகை ஒன்றிருந்தது. “தாத்தா, இங்கே போய்ப் பார்க்கலாமே! பொம்மை பண்ணுகிறார்களாமே! நன்றாயிருக்குமோ இல்லையோ?” என்றான் ஹரிஹரன். இருவரும் அப்படியே உள்ளே நுழைந்தார்கள். அதிசயம் அதிசயமாய் விளையாட்டுச்சாமான்கள், கப்பல், புகைவண்டி, மோடார் வண்டி, ஏரோப்ளேன், கரடி, புலி, ஸிம்ஹம், யானை, குதிரை முதலிய அநேக வகை விளையாட்டுக் கருவிகள் வைத்திருந்தன. ஹரிஹரன் ஒன்றொன்றாய்ப் பார்த்துக்கொண்டே வந்தான். இவைகளைச் செய்யும் இடத்தைக் கண்டான். அநேகம் பேர் வெகு சுறுசுறுப்பாய் வேலை செய்துகொண்டிருப்பதையும், இவர்களுக்குப் பின்னால் உயர்ந்த மேடையின்மேல் ஒருவர் மெழுக்கினால் அழகான பொம்மை செய்துகொண்டிருப்பதையும் கண்டான். பையனுக்கு உதறல் எடுத்தது. தன்னுடன் கூடவருகிறவரது கையை இறுகப்பிடித்துக்கொண்டு, “தாத்தா, பார்த்தது போதும் போதும். அதோ எங்கள் வாத்தியார் வந்துவிட்டார்; என்னை இப்பொழுது விடவே மாட்டார். நாம் போய் விடலாம்” என்றான். “தம்பி, நீ பயப்படாதே, இவர் உங்கள் வாத்தியாரின் மற்றொரு ஸஹோதரர்; இவர் பொம்மைகள் செய்வதிலும் சித்திரங்கள் எழுதுவதிலும் கெட்டிக்காரர்” என்றார். அதற்குள் பையன் “அதெல்லாம் எனக்கு ஒன்றும் தெரியாது. நாம் இங்கிருக்கவே வேண்டாம்” என்று கட்டாயம் செய்தான். ஆகவே, அந்த வீட்டைவிட்டு அவர்கள் வெளியேறி மறுபடியும் வழி நடந்தார்கள். அங்கு சிலர் பஜனை செய்துகொண்டு போனார்கள். மிருதங்கம், தம்புரு, பிடில், தாளம் முதலியவைகளுடன் ரொம்ப அழகாய்ப் பாடிக்கொண்டு போனார்கள். இவர்களைப்பார்த்து ஹரிஹரனுக்கு ரொம்ப சந்தோஷம் வந்துவிட்டது. குதித்துக் குதித்துத் தலையாட்டலானான். அவனுக் குண்டான ஆனந்தத்திற் களவில்லை. இதில் யார் பாடுகிறார்கள் பார்க்கவேண்டும் என்று தன்னுடன் வந்த பெரியவரைப் பார்த்து, “பஜனையில் பாடுபவரைப் பார்க்கலாம் வாருங்கள்” என்றான். அவர் கூட்டிக் கொண்டு போனார். மெதுவாகக் கும்பலை நீக்கிக்கொண்டு நடுவில் வந்து சேர்ந்தான். அங்கே யாரைப் பார்த்தான் தெரியுமா? தன்னுடைய வாத்தியாரே அங்கு பாடிக்கொண்டிருப்பதையும் மற்றவர்களைப் பாடும்படியும் தாளம் போடும்படியும் செய்வதைக் கண்டான். ‘அப்பப்பா! இங்கும் எங்கள் வாத்தியார் வந்திருக்கிறாரே! என்னைக் கோபித்துக் கொள்வாரே! நாம் போகலாம்’ என்று மெதுவாய்ப் பெரியவருக்குச் சொல்லி நடுநடுங்கினான். “குழந்தாய்! பயப்படாதே, இவரும் உன் வாத்தியாரல்ல. அவர் தம்பிகளில் ஒருவர்தான் இவரும். இவர் உன்னை ஒன்றும் செய்யமாட்டார். இவர் மிகவும் உழைத்து, பெரிய ஸங்கீத வித்வானாய்ப் பகவத் கீர்த்தனங்களைக் கானம் செய்துகொண்டு எல்லாரையும் பக்தி செய்யும்படித் தூண்டிவருகிறார்” என்றார்.



ஹரிஹரன் ஒன்றையும் கேட்காமல், வெளியே அவரையும் வரும்படி அழைத்து வந்து, “தாத்தா, போதும்! எங்குபோனாலும் எனக்குப் பயமாயிருக்கிறது. பள்ளிக்கூடத்திற்கேபோய் வாத்தியாரிடத்தில் பாடம் படித்து வருகிறேன். இனிமேல் நான் வீண் விளையாட்டிலும் தூங்குவதிலும் காலத்தைக் கழிக்கிறதில்லை. பள்ளிக்கூடம் போக எப்படி வழி?” என்றான். ‘இதோ வழி!’ என்று சொல்லி இரண்டடி நடந்தார். ஹரிஹரனும் அவர் கையைப் பிடித்துக் கொண்டே வந்தான். அவர் முகத்தைப் பார்த்தான். தன்னுடன் இவ்வளவு தூரம் வந்தவர் தன் வாத்தியார் வேலவர் என்பதைக் கண்டான். அவன் முகம் வெளுத்தது. வேலவர், ‘குழந்தாய், பயப்படாதே; நன்றாய் நீ உழைத்து வேலைசெய்தால் உன் விளையாட்டும் எவ்வளவு நன்றாயிருக்கும்! நீ எப்பொழுதும் சுறுசுறுப்பாய் இருப்பதைப்பற்றிச் சந்தோஷம். சோம்பேறியாய் மாத்திரம் இராதே’ என்று புன்சிரிப்புடன் சொல்லித் தட்டிக்கொடுத்தார். அன்று முதல் ஹரிஹரன் சோம்பேறியாய்ப் பள்ளிக்கூடம் போகாமலிருந்ததாக நான் கேள்விப்படவேயில்லை.

கே. எஸ். வீராஸ்வாமி அய்யர், B.A., L.T.

---

**The Hon'ble Mr. P. Ramanathan, Colombo, writes.**— * * I have always thought highly of the work done by you and your colleagues in this Monthly Magazine. The articles appearing in it are carefully considered and **written in simple and chaste Thamil**. National ideals and the duty of speaking and writing Thamil without any admixture of foreign terms and foreign modes of thought are consistently held up to your readers. Just as cultured Europeans desire to speak and write their respective language with purity, we Thamils should speak and write our language without thinking in English and translating into Thamil the idioms and other turns of expression appropriate to the Engiish * * I wish you success and prossperity in your endeavour to enlighten and uplift the people.

***

**The Madras Mail** *writes.*—" The Periodical *has been in the front rank of Tamil Magazines and has always been known for the excellent and varied literature* religious, scientific, educational and general which it has been giving ever since its establishment several years ago. *Educational authorities have spoken of it in terms of approbation* and the annual volume which is handsomely got up, is fit for a prize book in boys' and girls' schools of Elementary and Secondary Grade.

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS OF THE WORLD

சென்ற மாதம் யுத்த விஷயமாக எழுதியது முதல், நமது நேசத் துருப்புகளுக்கு ஜயத்தின்மேல் ஜெயமாக வந்து கொண்டிருப்பதைக் கேட்கச் சந்தோஷமுண்டாகின்றது. மேற்கரங்கத்தில் தளகர்த்தர்கள் ஜாப்ரி, ஹேக், கிழக்கரங்கத்தில் பேர்ட்சிகாப் கடோர்ஞ என்பவர்கள் விடா முயற்சியோடும் அபூர்வமான சாமர்த்தியத்தோடும் போர்புரிந்து வெற்றி பெறுகின்றனர். ஐந்து மாதங்களுக்கு மேலாகவே, ஜர்மானியர், வர்டூன் முன்னர் நின்றபோதிலும், பிரஞ்சுக்காரர், சத்துருவைத் தூரத்திலேயே நிற்கும்படி செய்துகொண்டிருக்கின்றனர். இதன் பயனாக எண்ணிறந்த பேர்வீரர்கள் மாண்டுபோயினர். இருந்தாலும், நேசத் துருப்பின் தளகர்த்தர்கள் ஜயம் தங்களுடையதென்று நிச்சயமாக நம்பியிருக்கின்றனர். நீரிலும் ஆகாயத்திலும் எதிரிகள் தலை காட்டாமல் ஒளிந்துகொள்ளும்படிச் செய்வதற்கு நம்மவர்களின் கப்பல்களும் ஆகாய விமானங்களும் விழிப்பாயிருக்கின்றன.

ருஷியர்களுக்கு நல்ல ஜயகாலம். சென்றவிடமெல்லாம் வெற்றி. பிடித்துக்கொண்ட யுத்த தளவாடங்களுக்கும் போர்க் கைதிகளுக்கும் அளவில்லை. ஜூன், ஜூலை மாதங்களுக்குள் ருஷியர்கள் சுமார் மூன்றுலக்ஷம் கைதிகளைப் பிடித்தனரென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. கீழ் கலீஷியாவிலுள்ள முக்கியமான பிரதேசங்கள் அவர்கள் கைவசமாயின. ஜப்ஜோனிட்ஸா என்னும் கணவாயும் பிடிபட்டுப் போயிற்று. இம்மாதிரி நல்லதெசை இருக்குமானால், அதி சீக்கிரத்தில் ருஷியர்கள் பரத் நதியைத் தாண்டி பூடாபெஸ்த் வாசலுக்கு வந்துவிட ஏதுவுண்டு.

இதாலியர்கள் இப்போது டிரண்டினோ இஸான்ஸோ என்னும் இடங்களைப் பிடித்துக்கொண்டனர். டிரீஸ்ட் நகரையும் பிடித்துக்கொண்டால், ஆஸ்திரியரின் பலம் முறிபட்டுப்போம்.

இது காறும் யுத்த தளவாடங்களின் விற்பனையால் அதிகலாபத்தையடைந்த ருமேனியாவும் நேசத் துருப்புகளின் பக்கம் சேர்ந்துகொண்டது. ஆகவே, யுத்தம் சீக்கிரத்தில் முடிவடையுமென்று பார்க்க இடமுண்டாகிறது. ஆனால் பிடிவாதப் பேய்கொண்ட ஜர்மானியர் இன்னும் எவ்வளவுகாலம் வீண் போர் புரிவாரோ அறியோம்.

ஆர்மீனியாவில் ருஷிய கர்லாக் போர் வீரர்கள் துருக்கர்களை வெருட்டிவிட்டினர். பாரஸீகத்தில் ஜர்மானிய கலகம் இல்லாமல் செய்யப்பட்டது. ஆப்கானிஸ்தானத்தில் அவர்கள் காரியம் புலிக்கவில்லை. அமீர் எப்போதும் ஆங்கிலேயர் பக்கமே இருக்கிறார்.

துருக்கியர்கள், 18,000 போர்வீரர்களைச் சேர்த்துக்கொண்டு ஸூயஸ் வாய்க்காலைத் தகர்க்க எண்ணியதும் பிரயோசனமில்லாது போயிற்று. எகிப்து தேசத்திலுள்ள நமது சேனைகள் அவர்களைத் துரத்திவிட்டன.

* * *

அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் சென்ற ஒருவருஷமாக சட்டம் ஒன்று அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. அதன்படி, அபின், மோர்பைன், கோகைன் என்னும் மயக்க மருந்துச் சரக்குகள், பதிவுசெய்துகொண்ட வைத்தியர்களுக்கும், வியாபாரிகளுக்குந்தான் விற்கப்படும், வைத்தியர்கள் கொடுக்கும் சீட்டில் நோயாளிகளுடைய பெயர், விலாஸம் முதலிய விவரமும், மருந்தின் அளவும் குறிப்பிடப்பட வேண்டும். பழைய மருந்தையே பெறவேண்டுமானாலும் வைத்தியர்களிடமிருந்து புதிதாகச் சீட்டுப் பெறவேண்டும். சிற்சில வைத்தியர்களுக்கு மட்டும் இந்தச் சட்ட விதிகளினின்றும் கொடுக்கப்பட்டிருக்கும் நிவாரணைகளை அடியோடே எடுத்துவிடலாமாவென்றும் அதிகாரிகள் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

இம்மாதிரிச் சட்டமொன்று இந்தியாவில் அனுஷ்டானத்துக்கு வருமானால், நமது நாட்டுக்கு க்ஷேமமென்று தடையின்றிக் கூறலாம். அபினும், கோகைனும் ஜனங்களுக்குச் செய்யும் தீமைகளுக்கு அளவே



யில்லை. அபினை யார் வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கலாம். கோகைன் விஷயத்தில் ஒரு வைத்தியருடைய சீட்டுப் போதும். நமது நாட்டில் கஞ்சாவினால் உண்டாகும் குற்றங்கள் அநந்தம். இவ்வித மருந்துச் சரக்குகள், நமது ஜனங்களுடைய தேகாரோக்கியத்தைக் கெடுக்கின்றனவல்லாமல், அவர்களுடைய நடத்தையையும் சீர்குலைக்கின்றன. அமெரிக்க சட்டத்தைப்போல் நமது நாட்டிலும் ஒருசட்டம் ஏற்படவேண்டுமென்பதற்காக யாரேனும் பாடுபட மாட்டாரா? இம்மருந்துச் சரக்குகளால் துரைத்தனத்தாருக்கு ஏராளமான ஆதாயம் கிடைக்கிறபோதிலும், தேச க்ஷேமத்தை முன்னிட்டு, லாபத்தைக் கருதாது, சட்டத்தை ஏற்படுத்திப் புண்ணியத்தைக் கட்டிக்கொள்ளலாம்.

* * *

சட்ட சபைகளிலும், ஜில்லா, தாலூகா போர்டுகளிலும் ஜாதிபற்றிய பிரதிநிதித்வம் வேண்டுமென்று கேட்பது பிழையென்பதை பஞ்சாப், பம்பாய் துரைத்தனத்தார்கள் தெரிந்துகொண்டிருக்கின்றனர். நாடு க்ஷேமத்தை யடையவேண்டுமானால், ஜன ஒற்றுமை அவசியம் வேண்டும். "எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்," என்னும் பழமொழியை நாம் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டும். ஒரு ஜாதி முக்கியமானதென்றும், அதற்குப் பிரதிநிதித்வம் கொடுக்கவேண்டுமென்றும் கூறுவது அந்த ஜாதிக்கும் மற்றைய ஜாதிகளுக்கும் விரோதத்தைக் கிளப்பிவிடுகின்றது. பிரதிநிதிகளில் ஜாதிவித்தியாசம் பாராட்டாமல் உழைப்பவர்கள் பலரிருக்கின்றனர். முகம்மதியராகவிருந்தும், இந்துக்கள் விஷயத்தில் பாடுபட்ட பிரதிநிதிகளும், இந்துக்களாகவிருந்தும் முகம்மதியர் விஷயத்தில் பாடுபட்ட பிரதிநிதிகளும் பலர் இருக்கின்றனர். பிரதிநிதிகளை மதிக்கவேண்டியது அவர்களுடைய வேலையினாலேயேயன்றி, ஜாதியினாலன்று. இவ்வாறன்றி, ஜாதிபற்றியே பிரதிநிதித்வம் கொடுப்பதாகவிருந்தால், ஜாதிபேதம் வெகுவாக மலிந்திருக்கிற நமது நாட்டில் அது எவ்வளவுதூரம் சாத்தியமாகும்?

* * *

கடற் பிரயாணம் கூடாதென்று விதித்த தர்ம சாஸ்திரத்தை யொட்டி, வர்ணாச்ரம சபைக்கூட்டத்தில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தது நமது ஞாபகத்திலிருக்கிறது. என்றாலும், "திரைகடலோடியும் திரவியம்தேடு" என்ற முதுரையை அனுசரித்து, நம்மவர்களில் சிலர், வயிற்றுப் பிழைப்புக்காக அந்நிய நாடுகளுக்குச் செல்கின்றனர். என்றாலும், இந்தியர்கள் நுழையக் கூடாதென்று சட்டச்சுவர் எழுப்பிய நாடுகளில் அமெரிக்காவும் ஒன்றாகிவிட்டதென்பதைக் கேட்க எவர்தான் வருந்தார்கள்? இந்தியர்கள், ஆரியர்கள் தாமென்றும், அவர்களுடைய பாஷையான ஸம்ஸ்கிருதம் ஐரோப்பிய பாஷைகளோடு ஒற்றுமைப்பட்டதென்றும், ஐரோப்பியர்கள் நாகரீகமடைவதற்குப் பல நூற்றாண்டுகள் முன்னாலேயே இந்தியர்கள் நாகரீகத்தில் மேன்மை யடைந்திருந்தனரென்றும் சரித்திர பூர்வமாக அமெரிக்கர்களுக்குத் தெரியும். என்றாலும், "இந்தியர்கள் நுழையக் கூடாது" என்ற விதி, குடியரசு நாட்டில் முதன்மை பெற்றதினின்று ஏற்பட்டதுதான் ஆச்சரியம். ஜப்பானியர்களுக்கும் இந்தத் துர்த்தெசை ஏற்படும் போலிருந்தது. ஆனால் அது ஜப்பானிய ஸ்தானாதிபதியால் நீங்கிற்று. நமக்கோ அப்படிப்பட்ட பாக்கியமில்லை. கவிச் சிரேஷ்டரான ரவீந்த்ர நாத் டாகூர் அமெரிக்காவுக்குப் போகும் காலத்தில் இவ்விஷயமாக ஏதாவது நற்காலம் பிறக்குமா?

* * *

அமெரிக்காவிலுள்ள நயகாரா நதி வீழ்ச்சியைப்பற்றி நேயர்கள் அறிந்திருக்கலாம். சுமார் 167 அடி உயரத்திலிருந்து விழுந்து கீழே ஓடும் நீர்ப்பரப்பைத் தாண்டிப் போவது அசாத்தியமாக விருந்ததென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இதை நிவர்த்திக்க ஒரு ஸ்பானிஷ் என்ஜினியர் முன்வந்து மேலே தந்திக் கம்பிகளைப் போட்டு அதில் தொட்டில் போன்ற வண்டியைத் தொங்கவிட்டு, யந்திரத்தினால் ஒரு கரையிலிருந்து மற்றொரு கரைக்குப் போகக்கூடிய சவுகரியத்தைச் செய்திருக்கிறார். பிசுவாக இழுத்துக் கட்டிய ஆறு கம்பிகளில் தொட்டில் தொங்குகிறது. கம்பிகளில் பாரம் சம

மாக விருக்கும்படி, தானே சரிக்கட்டிக் கொள்கிற பாரம் ஒரு மூலையில் அமைக்கப்பட்டிருக்கிறது. கம்பிகள் ஒன்றோடொன்று சம்பந்தப்படுவதில்லை. ஆதலால், தப்பித் தவறி ஒரு கம்பி அறுந்தாலும், மற்றவைகள் தொட்டிலைத் தாங்கும்; சேர்ந்தாற்போல இரண்டு கம்பிகள் அறுபட மாட்டாவாம். தொட்டிலில் 24 பேர் உட்காருவதற்கும் 20 பேர் நிற்பதற்கும் இடவசதி உள்ளது. ஒரு கரையிலிருந்து மற்றொரு கரைக்கு $4\frac{1}{2}$ நிமிஷத்தில் போகலாமானாலும் இப்போது 6 நிமிஷம் செல்கிறது. மிகுதியாகத் தழைந்த போதும் கூட, தொட்டிலானது நீர்மட்டத்துக்கு 148 அடி மேலாகவேயிருக்கும். மனிதனுடைய மூளை வன்மைக்கு வேறு உதாரணம் வேண்டுமா ?

* * *

சென்னைச் சர்வகலாசாலைச் சங்கத்தார் கூடிய மீட்டிங்கொன்றில் ஸ்ரீமான் ஜி. ஏ. நடேசன் அவர்களுடைய பிரேரேபணையின் பேரில் கல்கத்தாவிலுள்ள டாக்டர் ஜகதீச சந்திர வஸு, டாக்டர் ப்ரபல்ல சந்திர ராய், பூனாவாசியான புரொபஸர் ரகுநாத புருஷோத்தம பரஞ்சிபே இவர்களைக்கொண்டு சென்னையில் அவரவர் உழைத்துவரும் விஷயமாகப் பிரசங்கங்கள் செய்ய வேண்டிக்கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. டாக்டர் வஸு பிரபல சாஸ்திரஜ்ஞர்; அசேதனத்துக்கும் உயிரிருக்கிறதென்று நிரூபித்தவர். ஐரோப்பா அமெரிக்காகண்டங்களில் தமது கொள்கையை நிதர்சனப்படுத்திப் புகழடைந்தவர். டாக்டர் ராய், ரஸாயன விஷயத்தில் பாடுபடுபவர். பரஞ்சபே, கணித சாஸ்திர விற்பன்னர். இவர்களுடைய பிரசங்கங்கள் நமக்கு இன்பத்தையும் ஞானத்தையும் ஒருங்கே ஊட்டுமென்பதற்குத் தடையில்லை.

---

# ஆங்கிலர் சரித்திரம்
# English History

## அங்கிலோ ஸாக்ஸன் ஜாதியார்
## Anglo—Saxons

இப்பொழுது டென்மார்க் என்றழைக்கப்படும் தேசத்திலும், எல்பு நதிக்கரையிலும் ஜர்மானிய ஜாதியார்கள் குடியிருந்தார்கள். இவர்களை ஜூடர்கள், ஸாக்ஸர்கள், ஆங்கிலர்கள் என மூன்று ஜாதியார்களாகப் பிரிக்கலாம். ஆங்கிலர்களிடமிருந்தே ப்ரிடனுக்கு இங்கிலாந்து என்ற பெயர் வந்தது. ரோமர்கள் இங்கிலாந்தைக் காத்துவந்ததினால், ப்ரிடன்களுடைய வீரகுணங்களெல்லாம் மறைந்துபோயின. வேறு தேசத்தாருக்கு அடங்கி வந்ததால், ஒன்று கூடி ஒரு கார்யத்தை முடிக்கும் பழக்கம் இல்லாமற் போயிற்று. இதனால், ரோமர்கள் இங்கிலாந்தை விட்டுச் சென்ற பிறகு, ப்ரித்தானியர் வேறு தேசத்தாரின் படையெழுச்சியில் தோல்வி யடைந்தனர். முற்சொன்னபடி இந்த ஜாதியார்கள் பிரித்தானியாவின்மீது படையெடுத்துக் குடியேறஆரம்பித்தார்கள். இவர்கள் ப்ரிடன்களை ஜயித்த பிறகு, சிறு ராஜ்யங்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். இவைகளில் முக்யமான ராஜ்யங்கள் நான்கு. அவைகளுக்கு நார்த்தம்பிரியா, மேர்ஸியா, வேஸ்ஸெக்ஸ், கேண்ட் என்று பெயர். இன்னும் அநேக சிறிய ராஜ்யங்களுமிருந்தன. இந்த ராஜ்யங்களின் அரசர்கள் அடிக்கடி தங்களுக்குள்ளேயே சண்டை செய்துகொண்டனர். அதனால் சிறு ராஜ்யங்களெல்லாம் மறைந்துவிட்டன. பலம் அதிகமான ராஜ்யங்கள் மாத்திரமே மிகுந்தன.

### ஆங்கிலேயர் கிறிஸ்தவர்களானது

மத்ய தரைக்கடலின் கிழக்குப் பாகத்தில் பலஸ்தீனா என்று ஒரு தேசம் இருக்கிறது. அங்கே ஸுமார் 1900 வருஷங்களுக்கு முன் இயேசு கிறிஸ்து என்று நல்லவர் ஒருவர் இருந்தார். அவர் ஜனங்களுக்காக மிகவும் கஷ்டப்பட்டார். ஆனால் அந்தக்காலத்து மனிதர்கள் அவரை வெறுத்தார்கள். 'கலகக்காரன்' என்று சொல்லி அவரை சிலுவையி லறைந்து கொன்றுவிட்டார்கள். அவருடைய சீஷர்களுக்கு அதாவது அவருடைய கொள்கைகளைப் பின் பற்றினவர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்று பெயர். கிறிஸ்து நல்ல வழியை உபதேசித்ததால் பலர் கிறிஸ்தவர்களானார்கள்.

ஸீஸர் இங்கிலாந்தின்மேல் படையெடுத்து 50 வருஷங்களானபின் கிறிஸ்தவ மதம் ரோம ராஜ்யத்தில் பரவிற்று. ரோம் நகரத்தில் கிறிஸ்தவர்களின் முக்ய குருவான போப் என்பவர் வசித்தார். போப் என்பவர்கள் மிகவும்நல்லவர்கள். இவர்கள் எல்லா ஸுகங்களையும் விட்டு விட்டு, கல்யாணஞ் செய்து கொள்ளாமல், மற்றவர்களுக்கு நன்மை செய்து வந்தார்கள். அதனால் கிறிஸ்தவர்களெல்லாரும் அவர்களைக் கொண்டாடி வந்தார்கள்.

கிறிஸ்தவ குருக்களில் மிகச் சிறந்தவரான கிரிகரி என்பவர் சிறுவராயிருக்கும்போது ஒருநாள் ரோம் நகரத்துச் சந்தை வழியாகப் போய்க் கொண்டிருந்தார். அக்காலத்து வழக்கப்படி பல அடிமைகள் விற்பனைக்காக அங்கு நிறுத்தப்பட்டிருந்தார்கள். ஆங்கில அடிமைகளும் அங்கிருந்தனர். இவர்களுடைய சிறந்த உருவமும், சிவந்த உடலும், நீண்ட பொன்னிறமான கேசமும் பார்ப்பவர்கள் மனஸ்தை ப்ரமிக்கச் செய்தன. கிரிகரி அவர்களைப் பார்த்து "நீங்கள் யார்?" என்று வினவ "நாங்கள் ஆங்கில்ஸ்" என்றவர்கள் மறுமொழி கூறினார்கள். "நீங்கள் ஆங்கில்ஸ் அன்று; 'ஏஞ்ஜில்ஸ்' ஆவீர்" என்று சொன்னார். 'ஏஞ்ஜில்ஸ்' என்பதற்கு 'தேவதூதர்'—தேவலோகத்தைச் சேர்ந்தவர்களென்று பெயர். பிறகு கிரிகரி அவர்களுடன் பேசி அவர்களுக்குக் கிறிஸ்துவைப்பற்றி ஒன்றும் தெரியாதென்று அறிந்துகொண்டார்.

ஆங்கிலர்களை கிறிஸ்தவர்களாக்க வேண்டுமென்னும் எண்ணம் கிரிகரிக்கு உண்டான போதிலும் அதை உடனே நிறைவேற்ற முடியவில்லை. தான் ப்ரதம குரு (போப்பு) ஆனபோது அகஸ்தீன் என்னும் ஸந்யாஸியை, சிலத் துறவிகளோடு ப்ரிடனுக்கு அனுப்பினார். கிறிஸ்தவ மனைவியை விவாஹம் செய்துகொண்ட கெண்ட் தேசத்து அரசனுடைய ஜனங்களை முதலில் இவர்கள் கிறிஸ்தவர்களாக்கினார்கள். பிறகு கிறிஸ்தவ மதம் கொஞ்சம் கொஞ்சமாகப் பரவிற்று.



ஆல்ப்ரட் மஹா அரசர்

ஆங்கிலர்கள் இங்கிலாந்தில் குடியேறின சிறிது காலத்தில், பல சிறு ராஜ்யங்கள் ஏற்பட்டன. அவைகள் ஒன்றோடொன்று யுத்தம் புரிந்துகொண்டிருந்தன. இதனால் பலம் மிகுந்த ராஜ்யங்களே சிறு ராஜ்யங்களை வென்று மிகுந்தன. இவைகள் ஏழென்றுசொல்லப்படும்: கேண்ட், வேஸ்ஸெக்ஸ், மேர்ஸியா, நார்தம்ப்ரியா, கீழ் ஆங்கிலியா, எஸ்ஸெக்ஸ் முதலியவைகளாம். இவைகள் ஒவ்வொன்றும் சிற்சில காலங்களில் மற்ற ராஜ்யங்களின்மீது ஏகாதிபத்தியம் செலுத்தி வந்தன. ஆனால் இம்மாதிரியான காலங்களும் மிகக் குறைந்தவையே.

வெஸ்ஸெக்ஸ் ராஜ்யம் எக்பர்ட்டின் கீழ் சிறந்து விளங்கியது. அவன் மற்ற ராஜ்யங்களை ஜயித்து நாட்டை செம்மையாக ஆண்டு வந்தான். ஆனால் அவன் காலத்திலேயே புதியகஷ்டம் ஒன்றுதோன்றியது: ஐரோப்பாவின் படத்தை எடுத்துப் பார்ப்பீர்களாயின், ஹாலண்டுக்கு வடக்கே டென்மார்க்

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

ஜப்பானுடைய தீக்குச்சி வியாபாரம்.—1915-16ம் வருஷத்தில் இந்தியாவில் இறக்குமதியான 182 லக்ஷம் குரோஸ் தீப்பெட்டிகளில் 152 லக்ஷம் குரோஸ் தீப்பெட்டிகள் ஜப்பானிலிருந்தே வந்திருக்கின்றன.

***

ஜேர்மனியிலுள்ள வாலிபர் தொகை.—1914-வது வருஷம் டிசம்பர் மாதத்தில் ஜெர்மனியில் 17 முதல் 18 வயது வரையில் 6,74,585 வாலிபரிருந்தனர்; 1915 வது வருஷம் டிசம்பர் மாதத்தில் அவ்வாறு சுமார் 6,91,274 வாலிபரிருந்தனரென்று கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றது.

---

(111-ம் பக்கத்தொடர்ச்சி.)

என்ற தேசமிருக்கும். அங்கு டேன்ஸ் என்னும் ஜாதியார் வசித்திருந்தனர். இவர்கள் ஆங்கிலருக்கு உறவினர்கள். ஆங்கிலர்களைப் போலவே தைர்யமும், திடமும் பொருந்தியவர்கள். இவர்கள் இங்கிலாந்து தம் தேசத்தைவிடச் சிறந்தது, ஸௌக்யமானது என்றறிந்து படையெடுக்கத் தொடங்கினார்கள். தாழ்ந்து நீண்ட தம் படகுகளில் வந்த இந்த டேன்ஸ் ஜாதியார் இங்கிலாந்தின் கிழ்ப்பாகத்தில் முதலில் குடியேற ஆரம்பித்தார்கள். பிறகு தெற்குக் கரையிலும் குடியேற ஆரம்பித்து வெஸ்ஸெக்ஸ் ராஜ்யத்தையும் எதிர்த்தார்கள். எக்பர்ட் அவர்களைத் தோற்கடித்த போதிலும், அவர்கள் அடிக்கடி படையெடுத்தனர். எக்பர்ட் இறந்தபிறகு அவனுடைய பேரன்மார்கள் அரசாண்டனர். அவர்களாலும் டேன்ஸுகளைத் தோற்கடிக்க முடியவில்லை. கடைசியில் ஆல்பிரட் காலத்தில்தான் வெஸ்ஸெக்ஸ் ராஜ்யம் முன்னிருந்த நிலைமையை யடைந்தது.

ஸிம்மாதனமேறியபோது ஆல்பிரட்டிற்கு 23 வயது. அவன் சிறுபிராயமுதல் படிப்பில் ஆசையுள்ளவனாக யிருந்தான். யுத்தஞ் செய்வதிலும் மற்றவர்களுடைய ஸுகத்தைநாடி அதற்காக உழைப்பதிலும் ஸந்தோஷங் கொள்பவன்.

மிஸ்டர் கில்மான்.— ரெவினியூ போர்ட் 4-வது மெம்பராயிருக்கும் கனம் மிஸ்டர் கில்மான், ஸர் ஹாரோல்ட் ஸ்டுவர்டுக்குப் பதிலாக கவர்னர் நிர்வாக சபை மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜனரலாயும், பாரஸ்ட் இலாகா கமிஷனராயுமிருந்தவர். பொது நலப் பிரியரெனச் சொல்லப்படுகிறது.

***

இந்தியாவில் செய்யப்படும் சீமைச் சுண்ணம்பு பென்ஸில்.—கூர்ஜன்வாலாவில் (பஞ்சாப்) இந்திய சாக்பென்ஸில் கம்பெனி ஒன்றிருக்கிறது. அதில் சீமைச்சுண்ணம்பு குச்சிகள் (பல நிறமுள்ளவை) செய்யப்படுகின்றன. அவை அயல்நாடுகளில் செய்யப்படும் குச்சிகளுக்கு எவ்விதத்திலும் குறைவாயில்லையென்று சொல்லப்படுகிறது.

***

புனலூர்க் காகிதத் தொழிற்சாலை.— இதனை நமது கவர்ன்மெண்டார் ஒரு வருஷ காலமாகத் தமது வசத்தில் வைத்துக் கொண்டு நடத்தி வருகின்றனர்; இதில் 3,4 மாதங்களாகத்தான் வேலை நடைபெற்று வருகின்றது. அதில் பழுப்புக் காகிதமே செய்யப்பட்டு வருகின்றது. அதில் வெள்ளைக் காகிதமும் செய்யப்படுமாயின், நல்ல லாபத்தைக் கொடுக்கும்.

***

இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி.—இந்தியாவிலிருந்து 1915-1916-வது வருஷத்தில் சுமார் 192 கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப்புள்ள சாமான்கள் அன்னிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. அன்னியதேசங்களிலிருந்து சுமார் 131 கோடியே 34 லட்சம் ரூபாய்மதிப்புள்ள சாமான்கள் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. இந்தியாவின் ஏற்றுமதிச் சாமான்களுள் சுமார் 73 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் கிரேட் பிரிட்டனுக்குச் சென்றிருக்கின்றன; இறக்குமதிச் சாமான்களுள் சுமார் 79 கோடி ரூபாய மதிப்புள்ள பொருள்கள் கிரேட் பிரிட்டனிலிருந்து இந்தியாவிற்கு வந்திருக்கின்றன.





ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான்

கனம் டி. வி. சேஷகிரி ஐயர் அவர்கள்

# FOREWORD
## BY
# The Hon'ble Mr. Justice T. V. Seshagiri Ayyar

Mr. Kuppuswami Ayyar had asked me for an article for his centenary number. I had to decline the request, as I felt diffident about my capacity to write in Tamil without mistakes of expression, grammar and orthography. He is not inclined to take my excuse and has pressed me to say a few words by way of foreword to the forthcoming number. It would be ungracious to say **no** to such a persistent and well-intentioned appeal.

The syllabus of the contents shows the richness and variety of the subjects which are to be served to the public. The writers are all of them men of great eminence, and the subjects dealt with are of consuming interest to the reading public.

For some years now, there has been a waking up in the cause of Tamil literature. The impetus is, in the main, due to the organised and successful efforts put forth by our brethren of the Andhra Districts. I can speak personally to more than one endeavour that is being made in Madras to resuscitate and enrich the Tamil literature. I have been connected with some of the movements intended to achieve this purpose.

I gladly acknowledge the valuable services rendered to the cause by publications like the "Viveka Bodhini." I have taken the Journal ever since its first number was published: and I can speak to the good work it has done.

The revival of interest in Tamil has been the work of many men who have suffered not a little pecuniary sacrifice. Mr. Kuppuswami Ayyar is among the number. He has the satisfaction of knowing that his journal has the appreciation of many thoughtful men. The present number will in a way be a record of the many activities which the "Viveka Bodhini" had encouraged during the period of its existence.

I have therefore great pleasure in commending the Journal and the silent good work that is being done by the Editor to the public.

Madras,
12th December 1916

T. V. Seshagiri Ayyar.

# முன்னுரை

(மொழிபெயர்ப்பு)

[ஹைகோர்ட் ஜட்ஜ் கனம் ஸ்ரீமான் டி. வி. சேஷகிரி ஐயரவர்கள்]

இந்நூறும் ஸஞ்சிகைக்கு விஷயதானம் ஏதாவது செய்யவேண்டுமென்று ஸ்ரீமான் குப்புஸ்வாமி ஐயர் முன்னரே கேட்டிருந்தார். இலக்கணப் பிழைகள் எழுத்துப் பிழைகளின்றி தமிழ் எழுதும் திறன் எனக்குக் குறைவாகவிருந்த தால் அவர் வேண்டுகோளுக்கு என்னால் இசையமுடியாமல் போய்விட்டது. இம் முகாந்தரத்திற்கு இணங்க மனம் வாராது, அவர் இந்நூறும் ஸஞ்சிகைக்கு முன்னுரையாகவாவது ஏதாவது எழுதித்தந்தால் நலமாக இருக்கு மென்று வற்புறுத்தினர். மிகுந்த ஆவல், நல்லெண்ணம் இவைகளுடன் அவர் செய்த இவ்விண்ணப்பத்திற்கு இணங்காதிருப்பது தகுதியல்ல வென்பது வெளிப்படை.

வாசிப்பவர்களுக்கு இதில் அளிக்கப்படும் விஷயங்களின் சிறப்பும், விசித்ரமும் இங்கு காணப்படும் சுருக்க அட்டவணையிலிருந்தே நன்கு வெளியாகும். இவைகளை எழுதியவர்களும் மிகச் சிறந்தவர்கள்; எடுத்தாளப்பட்ட விஷயங்களும் படிப்பவர் மனதில் கதித்தெழும் ஆவலை நிலை நாட்டும் தன்மையுடையவை.

இப்பொழுது சில ஆண்டுகளாகத் தமிழ்விஷயக்கிளர்ச்சி ஒன்று வெளிப்பட்டுள்ளது. தெலுங்கு ஜில்லாக்களின் நமது ஸஹோதரர்கள் செய்துவரும் ஒழுங்காயுள்ளதும், ஸித்திபெறக் கூடியதுமான முயற்சிகளைப் பெரும்பாலும் பொருத்ததாக விருக்கலாம் இந்தத் தமிழ் விஷயக்கிளர்ச்சியின் பேராற்றல். தமிழ் இலக்கியத்தைப் புதுப்பித்துச் செழிக்கச்செய்வதற்கென்றே சென்னையில் ஏற்பட்டுள்ள பல முயற்சிகளின் சிறப்பைப்பற்றி என்பழக்க பலத்தாலேயே நான் பாராட்டிக் கூறமுடியும். இந்நோக்கத்துடன் கூடிய சில முயற்சிகளில் நான் நேரிடக்கலந்தும் இருக்கிறேன்.

இந்தக் கிளர்ச்சி விஷயத்தில் "விவேக போதினி" போன்ற பிரசுரங்கள் செய்துள்ள பேருதவியை நான் நன்கு மதிக்கிறேன். முதல் ஸஞ்சிகை வெளியானது முதல், நான் இதை ஒழுங்காகவும் வரவழைத்துக்கொண்டு வருகிறேன் : ஆதலால் இது இயற்றியுள்ள பெரு நன்மையைப்பற்றிக் கூறும் ஆற்றல் எனக்கு உண்டு.

தமிழ் அபிமானக்கிளர்ச்சிக்கு நேராக உதவியவர் பலரும் பெரும் பணத்தட்டிற்கு ஆளாகி வருந்தியவர்களே. இத்தகையவருள் நம் குப்புஸ்வாமி ஐயரும் சேர்ந்தவர். அறிஞர் பலரால் தம் பத்திரிகை நன்கு மதிக்கப்பட்டுள்ளது என்ற திருப்திமாத்திரம் உண்டாகப்பெற்றவர் இவர். "விவேக போதினி" நடைபெற்று வந்த காலத்தில் இத்தகைய பல விஷயங்களை வெளிப்படுத்தி வந்தது என்பதை ஒருவாறு எடுத்துக்காட்டும் தன்மைவாய்ந்தது இந்த நூறும் ஸஞ்சிகை.

ஆதலால் மிகுந்த மனமகிழ்ச்சியுடன் இந்தப் பத்திரிகையையும் மிகுந்த அமைதியுடன் இதன் பத்திராதிபர் செய்துவரும் பேருதவியையும், இதனால் பலர் உணர நான் எடுத்து இவ்வாறு பாராட்டும்படி யாயிற்று.

# மங்கள வாழ்த்து

[வித்வான் மதுரமொழி பிருஹ்மஸ்ரீ வஸிஷ்ட பாரதியவர்கள்]



ஆண்டு நா ரூண்டறி வாண்டுல காண்டு
  மாண்டமிழ் மாதின் மகத்துவம் பாராஅய்
சாத்திரஞ் சீலஞ் சரித்திரம் காவ்யமும்
  பாண்டித் தியமும் பாண்டித் தமிழாள்
கிளிகட் கொஞ்சக் கிளைத்த கற்பகமாய்
  வேண்டியார்க் கியாது மியாண்டும் பயந்துநீஇ
யாழினினித்துத் தழீஇ மனங் கவர்ந்து
  வாழிநீ விவேக போதினி வாழ்க!
ஆரணிச் சடிலக் காரண மூர்த்தி
  அருள்பெற வந்த குருமுனி யாகும்
அகத்தியன் தனக்கு மகத்துவ மளித்த
  தென்தமிழ் வடிவாம் விவேக போதினியே!
மைந்த ராயுள் மகவான் வேள்வி
  செந்தா மரையிதழ் சீர்சால் பிரபந்தம்
வாய்ந்த நூதிலக்க மேய்ந்தனை! என்றுநீ
  ஆண்டவ ரூரரு ளாண்டிட இனியுநூற்
றூண்டிருந் தவசியை ஆண்டு நீ
  வாழிநீ வாழ்க வையகத் தோர்க்கென.

(இதன் தொர்டர்ச்சி 195-ம் பக்கம்)


# விவேகபோதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொ. IX { நளஹு புரட்டாசி, ஐப்பசிமீ :: 1916-ஹு அக்டோபர், நவம்பர்மீ } ப. 4-5


## நல்லொழுக்கம்

## GOOD CONDUCT

[பிரஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய
வே. சாமிநாத ஐயர் அவர்கள்]

### 1. சொல் உறுதி

நல்லொழுக்கம் என்பது பல வகைப்படும். அவற்றுள், சொல்லுறுதி யென்பது ஒன்று. சொல்லுறுதியுள்ளவர்கள் யாவராலும் எக்காலத்தும் கொண்டாடப் படுவார்கள்.

முற்காலத்திற் சீட்டு, பத்திரம் முதலியவற்றுள் ஒன்றுமில்லாமல் வாய்மொழியாகவே நாணயம் நடைபெற்று வந்ததென்பது பல சரித்திரங்களால் யாவரும் அறிந்த விஷயமே.

இக்காலத்திலும் நகரத்தார்க ளென்று சொல்லப்படும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களுள்ளும் வேறுள்ள பல வியாபாரிகளுள்ளும் வாய்மொழியாகவே நாணயம் நடைபெற்றுவருவதை அநேகர் அறிந்திருக்கலாம். இதனால் ஜனங்களுக்குள் உள்ள நம்பிக்கை நன்றாக வெளியாகிறது.

சென்ற நூற்றாண்டில் தஞ்சாவூரில் இருந்த ஒரு சங்கீத வித்துவானைப் பற்றிய சரித்திரத்தை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

வடமொழிப் புலவர்களும், தமிழ்ப்புலவர்களும், வாய்ப்பாட்டுப் பாடுவதிலும் வாத்தியங்கள் வாசிப்பதிலும் புகழ்பெற்ற பல இசைப்புலவர்களும் தஞ்சை சமஸ்தானத்தில் ஆதரிக்கப்பெற்று வந்தார்கள். அவரவர்களுடைய ஞானத்துக்கும் யோக்கியதைக்கும் தக்கவாறு அப்போதிருந்த கர்நாடக அரசர்கள் சிறந்த பட்டங்களை அவர்களுக்கு அளித்து வந்ததுமுண்டு.

சிலசில சங்கீத வித்துவான்களுக்கு அவரவர்கள் பயின்றிருக்கும் வாத்தியங்களின் பெயர்களும், சிறப்பாகப் பாடும் ராகப் பெயர்கள் முதலியனவுமே அவரவர்களுடைய இயற்பெயர்களுக்குமுன் அடைமொழிகளாக அமைந்து, பட்டப் பெயர்களாக வழங்கி வந்தன. வீணைப் பெருமாளையர், பல்லவி கோபாலையர், கனம் கிருஷ்ணையர், சௌக்கம் ஸ்ரீநிவாஸையங்கார், ஷட்காலம் துரைசாமி ஐயர் முதலியவர்களை இதற்கு உதாரணமாக எடுத்துக் கூறலாம்.

மேற்கூறிய சங்கீத வித்துவான்களுள் சங்கராபரணம் நரஸையர் என்ற வித்துவான் ஒருவர் உண்டு. அவர் இன்ன ஊரரென்றும் இன்ன பரம்பரையின ரென்றும் இப்போது தெரியவில்லை. ஆனாலும் அவர் தஞ்சையில் இசைநூலில் அதிசமர்த்தராக இருந்தவரும், மாணாக்கர்கள் அநேகருக்குச் சிக்ஷை சொல்லுவித்துச் சங்கீதத்தைப் பரவச்செய்தவரும், பற்பல வர்ணம், கீர்த்தனம் முதலியவை இயற்றியவருமான பச்சைமிரியம் ஆதியப்பையரென்பவருடைய சிஷ்யருள் ஒருவரென்று கேள்வியுற்றிருக்கிறேன். அவர் எல்லா ராகங்களையும் நன்றாகப்பாடினாலும் சங்கராபரண ராகத்தைப் பாடுவதில் தம்மைப்போன்றவர்கள் அக்காலத்தில் இல்லை யென்னும்படி பெயர் பெற்றிருந்தார்.

ஒருசமயம் அவர்குடும்பத்தில் விசேஷமொன்று நடந்தபோது அதற்கு வேண்டிய பொருள் அவரிடமில்லை. வேண்டுமென்று நாவை அசைத்தால் அளவற்ற திரவியம்

உடனே அவருக்குக் கிடைத்திருக்கும். ஆனாலும் இரத்தலை மிகவும் இழிவாகக் கொண்டவராதலால் அவர் ஒருவரையும் யாசியாமல் பாபநாசத்துக்கு அருகிலுள்ள கவித்தலத்தில் இருந்தவரும், வித்துவான்களை ஆதரித்து வந்தவரும், மிக்க உபகாரியும், செல்வவானுமான இராமபத்திர மூப்பனாரென்பவரையடைந்து எழுபது பொன் கடன் கேட்டார். அவர் நன்கொடையாகவே கொடுக்கக் கூடியவராயினும், நரசையருக்கு வருத்தமுண்டாகாமல் இருத்தற்பொருட்டு அவர் கேட்ட தொகையை உடனே கடனாகக் கொடுத்தார். அப்போது நரசையர் அவரைப் பார்த்து, "நீங்கள் கொடுத்த தொகைக்கு நான் ஏதேனும் ஓர் ஆபரணத்தை ஈடாக வைக்கவேண்டுவது முறையாகும்; என்னிடமுள்ளது சங்கராபரண மொன்றுதான்; தொகையை நான் உங்களிடம் திருப்பிக் கொடுக்கும் வரையில் இந்த ஆபரணம் உங்களிடமே இருக்கட்டும்" என்று சொல்லி அவரிடம் விடை பெற்றுக்கொண்டு தம் இருப்பிடம் சென்றார்.

சில மாதங்களுக்குப்பிறகு, கும்பகோணத்தில் பெரிய உத்தியோகத்திலிருந்த அப்புராவ் என்பவர் வீட்டில் ஒரு கலியாணம் நடந்தது. அப்போது சங்கராபரணம் நரசையரும் மற்ற வித்துவான்களும் அழைக்கப் பெற்றிருந்தார்கள். நரசையருடைய பாட்டு நடந்தபோது அளவற்ற கனவான்கள் வந்து கேட்டு ஆனந்தமடைந்து கொண்டிருந்தார்கள். சங்கராபரணத்தை மட்டும் நரசையர் பாடவில்லை. அப்போது அப்புராவ் அவரிடம் வந்து, "இனிமேல் சங்கராபரண ராகத்தைப் பாடலாமே" என்று கேட்டுக் கொண்டார். உடனே நரசையர், "நான் இப்போது அந்த ராகத்தைப் பாடமாட்டேன்; சில மாதங்களுக்கு முன் அதை ஒரு கனவானிடம் அடகுவைத்துக் கடன் வாங்கியிருக்கிறேன். அந்தக் கடன் தீரும் வரையில் அதைப் பாடுதல் முறையன்று" என்றார். அப்புராவ், "நீங்கள் சொல்லுவது பொருத்தமாகஇல்லையே! ராகத்தை எப்படி அடகு வைக்கலாம்?" என்று வினவ, நரசையர், "சில மாதங்களுக்கு முன் என் குடும்பத்தில் திடீரென்று பெருத்த செலவு ஒன்று ஏற்பட்டது. அப்போது என்னிடம் பணமில்லாமையால் கவித்தலம் இராமபத்திர மூப்பனாரவர்களிடம்போய் எழுபது பொன் கடன் கேட்டேன். நான் கேட்ட தொகையை உடனே அவர்கள் கொடுத்தார்கள். ஆனாலும் நான் நடந்துகொள்ள வேண்டிய முறையை எண்ணி, 'இந்த ராகத்தை அதற்கு ஈடாக வைத்துக்கொள்ளுங்கள்' என்று சொல்லிவிட்டு வந்தேன். அந்தத் தொகையை நான் அவர்களிடம் சேர்ப்பிக்கும் வரையில் இந்த ராகத்தை எங்கும் பாடுவதில்லையென்று உறுதி செய்து கொண்டேன்" என்றார்.

அதைக்கேட்ட எல்லாரும் வியப்படைந்து அவருடைய சொல்லுறுதியை மிகவும் மெச்சினார்கள். அவருக்குத் தெரியாமல் அப்புராவ் உடனே ஒரு வேலைக்காரனிடம் எழுபது பொன்னைக் கொடுத்துக் கவித்தலத்துக்கு அனுப்பினார். மறுநாள் தொகையைப் பெற்றுக்கொண்டதாக இராமபத்திர மூப்பனாரிடமிருந்து ஒரு சீட்டுவந்தது. அதைப் பார்த்த பிறகே நரசையர் சங்கராபரண ராகத்தைப் பாடி எல்லாரையும் மகிழ்வித்தார்.

இராமபத்திர மூப்பனாரும் பரீக்ஷார்த்தமாக முதலில் சும்மா இருந்தாலும் நரசையரிடம் அந்த எழுபது பொன்னையும் பின்பு நன்கொடையாகக் கொடுத்தனுப்பி விட்டார்.

இதனால் நரசையருடைய சொல்லுறுதியோடு அவர்பால் இருந்தமானமும், இரவச்சமும், பிற குணவிசேஷங்களும் வெளியாகின்றன.

"யாமெய்யாக் கண்டவற்றுளில்லையெனைத் தொன்றும்
வாய்மையி னல்ல பிற." (திருக்குறள்.)

---

சுதேசமித்திரன்.— * * ஆண், பெண் ஆகிய இருதிறத்தினரின் அறிவு வளர்ச்சிக்கான பற்பல வியாசங்களும், சிற்சில கதைகளும், சரித்திரங்களும், சிறுவர்களுக்கான விஷயங்களும் தெள்ளிய தமிழ்நடையில எழுதப்பட்டு வருவதை இங்கு குறிப்பிடுதல் பொருந்தும். நன்கு நடத்தப்படும் மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகைகளுள் இதை முக்கியமாக எடுத்துச் சொல்லலாமென்பதற்கு, இதற்குக் கிடைத்திருக்கும்மதிப்புரைகளே தக்கஆதாரமாகும்.



# விவேக போதினி

தொ. 9] நள ௵ புரட்டாசி, ஐப்பசி௴ [ப. 4, 5

## வர்ணாச்ரம தர்மம்

## VARNASRAMA DHARMA

ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ரர் என்ற நான்கு வர்ணத்தாரும், அவர்களுள் அடங்கியுள்ள ப்ரஹ்மசரிய, க்ருஹஸ்த, வானப்ரஸ்த, ஸந்யாஸாதி ஆச்ரமிகளும், தாம் மேலான மோக்ஷத்தை அடைவதற்கு மனப்பூர்வமாக முயலுங்கால் செய்து தீரவேண்டிய செய்கைகளுக்கும் கொள்ள வேண்டிய கொள்கைகளுக்கும் வர்ணாச்ரம தர்மம் என்று பெயர். இவை நமது வேதம் முதலிய சாஸ்திரங்களில் வெகு விரிவாகவும் சிற்சில விடங்களில் சுருக்கமாகவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவைகளைச் சுருக்கமாகக் கூறும் பகவத்கீதை, பாகவதம் 7-ம் ஸ்கந்தம், அநுசீாஸனபர்வம் இவைகளில் உள்ளபடி இங்கு வர்ணாச்ரம தர்மத்தை எடுத்து விளக்கப் புகுவோம்.

வெகு சுருக்கமாக ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, வர்ணதர்மங்களை 18-ம் அத்யாயம் 42, 43, 44-ம் ச்லோகங்களில் பின்வருமாறு எடுத்து விளக்குகிறார்:—

உற்றசமமும் தமமும் ஒண் தவமும் தூய்மையும்
பெற்ற பொறையும் நேர்மைப் பெற்றிமையும்—[குற்றமிலா
ஞானமும் விஞ்ஞானமும் ஆஸ்திகமும் நான்மறையோர்க்
கான இயற் கைத்தொழிலாம் ஆங்கு.

வீரியமும் தேசும் விறலும் திறமையும்
போரிற்புறங்கொடுத்தல் இன்மையும்—நேருமொரு
வண்மையும் மாநிலமாள் மாண்பதுவு மன்னவருக்
கென்னும்இயற் கைத்தொழிலாம் ஈங்கு.

உழுதல் பசு ஓம்பலோ டொண்பண்டம் மாற்றல்
வழுவில்வணி கர்க்கியற்கைவாய்ந்த—தொழிலாகும்
மற்றவருக்குற்றபணி வாய்ந்தியற்றல் சூத்திரர்க்குப்
பற்றும் இயற் கைத்தொழிலாம் பார்.

இந்தத் தர்மங்கள் எல்லாம் வயிற்றுப் பிழைப்பு, உலக உபகாரம், வேலைப்பிரிவு, ஒழுங்கு முதலிய லௌகிக விஷயங்களைப் பொருத்தவையேயல்ல. இந்தத் தர்மங்கள் மோக்ஷவழி ஸரிவர நடப்பதற்கு உதவியானவைகளே என்பதைக் காட்ட பகவான் அடுத்த 46-ம் ச்லோகத்தில்,—

யாவனிடை எப்பொருட்கும் எய்தும்பிறப்புளதாம்
யாவனிவற்றெல்லாம் இலங்கிடுவன்—தேவவனைத்
தத்தமக்காம் கர்மத்தால் சார்ந்தடைவார் மானிடர்கள்
உத்தமமாம் சித்தியினை ஊங்கு.

என்று விளக்குகிறார்.

ஆகவே இந்தச் சுருக்கத்தினால், ப்ராஹ்மணனிடம் அமைதி, அடக்கம், தபஸ், சுத்தம், பொறுமை, நேர்மை, அறிவு, அனுபவம், ஆஸ்திகத் தன்மை இவைகளால் ஏற்படும் கர்மாக்களும்; க்ஷத்ரியனிடம், சௌர்யம், துணிவு, வன்மை, கூர்மை, போரில் புறங்கொடாமை, கொடை, அடக்கியாளுந் தன்மை இவைகளால் ஏற்படக் கூடிய கர்மாக்களும்; வைச்யனிடம், பயிரிடுவது, பசுக்களைக் காப்பது, வியாபாரம் இவைகளால் ஏற்படக்கூடிய கர்மாக்களும்; சூத்ரனிடம் எல்லோருக்கும் தொண்டு ஊழியம் முதலியவை செய்வதால் ஏற்படும் கர்மாக்களும் காணப்படவேண்டும், என்பது வெளியாகும்.

நாரதர் யுதிஷ்டிரருக்கு ராஜஸூய யாக இடையில் நடந்த சிசுபாலவதத்தைக் காரணமாகக்கொண்டு கூறிய ப்ரஹ்லாத சரித்திரத்தின் பின்னர், அந்தப் பரம பாகவதன் நிலையை எல்லோரும் அடைவதற்கென்றே ஏற்பட்டுள்ள வைதிகப் பாகுபாடான வர்ணாச்ரமதர்மத்தை நடுத்தரமாகப் பின் வருமாறு விவரித்துக் கூறுகிறார். இதில் நான்கு வர்ணங்களுடன் ஸ்திரீகள் நிலை, கலப்பு வர்ணங்கள், ஆகிய இவைகளைச் சேர்த்து நாரதர் யுதிஷ்டிரருக்கு விளக்குகிறார்.

ப்ராஹ்மண தர்மம்:—இவர்கள் ஆசாரம் கர்மம் யாவும் நிலைகுலையாதிருக்க வேண்டும். மற்றைய த்விஜர்களுக்கு உள்ளதுபோலப் பொதுவாக யாகம்செய்தல், வேதம் ஓதல், தானம் செய்தல் இவர்களுக்கும் உண்டு. ஆனால் இவர்களுக்கே யாகம் செய்வித்தல், வேதம் ஓதுவித்தல், தானம் வாங்குதல் என்பவை சிறப்பாக உள்ள கர்மாக்கள். இவைகளால்தான் இவர்கள் ஜீவனம் செய்யவேண்டும். பயிரிடுவது, வியாபாரம் செய்தல், கோராது கிடைத்தவைகளை ஏற்றல், பிக்ஷை எடுத்தல், உஞ்ச விருத்தி (சேர்த்து உண்ணுவது) ஆகிய இவைகளை மத்யமமாக ப்ராஹ்மணன் பிழைக்கும் வழியாகக் கொள்ளலாம். முறையே இவைகளுள் முன்னதை விடப் பின்னது சிறந்தது. இவன் தாழ்ந்த ஜாதியாரிடம் ஊழியம் செய்ய ஆமரவே கூடாது (க்ஷத்ரியனுக்கும் இப்படியே). இவனிடமிருக்க வேண்டிய குணங்களாவன:—மனோநிரோதம், இந்திரியஜயம், தபஸ், சௌசம், திருப்தி, பொறுமை, ஞானம், டம்பமின்மை, தயை, விடாபக்தி, ஸத்யம் ஆகிய இவைகளே.

க்ஷத்ரிய தர்மம்:—பிராஹ்மணர் நீங்கலான மற்றவர்களிடமிருந்து வரிவாங்கிக் குடிகளைக் காத்தல், ப்ராஹ்மண பக்தி, சூரத்தனம், வீரியம், சாந்தம், தைர்யம், கொடை, ஆத்மஜயம், பொறுமை, ஸத்யம், ஆகிய இவைகளே.

வைச்ய தர்மம்:—வியாபாரம், பயிரிடுதல், ப்ராஹ்மணரிடம் அடங்கி நிற்றல், தேவதாபக்தி, ஆசார்யபக்தி, பகவத்பக்தி, தர்மார்த்தகாம பரிபாலனம், மதவிஷய ச்ரத்தை, விடாமுயற்சி, ஸாமர்த்யம் ஆகிய இவைகளே.

சூத்ரதர்மம்:—முதல் மூன்று வர்ணத்தாருக்கும் தொண்டு செய்தல், அடக்கம், சுத்தம், யஜமான பக்தி, வேதமந்திரமில்லாது யாகம் செய்தல், திருட்டுத்தன மின்மை, ஸத்யம், கோப்ராஹ்மண ரக்ஷணம் ஆகிய இவைகளே.

ஸ்திரீ தர்மம்:—இவர்களுக்கு வர்ணாச்ரம பேத தர்மங்களே இல்லை. எல்லோருக்கும் பொதுவாகத் தங்கள் புருஷனைத் தெய்வமாகக் கருதித் தொண்டுசெய்தல், கணவன் விருதத்தைக் கைக்கொள்ளுதல், கணவனுக்கு வேண்டியவர்களை மதிப்புடன் நடத்துதல், வீட்டைக்காத்தல் ஆகிய இவைகளே. மாறாத் திருப்தி, பொருளாசையற்றிருத்தல், ஸாமர்த்யம், ஞானம், ஸந்தோஷகரமான ஸத்யவார்த்தை, ச்ரத்தை, சுத்தம், ஸாதாரணமாக இருத்தல், இவைகளைக் கொண்டு தன் கணவன் எப்படிப்பட்டவனாலும் ஸரி, அவனை வழிபடவேண்டியது.

கலப்புஜாதி தர்மம்:—இவர்கள் வம்சத்தவரது தொழில்களை இவர்கள் பின்பற்றுவதே இவர்களுக்குப் பாபமற்ற செயலாகும்.

தாழ்ந்த வர்ணத்தான் அபாயமில்லாத காலங்களில் தன் தர்மம் ஒழிந்த மேலான தர்மங்களைப் பின்பற்றவே கூடாது. ஆபத்ஸமயங்களில் க்ஷத்ரியனைத் தவிர மற்றவர்கள் வேறு தர்மங்களைக் கைக்கொள்ளலாம்: இவ்வாறு தர்மங்கள் தவறாது நடப்பவர்களுக்குச்சீக்கிரத்தில்விஷயஸுகஆசை குறைவுபட்டு முடிவில் மோக்ஷமே எளிதில் கைகூடிவிடும். இன்ன வர்ணத்தான் என்று இரு திறத்தாருக்கும் உணரமுடியா ஒரு வைதிகன் விஷயத்தில் தொழிலின் தன்மையைக்கொண்டு வர்ண நிர்ணயம் செய்யலாம்.

இவைகளிலிருந்து வர்ணபேதத்தால் ஏற்படக்கூடிய லௌகிகஸுகத்தை வேதம் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்பது நன்குக வெளியாகும். ப்ராஹ்மணன் நீங்கலான மற்றவர்கள் மூடநம்பிக்கையுடன் தமது தர்மங்களை அனுஷ்டித்து வந்துவிட்டால், அடுத்த ஜன்மம் தாழாது அதே வர்ணத்தில் ஏற்படும். அப்படிச் செய்வதுடன் வர்ண நோக்கத்தின் சிறப்பை உணர்ந்து அதன் முடிவான மோக்ஷத்தின் சிறப்பையும் கேட்டுணர்ந்து தமது வர்ண தர்மங்களை ஈச்வர பூஜையாக, கிருஷ்ண பரமாத்மா எடுத்துக்காட்டுவதுபோல, ஒருவன் செய்து வருவானானால், தன் கர்ம ஞானபலத்திற்கேற்ப ஸ்வர்காதி போகங்களுக்குப் பின்னர் இங்கே அடுத்த மேல்ஜாதிப் பிறவியாவது அல்லது ப்ராஹ்மணப் பிறவியாவது, அல்லது ப்ரஹ்மலோகத்தில் ப்ராஹ்மணப்பிறவியாவது ஏற்படப்பெற்று மோக்ஷத்திற்கு நேரே முயற்சி செய்யும் நிலையை அவன் எளிதில் அடைந்து விடுவன். ப்ராஹ்மணர்கள் மூடத்தனமாகத் தமது தர்மங்களை அனுஷ்டித்தால் மறுபடி மறுபடி நேராகவாவது ஸ்வர்க்க வாஸத்தின் பின்னராவது ப்ராஹ்மணராக இவ்வுலகில் பிறப்பர். ஞானத்துடன் வர்ண தர்மங்களை அனுஷ்டிக்கும் ப்ராஹ்மணருக்கு அவர்கள் உணர்வு அழுத்தத்திற்கு ஏற்ப, ப்ரஹ்மலோக ப்ராஹ்மண ஜன்மமோ அல்லது இவ்வுலகில் முடிவான ப்ராஹ்மண ஜன்மமோ ஏற்படலாம். ஸ்திரீகளுக்கு மூட பாதிவிருத்ய பலத்தால் உடனே அடுத்த ஜன்மாவில், தம் தம் வருணத்துப் புருஷ ஜன்மா வந்துவிடலாம். சாஸ்திர ஞானத்துடன் கூடிய பாதிவிருத்யத்தால் முன்னவர்களைப்போல மேல்வர்ண அல்லது இருவித ப்ராஹ்மண ஜன்மாக்களை அவர்கள் அடையலாம். ஆகவே, ஒவ்வொருவரும் தம் வர்ண தர்மத்தை வைதிகவர்ண தர்மவிஷய ஞானத்துடன் செய்தால், அவர்களுக்கு அடுத்த ஜன்மத்தில் ப்ராஹ்மண ஜன்மாவே வருவது எளிது. இவர்கள் ஞானச் சிறப்பின்படி இவ்வுலகில் இவர்களுக்கு ஏற்படக்கூடிய ப்ராஹ்மண ஜன்மாக்களைச் சங்கராசாரியர், விவேக சூடாமணியில் ப்ராஹ்மண ஜன்மா, வைதிக தர்மமார்க்கப் பற்றுடைய ஜன்மா, வைதிக ஞானப்பிடிப்பு உள்ள ஜன்மா, ஆத்மானாத்ம விவேகம் உடையஜன்மா; அனுபவம் உடையஜன்மா, ப்ரஹ்மத்தில் நிலைபெறும் ஜன்மா என்று ஆறுபாகமாகக்காட்டியுள்ளார். இவைகளில் பின் மூன்று, இவ்வுலகிலாவது ஸ்வர்க்கத்திற்கு மேற்பட்ட உலகங்களிலாவது ப்ரஹ்மலோகத்திலாவது ஏற்படலாம். ஆகவே மூடமாகத் தமது வர்ணதர்மத்தை அனுஷ்டிப்பவர் எவரும் ஒழுங்காக மேல்படிஏறி, ப்ராஹ்மணபேத நிலைகளுக்கு வருவர் என்பதை ஒருவாறு குறிக்க ஆசார்யர்களே இதே ச்லோகத்தின் தொடக்கத்தில் மானிட ஜன்மத்தையும், புருஷ ஜன்மத்தையும் சுருக்கமாக எடுத்துக் காட்டியுள்ளார். ஞானத்துடன் தன் தர்மம் அனுஷ்டிப்பவன் ப்ராஹ்மண பேதத்துள் அடுத்த ஜன்மத்திலேயே பிறந்து விடுவன். ப்ராஹ்மணனே மூடமாய் ஸ்வதர்மம் அனுஷ்டித்தால் ப்ராஹ்மண ஜன்மத்துக்குக் கீழும் போகான், மெதுவாகமேலும் ஏறுவன். அதற்குள் அவனுக்கு ஞானம் வந்து உதவி விட்டால் மற்றவர்கள்போல முடிவையும் நோக்கிப் போவன். மற்றையவர்கள் எல்லோரும் சரீரம்மாறி உயரவேண்டும்: ப்ராஹ்மணனே சரீரம் மாறாது உயர முயலலாம்.

இப்படி ஸ்வதர்மத்தால் பூர்ண அபிவிருத்தி ஒவ்வொருவனுக்கும் வருவதற்கே வர்ணங்களுள் ஆச்ரம தர்மம் ஈச்வரனால் அமைக்கப்பட்டுள்ளது. அந்த ஆச்ரமதர்மங்களைப் பின்வருமாறு நாரதர் விளக்குகிறார்.

ப்ரஹ்மசரிய தர்மம்:—குருகுல வாஸம், குருபக்தி, படிப்புக் கவனம், பசிவேளையில் பிக்ஷை எடுத்து, குரு உத்தரவிற்குப்பின் உண்ணுவது, தேஹஸுகத்தை ஒரு பொருட்டாக மதியாமை, அனாவசியமாக ஸ்திரீ, ஸ்திரீயுடனிருக்கும் கிருஹஸ்தர்கள் ஆகிய இவர்களிடம் பேசாமை, (இது ஸந்யாஸிக்கும் உபதேசம்பெற்ற க்ருஹஸ்தனுக்கும் பொது) ஆகிய இவைகளே. இதிலிருந்து மற்றைய மூன்று ஆச்ரமத்திற்கும் நேரேபோகலாம். போகுங்கால் குருவைத்திருப்திசெய்துவிட்டுப் போகவேண்டும்.

கிரஹஸ்த தர்மம்:—கர்மயோக அப்யாஸமாகிய, பலத்தில் இச்சைவிட்டு ஈச்வரபூஜையாக ஸ்வகர்மாக்களைச் செய்தல், வேண்டிய அளவு சாஸ்திரீய விஷயஸுகம் ஏற்றல், டம்பமின்மை, அதிதிபூஜை, ஜீவகாருண்யம், பணத்திற்கேற்ற பரோபகாரமான காம்ய கர்மானுஷ்டானம், கர்வமின்மை ஆகிய இவைகளே.

வானப்ரஸ்த தர்மம்:—பெண்சாதியுடன் வாஸம்செய்து உபரதி (ஓய்வு) திதிக்ஷை (பொறுமை) முதலிய நற்குணங்களை விலக்கின்றி அனுஷ்டித்துத்திடப்படுதல், (குறைந்தது ஒருவருஷமாவது இப்படித் திடமாக இருந்தபின்னர்தான் மேல் ஆச்ரமம் கைக்கொள்ளவேண்டும்) யோகாப்யாஸம், புத்தித்தெளிவு, பகவத்யானம், அடக்கம் ஆகிய இவைகளே. இவர்களுக்கு மஹா விருதர்கள், திடவிருதர்கள், யதிகள் என்றும் பெயர் உண்டு.

ஸந்யாஸ தர்மம்:—மனஸின்வைராக்யமான வசீகார ஸம்ஞாவைராக்யம் (கனவிலும் விஷயம் ஸுகம் என்ற கருத்துதியாமை) ஏற்பட்டு, மோக்ஷ விருப்பம் அல்லது அதன் ஸ்வரூபம் உணரவேண்டும் என்ற

ஆவல் வந்தவுடன் ப்ராஹ்மணன் கைக்கொள்ளவேண்டிய ஆச்ரமம் இது. ஆபத்காலங்கள் தவிர மற்றவேளைகளில்விட்டதைக் கனவிலும் கருதாமை, ஸர்வஜீவ அபயப்ரதானம், ஈசனையே கதியாகக் கொண்டிருத்தல், விசாரணை, ஞானம் இவைகளில் முயலுதல், நிஷ்டையில் காலம் கழித்தல், தர்க்கம், பக்ஷபாதம், உருவேற்றல், சிஷ்யன் ஆதரவு, உபந்யஸித்தல், கோயில் மடங்கள் கட்டுதல், இவைகளில் மனம் செல்லாமை, சாம்பல் பூத்தநெருப்புப்போலிருத்தல், விடுகளில் மிகுந்துள்ள உணவை நடுப்பகலுக்குமேல்போய் ஏற்றல், ப்ரணவஜபம் சாதுர்மாஸ காலங்கள் தவிர ஓர் இடமிருந்த நாள் ஓர் இடம் இல்லாமல் க்ராமத்தில் ஓரிரவும், பட்டணத்தில் மூன்றிரவும், நகரத்தில் ஐந்து இரவுமாகத் தங்கிக் காலங் கழித்தல் ஆகிய இவைகளே.

இங்கு கூறியவைகளிலிருந்து ஒவ்வொரு வர்ணத்தாலும் தனக்குள்ள ஆச்ரமங்களுக்கு ஏற்ப அந்த ஜன்மத்தில் கர்மாக்களால் இவ்வளவு சிறப்பு அடையமுடியும் என்பது நன்கு வெளியாகும். இவைகளின் விரிவுகளை மனு முதலிய 18 ஸ்மிருதிகளிலும் காணலாம்.

இதில் நாரதர் சுருக்கமாகக் கூறியுள்ள கலப்புஜாதி தர்மவிஷயத்தைப் பீஷ்மர் பின்வருமாறு அனுசாஸன பர்வத்தில் நன்ருக எடுத்து விளக்குகிறுர்.

| | உண்டாகும் விதம் | ஜாதிப்பெயர் | தர்மம் |
|---|---|---|---|
| 1. | க்ஷத்ரியன் ப்ராஹ்மணஸ்திரீ | ஸூதன் | பெரியோரைத் துதித்தல் |
| 2. | வைச்யன் ,, | வைதேஹன் | அந்தப்புரக் காவலாள் |
| 3. | சூத்ரன் ,, | சண்டாளன் | கொலையாளி |
| 4. | வைச்யன் க்ஷத்ரிய ஸ்திரீ | பந்தி | துதித்தல் |
| 5. | சூத்ரன் ,, | நிஷாதன் | மீன் பிடித்தல் |
| 6. | ,, வைச்யஸ்திரீ | அயோகவன் | தச்சுவேலை |

இந்த ஜாதிகளுள்ளே மேல் ஜாதிப் புருஷன் கீழ்ஜாதிப் பெண்களை விவாஹம்செய்துகொண்டால் பெண்கள் ஜாதி பிள்ளைக்குவருமே ஒழியவேறு இழிவு ஏற்படாது. இப்படியின்றி ஒழுங்கு தவறிக் கீழ்ஜாதிப் புருஷன் மேல்ஜாதிப் பெண்ணை ஏற்ருல், ஜாதிக்குறைவும் கலப்பும் உண்டாகும். இதனுல் ஏற்படும் மானிடர் புத்தி நாளடைவில் அதர்மமாகிய வர்ணுச்ரமதர்ம விரோதத்திலேயேதான் பாய்ந்தோடிப் பெரியகுழப்பங்களுக்குக் காரணமாகும்.

இங்கு இதுவரையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள வர்ணுச்ரம தர்மத்தை நன்கு உணராவிடில், பகவத்கீதையில் பகவான் அநேக இடங்களில் சொன்னதை வீணுகத்திருப்பிக் கூறுவதாகத்தான் தோற்றும். மஹான்களை ஸ்திதப்ரக்ஞன், கிருத கிருத்யன், பகவத்பக்தன், திரிகுணுதீதன், ப்ரஹ்ம ஞானி, ஸந்யாஸி, ஸமதர்சி, யோகி, ஆத்ம ஞானி, ப்ரஹ்மநிஷ்டன், ஸத்குண ஸம்பூர்ணன் என்ற பதினெரு விதமாகக் கீதையில் பகவான் வர்ணித்துக் காட்டுகிறுர். இவர்கள் வர்ணனைகள் எல்லாம் சற்றேறக்குறைய ஒரேமாதிரியிருப்பதால் ஒருநிலையை அடைந்துள்ள மஹானையே பதினெருவிதமாக வர்ணிக்கிறுர் பகவான் என்பது நன்ருக வெளியாகும். ஆனுல் ஒவ்வொரு வர்ணனையிலும் காட்டப்படும் விஷயங்கள் எல்லாம் ஒருவனிடம் முற்றிலும் இருக்க இடமில்லை என்பதும் தோன்றும். இவைகளுள் சில விடங்களில் இருவகைச் சுலோகங்கள் வரும். இவைகள் ஒருவனை வர்ணிப்பவையல்ல என்பது வெளிப்படையாகவும் தெரியும். இவைகளைப் பொருத்துவதற்கு வர்ணுச்ரம பேதப் பொருத்தமில்லாது முடியாது. இதற்காக ப்ரஹ்மசரிய கார்ஹஸ்த்யத்தை அனுராக ஆச்ரமங்களாகவும், வானப்ரஸ்த ஸந்யாஸங்களை விராக ஆச்ரமங்களாகவும் கொண்டு முறையே அவைகளில் உள்ளவர்களை அனுராகிகள், வைராகிகள் என்று மதித்து, இவ்விருவகையிலும் மஹான்கள் இருக்கலாம் என்று கொண்டு பகவான் வர்ணிப்பதாகக் கருதினுல்தான், முற்கூறிய குழப்பம் நீங்கும். தெய்வஸம்பத் என்று கீதை 16-ம் அத்யாய முதலில் கூறப்படும் 27 ஸத்குணங்களும் பொதுவாக எல்லா மஹான்களுக்கு மிருக்குமாயினும், வர்ணுச்ரம பேதப்படி பின்னர் காட்டுவதுபோல சிற்சிலரிடம் ஓங்கி முக்யமாக விருக்கும்.

பயமின்மை, மனத்தூய்மை, ஞானம், யோகம் இவைகளில் நிலைப்பு, ஸந்யாஸியிடமும்; தானம், இந்திரிய அடக்கம், யஞ்ஞும், க்ருஹஸ்த னிடமும்; தின் மந்திரமோதல், தபஸ், நேர்மை, வானப்ரஸ்த ப்ரஹ்மசாரிக ளிடமும்; ஹிம்ஸியாமை, உண்மை, கோபமின்மை, பலப்பற்று நீங்கிய கொடை, மன ஒழிவு, புறங்கூருமை, பூததயை, ஆசையின்மை, மிருதுத்தன்மை, வெட்கம் (கெடுதல்செய்வதில்) ஓயா விருப்பின்மை, பொதுவாக ஸர்வ வர்ணுச்ரமிகளிடமும்; (இருக்கவேண்டிய பதஞ்ஜலி பகவான் கூறும் அஹிம்ஸா, அஸ்தேயம், ஸத்யம் என்ற முதல் மூன்று நியமங்களின் விவரமே இவை) வீர்ய விளக்கம், பொறுமை, திடம், க்ஷத்ரியனிடமும்; சௌசம், த்ரோஹமின்மை, செருக்கின்மை, வைச்யனிடமும் ஓங்கியிருத்தல்வேண்டும்.

இப்படிப் பகுத்து நோக்காவிடில், இவைகளில் சிற்சில, (தானம்கொடைபோன்றவை) சொன்னதைத் திருப்பிச் சொன்னதாகவும், மனத்தூய்மை, வீர்யவிளக்கம்போன்றவை, ஒன்றுக்கு ஒன்று முரணுகவும், காணப்படும். இம்மாதிரியே ஸ்திதப்ரக்ஞனைப் பற்றிக் கூறும் II - 56, 57-ம் ச்லோகங்களும் முறையே வைராகி அநுராகி ஸ்திதப்ரஞ்ஞன் என்று கொள்ளாவிடில் கூறியது கூறிய குற்றமும் முரண்படக்கூறிய குற்றமும் பகவானுக்கு வரும்.. இதுதோன்றவே பகவானும் II. 56-இன் முடிவில் முநி என்ற சொல்லைக் கூறி இது வைராகியின் லக்ஷணம் என்றும், அடுத்தது அநுராகியின் லக்ஷணம் என்றும் குறிப்பாகவும்காட்டியுள்ளார். இப்பர்குபாட்டின்படி நமது சாஸ்திரங்களில் மற்றைய விடங்களில் பொருள்படுத்தாவிடில் ஏற்படக்கூடிய குழப்பங்கள் நீங்கா. இவ்வாறு நமது சாஸ்திரங்களுக்கெல்லாம் ஆணிவேராக உள்ளது இங்கு விஸ்தரிக்கப்பட்ட வர்ணுச்ரம தர்மம்.

---

சென்னை, பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதர் மஹாமஹோபாத்யாய பிரஹ்மஸ்ரீ வே. சாமிநாதய்யரவர்கள் .— * * நீதிகளைக் கற்பிக்கும் சிறு கதைகளும், புதிய நாடகங்களும், சில மொழிபெயர்ப்புகளும், தற்காலத்திற்கேற்ற நாகரீக விஷயங்களும் இப்பத்திரிகையில் மிக எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன. சிறுவர்களும் பெண்பாலாரும் இதனுல் பல விஷயங்களையும் வருத்தமின்றித் தெரிந்துகொள்ளலாம்.



## ஸர் திருவாரூர் முத்துசாமி ஐயர்
## SIR T. MUTHUSWAMI AIYAR, K. C. I. E.

[ஸ்ரீமான் வீ. சேஷகிரி சாஸ்திரி அவர்கள், பீ. ஏ.]



" அருமையுடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"

என்று மஹாகவியாகிய திருவள்ளுவ நாயனுர் வெளியிட்டிருக்கிறுர். எந்தக் காரியத்தை மேற்கொண்டாலும் பயமடையாமல், பின்வாங்காத தைரியத்துடன் வேலைசெய்பவன்தான் புருஷன் என்னும் பேரைப் பெறத் தகுந்தவனுகிறுன். அவன் நோக்க முழுதும் காரியத்தின்மேலே யிருப்பதால், ஊக்கங்குன்ருது, சற்றுஞ் சளையாமல், உழைப்பதே அவன் வழி. பலனைக் கருதாமல் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் தர்மங்கள் எவ்வாறு மோக்ஷவழி யீடுபட்டவனுக்கு உதவி யாகுமோ, அவ்விதமே முயற்சி திருவினை யாக்கும்; முயற்சியின்மை ஆரிருள் உய்த்துவிடும். அபாரஞான முள்ளவனது முயற்சியான்து எத்தகைய கட்டாம்புல் நிலம்போன்ற இடங்களில் விதைக்கப்படுமானுலும், தக்க எரு நீர் முதலியவிருத்தி ஸாதனங்கள் பெறமுடியாத அவ்விடங்களிலும், தனக்கு வேண்டிய ஸத்துக்களை

யெல்லாம் அவ்விடத்திலேயேகண்டு, அவற்றை உட்கொண்டு,வேரோடிக் கப்புங்கிளையுமாக வளர்ந்துமேலோங்கி,யாவருக்கும்நிழல் தருமரமாகவும், பார்ப்பவரது மனத்தைக் கவர்ந்து பிரமிக்கச்செய்யும்படியான விசித்ர புஷ்பங்களுடனும் பலனுடனும் கிளிகொஞ்சி, விளங்குமென்பதற்கு ஸந்தேஹமே கிடையாது. அத்தகைய அபாரஞானமுடையாரது முயற்சி மலைமேல் விளக்குப்போல யாவர் கண்முன்னும் தானாய்த் தோன்றும். அவரது வாழ்க்கை வழியினால் லோக ஸாதனங்களடைய ஊக்கமழியா திருக்குந் திறமை ஏற்படுமென்பதற் கென்றே சில நாட்களுக்குமுன் நம் நாட்டு விப்ர மணியாக விளங்கிய கனம் ஸ்ரீ திருவாரூர் முத்துசாமி ஐயர் அவர்களுடைய ஜீவிய சரிதையைச் சற்றுக் கவனிப்போம்.

## பிறப்பும், வளர்ப்பும்

திருவாரூர் முத்துசாமி ஐயர் தஞ்சாவூர் ஜில்லாவில், உச்சுவாடி என்னும் கிராமத்தில் 1832௵ ஜனவரிமீ 28உ பிறந்தவர். அவரது வம்சம் பெருந்தன்மை மிகுந்ததானாலும், ஏழ்மையில் தவழ்ந்து வந்தது. அவர் தந்தை வேங்கடநாராயண சாஸ்திரி. அவருக்கிரண்டு பிள்ளைகள்; அவருள் இளையவர் முத்துசாமி ஐயர்; மற்றொருவர் முத்துசாமி ஐயரைக் காட்டிலும் நான்கு வருஷம் பெரியவர். வேங்கடநாராயண சாஸ்திரிக்குக் கண் கொஞ்சம் மந்தமானபடியால் இரண்டு பிள்ளைகளும், சிறுநாள் முதல், ஸம்ஸாரத் தொல்லையை அவர் தோளிலிருந்து தமது தோட்களின்மேல் மாற்றிக் கொள்ளநேர்ந்தது.முத்துசாமிஐயருக்கு எட்டுவயதாவதற்குள், அவர் தந்தை காலமடைந்தனர். ஆகையினால் சிறுபொழுதிலேயே ஸம்ஸாரக் கவலையில் உழைக்கும்படி அவர்க்கு நேர்ந்தது. அவர் தாய் தன்னிடம் இருந்த சிறு பொருளைக் கொண்டு, தமிழில் எழுதவும் படிக்கவும் சொல்லி வைத்த படிப்புத்தவிர வேறுபடிப்பில்லை; அதற்குப் பொருளுமில்லை. அதனால் அந்தச்சிறுவயதிலேயே தாமிருந்த ஊரின் கிராமக்கணக்கன் வேலையை ஒப்புக்கொண்டார். அந்த வேலைக்கு மாதச் சம்பளம் ரூபாய் ஒன்றே. இந்த அல்ப ஸம்பாதனையைக்கூட அனுபவிக்கும்படியாக அவர் தாய் இருக்கவில்லை; தருமதேவதைகள் அந்த அம்மாளைத் தமதூருக்குக் குடியாக அழைத்துப்போய் விட்டனர். பெற்றோர் அற்று, நமது முத்துசாமி ஐயர் விளங்கினும், தமது தாய், வித்திட்டிருந்த படிப்பாசை அவர் மனமுழுவதும் வேரோடிக்கொண்டே யிருந்தது.

## முதற் பிரயத்தினங்கள்

நாம் இப்பொழுதிருக்கும் காலம் போன்றதல்ல முற்காலம். 50, 60 வருஷங்களுக்கு முன், இங்கிலீஷ் படிப்பு இப்போதையவ்வளவு பரந்து விளங்கவில்லை. அந்நாட்களில் ஜில்லாத் தலைவர்களுடைய பிரீதிக்குப் பாத்திரரான யாவர்க்கும், நல்ல பதவி கிடைப்பது அஸாத்யமாகஇருக்கவில்லை. அப்போது ராஜாங்க வியவஹாரங்களெல்லாம் கிட்டத்தட்ட தேசபாஷைகளிலேயே நடந்துவந்தன. ஆகையால் அப்பதவி அடைந்தவர்கள் புத்திசாலிகளாயும் தந்திரசாலிகளுமாயுமிருந்தால் மிகவதிசயமான வேலைகள்செய்ய முடியும். வட ஆற்காடு ஜில்லாவில் ஒருவர் நல்ல அன்னமிட்டு அதற்குப் பிரதிபலனாகத் தாசீல் உத்தியோகம்பெற்றதாகச் சொல்வதுண்டு. அவ்வாறே, தஞ்சாவூர் ஜில்லா கலெக்டரிடம் பட்லராயிருந்து தாசீல் பதவிபெற்ற ஒருவர் இருந்தார். இவர் பெயர் முத்துசாமி நாயக்கர். இவரை எல்லாரும் "பட்லர் தாசீல்" என்றழைப்பது வழக்கம். அவர் ஒரு நாள் நமது முத்துசாமி ஐயரைக்கண்டு, அவருடைய ஊக்கம் முயற்சி கவனம் இவற்றைப் பார்த்து அதிசயித்து "இவன் நல்ல ஸ்திதிக்கு வருவான்" என்று அபிப்பிராயப்பட்டார். அவர் முத்துசாமி ஐயரின் குணங்களை முதல்முதல் காண நேர்ந்த விஷயமாவது: ஒருநாள் காவேரி கரையுடைந்து பிரவாஹம் வெளியிடுவதாகச் சமாசாரம் அவர்க்கு எட்டியது. அதைப்பற்றிய விஷயங்களை முழுதும் கண்டுவர அனுப்பக் கச்சேரியில் ஒருகுமாஸ்தாவாவது இருக்கவில்லை. அப்பொழுது முத்துசாமி ஐயர் அங்கு வந்து, தான் போய் வருவதாகத் தைரியத்துடன் தாசில்தாரிடம் தெரிவித்தார்; வெகுசீக்கிரத்தில் வேண்டிய



சங்கதி எல்லாம் தாம்போய்க் கவனித்து வருவதாகவும் தெரிவித்தனர். வேறு ஒருவரும் இல்லாமையால் தாசில்தார் தன் கையிலிருந்த அறிக்கைப் பத்திரத்தை முத்துசாமி ஐயர் கையிலிட்டு வெகு சீக்கிரம் ஸமாசாரங்களைக் கவனிக்கும்படி எச்சரித்தார். நமது சிறுவர் கரையுடைந்த இடமடைந்து, உடைப்பின் அளவையும்,அதைச்சீர்திருத்த வேண்டியதற்கு வேண்டிய பொருள்கள் கிடைக்கூடியதைப் பற்றியும் விவரமாகக் காட்டி அறிக்கையிட்டனர். ஐயரவர்கள் எழுதியதைப்பற்றித் தாசில்தார் நம்பாவிடினும், அவசரமாகக் கவனிக்கவேண்டிய விஷயமானபடியால், அந்த அறிக்கையில் தம் கை நாட்டிட்டுத் தம் கச்சேரிக்கனுப்பினர். பின் அவர் விசாரித்தபொழுது ஐயர் எழுதிய அறிக்கையில் ஸமாசாரங்கள் அணுவளவேனும் பிசகா திருக்கக்கண்டு, தாசில்தார் வியப்படைந்தார். மற்றொரு காலத்திலும் முத்துசாமிநாயக்கர், முத்துசாமிச் சிறுவருடைய ஞாபக சக்தியைக் கண்டு ஆச்சர்யமடைந்ததுண்டு. ஒரு மிராசுதாரனுக்கு இருபதிற்கு மேல்பட்ட கிராமங்களில் நிலங்கள் ஏராளமாக இருந்தன. அந் நிலங்கள், பல தாலூகாக்களில் சிதறிக் கிடந்தன. அந்த மிராசுதாரன் தாசில்தாரரைக்கண்டு தான்கட்டவேண்டிய வரி பாக்கி எவ்வளவு இருக்கும் என்று கேட்டான். தமது குமாஸ்தர்க்களைக் கேட்காது சொல்ல முடியாதென்று சொல்லி, பக்கத்திலிருந்த முத்துசாமிச் சிறுவரைக்கண்டு "உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார். சிறிதும் தயங்காது அவர் ஸரியான பதில் சொன்னார். அதைப்பற்றிப் புத்தகங்களைப் பரிசோதித்துப் பார்த்ததும், "முத்துசாமி சொன்னது சிறிதும் தப்புவதே கிடையாது" என்று கொண்டாடினர்.

## ஆங்கில அக்ஷராப்யாஸம்

முத்துசாமிநாயக்கருக்கு நமது சிறுவரிடம் வரவர அன்புவளர ஆரம்பித்தது. அவர் சிறுவரைத் தமது கச்சேரியில் ஓர் அல்ப உத்தியோகத்தில் அமர்த்தினர். அப்போது திருவாரூரில் சொக்கலிங்கம் என்பவர் ஒரு சிறிய இங்கிலீஷ் பள்ளிக்கூடம் நடத்திவந்தார். காலை வேலையானதும், தினந்தோறும் மத்தியான வேளையில் பதினொரு மணிமுதல் இரண்டுமணிவரை தனக்குக்கிடைத்த ஓய்வு வேளைகளில் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு முத்துசாமிஐயர்அடிக்கடிபோவதுண்டு. அவ்வாறு போகுங் காலங்களில் பிள்ளைகளுக்குக் கற்பித்துக்கொடுக்கும் வழிகளை வேடிக்கை பார்த்துப் பார்த்து அவர் இங்கிலீஷ் அக்ஷரங்களைக் கற்றுக்கொண்டு விட்டார். அவர்க்கு அப்பாஷையைப் படிக்கவேண்டுமென்ற பெரிய அவா உண்டு; பணமில்லாததற்கு யார் என்னசெய்யலாம்? ஆனால் முத்துசாமி நாயக்கர் வீட்டில் ஒரு சிறுவன் இங்கிலீஷ் முதல் பாடம் படித்துக் கொண்டிருந்தான். நாயக்கர் தமது ஓய்வு வேளைகளில் தமதுசிறுவனுக்கும் முத்துசாமிஐயருக்கும் ஆங்கிலபாடம்சொல்லிவைத்துக்கொண்டிருந்தார். பரீக்ஷார்த்தமாக ஒரு நாள் புத்தக முழுமையும் இருவரையும் படிக்கும்படி திட்டம் செய்து பரீக்ஷித்தபோது, பார்ப்பணச் சிறுவன் மாத்திரம் தான் சொல்லியதைக் கவனித்து நடந்ததாகப் பட்டது. அன்றே அவர்க்கு, அவர் தந்தை தூண்டிய விதம், முத்துசாமி ஐயருக்கு நல்ல படிப்பு சொல்லிவைக்க வேண்டுமென்ற பேரெண்ணம் உண்டாகிவிட்டது. மரம் வைத்தவன் தண்ணீர் விடாமலிருப்பானா? நாயக்கரும் பிராஹ்மணச் சிறுவரை நாகைபட்டினம் மிஷன்(பாதிரிகளுடைய) பள்ளிக்கூடத்தில் படிக்க விருப்பமிருக்கிறதா என்று பழம் நழுவிப் பாலில் விழும்படி கேட்டார். கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டால் கொண்டாட்டம் இல்லாமல் போமா? சிறுவரும் சிரித்துக்கொண்டு தலையை யசைத்துத் தன் விருப்பத்தை வெளியிட்டார்.

## பள்ளியில் படித்தல்

நாகைபட்டினத்தில் நாயக்கரது ஸகோதாருடைய ஆதாரவின்கீழ், ஒரு வருஷத்திற்குமேல்படப் பாதிரிப் பள்ளிக்கூடத்தில் முத்துசாமி ஐயர் படித்தார். பிறகு நாயக்கர், ஐயரை, அப்பொழுது தமது படிப்பை முடித்து உபாத்தியாயராகவிருந்த ராஜா ஸர் மாதவராயருக்கு, ஒரு முகாந்தரக் கடிதத்துடன் மதராஸ் ஹைஸ்கூலில் .(இப்

போதைய ராஜாங்கக் கலாசாலையில்) சேரும்படி அனுப்பினார். மாதவராயரின் மேற்பார்வையின் கீழ், ஐயர் படிப்பிலுழைத்து வெகு சிறப்புடன் விளங்கினார். அக்காலம் அந்தப் பள்ளிக்கூடத்திற்குத், தென்னிந்திய படிப்பபிவிருத்தியில் ஊக்கத்துடன் உழைத்து, ஜனங்களுடைய பேரன்பிற்கும் மதிப்பிற்கும் ஆளாகிவிளங்கிய பேடன் பௌவெல் என்பவர் தலைவராக இருந்தார். அவருடைய போதனைக்குட்பட்டுக் கவனத்துடன் விளங்கிய ஐயர் தமது படிப்பின் மிகையால் பள்ளிக்கூடத்துப் பரிசுகள் எல்லாம் பிறரிடம் செல்லாது, தனதேயாகும்படி விளங்கினார். பள்ளிக் கூடத்திலேயே இவர்க்கு "மேதாவி" என்னும் பட்டம் கொடுக்கப்பட்டு வந்தது. ஐயரவர்களுக்கு வான சாஸ்திரத்தில் ஞானமும் விருப்பமும் அதிகம். கணித சாஸ்திரத்தில் பரிசயம் மிகுதி; கோள திரிகோணமிதியில் நல்ல ஞானம்.

பள்ளிக்கூடப் பிள்ளைகளும், உபாத்தியாயர்களும் ஒருவரையொருவரறியாமல் காலங் கடக்கும் இக்காலம் போன்றதன்று அக்காலம். குரு சிஷ்ய ஸம்பந்தங்கள் அக்காலத்தில் பள்ளிக்கு வெளியிலும் இருந்து கொண்டே யிருந்தன. மிஸ்டர் பௌவெல் மனப் பூர்வமாக எல்லாப் பள்ளிப் பிள்ளைகளின் கல்வி யபிவிருத்தியைக் கவனிப்பதல்லாமல், அவர்களது நடவடிக்கைகளையும் கவனித்து, அவர்களுடைய பிரியத்திற்கும் அன்பிற்கும் பாத்திரராயிருந்தார். அவர் முத்துசாமி ஐயருக்குப் பாடம் கொடுத்தானதும், அவருடன் நெடுநேரம் படிப்பு விஷயமாகப் பேசிக்கொண்டிருந்து, வாசாவாகவே அநேக விஷயங்களை உபதேசித்துச் சில நாட்களில் இரவு ஒன்பது மணிவரையும் அவரை நிறுத்தி விடுவர். அதனோடு இராமல், ஐயரைத் தமது வண்டியிலேற்றிக்கொண்டு வந்து, மயிலாப்பூரில் அவரதுவிட்டில் விட்டுப்போவர். அத்தகைய உபாத்யாயர்களுடைய ஆதரவின் கீழ் வந்தவர், ஏகலைவனைக் காட்டினும் சிறப்படைவார் என்பதற்கு ஸந்தேஹம் வேண்டுமா? வரவர பௌவெலார்க்கு ஐயரிடம் அன்பு முதிர்ந்து அவரது விட்டு விஷயங்களைக் கூடக் கவனிக்க ஆரம்பித்தார்.

## படிப்பின் ஏற்றம்

முத்துசாமி ஐயர் ஆழ்ந்து படிக்கும் ஸ்வபாவமுடையவர். ஆகையால் பள்ளியில் பரீக்ஷைகளில் முன்னின்று அநேக வெகுமதிகளைப் பெற்றார். 1854-ம் ௵ கல்விச் சபையார் ஏற்படுத்திய இங்கிலீஷ் வியாசவெகுமதியாகிய ரூ. 500 அவருக்கே அளிக்கப்பட்டது. அவ்வியாசம் "ஜாதிய துர்க்குணங்களும், அவற்றை யொழிக்கும் வழியும்," என்னும் விஷயத்தைப் பற்றியது. அதைப்பார்க்கும்படி நேர்ந்த பரீக்ஷகராகிய கனம் ஜஸ்டிஸ் ஹாலவே என்பவர் 'எல்லாத் தேசத்தாரும் பெருமையடையத் தகுந்த கல்விமான்களுள் முத்துசாமி ஐயரொருவரானார்" எனப் புகழ்ந்தனர். மேலும் "இராஜாங்கத்தில் அவர் எந்த வேலைக்குந் தகுந்தவர்" என்றும் ராஜாங்கக் கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டது. "இச்சிறு தொகை இனி தடையின்றி வரப்போகும் பெருநிதியின் மூலமாகவிருக்கும்" என்று பௌவெலார் அப்பரிசு 500 ரூபாக்களை ஆசீர்வதித்தளித்தார். மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என ஐயரும் தமது குருமொழியைச் சிறிதும் தவறாது, தம் இறுதிநாள்வரை அத்தொகையில் ஒரு பைசாகூட எடுக்காது காப்பாற்றினார்.

## முதல் உத்தியோகங்களும் வக்கீல் பரீக்ஷையும்

முத்துசாமி ஐயருடைய புத்திமிகுதியைக் கண்டு அவரைச் சீமை சென்று இந்தியன் ஸிவில் ஸர்வீஸ் பரிக்ஷைக்குப் படிக்கும்படி மிஸ்டர் பௌவெல் தூண்டினார். ஆனால் அப்பொழுது அவர்க்குக் கல்யாணமாயிருந்தபடியால் அது முடியாதாயிற்று. இதற்குள் சென்னை ஹைஸ்கூலில் படித்து முடிந்ததும் முத்துசாமி ஐயர் அறுபது ரூபா சம்பளத்தில் உபாத்தியாயராக அமைக்கப்பட்டார். பிறகு ஸர் ஹென்ரி மாண்ட்காமரியாரால் தஞ்சாவூர் ஜில்லா கலெக்டராபீஸில் ரிகார்ட் கீபர் வேலையில் அமர்த்தப்பட்டனர். பின், அக்காலத்துக் கல்வி இலாகா தலைவராகிய ஸர் அலக்ஸாண்டர் அர்பத்நட்டார் 1856-ம் ௵ மார்ச்௴ 1௳ அவரைத் தமது இலாகாவில் எடுத்துக்கொண்டு 150 ரூ. சம்பளத்தில் பள்ளிக்கூட டிப்டி இன்ஸ்பெக்டராக்கினார்; இவ்விடத்தில் தமது ஏற்பாடு முறைமையால் நல்ல பெயரெடுத்தார். இந்தச் சமயத்தில் சென்னை கவர்ன்மெண்டார் ப்ளீடர்ஸ் டெஸ்ட் என்னும் வக்கீல் பரீக்ஷை ஏற்படுத்தி, அதில் தேறினவர்களை ராஜாங்க ஸதர் கோர்ட்டிலும், மொபஸில் கோர்ட்டுகளிலும் நியாயவாதிகளாக அப்பியஸிக்கலாமென்று பகிரங்கப்படுத்தினார்கள். அப்பரீக்ஷை, 1856-ம் ௵ முதலில் நடந்தேறிய போது முத்துசாமி ஐயர் அதில் முதலில் தேறினார். அப்பரீக்ஷை இப்போதுபோல் கடிதங்கள்மூலமாய் எழுதிப் பரீக்ஷிக்கப்படவில்லை; கோர்ட்டுகளில் நேராக வாதிப்பதுபோல் வியவஹாரங்கள் சொல்லப்பட்டு, வாதிக்கப்பட்ட விஷயங்களைக் கொண்டு தீர்ப்பு எழுதுவதாக நடைபெற்றது. அக்காலத்துப் பரீக்ஷை வினாவைச் சொல்லிக் கொண்டிருந்த சிரஸ்தாரவர்கள் தடதடவென்று சொன்னதால் கவனிக்க முடியவில்லையென்றும், விஷயங்களைக்கிரஹித்து நியாய விசாரத்தைத் தீர்ப்புசெய்ய இடந்தரவில்லையென்றும், அவரை முத்துசாமி ஐயர் தடுத்தார். பரீக்ஷகராகிய பீசாம்ப் அவர்கள், அவர் சொன்னதைக் கவனித்து, தானும் பக்கத்திலுட்கார்ந்து சொன்ன விஷயங்களை எழுதிப்பார்த்துச் சிரஸ்தாரவர்களை மெதுவாய்ச் சொல்லும்படி உத்தரவிட்டதாகவும், முத்துசாமி ஐயர் எழுதிய தீர்ப்பும் பரீக்ஷகர் எழுதிய தீர்ப்பும் ஒவ்வொரு அம்சங்களிலும் ஒத்திருந்ததாகவும் புகழப்பட்டதுண்டு.

## ஜில்லா முன்சீப்பானது

இப்பரீக்ஷையானதும், முத்துசாமி ஐயர் தரங்கம்பாடி ஜில்லா முனிசீப்பாக நியமிக்கப் பெற்றார். இங்கு இருக்கையில் பீசாம்ப் அவர்கள் நமது முனிசீப் கச்சேரியை, முன்புதெரியப்படுத்தாமலே இருந்தாற்போலிருந்து பரீக்ஷிக்க மிக ஆவலோடு எண்ணங் கொண்டார். அவ்வாறு அவர் வந்ததைக் கேட்டதும், அக்காலத்து முனிசீப்புக்களைப் போலக் கோழை மனங்கொள்ளாது நமது ஐயரவர்கள் நேராக அவரிடம் சென்று நியாயஸ்தலத்தில் அவரை வர விரும்பித் தமது நியாயவிசாரம் சரியாயிருக்கின்றதா என்று பரீக்ஷிக்கும்படி கேட்டுக்கொண்டார். ஹைகோர்ட் ஜட்ஜாகிய பீசாம்ப் அவர்கள், அவர் விருப்பத்துக்கு இணங்கி, முத்துசாமி ஐயர் தம்முடன் வீற்றிருந்து நியாய விசாரம் செய்யுந்தக்க யோக்கியதை உள்ளவர் என்று வெளியிட்டனர்.

## வேலை மாற்றம்

இதற்குள், ஐயர் அவர்கள் இனாம் கமிஷனில் ஒருவராக ஏற்படுத்தப்பட்டனர். பிறகு 1859-ம் ௵ ஜூலை௴ 2௳ தஞ்சை ஜில்லாவில் டிப்டி கலெக்டராக நியமிக்கப்பட்டு 2 தாலுக்காக்களைச்சேர்த்துக் கவனிக்கும்படி ஏற்படுத்தப்பட்டார். அவ்வாறிருக்கையில், வருமான விஷயத்தைப் பற்றியும், கிரிமினல் வியவஹார விஷயத்தைப் பற்றியும் மதியூகம் நிறைந்து விளங்கினார். முத்துசாமி ஐயர் முன், பச்சையப்பன் கலாசாலை ஸ்தாபனத்தைப் பற்றி ஊக்கத்துடன் உழைத்த நியாயவாதியான ஜான் ப்ரூஸ் நார்ட்டன் அவர்கள் ஒருகேஸ் விஷயமாக வாதித்த காலத்து, முத்துசாமி ஐயரது அபார ஞானத்தைக் கண்டு மகிழ்ந்து, சென்னைவந்ததும் "சட்டவியவஹாரஞானத்தில் அபாரவைபவம்பெற்ற புருஷனுடைய சக்தியெல்லாம் ரிவினியூ இலாகாவில் வீணாகக் கழிக்கப்படுகின்ற" தென்று கனம் ஜஸ்டிஸ் ஹாலோவேயிடம் வெளியிட்டனர்.

## ஸப் ஜட்ஜும் போலீஸ் மாஜிஸ்ட்ரேட்டும்

ஏற்கனவே அக்காலம் மங்களூர்கோர்ட்டில் வியவஹார ஒழுக்க முற்றும் உணர்ந்த நியாயாதிபதி, அவசியம் வேண்டியிருந்ததால் முத்துசாமி ஐயர் தென் கன்னடம் ஸப் ஜட்ஜாக 1865-ம் ௵ ஜூலை௴ 9௳ நியமிக்கப்பட்டார். அங்கிருந்து 1868-ம் ௵ ஜூலை௴ சென்னை போலீஸ் மாஜிஸ்டிரேட்டாக நியமிக்கப்பட்டு, சிறிது காலமானதும் அவ்வேலையில் காயம் செய்யப்பட்டனர். ஜஸ்டிஸ் ஹாலோவே அவர்கள் உபதேசித்த மொழிகளை உட்கொண்டு நியாய விஷயமான விசார சாஸ்திரங்களை எல்லாம் அச்சமயம் கற்றனர்; அவ்வாறு செய்வதற்காக மிக்க பிரபலமான வியாக்யானங்களைப் படிப்பதற்காகவே ஜர்மன் பாஷை

யையும் படித்தனர். இவ்வாறல்லாமல் ஒவ்வொரு கோர்ட் தீர்ப்புகளையும் சர்ச்சை செய்து, நியாய சாஸ்திர ஒழுங்கிற்கு மாறுபடாதிருக்கிறதா என்றும் பார்த்துவந்தார். ஹாலோவே அவர்கள் இவ்வாறு செய்துவைத்த அனுபவ ஞானமே தமக்குப் பல காலங்களில் மனதை வேறுபடக்கூடிய சமயத்தில், விஷயப் போக்கில் மயங்காது, நியாயத்தையே நன்குகண்டு தீர்ப்பு செய்யும்படியாக உதவியதென்று அவர் பல முறை வியந்து பேசியிருக்கிறார்.

அவர், மாஜிஸ்ட்ரேட்டாகவிருந்த காலத்தில் விருப்பு வெறுப்பு கவனியாது, வர்ண பேதங்களைக் கருதாது, நியாயத்தை நிர்ப்பயமாக வெளியிடுவார். ஒரு சமயம் ஐரோப்பிய ஹைகோர்ட் ஜட்ஜ் ஒருவர், தமது நிலத்தில் நுழைந்ததற்காக ஒருவனை அடித்ததாகவும், அவ்வாறு அடிபட்டவன் ஷை ஜட்ஜைக் கோர்ட்டில், அடித்த குற்றத்திற்காக ஹாஜர் செய்யும்படியாகக் கேட்டபோது, தமது உடன் உத்யோகஸ்தர்கள் சொல்லியதைக் கவனியாமல் ஷை ஜட்ஜை ஹாஜர் செய்வித்து, 3 ரூபாய் தண்டமிறுக்கும்படிச் செய்தார்.

## நியாயவிலாகா வேலையில் ஏற்றம்

இவ்வேலையிலிருக்கும்போதே முத்துசாமி ஐயர் பி. எல். பரீக்ஷைக்குப் போய் முதல் வகுப்பில் தேறினார். கொஞ்சநாளானதும் ஸ்மால்காஸ் கோர்ட் ஜட்ஜாக நியமிக்கப்பட்டுக் கவர்ன்மெண்டாரது பிரீதிக்குப் பாத்திரரானார். தஞ்சாவூர்ஜில்லா ஜட்ஜ் வேலையை அவருக்குக் கொடுக்க அக்காலத்துக் கவர்னராகிய ஸர் அலக்ஸாண்டர் அர்பத்நட் அவர்கள் எண்ணங்கொண்டாலும், சட்ட உத்தியோகஸ்தர்கள் அபிப்பிராய மாறுபட்டால் அவ்விஷயம் நழுவவிடப்பட்டது. சென்னை கவர்ன்மெண்டார், 1877-௵ டெல்லியில்கூடிய ராஜாங்கக் கூட்டத்திற்கு அவரை வரவேற்றனர்; ராஜப்பிரதிநிதியவர்களால் அவர்க்கு அப்பொழுது ஒரு தங்கப் பதக்கம் ஞாபகச்சின்னமாக அளிக்கப்பட்டது. 1878-௵ அவர்க்கு இந்திய கவர்ன்மெண்டாரால் ஸி. ஐ. ஈ. என்னும் (இந்திய ஸம்ராடநேசப்) பட்டமும் பதக்கமும் அளிக்கப்பட்டன. அக்காலத்துக் கவர்னராகிய விக்டோரியா மஹாராணியவர்களின் உறவினரும் மஹா தயாளுவுமாகிய பக்கிங்ஹாம் பிரபு அவர்கள் ஷை பதக்கத்தை அளிக்கும்பொழுது ஐயரவர்கள் பெருமையைப்பற்றி மிகவும் புகழ்ந்து பேசினர். அதே வருஷம் அவரை ஹைகோர்ட் ஜட்ஜாக நியமித்து, "முத்துசாமி ஐயரை ஹைகோர்ட் நியாய ஸ்தலத்தில் வீற்றிருக்கச் செய்ததில் நான் ஒன்றும் அவர்க்குப் பெருமையாகச் செய்ததல்லவென்று நான் நன்கறிவேன்; அவர் பெருமையே அதற்குக் காரணம். அவரது ஒழுக்கத்தை வழிபட்டுப் பலரும் மேன்மையடைய விரும்புகிறேன்" என்றும் வெளியிட்டனர். ஒருவேளை நாம் ஷை நியாயஸ்தானத்துக்குத் தகுதியுடையவரோ அல்லரோ என்று ஐயர் மனத்தில் பட்டதுண்டு; அவர் முதலில் தீர்ப்பு செய்ய நேர்ந்த வியவஹாரம் அவர் சிறிதும் அறியாத ஐரோப்பிய நடை உடை பாவனைகளைப்பற்றியது. அதில் கவலையுடன் பலமுறை தீர்ப்பு எழுதி கோர்ட்டில் நடுக்கத்துடன் வெளியிட்டபோது, எவரும் வெறுப்படையாதிருந்ததைக்கண்டு மன அமைதி யடைந்தார்.

## சென்னை ஹைகோர்ட் ப்ரதான ஜட்ஜ்

அவர் சென்னை ஸர்வகலாசாலை கான்வோகேஷன் உபந்நியாஸம் செய்தபோது, "நியாய ஸ்தலமானது தெய்வீகம் பெற்ற ஆலயமாகும்; அங்கு வீற்றிருக்கும் நியாயாதிபதிகள் கேவலம் மனிதர்களே யானாலும், உண்மையின் தர்மத்தை நடத்தும் ஸாதனங்களே யாவர். அந்தத் தெய்வீகப் பதவியைப் பெற்றவர் துர் எண்ணங்களாலாவது, துர் நடத்தைகளாலாவது தமது தர்மத்தைத் தடுப்பாரானால் தமது நாட்டிற்கும், தெய்வத்திற்கும் சரியாக நடவாத துரோகிகளே யாவர். உம்முள் எவரேனும் அந்தத் தெய்வீகப் பதவியையடைய நேர்ந்தால் அவ்விடத்திலிருந்து உங்களுடைய அரசனது பெயரை முன்னிட்டு, நீங்கள் செய்யும்தர்மப் பிரபாவம் முழுதும், உமது முன்னோர்களில் ஒருவர் வெளியிட்டவாறு தெய்விகம்பெற்ற சக்தியேயாகும்" என்று நியாய விவகாரத்தைப்பற்றி அவர் சொல்லியது அவர் நடத்தையின் ஒழுங்கையே வெளியிடும். அவர் வெளியிட்ட தீர்ப்புகள் மிகச் சிறந்தனவாகு எங்கும் கொண்டாடப்படுகின்றன. அவர் பதினைந்து வருஷங்களுக்குமேல் ஹைகோர்ட் ஜட்ஜாக விளங்கி, அதுவரையிலும் இந்தியனொருவனும் நியாய இலாகாவில் ஒருநாளும் அடையாப் பதவியாகிய பிரதான ஜட்ஜ் உத்தியோகத்தை 1893௵த்தில் மூன்று மாதகாலம் வகித்திருந்தார். சிறிது நாளானதும் கே. ஸி. ஐ. ஈ என்னும் பட்டம் யாவரும் கொண்டாடும்படி அவர்க்கு அளிக்கப்பட்டது! 1895-ம்௵ திடீரெனத் தேக அசௌக்கியமடைந்து தமது நாட்டாரெவரும் துன்பமுறத் தேகவியோகமானார்.



## கல்வி விஷ்யத்தில் கவனம்

ஜட்ஜாயும், அவர் வித்தியா விஷயங்களையும் கவனித்துவந்தனர். 1872௵ அவர் சென்னை ஸர்வகலாசங்கத்து ஸகாவாகவும், 1877௵ ஷை சங்கத்து ஸிண்டிக் மெம்பராகவும் ஏற்படுத்தப்பட்டு ஸெனட் விவகாரங்களில் கவனத்துடன் உழைத்தனர். அநேக வருஷம் அவர் எம். எல்., பி. எல்., பரீக்ஷகராக விருந்தனர். ஷை சங்கத்து கார்மிகேல் பரிசு ஏற்படுத்த அவரே காரணபூதர். கான்வோகேஷன் உபந்நியாஸத்தைச் செய்த முதல் இந்தியரும் அவர்தான்.

## தேசாசாரத்தில் அன்பு

தேசாசார விஷயங்களில் முத்துசாமி ஐயர் தலையிடவில்லையென்பது பலரது எண்ணம்; அது தவறு. ஆசாரச் சீர்திருத்தம் யாவும் கால ஒழுங்கில் தாமே அமையும் என்பது. அவரது அபிப்பிராயம். பெண் கல்வி அத்தியாவசியம் என்றும், வெளிநாட்டுப் பிரயாணங்களால் தாழ்மை வராதென்றும் அவர். அபிப்பிராயப்பட்டிருக்கிறார்; பிரௌடா விவாகத்தைப்பற்றியும் விதவா விவாகத்தைப்பற்றியும் கண்டிப்பான அபிப்பிராயம் அவர் வெளியிட்டிருக்கிறார்; ஆனால் அவை அனுபவத்தில் கொண்டுவர முடியாதென்ற நோக்கத்தையும் நன்கு வெளிக்காட்டியிருக்கிறார்.

## தமிழ் பாஷாபிமானம்

தமிழிடம் அவர்க்கு அபிமானம் அதிகம். அவரைக் காணவந்த தமிழரொருவர்,

"தந்தை மகற் காற்று முதவி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்".

என்று சொல்லி வியந்ததும், ஐயர் உடனே

"மகன் தந்தைக் காற்று முதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல்லெனும் சொல்"

என்று பதிலுரைத்து மனமிரங்கியதே அவர் தமிழ் ஞானத்தை விளக்கும்.

## அவர் பெருமை

அவர் நடத்தை குற்றமற்றது; ஸ்வபாவம் சாந்தவைபவம்; நோக்கம் உண்மையிலேயே; மனம் கடவுளிடமே; பூஜை செய்யாது உண்டதே கிடையாது. வேதமோதியவரிடம் அவர்க்கு வெகு பக்தி. சாஸ்திர விருத்திக்காக பாடசாலை ஒன்றை ஏற்படுத்தி ஆதரித்து வந்தனர் என்பததற்கத்தாட்சி. அவரைத் தேசாசாரத்தை நழுவவிடாத இந்தியரின் உருவகமெனலாம்.

அவர்க்குச் சங்கீதம், சித்திரம், சிற்பம் இவைகளிடம் ஞானமும் பிரியமும் அதிகம். "அபார உழைப்பும், சமர்த்தஞானமும் சக்தியும் தவழ்ந்து, கேவல விநயமே உருவெடுத்தாற்போல விளங்கி, அடையமுடியாப் பயனையெல்லாம் பெருமையுடனும் முகமனுடனும் அத்யுன்னத பதவியுடனும் பெறக்கூடும் என்பதற்கு இந்த உமது பட்டினத்திலேயே, உமது நாட்டாருள்ளே உயிரும் உடம்புமாக அத்தாக்ஷியிருப்பது நீங்கள் யாவரும் அறிவீர்" என்று 1888-௵ கர்னல் ஹி. யூ. ஹாலட் என்பவர் கான்வோகேஷன் உபந்நியாசத்தில் முத்துசாமி ஐயரைப்பற்றி அல்லாமல் மற்றையாரை நினைத்துப் பேசியிருக்க முடியும்?

"வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்" (திருக்குறள்).

---

சென்னை நிர்வாக ஸபை மெம்பரும், சென்னை ஸர்வகலா சங்கத்து வைஸ் சான்ஸலருமாகிய கனம் ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் அவர்கள், கே.ஸி.எஸ்.ஐ.—**பல அரிய விஷயங்களைப்பற்றி யாவரும் படித்தறியும்படியான தெள்ளிய நடையில் இதில் எழுதப்பெற்றிருக்கின்றது. அதின் (விவேக போதினியின்) நன்மையுண்டாக்கும் தன்மையும் குறைந்த சந்தாவுமே அதைத் தமிழரிடம் தவழ்ந்து அவரது அபிமானத்திற்குப் பாத்திரமாக்குமென நான் நம்புகிறேன்.

# இந்திய மான்மியம்

## GLORY OF INDIA

[ஸ்ரீமான் என். கோடீசுவர ஐயர் அவர்கள், பி. ஏ.]

### விநாயகர் வணக்கம்

மாமதுரைப் பொற்று மரைக்கரைவி நாயகனன்
னுமதுரை யேமிக்க நன்மைதரும்—மாமதுர
வாசகத்தா லிந்தியா மாநாட் டீதன்மகிமை
தாசனுன் பேசவருள் தா.

இராகம்-கௌரிமனோஹரி-ரூபகதாளம்

(இந்தியாவின் ஸ்தானம்)

கத்துங்கடல் சூழும்வைய-கத்தினைமேல் நாட்டார்
கருதியேஐந் தெனவகுத்த-கண்டங்களில் சிரேஷ்ட
முற்றிடும்ஆச் யாவென்னும்பே-ருற்றகண்டம் அதிலே
உள்ளசிபேர் யாதுருக்கி-ஓங்கியதிண் மதிலே
சுற்றியசீ னம்குடக்கில்-துன்னரபித் தானம்
தொல்பார சீகமொடு-சூழ்பருமர் தானம்
சித்தமினிப் புறஉயர்தி-பேத்துமுத லான
தேயங்கட்குத் திலகமெனத்-திகழ்வதிந்த்யா நாடே. (2)

(இந்தியமாதின் அங்கங்கள்)

கூந்தலென மேகமென்றும்-சூலவிமயம் சிரமே
குளிருமிரு புறக்கடலில்-குவிமுகில்கள் கரமே
வேந்தர்பிரதி நிதியுறையும்-மேனிலமா நனமே
மேற்றிசைகீழ்த் திசைமலைகள்-விளங்கு பெருந்தனமே
மாந்துகங்கை யோடுஸிந்து-வளநாடும் உரமே
மத்தியமா காணமென்னு-மாநாடு தரமே
காந்தெழிற்பம் பாய்சென்னை-கால்தொடைவி லாவே
காரிகையிந் த்யாவெனுநம்-கண்மணிக்குத் தானே. (3)

(இந்தியமாதின் அலங்காரம்)

வங்காளப் பட்டுடுத்தி-வளைந்தநெடுந் தரங்க
வாருதிமே கலையிறுக்கி-மன்கோலார்ச் சுரங்க
சிங்காரத் தங்கமதில்-வங்காளக் கடலும்
திகழெழுமா நதிகளுமேல்-திசைஅரபிக் கடலும்
நன்காக அளித்தநவ-ரத்நமணி இழைத்த
நற்பணிபூண் டியர்மன்னர்-பொற்றுறையில் தழைத்த
துங்கார முத்துவடச்-சோபிதத்தால் இருளைத்
துறந்தகில முழுவதிலும்-சிறந்ததிந்த்யா நாடே. (4)

(இந்தியாவின் பொதுச் சிறப்பு)

விண்ணுறைதே வருமுறைய-விரும்புகின்ற நாடு
வேனிலகலாதுதென்றல்-விருந்தளிக்கும் நாடு



கண்ணகல்பூ மாதிருகண்-எனத்ததந்த நாடு
கடல்முரசம் புறமுன்றில்-கர்ச்சனைசெய் நாடு
எண்ணியமுக் கோணசக்தி-எனவிளங்கும் நாடு
இமயமுதல் குமரிவரை-எல்லைகொண்ட நாடு
புண்ணியநா டென்போக-பூமியென்னும் நாடு
பூமகள்வீற் றிருக்குமலர்-போலுமிந்த்யா நாடே. (5)

(இந்தியநாட்டு வளம்)

வானிலகு கற்பகமா-மரமெனத்தெங் குலவும்
வளர்கமுகு தெங்கெனவா-னுலவிளழில் குலவும்
கானிலகு கழைகமுகு-தானெனவே செழிக்கும்
கரும்பெனநெற் கதிர்வயலில்-கனதரளம் கொழிக்கும்
ஊனிலவி உயிர்தரித்தற்-குரியபண்டம் யாவும்
உறுபோகந் தனக்குரிய-உயர்பொருளு மேவும்
ஆனினுயர் தேனுவென-அருந்தியெல்லாம் அளிக்கும்
அன்புருவ மானவிந்தியா-என்பதுநம் நாடே. (6)

எரிக்குநிகர் கொடிய குணத்-தினரிடர்செய் தாலும்
ஈரமக லாதபெரி-யோரிதயம் போலும்
தரிக்கவொண்ணுக் கோடையினில்-தவித்துயிர்கள் நலியும்
ததியினுந்தண் ணீத்தமருத்-தானம்பல பொலியும்
பருத்தமத யானையின்வெண்-மருப்பொடகில் தேக்கும்
பறித்துருட்டி நதிமருதப்-பணையருகிற் சேர்க்கும்
கருத்தமுகில் முழவொலிக்கக்-கண்டுமயில் நடிக்கக்
கானங்குயில் செய்யுமிந்த்யா-வானதுநம் நாடே. (7)

கருங்குவளை மேய்ந்தெருமை-கன்றுள்ளிச் சொரியும்
கனபாலுண் டியர்வாளை-கதலியினிற் பரியும்
பருங்கதலிக் குலைமாவின்-பைங்கனியிற் சாயும்
பணைத்தவம் மாங்கனியும்பல-வின்கனியில் தோயும்
அருங்கொம்பிற் றேனருந்தி-அத்தேனின் அடைக்கொம்
படிகொம்பாய் மரதுளைச்செங்-கனிபந்தாய்ப் படிக்கும்
மருங்கிற்பள்ளிப் பிள்ளைகள்போல்-வானரம்பந் தடிக்கும்
மாவளவிந் த்யாவளம்வர்-ணனையினள வன்றே. (8)

வேறு.

இராகம்-எதுகுலகாம்போதி-சாப்புத்தாளம்

(இந்திய மலைகள்)

மாதரசியுமை யினைத்தன்தவ மாமகளெனப் பெற்றவிமாசல
மால்வரைக்குந் தமிழ்முனியோடுதண் மந்தமாருதம்வாழ் பொதிக்குமிடை
போதரிக்கண் மடந்தையர் கூந்தலைப் போலுமேகமு நாகமும் வாழ்விந்தப்
பொருப்பும்நீல கிரியுமகிழ்வொடு பூவைவண்ணன் உறைதிருவேங்கடப்
பூதரமும் பழமுதிர்சோலையும் பொற்புறும்பழனிக் குலவெற்பும்வான்
புல்லுங் கொல்லிமலையுங் கொடுங்குன்றும் பூவினோடன்று வானையளந்த
சீதரன்றனை மானுங்குற்றாலச்சி லம்பொடின்னும்பல் திக்கயமொத்த
திண்சயிலங்கள் மன்னிச்செறிந்து திகழ்வதிந்தியா வென்னும் நம்நாடே.

# ஸர் ரவீந்த்ரநாத் டாகூர்

## SIR RABINDRA NATH TAGORE

[ஸ்ரீமான் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார் அவர்கள், பி. ஏ., பி. எல்.]



I

மிகச்சிறந்த நம் இந்தியாவில் கவிச்சக்ரவர்த்தியாக விளங்கி, நமது நாட்டின் கீர்த்தியை உலகெங்கும் பரவச்செய்து, எல்லோர்க்கும் அளவிலா ஆனந்தத்தைத் தமது கவிகளின் அமிர்த வர்ஷத்தால் பெய்துவரும் மஹானை யாவரும் அறிவர். அவருடைய மனதின்பெருமையையும், தேசாபிமானத்தையும், அவருடைய காவ்யங்களிலும் நாடகங்களிலும் இசைகளிலும் விளங்கும் சப்தார்த்த ஸௌந்தர்யத்தையும் வெளியிடுவதற்கு எவ்வளவு புத்தகங்கள் எழுதினாலும் முடியாது. இனிவரும் வியாஸங்களில் அவருடைய ஒவ்வொரு புத்தகங்களிலுமுள்ள மர்மங்களையும் அழகுகளையும் எடுத்துரைப்பது என் எண்ணம். இந்த வியாஸத்திலும், பின்வரும் வியாஸங்களிலும் நம்முடைய நாகரீகம் காவ்யம் இவற்றின்பெருமைகளைப்பற்றியும் ரவீந்த்ரருடைய உயர்ந்த குணங்களைப்பற்றியும் காவ்யஸௌந்தர்யங்களைப் பற்றியும் பொதுவாக எழுதப்படும்.

ஒவ்வொரு நாகரீகத்திலும் ஈச்வர ஸங்கல்பத்தினால் ஒவ்வொரு விதமான விசேஷம் இருக்கிறது. ஒவ்வொரு நந்தவனத்திலும் அநேகவிதமான புஷ்பங்கள் நிறைந்திருக்கும் ஸமயத்தில் என் ஒவ்வொரு புஷ்பத்திற்கும் வேறு வேறு அழகும் மணமும் இருக்கவேண்டும்? தியாகய்யர் போன்ற மஹா ஸங்கீதவித்வான்கள் பாடும் ஸமயத்தில் ஒவ்வொரு ராகத்திலும் அஸாதாரணமானவும் புதிதானதுமான லக்ஷணமும், மனதை உருக்கும் சக்தியும் என் பொருந்தியிருக்கவேண்டும்? ஒவ்வொரு நாகரீகமும் தன்னைக்காப்பாற்றிக்கொள்ளவும்தன்னைச் சார்ந்த மஹாஜனங்களுக்கு உணவும்,உடையும், மற்ற நாகரீகாம்சங்களையும் ஸம்பூர்ணமாக அளிக்கத் துரைத்தன சீர்திருத்தம், கைத்தொழில் அபிவிருத்தி, வியவஸாயப் பயிற்சி முதலிய விஷயங்களில் கவனத்தைச் செலுத்தின போதிலும், தன்னுடைய மர்மமான விசேஷ ஸாராம்சங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். ஏனென்றால் ஒவ்வொருநாகரீகத்தினுடைய ஸாரதமமான அம்சங்களில் வேறு இடங்களில் இல்லாத சிறப்பும் சிங்காரமும் இருக்கின்றன. இந்த முக்யாம்சங்களில் ஒரு நாகரீகமானது தன் கௌரவத்தை இழந்து மற்றொன்றைப் பின்பற்றினால் உலகத்தின் அழகும் விசித்ரமும் எவ்வளவு குறைந்து போய்விடும்? ஒவ்வொரு நாகரீகத்தையும், பகவானுக்கு அர்ப்பணம்பண்ணிய அருமையான தெய்வீக புஷ்பமாக நாம் கருதவேண்டும், ஈச்வரனுக்கு ஒரேவிதமான புஷ்பங்களால் அர்ச்சிப்பதைவிடப் பலவிதமான புஷ்பங்களால் அர்ச்சித்தால்தான் மிகவும் சந்தோஷம்.

உலகங்களில் உள்ள முக்யநாகரீகங்களில் க்ரீஸ்தேச நாகரீகம்,இங்க்லாண்டு முதலான மேற்குத் தேசங்களின் நவீன நாகரீகம், உலகத்திற்கு ஒரு திலகம்போல் நீர்வளம் நிலவளம் பொருந்தியிருக்கும் நம்முடைய பாரதவர்ஷத்தின் நாகரீகம், இம்மூன்றும் மிகவும் உயர்ந்தவை. இவைகளில் ஐரோப்பா கண்டத்தின் உயர்ந்த நூதன நாகரீகங்கள் எல்லாம் க்ரீஸ்தேச நாகரீகத்தின் பரிணாமங்கள் என்றே சொல்லலாம். ஷெல்லி என்ற மஹாகவி சொல்லுகிறார்:

> " But Greece and her foundations are
> Built above the tide of war,
> Based on the crystalline sea
> Of thought and eternity.
> Her citizens, imperial spirits,
> Rule the present from the past;
> On all this world of men inherits
> Their seal is set"

(க்ரீஸ்தேசமும் அதன் அடிப்படையான நாகரீகமும் யுத்தம் முதலான வெளிப்படையான அலைகள் அடித்துக்கொண்டு போகா வண்ணம் நிலையாகவும் நிரந்தரமாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஏனென்றால், அந்தநாகரீகமானது சாச்வதமாயிருக்கப்பட்ட மஹாவித்யையாகிற ஸ்படிக மயமான ஆதாரத்தின்மேல் ஸ்தாபிக்கப்பட்டுக் காலம்என்ற சஞ்சலமான கடலின் மட்டத்திற்குமேல் உயர்ந்த உப்பரிகைகளுடன் விளங்கிவருகிறது. க்ரீஸ்தேசத்து ஜனங்கள்புத்தி,ராஜ்யத்தில் சக்ரவர்த்தித்தன்மை பொருந்தி, மண்ணுலகை விட்டு அவற்றையாண்டவர் போய்விட்ட போதிலும், இப்பொழுது விளங்கும் நாகரீகங்களை ஆண்டு வருகின்றது, எல்லா ஜனக்கூட்டங்களும் அடைந்திருக்கும் நாகரீகாம்சங்களி லெல்லாம், க்ரீஸ் தேச நாகரீக முத்ரையானது ஸ்பஷ்டமாக விளங்குகிறது.)

ஆகையால் நாம் முக்யமாக க்ரீஸ் தேச நாகரீகத்தின்ஸாராம்சங்களையும் நம்முடைய தேச நாகரீக ஸாராம்சங்களையும் நன்குணரவேண்டும்.

---

மஹாபாலன்பட்டி, ம-ா-ா-ஸ்ரீ, வித்வான் மு. கதிரேசன் செட்டியாரவர்கள்.- * * விவேக போதினி தக்க பண்டிதர்களாலும் பெரியோர்களாலும் மதிக்கப்பெற்றதென்பதும், உபநிஷதாதிகளைப்பற்றியும், நவீன சாஸ்திரங்களைப்பற்றியும் பல அரிய விஷயங்களைத் தாங்கி வருகின்றதென்பதும் அதன் ஆரம்பகாலத்தில் இரண்டு வருஷ சஞ்சிகைகளைப் படிக்கும்பொழுதே அறிந்துளேன். "விவேக போதினி" எவ்வாற்றானும் சிறந்ததொரு ஸஞ்சிகையென்பதென் கருத்து.





# தமிழரின் போர் முறைமை

## WARFARE AMONG THE TAMILS

[ஸ்ரீமான் ஆர். ரெங்காசாரியார் அவர்கள், எம். ஏ., எல். டி.]

பூர்வீககால முதல் இந்தியாவில் பெரும் புகழுடன் பல்கிவாழ்ந்தவர் இரு பெருங்கூட்டத்தாராவர். அவரை,ஆரியர்,தமிழரெனப் பகுப்பர். வட நாட்டில் ஆரியர் எத்துணைச் சிறப்புடன் விளங்கினரோ, அத்துணைச் சிறப்புடன் தமிழரும் தென்னாட்டில் திகழ்ந்து வந்தனர். வடவாரியர் இந்தியாவைக் கைப்பற்றியாளுவதற்கு முன்பு,தென் தமிழர் வட நாட்டிலும் குடியேறி வெகு காலம் வரை வாழ்ந்து வந்தனரென்பதும், ஆரியரால் போரிற் புறமிட்டுத்தாக்கப்பட்ட பின், தமிழர் தென்னாட்டையே தமது உறைவிடமாகக் கொண்டாரென்பதும் சரித்ரவாசிரியரது கொள்கைகள். இதை யொட்டியே பரிமேலழகரும், 'பழங்குடி தொன்றுதொட்டு வந்தகுடி; தொன்றுதொட்டு வருதல் சேர சோழபாண்டியரென்றாற்போல படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டுவருதல்' என்றார்.

முன்னாள் முதலே தமிழ்க் குடிகள் பலவாற்றானும் பெருமை வாய்ந்தவரென யாவராலும் நன்கு மதிக்கப்பட்டனர். நாகரீகத்திலும், கைத்தொழிலிலும், நூலாராய்ச்சியிலும், போர்த் திறத்திலும், அவர் எவரினும் பிந்தியவரல்லர். தமது காலத்தில் வசித்த சகல ஜாதியாருக்கும் ஒரு படி மேலாகவே பாராட்டப்பட்டனர். முற்காலத்தில், அவர்கள் பெரிய நகரங்களையும், துறைமுகப் பட்டினங்களையும் ஸ்தாபித்து, முடியுடை வேந்தர்களாயும் குறு நில மன்னர்களாயும் நாடுகளை ஆட்சி புரிந்துவந்தனர். அவரது தொன்மையும், மேன்மையும், வள்ளன்மையும், போர்த்திறமையும் அளவிடற்பாலவல்ல. ஈங்கு அவருடைய போர்த்திறத்தைப்பற்றிச் சிறிது விரித்துக் கூறுவோம்.

போர் வெல்வதற்குக் கருவியாக உள்ளவை நாற்படைகள் என நம்முன்னோர் கூறுவர். அவைதாம் தேர்ப்படை, யானைப்

படை, குதிரைப்படை, மறப்படை எனப்
பேர் பெறும். வட நூலார் இவற்றை ரத
கஜதுரகபதாதி என்பர். இவற்றில் தேர்
என்பது தற்காலத்தில் கோவில்களில் நாம்
பார்ப்பதுபோலல்லாமல் இவுளி பூட்டிய
இலேசான இரு சக்கர வண்டியாகும். இவ்
விதத் தேர்கள் இந்தியாவைத் தவிர வேறு
நாடுகளிலும் மக்களாற் செய்யப்பட்டுச்
சண்டையில் உபயோகிக்கப்பட்டுவந்தன
வாகத் தெரிகிறது. உரோமாபுரி வாசிகள்
தங்களது ஏக சக்ராதிபத்யத்தை உலகெங்
கும் நாட்டும்பொருட்டு ஐரோப்பாவின் வட
மேற்குப் பாகங்களைக் கைப்பற்றியபின், தற்
போது ஆங்கிலேயரின் சுதேசமாகவுள்ள
பிரிட்டன் தீவைப் பிடிக்க முயலுகையில்
அத்தீவிலுள்ளோர் தேரின்மேல் நின்று
போர்புரிந்தன ரென்றும், தேர்க்காலில்
நீண்ட கத்திகளைக்கட்டி எதிரிகளின் படை
நடுவே தேரிற் பூட்டிய குதிரைகளை விரை
வாகச் செலுத்திப் பலரை மாய்த்து வந்தன
ரென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. இத்
தேர்ப்படை எல்லாப் பண்டை ஜாதியா
ருள்ளுமிருந்ததென்பது இதனால் வெளியா
கின்றது.

யானைப்படை இந்தியாவுக்கும் ஆபிரிக்கா
வுக்கும் சிறப்பாகவுள்ளது. சந்திரகுப்தன்
காலத்தில் மகத நாடு செழித்து ஓங்கியதற்
குக் காரணம் அவனது நாற்படையே யென்
றும், அவனது யானைப்படை மிகவும் வலி
யுடைத்தென்பதும் அதைத் துணையாகக்
கொண்டு, தன் நாட்டைப் படையெடுத்து
வந்த செலுகஸ் (Selukus) என்ற கிரேக்க
வரசனை அவன் முதுகிட்டோடுமாறு முடுக்
கினனென்பதும், பின்னர் கிரேக்க வரசன்
அவனது நட்புக்காளாகி, தன் பகைவரை
மேற்றிசைக் கண் எதிர்ப்பதற்காக 500
போர் யானைகளைப் பெற்றனனென்பதும்
சரித்திரம் படித்தோர் செவ்வனே யுணர்ந்
தவை. இது போலவே, ஆபிரிக்காவின் வட
பாலிற்கிளம்பிய கார்த்தேஜ் (Carthage)
இராஜாங்கமும் யானைப்படையை மிகுதி
யாக வைத்திருந்தது. இந்தியாவிலும் ஆபிரிக்
காவிலுந்தான் யானைகள் விசேஷம். ஆத
லின், இவ்விரு தேசத்திலுமே அவை
போரில் உபயோகிக்கப்பட்டன. வேறு
தேசங்களில் அவை கிடையா. அதனால்
அத்தேசங்களில் யானைப்படையைப்பற்
றிப் பேச்சே கிடையாது.

குதிரைப் படையும் காலாட்படையும் மற
வரால் ஆக்கப்பட்டனவாகும். 'இவுளி மற
வர்' எனக் குதிரை வீரரை யழைப்பது
வழக்கு. அதுபோலவே காலாட்படையை
மறப்படை யெனவும், வேற்படை யென
வும், வாட்படை யெனவும் நூல்களில் வழங்
குவர். இம்மறவரின் நெஞ்சஞ்சாமையை
யும், வீரச்செயல்களையும் புகழாத பண்
டைத் தமிழ் நூல்களே இல்லையெனலாம்.
இச்சாதியார் முன்னாள் தொட்டுத் தமது
மெய்வலி மனவலி குன்றாது போர்புரிந்து
தமிழ்நாட்டிற்குப் புகழ்விளைத்துள்ளார்கள்.

வட வாரியருடன் போர்புரிந்து கனகவிசயர்
முதலியோரைப் பதினெட்டு நாழிகையில்
முறியடித்து, சேரன் செங்குட்டுவனுக்கு
வெற்றிப் புகழை விளைவித்தவர் இவரே.
நெடுஞ்செழியனுக்காக ஆரியப் படை தந்த
தும் இவரே. சோழன்கரிகாற் பெருவளத்தான்
வச்சிர நாட்டையும், மகத நாட்டையும், அவ
ந்தி நாட்டையும் வென்று, முறையே அந்
நாட்டு மன்னரிடம் முத்துப் பந்தரும், வித்தி
யாமண்டபமும், வாயிற் றோரணமும் பெற்ற
தும் இவர் மூலமாகத்தான். மூவேந்தரெ
னச்சேர்த்து எண்ணப்படுகிற சேரசோழ
பாண்டியர் தாம் ஒவ்வொருகாலத்தில் கூம்பு
கோட்டிமயமுதல் குமரியாறு வரையுள்ள
நாடுகளைக் கையகப்படுத்தி ஆண்டதற்கறி
குறியாகத் தத்தம் கொடிகளாகிய வில்லை
யும் புலியையும் கயலையும் இமயத்திற் பொ
றித்ததும் இம்மறப்படை உதவிகொண்
டன்றோ?

இவர் போருக்குச் செல்லுகையில் தற்
காலத்தார் போலவே அணிவகுத்துச் செல்
லுதல் மரபு. படைகள் மூன்று வகைக
ளாகப் பிரிக்கப்படும். முற்படை முன்னே
முடுகிச் சென்று பகைவரைப் பொரும்.
அது செல்லுகையில் எங்கும் தூசிகிளம்பி
வானை மறைக்கும். அதனால் அச்சேனை
வெள்ளத்தின் எண்ணிக்கையை ஒருவாறு
மதிக்கலாகும். தூசி என்று முற்படை பேர்
கொண்டது துகளெழப் புறப்பட்டுத் தாக்
குவதாற்போலும்! இடைப்படை இடையிற்



செல்லும். முற்படை போரிற் பொருது
வீழ்ந்தோரிடத்தை நிரப்பவும், பொருது
தளர்ந்தோரை இளைப்பாறச் செய்யவும்,
முற்படை வென்ற நாடுகளைக் கைநழுவ
விடாது காப்பாற்றவும் இப்படையோர் உத
வுவரெனலாம். கடைப்படை கூழ்எனப்படும்.
இதுவே அரசனுக்கு மூலபலம். இதில் போ
ரில் கைவந்தவீரர் பலரிருப்பர். ஆயினும்
தூசிப்படையை நோக்கினால் தொகையில்
இப்படை கூழைதான். கைச்சண்டை
செய்து மாற்றார்வலியைத் தொலைக்கும் அந்
நாளில் முற்படையின் தொகை பன்
மடங்கதிகமாக விருக்கவேண்டு மென்பது
சொல்லாதே யமையும்.

இனிப் பகைவர் தம் நாட்டின்மேற் படை
யெடுத்துவரின், அவரைத் தடுப்பதற்கு வழி
களென்ன விருந்தன வென்பதை ஆராய்
வோம். தமது நாட்டின் நிலைக்குந் தகுதிக்கு
மேற்ப அரண்களை அமைத்து, அரசர்கள்
பகையை எதிர்த்தனர். அவ்வரண்கள்
நீரரண், நிலவரண், காட்டரண், மலையரண்
என் நான்குவகைகளாக அமைந்திருந்தன.
இவையனைத்தும் ஒருங்கே ஓரிடம் காணப்
படினும் படலாம். அன்றி யாதேனும்
ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவை
காணப்படினும் படலாம். துறைமுகப் பட்
டினத்திற்குக் கடலே நீரரண். உண்ணாட்டு
நகர்க்கு அகழ்தான் நீரரண். கடற்றுறைப்
பட்டினங்களையும் சேர்த்தாண்டுவந்த முடி
மன்னர்கள் கப்பற்படை யமைத்துக்கொ
ண்டு பிற நாடுகளைக் கைப்பற்றியதாகவும்
பின்வரும் மேற்கோள்களால் வெளியாகின்
றது.

> "கடற்கடம் பெறிந்த கடும்போர் வார்த்தையும்"
> (சிலப்பதிகாரம்)

> "களியிரு முந்நீர் நாவா யோட்டி
> வளிதொழி லாண்ட வுரவோன் மருக"
> (புறநானூறு)

காட்டரண். சோழர் தலைநகராகிய உறை
யூரும், வேங்கைமார்பனது திருக்கானப்
பேரெயிலும் சிறந்த காட்டரணைப் பெற்
றிராநின்றன. நகர்ப்புறமெங்கும் முட்காடு
அடர்த்தியாய் வளர்க்கப்பட்டு வந்தமையின்
இதுபோன்ற நகர்களைப் பிடிப்பதற்கு முக்
கியமாய்க் காட்டுவழிகளைக் கைக்கொள்ள
வேண்டியிருந்தது. இம்முயற்சியில் பகைவ
ரது திறனும், ஆண்மையும் பெரும்பாலும்
பயன்பெறு தொழியும். தன்னிலத் துறு
குறு முயல் தந்தியின் வலிதன்றோ?

மலையரண். பாரியது பறம்பு, எழினியது
குதிரைமலை, வல்விலோரியின் கொல்லிமலை,
மலையமான் திருமுடிக்காரியின் முள்ளூர்மலை
முதலியன பெரிய மலையரணை யுடையவை.
இவ்வரண் பகைவரால் முடுக்கப்பட்ட காலத்
தில் அரசர்க்குப் புகலிடமாக வுள்ளது.
நீண்ட முற்றுகையைஎளிதில் ஏற்கவல்லது.
மலைவளங்களோடு கூடியதனால் தீஞ்சுளைப்
பலவின் பழமும், கொழுங் கொடி வள்ளிக்
கிழங்கும், சிற்றிலை வெதிரின் நெல்லும்,
தீஞ்சுவைத் தேனும் மலிந்து கிடக்கும்.
இவையே மலையரண் காக்கும் மாண்புடை
யார்க்கு மேதக்க உணவாகும். வேள் பாரி
போன்ற சில குறுநில மன்னர்கள் குருவி
களை வளர்த்து, நெற்கதிர்களைக் கொத்தி
வரும்படி பயிற்றி, அவற்றால் மலையரண்
காப்போரை அருத்தி வந்தாரெனவும் கூறு
வர்.

> "உரைசால்வண் புகழ்ப் பாரி பறம்பி
> னிரைபறைக் குரீஇயினங் காலைப் போகி
> முடங்குபுறச் செந்நெல் தரீஇய ரோராங்கு
> இரைதேர் கொட்பின வாகிப் பொழுதுபடப்
> படர்கொண் மாலைப் படர்தந் தாங்கு"

என அகநானூற்றில் வருவதைக் காண்க.

நிலவரண். இது மருதநில நகர்களைக் காக்
கும் புறமதில்களையும் ஆழ்ந்த அகழிகளையு
முடைய கோட்டையைக் குறிக்கும். இவ்
வரணை முற்றியோரைத் தடுப்பதற்குப் பல
பொறிகளை பின்னாளில் மதில்களில் அமைத்
தாரென சிந்தாமணி முதலிய நூல்களால்
தெரிகின்றது. கோட்டை பிடிபட்டால் தப்பி
யோடி யுய்வதற்கு மயிற்பொறி போன்ற
விமானங்களைப் பண்ணினார்கள். அரசன்
தப்பி யோடுவது அவன் புகழுக்கிழுக்காத
லின், அவன் ஒருபோதும் தப்பியோடான்.
தான் சாவினும் தன் குலத்தொரு மகன்
இருந்தால் தன் குலத்தாழ்வு பின்னொரு
காலம் அம்மகனால் நீக்கப்பெறு மென்று
நினைத்து, பால் மணங்கமழும் சிறுவனிருப்
பின் அவனையாவது, அல்லது கருவுற்றிருந்த
மனைவியிருப்பின் அவளையாவது எந்திரப்

பொறிமேலேற்றிப் புறம்பேபோக்கித்தான் பகையைப் பொருது மனமொப்பி மாய்வன். இவ்வழக்கம் நம் நாட்டில் இராஜபுத்திரர்க்குள் சிறிது காலமுன்வரை நடைபெற்று வந்ததை யர்வருமறிவர்.

போர்க்குக் காரணங்கள்.முற்காலத்தில் முடிவேந்தர்க்குப் போர் விளைக்கப் பல காரணங்கள் ஏற்பட்டன. அவற்றுள் முதன்மையாக அவரது படைவலியையும், தோளின் தினவையும்,மனவாசையையும் செப்பலாம். மெலியோர்மேற் சென்று அவர் நாட்டைக் கவர்ந்து கொள்வது அரசருடைய இயற்கைத் தீக்குணம்: பாணர் புகழ்ச்சிக்கிலக்காய் நாடெங்கும் தமது வீரச்செயல்கள் பறையறையப் படவேண்டுமென்பதே அவரது முக்கிய நோக்கம். இவ்வாறு ஒருவரது புகழை மற்றோரசர் அவைக்களத்தில் எடுத்தியம்பினால், தமது வீரத்திற்கு இழுக்குவந்ததாகப் பாவித்து அவ்வரசர் படைகூட்டிப் போருக்கெழுவர். இங்ஙனமன்றி, மேன்மையாகப் பாராட்டிப்பரிசளிக்கப்பெற்ற பாணர்கள் அப்பார்த்திபனைமதியாது மானபங்கஞ்செய்து தம்மை என்றும் ஆதரிக்கும் பிரபுவையே போற்றுவர். இதனால் இருவேந்தர்க்கும் போர்நிகழ்தலுமுண்டு. சில சமயங்களில்

"வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅ
திடஞ்சிறி தென்னுமூக்கந் துரப்ப"

கடந்தடு தானையொடு போர் விளைப்பர் சில அடல் வேந்தர்கள்.

போர் தொடங்குவதன் முன்னர் பகைவர் நாட்டிலுள்ள

"ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணி யுடையீரும் பேணித்
தென் புல வாழ்நர்க்கருங் கடனிறுக்கும்
பொன் போற் புதல்வர்ப் பெறாஅதீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மினென"

பறை சாற்றுவர். இதுவே தருமயுத்தம். இதற்கு விரோதமாகத் தமிழரசர் ஒருபோதும் நடவார்.

இதுபோலவே சண்டையில் புண்பட்டோரையும், முதுகிட்டோரையும், படையிலாதோரையும், பதுங்கி யொளிந்தோரையும், சரண் புகுந்தோரையும் வருத்துவது விரரது செயலன்றென அவ்வரசர் கொள்கையாதலின், அன்னோரை மறந்தும் அவர் வருத்தார். போர் மூண்டதும் இருதிறத்தாரும் ஒற்றர்களை ஏவி, வழி துருவிப் பூசலை விளைத்து ஆநிரை கவர்வர். அவ்வாறு செய்யும்போதும்,அதைப் பகைவர் மீட்கும்போதும், பகைவர் நாட்டின்மேற் படை கொண்டு செல்லும்போதும், நகரின் மதிலை முற்றும்போதும், அதைக் காக்கும்போதும், இவ்வாறாக இருதிறத்தார்க்கும் பெரும்போர் நிகழும்போதும், வெற்றியை யாரேனுமொருவர் பெறும்போதும், வெவ்வேறு மலர்மாலைகளை அவ்வத் தொழிலுக்கு அறிகுறியாக அரசர்களும், அவரது வீரர்களும் அணிந்துகொள்வதுண்டு.

இருபடைகளும் மகா வீராவேசத்துடன் போர் புரியும். வீரர்கள் முன்னிட்ட காலைப் பின்னிடார். வெட்டுண்டிறந்து வீரசுவர்க்கம் புகுவரேயன்றிப் போர்க்களத்திற் பின்வாங்கார். புலவர் வரைந்துள்ள போர்க்களக் காட்சிகளெல்லாம் அப்பெரு மக்கள் கண்கூடாகக்கண்டெழுதியவையாகும். தற்போது நடக்கும் அகோர யுத்தத்தை நாளும்கேட்கும் நமக்கு அஞ்சாமையும், வீரமும், யுத்தத்திற் சுவையும், தறுகணாண்மையும் படைத்துள்ள தமிழரின் போர்க்களச்சிறப்பு ஒரு வியப்பாகாது. போர்முடிவில் வெற்றிகொண்டவரசர் களவேள்வி யெர்ன்று கொற்றவைக்கு இயற்றுவித்துக் கொள்ளைகொண்ட பொற் குவியலைப் புலவோர்க்கும், பாணர்க்கும், வீரர்க்கும், இறந்து பட்டோரது இல்லத்தார்க்கும் பகிர்ந்து கொடுத்துத் தானும் ஒரு பகுதிகொண்டு, தன்னாட்டில் இரண்டொரு வருஷம் இறை தவிர்த்திட்டு, நாட்டாரனைவரு மின்புறக்கண்டு, தாமும் களிப்புடன் வாழ்வர்.

---

சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் சரித்திர போதகரான ம-ா-ா-ஸ்ரீ **T. S.** சுப்பிரமணிய ஐயர் அவர்கள், எம். ஏ., எல். டி.,— * * தற்காலம் நடைபெறும் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகைகளுள் மிக உயர்ந்ததும், மிகக் குறைந்த சந்தாவையுடையதும், வெகு செவ்வனே நடைபெறுவதும் உமது பத்திரிகையேயாகும்.



## ஏரோபிளேன் என்னும் ஆகாய விமானம்

## THE AEROPLANE

[ஸ்ரீமான் என். ஆர். கேதாரி ராவ் அவர்கள் பீ. ஏ. (ஆனர்ஸ்.)]

நாம் இங்கிருந்து ஒரு நாட்டுக்குக் கடல் வழியாகப் போவதென்றால் புகைக்கப்பலில் போகிறோம். ஓரூரிலிருந்து மற்றோரூருக்குப் போவதென்றால் புகைவண்டியில் போகிறோம். அதேமாதிரியாக, ஒரு தேசத்திலிருந்து மற்றோர் தேசத்துக்குப் போக வேண்டுமானால், அதிசீக்கிரத்தில் நம்மைக் கொண்டுபோய் விடக்கூடியது ஏரோபிளேன் என்ற ஆகாய விமானமே!

"இது என்ன அதிசயமாயிருக்கிறதே! ஆகாசத்திலாவது, கப்பலாவது, போவதாவது ஆச்சரியமாயிருக்கிறதே! ராமாயணத்திலும், பாரதத்திலும், மற்றுமுள்ள இதிஹாஸ புராணங்களில் இந்திர விமானம் என்று கேள்விப்பட்டிருக்கிறோமே, அது தானா இது?" என்று இவைபோலப் பலவற்றை நாம் யோசிக்கலாம். ஆதலின் இதில் என்ன மர்மம் இருக்கிறது என்பதைச்சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

இயற்கையில் நாம் ஆகாய மார்க்கத்தில் பறந்து போவதற்குச் சக்தியற்றவர்களாயினும், பலவிதப் பறவைகள் பறந்து வருவதைப் பார்க்கிறோமல்லவா? பறவைகளும் பளுவுள்ள ஜந்துக்களன்றோ? காற்றில் அவைகள் வெகு சுலபமாகச் சஞ்சரிக்கும் வகையை ஊன்றிப்பார்த்து, அதைப் போலவே நாமும் இறக்கை முதலிய அவயவங்களை வைத்துக்கொண்டு காற்று மூலமாய்ப் பறக்க எண்ணினால் அது ஸாத்தியமான காரியமா அல்லவா என்பதை யாராவது யோசித்திருக்கிறீர்களா?

பல நூற்றாண்டுகளாக அப்படிச் செய்வது அசாத்தியமென்றே நினைத்திருந்தார்கள். ஆயினும் புத்தி கூர்மையுள்ள சிலர் அமெரிக்கா கண்டத்தில் இதே விஷயத்தில் தங்கள் பூர்ண கவனத்தையும் செலுத்தி வந்தார்கள். அதில் முக்கியமானவர் ப்ரோபெஸர் ல்யாங்க்லி (Professor Langley) பல பக்ஷிகளை நுண்ணறிவுடன் பரிசோதித்து இவர் பெரிதாகவும், இலேசாகவும் இருக்கின்ற இரண்டு இறக்கைகளைச் செய்வித்தால் சுலபமாய் ஆகாய வழியே பறக்கலாம் என்று நன்கு அறிந்தார். உடனே அப்படிச்செய்ய முயன்றார்.

'சொல்வதிலும் செய்வதரிது' என்பது நமக்குத் தெரிந்த பழமொழியல்லவா? இவர் காரியத்தை ஆரம்பித்தவுடனே இவருக்கு அனேக கஷ்டங்கள் நேரிட்டன. ஆயினும் பல வருஷங்களாக யோசித்து ஏரோட்ரோம் (Aerodrome) என்ற இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். பக்ஷிகள் வெகு வேகமாய்க் காற்றில் சஞ்சரிப்பதால்தான் அவைகளின் பளு குறைந்துவிடுகிறது என்றும், பறக்கும்போது இறக்கைகளை அகலவிரித்துக் காற்றை நன்றாய் அடிக்கும்படி செய்வது இரண்டாவது உபாயம் என்றும் மனதில் வைத்துக்கொண்டு அதிக ஆவலுடன் தன் மனோபீஷ்டத்தை நிறைவேற்ற ஆரம்பித்தார். ஆறுகளிலும், குளங்களிலும் சிறுவர்கள் ஓட்டின் சல்லிகளை வேகமாயும் நேராயும் விட்டெறிந்தால் வெகுதூரம்,வரையிலும் அச்செல்லிகள் தண்ணீரின்மேல் மிதந்துகொண்டு போகின்றனவல்லவா? இதை நன்றாய் ஆராய்ந்து, இப்படியே மூன்று வருஷகாலம் வரையில் கஷ்டப்பட்டுப் பிறகு தன் இயந்திரத்தை ஒருவாறு செய்து முடித்தார்.

வாஷிங்க்டன் (Washington) பட்டணத்துக்குச் சமீபத்தில் பொடாமக் (Potomac) நதியின் கரையில் இவர் முதல் முதலாகத் தன் ஏரோட்ரோமில் பறந்து காட்ட ஆரம்பித்தனர். இது 1893-ம் வருஷம் நடந்தது; இந்தக் காட்சியைப் பார்ப்பதற்காக இவர் சிநேகிதர் பலபேர் வந்திருந்தார்கள். அன்றையதினம் (மே மாதம் 6-ம் தேதி) சாயங்காலம், காற்று பலமாய் வீச அதின் எதிர்முகமாய் நின்று, சற்றுத் தூரம் தரையில் ஓடிப் பின் ஆகாயத்தில் கிளம்பினார். ஒவ்வொரு ஸெகண்டும் எங்கே கீழே விழுந்து விடுகிறோமோ என்று சிந்தையாயிருந்தும், வெகு உல்லாஸமாய்ப் பாடிக்கொண்டு பறக்கும் பக்ஷிகளைப்போல் தன் இயந்திரமும் 60-ஸெகண்டுவரையில் உயரக்கிளம்பிக்

கொண்டே இருந்தது. அன்றைக்கு அவர் மனத்திலிருந்த சந்தோஷத்தை வார்த்தைகளால் சொல்லவும் ஆகுமோ? மேலும் 30 ஸெகண்டு வரையில் ஒரு அபாயமுமின்றிப் பறந்து, பக்ஷிகள் மரத்தில் எப்படி மெள்ளமெள்ள வந்து உட்காருமோ, அதுபோலத் தன் இயந்திரம் சாந்தமாய்க் கீழ் இறங்கியது!

இதைத் தவிர மெக்ஸிம் (Maxim) என்பவரும் அவருடைய புத்தியை உபயோகித்து வேறோர் இயந்திரத்தைச் செய்தார். இவையன்றியும் பர்லினில் (Berlin) லீலேந்தால் (Lilienthal) என்பவரும், ஆஸ்டிரேலியாவில் ஹார்கிரேவ் (Hargrave) என்பவரும் சில அபூர்வமான இயந்திரங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இவைகளில் முக்கியமான சங்கதி என்னவெனில் மஸ்லினால் (Muslin) இலேசாய் பன்னிரண்டு அடி முதல் பதினான்கு அடி வரையில் நீளமுள்ள இரண்டு இறக்கைகளைச் செய்து, மத்தியில் புகைவண்டியிலிருப்பதுபோல் நீராவியை உண்டாக்கி, அதன் சக்தியால் இயந்திரத்தை ஓட்டுகிறதேயாம். கீழே விழாமலிருப்பதற்கு பக்ஷியைப்போல தலையை இடப்புறமும் வலப்புறமும் மாறி மாறி அசைத்துக் கொள்ளுவதேயாம். சுக்கான் (Rudder) ஒன்றை அதில் வைத்து நமக்கு எந்தப்பக்கம் போக இஷ்டமுண்டோ அந்தப்பக்கம் திருப்பினால் அவ்வழியே இயந்திரமும் செல்லும்.

இப்படிச் செய்வதில் ஸாதாரணமாய் முந்நூறு அல்லது நானூறு கஜம் வரையில் போகலாம். வெகு சமர்த்தராயிருந்தால் ல்யாங்க்லியைப்போல் ஒன்றரை மைல் தூரம் பறக்கலாம்.

ஆயினும் மணிக்கணக்காக ஆகாசத்திலிருப்பதற்கும், பலமைல் தூரம் ஆகாச மார்க்கமே பிரயாணம் செய்வதற்கும் இவை ஏற்ற சாதனங்கள் அன்றே என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். அந்த ஆக்ஷேபமும் சரியானதே. இந்த ஆக்ஷேபத்தை எப்படி ஸமாதானம் செய்வது என்று இனிபார்ப்போம்.

ஏரோட்ரோமில் இரண்டு இறக்கைகளிருந்தனவென்று சொன்னோமல்லவா? அதைப்பார்க்கிலும் மீன்களைப்போலப் பின் பக்கத்திற் அந்த இறக்கைகளை வைத்தால் நல்லது என்று சிலர் யோசித்தார்கள். இறக்கைகள் அடைக்கும் காற்றைவிட, இலேசான இரண்டு தகடுகளை ஒன்றுக்கு மேல் ஒன்றாய் வைத்தால் அவைகளின் இடைவழியே அடிக்கும் காற்று ஜாஸ்தி சக்தியைத் தரும் என்றார் சிலர். நீராவி யந்திரத்தைக் கீழேவைத்து சுக்கானைப் பின்புறத்து வைத்தால் இன்னும் நல்லது என்றார் ஒரு சாரார்.

இவை போன்ற பல பெரிய அபிப்பிராயங்களை யனுசரித்து ஏரோபிளேன் என்ற ஆகாயக் கப்பலை இப்போது வெகு ஸகஜமாய்க் கட்டுகிறார்கள். இந்த ஏரோபிளேனில் இரண்டு தினுசு உண்டு; ஒரே தகடு இருந்தால் அதற்கு மானோபிளேன் (Monoplane) என்று பெயர்; இரண்டு தகடு இருந்தால் பைபிளேன் (Biplane) என்று பெயர்.

இந்த ஏரோபிளேனைப்பற்றிச் சிலர் "வேலையற்ற மானிடர் வீண்போக்காகச் செய்யும் வியர்த்த விஷயமே தவிர வேறன்று" என்று சொல்லவும் கூடும். "இதனால் பொது ஜனங்களுக்கு நன்மை என்ன? நம்முடைய சுகத்தை இதனால் அதிகரிக்கலாமோ?" என்பர். ஆதலின் ஏரோபிளேனின் பிரயோஜனம் என்னவென்று சற்றே விசாரிப்போம்.

ஸாதாரணமாய் ஓர் ஊர்க்காட்சி பார்ப்பதற்கு உயர்ந்த கோபுரத்தினின்றும், மலையுச்சியினின்றும் கீழே நோக்குகிறோமல்லவா? அப்படியிருக்க, ஆயிரமடி உயரத்தில் நின்றுகொண்டு, கீழிருக்கும் பட்டணங்களென்ன, மைதானங்களென்ன, ஆறுகள், மலைகளென்ன இவைபோன்றவைகளைப் பார்ப்பது இன்னும் பதின்மடங்கான ஸந்தோஷத்தைத் தருமல்லவா? எங்கும் பரவி ஒரே நீலமாயிருக்கும் சமுத்திரத்தை நாம் கரையினின்று பார்த்திருக்கிறோம். அச்சமுத்திரத்தை நடு வானில் நின்று கீழே பார்த்தால் எவ்வளவு மனத்திருப்தியைத் தரும்?

இப்பொது புகைக்கப்பலின் வழியாய் இங்கிலாந்திலிருந்து ஒரு கடிதம் வருவதென்றால் 15 நாள் செல்லும். இங்கு



வர்ணிக்கும் ஆகாய விமானம் சரியாய் இருந்தால், பதினைந்து மணியில் இங்கிலாந்திலிருந்து கடிதங்களை இங்கே கொண்டுவந்து விடலாம். நமக்கு வெகு தூரத்திலிருக்கும் தேசங்களிலிருந்து ஒரே நாளில் கடிதங்கள் வந்து சேருவதென்றால் அது ஒரு பெரும் சாதகம் அன்றோ? இந்தப் பூலோகத்தைச் சுற்றி வருவதென்றால் ஒருவாரத்துக்குள்ளாக பிரதக்ஷணம் செய்யலாம். இதைவிட ஆச்சிரியமானதும் வேறுண்டோ?

ஆயினும், ஏரோபிளேனின் உபயோகங்கள் யுத்த காலத்தில்தான் நன்றாய்த் தெரிய வருகின்றன. போர் முனையில், சத்துருவின் சைனியம் எங்கே இருக்கிறது என்று கண்டு



பிடிப்பது வெகு பிரயாசமானது. அடர்ந்த காடுகளிலும், புதர்களிலும், ஒளிந்துகொண்டு அஜாக்கிரதையாயிருக்கும் சமயத்திலும் இராக்காலங்களிலும் மேல்விழுந்து நாசம் செய்வது வழக்கம். இன்னும், சில கோட்டைகளைத் தாண்டுவது அஸாத்யமானதாயிருக்கும். டெலேஸ்கோப் என்னும் (Telescope) தூரதிருஷ்டிக் கண்ணாடியை வைத்துக் கொண்டாலும் ஏழு அல்லது எட்டு மைலுக்கப்பால் நடக்கும் சமாசாரங்களை அறிவது அரிது. ஆதலால் சத்துரு சைனியம் இவ்வளவு பலமுள்ளது, இன்ன பாகங்கள் இந்த இடங்களில் இருக்கின்றன என்ற விஷயம் நன்றாயறிவதற்கு ஏரோபிளேனைப்போல் நல்ல உபாயம் வேறொன்றுமில்லை.

அதுதவிர, நம்முடைய சிப்பாய்களை சத்துருக்கள் பிடித்துக் கைதி செய்துவிட்டால், வேறெவர்க்கும் தெரியாமல் அவர்கள் இருப்பிடம் முதலியவைகளைக் கவனித்து அவர்களுக்கு வேண்டியவற்றைக் கவனிக்க ஒரே உபாயம் உள்ளது: அது என்னவென்றால் ஏரோபிளேன்தான். அதின் மூலமாய் அவர்களுக்கு வேண்டியவளவு சாப்பாடும், தண்ணீரும், வஸ்திரம் முதலியவைகளையும் இராக்காலங்களில் ஆகாய மார்க்கமாய்க் கொண்டு வந்து உதவலாம். உதாரணமாக இப்போது நடக்கும் ஐரோப்பிய யுத்தத்தில் மெஸொபடோமியாவில் கைதியான டௌன்ஸெண்டு என்ற தளகர்த்தருக்கும் அவர் கையிலிருந்த சைனியங்களுக்கும் சாப்பாடு முதலியவை ஏரோபிளேன் வழியாகத்தான் அனுப்பப்பட்டன.

மற்றும் சத்துருவின் பட்டணங்களை நன்றாய்ச் சோதித்து அவற்றின் மர்மங்களை நன்கறிந்து கொள்ளலாம்.

ஆதலால் யுத்தம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, நமக்குச் சந்தோஷம் உபயோகம் முதலியவைகளை யளிக்கும் இயந்திரங்களில் ஏரோபிளேன் என்பது ஒன்று என்பதற்கையமேயில்லை. இதனால்தான், பல தேசங்களிலும் பல புத்திமான்கள் தங்கள் வாழ்நாள் முழுவதையும் கழித்து, பலவித கஷ்ட நிஷ்டூரங்களையும் அனுபவித்திருக்கிறார்கள். யோசிக்குங்கால், புத்திமான்கள் பலர், அநேக வருஷகாலம் ஆலோசித்துக் கண்டுபிடிப்பவைகைகளினால்தான் இப்பூவுலகம் இவ்வளவு மேன்மை யடைந்திருக்கிறது.

---

ஹைகோர்ட் ஜட்ஜ் கனம் டி.வி. சேஷகிரி ஐயர் அவர்கள்.— * * (விவேக போதினி) பத்திரிகை நல்ல தமிழில் எளிய நடையில் எழுதப்படுகிறது.

## முந்திய தற்கால விவசாய நிலைமை

## AGRICULTURE : PAST AND PRESENT

[ஸ்ரீமான் ஜே. ஆர். ரங்கராஜு அவர்கள்]

இந்தியா தேசத்திலுள்ள ஜனங்கள் முக்கால் பாகத்திற்குமேல் விவசாயத்தையே நம்பினவர்களென்பது யாவருமறிந்த விஷயம். வருஷா வருஷம் இந்தியாவின் ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டே வருவதால் இதுவரையில் தரிசுகளாகவும், ஓடைப் புறம்போக்குகளாகவும், மேய்ச்சல் நிலங்களாகவும் அநாதிப் புறம்போக்குகளாகவும் இருந்த நிலங்களெல்லாம் கைப்பற்று நிலங்களாக மாற்றப்பட்டுத் தற்காலம் பயிரிடப்படுகின்றன. ஆகவே இனி புது நிலங்களைத் திருத்திப் பயிர் செய்யலாமென்ற ஆசைக்கு இடமில்லை. ஜனத்தொகையோ வளர்ந்துகொண்டே போகிறது. புது நிலங்களோ இல்லை. எல்லோரும் உண்ண உணவோ, தேவையிருக்கிறது. என்ன செய்வது உசிதம் என்பது கேள்வி?

புதிதாகத் திருத்திப் பயிர் செய்வதற்கு நிலங்கள் இல்லாதலால் தற்காலம் பயிரிடப்பட்டுவரும் நிலங்களில். தற்காலத்தில் கிடைக்கும் மாசூலைவிட அதிகமாசூல் கிடைக்கும்படிச் செய்வது ஒன்றுதான் யுக்தி. என்ன செய்தால் அதிக லாபம் அடையலாம்? அதிக மாசூல் கிடைக்கச் செய்ய என்னசெய்வது என்பது இரண்டாவது கேள்வி.

விவசாயத்திற்கு இன்றியமையாத சாதனங்கள் மூன்று (1) நிலவளம் (2) நீர்வளம் (3) குடிவளம்.

(1) நிலவளம்:—முற்காலத்தில் தரிசாயிருந்த நிலங்கள் பயிரிடப் பட்டதாலும், அநேக வருஷங்களாய் நிலத்தில் இயற்கையாய்ப் பயிருணவுப் பொருட்கள் சேர்ந்திருந்ததாலும் பயிர்கள் வீர்யமாய் வளர்ந்து நல்ல மாசூல் கொடுத்து வந்தன. வருஷாவருஷம் அதே நிலம் பயிரிடப்பட்டு வந்ததால் நிலவளம் குன்றி, நிலத்திலுள்ள சத்துக்கள் வருஷாவருஷம் குறைந்துகொண்டே வந்தன. ஆகையால்தான் முற்காலத்தில் கிடைத்த மாசூல் தற்காலத்தில் நமக்குக் கிடைப்பதில்லை.

(2) நீர்வளம்:-மேய்ச்சல் நிலங்களெல்லாம் கைப்பற்று நிலங்களாகிவிடவே கால் நடைகள் மேய்வதற்கு இடமில்லாததலால் (காடுகளை ரிசர்வ் செய்வதற்குமுன்) காடுகளில் விட்டு மேய்த்ததாலும் புதிதாய் முளைக்கும் மரங்கள் முதலியவை முளைக்காமல் போனதாலும் காடுகளிலுள்ள மரங்களைக் கவர்ன்மெண்டார் விற்று வெட்டும்படிச் செய்ததாலும் அநேகமாய் காடுகள் நாசமாகி விட்டதால் தற்காலத்தில் போதிய மழை பெய்வதில்லை. மழை பெய்யாமற் போகவே கிணற்றுநீர் அருநீராகியும் ஏரி குளங்களில் போதிய தண்ணீரில்லாமல் போய் விட்டதால், பயிர்களுக்குத் தண்ணீர்த் தட்டும் உண்டாகி விட்டது.

3. குடிவளம்:—தற்காலத்தில் விவசாயம் செய்வது அகௌரவமென்று நினைத்துப் புத்திசாலிகளல்லாத படியாத அறிவீனரிடம் விவசாயத்தை ஒப்புவித்துவிட்டு இருப்பதால் விவசாயம் சரியானவர்களால் நடத்தப்படாதபடி யிருப்பதோடு, உண்மையான உழைப்பாளிகளும் பினாங்கு, சிங்கப்பூர், நேட்டால், கொழும்பு முதலிய அயல் நாடுகளுக்குப் போய்விடுவதால் குடிவளமும் குறைந்து வருகிறதென்பதில் சந்தேகமில்லை. குடிகளும் வயிற்றுக்குப் போதிய சாப்பாடில்லாததால் முன்போல் வேலை செய்ய முடிவதில்லை.

இக்குறைகளை நிவர்த்திக்கும் பொருட்டுச் சென்ற சில வருஷங்களாக நமது காருண்ய கவர்ன்மெண்டார் விவசாய டிபார்ட்மெண்ட் ஒன்று ஏற்படுத்தி வேலை செய்து வருகிறார்கள். நமது ராஜதானியில் தற்காலத்தில் பத்து விவசாயப் பண்ணைகள் ஏற்படுத்தி, ஜனங்களுக்கு மனதில் பதியும்படி பயிர்கள் செய்து நிரூபித்து வருகிறார்கள். விவசாய சம்மந்தமான சீர்திருத்திய கருவிகளைக் கையாடுவதால் ஏற்படக்கூடிய நன்மைகளையும் நிரூபித்துக் காட்டி வருகிறார்கள். நமது கிருஷிகரும் முன்போல் ஒருகாதால் கேட்டு மறுகாதால் விட்டுவிடாமல் பெரும்பான்மையோர் இதில் உண்மையிருக்கிறதென்று சிந்திக்கவும் ஒவ்வொருவர் கையாடவும் ஆரம்பித்திருக்கிறார்கள். எல்லா நிலங்களுக்கும் பொதுவான விவசாய சீர்திருத்தம் சொல்வது சாத்தியமல்லவாயினும் பின்னால் குறிப்பிடும் சீர்திருத்தங்களைக் கையாடுதல் நலமாகும்.



(1) தற்காலத்தில் நாம் உபயோகிக்கும் நாட்டுக் கலப்பையைவிட, ஆழமாய் உழக்கூடியதும், மண்ணைப் புரட்டித் தள்ளக் கூடியதுமான சீர்திருத்திய நாட்டுக் கலப்பையை உபயோகித்தல்.

(2) சால்விதைக் கலப்பையால் விதைகளைப் போடல்.

(3) ஒற்றை நாற்று நடவு செய்தல்.

(4) விதை தெரிந்தெடுத்தல்.

(5) பசுந்தாள் பயிர்நிலத்திலேயே உண்டாக்கி அதிலேயே உபயோகப்படுத்தல்.

(6) ஆடு மாடுகளின் மல மூத்திரங்களை அவம் போகாமல் சரியானபடி சேகரித்து மக்கவைத்து உபயோகித்தல். விராட்டி தட்டாமல் சாணத்தை எருவாகவே உபயோகித்தல்.

(7) ஒரு நிலத்தில் ஒரே பயிர் வருஷா வருஷம் இட்டுக்கொண்டிராமல் பயிர் மாற்றல்.

(8) தனக்கிருக்கும் எல்லா நிலங்களிலும் ஒரே தினுசுப் பயிரிட்டுவிட்டு, தண்ணீர்த் தட்டாலாவது, நோய் கொடிகளின் பாதைகளாலாவது அல்லது வேறு எந்தக் காரணத்தினாலாவது அப்பயிர் விளையாவிட்டால் ஜீவிக்க முடியாமல் கஷ்டப்படாதபடி பலவிதமாகப் பயிரிடல்.

(9) கால்நடைகளுக்கு வேண்டிய சோளநாற்றாவது, கினியா புல் முதலியவைகளாவது பயிர்செய்து அவைகளைச் சரியானபடி போஷித்துவரல்.

(10) நமது தேசத்தில் விளைவாகும் பிண்ணாக்கு முதலிய எருப் பொருட்களை நமது தேசத்திலுள்ள நிலங்களுக்கே உபயோகப்படுத்தல்.

மேற்சொன்ன ஒவ்வொரு விஷயங்களைப் பற்றியும் விவரித்து எழுதினால் ஒவ்வொன்றும் தனி வியாசமாகுமாதலால் பொதுவாகச் சொன்னோம். மேற்கண்ட முறைகளைத் தெரிந்து சரியானபடி கையாடிவந்தால கட்டாயமாய் விவசாயம் விருத்தியாகுமென்பதில் சந்தேகமேயில்லை.



## தீபாவளியும் நரக சதுர்த்தசியும்

## DEEPAVALI & NARAKACHATHURTHASI

[ப்ரஹ்மஸ்ரீ பண்டித ஸ்ரீநிவாஸசாஸ்திரி அவர்கள்]



இந்த இரண்டு புண்ய தினங்களுக்கும் பொதுவாக தீபாவளி யென்ற பெயர், நம் பாரத வருஷம் (இந்தியா) முழுவதும் வழங்கி வருகிறது. இந்தப் பண்டிகைகளை ஹிந்து மதத்தைச் சேர்ந்தவர்களில் கொண்டாடாதவரில்லை. ஹிந்துக்கள் பல தினங்களில் அநுஷ்டித்து வருகிற புண்ய காரியங்களுக்குள் இந்தத் தீபாவளிப் பண்டிகை, உபவாஸம் முதலிய தேகப் பிரயாசங்களும், இதை எப்படிச் செய்து முடிப்போமென்ற விசேஷ மனக்கவலையுமில்லாமல், மிக்க ஆவலுடன் எதிர்பார்க்கும் புண்ய கார்யமாயிருக்கின்றது. தீபாவளி என்னும் பெயர், சிவன் விஷ்ணு முதலிய தேவர்களின் ஆலயங்களிலும் கிரகங்களிலும் தீபங்களால் அலங்கரிக்க வேண்டியதுபற்றி வந்தது. தீபாவளி என்பதற்குத் தீபங்களின் வரிசை என்று பொருள். நரக சதுர்த்தசி என்பதற்கு நரகாஸுரன் ஸ்ரீ கிருஷ்ணபகவானால் வதஞ்செய்யப்பட்ட காலமாகிய சதுர்த்தசியின் உஷக்காலத்தில் அப்யங்க ஸ்நானம் செய்வதுபற்றியும், அன்று சாலையில் செய்ய வேண்டியதாய் விதிக்கப்பட்டிருக்கும் யம தர்ப்பணமும், அன்றிரவில் செய்யும் தீப உத்ஸவமும், ஆகாச தீபமும் மனிதர்களுக்கு நரகபயத்தைத் தீர்த்துவிடுமென்பதுபற்றியும் வந்த பெயராகும்.

மேற்சொன்னவைகளில் முதலாவதான தீபாவளிக்குக் காரணமாகச் சொல்லப்பட்டிருக்கும் இதிஹாஸமாவது:—

கிருதயுகத்தில் அஸுரகுலத் தலைவனாகிய ஹிரண்யகசிபுவின் ப்ரபௌத்ரன் மஹாபலி சக்ரவர்த்தியென்று ஒரு புண்ய புருஷரிருந்தார். அவர் அஸுரகுலத்தில் உதித்தவராயினும், விஷ்ணுபக்தியில் சிறந்த மஹாபுருஷர். அவர் காலத்தில், ஜனங்களில் எவருக்கும் ஏழ்மையின்னதென்று தெரியாமலிருக்கும்படி அரசுபுரிந்து வந்தார். ஸகல ஜனங்களும், மிகுந்த ஸம்பத்துடன் தங்களிஷ்ட தெய்வங்களைக் கொண்டாடி நித்யோத்ஸவமாய் ஆனந்தித்திருக்கும்படி நடத்திவந்தார். ஆனபடியால், அவர் ராஜ்ய பரிபாலனம் செய்யும்பொழுது பூமண்டலத்தில் வசிக்கும் ஜனங்களுக்காவது, ஜகந்நாதனை நாராயணனுக்காவது அவரிடத்தில் அப்ரீதியில்லையென்பது மாத்திரமல்ல; அன்பும் மிகுந்தே வந்தது. ஆனால் அவர் தன் குலவழக்கப்படி இந்திரன் முதலிய தேவர்களிடத்தில், அவர்களுக்கு எப்பொழுதுமுள்ள தாயாதி விரோதத்தைப் பாராட்டி அதிகாரம் பெற்ற ஸர்வ தேவர்களையும் அவரவர்கள் அதிகாரத்தை விட்டு விலக்கி ஸர்வ அதிகாரங்களையும் தாமே நிர்வகித்து வந்தார். இந்த ஒரு குற்றத்திற்காகவே ஸகலதேவர்களுங்கூடி ஸ்ரீமந் நாராயணனைச் சரணமடைந்தனர். அப்பொழுது, அவரும்மஹாபக்தசிரோமணியாகிய அந்தப் பலிச்சக்கரவர்த்தியை நிக்ரஹத்தால் வெல்வது நியாய விரோதமாகையால் அநுக்ரஹத்தாலேயே வென்று, சரணமடைந்த தேவர்களையும் அனுக்ரஹிப்பதாய் வாக்களித்துத் தேவர்களை அனுப்பினர். பிறகு தம்மைப் புத்திரனாக அடையவேண்டி நெடுங்காலம் தவம்புரிந்த அதிதியின் கர்ப்பத்தில் கச்யப ப்ரஜாபதியின் புத்திரராய் அவதரித்தார். அப்படி அவதரித்த மூர்த்திக்கு வாமனமூர்த்தியென்று பெயர். வாமனன் என்பதற்குச் சித்திரக்குள்ளன் என்று பொருள். இது அந்த மூர்த்திக்குக் காரணப் பெயருமாகும். இந்திரன் மாதாவாகிய அதிதியின் கர்ப்பத்தில் இந்திரனுக்கு அநுஜராக ஜனித்தமையால் உபேந்திரன் என்ற பெயரும் உண்டு. இவர் சில காலம் ஸித்தாச்ரமம் என்னும் புண்ய பூமியில் பிரம்மசரிய நியமத்தோடு தவம்புரிந்து பிறகு ஒரு சமயம் மஹாபலி சக்கரவர்த்தி ஒரு யாகம் செய்யும் தருணத்தில் சிஷ்ய வேததாரிகளான பல தேவர்களுடன் யாக பூமிக்கு வந்துசேர்ந்தார். அப்பொழுது திவ்ய தேஜஸுடன் விளங்கிய இந்தப் புண்ய மூர்த்தியைக் கண்டு மஹாபலி சக்கரவர்த்தி மனமகிழ்ச்சியுடன் எதிர்கொண்டழைத்து விதிப்படி பூஜைசெய்து "அடியேன் செய்யவேண்



வாமனர் மூன்றடி [illegible]

டிய கைங்கர்யங்களென்ன" என்று கேட்டார். அப்பொழுது வாமனமூர்த்தி, தாம் தபம் செய்வதற்காக தமது கால் அடியால் மூன்றடி பூமி சொந்தமாய்க் கொடுக்கவேண்டுமென்று கேட்டார். அப்படியே கொடுப்பதாக மஹாபலி சக்கரவர்த்தி ஒப்புக்கொண்டார். அப்பொழுது இந்த வாமன மூர்த்தியின் கபடச் செய்கையை யறிந்து தானம் கொடுக்கவொட்டாமல் செய்த தன் குலகுருவாகிய சுக்ராசாரியரின் வார்த்தைகளையும் மீறி, தாம் வாக்களித்தபடி பூமிதானம் செய்துமுடித்தார். உடனே ஸ்ரீவாமனமூர்த்தி தன் வாமனரூபத்தை மாற்றி மூன்று லோகங்களும் நிறைந்த திரிவிக்ரமரூபத்தையெடுத்து ஆச்வயுஜ கிருஷ்ண த்ரயோதசி, சதுர்த்தசி, அமாவாஸ்யை இந்த மூன்று தினங்களிலும் பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் என்னும் மூன்று உலகங்களையும் மூன்று அடியாக அளந்து தம் வசப்படுத்திக் கொண்டார். அப்பொழுது மஹாபலி சக்கரவர்த்தி, புருஷோத்தமரின் மஹிமையைக் கண்டு "இந்தமஹா புருஷரிடம் நம்முடைய ஸகல பாக்யத்தையும் ஒப்புவிக்கும்படியான பாக்யம் கிடைத்ததே" என்று ஆனந்தித்து, துதிக்கும்போது பகவான், 'ஸ்வர்க்கத்திலும் மேலான ஸுகஸ்தானமும் சாச்வதமுமான பாதாள லோகத்தில் சிரஞ்சீவியாக விருந்து அரசுபுரிந்து தம்மையும் பூஜித்துக் கொண்டிருக்கும்படி அநுக்ரஹித்தார். அப்பொழுது இந்த உலகங்களை அளந்த தினங்களில் ஒவ்வொரு வருஷத்திலும் தாம் இந்த பூலோகத்தை வந்து தரிசிக்க வேண்டுமென்றும் அந்தத்தினங்களில்தாம் அரசாட்சி செய்யும் காலத்தில் எவ்வாறு ஜனங்கள் மஹோத்ஸவத்துடனிருந்தார்களோ, அவ்வாறே ஸகல ஜனங்களும் மஹோத்ஸவம் கொண்டாட வேண்டுமென்றும் வரன் கேட்டுக்கொண்டார். பக்தவத்ஸலரான ஸ்ரீ பகவானும் அப்படியே சகல ஜனங்களும் மஹோத்ஸவம் கொண்டாடட்டுமென்றும், அப்படிச் செய்யாதவர்கள் பாபத்துக்காளாவார்களென்றும் வரமளித்தார். ஆகையால், அதுமுதல் இந்தத்தீபாவளி என்பது ஒருபெரிய புண்ய தினமாய் வழங்கிவருவதாய்த் தெரிகிறது.

த்ரயோதசி, சதுர்த்தசி, அமாவாஸ்யை என்ற இந்த மூன்றுதினங்களும் மஹாபலி ராஜ்யமென்று சொல்லப்படுகிறது.

நரக சதுர்த்தசி

துவாபர யுகத்தின் முடிவில் இந்தியாவுக்கு வட மேற்கிலிருந்த பிராக்ஜ்யோதிஷம் என்னும் நகரத்தில் நரகாஸுரனென்று ஓர் அஸுரவீரன் ராஜ்ய பரிபாலனம் செய்து கொண்டிருந்தான். அவன் தன்னுடைய பராக்கிரமத்தால் பூமண்டலத்திலுள்ள அரசர்களையெல்லாம் வென்று, அவர்களிடமிருந்த தனங்களை யபகரித்து மிகுந்த தனவானாக இருந்தது மாத்திரமல்ல; தான் ஆங்காங்கு விஜயத்துக்குச் செல்லும்பொழுது புலப்பட்ட அழகிற் சிறந்த கன்னிகைகளையும் அபகரித்துக்கொண்டுவந்து பதினாறாயிரத்து நூறு கன்னிகைகளையும் சிறையில் வைத்திருந்தான். அப்படிப்பட்ட கொடியவனை வதம் செய்ய வேண்டுமென்ற தேவேந்திரனது வேண்டுகோளிற் கிணங்கி, ஸ்ரீ கிருஷ்ண பகவான் பிராக்ஜோதிஷத்தின்மேல் படையெடுத்துச் சென்று அந்த நரகாஸுரனுடன் போர்புரிந்துகடைசியாய் அவனைச்சக்ராயுதத்தால் வதஞ்செய்தார். அவன் பூமி தேவியின் புத்ரனாகையால், பூமி தேவியின் வேண்டுகோளின்படி, அவனுடைய பிராண வியோக காலத்தில் ஸ்ரீ பகவான், சங்கம், சக்கரம், கதை, பத்மம் இவைகளுடன் சோபிக்கின்ற சதுர் புஜங்களுடன் பீதாம்பர தாரியாய், நீலமேக ச்யாமளராய், கௌஸ்துப ரத்தினமணிந்தவராய், வனமாலா தாரியாய் இன்னும் பலவித விஷ்ணு வைபவங்களுடனும் அவனுக்குத் தரிசனம் கொடுத்தார். அப்பொழுது அவன் பகவானைத் தரிசித்துக் கேட்டுக்கொண்ட வரங்களில், தனது மோக்ஷ காலமாகிய இந்த ஐப்பசி மாதம், கிருஷ்ண பக்ஷம், சதுர்த்தசிகூடிய உஷக் காலத்தில் ஸகல ஜனங்களும் அப்யங்க ஸ்நானஞ்செய்து மஹோத்ஸவம் கொண்டாடவேண்டுமென்று கேட்டுக் கொண்டான். ஸ்ரீ கிருஷ்ண பகவானும், அப்படியே அனுக்ரஹித்து, அந்தக்காலத்தில் தைலத்தில்லக்ஷ்மியும், ஜலத்தில் கங்கையும் வசிக்கட்டுமென்றும் இந்த அப்யங்க ஸ்நானத்தால் ஜனங்களுக்கு லக்ஷ்மிவிருத்தியும், பாப க்ஷயமும் உண்டாகட்டுமென்றும், அப்படிச் செய்யாதவர்களுக்குப் பாபமே சம்பவிக்குமென்றும் அனுக்ரஹித்தார். அது முதல், நரக சதுர்த்தசி என்று வழங்கிவருவதாக ஹரிவம்சம் முதலிய புராணங்களால் தெரியவருகிறது. இந்தத் தினங்களில் செய்ய வேண்டியவைகளாவன, திரயோதசியன்று ராத்திரி, சிவன், விஷ்ணு முதலிய தேவாலயங்களிலும், தங்கள் தங்கள்வீடுகளிலும் தீபங்கள் வைத்து அலங்கரிக்கவேண்டும். தவிர, ஆகாச தீபம்

ஒன்று போடவேண்டும். அதாவது எட்டு திக்குகளிலும் வெளிச்சம் தெரியக்கூடிய பத்மாகாரமான ஒரு கூடு செய்து அதில் தீபம் வைத்து உயர்ந்த ஸ்தம்பத்தின் மேல் வைக்க வேண்டும். இதற்காகவே சில தேசங்களில் கூடுகட்டித் தொங்கவிடுவது வழக்கமாக விருக்கிறது. இந்த ஆகாச தீபம், பிதுர் தேவதைகளுக்கும், யமதர்ம ராஜாவுக்கும் பிரீதிகரமென்று சாஸ்திரம் கூறுகிறது. சதுர்த்தசியன்று ராத்திரியின் நான்காம் ஜாமத்தில் அதிலும் முக்யமாய்ச் சந்திரோதயகாலத்தில் ஸுகந்த தைலங்களால் அப்யங்கம் செய்துகொள்ள வேண்டும். ஸ்நானம் செய்யும்பொழுது சுரை இலை, நாயுருவி, தகர இலை இவைகளைக் கையிலெடுத்துக் கொண்டு தன் தலையை மூன்று சுற்றுச் சுற்றி வடகிழக்குத் திக்கில் எறிந்துவிட்டு ஸ்நானம் செய்யவேண்டும். இது ஒரு பீடா பரிகாரவிதி. ஸ்நானம்செய்தபிறகு புதிய வஸ்திரங்கள் தரித்துக்கொண்டு சக்தியுள்ள மட்டும் ஆபரணங்களையும் நல்ல கந்தங்களையும் புஷ்பங்களையும் தரித்துக் கொள்ள வேண்டும். பிறகு தங்கள் தங்கள் வர்ணாச்ரமங்களுக்குரிய நித்திய கர்மங்கள் முடிந்தபின் யமன் முதலிய 14 நாமங்களால் எள்ளு சேர்த்து யம தர்ப்பணம் செய்யவேண்டும். அன்று தமது பந்து ஜனங்களுடன் புஜித்து, சங்கீத முதலிய சந்தோஷ காரியங்களுடன் ஆநந்தித்திருக்கவேண்டும். முற்சொல்லிய தீப உத்ஸவம், திரயோதசி முதல் மூன்று தினங்களில் செய்யாதவர்கள் சதுர்த்தசியன்றாவது அவச்யம் செய்யவேண்டியது. இவையெல்லாம் நிர்ணயஸிந்து முதலிய தர்ம நூல்களில் விசதமாய்க் காணலாம்.

---

ஆப்பிரிக்கன் வர்த்தமானி.— * இங்கிலீஷ் பத்திரிகைகளைப்போல் வெகு இனிய நடையில் பற்பல விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. விவசாயம், கைத்தொழில், வாணிபம், சாஸ்திரம், மதம், தேசச்செல்வர்களின் சரித்திரம், நல்லொழுக்கம், சுகாதாரம் முதலியவைகளைப்பற்றியும் தக்க பண்டிதர்களால் எழுதப்பட்டிருக்கின்றன. மேலும், சிறுவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் அறிவைக்கொடுக்கக்கூடிய முக்கிய அம்சங்களுமிருக்கின்றன. ஆங்கிலேய பாஷையில் கணிக்கப்பட்ட முக்கியமான காவியங்களையும் மொழிபெயர்த்து அச்சிட்டு வருகிறார்கள்.

# “பழமொழி நானூறு”

## THE PAZHAMOZHI-FOUR HUNDRED

[ஸ்ரீமான் தி. செல்வகேசவராய முதலியார் அவர்கள், எம். ஏ.]

பழமொழி என்பது பழமையாகிய வார்த்தை. பழமொழி—முதுமொழி—மூதுரை என்பன ஒரு பொருட்சொற்கள். நெடுங்காலமாய் வழங்கி வருதலால் இப்பெயர்கள் வழங்குகின்றன. “உரை வகை நடையே நான்கென மொழிப” என்று உரையாமாறு நான்கென வகுத்துக்கொண்ட தொல்காப்பியர்,

> “நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்
> மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
> குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
> ஏது நுதலிய முதுமொழி யென்ப”

என முதுமொழியிலக்கணம் கூறியிருக்கின்றனர். அதன் பொருளாவது, “கூரிதாய்ச் சுருங்கி, விழுமிதாய் எளிதாகி இயற்றப்பட்டுக் குறித்த பொருளொன்றனை முடித்தற்குக் காரணமாகிய பொருளினைக் கருதுவது முதுமொழி யென்பர் புலவர்” என்பதாம். பழமொழிகளைப் பிரமாணமாகக் கொள்வது “பஹுஜன வாக்யம் கர்த்தவ்யம்” என்னும் வடமொழிப் பழமொழியால் விளங்கும்.

ஜைன மதத்தினராகிய முன்றுறையரையர் தமது காலத்தில் வழங்கிவந்த பண்டைப் பழமொழிகளில் ஒவ்வொன்றை ஒவ்வொருவெண்பாவின் இறுதியிலும் அமைத்துப் பாடியதனால், சினையாகுபெயராய்ப் பழமொழி என்றும், நானூறு வெண்பாக்களாகிற தொகைபற்றிப் பழமொழிநானூறு என்றும், இந்நூல் வழங்கப்பெறும். சில பழமொழிகள் அக்காலத்தவர் இயற்றிய வேறு நூல்களிலும் வழங்கப் பெற்றுள்ளன. “உமிக்குற்றுக் கைவருந்துமாறு” என்பது திரிகடுகத்திலும், “காக்கையைக் காப்பிட்ட சோறு” என்பது சிறுபஞ்சமூலத்திலும், “ஒருவர் பொறை இருவர் நட்பு”— “கற்கிள்ளிக் கை யிழந்தாரில்”—“உறற்பால யார்க்கு முறும்”—



“நரையான் புறத்திட்ட சூடு”— என்பன நாலடியாரிலும், “முதலிலார்க்கூதியமில்”— “யாப்பினுள் அட்டிய நீர்”—“கற்றறிந்தான் கல்லாதவாறு”—“ஓரறையுட் பாம்போடுடனுறைந்தற்று”-“தமரையில்லார்க்கு நகரமும் காடுபோன்றுங்க”— என்பன திருக்குறளிலும், “இடையனெறிந்த மரம்”—“ஓரறையுட் பாம்போடுடனுறைந்தற்று”-“கவுட்கொண்டநீர்”—“நாவற்கீழ்ப் பெற்ற கனி” என்பன பெரிய திருமொழியிலும், “துஞ்சுமன் கண்ட கனா”— ‘முயல்விட்டுக் காக்கைதினல்” என்பன திருநாவுக்கரசர் தேவாரத்திலும் யதாரூபமாகவும் உருமாறியும் காணப்படுகின்றன. முன்றுறையரையருக்கு முன்னே, பழமொழிகளின் சார்பையே கொண்டு இயற்றிய வேறுநூல் எதுவும் இருந்ததாகப் புலப்படவில்லை. ஆகவே இந்த முதன்மை இந்நூலுக்கே உரியது.

இந்நூலில் காட்டிய பழமொழிகளில் பல, எதுகை மோனை முதலியவற்றிற் கேற்ப மாறுதலுற்றிருக்கின்றன. பல பழமொழிகள் இக்காலவரையிலும் வழங்கிவருகின்றன. சில பழமொழிகள் சிலகாலமாகவோ நெடுங்காலமாகவோ வழக்கிழந்தனவாகக் காண்கின்றன. சில பழமொழிகளைச் சில பொருள்களோடு பொருத்தியிருப்பது மிகவும் வியக்கத்தக்கதாயிருக்கின்றது. சில பழமொழிகளின் அக்காலப் பிரயோகம் நன்கு விளங்காமையால் உத்தேசமாத்திரமாகவே அவைகளைப் பொருத்துதல் கூடும். பல பெரியோர்களை உசாவியும் பலவிடத்து வழக்குகளை ஆராய்ந்தும் அவைகளைப் பார்த்தல் வேண்டும். எடுத்துரைக்கும் பொருள்களுக்குச் சில பழமொழிகள் மேற்கோள்களாகின்றன: சில பழமொழிகள் உவமேயங்களாகின்றன: சில பழமொழிகள் உவமானங்களாகின்றன: சில பழமொழிகள் ஒப்புமைக்கூட்டத்தில் அடங்கிவிடுகின்றன.

தமிழின் புராதனத்தையும் தமிழருடைய புராதன நாகரிக நிலைமையையும் விளக்குதற்கு இன்றளவும் சான்றான பழமொழிகளையே சார்பாகக் கொண்டிருத்தலால், தமிழருடைய புராதன நிலையை ஆராய்வதற்கான சாதனங்களில் இந்நூல் தலையான சாதனம். “கலவித்தை கல்லாமற் பாகம் படும்”—“கற்றறிந்தான் கல்லாதவாறு”—“புலிப்புல வண்ணத்த புள்”— “தமக்கு மருத்துவர் தாம்”—“இல்லதற்கில்லை பெயர்”— “செய்தானை யொவ்வாத பாவையோ வில்” என்றாற் போன்றவைகளில் அமைந்திருக்கும் நுண்பொருள்கள் மிக்க நாகரிகம் பெற்றவர் நுனித்தறிந்தவை. இவை ஆயிரத் தெண்ணூறு வருஷங்களுக்கு முன் பண்டைப் பழமொழிகளாக வழங்கியிருந்தன வென்றால், தமிழருடைய புராதன நாகரிக நிலைமை எத்தன்மையதென்பதை நன்கறியலாம்.

திருக்குறள் நாலடியார் முதலியவற்றில் காணப்படாமல் ஆசிரியர் அநுபவசித்தமாய்ச் சூக்ஷ்மமாயறிந்த பல விஷயங்கள் இந்நூலில் அடங்கியிருக்கின்றன. முதலிரண்டடியில் ஆசிரியர் கூற விரும்பும் பொருளும் நான்காமடியில் பழமொழியும், மூன்றமடியில் பெரும்பாலும் ஆடூஉ முன்னிலையும் சிறுபான்மை மகடூஉ முன்னிலையுமாகக் கொண்டு ஒவ்வொரு செய்யுளும் நடைபெறுகின்றது. ஆடூஉ முன்னிலைகள் அநேகம் அக்காலத்துப் பாண்டியனை நோக்கியனபோலும்! அவை உபகார ஸ்ம்ருதியாக இருக்கலாம். உள்ளுறையுவமம் கொள்ளத்தக்க முன்னிலைகளும் சில உண்டு. ஆகவே இவைகளை நின்று பயனின்மை என்னும் குற்றத்தின் பாற்படுத்தல் அமையாது. இம்முன்னிலைகள் தவிர வேறே வினை அடைமொழிகளும் தொடர் மொழிகளும் எங்கும் புலப்படுவதில்லை. அதனால் சுருங்கச் சொல்லுதலான அழகு இந்நூலில் மிக்குளது. விளங்குதாரணத்ததாகும் சில அரிய பிரயோகமும் அங்கங்கே உண்டு. பொருளைப் பழமொழியையும் பொருத்தியறிவதில் ! நூல் பலவிடங்களில் உய்த்துணரவைத் என்னும் உத்தியைத் தழுவியிருக்கின் நச்சினார்க்கினியர் முதலானோருடைய களில் இந்நூலினின்றும் சில மேற்கோள் கள் அங்கங்கே காட்டப்பெற்றிருக்கின்

இவ்வாசிரியர் தமது நூலைப் பால் களாக வகுத்துரைக்கவில்லை. அ போதுகண்டும் கேட்டும் யூகித்து பொருள்களோடும் நீதிகளோடு

பழமொழியை இயைத்து ஒவ்வொரு பாடலாகப்பாடிச் சேர்த்து வந்தாராதல் வேண்டும். ஆகவே, பல முனிவர் இயற்றிய நாலடியாரிற்போல, கூறியது கூறல், மாறுகொளக் கூறல் முதலியன இந்நூலில் இல்லை. பழைய பொழிப்புரை எழுதினோரும் பால் இயல்களாகப் பகுக்காமல் செய்யுள்கள் இருந்த முறையிலே உரை எழுதிப் போந்தனர். அவ்வுரையில் இரண்டோரிடத்து உள்ள குறிப்பால், அதற்கும் முற்பட்ட ஓர் உரை உண்டென்பதும், பாடபேதம் உண்டென்பதும் விளங்கும். புறத்திரட்டில் கொண்டுள்ள பழமொழிச் செய்யுள்கள் அநேகம் பாடபேதங்கள் உடையன.

உரையாசிரியர் "இரு கயலுண்கண்" என்னும் செய்யுளுரையின் கீழே "இது மகண் மறுத்து மொழிதல். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கும் சொன்னாராதலால் அகப்புறமும் இதனுள் அடங்கும் என்பது தோன்றக் கூறினாராம். 'முத்தகம் குளகம் தொகை தொடர் நிலையென, எத்திறத்தனவும் ஈரிரண்டாகும்' என்பதனால் உலகத்துண்டான செய்யுட்களெல்லாம் நால்வகையின் அடங்கும். இந்த நானூறும் முத்தகச் செய்யுளாதலால் தனியே நின்று ஒரு பொருள் பயந்து முற்றுப் பெற்றன என்றறிக" என்பது குறித்தறியத்தக்கது.

புராண இதிகாசங்களில் பல செய்திகளை இந்நூல் அங்கங்கே சுட்டியுரைக்கின்றது. மொத்தத்தில் இந்த ஜைன நூலாசிரியர் மதவைஷம்யம் உடையவராக எங்கும் புலப்படவில்லை. "பள்ளியுள் ஐயம் புகல்" என்பதும் "ஊர்மேற்றதாமமணர்க்கோடு" என்பதும் ஜைன சம்பந்தமான பழமொழிகளாயினும் வேறுபாடு கருதினவல்ல.
…ளக்க வில்லை கொடுத்துக் கோடல்"
…ப் பிறிதினை விற்சியாகக் கூறியிருக்கும்
…யுள் மதப்பற்றுடையராகக் கூறியிருத்…
…கூடுமெனில், "பரந்தவர் கொள்கை
…பல்லாறு யோடார்" என்பது சமரச…
…வ இருத்தலால் அதுவும் பொருந்…
"பிண்டியினிழற் பெருமானடி வண…
…ச் சிறப்புபாயிரத்தில் கூறியது
…லுள் இவர் ஜைனப்பற்று ஒன்…
…க் கிடைக்கவில்லை.

சரித்திரகாலத்துக்கு முற்பட்டவர்களில் தூங்கெயிலெறிந்த விங்குதோட் செம்பியனையும், மனுநீதிச் சோழனையும், பொற்கைப் பாண்டியனையும் சுட்டியிருக்கிறார். சங்கக் காலத்தவர்களில் பாரி பேகன் பாரிமடமகள் என்பவர்களைச் சுட்டியிருக்கிறார். பல்யானைச் செல்கெழு குட்டுவன் தன்னைப்பாடிய கௌதமனார் என்னும் பார்ப்பனப் புலவருக்குப் பெருவேள்வி வேட்பித்து விடளித்த செய்தி "தொடுத்த பெரும்புலவன்" என்னும் செய்யுளில் சுட்டியிருக்கிறது. மூன்று செய்யுள்கள் கரிகாற் பெருவளத்தானைச் சுட்டுகின்றன. கரிகாலன் காலம் கி-பி முதனூற்றாண்டென்பது சில புலவருடைய கொள்கை. நாலடியாரிலும் பழமொழியிலும் சில செய்யுள்கள் அடியொத்தும் சில செய்யுள்கள் பொருளொத்தும் வருகின்றன. திருக்குறளிலுள்ள பொருள்கள் அநேகம் பழமொழியில் அங்கங்கே ஏறியிருப்பது கண்கூடாக இருக்கின்றது. ஆகவே பழமொழியானது பதினெண் கீழ்க்கணக்கில் பிற்பட்டவைகளில் ஒன்றாக இருத்தல் வேண்டும். "பாப்பிடுக்கண் கண்டேயும் பார்ப்பான் கட்டுரைத்தலால்" என வருவது பஞ்சதந்திரக் கதைகளில் ஒன்று. பஞ்சதந்திரக் கதைகளுக்குப் பெருங்கதை (கதாஸரித்ஸாகரம்) ஆதாரம் என்றாலும், அது தொகைநூலாதலால் அதைக்கொண்டு இதன் கால நிர்ணயம் செய்வது முடியாது.

---

**சிதம்பரம், முனிசிபல் சேர்மன், ம-ா-ா-ஸ்ரீ திவான்பஹதூர் சா.ரு.ம. மு.ம. ராமசாமி செட்டியார்** அவர்கள்.—** "விவேக போதினிப்" பத்திரிகையைச் சில வருஷங்களாகப் படித்து வருகின்றேன். அதில் வெளிப்படும் விஷயங்கள் எவருக்கும் நன்மைபயப்பனவாயும் யாரும் எளிதில் அறிந்து கொள்ளத் தக்கனவாயும் மதச்சண்டையில் புகாதனவாயும் எவரும் நன்மையையன்று பாராட்டத்தக்கனவாயுமிருக்கின்றன. இதுபோன்ற பத்திரிகைகள் தாம் தற்காலத்திற்கு அவசியம் வேண்டும். கவர்ன்மெண்ட் அங்கத்தினரால் ஆதரிக்கப்படாது தன்னாடும் சுதேச பாஷைகள் அபிவிருத்தியாவதற்கு இது போன்ற பத்திரிகைகள் வெளிவந்து உலாவ இடம் பெறுவது அவசியமாகும். ஆதலின் தமிழபிமானமுடையாரும் மற்றைய தக்கார்களும் இப்பத்திரிகை நன்கு நடைபெறும் விஷயத்தில் ஊக்கம் வைப்பார்களென்று நம்புகிறேன்.



# அயன, விஷு புண்ணிய காலங்களும் ருதுக்களும்

## THE SOLSTICES & EQUINOXES: THE SEASONS

[ஸ்ரீமான் ஆர். சாமிநாதய்யரவர்கள், பீ. ஏ.]

அயனம். நாம் ஒவ்வொரு நாளும் நடுப்பகலில் சூரியன் ஆகாயத்திலிருக்குமிடத்தைக் கவனிப்போமானால், அதன் நிலை நாளுக்கு நாள் மாறுகிறதென்று தெரியவரும். சூரியனுடைய பிம்பமானது வருஷத்தில் ஆறு மாதகாலம், தினம் கொஞ்சமாய் தெற்கே நகர்ந்து போய், தெற்குக்கோடி சேர்ந்தபிறகு மற்றைய ஆறுமாதம் தினம் கொஞ்சமாய் வடக்கே நகர்ந்து வரும். வடக்குக்கோடி சேர்ந்த பிறகு முன் போலவே தெற்கு நோக்கி நகரும். இப்படிப் பிம்பம் தெற்கு நோக்கி நகரும் ஆறு மாதத்திற்கு தக்ஷிணாயனமென்றும் தெற்குக் கோடி சேர்ந்த பிறகு திரும்பி வடக்கு நோக்கி நகரும் ஆறு மாதத்திற்கு உத்தராயணமென்றும் பெயர்.

2. சூரிய பிம்பம் இப்படி நிலை மாறுவதற்குக் காரணம் என்னவென்று ஜோதிஷ சாஸ்திரிகளைக் கேட்டால், வாஸ்தவமாய் சூரியனுக்கு சலனமில்லை என்றும், பூமியே சூரியனை வருஷத்துக்கு ஒரு முறை சுற்றி வருவதால் சூரியபிம்பமானது ராசிச்சக்கிரம் என்கிற நக்ஷத்திர வீதியில் வருஷம் ஒரு முறை சுற்றிவருகிறதாக காணப்படுகிறதென்றும், இந்த வீதியானது ஆகாயத்தில் நடு மையத்திலிராமல் தெற்கும் வடக்குமாக கிடப்பதினால் சூரிய பிம்பம் தெற்கும் வடக்கும் போகிறதாகக் காணப்படுகிறதென்றும் தெரியவரும்

3. விஷு. இரவு பகல் கூடிய ஒரு நாள் அறுபது நாழிகையுள்ளதென்றும், அதில் இரவு முப்பது நாழிகை பகல் முப்பது நாழிகை என்றும் சொல்வது வழக்கம். இரவும் பகலும் கூடிய நாள் எக்காலத்திலும் அறுபது நாழிகைதான். இந்த அறுபது நாழிகையில் இரவு முப்பது, பகல் முப்பது என்பது உத்தராயண மத்தியத்தில் ஒரு நாளிலும் தக்ஷிணாயன மத்தியத்தில் ஒரு நாளிலும் ஆக இரண்டு நாளில் மாத்திரம்தான் நிஜம். இந்த இரண்டு நாட்களுக்கு விஷுவம், அல்லது விஷுதினங்கள் என்று பெயர். சூரிய பிம்பம் தெற்குக் கோடியிலிருக்கும் போது அதாவது தக்ஷிணாயனத்தின் கடை நாளில் பகற்பொழுது முப்பது நாழிகைக்குக் குறைந்தும் இராப்பொழுது முப்பது நாழிகைக்கு அதிகப்பட்டுமிருக்கும்; உத்தராயணம் ஆரம்பித்துச் சூரியன் வடக்கே வரவர பகற்பொழுது கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரித்துக்கொண்டும் இரவு குறைந்துகொண்டும் வந்து, மத்தியத்திலிருக்கும் விஷுதினத்தில் இரவும் பகலும் ஸமமாகி, உத்தராயணம் முடியும் தினத்தில் பகல் முப்பது நாழிகைக்கு அதிகமாயும், இரவு முப்பது நாழிகைக்குக் கம்மியாகவும் ஆய்விடும். தக்ஷிணாயனம் ஆரம்பித்து சூரிய பிம்பம் தெற்கே போகப்போக பகல் கொஞ்சம் கொஞ்சமாய் குறைந்துகொண்டும், இரவு அதிகரித்துக் கொண்டும் வந்து, மத்தியத்திலிருக்கும் விஷுதினத்தில் இரவும் பகலும் ஸமமாகி தக்ஷிணாயனம் முடியும் தினத்தில் முன்போலவே இரவு அதிகமும் பகல் கம்மியும் ஆய்விடும். இப்படி உத்தராயண விஷு முதல் தக்ஷிணாயன விஷுவரையில் உள்ள ஆறு மாதத்தில் அஹஸ் ஜாஸ்தி, மற்றைய ஆறு மாதத்தில் அஹஸ் கம்மி; விஷுதினங்கள் இரண்டில் அஹஸும் ராத்திரியும் ஸமம். அஹஸ் கம்மியாகும் காலத்தில் குளிர்மேலிடுமென்பது தெரிந்த விஷயம்.

4. மேற்கூறிய விஷுதினங்களும் அயனங்களின் ஆரம்ப தினங்களும் புண்ணிய காலங்களானபடியால் அவைகளில் செய்யும் கிரியை விசேஷ பலனைக்கொடுக்கும். இந்தக் காரணம் பற்றி இந்த நாலு தினங்களில் புண்ணிய தீர்த்தங்களுக்குப்போய் ஸ்நாநம் செய்து, பிதிர் தர்ப்பணங்கள் பண்ணித் தானங்கள்செய்வது ஹிந்துக்களுக்கு வழக்கம்.

5. ருது. பன்னிரண்டு மாதம் கூடிய ஸம்வத்ஸரமானது வஸந்தம், க்ரீஷ்மம், வர்ஷம், சரத்து, ஹேமந்தம், சிசிரம் என ஆறு ருதுக்களாக வேதத்திலும் மற்றைய வடமொழிக் கிரந்தங்களிலும் பிரிக்கப்பட்டிருக்கிறது. இது ஏதோ ஒரு வடதேசத்துக்கு ஏற்பட்ட அறுவகைப் பாகுபாடு. உத்தராயண மத்தியத்திலிருக்கிற விஷு

தினம்தான் வஸந்த ருதுவுக்கு ஆரம்ப தினம். இந்த ருதுவில் முன் குளிரினால் வருந்திய ஓஷதி வர்க்கங்கள் சூரியன் வடக்கு நோக்கி வருவதினால் வருத்தம் நீங்கி செழித்துப் பூத்து எங்கும் பரிமளம் நிறைந்திருக்கும் என்னும் பொருள் தோன்ற, வட மொழியில் புஷ்பஸமயம் என்று வஸந்த ருதுவுக்கு மறு பெயருண்டு. உத்தராயண விஷுவானது வஸந்த ருதுவுக்கு முதல்தின மென்று பூமியின் வடபாகத்திலுள்ள எல்லாத் தேசத்தாராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த விஷுத்தான் நமக்கு வருஷப் பிறப்பாக ஆதியில் ஏற்பட்டது. வஸந்தமும் க்ரீஷ்மமும் தமிழ் கிரந்தங்களில் இளவேனிற் பருவம், முதுவேனிற் பருவம் என்று இருகூறுகச் சொல்லப்பட்ட வெயிற்காலம். வர்ஷமும் சரத்தும் கூடிய நாலுமாதங்கள் தமிழ் நாட்டில் கார்ப்பருவம் கூதிர்ப்பருவம் என்று சொல்லபட்ட மழைக் காலமும் காற்று மழைக் காலமும். ஹேமந்தமும் சிசிறமும், முன்பனிப்பருவம் பின்பனிப்பருவம் என்று இருகூறுகச் சொல்லப்பட்ட பனிகாலம் அல்லது குளிர் காலம். ஆகவே, தமிழ் நாட்டுக்கு வெயில்காலம், மழை காலம், குளிர்காலம் என்ற முக்கூறே போதுமானது.

மரங்கள் பூத்துக் காய்ப்பதும், மழை பெய்வதும், ஆறுகளில் ஜலம் வருவதும், தானியங்கள் விளைவதும், அஹஸ் குறைந்து குளிர் மேலிடுவதும் ஆகாயத்தில் சூரியனுடைய வடக்கும் தெற்குமாகிய சலனத்தினலுண்டாகின்றனவென்று நாம் அறியவேண்டும்.

6. உத்தராயணமென்று மேற்சொல்லப்பட்ட ஆறுமாதங்களில் காற்றும் மழையும் விசேஷமில்லாததினால் சுபகாரியங்களுக்கு இதுவே சிறந்த காலம். இந்த அயனத்தில் இறப்பவர்கள் மேலான கதியை அடைவார்கள் என்று ஆதிகாலந் தொட்டுவருகிற ஒரு நம்பிக்கை ஹிந்துக்களுக்கு உண்டு. இந்தக் காரணத்தினலேதான் பாரதயுத்தத்தில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் பிதாமகனன பீஷ்மாசாரியர் அர்ச்சுனனுடைய பாணங்களினல் அடிபட்டு அந்தியாவஸ்தையை அடைந்தபோது தக்ஷிணாயனத்தில் உயிர்விடப் பிரியமில்லாதவராய், யோகபலத்தினல் தன் உயிரை உடலிலே நிறுத்தி, அர்ச்சுனனால் செய்யப்பட்ட சரதல்பத்தில் தக்ஷிணாயனம் முடியும் வரையில் சயனித்திருந்து, மாகமாதம் சுத்த ஸப்தமியன்று உத்தராயணம் பிறந்த பிறகு நிர்யாணமானர். சூரியனுடைய ரதம் மாக ஸப்தமியில் வடக்கே திரும்பினது என்று மஹா பாரதத்தில் இப்படி ஐதிகம் இருப்பதினல் மேற்படி திதிக்கு ரதஸப்தமியென்று பெயரிட்டு இன்னமும் அதை ஒரு புண்ணியகாலமாகக் கொண்டாடிவருகிறோம்.

7. நாம் இப்பொழுது தைமாதம் முதல் தேதியை, உத்தராயணத்தினாரம்பதினமாக வைத்துக்கொண்டு, சித்திரை ஆடிமாதங்களின் முதல்தேதிகளை விஷுதினங்களாகவும், ஐப்பசிமாதம் முதல்தேதியை தக்ஷிணாயனத்தின் ஆரம்பதினமாகவும் கொண்டாடி வருகிறோம். அநேக நூற்றாண்டுகளுக்கு முன் ஏற்பட்ட இந்த நியமம் இப்பொழுது பிரத்தியக்ஷத்துக்கு முற்றிலும் விரோதமாயிருக்கிறது. ஆகாயத்தில் சூரியபிம்பத்தின் சலனத்தை கவனித்துப் பார்த்தால் பிம்பம் தெற்குக் கோடிபோய் வடக்கு நோக்கித் திரும்பும் நாள் டிசம்பர் 22உக்கு சரியான மார்கழி மாதம் 8-ம் தேதியென்று சுலபமாய் விளங்கும்; இதுமாதிரியே விஷுதினங்களும், சூரியனுடைய ரதம் தெற்கே திரும்பும் தக்ஷிணாயன தினமும் மேற்குறிப்பிட்டிருக்கும் தேதிகளுக்கு 20 அல்லது 22 நாள் முன்னலேயே ஸம்பவிக்கின்றன. முதலில், மாக ஸப்தமியில் ஸம்பவித்த உத்தராயண காலம், பிறகு தைமாதம் முதல்தேதிக்கு வந்ததெப்படி, இப்பொழுது அது மார்கழி மாதம் 8-ம் தேதியில் உண்டாகிறதெப்படி?

8. சூரியன் ஆகாயத்தில் ராசி சக்கிரம் என்கிற நக்ஷத்திர வீதியில் வருஷம் ஒரு முறை சுற்றி வருகிறதென்று முன்னமேயே குறிப்பிட்டிருக்கிறோம். இந்தச் சக்கிரத்தின் தெற்குக் கோடி உத்தராயணாரம்ப ஸ்தானம், வடக்குக் கோடி தக்ஷிணாயனாரம்ப ஸ்தானம், இந்த இரண்டு கோடிகளுக்கும் நடு மத்தியிலுள்ள இரண்டு ஸ்தானங்கள் விஷுஸ்தானங்கள்



இந்த நான்கு ஸ்தானங்களும் பூமியினுடைய அக்ஷ சலனத்தினல் வருஷம் கொஞ்சம் கொஞ்சம் நிலை மாறுகின்றன; இந்த நிலை மாற்றத்தைச் சூக்ஷ்ம யந்திரங்களில்லாமல் கண்டுபிடிக்க முடியாது. ஒரு காலத்தில் வஸந்த விஷுவானது கார்த்திகை நக்ஷத்திரத்திலிருந்ததாக வேதத்தினல் தெரிகிறது; அப்பொழுது உத்திராயணம் மாகபாதத்தில் பிறந்திருக்கும். அதற்கு இரண்டாயிரம், இரண்டாயிரத்தைந்நூறு வருஷத்துக்குப் பிறகு அந்த விஷு அசுவினீ நக்ஷத்திரத்தில் மேஷ ராசியின் ஆரம்பத்திலிருந்தது. அப்பொழுது இருந்த ஜோதிஷ சாஸ்திரிகள், அக்காலத்து அயன விஷு ஸ்தானங்களைச் சூக்ஷ்ம யந்திரங்களால் நிர்த்தாரணம் செய்து, முன்னிருந்த நியமங்களை மாற்றி, ஸம்வத்ஸரத்துக்கும் வஸந்த ருதுவுக்கும் மேஷராசியின் ஆரம்பத்தை ஆதியாக வைத்து, இப்பொழுது நாம் அனுஷ்டித்துவரும் நியமங்களை ஏற்படுத்தினர்கள். ஆனல் அயன விஷுக்களின் சலனத்தை அறியாமலோ, அறிந்தும் கவனியாமலோ, ஸம்வத்ஸரத்தினுடைய பரிமாணத்தை 20½ நிமிஷம் ஜாஸ்தியாக கணித்துவிட்டார்கள். இப்படிக் கணித்துவிட்டதினல் அயன விஷுகாலங்கள் வருஷம் ஒன்றுக்கு 20½ நிமிஷம் பிந்தி வருகின்றன; 70 வருஷத்தில் ஒரு முழு நாள் பிந்திவிடும். மேற்குறித்த நியமங்கள் ஏற்பட்டு இப்பொழுது அநேக நூற்றாண்டுகள் ஆய்விட்டபடியால் மேற்படி புண்ணிய காலங்கள் 20, 22 நாள் பிந்திப்போய், நியமங்களும் பிரத்தியக்ஷத்திற்கு விரோதமாயிருக்கின்றன. இப்பொழுது வஸந்த விஷுவானது மீனராசியில் உத்திரட்டாதி நக்ஷத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் இருக்கிறது.

9. "சித்திரையும் வைகாசியும் வஸந்த ருது" "ஆனியும் ஆடியும் க்ரீஷ்ம ருது" என்று நாம் பள்ளியில் படித்த பாடங்கள் இப்பொழுது பொய்த்துவிட்டன; ஏனென்றல், வஸந்த ருது இப்பொழுது பங்குனி மாதம் 8-ம தேதியிலேயே பிறந்துவிடுகிறது. மற்றைய ருதுக்களும் அப்படியே முந்தப் பிறக்கின்றன. "புரட்டாசி பெரு மழை" "ஐப்பசி அடை மழை" "கார்த்திகை கிழ மழை" என்பது முதலான பழமொழிகளும் பொயத்துப் போகலாம்.

இது தவிர, புண்ணிய காலமென்று அங்கீகரிக்கப்பட்ட அயன விஷுக்கள் கழிந்து மூன்று வாரங்களுக்குப் பிறகு அவைகளுக்கேற்பட்ட ஸ்நாந தானங்களை நாம் செய்ய வேண்டி வருகிறது. ஆதலால் நாமெல்லோரும் ஒன்று சேர்ந்து, இப்பொழுது இருக்கும் நியமத்தை மாற்றி, அயன விஷுகாலங்களைத் தக்க தினங்களில் கொண்டாட வேண்டும். விஷுக்கள் மாறவே வருஷப் பிறப்பும் மாறும்; ருது நியமமும் சரிபடும். இதை நம்மவர் கவனிப்பாராக!



## செடிகள் பசுமையாயிருப்பதேன்?

## WHY PLANTS ARE GREEN?

[ஸ்ரீமான் ராவ் பஹதூர் கே. ரங்காசாரியார் அவர்கள், எம். ஏ., எல். டி.]

இப்புவியிலிருக்கும் பொருட்கள் பலவாம். அவற்றுள் ஜீவப்பிராணிகளும், செடிகளுமே நம்முடைய கவனத்தை அதிகமாகக் கவர்கின்றன. உயிருள்ளவையாயினும், இவ்விரண்டிற்கும் பல வித்தியாசங்களிருப்பது நமக்குத் தெரிந்த விஷயமே. பிராணியானலும் சரி, செடியானலும் சரி, இரண்டிற்கும் உணவு வேண்டியதன்றே? பிராணிகள் இங்குமங்கும் நடமாடுந் திறமையைப் பெற்றிருப்பதினல், தமக்கு வேண்டிய உணவுப்பொருள்களை எளிதில் சம்பாதித்துக் கொள்ளும். செடிகள் நகராமல் ஒரே இடத்திலேயே வேரூன்றி நிற்பதால் பிராணிகளைப் போல ஆகார பதார்த்தங்களைச் சேகரித்துக் கொள்ள அவற்றிற்குச் சாத்தியப்படாது. செடிகளுக்குச் சமீபத்திலேயே இருக்கும் பொருள்களையே இவை தமக்கு உணவாக உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டியதாகிறது. அதாவது பூமியிலும், ஆகாயத்தில் எங்கும் வியாபித்திருக்கும் காற்றிலும் இருக்கும் பொருள்களையே செடிகள் தமக்கு ஆகாரப் பொருள்களாகக் கொள்ளும். இதுவுமன்றி பிராணிகள் தமக்கு உணவாக வேறு ஜந்துக்களையாவது, செடிகளையாவது அல்லது அவற்றில் சேகரிக்கப்பட்டிருக்கும்

வஸ்துக்களையாவது ஆகாரமாக உபயோகப்படுத்திக்கொள்ளுகின்றன. செடிகள் இவ்விதம் செய்வதில்லை.

ஓஷதிகள் எங்கும் வளர்ந்து வாழ்கின்றன. அவையில்லாத இடங்கள் வெளிச்சம் புகாத இடங்கள்தாம். வெளிச்சமிருக்குமிடங்களில் எல்லாம், செடிகளை நாம் பார்க்கலாம். சாதாரணமாக இவை பலவகையனவாயும், உருவத்திலும் அமைப்பிலும் மாறுபாடுகள் உடையனவாயும் இருப்பது நமக்குத் தெரிந்த விஷயமே. சில செடிகள் சிறு பூண்டுகளாகவும், சில தரையோடு படர்ந்தும் வாழ்கின்றன; இன்னும்சில மரங்களாகவும் மற்றும் சில கொழுக் கொம்புகளின் மேல் படர்ந்தும் வாழ்கின்றன. ஜலத்தினுள் அமிழ்ந்தும் மிதந்தும் வாழும் செடிகளையும் நாம் பார்க்கிறோம். செடிகள் இப்படிப் பலவித வித்தியாசங்களைப் பெற்றிருந்தாலும், இவையெல்லாம் ஒரு விஷயத்தில் மட்டும் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன. அதாவது செடிகள் அனைத்தும் பசுமையாக இருப்பதே. பசுமை நிறம் இல்லாதவற்றை நாம் செடிகள் என்று நினைப்பதில்லை.

செடிகள் ஏராளமாய்த் தழைத்துவாழ்ந்துகொண்டு எங்கும் பசுமையாயிருப்பதைப் பார்க்கும்போது நமக்கு உண்டாகும் சந்தோஷத்துக்கு அளவில்லை. வசந்த காலத்தைப் பற்றிக் கொண்டாடாதவர்கள் ஒருவருமில்லை. இதற்குக் காரணம் அப்பருவத்தில் ஓஷதிகள் நன்றாய்த் தளிர்த்துப் பூத்துக் காய்ப்பதும் ஜீவப்பிராணிகள நிறைய நடமாடிக்கொண்டிருப்பதுமே. செடிகள் எல்லாவற்றிலும் பசுமைநிறம் அமைந்திருப்பதால் இந்நிறம் செடிகளின் வாழ்க்கைக்கு வெகு முக்கியமானதாகத்தானே இருக்கவேண்டும்?

பசுமை நிறத்தைப் பெற்றிருப்பது செடிகளின் முக்கிய குணமாயினும், இந்நிறமில்லாத செடிகளு மிருக்கின்றன. காளான், நாய்க்குடை, பூஞ்சாளம் ஆகிய இவை அப்படிப்பட்ட செடிகளே. பசுமை நிறம் இல்லாமலிருக்கும் இவ்வொரு வித்தியாசத்தினாலேயே இவ்விருவிதமான செடிகளுக்கும் பல விஷயங்களில் வித்தியாசங்கள் உண்டாகின்றன. முதலாவது, ஆகாரச் சேகரிப்பில் இவ்விரண்டுவிதச் செடிகளுக்கும் வித்தியாசமிருக்கின்றது. காளான், நாய்க்குடை முதலான பசுமை நிறமற்ற செடிகள், வேறு பசுமை நிறமுள்ள செடிகள் அல்லது பிராணிகளின் உதவியினாலேதான் தமக்குவேண்டிய உணவுப் பொருட்களைப் பெறுகின்றன. பசுமை நிறத்தைப்பெற்றிருக்கும் ஓஷதிகள் உயிருள்ளவற்றின் சகாயமில்லாமலே, பூமியிலும், ஆகாயத்திலுள்ள காற்றிலும், ஜலத்தில் கரைந்தும் இருக்கும் பதார்த்தங்களை உபயோகப் படுத்திக்கொண்டு உணவுக்கு வேண்டிய பொருள்களைச் செய்துகொள்கின்றன. இரண்டாவது, பசுமை நிறமற்ற காளான்முதலிய செடிகள் அதிகப்பெரிதாக வளர்வதே இல்லை. பெரும்பாலும் சிறியனவாகவே இருப்பதியல்பு; பசும் செடிகள் சிறியனவாகவும் மிகப் பெரியனவாகவும் இருக்கின்றன.

செடிகள் எல்லாவற்றிலும் பசுமை நிறமிருப்பதால் செடிகளுக்கு இவ்வர்ணமானது இன்றியமையாததாக நினைக்கவேண்டும். இந்நிறம் செடிகளில், இலைகளிலும் இளம் கிளைகளிலுமே அதிகமாக இருக்கின்றது. பூமியினுட்புகுந்து கிடக்கும் வேர்களிலும் கிளைகளிலும் இந்நிறம் இருப்பதில்லை; அவை வெளுத்தே இருப்பது இயல்பு. அதாவது, வெளிச்சம் படாத பாகங்களில் பசுமை நிறமிருப்பதே இல்லை. இதுவுமன்றி, பசுமை நிறமிருக்கும் பாகங்களிலும் இந்நிறம் ஒரேமாதிரியாக இருப்பதுமில்லை. இலைகளில் வெளிச்சம்படும பாகமாகிய மேற்புறத்தில் பசுமை நிறம் அதிகமாகவும், இது அதிகமாகப்படாத கீழ்ப்புறத்தில் இந்நிறம் சிறிது குறைந்தும் இருக்கும். பூமியிலிருந்து கிளம்பிவரும்கிளைகள் வெளியேவரும்போது வெளுத்திருந்து, வெளிச்சம் பட்டபிறகு பசுமையாக மாறிவிடுகின்றன. செடிகளை ஒருபுறம் வெளிச்சம் அதிகமாகவும், மற்றொருபுறம் மட்டாகவுமிருக்கும் இடங்களில வளர்த்தால், அவற்றின் கிளைகள் வெளிச்சம் அதிகமாக இருக்கும் திக்கிலேயே சாய்ந்து வளரும். இப்படிச் சாய்ந்த கிளைகளுள்ள செடியை வெளிச்சம் குறைவான பக்கத்தில் கிளைகளிருக்கும்படித் திருப்பிவைத்தாலும், கொஞ்சநேரத்திற்குப் பிறகு கிளைகள் மறு



படியும் வெளிச்சத்தின் புறமே சாய்ந்துவிடுகின்றன.

சாதாரணமாய்ச் செடிகளில் கிளைகளின் போக்கைக் கவனித்தால் அவை வெளிச்சம் படும்படியாக நாலா பக்கங்களிலும் பரவி வளர்வது தெற்றென விளங்கும். வேலிகளில் நிழல் அதிகமாக இருக்கும் இடங்களில் வளரும் செடிகளில் கிளைகள் இருட்டான பாகத்திலிருந்து சூரிய ரஸ்மி படும்படியான வெளிப் புறங்களிலேயே வளைந்து கிளைத்துப் பூர்ப்பதை நாம் தினமும் பார்க்கிறோம். மரங்கள் அடர்ந்த தோப்புகளில் மரங்களின்மேல் படரும் கொடிகள் கீழ்ப் பாகங்களில் அதிகமாகக் கிளைத்துப் பரவாமல் நேராக உயர ஏறி மரத்தின் உச்சிக் கிளைகளைச் சமீபித்து அங்கே மிகுதியாகக் கிளைத்துத் தழைக்கின்றன. நம் விடுகளிலும் தோட்டங்களிலும் பந்தல்களில் வளர்ந்து படர்கிற பாகல், புடல், அவரை முதலிய கொடிகள் படர்வதைக் கவனித்துப் பார்த்தால், இவையும் வெளிச்சத்தின் பொருட்டு வெயில் நன்றாய்ப்படும் மேல்புறத்திலேயே அதிகமாகக் கிளைத்துத் தழைக்கின்றனவென்பது தெரியும். பந்தலினடியிலும் இருளான பாகங்களிலும் கிளைகளும் இலைகளும் மிகுதியாக உண்டாவதில்லை. ஒரு பெரிய ஆலமரத்தையாவது வேறு எந்த மரத்தையாவது தூரத்திலிருந்து பார்த்தால், இலைகள் தாம் எல்லாப்பக்கங்களிலும் விரிந்து பரவிக் கிளைகளைக் கவர்ந்துகொண்டிருக்கும்; இலைகளைத் தாங்கும் கிளைகளின் தண்டுகளே தெரிவதில்லை. மரத்தின் அடித் தண்டினிடத்தில் போய் உட்புறத்தைப் பார்த்தால், கிளைகளின் தண்டுகள் அதிகமாகவும் இலைகள் மிதமாகவும் இருக்கும்.

குப்பைக்கீரை, தண்டுக்கீரை, குப்பைமேனி இந்தச்செடிகளின் இலைகள், கிளைகளில் அமைந்திருக்கும் ஒழுங்கைக் கவனித்துப் பார்த்தால், இவை நாலாபக்கங்களிலும் பரவி இருப்பதுடன் அவற்றின் பரப்பும் அதிகமாக இருப்பதும் தெரியும். இவைகளின் ஒழுங்கு நமக்கு ஆச்சரியத்தை விளைக்கத்தகுந்ததே. கிளைகளில் கீழாக இருக்கும் இலைகளின் காம்புகள் நீண்டும், மேலே செல்லச்செல்ல இக்காம்புகள் சிறிது சிறிதாக குட்டையாய்க்கொண்டே வரும். இதனால் இலையின் விரிந்த பாகங்கள் ஏறக்குறைய ஒரே மட்டத்திற்கு வந்து நிற்கின்றன; கீழ் இலைகளின் விரிவு வெளியிலும், மேல் இலைகளில் இவை உட்புறமாகவும் பொருந்தியிருக்கும். இப்படி ஒழுங்காகவும் ஒரே மட்டத்திலுமிருப்பதால் எல்லா இலைகளின் மேலும் வெளிச்சம் நன்றாய்ப்படுமல்லவா? ஒரு செடியில் இயற்கையாகவே இலைகள் அமைந்திருக்கும் ஒழுங்கை விட, இன்னும் அனுகூலமாக இருக்கும்படி இலைகளின் போக்கையும், அவை பதிந்து நிற்கும் விதத்தையும் மாற்றுவது முடியாத காரியமே. எந்தச்செடியிலும் இலைகள் ஒன்றைமற்றொன்று மறைக்காதபடியாகவே அமர்ந்திருப்பதியற்கை. ஆனால் அப்படி யமைந்திருப்பதற்கு ஏற்பட்ட சாதனங்கள் பலவாம். புன்னை, நுணு, நந்தியாவர்த்தம் இச்செடிகளின் கிளைகளில் இலைகள் கணுவிலிரண்டு சேர்ந்து ஒரே மட்டத்திலிருக்கின்றன. ஆனால் ஒரு கணுவிலிருக்கும் இலைச்சோடி அக்கணுவுக்கடுத்த மேல்கணு கீழ்க்கணு இவற்றிலிருக்கும் இலைகளுக்குக் குறுக்காக இருக்குமே யல்லது ஒரேதிக்கில் இருப்பதில்லை. அடுத்த இலை ஜோடிகள் இவ்விதமாகக் குறுக்காக இருந்தால்தான் இலைகள் ஒன்றையொன்று மறைக்காமலிருக்கும்.

மேலே விவரித்த விஷயங்களையெல்லாம் யோசித்துப்பார்க்கையில் செடிகளைப்பற்றி ஒரு விஷயம் ஸ்பஷ்டமாக ஏற்படுகிறது. அதாவது, செடியிலிருக்கும் பசுமைக்கும் வெளிச்சத்துக்கும் ஏதோ சம்பந்தமிருக்கிறதென்று எண்ணவேண்டியதாகின்றது. இதுவுமன்றி, செடிகளில் பச்சை நிறமானது இலைகளிலேயே குடிகொண்டிருப்பதோடு இலைகளும் ஏராளமாய் இருப்பதால் செடிகளின் வாழ்க்கைக்கு இவை முக்கியமான உருப்பென்று ஊகிக்கவேண்டும். ஒருசெடியிலுண்டாகும் இலைகளையெல்லாம் விடாமல் உருவிக்கொண்டே இருந்தால், அச்செடி பட்டுப்போம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே.

இப்போது நாம் செடிகளைப்பற்றி மூன்று முக்கிய அம்சங்களைத் தெரிந்துகொண்டோம். முதலாவது, இலைகள் எல்லாம்

வெளிச்சம் மேலே நன்றாய்ப் படுவதற்காக விரிவையும் அதிகப் பரப்பையும் பெற்றிருக்கின்றன. இரண்டாவது, இலைகள் கிளைகளில் ஒன்றையொன்று மறைக்காமலிருக்கும் வண்ணம் பொருந்தி இருக்கின்றன. மூன்றாவது, செடிகளின் வாழ்க்கைக்குச் சூரிய வெளிச்சம் இன்றியமையாதது.

செடிகளுக்கு இலைகளினால் என்ன பிரயோசனம் உண்டாகிறதென்றும், இலைகள் செய்யும் வேலைகளைப் பற்றியும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அசுத்தமான காற்றைச் செடிகள் சுத்தப்படுத்துகின்றனவென்பதை நாம் பன்முறையும் சொல்லக் கேட்டிருக்கிறோம். நாம் வாசம் செய்யும் இடங்களில் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்கும் காற்றானது அசுத்தமாய்விடுகின்றதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. நாம் சுவாசிக்கும்போது வெளிவிடும் காற்று முழுவதும் கரியமிலவாயு. இது நம்மைச் சுற்றியிருக்கும் காற்றோடு கலந்துபோவதால், அது அசுத்தமாய் விடுகிறது. விறகு, விளக்கு முதலியன எரியும்போதெல்லாம் கரியமலவாயு உண்டாகும். இதுவும் காற்றுடன் கலக்கும். இப்படிக் கலக்கும் கரியமலவாயுவை நீக்கினால்தான் காற்று சுத்தமாகும். செடிகள் காற்றைச் சுத்தப்படுத்துவதென்றால் இக்கரியமலவாயுவை அவை நீக்கிவிடவேண்டும். அப்படிச் செய்தால்தான் செடிகள் காற்றைச் சுத்தப்படுத்துகிறதென்று நினைக்கலாம். உண்மையாகவே கரியமலவாயுவைச் செடிகள் நீக்கிவிடும் திறமையைப்பெற்றிருக்கின்றனவா இல்லையா என்பதை வெகு எளிதில் அறிய மார்க்கங்களுண்டு.

ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் ஜலத்தைக் கொட்டி, பிறகு அதில் அடிபீடமற்ற, வாயுள்ள ஒரு கண்ணாடிச் சாடியை வைக்கவும். அதன்பின்பு வாயின் வழியாக ஜாடியினுள்புறத்தில் எரிந்துகொண்டிருக்கும் ஒரு சிறு மெழுகுவர்த்தியை நுழைத்தால், ஜாடியினுள் இவ்விளக்குச் சிறிது நேரம் எரிந்துபிறகு அணைந்துபோம். மறுபடியும் பத்தவைத்தாலும் அதில் எரியாது. இதற்குக் காரணம் ஜாடியினுள் கரியமலவாயு நிறைந்து விட்டிருப்பதேயாம். இவ்வாயு இருக்கும் வரையில் விளக்கு எரிவதில்லை. பிறகு ஜாடியின் வாயை அடைத்துவிட்டு அடியில் ஜலத்தின் வழியாக இலைகளுள்ள ஒரு கிளையை ஜாடியின் உட்புறத்தில் தள்ளிப் பாத்திரத்துடன் ஜாடியை நான்கு அல்லது ஐந்துமணி நேரம் வெளிச்சமாயிருக்கும் இடத்தில் வைத்திருந்து, அப்புறம் எரியும் மெழுகுவர்த்தியை ஜாடியினுள் செலுத்தினால் அது உடனே அணைந்து போகாமல் கொஞ்சநேரம் எரியும். இதனால் நாம் ஜாடியினுள்ளிருந்த கரியமலவாயு நீக்கப்பட்டதென்றும் அது இருந்த இடத்தில் பிராணவாயு வந்திருக்கிறதென்றும் நினைக்கவேண்டியதேயன்றோ? ஜாடியினுள் கரியமலவாயு நிறைந்ததும் அதை வெயிலில், இலைகளுள்ள கிளைகளைப் போடாமல் எவ்வளவுநேரம் வைத்திருந்தாலும் கரியமலவாயு நீங்குவதில்லை.

செடிகளின் கிளைகளுமிருக்கவேண்டும், வெளிச்சமும் இருக்கவேண்டும்; இரண்டும் சேர்ந்திருந்தால்தான் கரியமலவாயு நீங்கும். இப்பரிசோதனையினால் செடிகள் கரியமலவாயுவை உட்கொள்ளுகின்றனவென்றும், ஆக்ஸிஜன் என்று சொல்லப்படும் பிராணவாயுவை வெளிவிடுகின்றனவென்றும் தெற்றென விளங்குகின்றது.

செடிகள் பிராணவாயுவை வெளிவிடுகின்றனவென்பதையும் எளிதில் நிரூபிக்கலாம். ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் ஜலத்தை விட்டு, அதினுள் கொஞ்சம வேலம் பாசியைப்போட்டு அதன்மேல் ஒரு கண்ணாடிப் புனலை மூடி, அப்புனலின் குழாயின்மேல் ஜலம் நிறைந்திருக்கும் ஒரு கண்ணாடிக் குழாயைக் கவிழ்த்து வெயிலில் வைத்தால், கொஞ்ச நாழிகைக்குப்பின்பு வேலம பாசியிலிருந்து சிறுசிறு குமிழ்கள் கிளம்பி மேலே போகும். அதிக நாழிகை வெயிலில் வைத்திருந்தால் குழாயிலும் குமிழ்களாக வரும் வாயு நிறைந்துவிடும். இப்படிக் குழாயினுள் வந்தடையும் வாயுவானது தணலின்மேற் பட்டதும் அது எரிய ஆரம்பிக்கும். அதனால் இவ்வாயு பிராணவாயு என்று எண்ணவேண்டியதே. ஏனெனில், தணலை ஜ்வலிக்கச்செய்வது பிராண வாயுவின் முக்கிய குணம். வேலம பாசியிலிருந்து குமிழ்கள் வெயில் அதிகமானால் வேகமாய் ஒன்றின் பின் மற்றொன்று தொடர்ந்துகொண்டே



வரும். வெளிச்சம் குறைய குமிழ்களும் குறையும்; இருட்டானால் குமிழ்களே உண்டாவதில்லை. இதுவுமன்றி, ஜலத்தைக் கொதிக்க வைத்து அதைக்காற்றுப்படாதபடி ஆறவைத்து அதில் பாசியை அமிழ்த்தினால், வெயில் இருந்தாலுங்கூட வாயுக்குமிழ்கள் கிளம்புவதில்லை. காய்ச்சுவதினால் ஜலத்தில் கரைந்திருக்கும் காற்றுகள் எல்லாம் வெளியாய் விடுவதால் கரியமலவாயுவும் ஜலத்திலிருப்பதில்லை. கரியமலவாயு இருந்தால்தான் பிராணவாயுக் குமிழ்கள் உண்டாகின்றன. ஏனெனில், இப்படிக் காயவைத்த ஜலத்தில் கொஞ்சம் கரியமலவாயுவை செலுத்தினால் வெயிலில் வைத்த சிறிது பொழுதுக்குப் பிறகு குமிழ்களுண்டாகின்றன.

மேலே விவரித்த பரிசோதனையினால் செடிகளின்மேல் வெளிச்சம்படும் வரையில் அவற்றிலிருந்து பிராணவாயு வெளிப்பட்டுக்கொண்டிருக்கும் என்றும், வெளிச்சமில்லாவிட்டாலும கரியமலவாயு இல்லாவிட்டாலும் பிராணவாயு வெளிப்படுவதில்லையென்றும் நாம் ஊகிக்கவேண்டியதாகின்றது.

பசுமை நிறமுள்ள இலைகளுக்குள் கரியமலவாயு புகுந்தால்தான் பிராண வாயு வெளிப்படுகிறதென்பதனால் கரியமலவாயுவானது இலைகளுக்கு ஏதோ ஒரு காரியத்திற்கு உதவுகிறதென்று நாம் எண்ணவேண்டியதேயாம். கரியமலவாயுவானது கரி, ஆக்ஸிஜன் அல்லது பிராணவாயு ஆகிய இவ்விரண்டு தாது அல்லது மூலப்பொருள்களின் சமயோகத்தினால் உண்டான ஒரு பொருள். இலைகளுக்குள் கரியமலவாயு புகுந்தாலதான் பிராணவாயு வெளிப்படும் என்பதால் ஒருவேளை கரி என்னும் தாதுப்பொருளை இலையானது தனக்குள் நிறுத்திக்கொண்டு பிராண வாயுவை வெளியேவிட்டு விடுகிறதென்று நாம் ஊகிக்கலாம். இது உண்மையாயின், இலைகளிலும் செடிகளிலும் கரி தாது சம்யோகப்பட்டபொருள்கள் ஏதாவது இருக்கவேண்டியதல்லவா? செடிகளின் எந்தபாகத்தைக் கொளுத்தினாலும் அது கரியாய்விடுவதால் கரி அதிலிருக்கிறதென்று தெரிகிறது. இதுவுமன்றி நாம் சாப்பிட உபயோகப்படுத்தும் செடிகளிலுண்டாகிற தானிய மணிகள், பழங்கள், கிழங்குகள் இவற்றிலெல்லாம் மாத்துளுக்கைகளும் சர்க்கரையும் ஏராளமாக இருப்பது நமக்குத் தெரிந்த விஷயமே. மாத்துளுக்கைகளிருப்பதை லேசாக நாம் கண்டுபிடிக்கலாம். அயோடியன் என்னும் தாது கரைந்திருக்கும் ஜலமானது மாத்துளுக்கைகளின்மேல் பட்டால் அவை நீலமாக மாறிவிடும். இலைகளில் மாத்துளுக்கைகளிருந்தால் அவற்றை நாம் எளிதில் இச்சோதனையினால் கண்டுகொள்ளலாம். வெளிச்சத்தில் வளர்ந்துகொண்டிருக்கும் ஒரு செடியின் இலையை அயோடியன் கலந்திருக்கும் ஜலத்தில் போட்டால், அவ்விலையினுள்ளே இருக்கும் மாத்துளுக்கைகள் நீலநிறமாக மாறும். ஆனால் பசுமைநிறம் இலையிலிருப்பதால் இம்மாறுபாடு எளிதில் புலப்படுவதில்லை. பசுமை நிறத்தை நீக்கிவிட்டால் மாத்துளுக்கைகளிருப்பது நன்றாய்த்தெரியும். இலையின் பசுமைநிறத்தை நீக்கிவிட உபாயங்களுண்டு. கொதிக்கும் வெந்நீரில் இலைகளைத் துவண்டுபோம்வரையில் அமிழ்த்தி வைத்திருந்து, அதற்குப்பின்பு ஜலம் கலப்படமில்லாத சாராயத்தில், ஒரு பகல் அல்லது இராத்திரி இவற்றைப்போட்டுவைத்தால் பசுமைநிறம் சாராயத்தி லிறங்கி, இலைகள் வெளுத்துவிடும். இந்தப்படி வெளுக்கச்செய்த இலைகளை அயோடியன் கலந்திருக்கும் ஜலத்தில் இட்டால் அவை நீலநிறமாக மாறும். இந்நிறம் உண்டாவதால் மாத்துளுக்கைகள் இலைகளில் இருக்கின்றனவென்பது நிச்சயமாகும்.

ஒரு செடியை ஒன்று அல்லது இரண்டு நாட்கள் வரையிலும் வெளிச்சம் படாமல் இருட்டிலேயே வைத்திருந்து, பிறகு அச்செடியின் இலைகளை மேலேவிவரித்த மாதிரியாக வெளுக்கடித்து, அயோடியன் கலந்த ஜலத்தில் போட்டால் அவை நீல நிறத்தைப் பெறுவதில்லை. இதனால் இலைகளில் மாத்துளுக்கைகளே இல்லையென்று தெரிகிறது. மாத்துளுக்கைகள் உண்டாவதற்குச் சூரியவெளிச்சம் இன்றியமையாதது என்று ஊகிக்கவேண்டியதே.

இதுவுமன்றி, இலைகளில் வெளிச்சம் நேராகப்படும இடங்களில் மட்டுமே, மாத்

துணுக்கைகள் உண்டாகின்றன. இதையும் எளிதாக நிரூபிக்கலாம். பூந்தொட்டியில் வளர்ந்துகொண்டிருக்கும் ஒருசெடியை ஒரு நாள் இருட்டில் வைக்கவேண்டும். மறுநாள் ஒரு கருத்த காகித அட்டையில் ஒரு எழுத்தைச் செதுக்கி இவ்வட்டையினால் இருட்டில் வைக்கப்பட்ட செடியின் இலையில் ஒன்றை மூடிவிட்டு, பிறகு அச்செடியை வெளிச்சத்தில் ஒன்று அல்லது இரண்டு மணிநேரம் வைத்திருந்து அதன்பின்பு அட்டையால் மூடப்பட்ட இலையைப் பிடுங்கி அதை மேலே சொல்லியபடி வெளுப்பாக்கினபிறகு அயோடியன் கலந்திருக்கும் ஜலத்தில் போட்டால் அட்டையில் எந்த எழுத்து வெட்டியிருக்கிறதோ அதே எழுத்து இலையில் கறுப்பாகத் தெரியும். இலையின்மேல் எழுத்து வெட்டியிருந்த சந்தின்வழியாக வெளிச்சம் பட்டுக்கொண்டிருந்தபடியினாலும், அட்டையின் மற்றப்பாகம் இலையை மறைத்துக்கொண்டிருந்தபடியினாலும், மாத்துணுக்கைகள் இலையில் ஒரு எழுத்துப் போல் விளங்குகிறது. இச்சோதனையினால் வெளிச்சம் நேராக இலைகளில் விழும் இடங்களில் மட்டும் மாத்துணுக்கைகள் உண்டாகின்றனவென்றும், வெளிச்சம் நேராகப் படாத இடங்களில் உண்டாவதில்லையென்றும் விசதமாகத் தெரிகின்றது.

மாத்துணுக்கைகள் பிராணவாயு, ஜலவாயு, கரி ஆகிய மூன்று மூலப்பொருள்களின் சேர்க்கையினால் உண்டான சம்யோகப்பொருள். இலைகளுள் மாத்துணுக்கைகள் உண்டாவதால், கரி, பிராணவாயு, ஜலவாயு ஆகிய மூன்று தாதுப்பொருள்களும் இலையிலிருக்கவேண்டும். இலைகளில் ஜலம் எப்போதும் நிறைந்தே இருக்கும். ஜலமானது பிராணவாயு, ஜலவாயு இவ்விரு தாதுப்பொருள்கள் சேர்ந்துண்டான சம்யோகப் பொருள். ஆனதினால் இதிலிருந்து பிராணவாயு, ஜலவாயு இரண்டையும் இலை பெறலாம். மாத்துணுக்கைகளைச் செய்ய, இவைபோக மற்றொரு தாதுவாகிய கரி வேண்டியதாகிறது. இத்தாது கரியமலவாயுவில் இருப்பதாலும், கரியமலவாயு இலைகளுக்குள் போய்க்கொண்டிருநதால்தான் மாத்துணுக்கைகள் உண்டாவதாலும், இவ்வாயுவிலிருந்துதான், கரி தாதுவை இலைகள் பெறுகின்றனவென்று தீர்மானிக்கவேண்டியதாகிறது. கரி தாதுவைக் கரியமலவாயுவிலிருந்து வேறாகப் பிரித்துவிட்டால், இத்துடன் சம்பந்தப்பட்டிருந்த பிராணவாயுவும் தனியாகப் பிரிந்துவிட வேண்டியதேயாம். இலைகளிலிருந்து பிராணவாயு வெளிப்படுகின்றதென்று முன்னமேயே சொல்லப்பட்டது. இப்போது நமக்கு இலைகளுக்குள் கரியமலவாயு செல்லுவதும், பிராணவாயு வெளிப்படுவதும் எதற்காகவென்பது தெரிந்தது. இலைகளில் மாத்துணுக்கைகள் உண்டாகும் சரியைக்கே கரியமலவாயு உட்செல்வது. மாத்துணுக்கைகள் உண்டாகும் சரியைக்கு வெளிச்சத்தின் சகாயமிருப்பதால் அச்சரியைக்கு "வெளிச்சச் சேர்க்கைத்தொழில்" என்பது மிகவும் பொருந்திய பெயராகும்.

இலைகளில் நடக்கும் சரியைகளில், வெளிச்சச் சேர்க்கைத் தொழில்தான் பிரதானமானது. இச்சரியை, சரிவர நடப்பதற்கு மாத்துணுக்கைகளிலுள்ள தாதுக்கள் இருக்க வேண்டும்; அல்லது அத்தாதுக்கள் கலந்திருக்கும் வேறு பொருள்களாவது இருக்க வேண்டும். இலைக்குள் இத்தாதுக்களுள்ள பதார்த்தங்கள் செல்கின்றன. அவை கரியமலவாயுவும் ஜலமும் என்று முன்னமேயே சொல்லப்பட்டது. இவ்விரு பொருள்களும் இலைகளுக்குள் இருக்க வேண்டியதுடன், இலைகளில் பச்சைநிறம் இருக்க வேண்டும்; வெயிலும் படவேண்டும். இவ்விரண்டும் "வெளிச்சச் சேர்க்கைத் தொழிலுக்கு" இன்றியமையாதன. கரியமலவாயுவிலிருக்கும் கரி தாதுவைப் பிராணவாயுவினின்றும் வேறுக்குவதற்குச் சக்தி அதிகம் வேண்டும். இலைகளில் மாத்துணுக்கைகள் உண்டாவதால் கரி தாது கரியமலவாயுவிலிருந்து பிரிக்கப்படுகின்றதென்றும், வெளிச்சம் இதில் சம்மந்தப்பட்டிருப்பதால், வெளிச்சந்தான் இதற்கு வேண்டிய சக்தியைக் கொடுக்கிறதென்று நினைக்க வேண்டும். இலைகளுக்குள்ளே கரியமலமாயு சென்றதும், பசுமை இலைகளில் மேல்விழும் சூரிய கிரணங்களின் வெளிச்சமானது கரி தாதுவைப் பிரிப்பதற்கு உதவுகின்றது. இலையிலிருக்கும் பச்சைவர்ணத்துக்குச் சூரியகிரணங்களின் சிறிது பாகத்தை ஆகர்ஷிக்கும் திறமையுண்டு. சூரியவெளிச்சம் பசுமையான இலையின்மேல் பட்டவுடனே பசுமை நிறமானது கிரணங்களிலிருக்கும் வெளிச்சத்தைத ஆகர்ஷித்துக்கொள்ளுகின்றது. இப்படி ஆகர்ஷிக்கப்பட்ட சூரிய கிரணத்தின் வெளிச்சமே கரியமலவாயுவிலிருக்கும் கரி என்னும் தாதுவைப் பிரிப்பதற்கு உதவுகின்றது. பச்சைவர்ணம் செடிகளின் இலைகளில் இல்லையானால் கரியமலவாயுவிலிருந்து கரி பிரிவுபடாது. காளான்போன்ற செடிகளுக்கு, மாத்துணுக்கைகள் செய்யத்திறமை இல்லாதது இப்பச்சை நிறமில்லாமலிருப்பதேயாம்.

மறுபடியும், இலையானது செடிகளில் என்ன செய்கிறதென்று யோசித்துப்பார்ப்போம். இலையானது கரியமலவாயுவை யுட்கொண்டு, பிராணவாயுவை வெளி விடுவதுடன் மாத்துணுக்கைகளையும் உண்டாக்குகிறது. மாத்துணுக்கைகள், கரி, பிராணவாயு, ஜலவாயு ஆகிய இத்தாதுக்கள் சம்யோகப் பட்டிருக்கும் சம்யோகப்பொருள். செடியிலிருக்கும் இலைக்கு ஜலம் வருகிறது, கரியமலவாயுவும் வருகிறது. கரியமலவாயுவைப் பிரித்துக், கரியை வேறுக்க வேண்டிய சக்தியை இலைகளானது பச்சைப் பொருளின் சகாயத்தால் சூரிய இரஸ்மியிலிருந்து பெறுகின்றன.

வெளிச்சச் சேர்க்கைத் தொழிலால் மாத்துணுக்கைகளைச் செய்வதற்குவேண்டிய சக்தியானது சூரியனிடத்திலிருந்து வருகிறது. பூமியில் எங்கும் சூரிய இரஸ்மிபட்டாலும், இலையிலிருக்கும் பசும்பொருள் இல்லாவிட்டால் அதிலிருக்கும் சக்தியை உபயோகித்துக்கொள்ள முடியாது. உலகத்திலிருக்கும் உயிருள்ள ஜந்துக்களுக்கெல்லாம்வேண்டிய ஆகாரத்துக்கு முதன்மையான பொருள் மாத்துணுக்கைகளே. மாத்துணுக்கைகளிலிருந்தே மற்றவித உணவுக்கு வேண்டிய பதார்த்தங்களும் உண்டாகின்றன. மாத்துணுக்கைகள் இல்லையானால், ஜீவ ஜந்துக்களே இருக்கமுடியாது. இப்போது நமக்குச் செடிகளில் பசுமைநிறமிருப்பது எதற்கென்று விளங்குகிறதல்லவா? சகலப் பிராணிகளுக்கும் செடிகளுக்கும் வேண்டிய ஆகாரப் பொருள்கள் உண்டாக்குவதற்கு மூலகாரணமானது இலையிலிருக்கும் பசுமை வர்ணமேயாம். இப்பச்சை வர்ணமானது இலைகளில் சிறு துணுக்குகளாகத் தங்கி நிற்பதால் இவற்றை இலைப்பச்சைத் துணுக்கைகள் என்று சொல்லலாம். இலைப்பச்சைத் துணுக்கைகள் உலகத்திலில்லாமற்போனால் உலகத்தில் ஜந்துக்களே இருக்க முடியாது. உலகத்திலிருக்கும் சகல பிராணிகளும், ஒருவிதத்தில் சூரியனுடைய பிள்ளைகளே என்று நினைக்கலாம்.

இலைப்பச்சைத் துணுக்கைகள் இவ்வளவு முக்கியமானதானதால், இவற்றின் அமைப்பையும், இலையின் உள் அமைப்பையும், அதில் நடக்கும் வேறு சரியைகளையும் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம்.

---

**துன்பத்தில் இன்பம்.**—ஒரு வர்த்தகன் ஒரு பெரிய பணமூட்டையுடன சந்தையிலிருந்து குதிரை சவாரிசெய்து வீட்டுக்குத் திரும்புகையில் வழியில் மழை தாரை தாரையாய்ப் பெய்ய ஆரம்பித்தது. அதனால் அவன் உடம்பு முழுவதும் நனைந்தது. மிகவும் வருத்தத்துடன் இம்மாதிரி தனக்குக் கஷ்டம் நேர்ந்ததைப்பற்றி கடவுளை நொந்து கொண்டான். அடர்ந்த ஒரு காட்டின் வழியாய் அவன் செல்லுகையில் ஒரு திருடன் திடீரென்று ஓடிவந்து துப்பாக்கியினால் தன்னைச்சுடப் பிரயத்தனப்பட்டதைப் பார்த்து நடுநடுங்கினான். ஆனால் வெடிமருந்து மழையினால் நனைந்திருந்ததால் சுடமுடியவில்லை. வர்த்தகன் இதைக் கண்டவுடன், தன் குதிரையை அதட்டிச் சீக்கிரத்தில் கண்ணுக்கெட்டாத தூரம் சென்று அபாயத்தினின்றும் தப்பினான். பிறகு அவன் சொன்னதாவது: ஆகா! நான் என்ன முட்டாள்தனம் செய்தேன். இந்த மழையில்லாமலிருந்தால் நான் அப்போதே மரண மடைந்திருக்க வேண்டுமல்லவா? என் பிராணனையும், பொருளையும் காப்பாற்றின இம்மழையை நான் கோபித்துக் கொண்டது என்ன அறியாமை! எனக்குப் புத்தி வந்தது. கடவுளால் வருவதெல்லாம் நம்முடைய நன்மைக்கேயென்று எனக்கு இப்போது தெரிகிறது. ஈசன் பெருமையை இற்றென அறிவாரார்?

# ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரும் கீழ்த்திசைச் செய்தியும்

## SRI RAMAKRISHNA & THE MESSAGE OF THE EAST

[ஸ்ரீமான். பி.எஸ் சிவராமய்யர் அவர்கள், எம்.ஏ]



"பசித்தவன் பழங்கணக்குப் பார்ப்பான்" என்பது பழமொழி. வயிறு நிறைந்திருக்கும்போது வேறொரு சிந்தனையும் மனதில் தோன்றுவதில்லை. அதுபோலவேதான் ஜன ஸமூகத்தின் வாழ்க்கையிலும். உலகத்தில் சண்டை சச்சரவுகள் இல்லாமல் எங்கும் அமைதியே நிரம்பியிருக்கும்போது, ஜீவனைப்பற்றியாவது கடவுளைப் பற்றியாவது ஸாதாரண ஜனங்கள் விசாரிப்பதில்லை. தத்துவ ஞானிகளே அப்படிச் சிந்திப்பார்கள். அவ்வாறன்றி, இப்போது சென்ற இரண்டு வருஷங்களுக்கு மேலாகவே ஐரோப்பாவில் நடக்கும் கடும் யுத்தம் போன்ற உற்பாதங்கள், ராஜீயமான மாறுபாடுகள் முதலியவை நேரும்போது ஜனங்களுடைய மனம் சாதாரண விஷயங்களிற் காட்டிலும் தத்துவ விஷயங்களிலேயே அதிகமாகச் செல்லுவது ஸகஜம். இப்படி ஜனங்களுடைய மனம் ஒற்றுமைப்பட்டிருக்கும் காலந்தான் பரமாசாரியர்கள் அவதரிப்பதற்கு ஏற்ற நற்காலமாம். உலகத்தில் தோன்றிய ஆசாரியர்கள் ஒவ்வொருவர் அவதார காலத்தையும் கவனித்தோமானால் இப்படிப்பட்ட மனநிலைமை இருந்தது புலப்படும்.

கிறிஸ்தவாப்தம் 19-வது நூற்றாண்டின் முற்பகுதியில் இந்திய இராஜ்யம் ஆங்கிலேயருடைய ஆளுகையில் போனது காரணமாக அவர்களுடைய நாகரீகமும் நடையுடைபாவனைகளும் இந்தியராகிய நம்மைத் தொடர்வதாயின. இதற்கு முன்னும் அந்நியருடைய ஆளுகையில் நம் ராஜ்யம் போனதுண்டு என்றாலும், அவ்வந்நியருடைய நாகரீகம் நம் மனத்தை, ஆங்கிலேயருடைய நாகரீகம் செய்ததைப்போல, அவ்வளவு கவர்ந்ததில்லை. இதன் காரணமாக நமது புராதனமான தர்மமே மலினமடையும்போல் இருந்தது. இது ஆங்கில துரைத்தனத்தாரால் நேர்ந்ததில்லை. உண்மையைக் கூறுமிடத்து, அவர்கள் மதவிஷயத்தில் தலையிடுவதில்லையென்று சங்கல்பித்துக் கொண்டிக்கின்றனர். புதிய நாகரீகத்தால் ஏற்பட்ட சவுகரியங்கள், இன்பானுபவங்கள் இவை காரணமாக நமக்குச் சில துர்ப்புத்தி தோன்றியது. ஆங்கிலேயரைப்போல உண்பதும், உடுப்பதும், நடிப்பதுமே பரம புருஷார்த்தமெனக் கருதத்தொடங்கினோம். நமக்கு நேர்ந்த நஷ்டத்துள் எல்லாம் புராதன ஐசுவரியமாகிய நமது இந்திய நாகரீகத்தை இழக்கும்படி நேர்ந்த நஷ்டமே வெகு பெரியதாக விருந்தது. இத்தருணத்தில் நமது மதியீனத்தை வெளிப்படுத்தி, நாம் நல்வழியினின்றும் விலகாவண்ணம் ஒரு உபாயத்தைச் சொல்லக்கூடிய திவ்ய புருஷர் ஒருவர் அவதரிக்கவேண்டியது அவசியமாயிற்று. அவ்வவதார புருஷர்தாம் ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸர்.

வங்காளத்தில் குமாரபுகூர் என்ற குக்கிராமத்தில் பரமவைதிகமான ஒரு குடும்பத்தில் ஸ்ரீராமகிருஷ்ணர் அவதரித்தனர். பால்யத்திலேயே இவர் சில தெய்வக காரியங்களைச் செயதனராம். 'கதாதரர்' என்ற



பெயரையுடைய நமது பரமஹம்ஸர், கிராமத்துக்கு அருகிலுள்ள மாந்தோப்பில் ஜாதி வித்தியாசம் பாராட்டாமல தன்னோடொத்த சிறுவர்களோடு விளையாடுவாராம். ஒருநாள் இச்சிறுவர்கள், வேறிடத்தில் பார்த்த நாடகம் ஒன்றை நடிக்கத் தொடங்கினர். அதில் ராமகிருஷ்ணருக்கு, ராதா 'வேஷம்' கிடைத்தது. கிருஷ்ணனுடைய பிரிவாற்றாமைக்கு வருந்திய ராதையின் செய்தியைக் கண்ணனிடம் தெரிவிக்கவேண்டியதற்குப் புறப்பட்ட பிருந்தை யென்பவள், கண்ணனிடம் என்ன சொல்லுகிறதென்று கேட்டாள். ராதாவேஷம் போட்டிருந்த பரமஹம்ஸர், கண்ணனை நினைத்து, "கிருஷ்ணா! கிருஷ்ணா" என்று சொல்லிக்கொண்டு மூர்ச்சையடைந்து கீழே விழுந்துவிட்டனர். இதனால் நாடகம் நிற்கவேண்டியதாயிற்று. இப்படிப்பட்ட காலங்களில் அவருக்குத் தன் நினைவே இல்லாது போய்விடும். பிரம்மசரிய விரதத்தில் முதல் பிக்ஷை கேட்பதற்கு இவர் கொல்லன் ஒருவனுடைய மனைவியான தரணி என்பவளிடம் போனார். இது தகாதென்று தடுத்த உறவினர்களும் நண்பர்களும் இவரது மன உறுதியைக் கண்டு இவர் வழியே விட்டுவிட்டார்கள். ஒருநாள் புரோகிதர் ஒருவர், வஸ்திரத்தில எதையோ கொண்டு போகும்போது, நமது பரமஹம்ஸர் எதிர்ப்பட்டு, மூடிக்கொண்டுபோவது என்னவெனக் கேட்டார். "கொஞ்சம் அரிசியும் வாழைக்காயும்" என்று அவர் சொன்னவுடன் ராமகிருஷ்ணர் சிந்திக்கத் தொடங்கினர். "புரோகிதர் ஸகல சாஸ்திரங்களிலும் விற்பன்னர். இவரது அளவில்லாத கல்விக்குக் கொஞ்சம அரிசியும் வாழைக்காயுமே பிரதி பிரயோஜனமானால், பாடுபட்டுக் கல்வி கற்பானேன்? தெருக் கூட்டுபவன்கூட எழுதப்படிக்கத் தெரியாதவனாயினும், அதிகம் சம்பாதிக்கிறான். ஆதலால் இத்தகைய கல்வி நமக்கு வேண்டாம். இது நல்வழிக்கு உதவாது" என்று நிச்சயித்தனர்.

சநாதன தர்மத்துக்குத் தனியாக ஒருவகுப்பும் சங்கமும் வேண்டியதில்லை. பிரசங்கங்கள், கோயில் கட்டுதல், பகிரங்கமாகப் பூஜைசெய்தல் முதலியவற்றிலும் அத்தர்மம் அடங்கிக் கிடக்கவில்லை. அனுபவத்தினாலேயே அதை அடையவேண்டும். ஒருநாள் ஒரு சிஷ்யர், பரமஹம்ஸரை நோக்கி, "குருமஹாராஜ்! கடவுளை நேராகக் காணமுடியுமோ?" என்று கேட்டார். அதற்கு அவர் "நிச்சயமாகவே காணமுடியும்" என்றார். 'ஏகாந்தமாக விருந்து பகவந்நாமங்களைச் சொல்லுவதும் விவேகத்துடன் பகவானை அந்தரங்க பக்தியோடு பூஜிப்பதும் இதற்குச் சில மார்க்கங்களாம். இப்படிச் செய்வதற்கு ஏற்ற மனநிலைமையை முதன் முதலில் பெற வேண்டியது அவயசிம். "உண்மையான பக்தியோடு கதறினையானால் பகவானைக் காண்பாய்" என்று பரமஹம்ஸர் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றனர். பெண்டு, பிள்ளை, சுற்றம், செல்வம் இவைகளுக்காக நாம் கரைந்தழுகிறோமே! அப்படிப் பகவானுடைய தரிசனத்துக்கும் கதறினவர் எத்தனை பேர் உள்ளார்? இவ்விதமான அந்தரங்க பக்தி ஒருவனிடம் உதிக்குமானால், அவன் நிச்சயமாகக் கடவுளை நேரில் காண்பான். உலக விஷயங்களில் ஒருவனுக்குள்ள ஆசை, தாய்க்குக் குழந்தையிடத்துள்ள அன்பு, கற்புடைய ஸ்திரீக்குத் தன் கணவனிடத்துள்ள பக்தி ஆகிய மூன்றையும் ஒன்றுசேர்த்தாலொத்த தீவிர பக்தியை ஒருவன் உடையனாயிருந்தால் அவன் கடவுளைக் காணக்கூடும் எனப் பரமஹம்ஸர் கூறுகின்றார். கல்கத்தாவில் கோவில் கொண்டருளிய காளிதேவி, இவருடைய தீவிர பக்திக்குக் கட்டுப்பட்டு, "குழந்தாய்! நீ கூப்பிடும்போதெல்லாம் நான் வருவேன்" என மொழிந்தருளினள். இவ்வித நல் வார்த்தை வருவதற்குமுன்னால், பரமஹம்ஸர், தரையில் தலையை மோதிக்கொண்டதும் தேவியின் கரத்திலுள்ள கத்தியையெடுத்துத் தன் தலையை வெட்டிக்கொள்ளவிருக்கையில், தேவி பிரத்தியக்ஷமாகித் தடுத்தாட்கொண்டதும் அறியத்தக்கன. நமது பூர்வீகர்களும் மேற்றிசை விஞ்ஞானிகளும் இதற்கு அனுபவந்தான் காரணமென்று ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

இனி, அஞ்ஞானக்கடலைத் தாண்டிச்செல்வதற்கு வேண்டிய ஞானத்தை அடைவதற்கு இரண்டு விஷயங்கள் தேவை. அவையாவன, வைராக்யமும், தியாகமும். இவ்விரண்டும் நம்மவர்க்கு இப்போது வேம்பாக

வுள்ளன. மேலேகூறிய வரத்தைப்பெற்ற பரமஹம்ஸர், உலகில் உள்ள மற்றைய கோட்பாடுகளையும், மதச்சார்புகளையும் ஆராய்ந்துபார்த்து, அவையெல்லாம் ஒரே முடிவுக்குக் கொண்டுபோகின்றன வென்பதை அறிந்துகொண்டனர். ஒன்றன்மீதும் அவருக்குத் துவேஷம் ஏற்படவில்லை. இதுவே அவர் மேற்றிசையாருக்குக் கூறும் செய்திகளில் பிரதானமானது. அங்கு நடந்த யுத்தங்களில் பெரும்பாலன கேவலம் மார்க்க விஷயத்துக்காகவே இருந்தபடியால், இச்செய்தியை அவர்கள் அனைவரும் கவனிக்க வேண்டியதாகும்.

பரமஹம்ஸர் கேவலம் வேதாந்தியாகவே இருக்கவில்லை. இப்போதைய நிலைமையும் நன்றாய்க் கவனித்தவர். பலனை விரும்பாது கடமையை மட்டும் செய்வது சிரமசாத்தியம். என்றாலும், மனிதன் கடவுளிடத்துப் பூர்ண பக்தியுடையவனாக இருக்கவேண்டும் என்று அவர் போதிக்கிறார். இதற்காகவே பந்தமில்லாது உழைக்கும் குணம் குறைந்துள்ள இக்காலத்தில் தேவதா பிரார்த்தனையும், பக்திமார்க்கமும் ஏற்பட்டுள்ளன.

மேற்றிசையோர்கள் கேவலம் பரிசிரமத்தையே, அதாவது ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்வதையே புருஷார்த்தமாகக் கருதியிருக்கின்றனர். பரிசிரமம் அல்லது பிரவர்த்தி, புருஷார்த்தத்துக்கு ஒரு வழியென்றும், அதனால் கடவுளைக் காண முயல்வதே பரமபுருஷார்த்த மென்றும் பரமஹம்ஸர் திரும்பத் திரும்பக் கூறுகின்றார்.

ஒருவிதமான அபிப்பிராயம் சிற்சில வேளைகளில் தலையெடுத்து ஜனஸமூகம் முழுவதையும் கவர்ந்துகொள்வது சுபாவமாகவிருக்கிறது. இப்போது மேற்றிசையார்கள் மனத்தைக் கவரும் சக்தி மேற்கூறிய "பரிசிரமம்" ஆகவுள்ளது. மேற்றிசை நாகரீகத்துக்கு அடிமையாய்ப்போன நாமும் அப்பரிசிரமத்தில் ஈடுபட்டு, வைராக்யம், தியாகம் என்ற ஞாபகமே இல்லாது தவிக்கிறோம். பரிசிரமத்தில் பலவிதமென்பதையும் அவைகளில் சில, கெடுதல்களையும், சில நன்மைகளையும் கொடுக்கு மென்பதையும் நாம் அறிவோம். ஆதலால் நாம் தலையிடும் பரிசிரமமெல்லாம் நன்மையைத் தருவதாகவே இருக்க முயலவேண்டும். சும்மா இருத்தலுக்குப் பேர்போன இடமென்று நமது நாட்டைப் பழிக்கின்றனர் மேற்றிசையார்; அப்படியிருக்கும்போது, பரிசிரமமென்பதைச் சற்று விசேஷணத்துடன் கூறுவது இயலாதெனச் சிலர் நினைக்கக்கூடும். ஓடுந்தோறும் அதிக சக்தியைப் பெறுகிற யந்திரமொன்றுக்கு அடக்கியாளும் கருவி இல்லாவிட்டால் அது ஓடிக் கீழ்விழுந்து ஒடிந்து, அங்குள்ளவரையும் மடித்துவிடும். யந்திரத்துக்கு இவ்வடக்கியாளும் கருவியைப்போல, நமது பரிசிரமத்துக்கும் அக்கருவி ஸ்தானத்தில் வைராக்யம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வைராக்யம் இல்லாவிட்டால், நாம் கேவலம் பிரவர்த்தி அல்லது பரிசிரமத்தின் அடிமைகளாகிவிடுவோம்.

நம்மவரில் சிலர் நமது வர்த்தமான துர்த்தசை சநாதன தர்மத்தால் வந்ததென்று வாதிக்கின்றனர். இவர்களுடைய காரியத்துக்குச் சமானமாக "விளக்குவதற்கு ஒன்றுமில்லாதபடியால்தான் காலத்தை விளக்குகிறேன்" என்று சொன்ன மாணவனுடைய காரியத்தைச் சொல்லலாம். சநாதன தர்மத்தால் நமது தசை க்ஷீணித்துப் போகவில்லை. அக்கொள்கையில் நமக்குப் பூர்ணநம்பிக்கையில்லாததுதான் நமது க்ஷீணத்துக்குக் காரணம். ஞானிகளாகிய ரிஷிகள் இருந்தவரையில் நமது நிலைமையும் சரியாகத்தானிருந்தது. ஞானமும் தர்மமும் ஒன்றென நினைக்கும் அத்தகைய ரிஷிகளை நாம் பெற்றிருக்கையில், செல்வம், கைத்தொழில், சாஸ்திரஞானம் முதலியன செழித்து நம் நாடு நல்ல நிலைமையிலிருந்தது. இதற்குச் சாட்சி நமது பிராசீன சரித்திரமே. அப்படிப்பட்ட ரிஷிகள் மறைந்தபின், நமது தர்மத்துக்குப் பாதுகாவலரில்லா தொழிந்தது. ஒழியவே, நமது துர்த்தசையும் தொடங்கியது. சநாதன தர்மத்தைப் புறங்கூறும் ஒவ்வொருவனும் "நான் உண்மையான பக்தியுடன் எனது பிராசீன தர்மத்தின்படி நடந்தொழுகுகிறேனே? சகல ஜீவப்பிராணிகளும் ஒன்றெனவே மதிக்கிறேனா?" என்று தன்னைத்தானே கேட்டுக்கொள்ளட்டும். அதற்கு மனச்சாட்சி என்ன பதில் சொல்கிறதென்பதைத்



தெரிந்துகொண்டால், எவரும் சநாதன தர்மத்தின்மீது பழியைச் சுமத்தார்.

கீழ்த்திசையார் கேவலம் ஆத்மஸம்பந்திகளென்றும், மேற்றிசையார் லோகாயதர்களென்றும் அடிக்கடி சொல்வதைக் கேட்டுக் கேட்டு நமது காதுகள் துளைப்பட்டுள்ளன. உலகத்தில் உள்ள ஜனங்கள் அனைவரையும் ஒரே குடும்பத்தாரெனவும் அந்தக் குடும்பத்தார் ஒவ்வொருவரும் தத்தமக்கு ஏற்ற மார்க்கங்களில் பிரவேசித்து அநுபவ ஜநிதமாக அடைந்த ஞானத்தால் குணம் வேறுபட்டனரெனவும் கருதுவோர் இப்படிக் குறை சொல்லார். இவ்வாறு கவனிக்கும் காலத்து, மேற்றிசையோரும் கீழ்த்திசையோரும் தங்கள் தங்களுக்கு ஏற்ற குணவிசேஷங்களைக் கைப்பற்றிக் கொண்டிருக்கின்றனர் என்று சொல்லவேண்டும். கீழ்த்திசையார் ஆத்மஸம்பந்திகளென்று கூறுவதன் பொருள் என்னவெனில், அவர்கள் "ஸர்வஜீவனும் ஒன்று" என்று கொண்ட சுவாபமுள்ளவர்கள் என்பதாம். மேலும் வாழ்க்கையின் பயன், அதாவது புருஷார்த்தம், இன்னதாக இருக்கவேண்டுமென்ற நிச்சித்தத்துடன் ஜனஸமூகத்தை நிர்மாணித்தவரெனவும் கூறலாம். இப்படி, நமது ஜனஸமூகம் தர்மத்தின்மேல் ஸ்தாபிக்கப்பட்டிருக்க மேற்றிசையோருடைய ஸமூகம், இதற்கு மாறான "உடன்படிக்கை"யின்மேல்கிளம்பியுள்ளது. அதாவது அங்கே வாயுள்ளாருக்குத்தான் செல்வாக்கு உண்டு என்னும் சங்கேதம் பரவியிருக்கிறது. இதன் காரணமாக, அநேகர் வாயற்ற பிராணிகளாய், வல்லான் ஒருவன் கீழ்ப்பட்டுத் துயரடைகின்றனர். "சுயநயம் கருதாத குணமுடையவர்களால் ஆட்கொள்ளப்படாத எவ்வித ஜனஸமூகமும் விருத்தி யடையாது," என்று ஸ்ரீமான் குமாரஸாமி அவர்கள் சொல்லியது முற்றிலும் உண்மையே.

இப்போது, நாம் எடுத்துக்காட்டிய தாரதம்மியத்தின் நோக்கமென்ன வெனில், மேற்றிசையும் கீழ்த்திசையும் மனதார ஒத்துவாழவேண்டு மென்பதாம். ஒருவரை ஒருவர் வெல்லவேண்டு மென்பது நோக்கமாக இருக்கக்கூடாது.

இப்போது, மேற்றிசையில் ஜனஸமூகத்தில் சில குழப்பங்கள் காணப்படுவதுபோல நம் நாட்டிலும் "ஸ்வதர்மம்" மாறுபாடடைந்துகொண்டிருக்கிறது. இதை இப்படியே விட்டுவிட்டால், கொஞ்ச காலத்தில் "நம்முடையது" என்று சொல்வதற்கு ஒன்றுமே இராது போய்விடும்; பிறருக்குக் கொடுக்கவும் நம்மிடம் நல்ல பொருள் ஒன்றும் இராது. மேற்றிசையிலிருந்து நாம் ஸநாதன தர்ம விஷயமாக ஒன்றையும் விரும்பவேண்டியதில்லை. நம்முடைய ஸ்வதர்மத்தைக் கைவிடாதிருந்தால் நமக்குச் சிரஞ்சீவித்துவம் நிச்சயம் கிடைக்கும். அன்றி மேற்றிசை நாகரீகங்களைப் பின்பற்றினால் ஸ்வதர்மம் குன்றி, நாளடைவில் நாம் க்ஷீணமடைந்து விடுவோம்.

ஸ்வஜனங்கள் தர்மத்தில் நின்றும் வழுவாது சன்மார்க்கிகளாய் வாழ்வதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்வதுதான் உடம்பெடுத்த பயனென்று நாம் கருதவேண்டியது. அதனால்தான் பரமாத்மாவுக்கு அபரிமிதமான திருப்தியும் சந்தோஷமும் உண்டாகின்றன. இந்தப் பரமோபதேசத்தை கீழ்த்திசையாராகிய நாம் உலகத்தார்க்குச் செய்யும்படி நேர்ந்ததுதான் நமக்குக் கௌரவத்தையும் சிறப்பையும் தரும் ஜநக ஸ்வதந்த்ரமாகும். நமது காலத்திலேயே, இதற்கு அநுகுணமாக வாழ்ந்து உலகத்துக்கு உபதேசிக்கக்கூடிய வழியை ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் காட்டியிருக்கின்றனர். நமது நாட்டில் முன்னர் இருந்த பல ரிஷிகள், ஞானிகளுடைய உபதேசத்தின் வழியே நாம் போவோமானால், நமக்கு ஒருநாளும் அதைரியமும் சோகமும் உண்டாகாது. "ஸர்வ ஜீவனும் ஒன்று; வாழ்க்கை தெய்விகமானது" என்ற வேதாந்த ஞானம் நமக்கு வேண்டும்.

மேற்றிசையாரை, மார்க்கக்கொள்கையில் ஸ்வாமி விவேகானந்தரும், சாஸ்திரஞானத்தில் ஸ்ரீமான் ஜகதீச சந்திர வஸுவும், காவியத்தில் ஸ்ரீமான் ரவீந்திரநாத டாகூரும் வென்றது தேகவன்மையாலல்ல; தத்தமக்குரிய ஸ்வதந்திரத்தினால்தான். இப்படிப்பட்ட மஹான்களைப் படைத்த நமது ஜனஸமூகம் தாழ்வடையவும் முடியுமா?

## நம் பெண்டிர் கொண்டாடும் ஒரு பண்டிகை
### கோலாட்டம்
### A FESTIVAL AMONG HINDU LADIES

[ஸ்ரீமான் கே.ஜீ. சேஷய்யர் அவர்கள் பீ.ஏ.பி.எல்.]

நம் நாட்டில் ஆதிதொட்டு வழங்கி வந்து இப்பொழுது வழக்கந் தப்பி மறைந்துபோகும் நிலைமை யடைந்துவரும் விளையாட்டுகளி லொன்று கோலாட்ட மென்ற கொண்டாட்டம். இக்கோலாட்டப் பண்டிகை தென் ஜில்லாக்களில் சாதாரணமாக நாட்டுப்புறமான இடங்களில் ஐப்பசி மாதத்தில் நடைபெற்றுவருகிறது. ஆனால் ஆங்கிலப் படிப்பும், ஆங்கிலேய நாகரிகமும் சிறக்க வழங்கும் நகரங்களில் அது மறைந்துவருகின்றது. நம் பெண்டிர் தேகப்பயிற்சிக்கும் மனக்களிப்புக்கும் ஏற்றவையான பல விளையாட்டுகள் இப்பொழுது மறைந்தேபோயின வென்று சொல்லலாம். அம்மானையும், கழக்கோடியுமாட ஆற்றல்பெற்ற பெண்டிர் இக்காலங் காண்ப தருமை. இத்தகைய விளையாட்டுகள் நாகரிகமற்றனவென்று நம் வீடுகளிலும் பாலிகா பாடசாலைகளிலும் சிறுமிகள் கற்காவண்ணம் விலக்கப்பட்டன போலும்! ஆனால் இவ்விளையாட்டுக்கள் பழையனவேயாகினும் பழுதெனக்கருதிக் களைதற்குரியனவோவென்று நம் நாட்டார் நன்காலோசிக்கவேண்டும். நமது பூர்வீக வழக்கங்களில், உய்ப்பித்து நிலைநிறுத்தற்குரியனவற்றுள், கோலாட்டமொன்றாக விருக்கிறது.

ஹிந்து மாதர்களுக்கு வீட்டிலும் நாட்டிலும் சுவாதீனமில்லையென்றும், வெளியிற் போய் ஒருவரோடொருவர் சேர்ந்து ஒருங்கு கூடி யாதேனுமொரு பொதுக்காரியத்தைத் தொடங்கிமுடிக்கச்சுதந்தரமில்லையென்றும், பச்சிம நாட்டாரும் பச்சிம நாகரிகந் தழுவி நடக்கும் நம்மவரும் கூறுதல் யாவருமறிவார்கள். இதன் உண்மை எவ்வாறாயினுமாகுக. வீட்டு விசாரணையிலும் இல்வாழ்க்கைக்குரியனவும் சமுதாய ஆசாரங்கட்கடுத்தனவுமாகிய விஷயங்களிலும் நமது ஸ்திரீகளுக்குச் செல்வாக்கும் சுதந்தரமும் உண்டென்று ஒப்புவோரும், அவர்களுக்குத் தம் முள்ளொன்று சேர்ந்து ஒரு காரியத்தை நடத்த ஏலாதென்று கூறுவர். இது மெய்யாயின், இதன் காரணம் யாது? நம் பெண்டிர்க்கு வெளியே போய் ஒருவரோடொருவர் கூடிக்களித்துக் குலாவி உறவு கொண்டாடத்தகுந்த சந்தர்ப்பங்கள் ஏற்படாததனாலன்றோ இப்பழிக்கவர்கள் இடமாகின்றார்கள்? பெண்டிர் கூடிக்குலாவ ஏற்பட்ட சந்தர்ப்பங்களிற் சிறந்தது கோலாட்டப் பண்டிகை என்பது, கோலாட்ட ஐவந்தரைப் பார்த்தவர்களுக்குத் தெற்றென விளங்கும்.

இப்பண்டிகை நடைபெறுங்காலம் ஐப்பசி மாதமென்றோம். இதற்கு முன்னதாக நவராத்திரி பண்டிகைவருதல் யாவருமறிவர். நவராத்திரியின்பொழுது சாதாரணமாய் ஒவ்வொரு கிரகத்திலும் பெண்டிர் கொலு வைப்பது வழக்கம். கொலு வைத்திருக்கும் ஒவ்வொரு வீட்டுப் பெண்டுகளும் ஏனைய வீட்டுப்பெண்டிரை விழாக் காண அழைத்து வருவார்கள். அழைக்கப் பெற்றவர்களும் அழைத்தவர்களும் நல்லாடையுடுத்து, நகைகள் பல பூண்டு, மனக்களிப்புற்று, ஒவ்வொரு வீடுகளிலுங் கூடி, உல்லாசமாய்ப் பாடி, உறவுடன் பேசிச் சிரித்து மகிழ்ந்து நேசித்து பொழுதுபோக்கிய பின்னர் வெற்றிலை பாக்கு புஷ்பம் மஞ்சள் குங்குமம் பணிகார முதலிய சுபதிரவியங்கள் பெற்று அவரவர் வீடு போய்ச், சேர்வார்கள். நவராத்திரி தினங்களில் நம் பெண்டிர்க்குண்டாகும் சந்தோஷமும் பரபரப்பும் அறியாதாருளரோ? நவராத்ரியைத் தொடர்ந்து அவ்விழா கிளப்பிய மனக்களிப்புக் குன்று முன்னர், தீபாவளிப் பண்டிகையும் அத்துடன் கோலாட்டமும் வருகின்றன. ஸ்ரீ கண்ணபிரான் நரகாசுரனை வதஞ்செய்து மனிதர்க்கும் தேவர்க்குமேற்பட்ட பீடையைத் தீர்த்தருளிய திருவிழாத் தினமாகிய நரக சதுர்த்தசியன்று தீபாவளி மகோற்சவம் கொண்டாடப்படுகிறது. நரகாசுர ஸம்ஹாரத்தின் பலனாய் அவனால் சிறைப்படுத்தப்பெற்ற பதினாறாயிரம் கன்னியர் சிறைமீட்டப்பெற்றனராகையால் அக்கன்னியர் களிமிக்குற்றுத் திருவிழாக்கொண்டாடினரென்று புராணங்கூறும். இப்பொழுது நடைபெற்றுவரும் கோலாட்டப் பண்டிகையே இப்பந்த நீக்கத் திருவிழா. தீபாவளி ஸ்நானம் செய்த பிறகு அமாவாசையன்று கிராமங்களிலுள்ள சிறுமிகள் சேர்ந்து நல்ல வேளையில் கோலாட்டம்போட்டுக் கொண்டுபோய்ப் புற்று மண்ணெடுத்துக் கொண்டு வந்து பசுவன் செய்து அதற்குப் பண்டிகை நாள்கள் முழுதும் பூஜைசெய்து கோலாட்டம்போடுவார்கள். கடைசி நாளில் ஐவந்தரை நடத்த, பல வீடுகளிற் சென்று இசைந்த பாட்டுப் பாடிக் கோலாட்டம் போட்டுப் பணம் சேகரிப்பார்கள். குழந்தைகள் தாளத்திற்கிசைந்து பாடி வெகு சாதுரியமாய்க் கோலாட்டம் போடும் சாமர்த்தியத்தையும் அவர்கள் முகத்தில் தோன்றும் ஆநந்தத்தையும் பார்த்து மனக்களிப்புக் கொள்ளாதார் எங்குமிலரென்று துணிவாய்ச் சொல்லலாம். கோலாட்ட நாட்களில் பலவிதக் கோலாட்டம் போடுந்திறமை பெற, குழந்தைகள் வீட்டில் முன்னமே பயிலுதல் வழக்கம். அன்றியும் கோலாட்டத்திற்கு வேண்டிய பாட்டும் புதிது புதிதாய் வீட்டில் குழந்தைகள் கற்று வருவார்கள். இப்பயிற்சியால் குழந்தைகளுக்கேற்படும் நலங்கூறவும் வேண்டுமோ! ஐவந்தரைக் கொண்டாட்டத்தின் வைபவம் மிகவும் சிறந்ததேயாம். அன்று வேண்டியவர்களெல்லாரையும் வரவழைத்துக் கலியாண ஊர்கோலம்போல மேள வாத்திய முதலிய வைபவங்களுடன் பசுவனைப் பல்லக்கில் வைத்து அணியணியாய் குழந்தைகள் நல்லாடை யுடுத்து நகைகள் பூண்டு, ஆநந்தப் பெருக்கோடு கோலாட்டம் போட்டுக்கொண்டு தெருவழியேபோய்ப்பசுவனை ஆற்றில் போட்டுவிட்டு, வந்திருக்குமெல்லோரும் ஆற்றங்கரையில் உற்சாகமாய்க் கூட்டுண்ணல் முடித்து, பிறகு வாத்தியத்தோடு பெண்கள் பாடிக் கோலாட்டம் போட்டுக்கொண்டு வீதிவழியே வீட்டிற்கு வந்துசேர்வார்கள். வீடு வந்ததும் வெளி வாசலில், சிறுமிகளைப் போலஇளமாதர்களும் கோலாட்டம் போட்டுத் தடையின்றி விளையாடிக் களிப்பார்கள். இவ்வாறு நம் பெண்டிர் சேர்ந்து குலாவச் சந்தர்ப்பமளிக்கும் கோலாட்டப் பண்டிகை வழக்கந்தப்பி மறைந்து போகாமல் நாட்டுப்புறம்போல நகரங்களிலும் விருத்திக்குக் கொண்டுவரச் செய்வதே நமது கடமை.



## சில தமிழ்ச் சொல்லின் சரித்திரக் குறிப்புகள்
### NOTES ON THE HISTORY OF SOME TAMIL WORDS

[ஸ்ரீமான் கே. வி. சுப்பய்யர் அவர்கள் எம்.ஏ., எல்.டி.]

#### உயிர்

இச்சொல் தமிழிலும் மலையாளத்திலும் உயிர் என்றும், கன்னடம் தெலுங்கு, துளுவம் ஆகிய இம்மூன்று பாஷைகளிலும் 'உஸுரு' என்றும் வருகின்றது. பழைய கன்னடத்தில் உஸிர் என்பது இதன் ரூபம். உஸிர் என்னும் பதத்திலுள்ள 'ஸி' என்பது மொழிக்கு முதலாக வரும் உகாரத்தின் வலியால் 'ஸு' ஆக மாறியது. இத்தகைய சப்த மாறுதல் கன்னடம், தெலுங்கு, துளுவம் ஆகிய இம்மூன்று பாஷைகளுக்கும் சகஜம். தமிழ் வழக்கிலும், மலையாள பாஷையின் வழக்கிலும் இச்சொல் 'உசிர்' என வருகின்றது.

இச்சொல்லின் பகுதி 'உஶ்' (√uj, j being a voiced palatal spirant) என்பதே. தமிழில் 'ஶ' 'ய' வாக மாறுவது சகஜம். அசல்: அயல்; ஈசல்: ஈயல்; குசவன்: குயவன் என்னும் சொற்களினின்று இம் மாறுதல் நன்கு புலப்படும். 'ஶ' என்பது 'ஸ' வாகக் கன்னடத்திலும் தெலுங்கிலும் துளுவத்திலும் காணப்படுகின்றது. குருக் (Kurukh) என்னும் வட திராவிட பாஷையில் 'உஜ்நா' என்பது உயிர் எனப் பொருள்படும். உஜ் என்னும் பகுதி இப்பாஷையில் பெறுகின்றோம்.

'உஶ்' என்றே நாம் மூச்சுவிடுகின்றோம். ஆதலால் உசிர் அல்லது உயிர் என்பது மூச்சு என்று பொருள்படும். இந்தப் பொருளில் 'உஸுரு' என்னும் சொல் கன்னடத்திலும் தெலுங்கிலும் துளுவத்திலும் வருகின்றது. 763, 880-ம் திருக்குறள்களில் வரும் உயிர் என்பதற்கு சுவாசம் என்பது பொருள்.

பிறகு மூச்சினால் ஆன சப்தத்திற்கு இச்சொல் வந்தது. புறநானூறு 138-ம் பாட்டில் 'வள் ளுயிர்ச்சீறியாழ்' என்பதில் உயிர் என்பதற்கு ஓசை என்பது பொருள். குறிஞ்சிப் பாட்டு 100-ம் வரியிலும் இந்தப் பொருளி

லேயே இச்சொல் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. பழைய கன்னடத்தில் உஸிர் என்னும் வினைச்சொல்லிற்குப் பேசு என்பது பொருள். (சப்தமணிதர்ப்பணம் தாது பாடம் பார்க்க).

தெலுங்கில் உஸுரு என்னும் சொல்லிற்கு சுவாசம், ஜீவன் என்ற பொருள்கள் இருப்பதோடுகூட, கடும் வார்த்தை அல்லது சாபம், பிறகு அதனால் உண்டாகும் கஷ்டம் என்ற பொருளும் உண்டு. இப்பொருள் 'உஸுரு' என்னும் பதத்திற்குள்ள 'சப்தம்' என்னும் பொருளினின்றே உண்டானது. சப்தம்: பேச்சு, கடும்பேச்சு: சாபம்: கஷ்டம் எனப் பொருள் விரிந்து வந்தது. వాని శాపము నీకుతగులును = அவன் சாபம் (அல்லது கஷ்டம்) உன்னைத் தாக்கும்.

ஆகையால் 'உஸ்,' என்னும் பகுதிக்கு, சுவாசம் விடு என்பது முதற்பொருள். பிறகு ஜீவி, வாழ் எனப் பொருள் வந்தது. பிறகு வாழ்: சாவினின்றும் தப்பித்துக்கொள்: தப்பித்துக்கொள் என வந்தது: 'உய்விடமறியேமாகி' (குறிஞ்சிப்பாட்டு 166). 'எரியாற் சுடப்படினுமுய்வுண்டா முய்யார், பெரியார்ப் பிழைத்தொழுகுவார்' என்னும் குறளிலும் உய்வு என்பதற்குப் பிழைத்தல், தப்பித்தல் என்பது பொருள்.

உய் (√uj) மூச்சுவிடுதல்: விடுதல்: செலுத்துதல் என்னும் பொருளில் வந்தது. மூச்சை விடுதல் அல்லது செலுத்துதல என்னும் பொருளினின்று பொதுவாகச் செலுத்துதல் என அர்த்தங் கொண்டது. 'நேமியுய்த்த' என்னும் புறநானூற்று 3-ம் பாட்டில், உய்த்த என்பதற்கு செலுத்திய என்பது பொருள்.

ஆகையால், பூர்வ திராவிடர்களுக்கு 'உயிர்' என்னும் சொல் சுவாசம், அல்லது மூச்சு என்றே பொருள்பட்டது. பிறகு அவர்களுக்கு சரீர தத்துவங்களின் ஞானம் விருத்தியடையவே, உயிர் என்பது ஜீவன் என்றும், உடம்பு இந்திரியங்கள் முதலிய கருவிகளை நடத்தும் அல்லது செலுத்தும் சக்தி என்றும் பொருள்பட்டது.

இது மாதிரியாகவே ஆங்கில பாஷையில் ஸ்பிரிட் (Spirit) என்ற சொல் ஆதியில் (breath) சுவாசம் எனப் பொருள்பட்டது. இப்பொழுதோ அதற்கு ஆன்மா என்பது பொருள்.

ஒவ்வொரு பாஷையின் அபிவிருத்தியிலும் அப்பாஷையின் சொற்கள் முதல் முதலில் திருசியமான பொருள்களைக் குறித்து, பிறகு அப்பாஷையைப் பேசுபவர்களின் ஞானம் விருத்தியடையவே, அதிருசியமான அப்பொருள்களின் குணங்கள், தொழில்கள் முதலியவைகளை ஆகு பெயராகக் குறிப்பது மிகவும் சகஜம்.

(2) உவா

இச்சொல் புறநானூறு 3-ம் பாட்டின் முதலடியில் உவவு என வந்திருக்கிறது. 'உவவு மதியுருவி னோங்கல் வெண்குடை' இதன் உரையில் உவாநாளின் மதியினது என எழுதப்பட்டிருக்கிறது.

உவா என்ற சொல்லிற்குப் பூர்த்தி, நிறைவு என்பது பொருள். இது மலையாளத்தில் உவாவு என வந்திருக்கின்றது. சாதாரணமாக இச்சொல் மலையாளத்திலும் தமிழிலும் வாவு என வழங்குகின்றது. ஒரு பக்ஷத்தின் பூர்த்தியைக் காட்டும் அமாவாசைக்கும் பௌர்ணிமைக்கும் உவவு எனப்பெயர். 'உவவு பராக மகோதய்ம்' (வேதாரணிய புராணம், மேன்மை 9.) 'உவவுத்திங்களையுறுப்பகைத்தகைத்து' (தணிகைப்புராணம்.)

மலையாளத்தில் கறுத்தவா என்பது அமாவாசை யென்றும், வெளுத்தவா என்பது பௌர்ணிமை என்றும், இளவா என்பது பஞ்சமி என்றும் பொருள்படும். வா வாவு என்பதன் குறை.

பிற்காலத்தில் அமாவாசையிலும் பௌர்ணிமையிலும் அத்தியயனம் செய்யாது அவைகளை விடுமுறை நாட்களாகக் கொண்டாடியதனை வாவு என்பதற்கு விடுமுறை எனப் பொருள் வந்தது.

இச்சொல் வேறு திராவிட பாஷைகளில் காணப்படவில்லை.

---

ஐரோப்பிய ஸ்கூல் டிரெயினிங் ஸ்கூல்களின் இன்ஸ்பெக்டரான மிஸ்டர் M. S. H. தாம்ப்ஸன் அவர்கள் எழுதுவது.— * மனத்தைக் கவரும் படியான உமது பத்திரிகையைப் படித்துப்பார்த்தேன். நல்ல தமிழில், எளிய நடையில் அது எழுதப்பட்டிருக்கிறது.



## அணுக்கிருமி சாஸ்திரமும், இந்துக்கள் ஆசாரமும்

## BACTERIOLOGY AND HINDU CUSTOMS

[ஸ்ரீமான் எம். பரமேசுவரய்யர் அவர்கள்]

அணுக்கிருமி சாஸ்திர மென்பது சுமார் 50 வருஷங்களுக்கு முன்னால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு நூதனமான சாஸ்திரம். இந்த சாஸ்திரமானது, நமது கண்ணுக்குப் புலப்படாத அணுப்பிரமாணமான கிருமிகளின் (பூச்சிகளின்) குணங்களையும் நடவடிக்கைகளையும்பற்றிச் சொல்லுகிறது. இந்தப் பூச்சிகள் ஆகாயத்திலும், ஜலத்திலும், நாம் உட்கொள்ளும் உணவிலும் இருக்கின்றன. இவை இருக்கிற சங்கதியைச் சுமார் 60 அல்லது 70 வருஷங்களுக்கு முன்னால் கண்டுபிடிக்கப் பட்ட அணுதரிசினிக் கண்ணாடியாலும் (Microscope), ரஸங்கள ரூபமாய் இவைகளைப் போஷிக்கும் ஆகாரங்களை இவைகள் மாற்றும் தன்மையாலும், நாம் அறிகிறோம்.



டைபாய்ட் சுரக்கிருமி

இவைகளில் சில, சலனமுள்ளனவாகவும், சில ஜடமாகவும் இருக்கும். இவைகளுக்குத் தகுந்த உணவும இருக்க இடமும் உண்டானால் ஒரு கிருமி ஒரு நாளைக்குள் அநேக கோடியாகப் பெருகும தன்மையை உடைத்தது.

இவைகளில் சில, மனுஷ்ய ஸாதனங்களுக்கு அத்தியாவசியமாய் அதிக உபயோகமானவையாயும், சில வியாதிக்கு முக்கிய காரணமாயும் இருக்கின்றன.

மனிதஸாதனங்களுக்கு உபயோகமானவை:- மாப்பண்டங்களைப புளிக்கச்செயது, அவைகளுக்கு மனிதனுடைய ஆகாரத்துக்கு வேண்டிய சுவையோடுகூட ஜீரணமும எளிதில் உண்டாக்குகிற சக்தியை உண்டு பண்ணுகிற ஒருவகை அணுக்கள்.

பால்தோயவும் தயிர்புளிக்கவும் செய்கிற மற்றொருவகையான அணுக்கள்.

திராக்ஷா ரஸங்களிலிருந்தும், இன்னும் சில தான்யங்களிலிருந்தும் சாராயத்தை உண்டாக்குகிற ஒருவகை அணுக்கள்.

உழுது பயிரிடும புலங்களில் ஏராளமாயிருந்து பூமிக்கிடும் எருவின் சத்தைப் பயிருக்குஉணவாகமாற்றிப் பயிர்களைப்போஷிக்கச்செய்யும் ஒருவகையான அணுக்கள்.

இப்படி மேற்சொல்லிய அணுக்கிருமிகளெல்லாம் சுகத்தை மனிதன் அடைய ஹேதுவாயிருக்கின்றன.

பாலைத் தோய்க்கும் அணுக்கிருமிகள் காற்றில் இருந்தபோதிலும, அவைகள் போதுமான அளவு இல்லாததினால் அதைத் தோய்க்கும் சக்தி அடைகிறதில்லை. இது நம் முன்னோர்களுக்குத் தெரியும். ஆகையால்தான் அவர்கள் இக்கிருமிகள் ஏராளமாயுள்ள பழையமோரில் கொஞ்சம்எடுத்து, கொஞ்சம் சூடாயுள்ள பாலில், "பிரை" வார்க்கிறார்கள். இம்மோரிலுள்ள கிருமிகள் பாலில் கலந்த புடனே இன்னும் ஏராளமாய்ப் பெருகி, அப்பாலைத் தோய்த்துத் தயிராகச் செய்கின்றன.

பாலிலிருந்து தயிர் செய்யும் விதம் மேனாட்டாருக்குத்தெரியவே தெரியாது. அநேக ஆயிரம் வருஷங்களாக நாம் அநுஸரித்து வரும் இந்த அற்ப ஆசாரம் இப்பொழுது அவர்களுக்கு அற்புதமாகவே யிருக்கும்.

ஐரோப்பா கண்டத்தில் உள்ள பல்கேரியா என்னும் நாட்டிலுள்ள ஜனங்கள் அதிக பலமுள்ளவர்களாகவும், தீர்க்காயுஸுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் அப்படி இருப்பதற்குக் காரணம் என்னவென்று தற்காலத்திய அணுக்கிருமி சாஸ்திரிகள் விசாரித்துப் பார்த்தபோது, அவர்கள் நம் இந்துக்கள் போலவே பாலைத் தயிராக்கிச் சாப்பிடும் அதிசயத்தைக்கண்டு இவர்கள் பலத்திற்கும் தீர்க்காயுஸுக்கும் காரணம், இந்தத் தயிர்தா னென்று தீர்மானித்தார்கள். இப்பொழுது தயிர் என்பது சாதாரணமாய் மேனாட்டில் கனவான்களால் உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது. பால் தோய்க்கும்போதும், பால் காயச்சும்போதும்

அதற்குப் “பிரை” வார்க்கும்போதும் அனுசரிக்கவேண்டிய விதிகள் அநேகம் இருக்கின்றன. அதை நம்மவர் கவனிக்காமல் போனதால் நம் நாட்டுத் தயிர், முன் மாதிரி அவ்வளவு சுத்தமுள்ளதாயிராமல், காற்றிலுள்ள அநேக மற்றைய அணுக்கிருமிகள் கலந்து கெட்டுப்போயிருக்கின்றது. கல்கத்தாவில் நம்மவர் செய்யும் தயிர் கெட்டுப் போகாமல் இன்னும் நன்றாகவே இருக்கின்றது. மனிதனுக்கு உபயோகமாயுள்ள அணுக்கிருமிகள் வரலாற்றை எடுத்துச் சொல்லப் பெருகும். மேலே சொன்னதினால் கண்ணுக்குத் தெரியாமல் நமக்கு அனுகூலம் செய்கிற தெய்வ சிருஷ்டிகள் அநேகம் இருக்கின்றனவென்பது புலப்படும்.

மனிதனுக்கு வியாதியை உண்டாக்கும் அணுக்கிருமிகள்:—

இவை காற்றிலும், ஜலத்திலும், மனிதன் உட்கொள்ளும் ஆகாரங்களிலும், மலம் முதலான அசுத்தங்களிலும், அழுகும் மாம்ஸம் முதலான பண்டங்களிலும் அதிகரித்திருக்கின்றன.



காலராக் கிருமிகள்

இவை பெருகுவதற்கும், பரவுவதற்கும் காரணம் அசுத்தமான காற்று, அசுத்தமான இடம், அநாசார போஜனம், அசுத்த ஜலம் என்று தற்காலத்திய சுகாதார விளக்ககர்த்தர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். ஒவ்வொரு கொடிய வியாதியை உண்டாக்குவதற்கு ஒவ்வொருவித அணுக்கிருமிகள் காரணமாயிருக்கின்றன.

பித்தவாதசுரத்தை உண்டாக்குவது ஒருவகையான அணுக்கிருமி. இது பெருகுவதற்குத் தகுந்த ஸ்தானம் மனிதன் குடல். இவ்வியாதியால் வருந்துபவர்களின் மல ஜலத்தில் இவை ஏராளமாயிருக்கும். குடிக்கும் ஜலத்திலோ, அல்லது ஆகாரத்திலோ இம்மல ஜலங்கள் கலந்தால் இவை மற்றவர்களால் உட்கொள்ளப்பட்டு அவர்கள் குடலில் பெருகி வியாதியை உண்டாக்குகின்றன. ஓ இவர்கள் மலஜலத்தில் உட்கார்ந்த ஈ ஒன்று, மனிதன் ஆகாரத்தில் உட்கார்ந்தால் அந்த ஆகாரம் அசுத்தமே. அதைச் சாப்பிட்டவர்களுக்கும் இந்த வியாதி வரும்.

காலராவும் இம்மாதிரிதான். இக்கிருமிகளும், உண்ணும் ஆகாரத்தின் வழியாகவும் ஜலத்தின் வழியாகவும் உட்சென்று வியாதியை உண்டாக்குகின்றன.

பிளேக் என்னும் சுரம்:—தெள்ளுப்பூச்சி மூலமாய் இந்நோய்க்குரிய அணுக்கிருமிகள் மனிதனுடைய இரத்தத்தில் கலந்து சுரத்தை உண்டுபண்ணுகின்றன.

இப்பொழுது சுருக்கமாய்ச் சிலவியாதிகளை உண்டாக்கும் அணுக்கிருமிகளின் குணங்களைச் சொன்னோம்.

நாகரீகமும் படிப்பும் மேலிட்டுச் சாஸ்திர விருத்தியடைந்து அநேக சாஸ்திரப் பரீக்ஷைக்குரிய ஸாதனங்களும் ஏற்பட்டபின்பு மனிதன் சுகம் பேறும் முறை இன்னதென்று நிர்ணயிக்கப்பட்ட தற்கால அணுக்கிருமி சாஸ்திரமும், சுகாதார சாஸ்திரமும், நம்முன்னோர்க்கு அநுபவத்திலேயோ புத்திகூர்மையினாலோ அல்லது ஸகலமும் அறியக்கூடிய ஞானத்தினாலோ தெரியுமென்றும் அதுபற்றியே அவர்கள் மனிதன் சுகமாய் வாழ அநேக ஆசாரவிதிகள் சாஸ்திர மூலமாய் ஏற்படுத்தியிருக்கிறார்களென்றும், பின்வரும் சில ஆசாரங்களால் தெரியவரும்.

நம் ஹிந்துக்களின் ஆசாரமும, தத்காலத்திய சுகாதார சாஸ்திரமும் மிகவும் ஒத்திருக்கின்றன. நம் ஆசாரமே சுகந்தருவதில் மேம்பாடுடையது என்று சொல்லலாம்.

மனிதர் நன்மைக்காக ஏற்படுத்திய இந்த ஆசாரத்தின் மகிமை அறியாமல் சிறுவயதில் நாம் ஏளனம் செய்தோம்.

இந்தப்பழிக்கு நம் முன்னோர்களே ஆளாகிறார்கள். இவர்கள் ஏற்படுத்தியுள்ள ஒவ்வொன்றுப் கட்டளைகளாக நியமிக்கப்பட்டுப் பாப புண்ணிய சம்பந்தமாக முடிகிறதே ஒழிய, தத்காலத்திய சாஸ்திர பத்ததியாய்க் காரணங்கள் சொல்லி, அதை அனுஸரிக்கா



விட்டால் வரும் அபர்யத்தையும் அவஸ்தையையும் எடுத்துச் சொல்லவில்லை.

ஆகையால் நம் மதத்துள்ள புராணங்களும் புண்ய கதைகளும், தற்காலத்திய நாகரீகமுள்ள சிறுவர்களால் எவ்வளவுபோற்றப்படுகின்றனவோ, அதேமாதிரி மனிதன் வாழ்நாளுக்கு இன்றியமையாத இந்த ஆசாரங்களும் பலங்குறைந்து க்ஷீணதசையடைந்தன. நம்முன்னோர்கள் தாங்கள் சிரமப்பட்டு நிர்ணயித்து, பின் தாமே அனுஸரித்துவந்த இந்த ஆசார விதிகளுக்குக் காரணமும் காட்டியிருந்தால் நாம் இந்த ஆசாரங்களை இவ்வளவு ஸுலபமாய்க் கைநழுவவிட்டிருக்கமாட்டோம்.

ஸ்நானத்துக்குவேண்டிய ஆசாரம்:—தொத்து வியாதிக்காரர்கள், மிலேச்சர்கள், தீட்டான ஸ்திரீகள், கால்நடைகள், இவர்களெல்லாம் பொதுவாய் ஸ்நானம் செய்யும் குளங்களில் ஸ்நானம்செய்யக் கூடாது என்பது நம் ஆசாரம். இது தத்கால சாஸ்திரத்துக்கு மிகவும் ஒத்திருக்கிறது. தொத்து வியாதிக்காரர்களைப் பீடிக்கும் கிருமிகள் அவர்கள் உடம்பிலும் உடையிலும் இருக்கும். இவர்கள் ஸ்நானம் செய்த ஜலத்தில் மற்றவர்கள் ஸ்நானம் செய்தால் அவைகள் இவர்கள் துணியிலும் உடம்பிலும் ஒட்டி வியாதியை உண்டாக்கும்.



பிளேக் கிருமிகள்

மிலேச்சர்களெனப்படுவோர், மாம்ஸாதிகளோடும், தோல் முதலான வஸ்துக்களோடும் பழகுகிறவர்கள். இவர்களுக்குச் சுத்த, அசுத்த ஞானம் இல்லை. இவர்கள் உடையும் உடம்பும், அழுகிய மாம்ஸாதிகளிலிருக்கும் அணுக்கிருமிகளால் நிறையப்பட்டிருக்கும். அவர்கள் ஸ்நானம் செய்தால் ஜலம் அசுத்தமாகும். இதுபற்றியே இவர்களை விலக்கினது. ஸ்நானம் செய்யும்போது தண்ணீரில் வாய்க்கொப்புளித்து உமியக்கூடாது. தொத்து வியாதியில்லாத சாதாரண ஜனங்கள்கூட இதைச் செய்யக்கூடாது என்ற கட்டுப்பாடு, அதிக புத்தியும் முன் ஆலோசனையும் உள்ளதாய் இருக்கிறது. க்ஷய ரோகமானது, தான் இருப்பது அறிவிக்காமலேயிருந்து திடீரென்று வரும். இவ்வியாதியால் வருந்துவோர் கபம் எச்சில் முதலானதுகள், அதிக அபநயமானவை. இவ்வியாதியின் கிருமிகள் ஸ்நானம் செய்வோரைப் பீடிக்கும். ஆகையால் யாராயிருந்தாலும், தண்ணீரில் உமியக்கூடாது என்ற சட்டம் அதிக முன் ஜாக்கிரதையுள்ளது.

எச்சில் என்பது நமது தத்துவஞானிகளுக்கும் மற்றைய நாட்டாருக்கும் ஏளனத்துக்கிடமாகிய ஒரு அநாசாரம். இந்துக்கள் தவிர மற்றைய நாட்டாருக்கு இது அநாசாரமென்று ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இது நமக்கு மஹா அருவருப்பைக் கொடுக்கக்கூடிய அநாசாரம். தத்கால சாஸ்திரப்பிரகாரம் எல்லாருக்கும் இது அநாசாரமாக ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது சாதாரணமாய் ஒவ்வொரு கவர்ன்மெண்டு ஆபிஸிலும் “கட்டடத்துக்குள் ஒருவரும் எச்சில் துப்பக்கூடாது” என்ற அறிக்கையைக் காணலாம். இதற்குக் காரணம் எச்சில்அநேக வியாதி பரவுவதற்குக் காரணமாயும் க்ஷயரோகம், சிலேஷ்மசுரம், காலரா, பித்தவாதசுரம் முதலான வியாதிகள், ஷை வியாதிகளால் பீடிக்கப்பட்டவர்களின் எச்சிலினால் பரவுகின்றதென்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

முப்பது வருஷத்துக்கு முன்பு எச்சில் நமக்கு எவ்வளவு அநாசாரமாயிருந்ததோ, அவ்வளவுக்கவ்வளவு இப்பொழுது ஆசாரமாயிருக்கிறது.

மேனாட்டார், கோப்பையில் காபி சாப்பிடும் போது எச்சில் செய்து, சீப்பிச் சாப்பிடுகிற சுகம் நம்மவர்க்குத் தெய்வானுபோகமெனத்தோன்றி அப்போகத்தைத் தாமும் அனுபவிக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

இவர்களுக்கு, வீட்டில் பெரியோர்கள் தொந்தரவில்லாமல் சுகம் அனுபவிக்க நாடெங்கும் காபி ஹோட்டல்கள் ஏராள

மாயிருக்கின்றன. இவைகளில் வாழையிலை, சருகு தொன்னை, புருடம்ப்ளர்தான் ஆரம்பத்தில் பாத்திரங்கள். இப்பொழுதோ பீங்கான் பிலேட், கோப்பைகள், சீமைக் கரண்டி இவை பாத்திரங்களாக மாறி, மேஜை நாற்காலிகளும் ஏற்பட இவர்கள் அநுபவிக்கும் போகம் இந்திர போகமே!

தற்காலத்தில் நம் சிறுவர்களின் நிலைமை அதிகப் பரிதாபப் படத்தக்கது. நம் முன்னோர், ஆசாரங்கள் புண்யமென்றும், அநாசாரம் பாபமென்றும் சொல்லி அவைகளுக்குத் தகுந்த காரணங்கள் கூறாமையால் நம் சிறுவர்கள் தங்கள் புத்திக் கெட்டாமல் தள்ளிவிட்டார்கள். தற்காலத்திய சுகாதார சாஸ்திர முறையையும் நிரக் கற்ருர்களில்லை. ஆகையால் இவர்கள் அநாசாரத்தை ஆசாரமென்றே கொண்டாட வேண்டும்.

இந்தத் திண்டிவிற்கும் சாலைகளில் உபயோகிக்கும் பாத்திரங்கள் சரியாய்க் கழுவப்படுகிறதில்லை. குழாயின் முன்னல் நிறைந்திருக்கும் தொட்டி ஜலத்தில் போட்டு எடுத்துவிட்டு ஒரு அழுக்கு வஸ்திரத்தால் துடைத்து


மலேரியாசுரக் கிருமிகள்

அதிக அவசரமாய்க் காத்துக்கொண்டிருக்கும் கனவானுக்குப் பாத்திரமாக மேசையில் பறப்பப்படுகிறது. வீட்டில் எச்சில் செய்த பாத்திரத்தை அடுப்பில் போட்டுக் காய்ச்சி எடுத்தபிறகுதான் உபயோகிக்கலாம் என்பது ஆசாரம். இங்கே குழாய் ஜலத்தில் ஸ்நாநம் செய்விக்கப்பட்டவுடனே இந்தப் பாத்திரங்கள் பாபங்களெல்லாவற்றையும் இழந்து புண்ணிய புருஷர்களுக்கு உபசரிக்கும் தன்மையை அடைந்துவிடுகின்றன போலும்!

கொடிய வியாதியுள்ள காலங்களில்அகஸ்மாத்தாய் ஒரு வியாதிஸ்தன் இப்பாத்திரங்களை உபயோகித்த பிறகு, பிறர் அதையே உபயோகிப்பாரானல் அதனல் வரும்அநர்த்தம் சொல்லிமுடியாது.

அதிக ஆசாரமாயும் சுத்தமாயுமிருக்கிற கனவான்கள் வீட்டுக் குழந்தைகளுக்கு அகஸ்மாத்தாய் பித்தவாத சுரமும், காலராவும் வருவதற்கு முக்கிய காரணம் இத்தின்பண்ட சாலைகளில் நடக்கும் அநாசாரயாகவே யிருக்கலாம்.

சாப்பாட்டுக்குரிய ஆசாரம்:—

நம்மவர்கள் தட்டுகளிலும், கிண்ணங்களிலும் சாப்பிடுவது அநாசாரமென்று தள்ளிவிட்டார்கள். ஏனென்றுல் சாப்பிட்டபிறகு இந்தத் தட்டுகளைக் கழுவுவது மஹா கஷ்டமான வேலை. ஒருவர் சாப்பிட்ட தட்டில், மற்றவர் சாப்பிடச் சுத்தமாயிருக்கவேண்டுமானல் நெருப்பில் போடவேண்டும். ஜலம் விட்டுச் சுத்திசெய்வதினுல் வியாதியை உண்டாக்கும் அணுக்கிருமிகள் சாகா.

ஆனதுபற்றியே, நமக்கு இலைகளைப் போஜன பாத்திரங்களாக ஏற்படுத்தியிருக்கிருர்கள். போஜனம் முடிந்தவுடன் இவைகுப்பையில் எறியப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக யிருப்பதால் பயமில்லை. வியாதிஸ்தர்கள் சாப்பிட்டபோதிலும்அவர்கள் வியாதி மற்றெருவரைத் தொடர இடமில்லை.

போஜனம் எடுத்துப் பரிமாறும்போது கையில் தொடக்கூடாது என்பது நமது ஆசாரம். இது சிராத்தாதிகளிலும், இன்னும் தத்கால சாஸ்திர விசாரணைமுற்றிய பண்டிதர்கள் வீட்டில்மட்டுமே அனுஸரிக்கப்பட்டுவருகிறது. தற்காலத்தியநாகரீகம் மேலிட்ட நம் சிறுமியர்க்குக் கையில் எடுத்துப் பரிமாறுவது அநாசாரமென்று தெரியாது. கையால் எடுத்துப் பரிமாறுவதில் வரும் திங்கு இவ்வளவு அவ்வளவல்ல.

பித்தவாத சுரம் வந்த ஒருவனுடைய மலமூத்திரங்களில் அச்சுரத்துக்கு ஏதுவான அணுக்கிருமிகள், வெகுகாலம் வரை ஜீவித்திருக்கிறதாம். அவன் கை கால் சுத்திசெய்யும்போது சரியாய்ச் சுத்திசெய்ய முடியாததனுல் அவன் கையால் தொட்டுப் பரிமாறும் போஜனமெல்லாம் விஷமாகவே முடியும்.

பரிசாரகன் சுத்தமாயிருக்கிருனென்கிற திருப்தி போதாது. அவன் கையில் இருக்



கும் கிருமிகள், அவை சாகக்கூடிய லோஷன் முதலானது போட்டுக் கழுவினுலொழிய சாகா.

பித்தவாத சுரம் பரிசாரகர்கள் மூலமாய், அவர்கள் பரிமாறச் சாப்பிட்டவர்களைப் பிடித்திருக்கிறதற்கு அநேக உதாரணங்கள் உண்டு.

காலரா என்னும் கொடிய நோய்க்குள்ள கிருமிகளும், மல மூத்திரங்களில் கொஞ்ச காலம் இருப்பதனுல், இவ்வியாதியும் பரிசாரகர்களால் பரவும்.

இதுகாரணம்பற்றியே நம்முன்னோர்கள், கைபட்ட பதார்த்தம் நஷ்டமென்று விலக்கினுர்கள்.

நம்முடைய ஆசாரம் ஒவ்வொன்றையும் சொல்லி, அது தத்கால சுகாதார சாஸ்திரத்துக்கு ஒத்திருக்கிறதாவென்று பார்ப்பதற்கு இச்சிறிய வியாஸம் இடந்தராது. அவைகளையெல்லாம் ஒருபுஸ்தகரூபமாய்ப் பண்டிதர்கள் ஸகாயத்தோடு வெளியிடவேண்டும்.

முற்சொல்லிய வியாதியுண்டாக்கும் கிருமிகள் நாகரீகமும் அதிக ஆசாரமுமுள்ளவர்களைத்தான் பிடிக்கிறது. அநாசாரமுள்ளவர்களைப் பிடிக்கிறதில்லை என்கிற வாதம் தப்பு. நாகரீகமுள்ளவர்களிலும் இல்லாதவர்களிலும் சிலருக்குச், சில வியாதிகளை வராமல் தடைசெய்யும் சக்தியிருக்கிறதென்றும் ஆகையால் ஒரேவியாதி சிலரைப் பிடித்து மற்றவர்களைப் பிடிப்பதில்லையென்றும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

அதிக ஆசாரம் அதிக சுகம் என்னும் பழமொழி, சகலமும் கற்று அநுபவிப்பவர்களுக்கே தெரியும். அப்படிக் கல்லாத நாம், பெரியோர் வாக்கைத் தெய்வவாக்காக நம்பி நாமும் கற்று, காரணம் அறியும் வரையில் அவர்களால் நியமிக்கப்பட்ட ஆசாரங்களை அனுஸரித்து, அறிந்த பிறகு அவர் பெருமையையும் தீர்க்காலோசனையையும்பற்றிப் புகழ்வதே மேன்மைக்குணமாகக் கொள்ளுவோமாக!

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்".—திருக்குறள்.

# கம்பர் கவிதை

## KAMBAN'S ART

[ஸ்ரீமான் டி.எஸ். ராமச்சந்திர ஐயரவர்கள், பி. ஏ.]

உலகிற் கல்வியிற் பெரியன் கம்பன் என வழங்குகிறது. அக்கல்வியோ கடலினும் பெரிது. ஆகவே, கம்பர் கவிதையைப் பற்றி எழுத எத்தனிப்பது துரும்பு பற்றிக் கடல்கடக்க முயல்வது போலாகுமேயென்று மனம் கலங்குகையில் அவருடைய பாடலொன்று ஞாபகத்திற்குவந்தது. நல்லகவிதை இப்படிப்பட்ட தென்பதை அவரே வெளிப்படுத்தி யிருக்கிருர். சான்ருேர் கவியானது "புவியினுக்கணியாய் ஆன்ற பொருள் தந்து, புலத்திற்ருகி, அவியகத்துறைகள் தாங்கி, ஐந்திணை நெறியளாவி, சவியுறத்தெளிந்து தண்ணென்ருெழுக்கமும் தழுவி" யிருக்கும் என்ருர். இவ்வாருன குணங்களிற் சிற்சில, மற்றைய கவிகளில் காணப்பட்டாலும் எல்லாம்ஒருங்கே காணப்படுவது கம்பர் கவிதையில்தான் என்று தைரியமாய்ச்சொல்லலாம். இதுபற்றியே "கம்பநாடன் கவிதையிற்போற் கற்ருேர்க் கிதயங்களியாதே" என்று கூறப்பட்டிருக்கிறது. இக்குணங்களைப்பற்றித் தனித்தனியே விரிவா யெழுதவேண்டியதா யிருந்தாலும் சுருக்கமாய் ஒருவாறு எழுதலாமென்று துணிந்தேன்.

கவியானது உலகத்ததாருக் கலங்காரமாயிருக்க வேண்டுமென்ருர். இராமாயணக் கவிகள், சொல்வோர் வாக்கிற்கே பூஷணமாயிருப்பதன்றி அவர்கள் பெறும் சிறப்பை, இந்நகரில் அறியாதாரில்லை. கவி சதுர்வித புருஷார்த்தங்களுக்கும் சாதனமான பொருளைத் தரல்வேண்டுமென்ருர். தர்மத்தைப்பற்றிச் சொல்வதன்றி அதை இவ்வாருக நடப்பிக்கவேண்டு மென்பதைக் காட்டத்தக்க சரித்திரம் இராமாயணத்தையன்றி யுண்டோ? இது நிற்க, அறிவிற் பதியவேண்டுமென்ருர். சொல்லும் பொருளுமிசைந்து இவ்வாறு கூறுவதியார்க்கும் இயலாது என்று இக்கவியை நோக்கி வியவாதாருண்டோ! படிக்கப்படிக்கஅறிவில்அதிசயத்தை விளைவிப்பதாயும் கவியினழகு வெளிப்

படுவதாயுமிருக்கிற இக் கவியைப்படித்தவர்க்கு அதிகமாகச் சொல்லவேண்டுவதில்லை. இச்சொல் நயத்தைப்பற்றி இவரே "நல்லியற் கவிஞர் நாவிற் பொருள்குறித் தமர்ந்த நாமச் சொல்லென" என்று இராம பாணத்தை நற்கவிகளுடைய சொல்லுக்கொப்பிட்டார். பதங்கள்பொருள் குறித்தேயிருத்தலும், பொருளுக்குப் பொருத்தமாயிருத்தலும் அப்பதத்தைத் தவிர்த்து வேறு பதங்கள் பொருந்தாமையும் ஒவ்வொரு கவியிலும் காணப்படும்.

இன்னும் பரிசுத்தமான அகத்துறைகளடங்கி யிருக்கவேண்டுமென்றார். இக்கவி, மற்றைய ரசங்களைப் பார்க்கிலும் சிருங்கார ரசத்தை விசேஷித்துச் சொல்பவரென்பது சாரதாரணமாய்க் காணப்படுகின்றது. ஏனெனில், வீரம் சோகம் முதலிய ரசங்களை வர்ணிக்குமிடங்களிற்கூடச் சிருங்காரமான உபமானங்களையும் வர்ணனைகளையும்பார்க்கலாம். உதாரணங்கள் கணக்கற்றிருப்பினும், இளையவனும் இந்திரசித்தும் செய்த யுத்தத்தை வர்ணிக்கும்போது அவர்கள் தேகத்தில் கணைகள் அடிமுதல் தலை வரையில் "காமக்குல மடமங்கையர் கடைக்கண்ணென" தைத்தனவென்றும், இந்திரசித்த னிறந்ததைக் கேட்டு வரும் மயன் மகள் "கருங்குழற் கற்றைப் பாரங் கால் தொடக் கமலப்பூவால் குரும்பையைப் புடைக்கின்றாள்போல் கைகளால் முலைமேற்கொட்டி" வந்தாளெனவும் வர்ணித்தார். இவ்வாறு குற்றமெனக் கருதும்படியாகக்கூடச் சிருங்கார ரசத்தைச் சிறப்பித்துச் சொன்னாரானாலும், இவரது அகத்துறைகள் கிராமியமாயும் வெளிப்படையாயு மிராது, பரிசுத்தமாயும் மறைபொருளாயு மிருப்பதைக் காணலாம். அகப்பொருளுக்கென்றே யெழுதப்பட்ட படலங்களிற்கூட இதைக் காணலாம். பூக்கொய்தலை வர்ணிக்குமிடத்து "மாரன்னனையான் மலர்கொய்திருந்தானை வந்தோர், காரன்ன கூந்தல் குயிலன்னவள் கண் புதைப்ப வாரென்னலோடும் அனலென்ன வயிர்த்துயிர்த்தாள்" என்றதிலும்; இராமன் உலா வருங்காலத்தில் "மற்றொன்றும் காண்கிலாதாள் தமியளே வள்ளலென்றாள்"என்றும்; அயோத்தியா காண்டத்திற் "செங்கணும் கரிய கோல மேனியுந்தேருமாகி யெங்கணும் தோன்றுகின்றார் எனைவரோ யிராமர்" என்றும் கூறியிருப்பதிலும் சூர்ப்பநகை இராமனைக்கண்டு "அவன்செயத்திருவுடம்பலச நோற்கின்றான்" இவன் "தவன் செயத்தவன்செய்தவனென்" என்று கூறியதிலும், இராவணன் சீதையைத் தனக்கிணங்கும்படி வேண்டுங்காலத்து "உலகமொன்றோடிரண்டொருங் கோம்பு மென் அலகில் செல்வத்தரசியலாணை யிற்றிலகமே நின்றிறத்தநங்கன்றரு கலகமல்லதெளிமையுங் காண்டியோ" வென்று சொல்லியதிலும் உள்ள நயத்தை எடுத்துக் காட்டுவ தவசியமில்லை.

இனி ஐந்திணை நெறி யளாவியிருத்தல் வேண்டுமென்றார். கம்பர் பழக்கமில்லாத மலைநாட்டை வர்ணிக்குங் காலத்திற்கூட அந்நாட்டின் இயல்பை சுபாவோக்தியாக நன்கு விளக்குகிறாரென்பது சித்ரகூடப் படலத்தில்ஆண்யானையானது,"தழைகொண்டு மழலை வண்டோச்சித் தேனினை முழைநின்றும் வாங்கி பெருகு சூலிளம் பிடிக்குவாயினிற் பருகக் கொடுக்கிற"தென்றும் சந்தனச் சோலையில் சந்திரன் "நுழைந்து போகின்ற தொக்கின்றது" என்றும், கூறியிருப்பதனாலேயே விளங்குகிறது. எல்லாத் திணைகளிலும் இவர் வர்ணனைகள் ஒப்பற்றவைகளே.

பின்னும் கவி பிரகாசமாயும் தெளிவாயுமிருக்க் வேண்டுமென்றார். ஆனால் தெளிவாயிருக்கவேண்டுமென்றால் வெள்ளைப் பட்டாயிருக்கவேண்டு மென்பதல்ல. இதையே பம்பாஸரஸை வர்ணிக்குமிடத்தில் "கீழுறக் கற்பகமனையவக்கவிஞர் நாட்டிய சொற்பொருளா மெனத் தோன்றல் சான்றது" என்றார். ஆகவே பொருள் ஆழ்ந்திருப்பதுடன், தெளிவாயிருத்தல்வேண்டும். சந்தேகத்திற்கிடமில்லாமலும் உயர்ந்தும் மனதுக்கு இன்பத்தை விளைவிப்பதாயுமிருக்கிறபொருளைத் தரல் வேண்டும். அப்படிக்கல்லாது, தெளிவில்லாத கவியை இவரே "புன்கவியெனத் தெளிவின்றி"என இகழ்ந்து கூறியிருக்கிறார். இவர் கவியைப்படிக்கும்பொழுதே பொருள் மனதிற் பதிவதோடுகூடப் படிக்கப்படிக்க அதிலுள்ள நயங்கள் வெளிப்படுவதை



எல்லோருங் காணலாம். இதெல்லாம் நிற்க, குளிர்ந்த நடையோடு கூடியிருக்கவேண்டுமென்றார். அதாவது அமர்ந்த நடையாயிருக்க வேண்டும். அதாவது சமயத்துக்குசிதமான நடையாயிருக்க வேண்டும். இதில் கம்பர் கவிதைக்கீடுசொல்லமுடியாது. இதற்கு உதாரணங்கள் தனித்தனி யெடுத்துக் கூறினால் இடம் போதாது. ஆனாலும் இராமன் சீதையைப் பிரிந்து கார் காலத்தில் வருந்துவதை வர்ணிக்கு மிடத்து "கிளவி தேனினும் மமுதினும் கிளைத்த வெள்வளைத்தோளளவி யுண்டவன் வருந்துமென்றாலது வருத்தோ" என்றும், ஜானகி மானைப் பிடித்துக்கொடுக்கும்படி கேட்ட காலத்தில் "சேயரிக்குவளை முத்தம் சிந்துபு சிதறிப்போனாள்"என்றும், இராமன் கான் புகக் கருதிக் கோசலை கோயில் புகுவதை "குழைக்கின்ற கவரியின்றிக் கொற்றவெண் குடையுமின்றி, இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம் பின்னிரங்கியேக, மழைக்குன்றமனையான் மவுலி கவித்தனன் வருமென்றென்று, தழைக்கின்ற உள்ளத் தன்னாள் முன்னொரு தமியன் வந்தான்" என்றும் கூறிய பாடல்களின் நடை நயம் எல்லாருக்கும் தெரிந்ததே.

கம்பர் கவிதையின் அருமை பெருமைகளை நோக்குங்கால் மேலெழுதியவைகள் கொஞ்சமேனும் போதா. அதன் சொல் நயம் பொருள் நயம் நடையிசை யலங்காரம் முதலியவைகளை யுணருமிடத்து அவராலே சொல்லப்பட்டிருக்கும் நற்கவி இலக்ஷணங்கள் அவர் கவிதைக்கே யமைந்தன வென்று தோன்றுகிறது.

'திராவிடாபிமானி'—* (விவேக போதினி)இதில் கல்வி, வியவஸாயம், கைத்தொழில், மதஸம்பந்தமான விஷயங்கள், மற்றும் பல சமாசாரங்களும் அடங்கியிருப்பதோடுஸ்திரீகளுக்கான பக்கங்களும், சிறுவர்களுக்கான பக்கங்களும் நன்றாய் எழுதப்பட்டிருக்கின்றன. * தன்பேருக்கேற்ப இப்பத்திரிகை அறிவைப் பரவச்செய்யும் என்பதற்கு ஐயமில்லை.

***

"கலாநிதி"—* * (விவேக போதினி) நல்ல தமிழில் எழுதப்பெற்று அழகாக பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.தென்னிந்தியாவில் பதிப்பிக்கப்பெறும் பல தமிழ் மாதாந்திரப் பத்திரிகைகளில் இதுவே சிறந்ததென்று சொல்லுவோம்.

## தென்னிந்தியா சரித்திரத்தின் ஆராய்ச்சி

## THE STUDY OF SOUTH INDIAN HISTORY

[ராவ் பஹதூர் ஸ்ரீமான் டி. விஜயராகவ ஆசாரியார் அவர்கள், எம். ஏ.]

இந்திய சரித்திரப் போக்கில்,பிரிட்டிஷார் இந்த நாட்டுக்கு வருவதற்கு முன்னால், தனக்கென்றே சரித்திரத்தையுடைய நாடுகளில் தென்னிந்தியா ஒன்றாகும். இந்நாடு, கிருஷ்ணா, துங்கபத்ரா நதிகளுக்குத் தெற்கில் பரவியிருந்ததெனப் பொதுப்படச் சொல்லலாமானாலும், அதற்கு வடக்கிலிருந்த சில ஜில்லாக்கள் கூடியும், மேற்கு மலைத் தொடர்ச்சிக்கு மேற்கேயுள்ள பிரதேசங்கள் குறைந்தும் இருந்தது. இந்நாட்டுக்குப் பிரத்தியேகமான சரித்திரம் உண்டு. மேலும், முகம்மதியர்களுடைய ஆளுகையில் இது வெகு காலம் வரையில் செல்லாமலிருந்தபடியால், முழுவதும் இந்திய ராஜ்யமாகவே இருந்தது. முகம்மதிய அரசாட்சிக்கு முந்திய காலத்தில் இங்கு இந்திய அரசர்கள் வெகு சிலாக்யமாய் ஆண்டுவந்தனர். கி. பி. பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தென்னிந்தியாவின்மீது முகம்மதியப் படையெழுச்சி நிகழ்ந்தது. ஆனால் அது உடனே மறைந்துபோயிற்று. மறுபடியும் முகம்மதியர்கள் ஒன்றுகூடிக் கிளம்புவதற்கில்லாதபடி விஜயநகர ராஜ்யம் தலையெடுத்து நம்மைக் காப்பாற்றியது. கி. பி. 1565-க்குப்பின், 40 அல்லது 50 வருஷங்கள் வரையில் இந்தியரும் முகம்மதியரும் அதிகாரத்துக்கு விவாதப்பட்டனரென்றாலும் தென்னிந்தியாவில் முகம்மதிய அதிகாரம் பரவவில்லையாதலால், அவ்வரசாட்சி முழுவதும் இந்தியரின் மாதிரியைப் பின்பற்றியதாகவே இருந்தது.

இந்தியாவின் மற்றைப் பாகங்களிற் காட்டிலும், தென் பாகத்தில் வர்ணாசிரம தருமம் வெகுவாக நிலைத்து நின்றது. என்றாலும், அதுகாரணமாக ஸமூகத்திய நாகரீகம் பின்னடையவில்லை. வர்ணாசிரம தருமம் மும்முரமாகவிருந்தாலும்,தென் தேசத்தில் ஸ்திரீகளுடைய நிலைமை, வட தேசத்தி

லுள்ளதைக் காட்டிலும் மேலாகவே இருந்தது கவனிக்கற்பாலது. தென்னிந்தியாவில் "கோஷா" முறை கிடையாது. அதாவது, ஸ்திரீகள், பர புருஷர்களுடைய முகத்தைப் பார்க்கக்கூடாது என்ற நிர்ப்பந்தம் இல்லை. மலையாளத்தில் வர்ணாசிரம தர்மம் வேரூன்றிப் போனபோதிலும் ஸ்திரீகளுடைய நிலைமை அங்கு வெகு உயர்வாகவே இருக்கிறது.

இன்னும், தென்னிந்தியாவில், மார்க்கக் கொள்கை விசேஷித்திருந்ததால், ஜனங்களுடைய மனமும் அதை அவலம்பித்தது. பௌத்த மதத்துக்குப் பின்னால், தென்னிந்தியாவில்தான் மார்க்கக்கொள்கை அதிகமாய்ப் பரவியது. வைஷ்ணவ மத ஸ்தாபகரான ராமாநுஜாசாரியர், ஹிந்து மார்க்கத்திலேயே யிருந்து, இப்போதைய சீர்திருத்தக்காரர்கள் விரும்பும் நிலையை அடைய முயற்சித்தனர். பிரிட்டிஷ் ஆதிபத்தியத்துக்கு முன்னமேயே, தென்னிந்தியாவில், மார்க்கக் கொள்கையில் மித நிலைமையும் மித புத்தியும் விளங்கி வந்தன. ஹிந்துக்களுடைய முறைப்படியே புருஷார்த்தத்தை யடையப் பிரயத்தனப்பட்டதுதான், தென்னிந்தியாவின் சிறப்புக்குக் காரணம்.

இத் தென்னிந்தியாவில், தஞ்சாவூர் ராஜ்யம் இன்னும்சிறப்புடைத்தாய் விளங்கியது. புராதன சோழர்காலம் முதற்கொண்டு, கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு வரையில் இடையறாத சோழ ஆதிபத்யம் அங்கு நடைபெற்றது. அச்சரித்திரத்தைப் படிப்போர்க்கு, சோழர்களின்கீழ் தஞ்சை ராஜ்யம் எவ்வளவு மகோன்னத நிலைமையிலிருந்ததென்பது புலப்படும். நீர்ப்பாசன விஷயமாக இப்போதுள்ள முறைகள், சோழர்களுடைய முறைகளாம்; கொள்ளிடத்தில் கட்டப்பட்ட பெரிய அணைக்கட்டு, இங்கிலாந்து தேசமானது ஜெயசாலியான உவில்லியம் ஆளுகையில் வருவதற்கு முன்னமேயே கட்டப்பட்டது. காவிரி யாற்றிலிருந்து பிரியும் பாசன ஆறுகளெல்லாம் சோழர்கள் காலத்தில் வெட்டப்பட்டன. அதன் கழிமுகக் கிளைகளின் பாசன ஒழுங்கைப்பற்றிய வேலைகள் ஆங்கில இஞ்சினியர்களதேயாகும். மஹிஷ மண்டலம், குடகு, ஈழம் முதலிய நாடுகளைக் கட்டியாண்ட ராஜராஜ சோழனால், தஞ்சாவூர்க் கோவில் கட்டப்பட்டது. சோழ ராஜ்யம் முழுவதும் நிர்வாக சௌகரியத்துக்காக, ஜில்லாக்களாகவும், தாலூகாக்களாகவும் கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது.

ஒவ்வொரு கிராமத்திலும் 'ஸமுதாயம்' என்ற மஹாஸபை இருந்தது. கிராம முதற்கொண்டு ராஜஸபை வரையில் படிப்படியாக நியாய ஸ்தலங்கள் ஏற்பட்டிருந்தன. ராஜ்யமெங்கும் பள்ளிக்கூடங்கள் நிறைந்திருந்தன. கிராம ஸமுதாயத்தார் அந்தந்த கிராமத்திய சகல அலுவல்களையும் நிர்வகித்தனர். தஞ்சை யரசர்கள் மார்க்க விஷயத்தில் வெகு தாராள சிந்தை யுடையவர்களென்பது அவர்களுடைய அரண்மனைக்குள்ளேயே நான்கு மசூதிகளுக்கு இடங்கொடுத்ததினின்றும் விளங்கும். அப்போது, பிராம்மணர் சூத்திரர் என்ற வித்தியாசமும், இந்து முகம்மதியன் என்ற விகற்பமும் ராஜ்ய நிர்வாகம் சம்பந்தப்பட்டமட்டில் கிடையாது. எல்லோரும் சமமாக நடத்தப்பட்டனர். இந்துக்களுக்கு ராஜ்ய நிர்வாகத்துக்கு வேண்டிய சக்தியும் சாமர்த்தியமும் போதுமான அளவிருந்ததென்பதற்குத் தஞ்சை ராஜ்ய நிர்வாகமே சாட்சியாகும்.

இத்தகைய அருமை பெருமை வாய்ந்த நமது நாட்டின் பிராசீன சரித்திரத்திலிருந்து நாம் தெரிந்துகொள்ளக்கூடிய விஷயங்கள் பலவுள்ளன. அப்படித் தெரிந்துகொள்வதனால் நமது முன்னேற்றத்துக்கு ஓர் நல்ல சௌகரியமும் உதவியும் உண்டாகும்.

---

உதயதாரகை.— * விவேக போதினி இதுகாறும் தமிழ் நாட்டிலே உற்பத்தியான பத்திரிகைகள் யாவுக்கும் கிரீடமெனத்தக்கதாய் வித்யா விஷயம், கைத்தொழில், சாஸ்திர சம்பந்தமான விஷயங்கள் கல்வியிலும் மதியூகத்திலும் சிறந்த பெரியோரது சரிதம், இதிஹாஸ புராணாதிகளின் ஸாராம்சங்கள், தமிழ் இலக்கண இலக்கிய விஷயங்கள், நீதியும் அறிவும் புகட்டும் நன்னெறிக் கதைகள் ஆசார சீர்திருத்த ஸம்பந்தமான விஷயங்கள், சுகாதார விளக்கம் ஆகியவற்றைத் தாங்கி வெளிவந்திருக்கிறது. பெண்பாலர்க்கும் சிறுவர்க்கு முபயோகமான சிறந்த போதனாவிஷயங்களும் பிரத்தியேகமான வகுப்புகளாய் இதில் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு விஷயமும் அறிவையும் விவேகத்தையும் வளர்ப்பதாயிருக்கிறது.



## மிகப்பழையதோர் இலிங்கம்

### AN ANCIENT LINGA

[ஸ்ரீமான் து.அ. கோபிநாதராவ் அவர்கள், எம்.ஏ.]

திருப்பதிக்குப்போகும் வழியில் ரேணுகுண்டா ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஆறு மைலுக்கு வடகிழக்கே குடிமல்லமென்றோர் சிறுகிராம மிருக்கிறது. அக்கிராமத்தில்இரண்டுமூன்று பிராமணவீடுகளும், இருநூறு மற்றையோர் வீடுகளும்உள்ளன. இவ்வூர் நடுவில் ஓர் சிவாலயமுண்டு. அதில் உள்ள இலிங்கத்துக்குப் பரசுராமேசுவரர் என்றுபெயர்; விக்கிரமசோழன் காலத்தது. கி. பி. 1126வது வருஷத்தில் இச்சிவாலயம் ஜீர்ணப்பட்டுக் கிடந்ததைக்கண்டு, குலோத்துங்கசோழக் கருப்பாறுடையான் என்னும் பட்டம் பெற்ற நாரணதேவன் என்னும் சிற்றரசனுக்குப் புண்ணியமாக, அவன் மகன், ஜீர்ணோத்தாரம் செய்தான். இவன் கட்டியிருக்கும் கர்ப்பகிரகம் கஜபிருஷ்டாகிருதியாயுள்ளது. இக்கோயில் கட்டி முடிந்தபின், இதன் பின் பலசாஸனங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. இவை எல்லாம் மூன்றாவது இராஜராஜன் காலத்தனவாயிருக்கின்றன.

இச்சாஸனங்களைத்தவிர சில, தனித்தனிக் கல்கள்மீது வெட்டப்பட்டு அக்கோயில் முற்றத்தில் கிடக்கின்றன. இவை இன்றைக்குச் சுமார் 1200 முதல் 1000 வருடங்களுக்கு முற்பட்டன; வாணர்கள் வமிசத்தரசர்களாலும், பழையபல்லவஅரசர்களாலும்பொறிக்கப்பட்டவை. இவ்வாறுபுராதன காலமுதல் மேன்மைப்பட்டுள்ள இக்கோயிலிலமர்ந்திருக்கும் சிவலிங்கத்தின் பெருமை என்ன என்றுரைப்பேன்? இது சற்றேறக்குறைய 1800 அல்லது 1900 வருடங்கட்கு முன்னர் பிரதிஷ்டை செய்யப்பட்டதென்பது இவ்விலிங்கம் செய்யப்பட்டிருக்கும் மாதிரியால் தெளிவாகும். இவ்விலிங்கம் பலவகையாலும்வெகு விசேஷமானது.

பரசுராமேசுவர லிங்கமானது மிகவாக இலிங்காகிருதியோடேயே செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாகாரத்தோடுள்ள இலிங்கம் இதுவரைஎவ்விடத்திலும்காணப்படவில்லை. இதன் முன்வசத்தில் இருகரங்களையுடைய சிவபிரான் சொரூப மொன்று சமைக்கப்பட்டிருக்கிறது. இவ்விக்கிரகத்தின் கழுத்தில் அழகான சித்திரவேலைகள் செய்யப்பட்ட ஓர் கண்டி துலங்குகின்றது; இதனிரு புஜங்களிலும் வெகு நேர்த்தியான பாஹுவலயங்கள் இடப்பட்டிருக்கின்றன. முன்கைகள், நன்றாய் நகாசுவேலை செய்யப்பட்ட ஐந்துவகை வளையல்களை தரித்துக் கொண்டிருக்கின்றன. இவ்விக்கிரகம் வஸ்திரத்தைத் தரித்திருப்பினும், முக்கியமாய் மூடியிருக்க வேண்டுமிடம் மூடாமலிருக்கிறது. கால்களின் நடுவில் துணியின் மடிப்பொன்று பெரிதாய்த் தொங்குகின்றது. இச்சிவபிரானின் படிமம் முயலகன் என்னும்அபஸ்மார புருஷன் தோள்களில் நிற்கின்றது. இதன் வலக்கையில், ஓர் செம்மறியாடு பின்கால்களால் பிடிக்கப்பட்டு, தலைகீழாய்த் தொங்குகிறது; இடக்கையில் ஓர் கமண்டலு இருக்கிறது. இடத்தோளில் அகன்ற அலகையுடைய ஒரு பரசு சாத்தப்பட்டிருக்கிறது.

இவ்வீசுவரன் தலையில், இக்காலத்தார் தரிக்கும் தலைப்பாகையைப் போன்ற ஆகாரத்தில் ஓர் ஜடாமகுட மிருக்கிறதைக் காணலாம். ஜடைகள் முறுக்கப்பட்ட கேசங்களல்ல, பின்னப்பட்டவையென்று நன்கு விளங்கும். காதில் அழகான இரு குண்டலங்களாடுகின்றன. இவ்வரிய கோலம் பூண்ட சிவபெருமானைச் சுமந்திருக்கிற முயலகனோ ஒரு விதத்திலும் அழுந்திய மனத்தனாய்க் காணப்படவில்லை. உலோக நாயகன் திருவடி ஸ்பர்சம்கிடைத்துப் பாவனனான ஒருவன் படும் ஆனந்தத்தை யனுபவிப்பவன்போலச் சந்தோஷம் நிறைந்து, புன்சிரிப்புடன்கூடியமுகத்தவனாய்க் காணப்படுகிறான். இவனும் கழுத்தில் ஒரு மணித்தாழ்வடமும், தலையிலோர் வகை ஆபரணமும் தரித்திருக்கிறான். இவன் காதுகள் மிருகக்காதுபோன்றிருப்பது கவனிக்கத்தக்கது.

இவ்விலிங்கத்துக்குத் தனியாய் ஓர் ஆவுடையாரில்லை. இது நிற்கும் கல்தரையில், இதைச்சுற்றி நாலுவசமும் ஒரு சிறிய திரணை எழுப்பப்பட்டிருக்கிறது. இதுவரை யான் கண்ட இலிங்கங்களிலெல்லாம் மிகப்பழை

யனென்னத்தக்கவை இரண்டு: இதுஒன்று; மற்றொரு இலிங்கம், வட இந்தியாவில் ஹீடாவென்னுமோர் ஊரில் சண்டெடுக்கப்பட்டு இப்பொழுது லக்ஷ்மணபுரி (லக்நௌ) காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது.

பிரம்மா, விஷ்ணு, சிவன் என்னும் திரிமூர்த்திகளின் பிம்பங்கள் பிற்காலத்திய சிற்பங்களில் இரண்டுகைகளுடன் காண்பது அசாத்தியம். இம்மும்மூர்த்திகளும் யக்ஞோபவீதமில்லாமல் சமைப்பட்டிருப்பதும் காணலரிது. யக்ஞோபவீதமும் நான்குகைகளுமில்லாமல் சித்திரிக்கப்பட்ட சிவபிரானுடைய உருவம் இது ஒன்றுதான்.

நித்தியச்செலவுக்கே அபாவமடைந்தமையால், இக்கோயிலிலுள்ள இலிங்கம் எண்ணெய்முதலிய அழுக்குகளில்லாமலும் வெகுவாய் மினுக்கப்பட்டு, அழகு குன்றுமலுமிருக்கின்றது. ஏழ்மையும் ஓர்வித பாக்கியமே!

# ஹாஸ்யத் துணுக்குகள்

# Wit and Humour

ஒரு கிழவி கறிகாய்க்கடைக்குப்போய் ஒரு வீசை வெள்ளைக் கத்திரிக்காய் வேண்டுமென்று கேட்டாள். கடைக்காரன் ஒரு கூடை நிறைய விருந்த சிகப்புக் கத்தரிக்காயைக் காட்டி, "எடை ருசி முதலியவைகளில் இது வெள்ளை ஜாதிக்குச் சமானம். வாங்கிக்கொள்," என்றான்.

"விலை யென்ன ?" என்றாள் கிழவி.

"வீசை அரை ரூபா" என்றான் கடைக்காரன்.

உடனே கிழவி ஒரு காலணாவை எடுத்துக்கொடுத்து, "இது எடையிலும் உருவத்திலும் அரை ரூபாவுக்குச் சமானம். நிற மட்டுந்தான் வித்தியாசம். ஒரு வீசை போடு" என்றாள்.

"தம்பி! எங்களுக்கு அடுத்தாற் போல உன்னைச் சொல்லிக் கொண்டாயே. அதில் எனக்குத் திருப்திதான்" என்றாள் கிழவி.

***

பட்டணத்துக்கு முதன் முதல் வந்த ஒரு நாட்டுக்கோட்டைச் செட்டியார், ஊருக்குத் திரும்பும்போது ஒரு ஆயிரம் ரூபா நோட்டைத் தவற விட்டுவிட்டார். சென்னைப் போலீசாருக்குத் தந்தியடித்துக் கேட்க, அவர்கள் நோட்டு அகப்பட்டுவிட்டதாகத் தெரிவித்தனர். தான் அடுத்த தடவை பட்டணம் வரும் வரையில் நோட்டுப் போலீசார் வசமே இருக்கட்டுமென்று செட்டியார் எழுதினார். பிறகு இரண்டு மாதங் கழித்துச் செட்டியார் பட்டணம் சென்று போலீஸ் ஆபீஸில் விசாரித்தார். அங்கிருந்த ஸார்ஜெண்டு செட்டியாரைத் தெரிந்துகொண்டு நோட்டைக் கொடுத்தார். வாங்கிக்கொண்ட செட்டியார் சுற்று முற்றும் நோக்கினார்.

"என்ன, சரிதானே ?" என்றார் ஸார்ஜெண்டு.

"ஸரியாகத்தானிருக்கிறது. ஆனால் இரண்டு மாஸத்து வட்டி யெங்கே ?" என்றார் செட்டியார்.

***

வாடிக்கைக்காரன்.—என்ன ஐயா! நீர் எனக்கு விலைக்கு விற்ற கடிகாரம் சரியானபடி மணி காட்டவில்லையே?

கடைக்காரன்.—அது கடிகாரத்தினுடைய குற்றமா? இப்போது காலம் கெட்டுக்கிடக்கிறதென்று ஜனங்கள் சொல்வதை நீர் கேட்டதில்லையா ?

***

ஒரு இடையன் தெருவழியே ஆடுகளை ஓட்டிக்கொண்டு போனான். அங்கு சுள்ளி பொறுக்கிக் கொண்டிருந்த கிழவியைக் கண்டு "எப்போதும் பொம்மனாட்டியும் கழுதையும் குறுக்கே நிற்பது வழக்கம்" என்றான்.

***

மருந்துக்கடைக் குமாஸ்தா.—"சிற்சில வேளைகளில் ராத்திரியில் மருந்து எடுத்துக் கொடுக்கவேண்டியிருக்கிறது."

"ஏதாவது தவறுதல் ஏற்படாதா அப்படிப்பட்ட சமயங்களில் ?"



"ஏற்படுவதுண்டு; ஒரு சமயம் ஒரு ரூபாய்க்குப் பதிலாக அரையணாவை வாங்கிக்கொண்டு ஏமாந்துபோய்விட்டேன்."

***

ஒரு உபாத்தியாயர், பிள்ளைகளுக்குப் பூகோளபாடம் சொல்லிக் கொடுக்கும்போது, பூமியில் இடையிடையே சமுத்திரங்கள் இருக்கின்றனவென்றும் அதனால் பூமியில் தொடர்ச்சியில்லையென்றும் கூறிவிட்டு, பக்கத்தில் நின்ற பையனைப்பார்த்து, "உன் தகப்பனார் ஜலத்தில் இறங்காமல் தரையிலேயே நடந்து உலக முழுவதிலும் போக முடியுமா ?" என்று கேட்டார்.

"முடியாது ஸார்."

"ஏன் ?"

"என் தகப்பனார் இரண்டு காலுமில்லாத நொண்டி, ஸார்."

***

கவுண்டர்.—கான்ஸ்டேபிள் ஐயா! நம்ம ஸம்சாரம் கூடவந்தவள் எங்கேயோ காணாமல் போய்விட்டாள். அவள் இவ்வழியாய் வந்தால், பாலத்தில் நிற்கச்சொல்கிறீரா?

கான்ஸ்டேபிள்.—ஆமாம்; எனக்கு அவளை எப்படித் தெரியும் ?

கவுண்டர்.—வாஸ்தவந்தான். அந்த விஷயம் எனக்குத் தெரியவில்லை. அவளைப் பாலத்தில் நிற்கவேண்டாமென்று சொல்லிவிடும்.

***

ராமன்.—கிருஷ்ணா! சமாசாரப்பத்திரிகைகளில் பலபேர்க்கும் உபயோகமாகும்படி சமாசாரங்களைப் பிரசுரிக்கிறார்கள்.

கிருஷ்ணன்.—அப்படியானால் ஒன்றுமே அச்சடிக்காத பக்கமொன்று எதற்காக இந்தப்பத்திரிகையில் விடப்பட்டிருக்கிறது ?

ராமன்.—படிக்கத் தெரியாதவர்களுக்கு.

***

மனைவி.—நம்முடைய குழந்தைக்கு இப்படிப்பட்ட துஷ்டத்தனங்கள் எங்கிருந்து வந்தன ? என்னிட மிருந்து வந்திருக்க மாட்டா.

புருஷன். — வாஸ்தவம். உன்னுடைய துஷ்டத்தனத்தில் ஏதாவது கொஞ்சம் குறைந்திருந்தால் அல்லவா அப்படி நினைக்கலாம்!

***

தர்மத்துக்குப் பணம் சேர்ப்பவன்.—ஐயா! செட்டியாரே! இது வெகு சிலாக்கியமான தர்மம். ஒன்றுக்குப் பத்தாகக் கடவுள் உமக்குக் கொடுப்பார். ஏதாவது 10-ரூபாவாவது கொடுக்கவேண்டும்.

செட்டியார்.—ஒன்றுக்குப் பத்தாகக் கடவுள் கொடுப்பது நிச்சயந்தானா ?

தர்மப் பணம் சேர்ப்பவன்.—ஆக்ஷேபணையென்ன ?

செட்டியார்.—அப்படியானால், நான் கொடுத்ததாக ஆயிரம் ரூபா கணக்கில் எழுதிக்கொண்டு, கடவுள் கொடுக்கும் விகிதப்படி எனக்கு ஏற்படும் பதினாயிரம் ரூபாவில், இந்த ஆயிரம் ரூபாவை எடுத்துக்கொண்டு, பாக்கியை அனுப்பிவிடும்.

# ஈஜிப்ட் தேசத்திய பூர்வீக நாகரிகம்

# Egypt: Its Ancient Civilisation

[ஸ்ரீமான் டி. எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள், எம். ஏ., எல். டி.]

இப்பூவுலகிலுள்ள கண்டங்களிலொன்றான ஆப்பிரிகாவில் ஈஜிப்ட் தேசம் வெகு பூர்விகமானது. இத்தேசத்தின் நவீன அமைப்பையும்,சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன் இத்தேசத்தின் சரித்திரங்களையும் சற்று ஆராய்ந்தால், அக்காலங்களில் இத்தேசம் மிகவும் மகிமை பெற்றதென்பது நன்கு விளங்கும். ஈஜிப்ட் மாகாணத்தில் நைல் என்றநதிக்கரையிலுள்ள ,பாழடைந்த கட்டிடங்களையும் பாறைகளால் கட்டப்பட்ட திடர்களையும் நோக்குமளவில், முற்காலத்தில் இம்மாகாணம் மிகவும் கீர்த்திவாய்ந்ததென்பதற்குச் சந்தேகமில்லை.

செழிப்பான பசும்புற்றரையின் வழியாய் ஓடி தானியங்களை விருத்திசெய்யும் நதியை இதனடியில் காணுவோம். இதனருகிலுள்ள பாலைவனங்களின் வழியாய்ப் பொன்போல் பிரகாசிக்கும் சூரியனை இவ்வீஜிப்ட

தேசத்தினர் தெய்வமாகக் கொண்டாடினர்.

நைல் (Nile) நதிக்கரையிலுள்ள உன்னதமான கட்டிடங்கள் ஆயிரக்கணக்கான தொழிலாளிகளின் பிரயாசையால் ஏற்பட்டன. இம்மஹா விஸ்தீரணத்தோடு கூடியதும், வானத்தை ஸ்பரிசிப்பதுபோல் தோன்றுவதுமான திடரின் காட்சி உவமையற்றது.

இத்திடர்கள் பெரியபாறைகளால் கட்டப்பட்டுள்ளமையால், இப்பாறைகளை, அஸ்ஸுவான் (Assuan) என்ற நகரினருகிலுள்ள சுரங்கங்களிலிருந்து பிளந்து, இங்கிலாந்து



இரண்டாம் ராமெஸிஸ் அரசன துருவச்சிலை

தேசத்தின் நீளத்திற்குச் சமமாயும், அக்கினிபோல் எரியும் தொந்திமணலோடு கூடிய பாலைவனங்களின் வழியாய்ப் புறட்டிச் சேகரிப்பதும், பிறகு இவைகளை இத்திடரின் உயரத்தில் சேர்ப்பதும், மானிடர்களால் செய்யக்கூடிய வேலையல்லவென்று கூறலாம்.

இக்காலங்களில் நமது கவர்ன்மெண்டார் அநேக பெரிய கட்டிடங்களைக் கட்டுகையில் ஏற்படும் சந்தடியையும், செங்கல், சுண்ணம்பு, தேக்குமரம் முதலிய சாதன வஸ்துக்களைச் சேகரிப்பதின் விமரிசையையும் நாம் மிகப்பொறுமையோடு கண்ணுற்றிருக்கிறோம்.

முற்காலத்தில் ஈஜிப்ட்தேசத்துத் துரைத்தனத்தார், எக்காரணத்தின்பொருட்டு இவ்வுன்னதமான திடர்களை ஏராளமாகச் செலவிட்டு அமைத்தார்கள் என்ற விஷயத்தைத் தெரிந்துகொள்வது மிகவும் உற்சாகத்தை விளைவிக்கக்கூடியது.

இத்தேசத்திற்கு அதிபதியான மாசற்ற அரசரின் மகிமையை ஸ்தாபிப்பதற்கே இத்திடர்கள் ஏற்பட்டன.

இத்தேசத்தரசர்கள் இறந்தபின்பு, அவர்களுடைய சவங்களை வாஸனைத் தைலங்களில் நனைத்து, வஜ்ரம், வைடூரியம், மரகதம், கோமேதகம், புஷ்பராகம் முதலிய நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட சவப்பெட்டியில் வைத்து இத்திடர்களின் மத்திய ஸ்தலத்தில் அடக்கம் செய்துவந்தார்கள்.

இத்தேசத்து அரசர்களும், கீர்த்திபெற்ற பிரபுக்களும் காலகதியடைந்த பிறகு, இப்பூவுலகில் முக்கியமாய் இவர் அனுபவித்த பண்டங்களைத்தும், விலையற்ற ஆபரணங்களும், இவர்களுடன் புதைக்கப்படுமானபடியால் அநேக தடவைகளில் திருடர்கள் இவர்களுடைய சமாதிகளை உடைத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

சுமார் 4,000 வருடங்களுக்குமுன் ஈஜிப்ட் தேசத்தினரின் செயற்கைப் பொருள்கள், களிமண் வரிசையால் அமைக்கப்பட்ட மயிற் கூந்தலையுடைய பதுமைகள், விசித்திரமான விளையாட்டுச்சாமான்கள், கண்மை வைப்பதற்குச் சாதனமாயுள்ள டப்பியோடு கூடிய அழகிய பெட்டிகள் முதலியன—இத்தொழிலாளிகளின் நுட்ப புத்தியை வெளியிடுகின்றன.

மேற்கூறியபடி இத்தகைய பொருள்களை அரசர்களுடன் அடக்கம் செய்வதோடு கூட் அவ்வரசர்களால் கொண்டாடப்பட்ட அநேக தேவதைகளின் விக்கிரகங்களையும் புதைப்பதுண்டு. ஏனென்றால், அவர்களுடைய ஆத்மாவை அத்தேவதைகள், எப்பொழுதும் பாதுகாப்பதாக அவர்களுடைய கொள்கை.



பிறகு, நைல் நதியினருகிலுள்ள உன்னதமான கோபுரங்களோடுகூடிய கோயில்களைச் சற்று கவனிப்போம். இக்கோயில்களின் சுவர்களிலும், ஸ்தம்பங்களிலும், சமாதிகளிலும், அநேகவித சித்திரங்கள் செதுக்கப்பட்டிருப்பதையும், இவைகளைப்பற்றிய சரித்திரங்கள் எழுதப்பட்டிருப்பதையும் காண்கிறோம்.

சென்ற நூறு வருஷங்களுக்குமுன், இவ்வித எழுத்துக்களைப் படித்துத் தெரிந்துகொள்ள ஒருவராலும் முடியவில்லை.

இக்கோயிலிலுள்ள ஒரு சலவைக்கல்லில், இத்தேசத்து அரசனின் ஜனனதினத்தைக் கொண்டாடவேண்டிய முறைகளைக்குறித்து, "கிரீக்", "ஈஜிப்ட்" இவ்விரண்டு பாஷைகளிலும் எழுதப்பட்டிருக்கிறது.



ஸ்பிங்க்ஸ் உருவமும், கூர்நிதிக் கோபுரமும்

முற்காலத்திய அரசர்களின் கருவிகரணங்களையும் குசலரின் கீர்த்தியையும் அறிவதில் ஆசக்தியையுடைய கல்விமான்கள், இவ்வித எழுத்துக்களை இதரபாஷைகளில் எழுதி நவீன ராஜாங்க முறைகளுடனும், பெரியோர்களால் எழுதப்பட்ட நூல்களுடனும் தாரதம்மியப் படுத்துகிறார்கள்.

இவ்வித சலவைக்கற்களில் செதுக்கப்பட்ட எழுத்துகளைத் தவிர பாப்ரஸ் என்ற கொறுக்கையின் (Papyrus reed) சுருளான பாபிரி என்ற ஓர்வித ஓலைகளில் "மரித்தவர்களின் புத்தகம்" (The Book of the Dead) என்றதை எழுதியிருக்கிறார்கள்.

இப்புத்தகம், மானிடர்களின் நடையுடை பாவனைகளைப் பற்றியும், அவர்களுடைய வாழ்நாட்களைச் சந்தோஷத்துடன் கழிக்கவேண்டிய முறைகளைப்பற்றியும், ஈஜிப்ட் தேசத்தின் மதத்தைப்பற்றியும் இவ்வீஜிப்ட் தேசத்தினர் இறந்தபின் பாதாளலோகத்தில் இவர்களுடைய ஆயுளைப்பற்றியும், வர்ணிக்கின்றது. மேற்கூறிய விஷயங்களைத் தவிர, இன்னும் வைத்திய சாஸ்திரம், வானசாஸ்திரம், அநேகவித மோகினி, கூளிபிசாசு, பேய் முதலானவைகளைப்பற்றிய கட்டுக் கதைகளும் எழுதப்பட்டுள்ளன.

முற்காலத்தில் அத்தேசத்திய அரசாட்சிச் செய்கையில் நடைபெற்ற நாகரீகமும் போதிக்கப்பட்ட கல்வியும் கைத்தொழில்களும், ஜனங்களுக்கு ஒருவித ஊக்கத்தையும் உற்சாகத்தையும் விளைவித்தன. ஜனங்களும் துரைத்தனத்தாரின் அனுஸரணையாலும், அவரவர்களின் முயற்சியாலும் அநேகவித கைத்தொழில்களை விருத்திசெய்து ஐசுவரியவந்தர்களாக ஆயினர். மற்றெல்லாத்தேசங்களிலும் நாகரீகம் பரவுவதற்குமுன் நடைபெற்ற மேற்கூறிய ராஜாங்க முறைகளிலிருந்தும், கைத்தொழில்களின் அபிவிருத்தியிலிருந்தும் கீர்த்திபெற்ற ஈஜிப்ட் தேசத்தினரின் நாகரீக முறைகளை யோசிக்குமிடத்து மிகவும் ஆச்சரியத்துக்குக் காரணமாயிருக்கிறது.

---

**The Hon'ble Mr. P. Ramanthan, Colombo.**—"I have always thought highly of the work done by you and your colleagues in this Monthly Magazine. The articles appearing in it are carefully considered and **written in simple and chaste Thamil.** National ideals and the duty of speaking and writing Thamil without any admixture of foreign terms and foreign modes of thought are consistently held up to your readers. Just as cultured Europeans desire to speak and write their respective language with purity, we Thamils should speak and write our language without thinking in English and translating into Thamil the idioms and other turns of expression appropriate to the English.

# உபாத்யாயர்

## THE TEACHER

[ராவ்பகதூர் ஸ்ரீமான் ஏ.வி. பிரணதார்த்திஹர ஐயர் அவர்கள், பி. ஏ., ஐ. எஸ். ஓ.]

மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ.
ஆசார்ய தேவோ பவ அதிதி தேவோ பவ.

என்னும் வேதவாக்கு உபாத்யாயர்களின் நிலைமையை நன்குவிளக்கும். பெற்றோர்க்கு அடுத்தபடி பூஜிதைக்கு அருகரானவர்கள் அவரே. 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.' அவ்வகைய ஞானக்கண்ணைக்கொடுக்கும் உபாத்தியாயரிடம் முக்கியமா யிருக்கவேண்டிய தன்மையைக் குறித்துச் சிறிது விசாரிப்போம்.

முதலில், சிறுபிள்ளைகளின் உபாத்தியாயர்களைப்பற்றிக் கவனிப்போம். எந்த வேலையையும் நன்றாய்ச் செய்யவேண்டுமானால் அதற்குத்தகுந்த யோக்கியதை இருக்க வேண்டும். உபாத்தியாயரிடத்தில் இருக்க வேண்டிய யோக்கியதைகள் இரண்டு; அவை ஞானம், நன்னெறி.

உபாத்யாயரின் முக்கிய உத்தேசம் மாணுக்கர்களுக்கு ஸன்மார்க்கம் கற்பித்தல், அவர்கள் தங்களிடத்தில் அடையவேண்டிய வித்தையை யடைந்தபிறகு அவர்கள் தொழில் ஏதோ அதை நன்றாய்ச் செய்யும்படியான ஒரு திறன் ஏற்படுத்தல் இவையாகும். ஆகையால், இவ்விரண்டும் நிறைவேறுமாறு உபாத்தியாயர்கள் எப்பொழுதும் கவனத்துடன் முயலவேண்டும்.

மாணுக்கர்களுக்கு ஸன்மார்க்கம் போதிக்கும் உபாத்யாயர்கள் தாங்களே அம்மார்க்கத்தில் ஒழுகுவது அவசியமன்றோ? பிள்ளைகளுக்கு நற்குணம் கற்பித்துத் தங்களுடைய குணம் துர்க்குணமாயிருந்தால், அவர்களுக்கு ஒரு கையினால் அமிர்தத்தையும், மற்றொரு கையால் விஷத்தையும் கொடுப்பதாகும்.

ஆகையால் உபாத்யாயர்களுக்குத் தங்கள் வேலையை நன்றாய்ச் செய்யும்படி பொருந்தியிருக்கவேண்டிய அம்சம் நல்லொழுக்கமே ஆகும். அதுவின்றேல் அவர் தொழிலும் ஸாரமற்ற கோதுபோலிருக்கும். ஞானத்திற்குச் சுகப்பிரம்மரிஷியை ஒப்பிடுவது வழக்கம். அவர்க்குக் கிளிமூக்கு. அது ஏனெனில் கிளியானது பக்குவமான பழத்தையே கொத்திக் கொத்தித், தானுண்டு மற்றதைப் பிறருண்ணக் கீழெறியும். அதுபோல் போதிக்கப் புகும் விஷயத்தில் நல்ல ஞானத்துடன் படிக்கும் மாணுக்கர் மனதில் பசுமரத்தில் அடித்த ஆணிபோல் ஐயமறப் பாயச் செய்யும் திறமும் இருக்கவேண்டும். எந்த விஷயங்களைக் கற்பிப்பதில் அவர்களுக்குப் போதுமான பயிற்சியில்லையோ, அந்த விஷயங்களைக் கற்பிப்பதைக் காட்டிலும், கற்பிக்காமலிருத்தல் நன்று. அப்படித் தெரியாமல் உபாத்யாயர்கள் செய்வது குருடன் குருடனுக்கு வழி காட்டுவதாகும்.

ஆனால் தெரியாத விஷயங்களை நன்றாய்த் தெரிந்துகொண்டு உபாத்தியாயர்கள் கற்பிக்கவேண்டும். இந்த விஷயமாக உபாத்யாயர்களுக்கு விருத்தாப்யம் இல்லையென்றே சொல்லலாம். அவர்கள் மயிர் நரைக்கலாம்; பல்விழுந்து போகலாம்; இன்னும் பல கிழக்குறிகள் அடையலாம். ஆயினும் அவர்கள் என்றும் மாணுக்கரே; தாமடைந்த கல்வி போதுமென்று இருக்கப்பட்ட உபாத்யாயன் ப்ரயோசனப்படான். கல்விக்கு அளவில்லை. தற்காலத்தில் எவ்வளவோ புதியபுதிய விஷயங்களும் முக்கியமாய்ச் சாஸ்த்ர ஸம்பந்தமான அம்சங்களும் வெளியாவதைப் பிள்ளைகளுக்குக் கற்பித்து அவர்கள் ஞானத்தைத் தற்கால விசேஷங்களுக்குத் தகுந்தபடி விகஸிக்கச் செய்யவேண்டும். ஆகையால் தன் கடமையைச் சரியாய்ச் செலுத்தும் உபாத்யாயன் நாளுக்குநாள் தன்னுடைய ஞானத்தை விருத்திசெய்துகொண்டு மாணுக்கர்களுக்குக் காலத்துக்குத்தக்க அறிவை உண்டுபண்ண வேண்டும்.

சிறு பிள்ளைகளுக்குக் கற்பிக்கவேண்டிய அம்சங்கள் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டுப் பாலபோதனமுறைகள் எனும் ஒரு ஒழுங்குப் பட்டியில் அடங்கியிருக்கின்றன. அவைகளையெல்லாம் கற்பிப்பது அஸாத்யம். முற்றும் கற்பிக்கவேண்டுமென்பதும் கவர்ன்மெண்டாரின் அபிப்பிராயம் அல்ல. கற்பிக்கும் அம்சங்கள் (1) உபாத்யாயருடைய கல்விப் பயிற்சியையும், (2) பெற்றோரது விருப்பத்தையும், (3) அவர்களிருக்கும் ப்ராந்த்யங்களின் குணுதிசயங்களையும் அனுசரித்துக் கவர்ன்மெண்டாரின் நிபந்தனைகளுக்கும் உட்பட்டிருக்கவேண்டும். அதாவது, தம் பாடசாலையை விட்டபிறகு பிள்ளைகள் எந்தத் தொழிலைக் கைப்பற்றுவார்களோ, எப்படி ஜீவனம் செய்வார்களோ, இவைகளை உத்தேசித்து அவ்விதத் தொழில்களைத் திறத்துடன் செய்யும்படியாகத் தங்களாலியன்ற போதனாம்சங்களை முன்னதாகவே தமக்கேற்படுத்திக்கொண்டு தக்கபடி கற்பிக்கவேண்டும். ஒரு பாடசாலையிலுள்ள மாணுக்கர்களில் மிகுதியோர், அந்தப் பாடசாலை விட்டவுடன் ஹைஸ்கூல் முதலான கலாசாலைகளுக்குப் போகும் தன்மை யுடையவர்களா யிருக்கலாம். மற்றொரு பாடசாலையிலுள்ள மாணுக்கரில் மிகுதியோர் அந்தப் பாடசாலைப் படிப்பு முடிந்தவுடன், தம் தம் பெற்றோர்களுக்கு உதவியாக ஏதாவது ஜீவன உபாயங்களைத் தேடும் ஸ்திதியிலிருக்கலாம். இவ்விரண்டுபாடசாலைகளிலுமுள்ள பிள்ளைகளுக்கு ஒரேவிதமான போதனாம்சப்பட்டி இருப்பது எவ்வளவு அனுசிதம்? முதலில் சொன்ன பாடசாலைப்பிள்ளைகளின் புத்தியின்தேர்ச்சி முக்கியநோக்கமாகவும், இரண்டாவது பாடசாலையின் பிள்ளைகளுக்குப் போதுமான புத்தித்தேர்ச்சியுடன்வியவகார ஞானப்பயிற்சி முக்கிய நோக்கமாகவுமிருந்தால் அவரவர்கள் அந்தந்தப் பாடசாலைப் படிப்பு முடிந்த பிறகு, தாங்கள் மேன்மேல் செய்யப்புகும் வேலையைத் திறனுடன் செய்யும்படியாக ஒருவிதமான வன்மை அவர்களுக்கு உண்டாயிருக்கும். ஆகையால், உபாத்யாயர்கள் பெற்றோர்களின் நோக்கத்தையும், பிள்ளைகளின் மனோநிலைமையையும், தங்கள் கல்விப்பயிற்சியையும் உணர்ந்து அவைகளுக்கெல்லாம் தகுந்தபடி தாங்கள் கற்பிக்கும் வழிகளை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

---

**The Madras Mail.**—* * (Viveka Bodhini) *has been in the front rank of Tamil Magazines and has always been known for the excellent and varied literture* * * it has been giving ever since its establishment. *Educational authorities have spoken of it in terms of* approbation.



# யுத்த தரும விசாரம்

## THE ETHICS OF WAR

[ஸ்ரீமான்பி.என்.ஸ்ரீநிவாஸாசாரியாரவர்கள்,எம்.ஏ.]

கூடல்வளம் நிறைந்து கடலரசுபுரிந்து களித்திடும் வெள்ளைஜாதியர் நாடு, போர்மேகங் கவிந்து முழங்கிச் சொரிந்திடும் உதிர வெள்ளங் கடலாய்ப் பெருகித் துயருற்றிருக்கிறது. பெல்ஜியத்திலிட்ட போரெனும் பெருந்தீ பாரினில்பரவி, வடவை முகநெருப்புப்போல் உலகைச் சுட்டுக்கொளுத்துவது நிலையழிந்து நெஞ்சழிந்து துறவழிந்து உயிரழிந்து முக்கண்ணனுயிரை யுண்டுலாவும் மயானக்காடாகும். இப்படி உடல் மடிந்து மனமிடிந்து உயிர் வாடச்செய்யும் இப்போரின் கொடுமையைச் சிந்தியாதவருண்டோ? முற்காலத்தில் நடந்த மஹாபாரதப்போர் 18 நாளில் முடிய, க்ஷத்திரியர் குலம் மட்டும் மாண்டது. இக்கொடும் போரோ மண், நீர், விண்ணாகிய மூவுலகினும் பரவி, வயது குலம் தொழிலாகிய ஒன்றையுங் கவனியாதிருக்க, யாவரும் எதையும் ஆயுதமாக்கொண்டு கோடானுகோடியாய் உயிரையும் பொருளையு மிழக்கின்றனர். நயமும் நாகரீகமும் பெற்ற நமக்கு, நமது மூதாதையர், மூர்க்கமும் கொடுமையுங் குணமாகக்கொண்டு சண்டையிடும் விலங்கினமென்றறிவூட்டவோ இந்த யுத்தம் கிளம்பியது? அல்லது, போரினால் போரினிழிவை நினைந்து, இனி யதை விட்டுய்வதற்கோ? இதைத் தெளிவாயுணர யுத்ததர்மத்தை ஆராயப் புகுவோம்.

போர் அநேக காரணங்களாலுண்டாகலாம். பலம்படைத்தவர், செல்வச்செருக்கினாலும் பேராசை மயக்கத்தினாலும் இளையவரைத் தாக்கலாம்; அவர்கள் ஸ்வபலமும் ஸ்வலாபத்தையுமே மேலாகக் கொள்வர். கடல்வள மிகுந்த சிலர், கடலோடிப்பிறர்நாட்டைக் கைப்பிடித்து அரசாள்வதனால் பகையும் பொறாமையும் மிகுந்து பெரும் யுத்தம் விளைவதுண்டு. எல்லைவழக்குகள் சில, போராய்முடியும். சீரழிந்து பிறர்சிரிக்காவண்ணம் பெருமைக்காகச்சிலர் பாடுபடுவதுண்டு. வெற்றியினால் வெறிகொண்டவர், உலகுய்யத்

தம்மைக் கடவுள் படைத்தனராதலால்
உலகம் நமதென்று நீதி பேசிப் போர் மூட்டு
வர். வலிய வேற்றரசர் தாக்க, அதைத்தா
ளாத சிலநாட்டவர் தேச நன்மையை மேலா
கக் கருதிப் பொருளையு முயிரையுந் தந்து
அமரிடலாம். தர்மத்தை நிலை நிறுத்தித்
தர்மத்தை வேரறுக்க யத்தனிக்கும் சிற்
சில யுத்தங்கள். மதவழக்குகளால் மஹாயுத்
தங்களுண்டாக மாண்டவர். கணக்கில்லை.
இக்காலத்திய போர்களின் காரணம் நிர்ணய
மிடுவது மிகக் கடினம். ஒவ்வொருவரும்
போரின் பழியைத் தாமேலாது பிறர்மேல்
சுமற்றுவர். ஆகவே, சமஷ்டிப் பகையினால்
சமர் காரியமாகு மெனலாம். இவ்வண்ணம்
மண்ணாசை, பொன்னாசை, பகை, வெற்றி,
மயக்கம், தேச நன்மை, தருமபரிபாலன
மாகிய அநேக குணங்கள் யுத்தத்தின் கா
ரணமாகும்; வமிசப்பகை, ஜாதித்துவேஷம்,
ராஜ தந்திரக் கொடுமையென மூவகை
யாப் பிரித்துள்ளனர் சிலர். இத்தகைய
காரணங்களை ஆராய்ந்தால் போர் உயிர்க்கி
யல்பென்று டார்வின் முதலிய மேனாட்டு
மேலோர் கூறுவதுண்மையே யன்றோ?
போரினால்தான் பிராணிகள் பிழைக்கும்
வழி. அதில் இளைத்தவருயிரிழந்து வெற்றி
யடைந்தவர் வாழ்ந்து சுகிப்பர். வல்லான்
வகுத்ததே வாய்க்கால். பலவானுக்கே நியா
யம். அவனே பூமிக்குரியவன்; ஈசுவரானுக்கிர
கம்பெற்றவன்; சக்தியற்றவனுக்கே சாத்து
வீக குணமென்று சில மேனாட்டவர் கூறிய
நீதிநூல் உண்மையாகவே தோன்றும்.

போரினாலாய நன்மைகளைக் கருதி அதைப்
புகழ்ந்துபேசுபவர் அநேகர். சண்டைக்குச்
சன்னாகமா யிருத்தலே சண்டை நீங்கி சமா
தானமா யிருத்தற்கு ஓர் முக்யகாரணம்.
போரில்லாவிடில், பிரபஞ்சத்தில் பிரஜைக
ளதிகரித்துப் பூமி தத்தளிக்கும். ஆதலால்,
மானிடர் சண்டையிட்டு மாண்டிடுவதேஅவ
ருக்குத் தகுதியாம். போரின் கொடுமையை
நினைத்துச் சிலர் அது விலக்கற்பாலதென்ன
லாம். ஆனால் போரினால் பௌருஷம்,
ஊக்கம், வைராக்யம், தேசாபிமானம், ஜீவ
காருண்ய மாகிய நற்குணங்கள் தலையெ
டுத்துத் தமோகுணத்தில் தூங்கியிருந்த
உயிருக்கு உத்ஸாகத்தை ஊட்டும். நாடும்
நாகரிகமும் நன்மை அடைய விரும்பி மா
னிடர் ஓர் மனத்தினராய்ப் போரினால் பலத்
திடுவர்; உடல் பொருள் ஆவி மூன்றையும்
தந்து பெரும்பதவியை யடைவர். வீர
லக்ஷ்மி தாண்டவமாடுவது வீரர் பூரித்திடும்
போர்களத்தி லல்லவோ? சண்டைகொடிது
என்றோர்ந்து நாடுகள் சமாதானமாயிருப்
பதாய் வைத்துக் கொள்வோம். அதனால்
வர்த்தகம் விருத்தியாய், பொருள் போரா
ய்க் குவியும். பொருள் ஓர் பக்கம் குவிய,
எளிமையும் அதிகரிக்கும். பொருளும் பலமு
முள்ளவர் தமோகுணவசராய்ச் சிற்றின்பங்
களில் மூழ்கி வெறிபிடித்து அலைவர். பகை
யும் பொறாமையும் பயமுமோங்கி உலகைத்
துக்கத்தில் ஆழ்த்திடும். ஆசைபிடித்த அர
சர் வெறிபிடித்த நாய்போல் குரைத்துப்
போர்க்கோலம் கொள்வர். மேலும் சில
நாடுகள் சமாதானத்தைக் கோரினாலும்,
பிறநாடுகள் அதற்குடன்படாது அவைகளைச்
சண்டைக்கிழுக்கும். தவிர இக்காலத்திய
உடன்படிக்கைப் பத்திரங்கள் அநேகம்
வஞ்சனையும் பொய்யும் நிறைந்து ஒன்றுக்
கொன்று மாறுபட்டு வெறும் காகிதமாய்க்
காணும். புத்தர், டால்ஸ்டாய் முதலிய
மேலோர், பகையும் போருமற்று உலகம்
அன்பில் ஆழவேண்டுமென்பர். ஆனால், அப்
யாஸத்தில் அது முடியாது. பகை நிறைந்த
இப்பூவுலகில், தருமப்போர்கூடக் கூடா
தென்று ஒதுங்குபவரை மரணத்திற்குப்
பயந்து வேதாந்தம் பேசுபவரென்று யாவ
ரும் இகழ்ந்திடுவர். உலகம் ஒற்றுமையை
யடைவதை நாடிய சில மேனாட்டு மேலோர்,
சர்வஜன சமுதாயச் சங்கங்களையும் நியாய
ஸ்தலங்களையு மேற்படுத்தித் தேசநன்மை
யினும் உலக நன்மையே மேலாம் என்று
வற்புறுத்திடுவர். ஆனால் அவைகள் உண்
மையில் பயன்படாவாம். உலக நன்மை
உயர்ந்ததென்று ஞானம் பேசலாம்.
அதைப் பழகுவது எளிதோ? சிலர் அப்படி
அப்யஸித்தாலும் அது பொது ஜன நீதி
யாகுமோ? ஒரு நாடு உண்மையில் ஜீவ
காருண்யத்தை அனுஷ்டித்தால் உடனே
மற்றவை அதைப் படையெடுத்துப் பிடித்
துப் பதைக்கவிடும். மேலும் அச்சங்கங்கள்
பகை, பக்ஷபாதமின்றி நியாயஞ் செலுத்



துவது மிகக் கடினம். நியாயப்படி நடவாது,
மீறிய நாடுகளை அவைகள் தண்டிப்பதெப்
படி? தம் ஜாதி, தந்தேசம், தம்மதம் என
அபிமானித்துப் பிறரைப் பழித்து ஆசை
யோர் பக்க மோங்க அதனால் பகையோர்
பூக்கம் மூண்டு மயங்கி யலையும் மானிடர்
ஒன்றுகூடி எக்காலத்தில் ஒற்றுமை அடை
வர்? பலத்தவர் எளியவரை யெதிர்த்து
அழிக்காதுஅவரைத் தம்மட்டத்துக்குக் கொ
ண்டுவர முயலும் 'பல நிறை' எனும்
நீதி தம்மினும் பலத்தவரிடம் பகையும்
பொறாமையுங்கொண்டு அவரை அடக்கி
அழிக்க ஏற்பட்ட தந்திரமேயன்றி உண்மை
யில் தயையினால் தினரை ரக்ஷிக்கவந்ததோ?
நீதி நூலெனும் பெரும் பெயரைப் பூண்ட
ராஜ தந்திர சாஸ்திரம், பேதம், வஞ்சனை,
பொய் முதலிய துர்க்குணங்களை உட்
கொண்ட கபட நூலல்லவோ? "எப்போ
துலையும் இத்துன்ப"மென்று தவிக்கும் உல
கம் இச்சமயத்தில் என்றும் அழியாச் சமா
தானத்தை ஆவலுடன் நாடுவதாய் நினைப்
போம். ஆனால் நமக்குப் பின் வருபவர்,
போரின் கொடுமையை மறந்து, போரா
வேசங்கொள்வதை எப்படி நிறுத்த முடி
யும்? இப்பெருஞ் சண்டைக்குக் காரணம்
'நானல்ல நானல்ல' வென்று ஒவ்வொரு
நாட்டினரும் மொழிவதால் யாவரும் அதை
விலக்கவெண்ணியவரென்று சிலர் சொல்ல
லாம். தனித்தனியாய்த் தீதென்று தெளி
வுடன் தேர்ந்தவர் சமுதாயத்தில் போர்
வெறி அடைவதற்கென்செய்வது? வெள்ளை
ஜாதியர் வழிபடும் ஏசுவே கருணை மிகுந்து
போர்க்களந் தோன்றி 'நீவிர் யாவரும்
சகோதரர், சமரிடேல்' என்றால் அவர் மீண்
டும் சிலுவையில் சிக்ஷையடைவரேயல்லது
வேதமொழியென்று அவர் மொழியை
யோம்புவ ரெத்தனைபேர்? புலியும் பசுவும்
கலந்து நீர்குடிக்கச் செங்கோல் செலுத்தும்
அரசரைப் புகழும் புராணங்கள் தரும யுத்
தம் தகுமெனக் கூறும். விண்ணுலகிலும்
தேவாசுர யுத்த முழக்க நிறைந்து நிற்கும்.
ஆதலால் போர் உயிர்க்கியல்பான குணமாம்.
கருணையினால் உலகை ஆக்கிய கடவுள்
அதை அழித்துக் களித்திடுவர் என்று
நமது சாஸ்திரங் கூறும்.

இனி, யுத்தத்தை யிகழ்ந்து, சமாதானமே
சிறந்ததென்று கூறும் பக்ஷத்தை, யாராய்
வோம். போரினால் வரும் கொடுமையை
நினைந்து மனமிடியாதவர் உண்டோ? ஐம்
பூதங்களை யறிந்து அதைத் தம் வசமாக்
கிய மேனாட்டவர் மூவுலகிலும் கோர
மான போர் தொடுத்துக் கோடி கோடியாய்
மடிய அதனால் உலகம் உதிரக் கடலாகும்.
முன்னாளில் முதலவர் மாண்டால் போர்
முடிந்துலகம் க்ஷேமமடையும். மேலும் க்ஷத்
திரியர் மட்டும் போர்த்தொழில் புரிந்து
அதன் கொடுமையினால் வாடுவர். புருஷ
ருடன் போரிட்ட பெண்கள் இனிப் புரு
ஷருக்காகப்பரதவிப்பர். வலியவர் கொடுமை
போரினால் நீங்கினால், எளியவர் கொடுமை
யதன் பிறகோங்கும். யுத்தத்தினா லனேக
ராஜ்யங்களிருந்தவிடம் தெரியாமலழிந்தன.
ஆனால் இக்காலத்திலோ ஜாதி, தொழில்,
வயதொன்றுங் கவனியாது யாவரும் சண்
டையெனுஞ் சுழலிலகப்பட்டுச் சுழன்று
சோர்ந்திடுவர். அதனால் பிரஜைகள் குன்றி,
வர்த்தகம் தடுமாறி, எளிமையும், பஞ்சமும்,
நோயும் அதிகரித்து, கொலைகளவாதி
பாபம் மிகுந்து, உலகம் நிலை குலைந்து துன்
பக்கடலில் விழுந்து தவிக்கும். போரில் வீரர்
மடியவே அவர் சந்ததிகள் வீர மழிந்து
க்ஷீணித்திடுவர். இத்தகைய கொடுமையை
நினைந்து நினைந்து உருகி நைந்திடும் நாகரீகம்
'இனி யான் போரிடேன்' என்று தீவிரத்
துறவறம் பூண்டு, என்று மழியாத அமைதி
அடையும் என்பதில் சந்தேகமுண்டோ?
போரினால் பௌருஷம் பரவுமென்பதுண்
மையே? ஆனால் கொடுமையினால் பிறக்கும்
பௌருஷம் ஒருக்காலும் வீரத்தன்மை
யாகாது. சமாதானஞ் சோம்பலைத் தரு
மென்பவர் தேக பலமே பலமென்று கருதி
அப்பலத்தை யடைந்த மிருகங்களை வழி
படும் மானிடருக் கொப்பாவார். போரிடு
வது உயிர்க்கியல்பாதலால் அதை விலக்க
வொண்ணாதென்றால் ஒன்று சேர்ந்து ஒற்
றுமை அடைவதும் உயிர்க்கியல்பன்றோ?
கோபம் மானிடருக்குச் சுபாவம். ஆதலின்,
அதை ஒருவரும் விடக்கூடாதென்று சொல்
பவருண்டோ? உலக சரித்திரத்தை யுற்று
நோக்கினால் முதலிற்கூறிய உண்மை வெளி

யாகும். காட்டு மனிதன் அநேகமாய் தன் ஜாதி வழக்கத்தையும் விருத்தியுமே மேலாகக் கொண்டாடுகிறுன். கிரேக்கியர், காட்டு நன்மையே நன்மையென்றுஆராய்ந்துஅதற்காகவுழைத்தவர். ரோம் நகரத்தினர் உலகைவென்று ரோம தருமத்தை உலக தருமமாக்க முயன்றனர். ஐரோப்பாவின் மேனுட்டு ஜாதியர் கடல் வளப்பத்தால் கடலை வென்று உலகெல்லாந் தம்வசமாக்கித் தம்மயமாக்கி யொன்றுப்படுத்தியுள்ளார். இவ்வண்ணம் ஸ்வய நலங்கருதிய மானிடர் முறையே வமிச விருத்தியிலும் நாட்டின் நன்மையிலும் ஐக்ய மடைந்து அதிலும் அடங்காது ஜீவகாருண்யம் பொங்கிப் பெருகிட அதனுல் உலக நன்மையை ஓம்பி உயிரை விடும் உத்தம குணத்தை யடைந்துள்ளார். நதிக்கரையில் பிறந்த நாகரிகம் கடற்கரையில் வளர்ந்து,பெருங்கடல் சூழ்ந்த பார் முழுவதும் பரவி, இப்போது விண்ணிலுமுயர்ந்து அங்கிங் கெனுதபடி யெங்கும் வியாபித்து, உயிர்களை ஒன்று கூட்டி அன்பில் மூழ்த்திடும். ஆதலால் போரினுல் புண்ணடைந்த இப்பாருலகம் இனி அமைதியும் அன்பும் அரசாளப்பெறும். சண்டைக்குச் சன்னுகமாயிருந்தால் சண்டைநீங்குமென்று வீண்பேச்சுப் பேசியவர் இப்போதுவெட்கித் தலை குனிந்து தியங்குகின்றனரே? பகையினுல் பகைமீளுமே யல்லாது ஒருக்காலும் அது குறையாது. ஜினுவினுல் ஸிடான்வரும். ஸிடானினுல் ஜினுவரும். ஒரு யுத்தம் மற்றென்றுக்குக் காரணமாகும். போரைப் புகழும் சிலர், 'போரினுல் சமாதான முண்டாகும்; சமாதானத்தினுல் போருண்டாகும். ஆதலால் போரழியாது' என்று சொல்லலாம். யுத்த வெறி பிடித்து அலைந்தழிந்திடும் மானிடருக்கு வரும் வைராக்யம் நீடித்திராதென்பதுண்மையே. ஆகிலும் 'இப்போரினுல் நமக்குத் தீவிர வைராக்யம் வந்து விட்டது. இனி நாம் போர்மயக்க மடையோம்' என்பதிலென்ன ஐயம்? முற்காலத்திய அற்பச்சண்டைகள் அநேகமாய் ஓயவும், வெகு காலமாய் வந்த அடிமை வர்த்தகம் தீரவும், டால்ஸ்டாய் முதலிய மேலோர்கள் செய்த யத்தனத்தினுல் பிறந்த சமாதான அபிவிருத்திச் சங்கங்களாம் ஹேக் சபைகள் விருத்தியடைவதையும் யோசித்தால் வெகு விரைவில் பகையும் போரும் நீங்கி மானிடர் தாம் முன்செய்த தீவினைக்காக இப்போராம் பலியிட்டுப் பாபம் நீங்கிஅன்பாற்றில் மூழ்கி ஐக்யத்தில் களித்திடுவரென்பதுத் திண்ணமெனத் தோன்றும். பகையுடன் பிறந்த பிராணிகளினி அப்பகை நீங்கிக் கூடிவாழும். பகைவரைப்பழித்தோங்கிவளர்ந்த தேசாபிமானம் இனியன்பையும் ஜீவகாருண்யத்தையுமே யொட்டி உயர்வடையும். யுத்தக் கருவியாம் சைந்யம் ஆயுத முதலியவைகளை நீக்கி தேசங்கள் சகோதர பாவங்கொள்ளும். ராகத்துவேஷமற்று, ஞானமும் பக்தியுமிகுந்து, சாந்தமும், சாத்வீகமு மோங்கி யுலகு க்ஷேமமடையும். ஆதலால் அமர் நீங்கி யமைதி யடைவதே நலம்.

இவ்வண்ணம் போரைப் புகழ்ந்தேற்றுபவர் சிலர். அதை யிகழ்ந்து சமாதானமே சிறந்ததென்று சிலர் கூறிடுவர். இருதிறத்தினரும் யுத்ததத்துவத்தை நன்று யாராயத் தேர்ந்தவராதலால் தம் தருமத்தை நிர்ணயிப்பது மிகக் கடினமாகும். சண்டையிட்டோய்ந்தவர் சமாதானஞ் சிறந்ததென்பர். சமாதானத்தை வெறுத்தவர் சண்டையே தருமமென்பர். வெற்றியையுண்டு வயிறு நிறைந்த வலியவர் போரைப் பழித்து வேதாந்தம் பேசுவதுண்டு. ரஜோகுணத்தினுல் செல்வச்செருக்கும் பலக்கொழுப்பும் உச்சிக்கேறி மதோன்மத்தராய் சிலர் பிறரைச்சண்டைக்கிழுப்பர். தமோகுண மேலிட்டுச் சிற்றின்பங்களி லாழ்ந்து மரணத்தை நினைத்து நடுக்குற்றவர், போர் மிகக் கொடிய தென்பர். போரினுல்வரும் பௌருஷத்தையும் பலத்தையும் சிலர் புகழ, வேறு சிலர் அதன் கொடுமையை நினைத்து அதை விலக்கல் வேண்டுமென்பர். போரைப் புகழ்பவர் அது உயிர்க்கியல் பென்பர். அதை யிகழ்பவர் சாந்தமே ஜீவஸ்வபாவ மென்று உரைப்பர். சாந்தத்தை விரும்புவர் ஆக்குங் கடவுளைப் போற்ற, போர் ஊக்கங்கொண்டவர் அழிக்குங் கடவுளை வழிபடுவர்.

---

**Hon'ble Sir P. S. Sivaswami Ayyar K. C. S. I.** * * * * (Viveka Bodhini) written in an easy, readable style and deal with a variety of interesting subjects.



# திருத்தணிகை
# Tiruttani

[ஸ்ரீமான் வ. சு. செங்கல்வராயப்பிள்ளை அவர்கள், எம். ஏ.]

இந்த ஸ்தலம் சென்னையிலிருந்து 51 மைல் தூரத்திலுள்ளது ரெயில்ஸ்டேஷன் மெயில்சார்ஜ் ரூபா 0-10-9; மற்றைய வண்டிகளுக்கு ரூபா 0-8-6. அறக்குன்றத்திலிருந்து ரேணுகுண்டா போகும் வழியில் அறக்குன்றத்திற்கடுத்த ஸ்டேஷன். ஸ்ரீ சுப்பிரமண்ய ஸ்வாமிக்கு உரிய ஸ்தலம். சுவாமி ஸ்ரீ வள்ளி தெய்வயானை சமேதராய் மலைமேல் விற்றிருக்கின்றுர்.

கிருத்திகைத் தினங்களில் ஆயிரக் கணக்காக ஜனங்கள் கூடுகின்றனர். ஆடி கிருத்திகை வெகுவிசேடம்; தெப்பல் உற்சவம். அப்போது வரும் கூட்டம் அளவிடற் கரியது. தைகிருத்திகையும்கூட்டம் வெகுஅதிகம். பழநி எட்டி குடியிற் போல காவடிப் பிரார்த்தனை அதிகம் கிடையாது. ஆனுல் முடி கொடுத்தல், அங்கப் பிரதக்ஷிணம், அடிதண்டம் முதலிய பிரார்த்தனைகள் நிறைய உண்டு. ஸ்தலமானது கார்வேட்டை நகரம் ஜமீனைச் சேர்ந்தது. தெலுங்கு நாடாயினும் தமிழ் நாட்டெல்லையில் உள்ள தாதலின் தமிழ், தெலுங்கு இரண்டு பாஷைகளும்வழங்குகின்றன, கீழைத்திருத்தணி, மடம் கிராமம், மேலைத் திருத்தணி என முப் பிரிவினது இவ்வூர்.



முருக்க் கடவுள்

கீழைத் திருத்தணியில் ரெயில்வே ஸ்டேஷன், தபால் ஆபிஸ், சப் மேஜிஸ்ட்ரேட் ஆபீஸ், சப்ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் முதலியவும், கடைத்தெருவும் இருக்கின்றன. மடம் கிராமத்தில் பல ஜாதியர்களுக்கும் உபயோகப்படும் மடங்கள் இருக்கின்றன. மேலைத் ருத்தணியில் குருக்கள் முதலாயினேர் விடுகள் இருக்கின்றன.

மடம் கிராமத்தில் சரவணப் பொய்கை என்னும் தீர்த்தக் கரையில் நின்று சுவாமியின் மலையைப் பார்த்தால் ஒருமாலையிட்டதுபோல விளங்கும். கோயிலின் தோற்றமும் சுவாமியின் அழகும் சொல்லிலடங்காது.

"தணிகை மலையைச் சாரேனோ சாமியழ
கைப் பாரேனோ"

என ஆன்றோர் துதித்துள்ளமை யாவரும் அறிவர். மலை ஏறுவது அதிக கஷ்டமில்லை. 10-15 நிமிஷத்தில் ஏறிவிடலாம்.

இனி, தல விசேடம், தீர்த்தவிசேடம், மூர்த்திவிசேடம் என்று மூன்றும் கூறுவாம்.

தலவிசேடம்:—இத்தலத்துக்குத் திருத்தணிகை, செருத்தணி, கல்லாரகிரி, உற்பலகிரி, தணிகாசலம், கணிகாசலம், என்னும் பல பெயர்கள் உண்டு: சூரபதுமனோடும் வேட்டுவர்களொடும் செய்த போர் தணிந்து இறைவன் வீற்றிருக்கும் மலையாதலின் தணிகை, தணிகாசலம், செருத்தணி என்னும் பெயர்களும், க்ஷணநேரம் வசித்தாலும் பேரின்பம் பயக்கும் தன்மைத் தாதலின் கணிகாசலம் என்னும் நாமமும், கல்லாரம், உற்பலம் எனப்படும் நீலோற்பல புஷ்பம் மூன்று போதிலும் மலர்ந்துவந்த தலமாதலின் கல்லாரகிரி, உற்பலகிரி முதலிய பெயர்களும் இத்தலத்துக்குப் போந்தன. எம்பெருமானுக்கு இத்தலத்தின் மீதுள்ள காதலின் அளவு எவ்வளவென்பது கந்தபுராணத்தில் வள்ளிநாயகியார் திருமணப் படலத்திற் காணலாகும். மலர்களுள் தாமரை மலர் எவ்வாறு சிறந்ததோ, நதிகளுள் கங்கை எவ்வாறு உயர்ந்ததோ, நகரங்களுள் காஞ்சிப்பதி எவ்வாறு இசை பெற்றதோ, அவ்வாறு மலைகளுள் தணிகைமலை பெரிதுஞ் சிறந்ததாம்.

"விரையிடங் கொளும் போதினுள் மிக்க பங்கயம்போற், திரையிடங் கொளு நதிகளிற் சிறந்த கங்கையைப்போற், நிரையிடங் கொளும் பதிகளிற் காஞ்சியந் தலம்போல், வரையிடங்களிற் சிறந்தது இத் தணிகைமால் வரையே"

என்னும் கந்தபுராணச் செய்யுளும், "திரைக் கடல் சூழும் புவிக்குயிராகுந் திருத்தணி மேவும் பெருமானே" என்னும் திருப்புகழுமே இத்தலத்தின் பெருமையை நன்கு விளக்கும்.

தீர்த்த விசேடம்:—மலைமேலுள்ள இந்திர நீலச்சுனையின் தீர்த்தந்தான் சுவாமிக்கு அபிஷேகத்துக்கு உபயோகப்படுவது. மலைக்கு ஏறும் வழியில் பாதி தூரத்தில் பிரமசுனை என்னும் தீர்த்தம் இருக்கின்றது. மலையடிவாரத்தில் சரவணப் பொய்கை என்னும் பெரிய திருக்குளம் இருக்கின்றது. இக்குளத்திற்றான், கிருத்திகைக்கு வரும் அடியார் குழாம் ஸ்நாநம் செய்வது. ஆடிக் கிருத்திகைக்குத் தெப்பம் ஓடுவதும் இந்தப் பொய்கையிற்றான். இத்தீர்த்தத்தின் பெருமை "திருக்குள நாளும் பலத்திசை மூசுஞ் சிறப்பு" என்னும் திருப்புகழால் அறியக்கிடக்கின்றது. கீழைத் திருத்தணியின் வட கிழக்கு மூலையில் ஆறுமுக சுவாமி கோயிலும், அதன் அருகில் வடபக்கத்தில் நந்தியாறும், நந்தியாற்றுக்கு வடகரையில் வீரட்டகேசர் ஆலயமும் உள்ளன, இத்தீர்த்தங்களின் விசேடமெல்லாம் திருத்தணிகைப் புராணத்திற் காணலாகும்.

மூர்த்தி விசேடம்:—பிரத்யக்ஷ தெய்வம்; வேண்டியபோதடியர் வேண்டிய போகமது வேண்ட வெறாதுதவும் கருணாகர மூர்த்தி. "தூரத்தொழுவார் வினை சிந்திடும்" பெருமான். சுவாமி ஏகமுகம், கலியாண கோலம். உற்சவ மூர்த்திகள் இரண்டுள; அதி சுந்தர விக்கிரகங்கள்.

பெரிய உற்சவ மூர்த்திதான் தெப்பல் உற்சவத்துக்கும் கிருத்திகையன்றிரவு மயில் வாகன உற்சவத்துக்கும் எழுந்தருளும் மூர்த்தி. ஆறுமுக ஸ்வாமியின் விக்கிரகமும் இருக்கின்றது. இம்மூர்த்தி திருவாதிரைக்குப் பவனிவரும். இவ்விக்கிரகம் முன்பு நந்தியாற்றங்கரையிலுள்ள சுப்பிரமணிய சுவாமி கோயிலி லிருந்த தாகவும், அதனால்தான் அக்கோயிலுக்கு 'ஆறுமுக சுவாமி கோயில்' என்னும் பெயர் வழங்குகிற தென்றும் சொல்லுகிறார்கள். ஸ்தல விநாயகர் பெயர் ஆபத் சகாயர். இவ்விநாயக மூர்த்திக்குச் சமீபத்தில் நவ வீரர்களுடைய திருவுருவங்களும் ஸ்ரீ அருணகிரிநாத சுவாமியுடைய திருவுருவமும் இருக்கின்றன.

சுவாமிக்கு [மூலவருக்கு] வலப்பக்கத்தில் வள்ளி யம்மையார்; இந்த அம்மனுடைய இடது திருக்கரத்தில் தாமரைப் பூப்போலும் அமைப்பு. சுவாமியின் இடப்பக்கத்தில் தேவசேனையம்மை; இவ்வம்மனுடைய வலது கரத்தில் கழுநீர்ப்பூப்போல அமைப்பு.



இந்த ஸ்தல சம்பந்தமான நூல்களாவன:—

| நூல் | | ஆசிரியர் |
| --- | --- | --- |
| திருத்தணிகைத் திருப்புகழ் | | அருணகிரிநாத சுவாமிகள் |
| தணிகைப் புராணம் | | கச்சியப்ப முனிவர் |
| தணிகைப் புராணச் சுருக்கம் * | | கந்தப்பையர் |
| தணிகைப் பிள்ளைத் தமிழ் | தணிகைச் சந்நிதி முறை | * * * |
| தணிகைத் தயாநிதி மாலை | | |
| தணிகை உலா | | |
| தணிகைக் கலம்பகம் | | |
| தணிகை வெண்பா அந்தாதி | | |
| ,, மயில் பத்து | | |
| ,, சேவல் பத்து | | |
| ,, வேல் பத்து | | |
| ,, திருவடிப் பத்து | | |
| ,, தணிகைமலைப் பத்து | | |
| திருத்தணிகை விருத்தம் | | சுப்பிரமணிய முனிவர் |
| தணிகையமக அந்தாதி | | [ஆசிரியர் பெயர் தெரிய இல்லை.] |

[* அச்சேற இல்லை.]

# குழந்தைகளின் பாதுகாப்பு

# The Care of Infants

[ஸ்ரீமான் ஆர். ராகவேந்திர ராவ், பீ.ஏ., எம்.பி., ஸி.எம்.]

இச்சென்னை மாநகரில் வருஷந்தோறும் 5,300 (அதாவது 1000-இற்கு 290) கைக் குழந்தைகளும், ஒரு வயதிற்கு மேலும் ஐந்து வயதிற் குள்ளுமுள்ள குழந்தைகள் 2800-ம் மரணமடைகின்றன. மேற்சொன்ன கைக் குழந்தைகளில் 2409 குழந்தைகள், முதல் மாத முடிவைக் காண்பதற்குள் முடிவடைகின்றன. இவ்வாறு குழந்தைகள் அதிகமாக மரணமடைவதின் காரணங்களை ஆராய்ந்து பார்த்தால் நூற்றில் ஐம்பதில், மரணத்தைத் தடுக்கக்கூடிய காரணங்களாகவே ஏற்படும். சிசுக்கள், முதலில் முழுதும் தாய் அல்லது செவிலித்தாயின் பார்வையிலே அடங்கியிருப்பதாலும், தம்மால் தமக்கு உதவி செய்துகொள்ள முடியாமையாலும், தமது பாதுகாப்பின் விஷயத்தில் பார்வை செய்பவர்கள் பார்வைக்குறைவால், கஷ்டமடைகின்றன. எளிதில் தடுக்கக் கூடியனவும், ஆனால் லேசில் சிகித்சை செய்ய முடியாதனவுமான மாந்தம், இசிவு, பலக்குறைவு குடல் நோய், நுரை ஈரல் வாதம், அம்மை முதலிய காரணங்களே அநேக சிசுக்களின் மரணத்தின் பொதுக் காரணங்களாகும்.

குழந்தைகளுக்கு மருந்துகளால் பரிகாரம் செய்வது அவ்வளவு சிறந்ததென்று கொண்டாட முடியாது. சுகாதார வழிகளைக் கவனித்தல், தக்க உணவைக் கொடுத்தல், நல்ல வஸ்திரங்களை உபயோகித்தல், காற்று வசதி, ஜாக்கிரதையாகக் கவனித்தல் இவை முதலானவை, மருந்துகள் மூலமாய்ச் சிகித்சை செய்வதைக்காட்டிலும் கவலையுடன் கவனிக்கவேண்டிய சிறந்த விஷயங்களாகும். மருந்துகளைக் காட்டிலும் இதன் மூலமாகவே குழந்தைகளின் சௌக்கியம் எளிதில் ஏற்படும்.

ஸ்நாநம்.—நாள்தோறும், ஒரு தடவையாவது, மிதமான நல்ல உஷ்ண ஜலத்தில், எரிப்பு மூட்டாது நுரை அதிகமாகக் கொடுக்கும் ஸோப்பை உபயோகித்து ஸ்நாநம் செய்விக்கவேண்டும். ஒரு நாள் விட்டு ஒரு நாள், நம் தேசத்தில் செய்விக்கும் எண்

ணைய்க்காப்பு குழந்தைகளுக்கு ஆரோக்கியத்தைத் தரும்.

வஸ்திர உபயோகம்.—ஸ்நாநம் செய்வித்ததும், சுத்தமான உலர்ந்த துணியைக் கொண்டு துடைத்து, குழந்தையின் தேகத்திலுள்ள ஈரத்தைப் போக்க வேண்டியது. பிறகு ஈரமில்லாத நல்ல மெல்லிய வஸ்திரத்தால் உடம்பை நன்றாய்ப் போர்த்த வேண்டும். துணிகளை அதிக அடர்த்தியாக உபயோகித்து, குழந்தையின் உடம்பிற்கு ஹிம்ஸை கொடுக்கும்படியாகச் செய்யக்கூடாது; அதிக தளர்த்தியாகவும் இருக்கலாகாது. குளிர்வாடை படும்படியாகக் குழந்தையை விடக்கூடாது. அதுவும், முக்யமாக, ஸ்நாநம் செய்வித்ததும் கூடவே கூடாது. அவ்வாறு செய்வதால் குழந்தைக்கு ஜலதோஷமுண்டாகக் காரணமாகும்.

நல்ல காற்று.—எவ்வளவு நல்ல காற்று வேண்டுமோ, அவ்வளவு காற்றை நடமாடச் செய்வது அவசியம். இருட்டறைகளிலும், காற்றடைபட்ட விடங்களிலுங் குழந்தைகளை விடலாகாது. குழந்தைகள் கைகால்களை எவ்வளவு ஆட்ட விரும்புகின்றனவோ அவ்வளவிற்கும் இடந்தரவேண்டும். அவை உருண்டு, புரண்டு, தவழ்ந்து, உட்கார்ந்து, எழுந்து, விழுந்து செய்யும் செயல்களுக்கெல்லாம் இடந்தரவேண்டும்.

நித்திரை.—குழந்தைகள் முதலில் அதிக நேரம் தூங்கும். குறைந்த பக்ஷம் முதல் மூன்று மாதம் அவ்வாறிருக்கும். இரண்டு வருஷம் ஆகும் வரையும், அவை ஒரு நாளுக்குப் பன்னிரண்டு முதல் பதினான்கு மணி நேரம் தூங்க வேண்டும். இரண்டு வருஷமானதும், குழந்தைகள் பகலில் சிறு துயில் செய்யவேண்டும். நல்ல காற்று, நித்திரையை ஆநந்தமடையச் செய்யும். குழந்தைகளை ஆட்டாமலே தூங்கச்செய்யவேண்டியது; கைகளில் தூங்கும்படி செய்யக்கூடாது.

தூக்கமின்மை உடம்பின் அசௌக்கியத்தைக்காட்டும். அஜீர்ணம் அல்லது அதிக உணவு குழந்தையை இரவில் தூங்காமலிருக்கச்செய்யும். அழுகையும், தூக்கமின்மையும் சில வேளைகளில் வயிற்று வலியால் உண்டாகலாம். அவ்வாறிருக்குங்காலத்தில், தூக்கத்திற்காக மருந்து, அல்லது அபினி, அல்லது மயக்கத்தைத்தரக்கூடிய ஷர்பத்துகள் இவற்றைக் கொடுப்பதைக்காட்டிலும் குழந்தைகளின் ஆகார விஷயத்தில் கவனம் செலுத்துவது மிக்க பயனைத் தரும்.

அழுதல்.—"பாலாநாம் ரோதநம் பலம்" என்று சொல்வது வழக்கம். "அழுத பிள்ளை உரம் பெறும்" "அழுத பிள்ளை பால் குடிக்கும்" என்ற பழமொழிகளை நாமெல்லோரும் அறிவோம். குழந்தைகள் பால் குடிப்பதற்குமுன் அழுவது ஸகஜம். பலமாக ஒருமுறை அழுதல் குழந்தைகளின் நுரை ஈரல்களுக்கு அப்பியாசம் கொடுத்துப் பலம் கொடுக்கும்; தேகமுழுவதும் ரக்த ஓட்டம் செம்மையாகப் பரவும்படிக்குந் தூண்டும்.

பலக்க உரத்து அழுதல் குழந்தைகளின் தேக சௌக்கியத்தின் லக்ஷணம். நெடு நேரம் அழுது, வரவா ஹீனஸ்வரம் அடையும்படி அழுவது குழந்தையின் தேகசௌக்கியத்தின் குறையைக்காட்டும்; அக்காலங்களில் சிறிதும் காரணமில்லாமல் அழ ஆரம்பித்து ஓயாமல் அழும்.

வலியினால் அழும்பக்ஷத்தில், குழந்தை திடீரென்று அதிர்ச்சியுடன் அழும். வலி நின்றதும் அழுகையும் நின்றுவிடும். ஏக்கத்தால் அழுதால் உரக்க அழும். அப்போது, உடம்பை முரண்டிக்கொண்டு, தலையைப் பின் தள்ளும். அச்சமயம் குழந்தையின் முகம் சிவந்துவிடும். வயிற்று வலியிருக்கும்போது அழுகை கடுமையாக விருக்கும். அப்போது கால்களைச் சேர்த்துப் பாதத்தின் மேல் பாதத்தைத் தேய்த்து அழும். அந்தச் சமயம் வயிறு உப்பிக்கொண்டு குடலில் மலம் பந்தமடையும். சில வேளைகளில் வழித்தாற்போல பேதியும் ஆகலாம். காதுவலி தாங்காமல் அழும்போது குழந்தைகள் தமது சிறு கரங்களால் காதை அடித்துக்கொண்டு உரத்துக் கத்தும். பசியால் அழும்போது வெடுவெடுத்துக் கோபத்துடன் அழும். செலுகையும், பழக்கமுமே குழந்தைகளின் அழுகைக்குக் காரணங்கள். குழந்தைகளின் இஷ்டம் பூர்த்தியானதும் அழுகையும் நின்றுவிடும். முரட்டுத்தனத்தாலாவது, அதிக செலுகையாலாவது குழந்தைகள் அழும் பக்ஷத்தில் முழுதும் அழும்படி விடுவதே அவ்வழுகையை ஒழிக்க நல்லவழி. அது முரண்டு கொண்டு இரண்டு மூன்று மணிநேரம் ஹடத்துடன் அழுதாலும் இரண்டு மூன்று நாட்களுள் அந்தப் பழக்கம் தொலைந்துவிடும். பெற்றோர்கள் இம்மாதிரிக் குழந்தைகளை அடக்குவதில் திடசித்தமுள்ளவர்களாயிருக்கவேண்டும் ஆனால் வீட்டிலிருக்கும் பாட்டிமார்கள் நமது வீடுகளில் இவ்வழியை அனுசரிக்க விடுவாரென்பது நிச்சயமாய்ச் சொல்லமுடியாது.



# புத்தக வரவு.

## BOOKS RECEIVED

விஜயரங்கம்—அல்லது தோன்றிற் புகழொடு தோன்றுக. ஓர் நாடகம். தமிழ் நாடகங்களெழுதுவதிற் சிறந்த ராவ்ஸாஹேப் ஸ்ரீமான் சம்பந்த முதலியாரவர்கள் பி.ஏ., பி.எல்., இயற்றியது. விலை அணா 12.

ஏல்லாள்—அல்லது நல்லமனைவியே நல்ல பொருள். வில்லியம் லீக்வே என்பவர் எழுதிய Who so findeth a wife 'ஹூ ஸோ பைண்டத் எ வைப்' என்னும் நூலின் மொழி பெயர்ப்பு. விலை ரூ. 1-4.

சாணக்ய சர்கஸம்—அல்லது சந்திரகுப்த சரித்திரம்-முதற்பாகம், 'விவேகோதயம்' உபபத்ராதிபரான ஸ்ரீமதி பாலம்மாள் இயற்றியது. சிறந்த சரித்ர நாவல்களில் இது ஒன்றாகும். விலை ரூ. 1-4.

உபநிஷத் பஞ்சகம் — கர்ப்போபநிஷத், ஜாபாலி உபநிஷத், வாஸுதேவோபநிஷத், யோகதத்வோபநிஷத், ஸந்யாஸோபநிஷத்—ஆக ஐந்து உபநிஷத்துக்களின் மொழிபெயர்ப்பு. விலை அணா 5.—பலாசூர் N. ராமநாத சாஸ்திரி, பண்டிதர், அடையாறு லைப்ரெரி, சென்னை.

ஸ்வர்ண காந்தி—புதிய நாடகம். ஸ்ரீமான் S.V. நடராஜன் இயற்றியது. விலை ரூ. 1.

குறிப்பு.—விமர்சனம் பின்னர் வெளிவரும். ஷை புத்தகங்களைச் சந்தாதார்கள் 'விவேக போதினி' ஆபீஸ் மானேஜரிடமிருந்தும் வழக்கம்போல் குறைந்தவிலைக்குப் பெறலாம்.

# வௌவால்

## THE BAT

[ஸ்ரீமான் என். எஸ். ஜம்புநாதய்யரவர்கள், பீ.ஏ. எல். டி.]

மிருக இனத்தில் வியக்கத்தக்க தேக அமைப்போடு கூடியவைகளில் வௌவால் ஓர் இனமாம். நாற்கால் பிராணியாக ஓடியாடித் திரிந்து ஜீவிக்கும் மிருகமல்ல. மீனைப்போல் தேக மாறுபாட்டுடன் கடலில் பிறந்து ஜீவிக்கும் திமிங்கலத்தின் தன்மை அதனிடமில்லை. தரையையும் நீரையும் நீக்கி ஆகாசத்தையே உறைவிடமாகத் தேடினாற்போல் பறந்து ஜீவிக்கும் மிருகமாயிருப்பது வௌவால். பக்ஷிகளுக்குப் பறக்க இறகுகளுண்டு. வௌவாலுக்கும் இறக்கைகளிருக்கின்றன. ஆனால் அவைகள் இறகுகளால் ஆனவையல்ல; கைகளுக்கும், கால்களுக்கும் இடையே பரவி விரிந்துள்ள மெல்லிய தோலே இறக்கைகளாக உபயோகப்படுகின்றன. பறக்கும் தொழிலைச் செவ்வனே நடத்தும்பொருட்டு இயற்கையிலேயே உடம்பும் கைகால்களும் அநேக மாறுபாடுகள் அடைந்திருக்கின்றன.

உடம்பு சாதாரணமாய் ஒரு சுண்டெலியின் தேகத்துக்குமேல் இல்லை. கைகளின் எலும்புகள் மெலிந்து நீண்டு கட்டைவிரல் மாத்திரம் வளைந்த நகத்துடன் காணும். கால்கள் குட்டையாய் ஐந்து விரல்களிலும் வளைந்த நகங்களுடன் அமைந்திருக்கின்றன. இந்நகங்களின் உதவியால்தான் முகட்டிலோ அல்லது மரத்தின் கிளைகளிலோ அது தொத்தித் தொங்குகிறது.

தேகத்தையும் இறக்கையையும் மூடிக்கொண்டிருக்கும் தோலில் மெல்லிய ரோமமுண்டு. வௌவாலுக்கு இரவில்தான் நன்றாகக் கண்தெரியும். வாசனை அறிய நாசித்துவாரங்களும், எலிக்கிருப்பதுபோலக் காதுகளுமுண்டு. இரவில் இரைதேடப் புறப்படுகையில் வௌவாலில் பெரிய இனமாகிய பழந்தின்னி வௌவால் பழுத்திருக்கும் மரங்கள் தேடி வெகுதூரம் சென்று, உண்டு, பிறகு திரும்பி இருப்பிடம் வந்துசேரும். வௌவால், கூட்டம் கூட்டமாகத்தான் வசிக்கும். அவைகளின் பற்கள் பிடிக்கவும் கடிக்கவும் உதவுமேதவிர அரைக்க உதவாது.

வௌவாலில் சிற்றினங்கள் பெரும்பாலும் பூச்சிகளை யுண்டே ஜீவிக்கின்றன. அஸ்தமித்தவுடன் வெகு உல்லாசமாய் வீட்டுக்குப் பக்கமாகப் பறந்து திரியும் வௌவாலை விளையாடுகிறது என்று நினைப்பது நமது கவனக்குறைவு என்று கொள்ளல் வேண்டும். பறந்து திரியும் கொசுக்களை வெகு ஆத்திரத்துடன் பிடித்துத் தின்னும் ஸமயமதுவே. பொழுதுவிடிய அவைகள் தங்கள் உறைவிடம் தேடி உறங்க ஆரம்பித்துவிடும். பகல் வேளைகளில் நாம் பார்க்கும் காலங்களிலெல்லாம் தலைகீழாகத் தொங்கும் கொடூர தபசிகள்போலத் தொங்குதைப்பார்த்துப் பலர், இவ்வினம் வாயாலேயே உண்டு வாயினாலேயே மலத்தையும் கழிக்கும் விசித்திரம் பொருந்திய பிராணி என்று சொல்ல நீங்கள் கேட்டிருக்கலாம்.

அதுவும் கவனக்குறைவினால் நேர்ந்த தப்பபிப்பிராயம். மற்றப்பிராணிகளுக்கு இருப்பதுபோல் வௌவாலுக்கும் பின்புறத்தில் ஆசனமிருக்கிறது; அதன் மூலமாய்த்தான் மலம் கழிக்கிறது. வௌவாலினத்தில் ஆண் பெண் இவைகளின் சேர்க்கையால், பெண் வௌவால் இரண்டுக்குக் குறையாமல் குட்டிபோட்டு, குட்டிக்குப் பால்கொடுத்து வளர்க்கிறது.

தாய்க்குக் குட்டிகளின்பேரில் பிரீதி யதிகம். இரைக்காக வெகு தூரம் சென்று பறக்கும் காலத்திலும் குரங்குக் குட்டியைப்போல் வௌவால் குஞ்சுகள், தாயின் மார்பிலிருக்கும் மெல்லிய ரோமத்தை இறுகப் பிடித்துத் தொத்திக்கொண்டே செல்லும்.

வௌவாலில் ஓர் சிற்றினம், வீடு மரம் முதலியவைகளி லிருக்கும் பொந்துகளில் உறைவிடம் தேடி வசிக்கும்.

ஆராயுமிடத்து, வௌவால் பெரும்பாலும் மனிதனுக்கு உபகாரியேயாம். சிற்றினங்கள் அநேகமாய்ப் பூச்சிகளையே தின்று வளருவதால் அவை கொசு அந்துமுதலான க்ருமிகள் அளவுக்கு மிஞ்சி விருத்தியடையாவிதம் தடுக்கும். பழந்தின்னி வௌவாலோ, பழத்தோட்டம் வைத்து ஜீவிக்கும் கிருஷிகளுக்கு நஷ்டத்தை விளைவிப்பதால் வலையிட்டுப் பிடித்துக் கொன்று தின்று விடுகிறார்கள்.

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

[ஸ்ரீமான் ஆ. வீ. கஸ்தூரிரங்கய்யர் அவர்கள், பீ. ஏ., எல். டி.]

## S. S. L. C. 1911

III. Translate into your vernacular:—(N. B. A free and not a literal translation is required) *The translation should be in simple modern, idiomatic prose and should, as far as possible, be literal and free from Sanskrit and foreign words.*

A certain king, as he was once hunting, met with an old man planting some cocoa-nut trees.

"What a fool this old man is," said the king to his companions; "he acts as if he were still a youth and would enjoy the fruit of these trees." As his companions likewise laughed at the old man, the king went up to him and asked how old he was. "Above eighty years, Sir" was the answer: "but God be praised, still as healthy as one of thirty." "How long then do you expect still to live," continued the king, "that you at such an age still plant young trees, which bear fruit so late? Why do you take such useless trouble?" "Sir" answered the old man, "I am content with having planted the trees, without caring whether I or another enjoy the fruit of them. It is right that we do as our fathers did. They planted trees, the fruit of which we eat: as we have enjoyed the labour of our fathers, why should we be more envious of our posterity than our fathers were of us? I think that the son should pluck what the father may not enjoy." The liberal king, pleased with this answer, gave the man a handful of gold coins. "Who can now say" continued the lively old man, "that I have worked in vain to-day, since the young trees which I have just been planting bear such rich fruit the very first day?"

ஓர் அரசன் வேட்டைமேல் போயிருக்கையில், தென்னம் நாற்றுக்களை நட்டுக்கொண்டிருந்த ஒரு கிழவனைக் காணும்படியாயிற்று. தன் தோழர்களை நோக்கி, ‘என்னமடையன் பாருங்கள் இக்கிழவன்!



இன்னும் தான் சிறுவன் என்றும், தன்னால் இம்மரங்களின் பலனை அனுபவிக்க முடியும் என்றும் கருதுபவன் போலத் தொழில் நடத்துகிறானே!’ என்று வியந்து கூறினான் அரசன். இதைக் கேட்டதும் அக்கிழவனை நோக்கி அவன் தோழர்களும் நகைக்க, அரசன் அவனிடம் சென்று, ‘உனக்கு வயஸு என்ன?’ என்று கேட்டான். ‘எண்பதிற்கு மேலிருக்கும் ஐயா! ஆனால் கடவுளை என்னென்று புகழ்வது! இன்னும் எனக்கு முப்பது வயஸுக்காரன் உடல் ஆற்றலிருக்கிறது’ என்ற மறுமொழி பிறந்தது. ‘நீ எவ்வளவு நாள்தான் உயிரோடிருக்கலாம் ’என்று எண்ணுகிறாய்? வெகு நாளைக்குப்பின் பழம் தரும் நாற்றுக்களை இவ்வளவு வயஸில் இன்னும் நட்டுக்கொண்டிருக்கிறாயே! ஏன் இப்படிப் பயனில்லாது முயலுகிறாய்?’ என்று மேலும் கேட்டான் அரசன். ‘ஐயா! இவைகளின் பழங்களைத் தின்பது நானானால் என்ன? வேறு யாரானால் என்ன? இந்த நாற்றுக்களை நட்டு விட்டதாலேயே எனக்கு ஒரு அமைதி வந்துவிட்டது. நம் மூதாதைகளைப்போல நாமும் நடப்பது நேர்மைதானே. அவர்கள் நட்ட நாற்றுக்களின் பழங்களை நாம் உட்கொள்ளுகிறோம். இவ்வாறு நமது மூதாதைகளின் முயற்சிப்பயனை நாம் ஏற்பதால், அவர்கள் நம்மிடம் காட்டாத பொறாமையை, நாம் ஏன் நம் புதல்வர்களிடம் காட்டவேண்டும்? தகப்பன் ஏற்க இயலாதவைகளை, பிள்ளைகளே எடுத்தாளவேண்டும் என்பதுதான் என் கொள்கை’ என்று பதில் கொடுத்தான் கிழவன். இவ்விடையைக் கேட்டதும் கொடையாளியான அரசனுக்கு மகிழ்ச்சி உண்டாக, அவன் ஒரு பிடி பொற்காசுகளை அக்கிழவனுக்குக் கொடுத்தான். ‘இதோ நட்டுக்கொண்டிருக்கும் சிறு நாற்றுக்கள் இம்முதல் நாளிலேயே இவ்வளவு செழிப்பான பயனைத் தருமாயின், இப்பொழுது நான் வீணாக முயன்றேன் என்று யாரால் கூறமுடியும்?” என்று மேலும் சொன்னான் அச்சுறுசுறுப்பான கிழவன்.

I. Write a short essay on (one of) the following:—

(a) *The railway as an agent of civilization.*

N. B. The Vernacular Composition should be in simple, modern idiomatic prose. Full freedom will be allowed in regard to style. (It should be free as far as possible from Sanskrit and foreign words. Special attention should be paid to writing, spelling, punctuation, necessary sandhis and paragraphing.)

### இருப்புப்பாதைகளின் நாகரிக்கப்படுத்தும் ஆற்றல்

*நாகரிகத்தின் தன்மை—இருப்புப் பாதையின் திறன்—அது பரவச்செய்யும் வழிகள்.*

நாகரிகம் என்பதன் தன்மையை முதலில் ஒருவாறு உணரவேண்டும். இச்சொல்லுக்கு, நகரங்களில் உள்ள பலர் சேர்ந்த வாழ்க்கைக்குப் பேருதவியாக விருக்கும் பழக்கவழக்கங்கள் என்பதே பொருள். பலர் சேர்ந்து வாழத்தொடங்குகையில், ஒருவனைப்போல மற்றவரும் தமது நன்மையையே கருதித் தொழிற்படுவர். ஆகையால், எல்லோரது நன்மைக்குமாக, ஒவ்வொருவனது இன்பம் தேடும் வழியும் பிறனுக்குக் கூடியவரையிலும் தடையாக ஏற்படாதபடி அவன் பார்த்துக்கொள்ளவேண்டும் என்பது நாகரிகத்தின் முதல் ஒழுங்கு. பின்னர் ஒவ்வொருவனும் ஏதாவது ஒருபொது நன்மை வேலையில் ஈடுபட்டுப் பொருள்தேடியே, பிறருக்கு ஒருவித பளுவாகவும் இல்லாது, உயிர் வாழவேண்டும் என்பது இரண்டாவது ஒழுங்கு. இப்படி இருப்பதால் ஒவ்வொருவனுக்கும் பிறர் நிலைகளைப்பற்றிக் கருத மிகுந்த இடந்தராத வேலையே இருக்கும். ஒழிந்த வேளைகளிலோ வீண்வம்புப் பேச்சு, சண்டை சச்சரவு; இவைகளுக்கு இடம் கொடாதவையும், ஒரு விதத் தீங்கு இல்லாதவையுமான பொழுதுபோக்கு ஒழுங்குகளும் இங்கு காணப்படும். இவைகளுக்கெல்லாம் இன்றியமையாதவையான உதவிகள் எனப்படும் ஸுகஸௌகரியங்கள் (தேற்றஇசைவுகள்) பலவாறாக நகரங்களில் அமைந்திருக்கும். ஆகவே வீடுகள் கட்டப்படும் மாதிரிகள், இடம்விட்டு இடம் போகவேண்டியவையான வண்டி முதலியன, நடை உடைபாவனைகள், பொருள் தேடும் வழிகள், உணவு, இன்பப் பொருள்கள், துன்பம் நீக்கும் வழிகள் ஆகிய இவை போன்றவைகள் நகரங்களில்

பலவாருக இருக்கும். இவைகளில் ஒவ்வொருவனும் தன் தனக்கு ஏற்ற வழிகளில் முயன்றுபொருள்சேர்த்துப்பிறனுக்குத்தடையாக இராது தன் வாணாளை ஒருவிதக்குறையுமின்றிக் கழிக்கலாம். இந்த நாகரிகத்திற்கு எல்லா விதங்களிலும் எதிரிடையானது க்ராம்யம் எனப்படுவது. இவை இரண்டிலும் நன்மை தீமைகள் உண்டு. எதில் ஒருவனிருக்கும்படி நேர்ந்திட்டாலும் அதன் தீமைகளை விலக்கி நன்மையின் வழியைப் பின்பற்றி ஒழுக முயலவேண்டும். இங்கு நாகரிக விஷயத்தைப்பற்றிப் பேச்வந்தபடியால் அதன் நன்மைகள் மாத்திரம் ஒருவாறு வெளியிடப்பட்டன.

இனி இருப்புப்பாதை எவ்வாறு இந்த நாகரிகத்தைப் பரவச் செய்யும் ஆற்றலுடையது என்பதைப் பற்றி ஆராய்வோம். இருப்புப்பாதைவழி ஓடும் புகைவண்டித் தொடர் சற்றேறக்குறைய ஒரு மணிக்கு 40 மைல் வரையில் ஓடும் ஆற்றலுடையது. ஆகவே இது ஏற்படுவதற்கு முன்னர் ஐந்தாறு நாள் வரையில் செலவிட்டு முடிக்க வேண்டிய பயணங்கள் எல்லாம் ஒரு பகல் அல்லது இரவில் தீர்ந்துவிடும் தன்மை உண்டாகிவிட்டது. இதனல் நாகரிக விஷயங்கள் ஓரிடமிருந்து வெகு தூரம் வரை மிக விரைவில் பரவ இடம் ஏற்பட்டுவிட்டது. இருப்புப் பாதையை ஒழுங்காக நடைபெறச் செய்வதற்குப் பலரது சேர்க்கைத் தொழில் வேண்டும்: இதுவும் ஒழுங்காகவும் மிகக் கருத்துடன் நடத்தப்படுவதாகவும் இருத்தல் வேண்டும். ஆதலால் இருப்புப்பாதை ஒழுங்குக்கே அதுபோகும் வழிகளில் எல்லாம் சிறு நகரங்கள் ஏற்படும்படியாகி விடும். இவைகளிலிருந்து நாகரிகம், சுற்றுமுற்றும் உள்ள ஊர்களில் எளிதில் பரவிவிடும். ஆகவே தன் செய்கையாலும், இருப்பாலும், நாகரிகத்தை நன்றுகப் பல தூரமான இடங்களிலும் பரவச் செய்யும் ஆற்றல் இந்த இருப்புப்பாதைக்கு இயற்கையாகவே அமைந்துள்ளது. இருப்புப்பாதையை ஓட்டி, அவைகளை நடத்தும் வழிகளையும், அவைகளில் வந்து செலவாகும் பணத்தையும், அதில் முனைந்து தொழிற்படும் ஆட்களையும், அதனல் ஏற்படும் நன்மைகளையும், எல்லாவற்றையும் ஒருங்கு சேர்த்துப் பொதுவாக நோக்கினல், அதையே ஒரு ராஜ்யம் அல்லது உலகம் என்றுகூடக் கூறிவிடலாம். இந்தப் பேராற்றல்தான்; நாகரிகத்தைப் பரவச்செய்யும் திறன் இந்த ஒழுங்கில் அமைந்து கிடக்கும்படி செய்துள்ளது.

இருப்புப்பாதை இவ்வாற்றலால் நாகரிகத்தைப் பரவச் செய்யும் வழியை எடுத்தாராய்வோம். இருப்புப் பாதைத் தொடர், தான் ஓடும் வேகத்தால் நாகரிகம் நிறைந்துள்ள பட்டணங்களிலிருந்து அத்தன்மையைப் பலமாய் ஓங்கச் செய்வதற்கு வேண்டிய உதவிப் பொருள்களை எங்கும் கொண்டு செலுத்திவிடுகிறது. பல விடங்களிலுள்ள ஆள்களை வெகு விரைவில் பட்டணங்கள் கொண்டு சேர்த்து, நாகரிகக் கருவிகளை இவ்வாறு பயன்படுத்துவது, அவைகளால் அடையக்கூடிய முடிவுகளின் ஸௌகரியங்கள் எப்படி இருக்கும் என்பவைகளை நேரே பார்த்து அனுபவிக்க இடம் உண்டாக்கிவிடுகிறது. இதனல் வெளி நாட்டவர்கள் இருப்புப் பாதைத் தொடர்களாலேயே கொண்டு வரப்பட்ட கருவிகளை ஸரிவரத் தம்மூர்களில் எடுத்தாண்டு அவைகளால் உண்டாகக்கூடிய முழுப்பயனை அடையும் திறனுடையவர்களாவார்கள். அடிக்கடி, பட்டண விஷய ஸமாசாரங்களைத் தபால் ஒழுங்குக்கும் தாங்கலாகவிருந்து நாகரிகப் படவேண்டிய பல விடங்களில் விரைவிலும், சிறு கால அளவில் பலவற்றையும் கொண்டு சேர்த்து உதவி புரிகின்றன இவ்விருப்புப்பாதைத் தொடர்கள். இவை, தாமே இடம்விட்டு இடம் வெகு விரைவாகப் போவதால் இவைகள் தன்மைகளை வெளிப்படுத்த இவைகளைவிட விரைவாக ஸமாசாரம் தெரிவிக்கும் கருவியின் உதவி இவைகளுக்கு வேண்டும். இதற்காக உதவும் தந்தி ஒழுங்கும் நாகரிகம் பரவச் செய்வதற்கு உதவியான பெரிய கருவியாக உள்ளது.

இருப்புப் பாதை விஷயங்கள் ஸரிவர நடந்தேற ஒவ்வொரு இருப்புப் பாதை நிலைகளிலும் பலர்கூடித் தம் தொழில்களை ஸரிவர நடத்தவேண்டி வருவதால், ஒவ்வொரு ஊரிலும் நாகரிக முறைப்படி வீடுகள் கட்டிக்

கொண்டு, வேலைசெய்து, பொழுது போக்குகளில் முனைந்து பலர் உயிர் வாழும்படியாகிறது. இவர்கள் அவ்வூரார்களைப் பின்பற்றி நாகரீகத்தில் கூடியவரையில் முன்னுக்கு வருதற்குத் தகுந்த விளக்கக்குறியாகின்றனர். ஆகவே, இருப்புப் பாதைகள் நாகரீகக் கருவிகளை பல இடங்களில் கொண்டு சேர்த்தும், அதைப்பற்றிய பல ஸமாசாரங்களை அப்போதைக்கப்போது அங்கங்கே சென்று எட்டச்செய்தும், நகர விஷயங்களைப் பலரும் வந்துபார்த்து அநுபவிக்கச் செய்தும், அம்மாதிரி நடப்பவர்களைப் பலர்களுக்கு இடையில் ஏற்படுத்தியும், நாகரீகத்தை எங்கும் மிக அழுத்தமாகப் பரவச் செய்கிறது.



# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### யயாதி சரித்திரம்

### 1. மணம்புரிந்த சருக்கம்

பஞ்சபாண்டவர்களின் மூதாதைகளுள் யயாதி என்பவர் ஒருவர். இவர் இளம்பிராயமாக இருந்தபொழுது, காட்டில் வேட்டைக்குச் சென்றார். வெகு நாழிகை வேட்டையாடிக் களைத்து, எதிரேதெரிந்த மரமடர்ந்த சோலையை நோக்கி மிகுந்த ஆவலுடன் இளைப்பாறச் சென்றார். போகும் வழியில் 'ஐயோ! நான் இவ்வாறு திண்டாடித் தவிக்கின்றேனே! என்னைக் கரையேற்றுவாரில்லையா?' என்ற அழுகுரல் ஒன்று யயாதி காதில் பட்டது. 'இதென்ன கொடுமை' என்று, ஓசை யெழும் இடமுணராது நாற்புறமும் யயாதி ஓடிப்பார்த்தான். அவன் கூட வந்தவர்களும் தேடிப்பார்த்ததில், அருகிலிருந்த ஒரு பாழுங்கிணற்றிலிருந்து அவ்வோசை வருவதாக யயாதிக்கு அறிவித்தார்கள். உடனே அவன், அருகில்சென்று அதன் உள்ளே நோக்கினன். அதன் அடியில் ஒரு அழகியபெண் இருந்து முற்கூறியவாறு ஓலமிடுவதைக் கண்டு, மிகுந்த படபடப்புடன் தானே உள்ளே இறங்கி அவள் வலக்கையைத் தன் வலக்கையால் பலமாகப் பிடித்துக்கொண்டு மெதுவாகக் கரை கொண்டு சேர்த்தான்.

'நீ யாரம்மா? உனக்கேன் இக்கதிவந்தது?' என்று யயாதி கேட்டு வாய்மூடுமுன், சிலர் ஓடிவரும் காலடிச்சத்தம் யயாதி காதில் விழுந்தது. உடனே எல்லோரும் ஓசைவரும் புறம் திரும்ப, ஒரு முனிவர் தமது சிஷ்யர்களுடன் ஓடிவருவதைக் கண்டார்கள். மிகுந்த பரபரப்புடன் கிணற்றிலிருந்து கரை ஏற்றப்பட்ட பெண்ணை வந்து அவர் கட்டிக்கொண்டு, 'அம்மா! பிழைத்திருக்கிருயா? நான் உன்னை உயிருடன் காண்பேன்' என்று எண்ணவே முடியாமல் போயிற்றே!' என்று தழதழத்த மொழியுடன் குளறிவிட்டு மேல் ஒன்றும் பேச முடியாது மூர்ச்சையானர். அருகிலிருந்த சிஷ்யர்கள் அவருக்குச் சைத்யோபசாரம் செய்யத் தொடங்கினர்.

இவைகளை எல்லாம் கண்டு மரம்போல வியந்து நிற்கும் யயாதியை நோக்கி அப்பெண், 'என்னுயிர்ப்பிச்சை தந்த பரமபுருஷா! மயங்காதேயும்! இவர் என் தகப்பனர் சுக்கிராசாரியர். நான் அவர் பெண் தேய்வயானை. எனக்குவந்த பேராபத்தை என் பாங்கிகளால் அறிந்துவந்து மூர்ச்சையடைந்தனர் இவர். சற்றுப் பொறும்; மற்றைய விஷயங்களைப் பின்னர் கூறுகிறேன்' என்று விஷயச் சுருக்கத்தை வெளியிட்டுத் தன் தகப்பனருக்கு உபசாரங்கள் செய்த வண்ணமாகவே இருந்தாள். கொஞ்சநாழிகைக்கெல்லாம் முனிவர் சற்றுக் கண் விழித்து எழுந்துட்கார்ந்தார். உடனே தெய்வயானை 'எந்தையே! இதோ எதிரே இருக்கிறாரே இந்த மஹாபுருஷன் தான் என்னைக் காப்பாற்றியவர்' என்று யயாதியைத் தன் தகப்பனருக்குக் காட்டினள். 'யயாதியா உன்னைக் கரையேற்றியது? இவன் குலச் சிறப்பு, இவன் நடத்தைச் சிறப்பு எல்லாம் எனக்கு நன்றுகத் தெரியும். இவன் உன், வலக்கையைத் தன் வலக்கையால் பிடித்துத்தானே உன்னைக் கரையேற்றினன்?' என்று தெய்வயானையை நோக்கி வினவினர் சுக்கிராசாரியர். நடுநடுக்கத்துடன், 'ஆபத்துக்காலத்தில் ஒன்றும் தோன்றவில்லை, அந்த ஸமயத்தில் இன்ன செய்கிறேன் என்று விளங்காமையால் அவ்வாறுதான் செய்துவிட்டேன்! என்னை

மன்னிக்கவேண்டும், மஹர்ஷியே!' என்று அவர் காலில் விழுந்தான் யயாதி. 'யயாதி! காரியம் ஒன்றும் கெட்டுப் போகவில்லை; எழுந்திரு. நீ செய்த பேருதவிக்காக உன்னிடம் நான் நன்றி பாராட்டுவதை விட்டு உன்னைக் கோபித்துக் கொள்ளுவேனா? பயப்படாதே' என்று தேற்றினார் சுக்கிராசாரியர். 'ஏன் தாமதிக்கிறீர்கள் பிதாவே! அரசனைத் தாங்கள் சுட்டிக்கேட்ட கேள்விக்கு ஏற்ற வெகுமதி யளித்துவிடும்; இதுதான் தகுந்த ஸமயம்' என்று குறிப்பாகக் கூறினாள் தெய்வயானை. 'நன்றாக ஞாபகப் படுத்தினாய், என்னருமைப் பெண்ணே! மஹாராஜனே! நீர் செய்துள்ள பேருதவிக்கு இசைந்தபடி என் பெண்ணை உமக்கு விவாஹம் செய்விக்கிறேன்' என்று மொழிந்தார் முனிவர். 'நானோ க்ஷத்ரியன்; நீரோ பிராஹ்மணர். இது எப்படிப் பொருந்தும்' என்று யயாதி தன் ஸந்தேஹத்தை வெளியிட்டான். இதற்கு சுக்கிராசாரியர், 'உன் ஸந்தேஹம் நியாயமே! ஆனால் இந்தத் தெய்வயானை விஷயத்தில், அவள் க்ஷத்ரியனை மணம்புரிய வேண்டுமென்று என் சிஷ்யனது சாபம் ஒன்றுண்டு. அதற்கு இசைய, நீயும் அவள் வலக்கையை உன் வலக்கையால் பற்றும்படி நேர்ந்தது. அவள் காதலும் இப்பொழுது உன்னிடம் பாய்ந்துவிட்டது. இவைகளையெல்லாம் கருதியே நான் அவளை உனக்குக் கந்யகாதானம் செய்கிறேன். மேல குழம்பாது அவளை ஏற்றுக்கொள்' என்று தகுந்த ஸமாதானம் கூறினார்.

'இவ்வாறு யயாதி தனக்கு வந்த சிறப்பை எண்ணி மகிழ்ந்துகொண்டிருக்கையில் 'குருமூர்த்தியே! என்னைப் பொறுத்தருள வேண்டும்' என்று ஓலமிட்டுக்கொண்டு ஒரு அரசனும் அவன் பெண்ணும் சிலபரிவாரங்கள் சூழ, வந்து சுக்கிராசாரியர் காலில் அடியற்ற மரம் போல விழுந்தார்கள். உடனே அவன் தலையைத் தேய்த்துவிடத் தமது காலைத் தூக்கி விட்டார் சுக்கிராசாரியர். இக்கடுங் கோபத்தைக் கண்ட யயாதியும் தெய்வயானையும் அவர் காலை ஏந்தி நிறுத்திக் கோபம் தணிய இனிய மொழிகளைக் கூறினர். உடனே 'எழுந்திரு; அடா அஸுரப்பதரே! உன் பெண் செய்த கொடுமையைக் கேட்டாயா? இந்த மஹா புருஷனை யயாதி இத்தருணம் இங்கு வந்திராவிட்டால் என் என்று கேட்பாரின்றி என் அருமைப் பெண் பாழுங்கிணற்றில் மடிந்திருக்க வேண்டுமே! தகுந்த தண்டனை உன் பெண்ணுக்கு நீ விதிக்காவிடில் நான் இப்பொழுது உன்னை விட்டு இந்த யயாதியாகிய மாப்பிள்ளையுடன் போய்விடுகிறேன்' என்று அதட்டிப் பேசினார். அந்த அஸுரராஜனாகிய விருஷபர்வா நடு நடுங்கினான். தன் பெண்ணை நோக்கி 'பாபி சர்மிஷ்டே! காரியம் மிஞ்சிவிட்டது! நீ செய்த கொடுமையை இங்குள்ளவர்யாவரும் அறிய உன் வாயாலே வெட்கத்தை விட்டுக் கூறி, நமது குரு கொடுக்கும் தண்டனையை ஏற்றுக்கொள். தயங்காதே சீக்கிரம் தொடங்கு!' என்றுதீப்பொறி பறக்க அவன் கூறினான்.

தலையைக் குனிந்துகொண்டிருந்த நாணத்துடன் கூறலுற்றாள் சர்மிஷ்டை: 'நானும் தங்கள் செல்வப் புதல்வியும் இதோ அருகாமையிலுள்ள சோலையில் நீராடவந்து கரையில் எமது ஆடைகளைக் களைந்துவிட்டு நீரிலிறங்கினோம். தெய்வயானை மிகுந்த ஆவலுடன் ஜலக்ரீடை செய்துகொண்டிருந்தாள். எனக்குத் தண்ணீரில் வெகு நாழிகை இருக்க மனங்கொள்ளாமல் போனதால் சீக்கிரம் கரையேறி ஆடையணிந்து தெய்வயானை வரவை எதிர் பார்த்திருந்தேன். வெகு நாழிகை கழித்து அவள் கரை ஏறி என்னருகிலிருந்த ஆடையை எடுத்தாள். உடனே என்னை நோக்கி 'ஏது கொஞ்சங்கூட மரியாதையில்லாது என் ஆடையை எடுத்துக்கட்டிக்கொண்டுவிட்டாயே' என்று மிகுந்த பதட்டத்துடன் கேட்டாள். அப்பொழுதுதான் என் ஆடையைப் பார்த்து என்னதல்ல என்று கண்டுகொண்டேன். தெய்வயானையின் பதட்டம் எனக்கும் பதட்டத்தை உண்டாக்கியது. உடனே 'என்ன மரியாதை என்று பேசிவிட்டாயே இதற்கு. நான் ஏதோ தெரியாது செய்த காரியத்தை இப்படியா ஏசிக்காட்டுவது' என்றேன். 'ஏது அரசன் பெண் என்ற கொழுப்போ! உன்னை இப்படிச் செய்து, இப்படிப் பேசச்சொல்லுகிறது' என்று மூண்டு விட்டாள் தெய்வயானை. 'என் தகப்பன் வேலையாள் தானே உங்கள் தகப்பன். வேலைக்காரிக்கு என்ன மரியாதை வேண்டியிருக்கிறது' என்று நானும் உளறிவிட்டேன். எங்களிருவருக்கும் வார்த்தை தடித்துவிட்டது, கோபம் தன் சண்டாளத்தன்மையைக் காட்டிவிட்டது. அதைத் தாங்காது ஆவேசம் பிடித்தவள்போல என் பாங்கிகள் உதவியின் பேரில், படுபாவி நான்! குருபுத்ரியை அருகிலிருந்த பாழுங்கிணற்றில் தள்ளிவிட்டு மிகுந்த இறுமாப்புடன் அரண்மனை சென்றுவிட்டேன். கோபம்தணிந்ததும்தான் நான்செய்த கொடுந்தொழிலின் இழிவு என் மனத்தில் தோன்றியது. அது முதல் இதுவரையில் அனலிலிட்ட மெழுகுபோல உருகிப்பரிதவிக்கிறேன். தகுந்த தண்டனை கொடுத்து என்னைப் பாபம் அணுகாவண்ணம் செய்துவிடும் குருவே" என்று முறையிட்டுக்கொண்டு சுக்ராசாரியர் காலில் சர்மிஷ்டை விழுந்தாள்.

சுக்கிராசாரியாருக்குக் கோபம் இறங்குமுகமாக விருந்தாலும், முற்றிலும் அது நீங்கின பாடில்லை. யயாதிக்குச் சர்மிஷ்டையைக் கண்டு அவள் பணிவு முதலியவைகளைக் கண்ணுற்றதும், அவளிடமும் மெய்க்காதல் ஏற்பட்டுவிட்டது. இப்படியிருக்கையில், சுக்ராசாரியர் விருஷபர்வாவை நோக்கி, 'உன் பெண், பதவி தப்பி இப்படியெல்லாம் செய்து விட்டபடியால் அந்தக் கொழுப்படங்க அவள் என் பெண்ணுக்குப் பாங்கியாக இந்த யயாதி ராஜனுடன் போயிருக்கட்டும்' என்று தண்டனை விதித்து, யயாதியை நோக்கி 'சர்மிஷ்டை அஸுரர் குலத்தில் உதித்தவளாயினும் க்ஷத்ரிய ஜாதியைச் சேர்ந்தவளே! அவளை நீ பெண்சாதியாக்கிக் கொள்ளாதே ஜாக்ரதை! அப்படிச் செய்ததாகத் தெரிய வந்தால் நான் உன்னிடம் மிகக் கொடியவனாகிவிடுவேன்; ஜாக்ரதை; மறவாதே' என்று எச்சரித்தார்.

விதிப்படி விவாஹம் அஸுரராஜன் வீட்டில் நடந்தேறியதும், யயாதி. தெய்வயானை சர்மிஷ்டை இவர்களை அழைத்துக்கொண்டு தன் ராஜ்யம் சேர்ந்து ஊருக்கு வெளியில் சர்மிஷ்டைக்கு ஒரு அரண்மனை ஏற்படுத்திக்கொடுத்து அதிலிருந்து வந்து தினம் தெய்வயானைக்கு அவள் பணிவிடை செய்து போகும்படி ஒழுங்கும் செய்துவைத்தான். நாளடைவில் யயாதிக்குத் தெய்வயானையிடம் யதுமுதலிய நான்கு பிள்ளைகள் பிறந்தனர்.' இதன் பின்பு, ஒரு நாள் யயாதி ஊருக்கு வெளியில் இரவுநேரத்தில் போகும்படிநேர, சர்மிஷ்டை அவள் வீட்டருகிலிருந்த நந்தவனத்தில் அவனைப் பார்க்கும்படி நேர்ந்தது. அவள் அப்பொழுது தன் கஷ்டஸ்திதியையும், தான்வேறு ஸாதாரணர்களை மணம்புரியக்கூடாத் சிறந்தகுலத்தில் உதித்திருப்பதையும், எடுத்துக்கூறி, தெய்வயானைக்கு நான்கு பிள்ளைகள் உண்டாகிவிட்டபடியால் தன்னை அரசன் மணந்தால் அதிகமாக சுக்ராசாரியர் கோபிக்கமாட்டார் என்று வெகுவாக நியாயங்கள் காட்டித் தன்னை அவன் மனைவியாக ஏற்கும்படி சர்மிஷ்டை வேண்டினாள். முன் நடந்த விஷயங்கள், தன் மனதின் நிலைகள் எல்லாம் உடனே ஞாபகம் வர அதற்கு அரசன் இசைந்து, காந்தர்வ விவாஹ விதிப்படி சர்மிஷ்டையை விவாஹம் செய்துகொண்டான்.

சில நாள்களில் சர்மிஷ்டையிடம் பூருவை இறுதியாகக்கொண்டு சில பிள்ளைகள் பிறந்தனர். ஒரு நாள் பூருவும் அவன் அண்ணன்மாரும் வீதியில் சில குழந்தைகளுடன் விளையாடிக்கொண்டிருப்பதை அரண்மனையில் யயாதியுடன் இருந்த தெய்வயானை கண்டாள். உடனே பூருவுக்கு அரசன் சாயலிருப்பதாக தெய்வயானைக்கு ஒரு தோற்றமுண்டாக அவனையழைத்து 'உன் தகப்பன் யார்' என்று கேட்டாள். ஒரு சூதும் அறியாத குழந்தை அருகிலிருந்த யயாதியைக் காட்டிவிட்டது. அன்றுதான் சர்மிஷ்டா விவாஹம் வெகு விசித்ரமாக வெளிப்பட்டது. உடனே தெய்வயானைக்கு அடங்காப் பொறாமை வந்துவிட்டது. தன் பாங்கிக்குத் தனக்கு நிகரான நிலை வந்துவிட்டதே! என்று குமுறி அழுந்தினாள். என்ன தடுத்தும் நிற்காது, தன் பாங்கிமார்களுடன் தன் தகப்பனாரிடம் சென்று யயாதி செய்துள்ள கொடுமையைக் கூறி முறையிட்டாள். சுக்கிராசாரியருக்கு அடங்காக் கோபம் வந்துவிட்

டது. பெண்ணை அழைத்துக் கொண்டு யயாதியிடம் உடனே அவர் வந்துவிட்டார்.

யயாதி சுக்ராசாரியரைக் கண்டதும், நடு நடுங்கிப்போய்ப் பிரமித்து அசைவற்று நின்றுவிட்டான். வந்தவர், விஷயங்களை முன்பின் விசாரியாது, பெண் கூறியதை ஸத்யமாகவே கொண்டு, 'கோடையிடிபோலக் கர்ச்சிக்கலானார். 'யௌவனக் கொழுப்பேறிய கொற்றவா! நான் எடுத்துக்கூறி எதைச் செய்யலாகாதென்றேனோ, அதையே உன் சிறுமையின் வலியால் செய்து முடித்துவிட்டாயே! பிடி சாபம்!! எந்த இளமையால் கொழுத்துவிட்டாயோ அது இப்பொழுதே உன்னை விட்டு அகல, மூப்பு வந்து குடிகொள்ளட்டும்!' என்று சபித்தார். உடனே எல்லோர் முன்னிலையிலும் யயாதி தொண்டு கிழவனாகி விட்டான். மூப்பின் குறிகளான தளர்ந்த தேஹம், குழிந்த கண்கள், நரை திரைகள், பலக்குறைவு, இருமல் முதலிய நோய்கள், எல்லாம் வந்து கவிந்துகொண்ட யயாதி, உடனே பதபதைத்து முனிவர் காலில் விழுந்து, சர்மிஷ்டை தன்னிடம் எடுத்துக்கூறிய நியாயங்களை விஸ்தாரமாகச் சொல்லி அவரை ஸமாதானப்படுத்த முயன்றான். இதற்குள் தெய்வயானைக்கும் கோபம் தணிந்து, யௌவன ஸ்திரீயான சர்மிஷ்டை பட்டபாடுகளை அரசன் கூறுங்கால், மனம் கனிந்துவிட்டது. மேலும் தன் கணவன் இளமையில் முதுமை பெற்றால் தனக்குந்தானே துக்கம் என்ற விஷயம் கிழட்டு யயாதியைக் கண்ணுற்ற உடன், அவள் மனதில் பதிய, மிகுந்த பரபரப்புடன் தன் தகப்பன் காலில் விழுந்து முறையிடத் தொடங்கினாள். 'மஹர்ஷியே என்ன காரியம் செய்துவிட்டீர்! என் கணவனுக்குத் தண்டனை விதிக்கவந்து, அருமைப் பெண்ணான எனக்கல்லவா தண்டனை விதித்துவிட்டீர்! வேறு சாபங்கொடுத்திருக்கலாகாதா? இதற்கேதாவது ஒருமாற்றுச் செய்தாலொழிய, என் துக்கம் எப்படி நீங்கும்? தயவுசெய்ய வேண்டும்' என்று மன்றாடினாள். கோபம் குறைந்துவந்த முனிவர்க்கு யயாதி சொற்களும், பெண்சொல்லும் நியாயமேயென்றுபட, 'கொடுத்தசாபம் கொடுத்ததே; அது பலிக்காமல் போகாது, இந்தக் கிழத்தனம் இயற்கையாக இல்லாதது; ஆதலால் இதைப் பிறருக்குக் கொடுத்து அவர் இளமையை நீ ஏற்கும் திறன் ஏற்படும்படி மாத்திரந்தான் இப்பொழுது இந்தக் கொடுமைக்கு என்னால் மாற்றுச் செய்யமுடியும். அப்படி உன்னைத் திருப்திப்படுத்துபவனுக்கு நீ என்ன பக்ஷபாதமாகவிருப்பினும், உனக்கு யாதொரு குறையும் அதனால் நேராமலிருக்கட்டும். தெய்வயானை, சர்மிஷ்டை இருவரையும் நீ உன் மனைவிகளாகக்கொண்டு நீடூழிகாலம் சிறப்புற்று வாழக்கடவாய்' என்று அனுக்ரஹித்துத் தமது ஆச்ரமம் சென்றார் சுக்ராசாரியர்.

மஹர்ஷியார் தமது ஆச்ரமம் சென்றதும், யயாதி தனது பிள்ளைகள் எல்லோரையும் சூழ அழைத்து இருத்தித் தனக்கு வந்த துன்பத்தை வாய்விட்டுக் கூறி 'யாராவது இஷ்டப்பட்டு எனக்கு இளமையைக் கொடுத்தால் அவனுக்கு எனது மூப்பைக்கொடுத்து என்னாயுள் முழுவதும் ஸுகித்துவிட்டு அவனது இளமையை அப்படியே அவனிடம் கொடுத்துவிடுகிறேன்' என்று சொல்லி ஒவ்வொரு பிள்ளையாகக் கேட்டான். யது முதல் பூருவைத்தவிர மற்றவர் வரையில் ஒரு பிள்ளைக்கும் இது தகுந்த வேண்டுகோளாகப் படாததால் அவர் மறுத்துவிட்டனர். உடனே யயாதிக்கும், தெய்வானைக்கும், சர்மிஷ்டைக்கும் இவர்களிடம் வெறுப்புண்டாகிவிட்டது. பூருவிடமும் இக்கேள்வியைக் கேட்டான் யயாதி. மிகுந்த ஸந்தோஷத்துடன் பூரு முன்வந்து தகப்பனுக்கும் தாய்மார்களுக்கும் தண்டம் ஸமர்ப்பித்து, 'தெய்வமென்றால் உங்களைத்தவிர ஒன்றும் உணரா எனக்கு வேறு ஒருவருமில்லை. உங்களாலேயே உண்டாக்கப்பட்ட உடலுக்கு இப்படி இவ்விளமையிலேயே உங்களைத் திருப்திப்படுத்தும் பாக்கியம் கிடைத்ததே; இதுவே போதும் எனக்கு. உங்கள் இஷ்டப்படி செய்யலாம்' என்று பரிவுடன் கூறி யயாதியின் மூப்பை ஏற்று தன் இளமையை அவருக்குக் கொடுத்துவிட்டான். உடனே பூரு தொண்டு கிழவனாகப் போய்விட்டான். இதைப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள், இதைப்பற்றிக் கேள்விப்பட்டவர்கள் எல்லோரும், 'இவனே பிள்ளை; மற்றவர்கள



எல்லாம் வெறும் அணிப்பிள்ளைகீரிப்பிள்ளை தென்னம்பிள்ளைகள் தான்" என்று புகழ்ந்து பேசினர். யயாதியும் மற்றப் பிள்ளைகளிடம் தனக்கு வந்த கோபத்தால் தகுந்த சாபம் அவர்களுக்குக்கொடுத்தான். அன்று முதல், பூருவுக்கு வேண்டிய பணிவிடைகள் செய்யத்தகுந்த ஏற்பாடுகள் செய்துவிட்டுத் தன் ராஜ்ய காரியங்கள் போகங்கள் வழி திரும்பிவிட்டான் யயாதி. இப்படிப்பட்ட பிள்ளையைப் பெற்ற சர்மிஷ்டையல்லவோ மஹாபதிவிருதை என்று அவள் சிறப்பில் ஈடுபட்டு முன் பகைகளை எல்லாம் தான் மறந்து அவளுடன் மனம் ஒத்து நடக்கத் தொடங்கிவிட்டாள் தெய்வயானை. முனிவர் சாபம் தன் பிள்ளையால் நீங்கியதால் மனம் கனியப்பெற்ற சர்மிஷ்டை, தெய்வயானையை தன் குருபெண்ணாகக் கருதியே பாங்கித் தொழிலையும் அவளுக்கு விடாது செய்துவந்தாள். யயாதிக்குத் தன்னிரு மனைவிகளும் இப்படி மனம் ஒத்து வாழ்ந்ததைக் காண உண்டான ஆனந்தத்திற்கு அளவேயில்லை. ஆபத்துக்களிலிருந்து விடுபட்டு இவ்விருவர்களுடன் யயாதி மனுநெறி வழுவாது செங்கோல் செலுத்தத் தொடங்கினான்.

# பிரபஞ்ச வர்த்தமானம்

# Progress of the World

**தமிழின் தசை**

நாட்டுக்கோட்டைச் செட்டிமாரில் ஒருவரும், ஆண்டிப்பட்டி ஜமீந்தாரும், தமிழ் அபிமானியுமான ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியாரவர்கள்; ஆங்கிலேயத்தில் உள்ள "என்ஸைக்ளோபீடியா பிரிடானிகா" என்னும் நிகண்டுவைப் போலத் தமிழிலும் ஒரு கிரந்தம் வெளியிடுவதற்குப் பண உதவிசெய்ய முன்வந்திருக்கிறார்களென்பதைக் கேட்க வெகு சந்தோஷமுண்டாகிறது. இதற்கு, ஸேது ஸமஸ்தான வித்வான் ஸ்ரீமான் ராகவய்யங்காரவர்கள் பதிப்பாசிரியராக அமர்கிறாரென்றும் அறிகிறோம். தமிழ் இலக்கண இலக்கியம் சம்பந்தப்பட்டமட்டில் ஸ்ரீமான் அய்யங்காரவர்கள் அந்த ஸ்தானத்துக்குத் தகுந்தவர்கள்தாம். ஆனால், இந்த நிகண்டு ஆங்கிலேயத்தில் உள்ளதைப்போல, மனிதன் அறிந்துகொள்ள விரும்பும் ஒவ்வொரு விஷயத்தையும்பற்றிக் கூறவேண்டுமானால், அந்தந்த விஷயங்களில் பாண்டித்யம் பெற்ற பிரபலர்களை அய்யங்காரவர்கள் துணை சேர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாம். இவ்வரிய கிரந்தம் பேருக்கேற்ப அமைப்பும் அளவும் பெற்று, எல்லோராலும் எடுத்தாளக்கூடிய யோக்கியதையும் உடைத்தாயிருக்குமெனவே நம்புகிறோம். இங்கிலீஷில் உள்ளதைப்போலத் தெலுங்கில் ஒரு நிகண்டு இப்போது சென்னையில் ஆந்திராபிமானிகளால் வெளியிடப்படுகிறது.

பின்னும், புதுக்கோட்டைச் சீமை, ராயவரத்தில் சென்ற மாதம் நிகழ்ந்த "சாரதா விலாஸ ஸபை"யின் வருஷாந்தக் கொண்டாட்டத்தில், தமிழில் அகராதியொன்றும், தமிழாசிரியர்கள் ஜீவிய சரித்திரமொன்றும் வெளியிடவேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றனர். இவையெல்லாம் தமிழுக்கு வரப்போகும் நற்காலத்தைக் காட்டுங் குறிகளாம்.

* * *

**குழந்தைகளுக்கான சட்டம்**

தண்டனை பெறக்கூடிய குற்றங்களைச் செய்யும் சிறுவர்களைச் சிறைச் சாலைக்கு அனுப்புவதில் உண்டாகும் அசௌகரியங்களை உத்தேசித்து, நமது சென்னை கவர்ன்மெண்டார் ஒரு சட்டம் உண்டாக்க எண்ணிக்கொண்டிருக்கின்றனர். அச்சட்டத்தின்படி, பதினான்கு வயதுக்குக் கீழ்ப்பட்ட குற்றவாளிகள் சிறைச்சாலைக்கு அனுப்பப்படவே மாட்டார்கள்; 14 வயதுக்கு மேலும் 16 வயதுக்கு உள்ளும் இருக்கும் சிறுவர்களுக்குச் சிறைத் தண்டனை எப்போதும் இராது; சிறுவர்களை விசாரிப்பதற்கென்றே நியாய ஸ்தலங்கள் ஏற்படுத்தப்படும். அப்படிப்பட்டவர்கள் தங்கி, தொழிற் கல்வி கற்றுக்கொள்ளும்படியான பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்

படும். சிறுவர்களைச் சிறைச் சாலைக்கு அனுப்புவதனால், அங்குள்ள கெட்டவர்களுடைய சகவாசத்தினால் இவர்கள் மனமும் கெடுகிறதேயன்றிச் சீரடைவதில்லை யென்பது அனுபவ சித்தம். ஆதலால் இந்தமாதிரியான சட்டம் ஊர்ஜிதத்துக்கு வருமானால், நாட்டுக்கு க்ஷேமமுண்டு என்பதில் சந்தேகமில்லை. இம்மாதிரிச் சட்டம் இங்கிலாந்தில் அமுலில் இருக்கிறது. நமது நாட்டில் மற்றைய மாகாணங்களிலும், இது ஏற்பட வேண்டியது அவசியம்.

***

**முடவர்களின் தர்த்தசை**

லண்டன் நகரத்தில், கல்வி இலாகா அதிகாரிகள், முடமான குழந்தைகளுக்கென்று ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கும் விதமும், அவர்கள் ஏதாவது வேலை செய்து பிழைக்கக்கூடியதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யும் முறையும் அக்குழந்தைகளுக்குத் தங்கள் தங்களுடைய அங்கவீனம், துக்கத்தை யுண்டாக்கா வண்ணம் அவர்கள் நடத்தப்படும் மாதிரியும் வெகு வியப்பைத் தருகின்றன. இம்மாதிரியான பள்ளிக்கூடங்கள் நமது நாட்டிலும் ஏற்படுவதற்கு ஏதாவது முயற்சியுண்டாகுமா? நமது தேசத்தில் கூன் நொண்டி சப்பாணிகளுக்குக் குறைவில்லை. அவர்களுடைய வாழ்நாளை இனிதாக்கி, அவர்களும் ஜன சமுகத்துக்குப் பயன்படும்படிச் செய்ய வேண்டியது அவசியம். இதன்றியும், இப்போது நடக்கும் கடூரமான ஐரோப்பிய யுத்தத்தில் காயமடைந்து திரும்பும் நமது சிப்பாய்களுக்கு இப்படிப்பட்ட பள்ளிக்கூடமொன்று ஏற்பட்டால், அது அவர்களுக்கு மஹோபகாரமாகும். எந்த மகான் இதற்கென்று முன்வந்து புண்ணியத்தைக் கட்டிக் கொள்ளப் போகின்றனன்?

***

**ஆந்திர தேச புஸ்தக சாலைகள்**

பெஜ்வாடாவிலுள்ள ஆந்திரதேசப் புஸ்தகசாலைச் சங்கத்தார், ஆந்திர தேசத்தில் 1915-ம் வருஷத்தில் இருந்த புஸ்தக சாலைகளின் விபரமடங்கிய கைப்புத்தகம் ஒன்றை வெளியிட்டிருக்கின்றனர். அதற்கு ஸ்ரீமான் களம். எம். ராமச்சந்திர ராவவர்கள் முகவுரை எழுதியிருக்கின்றதைக்கொண்டு ஞானபிவிருத்திக்காக இப்புஸ்தக சாலைகள் செய்துவரும் காரியங்கள் ஒருவாறு தெரியவருகிறது. இராப்பள்ளிக்கூடங்கள், மாஜிக் லாந்தர் பிரசங்கங்கள், தெலுங்கில் துண்டுப் பத்திரிகைகள், புத்தகங்கள் ஆகியவற்றில் இவைகளுடைய முயற்சி செல்கின்றது. இதற்குச் சமானமாகப் பெருமையுடன் சொல்லிக்கொள்ள நமது தமிழ் நாட்டில் எத்தனை புஸ்தகசாலைகள் இருக்கின்றன? அவை இல்லாக் குறையைக் கண்டும் கேட்டும் நாம் வெட்கத்தால் தலை குனியாம லிருப்பதென்று?

***

**பருத்திக் காம்பிலிருந்து காகிதம்**

நமக்கு எடுத்த தெல்லாவற்றுக்கும் உபயோகப்படுகிற காகிதத்தைப்பற்றி நாம் அதிகமாகக் கூற வேண்டியதில்லை. இப்போதைய யுத்தத்தினால் காகிதம் வெளி நாட்டிலிருந்து வருவது குறைந்தது. அதனால் விலை அதிகமாயிற்று. எலிச்பூர் வாசியான ஸ்ரீமான் G. N. ஸஹஸ்ரபுத்தி என்ற வக்கீல், பருத்திக் காம்பிலிருந்து காகிதம் செய்யும் தொழிலைக் கண்டுபிடித்திருக்கிறார். பருத்திக் காம்புகளைத் துண்டு துண்டாக வெட்டி, ஓர்வித காரம்போட்டுத் தண்ணீரில் பிசைந்து, உஷ்ணமான அறையில் வேக வைக்கவேண்டுமாம்; வெந்தவுடன், காம்புகளைச் சுத்தம் செய்து, இன்னும் சில முறைகளைக் கொண்டு வெளுப்புக் காகிதம் செய்கின்றனர். இம்முயற்சி வெகுவாகக் கைகூடி நாட்டுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடும். நம் நாட்டில் பருத்தி சாகுபடி அதிகமென்பதையும், பருத்திக் காம்புகளை நம்மவர்கள் அடுப்பெரிக்கின்றனர் என்பதையும் கவனிக்குமிடத்து, இந்த நூதன முயற்சி பெரிதும் பயன்பட்டு, உலகமுழுவதுக்குமே நம்நாட்டிலிருந்து காகிதம் ஏற்றுமதி செய்யப்படலாமென்று எண்ண இடமுண்டு.

***

**ஸ்ரீமான் S. P. ஸிம்ஹா**

வங்காளக் கவர்னருடைய நிர்வாக சபையில் ஒரு ஸ்தானம் காலியாவதால் அதற்கு ஸத்யேந்த்ர பிரஸன்ன ஸிம்ஹா ஸ்ரீமான்



அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஸ்ரீமானவர்கள் கல்கத்தாவில் ஒரு பிரபல வக்கீல்; இதற்குமுன் கவர்னர் ஜனரலுடைய நிர்வாக சபையில் ஒருவராகக், கொஞ்ச காலம் வேலை பார்த்து, அந்தப் பெரிய பதவியை ராஜிநாமா வைத்தவர். இப்போது அங்கீகரித்த உத்தியோகத்தை அவர் முழுவதும் அதாவது ஐந்து வருஷம் வகிப்பாரானால், வக்கீல் உத்தியோகத்தினால் அவருக்குக் கிடைக்கும் வரும்படியில் சுமார், பத்து லக்ஷம் ரூபாவை இழக்கவேண்டி வரும். இங்கிலாந்தில் பிரபலர்கள், இம்மாதிரி நஷ்டத்தை யடைந்தாவது, காபினெட் மெம்பராகப் போவதுண்டு. அப்படிப் போவதால் ஜனங்களுக்கு ஏராளமான நன்மை செய்யலாம் என்பது அவர்களுடைய அபிப்பிராயம். நமது ஸ்ரீமானவர்களும் அவ்வித எண்ணத்தை யுடையவராகி இப்பதவியை அங்கீகரித்திருப்பாரென்றே எண்ணுகிறோம். ஸ்ரீமானவர்களுக்குத் தீர்க்காயுளும் திடகாத்திரமும் சித்திக்கவேண்டுமென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.

***

**இந்திய ஜாதிய பத்திரிகை**

இந்தியாவும் இங்கிலாந்தும் பிரியவொண்ணாதபடி தெய்வ சங்கற்பத்தால் இணைக்கப்பட்டிருக்கிறபடியால், இவ்விரு நாட்டினரும் ஒருவரையொருவர் நன்றாய்த் தெரிந்து கொள்ளவேண்டியது அத்தியாவசியமாகிறது. இதற்கென்றே ஏற்பட்ட சில பிரயத்தனங்களில், பத்திரிகை மூலமாக ஒருவர்க்கொருவர் பரிசயம்செய்து கொள்வது ஒன்றாகும். "இந்தியா," "நேஷன்," என்ற பத்திரிகைகள் நம்முடைய கஷ்டங் குறைகளை ஆங்கிலேயருக்கு எடுத்துக்காட்டி, நம்மிடம் அவர்களுடைய அனுதாபம் வரும்படிச் செய்கின்றன. இப்பால் இன்னுமொரு பத்திரிகை உதயமாகிறதென்பதைக் கேட்கச் சந்தோஷப்படுகிறோம். இது இந்திய ஜாதீயப் பத்திரிகை (Indian National Review) என்ற பெயருடன் ஸ்ரீமான் D, N. பானர்ஜி அவர்களுடைய தலைமையின்கீழ்ப் பிரசுரமாகும். இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் சிநேக பாவத்தை முற்றச்செய்வது, இந்தியா இத்தன்மைய குணம் வாய்ந்ததென்பதை எடுத்துக் காட்டுவது, இந்தியாவின் குறைபாடுகளை ஆங்கிலேயருக்குத் தெரியப்படுத்துவது இவைகளே இப்பத்திரிகையின் பிரதான நோக்கங்களாகும். இப்படிப்பட்ட பத்திரிகைகள் எத்தனை யிருந்தாலும் அத்தனைக்கும் அவசியமுண்டு. ஆதலால் இந்த நன் முயற்சி முற்றுப்பெற வேண்டுமென்பதும், அதனால் நமக்கும் மேல் நாட்டாருக்கும் க்ஷேமாபிவிருத்தி உண்டாகவேண்டுமென்பதும் நமது பிரார்த்தனை.

***

**தென்னிந்தியாவில் ரயில்வே முயற்சி**

அறந்தாங்கி யிலிருந்து புதுக்கோட்டை-கர்ரைக்குடி மார்க்கமாக ராமநாதபுரத்துக்கு. 195 மைல் தூரம் இருப்புப்பாதை போட ஏற்பாடாகிறது. இவ்வேற்பாட்டின்படி இதற்குவேண்டிய பணம் நமது நாட்டு முதலாளிகளான நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களில் சிலர் ஒரு பகுதி கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இருப்புப்பாதைக்கு வேண்டிய பூமியைக் கவர்ன்மெண்டார் இனாமாகக் கொடுப்பார்கள். பாதை போடும்போதும், போட்டு முடிந்த பிறகும் வட்டி லாபம் இவைகளில் சவுகரியம் செய்து கொடுக்கப்படும். ஏதாவது ஒரு வருஷத்தில் நஷ்டம் வருமானால் அதையும் கவர்ன்மெண்டார் கட்டிக் கொடுப்பதாகச் சொல்கின்றனர். இப்பாதைக்குச் சுமார் 47 லக்ஷம் ரூபா தேவையாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு 50 லக்ஷம் ரூபா சேகரிக்க ஏற்பாடாகிறது. ஜனங்களின் சவுகர்யத்தை உத்தேசித்து மூன்று விதமான பங்குகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. பணமுள்ளோர்களுக்கு இது நல்ல சமயம்; லாபத் தொகை நாட்டிலேயே நிற்குமாதலால், நாட்டுக்கு க்ஷேமம்; நமக்கும் அனுகூலம்; இப்போதுள்ள பாதைகளின் லாபத்தை ஆங்கிலேயர்கள் அடைவதைப்போல நாமும் அடையலாம். தெய்வ சங்கற்பத்தோடு நம்முடைய முயற்சியும் இதை முற்றும் பலிக்கச் செய்யும் என்பதற்கென்ன தடை?

*தீர்க்காயுஸும் கவுண்ட் ஒகுமாவும்*

ஜப்பானிய பிரதான மந்திரியான கவுண்ட் ஷிகேனுபு ஒகுமா, தீர்க்காயுளைப் பற்றிச் சில அபிப்பிராயம் கொண்டிருக்கிறார். அவருக்கு இப்போது 79-வயது ஆகிறது. ஒவ்வொருவரும் குறைந்த பக்ஷம் 125 வருஷம் வாழ்ந்திருக்க வேண்டுமென்பது அவருடைய கொள்கை. "ஆயுளுக்கு விரோதிகள் பணமும் இன்பானுபவமும். பணத்தினால் உண்டாகும் சஞ்சலமும், மிதமிஞ்சிய இன்பத்தினால் நேரும் துர்ப்பலமும் ஆயுளைக் குறைக்கின்றன. ஆதலால் நான் பணத்தைத் தேடுவதில் கவனஞ் செலுத்துவதில்லை; சஞ்சலப்படுவதுமில்லை" என்கிறார் ஒகுமா ஸ்ரீமான். ஒருவன், தான் வயதில் முதிர்வதாக நினைப்பானானால் அதுவும் அவனுடைய ஆயுளைக் குறைக்கும் என்கிறார். ஆகையால் ஆயுளை விரும்புபவர்கள் இளமையாகவே இருப்பதாக நினைத்துக் கொள்ள வேண்டுமாம். பணமே பிரதானமாகக்கருதும் இந்த நாளில் ஸ்ரீமான் ஒகுமாவின் கொள்கைகளைப் பின்பற்றுபவர் வெகு சிலர்தா மிருப்பார்கள். ஆதலால் நம்மவர்களில் பெரும்பாலார்க்கும் தீர்க்காயுளுக்கும் வெகு தூரம்.

***

*யுத்தத்தின் முடிவு*

சுமார் 16,17 வருஷங்களுக்கு முன்னால் கலியுகத்தின் 5000-ம் வருஷம் வந்தவுடன் யுகமுடிவு வரப்போகிறதென்றும் அதனால் உலகமெல்லாம் பிரளயத்தில் மூழ்கிவிடுமென்றும் ஜனங்கள் சொன்னது பொய்யாய்ப்போனது நமக்குத் தெரியும். இப்போது ஒரு பிரஞ்சு சாஸ்திரக்ஞர் பிரபஞ்ச முடிவைப்பற்றி ஒரு விஷயம் சொல்கிறார். சமுத்திரத்தின் கீழே தரையின் கனம் வரவர மெலிவடைகிறதெனவும், திடீரென்று பூகம்பமோ அக்கினிமலை எழுச்சியோ உண்டாகுமானால், தரைபிளவுபட்டுப் பூமிமுழுவதும் நெருப்பில் வெந்துவிடுமெனவும் அவர் கூறுகிறார். அப்படி எரியும் பூமியின் தோற்றம் சிற்சில வேளைகளில் ஆகாயத்தில் எரிந்து விழுவதாகக் காணப்படும் நக்ஷத்திரங்கள் ஒன்றைப்போலவிருக்குமாம்! புராண ரீதிப்படி நமது மன்வந்தரங்களில் நம்பிக்கையுண்டானால், நாம் இந்த ஆரூடத்துக்குக் கொஞ்சங்கூடப் பயப்படவேண்டியதில்லை.

***

*'ஐரோப்பிய' யுத்தம்*

மாதந்தோறும் இந்த யுத்த விஷயமாக எழுதிவருகிற நமது கை ஓயும்படி, என்றைக்குக் கடவுள் அருள் புரிவாரோ அறியோம்! தோல்வியை ஒப்புக்கொண்டு ஜர்மானியர் சமாதானத்துக்கு வருவதற்கு இன்னும் எவ்வளவு காலம் செல்லுமோ தெரியவில்லை. 'விநாசகாலத்தில் விபரீத புத்தி தோன்றும்' என்பது ஜர்மானியர் விஷயத்தில் நிதர்சனமாகப்போகிறது.

மேற்கு அரங்கத்தில் ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரரும் ஜர்மானியருடைய மூன்று வரிசைகளைப் பிளந்துவிட்டனர். இது காரணமாக ஜர்மானியரில் சுமார் ஐந்து லக்ஷம் பேர் இறந்திருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆங்கிலேயருடைய எல்லாச் சேனைகளும் போருக்கு வரவில்லை. யுத்த தளவாடங்கள் வரவர அதிமாகச் செய்யப் படுகின்றன. இவை இரண்டும் முன்னணிக்கு வருமானால் ஜர்மானியர் முற்றிலும் முறியடிக்கப் படுவார்கள் என்பதில் ஆக்ஷேபமில்லை. மழைக்காலம் ஆரம்பமாகிவிட்டபடியால், மும்முரமாகச் சண்டை நடக்க ஏதுவில்லை. இது நின்றவுடன் ஜர்மானியரின் பிடிவாதமும் அடங்கிவிடலாம்.

கிழக்கரங்கத்தில் கலீஷியாவில் கடும்போர் நடக்கிறது; என்றாலும் அங்கு ருஷியர்களுக்குத்தான் அதிக ஜயம். கார்பேதியின் மலைப் பிரதேசத்தில் மட்டும் ஜர்மானியருக்குச் சிறிது வெற்றியுண்டாயிற்று. ருமேனியாவும் கூடுமான வரையில் முயற்சி செய்து சத்துருவைத் துரத்தியவண்ணமாகவே இருக்கின்றது. ஜியூல் பிரதேசத்தில் பகைவர்களில் பலர் கைதியாயினர். மற்றைய விடங்களிலும் சத்துருக்கள் முன்னடையவில்லை.

ராணுவ நிபுணர்களில் பலர், யுத்தம் சீக்கிரம் முடிவடையுமென எதிர்பார்க்கின்றனர். கிரீஸின் எண்ணந்தான் இன்னும் வெளிப்படவில்லை. ஆங்கிலேயர் பக்கம் சேர்ந்துவிட்டால், வெகு சீக்கிரத்தில் நம்மவர்கள் ஜயபேரிகையடிக்க ஏதுவாகும்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## ஐரோப்பிய யுத்த ஓடம்

## The European War Song

[ஸ்ரீமதி பாலஸுந்தரி அம்மாள்.]

அவனியில் புகழ்பெற்ற ஐரோப்பா கண்டந்தன்னில்
அதிசயமாய் ஜெர்மனியும்; ஆங்கிலேயர் ப்ராஞ்சியரும்
ரணகளத்தில் பின்வாங்கா ரஷ்யர்களும் ஸெர்வியர்களும்
அமர்புரியும் திறமதனை அறையப்போமோ எந்நாவால்

(முடுக்கு)

சீர்பெற்ற ஸெர்வியா என்னும் சிறு நாட்டில்
ஆஸ்ட்ரியா இளவரசை அதம்செய்தா ரென்று,
ஆத்திரம் மேற்கொண்ட ஆஸ்ட்ரியா அரசன்
அநியாய மாகவே பெரும்படை யெடுக்க,
ஜெர்மனி நாட்டரசன் சேர்ந்து துணையாக
கடற்படை தரைப்படை குதிரைகாற் படையும்
கணக்கற்ற வெடிகுண்டு பீரங்கி யுடனே
அதிவிசித் திரமான ஆகாய ரதமும்
அற்புதமு மானதொரு ஸப்மேரீன்க ளுடனே
அள்வி லடங்காத ஸைன்யங்கள் கொண்டு
அட்டஹா ஸம்செய்து போருக் கெழுந்து
பக்கத்து நாட்டாரைப் போருக்கழைத்துப்
பெல்ஜியம் வழியாகப் பிரான்ஸுக்குச் செல்லப்
பெல்ஜிய நாட்டரசர் பெருந்தன்மை யாக
வழிவிடோ மென்றுதாம் வாதுகள் செய்ய
கோட்டைகொத் தளங்களைக் கணப்பொழுதில் தகர்த்துச்
சற்றுமே யிரங்காமல் முற்றுகை போட்டுச்
சண்டப்ர சண்டமாய்ச் சமரதைப் புரிய
அண்ட ப்ரஹ்மாண்டங்கள் அதிகமாய் நடுங்க
இக்கட்டு வருமென்று இங்கிலண்டும் ப்ரான்ஸும்
இணையற்ற வீரர்கள் சேர்த்துப் படைகொண்டு
இருதிறத் தார்களும் கடும்போர் புரிய
ஆகாய ரதமேறி அதிவிரைவில் வந்து
அநேக பட்டணங்களில் அக்னியை மூட்டிப்
பாதாளந் தனில்சென்று பெருஞ் சுரங்கம் வைத்துப்
பகைவர்கள் கப்பலை அடியோ டழித்து,
டார்பிடோ வெடிவைத்துத் தடபுடல்கள் செய்து

தரணியை யொருகுடைக்கீழ் ஆளவே நினைத்து
வெற்றிபெற வேண்டுமென்று பேராசை கொண்டு
கொற்றவர்கள் சேனைகள் போர்க்களம் சென்று
உயிர்ச்சேதம் பொருட்சேதம் ஒன்றுமுணராமல்
ஒருவர தாருயிரை மற்றொருவர் மாய்த்து
இரண்டரை ஆண்டாக நடந்துவரும் போரில்
ஒருவர் பக்கமும்ஜய மேற்படா திப்போர்
உலகத்தி லுள்ள வீரர்களெல்லாம்
கோடானு கோடியாய் மாண்டுமே மடிய
அந்தோ, விபரீதம் என்னென்று சொல்வேன்
அவர் மனைவி மக்களும் கண்ணீர் சொரிந்து
லக்ஷோப லக்ஷம் ஜனங்கள் புலம்ப
அக்ஷயம் போன்ற பொருட்களு மழிய
ஆதியில் நடந்த மாபாரதப் போரிலும்
அதிஸூக்ஷ்மமான போர் ஆயுதங்களில்லை
ஆகாயந்தனில் செல்லும் அதிரதர்களில்லை
பாதாளந்தனில் செல்லும் புகைரதங்களில்லை
வெடிகுண்டு பீரங்கிக் கடற்சுரங்கமில்லை
வேரோடழிக்கும் க்ரூப்ஸ் கன்களில்லை
சத்தஞ் செய்யாமலே சடுதியில் தாக்கும்
ஸப்மெரீன் களில் செல்லும் வீரர்களில்லை
யுத்த தள வாடங்கள் மின்சாரமில்லை
இங்கிலண்டு நாட்டில்போல் பொருட்குவியலில்லை
சதுரங்க சேனை, ஸாமக்கிரியையில்லை
ஸாகராதிபத்யப் பெருமையுமில்லை
இந்திய வீரரின் ராஜவிசு வாஸம்போல்
இதற்குமுன் யாரிடமுங் கண்டது மில்லை
இக்காலத்துப் போன்ற ஸாதனங்களில்லை
எல்லாமிருந்தும் ஸமாதானமில்லை
கருணா நிதியுந்தான் திருவுள மிரங்கி
கணக்கற்ற வீரரின் உயிர்ச்சேதங்கண்டு
இனியாவ திந்த யுத்தம் நடவாமல்
இருதிறத்தோருக்கும் ஸ்நேஹமுண்டாக்கிக்
கடும்போர் நடவாமல் உடன்படிக்கை செய்து
காசினியில் எல்லோரும் களிப்புற்று வாழ
ஈசனது திருவருளை இரங்கி ப்ரார்த்திப்போம்
ஏலேலோ ராமஜயம்—கோவிந்தா—ஏலேலோ ராமஜயம்.



# மங்கள வாழ்த்து

[வித்வான் மதுரமொழி பிருஹ்மஸ்ரீ வஸிஷ்ட பாரதியவர்கள்]

தமிழுலகின் பெருந்தவப் பயனாத் தோன்றித் தவழ்ந்துநடந்து, பல இடர் தீர்ந்து பாரினில் உலவும் சீரிய சஞ்சிகா மணியே! உன்னாலடைந்த உதவியும் இன்பமும் சொல்லவும் பெறுமோ? பண்டைக் காலந்தொட்டு நம் தமிழ் நாட்டுக்கு வசன நடைகள் இல்லை யென்னும் குறையை ஒருவாறு நீக்கினையன்றோ? ஆயினும் உன்னை யொப்பார் முன்னும் பின்னும் பலர் விளங்கினும் உன்னை யொப்பார். நின்னை யொப்பார்?

விவேக போதினியே! நீ எத்தனை நேயராகிய சேயரைப் பெற்றிருக்கிறாய்? ஒவ்வொருவனும் இவ்வுலகில் வாழ்வதற்குரிய சிறந்த துறைகள் ஒன்றில் உழைத்து வர, நற்குணமும் நல்லொழுக்கமும் எழிலும் வாய்ந்த ஸ்திரீ ரத்னங்களாகிய குடும்பிணிகளாகவும் வாழ்கின்றார்கள். இத்தனை சிறப்பினையுடைய மக்கள் பலரைப் பெற்ற உன் பாக்கியமே பாக்கியம்! நந்தேசச் சிறுவர் சிறுமிகள் கண்களுக்கு இனிய காட்சி தந்து, அவர்கையில் ஏந்திப் போற்றவும் விளங்குவாய்!

கலா மணியே! நின்வாய்த் தோன்றும் வேத ரஹஸ்யங்கள், கைக்கொண்டு ஒழுக வேண்டிய பல விதிகள், நற்பயனையுடைய ஹேதுவான பல விலக்குகள், ஆசிரம தர்மங்கள் முதலிய மத விஷயங்கள், நியாய மாலைகள், நீதி மாலைகள், கதா கதம்பங்கள், பலதேச இயல்புகள், பூர்வகால நிலைமைகள், அரசர், புலவர், போர்வீரர், பல சாஸ்திர பரிசோதகர் ஆகிய இவர்களின் சிறப்பு, செயல்கள்—இவைகள் எல்லாவற்றையும் விளக்கி விரித்துக் கூறும் விவேக போதினியே!

பூர்வ காலம், தேவ வருஷம் மூன்றினளவாக அகோராத்ரம் தாயாதிகளாகிய ஸுர அஸுரர்கள் பெரும்போர் செய்ததைப் புராண வாயிலாய்க் கேட்டதன்றிக் கண்டார் ஒருவருமில்லை. தற்காலம் அதையொப்ப மனுஷ வருஷம் மூன்றரை (சற்றேறக் குறைய) அளவாக நடக்கிற அதிபயங்கரமான யுத்தமும் அதில் அனேக ஜீவகோடிகள் நாசமடைந்து வரும் விஷயமும் சத்துருக்களின் பலவித உளவறியு முறைகளும், மானிடருக்குள் யுத்தம் நடப்பதின் காரணங்களைக் குறித்த யுத்த தரும விசாரமும் பலருமறிய உனது வாயிலாய் வெளிவருகின்றனவே!

நம் மாட்சிமை தங்கிய இந்தியச் சக்கிரவர்த்தியின் பெரும்படைக்கு ஓர் உதவிப் படையாய்ச் சென்ற இந்தியப் படைகளின் தீரமும், போர் புரியும் வீரமும், தம் உயிரையும் கொடுத்துக் காட்டும்இராஜவிசுவாஸ ஸாரமும்,எங்கேரமும் தோன்றும்படியாகக் கூறுகிறாய்! உன்னாலன்றோ நம்மிந்தியர் வீரம், நந்தமிழ் நாடெங்கும் பரவுகின்றது!

ஓ வீரலக்ஷ்மியே! இனி சீக்கிரம் நம் தேசரக்ஷகரான சக்கிரவர்த்திக்கு விஜயத்தையும் லோக க்ஷேமத்தையும் கூறும் விஜயலக்ஷ்மியுமாகக் கடவாய்! மங்களம்! மங்களம்!! மங்களம்!!!

# THE GREAT EUROPEAN WAR

***In lucid Tamil. Excellently got up Price Re. 1—4—0***

BEAUTIFULLY WRITTEN AND PROFUSELY ILLUSTRATED.

**256 PAGES:: 58 BEAUTIFUL HALFTONE ILLUSTRATIONS**

---

## SOME PRESS OPINONS

**கிருஷிகன் பத்திராதிபர் எழுதுவது.**—பார்த்தவுடன் கண்ணைக் கவரும் விதமாக அச்சிடப்பட்டிருக்கிறது. அதற்கேற்பவே, உள்ளடங்கிய விஷயமும் சிலாகிக்கத்தக்கவாறு அமைந்திருக்கிறது. ஐரோப்பிய தேச சரித்திர ஸம்பந்தமான பல விஷயங்களையும் விவரித்திருப்பதால் ஐரோப்பாவைப்பற்றிய விஷயங்களை ஸாமான்ய ஜனங்கள் அறிய இது சிறந்த ஸாதனமாகும் என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். ஒழுங்குபடுத்தி கோர்த்தியாயும், கதைப்போக்காயும், கார்ய காரண ஸம்பந்தம் விளங்கும்படியும் எழுதியிருப்பதால் முன்னுரையில் கூறியபடி படிப்பவர்க்கு மனோத்ஸாகத்தை யுண்டுபண்ணும்படியும், அரிய விஷயங்கள் பல சிரமமின்றி அறியும்படியுமிருக்கிறது; மனதைக் கவரும்வண்ணம், அழகிய, தெளிவான நடையில் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. அநுபந்தங்களில் கணக்கிற் சிறந்த அரிய ஸமாசாரத் தொகுதி, ஜனங்களின் அறிவை விஸ்தாரப்படுத்தும்படி அமைந்திருக்கிறது.



Earl Roberts

***

**The Hindu.**—"*The style is clear, easy flowing and graphic; the details of European History given in the book are full, well arranged and to the point, no more, no less.* * *all narrated with a vividness and intensity that grip the reader by the interest created.* Special mention must be made of the numerous *appendices which are full of information* about the great personalities of the War, the arms and tactics employed, the relative strength and resources of the parties &c. *It is, on the whole, good work done in a new direction.*

***

**The Madras Mail.**—" * An *admirably written* and *comprehensive book in Tamil* on the War. The book gives not merely a lucid account of the progress of the War in the several theatres, but *furnishes an historical background for the intelligent understanding of the conflict of political and national ideals that has brought about this War.*

***

**The Indian Patriot.**—" *In simple language, the causes of the present War, the preliminary efforts, the excitement in the several countries and the Military preparations which every country took, are very systematically described. The bravery of the Belgians is a chapter worth reading and admiring.* The twelfth and *last chapter very wisely deals with the loyalty of India and her ruling Princes.* Appendices about 14 in number, complete the book and these *contain the most valuable information* such as, the array of the battlefield including the present day inventions and short notes of kings and statesmen involved in the War.

விவேக போதினிச் சந்தாதாரர்க்கு மாத்திரமே ரூ. 1.

**For Copies apply to:—The Manager "Viveka Bodhini"**

**Mylapore, Madras.**



பாபு அம்பிகாசரண முஜூம்தார்


# விவேகபோதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி IX { நளஹூ கார்த்திகைமீ :: 1916-ஹூ டிசம்பர்மீ } பகுதி 6


## நல்லொழுக்கம்

### GOOD CONDUCT

### 2. சிஷ்ய லக்ஷணம்

உலகில் மேன்மையடைவதற்கு, கல்வியே மூலாதாரம். அதற்குத் தகுந்த குருவிடம் படிப்பது சிறப்புத் தரும். அவ்வாறு படிக்கும்பொழுது உபாத்தியாயரது காலஸௌகர்யங்களுக் குட்பட்டு அவர் குறிப்பிற்கு இணங்கிக் கற்பதே படிப்புக்குப் பதமளிப்பது. அவ்வாறு கற்றவருள் ஏகலைவன் என்பவன் எல்லாரினுஞ் சிறந்தவன்.

அவன் ஜாதியில் வேடன்; நடத்தையில் வெகு சீலன்; ஹிரண்யதனுஸ் என்னும் வேடச் சிற்றரசனது மகன். ஜாதித்தொழிலாகிய விற்பயில்வதை அவன் கற்றானாயும் மேலுஞ் சிறந்த வித்தைகள் கற்பதற்குத் தக்க ஆசிரியனைத் தேடி அலைந்தான்.

ஏகலைவன் இருந்த இடம் அஸ்தினாபுரத்தருகிருந்த காடு. அந்நாளில் அஸ்தினாபுரம் நமது ஹிந்துதேசத்தின் முக்கிய பட்டணமாக இருந்தது அதில் 'திருதராஷ்டிரன் பாண்டு என்னுமரசர்கள் மிக்க புகழுடன் ஆண்டு வந்தனர். திருதராஷ்டிரனுக்கு நூறுபிள்ளைகள்; அவரைக் கௌரவரென்றழைப்பது வழக்கம். பாண்டுவுக்கு ஐந்து பிள்ளைகள்; அவர்களைப் பாண்டவரென்றழைப்பது வழக்கம். அவர் சிறுவராக இருக்கும்பொழுதே பாண்டு இறந்துவிட்டதால், திருதராஷ்டிரன் தன் மக்களையும் தன் தம்பி மக்களையும் தானே வளர்த்து வந்தான்.

கௌரவபாண்டவர்கள் துரோணரென்னும் வேதியரிடம் அரசர்க்குரிய போர்த்தொழில்களைக் கற்கும்படி ஏற்படுத்தப்பட்டனர். துரோணர் தனுர்வேதத்தில் நல்ல ஞானமுடையவர். இவர் அவர்களுக்குப் படை கற்றுவித்த பெருமை எங்கும் பரவியது. ஏகலைவனும் அவரது பெருமையைக் கேட்டுத் தானும் அவரிடம் படை கற்கப் பேராவல் கொண்டான்.

அவன் முனிவர்முன் தக்கவிதம் சென்று, உள்ளன்போடு வணங்கிக் கைபொத்திச் சற்றுவிலகிநின்று துரோணரது கடைக்கண் நோக்கத்தை ஆவலுடன் எதிர்பார்த்து நின்றான். அவனைக் கண்ணெடுத்து ஏற இறங்க நோக்கியதும், ஏகலைவன் "என் ஐயனே! நாயேன் வேடச் சிற்றரசன் மகன்; ஏகலைவன்; தம்மிடம் படைத்தொழில் படிக்கும் பாக்கியந்தேடி வந்திருக்கிறேன்; உமது ஆணைக்காளாக ஆயத்தமாய் இருக்கிறேன்" என்றான். முனிவர் மௌனம் சாதித்தார். பரமசாந்தியுடன் அவன் வேதியர் முகத்தையே பார்த்து நின்றான்.

"அப்பா! உன் ஆவல் எனக்குத் தெரியும். நான் ராஜகுமாரர்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்கே பொழுதுபோதவில்லை. ஆகையால் உனக்கு அவகாசமில்லையென்று தானே சொல்லவேண்டும்! ஆயினும், உனது படிப்பிற்கு ஒரு குறைவும் வராது; உனக்குக் கீர்த்தியே வரும்" என்று கருணை வீசுங்கண்களால் பார்த்துப் புன்சிரிப்புப் பொலியப் பதில்சொன்னார் த்ரோணர். வேடச்சிறுவன் பரமகுருவின் அருள் கிடைத்ததென்னும் அன்பால் பூரித்து அங்கே அவருக்கு அஷ்டாங்கத் தண்டனிட்டு விடை பெற்றுப் போனான். த்ரோணரது அன்பையும் அவர் தாம் அரசகுமாரர்களுக்குக் கல்வி பயிற்றும்

பொழுது தனக்குப் பயிற்றுவது அரசனால் தவறாக எண்ணப்படும் என்றதை மௌனத்தால் காட்டியதையும் அவன் குறிப்பாலுணர்ந்தது வியக்கத்தக்கதல்லவா?

நிற்க. ஏகலைவன் தன் இடம் அடைந்து, த்ரோணர்போல் சிலா உருவம் ஒன்று ஏற்படுத்தி அதனைத் தனது சிலம்பச்சாலையில் ப்ரதிஷ்டித்து, அதனையே தனது குருமூர்த்தியாக எண்ணித் தினமும் பூசைசெய்து நிவேதனமளித்துப் போற்றிப் பிறகு தனது வில் வேலைகளைப் பயின்றுவந்தான். மனோப்ராவத்திற்கேற்ப அவனுக்கு அவ்விக்ரஹம் மனதைக் குவிக்கப் பெரும் போதனமூர்த்தியாகவிளங்கியது. இவ்வாறுஆசிரியனை மனத்தால் வழிபட்டு மேன்மையடைந்து யாரினும் உயர்ந்து ஏகலைவன் விளங்கினான்.

இவ்வாறு ஏகலைவன் புகழ் எங்கும் பரந்து விளங்கியகாலத்து, த்ரோணரிடம் கௌரவபாண்டவர்களும் விற்றிறமையில் தேர்ந்து விளங்கினர். அவருள் அர்ஜுனன் தனக்குச் சமானமில்லை என்று சொல்லும்படி விளங்கினான். அவன் வில்லை வளைத்து நாண்வீக்கி அம்பைப்பூட்டி எய்தால் குறி தவறியதொருநாளுங் கிடையாது. த்ரோணரே அவனைக் கௌரவித்தார் என்றால் மற்றும் சொல்ல வேண்டுமோ? இதனால் அர்ஜுனனுக்குக் கொஞ்சம் கர்வமுமுண்டாகியிருந்தது. இதை த்ரோணர் கண்டிருந்தார். த்ரோணர்க்கு ஏகலைவனைப்பற்றி ஞாபகம் ஒழியவில்லை; அவனைப் பற்றி முற்றுந் தெரியும்; அவனைப் பார்க்க ஆவலுமுண்டு. நிற்க, பாண்டவகௌரவரும் தமது குருவின் அனுமதி பெற்று வேட்டையாடக் காட்டையடைந்தனர். அவ்வாறு வேட்டையாடிய போது அர்ஜுனனுடைய நாயானது ஏகலைவனுடைய சிலம்பச்சாலையுள்ளோடி அவனது த்ரோண மூர்த்தியின்மீது எச்சமிட்டது. அதைப் பொறுக்காது அவ்வேகலைவன் சீறி, எய்த அம்பொன்றே அந்நாயின் உடல் முழுதும் பாய்ந்து உதிரங்கக்க, அது பொறுக்கமுடியாது அர்ஜுனனை யடைந்தது. அந்நாயைக்கண்ட அர்ஜுனன், தனக்கு மாத்ரம் தனது குரு சொல்லிவைத்த ஓரம்பெய்து உடல்முழுதும் பாயச்செய்யும் வித்தை, வேறொருவனுக்குந் தெரிந்ததென்றும் வியப்பும், தன் நாய்க்குத் துன்பமுண்டாக்கியதென்று வெறுப்பும் அடைந்தான். அதனால் அந்நாய் வழிகாட்ட அம்பெய்தவனைக்காணத் தன் உடன்பிறந்தாருடன் சென்றான். ஏகலைவனும் பாண்டவரை அறிந்து எதிர்கொண்டு வேண்டிய மரியாதை எல்லாம் செய்து, அவர் கேட்கத் தன்னை இன்னான் என்றும் தான் எவ்வாறு கலைகற்றான் என்பதையுஞ் சொன்னான். பின் விடைபெற்று பாண்டவர் த்ரோணரிட மீண்டனர். 'தம்மினும் கற்றாரை நோக்கிக் கருத்தழிக' என்றவாறு அர்ஜுனன் அவரிடம் ஏகலைவனைப்பற்றிச் சொல்லி அவனெவ்வாறு சிறப்படைந்தானென்று கேட்டான்.

அர்ஜுனனது உள் எண்ணத்தை உணர்ந்த த்ரோணர், ஏகலைவனது பெருமையைக் காட்ட அர்ஜுனனுடன் ஏகலைவனது சிலம்பச்சாலையை அடைய, அவன் தனது குருவின் வரவை அறிந்து தலையால் வணங்கி வேண்டியவெல்லாம் செய்து, அவர் முன், வாய்பொத்திக் கைபொத்தி நின்றான். த்ரோணரும் "உனக்கு விற்றிறம் கற்பித்ததார்?" என்றுகேட்டார் அஷ்டாங்கத்தண்டனிட்டு "ஐயனே! தாமே என் சற்குரு! தமதருளே என் படிப்பிற்காதாரம். அன்றும்மை நாடி வந்தபோது, தாங்கள் அவகாசமில்லையானாலும், ஆதரித்த கடைக்கண் அருளை முன்னிட்டு உம்போல் உருவச்சிலை செய்து இதோ! வைத்து நித்தம் வணங்கி வருகிறேன். இப்போதென் உள் மனத்துடன் உமக்கு வணங்கியும் ஆசீர்வாதத்திற்காளாகிறேன்" என்றான். த்ரோணரும் "நீ என் சிஷ்யனானால் உன் வலக்கைக் கட்டைவிரலை எனக்குக் குருதக்ஷிணையாகத்தா" என்று கேட்டார் வில்லாளிகட்கு இன்றியமையா ஸாதனமாகிய அவ்விரலையுடனே ஏகலைவன் சிறிதும் தயங்காது, மனமயங்காது, மிக்கவன்போடு கொடுத்தான்.

ஆ! என்று அர்ஜுனன் தன் மூக்கின் மேல் கைவைத்தான். த்ரோணரும் ஏகலைவனது தலைமேல் தன் கைவைத்து அனுக்ரஹித்தார். ஏகலைவனைப் போலல்லவா மாணாக்கர்கள் குருவிடம் நடக்கவேண்டும்?

மஹாபாரதம், ஆதிபர்வம்.



விவேக போதினி

தொ.9] நள ௵ கார்த்திகை ௴ [ப.6

## வர்ணாச்ரம தர்ம நிலை

### VARNASRAMA MODIFICATIONS

முன்னர் எடுத்துக் காட்டப்பட்டுள்ள வர்ணாச்ரம தர்மங்கள், காட்டியவாறு அவ்வவ் வர்ணத்தாருள் ஆச்ரமிகளால் தவறாது பின்பற்றவேண்டியவைகளே: சற்றேனும், தாறுமாறாக இவைகள் குழப்பப்படவே கூடாது. இதனால் பெருங்கேடுதான் விளையுமே ஒழிய ஒருவித நன்மையும் உண்டாகாது. இவைகள் அவ்வவ்வர்ண ஆச்ரமிகளுள் ஸரிவர நடைபெற்று வருகின்றனவா என்று மேல்பார்வையிடுவதும், இவைகளை ஸரிவர நடத்துபவர்களுக்குத் தடைகள் ஏற்படாது நீக்குவதும், இவைகளை ஸ்ரிவர நடத்தாதவர்களைத் தண்டித்துப் பின்பற்றத் தூண்டுவதும் க்ஷத்ரியன் தர்மம். க்ஷத்ரியன் உள்பட இவர்கள் எல்லோரும், தம் தர்மங்களில் நிலைபெற்று மாறாது நிற்பதற்கு வேண்டிய தெளிவான திட உணர்வை இவர்களுக்குப் புகட்டுவது ப்ராஹ்மணர் தர்மம். ஆகவே, ப்ராஹ்மணர்களே எல்லோருக்கும் அறிவு புகட்டும் ஆசிரியராவர்: அவர் வேலையை ஸரிவர நிலை நாட்ட க்ஷத்ரியர் அவர்களுக்கு உதவிபுரிபவர்களே. இவர்கள் முயற்சியால் பயன்பெற்று ஓங்குபவர் நான்கு வர்ணாச்ரமிகளுமே.

இப்படி ஸரிவரச் சற்றும் மாறாது நடந்தேறவேண்டிய வர்ணாச்ரமதர்மம், சில இடுக்கண்கள் வந்துற்ற காலை, இப்படி மாறுபட்டோ அல்லது சுருக்கியோ பின்பற்றப்படவேண்டும் என்றும் நமது சாஸ்திரங்களுள் காட்டப்பட்டுள்ளது. இதுதான் தேசகால வர்த்தமானங்களுக்கேற்ப வர்ணாச்ரம தர்மம் மாறும் விதம். இந்த இடுக்கண்களான ஆபத்துக்கள் பொதுவாகக் கால பேதத்தால்தான் ஏற்படும். இவை யுகபேதங்கள் என்றும் கூறப்படும். இவைகளில் எல்லாம் இந்தத்தர்மங்களின் மாற்றத்திற்குப் பொதுவான ஒழுங்கு ஒன்றுண்டு. எந்த ஆபத்திலும், ஒரு வர்ணாச்ரமத்தைச் சேர்ந்தவன் தனக்குக் கீழ்ப்பட்ட வர்ணாச்ரமங்களது தர்மங்களில் இன்றியமையாதவைகளைப் பின்பற்றி நிற்கலாம்; ஆனால் மேல்பட்டவைகள் ஒன்றையும் கையாளலாகாது: ஆபத்து நீங்கியதும் தன்னிலைக்கு வந்துவிடவேண்டும்—என்பதுதான் அந்த ஒழுங்கு. இதைப் பின்பற்றியேதான் சாஸ்திர ஒழுங்குகள் எல்லாம் தர்ம மாற்றங்களில் ஏற்பட்டுள்ளன.

தர்ம மாற்றத்திற்கு முக்யமான யுகபேத விஷயத்தை எடுத்துக்கொள்ளுவோம். யுகங்கள் கிருத, த்ரேத, த்வாபர, கலி என நான்கு. இவைகளுள் (1) கிருத யுகத்தில்:- தபஸ், சௌசம், தயை, ஸத்யம் என்ற நான்கு பாகங்களுடைய தர்மம் பூர்ணமாக இருக்கும்; தபஸே முக்யம்: வாஸனை மாத்திரத்தில் பாபம் ஏற்படும்; பாபி, இருக்கும் தேசத்தைவிட்டே விலகவேண்டும்; அவனுடன் பேசநேரிட்டாலும் பாபம்: சாபானுக்ரகங்கள் உடனே பலிக்கும்: தானம் செய்ய வாங்குபவனிடம்சென்று கொடுத்தல்வேண்டும்: ப்ராணன் எலும்பைப்பற்றி யிருக்கும். சாஸ்திரங்களே ப்ரமாணம்: மநுஸ்மிருதி ஆதாரம்.

(2) த்ரேதா யுகத்தில்:—தர்மத்தின் முதல் பாகமாகிய தபஸ், கர்வத்தால் நாசமாகப் பின்னுள்ள மூன்று பாகம்தான் இருக்கும்: ஞானம் முக்யம்; எண்ணத்தால் பாபம்; பாபி இருக்கும் கிராமத்தைவிட்டு விலக வேண்டும்; அவன்மேல் பட்டால் பாபம்; பத்து நாளில் சாபாநுக்ரஹங்கள் பலிக்கும்; வாங்குபவனை அழைத்துத் தானம் செய்யப்படும்; ப்ராணன் மாம்ஸத்தைப்பற்றி நிற்கும்; குருவாக்கியம் பிரமாணம்; கௌதமஸ்மிருதி ஆதாரம்,

(3) த்வாபரயுகத்தில்:—தர்மத்தின் இரண்டாவது பாகமான சௌசமும், ஸங்கத்தாலழியத் தர்மத்தின் இரண்டுபாகந்தானிருக்கும். யஞ்ஞ யாகாதிகள் முக்யம்; சொல்லாலேயே பாபம்: பாபி, இருக்கும் குலத்தை விட்டு ஒதுங்கவேண்டும்; அவன் வீட்டுச் சோற்றாலே பாபம் வரும்: ஒரு மாஸத்தில் சாபாநுக்ரஹாதிகள் பலிக்கும்; வந்து இரப்பவற்குக் கொடுக்கப்படும்; ப்ராணன் ரக்தத்தைப் பற்றிநிற்கும்; ராஜ வாக்கியம் ப்ரமாணம்; சங்கலிஹித ஸ்மிருதி ஆதாரம்.

(4) கலி யுகத்தில்:—தர்மத்தின் மூன்றாவது பாகமாகிய தயை என்பதும் மதம் என்பதால் அழிய ஒரு பாகமாகிய ஸத்யந்தான் இருக்கும். அதுவும் காமத்தால் நிலைகுலைந்து கொண்டேவரும்; தானம்தான் முக்யம்; செயலாலேதான் பாபம்; பாபியின் இணக்கத்தை விட்டால் போதும்; பாபிக்கு உதவினால் பாபம்; ஒரு வருஷத்தில்தான் சாபாநுக்ரஹங்கள் பலிக்கும்; தன்னை அடுத்துக் காத்திருப்பவனுக்குத் தான் கொடுக்கப்படும்; ப்ராணன் உணவையேதான் பற்றிநிற்கும்; ஜன ஸமூகநிர்ணயம் ப்ரமாணம்; பராசர ஸ்மிருதி ஆதாரம். அதர்மத்தால் தர்மமும், அஸத்யத்தால் ஸத்யமும், திருடர்களால் அரசர்களும் ஸ்திரீகளால் புருஷர்களும் அடக்கி யாளப்படுவர்.

இப்படி யுகங்கள்தோறும் ஜனங்களது தன்மையும், அவர்களது ஆற்றலும் குன்றி வருவதினாலே இவைகளுக்கு ஏற்ப, வர்ணாச்ரமதர்மங்கள் முற்கூறிய ஆதாரஸ்மிருதிகளில் சுருக்கப்பட்டுள்ளன. இவைகளுள் நாம் கலி காலத்தில் இருப்பதனால் இதற்கென்று ஏற்பட்டுள்ள பராசர ஸ்மிருதிப்படி நமக்கு வர்ணாச்ரம தர்மம் எப்படிச் சுருக்கிக் காட்டப்பட்டுள்ளது என்பதை நன்குணர்ந்துஅதன்படி நடக்கக்கூடிய வரையில்நாம் முயன்றால்தான் நமக்கு நற்கதி ஏதாவது ஏற்படும்; இல்லாவிடில், அதோகதிதான். இப்படி முயல்வதில் பராசரரே:—

யுகங்கள்தோறும் எந்தத் தர்மங்கள் ஏற்பட்டுள்ளனவோ, அவைகளை விடாது செய்யும் த்விஜர்களை, அவர்கள் யுகதர்மப்படி நடப்பவர்களாதலால், எவனும் குற்றங்கூறலாகாது. (I—33)

என்று கூறி நமக்கு மனக்கிளர்ச்சியை உண்டாக்குகிறார்.

இக்காலத்தில் வைதிகமான வர்ணாச்ரமங்கள் வெகுவாக நிலைகுலைந்து விட்டன. வர்ணங்களுள் க்ஷாத்ர வைச்யங்கள், பின்பற்றியவர்கள் கொடுமையால் இல்லாமலே கெட்டுப்போய்ச் சூத்ரவர்ணத்துள் மூழ்கி விட்டன. இந்த வர்ணங்களில் சேர்ந்தவர் என்று வைதிகமாக எல்லோராலும் பொதுப்பட மதிக்கக்கூடியவர்கள் ஒருவருமில்லை. எவ்வாறு தாம் ப்ராஹ்மணர்கள் என்று தாமே கூறிக்கொள்ளாது, ப்ராஹ்மணர்கள் பிறரால் கண்டு கொள்ளக் கூடியவர்களாகத் தமது தோற்றம் ஒழுங்கு பேச்சு முதலியவைகளால் இருக்கின்றனரோ அவ்வாறுள்ள க்ஷத்ரிய வைச்யர்கள் இக்காலத்தில் இல்லை. க்ஷத்ரிய வைச்யர்களெனத் தம்மை வெளியிட்டுக்கொள்ளும் இக்காலத்தவர்களுக்கு வர்ணத்திற்குரிய கர்மானுஷ்டானங்களே இல்லை. அவர்கள் தம் ஸந்தியாவந்தனத்திற்குப் பதிலாக ப்ராஹ்மணர்கள் ஸந்தியாவந்தனத்தை உருவேற்றி ஒப்புவிப்பர்; இவ்வளவுதான். ஆகவே பொதுவாகக் கருதுமிடத்துக் கலிகாலக் கொடுமையால் வர்ணம் இரண்டாகப் போய்விட்டது; அவையாவன ப்ராஹ்மணவர்ணம், அப்ராஹ்மண வர்ணம் என்பவையே. இதில் இரண்டாவதனுள் க்ஷத்ரியவைச்ய வர்ணமும் அழுந்திவிட்டன.

வர்ணங்கள் கதியே இப்படியாக, இவைகளை எல்லைகட்டி நிறுத்திவைக்க வந்த ஆச்ரம தர்மங்கள் கதி எப்படியென்பதை ஆராய்வோம். பராசராதி ஸ்மிருதிகளிலேயே கலிகாலத்தில் தீர்க்க ப்ரஹ்மசரியமும் வானப்ரஸ்தமும் கூடாது, இக்காலத்து ப்ராணபலத்தை நோக்கி என்று ஒதுக்கி விட்டுள்ளது; ஆதலால் ப்ரஹ்மசரியம் முழு ஆற்றலின்றி ஒருவாறு உடனே கார்ஹஸ்த்யத்திற்கு இடம் தரவேண்டும். இதுவும் இக்காலத்தவர் சிறு மதியால் முழு ஆற்றலின்றிப் பின்பற்றப்படும். ஆனால் இதுதான் ஆச்ரமமாக எல்லோராலும் மதிக்கப்படும் ஒருவாறு. ஸந்யாஸமோ ப்ராஹ்மணனுக்குமாத்திரம்; அவனிடமும் ப்ரஹ்மசரியம் கார்ஹஸ்த்யம் இவை முழுஆற்றலின்றிப் பொதுவாக



இருப்பதாலும், வானப்ரஸ்த வாஸனையே இல்லாததாலும், ஸந்யாஸமும் இக்காலத்திற்கேற்றதல்ல; பின்பற்றப்படின் முற்றிலும் முடியாமல், அதோகதிக்கே காரணமாகலாம். ஆனால், முன்னர் பல பிறவிகளில் அமைந்துள்ள சிறப்பால், சில உத்தம பரிபாகிகளுக்கு ப்ரஹ்மசரியம் கார்ஹஸ்த்யங்களிலிருந்து நேராகவும் முறையாகவும் ஸந்யாஸம்பெறச் சாஸ்திரங்கள் இடங்கொடுத்துள்ளன. மேல் ஞானயோகத்தில் இந்த விஷயத்தை நன்கு விளக்குவோம். ஆகவே, ஆச்ரமங்கள் நான்கும் நிலைகுன்றிய கார்ஹஸ்த்யமாகவும், ஒளி மழுங்கிய ப்ரஹ்மசரிய ஸந்யாஸங்களுமே யாகவும் மாறிவிட்டன. ஆனால் க்ருஹஸ்தாச்ரமந்தான் மிகுந்துள்ளதாகக் கூறிவிடலாம். இவைகளையும் இழந்துவிட்டால் ப்ராஹ்மண்யமும் நழுவிவிடும்; வேறு நன்மை ஒன்றும் ஏற்படாது.

வர்ணாதிகள் நழுவியவிடத்து ப்ராஹ்மண்யம் அழியாதிருந்து, அனுகூலகாலத்தில் மற்றைய வர்ணாச்ரமங்களை ஓங்கச் செய்யும் என்று நமது சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது. அவர்கள் எவ்வழியில் இவ்வாறு செய்வர் என்பதை ஆராய்ந்து, அவ்வழி நின்று எல்லோர் நன்மைக்குமாக, ப்ராஹ்மணர் முயற்சிகள் செய்யவேண்டும். மற்றைய வர்ணங்களுக்குத் தம்மை ஓங்கச் செய்யும் ஆற்றல் இல்லை. ப்ராஹ்மண்யம் கடுங் கலியிலும் நிற்பதற்குச் சாஸ்திரங்கள் வர்ணாச்ரம தர்மங்கள் முழுவதையும் விதிக்கவில்லை. பராசரர் தமது ஸ்மிருதியில் பின்வருமாறு ப்ராஹ்மணன் தன் வரையில் நடந்து கொள்ள வேண்டிய வழிகளைக் காட்டுகிறார்:—

(1) ஸ்நானத்தை முன்னிட்ட ஸந்தியாவந்தனம் (2) ஜபம் (3) ஹோமம் (4) தேவதாபூஜை (5) அதிதிபூஜை (6) வைச்வதேவம் ஆகிய இவ்வாறையும் தினம் செய்ய வேண்டியது. இவைகளுள் ஹோமம் வைச்வதேவங்களை நேரிடச் செய்யமுடியாவிடில், மந்திரம் சொல்லுவது, தர்ப்பணமாகச் செய்வது என்று முறையே சாஸ்திரங்களில் வழி விடப்பட்டுள்ளன.

ப்ராஹ்மணன் செய்த பாபங்களைப் போக்கத் தபஸ் செய்ய முடியாக் காலமாதலால், இக்கலியில் பாபத்திற்கு ஏற்பட்ட ப்ராயச்சித்த நாள் அளவு, முற்கூறிய ஆறு கர்மாக்கள் குறையாத தீர்த்த யாத்திரை, ஸேதுதர்சனம், ஸ்தலயாத்திரை, ஜபம் முதலியவைகளைச் சாஸ்திரங்கள் ஏற்படுத்தியுள்ளன.

மற்றவர்களோடு பழகுங்கால் உணவு, உடை, மணம், கடல் கடவாமை, பொருள் பின்பற்றாமை இவைகளில் அழுத்தமான ஒழுங்குகளைச் சாஸ்திரங்கள் ப்ராஹ்மணன் விஷயத்தில் விதித்துள்ளன. இவைகளை ஸரிவரப் பார்த்துக்கொண்டு உயிர் வாழ்வதற்கு வேண்டிய முயற்சிகளை இவைகளுக்கு மீறாதுசெய்து, பொருள் ஸம்பாதிக்கலாம் என்பதே சாஸ்திரங்கள் துணிபு.

இக்காலக் கொடுமைகளுக் கேற்றபடி ப்ராஹ்மண ஜாதியிலும், தேசம், ஆசாரம், ஆசார்யர், நடவடிக்கைகள் இவைகளால் பற்பல உள்வேற்றுமைகள் ஏற்பட்டிருப்பினும் முற்கூறியவைகளில் எவருக்கும் மாறுபாடான எண்ணமே இராது.

மற்றைய வர்ணமான அப்ராஹ்மண வர்ணத்திற்கோ பொதுவாக ப்ராஹ்மண வர்ணமர்யாதையும், அதில் தம் தர்மம் தவறாதிருப்பவர்களிடம் சிறந்த வழிபாடும், பொது தர்மமாகிய கள்ளாமை, வருத்தாமை முதலியவைகளுக்கு மீறாது பொருள் சேர்த்து உயிர் வாழ்தலுமே தர்மமாம்.

இங்கு காட்டப்பட்டவைகளை ஸரிவர அனுஷ்டித்துவிட்டு, ப்ராஹ்மணர்களால் நேரிடப் பயிற்சியினாலாவது கேள்வியாலாவது, மற்றவரானால் பின் வழியாலேயோ சாஸ்திர உணர்வு ஏற்படும்படி செய்துகொண்டு, தமது காலத்தை அமைதியுடன் எம்மாதிரியான குழப்பம், மயக்கம் ஒன்றுமின்றிக் கழித்து விட்டால் அவர்களுக்குக் கிருதயுக மஹான்களுக்குக் கிடைக்கக்கூடிய நல்ல பதவியான மோக்ஷ முயற்சிக்கு ஏற்ற நிலை எளிதில் கைகூடிவிடும்.

இதைக்கொண்டுதான் நம் பெரியோர்கள் ‘கலிஸ்ஸாது’என்றனர். ஆனால்இக்கால நிலைமையை ஆராயப்புகுந்தால் இந்த எளிதாகும் நிலை இருந்தவிடம் தெரியாமல் போய்விடும். கலிகால தர்மங்கள் குறைந்திருப்பினும், அவைகளைக்கூட ஒருவன் ஸரிவரப்பின்பற்

றக்கிருதயுக ரிஷிகளுக்கு இருந்த கஷ்டங்களைவிட அநேக மடங்கு கஷ்டம் உண்டு இக்காலத்தில்.பாபஜீவப் பிறவியேபெருத்தது இக்கலிகாலமாதலால்,எல்லாம்தலைகீழாகிவிடும். ப்ராஹ்மணர்களுக்கே தம் சிறப்பு விளங்காமல்போய்த் தமது சுருக்க தர்மங்களிலும் பெரிய அனாதரவு வந்துள்ளது. மற்றவர்களோ ப்ராஹ்மணர்களில் இவ்வாறு கெட்டலைபவர்களைக்கண்டு, தாம் மேலானதால் எவ்விதம் அவர்களைவிடத் தாம் தாழ்ந்தவராவதென்று இறுமாந்து ப்ராஹ்மணரிடம் மாறு வெறுப்பும் ப்ராஹ்மண்யத்தினிடம் வீண் விருப்புங்கொண்டு மிக எளிதான தம் தர்மத்தைவிட்டு மேல்தர்மத்தைச் சாஸ்திரவிதிக்கு விரோதமாகக் கைப்பற்ற முயலுவர். இதனால் கிருதாதி யுகங்களில் நல்வழி ஒழுங்குகளைப் பின்பற்றுவதில் எவ்வளவு தடைகளும் துயரங்களும் இருந்தனவோ, அவ்வளவே அவைகளைவிடப் பல மடங்கு எளிய தர்மங்களைப் பின்பற்றுவதில் இக்காலத்திலும் காணப்படும். ஆகவே, கடவுள் அருள்பெற்ற ரிஷிகள் யுகபேதத்திற்கு ஏற்பத் தர்மங்களைச் சுருக்கியும் பலன் மாறவில்லை என்று காட்டியுள்ளது யுக்திக்கும் பொருத்தமாகத்தானிருக்கிறது. மோக்ஷ வழியை எந்நேரைக்கும் ஒரேவிதமான பெரு முயற்சியால்தான் பின்பற்றவேண்டும்: தடைகள் ஏற்றத்திற்கேற்ப அவ்வழியில் உதவவேண்டிய ஒழுங்குகளின் தன்மையும் சற்று மாற்றித் தளர்த்தப்படும்,முழு முயற்சியின் வலிமை குறையாதிருக்க.

இவ்வளவு எளிதாகச் சுருக்கப்பட்ட தர்மங்களையும் பின்பற்றவொட்டாது செய்யும் தடைகளில் மிகவும் வெளிப்படையானவைகளை எடுத்துகாட்டப்புகுவோம். பொதுவாகக் காலக்கொடுமை காரணமாயினும், அதிலும் நுழைந்து புறப்பட ரிஷிகள் தர்மங்களை மாற்றிக் காட்டிவிட்டனர். ஆயினும் இவைகளாலும் நற்கதி அடையவொட்டாது தடுக்கும் தடைகளை நன்கு உணர்ந்து விலக்கவோ, அவைகள் நம்மைத் தடுக்காவண்ணம் நடந்து கொள்ளவோ நாம் முயற்சிக்கவேண்டும். இக்காலத்திய படிப்பு, நாகரீகம், வெளிநாட்டுயாத்திரை இவைகளே இந்த வெளிப்படைத் தடைகள். இக்காலப் படிப்பின் ஒழுங்கால் ஆசாரம், சாஸ்திரீய ஒழுங்குகளில் உள்ளபிடிப்பு, கர்மானுஷ்டானம் இவைகளிடம்மிகுந்த அனாதரவு ஏற்படும். இவைகள் ஏற்படவொட்டாது இக்காலத்துப்படிப்பை ஏற்க முயலவேண்டும். படிப்புக் காலங்களிலுள்ள நடை உடை பாவனைகளை வீட்டில் சேர்க்காமலும், அது மானமாக இக்காலத்தில் "உயிர்பிழைத்துச் சாஸ்திரீய வழியில் நடக்க ஒரு பேருதவி என்று மாத்திரம் கருதி அதில் முயலவேண்டுமே ஒழிய, வாழ்க்கை நோக்கம் இப்படிப்பே என்ற படுகுழியில் விழுந்துவிடக்கூடாது. இப்படியிருந்தால் நமது நடத்தையைப் பள்ளிக்கூடத்திலும் ஒழுங்குபடுத்திச் சாஸ்திர விரோதத் தொழில்கள் நிகழ இடங்கொடாது ஜீவனோபாயத்தை மாத்திரம் "இக்காலப் படிப்பிலிருந்து நாம் கவரமுயன்றால் படிப்பு இப்படி நம்மை வருத்தாது. இரண்டாவதான இக்காலநாகரீகம்,இந்தப்படிப்பைக்கவனமின்றி வாழ்க்கை நோக்கம் என்று கண்மூடித்தனமாகக்கருதுவதால் ஏற்படும்தடை.இதனோடு அது ஏற்படுத்திவிடும் ஸுகஸௌகரிய வினோதங்களாலும் அது ஏமாந்தவர் மனத்தில் வேரூன்றிவிடும். இதனால் நாகரீகவழிகளில் முயன்று கூத்தாடுதல், வினோதம் பார்த்தல்,பந்தடித்தல்,தேகபலத்திற்காகத் தூரம் நடத்தல், ஸத்கர்மானுஷ்டானஸந்தியாகாலங்களில் கதைகேட்டுத் தாழ்ந்த நிலையையடைவது முதலியவற்றில், காலத்தை வீணாகச் செலவிட்டுவிடுதலாகிய கொடியநிலைகள் வந்துவிடும். இவைகளெல்லாம் வெறும் விஷய ஸுகங்களே; மனத்தில் ஆசையை அதிகப்படுத்தி நம்மை ஓயாமல் அவைகள் பின்னே தொடரச் செய்யும் பயித்தியத்தை வளர்ப்பவையென்றுகண்டு இவைகளைவிட்டு விலகமுயலவேண்டும். இக்காலத்து நாகரீகம் எவ்வளவு சிறந்ததாகக் காணப்படினும், எல்லாம் உண்ணுவதும் (இந்திரியானுபவங்களும்) தூங்குவதும் (ஓய்வதுமாக) மாத்திரந்தான் முடியும்: நம்மை நல்வழிப் படுத்தக்கூடிய ஆற்றல் அதற்கு இல்லை; அதற்கு ஆதாரமான வழிகள் பண்டமாற்று, போட்டி, போர் என்பவையாதலால் என்று உணர்ந்து தெளிந்தால் இத்தடை தலையே தூக்காது. முற்கூறிய இரண்டு காரணங்களால் ஏற்படுவது, மூன்றாவதான வெளிநாட்டு யாத்திரை. இதனால்தான் சாஸ்திரங்களில் சுருக்கிக் காட்டியுள்ள தர்மங்கள் கூட்வேரோடு களையப்படுவது. யாத்திரையால் அடையக்கூடிய நன்மைகளெல்லாம் தீர்த்த யாத்திரையால் கைகூடிவிடும். இவை நீங்கலான மற்றைய யாத்திரை எல்லாம் வீண் மனக்கொதிப்பையும் விஷய ஆசையையுந்தான் வளர்க்கும் என்பதை நன்கு உணர்ந்து அதைக் கனவிலும் கருதாது ப்ராஹ்மணன் காலம் கழிக்க முயலவேண்டும். ஆகவே, இக்காலப்படிப்பு வெறும் வயிற்றுப்பிழைப்பிற்கு மாத்திரம் என்று பின்பற்றிக் கவனமாக நடத்தல்வேண்டும்: நாகரீகம் வெறும் விஷய ஸுகந்தானென்று வேண்டியவைகளாயும் சாஸ்திர விரோதமில்லாதவைகளாயும் உள்ளவைகளை ஏற்று மற்றவைகளை மறக்கவேண்டும்: வெளிப்பயணத்தை வெறும் மனக்கொதிப்பு என்று ஒரு பொருட்டாக மதியாது விலக்கவேண்டும். இவைகளை இப்படி ஆழ்ந்த ஆராய்ச்சியால் வைக்கவேண்டிய நிலையில் வைத்தால்தான் இக்காலத்திற்கேற்ற சுருங்கிய தர்மங்களையாவது வழிப்படி பின்பற்றி நற்கதி அடையும் ஆற்றல் நமக்குண்டாகும்.

இனிமேல் முன் காட்டியுள்ள இக்காலப் படுகுழிகளான படிப்பு, நாகரீகம், வெளிப்பயணம் இவைகள் வர்ணாச்ரம விஷயமாக ஏற்படுத்தியுள்ள குதர்க்கங்களை எடுத்துக் காட்டி அவைகளை நீக்கப் புகுவோம்.

---

*About the Centenary Number of The Viveka Bodhini, The "Hindu" writes:*—We have received a copy of the centenary number of this well conducted Tamil Monthly to which the Hon'ble Mr. Justice T. V. Seshagiri Ayyar writes an appreciative foreword. The articles contained in the number cover a wide range of subjects of absorbing interest to the readers. A special feature of the journal is the number of illustrations and blocks of which the current number contains as many as sixteen. There are articles on social and religious subjects, agricultural, scientific, moral and other topics and the notes and pages for ladies and children deserve special mention. Almost all the articles, are written in an easy, simple and direct Tamil and are entirely free from pedantry. The journal fulfils very ably the function of diffusing much useful knowledge among the Tamil people. We heartily congratulate the editor on the success which has attended his efforts.



# திருவள்ளுவர்

## TIRUVALLUVAR

[ஸ்ரீமான் திரு. த. கனகசுந்தரம் பிள்ளை அவர்கள். பீ. ஏ.]



திருவள்ளுவர்

திருவள்ளுவர் தமிழர். இவர் தமிழில் இயற்றிய நூல் திருக்குறள். இத்திருக்குறளைப்பற்றி ஆங்கிலங் கற்ற தமிழர் ஒருவர் பின்வருமாறு கூறுவர்:—

"தமிழ் எனும் மாது உச்சியிற் றரிக்கும் சூடாமணியெனச் சொல்லக் கூடியதும், தமிழின் பெருமையை எங்கும் பரவச்செய்ததும், சாதிபேதம் மதபேதமின்றி யாரும் எக்காலத்துங் கைக்கொள்ளக்கூடியதும், தமிழர்க்குப் பெருஞ் செல்வமாயதும் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளே. இந்நூல் இலத்தீன் பாஷையில ஒருவராலும், பிராஞ்சில் ஒருவராலும், ஜர்மேனிய பாஷையில் ஒருவராலும், ஆங்கிலேய பாஷையில் மூவராலும் மொழிபெயர்க்கப்பட்டுளதாயின், இதன் பெருமையை யானோ எடுத்துரைக்க வல்லேன்! தமிழ்

வேதம் என்னும் பெயரும் இதற்குத் தகுந்ததே. இவ்வித நூல் வேறொரு பாஷையிலுமில்லையாயின், இதனால் தமிழுடையும் பெருமை இவ்வளவிற்றெனை எடுத்துரைக்கற்பாற்றோ! இந்நூல் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கில் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையுமே 1330 குறளாற் கூறுவது. வீட்டைப்பற்றி ஏன் கூறவில்லையோ தெரிதலரிது. வள்ளுவர் நான்கையும்பற்றி எழுதியிருப்பார், வீட்டுப் பாகம் இறந்துபோயிருக்க வேண்டும் என்பர் சிலர். அறம், பொருள், இன்பம் மூன்றையும் பாடி, வீட்டைப்பற்றிப் பாடுமுன் வள்ளுவர் இறந்திருப்பார் என்பர் சிலர். அனுபவத்தைக் கொண்டு, அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும்பற்றி உறுதியாய்ச் சொல்லியவர், வீட்டைப்பற்றி உறுதியாய்ச் சொல்லமுடியாமையின் எழுதாது விட்டனர் என்பர் சிலர். இந்நூல் சகல சாதிகளிடத்திலும், சகலமதத்தரிடத்திலும் பரம்ப வேண்டும் என்னும் விருப்புடையோராய், சகலர்க்கும் பொதுவான அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும் சொல்லி, வீடு சகலர்க்கும் பொதுவாகாமையின் கூறாது விட்டனர் என்பர் ஒரு சாரார். அஃதெவ்வாறாயினு மாகுக. அது இற்றைக்கு ஆயிர வருடங்கட்கு முன், குறள்போன்ற ஒரு நூல் இயற்றிய தமிழர் மிகவுஞ் சீர்திருந்தியிருந்தனர் என்பதற்கு ஆன்ற அத்தாட்சியாகும். ஆயின் இவ்வள்ளுவர் எங்கிருந்தனரோ? எம்மதத்தரோ? எக்காலத்திருந்தனரோ? இவை யாருமறியா மறைபொருளாயிருக்கின்றன. மயிலாப்பூரில் இருந்தனர் என்றும், நெய்தற்றொழில் செய்தனரென்றும் பெரும் பான்மையும் சொல்வர். சைவர்கள் இவரைச் சைவரென்பர். வைணவர் வைணவரென்பர். போப் (Dr. Pope) துரை கிறிஸ்தவரென்பர் போலும். சமணர் இவரைச் சமணரென்றே கூறுவர்".

மேலே கூறியபடி, தமிழிலக்கியங்களுள் மிகச் சிறந்தது மாத்திரமன்று மிகப் பழையதும் திருக்குறளே. சங்கச்செய்யுள் என்று சொல்லப்படும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு (முப்பால் என்னும் குறள் ஒழிய) ஆகிய இவை எல்லாம் குறளுக்குப் பிற்பட்டவையேயாம். எட்டுத்தொகை முதலியவற்றுட் கோக்கப்பட்டுள்ள பாடல்கள் சில, குறளுக்கு முந்தியவையா யிருக்கலாம்; ஆனால் அவை இவையென்று இப்போது நிச்சயிப்பது கூடாத காரியம். எட்டுத் தொகைகள் யாவும், அல்லது அவற்றுட் பல, தொகுக்கப்பட்டது குறளியற்றி வெகு காலத்துக்குப்பின். திருவள்ளுவரோடு ஒருகாலத்தவராக எண்ணப்படும் சீத்தலைச் சாத்தனார், அவ்வையார், இடைக்காடனார், முதலியோர் பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு என்னும் தொகைநூல்களில் காணப்படுவதால் இது தெளிவாகும். மணிமேகலை பாடினவர் சீத்தலைச் சாத்தனாராயின், இந்தத் தொகை நூல்கள் தொகுக்கப்பட்டது மணிமேகலையும் சிலப்பதிகாரமும் தோன்றிய பின்பே யாகும்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"

என்னும் திருக்குறள் சிலப்பதிகாரத்தில் கட்டுரை காதையில்

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வந்தொழுந் தகைமை திண்ணமால்—தெய்வ
மண்ணகமாதர்க்கணியாயகண்ணகி [மாய்
விண்ணகமாதர்க்குவிருந்து"

என்னும் முடிவுரை வெண்பாவிலும், மணிமேகலையில் சிறைசெய் காதையில்

"தெய்வந்தொழாஅள்கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப்பெய்யும் பெருமழையென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரைகேளாய்"

என்னும் அடிகளிலும் எடுத்தாளப்பட்டிருத்தலால், இவ்விரண்டு காவியங்களும் தோற்றுதற்குப் பல நூறாண்டுகளுக்குமுன் குறள் இயற்றப்பட்டதாதல் வேண்டும். குறளின் பெருமையை யாவருமுணர்ந்து அதுபாடிய புலவரைப் "பொய்யில்புலவன்" என்று மேம்படுத்துக் கூறுவதற்கு வெகு காலம் செல்லவேண்டுமென்பது திண்ணம். இதுகாறும் கூறியவாற்றால் குறளுக்கு வெகு காலத்துக்குப் பிற்பட்டன சிலப்பதிகாரமும் மணிமேகலையும் என்பதும், இவ்விரண்டும்



இயற்றப்பட்டதன் பின்பே நற்றிணை, குறுந்தொகை முதலிய தொகைநூல்கள் தொகுக்கப்பட்டன வென்பதும் தெளிவாகின்றன.

இப்போதுள்ள தமிழ் இலக்கியங்களுள் திருக்குறள் முற்பட்டதென்பது சாலும்; ஆயினும், அதற்கு முற்பட்ட தமிழ் நூல் வேறொன்று மில்லையோ என்னில், கூறுதும். தொல்காப்பியமென்னுந் தமிழிலுள்ள பேரிலக்கணம் திருக்குறளுக்கு முற்பட்டது. ஆராயுமிடத்துத் தொல்காப்பியர் கூறிய விதியின்படியே திருவள்ளுவர் தமது குறளை இயற்றி உள்ளாரென்பது விளங்கும். அதுவுமன்றித் தொல்காப்பியருடைய சொற்களையும் பொருளையும் திருவள்ளுவர் தமது குறளில் எடுத்தாண்டிருப்பதும் புலப்படும்.

பிற்கூறிய விஷயம் யாவருக்கும் எளிதில் விளங்குமாதலால் அதனை முதலிற் கூறுதும். தொல்காப்பியர் செய்யுளியலில் மந்திரச் செய்யுள் இத்தன்மைத்தென உணர்த்துவார்

"நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப"

என்றார். இதனையே சிறிது மாற்றித் திருவள்ளுவர் நீத்தார் பெருமை கூறுமிடத்து

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்",

என்றார். இதற்கு உரை எழுதிய பரிமேலழகரும், "நிறைந்த மொழியினையுடைய துறந்தாரது பெருமையை நிலவுலகத்தின்கண் அவராணையாகச் சொல்லிய மந்திரங்களே கண்கூடாகக் காட்டும்" என்று கூறி மந்திரமென்பது தொல்காப்பியர் சொன்னபடி நிறைமொழி மாந்தராணை என்பதனை விளக்கினர். தொல்காப்பியரது சொற்களைத் தமது உரைநடையி லமைத்துக் கூறினமையால் பரிமேலழகருக்கும் கருத்துத் திருவள்ளுவரிதனைத் தொல்காப்பியத்திலிருந்தெடுத்தா ரென்பதேயாகும்.

இனி, தொல்காப்பியர் மேற்கூறிய செய்யுளியலில் தமிழ்ப்பா ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலியென நான்காகுமென்றுகூறி, பின்னர் அவற்றால் இன்ன பொருள் உணர்த்தப்படு மென்பார்

"அந்நிலை மருங்கி னறமுத லாகிய
மும்முதற் பொருட்கு முரிய வென்ப"

என்று அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பொருளுமே உணர்த்தப்படுமென்றார். இதனால், தொல்காப்பியத்தின்படி, நூல்களால் உணர்த்தப்படுவன அறமும் பொருளும் இன்பமு மென்றாயிற்று. இதற்கிணங்கவே திருவள்ளுவரும் தமது குறளால் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பொருளையுமே கூறினார். இதனை நச்சினார்க்கினியர் தமது எழுத்ததிகாரத்துச் சிறப்புப்பாயிர வுரையில் எடுத்து விளக்கியுளர். அது வருமாறு:—

" வீடு கூறாரோவெனின், அகத்தியனாரும்
"தொல்காப்பியனாரும் வீடுபேற்றிற்கு நிமித்
" தம் கூறுதலன்றி வீட்டின் தன்மை
" இலக்கணத்தாற் கூறா ரென்றுணர்க.
" அஃது "அந்நிலை "மருங்கின் றமுதலாகிய
" மும்முதற் பொருட்கு முரியவென்ப'
" என்பதனான் உணர்க. இக்கருத்தானே
" வள்ளுவரும் முப்பாலாகக்கூறி மெய்
" யுணர்தலான் வீடு பேற்றிற்கு நிமித்தம்
" கூறினார்."

இதனால் வள்ளுவர் தமது திருக்குறளில் வீடு கூறாததற்குக் காரணம் இதுவென்பது தெள்ளிதிற் பெறப்படுதல் காண்க.

இனித் திருவள்ளுவர் என்னும் பெயரைப்பற்றிச் சிறிதாராய்வாம். இது திருவும் வள்ளுவருமாகிய இரண்டு மொழியாலாயது; அடை யடுத்த பெயரெனப்படும். திருவென்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கமென்பர் பேராசிரியர். அஃது இங்குப் பொருந்தாது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் என்பவற்றில் போலத் திருவென்பது இங்கே பெருமை, பெருமிதம், மகிமை என்பவற்றைக் குறிக்கும். ஆகவே திருவள்ளுவர் என்பது பெருமையுடைய வள்ளுவர் என்று பொருள்படும். வள்ளுவர் என்பதை இயற்பெயராகக் கொள்ளாது இக்காலத்துப் பெரும்பாலார் காரணப் பெயராகக் கொள்வர். அவருள் ஒரு சாரார் வள்ளுவரென்பது வண்மையுடையவர் என்னும் பொருளது என்றும் மற்றொரு சாரார் சாதிப்பெயரென்றும் கூறுவர். இவ்விரு

கூற்றுள் ஒன்றுவது பொருந்துவதாகக் காணவில்லை. வள்ளுவன் என்பது வண்மை யுடையவன் என்னும் பொருளில் எங்கும் வந்திலது; சாதிப்பெயராகவும் வரவில்லை. வள்ளுவன் என்பது பிங்கலத்திலும் திவா கரத்திலும்,

"வள்ளுவன் சாக்கையெனும்பெயர் மன்னர்க்
குள்படு கருமத்தலைவற் கொன்றும்"

என அரசனுக்குட்பட்ட கருமத் தலைவன் பெயராய் வந்துளது. சூடாமணி நிகண்டில்

"வருநிமித்திகன்பேர் சாக்கை வள்ளுவ
னென்றுமாகும்"

என நிமித்திகன் பெயராய் வந்துளது. நிமித்திகன் என்னும் பதத்திற்கு "வருங் காரியம் சொல்வோன்" என்று பொருள் கூறுவர். அது தமிழ் வழக்குப்போலும். நிமித்திகன் என்னும் பதம் நிமித்தம் என்னுமடியாற் பிறந்ததாயினும் வடமொழி யன்று. அஃதாவது நிமித்திகன் என்னும் பதம் வடமொழியிலில்லை. 'நிமித்தக் ஞன்' என்பது வடமொழியில் வருங் காரியஞ் சொல்வோன் என்று பொருள்படும். காரணவன் என்பதுபோல நிமித்திகன் என்பதும் தென்மொழியாளரால் புதிதாக அமைத்துக்கொள்ளப்பட்ட பதம். காரணவன் என்பது போலவே இதுவும் கருமத் தலைவன் என்று பொருள்படும். மன்னர்க் குட்பட்ட கருமத்தலைவனாயின், வள்ளுவன் இழி குலத்தவனாயிரான். வள்ளுவரை இழி குலத்தார் என்போர் அவர் யானைமேல் முரசு கடிப்பிட்டு அரசனாணை சாற்றுவார் என்பர். கம்பராமாயணம் முதலிய நூல்களில் முரசறைவோனை வள்ளுவன் என்று கூறி யிருப்பினும், மணிமேகலை முதலிய பழைய காவியங்களில் அவ்வாறு கூறப்பட வில்லை. ஆதலால் வள்ளுவனென்பது தொன்றுதொட்டு முரசறைவோன் பெயராயிருந்த தென்று கொள்ளற்கிடமில்லை. வள்ளுவரை இழிகுலத்தார் என்று சொல்வதற்காதாரமா யுள்ளது திருவள்ளுவ மாலையில் மாமூலனார் பாட்டாகக் காணப்படும்

"அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவனென் பானோர்பேதை யவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்."

என்னும் செய்யுள். இதனைப் பின்பற்றிச் சிவஞான முனிவரும் தமது சோமேசர் முதுமொழி வெண்பாவில்

"மெய்த்த திரு வள்ளுவனார் வென்றுயர்ந்தார் [கல்வி நலம்
துய்த்தசங்கத் தார்தாழ்ந்தார் சோமேசா—உய்த் [தறியின்
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றா ரனைத்திலர் பாடு"

எனத் திருவள்ளுவரை இழிகுலத்தாரென்பர். திருவள்ளுவ மாலை இதற்கோராதாரமாகக் கொள்ளக்கூடிய நூலன்றாயின். அதனையே பின்பற்றிய இம்முதுமொழி வெண்பாவின் கூற்றும் கொள்ளக்கூடிய தன்றாகும். திருவள்ளுவ மாலை செய்தது குறள் அரங்கேற்றிய காலத்தென்றுவது, அதில் நாமகள், இறையனார் முதலியவர்கள் பாடியனவாகக் காணப்படும் செய்யுள்கள், மெய்மையாக அவர்களாற் பாடப்பட்டன வென்றுவது கொள்ளற் கிடமின்மையால், மேற்கூறிய மாமூலனார் பாட்டென்பது வள்ளுவரை இழி குலத்தானென்பதற்குத் தக்க ஆதாரமாகாது. திருவள்ளுவ மாலை செய்தது குறள் அரங்கேற்றிய காலத் தன்றென்பதற்குக் காரணம் என்னை என்பீராயின், அசரீரியும், நாமகள், இறையனார் முதலிய்தெய்வங்களும் பாட்டுப்பாடுவதுஅநுபவ விரோதமும் அசம்பாவிதமு மாதலேயாம். மற்றையோர்களாற் பாடப்பட்டனவாகக் காணப்படும் பாட்டுக்களுள் பெரும்பாலன மெய்யாக அவர்களாற் பாடப்பட்டனவல்ல. எங்ஙனமெனின், ஒரு நூலுக்குப் பாயிரஞ் சொல்லவோ, அன்றி அதனை எடுத்துப் புகழவோ புக்கவர் அந்நூல் முழுவதையும் பற்றிப் பேசுவரேயன்றி அதன் ஒரு பாகத்தை மாத்திரம் பற்றிப் பேசார். திருவள்ளுவ மாலையிலோ அறத்துப்பாலைப்பற்றி

"பாயிரநான் கில்லற மிருபான் பன்மூன்றே
தூய துறவறமொன் றூழாக—ஆய
அறத்துப்பால்நால்வகையா லாய்ந்துரைத்தார் நூ [லின்
திறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து"

என்று எறிச்சலூர் மலாடனாரும், பொருட்பாலைப்பற்றி

"அரசிய லையைந் தமைச்சிய லீரைந்
தருவல்லரணிரண்டொன் றொண்கூழ்-இருவியல்
திண்படை நட்புப் பதினேழ்குடிபதின்மூன்
றெண்பொரு ளேழா மிவை"

என்றுபோக்கியாரும், காமத்துபாலைப்பற்றி

"ஆண்பாலே ழாறிரண்டு பெண்பாலடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராறாமாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றாகக்கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு"

என்று மோசிகீரனாரும் கூறினதாக வருகின்றது. இம்மூன்று பாடலும் குறளிலுள்ள ஒவ்வோரியலின் தொகையையும் அதிகாரத்தின் தொகையையும் கூறுகின்றன வன்றிக் குறளின் சிறப்பை அல்லது அதன் அருமை பெருமைகளை எடுத்துரைக்கவில்லை; அன்றிச்செய்யுளழகு வாய்ந்தன வாயுமில்லை. இவைகளை இயற்றுவதற்கு மூன்று சங்கப்புலவர்கள் வேண்டியதில்லை; காரிகை கற்றுக்கவிபாடும் ஒருவர் போதும். அங்ஙனமே இவைமூன்றும் குறளின் இயலும் அதிகாரமும் இத்தனையென்று கணக்கிடவிரும்பிய ஒருவராலேயே இயற்றப்பட்டனவாதல் வேண்டும்.

திருவள்ளுவமாலை குறள் அரங்கேற்றப்பட்ட காலத்துச் செய்யப்படவில்லை என்பதற்கு மற்றொரு நியாயமும் கூறுதும். அம்மாலையில் உக்கிரப் பெருவழுதியார் பாடினதாக வரும் செய்யுளில் "நான் மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன் தான் மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த நூல்" என்றும், காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் பெயர்கொண்ட செய்யுளில் "ஐயாறு நூறு மதிகார மூன்றுமா, மெய்யாய வேதப்பொருள்விளங்கப் பொய்யாது, தந்தா னுலகிற்குத் தான் வள்ளுவனாகி, அந்தாமரைமே லயன்" என்றும் வள்ளுவனாரைப் பிரமதேவனினவதாரமாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு வள்ளுவரைப் பிரமதேவனின் அவதாரமாகக் கூறவந்தது அவர் உயிரோடிருந்த போதன்று. உயிரோடிருக்கும் போதே ஒருவரைக் கடவுளின் அவதாரமாகக் கொண்டாடுவது எங்குமில்லை. ஒருவர் இறந்தபின் பல வருடங்கள் சென்று காலம் நீடிக்க நீடிக்கத்தான் அவருடைய பெருமை வளர்ச்சியுற்றுத் தெய்வத்தன்மை யடையும். அப்போதுதான் அவர் கடவுளின் அவதாரமாகக் கருதப்படுவார். அங்ஙனமே வள்ளுவரின் அறிவின் பெருமையைக் கண்டு அவரை ஒரு கடவுளின் அவதாரமாகக் கொண்டாட வந்தது அவர் குறளியற்றிப் பல வருடங்கள் சென்ற பின்பேயாம். அப்படிச் சிறிதுகாலம் சென்று வள்ளுவர் பிரமதேவனுடைய அவதாரமென்ற கொள்கை வேரூன்றியதன் பின்னரே இந்தப் பாட்டுக்கள் பாடப்பட்டிருத்தல் வேண்டும். இங்ஙனம் இப்பாட்டுக்கள் பாடப்பட்டது குறள் இயற்றி வெகு காலத்துக்குப் பின்பானால், அவற்றை யடக்கியுள்ள திருவள்ளுவமாலை குறளரங்கேற்றப்பட்ட காலத்து இயற்றப்பட்டதாகாது.

இனி, இறையனார் களவியலுரையில் கடைச்சங்கப் புலவர் எண்மர் பெயர் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வெண்மருள் திருவள்ளுவமாலையில் மூவர் பெயர் மாத்திரம்காணப்படுகின்றன; ஐவர் பெயரில்லை. அன்றியும் சிலப்பதிகாரத்தில் மகாமகோபாத்தியாயர் சாமிநாத ஐயரவர்களால் எடுத்துக்காட்டப்பட்ட பழைய அகவலொன்று கடைச்சங்கப்புலவரில் இருபத்தெழுவர் பெயர் கூறுகின்றது. அவற்றில் பதினேழு பெயர் திருவள்ளுவ மாலையிலில்லை. இதனால் திருவள்ளுவமாலை பாடினவர் கடைச் சங்கப்புலவர்கள் என்று சொல்வதற்கிடமின்றாகின்றது.

மேற்கூறியவற்றால் திருவள்ளுவ மாலை கடைச்சங்ககாலத்து நூலன்றென்பதும் அதிலுள்ள பாட்டொன்றேனும் அங்கே கூறப்பட்ட புலவராலேயே இயற்றப்பட்டதென்பதற்குத் தக்க ஆதாரம் இல்லை என்பதும் நன்கு போதரும். ஆயின் திருவள்ளுவமாலை எக்காலத்து யாரால் இயற்றப்பட்டதெனின், காலந்தோறும் திருக்குறளைப்பற்றிப் பலபாட்டுக்கள் பல புலவராலியற்றப் பட்டனவாக, பிற்காலத்து வந்த புலவரொருவர் அவற்றையெல்லாம், அன்றேல், அவற்றுட் சிறந்தனவற்றை * மாத்திரம், ஒருங்கு சேர்த்து ஒழுங்குபடுத்தி ஒரு நூலாக்கியிருத்தல் வேண்டும். அவர் தா

* திருவள்ளுவரைப் புகழ்ந்து பாடிய பாட்டுக்கள் திருவள்ளுவமாலையில் வாராதன சில செந்தமிழ் முதற்றொகுதியில் வந்துள—54-ம், 294-ம் பக்கம் பார்க்க.

மும் சில பாட்டுக்கள் பாடிச் சேர்த்திருக்கலாம். அல்லது நூல் முற்றையும் ஒரு புலவரேயே செய்து மிருக்கலாம். வள்ளுவமாலையில் வரும்பாட்டுக்கள் ஏறக்குறைய ஒரே விதமான நேரிசை வெண்பாவாக விருத்தலும், அசரீரி சொன்னதாக வரும் பாட்டு அசரீரியே நேரே சொன்னதாக இல்லாமல்

“திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க—இருக்க
உருத்திர சன்ம ரெனவுரைத் துவானில்
ஒருக்கவோ வென்றதோர் சொல்”

என அசரீரி சொன்னதாக மற்றொருவரால் பாடப் பட்டிருத்தலும் இந்தக் கொள்கைக்குத் தகுந்த துணையாகும்.

இன்னும் இந்தப் பாட்டு மதுரையில் தெய்வத்தன்மை பொருந்திய சங்கப்பலகை ஒன்றிருந்ததென்பதைக் குறித்தலினாலும், அந்தப் பலகையில் திருவள்ளுவரோடொக்க விருத்தற்கு உருத்திரசன்மரே ஏற்றவரென்பதனால், குறளரங்கேற்றிய காலத்தில் சங்கத்துப்புலவர் நாற்பத் தெண்மரும் திருவள்ளுவரோடொக்க விருக்கத் தகுதியற்றவராய்ப் பொற்றாமரை வாவியுள் வீழ்ந்து முழுகினரென்னுங் கதைக்குத் தோற்றுமிடமாயிருத்தலினாலும் இது குறள் தோன்றி வெகுகாலத்திற்குப் பின் இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்பது தேற்றம். சங்கப்பலகையிலேற்றிய இந்தக் கதை கட்டுக்கதை. இதுபோன்ற தொருகதை சடகோபரியற்றிய திருவாய்மொழியைப்பற்றியும் வழங்குகின்றது.

இனி வள்ளுவர் இழி குலத்தினரல்லர் என்பதற்கு மற்றுமொரு காரணம் கூறுதும். குறள் படிப்பவர் யாவர்க்கும் அதனை இயற்றிய ஆசிரியர் அக்காலத்திருந்த தமிழ் நூல்கள் மாத்திரமன்றிச் சம்ஸ்கிருத நூலினும் வல்லராதல் நன்கு விளங்கும். குறளுக்கு உரை எழுதிய ஆசிரியர் பலரும் இக்கருத்தினராதல் அவ்வுரைகளை வாசிப்பவர் அனைவரும் கண்டு கொள்ளலாம். அவ்வாசிரியர்களுள் பரிமேலழகர் கூறுவன சிலவற்றை இங்கு எடுத்துக் காட்டுவாம்.

424-ம் குறளுரையில்

“இவைபற்றியல்லது பகைவர் அற்றந்தாராமையின் இவையே பகையாவன வென்னும் வடநூலார் மதம்பற்றிக் குற்றமே அற்றந்தரூஉம் பகை என்றும், இவற்றதின்மையே குணங்களதுண்மையாகக் கொண்டென்பார் பொருளாக என்றும் கூறினர்” எனவும்,

“அறம் பொருளின்ப முயிரச்ச நான்கின்
திறந்தெரிந் தேறப் படும்”

என்னும் 501-ம் குறளுரையில் அறவுபதை முதலிய இன்னவென்று விளக்கிய பின்

“இவ்வடநூற் பொருண்மையை உட்கொண்டு இவரோதிய தறியாது பிறரெல்லாம் இதனை உயிரெச்சம் எனப் பாடந்திரித்துத் தமக்குத் தோன்றியவாறே உரைத்தார்” எனவும்,

(இவ்வுபதைகள் சாணக்கியரியற்றிய அர்த்த சாஸ்திரத்திற் கூறப்பட்டுள்ளன. புத்தகம், 1 அதிகாரம், 9.)

662-ம் குறளுரையில்

“தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப் பூண்ட வியாழ வெள்ளிகளது துணிபு தொகுத்துப் பின் நீதி நூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின், ஈண்டு வினைத்தூய்மையும் உடன் கூறினர்” எனவும்,

(இங்கே குறித்த நீதி நூல்கள் காமந்தகம் சாணக்கியம் முதலியன).

காமத்துப்பால் முகவுரையில்

“இது (காமவின்பம்) புணர்ச்சி பிரிவென இருவகைப்படும். என்னை இருத்தல், இரங்கல், ஊடல் என்பனவோவெனின், இவர் (திருவள்ளுவர்) பொருட்பாகுபாட்டினை அறம் பொருள் இன்பமென் வடநூல் வழக்குப்பற்றி ஓதுதலான், அவ்வாறே அவற்றைப் பிரிவின்கண் அடக்கினாரென்க” எனவும்,

1330-ம் குறளுரையில்

“ஈண்டுப் பிரிவினை வடநூன் மதம்பற்றிச் செலவு ஆற்றாமை விதுப்புப்புலவியென நால்வகைத் தாக்கிக் கூறினர்” எனவும் கூறுவர் பரிமேலழகர்.

இவ்வாறு அவர் கூறுவன இன்னும் பலவுள. இவற்றால் திருவள்ளுவர் வடமொழியிலுள்ள ஸ்மிருதிகளும், அர்த்த சாஸ்திரங்களும், காமசாஸ்திரங்களும் நன்கு கற்றவரென்பது விளங்குகின்றது. திருவள்ளுவர் குலத்தாற் பறையனாயிருந்தால் வடமொழி



யிலுள்ள ஸ்மிருதிகளும், அர்த்த சாஸ்திரங்களும் கற்றல் முடியாது. சாஸ்திரங்களைக் கற்றலென், வடமொழிப் பயிற்சி அடைவதே கூடாதென்னலாம். ஸ்மிருதிகளும் அர்த்த சாஸ்திரங்களும் கற்பவர் அரசரும் அரசர்க்கு அமைச்சுத்தொழில் பூணும் பிராமணர் முதலாயினருமே யாதலின், திருவள்ளுவர் நல்ல உயர்குலத்தினராதல்வேண்டும்.

“தேவர் குறளும் திருநான்மறை முடிவும்” என்ற செய்யுளிலும், பிறவிடத்திலும், திருவள்ளுவரைத் தேவர் என்று கூறுவதும், நாயனார் என்று கூறுவதும் அவர் உயர்குலத்தாராதலைக் காட்டும். நேமிநாதவிருத்தி திருவள்ளுவரைத் திருவள்ளுவ தேவரென்னும். (நேமி. சொல். 5) தேவர் என்பது பெரும்பான்மையும் அரசகுலத்தினரையே குறித்து வருகின்றது; திருத்தக்கதேவர், திரிபுவன தேவர், ராஜராஜ தேவர் என்பன காண்க.

இனி வள்ளுவர் என்னும் பெயர் சாதிப் பெயரும் காரணப் பெயருமன்றாயின், வேறு யாது என்றால், அஃது இயற் பெயராதல் வேண்டும். திருவள்ளுவமாலை முதலிய நூல்களில் வள்ளுவரென்னும் பெயரேபயின்று வருதல், அஃது இயற்பெயராதலைக் குறிக்கும். தொல்காப்பியம் சொல்லதிகாரத்தில் வரும்

“சிறப்பினாகிய பெயர் நிலைக்கிளவிக்கும்
இயற் பெயர்க்கிளவி முற்படக்கிளவார்”

என்னும் சூத்திரவுரையில், வினைக்கொருங்கியலுங் காலைச் சிறப்புப் பெயருக்குப் பின்பே இயற்பெயர் வருமென்பதற் குதாரணமாகச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் “தெய்வப்புலவன் திருவள்ளுவன்” என்பதைக் காட்டியுள்ளார். இதனால் அவர்களிருவரும் திருவள்ளுவனென்பதை இயற்பெயராகக் கொண்டமை தேற்றம்.

வள்ளுவன் என்னும் பெயர் திருக்குறளாசிரியர்க்கன்றி வேறு பிறர்க்கும் இயற்பெயராய் வந்துளதோ வெனின், பலர்க்கு வந்துளது. புறநானூற்றில் நாஞ்சில் வள்ளுவன் என்னும் பெயர் வந்துளது. இங்கு நாஞ்சில் என்பது ஒரு மலையின் பெயர். (இவ்வாறு கூறுவர் புறநானூற் றுரையாசிரியர். நாஞ்சில் என்பது ஒரு நாட்டின் பெயர்போலும். நாஞ்சில் நாடென்றொரு நாடு இப்போதும் மலையாளத்துளது.) வள்ளுவனென்பதும் அம்மலைக்குத் தலைவன் பெயர். இவனை ஒரு சிறைப் பெயரியனார், மருதன் இளநாகனார், கருவூர்க் கதப்பிள்ளை முதலியோர் பாடியுள்ளார். தாமிர சாசனங்களிலும் வள்ளுவன் என்னும் பெயர் வந்துளது. சிறீவள்ளுவன் கோதை என்னும் சேரராசனால் வழங்கப்பட்ட வட்டெழுத்துத் தாமிர சாசனங்கள் சிலவுள. (See page 127 of Tamil Studies by Mr. Srinivasa Aiyangar). இப்போதும் மலையாளத்தில் வள்ளுவ நாடென்றொரு நாடுளது. இது வள்ளுவனுடைய நாடென்று பொருள்படும். இங்கே வள்ளுவனென்பது இயற் பெயரே. இவற்றால் வள்ளுவனென்னும் பெயர் மலையாள தேசத்தில் இயற்பெயராய் வழங்கிவந்தது செவ்வனே நாட்டப்படும். இவை திருவள்ளுவரென்னும் பெயரை இயற்பெயராக் கொள்வதற்குப் போதிய சான்றாகும்.

மலையாள தேசத்தைப்பற்றிப் பேசவே, திருவள்ளுவர் பிறந்து வளர்ந்த நாடு யாதென்னும் கேள்வி ஞாபகத்துக்கு வருகின்றது. திருவள்ளுவர் பிறந்து வளர்ந்தது மயிலாப்பூரிலென்பர் பலர். அவர் கூற்றுக்குக் கபிலரகவலைத் தவிர வேறு ஆதாரம் உளதாகக் காணவில்லை. கபிலரகவல் ஒருகட்டு நூல்; பிற்காலத்துச் செய்யப்பட்டது. கடைச் சங்கத்தில் விளங்கிய கபிலர் பிறந்தது வாதவூர்; கபிலரகவலிற் சொல்லுமாறு திருவாரூரன்று. திருவள்ளுவ மாலையில்

“உப்பக்க நோக்கி உபகேசி தோண்மணந்தான்
உத்தரமாமதுரைக்கச்சென்ப—இப்பக்கம்
மாதாநுபங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு.”

என வரும்பாட்டுத் திருவள்ளுவரை மதுரையைச் சார்ந்தவராகக் கூறும். வள்ளுவர் என்னும் பெயர்வழக்கு இவரைச் சேரநாட்டைச் சேர்ந்தவராகக் காட்டும்போலும். பண்டைக்காலத்தில் தமிழ் மிகுதியும் வளர்ச்சியடைந்தது சேரநாட்டிலாதலும், இப்போது நமக்குக் கிடைத்துள்ள பழந்தமிழ் நூல்கள் பல சேரநாட்டைச் சார்ந்தவையாதலும், வள்ளுவரைச் சேரநாட்டாரென்று கொள்ளுவதற்கு ஒருவாறு துணையாகுமன்றே?

## பத்திரிகைகளும், அவற்றினியலும்
## JOURNALS & JOURNALISM

[ஸ்ரீமான் ஏ. ரங்கஸ்வாமி ஐயங்கார் அவர்கள், பி. ஏ., பி. எல்]

ஆங்கில அரசாட்சியில் நமது ஜன்ம பூமியாகிய பரதகண்டம் அடைந்திருக்கும் பேறுகளுள், நவீனக் கல்விப் பெருக்கே முக்கியமானதாய்க் கருதப்பட்டுள்ளது. அக்கல்விப் பெருக்கு நமது முற்போக்குக்கு வேண்டிய அளவிற்குக் குறைவாகவே யிருப்பினும், நான் அதைப்பற்றி இங்கு விரிவாகச்சொல்ல வரவில்லை. ஆனால் அக்கல்விப் பெருக்கின் பாகமாகப் பத்திரிகைகள் பெருகி, அறிவையும், ஞானத்தையும், சாதாரண ஜனங்களுள் பரவச் செய்திருக்கும் விஷயத்தைப் பற்றி இரண்டொரு அம்சங்களை மாத்திரம் குறிப்பிட உத்தேசித்திருக்கிறேன்.

பொதுவாக பத்திரிகைகள் என்பவை புஸ்தகங்கள் அல்லாதவைகளெனச் சொல்லலாம். ஆனால் துண்டுதுண்டுகளாகச் சமயோசிதப்படி அப்போதைக்கப்போது விஷயங்களையும், சமாசாரங்களையும் வெளியிடுவதை மேல் நாட்டார் ஒருவாறு ஒழுங்குபடுத்தி, குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட விஷயங்களின் சமாசாரங்களைக் கூடியவரையில் நிரந்தரமாய்ப் பிரசுரித்து, ஜனங்களுக்குள் பரவச்செய்துவரும் வழக்கத்தைப் பத்திரிகைகள் நடத்தும்தொழிலாக நாளடைவில் அனுசரிக்கலானார்கள். இவ்வழக்கம் விருத்தியாகிப் பத்திரிகைகள் பிரசுரஞ்செய்யும் வேலை, பெரிய பொதுக் காரியமெனக் கருதப்பட்டுப் பற்பல தேசாபிமானிகளால் பல தேசங்களிலும் ஏற்கப்பட்டு வந்த பின்னர், அதுவே ஒரு பெருந் தொழிலாக அமைக்கப்பட்டு, அதனால் பொது ஜனங்களுக்குப் பெரும் பிரயோஜனங்களும், பத்திரிகைகளை நடத்தி வரும் முதலாளிகளுக்கு லாபமும், பத்திரிகைகள் சம்பந்தமாய்ப் பலர் வேலை செய்து பிழைப்பதற் கிடமு முண்டாகி விட்டன. இம்மாதிரி, பத்திரிகை நடத்தும் தொழில் இதர வியாபாரங்களைப் போலவே மிகவும் பெருக்கமடைந்து, வலுக்கொண்டு செல்வாக்குப் பெற்றதாக மேல் நாடுகளிலெங்கும் ஏற்பட்டுவிட்டபோதிலும், லாபத்தையே கருதியிருக்கும் இதரத் தொழில்களையும் தொழில் செய்பவர்களையும் போல், பத்திரிகை நடத்தும் தொழிலும் பத்திராசிரியர்களும் பொதுவாகக் கருதப்படுவதில்லை.

ஏனெனில். அவர்கள் செய்யும் தொழில் பொது நலத்தையே நேராகப் பொருத்திருக்கிறது. ராஜாங்க ராஜரீக விஷயங்களைக் கவனியாமல் கல்வியையும், அறிவையும், இதர சாஸ்திரங்களையும், முற்போக்கையும் கவனித்தே நடத்தப்படும் பத்திரிகைகள் கூட, ஜனங்களின் அபிவிருத்தியையே தேடுகின்றன வென்பது எளிதில் விளங்கும். சாஸ்திர ஆராய்ச்சியைச் செவ்வனே கவனிக்கும் பத்திரிகைகளாகட்டும், அல்லது இலக்கிய இலக்கணங்கள், இதர கலைகள், விநோதங்கள் முதலியவைகளையே கவனிக்கும் பத்திரிகைகளாகட்டும், அவை யனைத்தும் ஜனங்களுக்கு விஷயத்தையும், சமாசாரத்தையும், அறிவித்து, உலகத்தில் நடைபெறும் பலவித விசேஷங்களை எடுத்துக்காட்டிப் பாமர பண்டிதர்களின் ஞானத்தை விசாலித்து, அவர்கள் புத்தியைக் கூர்மை செய்து, அவர்கள் ஊக்கத்தை அதிகரிப்பதோடு, அவர்களைத் தம் இனத்தாரிடம் இணங்கிப் பரஸ்பர ஆதரவையும் அபிமானத்தையும் விருத்தி செய்யத் தூண்டி, அதன் பலனாய்ப் பொதுவாழ்க்கையையும் முற்போக்கையும் மிகவும் விசாலித்துக்கொண்டு வருகின்றன வென்பதிற் சந்தேகமில்லை. இவ்விஷயத்தை இன்னும் ஊன்றிப் பார்ப்போமானால், பத்திரிகைகளின் காரியம், மனிதராய்ப் பிறந்த எவருக்கும் கடவுளால் கொடுக்கப்பட்ட பகுத்தறிவு, அதனாலேற்படும் ஞானம், என்ற இரண்டு குணங்களையும் விருத்திசெய்வதற்கு இன்றியமையாக்கருவியாகுமென்பது நன்றாய் விளங்கும். பசு, பக்ஷிகளுக்கும் மனுஷ்யனுக்கு முள்ள தாரதம்மியம், மனுஷ்யனுக்கு ஏற்பட்டிருக்கும் அறிவிலும், அதனாலுண்டாகும் சிந்தித்துப் பார்க்கும் தன்மையிலுமே ஏற்பட்டுள்ளது. மனிதனிடத்தில் காணப்படும் சிந்திக்கும் தன்மை, அவனது உயிரும் நல்லறிவும் அவனை விட்டகலும்வரை, அவனை விடுவ



தில்லை. எப்பொழுதும் சிந்தையை அடக்கிச் சும்மாயிருப்பது சாதாரண மனுஷ்யத்தன்மைக்கு இயல்பாக மாட்டாது; ஜீவன் அசாதாரணமான தன்மையை அடையும்போது தான் அது சாத்தியமாகும். ஆகவே, சிந்தனையுடைய ஒவ்வொருமனிதனும் அப்படிச் செய்வதனாலுண்டாகும் வேற்றுமைகளை வெளிப்படுத்துவதும் இயல்பேயாகும். தன்னுடைய இயல்பைத், தான் அனுசரித்துத் தனக்குத் தோன்றும் எண்ணங்களை அவ்வப்போது வெளிப்படுத்த ஒவ்வொரு மனிதனுக்கும் இயல்பான சுதந்தரமுண்டென்று மேல் நாடுகளில் மானிட சாஸ்திர ஆராய்ச்சி செய்த பல அறிஞர் எடுத்துரைத்திருக்கின்றனர். எனவே, இச் சுதந்திரம் ஒவ்வொரு மனுதனுக்குமுள்ள இதர சுதந்திரங்களைப்போல் குறைவில்லாமல் நிலை நாட்டப் படவேண்டுவது பொது வாழ்க்கைக்கும், முற்போக்குக்கும் அவசியமானதென நிர்த்தாரணஞ் செய்திருக்கிறார்கள்.

மனிதன் சிந்தையை அடக்கச் சாத்தியப்படாதென்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பினும், அவன் தன் எண்ணங்களை வெளிப்படுத்த, சில பொது விதிகளுக்குக் கட்டுப்பட்டிருக்கவேண்டுமென்பது, நாகரீகமடைந்த எல்லாத் தேசங்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆதிகாலத்தில், நாகரீகம்பெற்ற மனுஷ்யர்கள் தங்களுக்குத் தோன்றும் எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் வாய்மொழியாய் ஒருவருக்கொருவர் அறிவித்து வந்தார்கள். அப்படிக் கர்ண பரம்பரையாகக் கேட்டே, அறிவும் ஞானமும் வெகுகாலம் விருத்தியடைந்துவந்தன. எண்ணும், எழுத்தும் நாளடைவில் ஏற்பட்டபொழுது எண்ணங்கள் எழுத்து மூலமாய் ஒருவருக்கொருவர் பரிவர்த்தனம் செய்துகொள்ளப்பட இடமேற்பட்டது. இப்படி எழுதப்பட்ட சுவடிகளும் புஸ்தகங்களும் அதிகரித்துப் பல தலைமுறைகளான பிறகு, அவை பெயர்த்தெழுதப்பட்டு இலக்கிய இலக்கண நூல்களாக ஜனங்களுள் பரவிவந்தன. மேல் நாடுகளில் அச்செழுத்துக்கள் பதினாறாவது நூற்றாண்டில் காக்ஸ்டன் என்னும் மதியூகியால் கண்டுபிடிக்கப்பட்டது. அதிலிருந்து புஸ்தகங்களுக்கும், நூல்களுக்கும், பிரதிகள் கையால் வரையப்பட்டு வந்த கஷ்டம் நீங்கி, மிகச் சுலபமாய் அச்செழுத்துக்களால் பதுப்பிக்கப்பட இடமுண்டாயிற்று. அவ்வப்போது எழுதப்படும் கிரந்தங்களுக்கும் வரையப்படும் படங்களுக்கும் பல பிரதிகள் தயாரிப்பது சுலபமானவுடன், அறிவு, ஞானமென்பது ஒரு எல்லைக்குள், அல்லது ஒரு விதிக்குள் மாத்திரம் உட்பட்டதாயிராமல் சாதாரண ஜனங்களுக்குள் விரைவாகப் பரவ ஆரம்பித்ததென்பதைச் சொல்லவும் வேண்டுமா?

ஆனால், இப்படிப் புஸ்தகங்கள் மூலமாய் ஜனங்களுக்குப் புகட்டக்கூடிய அறிவும் ஞானமும், விருத்தாந்தங்களும், முன்னமேயே சேகரித்து நாளடைவில் ஆராய்ந்து தெரிவிக்கப்பட்ட விஷயங்களாகவேயிருந்தபடியால், கல்வி பரவிய பொது ஜனங்களுள் அப்போதைக்கப்போது நடக்கும் விருத்தாந்தங்களையும், அவைகளிலிருந்து ஜனிக்கும் எண்ணங்களையும், அபிப்பிராயங்களையும், ஒருவருக்கொருவர் அறிவித்து ஆக்ஷேப ஸமாதானங்கள் செய்துகொண்டு, அவரவர்களுக்கொத்தபடி கலந்து ஒன்று சேர்ந்து தங்களுக்கும் பொது நலத்துக்கும் உரிய விவகாரங்களைச் சரிவர நடத்திக் கொள்ள வேண்டுமென்ற அவா மேலிடலாயிற்று.

ஆகவே, அப்போதைக்கப்போது இவ்வாறு ஒருவருக்கொருவர் சமாசாரங்களையும், விஷயங்களையும் அறிவிப்பதற்கான கருவியான பத்திரிகைகள் ஏற்படத் தொடங்கின. ஆனால் மேல் நாடுகளில் பத்திரிகைகள் இவ்விதம் ஆரம்பமான காலத்தில், குறிப்பிட்ட கிழமைகளிலோ அல்லது தேதிகளிலோ பிரசுரிக்கப்படுவதென்பதில்லாதிருந்தது. சமயம் வாய்த்தபோதும் சந்தர்ப்பங்களை அனுசரித்தும், அப்போதைக்கப்போது துண்டுப் பத்திரிகைகள் துணிவுடன் பிரசுரிக்கப்பட்டன.

அக்காலத்தில் பத்திரிகைகளை வெளிப்படுத்துவதற்கு அசாதாரணமான மனத்துணிவு இருத்தல் அவசியமாயிருந்தது. ஏனெனில் ஒவ்வொரு தேசத்திலும் அக்காலத்தில் நடைபெற்ற அரசாங்கங்கள், புஸ்தகங்கள் பிரசுரிக்கப்படுவதைக் கண்டித்து வந்தன.

வெளிவந்த புத்தகங்களைப் பறிமுதல்செய்வதும், பிரசுரிப்பவர்களைத் தண்டிப்பதும் அக்காலத்திய அரசாங்கத்தாரின் வழக்கமாயிருந்தது. தவிர, கிளர்ச்சி யுண்டாக்கக்கூடிய பத்திரிகைகளையும், பத்திராசிரியர்களையும், அரசாங்கத்தார் வெகு கொடுமையாய் நடத்திவந்தார்கள். பத்திராசிரியர்களுக்கும் பிரசுரம் செய்யும் அச்சுக்கூடத்தார்களுக்கும் அபராதம், கடுங்காவல், தனிக்காவல், இதர இம்சைகள். எல்லாம் ஏராளமாக விதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வரும் காலங்களில், அவர்களுள் மிகுந்த தீரத்துடனும், சாமர்த்தியத்துடனும் எதிர்த்தவர்கள் அநேகர். இரகசியமாகவும், தந்திரமாகவும், பொது ஜனங்களுக்கு நோக்கங்களையும், வழிகளையும் எடுத்துக்காட்டியவர் பலர். இவ்வாறு தேச பக்தர்கள் பலர் அவ்வப்போது இராஜாங்கத்தின் கேடுகளையும், குறைகளையும், தயவு, தாக்ஷண்யமில்லாமல் விவரித்துரைத்துச் சீர்திருத்தத்தை நாடினார்கள்.

இப்படி இவ்வளவு சங்கடங்களையும் வென்று, பத்திரிகைகள் முன்னேற்றமடைந்திருப்பதற்குக் காரணம், நாம் முன்பு குறிப்பிட்டிருக்கிறபடி மனுஷ்ய கோடிகளின் இயற்கையேயாகும். அவ்வியல்பை அந்நாளிலிருந்த அதிகாரி வர்க்கத்தார் எதிர்த்ததனால் அதன் வலிமை அதிகரித்தே வந்தது. பிரான்ஸ் தேசத்தில் குடியரசு அமையும் காலத்திலிருந்த சிறந்த மதியூகி யொருவர், “பிறர் உன்னைக் குற்றவாளியென்று சொன்னாலும், உன்னைச் சிறையிலடைத்தாலும், கொடுந் தண்டனை விதித்தாலும், உன் தலையையே வாங்க நினைத்தாலும், அவற்றிற்கு அஞ்சாதே; உன்னுடைய அபிப்பிராயத்தைப் பகிரங்கப்படுத்து. அப்படிச் செய்வது உனக்களிக்கப்பட்ட சுதந்தரங்களில் ஒன்றல்ல; ஆனால் அப்படிச் செய்வது உன்னுடைய கடமையேயாகும்.” எனக் கூறியுள்ளார்.

18-ம் நூற்றாண்டில் கூட, பத்திரிகை நடத்துவோர் எவ்வளவு கஷ்டங்களுக்கும் நிர்ப்பந்தங்களுக்கும் உட்படுத்தப்பட்டார்களென்பது மேற்கண்ட வாக்கியங்களால் விளங்கும். நாகரீகமடைந்த ஒவ்வொரு தேசத்திலும் பத்திரிகைகள் தற்போது இன்றியமையாச் சாதனங்களாகி விட்டன. இக்காலத்தில் பத்திரிகையில்லாத நாடு பாழான நாடென்றே கருதப்படும். பத்திரிகைகள் ஜனங்களுக்கு மாத்திரமல்ல, இராஜாங்கத்துக்கும் அவசியமான அங்கங்களாகி விட்டன. என்றாலும், அல்வ தற்போதைய நிலைமையை அடைவதற்குமுன் உள்ள சரித்திரம் பயங்கரமானது. அறிவும் ஞானமும் பாமர ஜனங்களுக்குள் பரவுதல் ஆபத்தை விளைவிக்குமெனக் கருதி நடந்த பழையஅரசாங்கங்களில், பத்திரிகைநடத்த முன்வந்தவர்களில் எத்தனையோ பேர் கொலை செய்யப்பட்டனர். தண்டனைக்கும் கொடுமைக்கும் உட்படுத்தப்பட்டவர்கள் எத்தனையோ பேர். என்றாலும், புத்திபலம், சரீர பலத்தை வென்றுவிடக்கூடியதாகையால், அவ்வியற்கையின்படியே பத்திரிகைகளும் கஷ்டங்களை வென்று வெளியேறி, தேசங்கள் தோறும் சாச்வத ஸ்தானங்கள் பெற்றன.

தற்காலத்தில் பத்திரிகை நடத்துவதற்கு ஏராளமான மூலதனம் அவசியமாயிருக்கின்றது. உலகத்தின் நாலா பக்கங்களிலிருந்தும் சமாசாரங்கள் சேகரிக்கப்படுகின்றன. இப்படிச் சமாசாரங்கள் சேகரித்துப் பத்திரிகைகளுக்குக் கொடுப்பதற்கெனவே தனியான ஸ்தாபனங்களும் ஏற்பட்டிருக்கின்றன. பத்திரிகைகளில் விவாதிக்கப் படாத விஷயமே கிடையாது. நானாவித விஷயங்களைப் பற்றிய குறிப்புகள் ஒரு பத்திரிகையில் தோன்றுவதற்கு அநேகர் வேலை செய்யவேண்டியது அவசியமாகின்றது. ஆகவே, மூல தனம் அவசியமான சாதனமாய் ஏற்படுவதோடு, பத்திரிகை நீடித்து நடைபெறுவதற்குத் தொழில் முறையில் செய்யப்படவேண்டிய காரியங்களும் அத்தியாவசியமாகின்றன.

மேனாடுகளில் பெரும்பாலும் பத்திரிகைகள் நடத்துவது லாபத்தை நாடிச் செய்யும் ஒரு தொழிலாகவே கருதி நடத்தப்படுகின்றது. இந்தியாவில் பத்திரிகை நடத்தும் தொழில் இன்னும் அந்த நிலைமைக்கு வரவில்லையென்று சொல்லலாம். இத்தேசத்தில் ஐரோப்பியர் தங்கள் ஆதிக்யத்தையும் செல்வாக்கையும் ஸ்தாபிப்பதற்காக



நடத்திவரும் பத்திரிகைகளை, ஐரோப்பியக் கூட்டத்தார் கட்டுப்பாடுடன் பல வழிகளிலும் சகாயஞ்செய்து ஆதரித்து வருகிறார்கள். அதிகாரமும், செல்வமும், செல்வாக்கும் பெற்ற ஐரோப்பியச் சமுகத்தின் முழுஆதரவையும் இவ்வாங்கிலோயிந்தியப் பத்திரிகைகள் பெற்று வருவதோடு, கவர்ன்மெண்டின் ஆதரவையும் பெறுகின்றமையால், அவை அநேகமாய் ஒன்றுக்கு அதிகமான வழிகளில் லாபம் பெற்று நடைபெறுகின்றன.

இந்தியரால் நடத்தப்படும் பத்திரிகைகளோ, அவற்றின் உற்பத்திச் செலவுக்குக் கட்டிவரக்கூடிய பொருளைச் சம்பாதிப்பதற்கு வெகு கஷ்டப்படுகின்றன. ஏனென்றால், இந்தியப் பத்திரிகைகள் ஏழை ஜனங்களின் ஆதரவை மாத்திரம் பெற்று நடைபெற வேண்டியிருக்கின்றன. ஆகவே, அங்குமிங்கும் இரண்டொரு பத்திரிகைகளைத் தவிர பெரும்பான்மையான இந்தியப் பத்திரிகைகள், மதிக்கத்தக்க லாபமின்றியே, தேச கைங்கரியத்தின் பலனை மாத்திரம் கருதி நடத்தப்பட்டு வருகின்றன. இந்திய தேசத்தில் இனிமேல் கல்வி விஸ்தாரமாய்ப் பரவி, இந்தியர் ஒவ்வொருவருக்கும் பத்திரிகை இன்றியமையாச் சாதனமாய் ஏற்படும்போது, இந்தியப் பத்திரிகைகள் தற்போதுஅடைந்துவரும் கஷ்டங்கள் நிவர்த்தியாகுமென்று நம்புவோம்.

---

“விவேக போதினி”யைப்பற்றி “கிருஷிகன்” எழுதுவது.—சென்னை மயிலாப்பூர் விவேகபோதினி ஆபீஸ் சொந்தக்காரராகிய ம-ா-ா-ஸ்ரீ குப்புசுவாமி ஐயரவர்களால் பிரசுரம் செய்து வரப்பெறும் “விவேக போதினி” என்னும் பத்திரிகையின் 100-வது சஞ்சிகை வந்தனத்துடன்வரப்பெற்றோம். இச்சஞ்சிகைக்குக் கல்வி யறிவும், நல்லொழுக்கமும் பாண்டித்யமுமுடைய நூற்றுக்கணக்கான கியாதி பெற்ற கனவான்கள் விஷயதானம் செய்து வருகிறார்கள். இவ்வளவு சிறந்த கனவான்களால் எழுதப்படும் வியாசங்களின் அருமையைப்பற்றி விஸ்தரிப்பானேன்? இச்சஞ்சிகையை ஆதரித்து ஒவ்வொருவரும் அநுகூலமடையவேண்டியது அத்யாவசியம். இதன் சொந்தக்காரராகிய ம-ா-ா-ஸ்ரீ குப்புசுவாமி ஐயரவர்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்துப் பத்திரிகை அபிவிருத்தியடையும்படிச் செய்ய வேண்டுமென்று சர்வ தயாபரநிதியாகிய கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

# உத்தம பத்தினி

## THE IDEAL WIFE

[ஸ்ரீமான் பண்டித மு. இராகவையங்காரவர்கள்.]

பரதகண்டவாசிகள் பழைய காலமுதலே கொண்டொழுகிய உத்தம தர்மங்களில் கற்புநெறி யென்பதொன்று. இது ஆடவர்க்கும் உரியதே யாயினும், பெண்டிர்க்குச் சிறந்த தர்மமாகக் கொள்ளப்படுகிறது. “கொண்டவனிற் சிறந்த தெய்வமில்லை என்றும், அவனை இன்னபடி வழிபடுக என்றும், இருமுது குரவர் (பெற்றோர்) கற்பித்ததாலும், அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் கடவுளர் இவர்களிடத்து ஒழுகும் ஒழுக்கத்தைத் தலைமகன் கற்பித்தலாலும், வேதத்தும் சடங்கினும் விதித்த சிறப்பிலக்கணங்களைக் கற்பித்துக்கொண்டு துறவறத்துச் செல்லுந்துணையும் இல்லற நிகழ்த்துதலாலும், கொண்ட தலைவனை இன்னவாறு பாதுகாப்பாயென்றும், அவற்கு இன்னவாறு குற்றேவல் செய்தொழுகுக என்றும், அங்கியங்கடவுள் (அக்கினி) சான்றாக மந்திர வகையாற் கற்பிக்கப்படுதலாலும்” கற்பெனப் பெயர்பெற்றது என்பர் முன்னோர். தன் கற்பு நெறியையும் தன்னைக்கொண்ட புருஷனையும், அப்புருஷனாலும் பெரியோராலும் கற்பிக்கப்பட்ட உறுதிமொழிகளையும் நன்றாகப் பேணுதலால், மகளிர்க்குப் பெண் என்ற பெயர் தமிழில் வழங்கியது. காணுதலைச் செய்வது கண் என்றாற்போலப், பேணுதலைச் செய்பவள் பெண் என்றாயிற்றென அறிக. இவ்வாறு பேணுதலை மகளிர்க்குச் சிறந்த தருமமென்பதையும், அதுபற்றியே பெண் என்ற பெயர் வந்ததையும் “தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற-சொற்காத்துச் சோர்விலாள் பெண்” என்ற குறளால் தெய்வப் புலவர் தெளிவாக்குதல் காணலாம்.

இத்தகைய கற்புநெறியின் உயர்வையும் பரிசுத்தத்தையும் உலகத்தார்க்குக் காட்டிய உத்தமிகளை ஆரியாவர்த்தத்திற்போல வேறு எந்நாட்டிலும் நாம் காணமுடியாது. அநசூயை, சீதை, ஸாவித்ரி முதலிய பெண்மணிகளை உடையது நம் தேசமெனின்,

இதற்கு வேறு பெருமையும் வேண்டுமோ? இன்னோரது அருமை பெருமை வாய்ந்த அற்புத சரித்திரங்களை இதிகாசங்களிற் படிப்பதோடு இவர்களை நித்யமும் ஸ்மரித்து வருவதும் மிகுந்த புண்யமாகக் கருதப்படுகிறது. தமிழ்நாட்டார், இத்தகைய மகளிரையே பத்தினிப்பெண்டிர் என்று வழங்கி மிகவும் கௌரவித்து வந்தார்கள். தவமுனிவரும் பத்தினிகளும் மிகுந்துள்ள நாடுகளே மழைவளமும் மற்றவளங்களும் வாய்ந்து விளங்குமென்பது நம் முன்னோர் கொள்கை. "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் - பெய்யெனப் பெய்யு மழை" என்பது திருக்குறள். இவ்வாறே, சாத்தனார் என்ற சங்கப்புலவரும், ஒரு நாடு பஞ்சத்தால் வருந்திய விஷயத்தைக் கூறுமிடத்தில்—

"செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ
கொங்கவிழ் நல்லார் கற்புக் குறைபட்டோ
நலத்தகு நல்லாய் நன்னா டெல்லாம்
அலத்தற் காலை யாகிய தறியேன்" (மணிமேகலை)

என்று, பத்தினிகளின் பெருமையை எதிர்முகத்தால் விளக்கினார். இக்கற்பு, பிறர் நினைப்பினும் அவர் நெஞ்சைச் சுடுமென்பது, 'நிறையுடை மகளிர் தம்மே போலப் பிறர் நெஞ்சு சுடூஉம் பெற்றி' என்பதனால் அறியலாம். கம்பநாடரும், 'திட்டியின் விடமன்ன கற்பின் செய்கையாள்' என்று, பார்த்த மாத்திரத்தில் எரிக்கவல்ல திருஷ்டி விஷமென்ற பாம்பைப் பிராட்டியின் கற்புக்கு உவமை கூறுவர். இவர்களது கற்பு நிலையை அரும்பாடுபட்டுங் காப்பது பழைய அரசர்களது முக்கிய தர்மமாயிருந்தது என்பதற்கு எண்ணிறந்த சரித்திரங்களுண்டு. "மாதவர் நோன்பு மடவார் கற்பும் - காவலன் காவல் இன்றெனி னின்றால்" என்றார் மணிமேகலையினும்.

இத்தகைய பத்தினிப்பெண்டிர், தம் வாழ்வுக்காலத்தில் எத்தனையோ அரிய செயல்களைச் செய்தவராயினும், தம் கற்பின் பெருமையைக் கணவர்க்குப்பின் மூன்று வகையாகக் காட்டிவந்தமையால் மூவகையராகக் கூறப்பட்டிருக்கின்றனர். இவ்விஷயத்தை,

"காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்காது
இன்னுயி ரீவர்; ஈயா ராயின்
நன்னீர்ப் பொய்கையி னளியெரி புகுவர்;
நளியெரி புகாஅ ராயி னன்பரொடு
உடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்
பத்தினிப் பெண்டிர்"

என்னும் சாத்தனார் வாக்கால் அறியலாம் (மணிமேகலை). இவ்வடிகளைக் கீழிருந்து நோக்கும்போது, விதவை நோன்பினர், உடன் கட்டையேறுவோர், உடனுயிர் நீங்குவோர் என மூவகையராகப் பத்தினிகளை முன்னோர் பகுத்திருத்தல் தெரியலாம். இவர்களுள்—

1. விதவைநோன்பினர்:—இன்னோர் கணவனிறந்தபின் உயிர் தாங்கி நின்று, மறுபிறவியில் தம் நாயகருடன் வாழ்தற்கு நோற்றுப் பட்டினி முதலியவற்றால் உடம்பை வருத்துவோராவர். இதனை "நளியெரிபுகாஅராயின் அன்பரோடு-உடனுறை வாழ்க்கைக்கு நோற்று உடம்பு அடுவர்" என்பதனால் அறிக. இவர்கள் தபஸ்விநிகளைப் போன்றவராதலால், இதனைத் 'தாபதநிலை' என்பர் தொல்காப்பியனார். இவர்கள் இலைகிடந்த நீர்ச்சோற்றையும், எள்ளரைத்த விழுதையும், புளிகூட்டிச் சமைக்கப்பட்ட வேளையிலையையும் உணவாகக்கொண்டு, கல்லழுத்தும்படி தரையிற் பாயின்றிப் படுத்து, உலகாநுபவங்களை ஒழித்தவர். இவ்வாறு கணவர்க்குப் பின் உயிர்தாங்கி நோற்கும் கைம்மைகள், இனிவரும் மற்றை இருவரையும் நோக்கத் தாழ்ந்தவரே.

2. உடன்கட்டையேறுவோர்:—இன்னோர், தம் கணவர் இறந்ததும் தாமும் அவருடன் அக்கினியிற் பிரவேசித்து உயிர்துறப்போராவர். இவரையே சாத்தனார் மணிமேகலையில் மற்றோரிடத்திலும்,

"காதலன் வீயக் கடுந்துய ரெய்திப்
போதல் செய்யா உயிரொடு புலந்து
நளியிரும் பொய்கை யாடுநர் போல
முளியெரி புகூஉம் முதுகுடிப் பிறந்த
பத்தினிப் பெண்டிர்" என்பர்.

"தம் கணவரிறந்ததும் தன்னுடனே போகாத உயிரைவெறுத்து, தாமரைத் தடாகத்தில் மூழ்குபவர்போல இவர்கள் அக்கினியிற் பிரவேசிக்கும் உத்தமிகள்" என்பது இதன் கருத்து. பூதப்பாண்டியன் என்ற அரசன் இறந்ததும் அவன் மனைவி பெருங் கோப்பெண்டு என்பவள் தீப்பாயத் துணிந்தபோது, அவளை அது செய்ய ஒட்டாமற் பெரியோர் சிலர் தடுத்து நிற்க, அவர்களை நோக்கி

"பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா
தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரே மல்லே மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல வெமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயு மோரற்றே"

என்ற பாடலைக் கூறி அக்கினியிற் பிரவேசித்தனள். "நான் அக்கினியிற் பிரவேசிப்பதைத் தடுத்துநிற்கும் பெரியோர்களே! நெய்யைத் தீண்டாமல் நீராகாரத்தையும் எள்விழுதையும் வெந்த இலைகளையுமே உணவாகக் கொண்டு, பாயின்றித் தரையிற் படுத்து வருந்தும் கைம்மைகளைப்போன்றவளல்லேன் நான்; சுடுகாட்டில் மூட்டப்பட்ட அக்கினி உமக்கு அஞ்சத்தக்கதேயாம். எனக்கோ குளிர்ந்த தாமரைப் பொய்கையும் தீயும் ஒரு தன்மையானவை" என்பது இதன் கருத்து. இதனால், அக்காலத்துப் பத்தினிகளது மனநிலை எவ்வளவு பரிசுத்தம் வாய்ந்ததென்பது விளங்கும். இத்தகைய பத்தினிகளைக் கௌரவிக்கவேண்டி இவருருவங்களைக் கணவருடன் கற்களில் வகுத்து உரியவிடங்களில் பிரதிஷ்டித்து வணங்கிவந்த வழக்கமும் தமிழ் நாட்டில் மிகுந்திருந்து வந்தது. இவ்விஷயம் நூல்களாலும், நாட்டிற்பல விடங்களிலும் காணப்படும் மாஸ்திகல் [மஹா+ஸதிக்கல்] களாலும் தெளிவாகும். இவ்வகைப் பத்தினிகள் முற்கூறிய கைம்மை நோன்பினரைக் காட்டிலும் உயர்வுள்ளவராகவே கருதப்பட்டனர்.

3. உடனுயிர் துறப்போர்:—இவர்கள், தம் கணவர் இறந்தமை கேட்டபொழுதே தம் முயிர்நீங்கும் உத்தமிகள். இன்னோரையே—"காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி-ஊதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்காது-இன்னுயி ரீவர்" என்று சாத்தனார் முதலில் வைத்து ஓதியதும். 'கணவர் இறந்தால், கொல்லனுலைத் துருத்திபோலப் பெருமூச்சு விடாமல், தன்னுடனே உயிர் நீங்குவர்' என்பது இதன் கருத்து. இவ்வரிய பெரிய செயல் தொல்காப்பியத்திலே, "மூதானந்தம்" என்று கூறப்பட்டுள்ளது. [மூது—பெரிய, ஆனந்தம்—சாக்காடு; பேரன்புபற்றி நிகழும் மரணமென்பது பொருள்.] நாயகனும் நாயகியும் ஓருயிரும் ஈருடலுமா யிருந்தாலன்றி இவ்வாறு, ஒருங்கு உயிர்நீங்குந் தன்மை நிகழாதென்பர்;

'ஓருயி ராக உணர்க உடன்கலந்தார்க்கு
ஈருயி ரென்ப ரிடைதெரியார்-போரில்
விடனேந்து வேலாற்கும் வெள்வளையி னாட்கும்
உடனே கலந்த துயிர்.

என்னும் வெண்பா இக்கருத்தையே விளக்குவது காண்க. இவ்வாறு கணவனிறந்த பொழுதே உயிர் துறந்த உத்தம பத்தினி யொருத்தி சிலப்பதிகாரத்துட் காணப்படுகின்றாள். ஆரியப் படைதந்த நெடுஞ்செழியன் என்ற பாண்டியன், கோவலன் என்ற வணிகனைத் திருடனென்று கருதி அநியாயமாகக் கொலை செய்வித்த போது, கண்ணகி என்ற அவ்வணிகன் மனைவி, பாண்டியன் முன்சென்று வழக்காடி அப்பாண்டியனது கொடுங்கோன்மையை அவனுக்குத் தன் சிலம்பைக்கொண்டு மெய்ப்பித்தனள். தான் செய்தது தவறென்று அறிந்ததும், அப்பாண்டியன் தன் அநீதியை நினைந்து வருந்தி சிங்காதனத்தில் இருந்தபடியே சோர்ந்து உயிரை விட்டான். அப்போது, அவன் தேவியான பெருங்கோப்பெண்டு என்பவள், தன் கணவன் கண்ணகிக்குச் செய்த அநியாயத்தால் நெஞ்சுடைந்து இறந்த செய்தி தெரிந்ததும், ஒரு கலக்கமுமின்றித் தானும் உடனே உயிர் துறந்தனள். இவ்வரிய நிகழ்ச்சியை, கதை நடந்த காலத்திருந்தவரான இளங்கோவடிகள்,—

"அரிமா னேந்திய வமளிமிசை யிருந்த
திருவீழ் மார்பிற் றென்னவர் கோமான்
தயங்கிணர்க் கோதை தன்றுயர் பொறாஅன்
மயங்கினன் கொல்லெனமலரடி வருடித்
தலைத்தா ணெடுமொழி தன்செவி கேளாள்,
கலக்கங் கொள்ளாள், கடுந்துயர் பொறாஅள்,
மன்னவன் செல்வுழிச் செல்க யானெனத்
தன்னுயிர் கொண்டவ னுயிர்தே டினள்போற்
பெருங்கோப்பெண்டு மொருங்குடன் மாய்ந்த
[னள்.

என அழகாகக் கூறுதல் காணலாம். இவ்வாறு காதலர் இறந்தபொழுதே இறக்கும் நிலை, முற்கூறிய இருவகைப் பத்தினிகள் ஒழுக்கங்களினும் உயர்வும் உழுவலன்பால் நிகழ்வதுமாகும். கந்தபுராணம் பாடிய கச்சியப்ப முனிவரும்—சூரபதுமன் முருகக்கடவுளாற் போரில் அழிவுற்றது கேட்டதும், அவன் மனைவியான பதுமகோமளை உயிர் துறந்ததைக் கூறுமிடத்தில்.—

'காவன் மன்னவ னிறந்தன னெனுமுரை கன்னத்
துன்—மேவு மெல்லையி லசனியே றுண்டவெம்
பணியேபோற்—தேவியாகிய பதுமகோமளையெனுந்
திருமங்கை—ஆவி நீங்கினள் தலையளியாகிய தநுவ
[ன்றே.

என்றும், ஒழிவிலொடுக்க நூலாரும் 'பதியிறக்கக் கேட்டிறந்த பத்தினியே போல' என்றும் இவ்வுத்தம நிலையின் உயர்வை எடுத்துக்கூறுதல்காண்க. இவ்வாறு உடலுயிர் நீங்கிய செய்திக்கு மற்றும் ஓர் உத்தமியின் சரித்திரம் கர்ணபரம்பரையில் வழங்குகின்றதையும் இனி எழுதுவோம்.

# கார்த்திகை அல்லது த்ரிபுர தஹன உத்ஸவம்

## The Kartikai Festival

[பிருஹ்மஸ்ரீ பண்டித ஸ்ரீனிவாஸசாஸ்திரி அவர்கள்.]

இந்த உத்ஸவம் தென்னாட்டிலுள்ள ஆலயங்களிலும் கிரகங்களிலு மாத்திரமேதான் மிக்க ஆதரவுடன் கொண்டாடப்படுகிறதாய்த் தெரிகிறது.

இந்த உத்ஸவத்தைப்பற்றி, தர்ம சாஸ்திரங்களில், ஆதாரம் காணப்படுவதுடன், ஆகம சாஸ்திரங்களிலும் விசேஷமாய்ச் சொல்லியிருக்கிறது. இவற்றில், தர்ம சாஸ்திரங்களில் சொல்வதாவது:—கார்த்திகை மாதத்தில் வரும் பூர்ணிமையானது சில வருஷம் கிருத்திகா நக்ஷத்திரத்தோடும், சில வருஷம் பரணியோடும், சில வருஷம் ரோகிணியோடும் சேர்ந்துவருவதுண்டு.

[இவைகளில், பூர்ணிமை கிருத்திகா நக்ஷத்திரத்தோடு சேர்ந்துவந்தால் அதற்கு பத்மக யோகம் என்று பெயர். ரோகிணியுடன் சேர்ந்துவந்தால், அந்தப் பூர்ணிமைக்கு மஹாகார்த்திகீ என்று பெயர். இத்தினமேதான் ஸ்ரீ மஹா விஷ்ணுவின் அவதார தினங்களில் முதல் அவதாரமாகிய மத்ஸ்யாவதார தினம்.] தவிர, பதினான்கு மன்வாதி புண்ய காலங்களில் இது தக்ஷஸாவர்ணிக மன்வாதி. இந்தத் தினத்தில் ஸ்நாநம், தானம், விருஷபோத்ஸர்ஜனம் முதலிய பலபுண்ய கார்யங்கள் செய்யும்படி விதிக்கப்பட்டிருப்பதுடன், சிவன், விஷ்ணு முதலிய தேவாலயங்களிலும் கிரகங்களிலும் சாயங்காலத்தில் தீபோத்ஸவம் செய்யவேண்டுமென்றும், இந்தத் தீபங்களைத் தெரிசித்த பிராணிகள் மறுபடி ஜன்மம் எடுக்கமாட்டார்களென்றும், இந்தத் தீபங்களைத் தெரிசித்த பஞ்சமன்கூட பிராமணனாய்ப் பிறந்துவிடுவானென்றும், 'பார்க்கவார்சன தீபிகை' என்னும் கிரந்தம் கூறுகிறது.

இந்தத் தினத்தில், ஜன்மமத்தியத்தில் ஒரு தடவை சுப்பிரமணியக் கடவுளைத் தரிசித்தவன் ஏழு ஜன்மங்களில் மஹாதனாட்டியனாயும் மஹாவித்வானாயுமுள்ள பிராமணச்சிரேஷ்டனாகப் பிறக்கிறான் எனக்காசிகண்டம் கூறுகிறது. இது நிற்க, காரணம் முதலிய ஆகமசாஸ்திரங்களில் சில விசேஷங்களும் சொல்லப்படுகிறது. அதாவது, இந்தப் பர்வதினத்திற்கு முதல் தினத்திலேயே ஆலயங்களில் முக்கியமாய்ச் சில தீபங்களை வைத்து, அவைகளுக்கு, ஆகமத்திற் சொல்லிய விதிப்படி பூஜைகள் செய்யவேண்டும்.



இந்தக் கிருத்திகை தினத்தில், ஸ்வாமிக்கு விசேஷமான அபிஷேகங்களையும் செய்து, தீபங்களுக்கும் பூஜைசெய்து சில ஹோமங்களும், விசேஷ நிவேதனங்களும் செய்யவேண்டும். அந்த நிவேதனம் செய்யவேண்டியவைகளுள், அவலை வறுத்துச் செய்த பொரியென்பது ஒரு முக்கிய வஸ்து. (இந்தச் சாஸ்திரத்தை ஒட்டித்தான், நமது தேசத்தில் ஒவ்வொரு கிரகங்களிலும் அவல்பொரி செய்வது வழக்கமாய் இருக்கிறதென்பதை நாம் ஊகித்துக்கொள்ள வேண்டும்.) பிறகு, ஆலயங்களைத் தீபங்களால் அலங்கரித்து ஸ்வாமியின் பூஜை முடிந்த பிறகு, முன் பிரதிஷ்டைசெய்த தீபங்களையும், திவ்ய மூர்த்திகளையும் வாத்திய கோஷம் முதலிய உத்ஸவக்கொண்டாட்டத்துடன் விதிப் பிரதக்ஷணம் செய்துவைத்து, பிறகு அந்தத் தீபங்களைக்கொண்டு ஸந்நதியில் 24 முழம் உயரத்தில் கட்டப்பட்ட சொக்கப்பனையை ஆகம விதிப்படி பூஜித்து எரிக்கவேண்டும். அந்தச் சொக்கப்பனை எரியும்பொழுது, அந்த ஜோதிஸ்ஸை, சிவனது ஜ்யோதிர் லிங்கமாய்ப் பாவிக்கவேண்டும். இதுவே முப்புரங்களை யெரித்த பாவனையும் ஆகும்.

இந்த உத்ஸவத்தைப்பற்றி, இன்னும் வெகு விசேஷத்துடன் மஹாபுண்ணியமென்று பல ஆகம சாஸ்திரங்களும் கூறுகின்றன. இப்படிப்பட்ட ஆசாரங்கள் நமது நாடு முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறபடியால் நாம் இதைப்பற்றி அதிகமாய் எழுதவேண்டியது அவசியமில்லை.

ஆனால், இந்த உத்ஸவம் சில க்ஷேத்திரங்களில், நக்ஷத்திரப் பிரதானமாய், அதாவது கிருத்திகா நக்ஷத்திரம் எந்த இரவில் இருக்கிறதோ, அந்தத் தினத்தில் கொண்டாடப்படுகிறது. சில க்ஷேத்திரங்களில், பர்வப்பிரதானமாய் அனுஷ்டிக்கப்படுகிறது; அதாவது, பூர்ணிமை எந்த இரவில் இருக்கிறதோ, அந்தத் தினத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது.

விஷ்ணு க்ஷேத்திரங்களில் ரோகிணி நக்ஷத்திரம் முக்கியமாய் வைத்து அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த உத்ஸவம் ஆலயங்களுக்கே, மிக முக்கியமானதால் ஆங்காங்கு வசிக்கும் ஜனங்களும், ஆங்காங்கு சமீபத்திலுள்ள க்ஷேத்திரங்களில் நடக்கும் உத்ஸவ தினத்தை அனுஸரித்து, தாங்களும் பண்டிகைகொண்டாடுவதுதான் நியாயம்.

ஏனெனில், தர்மங்கள், சிரௌதம், ஸ்மார்த்தம், தேசதர்மம், குலதர்மம் எனப் பலவிதமுண்டு. அவற்றில், இந்தக் கிருத்திகோத்ஸவத்தைத் தேசதர்மத்திற் சேர்ந்ததாகவே கொள்ளவேண்டும். தேசதர்மங்களை அனுஷ்டிப்பவர், அவ்வவர் வசிக்கும் தேசதர்மத்தையே அனுஸரிக்கவேண்டுமென்று போதாயனஸ்மிருதி முதலிய சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்தக் கிருத்திகை உத்ஸவ விஷயத்தில் பெரும்பாலும் அந்தந்த க்ஷேத்திரத்தை அனுஸரித்து ஜனங்கள் உத்ஸவம் கொண்டாடும் ஆசாரமுங் காணப்படுகிறது.

நிற்க, இதை நாம் திரிபுர உத்ஸவம் என்று சொன்னோமல்லவா? அதற்கு, த்ரிபுரர் என்னும் அஸுரர்களைப் பரமசிவன் எரித்து, தேவர்களையும், உலகங்களையும் காத்த தினத்தில் கொண்டாடப்படும் உத்ஸவம் என்பது பொருள். இந்த த்ரிபுர தஹனத்தைப்பற்றி ச்ருதிகளிலும், சிவ புராணங்களிலும் உபாக்யானங்கள் காணப்படுகின்றன. அவற்றில், ச்ருதியில் காணப்படுவதாவது, தைத்திரீய ஸம்ஹிதை, காண்டம் 6, ப்ரச்னம் 2, அநுவாகம். 3.):—

முன் ஒருகாலத்தில், சில அஸுரர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு, மூன்று பட்டணங்கள் இருந்தன. அவைகளில் ஒன்று இரும்பால் அமைந்தது. மற்றொன்று வெள்ளியா லமைந்தது. மூன்றாவது ஸ்வர்ணத்தால் அமைக்கப்பட்டது. தேவர்களுக்கு இந்தப் பட்டணங்களை வெல்ல முடியவில்லை. அப்பொழுது அவர்கள் ஒன்றுகூடி யோசித்து அந்த முப்புரங்களை எரிப்பதற்காக அக்னி, ஸோமன், விஷ்ணு என்னும் மூன்று தேவர்களின் தேஜஸ்ஸுகளால் முறையே அடி, மத்தியம், அக்ரம் என்னும் மூன்று பாகங்களையுடைய ஓர் அம்பைச் செய்தார்கள். பிறகு, இந்த அம்பை எய்பவர் யார் என்று யோசிக்கும்பொழுது, ஸம்ஹார கர்த்தராகையால் ருத்ரமூர்த்தியே அதைப் பிரயோகிக்க

வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டனர்.

அப்பொழுது ருத்ரதேவர், ஒருவரம் கேட்டுக்கொண்டார். அதாவது, நானே பசுக்களுக்கெல்லாம் அதிபதியாக இருக்கவேண்டுமென்றார். (பசுக்கள் என்பது பொதுவாய் ஜீவராசிகளுக்குப் பெயர்). தேவர்களும் 'அப்படியே' என்று அனுமதித்தார்கள். பிறகு ருத்ரதேவர், அந்தப் பாணத்தைப் பிரயோகித்து முப்புரங்களையும், அதிலிருந்த அஸுரர்களையும் எரித்தார் என்ற கதை காணப்படுகிறது.

இதே கதையானது புராணங்களில் மிக விஸ்தாரமாயும், சிவமூர்த்தியின் பெருமையை மிகவும் கொண்டாடியும் எழுதப்பட்டிருக்கிறது. புராணங்கள் வேதார்த்தத்தின் உப ப்ரும்மணம் அல்லவா? அதாவது, வேதத்தின் தாத்பர்யத்தை விஸ்தாரமாகச் சொல்வது. புராணகதையின் ரீதியாவது:

"முற்காலத்தில், சுப்பிரமணியக்கடவுளால் ஸம்ஹாரம் செய்யப்பட்ட தாரகாஸுரன் என்ற ஓர் அஸுர சக்ரவர்த்திக்கு வித்யுன்மாலி, தாரகாக்ஷன், மஹாராக்ஷன் என மூன்று புத்திரர்கள் இருந்தனர். அவர்கள், பிர்மதேவரைக் குறித்து நீண்ட காலம் தவம்புரிந்து அவரது வரத்தால் தேவர்களால் அழிக்கமுடியாத மூன்று பட்டணங்களைப் பெற்றனர். அவற்றில் ஒன்று இரும்புக்கோட்டை, மற்றொன்று வெள்ளிக் கோட்டை, மூன்றாவது பொன்னால் அமைந்தகோட்டை. இவர்கள் இந்த நகரங்களுடன் ஆகாயத்தில் இஷ்டப்படி சஞ்சரிப்பார்கள்; தங்களுக்கு இஷ்டமான இடத்தில் இறங்குவார்கள். அப்படி இறங்கும்பொழுது, அங்குள்ள நாடு, நகரம், பிராணிகள் எல்லாம் அழிந்துவிடும். இவ்விதம் இவர்கள், உலகங்களைப் பாழாக்கிக்கொண்டிருக்கும்பொழுது, இந்த உபத்ரவம் ஸகியாமல் லோகபாலர்களான இந்திரன் முதலிய தேவர்களும், பிர்மதேவரிடம் முறையிட இவர்களுடன் அந்தப் பிர்மதேவரும், வைகுண்டம் சென்று நாராயணனிடத்தில் தெரிவித்தார். அந்த நாராயணமூர்த்தி, இந்த த்ரிபுராஸுரர்கள் மஹா சிவபக்தர்களாயிருப்பதால், அவர்களை வெல்லுவது பரமசிவனைத் தவிர வேறெவராலும் சாத்தியமாகாதென்று தீர்மானித்து அதற்காக முதலில் நாரதரை அனுப்பி அந்த முப்புரத்தஸுரர்களுக்குப் பௌத்த மதத்தை உபதேசிக்கச்செய்து அவர்களுடைய சிவபக்தியை அழித்துவிட்டார்.

பிறகு ஸர்வதேவர்களின் வேண்டுகோளின்படி, பரமசிவன் பூமியை ரதமாகவும், சந்திர சூரியர்களைத் தேர்க்கால்களாகவும், நான்கு வேதங்களைக் குதிரைகளாகவும், பிர்மாவை ஸாரதியாகவும், மேருவை வில்லாகவும், வாஸுகியை நாணாகவும், விஷ்ணுவை அம்பாகவும் அமைத்துக்கொண்டு முப்புரத்து அஸுரர்களோடு போராடச் சென்றார். அப்பொழுது இந்த யுத்தத்திற்கு ஸகாயமாக அமைந்த தேவர்களின் அகங்காரத்தை ஸர்வாந்தர்யாமியான சிவபெருமான் அறிந்து, அக்காலத்தில் தனக்கு உண்டான சிரிப்பினாலேயே, முப்புரத்தையும் எரித்துவிட்டனர்" என்பதே.

இந்த இடத்தில் சிரிப்பினால் எரித்தாரென்றும், நெற்றிக்கண்பொரியால் எரித்தாரென்றும், அம்பால் எரித்தாரென்றும், புராணங்களில் பேதமும் காணப் படுகின்றது. கல்ப பேதத்தினால், இந்தப் பேதமும் ஸமாதானமடைகிறது, அதாவது ஒவ்வொரு கல்பங்களில் ஒவ்வொரு மாதிரியாய் நடந்ததென்றபடி. இப்படிக்கு வேதங்களிலும் புராணங்களிலும் காணப்படும் த்ரிபுரவதக் கதைக்கு ஓர் தாத்பர்யார்த்தத்தையும் சிலர் ஊகிக்கின்றார்கள்.

ஆனால் அப்படி ஊகிப்பது முற்றிலும் தப்பென்று சொல்லயிடமில்லை: ஏனெனில், வேதங்களிலும் இதிஹாஸ புராணங்களிலுமிருக்கும் பல கதைகளுக்கு ஒருவித தாத்பர்யார்த்தத்தை ஊகிக்கும் வழிகளை, நிருக்த சாஸ்திர கர்த்தராகிய யாஸ்காசாரியரும் மீமாம்ஸா சாஸ்திரத்தில் ஓர் பெரிய ஆசார்யராகிய பட்டகுமாரில ஸ்வாமியும், காண்பித்திருக்கின்றனர். அதாவது, வேதங்களிலும் இதிஹாஸ புராணங்களிலும் தேவாஸுரயுத்த முதலிய கதையானது சில இடங்களில் இவ்வுலகத்தில் நடந்த சரித்திரத்தைக் குறிக்கின்றது. மற்றும் சில இடங்களில் உலகவிருத்தி க்ஷயங்களுக்குக் காரணமாயுள்ள வஸ்துக்களையும் அவைகளில் ஒன்றுக்கொன்று காலபேதத்தினால் உண்டான மாறுபாடுகளையும் குறிக்கின்றன. அவற்றில் சீதம், உஷ்ணம், இருள், பிரகாசம் முதலிய பதார்த்தங்களில் லோக விருத்திக்கு அனுகூலமாயிருக்கும் பாகங்கள், அவற்றிலுள்ள சைதன்ய அம்சத்தோடு சேர்ந்து தேவர்களென வ்யவகரிக்கப்படுகின்றன. அவற்றில், உலக விருத்திக்கு விரோதமான அதிசீதம், அதிஉஷ்ணம் முதலிய பதார்த்தங்கள், தமது சக்தி சைதன்யங்களோடு சேர்ந்து, அஸுரர்கள் எனக் கூறப்படுகின்றன. இவற்றில், பிரளய கால ஆரம்பத்தில் ஜகத்தை அழிக்கும் சக்தியுடைய பதார்த்தங்கள் மேன்மையடைந்து, அனுகூல சக்தி பதார்த்தங்களை அடக்கிவிடுவதால் அதைத் தேவாஸுர யுத்தமென்று, அக்காலத்தில் சொல்லுவது ஔபசாரிகமாகும். பிறகு சிருஷ்டித் தொடக்கத்தில், ஜகத்சிருஷ்டிக்கு அனுகூலமான சக்தியுள்ள பதார்த்தங்கள், ஈசுவர இச்சையினால் மேன்மை யடைந்து, முற்சொல்லிய ஆஸுரசக்திகளை அடக்கி, உலக சிருஷ்டி ஸ்திதி முதலிய கார்யங்களை நடத்துவது தேவர்களின் ஜயமென்றும் தேவராஜ்யமென்றும் உபசரிக்கப்படுகிறது.

இப்படிப்பட்ட அபிப்பிராயங்களை இந்த த்ரிபுரஸம்ஹாரத்திலும் ஊகிப்பது ஸம்பாவிதம். அதெப்படியெனில், இந்தக் கார்த்திகை பௌர்ணமி ஓர் மன்வாதியென்று முன்னமேயே நாம் குறிப்பிட்டிருக்கிறோமல்லவா? மன்வாதியென்பதற்கு, ஓர் மன்வந்தரத்தின் ஆரம்ப தினமென்று பொருள். 71 சதுர் யுகங்கள் கொண்டது ஒரு மனு காலமாகும். ஒரு பிர்ம்ம கல்பத்திற்கு இப்படி 14 மனுக்கள் உண்டு. ஓர் பிர்ம்ம கல்பமென்பது 1000 சதுர் யுகங்கள் கொண்டது. இது பிர்ம்மாவின் பகல் வேளை. இந்த 14 மனுக்களுக்கும், 15 ஸந்தியா காலங்களுண்டு. ஒவ்வொரு ஸந்தியாகாலமும் தெய்வ மானத்தால் 4800 வருஷமும், மானுஷமானத்தால், 17,28,000 வருஷங்களும் கொண்டது. இந்த ஸந்தியா காலங்களில் உலகத்திற்கு ஓர்சிறியபிரளயம் உண்டு. இதை அவாந்தரப்பிரளயம் என்று கூறுவர். பிரளயகாலத்தில் சூரியன் முதலிய மண்டலங்கள் சலனமற்று ஒரே இடத்தில் நிற்குமென, சாந்தோக்ய உபநிஷதம் கூறுகின்றது. அப்படிச் சூரியன் சலனமற்றிருக்கும்பொழுது, இந்தப் பூமியின் ஒரு பாகம் அத்யுஷ்ணத்தாலும் மற்றொரு பக்கம் அதிசீதளத்தாலும், இருளாலும் வியாபிக்கப்பட்டு உலகம் அழிந்திருக்கும் என்பது நிச்சயம். அப்பொழுது இந்த இருளும், சீதமும் ஜாட்யமும் பூமிச்சாயையினால் வியாபிக்கப்பட்ட பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் என்னும் மூன்று பாகங்களையும் வியாபித்திருக்குமல்லவா? இந்த மூன்று ஸ்தானங்களையே இரும்புக் கோட்டை யென்றும், வெள்ளிக் கோட்டை யென்றும், பொன் கோட்டை யென்றும், அவற்றுள் வியாபித்த சக்திகளே அஸுரர்களென்றும் சுருதி முதலியவை உபசரிக்கின்றன. பிறகு சிருஷ்டித் தொடக்கத்தில், கால ரூபரான பரமேச்வரர் தமது இச்சாசக்தியால் கிரியாசக்தியைத் தூண்ட அப்பொழுது பெண்டுலத்தை அசக்கிவிட்ட கடிகாரம்போல் லோகசக்கரம் சலிக்கத் தொடங்குகிறது. அப்பொழுது ஆவிர்பவிக்கின்ற பரமேச்வரரது நேத்ர ரூபனான சூரியனுடைய கிரண சம்பந்தத்தால் ஒரே இடத்தில் சலனமன்றி வியாபித்திருந்த இருள் முதலியவை மாறத் தொடங்குகிறது. அப்பொழுது முதலில் ஆவிர்ப்பவிக்கின்ற பிரகாசத்தைக் காலரூபரான பரமேசுவரரது சிரிப்பென்றும், அந்தச் சூரிய கிரணங்களை நேத்ராக்னியென்றும் பாணமென்றும் உபசரிக்கப் படுகின்றது. இப்படிப்பட்ட இருளைப் போக்கிச் சிருஷ்டிக்கு ஆரம்பமான மன்வாதி காலமாகிய இந்தக் கார்த்திகை பௌர்ணமியில் பரமசிவன் இருள் முதலிய தீயவஸ்துக்களைப்போக்கி அனுகூல வஸ்துக்களாகிய பிரகாசம் முதலியவற்றை விளங்கச் செய்தாரென்பதற்கு ஞாபகமாக நாம் தீபோத்ஸவம் முதலியவற்றால் பரமசிவனை ஆராதிப்பது நியாயமே.

இப்படிக்கு த்ரிபுர ஸம்ஹாரமென்பது ஒரு சிருஷ்டியின் ஆதிகால விருத்தாந்தமெனத் தாத்பர்யம் ஊகிக்கப்படுகிறது. இந்த அர்த்தம் பழைய கிரந்தங்களில் நேரில்

காணப்படாவிடினும், வேதத்தில் பல விடங்களுக்கு நிருக்தக்காரரும், பாஷ்யகாரரும் செய்திருக்கும் அர்த்தங்களை அனுஸரித்து இந்தத் தாத்பர்யம் இங்கு எழுதப்பட்டது. முதலில், இந்த த்ரிபுர ஸம்ஹாரத்தைக் குறிக்கும் வேதத்தின் பாகம் குறிக்கப்பட்டிருக்கிறதல்லவா? அவ்விடத்தில் ஷை வேதபாஷ்ய கர்த்தராகிய பட்டபாஸ்கராசாரியார் ஓர் ஆசங்கையும் ஸமாதானமும் செய்திருக்கிறார். அதாவது, இந்த இடத்தில், தேவர்கள் ருத்ர தேவரை நோக்கி அப்பொழுது அவர்களால் செய்யப்பட்டிருக்கும் பாணத்தை த்ரிபுரர்கள்மீது பிரயோசிக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளும்பொழுது, ருத்ர தேவர் தாமே பசுக்களுக்கெல்லாம் அதிபதியாக விருக்கவேண்டுமென்று வரன் கேட்டுக்கொண்டதாகக் காணப்படுகிறது. அப்படி இப்பசுபதித்தன்மை, ருத்ரதேவருக்கு அப்பொழுது கிடைத்ததாகவிருந்தால். அதற்குமுன் அவர் பசுபதி அல்லவா என்ற ஆசங்கைவர, பெரும்பாலும் வேதத்திலிருக்கும் கதைகளெல்லாம் உலகத்தில் நித்திய ஸித்தமான வஸ்துக்களையும், விருத்தாந்தங்களையும் குறிப்பிக்குமாகையால் இங்கும் ருத்ர தேவருக்கு அனாதி ஸித்தமான பசுபதித்தன்மையையே, இந்த அர்த்தவாத சுருதியும் அனுவதிக்கிறதேயன்றி ருத்ர தேவருக்குப் பசுபதித் தன்மையைப் புதிதாக விதிக்கவில்லை; ஸர்வேச்வரனாகிய அவரது பசுபதித் தன்மை, அனாதி ஸித்தம்தான் என ஸமாதானம் செய்திருக்கிறார். தவிர, இப்படி வேதங்களில் லோக நிர்வாக வஸ்துக்களைப் பலவிடங்களில் தேவர்களெனவும், அஸுரர்களெனவும், புருஷர்களெனவும், ஸ்திரீகளெனவும், யுத்தமெனவும், விவாகமெனவும், ரூபகமாக வியவகரிப்பது சாஸ்திரங்களின் வழக்கம். ஆகையால், இந்தக் கிருத்திகா தீபோத்ஸவம் ஸகல ஜகத்காரணபூதனான பரமசிவனது த்ரிபுர ஸம்ஹார மஹோத்ஸவக் கொண்டாட்டமென அறிந்துகொள்வது முக்கியம்.

## யுத்த தரும விசாரம்

## THE ETHICS OF WAR

[ஸ்ரீமான் பி. என். ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள், எம். ஏ.]

நமது ஆரிய மதமும் போர் தருமத்தை வெகு நுட்பமாய் ஆராய்ந்திருக்கிறது. சாஸ்திரம் யுத்தம் உயிர்க்கியல்பென்று தேர்ந்து தரும யுத்தத்தைப் புகழ்ந்து பேசும். முக்குணத்தை விஷயமாய்க்கொண்ட வேதம், குணத்துக்கேற்ப வருணங்களை வகுத்தும் போரை யியல்பாகவுடைய. க்ஷத்திரியரை நீதிவழியில் திருப்பியுயர்த்திடும். ஸாம தான பேதமாகிய உபாயங்கள் பயன்படாதபின்னரே சமருக்குச் சன்னாகமடைதற் பாலது. உத்தமகுணமுடைய தூதர்கள் வேந்தரின் கண்ணாய் உண்மையும் சமாதானமே தம் மதமாகக்கொள்வர். தூதருக்குத் தீங்கிழைத்தல் கொடிய பாபம். ஸ்வலாபத்தையே மேலாகக்கருதி இருகக்ஷியிலுஞ் சேராதவர் பழிக்காளாவர். சமானமானவருடன்தான் சமரிடல் வேண்டும். முன் வைத்த காலைப் பின்னெடுக்காத தீரரே வெற்றியல்லது வீரஸ்வர்க்கமடைவர். பயந்தோடுபவரைத் தொடர்ந்து கொல்வது மகாகொடுமை. படை வீரரைத் தவிர மற்றொருவரையும் வருத்தலாகாது. விஷங்கலந்து வஞ்சனைச் செய்கையினால் பகைவரை மடித்துக், கொள்ளை யடிக்கும் கொடிய வேந்தர் அசுரருக் கொப்பாவர். அபராதஞ் செய்தவரை யடக்கி யடைக்கலம் புகுந்தாலுடனே யவரைக் காத்தல் வேந்தரின் தருமம். முற்காலத்தில், முனிவரும் ரிஷிகளும் போர்க்களஞ் சென்று பகைமூண்ட வீரருக்குப் போரறத்தை நினைப்பூட்டிப் புகட்டுவர். இவ்வண்ணம் த்வேஷம் நீங்கி, தரும யுத்தஞ் செய்து தரும பரிபாலனஞ் செய்வதே வேந்தரின் கடமையென்று நீதியை நிர்ணயித்து அனுஷ்டித்துள்ளார் நமது மேலோர். ஆதலால் பேராசையினால் பகையும் பொறாமையுங்கொண்டு மாயப்போரிட்டு ஊரைக் கொள்ளையிட்டு உயிரை மாய்த்து உலகை யழிக்கவந்த போரை அஸுரப் போரென்றவர்கள் இகழ்வது ஓர் ஆச்சரியமோ! யுத்தம் உயிர்க்கியல்பென்பதை யோர்ந்த சாஸ்திரம் இவ்வியல்பைத் தரும நெறியில் திருப்பிச் சத்துவ குணமாக்கும்.



சாஸ்திரம் தருமப்போரைப் புகழுமாயின் அதற்கு மேற்கோளாம் இதிஹாஸ புராணங்களில் அவ்வுண்மை புலப்படவில்லை. நீதி தவறாத ரவிகுலத்தில் பிறந்த தருமக்கடவுளாம் ராமபிரான் வாலியை மறைந்தடிப்பானேன்? பாரதப்போர் மாயப் போரல்லவோ! சிசுபாலன் முதலியவர், கண்ணனை மாயன் வஞ்சகனென்றது பொய்யோ? போரை நீக்கத் தூதுசென்று, போரை மூட்டிக் கொடையாளியாம் கர்ணன் பலத்தை வாங்கி அவனைக்கெடுத்து, அசுவத்தாமனை யவமானத்துக்காளாக்கி, துணைகேட்டத் துரியோதனனைத் தூற்றிவிட்டு, அபாயத்தினா லலரிட்ட அபிமன்யுவை வஞ்சனையினாலழித்து, அதனால் கோபமூண்ட பார்த்தனைக் காக்கச் சூரியனை மறைத்துச் சைந்தவனை வஞ்சித்துக் கொன்று, ஆயுதமெடேனென்று அநேக முறை ஆயுதத்தை யேந்தி, பீஷ்மர், துரோணர் முதலிய தலைவரைத் தந்திரத்தால் தொலைத்து துரியோதனன் துடையைக்காட்டியவனை மாய்த்து பாண்டவசகாயனென்று பேர் படைத்து அப்பாண்டவரின் புத்திரமித்திரரை மாயத்தால் மாய்த்து யாதவ குலத்தில் தோன்றி, யாதவரை வேருடன் நாசஞ்செய்த மாமாயனை உயிரைக் கொள்ளையிடுங் கள்வனை யார் நல்லவனென்பார்கள்? "பார்த்தனை முன் கொன்றணங்கின் குழல்களைந்து காலிற் றளைபூட்டி நேராகக் கைப்பிடித்து நின்னையும் யான் கட்டுவனேல் வாராமல் காக்கலா மாபாரதம்" என்று சகாதேவன் சொன்னது சத்தியமே. பாரதப் போரில் க்ஷத்திரிய ரழியாதிருப்பின் நம் நாடு எவ்வளவு சுகமடைந்திருக்கும்? இதையெல்லாம் யோசித்தால் நமது நூல்கள் தரும யுத்தத்தைப் போற்றுமென்றெப்படிச் சொல்வது?

மேற்கூறிய ராமாயணப் போரையும் பாரதப் போரையுமாராய்ந்து அவைகளுக்கு ஓர் சமாதானஞ் சொல்லலாம். நீதியும் அநீதியுமுண்மையில் தெய்வச் செயல்; அது தேவரகசியமாதலின் நாம் அதை யறியவொண்ணாது. ஒருக்கால் அந்த நுட்பத்தை நாமறிந்து நடக்கமுடியுமாயின், அதுவேதான் தருமமாய்த் தொழிற்படும் என்போமாயின் அப்பியாஸத்தில் அது மிகக் கடினமாம். தெய்வத்தின் நோக்கையுஞ் செயலையும் யாரறிவது? விபீஷணர் கூடப்பிறந்தவனைக் கைவிட்டு விரோதியைச் சேர்ந்ததுமல்லாமல் அவருக்கு ராவணன் மர்மங்களைமொழிந்து அவனைக் கொல்வித்தது என்ன நீதி? ராமகாரியமே தருமமாதலாலும் ராவணனுக்குத்தாம் எவ்வளவு சொல்லியுங் கேளாததனாலும், விபீஷணர் தமது சாதாரண தர்மத்தைவிட்டு விசேஷ தருமமாம் ராமகைங்கர்யத்தைக் கைக்கொண்டாரென்று சமாதானமளிக்கலாம். ஆனால் இதே தரும சங்கடத்திலாழ்ந்திய நீதிமானாகிய பீஷ்மரோ பாண்டவரிடம் தருமமும் தெய்வமுங் குடிகொண்டிருந்த தென்பதை நன்றாயறிந்தும், அன்னமிட்ட துர்யோதனனைக்கைவிடாது அவ்வன்னத்தினாலாய தேகத்தையவனுக்குத்தந்து மனதைப் பாண்டவரிடமளித்துக் கோரயுத்தம் விளைத்தனர். நீதிவடிவாகிய இவர், பாண்டவரைக் கைவிட்டு அவர் சேனையைச்சிதரவடித்ததுஎன்ன நீதி? பூபாரம் தீர்ப்பதே தெய்வநோக்கமென்றறிந்து இவர் பகைவர் பக்கம் புகுந்தனரென்றால், தீயவரைச் சேர்வது தீதல்லவோ? நல்லோரைக் கைவிட்டு அவரை மாய்ப்பதும் பூபாரம் நீக்குவதோ? தருமத்தை நிலைநிறுத்திக் காக்கவந்தேனென்று கீதையில் கூறிய பகவான் தீயவருடன் நல்லவரையுமழிக்கத் தோன்றினாரென்பதெப்படியொக்கும்? பாண்டவர் கௌரவர் ஆகிய இருதிறத்தாரையும் கைவிட்டுத் தீர்த்தயாத்திரையை விரும்பிய விதுரர் செய்கையையும் மேலான தருமமென்றே கூறவேண்டும். இப்படி விபீஷணர் விரோதியைச் சேர்ந்தார்; பீஷ்மர்நல்லோரைப்புகழ்ந்து அவரைக்கைவிட்டனர்; விதுரர் இரு கக்ஷியையுந் துறந்து ஓடிப்போயினர். இம்மூவரும், தெய்வச்செயலையாழ்ந்தறிந்து நடக்கும் மஹான்களாதலால் எவர் செய்கை யுயர்ந்தது, நாம் கைக்கொள்ளத் தகுந்ததென்று கூறமுடியும்?

மறுபடியும் யோசித்துப் பார்ப்போம். யுத்தமும், யுத்த தர்மமும் கர்மத்தினால் வந்ததென்று ஏன் கூறலாகாது? உலகம் அஞ்ஞானத்தில் மூழ்கிக் கிடக்கிறது. அது நாய்வால்போலொருநாளும் நேராகாது. அஞ்ஞானத்தின் காரியமாகும் ராகத்வேஷங்களால் மானிடர் போரில் முனைவர். அதர்ம

பதிகமானால், காக்குங் கடவுளவதரித்துத் துஷ்டரையழித்துச் சிஷ்டரைக்காப்பர். முக்குணங்களும் மனிதரிடம் மிசிரமாயிருப்பதால் இவர் தெய்வீக குணமுள்ளவர், இவர் அசுரரென்றறிவது அருமையாகிலும் பிரதான குணத்தைக்கொண்டு நல்லவர் தீயவரென வகுக்கலாம். நல்லவருடன் கலந்து பகவான் அவரைக் காக்கப்புகுவன். அவரிடஞ் சிறுபான்மையாகக் காணும் தீக்குணங்களும் தீயவரிடமிருக்கும் சிறுபான்மையான நற்குணங்களும் கரும வசத்தால் கலந்து போராட, அவைகளின் நடுவில், காக்கவந்த கடவுளும் அகப்பட்டு மொத்துண்டு கருமப் பயனைக் கழிக்கவரும். மித்திரனும் சுக்கிரீவனைக் காக்கவந்த ராமபிரான், வாலியை மறைந்து கொன்றதனால் வந்த பாபத்தை, கண்ணனாய்ப்பிறந்து மறைந்தடித்த வேடனம்புக்கு இரையாய்த் தீர்த்தார். பாரதப் போரில் இவர் செய்த கொடுமையினால் இவருடைய யாதவகுலமே மாய்ந்தது. ஆதலால் பாபபுண்யமென்பது சத்தியம். அது கருமத்தினால் வருவது. அதை யேற்படுத்திய யாவும்வல்லக் கடவுளை யதன்வசப்படி நடப்பனேயன்றி, யொருக்காலும் நீதி தவறானென்பது நிச்சயமாயிற்று.

ஈசுவரன் கர்மாதீனமென்றால் கர்மாவை ஈசனெனல் வேண்டும். அது அவன் ஸர்வசக்திக் குறைவாகும். அதனால் உலகம் நியாயஸ்தலமாய், ஈசன் நியாயாதிபதியாய் துஷ்டரைத் தண்டித்துச் சிஷ்டரைப் பரிலானஞ் செய்வன். அபராதத்தை க்ஷமிக்கும் தயாநிதி கருணைக்கடலெனும் அவன்குணம் பொய்யாய்ப் பலனற்றுவிடும். ஆதலால், யுத்தம் ஈசன் கருணையின் காரியமேயல்லாது, கருமத்தினால் வந்ததன்று என்று சொல்லலாம். இதுண்மையாயின், மானிடர் போரையும் அதன் துன்பத்தையும் நலமென வோம்பியதனால் பரிசுத்தராகவேண்டும். ஆனால் உயிரைமாய்த்து, உலகைப்பாழடிக்கும்போர் கருணைக் கடவுளிடமெப்படி உண்டாயிற்று? இதையெல்லாம் யோசித்துப்பார்த்தால் ஈசனுடைய லீலை யாவுமென நிச்சயிக்கலாம். நன்மையும், தீமையும், போரும், சமாதானமும் ஜீவர்களின் கர்மத்தால் வந்தனவேயொழிய அவைகளில் ஈசனுக்கோர் சம்பந்தமுமில்லை. அவன் கலந்துங் கலவாமல், சொல்பவனுமாய்க் கொல்லப்பட்டவனுமாய், சாக்ஷியாய் ஒரு பயனையுங் கோராது உயிரை யாக்கியளித்தழித்து விளையாடுகிறான். யாவும் லீலையென்றறியாத மானிடர் மயங்கிப் பகைத்து மாண்டிடுவர். இவ்வுண்மை யறிந்தவர் ஆசையும் பகையுமற்று ஈசனைப்போல தாமும் விளையாடிச் சுகித்திடுவர்.

இக்கொடும் போரில், கோடிகோடியாய் மாண்டு உலகம் பரதவிப்பதைப் பார்த்து இதெல்லாமீசன் லீலையென்று சிரித்திடுவது சரியாகுமோ? நாமழுவதவன் விளையாட்டோ? அல்லது அவன் லீலை நமது துயரோ? இவ்வுலக மழிக்குந் தெய்வம் ஆடி யமர்ந்திடும் மயான பூமியோ அல்லது காக்குங் கடவுள் களித்திடும் பூஞ்சோலையோ? அசுரரையாக்கி, அவருடன் போர்புரிந்து அவஸ்தைப்பட்டுப் பயந்து பாற்கடலில்போ யொளிக்குந் தருமமென்னவோ? பசுவைப் படைத்த புண்ணியன் புலியையேன் உண்டாக்க வேண்டும்? பசுவைக் கொல்லப் புலிவந்ததா, அல்லது புலிவாழப் பசுவந்ததா? அனந்த கலியாண குணனாய் அன்பும் கருணையுநிறைந்தவன் சக்கிரமும் சூலமுமேந்தி போர்க்கோலங்கொண்டுச் சம்மாரஞ் செய்வதுஞ் சரியோ? போரிடுவது நீதியென்போமானால் அவன் கருணைக்குப் பொருந்தாது. நீதியில்லை யென்றால், அதையேன் அவனுண்டாக்க வேண்டும்? இதையெல்லாம் யோசித்துப் பார்த்தால் புத்தி சுற்றிச் சுற்றிச் சுழலமிட்டுச் சோர்ந்திடுவதேயல்லாது, உண்மையை யறிந்துய்வது அஸாத்யம். "ஈசுவரன் மனோவாக்குக் கெட்டாதவன்; அவன் செயலை யறிவதரிதென்று நிச்சயிப்பதே விவேகமாம். பகையும் போருமுண்டாவதற்குக் காரணம் அசுர குணம், கர்மா, லீலை, மாயையென்று முறையே விசாரித்ததனாலொன்றுந் தெரியாமலறிவழிந்து மனமோய்ந்ததேயன்றி நமக்குச் சமாதானமுஞ் சாந்தமும் கூடவில்லை. உயிரைப் படைத்து உயிருக்குயிராயதீதனாய மாயனை மனதாலறிவதெப்படி?

போர் நீங்கி உலகமுய்யும் வகை நாமறியாவிடினும் அதன் விஷயமாயொவ்வொருவருக்குமுண்டான தர்மத்தை ஒருவாறு நி



ணயிக்கலாம். பாரதப்போரின் கொடுமையைக் கண்டு உள்ளமிடிந்து உயிர் சோர்ந்த பார்த்தனுக்கு அவனுயிரான கண்ணன் கூறியதே உயிர்களுய்யும் வழி. பிறந்தவை யாவும் அழியும். தேகம் அநித்யம்; ஆன்மா எக்காலு மழியாத நித்யனாதலால் அவனுக்குண்மையில் மரணங்கிடையாது. இறந்து பிறப்பது, ஜீரணமான உடுப்பை மாற்றுவதைப் போலாம். எல்லாம் ஈசனாதலால் கர்மத்தைப் பலனைக் கோராது ஈசுவரார்ப்பணமாய்ச் செய்வதே நம் கடமை. ராகத்துவேஷங்கள் நீங்கி, ஆன்மாவை அறிந்து ஆத்ம திருப்தனாய் ஸ்வதருமத்தை யனுஷ்டிப்பதே தருமமென்று இவ்வாறு போதித்துப் பிறகுத் தமது மாயையினாலுலக முண்டாயதற்குத் தாமே கர்த்தாவாயிருக்கும் உண்மையை விச்வரூபத்தால் தெரிவிக்க, அந்த ரூபத்தில் சராசரங்களற்பமாயடங்கிப் பாரதப்போர் நிகழ்வதைக்கண்டுப் பிரமித்து நடுங்கிய பார்த்தனுக்கு அபயமளித்தக் கருணாநிதி, முடிவில் அவனுக்குத் தரும யுத்தம் புரிவதே தருமமென்று தட்டிக்கொடுத்துத் தேரை யோட்டினார். இதனால் க்ஷத்திரிய குண மமைந்தவனுக்குத் தருமப் போரிடுவதே நீதி யென்றாயிற்று. ஞான வைராக்யம்பூண்டு தத்துவமறிந்த சத்துவகுணபரிபூரண ரஜோகுணத்தினால்பிறந்தபோரிலொருநாளும் அவர் புகார். உடல் பொருளாவி மூன்றையும் இழக்கவந்தாலும், அவர்கள் சும்மாயிருந்துச் சுகித்துத் தீது செய்தவருக்கருள் புரிவர். பகையை யொழித்தவருக்குப் பகைவரேது? ஆனால் தீயவரால் துயரடைந்து தமது சரணம் புகுந்தத் தீனரைக்கண்டோடி சமாதி கூடாமலவர்கள் தீயவரைக் கண்டித்து இருவரையும் ரக்ஷிப்பார்.

பிறப்பு குணம் தொழிலாகிய மூன்றும் மன்றாடிக் குழப்பமடைந்து யாவரும் யாவுமாய் எத்தொழிலும் புரியு மிக்காலத்திலோ யாவரும் பிராமணர், யாவரும் க்ஷத்திரியர். பிளேடோவும் பவுத்தருங்கூட ஒருவாறு வருணங்களை வகுத்து ஒழுங்குபடுத்தியுள்ளார். இப்போதைய மேனாட்டாரிடம் நாம் பெறும்நீதியோ தேசநன்மையையும் அதற்கிணங்கிய உலக நன்மையையும் உயர்வாகக் கொண்டு யுத்த முயிர்க்கியல்பென்று யாவருக்கும் போர்வித்தையைப் புகட்டிப்போராவேச மூட்டிப் புகழோங்கிய பூதலத்தைப் பேய் களித்தாடும் பிணக் காடாக்குகிறது. போரேனுந்தீ யொருநாளு மவியாதாகிலுமதை யடக்கவேண்டுமானால் யுத்தகுணமுள்ளவருக்கறிவூட்டி அதனால் தரும யுத்தம் புரிவதே நலமென்றவர் தேறுவதவசியம். யுத்தந் தீதென்றறிந்தவர், தம் நாடு பிறர் கொடுமையினால் பரதவிக்கும்போது பயந்தோடாமல் தாம் போர்புகுந்து, பிறரைக் கொல்லாவிடினும் போருக்கு வேண்டிய வேறு உதவி புரியலாம். முன்னாளில் விபீஷணர் ராமருடன் சேர்ந்தார், பீஷ்மர் கௌரவருடன் கலந்தனர். விதுரர் இருகக்ஷியுஞ்சேராது விலகினர். தத்துவமறிந்த பிராமணர் தரும யுத்தத்தைப்போற்றி வாழ்த்தினர். ஆதலால் யுத்த தருமமறிந்த விவேகிகள் தம் பிறப்பு, குணம், காலம், சந்தர்ப்பம் முதலியவைகளைக் கீதையைக்கொண்டு நன்றாயாராய்ந்து பிறகு, தத்தம் கடமையைத் துணிவதே தகுதி.

இக்கொடும்போரிலும் பெரும்போரொன்று உலகை வெகுகாலமாய் வாட்டி வதைக்கும். அது உட்போராகையால் அதன் கொடுமையும் வேதனையும் பட்டவர்க்கே தெரியும். ராகத்துவேஷமெனு மதுவைக்குடித்து இந்திரிய வழியாயோடி, காமக்குரோதிகளுடன் கூடி, யவைகள் தரும் சுகத்தை யள்ளிப்புசிக்க, அது விஷமாய் மாறி, விஷந்தலைக்கேறி யலைந்து அழிந்து பரதவிக்கு மிப்பேய் மனதையுள்ளிழுத் துள்முகமாய்த் திருப்பிச் சும்மாவிருக்க நாம் போரிடும் கொடுமையை நாவால் கூறமுடியுமோ? பர்வதங்களைப் பிளந்து பொடியாக்கியும், கடலில் மூழ்கிக் கப்பலையுடைத்தும், விண்ணில் மறைந்து மண்ணவரை மாய்த்தும், ஒன்றாயிரமாய் திரிபுவனமெரித்த தீயைப்போல் அக்னியால் உலகையெரித்திடும் காலாக்னிக்குண்டுகள், எண்ணிறந்த கோடிப்பிறப்புகளால் குவிந்து வரும் காமாதி வாஸனைகள் மனதைத் தாக்கிக் கலக்கிச் சிதற அடிக்க, அதனால் நொந்து நைந்து துடித்து மீளாத் துயராம் பவக்கடலில் ஆழ்த்தும் கொடுமைக்கு எள்ளளவேனும் நிகராகுமோ? புறப்போரில் தொடுத்த கணை ஒரு தேகத்தையே மாய்க்

கும், ஆனால் அகத்தை எரிக்கும் ராகத்துவேஷங்கள் அளவற்ற ஜன்மத்தைத்தந்து வாட்டும்: மூல பலமாம் அகந்தையை அடக்க அடக்க அது ஆயிரமாய் வளர்ந்து சூழ்ந்து ஊடுருவிப்பாய்ந்து உயிரைவதைக்க, அதனால் தீயில் விழுந்த புழுப்போல் துடிதுடித்து உய்ய வகையறியாது பரதவிப்பது அந்தோ என்ன கொடுமை! பெண் என்றால் வெண்ணெயாய் உருகி, கண்ணன் என்றால் கல்லாய் இருகும் இப்பாழ்த்த மனத்தை மாய்க்க வழியுமுண்டோ?

புறப்போர் நீங்கி உலகம் உய்யுமென்பது சந்தேகம். ஆனால் இவ்வுட்போர் நீங்கிச் சாந்தம் அடையலாமென்று ஆப்தர் ஐயமின்றிக் கூறுவதே நமக்குப் பேராறுதல் ஆகும். தேகம் எனும் தேர் ஏறி, புலன்களாம் புரவிகளையடக்கி ஆள்வது பார்த்தஸாரதியின் கருணையின்றிக்கூடுமோ? அப்பேரருளை முன்னிட்டு இந்திரியங்களை யடக்கிக் காமாதிகளைத் துறந்து சிதறவடித்து, அவர் தலைவனும் அகந்தையெனும் சூராதிசூரனை மூவெழுத்தெனும் கணை தொடுத்து மாய்த்து, தூய்மையாம்ஆற்றில் மூழ்கிப்பேரவாவுடன் துள்ளி ஓடோடிப் பறந்து அகண்ட ஒளியாய் ஸ்வயம் ஜோதியாய் ஆராவமுதாய் உயிர்க்குயிராய் மோஹன வடிவாய் விளங்கும் பரமனைக் கண்டு களித்து, மேன்மேலும் பொங்கி வழியும் சுகத்தை மன இந்திரியங்களால் அள்ளிப் புசித்து, அவா அடங்காத நிரதிசய ஆநந்தத்தில் மூழ்கிச் சுகித்திடுவர்.

---

விவேகபோதினியைப்பற்றிப் "பூர்ணசந்திரோதயம்" எழுதுவது.—"விவேக போதினி" நூறும் சஞ்சிகை கனம் ஸ்ரீ ஹைகோர்ட்டு ஜட்ஜு சேஷகிரி ஐயர் அவர்கள் முன்னுரையுடனும் பல சித்திரப் படங்களுடனும் வெளிவந்திருக்கின்றது. இந்தச் சஞ்சிகையில் ஒவ்வொரு விஷயத்திலும் மிகத் தேர்ச்சிபெற்ற பண்டிதர்கள் அவர் அவர்கள் விஷயங்களில் அரிய வியாசங்கள் எழுதியுள்ளார். இதில் வந்துள்ள 32 வகை விஷயங்களில் ஒவ்வொரு ஸ்திரீ புமான் குழந்தைகளும் தங்கள் தங்களுக்கு இனியதாகிய விஷயங்களைக் காணுகிறார். இந்த மாதாந்தரப் பத்திரிகை மேன்மேலும் சிறப்படைந்து வருவதைக் கண்டு மகிழ்கிறோம்.

## புத்தக விமர்சனம்

## REVIEWS OF BOOKS

விஜயரங்கம்:—இப்பெயர்கொண்ட நூலாசிரியர், செல்வம் மிக்கவராயிருப்பினும் உலக அனுபவமடைய மனைவியைத் துறந்து மாறுவேடம் பூண்டு, தனவந்தர் ஒருவருக்கு வேலையாளாக அமர்கின்றார். ஒரு வருஷங் கழித்து, தனவந்தருடைய உலோப குணத்தைக்கண்டு, அவரை விட்டுநீங்கி, பிறகு தம் மனைவிக்குக் குழந்தை பிறந்ததை யறிந்து அவள் மீது சந்தேகங்கொண்டு, கடலில் விழுந்திறக்க யத்தனிக்க, ஓர் ஸ்திரீயால் காப்பாற்றப்பட்டு அவளகத்தில் வாழ்ந்து வருகின்றார். இவரியற்றிய நாடகத்தால், கீர்த்தியடைந்து, கடைசியில் தம் மனைவியையும், மகனையும் அடைகின்றார். விஜயரங்கத்தின் சிநேகிதன் தாமோதரம் பிள்ளை தம் மனைவியை விட்டுப்பிரிய, ராஜேஸ்வரி என்னும் அவள் கடற்கரையில் விஜயரங்கத்தைக் காத்து கடைசியில் தன் கணவனை யடைகின்றாள்.

செந்தமிழ் நாட்டு நாடகாசிரியர்களில் முதல்வரான ஸ்ரீமான் ப. சம்பந்த முதலியார் அவர்கள், முன்பு புராண, சரித்திர சம்பந்தமான நாடகங்களில் தம் திறனை விளக்கினது போல, ஜன ஸமூக நாடகங்களிலும் அவ்வாறே செய்திருப்பது, தமிழர் அனைவர்க்கும் மகிழ்ச்சி தரும். அவருடைய நாடகங்கள் வசன நடையில் எழுதியிருப்பது, வாழ்க்கை மொழியை யொட்டியும், யாவரும் வாசித்தறியக் கூடியதுமாயிருக்கிறது. வாசிப்பவரது மனதைக் கவர்ந்து நீதி புகட்டி, இன்பந்தரும், முதலியாரின் நாடகங்கள், பல'கற்பனைக்கதைக'ளுக்குமேலானவையாய் விளங்குவது அவருடைய கல்வியின் திறனைத் தெரிவிக்கும். தமிழர் அனைவரும் ப. சம்பந்த முதலியாரவர்கள் நாடகங்களை வாசிப்பின், சிறந்த நாடகம் எத்தன்மையது என்பதை நன்கு அறிவர். இப்புத்தகமும் இவ்வாசிரிய ரியற்றிய மற்றைய நூல்களும், வேறு தமிழ் நூல்களும், மயிலாப்பூர் "விவேக போதினி" ஆபீஸ் மானேஜருக் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

* * *



## மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

[ஸ்ரீமான் ஆ. வி. கஸ்தூரிரங்கய்யர் அவர்கள், பீ. ஏ., எல். டி.,]

### S. S. L. C. Public Examination, 1911

II. Write a short account on (any two of) the following :—

(*a*) The bamboo and its uses.

(*b*) Any work of public utility you have seen.

### (*a*) மூங்கிலும் அதன் உபயோகங்களும்

*மூங்கிலின் தன்மை—அதன் உறுப்புக்களின் உபயோகங்கள்—பிளவு மூங்கிலின் உபயோகங்கள்—நறுக்கு மூங்கிலின் உபயோகங்கள் — இலக்கிய விஷயம்.*

மூங்கில், உஷ்ணதேசங்களில் காணப்படும் புல்லினத்தைச் சேர்ந்த ஒரு பெரிய செடி. இது இரண்டு வகையாக வளரும். தனித்தனிக் கொத்துக்களாகச் சில விடங்களிலும், பெருங்காடுகளாகச் சில விடங்களிலும் இது காணப்படும்; சிற்சில காடுகளில் சிறு மூங்கில்கள் கீழ்ச் செடிகளாகவும் காணப்படும். இவ்வாறின்றிப் பெருங்காடுகளாக வளரும் இடங்களில், இதுவேறு செடிகொடிகள் வளர இடம் தாராது. வரண்ட மணற்பாங்கான இடங்களில் இது 10அடி உயரந்தான் வளரும்; ஆனால் மணல் கலந்த சதுப்பு நிலங்களில் சற்றேறக் குறைய 100 அடி வரையிலும் உயரும். கொத்தாக வளரும் மூங்கில்கள் தரையில் மறைந்துள்ள ஓரே அடிமரத்திலிருந்து தனித்தனிக் கம்புகளாக வெளிக்கிளம்பும். இக்கம்புகள் நீண்டும் உருண்டும் வரவரக் குவிந்தும்வரும். இவைகளில் இடைஇடையே கணுக்கள் காணப்படும். அடிக்கணுக்களில், வேர் தலைதூக்கி நிலத்தை எட்டாதிருக்கும்: மேற்கணுக்களிலிருந்து சிறு கிளை கிளம்பியிருக்கும். மூங்கிலின் வெளிப்புறம் ஒருவாறு அழுத்தமாயும் வழவழப்பாயும் காணப்படும்: உட்புறம் மெதுவாயும், சிற்சில வகைகளில் குழாயாகவும் இருக்கும். இள மூங்கில்கள் நேராகவும், முதிர்ந்தவை தலை தொங்கி வளைந்தும் இருக்கும். மூங்கிற்காடுகளில் காற்றின் வலிமையால் மூங்கில்கள் ஒன்றோடொன்று உரைந்துகொண்டு ஒருவித உருமல் ஒலியை உண்டாக்கும். இந்த உரைவின் அழுத்த மிகுந்தால், தேய்ப்பின் உஷ்ணத்தால் நெருப்பு உண்டாகி மூங்கிற்காடுகள் தீப்பற்றி எரியத் தொடங்கும். வண்டுகள் மூங்கில்களில் வட்டத்தொளைகள் இட்டுக்கொண்டு குழாய்ப் பாகங்களுள் குடியிருக்கும். இந்த வண்டுத்தொளைகள் பல அமைந்த மூங்கில்கள் உள்ள விடங்களில் காற்று வீசினால் காதுக்கினிமையான ஓசையுண்டாகும். இதிலிருந்துதான் புல்லாங்குழல் என்ற இன்னிசைக்கருவி, முதல் முதல் கண்டுபிடிக்கப் பட்டதென்பர் சிலர். 32 வருஷங்களுக்கு ஒரு தரம்தான் மூங்கில் பூவிடும். ஒரு தரம் பூ விட்டுவிட்டால் அதோடு மூங்கிலின் வளரும் ஆற்றல் குன்றிவிடும். அது மறுபடி சேர்ந்து பூ, விதைகள் முதலியவற்றில் முன் போலாவதற்கு 32 வருஷம் பிடிக்கும். [1900-ம் வருஷத்தில் மூங்கில்கள் பூத்தனவாம்.] இதன் இலைகள் சிறியவையாயிருக்கும்.

பலவிதத்தில், மூங்கில் உபயோகப்படுகின்றது. மூங்கில்களை வெட்டி எடுத்துச் செதுக்கி வேறு ஒருவித வேலையும் செய்யாமலே பல விஷயங்களில் உபயோகிக்கலாம். சிறு பந்தர்க்கால்கள், பந்தர்கள், விட்டுக்கு மேலிடும் குருக்குச் சட்டங்கள், தூக்கும்தண்டுகள், துணிகள் உலரப்போடும் கொடிகள், பலர் காணப் பாணம் விளக்கு முதலியவைகளைக் காட்டுவதற்கு வேண்டிய அடிக்கால்கள், இடைவெளியுள்ள வேலிகள், பாய்கொடி முதலியவைகளின் அடிமரம், ஈட்டிமுதலிய ஆயுதங்களின் கைப்பிடிகள், சிறு ஓடைகளின் மேல்கட்டும் பாலங்கள், ஏற்றத்தின் அவயவங்கள் முதலிவைகளுக்கு முழுமூங்கில்கள் உபயோகப்படும். இவைகளைச் சிறு வேலைகள் செய்ததன்பேரில், ஏணித்தண்டு முதலியவைகளுக்கு உபயோகப்படுத்தலாம். மூங்கிலின் சிறு கிளைகள் சவுக்குக்கைப்பிடி, ஊன்றுகோல், மாட்டடிக்குங்கோல் முதலியவைகளுக்கு உபயோகப்படும். முள்ளோடு கூடிய இச்சிறு மூங்கிலைக்கொண்டு காவல் மிகுந்துள்ள வேலிகளைத் தோட்டங்கள் முதலியவைகளைச் சுற்றிக் கட்டுவதுண்டு. மூங்கில் இலைகள், நெசவு, ஸாமான் கட்டுவது முதலியவைகளுக்கு உதவும். மூங்கிலின் குருத்துக்

கள் விதைகள் முதலியன உணவுப் பொருள்களாக உபயோகப்படும். மூங்கிலைக் கொண்டே வீடுகள் கட்டிக்கொள்ள முடியும். கெட்டி மூங்கில்களைக் கோல்களாக உபயோகப்படுத்தலாம்.

மூங்கிலைப் பிளந்து வேறு பல விதமாக உபயோகிக்கலாம். இரண்டு பிளவாகப் பிளந்துவிட்டால் அதன் கணுக்களைக் களைந்து அதைத் தண்ணீர் ஓடும் குழாய்களாக உபயோகப்படுத்தலாம். இம்மாதிரியே வாழைப் பட்டைகளையும் உபயோகப் படுத்துவதுண்டு. அவைகள் வாடிப்போகக் கூடியவைகளாதலால் அடிக்கடி அவைகளை மாற்றவேண்டும். இந்தத் தடை, மூங்கில்களை உபயோகிப்பதில் இல்லை. இந்த மூங்கிலையே நான்காகப் பிளந்து விட்டால், இவைகளைக்கொண்டு கொடிகள் படரவிடும் சிற்றிடைத் தட்டிகள் செய்யலாம். அவைகளைக் காக்கைகள் வரவொட்டாது முற்றங்கள்மேல் போடலாம். இன்னும் நுட்பமாக விருக்கும்படி மூங்கில்களைப் பிளந்துவிட்டால் பாய்கள் கூடைகள் முதலிய வீட்டிற்குபயோகமான வஸ்துக்களை அவைகளிலிருந்து முடையலாம். மூங்கிற் பாய்களில் நெருப்பு எளிதில் பிடிக்காது: நெருப்புப் பட்டவிடம் கருகிவிழுந்துவிடும்: நெருப்பு, பனை, தென்னை முதலியவைகளின் ஓலைகளில் பரவிப் பிடிப்பதுபோல இதில் பிடிக்காதாதலால் இவைகளைப் பந்தர்கள் கூரைக்காகவும் உபயோகப் படுத்தலாம். நறுக்கிய மூங்கில்களால் புல்லாங்குழலும், ஏணிப்படிகளும், வஸ்துக்கள் வைக்குங் குழாய்களும், ஊன்றுகோல்களும் உண்டாக்கலாம். நம்முள் ஒருவனுக்கு ஒரு மூங்கில் கொத்து, தென்னைமரம, வாழைமரம், எருமைமாடு ஆகிய இவை இருந்துவிட்டால் அவனுக்கு எப்போதும் வறுமை வாராது என்பது பழமொழியாக வழங்கிவருகிறது. இவ்வாறு மூங்கில்கள் மிக உபயோகமானவைகளில் ஒன்று.

இன்னும் இலக்கியங்களை நோக்குங்கால் மூங்கிலிலிருந்து உண்டாக்கப்படும் இன்னிசைக் கருவியான புல்லாங்குழல் சிறப்பும், நல்ல ஜாதி மூங்கில்களில் நல்முத்திருப்பதும் நன்கு வெளியாகும்.

(b) கண்டுள்ள பொதுநன்மை வேலைகள்

தண்ணீர் கொண்டு சேர்க்கும் வழிகள்

முகவுரை—பாகுபாடு—பாகுபாடுகள் விளக்கம்.

முன்னர் ஜனங்கள் சிறுசிறு கூட்டங்களாகக் கிராமங்களில் வாழ்ந்துவந்த காலங்களில் அவர்களுக்கு வேண்டுமான அளவு தண்ணீர் கிடைப்பதற்கு எளிதான வழிகளிருந்தன. ஒவ்வொரு கிராமத்திற்கு அருகாமையில் வெளிப்புறம் பொதுவாகக் குளங்கள் வெட்டப்பட்டிருக்கும். சற்றுப் பெரியகிராமங்களாக விருந்தால் நெருக்கமாகத் தெருக்களிலேயே கிணறுகள் வெட்டப்பட்டிருக்கும். சீரும் சிறப்பும் வாய்ந்தவர்கள் வீட்டில், கிணறுகளிருக்கும். தண்ணீர் எளிதில் கிடைக்கவேண்டும் என்ற கருத்துடனே செழிப்பான ஜனமடர்ந்த கிராமங்கள் எல்லாம் ஆற்றங்கரை யோரமாகவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்காலத்தன்மைக்கு ஏற்ப, பலர் கிராமங்களை விட்டு பெரிய பட்டணங்களில் வந்து கூடும்படியாகிறது. இவர்கள் எல்லோரும் ஒருங்குசேர்ந்து செய்யும் அசுத்தத்தால் பூமி கெட, அருகிலுள்ள கிணறு குளங்கள் எல்லாம் பூஸாரக் கெடுதியால் தாக்கப்பட்டுக் கொடிய நோய்களுக்குப் பிறப்பிடமாகிவிடும். மேலும் பட்டணங்களில் உள்ள வேலை ஒழுங்குக்கு ஏற்ப, ஜனங்கள் கிணறு முதலியவைகளுக்குப் போய்த் தண்ணீரெடுத்துவரமுடியாத நிலைகளிலிருப்பர். இவர்கள் எல்லோரும் நோயற்று இன்பமாக வாழுவதற்குத் தண்ணீர், பட்டணங்களுக்கு வெகுதூரம் வெளியிலும், இவர்கள் செய்யும் அசுத்தங்கள்சென்று தாக்கமுடியாத விடங்களிலிருந்தும் வரவேண்டும், இவர்களிருக்கும் இடத்திலேயே அது வந்து சேரவேண்டும் என்பவை இன்றியமையாதவை யாகின்றன. இதற்கிசைய, இக்காலத்தில் ஜனங்கள் நன்மைக்காகத் தண்ணீர் தரும் வழிகள் ஏற்பட்டுள்ளன.

இவ்வழிகள் இருவகையாகக் காணப்படுகின்றன. முதலாவது, பட்டணங்களுக்கு வெளியில் நடுத்தரமான தூரத்தில் உள்ள உயர்ந்த ஏரி முதலிய நீர் நிலைகளிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து சேர்ப்பது ஒரு



வழி. இரண்டாவது, பட்டணங்களுக்கு அருகாமையில் உயர்ந்நில்லாத ஏரி, ஆறு முதலிய நீர் நிலைகளிலிருந்து யந்திரங்கள் வழியாகத் தண்ணீர் ஏற்றிக்கொண்டு வருவது வேறு ஒரு வழி. இவ்விரண்டு வழிகளுக்கும் உதாரணமாக முறையே சென்னை மாநகரத்தில் தண்ணீர் கொண்டுசேர்க்கும் வழியையும், தஞ்சை அல்லது திருசிரபுரத்தில் தண்ணீர் கொண்டு சேர்க்கும் வழியையும் எடுத்துக் காட்டுவோம்.

சென்னை மாநகரத்து வடமேற்குப் புறத்தில், ஸுமார் 10 மைல் தூரத்திற்குள் உயர்ந்த மைதானத்தில் 12 மைல் சுற்றளவுள்ள பெரிய ஏரி ஒன்றுள்ளது. இதற்குச் செங்குன்ற ஏரி என்று பெயர். இதில் மழை ஜலத்தாலும், வடபுறம் வந்து பாயும் இரண்டு சிற்றாறுகளின் ஜலத்தாலும் ஸுமார் மூன்று வருஷம் சென்னைக்குப் போதுமான தண்ணீர் வந்து தங்கியிருப்பதுண்டு. இந்த ஏரி இல்லாமற்போனால் பட்டணமே பாழாகிவிடும் என்று கூறவும் வேண்டுமா? இதன் தென் புறத்திலும், கிழப்புறத்திலும் பெரிய கரைகள் எழுப்பப்பட்டு அவைகளின்மேல் உலாவும் வழி ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. இதன் கிழக்கரையின் வடஓரத்தில் பெரிய மதகொன்று உண்டு. இதன் வழி மிகுதியாகச் சேரும் தண்ணீர், வெளிப்பாயத் தோடலாம். இக்கிழக்கரை தென் ஓரத்தில் சிலவருஷங்களுக்கு முன் பட்டணத்திற்குத் தண்ணீர் கொண்டுவந்த பெரியகுழாய் காணப்படும். இது தண்ணீருக்கு அடியில் சுரங்கத்துள் கொண்டுபோகப்பட்டுக் கரையிலிருந்து ஸுமார் 30 அடிக்குள்ளே கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் வைக்கப்பட்டு, அதில் உள்ள யந்திரங்களால் அடைத்துத் திறக்கக் கூடிய நிலையில் உள்ளது. இதில் நாம் போய் யந்திரங்களைப் பார்க்கலாம். இவை ஏரியிலுள்ள தண்ணீர் மட்டத்திற்கேற்பத் தண்ணீர் வெளியேபோகும் அளவை ஒழுங்குபடுத்திவிட ஏற்பட்டவை. இப்பொழுது தண்ணீர் வரும் வழி இந்த ஏரியில் தென்கரை மேற்கு ஓரத்தில் உள்ளது. இது பெரிய திறந்த தொட்டிபோலக் கட்டப்பட்டுள்ளது. இதில் மூன்று மட்டத்தில் குழாய்கள் அமைக்கப்பட்டு ஏரியுடன் சேர்க்கப்பட்டுள்ளன. இதிலிருந்து பட்டணத்தின் பக்கம் குழாய் ஒன்று வெளிப்பட்டு வாய்க்கால் வழி தண்ணீரை ஓடச்செய்கிறது. ஏரியிலுள்ள தண்ணீர் மட்டத்தின் ஏற்றத் தாழ்விற்கேற்ப, மேல் அல்லது கீழ்க்குழாய்கள் அருகிலுள்ள யந்திரங்களால் திறக்கப் பட்டிருக்கும். கோடைகாலங்களில் அடிக்குழாய் வழிகூடத் தண்ணீர் தொட்டிக்கு வரக்கூடாத நிலையை அடைந்து விட்டால், அருகிலுள்ள நீராவி யந்திரங்களால் தண்ணீர், தொட்டிக்குள் ஏற்றப்பட்டு வாய்க்கால் வழியேபோகும் தண்ணீர் அளவு குன்றுதிருக்கும்படி செய்யப்படும். இப்படி வாய்க்கால் வழி வெளிப்படும் தண்ணீரின் நிலமட்டம் அதிகக்குறைவு அடையாமலிருக்கும்வரை வாய்க்காலிலேயே வந்து, பின்னர் பட்டணத்துக்கு ஸுமார் 2 மைல் தூரத்திலுள்ள குழாயுள் பாயும்; பின்னர், தான் புறப்பட்ட உயர்ந்த நிலமட்டத்திலிருந்து வரும் வேகத்தால் பட்டணம் எல்லாம் பரவி வீடுகள் தோறும் தண்ணீர் குழாயுள்ளேயே. வந்து பாயும், பட்டணத்தில் சில மேடான பாகங்களில் தண்ணீர் விழும் வேகம் குறைந்திருந்ததால் இப்பொழுது மேல் புறமுள்ள கீழ்ப்பாகத்தில் தண்ணீரை மிக விரைவாய்க் குழாயுள் செலுத்தும் யந்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ள. இதனால் தண்ணீர் இப்பொழுது பட்டணம் முழுவதும் விரைவாக வருகின்றது.

தஞ்சை, திருசிரபுரம் முதலிய இடங்களில் அருகாமையிலுள்ள வெண்ணாறு, காவேரி இவைகளில் தண்ணீர் ஏற்றும் யந்திரத்தால் தண்ணீர் குழாய்களுள் ஏற்றிச் செலுத்தப்பட்டு வீடுகள்தோறும் பாயும்படி செய்யப்பட்டுள்ளது. இவ்வழியில் யந்திரம் வேலை செய்துகொண்டிருக்கும் வரையில்தான் குழாய்களில் தண்ணீர், வந்து கொண்டிருக்கும். முன் காட்டிய இயற்கையில் உயர்ந்த நிலமட்டத்திலிருந்து, அதே உயரத்திலிருந்து குழாய்களுள் தண்ணீர் ஏற்றும் ஆற்றலுடைய நீர் நிலைகளை உதவியாகக் கொண்ட வழியில் தண்ணீர் ஓயாது எப்பொழுதும் வந்துகொண்டிருக்கும். இவ்வழி அமைக்க முடியா விடங்களில், ஆலை இல்லா

(இதன் தொடர்ச்சி 231-ம் பக்கம் பார்க்க.)

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### 1. யயாதி சரித்திரம்

### (ii) அரசாட்சிச் சருக்கம்

யயாதி தன் கடைக்குட்டியான பூருவிடமிருந்து, இளமையைப் பெற்று மிகுந்த மனக்கிளர்ச்சியுடன் அரசுபுரியத் தொடங்கினான். தெய்வயானைக்கும் சர்மிஷ்டைக்கும் முன்னிருந்ததைவிடப் பல மடங்கு நெருங்கிய அன்பும் ஆதரவும் உண்டாக, இருவரும் தமது பிள்ளைகளை ஸமமாகப் பாவித்து நடந்துகொண்டு அரசனுக்கு ஒருவிதத் துயரத்தையும் உண்டாக்காது இணங்கி வாழ்ந்துவந்தனர். யயாதி தன் நாட்டை மனுநெறி வழுவாது பார்த்துக்கொண்டு வந்தபோதிலுங்கூட, சர்மிஷ்டை தெய்வயானை இவர்களோடு பலவித போகஸுகங்களையும் விடாது அனுபவித்துக்கொண்டும் வந்தான். இவன், தன் வரவுக்கு மிஞ்சியே, தான தர்மங்கள் செய்து, எல்லோராலும் புகழப்பட்டும் வந்தான். இப்படி இருக்கையில், இவனுக்குச் சர்மிஷ்டையிடம் ருஷிகள் தபோபலச் சிறப்பால் மாதவி என்ற பெண் ஒருத்தி பிறந்தாள். பிறவிச் சிறப்பால் இவளுக்கு ஒரு பிள்ளை பிறந்ததும் இவள் இஷ்டப்படி கந்யகாப்பருவம் அடைந்து, அப்படி நான்கு தடவை அதை மாற்றும் திறன் இவளுக்கு ஏற்பட்டுவிட்டது.

இவ்வாறு, யயாதி தங்கு தடையின்றி தன் வாழ் நாள்களை எல்லாம் அரசாட்சி, தான தர்மம், விஷய ஸுகம் இவைகளில் சாஸ்திர வரம்பு மீறாது தன் வருவாய் வரம்பு மீறி மூழ்கிக்கொண்டு வருகையில் ஒரு நாள் அவன் ஸபைக்குக் கருட பகவான், காலவர் என்ற ஒரு ரிஷியை அழைத்துக்கொண்டு வந்து நின்றார். அவர்களைக் கண்டதும் யயாதி எழுந்து சாஸ்திர விதிப்படி அவர்களை வரவேற்று, வந்த காரியத்தை ஒளிக்காது கூறிவிடவேண்டும் என்று மன்றாடிப் பிரார்த்தித்தான்.

கருடன் கூறலுற்றார்:—"இதோ என்னுடன் வந்திருப்பவர் காலவர் என்ற ருஷி, இவர் வெகு காலம் விச்வாமித்ரரிடம் குருகுலவாஸம் செய்து ப்ரஹ்மசரியம் அனுஷ்டித்தவர். முடிவில் இவரது ஏழைத்தன்மையைக் கண்ட குரு, தக்ஷிணை ஒன்றும் குறிக்காது இவரை விலகச் சொன்னார். குரு எண்ணத்திற்கு மாறாக இந்த நல்ல விஷயத்தில் பிடிவாதம்பிடித்து இவர் 'ஏதாவது தக்ஷிணை ஏற்காமலிருக்கலாது யான் கடைத்தேற' என்று வெகுவாக மன்றாடினார். ஆனால் குருவுக்குக் கோபம் வந்து, 'கொண்டுவா 800 குதிரைகள், எல்லாம் வெளுப்பு, ஒரு காது கறுப்பாக, குருதக்ஷிணைக்கு' என்று கேட்டுவிட்டார். 'அப்படியே ஆகட்டும்' என்று ஒப்புக்கொண்டு இவர் எங்கும் தேடிப்பார்த்தார். முயற்சி வீணானது கண்டு, என் உதவியின் பேரில் எல்லா உலகும் தேடிப்பார்த்து விட்டார். எங்கும் இக்குதிரைகளைக் காணமற்போனதும், குரு வாக்கியப்படி நடக்கமுடியவில்லையே! என்ற ஏக்கத்துடன் உன்னிடம் வந்து ஏதாவது உதவிபெறக் காத்திருக்கிறார். காரியம் நல்லது, வாங்குபவர் ருஷி, நீயும் பெரிய கொடையாளி. இத்தருணந்தப்பினால் தானத்துக்கு வேறு நற்றருணம் வாய்ப்பது எப்பொழுதோ! குதிரைகளையாவது கொடு இவருக்கு; அல்லது அவையிருக்கும் இடத்தைச்சொல்லி அவைகளை அடைவதற்கு வேண்டிய பொருள், ஆள்முதலிய உதவிகளையாவதுசெய்" என்று ருஷி காரியத்தைக் கருடபகவான் யயாதிக்கு நன்கு வெளியிட்டார்.

அதற்கு யயாதி, 'மஹாத்மாக்களே! முன்போல எனக்குத் தங்கு தடையின்றிக் கொடுக்கச் செல்வம் போதாது; குன்றிவிட்டது. ஆயினும், ஆவலுடன் எதிர்பார்த்து வந்தவரைத் திருப்திசெய்யாது போக்கச் சொல்லமனமும் வரவில்லை. ஆதலால் கூடிய வரையில் உம்மைத் திருப்திப்படுத்தப் பார்க்கிறேன். நீர் கேட்கும் மாதிரியான குதிரை என்னிடம் இல்லை; இருக்கிற இடமும் எனக்குத் தெரியாது. ஆனால் எனக்கு யாதவி என்ற பெண் ஒருத்தியுண்டு. அவளைத் தருகிறேன் உமக்கு. இவளை நீர் யாருக்காவது கந்யாதானம்செய்து, பதிலாகவரும் கந்யாசுல்கங்களைக்கொண்டு உமது குரு தக்ஷிணைக் கடனைத் தீர்த்துக்கொள்ளும். அவள் வழி எனக்கு ஒரு பேரன் மாத்திரம் உண்டாகவேண்டியது அவசியம். அதற்கு வேண்டிய அநுக்ரஹத்தைச் செய்யும். அவள் அழகைக்கண்டு அரசர்கள் தமது ராஜ்யத்தையே உமக்கு ஈடாகக் கொடுத்து விடுவர். நீர் கேட்கும் குதிரைகள் அவர்களிடமிருந்தால் தானாய்க் கொடுக்கமாட்டார்கள். இவளைக்கொண்டு விரைவில்போய், குருதக்ஷிணை கொடுக்க முயற்சிகள் செய்யும்" என்று மிகுந்த ஆவலுடன் கூறித் தன் பெண் மாதவியைக் காலவருஷியிடம் பெருங்கொடையாளியான யயாதி, அடைக்கலமாக ஒப்புவித்தான்.



அவரை போட்டால், துவரை முளைக்குமா? யயாதி பெண், ருஷியின் காரியத்தை உணர்ந்து அவருடன் இணங்கிப் புறப்பட்டாள். அருகாமையில் அரசுபுரிந்து வந்த ஹரியச்வ ராஜனுக்கு மாதவியைத் தானம் செய்து பார்க்கலாம் என்று காலவர், கருடனுக்குச் செலவு கொடுத்துவிட்டு, அவன் ஆண்டுவந்த அயோத்தியா பட்டணம் சென்றார். அவனிடம் விசாரித்ததில் 200 குதிரைகள்தான் காலவர் கேட்டபடி இருந்தனவென்றும், அவனுக்குப் பிள்ளையில்லாக் குறைக்காகப் புது மணம் முடிக்க ஆவல்தான் என்றும் தெரியவந்தது. காலவருக்கு வேண்டியதோ 800 குதிரைகள். இருக்கிற பெண்ணோ மாதவி ஒருத்திதான். 200 குதிரைகளை ஏற்று, இவளைக் கொடுத்துவிட்டால், மேல் என்னசெய்வது என்ற ஏக்கம் வந்துவிட்டது காலவருக்கு. யயாதி பெண்ணுக்கு உதார குணம் எங்கே போகும்! காலவரை நோக்கி 'பிதாவே! நான்கு முறை பிள்ளைபெற்றதும் எனக்குக் கந்யகையாகும் திறனும், அவ்வாறு ஆகாமலிருக்கும் திறனும் உண்டு. உமது குரு கார்யத்தில் இதை உபயோகப்படுத்தி என் தகப்பனார் தானத்தை முடிக்கிறேன். இவ்வரசனுக்கு என்னைக்கொடுத்து ஒரு பிள்ளை உண்டானதும் என்னையும் உமக்கு வேண்டிய 200 குதிரைகளுடன் திருப்பிக் கொடுத்து விடவேண்டும்' என்று பேசிக்கொள்ளும். இப்படி நான்கு தடவைகளில் உமக்கு வேண்டிய குதிரைகள் அகப்பட்டு விடலாம்' என்று வழி சொல்லிக் கொடுத்தாள். காலவரும் அப்படியே செய்தார். கொஞ்ச காலத்தில் மாதவிக்கு ஹரியச்வனிடம் வஸுமனஸ் என்ற பிள்ளை பிறந்தான். உடனே காலவர் வந்து கந்யகையான மாதவியையும் 200 குதிரைகளையும் பெற்றுப்போனார். இவ்வாறு காலவர், முறையே காசிராஜனான திவோதாஸனுக்கு இவளைக் கொடுத்து ப்ரதர்த்தனன் என்ற பிள்ளை உண்டாகும்படி செய்ததும், பின்னர் கந்யகையான மாதவியை போஜர்கள் அதிபதியான உசீநரனுக்குக் கொடுத்து அவனுக்கு சிபி என்ற பிள்ளை உண்டாகும்படி செய்ததும் 200, 200 குதிரைகளையும் மாதவியைக் கந்யகையாயும் பெற்றார். ஆக 600 குதிரைகள் சேர்ந்ததும் கருடனைச் சென்று கண்டார் காலவர்.

கருடன் காலவருக்கு இந்தக் குதிரைகள் முதலில் ஆயிரம், விச்வாமித்ரர் தமக்கையை ரிசீகர் மணந்தகாலத்தில் வரவழைத்தார் என்றும், அவைகளுள் 400 வந்த வழியே தீர்த்தத்தில் மறைந்தன என்றும், ஆதலால் மேல் 200 அகப்படாது என்றும் எச்சரிக்கை செய்தான். காலவர், தம் காரியம் முடியாது தத்தளிப்பதைக் கண்டு அவர்மேல் கருணை கூர்ந்து கருடன் 'நீர் மாதவியை விச்வாமித்ரருக்கே கன்யகாதானம் செய்து கொடுத்து முன்னர் அரசர்கள் செய்தது போல ஒரு பிள்ளை அடைந்ததும் 200 குதிரைகளுக்கு ஸமமாகக்கொண்டு குருதக்ஷிணையை முற்றும் நீ கொடுத்துவிட்டதாக மதிக்கச் செய்யும்' என்று யுக்தி சொல்லிக் கொடுத்தான். உடனே கருடனுக்கு வந்தனம் செய்தனுப்பிவிட்டு, காலவர் விச்வாமித்ரரான தமது குருவை அணுகி கருடன் கூறிய ஏற்பாட்டை விண்ணப்பம் செய்துகொண்டார். அதற்கு விச்வாமித்ரர், 'நான் வேண்டாம் குருதக்ஷிணை என்றால் கேட்டாயா? குருதக்ஷிணை கொடுப்பது நற்காரியமாயினும், அதில் குருவாக்கியத்திற்குமாறாக ப்ரஹ்மசாரியாகிய நீ பிடிவாதம் பிடித்தபடியால் இப்பாடு படும்படி நேர்ந்தது. இப்பொழுதும் என் கடனை ஸரிவரத் தீர்க்கவில்லையென்று நான் மன்றாடலாம். ஆனால் இவ்விஷயத்தில் நீ மிக நொந்துபோய் விட்டபடியால், நல்ல விஷயங்களிலும் வீண் பிடிவாதமாகாது. ஆய்ந்து ஓய்ந்து பாராது உறுதியாக விருக்கக்கூடாது என்று நன்றாகக்

கண்டிருப்பாய். ஆதலால் நீ கூறும் ஏற்பாட்டிற்கு இசைந்து மாதவியை என் மனைவியாக ஒப்புக்கொள்ளுகிறேன்' என்று கூறி இரங்கினர். அவருக்கு மாதவியிடம் அஷ்டகன் என்ற பிள்ளை பிறந்தான். உடனே முன் ஏற்பாட்டின்படி காலவர் கந்யகையாக ஏற்பட்ட மாதவியை யயாதியிடம் கொண்டு வந்து ஒப்புவித்துத் தாம் குருதக்ஷிணைக் கடன் நீக்கிக் கொண்டதோடுகூட, யயாதிக்கு நான்கு பேரப்பிள்ளைகளையும் அளித்து அவன் பெண்ணைக் கந்யகையாகவும் அவனிடம் முன்னிலையிலே திருப்பிவிட்டார்.

யயாதி பேரர்களுள் அஷ்டகன் ஸத்கர்மானுஷ்டானபரன்; ப்ரதர்த்தனன் சிறந்த போர் வீரன்; வஸுமனஸ் பெரிய கொடையாளி; சிபி சிறந்த தர்மாத்மா, ஸத்யஸந்தன். இவர்களுள் அஷ்டகன் செய்த யாகத்திற்கு மற்றவர்கள் வந்திருக்கையில் நாரதர் வந்து இவர்கள் கொடைச் சிறப்பை வரையறுத்தார். அதில் முறையே அஷ்டகன், ப்ரதர்த்தனன், வஸுமனஸ், சிபி என்பவருள் முன்னவனைவிடப் பின்னவன் ஏற்றமென்றும் சிபியின் தர்மப்பிடிப்பிற்கு ஈடு ஒருவரிடமும் இல்லையென்றும் புகழ்ந்து பேசினர். இந்தச் சிபிதான், அக்னியும் இந்திரனும் புறா வல்லூறுகளாக ஒருவர்பின் ஒருவர் துறத்திவருகையில், புறாவுக்காக, தன் சதையை அறுத்து அறுத்துக்கொடுத்து, முடிவில் தன் தேஹத்தையே வல்லூற்றிற்கு அர்ப்பணம் செய்து மாறாச்சிறப்புப் பெற்றான். நாரதர் இவன் சிறப்பை எடுத்துரைத்து மற்றைய பேரப்பிள்ளைகளில் இவனே சிறந்தவன் என்று கூறுங்கால், சிபி இவ்வாறு ப்ரஹ்மாவையே ப்ராஹ்மணரூபத்தில் அதிதியாகப் பெற்று அவர் ஆடிய கோலத்திற்கு எல்லாம் இணங்கி, முடிவில் தன் பிள்ளைக்கறியையும் அவர் இஷ்டப்படி தயார்செய்து அவர் உத்தரவுப்படி தானே அதை உண்ண முயன்று தன் தர்மப் பிடிப்பைக் கஷ்ட ஸமயங்களிலும் விடாது இருந்தான் என்று வெளியிட்டார். இந்தச் சிபியின் சிறப்பு மேல் அடுத்த சருக்கத்திலும் வரப்போகிறது. இவ்வாறு ருஷி அநுக்ரஹப்படி, மாதவி நான்கு சிறந்த ராஜ வம்சங்களுக்கு ஆதாரமானள்.

சிறு பெண்ணாக வந்த மாதவிக்கு யயாதி ஸ்வயம்வர வழி மணம் முடித்து வைக்க அவளை ஒரு தேரில் அலங்கரித்து ஏற்றி வைத்துக்கொண்டு பூரு, யது முதலிய தமயன்மார்களால் சூழப்பெற்றுக் காடுகளிலுள்ள ஆச்ரமங்களுக்கு எல்லாம் அழைத்துச் சென்றான். எங்கு பார்த்தும் மாதவி தனக்கு இசைந்த கணவன் இல்லாதது கண்டு, முன்னுள்ள மூப்புப் பருவத்தை ஏற்று, காட்டையே கணவனாகக் கொண்டு மான்போல உலாவிக் கொண்டு ப்ரஹ்மசரிய விருதத்தை அனுஷ்டிக்கத் தொடங்கினள். நான்கு பெரிய குலத்தைத் தலைதூக்கிவிட்ட பெண்ணைத் தடுக்காது அவள் நற்கதியடைய இடம் கொடுத்துவிட்டு, யயாதி ஊர் வந்தான்.

'இவ்வளவு காலம் ஸுகங்கள், ராஜ்ய வேலைகள், இவைகளை ஏற்று வந்தும் யயாதிக்கு யௌவனத்தில் போதும் என்ற திருப்தியே வரவில்லை. மேலும் மேலும் தொடர்ந்து ஸுகங்களை அனுபவித்து ராஜ்யவேலைகளை மிகக்கவனமாகவே முன்போலப் பார்த்துவந்தான். ஆனல் மாதவி உலகை வெறுத்து நல்வழி நடக்க முயன்ற உடன், தன் கடைக்குட்டியான பூருவின் நிலை அவன் மனதில் ஒருவாறு பட்டது. தான் உலகம் இவ்வளவு இன்பமுடையது என்று நினைத்து ஓயாது அதில் கிழவனாயும் மூழ்கி ஸுகிக்கும் சிறுமையும், உலகை வெறுத்து மோக்ஷ வழியை நன்கு மதித்து விலகிய மாதவியின் பெருமையும், இவைகளுக்கு எல்லாம் மேலாகத் தன் கண்முன்னேயே ராஜ்யஸுக நுட்பங்களுக்கு இடையில் ஒன்றையும் ஒரு பொருட்டாக மதியாது தகப்பனுக்கு உதவுவதே பிள்ளையின் உத்ஸாஹமான தர்மமென்ற ஸன்மார்க்கத்தைக் கடைப்பிடித்து இளமையிலேயே மூப்பின் கஷ்டங்களை ஒரு பொருட்டாகக் கருதாது ஏற்று நிற்கும் ஸம்ஸார வைராகியான பூருவின் மனோதிடமும், ஒருங்கே யயாதி மனதில் பதிந்தன. தன் ஆசை குன்றா நிலையைக்கண்டு வெட்கினன்; மனம் சுத்தப்பட்டது. 'ஆசைக் கோரளவில்லை; யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் (திகட்ட ஸுகமனுபவிப்பதும்) உறங்குவதும் (களைத்துப்போய்



ஓய்ந்து ஒன்றும் தெரியாதிருப்பதும்) ஆக முடியும் என்று ஆசையின் பயனற்ற தன்மை உணராது, அது கோரும் விஷயத்தை எவ்வளவுதான் கொடுத்தாலும், ஓய்ந்து திருப்தி ஏற்படாது, நெய்யால் நெருப்பு கொழுந்து விட்டெரிவது போல, ஆசைவஸ்துக்களை முனைந்து நாடிச் சேர்க்கச் சேர்க்க அது ஓங்கி நம்மை வருத்தும். இந்த ஆசை ஓய்ந்தால்தான் ஸுகம்; இது உணராது எவ்வளவு கிழவனாக ஒருவன் இருப்பினும், அவன் உடலுக்கு மூப்பே ஒழிய அவன் ஆசை நிறைந்த உள்ளத்தின் இளமை மாறாதுதானிருக்கும். நிராசையே பரமஸுகம், ஆசை பரமதுக்கம். மாதவி பூருக்களுக்குப் பூர்வஜன்ம பக்குவத்தாலேயே இந்த ஆசை அமைதி ஏற்பட்டுவிட்டபடியால் முறையே உலகவெறுப்பும் ஸுகமித்தியில் கஷ்டங்களுக்கிடையில் மாறா மனஸ்ஸமாதானமும் ஏற்பட்டன. இதுவரை பூரு என் முன்னிருந்தும், இவற்றைக்கவனியாது வாணாளை வீணாக்கினேன். இனியாவது புத்தியுடன் இவ்வுலகில் பிழைக்கவேண்டும்' என்ற நிஜவைராக்ய எண்ணங்கள் யயாதி மனதில் தலைதூக்கின. இதுவரையில் இவன் தர்மவழி தவறாது நடந்துவந்தபடியால் அவன் பேராசை இந்த நிஜவைராக்யத்தின் முன் நிற்கமுடியாமல் பறந்தோடிச் சிதறியது. இந்தச் சாஸ்திரீய நிஜவைராக்யம் இயற்கையாக யயாதிக்குத் தோற்றியதும் தாமதியாது தன் இஷ்டப்படி ஜனங்கள் ஸம்மதித்ததின்பேரில் இளையவனாயினும் பூருவுக்கே ராஜ்யம் கொடுப்பதாகத் தீர்மானித்து, அவன் மூப்பை ஏற்று தன் இளமையை அவனிடம் கொடுத்தான். பூருவின் சிறப்புக்காகப் பலவித ஆசீர்வாதங்கள் செய்து ராஜ்யத்தைப் பூருவுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தான். பின்னர், வானப்ரஸ்தாச்ரமம் ஏற்று வனம் சென்று, அதைத் தவறாது அனுஷ்டித்து வந்தான்.

---

(229-ம் பக்கத்தொடர்ச்சி)

ஆறுக்கு இலுப்பைப்பூ சர்க்கரை என்பதற்கிசைய இரண்டாவதான தண்ணீர் ஏற்றிச் செலுத்தும் வழியாவது பின்பற்றப்படல் வேண்டும்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### வேடனும் யோகியும்

[ஸ்ரீமதி "கிருஷ்ண குமாரி"]

மரங்களடர்ந்த ஒரு காட்டின் நடுவில், முற்றும் துறந்த யோகி ஒருவர் விசாலமான கிளைகளையுடைய ஒரு மரத்தடியில் பகவானைத் தியானித்தவண்ணம் வெகு நேரம் நிஷ்டையிலிருந்தார். அச்சமயம், திடீரெனப் பறவை யொன்று அம்பாலடிக்கப்பட்டு, உயிரிழந்ததாய், மரத்திலிருந்து அவர் காலடியில் விழுந்தது. அச்சப்தத்தின் அதிர்ச்சியால், அந்த யோகி நிஷ்டை கலைந்து தம் கண்களைத் திறந்து பார்த்தார். அப்பொழுது, தன் அம்பாலடிக்கப்பட்ட பறவையைத் தேடிக்கொண்டு வந்த வேடனொருவன், அது உயிரிழந்து யோகியின் காலடியில் விழுந்து கிடப்பதையும், அவர் தன்னை எரித்து விடுபவர்போல் கோபத்துடன் நோக்குவதையும் கண்டு திகிலடைந்தவனாய், அவர் கால்களில் உடனே விழுந்து, "ஸ்வாமி! தங்களுடைய நிஷ்டையைக் கலைத்ததற்காக என்னை மன்னிக்கவேண்டும். நான் மிருகங்களைக் கொன்று ஜீவிக்கின்றவன்; தங்களெதிரில் வரத் தகுந்தவனல்லன். இம்மரத்திலிருந்த பறவையைக் கொல்லுவதிலேயே நான் ஊக்கமாயிருந்ததால், வேறொன்றும் என் கண்களுக்குப் புலப்படாமற் போயிற்று. ஆகவே இதைக் கொல்ல வேண்டியதாயிற்று. அது என் ஜாதி தர்மம். ஆகவே, இத்திவ்ய ப்ரதேசத்தை அசுத்தமாக்கியதற்காகத் தாங்கள் என் மீது கோபித்துக் கொள்ளக்கூடாது. என்னை மன்னிக்கவேண்டும்" என்று அவரை வேண்டினன்.

இப்படி அவன் வேண்டியதும், அந்த யோகி மிருந்தகோபத்துடன் அவனைநோக்கி "சமாதியிலிருந்து என்னை நீ கலைத்தாய்; உயிரற்ற ஜீவனொன்றை என்மேல் உன் கொடிய செயலால் விழ்த்தினய்; மேலும், இப்பிரதேசத்தை அசுத்தமாக்கினய்; இவற்றிற்காக நான் உன்னைச் சபிக்கக்கூடும்" என்றார்.

இதைக்கேட்ட வேடன், இடியுற்ற பாம்பு போல் நடுங்கு "ஸ்வாமி! தாங்கள் அப்படிச் செய்யக்கூடாது" என்று மீண்டும் வேண்டினான். "நான் எங்கு சென்றாலும் தாங்கள் என்னைத் தொடரக்கூடுமென்பதை யறிவேன். ஆகையால், என் ஐயனே! ஏழை மீது கோபியாதிரும்; தங்கள் சக்தியின் முன், நான் ஒரு துரும்பல்லவோ! அறியாமற் செய்த இவ்வபராதத்திற்காகத் தாங்கள் என்னை எதைச் செய்யென்றாலும், அதை உடனே செய்வேன். என்னுடைய மனைவிக்கும், குழந்தைகளுக்கும் என்னையன்றி நாதன் கிடையாது. அவர்களுக்காகவாவது, தாங்கள் என்னை ரக்ஷிக்கவேண்டும். இனி நான் இவ்வழி ஒருபோதும் வரத் துணியேன்" என்று மேலுங் கெஞ்சினான்.

இதைக் கேட்டதும், அந்த யோகி வெகு கடுமையாகப் பார்த்து, "என் கட்டளையொன்றை நீ செய்து முடிப்பாயானால், நான் உன்னை மன்னிக்கக்கூடும். இக்காட்டினூடே போ; என் சிறுவனொருவன் எவ்வளவுதரம் நான் கூப்பிட்டும் என்னிடம் வரேனென்கிறான். அவனைக் கண்டுபிடித்தழைத்துவா. அவனுக்காக நான் எவ்வளவோ ஆவலாய்க் காத்திருந்தும் அவன் என்னிடம் வாராமல், சிலசமயம் சமீபத்திலும், சில சமயம் தூரத்திலுமாக, சஞ்சல புத்தியுடையவனாய் எப்பொழுதும் திரிந்துகொண்டிருக்கிறான். போ; அவனைக்கண்டுபிடித்து என்னிடம் கொண்டுவா. அவன் பெயர் கிருஷ்ணன். இப்பெயரைச் சொல்லிக் கூப்பிடுவையேல், அவன் உன்னிடம் வருவான். அப்பொழுது தான் நீ உனக்கேற்பட்டிருக்கும் தண்டனையினின்றும் விடுபட்டு மீண்டும் உன் வீடு போய்ச் சேருவாய்" என உத்தரவிட்டார்.

வேடன் "கிருஷ்ணா, கிருஷ்ணா" என மெதுவாய் இருமுறை கூறி, "ஸ்வாமி அவன் உருவம் எத்தன்மையது? அதைத் தாங்கள் சொல்லவேண்டும். இக்காட்டில் அவன் இருப்பானேயாகில், நான் இரவும் பகலுமாகத் தேடி அழைத்து வருவேன்" என்று வணக்கத்துடன் கேட்டான்.

இதைக்கேட்ட யோகி; மெதுவாய்ப் புன்னகையுடன் "அச்சிறுவன் மிகுந்த அழகும், கம்பீரமும், பீதாம்பர உடையும், மேகவர்ணமும், சிகபிஞ்சமுங்கொண்டு விளங்குபவன்; கையில் புல்லாங்குழலொன்றுண்டு. அவன் அதை வாசிக்கும்போது அதன் இனிமைக்கு, கல்லும் மரமும் எவையும் உருகிப் பரவசமாகும். இச்சிறுவனை நீ என்னிடம் அழைத்துவா. அவனைக் கண்டுபிடிக்கும் பாக்கியம் உன்னதானால், என் கோபம் தானேயொழியும்; உன்னை என்றும் வாயாற என் வாய், தானே வாழ்த்தும்" என்று திருவாய் மலர்ந்தார்.

இதைக் கேட்டவுடன், வேடன் மிகுந்த ஆநந்தங் கொண்டவனாய்க் "கிருஷ்ணா, கிருஷ்ணா" என்று கூவிக்கொண்டே அக்காட்டினுள் சென்றான். அந்த யோகியும், அதன் எதிரொலி வரவர மெதுவாய் அடங்குமட்டும், தன் உதடுகளில் புன்னகை தவழக் கேட்டுக்கொண்டேயிருந்தார். இவ்விதமாய் மூன்று நாட்களும் சென்றன. நாலாநாட்காலையில் வேடன், களைப்பும் வியசனமும் மேலிட்டவனாய் யோகியின் முன்பு தோன்றினான்.

"ஓ தபோதனரே! நான் 'கிருஷ்ணா கிருஷ்ணா'வென்று கூப்பிடுந்தோறும், அச்சிறுவன் ஒரு ஜோதிபோல் என் கண்முன் தோன்றி மீண்டும் மறைந்து போகிறான். எவ்வளவோ தடவை நான் கூப்பிடுவதற்குப் பதிலுரைப்பதுபோல, வெகு தூரத்தில் அவனுடைய புல்லாங்குழலின் இனிய சங்கீதம் என் காதுகளிலும் விழுகின்றது. அது வருமிடம் நோக்கி நான் எப்பொழுது சென்றாலும், என்னையனே! அங்கு அவனைக் காண்கிறேனில்லை. வெகு தூரத்தில், மீண்டும் எனக்கு அச்சங்கீதம் கேட்கின்றது. மீண்டும் நான் அவனதாபரணங்களின் ஒலியைக் கேட்கின்றேன். ஆயினும் அவன், அந்தோ! சில சமயம் என் கண்களிற் படாமலும், சில சமயம் நான் பிடிக்க முடியாமலும் ஓடிப் போய்விடுகிறான். ஒரு தடவை—ஒரே ஒரு தடவை, யோகியே, அவன் கண்களை நான் கண்டேன். ஆ! அதிசயிக்கத்தக்க விதமான கண்களாய் அவைகள் காணப்பட்டன. மீண்டுமொரு முறை அக்கண்ணொளியைக் காண நான் அவனைத் தொடரத்தான் வேண்டுமென எனக்குத் தோன்றியது. அதிசயிக்கத்தக்க



அச்சிறுவனைக் காணாமல் தாம் வருந்துவதும் அவனைத் தம்முடன் வைத்துக் கொள்ள விரும்புவதும் ஆச்சரியமல்ல! ஆனால் நான் மிகவும் களைத்தவனாய்த் தம்மை மீண்டும் சரணமடைகின்றேன். அச்சிறுவன் என்னருகில் வரேனென்கிறான். இனி என்னால் அவனைத் தம் சமீபம் கொண்டுவர முடியாது. யோகியே, தம்மை நான் வேண்டிக் கொள்ளுகிறேன். என் குழந்தைகளிடத்தில் என்னைப் போகவிடும். என்னைக் காணாமல் அவர்கள் மனமுடைந்து போயிருப்பார்கள்" என்று வேடன் மிகவும் பரிதாபத்துடன் வேண்டிக்கொண்டான்.

வேடன் தான் சிறுவனிடத்தில் கண்ட அதிசயங்களைக் கூறும்பொழுது, யோகியும் வியப்புடன் அவனை நோக்கிக்கொண்டேயிருந்தார். "மீண்டும் போ; அச்சிறுவனை என்னிடம் எப்படியாவது அழைத்து வா. அவன் பெயரைச் சொல்லியழை. எங்கு சென்றாலும், இரவும் பகலும் அவனைப் பின்தொடர்ந்தே செல்வாய். அவனை அழைத்து வரும் வரையிலும் நான் உன்னை மன்னிக்க முடியாது. பயப்படவேண்டாம்; போ" என்றார்.

வேடன் மறுபடியும் "கிருஷ்ணா, கிருஷ்ணா"வென்று இடைவிடாமல் கூவிக்கொண்டே சென்றான். அவ்வொலி அவ்வனமுழுவதும் கேட்டது. அடர்ந்த புதர்களிலெல்லாம் கிருஷ்ணனைக் காணாமல் தேடி ஓடியோடிக் கூவினான்; அலறினான்; கிருஷ்ணா, கிருஷ்ணா என்று கதறினான். இரவும் பகலும் ஊண் உரக்கமில்லாமல் கிருஷ்ணனை அவன் தேடாத இடமில்லை. ஆயினும் அம்மாயச் சிறுவனை மட்டும் காணவில்லை. என்ன செய்வான்? மனந் துடித்தான்; அழுதான், உள்ளம் பதறினான்; கண்ணாற நீர்வழிய உள்ளமழிந்தான்; கைப்பொருளைப் போக்கித் தவிப்பவன் போல மனம் பதைபதைக்க மனமயர்ந்தான். இவ்வாறிவன் தேடும்பொழுது ஒவ்வொரு நாளுங்கடந்து இரவு தோன்றும்; இரவொழிந்து பகலுதிக்கும்; இவ்வாறவை ஒன்றன்பின்னொன்று தோன்றல்போலவே வேடனும் தனது வேலையை விடாது, காலகதியைப்போல ஓயாது, உள்ளஞ் சோராது நடத்தி வந்தான். ஆயினும், அச்சிறுவனைப் பிடித்த பாடில்லை. புல்லாங்குழலின் இனிய கீத மாத்திரம் அவன் காதிலேயே குடிகொண்டிருந்தது. அவ்வினிய கீதவொலி வருமிடத்தை நோக்கி உத்ஸாகத்துடன் சிறுவனைப் பிடிப்பதிலேயே அவ்வேடன் நோக்கமாயிருந்தான். நாள்மேல் நாள் கடந்தன; மாதங்களுங் கடந்தன. ஆயினும் வேடனுடைய ஊக்கங் குறையவில்லை.

மீண்டுமவன் யோகியை அணுகினான். ஆனால் இத்தடவை கொஞ்சமும் களைப்படைந்தவனாய்க் காணப்படவில்லை; பயந்தவனாகவும் தோன்றவில்லை. ஆநந்தத்தால் கண்கள் சலிக்க, சந்தோஷமாகவே "ஐயனே! நீர் தேடியவன் இதோ இருக்கிறான். எவ்வளவோ கஷ்டத்துடன் இவ்வளவு நாட்கள் நான் தேடியும், அவன் எனக்ககப்படாமல் ஏமாற்றிக்கொண்டே சென்றான். ஆயினும், அப்படியும் நான் அவனைப் பிடித்துவிட்டேன். மூன்று நாட்கள் வரையில், அவன் உடையையும், ஆபரணங்களின் ஒலியையும், மரத்தினூடே செல்லும் சப்தத்தையும், காற்றில் அசைந்தாடும் அவன் மயில் தோகையையும், இனிமையான புல்லாங்குழலின் சங்கீதத்தையும் மட்டும் நான் பின்தொடர்ந்து சென்றேன். இங்குமங்கும் அவன் ஓடி மறைந்தான்; தன் கண்ணொளியால் என்னை மதிமயங்கச்செய்தான். யோகியே, அவன் புன்னகையை என்னவென்று சொல்லுவேன்! அவனைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டேன். மீண்டுமவன் என்னிடமிருந்து விடுபடத் திமிருகின்றான். ஆனால் அது ஒருபோதும் முடியாது. நான் இனி விடமாட்டேன். அந்தோ! என்னால் முடியாது, முடியாது. அவனன்றி வேறுலகேது? அவனன்றி வீடேது? உறவேது? அவன் சங்கீதம், அவன் முகத்தையே பார்த்துக்கொண்டிருக்கும்படி என்னைத் தூண்டுகிறதே. அவன் தம்முடையவனேயாயினும், ஓ யோகியே, அவன் என்னுடையவனாகவுமிருக்கட்டும்; வேண்டிக் கொள்ளுகிறேன்; நானும் தம்முடன் இவ்விடமே இருக்கிறேன்; தமக்குப் பணிவிடைசெய்துகொண்டு, அச்சிறுவனருகிலேயே இருப்பேன்;

"எனக்கு ஆகாரம் வேண்டுவதில்லை; அவன் புன்னகை யொன்றே யாவற்றையும் மறந்து விடச்செய்கின்றது; என்மீது இரங்கவேண்டும்" என்று மன்றாடினான்.

எதோவொன்றை விடாமற் பிடித்துக் கொள்வதுபோல் தவித்துக் கொண்டிருக்கும் வேடனைப் பயத்துடன் யோகி நோக்கினார். அவருக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அவன் கூறுவதெல்லாம் உண்மையா?

"நீ கூறுவது எனக்கு விளங்கவில்லையே" என்றார். அவர் அப்புறம் மெதுவாய் "உன்னுடன் ஒரு சிறுவனையும் காணோமே. நான் உன்னைத்தான் காண்கின்றேன்" என்றார்.

"சிறுவனில்லையா?" என்றான் வேடன் வியப்புடன். "கிருஷ்ணனைத் தாம் என்னுடன் காணவில்லையா? இதோ நான் அவனைப் பிடித்துக் கொண்டிருக்கிறேனே. சீக்கிரம் அவனைப் பிடித்துக் கொள்ளுங்கள்; இல்லாவிடில் ஓடிவிடுவான்."

யோகி ஒன்றும் தோன்றாதவராய் வேடனை நோக்கினார். அவன் சமீபத்தில் ஏதோ ஒரு ப்ரகாசமான வஸ்து தோன்றி, மெள்ள அவர் கண்களுக்குப் புலப்பட்டு மறைந்துபோயிற்று. உடனே யோகியெழுந்து வேடன் காலடியில் விழுந்தார்.

"பெரியோய்! நீயே முற்றும் துறந்த யோகி, நான் ஒரு அற்பத் துரும்பு. என்னை ஒரு யோகியாகவும், உன்னை ஓர் அற்பனாகவு மன்றோ நீ கருதினாய். உன்னைப்போல எவன் யதிகளுக்கோர் யதியான அப்பரமாத்மாவைத் தேடிக் கண்டறிகின்றானோ, அவனே யதிசிரேஷ்டன்; அவனே யோகி. என்னைப்போல எவன் அப்பாக்கியம் பெறாமலிருக்கின்றானோ அவன், ஓர் பிராமணனாயிருப்பினும், யோகாப்பியாஸத்தில் தேர்ந்தவனாயினும், யாவரினும் கடையனே; மிருகங்களைக் கொல்லுவதிலிருந்து உன் மனதை ஜகதீசனிடத்தில் திருப்பவே தான், கோபமுள்ளவன்போல் நடித்து, நான் உன்னைப் பயமுறுத்தினேன். எப்பொழுது நீ என் தலைமேலிருக்கும் பறவையை மட்டும் கவனித்துக் கீழிருக்கும் என் தலையைக் கவனிக்கவில்லையோ, அப்பொழுதே, முற்சன்மத்தில் நீ விடாமுயற்சியும், மன ஊக்கமும் பெற்றவனென்று எனக்குத் தெரிந்துவிட்டது. ஏனெனில், எவ்வளவோ வருஷங்களாக நிஷ்டையிலுட்கார்ந்து நான் தேடிக்கொண்டிருந்ததை, நீ உன் விடாமுயற்சியாலும், மன ஊக்கத்தாலும், ஆறு நாட்களில் அடைந்து விட்டாயன்றோ! நீ கண்டு கொண்டவன், ஆதாரமற்று, யாவற்றிற்கும் ஆதாரமாயுமுள்ளவன். ஆதியந்தமில்லாதவனும், எல்லோரையும் நேசிப்பவனும், யாவராலும் நேசிக்கப்பட்டவனுமான ஸ்ரீகிருஷ்ணனே அச்சிறுவன். அவனன்றி ஓர் அணுவுமசையாது.

# பிரபஞ்ச வர்த்தமானம்

# Progress of the World

**இந்திய ஜாதீய மஹா நாடு**

அன்று 1908-ம் வருஷத்தில் ஸூரத்தில் பிரிந்த இந்திய மஹாக் கூட்டமானது இம்மாத முடிவில் லக்ஷ்மணபுரியில் தமது பேத பாவங்கள் மயங்கஒன்றுகூடிச் சிறிதும் மனத்திற்குச் சஞ்சலமேற்படா வண்ணம் சிறக்கக் கூடி, பொது ஜனங்களது அபிப்பிராயங்களை வெளியிட்டது இந்திய சரித்திரத்தில் ஓர்சிறந்த விஷயமாகும். பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ? அன்பும், ஆர்வமும், உண்மை பக்தியுங்கொண்டுழைத்த பழைய தேச ஸேவகர்கள் யாவருங் கலந்து பொதுப்படச் சேரும்படியாகப் பாக்கியம் பரிபூர்ணமாக ஏற்பட்டது பேரானந்தத்தை விளைக்கும். அக்கிராஸனம் வகித்த கனம் அம்பிகா சரண முஜூம்தார் அவர்கள் தமது உபந்நியாஸத்தில் நம்மவர்க்கு ஸ்வராஜ்யமும், ஸ்வதர்மமும், ஸ்வஜாதி விச்வாஸமும், ஸ்வவிருத்தியும், எவ்வெத் துறைகளிலும், எவ்வெவ்வழிகளிலும் ஏற்படவேண்டுமென்றும், ஒவ்வொரு இந்தியனாலும் அகௌரவமாக எண்ணப்படும் ஆயுதச் சட்டத்தால் ஏற்பட்ட இழிவை ஒழிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும், வீணாக உபயோகமின்றிக் கெட்டு மழுங்கும் இந்திய வீரம் பழுதுபடாவண்ணம், இந்தியர்கள், உபாதிகள் சிறிதுமின்றி, சேனைகளில் நிலைபெறுமாறு வேலைகள் செய்யவேண்டுமென்றும் விளக்கினார். மேலும் தற்காலம் அகோரமாக நடக்கும் பெரும் யுத்தம் முடிந்தபின், இந்தியாவின் அளவிட முடியா அன்பை உத்தேசித்துச் செய்யப்படும் சீர் திருத்தங்கள் எவ்வாறு நடைபெறவேண்டியதென்பதைப் பற்றியும் விஸ்தாரமாக வழிகாட்டி யிருக்கிறார்.

மொத்தத்தில் முஜூம்தார் அவர்கள் பிரசங்கம் எல்லோரும் அங்கீகரிக்கும்படி பொதுஜன அபிப்பிராயத்தையே வெளியிட்டிருப்பது பேரானந்தத்திற் கிடந்தரும்.

* * *

**ஜப்பான் வியாபார ஏற்றம்**

தற்காலம் நடைபெறும் யுத்தத்தினால் அநேக சாமான்கள் ஜெர்மனி, ஆஸ்ட்ரியா முதலிய நாடுகளிலிருந்து வந்து நமது கடைகளைக் கொள்ளைகொள்ள முடியாமையினால் ஏற்பட்ட நிலையை ஜப்பான் நாடு தனக்கே பிரயோசனமாக உபயோகித்துக்கொள்வதை யாவரும் நன்கறியலாம். பென்ஸில்கள், பேனாக்கள், கண்ணாடிச் சாமான்கள் இவை முதலான சாதாரணமாக ஒவ்வொரு வீடு தோறும் தினப்பிரயோசனத்திற்கு வேண்டியவற்றை நிரப்ப ஆரம்பித்துவிட்டது. முன்னர் வந்து கொண்டிருந்த ஜர்மானியச் சாமான்களைக் காட்டிலும் உபயோகமற்றனவாயும், விலையேற்ற முள்ளனவாயும் அவை யிருப்பன யார்க்குந் தெரியும். இவ்வாறு, கீழ்த்தரமான சாமான்களைக்கொண்டு வறுமையிலாழ்ந்தியிருக்கும் இந்தியரது தேசநிதியைத் தமதேயாக்க, ஜப்பான், வழி தேடிக் கொண்டிருப்பது இனி, மேலும் வரவரத் தெரியும். கண்கெட்டபின் சூர்ய நமஸ்காரம் செய்யாது, வெள்ளம் வருவதற்கு முன் அணை கட்டி நமது வியாபார ஸ்திதியைப் பலப்படுத்தக் கைத்தொழில்களை ஏற்பாடுகள் செய்ய யத்தனிக்காமல் நமது பொருளாளிகள் விளங்குவது நியாயமாகுமா?

* * *



**கொடிய மிருகங்களால் மரணம்**

கொடிய மிருகங்களால் பிரிட்டிஷ் இந்தியாவில் 1915-ம் வருஷத்தில், 1923 பெயர்கள் மாண்டனர். அதற்கு முந்திய வருஷத்திய தொகை 1702. நாகரீகத்தை, இக்காலத்தில் நாசஞ் செய்யக்கூடிய சக்தியைக்கொண்டே அளவிடுவதால், மிருகங்கள் சென்ற வருஷத்தைக்காட்டிலும் இவ்வருஷம் நாகரீகமடைந்திருக்கின்றன போலும்! இந்த நாகரீகர்கள் தாம் உபயோகிக்கும் கொண்டி, கொம்புகள், பற்கள், முட்டிகள், விஷப்பற்கள், கோரதந்தங்கள் முதலிய ஆயுதங்களை ஸர்வ ஸ்வதந்திரத்துடன் ஆயுதச் சட்ட லைஸென்ஸின்றித் தேசமெங்கும் நடமாடுவதைத் தடுப்பதற்கு ஜனங்கள் மேற்படி லைஸென்ஸில்லாமல் ஒருவித நடவடிக்கையும் செய்யமுடியாமை பெரும் துரதிருஷ்டமல்லவா?

* * *

"இண்டியன் ரயில்வே நோட்ஸ்" என்ற ஆங்கிலப் பத்திரிகையில் ஒருவர் எழுதுகிறார்:—

**ரயில் இலாகா இந்தியர் நிலை**

"இந்தத் தேசத்தில் கிட்டத்தட்ட ஒவ்வொரு ரயில் இலாகாவிலும் இந்தியர்கள் மிகக் கடுமையாக நடத்தப்படுகிறாரென்பது மறுக்கமுடியாதென்பது நிச்சயம். * * * என்னுடைய இந்திய நண்பர் சிலர் ஷெ இலாகாவில் உயர்ந்த சம்பளமுள்ள வேலைகளில் இந்தியர்கள் தாராளமாக நியமிக்கப்பட்டால், அவரது கஷ்டம் நிவர்த்தியாகுமெனச்சொன்னார். ராஜாங்கத்தாரால் நடத்தப்படும் ரயில்வேக்களில் தவிர்த்து ஏனைய இந்திய ரயில்வேக்களில் வேலையும் சம்பளமும் முழுதும் இந்தியரின் சுகத்திற்குப் போதுமாறு மாற்றமேற்படும் ஸம்பவம் காலஞ் சென்றாலும் கைகூடாதாகும்."

மேற்படி மொழிகளின் நோக்கம் உண்மையேயாகும். இந்திய ரயில்வேக்களைக் கவர்ன்மெண்டார், நேர்படத் தமது கீழ்க் கொண்டு நடத்தினாலன்றி ரயில்வேக்களில் வேலைசெய்யும் இந்தியர்களது கஷ்ட நிவாரணத்திற்கு இடமேற்படாது.

* * *

**இராப் பள்ளிக் கூடங்கள்.**

நமது நாடு, படிப்பு விஷயத்தில் மற்றைய நாடுகளைக் காட்டிலுங் கீழ்ப்பட்டு விளங்குவதை யாவரும் அறிவர். படிப்பே தேச க்ஷேமத்திற்கு மூலாதாரம். நமது ஆட்கள் கைந்நாட்டிடவும் தெரியாது, கீறல் இடுவது மிகவும் பரிதாபமான நிலையாகும். கனம் கோகலே அவர்கள் தமது முழு உத்ஸாஹத்துடனும் ஆரம்பக் கல்வியை எல்லாருக்குங் கட்டாயப் படுத்தும்படியாக் கொண்டுவந்த மசோதா அங்கீகரிக்கப்படாது போனது பெரும் துரதிருஷ்டம். ஆயினும் நாம் வீணாகக் கழிக்கும் காலங்களை லேசில் பொதுஜன விருத்திக்கு உபயோகமாகும்படிச் செய்வது அஸாத்யமாகாது. இராப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி இரவில் ஒழிந்த வேளைகளில் சாதாரணப் படிப்பை, ஏழை ஜனங்களுக்கும் கீழ்த்தசை யாளிகளுக்கும் போதிப்பது நல்லகாரியமாகும். இதற்காகப் பிரபலமான கட்டடங்கள் தேவையில்லை; ஒவ்வொருவர் வீட்டுத் திண்ணையும் போதும். பிரபலமான உபாத்தியாயர்கள் வேண்டுவதில்லை. வேலையில்லாது ஒழிவுடனிருக்கும் ஒவ்வொருவரு முபாத்தியாயராவர். முக்கியமாய் வேண்டியது ஒன்று; அது மனம்; அது இருந்தால் எல்லாம் ஸம்மதம். ஆகையால் ஒவ்வொரு கிராமங்களிலும், ஒவ்வொரு பட்டணங்களிலும், ஒவ்வொரு மனையகத்தும் இரவில் ஒழிந்த வேளைகளில் படிக்கத் தெரியாதவர்களைச் சேர்ப்பித்து அவர்க்கு எழுத்தறிவூட்டி, படிக்கச்செய்து, கூட்டல், கழித்தல், பெருக்கல் என்னும் கணக்கின் மூல வழிகளில் அப்பியாஸ மேற்படுத்தித் தமது வீட்டுக் கணக்குகளைக் கவனிக்கும்படியான திறமையையும், தமதுநாட்டில் நடக்கும் விஷயங்களையும், தமது ஸ்வதந்திரங்களையும் அறியும்படியான ஞானத்தையும் ஊட்ட முடியும். இதனிடம் வயது முதிர்ந்த பெரியோர்களும், ஆர்வமிகுந்த யௌவனக் கல்விமான்களும் கவனம் செலுத்தினால் இந்தியச் சமூகத்திற்கு, எழுத்தறிவித்த பெருமை அவரதேயாகும். அப்பெருமையே நமது தேசம் முந்துவதற்கு முதற்படி.

***

**சென்னை பென்ஸில் தொழிற் சாலை**

கவர்ன்மெண்டாரின் மேற்பார்வையில் நடைபெற்றுவரும், சென்னை வண்ணாரப் பேட்டைப் பென்ஸில் தொழிற்சாலையில் செய்யப்படும் காகிதப் பென்ஸில்கள் மிகச் சிறந்தனவாகவும், வேலை ஒழுங்கில் ஜர்மன் பென்ஸில்களுக்குச் சிறிதும் பின் வாங்காதனவாகவும் இருக்கின்றன. இச்சாலையில் தற்காலம் செய்யப் படும் பென்ஸில்கள் ஜனங்களுடைய தேவைக்கு முற்றும் போதாதாயினும், செய்யப்படும் அளவை அதிகமே யாகும். இதில் ஊதாப் பென்ஸில்களைச் செய்யவும் ஏற்பாடுகள் நடப்பினும், வேண்டிய பொருள்கள் கிடைக்காமையால் அவ்வேலை தடை பெறுவதாகத் தெரிய வருகிறது. கறுப்புப் பென்ஸில்கள் பூராவும் கவர்ன்மெண்டாரால் எடுத்துக்கொள்ளப் படுவதால், அதிகமாக ஜனங்கள் உபயோகத்திற்குக் கிடைப்பதரிதாகிறது. ஆனால் இத்தகைய சாலைகள் அநேகம் ஏற்படின், இம்மாதிரியான நிலைநீங்கி, நம்மவர், அந்நிய நாட்டுத் தயவை எதிர்பாராது, பென்ஸில் தேவை முழுவதும் இங்கேயே கிடைக்கும்படி செய்துகொள்ளலாம். இதைப் பொருளாளிகள் கவனிப்பாராக!

***

**வாணியம்பாடி மகம்மதிய கல்விச்சபை**

வாணியம்பாடியில்கூடிய தென் இந்திய மஹம்மதீயக் கல்விச் சபையில் அக்கிராஸனம் வகித்த A. ஹைதர் சாஹேப் அவர்கள் மகம்மதியரது கல்வி விருத்தியைப் புரிச் செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் சொல்லி "ஒரே தாய்க்குப் பிள்ளைகளாகத் தோன்றி, அதே தாயினால் வளர்க்கப்பட்டு, ஒரே காற்றை சுவாஸித்து விளங்கும் நாம் நமது ஸஹோதரர்களிடம் த்வேஷங்கொண்டு சண்டை சர்ச்சையுடனிருந்தால் சௌக்கியமாகவும் வரவர ஏறும்பெருமையுடனும் விளங்கமுடியுமா? அல்லது பிழைப்புத்தான் முடியுமா?" என்றும் மஹம்மதியர்களும், ஹிந்துக்களும் த்வேஷமின்றி அந்யோந்யமாக ஸகோதர பாவத்துடன் விளங்கவேண்டுமென வற்புறுத்தினார். இம்மொழிகளுண்மையேயாம்.




ஏகலைவன் தனது வலதுகைக் கட்டைவிரலை,
குருதக்ஷிணையாகத் துரோணருக்கு அளித்தல்
(முன் சஞ்சிகையில் வெளிவந்த "சிஷ்ய லக்ஷணம்"
என்னும் கதையைப் பார்க்க).

# விவேகபோதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

OFFICE OF THE REGISTRAR OF ... MAR 1917 ... MADRAS

தொகுதி IX } நள ௵ மார்கழி ௴ : : 1917-௵ ஜனவரி ௴ { பகுதி 7

## நல்லொழுக்கம்
### GOOD CONDUCT
### 3. நட்பு

உலகத்தில் ஒருவருடன் ஒருவர் கலந்து பழகுவதற்கு ஒருவரை யொருவர் அறிந்து நடக்கவேண்டியதவசியம். இவ்வாறு பழகுவதால் ஒவ்வொருவர்க்கும் தமது நடைநொடி பாவனைகளால் ஒரு வகைப் பிடிப்பு ஏற்படும். இதனால் வர வர ஒருவர்க்கொருவரிடம் அத்யந்த ப்ரியமும், ஒருவர்க்கொருவர் உதவும் இயற்கையும் நிலைபடும். இந்நிலை வர வர விருத்தியாகி, ஒரே உயிர்கொண்ட இரண்டு உடல்போல் அவர் விளங்கு நிலை ஏற்படும். அந்நிலைக்கே நட்பு எனப் பெயர். மனிதராகப் பிறந்தவர் ஒவ்வொருவருக்கும் பிறனுடைய உதவியில்லாது விளங்கமுடியாதாதலால் நட்பு இன்றியமையாத ஸாதனமாகும். உண்மை நேசர்கள் தம்மிடமுள்ள எவற்றையுந் தம் நேசர்க்குக் கொடுத்துதவப் பின்வாங்காரென்பது திண்ணம்.

அவந்தி என்பது வட மதுரைக்கு அருகாமையில் ஒரு ஊர். அதற்கு அருகாமையில் ஒரு காடுண்டு. அதில் முன் அநேக முனிவர்கள் வாழ்ந்து வந்தனர். அவருள் ஸுதாமா என்பவர் ஒருவர்; இவர் பிராமணர்; வெகு நல்லவர்; பரம ஏழை; இவர் கிருஷ்ண பரமாத்மாவுடன் சாந்தீபமுனிவரிடம் படித்துக் கற்று மஹா மேதாவியாக விளங்கினர். பின் ஸுசீலை என்னும் நல்ல மனைவியை யடைந்து அவளிடம் இருபத்தேழு மக்களைப் பெற்று மிக்க வறுமையை அடைந்தார்.

ஸுதாமாவுக்குக் குசேலரெனக் காரணப் பெயரொன்றுண்டு. அவர் கட்டியிருந்த துணி சல்லடைக் கண்போலக் கந்தையாக விருந்ததைப்பற்றி அப்படி அழைக்கப்பட்டனர். அவர் பெருந் தரித்திர தசையிலிருந்தும், ஏற்பதிகழ்ச்சி யென்று, கஞ்சி கூழானாலும் கிடைத்ததைக்கொண்டு ஜீவித்துச் சதா காலமும் தவத்தி லாழ்ந்திருந்தனர்.

ஆனால் ஸுசீலையை அக்குழந்தைகள் படுத்திய பாட்டிற்கு அளவே இல்லை. அக்குழந்தைகள் அன்னமில்லாமலும் மற்றும் பல வழியிலும் படுந்துயரத்தைப் பலநாளு மவள் தன் கணவனிடம் காட்டக்கூடாதென்றே யிருந்தாள். தனக்கு ஏற்பட்ட பாகமாகிய அன்னத்தையுங் குழந்தைகளுக்கிட்டுத் தான் பட்டினியாகக் காலங்கழிப்பாள். தவத்திலழுந்திய முனிவனோ, வீட்டு விஷயங்களில் தலையிட்டுப் பார்ப்பதே கிடையாது. அதனால் அவள் மெதுவாகத் தன் கணவனை யடைந்து "கிருஷ்ணர் உமக்குத் தோழரென்று எல்லோரும் சொல்லுகிறார்களே! தாங்கள் அவரையடைந்து, கண்டுவந்தால் நமது கஷ்டந்தீரும். தகுதியானால் செய்யும்" எனத் தான் படும் கஷ்டங்களை எல்லாங் காட்டாது கூறினாள்.

நிஷ்காம்யராகிய குசேலர், முதலில் பல தர்மங்களைச் சொல்லி, தன் மனைவியைத் தேற்றினாலும், அநேகநாள் அவள் பொறுமையுடனிருந்தும் பொறுக்கமுடியாமையால் மீண்டும் தன் கணவரை அடைந்து தனக்குக் கடவுளாய்க் காப்பாற்ற விரும்பினாள்.

"கடவுளையாவது, அரசனையாவது, நேசனையாவது காணப்போனால் வெறுங் கையனாகப் போகலாகாது; கல்யாண குணமுடையாய் ஏதேனும் கொடு; அதை எடுத்துச் சென்று அவரைக் கண்டு வருகிறேன்"

என்று குசேலர் சொன்னார். இதைக் கேட்ட ஸுசீலை ஸந்தோஷமுற்றுத் தன் பாகத்துக் கேற்படும் நெல்லை உபயோகப்படுத்தாது பட்டினியிருந்து, அந்நெல்லை நனைத்து, பொரித்திடித்து அவலாக்கி அவரது கந்தைத் துணி ஒன்றில் கட்டிக்கொடுத்தாள்.

"செல்வங் கிடைத்தால் ஸந்தோஷமுமில்லை, கிடைக்காவிட்டால் வருத்தமுமில்லை. என்து நண்பனது தரிசனங் கிடைத்தால் அதுவே போதும்" என்று கொண்டு அம்மூட்டையைத் தனது அக்குளில் இடுக்கிக் கொண்டு த்வாரகா நகரத்தை நாடிக் குசேலர் செல்லலானார். வழியில் பசியாலும், வலியாலும் வாட்டமடைந்து, மேலை ஸமுத்ரக் கரையை அடைந்து, அக்கடலைக் கடந்து துவாரகையை எவ்வாறு அடைவது என்று ஏக்கங்கொண்டார். அங்கிருந்த மாலுமி ஒருவன் அவரிடம் அனுதாபங்கொண்டு அவரை மெதுவாக அக்கரை சேர்த்தான்.

இறங்கிய தொன்றுதான்; குசேலர்க்குத் தனக்குந் தெரியாமல் உத்ஸாகமுண்டாகி விட்டது. அவர் பட்ட சிரமமும் இளைப்பும் அலைச்சலும் பறந்தோடின. அவ்வூரின் அழகை நோக்கிக்கொண்டு பல தெருக்களையுங் கடந்து ஸ்ரீ கண்ணபிரான் வசிக்கும் மாளிகையை அடைந்தார். அங்கு வந்ததும் தனது வரவைத் தெரிவிக்கும்படி துவாரபாலகரைக் கேட்டார். அவருள் சிலர் "நீ யெங்கே; கிருஷ்ணர் எங்கே. அந்த நாளில் அவருடன் படித்திருந்தால், மகா மகா ராஜாக்கள் எல்லாரும் காணத் தத்தளிக்கும் இந்த நாளில் உன்னைக் கவனிப்பது மிக அஸம்பாவிதம். அவமானப்படாது வந்த வழியே மீண்டு போவது நல்லது" என்று பரிகாஸஞ் செய்தனர். "இவர் மகா முனிவர்போல் காண்கிறார். அவ்வாறு சொல்வது தவறு" என்று சொல்லி வேறு சிலர் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிடஞ் சென்று, "தங்களுடன் படித்த குசேலராம்; அவர் வாயிலில் இருக்கிறார்" என்றார். "உடனே ஓடி அழைத்துவா" என்றார் அவர். துவாரபாலகரும் தலை தெறிக்க ஓடினார்.

குசேலர் வரவைக் கண்ணுற்றதும், தனது மனைவியருடன் கேளிக்கையில் இருந்தவர் திடுக்கென எழுந்தோடி, அவர் காலில் விழுந்து நமஸ்கரித்துக் கட்டி அணைத்து, அவருக்கு உபசார மெல்லாம் தனது கையாலேயே செய்து, களைப்பை மாற்றி உண்டி செய்வித்துத் தனது படுக்கையிலேயே உட்கார வைத்துக்கொண்டு, தாம் சின்னஞ் சிறுநாட்களில் செய்த காரியங்களைப் பற்றிப் பேசிக்கொண்டே "எனக்கென்ன அபூர்வமான வஸ்து கொண்டுவந்தீர்" எனக் கேட்டார். கொடுக்கத் தயங்கிய குசேலரது அக்குளில் இருந்த மூட்டையைத் தாமாகவே எடுத்து அவிழ்த்து அதிலிருந்த அவலை வெகு ஆசையுடன் ஒரு பிடி வாயில் போட்டுக்கொண்டார். இரண்டாவது பிடி எடுத்து உட்கொள்ளப் போகும்போது ருக்மிணிப் பிராட்டியார் "எங்களுக்கெல்லாம் வேண்டாவோ?" எனக் குசேலரது நன்மையை நாடித் தடுத்தாள்.

மறுநாள் உதயம் ஸ்ரீ கண்ணபிரான் குசேலருக்கு விடைகொடுத்தனுப்பினார். வெறுங் கையராகவே குசேலர் வெளி வந்தார். ஆனால் அவர் கந்தைத்துணி பீதாம்பரமாகவும், அவர் துளஸிமணிமாலை பொன்னாரமாகவும் விளங்கியதால் பல அரசர்களும் பெரியோர்களும் அவரைப் பின்தொடர்ந்தழைத்து வந்து அவந்திநகர்க் கருகாமையில் விட்டுப்போனார்கள். தன் ஊரை அடைந்ததும், அவர்க்கு அடையாளமே தெரியவில்லை. மேடைமாளிகையுடன் பலவித விமரிசைகளுடன் அநேகாயிரம் தோழிமாருடன் அளவிலா ஐச்வர்யத்துடன் தமது மனைவி தம்மை வந்தெதிர்கொண்டபோது, அவளை உணராது பின்வாங்க, பின் தெரிந்து தமது வீட்டை யடைந்து ஸ்ரீ பரந்தாமனது நேசத்தின் சிறப்பை விஸ்தரித்து வெகுவாய்ச் சிலாகித்துக் கொண்டாடினர். சில காலம் அப்பெருஞ் செல்வத்தை அனுபவித்து, அது தமது தவ முதலியவற்றிற்கு இடையூறாகி விளங்குவதைக்கண்டு, மீண்டும் ஏழ்மை விரும்பி அடைந்து, கண்ணபிரானையே தியானஞ் செய்து, தவம் பெருகிப் பவமொழித்தார்.

"முகநக நட்பது நட்பன்று; நெஞ்சத்
தகநக நட்பது நட்பு" —திருக்குறள்.

—ஸ்ரீமத் பாகவதம், தசம ஸ்கந்தம்.



விவேக போதினி

தொ. 9] நள ௵ மார்கழி ௴ [ப. 7

## வர்ணாச்ரம குதர்க்க நீக்கம்

## VARNASRAMA OBJECTIONS ANSWERED

முன் எடுத்துக் காட்டியதிலிருந்து இக்காலக்கொடுமைக் கேற்ப வர்ணாச்ரம தர்மம் சாஸ்திரப்படி இவ்வாறு குறுக்கி அமைக்கப்பட்டுள்ளது என்பதும், அக்குறுகிய தர்மங்களையும் பின்பற்ற முடியாது, இக் காலக் கொடுமை பெரும்பாலார் விஷயத்திலும், புதிய படிப்பு, நாகரீகம், வெளி நாட்டுப் பயணம் இவைகள் வழி இவ்வாறு வந்து தாக்குமென்பதும், நன்றாக விளங்கியிருக்கும். இவ்வாறு ஏற்படும் தடைகளைப் பொதுவாக நீக்கிச் சுருக்கப்பட்டுள்ள வர்ணாச்ரம தர்மங்களைப் பின்பற்ற ஆஸ்திகர் ஒவ்வொருவரும் முயலலாம் என்பதும் ஒருவாறு காட்டியாகிவிட்டது. இங்கு இத் தடைகளால் ஆஸ்திகர்கள் மனது இவ்வாறு மாற்றப்பட்டுப் பல குதர்க்கங்களுக்கு இடமாக உள்ளது என்பதையும், அவைகளை இவ்வாறு சாஸ்திர ஒழுங்குபடி நீக்க முயல்வதென்பதையும் விளக்குவோம்.

இக்காலத்துள்ள வர்ணாச்ரம தர்மவிஷயக் குழப்பங்களே இக் குதர்க்கங்களுக்கு முக்கிய காரணம். அவை (1) வர்ணங்களுக்குள் ஆச்ரமதர்ம ஒழுங்கும் பிடிப்பும் தவறி, நிலை குலைந்து, எல்லா வர்ணத்தாரும் ஸந்யாஸத்தில் முனைந்து, சட்டை, பணம், விஷய ஆசை, லௌகிக வேலை இவைகளில் ஈடுபட்டு நின்று சீரழிகின்றனர். (2) மத விஷயங்கள் ஒழிந்த மற்றவைகளை வாழ்க்கைத் தொழிலாகவும் நோக்கமாகவும் கருதி இக்காலத்திய க்ருஹஸ்தர், ஓயாது தொழிற் படுகின்றனர். (3) பிராஹ்மணர்கள் எவ்விஷயத்தில் தம்மை விட உயர்ந்தவர்கள் என்று மற்றைய ஜாதியாரிடம் இறுமாப்பும் த்வேஷமும் காணப்படுகிறது. (4) ப்ராஹ்மணருக்கே தாம் எவ்வழியிலுயர்ந்தவர் என்ற ஸந்தேஹமும் மற்றைய ஜாதியார்களை, மேன்மை அடைந்துள்ள தாம் சீர்குலைத்துவிட்டோம் என்ற தீர்மானமும், ஆகையால் தாம் தம் இறுமாப்பைவிட்டு மற்றைய ஜாதியர்களேயாகி அவர்களை உயர்த்த முயலவேண்டும் என்ற எண்ணமும் ஏற்பட்டுவிட்டன. (5) புருஷர்களையே பாடுபடுத்துமிக்காலக் கல்வியைப் பெண்களுக்கும் கொடுத்து விடவேண்டியது. (6) நீண்ட காலம் ப்ரஹ்மசாரி நிலையிலிருக்கவேண்டியது என்பவைகளே. இப்படியெல்லாம் செய்துள்ள வர்ணாச்ரம தர்மங்களைத்தலை தூக்கவொட்டாமலடித்து எல்லோரும் ஒரு வழிப்பட்டால்தான் நம் பரதகண்டம் இழந்த சீரையும் சிறப்பையும் மறுபடி பெறும் என்ற தீர்மானமும் படிப்பாளிகள் பலர் மனதிலும் வேரூன்றிவிட்டது. இவ்வாறெல்லாம் சீரழிந்து நிற்கும் நம்மவர், 'வர்ணாச்ரம தர்மங்களே ஜனங்கள் ஸௌகர்யங்களுக்காக முன் ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடு; அக்காலத்தில் அது நன்றாக உதவியது, காலமாறுபாட்டிற்கேற்ப நமக்கு அது பயனற்றதாகிவிட்டதால் அந்த ஏற்பாட்டை இக்காலத்திற்கேற்ப மாற்றவும், ஆவசியகமிருந்தால் அதை வேரோடு ஒழிக்கவும் வேண்டும்' என்று பொதுவாக அபிப்பிராயப் படுகின்றனர். இம் மாதிரியான வீண் குழப்பங்களைக்கொண்டு இக்காலத்தவர்கள் வர்ணாச்ரமாதிகளைப் பற்றிச் செய்யுங் குதர்க்கங்கள் எல்லாம் பலவாறாகவிருப்பினும், 'வர்ணாதிகளும் ஈசன் ஏற்பாடல்ல மானிடர் கட்டுப்பாடே ஆதலால் அதை ஏற்கலாம், விடலாம், நம் மனப்படி மாற்றலாம்' என்ற முக்யநோக்கத்தையே உடையவை.

(1) வேதத்தில் வர்ணாச்ரம விஷயங்களைப் பற்றியவை வெளிப்படையாக இல்லையே என்பர் குதர்க்கிகள். இதற்குப் பதிலாக, 'ருக் வேதத்தில் முன் பாகங்களில், பல

விடங்களில் வர்ண பதங்களான ப்ராஹ்மண க்ஷத்ரிய வைச்ய சூத்ர பதங்கள் பல ஸந்தர்ப்பங்களில் வந்துள்ளன. புருஷ ஸூக்தத்தில் நேராகவே ஸ்ருஷ்டி கர்த்தாவின் முகமே ப்ராஹ்மணனாகி விட்டது, கைகளிலிருந்து க்ஷத்ரியன் உண்டானான், தொடை கால்களிலிருந்து வைச்ய சூத்ரர் ஏற்பட்டனர் என்று கூறியுள்ளது. சந்தோக்யம், லோகாந்தரங்களி லிருந்து இவ்வுலகில் பிறவிபெறத் திரும்பும் ஜீவன் அவன் புண்ய ஏற்றத்தாழ்விற் கேற்ப, நான்குவர்ணப் பிறவியும், பாபத்தாழ்விற் கேற்ப பன்றி, பசு முதலிய பிறவியும் பெருமெனக் கூறும். இன்னும் பல விடங்களில் வேதம் வர்ண தர்மங்களைத் தெளிவாய்க் கூறுமென்று நாம் மறுக்கலாம்.

(2) இதற்கு இக்காலத்திய குதர்க்கிகள் வெகுவாகப் பின் வருமாறு வாதாடுவர். பாணினி ஸம்ஸ்கிருத இலக்கணம், இக்காலத்திற்கும் வேதங்களுக்கும் பொதுப்படச் செய்துள்ளார். ருக்வேத முன் பாகங்களைப் பார்த்தால் இந்த இலக்கணத்தை விட்டுப் பெரும்பாலும் மாறியே காணப்படும். அதில் சில பாகங்களும்,யஜுர் வேத முதலியவைகளும், பாணினி இலக்கணத்திற்குப் பெரும்பாலும் இசைந்துகாணப்படுகின்றன. உபநிஷத்துகளோ மிக எளிய நடையில் பாணினி இலக்கணத்திற்கு மிக நெருங்கிய பொருத்தம் உடையதாக இருக்கின்றன. ஆதலால் பாணினி இலக்கணஞ் செய்த வெகுகாலத்திற்கு முன், ருக்வேத முற்பாகங்களும், பின்னர் யஜுர் வேதாதி பாகங்களும், சிறுகாலம் முன்னரே உபநிஷதாதிகளும் ஏற்பட்டிருக்கவேண்டும். ஆதலால் ருக்வேதத்தில் காணப்படும் ஜாதிபேத வாக்யங்கள், பொதுவாகக் குணம் தொழில் வழிகளாகப் பொருள்படுத்தக் கூடியவைகளாகவும், யஜுராதிகளில் உள்ளவை கூட்டத்தார் வழி பொருள்படுத்தக் கூடியவையாகவும்,உபநிஷத்துகளில் உள்ளவை பிறவி உடல்கள் வழி பொருள் படுத்தக்கூடியவையாகவும் உள்ளன. இவற்றிலிருந்து ஜாதி பேதம் முதலில் இல்லை; எல்லோரும் ஒரு கூட்டமாகத்தானிருந்தனர்; பின்னர் தொழிலிற்கேற்ப ருக்வேதகாலத்தில் ஜனங்கள், வந்த குழப்பங்களை நீக்கத் தாமே பிரிந்தனர்; யஜுர் வேதாதி காலங்களில் இவர்கள் கூட்டங்கள் திடப்பட்டுப் பிரிந்து விசேஷ தர்மங்களைக்குழப்பமின்றி அனுஷ்டித்தன. உபநிஷதாதிகள் காலங்களில் இந்த வெகு காலப் பழக்கத்தில் பிறவி வர்ணங்கள் ஏற்பட்டுத் திடப்பட்டு விட்டன. இந்த விஷயங்களைக் காட்டுபவைதான் முன் ஆஸ்திகர்கள் எடுத்துக்காட்டிய வேதத்தில் காணப்படும் வர்ண விஷயங்கள். புருஷ ஸூக்த நடையை ஆராய்ந்து பார்க்குங்கால் பின்னர் இயற்றப்பட்டுப் பழமையான ருக் வேதத்தில் தந்திரசாலிகளான ப்ராஹ்மணர்களால் அது சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் இதில் யாக உவமை வழியாக ஸ்ருஷ்டி கூறப்படுகின்றதே ஒழிய இயற்கையாக எடுத்துக் காட்டப்படவில்லை. ஆதலால் வர்ண விஷயத்தை, வைதிக முறைப்படி ஈசன் ஏற்பாடு என்று தீர்மானிக்க முடியாது' என்று பலவகையாகக் குதர்க்கிப்பர் இக்காலத்தவர்.

பாஷை நடையைக் கொண்டே ஒருநூல் முன்னர் ஏற்பட்டது அல்லது பின்னர் ஏற்பட்டது என்று தீர்மானிக்க முடியாது. பாஷைநடை, எழுதுபவர் திறனையும், தேச பேதத்தையும் முக்யமாகப் பொருத்தது. ஆகவே பாணினி இலக்கணத்தைக்கொண்டு அவர் இருந்த விடத்தில் அத்யயனம் பண்ணிவந்த வேதங்களை அவர் ஆதாரமாகக் கொண்டு இலக்கணம் செய்தார். இதுபற்றி அவைகளுக்கு அது மிகப் பொருத்தமாய் உள்ளது; அவர் இருந்த இடத்தில் அத்யயனத்தில் இல்லாதவைகளுக்கு அந்த இலக்கணம் முற்றிலும் பொருத்தமாயிராது;– என்றுமாத்திரம் கொள்ளலாமே ஒழிய வேத பாகங்கள் முன்னவை என்றாவது பின்னவை என்றாவது எள்ளளவும் இதனால் மாத்திரம் தீர்மானிக்கவே முடியாது. இதற்கிணங்கவே, பாணினியும் தாம் கூறியதுள் அடங்கா வேத விஷயங்களை, ஆங்காங்கே வருமாறு கண்டு இலக்கணத்தை அவைகளுக்கு இசைக்க வேண்டும் என்றார். ஆகவே, வேதங்களில் முன் பின் ஒழுங்கு என்பது எந்த யுக்தியாலும் ஸாதிக்கவே முடியாது. வேதத்தில் எங்கு என்ன சொல்லி



யிருந்தாலும், எல்லாம் ஒரேவித ஆற்றலுடைய ஆதாரம் என்று கொள்ளாது வேத விஷய ஆஸ்திக தர்க்கம் செய்வது வீணே ஆகும். ஆதலால் காலவரையறையைக் கொண்டு, வேதத்தில் வெளிப்படையாகக் கூறியுள்ள வர்ண பேதங்கள் ஈசன் ஏற்பாடு என்பதை எவ்வழியிலும் அசைக்கவே முடியாது. மேலும் வர்ணாச்ரம தர்மம் என்ற பத்திரிகையில் இக்கால குதர்க்கிகள் மிகப்பழையன என்று ஒப்புக்கொண்டு பேசும்பாகங்களிலும்,பிறவிவர்ணங்களையே நேரிடக் குறிக்கும் வாக்யங்களுள என்று மஹான்கள் எடுத்துக்காட்டி இக்காலத்தவர்கள் காலவரையறை யுக்திகளைச் சிதற அடித்துள்ளார்கள். இங்கு எடுத்தாண்டால் பெருகுமாதலால் அவைகளை வருமிடத்துக் கண்டு கொள்க. காலவரையறை யுக்தி வீணாகவே, இக்காலத்தவர், விரிவாக இதைப் பொருத்துச்செய்யும் குதர்க்கங்கள் முற்றும்ஒழிந்தன. வர்ணாதிகள் கடவுள் ஏற்பாடே, மனிதனதல்ல என்பதே ஸத்யம்.

(3) “இப்பரத கண்டத்தைத் தவிர, வேறெங்கும் இத்தகைய பிறவி வர்ணபேதமில்லையே. அங்கெல்லாம் உள்ள ஏற்பாடுகள், நாளடைவில் உலக அனுபவத்தின் பேரில் மாற்றப்பட்டுச் சீர் திருத்தப்பட்டல்லவா இக்காலத்தில் இப்பொழுதுள்ள நிலையை அடைந்துள்ளன. இதற்கிணங்கவல்லவா நமது வேதமும் இருத்தல் வேண்டும்?-அப்படியில்லாமலும் போகவில்லையே. ஆகவே இப்படிப் பொதுவாயுள்ள நாளடைவில் ஏற்படும் மனித ஒழுங்கிற்கு மாறாக எந்த விஷயங்களிலும் நம்முள்ளிருக்கும் ஏற்பாடுகள் விஷயத்தில் ஈசன் ஒழுங்கை ஏன் பற்றவேண்டும்? ஆகவே வர்ணபேதங்கள் வெறும் கட்டுப்பாடென்பது சரித்திர விஷய இயற்கைக்குப் பொருந்தும்” என்று குதர்க்கிகள் மேலும் மறுப்பர்.

இவ்வாறு செய்யப்படும் குதர்க்கத்தைப் பலவாறு தாக்கி நாம் சிதற அடிக்க இடம் உண்டு. உலகில் எல்லாம் தேச சரித்திர ஒழுங்கிற்கு இணங்கியேதானிருக்கவேண்டுமோ? இக்காலத்தவர் கூறும் சரித்திர ஒழுங்கு, இவர்கள் அறிவிற்கெட்டிய சில ஜாதியார்கள் சரித்திரங்களைப் பொருத்து, எல்லாம் முன்னர் தாழ்ந்தநிலையிலும் குழப்பத்திலுமிருந்து பின்னர் வரவர லோகானுபவத்தால் ஒழுங்குபட்டு நாகரிகப்படவேண்டும் என்று அனுமானிக்கப்படுவதே. இது கொஞ்ச காலத்திற்கு முன்னர் ஏற்பட்டு முன்னுக்குவந்த ஜாதியார்கள் விஷயத்தில் பொருத்தமாக இருக்கலாம்: நமது பரத கண்ட வைதிகர்களைப் போன்றவர்கள் சரித்திர ஆராய்ச்சிக் கால அளவைக்குள் மாத்திரம் அடங்கிக்காணப்படாத ஜாதியாரிடம் இது பொருத்தம் உடையதாகவே இராது, இந்தச் சரித்திர ஒழுங்கு லௌகிக வ்யவஹார விஷயங்களில் ஒருவாறு பொருத்தம் உடையதாக இருக்கலாம்: மதவிஷயம் மோக்ஷம் அடையும் வழிகள் இவைகள் விஷயத்திற்குமுற்றிலும் பொருந்த மாட்டாது. இக்காலத்தவர் எடுத்தாளும் சரித்திர விஷய ஸம்பந்த முடைய ஜாதியார்கள் தேசங்களே கடலுள் மூழ்கி வெளிவந்திராத காலங்களிலும் நம்பரதகண்டத்தில் ராமர் தர்மபுத்திரர் முதலிய மஹான்களிருந்து நான்கு வர்ணங்களை நிலைபெறச் செய்து ஈசன் முறையைப் பின்பற்றி ஓங்கி வாழ்ந்திருந்தனரென்றால், இவ்விஷயத்தை எப்படி இக்காலத்தவர் அறைகுறையாகக் கண்டுதெளிய முயலும்சரித்திர ஒழுங்கோடு பொருந்தவில்லையென்று ஒதுக்கமுயல்வது? சரித்திர ஒழுங்கை வர்ணாதி ஈச ஒழுங்குடன் பொருத்த முடியாவிடில் ஒதுக்க முயல்வதல்லவா யுக்திக்குப் பொருத்தமாக இருக்கும்.

பரதகண்டம் ஒழிந்த வெளி நாட்டவர்களிடம் இந்த வர்ண ஒழுங்கு இருக்க இடமேயில்லை. அவர்கள் தாழ்ந்த நிலையிலிருந்து நாகரீகம் பெற்று உயருபவராதலால் அவர்களிடம் முன்னொழுங்கு இருக்கவேண்டியது அவசியமும் இல்லை. நம்மிடமோ அப்படியல்ல. நமது புராணங்களைக் கொண்டு வேதாதி சாஸ்திரங்களை எவ்வளவு ஆராய்ந்து பார்த்தாலும் அநாதியாக நம்முள் நாகரிகம், அநாகரிகம், எல்லாம் சேர்ந்தே காணப்பட்டுள்ளதென்றும், தனியாக எல்லோரும் தாழ்ந்த நிலையில் இருந்த சரித்திர நிலை வீண் பொய் என்றும் நன்றாக ஏற்படும். இப்படியிருந்த நாகரிகஸ்தர்களுள் நமது

வைதிக மதம் மாறாதிருந்து நம்முள் பரவி, அவரவர்களுக் கிசைந்தபடி அவர்கள் நிலைகளுக்கேற்ப அவர்களை உயர்த்தி மோக்ஷமடையத் தூண்டவேண்டிய ஒழுங்குகள் அதில் ஈசனாலேயே அமைக்கப்பட்டே இருந்தனவென்றும் வெளியாகும். இந்த வர்ண ஒழுங்குக்கு வேண்டிய உடல் உயிர் இவை இரண்டிற்கும் உள்ள ஸம்பந்தம், அவைகளைப் பற்றிய தெளிவான உணர்வு, ஆகிய இவை வெளிநாட்டவரிடம் இன்னும் ஏற்படவில்லை என்றால் முன் எப்படி இருந்திருக்கும்? அவர்கள் நாகரிகமற்ற நிலையில், அவர்களிடம் எக்காலத்திலும் இருக்க இடமே இல்லாத ஈசன் ஒழுங்கான வர்ணாச்ரம ஒழுங்கு, எக்காலத்தும் நாகரீகம் நுட்பம் அறிவு இவை இடைவிடாது சில கூட்டத்தாரிடமாவது இருந்துவந்த வைதிகர்களாகிய நம்மிடம், ஏன் இருக்கக் கூடாது! இப்படி இருப்பதற்குத் தகுந்தஆதாரமிருப்பதால், இது எவ்விதத்திலும் யுக்திக்குப் பொருந்தா மாறுபாடென்று எந்தக் குதர்க்கிகளாலும் நிலைநாட்ட முடியாது.

மேலும் நம் நாட்டுக் குதர்க்கிகள் பிற நாட்டுக் குதர்க்கிகள் அபிப்ராயத்தைப் பின்பற்றி, அவர்கள் நாட்டிலே ஒழுங்குகள் எப்படி முதலில் அறியாமை நிலையில் ஒருவாறு தொடங்கிப் பின்னர் உலக அறிவு முதிர்ச்சியில் வரவரச் சிறப்படைந்து இக்காலத்து நிலைக்கு வந்தனவோ, அப்படித்தான் எங்கும் இருத்தல்வேண்டும் என்ற ஒரு மூட நம்பிக்கையைக் கடைப்பிடித்து விட்டனர் முதலில். இதைக்கொண்டு நமது வேதங்களை ஆராயப்புகும் முன்னர், வர்ணாச்ரம தர்மம், விக்ரஹாராதனம், கர்மானுஷ்டானம் இவைகளும் இப்படி நாளடைவில் ஒழுங்கு பட்டவைகளாகத்தானிருக்கவேண்டுமென்று இறுமாந்தே தொடங்கினர். இதற்கேற்ப, ஜாதிபேதாதிகளை வெளிப்படையாகக் கூறாதுள்ள வேத பாகங்களை முதலில் ஏற்பட்டவை என்றும், அவைகளைப்பற்றி விரிவாகக் கூறுபவைகள் எல்லாம் பிற்பட்டவை என்றும் வகுத்து ஜாதிபேதம் வேதத்திலுள்ள ஈசன் ஒழுங்கல்ல, மானிடர் கட்டுப்பாடே என்று கொக்கரிக்கின்றனர். இப்படி வேதத்தை ஆராயப்புகுவது, நிலை நாட்டவேண்டியதை முன்னரே உண்மை எனக் கடைப்பிடித்துவிட்ட பெருங் குற்றமுடைய குதர்க்கமே. இவ்வாறில்லாது 'நம்மவர்கள் இந்த விஷயங்களை எப்படி ஆராய்ந்துள்ளார்? வேதங்களின் எல்லாப்பாகங்களும் அநாதி; ருஷிகள் முன்பின்னாக அவைகளைக் கண்டறிந்திருக்கலாம்; பின்னர், வியாஸர் அவைகளை ஒழுங்குபடுத்தியிருக்கலாம்; அவைகளில் எல்லாப் பாகங்களிலும் உள்ளவைகளைக்கொண்டுதான் ஜாதி பேதம் முதலியவைகளில் தகுந்த அபிப்ராயம் கொள்ள வேண்டும்; அவைகளை வகுத்து நிறுத்தும் அதிகாரம் ஒருவனுக்கும் இல்லை; தகுந்த முகாந்தரமும் இல்லை; இந்த ஜாதி பேதம் இயற்கையாக உள்ள வேற்றுமையையே பொருத்துள்ளது' என்றெல்லாம் முதலில் கண்டு தெளிந்துவிட்டுப் பின்னர் வெளிநாட்டார் நம் விஷயங்களை அறியாது குழப்பும் விஷயங்களை எடுத்தாராய முயலவேண்டும். இதைவிட்டு, அவர்கள் குழப்பத்தை முதலில் மனதில் ஏற்றுக்கொண்டு வேதங்களை அனாவசியமாகக் குதர்க்கமாக வகுக்கத் தொடங்கும் அறிவுநுட்ப மெதைச் சேர்ந்தது? இவ்விஷயத்தில் அறியாமை மிகுந்துள்ளவர், தாம், மேனாட்டவர் குதர்க்கக்கொள்கைகளை ஆலோசியாது பின்பற்றிக் கதறுவர். இப்படி மிகுந்த யுக்திவர்திகள்போல் வர்ணாதிகளை ஈசன் ஒழுங்கல்ல என்று நிலைநாட்ட முயல்பவர்கள் வேத ஆதாரத்தையே ஒதுக்கிவிட்டு, வெளிநாட்டுச் சரித்திர ஒழுங்கை மாத்திரம்ஆதாரமாகக்கொண்டு, தம் கொள்கைகளை நிலைநாட்டிப் பின்பற்றலாம். வேத சாஸ்திரங்களை அணுகினால் அவர்கள் வீண் குதர்க்கிகளாகித் தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று கூறும் பிடிவாதக்காரரே யாவர். ஆதலால் இவர்கள் வேத விஷய யுக்தி வாதம், ஆழ்ந்ததேயல்ல, நம்மவர் தன்மையின் உணர்வற்றது, மேனாட்டார் அறியாமையால் வெளியிட்ட கொள்கைகளில் மூடத்தனமான பற்றுடன் கூடியது, என்ற மூன்று பெருங்குற்றங்களால் வீண் குதர்க்கம் என்று ஒதுக்கப்படும்.

பொதுவாக வெளிநாட்டார் நமது மத ஒழுங்குகள் விஷயமாகக் கூறியுள்ளவைக



ளைப் பற்றிக் கவனிக்கவேண்டிய விஷயங்கள் பல உள. இவைகளை நன்கு மனதில் வைத்துக் கொண்டால்தான் அவர்கள் சிறந்த யுக்திவாதங்களாக நமது மதவிஷய அபிப்ராயங்களை எடுத்துக் காட்டுங்கால் நாம் மயங்கி அவர்கள் கூறுவதே உண்மை என்ற படுகுழியில் விழாதிருக்கலாம். (1) வெளிநாட்டவர்களுக்கு உலக வ்யவஹார விஷயங்களைப் பரிசீலனம் பண்ணுவதற்கு ஏற்பட்ட நுட்ப உணர்வுபோன்ற மதவிஷய ஆராய்ச்சி விஷய நுண்ணறிவே கிடையாது. தமது மதவிஷயங்களையே அவர்களால் ஸரிவர ஆராய்ந்து பின்பற்றித் திடமாக நிற்க முடியாது பல மஹான்கள் அவர்களுள் கிடந்து தத்தளிக்கின்றனர். இவர்களாலா நமது மதவிஷயங்களைத் தெளிவாக ஆராய முடியும்? (2) இவர்கள் தமது மதங்களையே மானிடர்களால் ஏற்பட்டவை, ஆதலால் மற்றைய ஏற்பாடுகளைப்போல அவற்றிற்கு ஏற்றம், தாழ்வு, சீர்திருத்தம் முதலியவை உண்டென்பர். இவர்களாலா ஈசனால் வெளியிடப்பட்ட வைதிகமதத்தை மனக்கனிவுடன் அணுகமுடியும்? (3) வெளிநாட்டார்கள் சீரும் சிறப்பும் வாய்ந்து பொழுது போக்கமுடியாது பலர் பலவித வாழ்க்கைத் தொழில்களை மேற்கொண்டு வாணாளைச் சலிப்பின்றிக் கழிக்க முயல்பவர். இந்த நிலையில் உள்ள சிலர் நமது மதவிஷய ஆராய்ச்சியை வெறும் பொழுது போக்காக மேற்கொண்டவர். இவர்கள் ஆராய்ச்சியிலிருந்து என்ன உண்மை வெளிவர இடமுண்டு? (4) வெளி நாட்டார்கள் தமது மதம் உலகெங்கும் தடையின்றி ஓடிப் பரவிவந்ததைக்கண்டு, வெகு காலமாக மகிழ்ச்சியுடனிருந்தனர். ஆனால் இந்தியாவில் அம்மாதிரித் தமது மதம் பரவாது தடைபட்டதைக்கண்டு அவர்களுள் பலர் நமது வைதிக மதத்தைக் குற்றங்கூறி நமது அபிப்ராயத்திலேயே அதைத் தாழ்த்திவிட்டால் தமது மதம் நம்முள் பரவும் என்ற ஆவலுடன் நமது மத விஷயங்களையும் அதைப்பற்றிய ஒழுங்குகளையும் பல யுக்திகளால் குற்றங்கூறி வருகின்றனர். இதற்காக அவர்கள், பொதுவான நமது மதவிஷய ஒழுங்குகள் எல்லாம் வேதத்தில் இல்லாதவைகள், பின்னர் ஏற்படுத்தப்பட்டவைகள் என்ற குதர்க்க வாதங்களைத் துண்டு, பத்திரிகைகளிலும் நமது பாட புத்தகங்களிலும் கிளப்பிவிட்டுள்ளனர். அவர்களுள் வேறு சிலர் வடை தின்பதற்குப் பதிலாகத் தொளை எண்ணுவது போலவும் பழம் தின்பதைவிட்டு இலை எண்ணுவது போலவும், நமது மத விஷய புத்தக நுட்பங்களை உணரமுயலாது, அவைகள் இயற்றப்பட்ட காலம், ஆசிரியர் வாழ்ந்த காலம், இவைகளை ஆராய்ந்து வாயில் வந்தவற்றைச் சொல்லி, அவைகள் மிகுந்த பின்பட்ட காலங்களில் தமது புத்தகங்களைப் பார்த்தே இயற்றப்பட்டவை என்று வீண் குதர்க்கம் செய்து வருகின்றனர். இவர்கள் எடுத்துக்காட்டும் முடிவை நம்பியா நமது வேதாதி சாஸ்திரங்களை நாம் ஆராயப் புகுவது?

ஆதலால் நாம் இக்காலத்திய கல்வி ஒழுங்கால் நமக்கு ஏற்பட்டுள்ள குதர்க்க உணர்வுகளை எல்லாம் ஒதுக்கிவைத்து நமது சாஸ்திர ஒழுங்குகளை நம்மஹான்கள் இவ்வாறு எடுத்து ஆராய்ந்துள்ளனர் என்பதைக் கூடியவரையில் நேரிட உணர முயன்று, தெளிந்து, பின்னர் வெளி நாட்டவர் ஆராய்ச்சி முடிவின் தன்மைகளை எடுத்தாராய்வோமானால், அவர்களுடைய ஆராய்ச்சி உண்மையேயல்ல என்பது நன்கு வெளியாகும். தமது அறிவுக் குறைவு, தம் மதாபிமானம், தமக்கு இயற்கையாகவுள்ள பயனற்றவைகளைச்சிறந்தவையாகக் கருதும் தன்மை, ஆகிய இந்த இழிவுகள் நிறைந்தனவே அவர்கள் ஆராய்ச்சிகள் என்பது நன்றாக வெளியாகும். ஆகவே வர்ணாச்ரம தர்மம், விக்ரஹாராதனை, கர்மானுஷ்டானம், ஸம்ஸ்காரங்கள் இவைகளைப்பற்றி வெளிநாட்டாரும், அவரையே பரமாசாரியராகக் கொண்டு ஆடுகள்போலப் பின்பற்றிய நம்மவர்கள் ஆராய்ச்சிகளும் பயனிலாச் சொற்களே என்பதற்கு என்ன தடை?

இத்தன்மை வாய்ந்து, நம்மைக் குழப்பும் மற்றைய வர்ணாச்ரம் தர்மக் குதர்க்கங்களை மேலெடுத் தாராய்வோம்.

# சேலம் இராமசுவாமி முதலியார்
## SALEM RAMASWAMI MUDALIYAR



சேலம் இராமசுவாமி முதலியார்

"தூயவாய்ச் சொல்லாடல் வன்மையும் துன்பங்கள்
ஆயபொழு தாற்று மாற்றலும்—காய்விடத்து
வேற்றுமை கொண்டாடா மெய்ம்மையும் இம்
சாற்றுங்காற் சாலத் தலை" [மூன்றும்

என முனைப்பாடியார் முறையிட்டிருக்கிறார். பிறருக்குத் துன்பம் உண்டாகாத விதம் அவரை நல்வழியிலுயர்த்தும் பேரெண்ணத்துடன், மனத் தூய்மையுடன் வாய்த் தூய்மையுங் கலந்து, மயங்காதபடி அழுத்தமாகப் பேசுந்திறனும், தமக்குத் தாம் ஏற்றுக்கொண்ட காரியங்களைச் செய்யுமிடத்து ஏற்படும் கஷ்டத்திலிருந்து விடுவித்துக் கொள்ளச் செய்யுங் காரிய நிர்வாகமும், பிறர் தம்மிடம் தமது எண்ணங்களில் கலவாது, அல்லது வேறு காரணங்களால் வெறுப்புக்கொண்டு விளங்கினும், அவரிடத்துப் பேத புத்தி பாராட்டாது விளங்குவதும், மிகவுயர்ந்த எண்ணமும் பாரித்ருஷ்டியும் பெருமையும் உள்ள பெரியோரிடமே விளங்குங் குணங்களாகும். இம்மூன்று குணங்களும் மனிதனை யுயர்த்தும் ஸாதனங்களாகும். இவற்றின் விசேஷ ப்ரபாவத்தினாலேதான் சேலம் இராமசுவாமி முதலியார், என்றும் இந்தியர் மனத்தை விட்டகலாத திவ்ய விக்ரஹமாக விளங்குகின்றனர்.

### படிப்பு

இவர் சேலத்தில் 1852௵ ஸெப்டம்பர்மீ 6௳ பிறந்தவர். இவர் தந்தை, சேலத்தில் ஒரு பெரிய மிட்டாதார்; நாமக்கல் தாசீல்தாராயிருந்து 1867௵ பென்ஷன் பெற்றவர். இராமசுவாமி முதலியார், அவரது ஆறாவது வயதில் படிப்புக்காகப் பட்டணத்திற்கு அனுப்பப் பட்டார். அங்கு அவர், தமிழில் மஹாவித்வானாகப் பிரசித்தி பெற்றிருந்த காஞ்சீபுரம் சபாபதி முதலியாரது குமாரராகிய நாகலிங்க முதலியாரது மேற்பார்வையின்கீழ் வைக்கப் பட்டனர். அன்றியும் அவர் மிகச் சாதுரிகரும்பண்டிதருமாக விளங்கிய கதிர்வேல் வாத்தியாரென்பவரிடம் தமிழ் படிக்கும்படி அமைக்கப் பட்டனர். வரவரப் படிப்பேற இராமசுவாமி முதலியார் சென்னை ஹைஸ்கூலில் சேர்க்கப் பெற்றனர். ஆனால் அப்பள்ளிக்கூடத்தில் கீழ்ப்படிப்பு வகுப்புகளை எடுத்துவிட்டதும்; பச்சையப்பன் கலாசாலையில் அவ்வகுப்புப் படிப்பை ஏற்றதும், மீண்டும் ஹைஸ்கூலில் சேர்க்கப்பட்டார். இங்கவர் தமது உபாத்தியாயரது ப்ரீதிக்குப் பாத்திரராகி அநேக பரிசுகள் பெற்று விளங்கினார். மெட்ரிகுலேஷன் என்னும் ஸர்வகலாஸங்கப் பிரவேசப் பரீட்சையில் தேறியதும், அவர் முதல்வகுப்பில் முதல் 15 பேர்களுள் இருந்ததால் கவர்ன்மெண்டாரால் அளிக்கப்பட்ட உபகாரச் சம்பளத்திற்குப் பாத்திரரானார். எப். ஏ., பரீக்ஷையிலும் அவர் இராஜதானியில் முதலாகத் தேறினர். 1871-௵ அவர் பி. ஏ., பரிக்ஷையிலும் இராஜாதானியில் முதலாக வெளியேறினர். அக்காலம் சென்னைக் கவர்ன்மெண்ட் கலாசாலைத்தலைவராகியமிஸ்டர் தாம்ப்ஸன், பெருமதிப்புடனும் அன்புடனும் அவரிடம் விளங்கியதல்லாமல், அவரது முயற்சி, சாமர்த்தியம், நல்லொழுக்க மிவற்றிடமும் மிக நல்ல அபிப்பிராயம் கொண்டு இருந்தனர். முதலியார் பி.ஏ., பரீட்சையில் தேறியதும், தமது பள்ளிக்கூடத்தில், ஆங்கில உதவி ஆசிரியராகும்படி அவர் வேண்டினர். ஆனால் முதலியார், உதாரகுணம் நிறைந்தவரானபடியால், தன்னைக் காட்டிலும் அத்யாவச்யகமாய் இன்றியமையாத நிலையிலிருந்த, தம் பின் அடுத்துப் பரீட்சையில் தேறிவிளங்கி வறுமையிற்பொதிந்து விளங்கியவற்கு அப்பதவியை அளிக்குமாறு, மிக்க மரியாதையுடன் அவ்வேண்டுகோளை மறுத்தனர். பிறகு அவர், வீட்டிலேயே படித்து எம். ஏ., டிக்ரீ பரீட்சையைச் சரித்திர வகுப்பில் 1873-௵ தேறினர். அதன் பின் அவர் சட்டப் பரீட்சைப் படிப்பில் முந்தி 1875 ௵ பி. எல். பரீட்சையில் தேறியவர்களது பட்டியின் தலையில் விளங்கினார். அப்போது, அன்பே அவதாரமாக விளங்கிய ஹைகோர்ட் ஜட்ஜ். ஹாலவே அவர்களின் நல்லபிப்பிராயத்தை முன்னிட்டு, முதலியார் கனம் மிஸ்டர் பி. ஓ' ஸலிவனிடம் அப்பிரன்டிஸாக அமைக்கப்பட்டு, 1876-௵ ஹைஹகோர்ட் வக்கீலாகப் பிரசுரிக்கப்பட்டனர்.

### இராஜாங்க உத்யோகம்

ஹைகோர்ட் வக்கீலாகப் பஹிரங்கப்படுத்தப்பட்டதும், முதலியார் சேலத்தில் வக்கீலாக அமர்ந்தனர். தமது நல்லொழுக்கத்தாலும், குணத்தாலும், தமது வியவஹாரங்களை நடத்தும் ஸாமர்த்தியத்தாலும் அவர் பொது ஜனங்களாலும் சேலம் ஜில்லா கோர்ட் ஜட்ஜ் அவர்களாலும் மிகவும் பெருமையாகப் பாராட்டப் பட்டனர். அவரது மனோதர்மம், நியாயவாதத்தைக் காட்டிலும் நியாய பாலனத்தைச் செய்யும் வழியிலேயே நடந்துகொண்டிருந்தது.

தம்து புத்திஸ்யக் கவர்ன்மெண்ட் ஸர்வீஸில் உபயோகப்படுத்த விரும்பி நியாயவிலாகாவில் அவர் வேலை பெறப் பிரயத்தனஞ் செய்தார். அவர் செய்த விண்ணப்பத்தின் மேல் "சட்ட ஞானத்திலும், அதைக் காட்டிலும் என்னபிப்பிராயத்தில் மிகச் சிறந்ததாகக் கொள்ளப்படும் நன்னடத்தையிலும் ஒருங்கே இவர் சிறப்புற்று விளங்குவர் என் நான் ஸந்தோஷப்படுகிறேன்" என்று ஜில்லா கோர்ட் ஜட்ஜ் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டனர். முதலியார் 1876-௵ திருசிராப்பள்ளி ஜில்லாவில், ஜில்லா முன்ஸீப்பாக நியமிக்கப்பட்டனர். அவரது தீர்ப்புக்கள் எல்லாம் பொது ஜன ஸம்மத முள்ளனவாயும் ஸத்தியத்திற் குட்பட்டனவாகவும் விளங்கின. யாராவது தவறான வழிகளில் அவரை வசியப்படுத்த நினைத்தால் அவர் தமக்குப் பெருந்தீங்கு செய்தாக நினைப்பர். இது விஷயமாய் அவரைப்பற்றிச் சொல்லும் ஸம்பவ மொன்றுண்டு. அது வருமாறு:—

"ஒரு வியவஹாரத்தில் ஸம்பந்தப்பட்ட கட்சிக்காரன், முதலியாரவர்கள் வெகு மரியாதையுடன் பாராட்டிய பெரியவரொருவரிடமிருந்து நல்லபிப்பிராயக் கடிதத்துடன், அவரிடம் வந்தனன். முதலியாரவர்கள் தமது மனத்தெண்ணத்தை வெளியிடாது, வந்தவனை மிக மரியாதையுடன் வரவேற்றனர். அடுத்த நாள், தமது வண்டியிலேயே அக்கட்சிக்காரனை அழைத்துக்கொண்டும் போனார். கட்சிக்காரன் வெகு குதூஹலத்துடன் வியவஹாரம் தன் பக்கமே தீர்ப்பாகும் என்று எண்ணியிருந்தான். அவன் எண்ணிய விதமில்லாமல் தீர்ப்புச்செய்யப் பட்டதும், அவன் முதலியார் வண்டிக்காகக் காத்திருக்க வில்லை."

இம்மாதிரிக் கட்சிக்காரர் விளங்குவதைப் பற்றி அவர் பல முறை நியாயஸ்தலத்திருந்து விளக்கியிருக்கிறார். அவர் தமது மனஸ்ஸாட்சிக்குச் சிறிதுங் கோணாது எக்காலத்துமிப்படியே விளங்கினர். அவர்க்கு வரவர இராஜாங்க வேலையில் அப்ரிய மேற்பட்டுக்கொண்டே வந்தது. சில ஸமயங்களில் தர்மஸங்கடங்களில் அகப்பட்டுத் தத்தளிக்கும் போது அவர் மனவெறுப்புவளர்ந்துகொண்டே வந்தது. ஒரு ஸமயம் தமது கச்சேரியில் நடந்த தப்புக்கணக்கு விஷயமாய்த் தமது கையிலிருந்தே பணத்தைக் கவர்ன்மெண்டாருக்கு அவர் போட்டுக்கொடுக்கும்படி நேர்ந்தது. இச்சம்பவத்தின்பிறகு அவர் நெடுநாள் நியாயாதிபதிப் பதவியிலிருக்கவில்லை.

### வக்கீலானது

முதலியார் இராஜாங்க வேலையிலிருப்பதால்பொதுஜனங்களுக்கு உழைக்கத்தமக்கு இடமேற்படவில்லையென்றும், தமது பெருமையை விளக்கத்தக்கவழியில்லையென்றும் அவ்வேலையை ராஜீநாமா செய்தனர். ஆயினும், அவரது நியாயநிலையைப்பற்றிப் புதுக்கோட்டைத் திவானாகவிருந்து சிறிது நாள் முன் காலஞ்சென்ற கனம். அ. சேஷய்ய

சாஸ்திரியார் அவர்கள் "சேலம் இராமசுவாமி முதலியார்எனக்கு நேராகத் தெரியாவிடினும் அவரைப்பற்றிப் பிரபலமாகக் கேட்டிருக்கிறேன். அவரது அசைவிலாத நடு நிலைமையும், களங்கமற்ற ஒழுக்கமும், உண்மை வழியும் அவரிடம் பொது ஜன முழுதும் நம்பிக்கை கொள்ளுமாறு செய்துள்ளன. எனக்கெப்பொழுதும் அவர் பெரும் பதவிக்கென ஏற்பட்டவரெனவே அபிப்பிராயம்". என வெளியிட்டது இழுக்காகாது.

லா ஜர்னல்

1882-ம் வருஷம் வேலையை விட்டதும், அவர் சென்னையில் ஹைகோர்ட் வக்கீலாக அப்யஸிக்க ஆரம்பித்து மிக்க கியாதியுடன் விளங்கினர்; ஐயந்திரிபறச் சட்டங்களின் நுட்பங்களை, வீணே குதர்க்கஞ் செய்யாது விளக்குபவரெனவும் பேரெடுத்தனர். அவர்க்கு நியாய விஷயத்தில் ஏற்பட்ட பேராவலே அவரை 1891-௵ இப்பொழுதும் பெரும்புகழுடன் ஓங்கிவரும் "லா ஜர்னல்" என்னும் நியாய விஷயமான மாதாந்தப் பத்திரிகையைப் பிரசுரிக்க வாரம்பித்து, அதன் முதல் பிரதான பத்திராதிபராக விளங்கச் செய்தது. அவரது சட்டஞானச் சிறப்பின் பெருமையே அவரைச் சென்னை ஸர்வகலாஸங்கத்துப் பி. எல்., எம். எல்., பரீட்சைகளின்பரீட்கராகச்செய்தது; மற்றவர் தமிழ்ப் பாண்டித்தியம், அச்சங்கத்துத் தமிழ் பரீட்சகருமாக்கியது. 1887௵ அவர் அச்சங்கத்து அங்கத்தினராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

போதுஜன ஸேவகாரம்பம்

40 வருஷங்களுக்கு முன்னிருந்த இந்திய தேசம் இக்காலத்தில் இருக்கும் நிலையிலிருக்கவில்லை. இப்போதைய ஸ்வாதந்திரியங்கள் அப்போதிருக்க வில்லை. நமது முதலியார் அக்காலத்தில் பொதுஜன சௌக்ய விஷயத்தில் கண்ணுங்கருத்துமா யிருந்தனர். தாம் நியாய இலாகாவில் உழைத்த காலத்து எப்படி அந்நியரது செலுகையால் தமது ஒழுங்கு கெடாதவண்ணம் விளங்கினரோ, அவ்விதமே பொதுஜன விஷயத்தில் தலையிட்டதும் தாம் தமக்கே உத்தரவாதமாகும்படி தமது ஒழுக்கத்தை நிறுத்து நடந்தனர். அவர் முதல் முதல் பஹிரங்கமாகப் பொதுஜன விஷயமாக 1882-ம் ௵ பேசினர். அப்போது கவர்னரது ஆலோசனை ஸபையின் அங்கத்தினர் ஒருவர் தமது வேலையிலிருந்து செலவுபெற்றுக் கொண்டபோது, அவர் ஞாபகார்த்தமாக ஏற்படுத்தப்பட்ட கூட்டம், பொது ஜன ஸம்மதத்தினால் ஏற்பட்டதாகக் கொண்டாடக் கூடாதென்னும் விஷயத்தைப் பற்றிப் பேசினர். இது முதலாகிய விஷயங்களில் அவர் பொதுஜன அபிப்பிராயம் எள்ளளவும் அகௌரவமடையா திருக்கும்படி உழைத்தார். இந்தியரின் நிலையையுயர்த்தும் பேரெண்ணத்துடன் ஏற்படுத்தப்பட்ட சென்னை மஹாஜன ஸபையின் அங்கத்தினராக விருந்து, பொது ஜனாபிப்ராயத்தைக் குவிக்கும்படி செய்து, கவர்ன்மெண்டின் பாரசக்ரம் மெல்லச் சூழன்று பொது ஜன கஷ்டமென்னும் பரல்வழியை ஆங்காங்கு சிறிதுச் சிறிது செம்மைபடுத்தச் செய்தனர். மேலும் அச்சபை அந்நாளில் பலவித தேச வியக்கத்தால் ஏற்பட்ட சலனமென்னும்சுழல் நீரில் கவிழாது நிலை நின்று விளங்கச் செய்தது முதலியாரது பாரிபுத்தியேயாகும். இவ்வாறு இருக்கும்போது சேலத்தில் நடந்த கலகத்தில், மிக்க செல்வாக்குடன் விளங்கிய மிட்டாதாராகிய, நமது முதலியாரது தந்தையையும், குற்ற நடந்த காலத்துச் சென்னையிலவர் இருந்ததையுங் கவனியாது, குற்றவாளியாக்க யத்தனித்த கிருமினல் கேஸில் நமது முதலியார் வக்கீலாக ஹாஜராகும்படி பலர் விரும்பியும் அவர் மறுத்தார். அவர்க்குத் தமது ஜனங்களை வேறு வழிகளால் ஸ்வாதந்திரியம்பெறச் செய்ய வேண்டுமென்றிருந்த அவாவே இதற்குக் காரணம்.

சீமையில் வேலை

இவ்வெண்ணத்துடன் இவர் விளங்கிய காலத்து, அப்போதைய ஜனத்தலைவர்களுக்கு ஒன்று தோன்றியது. அப்பொழுது தான், மஹானுபாவனாக விளங்கி, இந்திய நாட்டை ஆண்ட இராஜப் பிரதிநிதியாகிய கனம் ரிப்பன் ப்ரபு தமது சீமைக்குத் திரும்பிவிட்டிருந்தார். ஆகையால் எல்லோரும் கூடி, சீமைக்கு ஜனப்பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து ஆங்கிலப் பொது ஜனங்களுக்கு இந்தியரது நிலைமையை விளக்க அனுப்புவிக்கவேண்டுமென்ற பேரெண்ணம் தோன்றியது. முதலியார் அவர்களே இந்தப்பெரும் வேலைக்குத் தகுந்தவரெனச் சென்னை ராஜதானியின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இவரும், பம்பாய் இராஜதானிக்கும், வங்காள ராஜதானிக்கும் எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருவருமாகச் சேர்ந்து சீமைக்குச்சென்று, அதன் பிரதான பட்டணமாகிய லண்டன் மாநகரில் இறங்கினர். அங்கிருந்து இந்தியரது நிலையைப்பற்றிப் பலமுறை ஆங்கிலப் பொது ஜனங்கள் ஏனையோர் முன், நன்கு விளக்கினர். பின் சீமையில் பிரபலமான பட்டணங்களிலெல்லாம் விஜயம்செய்து ஆங்காங்கும் இந்தியரது கஷ்ட நிஷ்டூரங்களை எடுத்துத் தொகுத்துக்காட்டி அவரைப்பற்றிக் கவனிக்குமாறு அந்நாட்டாரை வேண்டிக் கொண்டார். இவ்விதம் பலவிடங்களிலும் பொதுஜன ஸேவை நிமித்தம் யாத்திரை செய்தும் பிரஸங்கித்தும் வரும்பொழுது, அன்றும் இன்றும் ஆங்கிலத்தில் ஆடங்க மற்று நிகரற்று விளங்கிய பிரஸங்க சிரோமணியும், மேதாவியும், நடுநிலை தவறாத மஹானுபாவராகிய ஜான் பிரைட் என்பவர் இந்திய விஷயமாய்ப் பர்மிங்ஹாம் பட்டணத்தில் பேசியதைக் கேட்டு மெய்ம்மயங்கி விளங்கினர். அங்கிருந்து அபெர்டீன் என்னும் பட்டணத்திற்குப் போகும் வழியில், எடின்பரோ பெருநகரில், நிகரிலாப் பொதுஜன ஸேவகாதிபதியாகிய கிளாட்ஸ்டன் என்னும் ஆங்கில மந்திரியாரது பிரஸங்கத்தைக்கேட்டுத் தான் நெடுநாளாகக் கேட்கக் காத்திருந்த அவாவைப் பூர்த்திசெய்து கொண்டனர். அபெர்டீன் நகரில் கூடிய ஸபையில், இராஜாங்க விஷயத்தில் பிரபல வித்பன்னராகிய பிரைஸ் என்பவரும் டாக்டர் ஹண்டர் என்பவரும், இராமசுவாமி முதலியார், தம் முன்னிருக்கும் சேர்க்கையை உபயோகிக்க விரும்பி, இந்தியநாட்டைப்பற்றிய ஞானத்தை ஆங்கிலதேசத்தில் பரவச்செய்ய ஒரு ஸபை ஏற்படுத்தும்படி செய்தனர். இதுதான் முதலியாரும் அவருடன் வந்தவரும் சீமைக்குத் தாம் புறப்பட்ட காரணம். அது பலித்ததவர்க்குப் பேரானந்தம். இவ்வாறு இந்தியப் பிரதிநிதிகள் தாம் வந்த காரியத்தை ஒரு வழியாக முடித்தனர். அவரது செயல்கள் முற்றும் பலித்ததற்கு முதலியாரது ஊக்கமும் ஒழுக்கமும் தேசபக்தியுமே காரணம். அவரைக் கொண்டாடாத பத்திரிகை சீமையில் இல்லையென்றே சொல்லலாம். அவரது வாக்கிலிருந்து வந்த மொழிகள் யாவும் மனத்தைக் கவர்ந்து உள்ளே ஊறி வேலை செய்யக்கூடிய சக்திவாய்ந்திருந்தன. சீமை முழுதும் ஸஞ்சரித்ததால், முதலியாரது ஆங்கிலமொழிகளின் உச்சரிப்பு வரவர ஆங்கில பத்ததியில் ஓங்கிச் சிறப்புற்று விளங்கிற்று. முதல் முதல், முதலியார் பேசியபோது அவ்வுச்சரிப்பின் பேதமும், அவர் பேசும் ஊக்கமும் வைராக்கியமுமே, அவரிடம் ஆங்கிலப் பொது ஜனம் ஒருவித அதிசயமும் அன்பும் கொள்ளுமாறு செய்தன; அவர் பேசுவது உண்மையே என்று எண்ணுமாறுஞ் செய்தன.

பப்ளிக் ஸர்விஸ் கமிஷனில் வேலை

முதலியார் சீமையிலிருந்து வந்ததும், சென்னையில் வெகு விமரிசையுடன் வரவேற்கப் பட்டனர். அப்பொழுதவர் பேசிய வணக்கமொழிகள், அவரது உண்மை வேலையையே வெளியிட்டன. அவர் சேலஞ் சென்றதும், அங்கு மேலும் விமரிசையாக வரவேற்கப் பட்டனர். 1896-ம்௵ இராஜாங்க உத்யோகங்களைப்பற்றிய கோளாறுகளைக் கவனிக்கவென ஏற்படுத்தப்பட்ட பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் என்னும் ஆலோசனை ஸபையில் முதலியார் அவர்கள் ஓர் அங்கத்தினராக நியமிக்கப்பட்டனர். அவ்வாலோசனை ஸபையின் வியவஹாரங்களில் உழைத்து, அச்சபையிலிருந்த உத்யோக அங்கத்தினரது பேத நோக்கத்தை ஸமதிருஷ்டிக்குக் கொண்டுவர அவர் முயன்றார். ஆனால் அவ்வாலோசனை ஸபையின் இந்திய அங்கத்தினர், தமது கண்டிப்பான அபிப்பிராயங்களைத் தனியாக எழுதாது, எல்லாருடன் அச்சபையின் தீர்மானத்திற்குக் கைநாட்டிட்ட விஷயமாய் ஜனங்களிடம் அபிப்பிராய பேதமிருந்தது. முக்கியமாக அவர் இந்திய ஸிவில் ஸர்விஸ் பரீட்சை ஒரே சமயத்

தில் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் தனித்தனியே நடைபெற வேண்டுமென்ற தமது கண்டிப்பான அபிப்பிராயத்தை, மற்றைய அங்கத்தினரோடு சேராது வெளியிடவில்லை என்பதே. ஆனாலும், முதலியார் அலஹாபாத்தில் கூடிய காங்கிரஸில் பேசிய போது “ வீரியத்தில் காட்டிலும் காரியத்தில் கண்ணாயிருப்பதே நல்லது. ஓட்டைச் சட்டியானாலும் பணியாரம் ஆகவேண்டியதொன்று. 'இந்த எண்ணத்துடன் தான் நாங்கள் அச்சபையின் முடிந்த அபிப்பிராயத்திற்கே கைநாட்டிட்டதற்கு முக்கிய காரணமாகும்” என்று விளக்கினார்.

### காங்கிரஸும் முதலியாரும்

பொதுஜன ஸங்கமாகிய இண்டியன் நேஷனல் காங்கிரஸ் என்னும் இந்திய மஹா நாட்டிற்கு முதலியார் இருமுறை தாம் போக அவகாச மேற்பட்டது. கல்கத்தாவில், பப்ளிக் ஸர்விஸ். கமிஷன் வேலை முடிந்ததோ இல்லையோ, மிகு பரபரப்புடன், 1887௵ சென்னையில் கூடிய மஹா நாட்டில் விஜயஞ் செய்து, ஆயுதச் சட்டத்தைப் பற்றிப் பேசி, அதனால் இந்தியருக்கேற்பட்டிருக்கும் அஸௌகரியங்களை மாற்ற வேண்டுமென அவர் வெளியிட்டனர். மற்றொரு ஸமயம் அவர் 1888-௵ அலஹாபாத்தில் கூடிய மஹா நாட்டிற்கு விஜயஞ் செய்தார். இம்மஹா நாட்டின் அக்கிராஸனம் அவ்வருஷம் முதலியாரவர்களை ஏற்கும்படி, அவ்வூர் வரவேற்புக் கூட்டத்தார் வேண்டினராயினும், முதலியாரவர்கள் தாம் அதற்குத் தக்கவரல்லரென்று சொல்லி ஏற்காதிருந்தனர். இவ்விஷயம் முதலியாரிடம் ஜனங்கள் கொண்டிருந்த அன்பையே வெளியிடும்.

### பின்காலம்

நிற்க, முதலியாரவர்கள் சென்னைப் பச்சையப்பன் தருமங்களைக் கவனிக்கும் ட்ரஸ்டியாக ஏற்படுத்தப்பட்டனர். அக்காலத்துச் சென்னை முனிசிபல் போர்டிலும் உழைத்து, முனிஸிபாலிடியின் அக்ராஸனாதிபதியும் கமிஷனர்களும் மிக்க மதிப்புடன் பாராட்டும்படியாக ஸமயோசிதமான புத்திமதி புகன்று வந்தனர். தமது பிந்திய காலங்களையும், பொதுஜன ஸேவைக்கே முதலியார் அவர்கள் முழுதும் அற்பணஞ் செய்தனர். இந்திய ஆலோசனை ஸபைகளைப்பற்றிய சட்டத்தை ஏற்படுத்தி அமுலுக்குக் கொண்டுவர இவர் வெகு கவனஞ் செலுத்தினர். அச்சட்டம் அமுலுக்கு வந்திருக்குமானால் முதலியார் சென்னை சட்டசபையின் ஓர் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பர். ஆனால் அது அமுலுக்கு வருவதற்குள் யமதருமராஜன் 1892௵ மார்ச்மீ 2உ அவரைத் தன் நாட்டிற்கு வரவேற்றுச் சென்றான். இவ்வாறு இந்திய வானத்தில் உச்ச நிலைபெற ஓங்கிக் கொண்டிருந்த பெரு நட்சத்திரம், கட்புலனிற்குத் தோன்றாது மறைந்தது.

### முடிவுரை

முதலியாரது குணங்களில் மேன்மையாக விளங்கியவை வணக்கமும் நன்மொழியுமே. எல்லார்க்கும் இணங்குவது போலவர் பேசினும், அவரிடம் வெளித்தோன்றாது பிடிவாத குணம் சில வேளைகளில் விளங்கும்; அது நியாயத்தில் நிலைத்துக் கட்டுக்கடங்கியிருந்ததால், அவரை மேன்மையிற் புகுத்தப் பெருஞ்சாதனமாகியது. கபடமென்பதின்னதென்று அவர் அறியார்; அடங்கிப் பேசினாலும் அடக்கவும் பேசுவர்; பிறரைப் பற்றித் தவறான அபிப்பிராயங் கொண்டதென்றுங் கிடையாதானாலும், அவரது தப்பைப் பார்த்துச் சகிக்கார்.

ஒழுக்கம் மதப்பற்று முதலியகுணங்கள் முதலியாரிடம் விளங்கியதுபோல், பிறரிடமிருக்கமுடியா. சீமைக்குச் சென்றபோதும் அவர் தம்முடன் தனது பரிசாரகனை அழைத்துப்போய் அவன் அட்டுஇட்டதைப் போஜனங் கொண்டாரே ஒழிய எங்காவது மாம்ஸ போஜனத்திற்காவது மது பானத்திற்காவது சென்றாரில்லை. எங்கிருப்பினும் அவர் தம்முன்னோர் வழிகளையே அனுஸரித்து வாழ்ந்தனர். இத்தகைய ஒழுக்கமே அவரிடம் ஆங்கிலரை அன்பு கொள்ளுமாறு செய்தது; அதுவே அவர் மீண்டும் தம் நாடு அடைந்ததும் பிராயச்சித்த மில்லாமலே சிறிதும் களங்கமற்ற சுத்தரென அவருறவினரால் ஜாதிக்குள் கொள்ளப்பட்டதற்குங் காரணமாகும்.



“ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினு மோம்பப் படும்”

என்ற தேவர் குறளுக்கு இவரையே உதாரணமாகக் கூறுவது இழுக்காகாது. இராமசுவாமி முதலியாரிடம் இந்திய நாடு முழுதும் அன்பு கொண்டதற்கு அவர் உண்மை நோக்கமும், பொதுஜன ஸேவையும், பேசும் வன்மையும், படிப்பின் பிரபாவ முதலிய குணங்கள் மாத்திரங் காரணங்களல்ல; பிரபலமான காரணம் வேறு ஒன்றுண்டு. அது அவர் பாஸ்சாத்ய வழிகளில் சென்றிருந்தாலும், அந்நாட்டாரது நிந்தாஸ்பதமான வழிகளை ஏலாது, தமது முன்னோர் வழியிலிருந்து முறணாது, இந்தியரது உத்தமகுணங்களை விட்டகலாது, பரிசுத்த இந்திய விக்ரஹமாக விளங்கியதே யாகும்

# அசையும் படங்கள்

# Motion Pictures

[ஸ்ரீமான் ஏ. வரதாசாரியார் அவர்கள், பீ.ஏ., எல்.டி.]

இங்கிலீஷ்ப் பாஷையில் 'ஸயன்ஸ்' என்று சொல்லப்படும் 'பௌதிக சாஸ்திர' ஆராய்ச்சியால் ஏற்பட்டுள்ள பலவித நவீன யந்திரங்களுள், சலிக்கும் படங்களின் காட்சி சில வருஷ காலமாய் பிரஸித்தி யடைந்து வருகிறது. பயாஸ்கோப் (Bioscope), ஸினிமாடோகிராப் (Cinemotograph), க்ரோனோபோன் (Chronophone) என்னும் சிற்சில பேதங்களுள்ள கருவிகள் மூலமாய் இவ்விதக் காட்சிகள் ஆயிரக் கணக்கான ஜனங்களால் பிரதிதினம் பார்க்கப்படுகின்றன. இந்தச் சித்திரக் காட்சிகள் கற்பிக்கக்கூடிய கல்வியையும், இவைகளாலுண்டாகும் இதர உபயோகங்களையும் முதலில் சற்றுக் கவனித்துப் பார்ப்போம். இக்கருவிகளின் உற்பத்தி, அபிவிருத்தி, அவைகளின் அமைப்பு இவற்றைப் பின்னர் விவரிப்போம்.

மேற்கண்ட விநோதக் காட்சிகளில் ஜனங்களுக்கு விசேஷ விருப்பமிருக்கிறதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. தனிகர்களும், எளியவர்களும், படித்தவர், படியாதார், ஸ்திரீகள், பாலர்கள், விருத்தர்கள் முதலிய எல்லோரும் ஆயிரக்கணக்காய் ஒவ்வொரு நாளும் இவ்வித விநோதங்களைப் பார்க்கப்போவது, சென்னை முதலிய நகரங்களிலிருப்பவர்களுக்கு நன்கு விளங்கும். ஸாமான்ய ஜனங்களுக்கு, இக்காலத்திற் கநுகுணமாய் அவரவர்கள் மனோவிகாரத்தைத் திருப்தி செய்யக்கூடியவும், ஐம்புலன்களுக்குப் பலவிதமாய் இன்பமளிக்கத் தக்கனவாயுமுள்ள நாடகம், ஸங்கீதக் கச்சேரி, ஸர்க்கஸ் முதலான பொழுதுபோக்கு விநோதங்களைக் காட்டிலும், பயாஸ்கோப் சித்திரப் படங்களைப் பார்ப்பதில் மிக்க ஆசை ஏற்பட்டிருக்கிறது. இவைகளில், பற்பல மனோபாவங்களுள்ளவர்கள் கண்டு களிக்கக்கூடிய பலவிதக் காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. இதைப் பார்க்க வருபவர்களெல்லோரும், தங்கள் மனதை, பார்ப்பதைவிட்டு ஒரு க்ஷணங்கூட வேறு விதம் செலுத்தாமல், ஒரே மனதினராய் இக்காட்சிகளைக் கண்ணூற்றுப் பார்ப்பது இவைகளிடத்திலுள்ள ஆவலுக்கு அறிகுறியேயாகும். சுருட்டு முதலிய லாகிரிவஸ்துக்கள் உபயோகப்படுத்தக் கூடாதென்று நோடீஸ் பெரிய எழுத்தில் எழுதியிருந்தும், ஓயாமல் பீடி, ஸிகரெட் என்று பற்பல நாமதேயங்களால்வழங்கும் புகையிலைத் தூமயந்திரங்கள் மூலமாய் இஞ்சினிலிருந்து வருவதுபோல், வாய் மூக்குகளிலிருந்து ஓயாமல் வெளிவிடப்பட்டு, மூக்கு, காது, கண் இவைகள் நிறம்பக்கூடிய புகையை ஸஹித்துக்கொண்டும், இடம்விட்டுநகர்ந்தால் மறுபடியும் அதே இடம் கிடைக்காதென்று பயந்தோ, காட்சிகளின் ஸ்வாரஸ்யம் போய்விடுமென்று நினைத்தோ, தேகத்தின் ஸ்வாபாவிகஉபாதியைத் தீர்த்துக்கொள்ளக்கூடச் சில க்ஷணங்கள் வெளியில் போக மனம்வராமலும், கண்ணை உறுத்து நோக்குவதாலுண்டாகும் கண்ணெரிச்சலைக் கவனியாமலும், அசையாத படங்

களிலுள்ள ப்ரதிமைகள்போல், அசைவற்று, மிக்க ஸாவதானமாய் ஜனங்கள் நோக்குவதும் அபூர்வகாட்சியே. மேற்சொல்லிய இதரப் பொழுதுபோக்குக்காக நடைபெற்றுவரும் நாடகம் முதலிய ஏற்பாடுகளில், ஆதிமுதல் அந்தம் வரையில் இவ்வளவு சிரத்தையும், ததேகத்தியானமுள்ள பார்வையும் இல்லையென்பது அநேகருக்கு அனுபவஸித்தமாயிருக்கலாம். ஆனால் இவ்வித ஆஸ்தைக்கும் கவனிப்புக்கும், காரணமில்லையென்று சொல்லக்கூடாது. இவ்வுலகத்தில் பற்பல நாடுகளிலுள்ள நதி, மலை சம்பந்தமான காட்சிகளும், அநேக ஜாதியாரின் ஆடை, ஒழுக்கம், வழக்கங்கள் முதலியவற்றை விவரித்துக் காட்டக்கூடிய சரித்திரங்களும், நிலத்திலும், நீரிலும், ஆகாயத்திலும் செல்லும் அற்புத யந்திரங்களின் விவரங்களும், மஹாகோரமான யுத்தக்கருவிகளும், அவைகளாலுண்டாகும் நாசமும், திருடர்கள்வெகுசாமர்த்தியமாய்ப்பிறரை ஏமாற்றித் தங்களுக்கு நேரிடும் ஆபத்திலிருந்து தங்களைத் தப்புவித்துக்கொள்ளச் செய்யும் பிரயத்தனங்களும், இவைகளெல்லாம் தெரிந்துகொண்டு அவர்களைக் கண்டுபிடித்துத் தண்டனைக்குள்ளாக்குவதற்காகப் போலீஸ் முதலிய அதிகாரிகள் செய்யும் யுக்திகளும், இன்னும் மற்ற விஷய ஞானமும் ஸுலபமாய் உண்டாக இவ்விதக்காட்சி ஓர் முக்கிய ஸாதனமாகும். அப்ரத்யக்ஷமான கொள்கைகளின் விஷயங்கள், கிருத்யங்களின் பலன்கள் முதலியவைகள் தவிர, ப்ரத்தியக்ஷமாய்க் கிரஹிக்ககூடிய வஸ்து சம்பந்தமான அறிவானது புஸ்தகாதி மூலமாய் ஏதோ ஒருவாறு ஏற்படக்கூடியதாயினும், அவைகளை நேரில் காணுவதாலுண்டாவது போல், தெளிவாய்ப் புத்தியில் பதியும்படி ஏற்படாதென்பதற்குச் சந்தேகமில்லை. நீராவிக்கப்பல் ஸமுத்திரத்தில் போவதை எப்போதும் பாராத ஒருவனுக்கு அதைப்பற்றி எவ்வளவு வர்ணித்துச் சொன்னாலும், யதார்த்தமான ஞானம் ஏற்படுவது கஷ்டம். ஒருக்கால், அதில் நம்பிக்கையே ஏற்படாது. அப்படி ஏற்பட்டாலும், ஏதோ ஸ்தூலமான அறிவு உண்டாவதிலும், பிரத்தியக்ஷமாய்ப் பார்ப்பதாலுண்டாகும் வஸ்து ஸ்திதி ஞானமும் மனத்திருப்தியும் விசேஷமே. ஆகாயக் கப்பலைப்பற்றி எவ்வளவு வர்ணித்துச் சொன்னாலும், எழுதினாலும், நேரில் பார்ப்பதுபோலாகுமா? நம் புராணாதிகளிற் சொல்லப்பட்ட விமானங்களைப் பற்றி இது வரையில் எவ்விதம் நினைத்தார்கள்! சில வஸ்துக்களை, நேர்த்தியான படரூபமாய் வரைந்து காட்டினால், அவைகள் விஷயமாய் ஸ்தூலமான அறிவு ஏற்படலாம். அப்படியிருந்தாலும், சலிக்கும் வஸ்துக்கள் விஷயத்தில், அசையாத சித்திரப்படங்கள் மனதில் நன்றாய்ப் பதியக்கூடிய ஞானத்தை உண்டுபண்ணா. பல விதமாய் அசைவதைக் காட்டக்கூடிய படங்களைக் கண்ணுற்றால், சற்றேறக்குறைய விஷயங்களை நேரில் பார்ப்பதற்கு ஒப்பாகும். இதர தேசங்களிலுள்ள அதிசயக் காட்சிகளையும், ஜனங்களின் நடை, உடை, நாகரிகம் முதலிய விஷயங்களையும், புதிது புதிதாய்க் கண்டுபிடிக்கப்படும் யந்திரங்கள் கருவிகளின் அமைப்பையும், ஆச்சரியச் செயல்களையும் தெரிந்துகொள்ளவேண்டுமென்கிற ஆவல், பொதுவாய் மனுஷிய ஸ்வபாவத்திற்கு இயல்பே. இவ்வித ஞானத்தை, வெகு தனம் செலவழித்து, அனேக அஸௌகர்யங்களைப் பொறுத்துக்கொண்டு தேசாந்திர ஸஞ்சாரம் செய்துதெரிந்துகொள்வது அனேகருக்கு அஸாத்தியமான காரியம். ப்ரத்யக்ஷ ஞானத்துக்கு ஒப்பென்றே சொல்லக்கூடிய அறிவு, பயாஸ்கோப் முதலிய சலிக்கும் படக்காட்சியால், எளியவர்களுக்குக்கூட ஸ்வல்பச் செலவு செய்து இருந்த இடத்திலேயே கிடைக்கக்கூடுமானால், இவ்விதக்காட்சி உலகில் கல்வி பரவுவதற்கான தத்கால முக்கிய ஸாதனங்களில் ஒன்றென்று சொல்லச் சந்தேகமில்லை.

மேற் சொன்னபடி, இவ்விதக் காட்சிகள் பலபேர்களுக்கு விநோத ரூபமாய்க் கல்வி பரவக்கூடிய ஸாதனமாயிருப்பதுடன், இதர விதத்திலும் உபயோகமுள்ளதாயிருக்கின்றன. தனிகர்கள் தங்கள் மூலதனத்தை, மற்ற வியாபாரத் தொழில்களில் உபயோகிப்பதுபோல் இவ்விதப் படங்களை அமைத்து, வெகு ஜனங்கள் பார்க்கும்படி செய்து, அதனால் தகுந்த லாபத்தை அடைவதற்கும், எளியவர்களில் பலர் வேலைசெய்து ஜீவிக்கவும் அவகாசம் ஏற்படுகிறது. இக்காலத்தில், பல வஸ்துக்கள் உண்டாகி வியாபாரத்தொழில் நடத்தும் சாலைகள் அனேகம் ஏற்பட்டு, அதன் மூலமாய் ஆயிரக் கணக்கான ஜனங்கள் பிழைத்து வருகிறார்கள். நாளடைவில், பயாஸ்கோப் முதலிய யந்திரங்களின் அமைப்பும் காட்சியும் ஒரு பெரிய தொழிலாகி, அனேக தனவான்கள் ஏராளமான தனத்தைச் செலவழித்து இவ்விதத் தொழிற் சாலைகளை ஸ்தாபித்து, அதனால் தங்கள் தங்கள் கைம்முதலுக்குத் தகுந்த லாபமும், இதரர்களுக்குப் பொருளுதவியும், ஞான அபிவிர்த்தி ரூபமான ஒத்தாசையும் ஏற்பட இடமுண்டு.

முதலில், இவ்வித படங்களின் காட்சி ஸாமான்யமாய்க்கல்விக்குஸாதனமாயிருப்பதைப்பற்றி சொன்னோம். முக்கியமாய், கல்வி இருவகையாகும் (Instruction and Education). மனிதர்களுக்கு இயற்கையாய் மூன்று வித சக்தியுண்டு. அது தேகபோஷணம், புத்திக் கூர்மை, நல்லொழுக்கம் இவை சம்பந்தமானது. இவ்வித சக்தியானது, வரவர விருத்தியாகி, ஒவ்வொருவனும் தன் வாழ்நாளைத் தனக்கு ஸுகமாயும், பிறருக்கு உபகாரமாகவும் நடத்தி, நற்கதியடைய எந்த ஞானம் ஸாதனமாயிருக்கிறதோ அதுதான் சரியான படிப்பு (Education) அல்லது கல்வி எனச் சொல்லத்தகும். இவ்விதக் கல்வியைப் பரவச் செய்யவேண்டுமென்கிற எண்ணத்துடன் எல்லாத் தேசங்களிலும் பாட்சாலைகளும், பெரிய கலாசாலைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் அனுபவத்தில் அவ்வித எண்ணம் சரிவர நிறைவேறி வருகிறதென்று சொல்லச் சாத்தியமில்லாமலிருக்கிறது. மாணக்கர்களுக்குக் கற்பிக்கப்படும் பாடங்கள் அவர் மனதில் நன்றாய்ப்பதிந்து ருசி உண்டாக்கி அதனால் மேற்சொன்ன மூவகைச்சக்திவிசேஷமும் முறையே ஒன்றுக்கொன்று அநுகுணமாய் விஸ்தரித்து, இவ்வுலக வாழ்க்கையில் தங்களுடையவும், தேசத்தினுடையவும், ராஜாங்கத்தாரினுடையவும், ஹிதத்தைக் கருதி நடக்கக்கூடிய யோக்கியதை ஏற்பட்டால் தான் கல்வி ஸபலமாகும். அப்படிக்கு அல்லாமல், உலகத்திலுள்ள வஸ்துக்கள், ஜாதியார்கள் விஷயமாக உபாத்தியாயர்கள் சொல்வதை மாணக்கர்கள் சரியாகத் தெரிந்து கிரஹித்துக் கொள்ளாமலும், பிறகு அவர்கள் மனுஷியத் தன்மை யடையுங்கால் அவரவர்கள் வாழ் நிலைமைக்குரிய கடமைகளைச் செய்து வர எவ்விதமும் பயன்படாமலுமிருந்தால், அவ்வித ஸ்தூலஞானம் அல்லது கேவல அறிவு (Instruction) அதிகப் பயன்படாது. சில ஸமயம் மூளைக்குப் பெருஞ் சுமைபோல் ஆனாலும் ஆகலாம். இக்காலத்தில் கற்பிக்கப்படும் அறிவு ஸார்த்தகமாக வேண்டுமானால், கூடியவரையில் பிரத்தியக்ஷத்தில் காண்பிக்கக்கூடிய வஸ்து ஞானத்தைக்கொண்டே பாடங்கள் கற்றுக் கொடுக்கப்படவேண்டும். மேற்குத் தேசத்தார்கள் இதை யறிந்து, பாடசாலைகளில் ஏற்படும் அறிவு, மாணக்கர்களுக்கு அனுபவரீதியாகப் பயன்படும்படித் தகுந்த ஏற்பாடுகள் செய்து வந்து கொண்டிருக்கிறார்கள். இவ்விஷயத்தில், மேன்மேலும் ஊக்கமுடையவர்களாய்த் தங்கள் ஆஸ்தையைக் கூடியமட்டில் கார்யத்தில் காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள். நம் தேசத்தில் இவ்விதப் பிரயத்தினம் அனேகமாய் இல்லாமலிருந்து, கொஞ்சகாலமாக ஸ்வல்பமாய்ப் செய்யப்பட்டு வருகிறது. பௌதிக சாஸ்திரப் பாடங்கள் விஷயத்தில் மாணக்கர்கள் எக்ஸ்பெரிமெண்ட்ஸ் (Experiments) என்று சொல்லப்பட்ட பலவித கருவி விசேஷங்களின் அமைப்பு, அதன் செயல் முதலிய விபரத்தை உபாத்தியாயர் செய்து, தாங்கள் பார்க்கவோ அல்லது சில ஸமயம் தாங்களே நேரில் செய்து தெரிந்துகொள்ளவோ ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இனி, செய்யப்படவேண்டியது ஏராளமாயிருக்கிறது. 'அல்பாரம்ப: க்ஷேமகர:' என்பதுபோல், ஒருவிதத் திருப்தி உண்டாகக்கூடியதாயினும், ஆரம்பத்தோடேயே அனேகமாய் நின்று விட்டால், தேசாபிவிருத்திக்குப் பாதகமாயிருக்கும்.

இவ்விஷயத்தில் பயாஸ்கோப் மூலமாய்த் தெரிந்து கொள்ளவேண்டிய அம்சங்கள் அனேகமிருக்கின்றன. ஏற்கெனவே, மேற்குத்தேசத்தில் இது சம்பந்தமான ஏற்பாடு

கள் செய்யப்பட்டு வருகின்றன. ஓரிடத்தில், ஏழு பாடசாலைகளின் அதிகாரிகள் ஒன்று சேர்ந்து தங்கள் பாடசாலைகளிலுள்ள மாணுக்கர்கள் ஒவ்வொரு வாரக் கடைசியில் ஒரு நாள் காலையில் பயாஸ்கோப் சாலைக்குப் போய், அந்த வாரத்தில் நடந்த பாடங்களுக்குரிய படங்கள் காட்சியைப் பார்த்துவிட்டு உடனே தங்கள் தங்கள் பாடசாலைக்கு வந்துசேரும்படியான ஏற்பாடு செய்து வருகிறார்கள். பூகோள சாஸ்திரம், பௌதிக சாஸ்திரம் இவைபோன்ற பாடங்களைச் சார்ந்த காட்சிகள் விசேஷ உபயோகமுள்ளவை. பிட்ஸ்பர்க் (Pittsburg) என்னுமிடத்திலுள்ள தொழில் கலாசாலையில் (Technical School), லோஹ ரூபமான இரும்பு, உலகத்தில், மிகப்பெரிய சுரங்கத்திலிருந்து மஹத்தான யந்திரங்களால் வெட்டப்படுவதும், தகுந்த கலங்களில் ஏற்றிக்கொண்டு போய் இறக்கப்படுவதும், பிறகு ஐக்கிய மாகாணங்களிலுள்ள உருக்கு யந்திரச் சாலைக்கு அனுப்பப்படுவதும், அவ்விடத்தில் இரும்பு லோஹத்தை உருக்கி, நேர்த்தியான எஃகு ஆக்குவதும், வெகு விசதமாய்ப் பயாஸ்கோப் படங்கள் மூலம் கற்பிக்கப்படுகின்றன. லண்டன் தேசத்தில் உபாத்தியாயர்களின் சங்கமானது (London Teachers' Association) இவ்வித படங்களின் உபயோக விஷயமாய்ச் சர்ச்சை செய்து, அவர்களுள் சிலரைக், காரிய விசாரணை ஸபையாராக நியமித்து, அவர்கள் ஏற்கெனவே ஏற்படுத்தியுள்ள படங்களை எவ்வாறு உபயோகப்படுத்தலாமென்றும், எலிமெண்டரி பாடசாலைகளுக்குத் தகுதியாய் எவ்வித புதிய படங்கள் தேவையாயிருக்குமென்றும் விசாரித்துகொண்டிருக்கிறார்களாம். நகரத்தில் வசிக்கும் சிறுவர்களுக்கு, கிராமவாஸ ஸம்பந்தமான படங்களும், உள் பிரதேசத்திலிருக்கும் சிறுவர்களுக்கு கடற்கரை பட்டினம், துறைமுகம், கப்பல் சமுத்திரத்தில் செல்வது முதலிய காட்சிகளும், பூகோள சாஸ்திரம், தேச சரித்திரம் கற்றுக் கொள்பவர்களுக்கு இதர தேசத் தோற்றங்கள், அஜ்ஜாதியாரின் நடை, உடை, பாவனைகள் சம்பந்தமான சித்திரங்களும்,இன்னும் நாம் தினந்தோறும் பார்த்துக் கையாடிவரும் பதார்த்தங்களை உண்டு பண்ணுவதை யுணர்த்தும் படங்களும் நிதர்சனமாய்க் காட்டப்படின், அந்தந்தப் பாடங்களில் சிறுவர் சிறுமிகளுக்கு மனங்கவிய ருசி பிறந்து, அவைகளை வெகு சீக்கிரத்திலும் ஸுலபமாயும் தெரிந்து கொள்ள இடமுண்டென்று சொல்லவேண்டுமா? தவிர, சில விஷயங்கள் நாடக ரீதியாயும், நவீன கதா (Novels) ரூபமாயும் எழுதப்பட்டால் நன்றாய்ப் புத்தியிற் படியுமென்று எழுதப்பட்டு வருகின்றன. நத்கால நாவல்களால் சில பாதகங்களுமுண்டு. புத்தியை உபயோகித்து நல்ல விஷயங்களை மாத்திரம் கிரஹிக்கவேண்டும். மேற்கண்ட விஷயங்களை நாடகரூபமாய் நடித்துக் காட்டினால் நிரம்ப ஸ்வாரஸ்யமாயிருக்குமென்றே நாடகங்கள் பற்பல பாஷையில் நடைபெற்று,வருகின்றன. இவ்விஷயத்திலும் பயாஸ்கோப் மூலமாய் எவ்வளவு செய்யக்கூடுமென்று ஏற்கெனவே அதைப்பார்த்தவர்கள் எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

ஆகையால், இவ்விதக் காட்சிகள் ஜனங்களுக்குப்பொதுவாய்,விநோதார்த்தமாகவும், அரும்பொருள் ஞானம் உண்டாக்குவதற்காகவும், சிலருக்கு வியாபாரத் தொழிலாகவும், மற்றும் பலருக்கு ஜீவனோபாயமாக இருப்பதுடன், நானாவித பாடசாலைகளில் படிப்பவர்களுக்கு எவ்வளவு யதார்த்தமாய் உபயோகப்படக்கூடும் என்று சற்று ஆலோசித்தால் நன்கு விளங்கும். இவ்விஷயத்தில் ஜனங்களின் வித்தையையும், க்ஷேமத்தையும் கருதும் ராஜாங்கத்தாரும், தேசாபிமானிகளான பிரபுக்களும், தேசத்தலைவர்களும், பாடசாலைகள் நடத்திவரும் தனிகர்களும், சங்கத்தார்களும், எல்லாப் பதவிகளிலுள்ள உபாத்தியாயர்களும் கூடிய சீக்கிரம் கவனித்தல் அவசியமே.

---

அறிவிப்பு.—நமது "விவேக போதினி" ஆபீஸை திருவல்லிக்கேணியிலிருந்து மயிலாப்பூருக்கே ஸ்திரமாய் மாற்றிவிட்டோமென்பதை முன்பே பத்திரிகைவாயிலாகத் தெரியப்படுத்தியிருந்தும் அதைக்கவனியாமல் நம் நேயர்களிற் பலர் தங்கள் கடிதங்களை,திருவல்லிக்கேணி விலாஸத்திற்கெழுதுவதால் வீண்கால தாமதத்திற் கிடமாகிறது. இதை நேயர்கள் கவனிப்பாராக.



# உத்தம பத்தினி

## THE IDEAL WIFE

[ஸ்ரீமான் பண்டித மு.இராகவையங்கார் அவர்கள்]

பாண்டியனொருவன் மதுரைமாநகரில் அரசாட்சி செய்து வருங்காலத்தில், ஆஸ்தான புரோகிதனான பிராமணனொருவன், ஒருநாட் பகலில் திடீரென்று இறந்தான். அப்புரோகிதன் மனைவி இளம்பருவத்தினளாயினும், தன் நாயகனுடன் அன்றிரவில் ஸககமனஞ் செய்யத்துணிந்து, அச்செய்தியை அரசனுக்குத்தெரிவிக்கவும்செய்தனள். இறந்த பிராமணனது உத்திரகிரியை இரவின் முதற் சாமத்தில் நடக்கப் போவதாகவும், அப்போது, அவன் மனைவி உடன்கட்டை ஏறப்போவதாகவும் ஊர்முழுதும் பறையடிக்கப்பட்டது. அன்றிரவு வந்ததும், அக்காட்சியைக் காணவேண்டி நகரஜனங்கள் மயான பூமியை நோக்கித் திரண்டு சென்று கொண்டிருந்தனர். இங்கு இவ்வாறாக, அரசன் தன் மனைவியுடன் தன் மாளிகையின் மேலமைந்த நிலாமுற்றத்தில் உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்தபோது, அரசி, மயானப் பக்கத்தில் தோன்றும் வெளிச்சத்தையும் அங்கு ஜனங்கள் கூடியிருப்பதையும் கண்டு, தன் நாயகனை நோக்கி "அங்கு என்ன விசேஷம்" என்று உசாவினாள்.

அரசன்—"என் அன்பே! உனக்குஇன்று நடக்கப்போகும் மிகப்பெரிய விசேஷமொன்றைச் சொல்ல மறந்துவிட்டேன். இன்று பகலில் நம் புரோகிதர் திடீரென்று இறந்துவிட்டாராம். அவருடன் இரவில் ஸககமனஞ் செய்ய இளம்பருவத்தினளான அவர் தர்மபத்தினி துணிந்திருக்கும் செய்தியை அவ்வுத்தமியே எனக்குச் சொல்லியனுப்பினள். இவ்விஷயம் நகரத்தார்க்குப் பறைமூலமாகவும் தெரிவிக்கப்பட்டமையால் இத்தனை ஜனங்கள் மயானபூமியில் திரண்டிருக்கின்றனர். இன்னுஞ் சில நிமிஷத்துக்குள், அவ்வுத்தமி உடன்கட்டையேறி உயர்ந்த உலகம் புகுவாளென்பது திண்ணம். கணவனிடம் உண்மையன்புடைய இத்தகைய பத்தினிகளாலன்றோ நாடு, வளமும் செல்வமும் வாய்ந்திருப்பது" என்றான்.

அரசி, இவ்வசனங்களைக் கேட்டதும், அப்பக்கத்தை நோக்கிக் காறியுமிழ்ந்து தன் அருவருப்பைக் காட்டினள். இது கண்ட அரசன் கடுகடுப்புடன் தன் மனைவியை நோக்கி "பெண்ணே! உத்தமியாகிய இப்பத்தினி விஷயத்தில், அறிவொழுக்கங்களில் உயர்ந்த நீ, இவ்வாறு அபசாரப்படுவாய் என்று நான் ஒருபொழுதும் எண்ணவில்லை. கணவனுடன் உயிர்துறக்கப்போகும் இப்பெரியவளிடம் நீ கண்ட குற்றம் இன்னதென்று எனக்கு விளங்கவில்லை. உன் செயலுக்குச் சரியான காரணம் கூறவேண்டும்" என்றான்.

அரசி—தேவரீர் திருமுன் என்னையறியாமலே நிகழ்ந்த என் செயலை அரசே! பொறுத்தருள்வீராக. இன்று ஒருத்தி உடன்கட்டையேறப்போவதாகப் பகலில் ஊரெங்கும் பறையெழுந்தது என்றும் கேள்வியுற்றேன். அதற்கேற்பத் தாங்கள் கூறும் விஷயமும் ஒத்திருக்கிறது. உயிர் துறக்கும் செய்தியைத் தங்கட்கும் இம்மங்கை அறிவித்தனள் போலும். மிக நன்று. உண்மைப் பேரன்புகொண்ட உத்தம பத்தினிகளுக்குரிய இலக்கணம், தாங்கள் கருதுவதுபோல், இவட் குண்டென்று நான் ஒருபோதும் ஒப்பேன்.

அரசன்.—பெண்ணே! நீ சொல்வது எனக்கு இன்னும் விளங்கவில்லை. சிறு வயதினளாயிருந்தும் தன் கணவனுக்குப் பின் உயிர் வாழ ஒருப்படாத இவ்வுத்தமியினும் உண்மையன்புடைய பத்தினி யார் சொல்லுக?

அரசி.—என் அருமையரசே! உண்மையன்புபற்றி உடன்கட்டை ஏறுவதுமுண்டு என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் இன்றுநிகழுஞ்செயல் அத்தன்மையதன்று. ஒரு பெண் தன் கணவனுடன் சாதற்கு வேறு காரணங்களுமுண்டு. நோயுடையவளாய்த் தன் வாழ்க்கையை இயற்கையில் வெறுத்திருக்கும் ஒருத்தி, இதனைத் தக்க சந்தர்ப்பமாக்கிக்கொண்டு, தன் கணவனு

டன் இறத்தல் கூடும் இல்லையேல், கணவனுக்குப்பின் கூந்தலிழந்து சுபகாரியங்களுக்குதவாமல் அமங்கலையாய்ப் பட்டினிகிடந்து இகழப்படுவதிலும் இறப்பது நன்றென்று இறத்தலுங் கூடும். இன்றேல், கணவனோடு உயிர் துறந்தவர் சுவர்க்கம் பெறுவர் என்ற ஆப்தவசனங் கேட்டிருந்து அவ்விருப்ப மிகுதியால் சாகவும் பெறும். இவையன்றி, பெரியோர்களும் பிறரும் நிறைந்த கூட்டத்தில் ஸககமனஞ்செய்வதாற் பெரும் புகழுண்டென்று கருதி இறத்தலும் ஆகும். ஆதலால், உண்மைப் பேரன்பு பற்றியே இது நிகழவேண்டும் என்பதில்லை. இன்று நடக்குஞ் செயலோ, கடைசியிற் கூறிய புகழைக் காரணமாகக் கொண்டு நடப்பதாகவே என் சிற்றறிவிற்குப் புலப்படுகிறது. இல்லையேல், அரசராகிய தேவரீரிடம் தன் செயலை அம்மங்கை தெரிவிக்கும்படி செய்வானேன்? ஊர்முழுதும் பறை யறையச் செய்து இத்தனை கூட்டங்களைத் திரட்டுவானேன்? வெளிச்சங்களை யுண்டாக்கிக் கொள்வதேன்? என் அன்புடைய அரசே! இவையெல்லாம் ஒரு பெரிய கூத்தாகத் தோன்றவில்லையோ? ஆதலால், உண்மையன்பால் இதுநிகழ்வதாக எனக்குத் தோன்றவில்லை.

தன் பெருந்தேவியின் அழகான இவ்வார்த்தைகளைக் கேட்டதும், அரசன் மேற்சொல்ல இயலாமற் சிறிது தயங்கினான். “ஆயின், உண்மை யன்புடைய பத்தினிகளின் இயல்பு எத்தகையது?” என்று தன் தேவியை உசாவினன்.

அரசி.—தன் அன்புடைய கணவன் இறந்தபின் அரைநிமிஷமும் உயிர் தாங்கிநிற்க, உத்தமிகள் ஒருப்படுவார்களோ? காதலனிறந்தானென்பது கேட்டபொழுதே தன்னடைவே உயிர் போதலன்றோ, ஒப்புயர்வற்ற கற்புடையரசிகளியல்பு. உண்மையன்பால், புருஷனுடன் ஸககமனஞ் செய்வதுமுண்டாயினும் மேற்கூறிய உடனுயிர் துறக்கும் பெருமைக்குப் பிற்பட்டதே மற்றவையனைத்தும் என்பது நிச்சயம்.

இவ்வழகிய வசனங்களைச் செவியேற்றதும், அரசியின் வாதத்தில் மகிழ்ச்சியடைந்தனாயினும், வேறுபலவகை எண்ணங்களும் அரசனுக்குள் உண்டாயின. பின், அவ்விஷயமான பேச்சை ஒருவகையாக ஒடுக்கிக்கொண்டு, வேறு காரியத்தை மேலிட்டுத் தேவியை விட்டுப் பிரிந்தான்.

இச்செய்தி நடந்து சில மாதங்கள் கழிந்தன. புரோகிதன் மனைவியைப் பற்றிய பேச்சு அரசியுடன் பின் நிகழவுமில்லை. ஒரு நாள், தான் வேட்டையாடி வர விருப்பமுள்ளவனாய்ச் சொல்லி மறுநாள் பிரிந்துபோகக் கருதியிருப்பதை அரசன் தேவிக்குத் தெரிவித்து, அதற்கு வேண்டியவற்றைச் சித்தப்படுத்திக்கொண்டு தூரத்துள்ள பெருங்காடொன்றை நோக்கிப் புறப்பட்டான். அக்காடு சென்றதும், அவன் அங்கிருந்த துஷ்ட மிருகங்களை வேட்டையிற்கொன்று, தான் வந்த காரியத்தை முடித்துக்கொண்டான். பின் தனக்கும் தன் தேவிக்கும், புரோகிதன் மனைவி சம்பந்தமாகச் சில மாதங்கட்கு முன் நிகழ்ந்த சம்பாஷணை தன் ஞாபகத்துக்கு வரஅதைப்பற்றிச் சிந்திக்கலானான். “‘உண்மையன்புடைய உத்தமிகள் தம் கணவனிறந்தது கேட்டதும் தன்னடைவே உயிர் நீங்குவர்’ என்று என் அருமைத்தேவி கூறினளே! என்பாற் பேரன்புடைய அவளிடம் அவள் கூறிய உத்தம விலக்கணம் இருக்குமோ? இதைச் சோதிக்க இப்போது நல்ல சமயமிருக்கிறது. ஒருகால், என் சோதனையில் அவள் உயிர் நீங்கக் கூடுமாயின் என் செய்வேன். ஆனால், அத்தகைய அரிய செயல் நிகழுமென்று தோன்றவில்லை. ஒருகால் நிகழ்ந்துவிடுமாயின், புருஷனாகிய நான் உயிர் துறப்பது பழியாதலால், அரசியலைத் துறந்து தவம் புரிவேன்” என்று தனக்குள் முடிவு செய்துகொண்டான். அதன்படியே, தன் முக்கிய வேலையாளரிற் சிலரைத் தன் நகர்க்கு முன்னதாக அனுப்பி, “வேட்டைக்குச் சென்ற அரசன் ஒரு பெரும்புலியை எதிர்த்து அதனால் அறைபட்டு இறந்தான்” என்ற சமாசாரத்தை, அரசனிறத்தற்கு அடையாளமான சாப்பறை முழக்கத்தோடும், நகர்க்குட் சென்று அறிவிக்கும்படி திட்டம் செய்தான்.

அரசனாணைப்படியே, அவர்கள் அரசனது சாவைக் குறிக்கும் பறையை முழக்கிக்



கொண்டு மதுரையின் கோட்டையுட் பிரவேசித்தார்கள். இப்பறையோசை அரண்மனை அந்தப்புரத்துக்கும் எட்டியது. ‘அரசன் பெரும்புலியொன்றால் வேட்டையில் அடிபட்டிறந்தான்’ என்ற செய்தி சிலர் அரசிக்கு அறிவிக்கவே, “என் அன்பே!” என்று கீழே விழுந்தாள்; அவள் உயிரும், தரையில் விழுமுன்பே, நீங்கியது. அப்போது அரண்மனை அல்லோலகல்லோலப் பட்டது. உடனே அரசி இறந்ததற்கு அடையாளமான பறை, ஊரார்க்கு அச்செய்தியறிவிக்க அரண்மனையிலிருந்து நகருட் பிரவேசித்தது. இவ்வாறு அரசனது சாப்பறை ஒரு புறம் எதிர் வர, அரசியின் சாப்பறை அதனைஎதிர்கொண்டு செல்ல, ஊர்நடுவே, அவ்விருவகைப் பறைகளும் தம்முள் சந்திக்கலாயின. இந்நிலையில் அந்நகரம் பட்டபாட்டை நாம் எடுத்துரைக்கவும் வேண்டுமோ?

இவ்வாறு தன் பொய்ச் சாவைப் பற்றிய பறை முழக்கத்தால் தன்பெருந்தேவி உயிர் துறந்ததும், அவளிறந்ததைக் குறிக்கும் உண்மைப்பறை, தன் போலிச்சாப்பறையை எதிர்கொண்டு சந்திக்கும்படி நேர்ந்ததுமாகிய செய்திகள் அரசனுக்கு எட்டியதும் அப்பாண்டியன் ‘அந்தோ! இத்தகைய உத்தமியை அநியாயமாய்ப்பரீக்ஷித்து இழந்தேனே. அவளுயிர்போல் என்னுயிரும் உடனீங்காமையால், அன்பிற் கடைகெட்டவன் நானே யன்றோ? இனி என் வாழ்நாள் கெடுவதாக” என்று அரசியலைத்துறந்து தவசியாயினான்.

இவ்வழகிய சரித்திரத்தாலும், கணவனிறந்ததுகேட்டதும் உயிர் நீங்கும் பத்தினிகளே உண்மையன்பு பொருந்தியவர்களாதலால் முன்னவரெல்லோரினும் மேலானவரென்பதுவிளங்கும். இறையனார் களவியலுரைகாரரும் அன்பின் இலக்கணத்தைக்கூறி வருமிடத்தில் அடியில் வருமாறு எழுதுகின்றார்: “அன்புடையரான குணம் யாவையோவெனின், சாவிற்சாதல், நோவின் நோதல், ஒண்பொருள் கொடுத்தல், நன்கினிது மொழிதல், புணர்வு நனிவேட்டல், பிரிவு நனியிரங்கல் என இவை; என்றார்க்கு, இவை திரிவுடைய; என்னை இவை திரிவுடையவாறெனின்;—சாவிற்சாதல் என்பது அன்பினானே நிகழ்வதன்று: பிணியுடையளாய் வாழ்க்கையை முனிந்து செல்வாள், இது தலைக்கீடாகச் சாவலென்று சாவவும் பெறும்; இனிக்கண்டீரன்றே, ‘குடுமிக் கூந்தலில் நறுநெய் பெய்து, கொண்டானிற் பின்னையுமிருந்து சோறு தின்று வாழ்கின்றாள், ஓ! கொடியளே காண்’ என்று நித்தல் பழி தூற்றப்பட்டிருந்து, பின்னுமே ஒருநாட் சாவன், ஆதனான் இன்றே சாவன் எனச் சாவவும் பெறும்; அதுவன்றிப் புகழ் வேண்டிச் சாவவும் பெறும்; கணவனோடு செத்தார் சுவர்க்கம் புகுவரென்னும் உரை கேட்டு அது வேட்கையாலும் சாம்; அஃது ஒரு தலையாக நிகழ்வதன்றென்பது. இனி, நோவின் நோதல் என்பது இன்ன நோவு என்றறியலாகாது; அதுவுந் திரிவுடைத்து; அன்புள் வழியும் அன்பில் வழியும் தோன்றுமென்று மறுக்கப்படும். ஒண்பொருள் கொடுத்தல் என்பது, கணிகையர் கூட்டம் பொருளான் ஆம்; ஆதலின் அதுவும் அன்பன்று. நன்கினிது மொழிதல் என்பது, நன்கினிது சொல்லிப் பகைவருந் தங்கருமம் முடிப்பராகலின் அதுவும் அன்பன்று. புணர்வு நனிவேட்டலென்பது, அச்சங் காரணத்தானும் புணர்வுவேட்டார்போலப் புணர்வர். பிரிவு நனியிரங்கலென்பது, நீரும் ஆடார், பூவுஞ்சூடார், சாந்தும் அணியாராய்ப் பிரிந்திருந்தார்போல வாடியிருப்பர் அன்பிலாதாரு மாகலின் அதுவும் திரிவுடைத்து. இனித் திரிவின்றி இக்குணங்கள் நிகழ்ந்த வழி அன்புண்டெனக் கொள்க. அஃது எங்ஙனம் நிகழுமெனின், அவன் (கணவன்) இறந்துபட்ட வாறே தானும் இறந்துபட்ட வழி அன்பினானே ஆயிற்றெனக்கொள்க”. இவற்றால், உண்மை யன்பின் இலக்கணம் இத்தன்மைத்தென்பது கரதலாமலகமாக விளங்குகின்றதன்றோ?

இத்தகைய ஒப்புயர்வற்ற அன்பு, ஆண்பாலாரைப்பற்றிப் பெண் பாலார்க்குள் மட்டும் நிகழ்வதன்று, பெரு நட்புக்கொண்ட ஆண்மக்கள் இருவர்க்குள்ளும், நிகழக் கூடியதே. நட்புடையார் இருவருள், ஒருவர் இறந்த செய்தி கேட்டதும் மற்றவர் தன்னடைவே உயிர் நீங்குவதற்கு, ஒருவர்க்கொருவர் அடுத்துப் பழகுவதே காரணமா

காமல், ஒத்த உணர்ச்சி கொண்டிருப்பதே முக்கிய காரணமாகச் சொல்லப்பட்டுள்ளது. இதனைப் "புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான் - நட்பாங் கிழமை தரும்" என்ற திருக்குறளாலும் அதற்குப் பரிமேலழகர் எழுதிய உரையாலும் தெரியலாம். கோப்பெருஞ் சோழன் என்ற அரசனிறந்ததும், பிசிராந்தையார் என்ற புலவர் அச்சோழனுடன் நெருங்கிப் பழகாதவராயினும், தன்னடைவே உயிர் நீங்கினர். இதற்கு, அவர்க்கும் அச்சோழனுக்குமிருந்த ஒத்த உணர்ச்சியின் மிகுதியே காரணமென்று சொல்லப்படுகிறது.

இப்புலவர் செயல், அன்பின் ஒப்புயர்வற்ற நிலையாகக் கருதத்தகும். கணவனிறந்தபின், ஸககமனஞ்செய்யும் பத்தினிகளதுபோன்ற நிலையும் மிகுந்த நட்பினரான ஆண்மக்களிடம் உண்டு. பாரி என்ற தம் உயிர்த்துணைவனான வள்ளல் இறந்ததும் கபிலர் என்ற புலவர் பெருமான், சில காலத்தில் அக்கினியிற் பிராயோபவேசஞ் செய்த சரித்திரம் புறநானூற்றிற் காணப்படுவதே, இதற்குத் தக்க சாட்சியாகும். இவ்வாறே, பிற்காலத்திற் பொய்யாமொழியார் என்ற புலவர், சீநக்கன் என்ற தன் அருமைப் பிரபு இறந்ததும், அவனுடன் தீப்பாய்ந்து உயிர்விடத் துணிந்து, காஷ்டத்தின் மேற் கிடந்த அவனை நோக்கி "அன்று நீ செல்லக் கிடவென்றாய் * ஆருயிர்விட்-டின்றுநீ வானுலக மெய்தினாய்—நன்று நன்று— மாநக்க பூண் முலையார் மாரனே தென்னரசூர்ச்—சீநக்கா செல்லக் கிட" என்ற பாடலைக்கூறி அக்னியிற் பிரவேசித்தாரென்பது பிரசித்தம். இதுவரையும் கூறிவந்த விஷயங்களால், தமிழ்நாட்டார் பத்தினிப்பெண்டிரைப்பற்றிக் கொண்டிருந்த பெருமதிப்பு இத்தகையது என்பது நன்கு விளங்கத்தக்கது.

* சீநக்கன் மனைவி, இப்புலவர் படுக்கையில் அறியாமல்வந்து படுத்துறங்க, அதனைச் சீநக்கன் கண்டு அறியாமையால் கோர்ந்ததென்று எண்ணி, புலவரை மெள்ள எழுப்பி, 'சிறிது விலகும், நானும் உடன் படுப்பேன்' என்றானாம். அக்கதையைக் குறித்தது இத்தொடர் என அறிக.

# ஹாலண்டு தேசம்

## தேச அமைப்பு

## HOLLAND

[ஸ்ரீமான் வி. எஸ். சுந்தரம் ஐயரவர்கள் பி. ஏ., எல்.டி.]

இப்போது சண்டைசெய்துகொண்டிருக்கிற ஜெர்மனி தேசத்தின் வடமேற்கில் டச்சுக்காரர்களிருக்கும் ஹாலண்டு தேசம் இருக்கிறது. அநேக வருஷங்களுக்கு முன் ஐரோப்பா கண்டம் என்று சொல்லப்படும் பூமி பிரிவு படாமல், இங்கிலாந்து தேசமும் பிரான்சு, ஹாலண்டு தேசங்களுடன் சேர்ந்து இருந்ததாக மிகப்படித்தவர்கள் சொல்லுகிறார்கள். நாளடைவில் தாழ்ந்த பூமியெல்லாம் சமுத்திரத்தால் பிரவேசிக்கப்பட்டு இங்கிலாந்து பிரிவுபட்டதாம். இப்பொழுதும் இங்கிலாந்தின் கிழக்குப் பாகத்தில் அநேக பிரிவுகள், முக்கியமாய் ஹாலந்துக்கு எதிரிலிருக்கும் பாகங்கள், ஹாலந்தைப்போலவே ஒரே சமதரையாயும் சதுப்பு நிலமுள்ளதாயுமிருக்கின்றன. இந்தச் சமதரையாயும் சதுப்பு நிலமாயிருக்கிற பாகங்களிலுள்ள குடியானவர்களும் வேலைக்காரர்களும் மிகப் பிரயாசைப்பட்டு நாளடைவில் கொஞ்சங் கொஞ்சமாக மிக அசௌகரியமாயுள்ள சதுப்பு நிலங்களையும், உப்புத்தண்ணீர் தேங்கியிருக்கும் நிலங்களையும் மேய்ச்சல் தரைகளாக ஆக்கிக்கொண்டு வருகிறார்கள். சமுத்திரத்தோடு போட்டி போட்டுக்கொண்டு வேலை செய்பவர்கள் போல், சமுத்திர ஜலத்தைத் தடுத்தும் இறைத்தும், அநேக விதமாய்ப் பாடுபட்டும் சதுப்பு நிலங்களை நல்ல மேய்ச்சல் தரைகளாகவும், நிலங்களாகவும் சில இடங்களில் பயிர் மாற்றிக்கொண்டு வருகிறார்கள். சில வேளைகளில் சமுத்திரம் நிலத்தை அடித்துக் கரைத்து விடுவதுமுண்டு. தரைமட்டம் கீழேயும் சமுத்திர ஜல மட்டம் மேலேயுமிருப்பதால் இந்தச் சிரமம் இருந்துகொண்டே யிருக்கிறது. ஆனால் சலிக்காமல் ஹாலந்திலும், இங்கிலாந்தின் கிழக்குப்பாகத்திலும் ஜனங்கள் பாடுபடுகிறார்கள். பொறுமையிலும், வேலையிலும், இவ்விஷயத்தில் டச்சுக்காரர்களுக்கு



இங்கிலீஷ்காரர்கள் நிகரல்ல. ஒவ்வொரு வருஷமும் அணைகள் விடாமல் அங்கங்கே போட்டுச் சமுத்திர ஜலம் உள்ளே வரவொட்டாமல் தடுத்து வருகிறார்கள். இப்போது உள்ள ஹாலந்து தேசத்தில் அநேக பாகம் சில வருஷங்களுக்கு முன்னால் சமுத்திரமாகவே யிருந்தது. சமுத்திர மட்டத்துக்குக் கீழே நிலமிருந்தாலும், அநேக உபாயங்களால் சமுத்திரத்தை மேலோங்க விடாமல் தடுத்தே வருகிறார்கள். சமுத்திரத்துக்கு அணைபோட்டு யாரால் சாத்தியம் என்று மற்ற தேசத்தார்கள் நினைக்க, இவர்கள், ஊக்கத்தினாலும், விடாமுயற்சியாலும் ஆங்காங்கு பெரிய அணைகளைப் போட்டு வெகு ஜாக்கிரதையாய் அணைகளைப் பாதுகாத்து, சில இடங்களில் மதகுகள் ஏற்படுத்தி யிருப்பது பார்த்தால் வெகு ஆச்சரியமாயிருக்கிறது. ஹனுமார் அணைபோட்டதாகச் சொல்வது, இத்தேசத்தைப்பார்த்தால் ஒரு ஆச்சரியமாகத் தோன்றாது. இப்படிச் சமுத்திரத்தை ஜெயித்து அணையால் தடுக்கப்பட்ட நிலம் மிக ஈரமாயும் சதுப்பு நிலமாயுமிருப்பது ஆச்சரியமல்ல. நிலத்தை ஒரு பெரிய உயர்ந்த இடத்திலிருந்து பார்த்தால் ஒரு சிறு இலையில் எத்தனை நரம்புகள் ஓடியிருக்கிறதோ அதுபோல அநேக ஆயிரக் கணக்காய் கால்வாய்கள் அங்குமிங்கும் ஓடக் காணலாம். இக்கால்வாய்களுக்கு மத்தியில் பச்சப்பசேலென்று கண்ணுக்குக் குளிர்ச்சியாய் அநேக இடங்களும் தென்படும். அங்கங்கே மத்தியில் கிராமங்களும் பட்டணங்களும் காணப்படும். இக்கால்வாய்கள் எல்லாவற்றிலும் ஒரே ஜலம் தான் ஓடுகிறது. சில இடங்களில் கால்வாய்கள் பெரிதாயும் சில இடங்களில் சிறிதாயுமிருக்கும். கால்வாய்கள் ரஸ்தாக்களுக்குப் பதிலாய் இருப்பது நன்றாய் விளங்கும். வியாபாரம், போக்கு வரவு முழுதும் கால்வாய்களில் தான். வண்டிகளுக்குப்பதில் படகுகள் உபயோகப்படுகின்றன. ரெயில்ரோடுகளும் அநேகமுண்டு. ஆனால் அதிக பாரத்துடன் ரெயில் வண்டிகள் போகமுடியாது. போனால் வண்டிச்சக்கரங்கள் சேற்றில் புதைந்து போவது போல், ரெயில் வண்டி அதிலுள்ள பாரத்துடன் புதைந்து விடுவது சகஜம். ஆகையினாலே படகுகளில் அதிக வியாபாரம் நடக்கும். இப்போதும் கூட டச்சுக்காரர்களுக்குச் சமுத்திரத்துக்கு அணைபோட்டு நிலம் சேர்ப்பது முக்கிய தொழில். அணைகளைப் பலப்படுத்திக் காற்றினால் ஓட்டப்படும், யந்திரங்கள் வைத்து ஜலத்தை இறைத்துப் பூமியைச் சீர்திருத்துகிறார்கள். ஜலத்தை இறைத்துக் கால்வாய்களில் விட்டு அதன் வழியாய் ஜலம் சமுத்திரத்தில் சேரும்படி செய்துகொண்டே வருகிறார்கள். சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன், ஒரு பெரிய ஏரி ஜலத்தை இறைத்து அதைச் சாகுபடிக்குக் கொண்டு வந்து விட்டார்கள். இப்போதும் ஒரு சிறிய கடல் என்று சொல்லக் கூடியதை இறைத்துக் கீழ் நிலத்தைச் சாகுபடி செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட தேசத்தில் நல்ல குடி தண்ணீர் எப்படி அகப்படும்! இச்சதுப்பு நிலத்தில் எப்படித்தான் வீடு கட்டமுடியும்! ஒவ்வொரு வீடும், ஒரு குளத்தில் தெப்பம் கட்டினால், நீராழி மண்டபம் எப்படியோ அப்படித் தானிருக்க முடியும்.

---

**நம் சந்தா நேயர்களுக்கு**—பிரதி மாதமும். சந்தாதார்க்குப் போதினிச் சஞ்சிகைகள் மிகுந்தஜாக்கிரதையுடனேயே அனுப்பப்படுகின்றன. அப்படியிருந்தும், நம் நேயர்களிற் சிலர் 2,3 மாதப் பிரதிகள் கிடைக்கவில்லையென்றெழுதுகிறார்கள். காகிதப்பஞ்சத்தினால், முன்போல், வேண்டிய அளவிற்கு அதிகமாக விவேக போதினிப் பிரதிகள் அச்சடிக்கப்படுவதில்லை. ஆகையால், அந்தந்த மாதக் காப்பிகள் கிடைக்காதவர்கள் உடனுக்குடனே விவேக போதினி மானேஜருக் கெழுதிக்கொண்டால்தான், முடிந்த வரையில், காப்பிகள் கைவசமிருந்தால், அனுப்பமுடியும். தவிரவும், சந்தா நேயர்களிற் பலர், ரிப்ளை கார்ட் அல்லது ஸ்டாம்பு அனுப்பாததால், அவர்கள் கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில் எழுதமுடிவதில்லை. இதையும் நேயர்கள் கவனிப்பாராக. சந்தா நேயர்கள் விருப்பத்தை, எவ்வளவு தூரம் நம்மால், அசௌகரியமின்றி நிறைவேற்ற முடியுமோ அதைச்செய்ய நாம் எப்போதும் ஸித்தமாயிருக்கிறோம்.

டிஸம்பர் மாதத்துடன் சந்தாமுடிவாகிற சந்தா நேயர்கள், தங்கள் சந்தாப்பணத்தைக் காலதாமதம் செய்யாது அனுப்பக்கோருகிறோம், அப்படி அனுப்பாதவர்களுக்கு அடுத்த சஞ்சிகையை வி. பி. யில் அனுப்புவோம். வழக்கம்போல் நேயர்கள் அன்புடன் ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

# பாஷாபிமானம்

## LOVE OF MOTHER TONGUE

[ஸ்ரீமான் ராவ் ஸாஹெப் தோ. ராமகிருஷ்ண பிள்ளை அவர்கள். பி.ஏ.]

இப்போது ஆந்திர தேசத்தார் தென்னிந்தியாவிலிருந்து வேறு பிரிந்து ஒரு தனிமாகாணமாகத் தமது நாட்டைச் செய்துகொள்ள வேண்டுமென்று முயல்வதை நாம் அறிந்திருக்கிறோம். இதே மாதிரியாக ஒட்டிர தேசத்தார் தங்களுக்கு ஒரு தனிமாகாணம் வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கின்றனர். தமிழ் நர்ட்டைச் சேர்ந்த நமக்கு இம்மாதிரி ஆசை யுதிக்கவில்லை. இப்படி நமது நாட்டுக்குச் சமீபத்திலுள்ள நாடுகளிலுள்ளோர் முயலுங் காலத்து நாமும் தக்க முயற்சி செய்து தமிழ் நாட்டைத் திராவிடமர்காணமென ஒரு தனி மாகாணமாக்குதற்கு வேண்டும் முயற்சி செய்வது அத்தியாவசியகம்.

இந்த அபிப்பிராயம் நம்முன்னோர்களுக்கும் இருந்ததென்று ஒருவிதமாகச் சொல்லலாம். திராவிடவேதம் முதலான வழக்குகள், நம்முன்னோர் தம் நாடு தம் பாஷை முதலியவைகளிடத்து எவ்வளவு அபிமானம் வைத்திருந்தார்களென்பதைக் காட்டிடும். கம்பநாட்டாழ்வாரும்—

வேதத்திற் முற்செல்க மெய்யுணர்ந்தோர் விரிஞ்சன் [முதலோர்
கோதற்ற ஞானக்கொழுந்தின் முன் செல்க குணங் [கடந்த
போதக்கடலெங்கடென் குரு கூர்ப்புனிதன் கவி [யோர்
பாதத்தின் முன் செல்லுமே தொல்லை மூலப்பரஞ் [சுடரே

என்னும் செய்யுளாலே திராவிட வேதத்தின்மேல் தமக்குள்ள அபிமானத்தைக் காட்டியிருக்கிறார். பூர்வகாலத்தில் சாமானியருக்கும் இவ்வித அபிமானம் இருந்ததென்பதற்கு ஐயமில்லை "ஆரியக்கூத்தாடினும் காரியத்தின்மேற் கண்ணாயிருக்க வேண்டு"மென்னும் பழமொழியின் தாற்பரியத்தை ஊகித்து நோக்குபவர்க்கு இதன் உண்மை விளங்கும்.

இன்னும், இப்பழமொழியின் தாற்பரியத்தை ஆய்ந்து நோக்கும்பொழுது வேறொரு கருத்தும் வெளிப்படுகின்றது. இக்காலத்தில் சுகுண விலாச சபை முதலிய உயர்ந்த நாடக சபையார்கள் அனேக கதைகளை நடித்துக் காட்டுகிறார்கள். அக்கதைகளைக் கவனித்து நோக்குவோமாயின் அநேகம் வடமொழிக் காவியங்களை அனுசரித்தவைகளா யிருக்கின்றன. அவையையே மீட்டும் மீட்டும் நடித்துக் காட்டப்படுகின்றன. தமிழ் நாட்டில் பல ராச்சியங்களை யாண்ட பல அரசர்கள் தம் வீரத்தையும் தருமத்தையும் விளக்கியிருக்கிறார்கள். அவர்கள் கதைகள் தமிழ் நாட்டவர்க்கு அத்தியற்புதமாயிருக்கும். புறநானூறு முதலிய சங்கத் தமிழ் நூல்களிலே பல வள்ளல்கள், வீரர்கள், வீரத்தாய்மார்களினுடைய சரிதங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. அவற்றைக் கதைகளாக்கி நடித்துக் காட்டுதல் தமிழ் நாட்டுச் சிறுவர்களுக்கு எவ்வளவு அறிவினைத்தரும். யானே "பத்மினி", "கருமாறிப்பாய்ச்சல்" என்று இரண்டு புஸ்தகங்கள் இங்கிலீஷில் செய்து வெளியிட்டிருக்கிறேன். அவை யிரண்டும் தமிழ் நாட்டுக் கதைகளையே தெளிவாகக் கூறுகின்றன. "பத்மினி" தமிழிலும் மொழி பெயர்த்து வெளியாயிருக்கின்றது, மற்றொரு புத்தகத்தின் மொழிபெயர்ப்பும் விரைவில் வெளியாகும். இது போலவே பிறரும் தமிழ் நாட்டுக் கதைகளைக் கதை ரூபமாகவும் நாடக ரூபமாகவும் செய்து வெளிப்படுத்துவதோடு, நாடக சபைகளும் அக்கதைகளையே நடித்துக்காட்டுமாயின், நம் நாட்டு மக்களுக்குத் தேசாபிமானமும் உண்டாவதற்குச்சிறிதும் தடையிராது. அவ்வித அபிமானம் ஏற்பட்டாலன்றி தேசமும் பாஷையும் அபிவிர்த்தியடைவது அருமை.

---

அறிவிப்பு.—சந்தாநேயர்கள் தாங்கள் புஸ்தகங்களுக்கு ஆர்டர் அனுப்பும்போதும், சந்தாப்பணம் அனுப்பும்போதும், தங்கள் சந்தா நெம்பரையும் தெரியப்படுத்த வேண்டும். அப்படிச் செய்தாலன்றி புஸ்தகங்கள் குறைந்த விலைக்கு அனுப்ப முடியாது.



# சிறுவர்களின் பயிற்சி

## THE EDUCATION OF THE CHILD

[ஸ்ரீமதி லீதம்மாள்]

வெர்ட்ஸ்வொர்த் (Wordsworth) என்ற ஆங்கில கவி இயற்றிய சிரேஷ்டமான செய்யுட்களிலொன்றில், "குழந்தை மனிதனுடைய தகப்பனாயிருக்கிறான்" என்று கூறுகிறார். ஏனென்றால் குழந்தைப் பருவத்திலிருந்தே, மானுஷத்வம் உண்டாகிறது. குழந்தை எவ்வாறோ, அவ்வாறே அக்குழந்தை மனிதனாகும்பொழுதும் இருக்கிறான். அதேனெனில், குழந்தையா யிருக்கும்பொழுது ஒருவனுக்கு எந்தெந்த அனுபவங்கள் வருகிறதோ அவைகள், அவனிடத்திலுள்ள நல்ல அல்லது தீய குணங்களினுடைய வளர்ச்சிகளை நிர்ணயிக்கின்றன.

சிறுவர்கள் பேசும் பொய், செய்யுங் குற்றம் முதலிய வாலிபக் குற்றங்களுக்கெல்லாம் சர்வ ரோகௌஷதமாகப் பிரம்பினால் அடிப்பது முதலிய தண்டனைகளை விதித்தால் அவர்கள் திருத்தமாய் விடுவார்களென்று எண்ணி ஆதிகாலந் தொட்டு அனுசரித்து வந்தார்கள். இது தப்பு. அப்படிச் செய்யாமல் இப்பொழுது பையன்களுக்கும், பெண்களுக்கும், பயிற்சி செய்விக்கிறதில் பொறுப்பை வகிக்கிறவர்களான பள்ளிக்கூடங்களிலுள்ள உபாத்யாயர்களும், வீடுகளிலுள்ள பெற்றோர்களும், சிறுவர்களுடைய இயல்பை யறிந்துகொள்ளுவது மிகவும் அவசியமானது.

நாகரிகத்தில் தேர்ச்சியடைந்த இங்கிலாந்து (England) ப்ரான்ஸ் (France) இடாலி (Italy) யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்கா (United States of America) முதலிய தேசங்களில், குழந்தைகள், அன்பு பாராட்டிக் கவனத்துடன் நடத்தப்பட்டுச் சுவேச்சையாய் அபிவிர்த்தி யடையவேண்டுமென்கிற விஷயத்தை யறிய ஆரம்பித்திருக்கிறார்கள். பிரான்ஸிலும், அமெரிக்காவிலும், பள்ளிக்கூடங்களில் உபாத்யாயர்கள் சிறுவர்களைப் பிரம்பினால் அடிப்பது முதலிய தண்டனைகளை விதித்தால், அவர்களைச் சட்டப்படி குற்றவாளியாகத் தண்டிக்கிறார்கள். ஐரோப்பாவிலுள்ள கல்விமான்கள், சிறுவர்களின் மனதைப்பற்றிய சாஸ்திரத்தின் (Psychology) படிப்புக்காக அவர்களுடைய காலங்களைச் செலவிட்டு அச்சாஸ்திரீகப் படிப்பின் பலனாக அறிந்த நவீன விதமாகப் பயிற்சி செய்வதனுடைய விதங்களைக்கொண்டு சிறுவர்களுக்குப் பயிற்சி செய்விக்கிறார்கள்.

இந்த நவீன வழிகளென்னவென்றால்:—சிறுவர்களுக்கு நானாவிதமான அபிலாஷை யுண்டாக்குகிறது; அவர்கள் எந்தந்த வஸ்துக்களைப் பார்க்கிறார்களோ, அவற்றையெல்லாம் நன்றாக ஊகித்துணரச் செய்வது; அந்தந்த வஸ்துக்களின் குணங்களையும், பிரயோஜனங்களையும், ஆலோசித்தறியச் செய்கிறது; அவர்கள் சொல்லுகிற தப்புகளையும், செய்கிற கெடுதல்களையும் தாமே அறிந்துகொண்டு தம்மைத் தாமே திருத்திக் கொள்ளும்படி செய்கிறது;—முதலிய இவைகள்தான். சிறுவர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்காக அவர்களைப் பலாத்காரப்படுத்துகிற அறிவீனமான பழைய வழிகள் கொஞ்சங் கொஞ்சமாய் விடப்பட்டு, அவைகளுக்குப் பதிலாகச் சாஸ்திரீக படிப்பினுடைய நவீன வழிகள் வந்துகொண்டிருக்கின்றன. இந்த மாதிரி, நவீன வழிகள் வந்துகொண்டிருப்பதால், இவை வருங்காலத்து நற்குறிகள் என்று சொல்லலாம். ஏனெனில் வீடு ஒழுங்காயும் திருத்தமாயும், காரியங்கள் சரியாக நடப்பதற்காக, ஸ்திரீகளை ஒரு வீட்டுச் சாமான்போல நடத்திக்கொண்டு வந்தது எவ்வளவு நாகரீகமற்றதும், மிருகத்தன்மையுமாக இருந்ததோ, அதேபோலத்தான் குழந்தைகளை யடிக்கிறதும் என்று இப்பூவுலக முழுவதும் கொஞ்ச நாளைக்குள் அறிவார்களென்று தோன்றுகிறது.

ஸ்திரீகளை ஒரு வீட்டுச் சாமான்போல உபயோகிக்கிறதும், குழந்தைகளை யடிக்கிறதுமான இவ்விரண்டும், மனிதன் சுவேச்சையினுடைய மதிப்பையும்; மனிதனுடைய மாட்சிமையையும் உணராமல், நாகரீகமில்லாமல் காட்டுத் தனமாயிருந்த பொழுது இருந்த எண்ணங்களின் பாக்கியாகச் சொல்ல வேண்டும். இப்பொழுது

நாகரீகம் பரவியுள்ள இப்பூமியின்கண், மேற்சொல்லியவற்றில் ஒன்று விடப்பட்டது; மற்றொன்றும் இந்த நூற்றாண்டுக்குள் நின்று விடுமென்று நம்பலாம். பள்ளிக்கூடங்களில் உபாத்யாயர்கள் பையன்களைப் பிரம்பினால் அடிக்கக் கூடாதென்றும், தலைமை உபாத்யாயர் (Headmaster) மாத்திரம்தான், ஒரு பையன் குற்றமான காரியத்தைச் செய்தால், அவனுடைய குணத்தை வேறு விதமான வழிகளால் திருத்த முடியவில்லை யென்று அவ்வுபாத்யாயரின் புத்தியில் பட்டால், அப்பொழுதுதான் பிரம்பினால் அடிக்கலாமென்று துரைத்தனத்தார் உத்தரவிட்டிருப்பதால், பள்ளிக்கூடங்களில் பையன்களை யடிக்கும் வழக்கம் அனேகமாய் நின்றிருக்கிறதென்று தெரிய வருகிறது. அந்தமாதிரிக் குற்றம் செய்த பையனைத் திருத்துவதற்குச் சில சாமர்த்தியமுள்ள உபாத்யாயர்களின் அனுபவத்தில் தெரிகிற தென்னவென்றால், அப்பையனுடைய நல்லவழிக்காகச் சிரத்தை மேற்கொண்ட உபாத்யாயர்களின் ஆதிக்ய பலமும், அதோடு அவனைச் சமத்காரமாக நடத்திக்கொண்டு போவதுமே போதுமானதாம். அதனால் சிறுவர்களின் சுய நலத்திற்காக நாம் சொல்லுகிற நம்முடைய எண்ணத்தை அவர்கள் அறிந்து அதன்படி நடக்கவேண்டுமானால், நாம் அச்சிறுவர்களின் மனக்கருத்துக்கிசைந்து, பொருள்களை அவர்கள் பார்க்கிறதுபோல நாமும் பார்க்க வேண்டும். குழந்தை நன்றாய்ப் பூர்ணமான மனிதனல்ல; அனுபவமில்லாத பொருள்; பூர்ணமாகாத மனிதனென்று சொல்லலாம். மனிதர்கள் சுஹானுபவம் என்கிற தெய்வீக குணத்தைத் தங்களில் விர்த்தி செய்துகொண்டு அதின்படி சிறுவர்களை ஊகித்துப் பார்க்கப் பிரயத்தனப் பட்டாலொழிய சிறுவர்களின் இயல்பை அவர் அறியமுடியாது.

சிறுவர்களைத் தண்டிப்பதும், கடிந்துகொள்ளுவதும், அவர்களுடைய மனதில் தப்புகளை மாத்திரம்தான் வற்புறுத்துகிறது. தவிர அந்த மாதிரி அடிக்கடி கடிந்துகொண்டால், அது சிறுவர்களின் இயல்பைக் கெடுத்துவிடுகிறது. பயிற்சி செய்தல் என்கிற வார்த்தையிலிருந்து என்ன அர்த்தம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்றால், சிறுவர்களைக் கெட்டமார்க்கங்களில் பிரவேசிக்கச் செய்கிற மனத் தூண்டுகையைக் குறைக்கிறது மாத்திரமல்ல; அவர்களைச் சரியான காரியங்களிலும், சரியான வழிகளிலும் பிரவேசிக்கும்படி மனதைத் திடப்படுத்தவேண்டும் என்பதே.

இன்னமொரு செய்தி. சிறுவர்களைத் தண்டிக்கிறபொழுது, அவர்கள் தங்களில் கோபதாபமில்லாமல் தண்டித்து, அந்தக் குற்றம் செய்த சிறுவனும், தான் செய்த குற்றத்தை யுணர்ந்து, தான் தண்டிக்கப்பட்டது சரியான காரணத்திற்காக வென்று எண்ணிக் கொள்வானேயானால், (ஆனால் இவ்விரண்டும் அரிது), அது பயன் தருவதா யிருக்கலாம். அப்படி யிருந்தாலும் கூட, அத்தண்டனையானது, தப்புக் காரியங்களை மாத்திரம் செய்யாமல் தடுக்கிறதே யொழிய, அவர்களுக்குச் சரியான எண்ணங்களை உண்டாக்குகிறதில்லை. தண்டனையினால் வரும் பலன் என்னவென்றால், சிறுவர்களைத் தப்புக்கள் செய்யாமல் கொஞ்ச காலத்திற்குத் தடை பண்ணிவைக்கிறது. ஆனால், அச்சிறுவர்கள் தப்புக் காரியங்கள் செய்கிற சந்தோஷத்திலிருந்து, சரியான காரியங்களில் அபிலாஷை யுண்டாக்குகிறதில்லை.

பள்ளிக் கூடங்களில் வேலைசெய்து கொண்டிருக்கிற, மனதைப்பற்றிய சாஸ்திரங்களைப் படித்தவர்களும், வீடுகளில் அவ்விஷயமாய் ஆராய்ந்தறிகிறவர்களும், கீழ் வருமாறு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். என்னவென்றால்: சிறுவர்களை நீதிவழிகளில் மாற்றுவதற்கு, அவர்களின் கெட்ட ஸ்வபாவங்கள் ஸமூலமாக எடுபட்டால்தான் முடியும். அப்படி எடுப்பதற்குச் சிறுவர்களைப் பலாத்காரப் படுத்துவதினால் முடியாது. அவர்களின் சகாயம்கொண்டு, அக்கெடுதல் குணங்களுக்கெதிரிடையான நல்ல குணங்களை, அனுதாபத்தோடும், ஜாக்ரதையோடும் உபதேசித்தும், தருணங்கள் வாய்க்கும்பொழுது சமத்காரமாக உபயோகித்துப் பயிற்சி செய்கிறதினால்தான் அச்சிறுவர்களைச் சன்மார்க்கத்தில் கொண்டுவர முடியுமென்பதே யாம்.



சிறுவர்கள் ஏதாவது அநீதியான காரியங்கள் செய்கிறபொழுது, அதை அவர்களுக்கெடுத்துக்காட்டி வெட்கம் வரும்படி செய்யவேண்டும்.

ஒரு சிறுவன் தன் இஷ்டத்தைப்போலச் செய்வதில் எவ்வளவு இஷ்டமாயிருக்கிறானோ, அவ்வளவு இஷ்டத்துடன் அவனிடத்தில் அன்பாயிருக்கிற ஒரு மனிதனுக்குக் கீழ்ப்படிந்து, அம்மனிதனுடைய தயாளத்வமான ஆட்சிக்குள்பட்டு நடக்கத் திருப்தியடைகிறான்.

கீழ்மையான குணங்கள் குறைந்து, மேன்மையான குணங்கள் திடப்பட்டு அம்மேன்மையான குணங்களின் சிரேஷ்டத்தை அறிகிறபொழுதுதான் சிறுவன் நிஜமான சுவேச்சையையும், மனக் குதூகலங்களையும், அனுபவிக்கிறான். சிறுவர்களுடைய ஸ்வபாவத்தில் வருகிற கஷ்டங்களை ஜயிப்பதற்கு உபாத்யாயர்கள் உதவி செய்தால், அவர்கள் மானுஷத்வத்தை யடைகிறபொழுது நீதியாயும், ஸன்மார்க்கமாயுமிருக்கிறது மாத்திரமல்ல, அவர்கள் பள்ளிக்கூடத்திலிருக்கிறபொழுதே, அவர்களுக்குச் சந்தோஷம் சம்பூர்ணமாய் உண்டாகிறது.

சிறுவர்களுக்குக் கற்பிக்கத் தங்கள் கைகளை உபயோகிப்பதற்குப் பதிலாக மூளையை உபயோகித்து, நவீனவழிகளைப் பெற்றோர்களும், உபாத்யாயர்களும் அறிந்து அதை அனுசரிப்பாராக.

நமது இந்திய தேசச் சிறுவர்களுக்குச் சரியான வளர்ச்சியும், ஒற்றுமையும், சுகமும் நீண்ட ஆயுளும் வரும்படி கடவுள் அனுக்ரஹிப்பாராக!

---

*Rao Bahadur Mr. A. C. Pranatartihara Ayyar, I. S. O., Retired Inspector of Schools.*—The Viveka Bodhini is a journal conducted on right lines. The matter is both interesting and instructive and so distributed as to suit all classes of the Tamil reading public; the language is straight and elegant and free on the one hand from pedantry and on the other from an unnecessary admixture of foreign words. A special feature of the journal is, I am glad to note, the attention given to the improvement of scientific knowledge among the people and especially among Indian women.



# கலைமகள் துதி
# In praise of Saraswati

[ஸ்ரீமான் பண்டித ஸ்ரீநிவாஸ ஐயரவர்கள்]

(வெண்பா)

வெண்டா மரைமலர்மேல் வீற்றிருக்குமெல்லியலைப்
பண்டாழு மின்சொற் பசுங்கொடியைப்—பண்டாய
வேதங்க ளேத்தும் விமலையைச் செங்கமல
பாதங்க ளேத்திப் பணி. (1)

பணியாய் மனமே பகரறிய ஞான
மணியா யொளிர்பெண் மணியாம்—இணையிலா
நாதவடி வாய்விளங்கு நாமகடன் நற்கமல
பாதமல ருள்ளம் பதித்து. (2)

உள்ளம் பதித்துன் னருளுக் குருகாத
கள்ள மனைத்துக் கயவேனைக்—கள்ளவிழும்
வெண்டா மரையாய் விரும்பி யுனதாளாய்க்
கொண்டா ளுவையோ குளிர்ந்து. (3)

கொண்டாளா யேனுமுன் றன் கோகனகத் தாளன்றிக்
கொண்டாடே னென்றுறைக் குவலயத்தில்—வண்டா
பண்பாடும் வெள்ளைப் பனிதா மரைமலர்மேற் [டிப்
பெண்பாவாய் யார்மேற் பிழை. (4)

பிழைக ளுளவேனும் பெற்றெடுத்த பிள்ளை
மழலை மொழிபோன் மதித்தே—இழைபோலும் [மே
மென்மருங்குன் மெல்லியலாம் வெண்டா மரையனை
உன்மனத்திற் கொள்ளா யுவந்து. (5)

உவந்துனது பாத முளத்தே நினைப்பார்
பவவினைகள் யாவும் பறக்க—அவனிதனில்
வாணியே யுன்பொன் மலரடிக ளேத்தாது
வீணிலே செல்வார் விழல். (6)

விழலாய் வளர்ந்தேனும் வெவ்வினைத்தீ மாற்றும்
நிழலாய் விளங்கு நினது—கழலே
மனத்திருத்திக் கொள்ள மறைநா மகளே
எனைத்திருத்திக் கொண்டா யிதென். (7)

என்னே புகழ்பெற்று யென்மனமே கௌரியொடு
பொன்னே பரவும் பொலன்கொடியாந்—தன்னேரில்
நாதாந்த நாட்டிற்கோர் நாயகியாள் நாமகடன்
பாதார விந்தம் பரித்து. (8)

பாதார விந்தமலாற் பாரி லடியேற்கும்
ஆதார மில்லையென் னன்னையே—தாதாரும்
செந்தா மரைப்பிரமன் தேவியே யென்றுவில்
வந்தா தரிப்பாய் மகிழ்ந்து. (9)

மகிழ்ந்து கலைமாதின் மலரடியை நாவாற்
புகழ்ந்து பரவும் புனிதர்—சகந்தனிலே
நாடோறுங் கல்விபொன் நன்மனைவி மக்களுடன்
நீடூழி வாழ்வார் நிலத்து. (10)

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

## S. S. L. C—1911

I. Write a short essay on *one* of the following:—

(*a*) The railway as an agent of civilization. (*already done*)

(*b*) *The physical and moral advantages of sports and games.* (*taken up here*)

(*c*) Prevention is better than cure. (*in the next*)

II. Write a short account of any *two* of the following:—

(*a*) The bamboo and its uses. (*already done*)

(*b*) Any work of public utility which you have seen. (*already done*)

(*c*) *A sea fight—a description of which you have read.* (*taken up here*)

(*d*) The adventures of Ulysses with Cyclops. (*in the next*)

### I (b). விளையாட்டுக்களால் உண்டாகக் கூடிய மன உடற் சிறப்புக்கள்

*முகவுரை.—உடலுக்கு உதவும் விதம்—மனத்திற்கு உதவும் விதம்—மனதையேபற்றி நிற்பவை—சிறுவர்களுக்கு உதவும் விதம்—முடிவுரை.*

பொதுவாக நமக்கு இதுவரையில் விளையாட்டுகள் என்றால் வீண் பொழுதுபோக்குக்கள் என்ற எண்ணமே மனதில் குடிகொண்டு வந்துள்ளது. வீடுகளில் குழந்தைகளைப் பெரியவர்கள் அதிகமாக விளையாடவிடாது படிக்கும்படியே அதட்டிக் கட்டுப்பாடுகள் பண்ணுவது வழக்கம். நம்முள் ஒருவரை ஒருவர் சந்திக்குங்கால் தத்தம்வீட்டுச் சிறுவர்கள் அளவுக்கு மிஞ்சி விளையாட்டில் வீண் காலம் கழிக்கின்றனர் என்று முறையிட்டுக்கொண்டிருப்பதும் வழக்கம். இப்படியிருந்தும் நம்முள் சிறுவர்கள் பெரியவர்கள் ஆகிய இருதிறத்தாருக்கும் ஏற்பட்ட விளையாட்டுக்கள் பல உள. இவைகளின் சிறப்பை உணர்ந்தே நம்முன்னோர் இவைகளை ஏற்படுத்தியுள்ளார். இக்கால நாகரிகத்திலோ, மிகுந்த பணச் செலவு செய்து அமையக்கூடியதாயும், இளைஞர் முதல் கிழவர் ஈறாக எல்லோரும், இடைவிடாது முனைந்து நிற்கக்கூடியதாயுமுள்ள பல விளையாட்டுக்கள் ஏற்பட்டுள்ளன. பள்ளிக்கூடங்களிலும் மனதை நேராக விசாலப்படுத்த ஏற்பட்டுள்ள ஒழுங்குகளுக்கு இடையில் பல் விளையாட்டுக்களும் இக்காலத்தில் அமைந்து காணப்படுகின்றன. இவைகளில் வரம்பு மீறி, இக்காலத்தில் சில களியாட்டக்காரர்கள் செய்வதுபோல முனைந்தால் மனப் பயிற்சி கெட்டே போய்விடும் என்பது உண்மையாயினும், விளையாட்டுகளிலேயே மனம் செல்லாமலிருப்பதும், மனப் பயிற்சி, தேஹப்பயிற்சி ஆகிய இவைகளுக்கு முற்றிலும் இசைந்ததல்ல என்பதும் இக்காலத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகவே, விளையாட்டுக்கள் மனம் உடல் இவைகளின் பயிற்சிக்குச் சில வழிகளில் உதவுகின்றன என்று வெளியாகிறது. அவை இவ்வாறு பயன்படுகின்றன வென்பதை எடுத்தாராய்வோம்.

விளையாட்டுகள் நேரிட உடற்பயிற்சிக்கே முதலில் உதவி நிற்கும். அதில் ஏற்படும் அங்கங்களின் அசைவு அவைகளை ஓங்கித் திரண்டு வளரும்படி செய்யும். நம்முள் நடைபெற்று வரும் பலீன் சடுகுடு என்ற ஆட்டத்தில், மூச்சைத் தடுத்து நிறுத்தும் ஆற்றலால், உடலுள் வாயு ஸஞ்சாரம் ஒழுங்குபட்டுக் கஷ்டமான காரியங்களை வன்மையுடன் களைத்துப்போகாது எளிதில் செய்து முடிக்கும் ஆற்றலுண்டாகும். அதில் ஏற்படக்கூடிய ஓட்டம், பிடிபட்டுத் திமிறுவது எல்லாம் உடற்சதைகளை ஸரிவரத் திரட்சி பெறச்செய்யும். இம்மாதிரியே, மிகுந்த பணச்செலவின்பேரில் ஏற்படக்கூடிய காற்பந்து உதைத்தல், பந்தடித்தல் முதலிய மேனாட்டார் விளையாட்டுக்களிலும் நமது உடலின் அங்கங்களுக்கெல்லாம் தகுந்த வன்மை பயிற்சியால் ஏற்படும். இவ்வாறு விளையாட்டுக்களில் முனைவதால் உடல் வியர்த்து, அந்த வியர்வையின் வழியாக நம்முள் இருக்கும் கெட்ட நீர்கள் எல்லாம் வெளிப்பட்டு நீங்கிவிடும். இம்மாதிரி உடலை ஸரிப்படுத்தும் ஆற்றல் விளையாட்டுகளில் இருப்பதால்தான், இயற்கையாக உயிர் பிராணிகள் எல்லாவற்றிற்கும் இவற்றில் விருப்பம் ஏற்பட்டுள்ளது.

விளையாட்டுக்கள் மனதைப் பலவழிகளால் தாக்கிச் சீர்படுத்தும். அவைகளில் மனம் ஊன்றிக் கொஞ்ச நாழிகை முனைந்துவிட்டால், கடுமையான வேலைகளில் உழைத்திருந்த மனமும் சற்று ஓய்வுபெற்று, முன்னூற்றல் குறையாது, கடுமையான வேலைகளில் முயலும் தன்மையைப் பெறும். ஆகவே, விளையாட்டுக்கள் மனதிற்கு ஒருவிதக் கிளர்ச்சியைக்கொடுத்து, வேலைசெய்யச் சலிக்காத நிலையை உண்டாக்குகிறது. இவ்விளையாட்டுக்களை இடையிடையே ஏற்காது, ஒருவன் ஒரே மூச்சில் அருமையான வேலைகளில் முயலுவானாகில் கூடியசீக்கிரத்தில் அவன் மனம் மிகத் தளர்ந்து, வரவர ஆற்றல் குன்றிக்கொண்டே வந்து, பல நோய்களுக்கிடமாகி முடிவில் பைத்திய நிலையையும் அடையலாம்.

மேலும் விளையாட்டுக்களில் பலர் சேர்ந்து காரியம் ஆகவேண்டியிருப்பதால், சேர்க்கையின் ஆற்றல், ஒழுங்கு மீறாது நடப்பது, மற்றவர்கள் நன்மை, ஒழுங்கு மீறாமைக்காகத் தன்னயம் துறந்து நிற்றல், ஆகிய மனத்திற்கு அவசியம் வேண்டிய நற்குணங்கள் படிந்துகொண்டேவரும், அவைகளை அடைய நேரான முயற்சி இல்லாமலே. இக்காலத்து அங்கங்கள் மிகுந்த விளையாட்டுக்களில், பெரும் போருக்குவேண்டிய ஆற்றல்களைக்கூட ஓங்கச் செய்யக்கூடிய ஒழுங்குகள் அமைந்து கிடக்கின்றன. விளையாட்டு ஆவேசமே போராவேசமாக மாறவேண்டியதற்குத் தகுந்த நுட்பங்கள் இக்காலத்து ஆங்கில விளையாட்டுக்களில் காணலாம்.

தேகப்பயிற்சியே அதிகமில்லாது மனதையே கூர்மைப்படுத்தும் விளையாட்டுக்களும் உள. அவைதாம், சீட்டாட்டம், சதுரங்கம், நாய்புலி கட்டம் முதலின. இவைகள் மனதின் தீர்க்காலோசனை சக்தியைத் திடப்படுத்தும் என்பது கூறாமலே விளங்கும்.

இதுவுமன்றி, சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்க, விளையாட்டுக்களை ஆதாரமாகக் கொண்ட ஒழுங்கு ஒன்றும் பள்ளிக்கூடங்களில் தொடங்கி யிருக்கிறது. சிறுவர்கள் எளிதில் மனம் ஊன்றி விளையாடக்கூடிய ஆட்டங்களில், உள்ள வஸ்துக்களை அவர்கள் ஊன்றிப் பார்க்கும்படி உபாத்தியாயர் தூண்டி, அவைகள் வழி பாஷைப் பயிற்சி, கணக்கு, பேசும் திறன் இவைகளை எளிதில் சிறுவர்களுக்கு உண்டாகும்படி செய்து விடுவர். முன்னர், படிப்பை விஷமாகக்கருதி ஓடி ஒளிந்த குழந்தைகளெல்லாம் இக்காலத்தில் பள்ளிக்கூடங்களுக்குத் தாமே போய் வருவது இதனால்தான். ஆகவே சிறுவர்களுக்குப் பாடங்கள் கற்பித்து எளிதில் அவர்களை தேர்ச்சிபெறச் செய்வதில் அவர்கள் விளையாட்டுக்களே மிக உபயோகமுள்ளவைகளாகின்றன. அதனால் அவர்கள் உடலும் தேர்ச்சி பெற்றுவரும் என்று கூறவும் வேண்டுமா?

இவ்வாறு விளையாட்டுகள் வரம்புள் ஒழுங்குபட்டிருந்தால், பல வழியில் உடலையும் மனத்தையும் தேர்ச்சியடையும்படி செய்யும் பேராற்றலுடையன.

### நீலநதிக் கப்பற் சண்டை

(ஸதே என்பவர் எழுதிய நெல்ஸன் ஜீவிய சரிதம் என்ற புத்தகத்திலிருந்து சுருக்கி எழுதப்பட்டது).

*பீடிகை—முன்ஏற்பாடு—அமைப்பு—சண்டை—முக்ய ஸம்பவங்கள்—முடிவுரை*

பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பா கண்டத்தில் ப்ரான்ஸ் என்ற தேசத்தில் நெபோலியன் என்ற மிகத்திறமை வாய்ந்த அரசன் ஆண்டு வந்தான். எல்லா ஜாதியார்களையும் முறியடித்து வெற்றிபெற்று, தனக்கும் தன் நாட்டிற்கும் நிகர் உலகில் வேறொன்றும் இல்லை என்று மதிக்கக் கூடிய நிலையிலிருந்து உலக முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டுவிட வேண்டும் என்ற பேராற்றல் குடிகொண்டிருந்தது இவன் மனதில். இதனால் தூண்டப்பட்டு ஐரோப்பாவிலுள்ள ஜாதியார்களை எல்லாம் முறியடித்துக்கொண்டு வருகையில், அவர்களில் பலர் சேர்ந்து, நமது பரத கண்டத்தில் அரசுபுரிய போட்டி போட்டுக்கொண்டு சண்டை யிடுகிறார்கள் என்று கேள்விப்பட்டு, நமது புண்ய பூமியின் சிறப்புக்களும் அவன் காதில் விழுந்திருந்தமையால், இந்தியாவை நோக்கிப் படையெடுத்துப் புறப்பட்டான். எந்நாளும் கடற்சண்டையில் பெயர்பெற்ற நமது ஆங்கிலஜாதியார் அக்காலத்தில் நமது நாட்டில் ஏராளமான பாகங்களைக் கைப்பற்றி இருந்தமையாலும் அவர்கள் நெபோலியனை நம் இந்தியாவைஅணுகவொட்டாது, தடுக்க முன்

வந்து முனையத் தொடங்கிவிட்டனர். 1798-ம் ஹூத்தில் அவர்களிடம் அக்காலத்தில் நெபோலியனுக்கு எவ்வழியிலும் நிகரான நேல்ஸன் என்ற கப்பற்சண்டை நடத்தும் தலைவனிருந்தான். அவன் 13 கப்பல்களை நடத்திக்கொண்டு நெபோலியனைத் துறத்தத் தொடங்கினான், அவன் இந்தியாவை நோக்கிவந்த மத்யதரைக் கடல்வழியாக, நெபோலியன் போகும்வழியிலெல்லாம் கிடைத்த பணம் முதலிய வஸ்துக்களைக்கொள்ளையடித்துக்கொண்டு தம்மைத் துறத்திவரக் கூடியவர்களை ஏமாற்ற, அடிக்கடித் தான் போக்கை மாற்றி, முடிவில் கீழ் ஓரம் நீல நதி முகத்வாரத்தில் தன் பதின் மூன்று கப்பல்களுடன் நிலைத்து நின்றான். இவைகளை ப்ரூயிஸ் என்ற தலைவனிடம் ஒப்புவித்துவிட்டு, நீல நதி பாய்ந்துவரும் ஈஜிப்டுள் புகுந்து உலாவி, வழி பார்க்கத் தொடங்கினான். இதற்குள் நெல்ஸனால் நடத்தப்பட்ட கப்பல்களும், இரண்டொருதரம் நீலநதிவரை வந்து பார்த்து ப்ரஞ்சுக்காரர்கள் கப்பல்களைக் காணாது மத்யதரைக் கடலிலேயே நெபோலியனைத் தேடி வட்டமிடத் தொடங்கின. தேடிய பொருள் தட்டுப்படாது தத்தளிக்கையில், ஜூலை மாதம் 25-ம் தேதி நெபோலியன் மறுபடி நீலநதியை நோக்கிப் போயுள்ளான் என்பது ஆங்கில ஜாதியாருக்குத் தெரியவர, மறுபடியும் நீல நதியை நோக்கிப் புறப்பட்டு ஆகஸ்ட் மாதம் முதல்தேதி மாலை 4-மணிக்கு நீலநதி முகத்வாரம் வந்தனர். அங்கு முன்னரெல்லாம் காலியாகவிருந்த இடங்கள் கப்பல்களால் நிறைந்திருந்தன.

கப்பற்சண்டைக்குத் தயாராகும்பொழுது நெல்ஸன் சாப்பாட்டிற்கு உட்கார்ந்து தன் கீழ் உத்யோஹஸ்தர்களுக்கெல்லாம் சண்டை நடத்தவேண்டிப் பற்பல விதங்களை நினைப்புமூட்டி, 'எப்படியாவது முதலில் வெற்றி பெற்றுவிடவேண்டும். பின்னர் அதை உபயோகப் படுத்துவதைப் பார்த்துக்கொள்ளலாம்' என்று எச்சரிக்கை செய்துவிட்டான். பொதுவாகத் தனது கப்பல்கள் எல்லாம், எதிரிகள் கப்பல்களுக்கு வெளிப்புறத்தில் ஒவ்வொரு கப்பலாக இவ்விரண்டிற்கு இடைகளில் நின்றுவிட வேண்டும் என்று தாக்கீது செய்தான். இப்படி அமைந்து நிற்கப்போகையில், எதிரி வெடிகள் தீர்த்தாலும் சென்றமைந்திடப்படும் வரையில் எதிர் வெடி தீர்க்காமலிருக்கும்படியும் ஏற்பாடு செய்தான். இடைகளில் இவர்கள் கப்பல்களை மோசம் செய்து நிலத்தில் புதையச் செய்ய எதிரிகள் விடும் கப்பல்களைக் கண்டு ஏமாறுதிருக்கத் தகுந்த புத்திமதிகளும் எல்லோருக்கும் கூறப்பட்டிருந்தன. கூடுமாகில் இரண்டொரு கப்பல்கள், எதிரிக்கும் கரைக்கும் இடையில் சென்று அமரலாமென்றும் யுக்தி கூறியிருந்தான் நெல்ஸன். இப்படி ஒருவாறு எதிரியை வளைத்துக்கொண்ட பின்னர் சுடத்தொடங்க வேண்டும், இருட்டில் சுடாத கப்பல்களை நோக்கி வெடி தீர்க்கலாகாது என்பது முதலிய உத்தரவுகளும் கொடுக்கப்பட்டன.

இந்த உத்தரவுகளுக்கேற்ப அவன் பதின்மூன்று கப்பல்களும் எதிரிமுதலில் தீர்த்த வேட்டுக்களைப் பொறுத்துக்கொண்டு பெரும்பாலும் எதிரியின் வெளிப்புறம் ஸுமாராக வளைந்து கொண்டன. இரண்டொன்று எதிரிக்கும் கரைக்கும் இடையேயும் சென்றமர்ந்தன. மிகுந்த இரண்டு மூன்று, சண்டை தொடங்குங்கால் இவ்விடம் நோக்கி அணுகி வந்து கொண்டிருந்தன. மாலை 6-30 மணிக்கு, அன்று நீல் நதிக் கப்பற்சண்டை பலமாகத் தொடங்கியது. ஸுமார் 7-மணிக்கு இருள் வந்து சூழ்ந்து விட்டது. நெல்ஸன் தானிருந்த வான்கார்ட்டு என்ற கப்பலில் ஆங்கிலர்களுக்கு தைர்யம் ஊட்ட ஆறுகொடிகள் பறக்க விட்டிருந்தான். அவ்விருளில் இவர் தீர்த்த வேட்டுக்களின் பயங்கர ஒளியைத்தவிர வேறு வெளிச்சமே இல்லை. இருளில் வந்த கப்பல்களில் ஒன்று தரைதட்டிச் சிக்கிக்கொண்டது. என்ன முயன்றும் அதை விலக்கிக் கொண்டுவர முடியவில்லை. இது, பின் வந்த கப்பல்களுக்கு எச்சரிக்கையாக விருந்ததால் அவை சண்டைக்கிடையில் முன்போய் கலக்கத் தொடங்கின. இவைகள் வந்தவழியில் வெளிச்சமும் சத்தமும் இல்லாத ஒரு கப்பல் காணப்பட்டது. அதைச் சுட்டுத் தீர்த்து விடலாமா என்று இவர்களுக்குத் தோற்றத், தலைவன்



சொல் இவர்களுக்கு ஞாபகத்திற்கு வர, ஒன்றுஞ் செய்யாது மேல்போய் விட்டனர். பின்னர் தோல்வியடைந்து செயலற்றுநின்ற அக்கப்பல் தங்கள் கப்பல்களில் ஒன்றே என்றும் வெளிப்பட்டது.

ஸுமார் இரவு 8-30மணிக்குள்ளாக ப்ரஞ்சுக்காரர் கப்பல்களில் பல, ஆற்றலிழந்து செயலற்றுவிட்டன. இப்படியிருக்கையில் நெல்ஸனுக்குக் கண்ணிமைமேல் ஒரு குண்டு பட்டுக் காயம் ஏற்படச் சதைபேர்ந்து ரத்தம் ஒழுகத் தொடங்கியது. அருகிலிருந்த உத்யோகஸ்தன் ஒருவன், அவன் விழும்பொழுது பிடித்துக் கப்பல் அடித்தளத்திலிருந்த ரணவைத்யன் இடத்திற்குக் கொண்டு போனான். நல்ல கண் நெல்ஸனுக்கு உதிரத்தால் மறை பட அவன் குருடனே யாகிவிட்டான். அங்கிருந்த வைத்யன், தான் பார்த்துச் சிகித்ஸை செய்துகொண்டிருந்த அடிபட்ட போர்வீரனை விட்டுத் தலைவனைப் பார்க்க வந்தான். வெளியில் சண்டை குண்டு வெடி மாற்றம் வெகு பலமாக நடந்துகொண்டிருந்தாலும், தலைவன் காயம்பட்டு விழுந்ததால் எல்லோருக்கும் மனத்தளர்ச்சியும் உண்டாகிவிட்டது. தன் அருகேவந்த ரணவைத்யனைத் தலைவன் தடுத்து, அடிபட்டுவந்த ஒழுங்கில் தனக்கு முற்பட்டவர்களைப்பார்த்துத்தான் தன்னிடம் வரவேண்டும் என்று கருணை நிறைந்த உத்தரவை உறுதியாக அளித்தான். அபாய அவஸரஸமயத்திலும் என்ன தைர்யம் நிதானம் நம் தலைவனுக்கு என்று எல்லோரும் வியந்து புகழ்ந்தனர். உடனே இவனை இழக்க வேண்டி வந்துவிட்டதே என்ற துயரம் கரை புரண்டுவிட்டது அவர்களுக்கு. கால க்ரமத்தில் வைத்தியன் நெல்ஸனை வந்துபார்த்துக் காயம் அபாயகரமானதல்ல என்று கூறிச் சிகித்ஸை செய்யத் தொடங்கியதும் எல்லோருக்கும் உயிர் வந்தது.

இப்படி நெல்ஸனுக்கு வந்த ஆபத்துத் தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போனதென்று எல்லோரும் ஸமாதானப்பட்டு வருகையில், எதிரி கப்பல்களுள் ப்ரூயிஸ் என்ற தலைவனிருந்த ஓரியன்ட என்ற கப்பல் தீப்பற்றி விட்டது என்று குழப்பமும் கூக்கூரலும் உண்டாகிவிட்டது. இரவு 9மணிக்கு எல்லாக் கப்பல்களிலிருந்த எல்லோரும் வெளிப்புறம் வந்து என்ன விஷயம் என்று பார்க்கத் தொடங்கிவிட்டனர். இதற்குள் நெல்ஸனும் உதவியில்லாமலே பரபரப்புடன் வெளிப்புறம் வந்து எரியும்கப்பலில் உள்ளவர்களைக்காக்கச் சிறுபடகுகளை அனுப்ப உத்தரவளித்தான். எல்லோரும் தலைவன் தன்மையைக்கண்டு வியந்தனர். உடனே சிலர் அவனைக் கொண்டுபோய்ப் படுக்க வைத்தனர். ஸுமார் பத்து மணிவரை எரிந்தது அந்தக் கப்பல். அந்தக் கப்பற்றலைவன் ப்ரூயிஸ் முன்னரே மூன்றுதரம் குண்டுகளால் அடிபட்டிருந்தான்; நான்காவதொன்று சற்று முன்னர் அவனைத் துண்டித்தேவிட்டது. எரியும் கப்பலிலேயே மடிய எண்ணித் தன்னை தப்புவிக்கவேண்டாம் என்று அவன் பிடிவாதம் பிடித்துவிட்டான். இப்படியிருந்தும் சண்டை கொடுமையாகத்தான் எறியும் கப்பலிலிருந்து நடந்தது. 10-மணிக்கு எரியும் கப்பலிலிருந்த வெடி மருந்துக் குவியலில் தீவந்து தாக்கக் கப்பலே பெரும் ஓசையொடு வெடித்துச் சிதறியது. இப்பயங்கரக் காட்சியைக் கண்டதும் இருபுறமும் சண்டை சச்சரவுகள் நின்றுவிட, நிச்சப்தமாயின. அடுத்த ஓசை வெடித்த கப்பலின் துண்டுகள் கடலில் விழுந்த ஒலிதான். இந்தப்பேரொலிக்கு இடையில் ஏற்பட்ட இந்தச் சாந்தத்திற்கு நிகராக வேறு எந்த சாந்தமும் ஓய்வு கொடுமை இவைகளில் ஈடாகமாட்டாது. அந்தக்கப்பலில்தான் கப்பற் கூட்டத் தலைவன் காஸிபியான்கா தன் பிள்ளையுடனிருந்தான். அவன் தன் பிள்ளையைத் தன் உத்தரவை எதிர்பார்த்து ஓரிடத்தி லிருக்கச்செய்து சண்டைக்கு வெளிப்புறம் வந்து மாண்டுபோய்விட்டான். கப்பல் தீப்பற்றி அபாயம் ஏற்பட்டும், சிறு காஸிபியான்காவும் இடத்தைவிட்டு அசைந்தானில்லை. வேதனை பொறுக்கமாட்டாது, தகப்பனை மாத்திரம் கூவிஅழைத்து அவன் உத்தரவிற்கு அவன் எதிர்பார்த்தானே ஒழிய, அதற்கு முன்னர் பயந்து தன்னிடம் விட்டு ஓட அவனுக்கு மனம் வரவில்லை. முடிவில் கப்பல் வெடித்துச் சிதறியதில், இந்த மஹா சூரனும் உயிரிழந்தான்.

இதற்கு முன்னரே நெருப்புப் பயம் ஏற்படுங்கால் ஆபத்து அதிகப்படாமலிருக்கவென்றே ஆங்கிலக் கப்பல்களில் அவசியமான பாய்த்துணிகள் தவிர மற்றவைகளை நனைத்துச் சுருட்டி வைத்திருந்தனர். இதனால் அவர்களுக்கு பேராபத்து வரவில்லை. ஆனால் நெருப்புப் பாக்ங்கள் அவர்கள் கப்பல்களிலும் விழுந்து சிறு சேதங்களை உண்டாக்கின. அதுபரவி, வலுக்க இடமில்லாமல் போய் விட்டபடியால் அம்மட்டோடு அவை நின்று விட்டன. பின்னர் இரவு 3 மணிவரையில் மேல் சண்டை நடந்தது. ஆகஸ்ட்மீ இரண்டாம் தேதி காலை, இரண்டு கப்பல்களும், இரண்டு சிறு மரக்கலங்களும் மிஞ்சி சிறுபோர் விளைத்துக் கொண்டே நடுப்பகலில் தப்பி ஓடத்தலைப்பட்டன. ஓடுபவரைக் கண்டால் துறத்துபவருக்கு எளிது என்பதற்கு ஏற்ப ஆங்கிலக்கப்பல் ஒன்று அவைகளைத் தொடர்ந்தது. அதற்கு உதவி புரியும் நிலையில் வேறு கப்பல் இல்லாதிருந்ததால், அது திரும்ப வேண்டியதாயிற்று. நெல்ஸனுக்குக் காயம்படாதிருந்தால் இந்நான்கு கப்பல்கள் கூடத் தப்பியிருக்க முடியாது.

போர் முடிவில் ஏற்பட்ட வெற்றி முழு வெற்றி என்றே கூறவேண்டும். எதிரி கப்பல்களில் 9 பிடிக்கப்பட்டன; இரண்டு எரிந்து போய் விட்டன; இரண்டு தப்பியோடி விட்டன. எதிரி பக்கம் ஆள் சேதம் அதிகம். நம் பரதகண்டத்தைக் கைப்பற்ற நெபோலியன் செய்த முயற்சியும் இத்துடன் முடிந்தது.

---

**Very Useful to**

**Students of the S. S. L. C. & Intermediate Classes**

**A Guide to Essay Writing & Translation**

**168 Pages : : Price As 12.**

**To Subscribers of "Bodhini" 10**

Address:—Manager "Viveka Bodhini" Mylapore, Madras, S.

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### யயாதி சரித்திரம்

### 3. மேல் உலகடைந்து நழுவிய சருக்கம்

நாடு நகர் துறந்து, வான் ப்ரஸ்தனாகப் புறப்பட்ட யயாதி மஹாராஜன், பல வழிகளில் தவங்கள் செய்துகொண்டு மிகுந்த தன் வாணாளை வீணாக்காமல் நல் வழியில் நடந்து வந்தான். இப்படி இருக்கையில் ஒரு நாள் இவன் போத்யர் என்ற ருஷியைக் கண்டு தத்துவ விசாரங்கள் செய்துவந்தான். அதில் யயாதி, போத்யரை நோக்கிச் சித்த ஸமாதானம் வரும் வழி எப்படி என்று வினாவினான், அதற்கு அவர் 'உலகில் உள்ள வஸ்துக்களெல்லாம் அபிமானம் நீங்கும் பரம ரஹஸ்யமான வழியையே நினைப்பூட்டுகின்றன. அவைகளைச் சாஸ்திர உணர்வுடன் நோக்கினால், இந்தச் சாந்தி தரும் ரகஸ்யங்கள் மாறாது நமது மனதில் ஊறிக்கொண்டிருக்கும். இதனால் மாறாச்சாந்தி நமது மனதில் வேரூன்றிக்கொண்டே வரும்' என்றார். 'உமக்கு இவ்வித எண்ணங்களை மனதில் ஊரச் செய்த சிலவற்றை உதாரணமாக எடுத்துக் காட்டி அருளவேண்டும்' என்று யயாதி வணங்கிக் கேட்டுக்கொண்டான். உடனே போத்யர் யயாதியை நோக்கி, 'பிங்களை என்னும் தாஸி, தூக்கணாங் குருவி, தேனீ, அம்பு செய்வோன், கந்யகை, பாம்பு ஆகிய இந்த ஆறுவிஷயங்களே தான் முக்யமானவை' என்று சுருக்கமாகச் சொன்னார். இதற்குமேல் பின்வரும் ஸம்வாதம் நடந்தது:—

யயாதி:—கேவலம் ஒரு தாஸியினிடமிருந்து நீர் என்ன பரம ரஹஸ்யம் உணர்ந்தீர்?

போத்யர்:—மிதிலா பட்டணத்தில் பிங்களை என்ற ஒரு தாஸி இருந்தாள். இவளுக்குப் பணத்தாசை அதிகமாயிருந்தது. ஒரு நாள் இரவில், யாராவது பணக்காரன், தன்னிடம் வந்து பணம் கொடுக்கமாட்டானா என்று மிகுந்த ஆவலுடன் வாயிற்படியில் நின்றுகொண்டு எதிர்பார்த்திருந்தாள். இவள் மனம், ஆவலால் பதைத்தது. அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. அன்றிரவு வெகு நாழிகை வரையில், இவள் வீட்டிற்கு ஒருவரும்



வரவில்லை. ஆவலுக்குத் தகுந்த பலன் கிடைக்காததினால் அன்று நடு நிசியில் அவளுக்கு வெறுப்புத் தட்டியது 'மனிதர்களை நம்பி மோசம்போனேனே. ஸர்வ தயாபரனான பகவானை இதில் ஒரு சிறு பாகமான ஆவலுடன் மட்டும் ஆராதித்திருந்தால் நமக்கு எவ்வளவு சாந்தம் உண்டாகியிருக்கும்? இந்தப் பணத்தால் வரும் ஸுகத்தை இனி மறந்தேன், துறந்தேன்' என்ற தீர்மானத்துடன் வீட்டுள் புகுந்து படுத்துக் கொண்டாள். ஸுகமாகத் தூங்கினாள். இதைக் கேட்டிருந்த நான் ஆசையே பரம துக்கம், நிராசையே பரம ஸுகம் என்று தெரிந்துகொண்டேன்.

ய:—தூக்கணாங் குருவியிடமிருந்து தாம் தெரிந்துகொண்டது என்ன?

போ:—தூக்கணாங் குருவி ஒன்று ஒரு நாள் ஒரு மாம்ஸத்துண்டுடன் பறந்து போய்க்கொண்டிருந்தது. இதை இவ்வாறு கண்ட அநேகம் பறவைகள் இதைத் தொடர்ந்து சென்று வளைத்துக்கொண்டு தமது மூக்குகளால் அதன் தலையைக் கொத்தி வருத்தின. அது வலி பொறுக்க மாட்டாது மாம்ஸத்துண்டை எறிந்துவிட்டு ஓடியது. அந்த மாம்ஸத்துண்டை எடுத்துக்கொள்ள மற்றைய பறவைகள் எல்லாம் சண்டையிட்டுக்கொண்டு ஒதுங்கிவிட்டன. தூக்கணாங் குருவி தனிப்பட்டு ஸுகமாக ஓய்ந்திருந்தது. இதனால் 'பலர் விரும்பக்கூடிய உலக விஷயங்களை அப்யாஸிகள் விரும்பினால் பெரிய சண்டை சச்சரவுகளுக்கு ஆளாகித் துக்கிக்கும்படி நேரிடும். அவைகளை உதறிவிட்டு ஒதுங்குவதே ஸுகம் தரும்' என்ற சாஸ்திர உண்மை எனக்கு ஞாபகத்திற்கு வந்தது.

ய:—தேனீயை எந்நிலையில் கண்டு என்ன உணர்ந்துகொண்டீர்கள்?

போ:—தேனீ அநேக புஷ்பங்களில் சென்று தங்கி, ஆங்காங்கு கொஞ்ச கொஞ்சமாகத் தேனை எடுத்துச் சேர்த்து, ஸுகமாக வாழ்கிறது. இதுபோல 'நானும் வீடுகள் தோறும் தகுந்த ஸமயங்களில் சென்று வீட்டுக்காரர்களுக்குக் கஷ்டம் தோன்றாதபடி (மாலை 2 மணிக்கு) கொஞ்சம் கொஞ்சமாகச் சோறு வாங்கி, எனது பசியை மாத்திரம் தீர்த்துக்கொள்ளவேண்டியது' என்ற சாஸ்திர உண்மையைப்பற்றி யோசிக்கலானேன். மேலும், 'தேனீக்கள் தமது தேனடையில் சேர்த்துவைத்துள்ள தேனுக்காக வேடர்கள் அவைகளைக் கொன்று தேனைப்பிழிந்து எடுத்துக்கொண்டு போகின்றனர். இதனால் 'நானும் பலவிடம் சென்று சோறு சேர்க்குங்கால் வேண்டிய அளவு கிடைத்தவுடன் சோறு சேர்ப்பதை அன்று நிறுத்திவிடவேண்டும். சேர்த்து வைத்தால் எனக்கு வீண் மனச்சஞ்சலமும் முடிவில் நாசமுந்தான் ஏற்படும்' என்று தேறித்தெளிந்தேன். இதுவுமன்றி, தேனீக்கள் பலவிடங்களிலிருந்து பலசுவைகளுடனிருந்த ரஸங்களைச் சேர்த்து இனிப்பான தேனைத் தமது அடையில் செய்து சேர்த்து ஸுகிப்பது என் பார்வையில் பட்டது. இதைக்கண்டதும், 'இவ்வாறுதான் நானும் பல சாஸ்திரங்களிலிருந்தும் பலவிதமாகக் கூறியுள்ள வேதரஹஸ்ய நுட்ப உண்மைகளைச் சேர்த்து, என் அநுபவம்திடப்பட்டு மோக்ஷம் சேர்க்கக்கூடிய ஞானமாக்கிப் பழகி நிஷ்டை பெறவேண்டும்' என்ற அரிய விஷயமும் என்னிடம் பசுமரத்தாணிபோலப் பாய்ந்து நின்றது.

ய:—அம்பு செய்வோன் எவ்வாறு உமக்கு எதைக் கற்பித்தான்?

போ:—ஓரிடத்தில் ஓர் அம்புசெய்வோன், தான் செய்த அம்பைச் சாணை பிடித்துக்கொண்டிருந்தான். சற்றுக் கவனக்குறைவாக விருந்தால் அவன் கைவிரல் கூருகும் அம்புக்கும் சாணைக்கும் இடையில் அகப்பட்டுக்கொண்டு துண்டாகிப் போய்விடும், இப்படி இவன் இந்த நுட்பமான வேலையைச் செய்துகொண்டிருக்கையில், இவனருகே இருந்த வழியில், அரசன் தனது பரிவார, வாத்யாதி கோஷங்களோடு ஊர்வலம் வந்துகொண்டிருந்தான். இந்தக் கோலாஹல உத்ஸவம், அம்பு செய்வோனுக்குத் தெரியவே இல்லை. பின்னர் இதை எடுத்துக்கூறியவரிடமும் இவ்வளவு ஒலிகளுடன் அரசன் பட்டணப்ரவேசம் நடந்திருந்தால் எனக்குத் தெரிந்திராதா? நீங்கள் சொல்வது பொய்' என்று அவன் மன்றாடினான். அருகிலிருந்த நான் 'மனம் ஸரிவர

அடங்கப் பெற்றவனுக்கு உள் வெளி உலகங்களே இல்லைதான். அவைகளின் இருப்பே அவனுக்குப் புலப்படாது' என்ற பரமரஹஸ்யத்தின் நுட்பத்தை உணர்ந்து தெளிந்தேன்.

ய:—கந்யகை உமக்கு நினைப்பூட்டிய அரிய விஷயம் யாது?

போ:—ஒரு பெண் வீட்டிற்கு, அவள் கல்யாண விஷயமாகப் பேச, பிள்ளை வீட்டுக்காரர்கள் சிலர் வந்து சேர்ந்தார்கள். வீட்டில் அந்தக் கன்யகையைத் தவிர அப்பொழுது ஒருவரும் இல்லை: ஆதலால் அவளே, வந்தவர்களுக்கு உபசாரம் செய்யவேண்டி வந்தது. வீட்டில் அரிசியில்லாதிருந்ததால் அவள் நெல்லுக்குத்தும்படி நேர்ந்தது. குத்தும்பொழுது அவளது சங்கு வளைகள் சலசலத்தன. இதனால் வந்தவர்கள், வீட்டின் நிலையை அறிந்துவிடுவார்களோ என்று அஞ்சி, அவள் வளைகளை ஒவ்வொன்றாக ஒடித்தெறியத் தொடங்கினாள். வரவர, ஒலி குறைந்துகொண்டே வந்தாலும், அது முழுதும் நின்றபாடில்லை. ஒவ்வொரு கையில் இவ்விரண்டு வளைகள் வரையில் வந்தும் சப்தம் அடங்கினதாகவில்லை. பின்னர் ஒருவளையையும் ஒடித்தெறிந்தாள். ஓசை நின்றுவிட்டது. இதிலிருந்து 'பலர் சேர்ந்தால் சண்டை கூச்சல்தான்; வீண்பொழுது போக்காகத்தான் முடியும். ஆகவே, ஏகாந்தமே பகவத்தியானம், வைராக்யம் ஆகிய இவைகளுக்கு மிகுந்த உதவியாகவிருக்கும்' என்ற அரிய விஷயம் எனக்கு நினைவு வந்தது.

ய:—பாம்பினிடம் நீர் கற்றதென்ன?

போ:—பாம்பு தனக்கென்று ஒரு வீடில்லாமல் கறையான் புற்றில் தங்கி ஸஞ்சரிக்கிறது. அது மறைந்து ஜாக்ரதையாக உலாவுகின்றது. இதிலிருந்து, 'நான் வீடு ஒன்றையும் எனது என்று மதியாது, பொது ஸ்தலங்களான மடம், சத்திரம், மலைக்குஹை இவற்றையே தங்குமிடமாகக் கொள்ள வேண்டும். வீட்டுப் பிடிப்பே ஸகலதுக்கங்களுக்கும் காரணம்; மேலும் பாம்பைப்போல மறைந்து, நீறுபூத்த நெருப்புக்கு நிகராக இருந்து உலகத்தவருடன் நெருங்கி, உறவாடிக் கலந்து பேசிப் பழகாது மிகத் தந்திரமாகக் காலம் கழிக்கவேண்டும். பாம்பு சட்டை உறிப்பதுபோல, என் தேஹம் என்னைவிட்டு வேறானது, நானல்ல என்று பிரிந்து நின்று நிலைக்கப் பழகவேண்டும்' என்ற பெரிய விஷயங்களைக் கற்றுக்கொண்டேன்.

ய:—இவைகளைக்கொண்டு எனக்கு முடிவாகக் கூறும் உபதேசம் யாது?

போ:—"இவ்வாறு உலகில் க்ருஹஸ்தாதி முன் ஆச்ரம தர்மம் தவறாது நடந்து உன்னைப்போன்று மேல் ஆச்ரமங்களை வந்தடைந்துள்ளவர் தாம் கற்றுத் தேர்ந்த அரிய பெரிய விஷயங்களைக், காணும் வஸ்துக்களின் நிலைமைகளிலிருந்து இடைவிடாது தமது மனதில் ஊறிக்கொண்டிருக்கும்படி, தமது ஆச்ரம தர்மானுஷ்டான காலங்கள் நீங்கலான மற்றைய ஸமயங்களில் செய்ய வேண்டும். க்ருஹஸ்த ப்ரஹ்மசாரிகள் இப்படிப்பட்ட விஷயங்களை முற்றிலும் பற்ற முடியாது; அப்படிச் செய்தலுமாகாது என்றும் சாஸ்திரங்கள் கூறும்; உனக்கோ அப்படியல்ல. இவைகளில் ஒரு அணுக்கூடத் தவறாது பின்பற்றித் தேறித்தெளிந்து நீ திடப்பட்டு லோகாந்தரச் சிறப்பை அடைய முயலவேண்டும். இப்படி ஸ்வஆச்ரம தர்மானுஷ்டானமும், ப்ரபஞ்ச வஸ்துக்களில் குருபாவமும் இருந்தால் உனக்கு நற்கதிதான்வரும் என்பதற்கு என்ன தடை?

இவ்வாறு போத்யர் உபதேசத்தில் மனோ நிலைகலையாது வன ஸஞ்சாரம் செய்ய யயாதி புறப்பட்டான். யயாதி, இம்மாதிரி பலமஹான்களை வனத்தில் அடுத்து, உதவி பெற்று தன் புண்யப் பெருமையால் தன் தேஹத்தை நழுவவிட்டு மேல் உலகங்களை அடைந்து, வெகு காலம் எல்லாலோகங்களிலும் உலாவி, பலவித ஸுகங்களையும் சாஸ்திர வரம்பு மீறாது அனுபவித்து வந்தான்.

இப்படியிருக்கையில் ஒருநாள் யயாதி இந்திரலோகமான ஸ்வர்க்கம் வந்து இந்திரனைக் கண்டு, அரிய பெரிய சாஸ்திர நுட்பங்களைப் பற்றி வார்த்தையாடத் தொடங்கினான். இதற்கு முன்னர், இவன் இங்கு வந்திருந்த காலத்தில் இவன் சொற்களிலிருந்து இவன் மனதில் தன் சிறப்பைப் பற்றிய கர்வம் குடிகொண்டிருந்ததென்று ஒருவாறு கண்டிருந்த இந்திரன், இப்பொழுதும் அது மாறாதுவளர்ந்து ஓங்கியிருப்பதையே கண்டான். இனிமேல், இதை வளரவிட்டால் மஹாத்மாவான யயாதிக்கு அது பெருங்கேடு விளைக்கும்; ஆதலால் அதை நன்றாக வெளியிலிழுத்து அவனுக்கே தெரியும்படி செய்து, அதன் தத்கால சிறுபலனை அனுபவிக்கும்படி செய்துவிட்டால், அவன், இம்மாதிரிக் கொடிய எண்ணங்களுக்கே இடம் தராது மேல் சிறப்பையே தடையின்றி அடைவான் என்ற கருணைமேலீட்டால் யயாதியிடம் அவன் தந்திரமாக வசனிக்கத் தொடங்கினான். 'பூருவிடமிருந்து நீர் உமது கிழத்தனத்தை மறுபடி பெற்று, ராஜ்யத்தைக் கொடுக்குங் காலத்தில் என்ன புத்திமதிகள் கூறினீர்?' என்று ஜாடையாகக் கேட்டான் இந்திரன். தற்புகழ்ச்சி மண்டிக்கொண்டிருந்த யயாதி, தன் ராஜதர்ம உபந்யாஸத்தைக் கூறத்தொடங்கினான். கூறுவது மஹாதர்மாத்மாவான ஈசன் விபூதிரூபமான இந்திரனிடம்; கூறுபவனோ சிறு புழுக்கும் கீழ்ப்பட்ட நரமனுஷ்யனாகிய தான் என்ற ஏற்றத்தாழ்வுகள் அவன் மனதில் கர்வத்தால் மறைபட, இந்திரனுக்கே சாஸ்திர நுட்பங்கள் எடுத்துக் கூறும் ப்ருஹஸ்பதிபோல யயாதி உபதேசிக்கத் தொடங்கிவிட்டான். பார்த்தான் இந்திரன். 'இவ்வளவு தர்மாத்மாவான இவனுக்கு இந்தப் பாழும் கர்வம் எங்கிருந்து வந்தது? இப்படி வெளி வந்தும் அவனுக்குத் தன் கொடிய நிலை விளங்கவில்லையே? ஆதலால் இதன் கொடிய பலனால் தான் அவன் சீர்படவேண்டும்; வேறு வழியில்லை' என்று தனக்குள் தீர்மானித்து, 'ராஜச்ரேஷ்டரே, நீர் வானப்ரஸ்தம் பூண்டு இயற்றியுள்ள தவம், யார்செய்த தவத்திற்கு நிகர்' என்று வாய்கூசாது இந்திரன் கேட்டுவிட்டான். அவிழ்த்துவிட்டதும் கழுதை எடுத்துவிட்டதாம் ஓட்டம் என்ற கதையாக யயாதி ஓயாத் தற்புகழ்ச்சிக்குக் கிளம்பிவிட்டான். தான் வானப்ரஸ்தம் நடத்தியகாலத்தில் போத்யர் முதலியவர்களால் அடைந்த சிறப்பையும், தான் இயற்றிய ஒவ்வொரு தவச்சிறப்பையும் விடாது இறுமாப்புடன் கூறி, முடிவில், 'மனிதர், தேவர், கந்தர்வர்கள், மஹருஷிகள் எவரிடத்தும் நான் செய்ததற்கு நிகரான தவமே இல்லை' என்று முடித்து யயாதி கொக்கரித்தான். உடனே தோளைப்பிடித்து யயாதியைத் தட்டிக்கொடுத்து 'அப்பா யயாதி! உன்னைவிடச் சிறந்தவர், தாழ்ந்தவர், உனக்கு ஸமமானவர் எல்லோரையும் துரும்பாகமதித்துப் பேசியதாலும், உன் சிறப்பைவிடாது உன் வாயாலேயே கர்வத்துடன் கூறியதாலும், நீ செய்துள்ள கணக்கிலடங்காத புண்யகர்மாக்கள் எல்லாம் பலனை இழந்து ஓய்ந்துவிட்டன. மறுபடி புண்யம் செய்து சிறப்படைந்து இங்குவரப் பூமிக்குப்போகலாம். இனியிங்கு இருக்கமுடியாது; விழு கீழே!' என்று உத்தரவளித்தான்.

உடனே யயாதியின் ஆக்நேய சரீரம், அவன் முழுப்ரஞ்ஞையிருக்கையிலேயே அணு அணுவாகச் சிதறத் தொடங்கி விட்டது. மிகக் கொடிய துக்கத்தை அனுபவித்துக்கொண்டு யயாதி கீழேவிழத் தொடங்கினான். அப்பொழுது நுணலும் தன் வாயால் கெடும் என்ற நிலையிலிருந்த யயாதி இந்திரனை நோக்கி "என் குறையை யானறியச்செய்து காப்பாற்றவந்த குருவே! என் புண்யங்கள் கர்வத்தால் பலனிழந்து பயனற்றவையாயுள்ளன என்பது உண்மையானால், நான் தர்மாத்மாக்களிடையில் விழுந்து பிறவி பெற்று எளிதில் நற்கதியடையும்படி அனுக்ரஹியும். என் கர்வத்திற்கு இந்த அகால மரணமும் பிறவியுமே போதாவா? இனி இக்கொடிய கர்வத்தை நான் என் மனதில் தலை எடுக்க விடவே மாட்டேன்' என்று மன்றாடினான். அதற்கு இந்திரன், யயாதியின் கொடிய நிலையைக் கண்டு பரிதவித்து "அப்பா புண்யவானே உன் நிலையைக் கண்டால் எனக்கு வரும் துயரத்திற்கு அளவேயில்லை. ஈசாஞ்ஞையை மீறவல்லார் யார்? உன் மனதிலிருந்த கொடியகர்வத்தை மேல்வளரவிட்டிருந்தால் இன்னும் கொடிய பாப நிலைக்கல்லவா உன்னை அது கொண்டுசேர்த்திருக்கும்! என்று கருணைகூர்ந்து உன்னை இப்பொழுதே பூமிக்கனுப்புகிறேன். இயற்றிய புண்யங்கள் முழுதும் அறவே, இவ்வறை குறை கர்வத்தால் போய்விடுமா? முன்னைவிடத் தாழ்ந்த மானிட நிலைவர இருப்பினும் இப்பொழுது உனக்குக் கொடிய பாபி நிலை வரவேமாட்

டாது. நீ வைதிக கர்மானுஷ்டானம் பண்ணிவரும் ஸத்துக்களுக்கிடையில்தான் போய்ச் சேர்ந்து, சீக்கிரம் முன்னிலையை அடைந்து நற்கதி பெறுவாய். புண்யபலம் எளிதில் குறையுமா? போகலாம் கீழே" என்று இந்திரன் யயாதியைத் தள்ளிவிட்டான்.

என்ன செய்வான் யயாதி! பெரியஸுகத்திற்கிடையில் திடீரென்று தேஹப் பிரிவாகிய துன்பம்வந்துவிட்டது! அதுவும் உணர்வு மயக்கம் உண்டாகாத தெளிவான நிலையில் ஏற்பட்டுவிட்டது!! ஆக்நேயதேஹமோ அணு அணுவாகச் சிதறிக் கிரமமாக ஓடிப்பரவுகிறது !!! நரக துக்கத்தைவிட பலமடங்குகொடிய துக்கத்தை அநுபவித்தான் அப்போது யயாதி. இதைப்போன்ற பலபுராண ரஹஸ்யங்களை முன்னிட்டுத்தான் ஸ்ரீ கௌடபாதாசாரியாளும் தாம் இயற்றிய ஸ்வாராஜ்யஸித்தி என்ற நூலில் ஸ்வர்க்கத்திலிருந்து நழுவுங்கால் ஏற்படும் துக்கத்திற்கு நிகர், நரக துக்கங்கூட இல்லை என்றார். யயாதி சிறந்த புண்யாத்மாவாகையால், இக்கொடிய துக்கத்தால் விஷயஸுகத்தில் அவனுக்குப் பற்று உண்டாகவே இல்லை. இதுவரையில் அநுபவித்து இக்கொடிய முடிவில் கொண்டுவிட்ட ஸ்வர்காதி விஷய ஸுகங்களினிடமும், அவைகளிலிருந்து மேல் செல்லவொட்டாது தன்னைத் தடுத்து நிறுத்திய விஷய ஸுகப்பற்றால் ஏற்பட்ட கர்வத்தினிடமும், மாறா வெறுப்புத்தான், அவன் கீழே இறங்கித் தேகம் ஒதுங்கப்பெறும் பொழுதெல்லாம் அவன் மனதில் குடிகொண்டு வந்தது. இப்படி அவன் தன் மிகுந்துள்ள ஆக்நேய சரீர அணுக்களுடன் மேக மண்டலத்தை அணுகித் தண்ணீர்த் துளிகளைப் பற்ற வருகையில், இடையில் யாகஹோமப்புகையால் மேலேயே தடுத்து நிறுத்தப்பட்டான்.

யயாதி வந்து விழுந்தவிடம் அவன் பேரனான அஷ்டகன் யாகஞ்செய்து கொண்டிருந்த இடம். அதற்கு அவன் மற்றைய பேரர்களான ப்ரதர்தனன், வஸுமனஸ், சிபி ஆகிய மூவரும வந்திருந்தனர். எல்லோரும் அவனைக் கண்டார்கள். அவர்களுக்கும் தம்முடைய தாதா இவர் என்று தெரியவில்லை. புண்யமிழந்துவரும் யயாதிக்கும், தன் பேரர்கள் இவர்கள் என்றும் தெரியவில்லை.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### தமயந்தி : (1) முன்னுரை

ஒரு நாட்டிற்குச் சிறப்புண்டாக்கவேண்டுமெனின் அதற்கு அந்நாட்டுப் பெண்டிரே முன் நிற்பவர். அவர் தமது நற்குண நற்செய்கைகளால் நன்னிலை யோங்கச் செய்து, தமது நடத்தையால் தமது மக்களையும் நன்னடையி லொழுகச்செய்து, தேசத்திற் கணியாக விளங்கச் செய்வர். ஆகையால் எந்தத் தேசத்துப் பெண்கள் தமது நடை நொடி பாவனைகளால் கல்மஷமற்று விளங்கித் தமது மக்கட்கு நல்ல ஒழுக்கத்தைச் சொல்லாமலே ஒழுகச் செய்கின்றனரோ, அந்நாடு முந்தி விளங்குமென்பதற்கு நமது பூர்விக நாடே அத்தாட்சி. புராணேதிகாஸகாலங்களில் பெண்கள் தமது கணவர்க்கு ஊன்றுகோலாயும் உத்ஸாகாஸ்பதர்களாகியும் விளங்கித் தேச க்ஷேமத்தை முன்னிட்டுக் கணவனையே கடவுளாக மதித்து வாழ்ந்து வந்தனர். அவ்வகைய தாய்மார்க்குத் தம் நயத்தை மறுத்து, பொது நலத்தையே கருதும் மக்கள் பிறத்தல் ஓரதிசயமாகாது. சிலர் 'நமது பெண்டிர்களுக்குச் சுதந்திரமே கிடையாது; அவர் வீட்டு உழைக்கும் கூலியாட்கள்; அவர்களைச் சிறிதும் கவனிப்பாரில்லை' என்று வாய்ப்பறை யறைந்து வம்பு பேசுவர். உண்மையை நோக்குமிடத்து, நமது வீட்டை ஆள்வது நமது பெண்களே அல்லது வேறு யார்? நடுத்தெருவில் அலைந்து, பலருடன் கைகலந்து, ஹாஸ்ய பரிகாஸத்துடன் பேசுவதில் ஓர் சுதந்திரம் ஏற்படுமானால், நமது பெண்டிர்களுடைய ஜீவிய முழுதும், கூலி ஜீவனமெனவே சொல்லிவிடலாம். ஆனால் நமது இந்திய ஜாதியின் லக்ஷணத்தைக் கவனிக்காது நமக்குத் தோன்றிய விதமெல்லாம் பேசுவது அழகாகாது. பல நாள் தொட்டு நமது உடலுள் பாயுமிரத்தத்தில் ஆத்மலாபமாகிய தெய்விகத் தன்மை மயங்கி விளங்குகிறது. அந்தத் தெய்விகத் தன்மை, கேவலம், கணவனைத் தனது இச்சையை நுகர்வதற்கேற்ற ஸாதனமாக எண்ணாது, தனது



முமுக்ஷுத்வத்தை நாட ஏற்பட்ட பெருமாதாரமாக, நமது பெண்டிரை எண்ணச் செய்கிறது. இப்பெரும் தெய்விக நோக்கமே, நமது பெண்டிர் மனத்தைக் கொள்ளை கொண்டிருப்பதால், அவரை மேனாட்டாரில் சிலரைப்போலத் தம் இறக்கும் கணவரது உயிர் வெளியேறுவதற்குள்ளாக அன்னியனது கரங்களில் தவழ்ந்து குலாவுதிருக்கச் செய்வது. தனது கணவனது சவத்தை அடக்கஞ் செய்த பூமியின்மீது புல் முளைப்பதன் முன்னமே, மற்றொருவனை மணவாளனாக மதித்து முத்த மநும்பி முகமினுக்கிவாழ்வது அத்தெய்விக நோக்கம் பாய்ந்த மனத்திலென்றேனு முதிக்குமா? உடல் பொய்யுறவு; உயிர் மெய்யுறவு என நமது பெண்டிர் தமது கணவனிறப்பினும் அவனதுடல் ஒழிந்ததாக எண்ணி, அவனது உயிரை மனத்தால் வணங்கி, கைம்மை நோன்பைக் கடனாகக் கொண்டு விளங்குவர். அவரது பெருமையைச் சொல்லவும் பெறுமோ? இம்மூல அபிப்பிராயத்தை முன்னிட்டே வள்ளுவனாரும்

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யுமழை

என அவரது பெருமையை வாயார வாழ்த்தினர். மற்றித்தகைய எண்ணங்களை முன்னிட்டே நமது பெண்டிரது வாழ்க்கை வழி, பல நியமங்களுக் குட்பட்டிருக்க வேண்டுமென நமது ஒழுக்க விதிகள் ஏற்படுத்தியுள்ளன. அவரது பெருமையை முன்னிட்டே, அவரின்றி யஞ்ஞாதிகள் செய்ய முடியாதாகின்றன. அவரது தன் மறுப்பு, உண்மை நோன்பு, பேரன்பு இவற்றை எண்ணி எண்ணி, அவரில்லாத மனையை

"—விழைதக்க,
மாண்ட மனையாளை யில்லாதா னில்லகம்
காண்டற் கரியதோர் காடு"

என வர்ணித்தனர் பெரியோர்.

அவ்வாறாயின் பெண் என்பவள் எவள்? அவளது இயற்கைக் குணங்கள் எவை? அத்தகையர் நமது நாட்டில் எவரிருந்தனர்? எவர் புகழ்பெற்றனர்?—இவை முதலாகிய கேள்விகள் தாமே பின் ஏற்படும். அவற்றை நாமே சற்றுக் கவனிப்போம்.

கட்கினியாள் காதலன் காதல் வகை புனைவாள்
உட்குடையாள் ஊர்நாண் இயல்பினாள்—உட்கி
இடனறிந்து ஊடி இனிதின் உணரும்
மடமொழி மாதராள் பெண்.

கட்கினியாள், அதாவது கண்ணிற்கு இனிமையுண்டாக்கக் கூடியவளாய் இருக்க வேண்டும்; அதாவது தனது கணவனது பார்வைக்கினியவளாய் இருத்தல் வேண்டும். இதனால் அழகே அவள் உருவெடுத்திருக்க வேண்டுமென்பது சொல்லப்படவில்லை; அவ்வாறானால் இந்தக் குணம் எல்லாரிடமும் அமைவது அஸாத்யமாகும். தன்னைத் தன் கணவன் காணின் அவன் மனத்தில் மயக்கம், வெறுப்பு, கோபம் முதலியன உண்டாகாதிருக்கும்படியாக எள்ளுங்கொள்ளுமாக வெடிக்காது நடத்தலே ஆகும். அது கடவுள் கொடுத்த உருவைக் கோப முதலியவைகளால் விகாரப்படுத்தாது தமது இயற்கை அமைப்பினால் தமது கணவர்க்கு நேத்ரோத்ஸவமாக விளங்குவதேயாகும். பெண்ணின் இரண்டாவது லக்ஷணம் காதலன் காதல்வகைபுனைதல்; அதாவது தமது கணவர் எதை உடுத்திக்கொண்டால் இன்ப மடைவரோ, எதை அணிந்துகொண்டால் ஆனந்தமடைவரோ அத்தகைய ஆடையாபரணங்களால் தமது இயற்கை அழகிற்கு அழகு செய்வதாகும்; இவ்வழகு தமது கணவரது மனதை ஆனந்த ஸாகரத்தில் ஆழ்த்துவதால் மங்கையர்க்கு இன்றியமையாததாகும். மூன்றாவது லக்ஷணம் உட்குடைவது; அதாவது அஞ்சுந்தன்மை; தமது கணவர் பெரியோரிவரிடம் வணக்கத்துடன் விளங்குவது; இதனையே கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை என ஔவையும் கூறியுள்ளார். நான்காவதாகச்சொல்லப்படும் லக்ஷணம் ஊர் நாண் இயல்பு; அதாவது உலகத்தாரிடம் நாணத்தோடு விளங்குவது; ஊர் வாயை மூட உலை மூடி தானுண்டோ என்று சொல்வதற்கேற்பப் பயந்து ஊரார் தம்மீது பழி சுமற்றுவதற்கிடங் கொடாது, ஊரஞ்சி வாழ்தல். மூன்றாவது லக்ஷணத்தால் வீடஞ்சி வாழ்தலைச் சொல்லி, நான்காவதால் ஊரஞ்சி வாழ்தல் கூறப்பட்டது. மற்றுக்

கணவரிடம் அந்தரங்கத்தில் நடக்கவேண்டிய முறைமையை, "—உட்கி
இடனறிந்து ஊடி இனிதின் உணரும்"
எனச் சொல்லப்பட்டுள்ளது; அதாவது தமது கணவரிடம் பயபக்தியுடன் விளங்கி அவரது ஸுகத்தை முன்னிட்டுச் சமய மறிந்து பிணங்கி இன்பமடைந்து வாழ்வதாகும். இத்தகைய லக்ஷணங்களெல்லாம் அமைந்திருப்பினும், அத்தகையபெண் வடுச்சொல் உடையாளானால் பெண் ஆகாள் என்பது தோற்ற மடமொழி என விசேஷித்துக் கூறப்பட்டது. மெல்லிய மொழியே மாதர்க் கணிகலம்; கணவன் சொல்லெதிர்ச் சொல்லாதிருத்தலே இதன் அபிப்பிராய மெனலாம். மடமொழி என்பதற்கு மடமை பொருந்திய மொழியாளெனவுஞ் சொல்லக்கூடும். அதாவது தனது கணவன் தனக்குக் கற்பித்த ஞானத்தையே முன்னிட்டு அதை விடாது பின்பற்றி ஒழுகும் சிறந்த ஒழிபும், அடக்கமாகப் பேசும் அமைதியும் பொருந்தியவளெனலாம். இத்தகைய லக்ஷணமெல்லாமிருக்கும் மடந்தையே பெண் என்னும் பேரைப் பெறத் தகுந்தவளாவள். மற்றப் பெண்கள் வீணரே யாவர். இத்தகைய லக்ஷணத்தைத் தமதாக்கி வாழ முயல்வதே நற்குலத் துதித்த நங்கையர்க் கழகு.

இனி அவ்வாறு தனது ஸுகத்தை வெறுத்துத் தனது கணவனது ஸுகத்தை முன்னிட்டுழைத்துப் பெரும் பதவிபெற்று நம் நாட்டுப் பெண்டிரை ஜனஸமூக கோஷ்டியில் முந்தி விளங்கும்படி தனது ஒழுக்கத் தாற்செய்த தமயந்தியின் சரித்திரம் எழுதப்படும்.

## 2. தூது

வாவி யுறையு மடவனமே யென்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால்—காவினிடைத்
தேர்வேந்தர்க் கென்னிலைமை சென்றுரைத்தி யென்
பார்வேந்தன் பாவை பதைத்து. [றுரைத்தாள்

முற்காலத்தில் நமதிந்திய நாடு ஐம்பத்தாறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதில் விதர்ப்ப தேசம் ஒன்று; அந்நாட்டிற்குப் பீமன் என்றொரு அரசன் இருந்தான்; அவன் நல்ல வீரன்; மநு நெறி தவறாது செங்கோல் புரிந்த மன்னன்; அவனுக்குச் சந்ததி யிருக்கவில்லை; ஸந்ததி பெறவென்று அநேக நோன்புகள் செய்துவந்தான்; ஒன்றும் பயன்படவில்லை. ஒரு நாள் தமனர் என்னும் முனிவர் அவனிடம் வந்தார். அவரைத் தானும் தன் மனைவியுமாகப் பூசித்துப் புத்திரப் பேறுண்டாகும்படி ஆசீர்வதிக்கக் கேட்டான்; அவரும் அவ்வாறே உண்டாகுக என்று வரமளித்தார். காலக்ரமத்தில் பீம ராஜனுக்கு மூன்று பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பிறந்தன. அப்பெண் பெயர் தமயந்தி; அவள் அழகே உருவெடுத் தவதரித்திருந்தாள். அவளை அரசன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தான். குழந்தைப் பருவம் தாண்டித் தமயந்தி உடல் பூரித்துப் பெதும்பைப் பருவமுற்று,

அழகு சுமைந்திளைத்த ஆக்தாள் வண்டு
பீழகு கருங்கூந்தல் பாவை—மழகளிற்று
வீமன் குலத்துக்கோர் மெய்த்தீப மற்றவளே
காமன் திருவுக்கோர் காப்பு.

ஆக விளங்கி வந்தாள்.

அவ்வாறு விளங்கி வருங்காலத்து, ஒரு நாள் தமயந்தி தனது உய்யான வனத்தில் பூக்கொய்து தனது தோழியருடன் உலாவி விளையாடிக்கொண்டிருந்தாள். அப்பொழுது பெரும் வெண்மேகக்கூட்டம்போல் அன்னப் பறவைக்கூட்டம் ஆகாயத்தில் பறந்து வந்து, அவ்வனத்தில் கிடந்த தாமரை ஓடைகளிலிருந்த தாமரை மலர்மேலும் இலைமேலும் இடங்கொண்டு, தமது மூக்கினால் நீரின் வர்ணத்தைச் செம்மையாக மாற்றிக்கொண்டிருந்தன. அவ்வினிய காட்சியைக் கண்ட தமயந்தி, தன் கால் சதங்கை கலீரிடக் குதித்துக் குதித்தோடி அவற்றின் நடையைப் பரீட்சிப்பவள்போல அவற்றைப் பற்றப் பின்தொடர்ந்தாள். அவளோடு, அவள் தோழியரும் பின் தொடர்ந்து ஒவ்வொருவர் ஒவ்வொரு அன்னப் புள்ளைப் பின்பற்றலானார்கள். தமயந்தி ஆவலுடன் தொடர்ந்த அன்னம் அவளைத் தோழியற்றிருக்கும் சமயத்தைக்கண்டு மனிதக் குறலில் பின்வருமாறு சொல்லிற்று:—

"உன் அழகெதற்கு? நீ பிறந்த பயன் எதற்கு? நீ பெற்ற பெருமை எதற்கு?



"செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள் தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்!—மெய்ம்மைநளனென்பான்மேனிலத்தும்நானிலத்தும் மிக்கானுளனென்பான் வேந்தன் உனக்கு."

நிஷததேசத்தை ஆளும் நளனே உனக்குகந்த மணவாளன்; அவன் அறிவிற் சிறந்தவன்; சூரன், வெகு தீரன்; உண்மையே உருவெடுத்த உத்தமன்; பெரும் படையாளுந் தலைமை யுடையவன்; பெண்கள் விரும்பும் பெருமையன்; ஆயினும் ஐம்புலனை யடக்கி ஆள்பவன்; ஜனங்களது ஸுகத்தைத் தனதென்றுகொண்ட தன்மையன்; மநுநெறி தவறாத மன்னவன்; அதிரதர்களின் தலைவன்; எவ்விதத்திலும் உனது தோள்களுக்கியைந்த புருஷன்; வயதிற் சிறியன்; புத்தியில் பெரியன்; அழகில் மன்மதன். நீயோ பெண்கள் நாயகம்; அவனோ மனிதசிங்கம்; உங்களிருவருக்கும் உறவேற்படுவது உத்தமத்தி லுத்தமம்; அதுவே உன் குணத்திற்குந் தகும்" எனச் சொல்லிற்று.

முன்னமேயே நளனைப்பற்றிச் சொல்லக் கேட்டுக் கேட்டு அவனைத் தனது மனத்தில் பதித்து வைத்திருந்த தமயந்திக்கு, இம்மொழிகள் நளனிடமேலும் ஆசைகொள்ளுமாறு செய்தன. இவ்வன்னம் நிஷத தேசத்து மன்னனான நளனிட மகப்பட்டுத் தன்னை எங்கவன் கொன்று விடுவனோ எனப் பயந்து நளனுக்குத் தமயந்தியின் அழகை வர்ணித்தவனது ஆசை நோயை வளர்த்து, அவனிடமிருந்து தமயந்தி நளன்மேல்ஆசை கொள்ளச் செய்யத் தூதாக வந்ததாகும்.

ஆகவே அதன் மொழிகள் தமயந்தியின் மனதைக் கவருவதாகத் தோன்றினும், அம்மொழிகளில் பொய் என்பது சற்றுமில்லை. அதன் மொழிகளைக் கேட்ட தமயந்தி "உன் மொழிகள் எனக்கினிமையையே தருகின்றன; அவை எனக்குயிரைக் கொடுத்தன. நீ பல்லாண்டு வாழி! எனக்கு அம்மன்னவரது குணங்களைச் சொல்லி அவரிடம் ஆசைகொள்ளும்படி தூண்டுவதிற் பிரயோஜனம் என்ன? எனக்கிங்குரைத்த விதம், அவரிடம் சென்று என்குறையைச் சொல்லி அவரை என்மீது

(இதன் தொடர்ச்சி 274-ம் பக்கம்.)

## குழந்தைகளின் பாதுகாப்பு

## THE CARE OF INFANTS

[ஸ்ரீமான் ஆர். ரங்கவேந்திரராவ் அவர்கள்
பீ. ஏ., எம்.பி. ஸி. எம்.]

குழந்தைகள் சௌக்யமா யிருக்கும் பொழுது நாளுக்கு மூன்று நான்கு முறை,

குடல்

முதல் மாதத்தில் மலங்கழிக்கும். கொஞ்ச நாளானதும் நாளொன்றுக்கு இரண்டு முறையும், சில மாதங்கள் கடந்ததும் நாளுக்கொருமுறையும், மலம் கழிக்கும். சாதாரணமாக மலம் மிருதுவாகவும், இலேசான மஞ்சள் வர்ணமுடையதாகவும் இருக்கும். மலம் பச்சைபச்சையாகக் கழிந்தால் குழந்தைக்கு அஜீர்ணம் எனக்காட்டும்; சக்கையும் சாறுமாக விருந்தாலும் அதையே குறிக்கும். குழந்தைகளின் மலத்தைக் கவனிப்பதனால் குழந்தைகளின் தேக சௌக்கியத்தையும் அவையுட்கொள்ளும் ஆகாரத்தின் தன்மையையும் நன்கறியலாம். குழந்தைகளுக்கு மலபந்தம் ஏற்படும்படியாக விடக்கூடாது. மலபந்தமாக விருந்தால், விடியற் காலங்களில் சூடான பாலில் சிறிது ஆமணக்கு எண்ணெயைக் கலந்து புகட்டவேண்டும்; ஆமணக்கெண்ணெயை மிகக் குறைந்த அளவிலேயே கொடுக்கவேண்டும். குழந்தைகளுக்குச் சாதாரணமாக ஆமணக்கெண்ணெயை நம் வீடுகளில் நாள்தோறும் பிறந்தது முதல் கொடுப்பது வழக்கம். ஆனால், கொடுக்கும் அளவு சில சமயங்களில் அளவுக்கு மிஞ்சியிருக்கின்றது. பதினைந்துநாள் குழந்தைக்குச் சாதாரணமாக ஒரு பெரியகரண்டி முட்டைக்குமேல் எண்ணெய் கொடுக்கப்படுகிறது. அதனால் கெடுதி உண்டாவதாகவும் பார்ப்பவர்களுக்குத் தெரிவதில்லை. ஆனால் அப்படி வழக்கப்பட்ட குழந்தைகள் பெரியவர்களானபொழுது கல்குடல் அடைந்து, பிரவர்த்திக்காக ஆமணக் கெண்ணெய் உட்கொள்ளும்போது மிதமிஞ்சிய அளவில் சாப்பிட வேண்டியதாகிறது; அப்படிச் சாப்பிட்டும் சில வேளைகளில் பிரவர்த்தி ஆகாமல் இருப்பதுமுண்டு. குழந்தைகளுக்கு ஆமணக்கெண்ணெய் கொடுக்கவேண்டிய முறை மேல் வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1 முதல் 6 மாதம் வரை | ½ முதல் 1 டீ ஸ்பூன் | |
| 6 ,, 12 ,, | 1 ,, 2 ,, | |
| 2 வயது முதல் 5 வரை | 2 ,, 4 ,, | |

தெருவில் விற்கப்படும் சித்தாமணக் கெண்ணெயையும், மருந்துக் கடைகளில் விற்கப்படும் பிரவர்த்தி எண்ணெய்களையும் எப்போதும் குழந்தைகளுக்குக் கொடுக்கவேகூடாது. அவற்றில் பலவிதமான கல்மஷங்கள் கலந்திருக்கின்றன. நேர்வாளம் பாஷாணம் இவற்றின் சம்பந்தமான உப்புக்கள் அவற்றில் மயங்கி விளங்குகின்றன. குழந்தையின் குடலையும், அன்ன கோசத்தையும் ரணப்படுத்தி அவை துன்பத்தையே தருகின்றன. அவற்றின் உபயோகம் நன்மையைக்காட்டிலும் தீமை விளைவித்துச் சில சமயங்களில் மிகக்கஷ்ட நிலையை உண்டாக்கிவிடும்.

பல் முளைப்பதே, குழந்தைகளின் தேக சௌக்கியத்தை வெளியிடும் உண்மைக் குறிப்பென்று மதிக்கலாம்.

பல் முளைத்தல் நாள் கழித்துப் பல் முளைத்தல் குழந்தையின் தேகஸ்திதியின் அசௌக்கியத்தைச் சில வேளைகளில் காட்டாவிடினும், பொதுவாக வெளியிடும். சாதாரணமாகப் பற்கள் மேற்சொல்லும் விதம் முளைக்கும்:—

| | |
|---|---|
| 7-வது மீ | இரண்டு முன்பற்கள் கீழ்வரிசை |
| 8-வது மீ | இரண்டு முன் பற்கள் மேல் வரிசை |
| 7-முதல் 9-மீ | இரண்டு பார்சவ முன் வாய்ப் பற்கள் மேல் வரிசை |
| 10-முதல் 12மீ | இரண்டு பார்சவ முன் வாய்ப் பற்கள் கீழ் வரிசை |
| 12-முதல் 14மீ | நான்கு பட்டைப் பற்கள் முன் வரிசை |
| 18-முதல் 20மீ | நான்கு நாய்ப் பற்கள் |
| 20-முதல் 24மீ | நான்கு பட்டைப் பற்கள் பின் வரிசை |

மேற்சொன்ன இருபது பற்களும் சிறிது காலம் மாத்திரம் நிலைத்திருக்கும். இவற்றிற்குப் பால் பற்கள் எனப்பெயர். குழந்தைகள் தாய்ப்பால் உண்பதற்கு ஸாதனமாயிருப்பதால் அவை அவ்வாறு பெயர் பெறும். இப்பற்களெல்லாம் குழந்தை சாதாரணமாகச் சௌக்கியமான தேக ஸ்திதியிலிருந்தால் முழுதும் முளைத்துவிடும்.

நாள் கழித்துப் பல் முளைத்தல் குழந்தைகளுக்குக் கணைச்சூடு இருப்பதை அல்லது சொறிகரப்பான் இருப்பதை வெளியிடும்; இதனுல் குழந்தைக்கு ஆகாரம் நன்றாகக்கொடுக்கப்படாமை வெளியாகும்; அல்லது தேக அசௌக்கியம், தொத்துநோய், அல்லது காசநோய் மயங்கிவிளங்குவது புலப்படும்.

குழந்தைகளுக்குப் பற்கள் முளைக்கும்போது பலமுறை பேதியாவது வழக்கம்; சில சமயங்களில் இசிவுகளும் ஏற்படும். முன்னதுண்டாகுமானல் குழந்தைகளின் ஆகாரத்தைக் கவனிப்பதே குழந்தைகளுக்கு நன்மையைத் தரும். பின்னது ஏற்பட்டால் காலதாமதம் செய்யாமல், வைத்தியனைத் தருவித்துத் தக்க சிகித்ஸை செய்யவேண்டும். சில சமயங்களில் இசிவடைந்த குழந்தைகளுக்குச் சூடுபோடுவது வழக்கம். அது இசிவுக்கு எதிரடையாகப் பிரயோசனப் படுமாயினும் அதனுல் ஏற்படும் குணம் சிறிது காலந்தான் நிலைக்கும். குழந்தையின் நன்மையை உத்தேசித்தால் வைத்தியனைக் கொண்டு சிகித்ஸை செய்வதால் நிரந்தரமான சௌகரியமேற்படலாம்.

(273-ம் பக்கத் தொடர்ச்சி.)

அன்புகொள்ளுமாறு செய்வதுன் கடனாகும்! அவரையன்றி நான் யாரையு மணக்கேன். என்மொழியை அவரிடம் நீ தூதாகச்சென்று சொல்வாயாக! அவ்வாறு செய்வதெனக்கு உயிர் தந்ததாகும்; காதலரைச் சேர்த்து வைத்த புண்ணியம் உனதாகும்; எப்படியாவது அவரை என்னிடம் அன்புகொள்ளும்படி செய்; உனக்கனந்த கோடி நமஸ்காரம்" என அவ்வன்னத்தை வேண்டிக் கொண்டாள்.

அன்னமும் அதற்கொப்பி "டறடற" வென்று தனது இறகுகளை ஆட்டிக்கொண்டு ஆகாயத்திற் கிளம்பி நிஷத நாட்டெல்லையை நோக்கி எழும்பியது. தமயந்தியின் கண்கள் அதன் உருவையே நெடுநேரந்தொடர்ந்து மயங்கிக் கிடந்தன. தனது தோழியர் வந்து, தன்னை வீட்டிற் கழைக்கும் வரை அவளது நிலை அவளுக்குத் தெரியவில்லை. அது கனவோ? நினவோ? எதுவோ?



# பிரபஞ்ச வர்த்தமானம்

# *Progress of the World*

**சென்னைகவர்னர் நிர்வாஹஸபை ஸ்தானம்.**— கனம் பி. எஸ். சிவஸ்வாமிஐயர் சென்னை கவர்ன்மெண்ட் நிர்வாஹ ஸபையிலிருந்து காலவரையறையின்படி விலக வேண்டியதாகும். இவர்க்குப் பின் நிர்வாஹ மெம்பராகத் தற்காலம் கவர்ன்மெண்ட் ஜுடிஷியல் கார்யதர்சியாக விருக்கும் கனம் பெருங்காவூர் இர்ராஜகோபாலாசாரியார் நியமிக்கப் பட்டிருப்பதற்குக் கவர்ன்மெண்டார் எல்லாருடைய அன்பிற்கும் பாத்திரராக விளங்குகின்றனர். அவர் பொது ஜனச் சக்கரத்தை ஜாதிமதபேதமில்லாதுருட்டும் கார்யகாரரென்று யாம் பஹிரங்கமாகக் கூறலாம். அவர்க்குக் கடவுள் நல்ல வாழ்வு தந்து, ஜனங்களுக்கும் இராஜாங்கத்திற்கும் நடுநிலை தவறாதுழைக்க நன் மனந்தருவாராக!

***

**வித்யாதிகாரிகளின் கான்பரன்ஸ்.**—வித்யாதிகாரிகளின் கான்பரன்ஸ் டெல்ஹியில் கூடியபோது, கனம் வைசிராய் அவர்கள் உபாத்தியாயர்களைப் பயிற்சிசெய்தல், அவர்களது தொழில் முதலியவற்றிற்குவேண்டிய சீர்திருத்தங்கள் முதலியவைகளைப் பற்றிப் பேசி, தொழிற்கல்வி, வியாபாரக்கல்வி, விவசாய நவீனமுறை இவற்றில் நம் நாடு அமைந்திருக்கும் விருத்தியையும், செய்யவேண்டிய முறைகளைப் பற்றியும் மேலு முயர்த்த விளக்கமாகப் பேசினர். தவிரவும் தேசபாஷைகளின் மூலமாகப் படிப்புச் சொல்லிவைக்காத முறமையால் வந்த தீங்கையும் விஸ்தரித்து அதை நிவாரணஞ் செய்யத் தக்க தீர்மானங்கள் செய்யவேண்டுமென்றவர் பேசியது மெச்சத் தக்கது.

***

**ஏகாதிபத்ய கான்பரன்ஸ்.** — யுத்தத்துப் பிந்தி நடக்கவேண்டிய ஏக மத்ய விஷயத்தைப்பற்றி நடக்கும்ஏகாதிபத்ய கான்பரன்ஸிற்கு இந்தியாவிலிருந்தும் பிரதிநிதிகள் அனுப்பப்படுவது யாவருக்கும் சந்தோஷந் தரும். ஐக்கிய மாகாண லெப்டினெண்ட் கவர்னரான ஸர் ஜேம்ஸ் மேஸ்டன் அவர்களும், ஸர் ஸத்யேந்த்ர பிரஸன்ன ஸின்ஹா அவர்களும் ஆகிய இவரிருவரும் இந்தியா மந்திரிக்கு உதவிபுரியும் பிரதி நிதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் பிரிடிஷ் கவர்ன்மெண்டாரின் தீர்மானத்தை அனுசரித்து இந்தியாமந்திரிக்கு உதவியாக ஒரு ஸமஸ்தான மன்னரும் இருக்கவேண்டுமென்பதற்கேற்பப் பிராஜாபந்துவாகிவிளங்கும் பிகானிர் ஸமஸ்தான மஹாராஜா அவர்கள் நியமிக்கப்பட்டது பேரானந்த மெவர்க்குந் தரும்.

***

**ரயில் விகித ஏற்றம், வண்டிகள் குறைவு.**— யுத்தத்தின் மூலமாக நிலக்கரி ஏராளமாகக் கிடைக்காமையின் ரயில்வே இலாகாகாரர்கள் அநேகவண்டிகளை நிறுத்தவேண்டியதாயிற்று. இதனுல் ஏழைகளுக்கே மிக்க கஷ்டமேற்பட்டதனுலும் தேசநன்மை நோக்கியவர் பொறுக்க வேண்டியது தர்மமாகும். ரயில்வே அதிகாரிகளும் வினைபளுவை முழுதும் எளியர் தலையில் சுமத்துவதைக்காட்டிலும், தமது உத்யோகஸ்தரது பெருஞ்சம்பளத்தைக் குறைத்தும், முதல்தர இரண்டாந்தர வண்டி சார்ஜுகளை மாறுபடுத்தியும் ஏழைகளுடையகஷ்டத்தைப் போக்குவது நியாயமாகும். இதை அவர் கவனிப்பார் என்று நம்புகிறோம்.

***

**சென்னை முனிஸிபல் மசோதாசட்டம்.**—இச்சென்னை முனிசிபல் இராஜாங்கத்தில் நடைபெறும் வரிகளை மேலும் உயர்த்தவும், வேறு பல விஷயங்களை ஏற்படுத்தவும் சென்னை நகர் முனிஸிபல் மசோதா ஒன்று புதிதாக வெளியிடப்பட்டிருக்கிறது. இதனுல் குடிகளுடைய ஸுகங்களுக்குப்பலவித மாறுபாடுகள் ஏற்படுமாதலால் இதைச் சென்னை வாசிகள் ஒவ்வொருவருங் கவனித்து, மசோதாவில் செய்யவேண்டிய பல சீர்திருத்தங்களை நடைபெறுமாறு செய்வாராக.

***

நிலக்கரியிலிருந்து உண்டாக்கப்படும் சாயங்கள்.—முன் ஜர்மனியிலிருந்து வந்துகொண்டிருந்த சாயங்கள் நின்று விட்டபடியால், நிலக்கரியிலிருந்து உண்டாக்கப்படும் பல் வித மான சாயங்கள் தற்காலம் ஜப்பானில் செய்யப்பட்டு, அம்முயற்சிக்கு ஜப்பான் கவர்ன்மெண்டார் ஆதரவளித்திருப்பதாகத் தெரியவருகிறது. இத்தொழில் இங்கேயே செய்வதற்கு வேண்டிய சௌகர்யங்கள் இருப்பது பிரஸித்தமான விஷயம். இதைப் பற்றி லக்ஷ்மணபுரியில் நடந்த தொழில் க்ான்பரன்ஸில் லாலா பாபுலால் கோவில்லா என்பவர் நன்கு விளக்கியிருக்கிறார். இந்தியாவில் நிலக்கரி ஏராளமாக கிடைக்கிறது. இங்கு கிடைக்கும் நிலக்கரியிலிருந்து இந்தியாவிற்கு வேண்டிய நிலக்கரி சாயங்கிடைக்கும். இது நூலுக்குந் தோலுக்கும் ஒருங்கே உதவும். இதனைக் கவர்ன்மெண்டாரும் முதலாளிகளும் கவனிப்பதற்குத் தக்க கால மிதுவே. பிறர் அத்தொழிலைப் பற்றுவதன் முன் நாம் கவனிப்பதே நன்மை பயக்கும்.

***

விசிஷ்டாத்வைத ஸமஸ்கிருத கலாசாலை, சேன்னை.—சென்னை மாநகரில் மற்றொரு ஸமஸ்கிருத கலாசாலை ஏற்பட்டது தேசாபிமான விருத்தியை வெளியிடும். அவ்வுதார மஹானாகிய ராஹ் பஹதூர் கண்ணன் செட்டியார் தமது மூலதனத்தைக்கொண்டு விசிஷ்டாத்வைத ஸமஸ்கிருத கலாசாலை ஏற்படுத்தினார். அதில் சென்னை ஸர்வகலா ஸங்கத்து விசிஷ்டாத்வைத ஸாஹித்ய சிரோமணிப்பட்டப் பரீக்ஷைக்குப் போகும் மாணாக்கர்களுக்குப் பாடமும், ஏனையோர்க்குச் சாஸ்திரஞானமும் பிரபந்த பாடமும் குறைவறச் சொல்லி வைக்கப்படும். இத்தகைய கலாசாலைகள் மேன்மேலு மேற்படுவதே எமதபீஷ்டம்.

***

பதனிடுந்தொழிலில் அபிவிருத்தி.—தொழிலபிவிருத்தி ஸங்கக்கூட்டம் சென்னையில் கூடியபொழுது, ம-ள-ள-ஸ்ரீ அருணகிரி நாயுடு வென்பவர் "பதனிடுந்தொழி"லில் நம்மவர் விருத்தியடையலாமென்று சாட்சியங் கொடுத்தார். இது உண்மை. குரோம் தோல்வேலை சென்னையில் விருத்தியடைந்திருப்பது யாவரும் அறிவர். மேலும் மற்றைய வித பதனிடும் வேலைகளிலும் நம்மவர் கவனஞ் செலுத்தினால் இந்த இராஜதானி, அத்தொழிலில் எல்லாநாடுகளின் முன்னும் ஏற்றமடையலாம். இதற்குப் பொருள் முதல் யாவு மிங்கேயே இருக்கின்றன; சிரத்தைதான் தேவை. அதிருக்குமானால் முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.

***

யுத்தப்போக்கு.—யுத்தமோ ஒரேவிதமாக இருக்கிறது. இந்திரஜித்து ஆகாசத்தில் மறைந்து மாயயுத்தஞ் செய்தான். ஜர்மனி நீருள் ஒளிந்து அவ்வகை யுத்தஞ்செய்வதும் யாவரு மறிவர். ஆனால் வரவர ஸப்மேரின் வேலை ஒழுங்குமீறி நடப்பது யாவர்வெறுப்பிற்கு மிடந் தரும். குள்ளநரி வேஷங்கொண்டந்த நாடு, தன்னைத் தற்காலம் பெற்றிருக்கும் நிலையுடன் விட்டுவிட்டால் ஸமாதானத்திற்கு வருவதாக அமெரிக்கா தேசத்து ஐக்யமாகாணத்தலைவர் மூலமாக வெளியிட்டது. அந்த அகௌரதா ஒழுங்கை யார் ஒப்புவர்? நமது போர்க் கட்சியார் அதை ஏற்கவில்லை. அதனால் ஆத்ரங்கொண்ட ஜர்மனி, ஸப்மேரின் வாயைத்திறந்து கண்டவிடமெல்லாங் குண்டடிப்பது என்று நினைத்தது போலும்! விநாசகாலே விபரீதபுத்தி: என்பதற்கேற்ப அதன் ஒழுங்கீனச் செயல்கள் அதன் கேட்டை விளக்கு முதற்குறிகளே யாகும். யானைவரும் பின்னே மணியோசை வருமுன்னே, அன்றோ?

***

சைதாப்பேட்டை கல்விப்பொருட்காட்சி.—இம்மாதம் 3உ யன்று, கனம் கவர்னர் அவர்கள் சைதாப்பேட்டை டீச்சர்ஸ் காலேஜில் கல்விப் பொருட் காட்சிச் சாலையைத் திறந்து, அத்தகைய காட்சிகளால் நன்மை ஏற்படுமென்ற நம்பிக்கை யுண்டாகுமானால் வருஷந்தோறும் அத்தகைய காட்சியை நடத்திக் கல்வியைப் பரப்ப இராஜாங்கத்தார் உத்தேசமென வெளியிட்டார். இக்காட்சி ஐந்து நாட்கள் நடை பெற்றது. காட்சிப் பொருள்களை வந்தவர்களுக்கு நன்கு விளக்கிக்காட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.


# விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி IX } நளஹூ தைமீ :: 1917-ஹூ பிப்ரவரிமீ { பகுதி 8


## நல்லொழுக்கம்

### GOOD CONDUCT

#### தருமம்

தருமஞ்செய்ய சிந்தைகொண்டு நடப்பது எவ்வுலகத்திலும் மிக்க கீர்த்தி தரும். இவ்வாறு தனது வாழ்நாளை வீணாக்காது தருமத்திலழுந்திப் பெரும் பேறு பெற்றவருள் கர்ணன் ஒருவன்.

கர்ணன் குந்தியின் மகன். கன்னியாயிருந்த போது, சூரிய பகவானுடைய அனுக்ரஹத்தால் அவள் அவனைப் பெற்றாள்; ஊர்க்கும் தன் பேர்க்கும் பயந்து, அக்குழந்தையைத் தங்கப்பெட்டியில் ஒரு புடவை போட்டு வைத்துக் கங்கையாற்றில் போக்கினாள். அப்பெட்டி திருதராஷ்டிர மஹாராஜாவினுடைய தேர்ப்பாகனிடம் அகப்பட, அவன் அக்குழந்தையை எடுத்து வளர்த்துவந்தான். துரோணர், பாண்டுவின் மகனாகிய அர்ஜுனனிடங்கொண்ட அன்பால் அவனுக்கு வில் வித்தை கற்பிக்க மறுத்ததால் அவன் பரசுராமரிடஞ் சென்று பிராமணவேஷத்துடன் வில்வித்தை கற்றான்.

பாண்டவ கௌரவர்களுடைய படிப்பைப் பரீட்சைசெய்யத் துரோணர் செய்த ஏற்பாட்டில், கர்ணனும் அர்ஜுனன் காட்டிய எல்லா சாமர்த்தியத்தையுங் காட்டி அவனைத் தன்னோடு போரிடும்படி வேண்டினான். அங்கிருந்த கிருபாசாரியாரென்பவர், பிறப்பு முதலியன தெரியாதவனிடம் அர்ஜுனன் போரிடான் என்றார். இதைக்கேட்ட துரியோதனன் வீரர்க்கு ஜாதிபேதம் கிடையாதென்று சொல்லி, கர்ணனிடம் நேசங்கொண்டு அவனை அங்க நாட்டின் அரசனாக்கினான்; கர்ணனும் அந்நன்றியை என்றும் மறவாது விளங்கினான்.

பாண்டவர்க்குப் பலவிதங்களிலும் துன்பஞ் செய்யினும், தனக்குத் துரியோதனன் செய்த நன்றியை முன்னிட்டு, அவனது அடாத காரியங்களை எல்லாம் கவனியாதிருந்தான். ஆனால் கீழ்ச் சொன்ன பரீட்சை நாள் முதல், அர்ஜுனன் கர்ணனை உயிர் வாங்க நிச்சயித்தான். அரக்கு மாளிகையில் கொல்ல எண்ணிய துரியோதனன் சூழ்ச்சியிலிருந்து தப்பி, வைதிக வேஷத்தோடு பாண்டவர்கள் சில நாளிருந்து, பாஞ்சாலதேசத்தரசன் மகளது ஸ்வயம்வரத்தில் இலக்காக வைத்த மீன் குறியை அர்ஜுனன் அடிக்க, அவளைப் பாண்டவர், குந்தி மொழிக்கிணங்கி மணந்தனர். பின் அவரது உண்மை நிலையை உணர்ந்த திருதராஷ்டிரன், அவரை இந்திரப்பிரஸ்தப் பட்டணத்தில் தனியாக ஆள ஏற்படுத்தினான். அப்போதவர், மன்னர்களை எல்லாம் ஜயித்து இராஜஸூயமென்னும் பெரும் யாகத்தைச் செய்தனர். அங்குத் தன்னைக் கண்டு பாஞ்சாலி சிரிக்கப் பொறாணித் துரியோதனன் தன்னூர் அடைந்ததும், பாண்டவரைத் தருவித்துச் சூதாடி அவர் நாட்டைக்கவர்ந்து காட்டில் பன்னிரண்டு வருஷமும், அதன்மேல் ஒரு வருஷந் தெரியாமலுமிருக்கவேண்டுமென்றும், அதன் பின் அவரது நாட்டைப் பெறவேண்டுமென்றும் ஏற்பாடு செய்தான். அக்காலம் முடிந்ததும் தருமர் ஸ்ரீ கண்ணபிரானைத் தூதனுப்பித் தமது நாட்டைக் கொடுக்கும்படி துரியோதனனைக் கேட்டார். ஆனால் அவன் ஸ்ரீகிருஷ்ணரைக் கொலை செய்ய யத்தனஞ்செய்தான். அது பலிக்காது போயிற்று.

பின் ஸ்ரீகிருஷ்ணர் இந்திரனைத் தருவித்துக் கர்ணன் பிறக்கும்போது அவனோடு தோன்

றிய கவசமும் கர்ண குண்டலங்களும் இருக்குமளவும் அர்ஜுனன் பிழைக்க முடியாதென்று சொல்லி, அவனைப் பிராமணன்போல் கர்ணனிடஞ்சென்று அவற்றை வாங்கத் திட்டஞ்செய்தார். பின் குந்தியிடம் வந்து கர்ணனது பிறப்பைச் சொல்லி அவனிடம் சென்று அவனைப் பாண்டவரோடு சேரும்படியும், மறுத்தால், அவனிடம் இருக்கும் நாகாஸ்திரத்தை ஒரு முறைக்குமேல் அர்ஜுனன்மேல் விடாமலிருக்கவும் வேண்டச் சொன்னார்.

நிற்க, சபை கலைந்ததும் வெளிவரும்பொழுது ஸ்ரீகிருஷ்ணர் கர்ணனைக்கண்டு அவனது பூர்வோத்தரங்களைச் சொல்லி, தருமரிடம் வரச்சொன்னார். "ஸ்வாமிகளே! எனக்குத் தருமர் நியாயவழியில் நடப்பவர் என்று நன்ருகத் தெரியும். அவரிடம் எனக்குப் பேரன்பு. நான் அவர் விஷயமாகத் தவருகப் பேசியிருப்பினும், சோற்றுக் கடனுக்காகப் பேசியதுதான். உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்க வேண்டியதல்லவா? அரசும் பெருமையும் உறவும் ஒரு பொருளாகாது. உமது பாதாரவிந்தமே எனக்குக் கதி. தங்கள் மனத்திலெப்படியோ எனக்குமப்படியே" என, கிருஷ்ணர் விடைகொண்டு வெளிச்சென்ருர்.

இந்திரன் பிராமணவேஷத்துடன் வந்து, கர்ணகுண்டலங்களையும் கவசங்களையும் கொடுக்கும்படி கர்ணனை வேண்டினான். ஸூர்ய பகவான் ஆகாயத்திலிருந்து இந்திரன் வஞ்சகத்தைச் சொல்லித் தடுத்தான். ஆனாலும், கர்ணன் தான் சொல்லிய வாக்கை மறுக்காது இந்திரனுக்கு அவற்றைக் கொடுத்தான்.

குந்தியும் கர்ணனிடஞ் சென்று பழைய ஸமாசாரங்களை எல்லாம் சொன்னாள்; கர்ணனை மடியில் வைத்து உச்சிமுகந்து முத்தமருந்தி மயங்கித் தன் முன் செயலை வெறுத்து வருந்தினாள். தன் தாயைச் சமாதானஞ் செய்து, வந்த வேலை என்னவென்று கர்ணன் கேட்டான். ஸ்ரீகிருஷ்ணர் சொல்லியவிதமே அவள் கேட்டாள். "தாங்கள் இரண்டு வரங்கள் கேட்டீர்கள். அர்ஜுனனைத் தவிர்த்து மற்ற நான்கு தம்பிகளை நான் கொல்லமாட்டேன். நாகாஸ்திரத்தை இரண்டாவது முறை அவன் மேல் உபயோகிக்கமாட்டேன். தாங்கள் எனது உறவைப் பாண்டவர்க்கு வெளியிடாதிருப்பதுடன், நான் அர்ஜுனன் கையால் உயிர் நீங்கும்போது களத்தில் வந்தழுது எனக்குண்டான ஸூதன் மகன் என்னும் பெயரை மாற்றும்" என, குந்தி அதற்குடன்பட்டாள்.

நிற்க, போர்மூண்டுவிட்டது. ஆயினும் கர்ணன் தன்மொழியையே காத்துவந்தான். தான் பாண்டவர்மீது ஜயங்கொண்டால் அவர்களைக் கொல்லாது அப்புறம் போவான். இவ்வாறு பதினைந்துநாள் சண்டை நடந்தது. கௌரவசேனையின் சேனாதிபதியாகக் கர்ணன் ஏற்படுத்தப்பட்டு யாவரும் வியக்கும்படி யுத்தஞ்செய்தான். அப்பொழுது அவனுக்கும் அர்ஜுனனுக்கும் பெரும் யுத்தம் நடந்தது. அக்காலத்தில் அர்ஜுனன் அவனைத்தருமனெனக்கருதி அவனுடன் சண்டை செய்யமுடியாது திகைக்க, ஸ்ரீகிருஷ்ணர் ஞானமூட்டி, யுத்தம் செய்யும்படி தூண்டினார். அந்த யுத்தத்தில் தருமதேவதைகள் கர்ணனைக் காத்துவந்ததால் ஒருவரையொருவர் ஜயிக்க முடியவில்லை. முடிவில் கர்ணன் தனது நாகாஸ்திரத்தை விட, ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனது தேரைப் பூமியிற் புதையும்படி அழுத்தி அவனது மகுடத்தை அடித்துக்கொண்டு போகும்படி செய்து அவனைக் காப்பாற்றினார். பின்னும் நடந்த யுத்தத்தில் தருமதேவதைகள் கர்ணனைக் காத்து வந்தனர். இதை அறிந்த ஸ்ரீகிருஷ்ணர் பிராமணவேஷங் கொண்டு கர்ணனிடம் சென்று அவன் செய்த தருமத்தை எல்லாம் கொடுக்கும்படி கேட்டார். அவர் விருப்பத்தின்படி தனது மார்பிலூடுருவியிருந்த அம்பைப் பிடுங்கி, வெளிவந்த இரத்த தாரையால், தான் செய்த தருமங்கள் யாவற்றையும் அர்ப்பணஞ் செய்தான். அதைக் கொண்டதும், பரந்தாமன் கருணை பொங்கத் தனது விசுவரூப தரிசனந் தந்து, அவனது மனமுழுதையுந் தன்பாலே லயிக்கச்செய்து, தன்னிடமடைந்து அர்ஜுனனைக் கர்ணன் மீது பாணப்பிரயோகஞ் செய்யத் தூண்டினார்: கர்ணன் மனமுழுதும் மூலமுதற் கடவுளின் திவ்விய குணங்களிலேயே மயங்கி இருந்ததால் அப்பாணம் தைத்ததும், தெரியாது தலை சாய்ந்து கீழே விழுந்தான். ஸ்ரீகிருஷ்ணர் மாத்திரம் அவனுடைய குணப்பெருக்கில் ஈடுபட்டு, அவனைப் பிறவி பெருதபடி கடைக்கண்ணுல் நோக்கிக்கொண்டே யிருந்தார்.

**"அன்பிலார் எல்லாந் தமக்குடையர்; அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு."—திருக்குறள்.**



# விவேக போதினி

தொகுதி. 9] நளஞ தைமீ [பகுதி. 8

## வர்ணாச்ரம ஆக்ஷேப ஸமாதானம்

## VARNASRAMA OBJECTIONS ANSWERED

(4) மேனாட்டவர்கள் கொள்கைகளையே பின்பற்றி நிற்பவரில், குணதோஷ விமர்சகர் ஒருவர் வர்ணபேதங்கள் பிறவியைப்பொருத்ததல்ல என்பதற்குத் தகுந்த ஆதாரம் கண்டு பிடித்துவிட்டதாகப் பின்வரும் மேற்கோளை வேதங்களிலிருந்து எடுத்துக்காட்டுவர்:

'என்ன கொடுமை! நான் கவிபாடி உயிர் வாழ்கின்றேன். என் தந்தையோ வைத்யத் தொழிலைக் கைக்கொண்டுள்ளார். என் தாய் மாவரைத்துப் பிழைக்கிருள். நாங்கள் இப்படிப் பற்பல தொழில்களைப் பின்பற்றியுள்ளோம், பசுக்கள் பல மேச்சற்றரைகளில் பாய்ந்தோடுவதுபோல. ஆதலால் ஒ ஸோம! உம்மை வழிபடுகின்றோம் ஐச்வர்யம் கைகூட. இந்திரன் வழி அருள்புரிக'—ருக்வேதம் 9-ம் மண்டலம், 113-ஸூக்தம், 3-வது ருக்.

பிறவியாலேயே ஜாதிவர்ண பேதம் வந்து நிலைத்துவிடுமாயின், இவ்வாறு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலர், பல வழித் தொழிற்பட இடமே இராது. ஆதலால் வர்ண பேதம் கடவுள் ஏற்பாடல்ல மானிடர் கட்டுப்பாடே என்று சாதிப்பர் இக்காலத்தவர்.

இங்கு, இவர்களால் எடுத்துக் காட்டப்பட்ட மேற்கோள் விஷயம் பலவித குற்றங்களை அடக்கியுள்ளது. (1) வேறு உள் நோக்கத்துடன் நமது ஸனாதன தர்மத்தை ஆராயப் புகுந்துள்ள மேனாட்டார் மொழிபெயர்ப்பையே இது பின்பற்றியுள்ளதால் வேத ருக்கின் உண்மை நோக்கம் இதில் வெளிப்படவேயில்லை. இதைக் கூறுபவருக்குக் குடும்பத்தவர்கள் பலர் முயலக்கூடிய தொழில்கள் விஷயத்தில் வர்ணக் கட்டுப்பாடுகள் இல்லையென்று காட்டவேண்டும் என்பது கருத்தேயல்ல: 'ஆசையால் இழுபட்டு எங்கள் குடும்பத்தவர் பலவிதத் தொழில்களில் முயன்றுவிட்டனர். செல்வ விருப்பத்தால் இக்கொடிய கதி எங்களுக்கு வந்துவிட்டது. ஆதலால் எங்களுக்கு ஆத்ம விஷய நினைப்புக்கு இடமேயில்லை. ஐச்வர்யம் (கடவுள் அருள்) எங்களுக்கு நல்வழிப்பட அவசியம். ஒ ஸோமா, அது இந்திரன் வழிவரட்டும்' என்பதுதான் இதன்கருத்து. ஒரு ருஷி இப்படிக்கூறுவதால் வர்ணபேதம் பிறப்பாலேயே ஏற்பட்டுவருவது என்பதற்கு ஒருவித பாதகமும் இல்லையே (ii) இதைக்கூட ஒரு பாதகமாகக்கொண்டு முன் காலத்தில் பிறவி வர்ண நிலைப்பு இல்லையென்று தீர்மானிப்பது முழுத்தவறு. இக்காலத்தில் ஒரு ப்ராஹ்மணன் 'எங்களைப் பணத்தாசை என்ன மாய்க் கெடுத்துவிட்டது பாருங்கள். ஈச்வரா! என்ன கொடுமை! என் தகப்பன் வைதிகத்தில் வேர்த்து விருவிருத்து தக்ஷிணைக்குப் படும்பாடுதான் என்ன! என் தாய், பல வீடுகளில் சென்று குற்றேவல் செய்து சீரழியும் பரிதாபத்தை என்னென்று சொல்வேன்!! என் நிலையை நாக்கொண்டு நவிலவும் முடியாது! பணக்காரர்களுக்கு மனதைவிற்றுப் பணம் பறிப்பதே என் பாடாகிவிட்டது!!! இவ்வாறு பல கிளைப்பட்டிருப்பதால் எங்களுக்கு உம்மைச் சற்று நினைக்கக்கூட ஒழியவில்லையே! எங்களிடம் கருணைகூர்ந்து நற்கதி திரும்பும்படி அனுக்ரஹிக்கலாகாதா?' என்று ஒரு கவனம் செய்யலாம். இதைக்கொண்டே ஜாதி உட்பிரிவுகள் பலமாக ஏற்பட்டுள்ள இக்காலத்தில் பிறவி வர்ண பேதமே இல்லையென்று சாதிக்க முயலுவது எவ்வளவு அறியாமையோ அவ்வளவு அறியாமை முற்கூறிய ருக்கைக்கொண்டு வேதம் பிறவி வர்ண விஷயத்திற்கு முரணாக உள்ளது என்று பிடிவாதம் பிடிப்பது. (iii) மேலும் அந்த மேற்கோளில் எடுத்தாண்டுள்ள உட் பிரிவு விஷயங்கள் ஒன்றும் வர்ண தர்மத்திற்கு முரணாக உள்ளவைகளும் அல்ல. கவனம் செய்வதும், மாவரைப்பதும் ப்ராஹ்மண வர்ண புருஷர்கள்,

ஸ்திரீகள் ஆகிய இவர்கள் தர்மமே. வைத்யஞ் செய்வது ப்ராஹ்மணனுக்கு ஆபத் தர்மம், வேறு வழி பிழைக்க இல்லாத தருணங்களில் மேற்கொள்ளக்கூடிய தொழில்தான். இதனுல் வேதம் எப்படி வர்ண தர்மங்களை மதியாது ஒதுக்கிவிட்டது என்று கூறுவது?

(iv) இதுவுமன்றி நமது பெரியோர்கள் இந்த ருக்குக்களுக்குக் கூறும்பொருளைக் கவனித்தால் ஆபத்தர்மத்தைக் கொண்டு வராமலே தகப்பன்தொழில்ப்ராஹ்மண தர்மமாகிவிடும். இங்கு பிஷக் என்ற சொல்லுக்கு வைத்தியன் என்ற பொருள் காட்டப்பட்டுள்ளது, அதற்குத் தகுந்த மொழிபெயர்ப்பு புரோஹிதத்தனம் என்பதே என்று நம்மவர்கள் காட்டியுள்ளார்.

ஆகவே இந்த மேற்கோள் பிறவிவர்ண தர்மத்திற்கு ஒருவழியிலும் முரணுகவிருப்பதல்ல; இதை ஆதாரமாகக்கொண்டு அதற்கு மாருகப் பேசுவதெல்லாம் வீணே!

(5) பகவத்கீதையில் (IV-13) பகவான்

ஜாதி ஒரு நான்கினையும் சார்குணத்தைக் கர்மத்தை
ஏதமறப் பாகித் தியற்றினன்யான்—'

என்று கூறி வர்ணபேதம் ஒருவன் குணத்தையும் தொழிலையும் பொருத்தது என்றல்லவா வற்புருத்துகிருர். இதற்கு நேர்மாருக ஜாதி பிறவியையே பொருத்தது என்று எப்படிக் கூறலாம் என்பர் சிலர்.

அவர் கூறுவதுபோலவே ஒரு குணத்தையும் தொழிலையுமே கொண்டு ஒருவன் வர்ணத்தை நிர்ணயிப்பது என்றுகொண்டால் பலவித பாதகங்கள் வரும். (i) மானிடர் மனம் ஒரு க்ஷணம் இருந்ததுபோல மறு க்ஷணம்இல்லை. ஒருக்கால் மிக ஸாதுவாகவும், வேறு காலத்தில் ஒன்றிலும் பாய்ந்தோடாது அசைவற்றதாகவும் மனம் காணப்படும். தொழிலும் இதற்கேற்பவே பலவிதமாகத்தானிருக்கும். ஆகவே ஒருவனுக்குப் பல ஸமயங்களில் பல வர்ணம் ஏற்படும்படியாகும். (ii) மேலும் கடவுளே இந்தப் பேதத்தை உண்டாக்கியதாகக் கூறப்பட்டுள்ளது. ஆதலால் கடவுளுக்கு க்ஷணத்திற்கு க்ஷணம் எல்லோருக்கும் வர்ணங்களை மாற்றிக் கொண்டிருப்பதே ஓயாத் தொழிலாகி விடும்; அவர் நிலையைக்கண்டு எல்லோரும் பரிதவிக்கும்படியாகும். ஆனுல் (iii) இப்படிப்பட்ட வீண் பேச்சுகளுக்கு இடங்கொடாது தடுப்பதற்கே இயற்றினன் என்பது இறந்தகாலத்தில் அமைந்துள்ளது. ஆகவே, ஸ்ருஷ்டியில் வர்ணபேதம் ப்ராணிகள் குணகர்மாக்களின்படி ஏற்பட்டுள்ளது கடவுள் ஆணையால். பின்னர் ஆத்மாக்களது குண கர்மாக்களுக்கு ஏற்ப அவை அந்தந்தவர்ணத்தில் ஈசன்பொது வரம்புக்குட்பட்டுப் பிறவிபெறப் பிறவிவர்ணமே எப்பொழுதும் காணப்படும். (iv) முன் காட்டியபடியெல்லாம் பேசுவதற்கு முக்ய காரணம் இந்த ச்லோகத்திலுள்ள குணம் என்ற சொல்லுக்கு நற்குணம் தீக்குணம் என்றும், கர்மா என்ற சொல்லுக்கு தொழில் என்றும் சிலர் சாஸ்திர மரியாதைக்கு மாருகப் பொருள் படுத்தியதுதான். இங்கு குணம்' என்பது, முன் பிறவிகளில் அடிக்கடி செய்துள்ள காரியங்களால் ஏற்பட்டுள்ளவையும், மீண்டும் இப்பிறவியில் அதே மாதிரியான காரியங்களில் முனையும்படித் தூண்டுபவையுமான வாஸனை என்ற பதிவு என்பதுதான் பொருள். கர்மா என்பது ப்ராரப்தகர்மா முன் பிறவிகளில் செய்யப்பட்ட காரியங்களின் பாப புண்யத் தன்மைக்கேற்ப ஏற்பட்டவையும், இப்பிறவியில் துக்க ஸுகங்களாகமாற ப்ராரப்தமாகஇருப்பவைகளுமான கர்மா என்ற பதிவு என்பதுதான் பொருள். ஆகவே பகவான் இந்த ச்லோகத்தில் 'ஒவ்வொருவன் பிறவிக்காலத்தில் அவனவன் வாஸனை, ப்ராரப்தகர்மா இவைகளுக்கேற்பத் தகுந்தஜாதியில் பிறக்கும்படி செய்கிறேன். இந்த ஜாதிகள் ஸ்ருஷ்டி ஆதியிலேயே இப்படியேதான் என்னுல் அமைக்கப் பட்டுள்ளன' என்று கூறுகிருர்.

(6) புராணுதிகள் ஆராய்ச்சியில் முனைந்த சிலர் "பாரதம் ஆரண்ய பர்வத்தில் நகுஷன் என்ற மலைப்பாம்பு தருமபுத்திரரை நோக்கி "யார் பிராஹ்மணன்?" என்று கேட்க, அதற்கவர் 'ஓ நாகேந்திரா! ஸத்யம், தானம், பொறுமை, நல்நடத்தை, அஹிம்ஸை, தவம், தயை, இவைகள் எவனிடம் காணப்படுமோ அவனே ப்ராஹ்மணன். இவையில்லாப் பிராஹ்மணன் சூத்ரன். இவையுள்ள சூத்ரன் ப்ராஹ்மணனே!" என்ற பதிலுரைத்தார். இதற்கேற்பவே, வச்சிரஸூசி உபநிஷத்திலும் 'ப்ராஹ்மணன் என்பது ஜாதியாலல்ல' என்று காணப்படுகிறது. இதற்கேற்ப் வேதத்திலும் வர்ண விஷயச் சொற்கள் வந்தால், குணவழிப் பொருள்படுத்தி, பிறவி வர்ணமே இல்லை என்று கூறிவிடலாம்" என்பர்.



(i) இங்குக் கூறப்பட்டதில் வச்சிரஸூசி உபநிஷத்தை எடுத்துக் கொள்ளுவோம். 'வர்ணங்கள் நான்காம். அதில் ப்ராஹ்மணனே சிறந்தவன் என்று வேதங்களைப் பின்பற்றிச் சாஸ்திரங்களும் கூறும்' என்று பிறவி வர்ணத்தை ஒப்புக்கொண்டே தொடங்கியுள்ளது இது. பின்னர், எதனுல் ப்ராஹ்மணீயம் என்று சிலர் நிலைநாட்ட முயலுகின்றனரோ அதையும் 'ஞானத்திலுைம் ப்ராஹ்மணன் என்பதல்ல' என்று கூறி, மறுத்து விடுகிறது. ஆகவே முன்னர் ஒப்புக்கொண்டு பின்னர் மறுத்து விவரிப்பதற்கு ஏதோ வேதத்திற்கு ஒரு நோக்கமிருக்க வேண்டும். அந்த உண்மை நோக்கத்தைத் தான் விளக்கிக்காட்டுகிறது பாரதம். இதை அவர்கள் உணரவில்லைபோலும்! (ii) தர்மபுத்திரர், பிறவியாலே ஏற்படும் வர்ணத்துள் சிறந்த ப்ராஹ்மணன் நோக்கமான தன்மைகளை வற்புறுத்த, வர்ணத்தைக்கூட ஒதுக்கிக் குணத்தை ஏற்றிக்கூறுகிருர். அலங்கார வழி உருவகம் என்ற அலங்காரத்தின் உயிர் இவ்வாறு கூறுவதுதான். இதற்குக் கௌணவிருத்தி என்று பெயர். அவன் ஒரு புலி என்பது இதற்கு உதாரணம். ஆகவே ப்ராஹ்மணனிடம் இங்குக் காட்டப்பட்ட குணமிருப்பின், சிறந்த ப்ராஹ்மணன்; இராதிருப்பின் தாழ்ந்த பிராஹ்மணன் என்பதுதான் இதன் பொருள். இதற்கு மீறிச் சொல்வழி முக்கிய விருத்தியாய் வெள்ளையாகப் பொருள்படுத்துவது தவறு. (iii) இப்படிக் கொண்டு ஒதுக்குவதற்கிடமில்லாமலே தர்மபுத்திரரே இவையுள்ளவன் ப்ராஹ்மணன், இல்லாத ப்ராஹ்மணன் சூத்ரன் என்று வற்புறுத்துகிருரே எனச் சிலர் தயங்கலாம். ஒரு விஷயத்தைச் ஏற்றிச் சொல்லப் புகுந்தால் நம்மவர் மற்றவைகளை எல்லாம் இப்படித்தான் இறக்கிக் கூறுவது வழக்கம். இதற்கு உதாரணமாக ஔவையார் மூதுரையில் கூறியுள்ள செய்யுளை எடுத்துக்கொள்ளலாம் :—

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கு
மவையல்ல நல்ல மரங்கள்—சபை நடுவே
நீட்டோலை வாசியா'னின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்.

இதனுல் வாசித்தும் குறிப்பறிய முடியாதவன்தான் மரம். காட்டிலுள்ள மற்றையவைகள் மரமேயல்ல என்று வாதம் செய்யலாமா? இதுபோல, ப்ராஹ்மணத் தன்மையை உயர்த்திக் கூறியதால் அது தங்கி நிற்கக்கூடிய பிறவி ஜாதி இல்லையென்று எப்படிக் கூறிவிட முடியும்? (iv) இப்படிக்கொள்ளாது ப்ராஹ்மணுதிச் சொற்களுக்கு ப்ரஹ்மஞானம் முதலிய தன்மைகளே வேதாதி சாஸ்திரங்களில் பொருள் என்று சொன்னுல் இவைகளைத் தவிர வேறு ஒரு பொருளிலும் சாஸ்திரங்களில் இச்சொற்கள் உபயோகப்படுத்தப் படவில்லை என்று காட்டினுலல்லது அது ஒப்புக் கொள்ளக் கூடாததாகும். வர்ணுதிகள் தர்மங்களை எடுத்துக் கூறுமிடத்து இப்பொருள் பொருந்தாதே. மேலும் ப்ரஹ்மஞானி ப்ராஹ்மணன் என்ருல், அவன் தர்மங்களெல்லாம் மீறியவனுதலால் அவனுக்குத் தர்மம் விதிக்குமா சாஸ்திரம்?

இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் இவர்களுக்குப் புராண விஷய ஆராய்ச்சி போதாது என்றுதான் கூறவேண்டும்.

(7) புராணங்களைக்கொண்டே வேறு ஒரு ஆக்ஷேபணையை இவர்கள் மேலும் கொண்டு வருவர். அதாவது 'ஆரண்ய பர்வத்தில் தர்மவியாதன்என்ற வேடன் கௌசிக ப்ராஹ்மணனுக்கு உபதேசம் செய்யவில்லையா? உத்யோக பர்வத்தில் சூத்ரரான விதுரர் தம் தமயனை க்ஷத்ரியவர்ணத்திற்பிறந்த திருதிராஷ்டிரனுக்குபதேசம் செய்யவில்லையா? இதற்கேற்பவே சாந்தோக்ய உபநிஷத்தில், ப்ரவாஹன ஜைவலி என்ற அரசன் கௌதம ப்ராஹ்மணனுக்கு உபதேசம் செய்ததாயும், ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் அஜாதசத்ரு என்ற அரசன் கர்க்ய பாலகி என்ற ப்ராஹ்மணனுக்கு உபதேசம் செய்ததாயும் காணப்படுகின்றனவே. உபதேசம் என்ற ப்ராஹ்மண தர்மத்தை மற்றைய வர்ணத்தாரும் கையாடலாம் எனில், பிறவி வர்ண தர்மம் எப்படிக் கைகூடியதாகும்?" என்பர்.

இங்குக் காட்டப்பட்ட கதைகளில் ஸமய ஸந்தர்ப்பங்களை நுழைந்து நோக்கினுல், இவர்க

ளின் அறியாமை முற்றிலும் விளங்கிவிடும். (i) கௌசிகன் தர்மவ்யாதனிடம் தெரிந்துகொண்டது ஸ்வதர்மத்தின் சிறப்பு; தாய் தந்தையர்களைத் தெய்வமாகக் கொண்டாடி அவர் உத்தரவின்பேரில் வைதிக வழிச் செல்ல முயலுவதுதான் பொது தர்மம் என்பது ஆகிய இவைகளே. இவைகளைக் கேட்டு, தர்மவியாதன் ஒழுக்க விசேஷத்தைக் கண்டதும் அவனிடம் கௌசிகனுக்கு மிகுந்த கௌரவ புத்தியுண்டாகி உபதேசம் பெறவேண்டும் என்ற துர்எண்ணம் தோன்ற, அக்குறிப்பை அறிந்து தர்மவியாதன் 'ப்ராஹ்மணர்களை வணங்கி அவரிடம் உபதேசம் பெற்றுக்கொள்ளுங்கள்' என்று எச்சரிக்கை செய்துவிட்டான். (ii) விதுரரும் இப்படியே தர்மரஹஸ்யங்களைப் பொழுது போவதற்காகத் தம் தமயன் திருதிராஷ்டிர மஹாராஜனுக்குச் சொல்லிவர, அவரது திறமையையும் ஒழுக்கத்தையும் கண்ணுற்ற அரசன் அவரையே ப்ரஹ்ம விஷயத்தையும் உபதேசிக்கும்படி வாய் கூசாது கேட்டுவிட்டார். அதற்கு அவர் 'சூத்திர உடலில் பிறந்துவிட்டேன். ஆதலால் நீர் கேட்டுக்கொண்ட விஷயத்தைச் சொல்ல மனம் துணியவில்லை. பிராஹ்மண உடலெடுத்தவனே தத்வத்தையெடுத்து வசனிக்கத்தக்கவன்' என்று சாஸ்திரீய மறுமொழி கூறித் தம்மிடம் வர்ணத்தடையைத் தவிர விஷய உணர்வுத்தடையில்லை ஆனாலும் வர்ணவரம்பை மீறவுங்கூடாது என்பதையே காட்ட, ப்ரஹ்மாவின் மானஸ புத்திரர்களான பிறவி ஞானிகளுள் ஒருவரான ஸனத்குமாரரைத் தம் தியான பலத்தால் விதுரர் அன்றிரவு அங்கு வரவழைத்து ப்ரஹ்ம விஷயத்தை அவரைக்கொண்டே தம் தமயனுக்குச் சொல்லிவைத்தார். (iii) முன் கூறப்பட்ட கதா ரஹஸ்யங்களுக்கு மூலாதாரமாகவேதான் உள்ளது ப்ரவாஹன ஜைவலி செயலும். அவன் க்ஷத்ரியர்களிடமே, அவர்கள் கர்மானுஷ்டான வழிக்கு முக்யமாயிருந்ததான பஞ்சாக்னிவித்யையை அதாவது ஜீவன் லோகாந்தரகதியை ப்ராஹ்மணனுக்கு உணர்த்தினனே ஒழிய ப்ரஹ்ம விஷயம் ஒன்றையும் உபதேசித்தானில்லை. (iv) ப்ருஹதாரண்யகத்தில் அஜாத சத்ருவும் அவஸ்தாத்ரய நுட்பத்தை ப்ராஹ்மணனுக்குத் தோழன் நிலையில் தெரிவித்தானே ஒழிய, ஒருவித ப்ரஹ்ம ரஹஸ்யத்தையும் உபதேசித்தானில்லை.

ஆகவே, இக்கதைகள் ஒன்றிலும் ப்ராஹ்மணன் தர்மமான உபதேசம் செய்தல் என்பதை வரம்புமீறி ஒரு தாழ்ந்த வர்ணத்தாரும் செய்தாரில்லை; பிறவி வர்ண விரோத காரியம் ஒன்றும் இங்கெல்லாம் நடைபெறவில்லை.

(v) மேலுஞ்சிலர் இங்கு கூறப்படும் அறிவிப்புக்களே உபதேசமாகாவோ என்று வாதாடலாம். உபதேசத்திற்குக் குருவிடம் சென்று சிஷ்யன் அடிபணிந்து, அவனைக் கடவுளாகவே பாவிக்கவேண்டும். அவனிடமிருந்து ப்ரஹ்ம வித்தையைப் பெற பெறும் விஷயம் ப்ரஹ்ம வித்யை இல்லாமலாவது, கேட்பது ஈச்வர பாவத்துடன் வணங்கிக்கேட்கப்படாமலாவது இருப்பின், அது உபதேசமேயல்ல. கூறுவது எவ்வளவு புதிய விஷயமாயினும், கேட்பது எவ்வளவு ஆச்சரியத்துடனிருப்பதாயினும் அது உபதேசமேயாகாது; வெறும் புதியது கற்றுக் கொள்ளுவதும் உணர்த்துவதுமாகத்தான் ஏற்படும். இவ்வாறின்றி இவைகளையெல்லாம் உபதேசமாகக் கொண்டால், தத்தாத்ரேயர், தாம் 24 உலக விஷயங்களிடமிருந்து சாஸ்திர ரஹஸ்யங்களை உணர்ந்துகொண்டார் என்று கூறியதைக் கொண்டு கல், மண், தாசி, குருவி, மலைப்பாம்பு முதலிய எல்லாம் தத்தாத்ரேயருக்கு ஆசாரியர்கள்: அவைகளிடம் அவர் உபதேசம் பெற்றார் என்று சொல்லவேண்டியதாகும். நமக்குத் தெரியாத விஷயங்களைத் தெரியச் செய்யும் எல்லாம் நமக்கு உபதேசம் செய்ததாக முடியும். கௌணமாக இவைகள் உபதேசம் என்றுகூட உயர்வாய்ச் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கும். இவைகளை மாத்திரம் கொண்டு முக்ய விருத்திகளில் இவைகள் உபதேசமென மதிப்பது அறிவின் மயக்கமே! உபதேசத்தின் அருமையைக் காட்டவே, வியாதரும், விதுரரும் வாய்விட்டே கூறிவிட்டனர் 'ப்ராஹ்மணரிடம் போ உபதேசத்திற்கு' என்று. இதுவுமன்றி பகவான் கீதையில் அர்ச்சுனனுக்குச் செய்ததுகூட முக்ய உபதேசமல்ல. உபதேசம் உள்ளபடி பெற, ப்ராஹ்மணரிடம் போ என்றே பின் வருமாறு (iv) 34-ல் கூறியுள்ளார்:—



பாதம் பணிந்தும் பரிவோடு சாவியும்
ஏதம்றச் சேவித்தும் ஈதறிக—நீதரவே
மெய்கண்ட ஞானியர்கள் மேவரிய ஞானத்தைக்
கைகண்டிட்டுத் தருவர் காண்.

கீதையே உள்ளபடி உபதேசமல்ல. உபதேசம் வேறுண்டு என்று பகவானே கூறியதால் அது ப்ராஹ்மண தர்மம். அதற்கு மாறாகத் தோன்றும் இடங்களில் எல்லாம் உபதேசமே இல்லை என்றும் துணிந்து கூறிவிடலாம். தகுந்த ப்ராஹ்மணனால் ஒழுங்குப்படி உணர்த்தப்படும் ப்ரஹ்ம வித்தையே உபதேசம். யாராவது வேறு எதையாவது எப்படியாவது சொன்னால் உபதேசமேயல்ல என்பது சாஸ்திரங்கள் துணிபு. பகவான் கீதை கூறியதன் பயன்தான் என்னவெனில், அர்ச்சுனனுக்கு ஞானிகள் (ப்ராஹ்மணர் அல்லது தேவர் அல்லது ஈசன் அவதாராதி ரூபங்கள்) உபதேசிக்கக்கூடிய ஞானம் நன்றாகப் பதிந்து மோக்ஷவழி ஸரிவர நடக்கத் தொடங்குவதற்கு அவனுக்கு முன்னாலேயே விளங்கியிருக்க வேண்டிய விஷயங்களையும் நடந்துகொள்ள மாதிரியையும் அவனுக்கு எடுத்து விளக்கியதுதான்.

(8) இந்த ஸந்தர்ப்பத்தில் சிலர் பகவத் கீதையையே ஆதாரமாகக் கொண்டு இரண்டு விதமாக ஆக்ஷேபிக்கலாம். '(i) பகவான் ப்ராஹ்மணரல்லாது க்ஷத்ரியராக இருந்தபோதிலும் கீதையில் ப்ரஹ்ம வித்யையை எப்படி அர்ச்சுனனுக்கு எடுத்துக் கூறலாம்? (ii) மேலும் நான்காம் அத்யாயத் தொடக்கத்தில் பகவான் கூறும் ரஹஸ்யம் க்ஷத்ரிய பரம்பரையிலேயே இருந்து நஷ்டமாகி விட்டது. ஆதலால் அதை மறுபடி தாம் எடுத்துக்காட்ட வந்துள்ளதாகக் கூறுகிறார். அங்கு ப்ராஹ்மணரிடம் இந்தக் கீதாஸாரம் இருந்ததாகக் காணப்படவில்லையே! இவைகளையெல்லாம் ஆராய்ந்துபார்த்தால், வர்ணதர்மம் ஒரேபடித் தர்மாய் மாறாதிருந்ததாகத் தெரியவில்லை. இதனாலேயே வர்ணங்கள் ஜனங்கள் பொது நன்மைக்காக அக்காலத்தில் மானிடரே ஏற்படுத்திக்கொண்ட ஒருகட்டுப்பாடு. அதைத் தருணத்திற்கேற்றபடி தகுந்த தாழ்ந்த ஜாதியார்கள் விஷயத்தில் மீறியும் விடலாம் என்றே தோற்றுகிறது' என்பர்.

(i) இவற்றிற்கெல்லாம் இடங்கொடாமலே தான் பகவான் கீதோபதேச காலத்தில் தமது ஸாதாரண யாதவகுலரூபத்தை விட்டு, நான்கு கைகளுடன் கூடிய திவ்ய ரூபத்தைத் தாங்கியே கீதா விஷயங்களை எடுத்து விஸ்தரித்தார். ஆதலால் அவர் ப்ரஹ்ம வித்யா விஷயத்தைக்கூட எடுத்தாண்டதில் சாஸ்திரவர்ண விதிக்கு ஒருவழியிலும் முரணேயில்லை. (ii) நான்காம் அத்யாயத்தின் தொடக்கத்தில் கூறியது கர்மயோகரஹஸ்யமே. இது ப்ராஹ்மணர் விஷயத்தில் அவர்கள் வர்ண கர்மங்களின் இயற்கையாலேயே ஒருக்காலும் மழுங்கிப் போக இடமேயில்லை. க்ஷத்ரிய தர்மமான யுத்தம் மிகுந்த கொடிய தர்மமாதலால் அதைப் பின்பற்றவேண்டிய க்ஷத்ரியரிடம் மாத்திரம் தான் அந்த ரஹஸ்யம் அடிக்கடி மழுங்கிப் போக இடமுண்டு. அதை அடிக்கடி நிலைநாட்ட வேண்டியது அவர்களிடமேதான். அது பற்றியே பகவான், க்ஷத்ரியரை மாத்திரம் எடுத்துக்கூறினரே ஒழிய மேல்வர்ணமான ப்ராஹ்மணர் விஷயத்தைக் கூறாமலே விட்டார். (iii) மேலும் பகவான் தானே முன்னர் ஸூர்யனிடம் கூறியதாக அங்கு கூறியுள்ளார். கூறிய அவர் எவ்வர்ணத்தில் சேர்ந்தவர்? கேட்ட ஸூர்யன் எவ்வர்ணத்தைச் சேர்ந்தவன்? இருவரும் தேவதா கூட்டத்தில் சேர்ந்தவர்களாகையால் ப்ராஹ்மணர்களே. அவர் வழி அந்த தர்மம் பின்னர் ராஜருஷிகளிடம் வந்து மழுங்கியது என்றுதான் கூறவேண்டும். இங்கு ப்ராஹ்மணர் விஷயம் எடுத்தாளப்படாமலும் போகவில்லை (iv) இப்படியே நோக்கினால் சாந்தோக்யத்தில் ப்ரவாஹன ஜைவலி கூறும் பஞ்சாக்னி வித்யையும் 'க்ஷத்ரியரிடமே இருந்தது, ப்ராஹ்மணர்களிடம் அப்பொழுது போகப் போகிறது' என்ற பீடிகையுடன் கூறப்பட்டதற்கும் பொருள் இங்கு காட்டியதே. முதலில் அதை உணர்ந்து வெளியிட்ட ஈச்வரனும், கேட்ட பிரஹ்மாவும், ப்ராஹ்மணர்கள் அவர் வழி உலகில் அது க்ஷத்ரியரிடம் முன்னர் காட்டியபடி அவர்கள் ஆவச்யகத்திற்காக இருந்து, பின்னர் ப்ராஹ்மணரால் ஏற்கப்பட்டது என்றுதான் கொள்ளவேண்டும். ஆகவே ப்ராஹ்மணர் ஸம்பந்தமின்றி நேர் ப்ரஹ்மவித்யாவிஷயங்கள் வெளிவருவது ஒழுங்கேயல்ல; அசாஸ்திரீயம். பிறரிடம் ப்ரஹ்மோபதேச விஷயமாகக்கேட்டலாகாது. உபதேச ஒழுங்காகவும் மற்றையவைகளைக்கேட்டல் கூடாது.

# “ராண்ட்ஜன்” கிரணங்கள்

## THE RONTGEN OR “X” RAYS

நாம் சாதாரணமாய் ஒரு பதார்த்தத்தின் புகைப்படம் எடுத்தால், அதன் வடிவு, உருவம் முதலியவை நன்றாய்ப் புலப்படுகின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. உதாரணமாக, ஒரு தோற் பையை (Money purse) ஓரிடத்தில் வைத்து அதைப் புகைப்படம் எடுத்தால் அதன் உருவம் நன்றாய்க் காணப்படும். ஆனால் அதே பையில் சில வெள்ளி நாணயங்களையும், பொற்காசுகளையும் உள்ளே போட்டுவிட்டு மறுபடியும் படம் எடுத்தால், நாம் முன்னெடுத்த படத்துக்கும், இரண்டாவது தடவை எடுத்த படத்துக்கும் கொஞ்சங்கூட வித்தியாஸம் தெரியாது. அதாவது நாம், ஸாதாரண வெளிச்சத்தில் புகைப்படம் எடுப்பதில் வஸ்துக்களின் வெளிஉருவம் மாத்திரம் படத்தில் விழுகிறதே தவிர, அவ்வஸ்துக்களின் உள்ளே, என்ன என்ன இருக்கிறது என்பது தெரிவதில்லை. ஆயினும், இந்த அசாத்தியமான காரியத்தைச் சாத்தியமாகச் செய்யும் சாதனம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. அது ‘ராண்ட்ஜன் ரே’ என்பது. அச்சாதனம் எத்தகையது என்றால், ‘ அது ஒருவிதமான அபூர்வ வெளிச்சம்; அவ்வெளிச்சத்தில் வஸ்துக்களைப் புகைப்படம் எடுத்தால், சாதாரணமான படத்தில் தெரிவதைப்போல் வஸ்துக்களின் வெளிவடிவம் உருவம் முதலியவை தெரிவதுமல்லாமல், அவ்வஸ்துக்களின் உள்ளே என்ன என்ன இருக்கின்றனவோ அவைகூட ஸ்பஷ்டமாய்த் தெரியும்.”

ஈதென்ன ஓர் புதுமை யன்றோ? இதை யார் கண்டுபிடித்தவர்? எப்பொழுது, அதாவது எந்த வழியில் கண்டுபிடித்தார்? அவர் எந்தத் தேசத்தவர்? அவர் சரிதை என்ன? இதனால் சாதாரண ஜனங்களுக்கு நன்மை என்ன? என்று பலவிதமாய்ப் பலர் ஆவலாய்க் கேட்பார்கள். ஆதலின் இவ்விஷயத்தைப் பற்றிச் சற்றே கவனிப்போம்.

முதன்முதலில்,இது ஓர் புதுமை என்பதை எல்லோரும் அங்கீகரிப்பர். பூலோகத்திலேயே, இருபத்திரண்டு வருஷங்களுக்கு முன் இதையறிந்தவர் ஒருவருமில்லை. இதை முதலில் கண்டுபிடித்தவர் டாக்டர் வில்லியம் காவ்ரேட் ராண்ட்ஜன் என்பவர். கி.பி. 1895-ம் வருஷம் நவம்பர் மாதம் 8-ம் தேதியில்தான் அவர் இதைக் கண்டுபிடித்தார். டிஸம்பர் மாதத்தில் உர்ஸ்பர்க் வைத்திய சபையில் இதை அவர் வெளியிட்டார். பின்னர் ஒரு மாதத்துக்கெல்லாம் இவ்விஷயமானது ஐரோப்பாஅமெரிக்கா முழுவதும் தெரிந்துவிட்டது.1896-ம்வருஷக் கடைசியிலேயே இந்த ‘ராண்ட்ஜன் ரே’ யின் உபயோகம் உலகம் முழுவதும் பரவிவிட்டது.

டாக்டர் ராண்ட்ஜன் என்பவர் இந்த அபூர்வ சங்கதியைக் கண்டுபிடிக்கும்போது ஐம்பது வருஷத்துக்கு மேலான கிழவர். இவர் பிறந்தவிடம் ஸ்யூரிச் (Zurich). யுட்ரெக்ட் (Utrecht) நகரத்தில் இவர் கல்வி கற்றவர். பிறகு பெவேரியாவிலுள்ள உர்ஸ்பர்க் என்னும் பட்டணத்திலுள்ள ஸர்வ கலாசாலையில் உபாத்தியாயரா யிருந்தார் (University Professor). மின்சாரம் முதலியவற்றில் இவருக்கு நுண்ணறிவு உண்டு. இவரைப் பார்த்தால் சற்று உயரமாயும் ஒல்லியாயுமிருப்பர். நீளமான தாடி விளங்கும் சாந்தமான முகமும் கம்பீரமான வாக்குமுடையவர்; வெகு வேகமாய்ப் பேசக்கூடியவர். முதலில் பார்க்கும்போதே, இவர் அளவற்ற ஆண்மையும் தீரமும் கொண்டவரென எல்லோரும் சொல்லுவார்கள்.

இவர் மின்சாரத்தைப்பற்றியே பலவித யோசனைகள் செய்து வருங்கால், ஒரு நாள் ‘க்ரூக்ஸ் ட்யூபை’ (Crookes tube), வைத்து அதன்மேல் வெளிச்சம் கொஞ்சங்கூடப் படாமல் பார்த்துத் தம் வேலையை ஆரம்பித்தார். எங்கும் ஒரே இருட்டாய் இருந்தது. ஆயினும் போடோகிராப் எடுக்கும் காகிதம் மாத்திரம் பளபளவென்று மின்னல்போலப் பிரகாசித்தது. எங்கேயோ தப்பிதம் இருக்கிறது என்று அடுத்தநாள் இன்னும் அதிகமான ஜாக்கிரதையெடுத்துக்கொண்டு அதேபிரகாரம் ஆரம்பித்தார். அடுத்தநாளும் அதே மாதிரியாக ஆரம்பிக்க புகைப்படமெடுக்கும் கடிதம்மாத்திரம் பிரகாசித்தது. ஆகையால்,இவர் என்ன ஊகித்தார் என்றால் :—“இந்த க்ரூக்ஸ் ட்யூபிலிருந்து (Crookes tube) ஏதோ அபூர்வமான வெளிச்சம் வருகிறது.சாதாரணமாய்க் கடிதமென்ன, துணிமணி என்ன, மரமென்ன இவைகளின் வழியாகவே அது செல்லுகிறது. இதை வைத்துக்கொண்டு சாதாரண வெளிச்சத்தில் எப்படிப் புகைப்படம் எடுக்கலாமோ அதே மாதிரியாக மற்றைய வஸ்துக்களையும் எடுக்கலாம்.” என்றும் தீர்மானித்தார். இதற்கு அறிகுறியாக, ஒருபெட்டியில் பித்தளைத் தட்டுகள் சிலவற்றைப் போட்டு அந்தப் பெட்டியை அவர் புகைப்படம் எடுத்ததில், பெட்டியின் உருவம் வெயிலில் வைத்தால் நிழல் எப்படி விழுமோ அதுமாதிரி மங்கலாயும், உள்ளேயிருக்கும் பித்தளைத்தட்டுகளும், பெட்டியின் ஓரத்திலுள்ள ஆணிகளும் நன்றாய்க் கருப்பாயும் விழுந்தன.

இதைப்பற்றியே இவர் யோசித்துக்கொண்டிருக்கும் சமயத்தில், “இந்த அதிசயமான வெளிச்சம், கடிதம், மரம், துணி முதலியவைகளின் வழியே செல்லுவதால், மனுஷ்ய தேகத்தின் வழியாய் மாத்திரம் செல்லாதோ?” என்று சந்தேகம் வந்தது. உடனே தன் கையைக் கீழேவைத்து அதன்மேல் “க்ரூக்ஸ் ட்யூப்” வரும்படி ஏற்பாடு செய்து, ஒரு புகைப்படம் எடுத்தார். எடுத்துப் பார்த்ததில், கையிலுள்ள சதை நிழல் மாதிரியாயும், எலும்புகள் மாத்திரம் கருப்பாயும் விழுந்ததைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். இதன் பிறகு ஒரு மனிதனை அப்படியே நிறுத்தி இந்தப் புதிய வெளிச்சத்தில் புகைப்படம் எடுத்ததில் அவனுடலிலுள்ள ஒவ்வொரு எலும்பும் அப்படியே கருப்பாய் புகைப்படத்தில் விழுந்தது. சில நாளானவுடனே, இந்த அபூர்வ வர்த்தமானங்களையெல்லாம் எழுதிப் பிரசுரம் செய்வித்தார்.

நாளது தேதி வரையிலும், இந்த “ராண்ட்ஜன் ரே” விஷயமாய் முழு விபரமும் தெரியவில்லை. இதன்பொருட்டே, இதற்கு “X ரே” என்ற பெயரும் வந்திருக்கிறது. ஆங்கில பீஜகணிதத்தில் “X” என்று, தெரியாத் தொகையைக் காட்டுவது வழக்கம்.

ஆயினும், சீக்கிரமாகவே ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இந்த “ராண்ட்ஜன் ரே” வைத்துக்கொண்டு பெரிய வைத்தியர்கள் சில பரிசோதனைகள் செய்ய ஆரம்பித்தார்கள். ஐக்கிய மாகாணங்களில் மிகப் பெயர்பெற்ற “தாமஸ் எடிஸன்” கூட இவற்றை வைத்துக்கொண்டு சில பரிசோதனைகள்செய்திருக்கிறார்.

இந்த “ராண்ட்ஜன் ரே” யினால் மனிதர்களுக்குப் பலவித பிரயோஜனம் இருக்கின்றது. போர்க்களத்தில் துப்பாக்கிக்குண்டுகள் படுங்கஷ்டப்படும்போது குண்டு எங்கேயிருக்கிறது என்று வைத்தியர்களுக்குக் கண்டுபிடிப்பது கஷ்டம். முற்காலத்தில்; புஜத்தில் குண்டுபட்டால் அவ்விடத்தை முழுவதும் அருத்துப் பார்த்தால்தான் தெரியும். இந்த “ராண்ட்ஜன் ரே” வைத்து புகைப்படம் எடுத்தால், அந்தக் குண்டு எங்கேயிருக்கிறது என்பது வெகு சீக்கிரமாய்த் தெரிவதனால், வைத்தியர் அவ்விடத்தில் மாத்திரம் “ஆபரேஷன்” செய்து, குண்டையெடுத்து விலக்கிவிடுவார். புகைப்படம் எடுக்கும்போது, அப்படியேகூடக் காயப்பட்ட மனிதன் படுக்கையில் படுத்துக்கொண்டே யிருக்கலாம். துணியின் வழியாய் இவ்வபூர்வ வெளிச்சம் செல்லுவதால், காயம்பட்ட மனிதனைக் கொஞ்சங்கூடக் கஷ்டப்படுத்தாமல், காயம்பட்ட இடத்தை மாத்திரம் புகைப்படம் எடுத்து அங்கேமாத்திரம் இலேசாய் ஆபரேஷன் செய்து அவனைச் சீக்கிரத்தில் சொஸ்தப்படுத்திவிடலாம்.

இதற்கு உதாரணங்கள் பலவுள. இங்கிலாந்தில் பந்து விளையாடிக்கொண்டிருக்கும்போது பத்தொன்பது வயதுள்ள ஒரு சிறுவனுக்குக் கால் விரலில், கடைசி விரல் காயமடைந்தது. இந்த விரலை மடக்கவும் முடியவில்லை, நிமிர்த்தவும் முடியவில்லை. வலியோ அசாத்தியமாயிருந்தது. சில வைத்தியர்கள் வந்துபார்த்து, “இந்த விரலை வெட்டித்தான் விடவேண்டும்; வேறு வழியில்லை” என்றார். ஆனாலும், அதில் ஒருவர் “ராண்ட்ஜன் ரே” யை வைத்து புகைப்படம் எடுத்ததில், எலும்பின் ஒரு பாகம் தவறி, மற்றோரிடத்துக்கு வந்திருந்ததைத் தெரிந்துகொண்டார். உடனே அதற்கு வேண்டிய சிகித்ஸைசெய்து அந்த விரலை வெட்டிடாமல் சௌக்கியப்படுத்திவிட்டார்.

ஆகையால் இப்பொழுது யுத்தத்தில் வெகு ஸகஜமாக “ராண்ட்ஜன் ரே” யந்திரங்களை எடுத்துக்கொண்டு போகிறார்கள்.

தவிரவும், வேறு விதமாயுண்டாகும் அபாயத்தைத் தீர்ப்பதற்கும் “ராண்ட்ஜன் ரே” நல்ல உதவியா யிருக்கிறது. ஒரு சமயத்தில் “ கால்ஜோடு என்னைக் கடித்து விட்டது ” என்று ஒருவர் வைத்தியரிடம் சொன்னார்.

"அபரிமிதமான வலி யிருக்கிறது. என்ன செய்வேன்!" என்று புலம்பினர். உடனே வைத்தியர் "ராண்ட்ஜன் ரே" யால் புகைப் படம் எடுத்து அவர் போட்டுக்கொண்டிருந்த ஜோடு, காலுக்குப் போதாததால் கால் எலும்பு வளைந்துபோன விஷயத்தை அவருக்கு எடுத்துச்சொல்லி, வேண்டியபடி உதவினர்.

இதேமாதிரி, ஆஸ்டிரியாவில், ஒருவருக்குக் கால் கட்டைவிரல் எவ்வளவு பெரிதாயிருக்க வேண்டுமோ அதைப் பார்க்கிலும் இரண்டு மடங்கு பெரிதாய் இருந்தது. ஏனென்றால், சாதாரணமாய் ஒரு எலும்பு இருக்குமிடத்தில் இரண்டு எலும்புகள் இருந்தன. ஆகையால் ஒரு எலும்பை எடுக்கவேண்டியது அவசியமாயிற்று. எந்த எலும்பை எடுக்கிறதென்று மாத்திரம் நன்றாய்த் தெரியவில்லை. "ராண்ட்ஜன் ரே" வைத்து புகைப்படம் எடுத்துப் பார்த்து, எது சாதாரணமா யிருக்க வேண்டியது, எது தவறி வந்துவிட்டது என்பதை ஆராய்ந்து, அதைக் களைந்து விட்டார்கள்.

இதுவிஷயத்தில் அபூர்வமான பரிசோதனை பிலடேல்பியாவில் (Philadelphia) நடந்தது. ஈஜிப்ட் தேசத்தைப் பார்க்கவந்த யாத்திரைக்காரர்களில் ஒருத்தி அங்கே வைத்திருக்கும் "மம்மி"*யின் கையொன்றை வாங்கிவந்தாள். வந்தபிறகு யாரோ சிலர், "இதுமம்மியின் கையல்ல. யாரோ உன்னை ஏமாற்றிவிட்டுக் கருப்பு மண்ணையும், சில வாஸனைப் பொடியையும் சேர்த்து உன் கையில் கொடுத்துவிட்டார்கள். நீயும் அதை நம்பிவந்துவிட்டாய்" என்று ஏசினர். இவளுக்கு இவ்வார்த்தை சகிக்கவில்லை. உடனே "ராண்ட்ஜன் ரே" யால் புகைப்படம் எடுத்ததில், கையின் எலும்புகள் நன்றாய்த் தெரிந்தன. இவளைப் பரிகாசம் செய்தவரே பரிகாசம் செய்யப்பட்டார். எல்லோர்க்கும் இந்த "X-ரே"யில் நம்பிக்கை அதிகரித்தது.

இன்னும் அபூர்வ விஷயம் ஒன்று இதைப் பற்றி இருக்கிறது. அது என்னவென்றால், இதனால் ரத்னங்களின் விலையை நன்கு மதிக்கலாம் என்கிறார்கள். நிர்மலமான கற்களாயிருந்தால், "ராண்ட்ஜன் ரே" யிற் எடுத்த புகைப்படத்தில் நிழல் தெரியுமேயொழிய, கருப்பாய் அவை காணமாட்டா. கற்களில் ஏதாவது குற்றம் இருந்தால், ஒரே கருப்பாய் புகைப்படம் இருக்கும் என்பதாம். இன்னும் சுமார் பத்து அல்லது பதினைந்து வருஷங்களுக்குள்ளாக, ரத்னப் பரீக்ஷைக்கு "ராணட்ஜன் ரே" இன்றியமையாததாய்விடும் என்று தோன்றுகிறது.

இதையும் தவிர, வைத்திய விஷயத்தில் இதனால் நமக்கு இன்னும்பலவித நன்மைகளுண்டு எனப் பேர்போன வைத்தியர்கள் அநேகர் சொல்லுகிறார்கள். இதைக் கண்டுபிடித்த இருபது வருஷத்துக் குள்ளாகவே இதன் உபயோகம் இவ்வளவுதூரம் நமக்குத் தெரிந்திருப்பதால், இன்னுமொரு இருபது வருஷத்தில் இதன் உபயோகம் முழுவதும் நமக்கு நன்கு தெரியவரும்.

* ஈஜிப்டில் 3000 வருஷங்களுக்குமுன் ஆண்ட அரசர்களினுடம்பை அவர்கள் செத்துப்போன பிறகு ஒருவிதத் தைலத்தில் அமர்த்தி, சில மஸ்லினைச் சுற்றி வைத்திருக்கிறார்கள். அப்படி வைத்திருப்பதால் உடம்பு நாற்றமில்லாமல் அப்படியே இருக்கிறது இந்த மாதிரி அரசர்களுடலை வைத்திருப்பதற்கு 'மம்மி' (Mummy) என்று பெயர். யாத்திரைக்காரர்கள் மம்மியின் ஏதாவது ஒரு அவயவத்தை வாங்கிக்கொண்டுபோய், அதை அதிசயமாகத் தம் ஊர் ஜனங்களுக்குக் காட்டுவது வழக்கம்.


ஐரோப்பிய = = = = மஹா யுத்தம்

சென்ற சில வருஷங்களாகக் கோரமாய் நடைபெற்றுவரும் ஐரோப்பிய மஹா யுத்தத்திற்கு ஏற்பட்ட காரணங்கள், ஐரோப்பிய தேச சரித்திர ஸம்பந்தமான பல விஷயங்கள், இந்த யுத்தத்தில் ஸம்பந்தப்பட்ட மன்னர்கள், ஸேனாதிபதிகள், பயங்கரமான யுத்தாயுதங்கள் முதலியவைகளின் விவரங்கள், தெளிவாயும் கதைப்போக்காயும் ஸாமான்ய ஜனங்கள்கூட எளிதில் படித்தறிந்துகொள்ளும்படி எழுதப் பெற்றிருக்கிறது.

256-பக்கங்கள் :: 58-ஆப்டோன் படங்கள் கண்ணைக் கவரும்விதம் அச்சிடப்பெற்றது.

மிகவும் சிறந்த பதிப்பு விலை ரூ. 1—4
போதினிச் சந்தாதார்க்கு ,, ,, 0--15

மானேஜர், விவேக போதினி,
மயிலாப்பூர், சென்னை




# விஜயநகரப் பாழ்கள்

## THE RUINS OF VIJAYANAGAR

இந்திய தேச சரித்திரத்தின் மத்திய காலத்தில், தென்னிந்தியா முழுவதும் முகம்மதியர்களுடைய ஆளுகையின்கீழ் வராதபடி, சுமார் இரண்டரை நூற்றாண்டளவும் பாதுகாத்த பெருமை ஹிந்து ராஜ்யமாகிய விஜய நகரத்தினுடையதாம். இவ்விராஜ்யம் தலையெடுக்கு முன்னால், தென்னிந்தியாவில் சோழர்களும் பாண்டியர்களும் ஹொய்சனர்களும் அரசு செலுத்திவந்தனர். கி. பி. 1336-ல், ஓரங்கல், துவார ஸமுத்திரம், ஆனைகொண்டி என்னும் மூன்று ராஜ்யங்கள் ஒன்றுகூடி விஜய நகர ஸாம்ராஜ்யமாயின. புகழிலும் பலத்திலும் வெகு சீக்கிரத்தில் மேலோங்கிய இந்த ஸாம்ராஜ்யம், அந்நாட்டையில் பிரபலமாகிக் கொண்டிருந்த முகம்மதிய ராஜ்யத்துக்கு ஒரு பெரிய அணைகல்லாக விருந்தது. தென்னிந்தியாவை அப்படியே வாயில்போட்டுக் கொள்ளும் போலிருந்த முகம்மதிய ராஜ்யத்துக்கு இடந்தராமல் எதிர்த்து நின்றதே, விஜயநகர ஸார்வபௌமத்தின் சரித்திரம் என்னலாம்.

துங்கபத்ரா நதியின் வட பக்கத்தில் ஆனைகொண்டிக் கோட்டையில் அரசு செலுத்திய மன்னன்கீழ் வேலைபார்த்த ஹரிஹரன், புக்கன் என்னும் சகோதரர்கள் இருவரால் இவ் விஜயநகர ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டதென்று தெரிகின்றது. அம்மன்னன் இறந்த பிறகு, அதிகாரம் செலுத்திய பிரதிநிதி யொருவனுக்கு நிர்வாக சக்தியில்லாதபடியால், ஹரிஹரன் ராஜ்யாதிகாரத்தை வகிக்க நியமனம் பெற்றான். துங்கபத்ராவின் தென் கரையில் கோட்டை கட்டுவதற்குச் சவுகரியமான இடவசதியுள்ளதை ஹரிஹரன் தெரிந்து, அவ்விடத்தில் பகைவர்களால் நெருங்க முடியாத கோட்டை கொத்தளங்களை எழுப்பினான். நகரம் அதி சீக்கிரத்தில் விருத்தியடைந்தது. மற்றைய தேச அரசர்கள் ஹரிஹரனுடைய துணையை வேண்டியும், அவனுக்குத் துணைசெய்தும் வந்தனர். வியாபாரம் வலுத்தது. ராஜ்யம் விசாலப்பட்டபடியால், ஆங்காங்குள்ள மாகாணங்களுக்குப் பிரதிநிதிகளை அனுப்பவேண்டியது அவசியமாயிற்று. மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கபட்டணம், பெனுகொண்டை முதலிய இடங்களில் விஜயநகரச் சக்கரவர்த்தியின் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர்.

ராஜ்யத்தின் தலைநகரான விஜயநகரத்தின் பெருமையையும் செல்வத்தையும்பற்றி, அக்காலத்தில் மேற்றிசை யாத்திரிகர்களாக வந்த பேய்ஸ், நூனிஸ், அப்துர் ரஜாக் முதலியோர் எழுதிவைத்திருக்கின்றனர். "இந்நகரத்துக்கு இணையான நகரம் ஒன்றை இவ்வுலகில் வேறெவ்விடத்திலும் நான் கண்டதில்லை" என்று அப்துர் ரஜாக் கூறுகிறார். வீதிகள் விசாலமாக விருந்தன. மாடமாளிகைகள் வரிசை வரிசையாயும் அழகாயும் அமைக்கப்பட்டன. ஜலம் வருவதற்குக் குழாய்களும், ஜலம் தேங்குவதற்குத் தடாகங்களும், ஆங்காங்கு நிழல்தரும் சோலைகளும் வெகுவாக விருந்தன. ஜன சங்கியை எண்ணிலடங்காததாக விருந்தது. உணவுப் பொருள்கள் ஏராளமாகச் சேகரம் செய்யப்பட்டிருந்தன. ராஜபோகத்துக்கு அளவேயில்லை. அவனுடைய செல்வத்தையும், புகழையும், செல்வாக்கையும் நோக்குமிடத்து அவன் இந்திரபோகம் படைத்தவனைப்போல விருந்தான் என்னலாம்.

விஜயநகரம் ஏற்படுவதற்குமுன்னால், அதே யிடத்தில் ராமாயணத்தில் சிறப்பிக்கப்பட்ட கிஷ்கிந்தை என்ற நகரம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. வாலி சுக்ரீவர் சண்டையும், சுக்ரீவன் பம்பாதீரத்துள்ள மலையில் மதங்கரிஷியின் ஆச்ரமத்தில் சரணமடைந்த கதையும் நமக்கு ராமாயண மூலமாகத் தெரியும். ராவணனால் கொண்டுபோகப்பட்டபோது, ஜானகி கீழே எறிந்த நகைகளைச்சுக்ரீவன் எடுத்து ஒளித்து வைத்திருந்த குகையை இன்னும் காணலாம். அவ்விடத்தில் உள்ள கற்பாறைகளெல்லாம் சமுத்திரத்தைத் தாண்டுவதற்கு அணை போடவேண்டி வானரர்களால் கொண்டுவரப்பட்ட கற்களில் மிகுந்துபோனவையென்பது கர்ணபரம்பரைச் செய்தி.

கிறிஸ்தவாப்தம் 1565-ல் தலைக்கோட்டைச் சண்டையில் விஜயநகர ராஜ்யம் சின்னாபின்னமடைந்தது. ராமராஜர் சண்டையில் உயிரிழந்தார். கணக்கில்லாத போர்வீரர்கள் மாண்டனர். தப்பிப்பிழைத்த திருமலைராஜர் ஏராளமான பணக்குவியலை யெடுத்துக்கொண்டு, பட்

டணத்தைவிட்டுப் போயினர். மற்றும் நாளில் துருக்கர் சேனை, நகருக்குள் நுழைந்தது. அன்று தொடங்கி ஐந்து மாதங்களுக்குள் அந்த நகரம் இருந்த விடம் தெரியாதபடி பாழாக்கப்பட்டது. துருக்கர்கள் செய்த அட்டூழியத்தைச் சொல்லவே முடியாதென்று ஸூவேல் ஆசிரியர் துக்கித்து எழுதியிருக்கிறார். மகோன்னத ஸ்திதியிலிருந்து இவ்வளவு கேவலமான ஸ்திதிக்கு இந்த நகரம் வந்தது காலத்தின் கொடுமையன்றி வேறில்லை.

உயிருடனிருக்கும்போது அந்நகரத்துக்கு எவ்வளவு காம்பீர்யம் இருந்திருக்குமோ, அவ்வளவு காம்பீர்யம் இப்போதிருக்கும் பாழ்களிலும் தோன்றுகின்றது. பெரும்பாகத்தில் ஜனசஞ்சாரம் கிடையாது. கிஷ்கிந்தாவின் பூர்வவாசிகளின் சந்ததியாரோ என்று நினைக்கும்படியான பெரும் பெரும் வானரங்கள் அங்கு யதேச்சையாய்த் திரிகின்றன. இரவில் காட்டுமிருகங்களின் சப்தத்தைத்தவிர வேறொன்றும் கேட்பதில்லை. உயர்ந்த இடமொன்றில் நின்றுகொண்டு நோக்கும்போது, வெகு தூரம் பரவிக்கிடக்கும் இப்பாழ்கள், மனத்தில் அடங்காத துக்கத்தைக் கிளப்புகின்றன. பார்ப்போரைப் பரிதபிக்கச் செய்யும் அப்பாழ்களை முற்றிலும் விவரிப்பதற்கு இப்பத்திரிகை இடந்தராது. ஆகவே முக்கியமானவற்றைமட்டும் கூறுவோம்:—

நகரம் ஒன்பது மைல் விஸ்தீரணமுள்ளதென்றும், அதைச் சுற்றி ஏழு மதில்கள் இருந்தனவென்றும் தெரிகின்றது. அம்மதில்களில் இருந்த கோபுர வாயில்களில், இரண்டு இன்னும் காணப்படுகின்றன.

பாழ்களில் முக்கியமானவையென்று கருதப்படுவனவற்றில் “அரண்மனை” தான் பிரதானமானது. ஆனால் அரண்மனை கட்டப்பட்டிருந்த மாதிரியாவது, இப்போதிருக்கும் கட்டிடங்கள் எந்தக் காரியங்களுக்கு உபயோகப்பட்டன வென்பதாவது நிச்சயமாகத் தெரியவில்லை. கட்டிடங்கள் இருந்ததாக ஊகிக்கப்படும் பெரும் பாகத்தில் இடிந்த பாழ்கள்தாம் உள்ளன.

ராணி தடாகம் என்பது, அந்தப்புர ஸ்திரீகள் ஸ்நாநம் செய்வதற்கென்று ஏற்பட்ட ஒரு கட்டிடம். அது நாற்கோண வடிவமாயுள்ளது. நடுவில் 50 அடி அகல நீளமும் 9 அடி ஆழமுமுள்ள சிறு தடாகமிருக்கிறது. (இப்போது ஜலம் இல்லை.) தடாகத்தைச் சுற்றி நாலா பக்கத்திலும் மேன்முகடு போடப்பட்ட மேடையுள்ளது. மேன் முகட்டில் சுண்ணாம்புச் சாந்தினால் செய்யப்பட்ட அழகிய சித்திர வேலைப்பாடுகள் உள்ளன. இத்தடாகத்துக்குத் துங்கபத்ராநதியிலிருந்து கற்குழாய்கள் மூலமாக ஜலம் வந்ததாம். அந்தப்புரத்துக்கும் இந்தத் தடாகத்துக்கும் தூரமாகையால், இது தினந்தோறும் ராணிகளால் உபயோகப்படுத்தப்பட்டதோ என்பது நிச்சயமாகவில்லை. இத்தடாகம் இன்றும் நல்ல நிலைமையிலிருக்கிறது.

“தசரா அல்லது மகா நவமி மேடை” என்பது 31 அடி உயரமுள்ள கல்மேடையாம். கீழே நடக்கும் நவராத்திரி உற்சவங்களை இம்மேடையின்மேலிருந்து சக்கரவர்த்தி காண்பது காரணமாக இதற்கு இப்பெயர் வந்தது. கிருஷ்ண தேவராயர், ஒரிஸ்ஸா நாட்டை ஜெயித்து வந்ததற்கு அறிகுறியாக இது 1513-ல் கட்டப்பட்டதாம். இம்மேடையின் மேல், விதானம் போடுவதற்கென்றிருந்த அடையாளங்கள் காணப்படுகின்றன. பக்கங்களின் அடியில் கல்லில் செதுக்கப்பட்ட சித்திரங்கள் அழகாயுள்ளன. இம்மேடையைப் பற்றி பேய்ஸ் யாத்திரிகர் வெகு சிறப்பாய்க் கூறியிருக்கிறார்.

ஹஜாரா ராமஸ்வாமி கோயில் பார்க்கத்தகுந்தது. இதுவும் கிருஷ்ணதேவ ராயரால் 1513-ல் கட்டப்பட்டது. உள் கோவிலின் வெளிப்புறத்தின் சுவற்றில், ராமாயணத்தில் நடந்த கதைகளைச் செதுக்கியிருக்கிறார்கள். இச்சிலாசிற்பம் வெகு அழகாயுள்ளது. இதற்கு “ஹஜாரா’ என்ற பெயர் வந்ததற்குக் காரணம் நிச்சயமாகத் தெரியவில்லை. அரண்மனையின் “ஆஜார”த்தில் இருந்த காரணமோ, அல்லது ஸ்ரீராமனின் ஆயிரம் சித்திரங்களைச் செதுக்கிய காரணமோ தெரியவில்லை. இக்கோயிலின் அர்த்த மண்டபத்தில் கறுப்புக் கல்லில் செதுக்கப்பட்டுச் சித்திரிக்கப்பட்ட நான்கு அழகிய தூண்கள் உள்ளன.

விட்டலஸ்வாமி கோயில் துருக்கர்களுடைய விஷமம் இங்கோவிலில்தான் வெகுவாகக் காண்கிறது. பண்டரிபுரத்தில் கோயில் கொண்டிருக்கும் விட்டல ஸ்வாமியைப் பிரதிஷ்டை செய்வதற்காக இக்கோயில் கட்டப்



பட்டது. ஆனால் உத்தேசம் நிறைவேற வில்லை. சிற்ப சித்திரத்தில் எவ்வளவு தேர்ச்சியடையலாமோ அவ்வளவும் இங்கு காட்டப்பட்டிருக்கிறது. கிருஷ்ணதேவராயரால் ஆரம்பமாகி, அச்சுதராயர், சதாசிவராயரால் வேலை தொடரப்பட்ட இக்கோயில் பூர்த்தியாகாததற்குக் காரணம் தலைக்கோட்டைச் சண்டையாக விருக்கலாம். தெக்ஷிணத்தில் காணப்படும் கோயிலைப்போல இதன் அமைப்பு உள்ளது. என்றாலும், முழுதாக ஒரு கல்லுக்கூட அகப்படாது. துருக்கர்கள் வேண்டுமென்று ஒவ்வொரு கல்லாக உடைத்து விட்ட இடத்தில் முழு உருவத்துடன் கூடிய கல்லொன்று எப்படிக் காணப்படும்?

இக்கோயிலுக்குள் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட தேர் ஒன்றிருக்கிறது. அதன் உருளைகளைத் திருப்பலாம். அத்தேரின் அடிவாரத்தில், ஸ்திரீகள் கிளிகளின்மீது ஏறியிருக்கும் வண்ணமும், கிளிகள் ரதங்களை இழுத்துச் செல்லும் வண்ணமுமாகச் செதுக்கப்பட்டுள்ளன. மகாமண்டபத்தின் தரை வெகு சாதுர்யமாகச் சிற்பவேலை செய்யப்பட்டிருக்கிறது. அதன்மீது ஒரே கல்லில் செதுக்கப்பட்ட தூண்கள் நிற்கின்றன. கல்யாண மண்டபத்தின் அழகு சொல்லமுடியாதது. புதையல் கிடைக்குமென்ற எண்ணத்துடன் தரைகள் ஆங்காங்கு பெயர்க்கப்பட்டிருக்கின்றன. கோபுரவாயிலில் இருபக்கத்திலும் நிற்கும் கல்யானைகளின் துதிக்கைகளைத் துருக்கர்கள் உடைத்திருக்கின்றனர்!

இவ்வளவு காம்பீர்யம் பொருந்திய விடத்தில் இப்போது பூஜை நடந்துவரும் கோயில் ஒன்றுதான். அது பம்பாபதீசுவரருக்கு உரித்தானது. கோயில் இருபாகமாயமைந்துள்ளது. மத்தியில் குறுக்குச் சுவர் ஒன்றிருக்கிறது. பிரதானஸ்தலம் மேற்குப்பாகத்தில் உள்ளது. அதன் வடக்கிலும் தெற்கிலும் மனமுகம், லோகபாவனம் என்ற இருதடாகங்கள் உள்ளன. ‘துங்கபத்ரா நதியிலிருந்து கோயிலுக்குள் ஒரு கால்வாய் வழியாக எப்போதும் ஜலம் வந்துகொண்டிருக்கிறது. இக்கோயிலில், விரூபாக்ஷர் அல்லது பம்பாபதி, பார்வதி, புவனேசுவரி, சண்டிகேசுவரர், வேங்கடரமணர், குலகுஞ்சி மாதவஸ்வாமி, குமாரஸ்வாமி, ஸரஸ்வதி, பாதாளேச்வரர், வித்யாரண்யர், சிங்கரிபட்டர் ஆகியவர்க்குத் தனித்தனி கோயில்களில் பூஜை நடக்கின்றது.

இதன் சமீபத்தில் ஜெயினக்கோயில்கள் சிலவும் பௌத்தக் குகையொன்றும் உள்ளன. கோயில்களும் குகையும் சூனியமாக விருக்கின்றன. கோயில்கள், தேன்கூண்டைப்போல வெளியமைப்பைப்பெற்ற கோபுரங்களுடன் விளங்குவது அழகாகவுள்ளது. இவைகள் நல்ல நிலைமையிலிருக்கின்றன.

பாழ்களின் ஓரிடத்தில் 42 அடி நீளமும், 3 அடி அகலமும் 72 அடி உயரமுமான ஓர் கல் தொட்டி கிடக்கிறது. அது அரண்மனை மடைப்பள்ளியில் இருந்ததென்றும், தினந்தோறும், அரண்மனை உபயோகத்துக்காக அது நிறையப் பால் இருந்ததென்றும் சொல்லப்படுகிறது.

அந்தப்புரம் என்று கருதப்படும் கட்டிடத்தைச் சுற்றி உயர்ந்த சுவர்களிருந்தன வென்பதற்கு அவைகளின் சின்னங்கள் சாட்சியாம். சுவர்கள் சேரும் மூலைகளில் காவற்காரர் மண்டபமும், நகரா (மேளம்)மண்டபமுமிருக்கின்றன. அந்தப்புரக் கட்டிடம் இருந்த சுவடு மாத்திரமே தெரிகின்றது. வாசற்படியிலோ அதற்குச் சமீபத்திலோ செதுக்கி நிறுத்தப்பட்டிருந்த இரண்டு கல்யானைகளின் துதிக்கைகள் சின்னபின்னமாக்கப்பட்டுக் கிடக்கின்றன.

மந்திர மஹால் என்பது எண்கோண வடிவமான ஓர் அழகிய கட்டிடம். இதற்கு மேன்மாடியுண்டு. படிக்கட்டின் வழியாகப் போகலாம். இதற்குத் தாமரை மஹால் என்றும் பேருண்டு. தாமரைப்பூ வடிவமாக அமைந்திருப்பது இப்பெயர்வரக் காரணமாம். சக்கரவர்த்தி, தமது மந்திரிகளோடு கூடி இங்குதான் ராஜ்ய விஷயங்களைப்பற்றி ஆலோசனை செய்வதென்றும்; அக்காரணம்பற்றி இதற்கு மந்திர மஹால் என்ற பேர் வந்ததென்றும் சொல்லப்படுகிறது. இது இன்னும் நல்ல ஸ்திதியிலிருக்கிறது.

யானைமண்டபம் இதுவும் இன்னும் நல்ல நிலைமையிலிருக்கிறது. விஜய நகரச் சக்கரவர்த்திகளுக்கு யானைப்படை விசேஷமாக உண்டென்பதைக் கவனிக்கும்போதே இவ்யானை மண்டபம், பிரதானமான பதினொரு யானைகள் கட்டுவதற்கு ஏற்பட்ட இடமென

ஊகிக்கப்படுகிறது. ஒவ்வொரு அறையும் இவ்வுயரமாயும் நல்லகாற்றுப் போக்குள்ளதாயும் இருக்கிறது. 'மத்தியில் உள்ள அறைக்குமேலே ஒரு சிறு கோபுரம் உள்ளது. இவ்வறையில் அரசருடைய பட்டத்து யானை கட்டப்பட்டது போலும்! இதையொட்டி சங்கீத மஹால் உள்ளது. திறந்த வெளியைச் சுற்றிப் போடப்பட்ட மேடையும், அதற்கு முன்பக்கத்தில் பதினொரு வளைவு மண்டபங்களாலான ஒரு திண்ணையும் இதன் விசேஷணமாம். நடுவிலுள்ள வளைவு மண்டபம்தான் உள்ளே போவதற்கான வாசலாக இருக்கிறது.

கிருஷ்ணஸ்வாமி கோயில் பூஜையில்லாமல் பாழ்பட்டது. இந்தக் கட்டிடத்தில் பெரும் பெரும் கற்கள் உபயோகப்பட்டுள்ளன. 30 அடி நீளமும், 4 அடி கனமுமுள்ள கற்கள் சுவர்களின் மேற்பாகத்தில் காணப்படுகின்றன. உள்ளிருக்கும் நாற்கோண வடிவமான, பிராகாரத்தைச்சுற்றி வேறொரு பெரிய பிரா, காரம். உள்ளது. இதற்கு நான்கு கோபுர வாயில்கள் இருக்கின்றன. கோயில் பெரிதாயினும் வேலைப்பாடு அவ்வளவு சிறந்ததல்ல.

கிருஷ்ணன் கோயிலுக்குச் சற்று தென்மேற்கில் ஒரு சிறிய கட்டிடத்தில், ஒரே கல்லில் செதுக்கப்பட்ட லக்ஷ்மீ நரஸிம்ம விக்ரகம் இருக்கிறது. தலைக்குமேலே நாகம் படம் விரித்துக்கொண்டுள்ளது. வீற்றிருக்கும் திருக்கோலம்; என்றாலும் உயரம் 35 அடி உள்ளது. துருக்கர் சேனை, இச்சிலையின் மூக்கையும் ஒரு கையையும் உடைத்துவிட்டது. அங்கை மட்டும் இரண்டடி கனமுள்ளது. பார்க்கப்பயங்கரமாக விருக்கும் இச்சிலா விக்ரகத்தைச் செதுக்கியவன் ஒரு பிராம்மணனென்றும், அதன் பூஜைக்காகச் சில நிலம் மான்யமாக விடப்பட்டதென்றும் 1529-ல் வெட்டியதாகப் பொருள்படுகிற கிருஷ்ண தேவ ராயருடைய சிலாசாதனம் தெரிவிக்கின்றது. இதன் அண்டையில் 9 அடி உயரமுள்ள லிங்கமொன்று பிரத்தியேகமான கட்டிடத்தில் இருக்கிறது. கொஞ்ச தூரத்தில் இரண்டு கணேச விக்ரகங்கள் உள்ளன. ஒன்று 20 அடி உயரமும், மற்றது கொஞ்சம் சிறியதாயும் உள்ளன.

சுக்ரீவன் ஒளிந்துகொண்ட மதங்கமலையினின்றும் பார்த்தால் வெகுதூரம் வரையில் பரவிக்கிடக்கும் இப்பாழ்களை நன்றாகக் காணலாம். இம்மலையின் அடிவாரத்தில் அச்சுதராயஸ்வாமி கோயிலொன்று பெரியதாகவுள்ளது. வடக்குக் கோபுரம் முழுவதும் தேவதாசிகள் வாழ்ந்த தெருவை நோக்கி நிற்கின்றது. தெருவின் இருபக்கத்திலும் இடிந்துபோன கல்வீடுகள் காண்கின்றன. இக்கோயிலிலிருந்து, துங்கபத்ராவின் கரையோரமாகச் சென்றால் ஸீதா குண்டமும், குகையும் தோன்றும். பக்கத்தில், தரையில் வஸ்திரத்தின் கறைகள்போன்ற அடையாளங்கள் காணப்படுகின்றன. இவை ஜானகியின் புடவை விழுந்ததனால் உண்டானவையெனப்படுகின்றன.

சற்று தூரத்தில் ஒரு கற்பாறையின்மீது மால்யவந்த ரகுநாதஸ்வாமி கோயில் உள்ளது. இங்கு பூஜை, பைராகிகளால் நடைபெறும். துலாபாரம் செய்வதற்கென்று நட்ட கற்றூண்களும், கொஞ்ச தூரத்திலுள்ள பீமசேன விக்ரஹமும், ரஸ்தாவில் உள்ள பட்டாபிராமஸ்வாமி கோயிலும் பார்க்கத் தகுந்தவையாம்.

விஜயநகரப் பாழ்களைப் பார்க்கப்போகிறவர்கள், துங்கபத்திராவைத் தாண்டி, இப்போது நைஜாமுக்குக் கப்பங்கட்டும் ஆனைகொண்டி சமஸ்தானத்திலுள்ள பம்பாஸரஸையும் பார்க்க வேண்டும். பார்க்கப் பார்க்க வெகு மனோகரமாய் விளங்கும் அச்சிறு தடாகத்தின் மேல்கரையில் உள்ள மஹாலக்ஷ்மி கோயிலில் இருக்கும் பைராகிகள், அதில் ஸ்நாநம்பண்ணவேணு மென்பார்கள். நாங்கள் அவ்வார்த்தையைக் கேட்கவில்லை. திரும்புகாலையில், கொஞ்சமேனும் மப்புமந்தாரமில்லாத ஆகாசத்தில் ஒரு க்ஷணத்தில் மேகங்கள் கூடி, சுமார் ஒரு ஜாமப்போது கடுமழை பெய்து, ஒளிந்துகொள்ள இடமில்லாமல் தவித்த எங்களை முற்றிலும் நனைத்துவிட்டது. பம்பாஸரஸுக்கு நாங்கள் செய்த அபராதத்தின் தண்டனை அதுபோலும்!

---

**சுதேச மித்திரன்.**—* * நன்கு நடத்தப்படும் மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகைகளுள் இதை முக்கியமாக எடுத்துச் சொல்லலாமென்பதற்கு, இதற்குக் கிடைத்திருக்கும்மதிப்புரைகளே தக்க ஆதாரமாகும்.



# வான சாஸ்திரம்

## LESSONS IN ASTRONOMY

### சுக்ரன் அல்லது வெள்ளி

சில காலங்களில் காலையில் சூர்ய உதயத்திற்கு முன் கிழக்கிலும், சில காலங்களில் சூர்ய அஸ்த மனத்திற்குப்பின் மேற்கிலும், மிகப்பிரகாசத்துடன் காணப்படும் பெரிய நட்சத்திரம்போன்ற சுக்ரனை எல்லோரும் அறிவோம். இது புதனைப்போல் சூர்யனுக்கு அவ்வளவு சமீபத்திலில்லை. ஆகையால் புதனைப்போல் சூர்யப்பிரகாசத்தில் காலையில் சீக்கிரம் மறையாமலும், மாலையில் சூர்யனுடன் சீக்கிரம் அஸ்தமிக்காமலும் சூர்ய உதயத்திற்கு 2, 3-மணி நேரத்திற்கு முன்னும், சூர்ய அஸ்தமனத்திற்கு 2, 3-மணி நேரத்திற்குப் பின்னும் இது நன்றாய்க் காணப்படும். ஆகையால் புதனைப் பார்ப்பதைக் காட்டிலும் இதைப் பார்ப்பது சுலபம்.

சூர்யனிடத்திலிருந்து 670-லட்சம் மைல் தூரத்திலிருந்து இது சூர்யனைச் சுற்றிவருகிறது. அளவில் இது, பூமிக்கு ஏறக்குறையச் சரியானது. இதன் குறுக்களவு 7,700 மைல். இது சுமார் 224 தினங்களில் சூர்யனை ஒரு தரம் சுற்றிவருகிறது. புதனைப்போலவே இதைப்பற்றியும் நமக்கு விசேஷமாகத் தெரியவில்லை. இதைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்த்தால், மேகங்களும் காற்று மண்டலமும் இதைச் சூழ்ந்துகொண்டே யிருக்கின்றபடியால், இதன் தரைபாகம் தெளிவாய்த் தெரிகிறதேயில்லை. இது புதனையும், சந்திரனையும் போலல்லாமல், தன்னைத்தானே சுமார் $23\frac{1}{4}$-மணிக்கு ஒரு தரம் சுற்றுகிறதென்று சில வானசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். ஆனால் இவ்விஷயத்தைப்பற்றி ஒன்றும் நிச்சயமாகச் சொல்லமுடியாது. பூமியைத் தவிர வேறு கிரஹங்கள் ஜீவராசிகள் இருப்பதற்குத் தகுந்தவையானால், சுக்ரன் அவைகளில் கட்டாயம் ஒன்று.

சுக்ரனுக்குக் கலைகளுண்டு. சில சமயங்களில் இளம்பிறை சுக்ரன் பெரிதாகக் காணப்படும். சில சமயங்களில் சிறியதாகக் காணப்படும். இது சூர்யனைச் சுற்றிவரும்போது, பூமிக்கும் சூர்யனுக்கும் இடையிலிருந்தால், நமக்குச் சமீபத்திலிருக்கும். அப்பொழுது அது நம்மிடத்திலிருந்து சுமார் (930—670) 260 லட்சம் மைல் தூரத்திலிருக்கும். ஆனால் நமக்கு எதிர்ப்பக்கத்திலிருக்கும்போது, அதாவது நமக்கும் சுக்ரனுக்கும் இடையில் சூர்யன் இருக்கும்போது இது (930+670) 1600 லட்சம் மைல் தூரத்திலிருக்கும். முன்னைவிட இப்பொழுது ஆறு மடங்கு தூரத்திலிருக்கு மல்லவா? இப்பொழுது சிறியதாகத்தானே காணப்படும்?

இதற்குப் பின்னால் சூர்யனிடத்திலிருந்து சுமார் 930 லட்சம் மைல் தூரத்தில் நாமிருக்கிறோம். நாமிருக்கும் கிரஹமாகிய பூமியைப் பற்றி முன்னமேயே நாம் பார்த்து விட்டோம். ஆகையால் நமக்கு வெளியே யிருக்கும் கிரஹங்களைப்பற்றிப் பார்ப்போம்.

### செவ்வாய் அல்லது அங்காரகன்

பூமிக்குப் பின்னால் இருப்பது அங்காரகன் அல்லது செவ்வாய். இது நமது கண் பார்வைக்கு நல்ல சிவந்த நிறமாகக் காணப்படுகிறது. ஆனால் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்த்தால் இந்த நிறம்போய் வெண்மையாகக் காணப்படுகிறது. சராசரிக்கு இது சூர்யனிடத்திலிருந்து 1415 லட்சம் மைல் தூரத்திலிருக்கிறது. இது சூர்யனைச் சுற்றி வரும் பாதை மிகவும் முட்டை வடிவமாயிருக்கிறது. அதாவது, அப்பாதை சில விடங்களில் சூர்யனுக்குச் சமீபத்திலும், சில விடங்களில் வெகு தூரத்திலுமிருக்கும். ஆகையால் சில சமயங்களில், இக்கிரஹம் 1300 லட்சம் மைல் தூரத்திலும், சில சமயங்களில் 1540 லட்சம் மைல் தூரத்திலும் இருக்கும். இது ஒரு தரம் சூர்யனைச் சுற்றி வர, 1 வருஷம் 10 மாதம் 22 நாள் ஆகின்றன. அதாவது சுமார் 687 நாட்கள் ஆகின்றன. பூமி சூர்யனைச் சுற்றி ஒரு நிமிஷத்திற்கு 114 மைல் தூரம் போகிறது. ஆனால் செவ்வாய் ஒரு நிமிஷத்திற்கு 87 மைல் தூரம்தான் போகிறது. இது தன்னைத் தானே சுற்றுவதாகத் தெரியவருகிறது. இப்படிச் சுற்றிவர $24\frac{1}{2}$ மணி நேரம் பிடிக்கிறது. அதாவது இதன் தினம் நமது தினத்தைவிட அரை மணி அதிகம். நமது பூமியைப்போல் இதுவும் சூர்யனைச் சுற்றி வரும் பாதைக்குக் கொஞ்சம் சாய்ந்திருக்கிறது. ஆகையால் இதற்கும் பருவ காலங்கள் இருக்கவேண்டும்.

இது அளவில் பூமியைவிட மிகச் சிறியது; ஏறக்குறைய பாதிதானிருக்கும். இதன் குறுக்களவு 4,172 மைல். இதன் நிறை, பூமியின் நிறையில் சுமார் பத்தில் ஒரு பாகம் தான். இவைகளைத் தவிர, மற்றைய விஷயங்களில் இது பூமியை ஒத்திருக்கிறது.

இதை ஒரு பெரிய தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்த்தால் இதன் தரை பாகமும், மற்றுமுள்ள அடையாளங்களும் காணப்படுகின்றன. இதுவும் பூமியைப்போல் ஏறக்குறைய அதே அளவே சூர்யனைச் சுற்றிவரும் பாதைக்குச் சாய்ந்திருப்பதால், இதன் பருவகாலங்களைக் கணக்கிடுவது சுலபம். இக்காலங்கள் வடபாதி கோளத்திற்கும், தென்பாதி கோளத்திற்கும் வித்தியாசப்படுவதை நாம் பூமியைப்பற்றிக் கவனிக்கும்போது பார்த்தோம். வடபாதிக்குக் கோடை காலமாயிருக்கும்போது, தென்பாதிக்கு மாரிகாலம் அல்லது குளிர்காலமா யிருக்கும். குளிர் காலமாயிருக்கும் செவ்வாயின் பாகத்தைப் பார்த்தால் அதன் துருவத்தைச் சுற்றிலும் ஒரு அகண்ட வெண்மையான பாகம் காணப்படுகிறது. மறுபடி குளிர்காலம் போகப்போக, இந்த வெண்மையான பாகம் சுற்றளவில் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைகிறது. கோடை காலம் வரும்போது, இது மிகச் சிறியதாகிறது. இந்த துருவத்தில், முன் மாரிகாலமாயிருந்தபோது, மறு துருவத்தில் கோடை கால்மாயிருந்தது. இந்த வெண்மையான பாகம் அந்த துருவத்தில் சிறியதாகக் காணப்பட்டது. இப்பொழுது பெரிதாகக் காணப்படுகிறது.

இந்த வெண்மையான பாகம் என்னவாயிருக்கலாம்? பூமியில் இம்மாதிரி ஏதாவது வெண்மையான பாகம் துருவத்தைச் சுற்றிலும் காணப்படுகிறதா? எல்லாக் காலங்களிலும் பூமியின் இரு துருவங்களுக்குச் சமீபத்தில் குளிர் அதிகம் என்று நமக்குத் தெரியுமல்லவா? ஆகையால் அவ்விடங்களில் எப்பொழுதும் உறைபனி அல்லது பனிக்கட்டி காணப்படும். இது அவ்விடங்களிலுள்ள பூமியின் பாகத்தை மூடிக்கொண்டிருக்கும். தூரத்திலிருந்து பார்த்தால் இந்தப் பரப்பு ஒரே வெண்மையாகக் காணப்படும். குளிர் காலங்களில் வெகு தூரம் வரை காணப்பட்டு, கோடை காலங்களில் பனிக்கட்டி உருக இந்த வெண்மையான பரப்புக் குறைந்து கொஞ்சம் தூரம் வரையிலுமே காணப்படும். அதாவது இந்த வெண்மையான பாகம் குளிர் காலங்களில் பெரியதாகவும், கோடை காலங்களில் சிறியதாகவும் காணப்படும். இதுபோலவேதான் செவ்வாயிலும் காணப்படுகிறது. ஆகையால் உறைபனி அல்லது பனிக்கட்டி செவ்வாயின் துருவங்களுக்குச் சமீபத்திலுள்ள பாகங்களை மூடிக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

அநேக வானசாஸ்திரிகள் செவ்வாயை தூரதிருஷ்டிக்கண்ணாடியால் பார்த்து அதன் கோளத்தைப்பற்றின விஷயங்களை அறிந்திருக்கிறார்கள். அவற்றில் சிலவற்றை நாம் கவனிப்போம். நமது பூமியில் சுமார் முக்கால் பங்கு நீர் பாகமும், கால் பங்கு நிலபாகமுமாயிருக்கிறது. ஆனால் நமது பக்கக் கிரஹமாகிய அங்காரகனில் ஏறக்குறைய முக்கால் பாகம் நிலமும், கால்பாகம் நீருமாகக் காணப்படுகிறது. அதில் பெரிய சமுத்திரங்களாவது கடல்களாவது இருப்பனவாகத் தெரியவில்லை. அதில் பச்சையாகக் காணப்படும் பாகங்கள் ஜலபாகமென்றும், மஞ்சளாகக் காணப்படும் பாகங்கள் நிலபாகமென்றும் பல அநுபவங்களால் ஊகிக்கலாம். அங்கங்கு நிலபாகங்களில் செடிகள், புல் பூண்டு முதலியவையும் வளர்ந்திருக்கின்றன வென்றே சொல்லலாம். அங்கும் கோளத்தைச் சுற்றிலும் வாயுமண்டலம் காணப்படுகிறது. ஆனால் மேகங்களிருப்பனவாகவும், மழை பெய்வதாகவும் தெரியவில்லை. அதில் காணப்படும் மெல்லிய கோடுகளைச் சிலர் கால்வாய்களென்று சொல்லுகிறார்கள். ஆனால் அவை இயற்கையிலுண்டான குறுகி நீண்ட ஏரிகளாயிருக்கக்கூடும்.

அதில் ஜீவராசிகளிருக்கின்றனவா? மனிதர்கள் வசிக்கிறார்களா? ஜெந்துக்கள் வாழ்கின்றனவா? ஜலம், காற்று, செடிகள் இம்மூன்று மிருந்தால் ஜீவராசிகள் ஏன் இருக்கக்கூடாது? அங்காரகனில் மனிதர்கள், ஜெந்துக்கள், பூச்சிகள், புழுக்கள் முதலிய ஜீவராசிகள் இருக்கவேண்டுமென்றே தோன்றுகிறது. அல்லாமலும், வசிப்பதற்குப் பூமியைவிட அங்காரகன் நல்ல இடமென்றே சொல்லலாம். அங்கும் இரவும் பகலும் உண்டு. விதவித காலங்களும் உண்டு. மழை, காற்று, புயல்காற்று,



சுழல்காற்று முதலிய தொந்தரவுகளிருப்பனவாகத் தெரியவில்லை. ஆகையால் நாம் சுகமாய் வசிக்கலாம். அங்காரகன், பூமியைவிடப் பழமையானது; அதாவது பூமிக்கு முன் உண்டானது. காலம் ஆக ஆக, ஜனங்களுடைய நாகரீகம் அதிகரிப்பதால், அங்காரகனிலுள்ள மனிதர்கள், நம்மைவிட அதிகக் கல்வியுடனும், நாகரீகத்துடனும் இருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. இக்காலங்களில் வரவரக் கண்டுபிடிக்கப்படும் நூதன யந்திரங்களையும், விமானங்களையும் பார்த்தால், இன்னும் சில வருஷங்களுள் இங்கிருந்து அங்காரகனுக்குப்போக மார்க்கத்தையும், வேண்டிய உபாயங்களையும் அறிந்து அங்கு செல்லுவார்கள் என்று தோன்றுகிறது. ஆனால் அங்காரகனிலுள்ள மனிதர்கள், சாஸ்திரப் பயிற்சியில் நம்மைவிட முந்தியிருக்கவேண்டு மாகையால், அவர்களே நம்மிடம் முதல்முதல் வருவார்கள் போலும்! அப்பொழுது நாம் அவர்களிடத்திலிருந்து கற்றுக்கொள்ளவேண்டியதாகும். அக்காலம் எப்போதுவருமோ! துரதிருஷ்டர்களான நாம் அதுவரை இருப்போமா?

அங்காரகனிலுள்ளவர்களுக்கு நமது பூமி ஒரு பிரகாசமான நட்சத்திரம்போல் காணப்படும். சூர்யோதயத்திற்கு முன்னும், சூர்யாஸ்தமனத்திற்குப் பின்னும், நமக்குச் சுக்ரன் தெரிவதுபோல் அங்காரகனுக்குப் பூமி காணப்படும்.

பூமிக்குச் சந்திரனிருப்பதுபோல், அங்காரகனுக்கு இரண்டு 'உபக்கிரஹங்கள்' இருக்கின்றன. செவ்வாயிலிருந்து ஒன்று சுமார் 3730மைல் தூரத்திலும், மற்றொன்று சுமார் 12,400மைல் தூரத்திலும் இருக்கிறது. முதல் உபக்கிரஹம் செவ்வாயைச் சுமார் $7\frac{1}{2}$மணி நேரத்திலும், இரண்டாவது $30\frac{1}{4}$மணி நேரத்திலும் சுற்றுகின்றன. நாம், பூமியைச் சந்திரன் சுற்றும் காலத்திலிருந்து மாதங்களைக் கணக்கிடுகிறோம். அங்காரகனுக்கு, இரண்டு உபக்கிரஹங்களிருப்பதால் இரண்டுவித மாதங்களிருக்கவேண்டும். ஆனால் ஒருநாள் $24\frac{1}{2}$மணி என்று பார்த்தோம். ஆனால் ஒரு மாதம் $7\frac{1}{2}$மணிதானா? இது எப்படியிருக்கக்கூடும்? அதிலுள்ள மனிதர்கள் வேறுவிதமாக மாதங்களைக் கணக்கிடுவார்கள்போலும்!



## ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர்

### SIR P. S. SIVASWAMI AYYAR, K.C.S.I., C.I.E.

இம்மாதம் 26-தேதி மாலை ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் இராஜாங்க நிர்வாக ஸபையின் மெம்பர் ஸ்தானத்திலிருந்து கால அளவையின்படி விலகினார். இவர்தான், முதல் முதல், இச்சென்னையில் இந்த ஸ்தானத்தில் ஐந்து வருஷகால அளவைமுழுதும் விளங்கினவர். அவரது இராஜாங்க வேலையைப் புகழ்ந்து கனம் கவர்னர் பெண்ட்லண்ட் பிரபு மிகப் பாராட்டி அஸாதாரண கெஜட்டொன்று பிரசுரித்தனர். பொறுமையும் நிர்வாகமுமே ஐயரவர்களுக்கு என்றும் குணங்களாக விருந்தனவென்று யாவருமறிவர். பிறரைப்போல அவர், பொது ஜன மனதைக் கவரும்படி பேசித், தன் கார்யத்தைச் செய்பவரல்ல; அவர் 'சொல்லாமலே செய்வர் பெரியார்' என்னும் கருத்துக்கிணங்கி நடப்பவரேயாகும்.

### படிப்பு விஷயம்

அவர்க்கு இந்தியரது படிப்பு விஷயங்களில் கவனமதிகம். 1891-ம்வருஷம் சென்னை ஸர்வகலாசங்கத்து அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1904-ம் வருஷம் அச்சங்கத்தினால் சட்ட வியவஹாரச் சபையின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்திய கலாஸங்கங்களைப்பற்றிய கமிஷன் முன்பு, அவர் சாக்ஷியங் கொடுத்து, சங்கத்தின் ஆலோசனை ஸபை ஷை கமிஷன் முன் கொடுத்த உத்தரத்திற்கு ஆதாரபூதமாகவும் இருந்தனர். மேலும் ஷை கமிஷனால் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களைச் சென்னை ஸர்வகலாசங்கத்தில் அமுலுக்குக்கொண்டுவரச்செய்ய இவரே முன்நின்றவர். ஐயர் அவர்கள், காலஞ் சென்ற வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்களுடன் சேர்ந்து, ஸம்ஸ்கிருத பாஷையும் இந்திய பாஷைகளும் மேலோங்கவென்று இந்திய பாஷா பட்டப் பரீக்ஷைகளைச் சங்கத்தினர் ஏற்படுத்தும்படி செய்தனர். தென்னிந்தியப் பாஷையைச் சிறப்பிக்கவேண்டிய வழிகளைக் காண இன்று மவரது எண்ணமாகும். தமதூராகிய திருக்காட்டுப்பள்ளியில், லக்ஷரூபாய்க்குமேல் மூலதனமிட்டு, ஹைஸ்கூலொன்றைப் போஜனசாலையுடன் ஏற்படுத்தி யிருக்கிறார்.

அப்பள்ளியை எவ்விதத்திலும் இணையிலாது விளங்கச்செய்வதே அவரபீஷ்டம்.

சட்ட ஸபையில் வேலை

சங்கத்தின் அங்கத்தினராகச் சட்ட ஸபையிலிருந்தபோது, இச்சென்னை நகரில் கட்டாயப் பாலபோதனையும், பெண்களுக்கென ஓர் ஹைஸ்கூல் ஏற்படுத்தவும், இராஜாங்கத்தால் தொழிற் கல்வி விஷயமாகக் கொடுக்கப்படும் உபகாரச் சம்பளங்களை நன்கு உபயோகப்படுத்துவதைப்பற்றியும், இராஜாங்கம் கவனிக்கவேண்டுமென வற்புறுத்தினர். சென்னை பூமி ஆக்ரம சட்ட விஷயமாக அவர், எடுத்துக்காட்டிய விஷயங்களையெல்லாம் எடுத்தாண்டு கவர்ன்மெண்டார் ஐயரது உதவியை நன்குமதித்தனர். 'இந்திய ஸிவில் ஸர்வீஸில் முதல்முதல் வரும்'உத்தியோகஸ்தரது சட்ட' ஞானத்தை விருத்தி செய்யவேண்டுமென்றும், மாஜிஸ்ட்ரேட்டுக்களின் அக்கிரமங்களை ஒழிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும், அவர் அடிக்கடி இராஜாங்கத்திற்குக் கவனப்படுத்தியதுண்டு. அவர் சட்ட ஸபையின் பொதுஜன அங்கத்தினரையெல்லாம், தன் வீட்டிற்சேர்த்து மனங்கலந்து, காலத்தை வீணாக்காதிருக்க, இன்ன இன்ன விஷயங்கள் இவ்விவர் பேசவேண்டுமென்று, பொது அங்கத்தினர் செய்யவேண்டிய வேலைகளைப் பங்கிட்டுப் பரிமளிக்க வேலை செய்யச் செய்தனர். இவ்வழி, பொது அங்கத்தினராலும் இராஜாங்கத்தாராலும் நன்கு மதிக்கப்பட்டு வந்தது.

சட்ட விஷயம்

சட்ட ஸபையின் அங்கத்தினராக இருக்கும்போது 1907-ம் வருஷம் அவர் அட்வோகேட் ஜனரலாகக் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டனர். இவ்வேலையில் அவர், நிர்வாஹ மெம்பராகு மளவும் விளங்கினர். இப்பதவியில் விளங்கியபோது அவர், இந்திய பூஸ்திதி ஸம்பந்த சட்டம் என்னும் மசோதா எழுதி அதைச் சட்டமாக்க மிகப் பிரயத்னமெடுத்துக்கொண்டார். அதனால், மிராசுதார்களின் கீழிருக்குங் குடிகளுக்கு அளவற்ற ஸுகமேற்பட்டது. இவரே. ஸர் ஸுப்பிரஹ்மண்ய ஐயரவர்களுடைய உதவியை முன்னிட்டுத் தர்மச், சொத்துக்கள் வீணாகாது, ஸரியான வழியில் நடைபெற இன்றியமையாது வழிபடவேண்டிய முறைகளை முன்னுக்குக் கொண்டுவந்தவர். இராமேச்வரம் தேவஸ்தானம், பச்சையப்பன் தர்மங்கள், இவற்றிற்கு முறைகள் ஏற்படுத்திச் சீர்திருத்த ஒழுங்குகள் ஏற்படுத்தப்பட்டதை யாரறியார்?

நிர்வாஹ ஸபை

1912-ம் வருஷம் கனம் வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் காலமானதும், சிவஸ்வாமி ஐயர் நிர்வாஹ மெம்பராக ஏற்படுத்தப்பட்டனர். அவர் வந்த காலம் ஸுகமானதன்று. அவ்வழியில் அநேக முட்களிருந்தன. பாலக்காடு முனிஸிபாலிடி வியவஹாரம் அப்பொழுது பெருநெருப்பாகப் பறந்துகொண்டிருந்தது. தமது இயற்கைத் தன்மைக் குணத்தைக்கொண்டு அந்நெருப்பையவியச்செய்து மீண்டும் படராதிருக்க வேண்டிய ஏற்பாடுகளுஞ் செய்தனர்.

சீர்திருத்தங்கள்

சிறந்த கணக்குப் பரிசோதகர்களை உண்டாக்க, தக்க ஞான மூட்ட, வியாபாரக் கலாசாலை ஒன்றேற்படுத்த வேண்டுமென்று ஐயருக்குப் பலநாளாக எண்ணமுண்டு. இவரது அபிப்பிராயத்தை உணர்ந்த நமது கவர்னர் அவ்வெண்ணத்தில் தானும் ஈடுபட, தற்காலம் ஷை சாலை ஒன்று ஏற்படுத்தும் விஷயமாய் ஒரு கமிட்டி கூடியிருப்பதை யாவரும் உணர்வர். பெண்களுக்குயர்தரப்படிப்பைத் தரும்படி பெண்கள் கலாசாலை ஏற்பட்டதற்கு ஐயரவர்களே மூலாதாரம். பட்டண அமைப்பைப்பற்றிய விஷயங்களைப்பற்றி ஐயரவர்களுக்கும்கவர்னருக்கும் அடிக்கடி ஏற்பட்ட ஸம்பாஷணைகளால், பிரொபெஸர் கேட்டிஸ் என்பவரைத் தருவித்துப் பல தீர்ந்த உபந்யாஸங்கள் தர ஏற்பாடுகள் பிறந்தன. ஐயரவர்களுக்குப் பட்டண அமைப்பைப்பற்றிய விஷயம்மிகச்சிறந்ததாகத் தோற்றியதால், 'பட்டண அமைப்பு மசோதா' என்னும் மசோதாவைத் தயாரித்து இந்தியா கவர்ன்மெண்டாரது அங்கீகாரம் பெற அனுப்பித் திருக்கின்றனர். குடியால் ஏற்படும் தீங்கைக் குறைக்க அவர் எடுத்த முயற்சிக்கு இந்த ராஜதானி முழுதும் அவரிடம் நன்றி பாராட்டகடமைப்பட்டதாகும்! விற்பனைக் காலங்களைக் குறைத்தும், குடிப்பவரது வயதை ஏற்றியும், கள்கடைகளின் தொகையையும் இடத்தையும் ஏற்படுத்தத் தக்க கமிட்டிகளை ஏற்படுத்தியும், கள்ளால் வரும் தீமையைக் குறைக்க அவர் முயன்றார். லோகல்போர்டுகள், முனிஸிபாலிடிகள் இவற்றை நேரிற்கண்டு பரிசோதித்து, அவ்வவ்விடங்களிலும் ஸுகாதாரத்தைக் கவனிக்க ஏற்பாடின்மையைக் கண்டு, அவ்வாறு ஏற்பாடு பெற, ஐந்து வருஷ விஷயப் பட்டிகள் கவர்ன்மெண்டுக் கனுப்பும்படி உத்தரவு பிறப்பித்தனர். மேலும் இந்தியப் பட்டமாகிய B. S. S என்பதை ஆங்கில ஸுகாதாரப்படிப்புப் பட்டமாகிய D: P. H பட்டத்திற்குச் சமானமாக மதிக்கப்பட வேண்டுமென்றும் உத்தரவு பிறப்பித்தனர், ஸுகாதாரத்தைக் கவனிக்கும் இன்ஸ்பெக்டர்களை ஒவ்வொரு முனிஸிபாலிடியும் பெற்றிருக்க ஏற்பாடுகளுஞ் செய்தனர். கிணறுகளைக் காப்பாற்றிக் கிராமங்களில் ஜலவசதி ஏற்படுத்த யூனியன்களைக் கட்டாயப் படுத்தியதைப் பொது ஜனங்கள் யாவரும் மிகப் பாராட்டுவர் என்பது திண்ணம்.



இவை முதலாகிய சீர்திருத்தங்களன்றி, ஐயர் அவர்கள் லோகல் போர்ட் அதிகாரத்தை, இராஜாங்க பதவியில் இல்லாதவர்கள் வஹிக்கும்படிச் செய்தனர். இது முனிஸிபல் வியவஹாரத்தை முற்றும் ஜனங்கள் கைகளிலேயே விட முதற்படியாகும். தற்காலம் 29 தாலுக்கா போர்டுகளில் அத்தகைய அதிகாரிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனர். கிராமப் பஞ்சாயத்தை நிலைநாட்டச் செய்ததற்கு ஐயரவர்கள் அழியாப் புகழ் பெறுவர். நிற்க, முனிஸிபல் எலெக்ஷன்களில் வோட்டர்களுக்கும் வோட் பெறுபவர்க்கு மிருந்த தாரதம்ய பேதமொழிக்கப்பட்டு ஷை வியவஹாரங்கள் செவ்வனே நடக்க வழியேற்பட்டதற்கு அவரே காரணம். முனிஸிபல் ஸபைகளுக்குத் தமது ஆபீஸ் சம்பள விஷயங்களைச் சில அளவுவரை சீர்திருத்தவும், ஷை சபைகள் ஒரு அளவையுள் தமதுத்தரவின் பேரிலேயே பணச்செலவு செய்யலாமென்றும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இது ஸபைகளுக்கு, அல்ப விஷயங்களுக்கெல்லாம் இராஜாங்க உத்தரவு பெறவேண்டியிருந்த பெருந்தொல்லையை ஒழித்ததாகும்.

இவற்றையெல்லாம் கவனிக்கும்போது சிவஸ்வாமி ஐயரது வேலையின் பெருமை தாமே விளங்கும். அவர் மீண்டும் பொது ஜனங்களுடன் கலந்துழைக்க வந்திருப்பது, பெரும் பாக்கியமென்பதில் தடையில்லை. அவரது வாழ்க்கையை, இந்தியரது பெருமைக்கும் ஏற்றத்திற்கு முபயோகிக்கக் கடவுள் அவருக்கு ஆயுளும் பலமும் தந்து, அடங்கா ஆவலும் தருவரென விரும்புகிறோம். "செய்ய சிந்தைப் பேருளாளர் தத்தம் செய்கையிற் பிழைத்ததுண்டோ ?" என்ற கம்பர் வாக்குக்கு அவர் உருவகமாவரென விரும்புவது தவறாகாது.

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### S. S. L. C. 1911 (*Concluded.*)

I. Write a short essay on (one of) the following:—

(c) Prevention is better than cure.

II, Write a short account of (any two of) the following:—

(d) The Adventures of Ulysses with Cyclops.

I (c) விடுப்பிற் றடுப்பே நலம்

இப்பழமொழியின் பொழிப்புரை விளக்கம்—இதன் பொதுப்பொருள் விளக்கம்—உதாரண கதை—முடிவுரை.

இப்பழமொழிக்கு (ஒரு நோய் வந்து விட்ட பின்னர் அதிலிருந்து மருந்து முதலியவைகளால் நம்மை) விடுவித்துக் கொள்ளுவதை விட, (முன் ஜாக்ரதையுடனிருந்து அந்த நோயே நம்மை அணுகவொட்டாதபடி) தடுத்துக் கொள்ளுவதே சிறந்தது என்பதுதான் சொல்படியுள்ள பொழிப்புரை. பொதுவாக எல்லோருக்கும் இன்பத்தில்தான் விருப்பம். அது வெளியிலுள்ள. இன்பந்தரும் ஐம்புலப் பொருள்கள் நமது ஐம்பொறிகளுடன் வந்து பொருந்துங்கால்தான் இன்பமே ஏற்படும் என்ற எண்ணமிருப்பதால் வெளிவஸ்துக்களை இன்பத்தைக் கருதித் தேடுவதே எல்லோருக்கும் ஓயாத் தொழிலாகிவிட்டது. இந்தப் பொது விருப்பத்தின் ஓர் உருவம், நல்ல சுவையுள்ள உணவுகளை உட்கொள்ளவேண்டும் என்பதே. இதில் மிகுதியாக ஒருவன் ஈடுபட்டுவிட்டானகில், அஜீர்ணம் ஜ்வரம் முதலிய நோய்கள் ஏற்பட்டு அவன் வருந்தும்படியாகும். துன்பங்கண்டு நடுங்குந் தன்மை எல்லோருக்கும் இருப்பதால், 'இப்படி வரக்கூடிய துன்பங்கள் வந்தபின் அவைகளை நீக்கிக்கொள்ள

(இதன் தொடர்ச்சி 296-ம் பக்கம்)

முயலலாம், அதுவரையில் கிடைத்த இன்பத்தை விடவேகூடாது; இந்நிலையற்ற உலக வாழ்க்கையில் இத்தருணம் தப்பினால் எத்தருணம் வாய்க்குமோ' என்று பலவாறாகக் கருதி, நம்முள் பலரும் வரம்பு மீறிப் பேய்போல இன்பம் நுகரத் தொடங்கி விடுவர். இவர்களே விடுவித்தலைக் கருத்தில் கொண்டவர்கள். வேறு சிலர் 'இப்படிக் கண்டபடி உணவுகளில் ஈடுபட்டு நோய்களை இழுத்துவிட்டுக் கொள்ளுவதில் வீண் துன்பந்தான். நாக்கின் சிறு இன்பத்தைக் கருதி உடல் முழுவதையும் ஓயாவருத்தத்திற் காளாக்குவானேன்? மேலும், இன்பம் மிகுதியானால், மிகத் தித்திப்புடைய சர்க்கரை வில்லைகள் கசப்பதுபோல, நமது பொறிகளுக்கு ஏற்கும் ஆற்றலின்றித், துன்பமாகவே தோற்றும். ஆதலால் பின்னர் துன்பந்தரும் உணவுகள் எவ்வளவு சுவையாக இருப்பினும் அவைகளில் நாம் ஈடுபடவேகூடாது. நோயால் பின்னர் வெகு நாள் இன்பம், வரம்புபட்டிருப்பினும், நுகர முடியாமலே போய்விடும்' என்ற எண்ணங்களால், சுவைவழி நாவை விட்டு நோய்க்காளாகாது, முன்னரே தடுத்துவிடுவர். இவர்களுக்கு நீடித்த அடங்கிய இன்பமும், ஒருவிதத் துன்பமும் வந்தணுகாமையுமே கைகண்ட பயனாகவிருக்கும். இவர்களே துன்பம் வருமுன் தடுத்து நிற்க முயல்பவர். விடுவித்துக் கொள்ளுதல், தடுத்துக் கொள்ளுதல் ஆகிய இவைகளில் முயல்வதில் முன்னதைவிடப் பின்னதே மேலானது என்பதுதான் இப்பழமொழியின் கருத்து.

இப்பழமொழி, பொதுவாக, நோய்போன்ற வெறுக்கக்கூடிய பல துன்பங்கள் விஷயத்திலும் எடுத்தாளப்பட்டு வரும். பெட்டித்திறவுகோல்கள் மாட்டும் வளையங்களில் இப்பழமொழி ஆங்கிலத்தில் எழுதியிருப்பதைப் பலர் கண்டிருக்கலாம். அங்குச் சிறப்பாக இதற்கு ஒரு பொருள் உண்டு. 'திறவுகோல்களைத் தனித்தனியாக வைத்திருந்தால் அவை வெவ்வேறு இடங்களில் சிதறிப்போயோ, கைமறதியாக வைக்கப்பட்டோ கெட்டுப்போக இடமுண்டு. அவ்வாறு கெட்டுப்போன பின்பு புதிய திறவுகோல்கள் வாங்கி ஏற்படக்கூடிய துன்பத்தை நீக்கிக்கொள்ளுவதைவிட, வளையங்களில் அவைகளைச் சேர்த்து மாட்டி; இடுப்பிலோ 'வேறு ஓரே இடம் ஏதாவதிலோ வைத்து, கெட்டுப்போகும் துன்பம் நேராமலே தடுத்துக்கொள்ளுவதேமேல்' என்பதுதான் அந்தப் பொருள். இவ்வாறு திறவுகோல் கெட்டுப்போய் உண்டாகக்கூடிய துன்பத்தை விடுவித்துக் கொள்ளுவதைவிடச் சிறந்ததான, கெட்டுப்போகாமல் தடுப்பதையே நோக்கமாக வளையங்கள் உண்டாக்கப்பட்டபடியால் அவைகளில் இப்பழமொழி எழுதப்பட்டதுபோலும்! இப்படியே விரும்பக்கூடிய வழிகளில் எவை வெறுக்கக்கூடிய பயனை முடிவில் அளிக்குமோ, அவைகளில் முன் பின் ஆராயாது மயக்கம் உண்டாவதைத் தடுக்க எச்சரிக்கை செய்யவே இப்பழமொழி ஏற்பட்டுள்ளது.

இதற்கு உதாரணமாக, மஹாபாரதம் சாந்தி பர்வத்திலிருந்து, பஞ்சதந்திரம் மித்ரபேதம் (நட்புப் பிரித்தல்) என்ற முதல் பாகத்தில் எடுத்தாளப்பட்ட ஒரு கதைகூட உண்டு. ஒரு குளத்தில் மூன்று மீன்களிருந்தன. அவற்றுள் ஒன்று, துன்பம் வருமுன் காக்கும் திறனுடையது. இரண்டாவது, வந்தபின் காக்கும் ஆற்றலுடையது. மூன்றாவது வருங்காற் காக்கும் வன்மை வாய்ந்தது. இதனால் இவைகளுக்கு முறையே வருமுன்காப்போன், வந்தபின் காப்போன், வருங்காற் காப்போன் என்ற பெயர்கள் அமைந்திருந்தன. ஒரு நாள் மீன்கள் எல்லாவற்றையும் பிடிக்க எண்ணிச் செம்படவன் ஒருவன், குளத்தின் தண்ணீரை வடிக்கத் தொடங்கினான். தண்ணீர் குறைவதைக்கண்ட முதல் மீன், மற்றிரண்டையும் நோக்கி, 'தண்ணீர் குறைகிறது! பின் நமக்கு என்ன கெடுதி வருமோ தெரியவில்லை. ஆகையால் ஓடும் தண்ணீரோடு நாமும் இக்குளம்விட்டு வெளியேறி வேறோர் ஆழமான குளம் போகலாம்' என்றது. அதற்கு இரண்டாவது மீன், 'இதற்கென்ன அவஸரம் இப்பொழுது' என, மூன்றாவது 'கேடு வருங்கால் நாம் எளிதில் தப்புவித்துக்கொள்ளலாம். இப்பொழுதுமுதலே வீண்குழப்பம் எதற்கு?' என்று முடிவு கூறியது. இதைக் கேட்டதும், முதல் மீன், ஓடும் தண்ணீர் வழியே வெளியேறி, நன்மை அடைந்தது. தண்ணீர் நன்றாக வடிந்ததும் மிகுந்திருந்த மீன்களிரண்டும் செம்படவன் கூடையிலகப்பட்டன. வருங்காற் காப்போன், அவன் பெட்டியில் கடித்து ஒரு ஓட்டை செய்துகொண்டது. வந்தபின் காப்போனோ, ஒன்றும் செய்ய முடியாது செயலற்று நின்றுவிட்டது. செம்படவன் பெட்டியை அருகிலிருந்த வேறொரு குளத்தில் முழுத்திக் கழுவினான். அப்பொழுது வருங்காற்காப்போன் தானிட்ட தொளை வழித் தப்பித் தண்ணீருள் போய்விட்டது. வந்தபின்காப்போன் இறந்தது. இவற்றுள் வருமுன் காப்போனே மிகச் சிறந்தது; தடுப்பதிற் சேர்ந்தது. வருங்காற் காப்போன் ஒருவாறு நல்லது என்று மதிக்கலாம்; விடுப்பதிற் சேர்ந்தது. மூன்றாவது ஒருவகையிலும் சேர்ந்ததல்ல.

இந்தப் பழமொழியை நல்லொழுக்க வழியிலும் பொருள் படுத்தலாம். கெட்டவழியில் போய் அழுந்தும் முயற்சியால் சீரழியாது வெளிவருவதைவிட, அவ்வழி அணுகாதிருக்க முயலுவதேமேல் என்பதுதான் இந்நிலைக்கேற்ப இதன் பொருளாகும். சிலர், இக்காலத்தில் கெட்டவழி அணுகாமலே ஒதுங்குவதைப் பயங்குள்ளித்தனமென்று இகழ்ந்து பேசி, தீயவழிகளுக்கு இடையில் நல்லொழுக்கங் கெடாதிருக்க முயலுவதே ஆண்மைத்தனமென்று தீயோரிணக்கத்தை விட்டொதுங்காமலே காலங்கழிப்பர். தீயவழிச் செல்லாது தப்பித்துக்கொள்ள ஓயாது வீணாகச் செய்யும் முயற்சியைத், தீயவழியையே அணுகாது நல்லவழியில் நடக்க உபயோகப்படுத்தினால் நல்லொழுக்கம் எவ்வளவு நன்றாகப்படியும்! சற்று மயங்கி இணங்கி விட்டால் பெருங்கேடு என்பவைகளை ஆராய்ந்து பாராதவர்கள்தாம் இப்படிக் கூறுவர். பின்னர் துன்பம் தரக்கூடிய இன்பங்களில், விடாது ஈடுபட்டுவிட்டு, மேல் வரக்கூடிய துன்பத்தைத்தடுக்கக்கூடிய மாற்றுகளையும் ஏற்றுக்கொள்ளுவர் இத்தகையோர். வேர்க்கடலைக்கொட்டை உடம்புக்குக்கெடுதி; அதைவாய் கொண்டமட்டும் சுவைக்காகத் தின்றுவிட்டு அதற்கு மாற்றாக வெல்லத்தையும் தின்பவரே இதற்கு உதாரணம். இப்படி விஷய இன்பத்திலும் ஈடுபடுபவர்கள் செய்துகொள்ளுகிறார்கள் இக்காலத்தில் ஏராளமாய். இவர்களுக்கெல்லாம் இன்ப ஈடுபாடுவளர்ந்து கொண்டேவர, மாற்றின் குறைவாலோ, வேறு யாதுமுகாந்தரத்தாலோ முடிவில் கேடேவரும். இத்தகைய கொடுமைவாய்ந்த இக்காலத்தவரை நோக்கி இந்தப் பழமொழி தகுந்த எச்சரிக்கை செய்கின்றது.



### II (d) யுலிஸ்ஸீஸ் ஸைக்ளாப்ஸ் ஜாதியாரிடம் பட்ட பாடுகள்

ஒரு பெரிய பட்டணத்தை அழித்துவிட்டு, தன் படைகளுடன் யுலிஸ்ஸீஸ் தன் நாட்டிற்குப் போய்க்கொண்டிருந்த வழியில் ஒரு நாள் காலையில், ஸைக்ளாப்ஸ் என்ற ஜாதியார் இருந்தவிடம் வந்துசேர்ந்தான். இந்த ஜாதியார்கள் பெருத்த உருவமுள்ள இடையர்கள். இவர்களுக்குப் பயிர்த்தொழில் முதலிய நாகரீக வழிகளே தெரியாது; செழிப்பாகவிருந்த தமது நாட்டில் ஆடுகள் மேய்ப்பதும், கிடைத்ததைக்கொண்டு ஒவ்வொருவனும் தன் தன் காரியத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதும், மானிடர்களைக் கண்டால் தின்றுவிடுவதுமே இவர்கள் தன்மையாக விருந்தன. யுலிஸ்ஸீஸ் சில ஆட்களைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு அவ்வூருள் சென்று, ஒரு பெரிய குகையுள் புகுந்தான். கூடவே இவர்கள் தமது சாராய டப்பிகளில் இரண்டொன்றையும் கொண்டுபோயிருந்தனர். அங்கு எல்லாம் வெகு குழப்பமாயும் பயங்கரமாயும் இருந்தது. அதிலிருந்து, அங்குள்ளவரது அநாகரிக நிலை விளங்கியது. காலையில் சென்ற வீட்டுக்காரன் மாலையில் ஆடுகளை ஓட்டிக்கொண்டு ஒரு பெரிய விறகுகட்டையும் எடுத்துவந்தான். அவன் உள்ளே எறிந்த கட்டின் ஓசை, வீடு சரிந்துவிழுந்ததுபோல யுலிஸ்ஸீஸ் முதலியவர்களுக்குத் தோற்ற, அவர் திடுக்கிட்டுச் செயலற்று விட்டனர். இதற்குள் அந்த ஸைக்ளாப்ஸ் தலைவனான பாலிபீமஸ் குகையுள்வந்து ஆடுகளையெல்லாம் தத்தம் இடங்களில் கொண்டு அடைத்துவிட்டு, குகையின் வாயிலைப் பெரிய கல் ஒன்றால் மறைத்துவிட்டான். பின்னர் எரிமூட்டி, ஆட்டின் பாலைக் கறந்து வைத்துவிட்டு சுற்றுமுற்றும் தன் நெற்றியிலிருந்த ஓரே கண்ணால் பார்த்தான்.

இவன்கண்ணில் யுலிஸ்ஸீஸும் அவன் ஆட்களும் பட, 'நீங்கள் யார்?' என இடிமுழக்கம்போலக் கர்ச்சித்தான். யுலிஸ்ஸீஸ் ஒருவாறு முதலில் தேறி 'நாங்கள் கொள்ளைக்காரவது வியாபாரத்திற்காவது வந்தவர்களல்ல; பெரும்

போருக்குப்போய் ஊருக்குத்திரும்புகையில் வழிதப்பித்தவித்து இங்குவந்துசேர்ந்தவர்கள்' என்று கீழே விழுந்து வணங்கி நின்று, 'எங்களுக்கு உதவிசெய்தால் தேவர்களும் திருப்தியடைவர்' என்று விண்ணப்பம் செய்தான். உடனே மானிடர்களைக் கொன்று தின்னும் பாலிபீமஸ்ஸுக்குமிகுந்தகோபம்வர, 'உங்களவர்களும், கப்பல்களும் எங்கே?' என்று கேட்டான். இவனிடம் உண்மையைக் கூறத்தயங்கி யுலிஸ்லீஸ் 'எங்கள் கப்பல்பாறையில்மோதிச் சுக்கலாகிவிட்டது. என்கூட உள்ளவர்கள் தவிர மற்றையவர்கள் கப்பலோடு மூழ்கிப்போய்விட்டனர்' என்று கூறிவிட்டான். இதற்கு பாலிபீமஸ் விடையொன்றும் கூறாது தன் கைக்கு எட்டிய இருவரைப் பிடித்து வேஷ்டி தோய்ப்பதுபோல தரையில் அவர்களை அறைந்து அவர்கள் அங்கங்களை உடல்களிலிருந்து கிழித்தெடுத்துத் தின்று அவர்கள் ரக்தத்தையும் குடித்து ஏப்பம்விட்டான். இதனால் அடிக்கடிமாலுமிகள் இக்கரையருகே வருவதுகூடவில்லை. தவறி வந்தவர்களை இவர்கள் விடுவதுமில்லை. இதைக் கண்ணுற்றதும் யுலிஸ்லீஸ்ஸும் அவன் பரிவாரங்களும் தூண்போல அசைவற்று நின்றுவிட்டனர். பாலிபீமஸ் தூங்க ஆரம்பித்ததும், அவனை உடனே குத்திக்கொன்றுவிடவேண்டும் என்றவெறி யுலிஸ்லீஸ்ஸுக்கு வந்துவிட்டது. உடனே 'இவனைக் கொன்றபிறகு வாயிற்கல்லைப்புரட்டி வெளியிற் போவதெப்படி' என்று குழப்பம் உண்டாக அவன் இவ்வாறு செய்யாது நிதானித்தான்.

பொழுதுவிடிந்ததும், மற்றும் இருவரை பாலிபீமஸ் முன்போலக் கொன்று தின்றுவிட்டு ஆடுமேய்க்கப் போய்விட்டான். போகும்போது வாயிற்கல்லை மிக்க கவனமாக எடுத்து மூடிவிட்டே போனான் பாலிபீமஸ். உள்ளே அகப்பட்டுக்கொண்ட யுலிஸ்லீஸ் ஆழ்ந்த ஆராய்ச்சியின்பேரில் நல்ல வைரம் பாய்ந்த தடி ஒன்றை எடுத்து நுனியைக் கூராகும்படி சீவி, நெருப்பில்காய்ச்சி இறுகவைத்து அதை உபயோகிக்கவேண்டிய வழிகளைத் தம்முள் நால்வருக்கு நன்றாகச் சொல்லிக்கொடுத்துவிட்டான். அன்றுமாலையில் பாலிபீமஸ்வந்து, ஆடுகளை ஆணும் பெண்ணுமாகச் சேர்த்தே மந்தையாக அடைத்துவிட்டான். முதல் நாள் செய்ததுபோல எல்லாம் செய்துவிட்டு உறங்கத் தயாரானான். அத்தருணத்தில் யுலிஸ்லீஸ் தன் யோசனையின் முதிர்ச்சியால் உண்டான மனக்கிளர்ச்சியுடன் பாலிபீமஸ்ஸை அணுகி, பெரும் மயக்கம் உண்டாக்கக்கூடிய சாராயத்தை அவனுக்கு ஏற்றத் தொடங்கிவிட்டான். இதன் சுவையை உணர்ந்து வியப்படைந்த கொடியவனை நோக்கி 'இதற்கு மாறாக, மிகுந்துள்ள எங்களைக் கொன்று தின்னாது விட்டுவிட்டாலே போதும்' என்று மிக வணங்கிக் கேட்டுக்கொண்டான். இப்படிப் பேசிக்கொண்டே மொந்தைகள் பலவற்றை அவன் ஓயாது குடித்து வரும்படி செய்ய, அவன் குடிவெறியில் 'உன் பெயர் என்னப்பா?' என்று கேட்டான். அவன் நிலையை அறிந்தயுலிஸ்லீஸ், என் பெயர் 'ஆளில்லை' என்று யுக்தியாகச் சொல்லிவைத்தான். 'இதற்கு மாறாக நான் உன்னைக் கடைசிவரையில் தின்னாது விட்டு முடிவில் தான் தின்பேன்' என்று மறுமொழிகூறி மயங்கி விழுந்துவிட்டான் பாலிபீமஸ்.

இவன் உறங்கியதும், தயார்செய்திருந்த நான்கு பெயர்களும் கூராக்கப்பட்ட தடியை நன்றாகப் பழுக்கக்காய்ச்சிப் பாலிபீமஸ் ஒற்றைக் கண்ணுள் நன்றாகச்சொருகி அழுத்திவிட்டுவர யுலிஸ்லிஸ்ஸும் தன்பலம்கொண்டமட்டும் அதை அழுத்தி நட்டுவிட்டு ஒதுங்கிவிட்டான். இதற்குள் பாலிபீமஸ்ஸுக்கு விழிப்பு வந்துவிட வலிபொறுக்க மாட்டாது கூக்குரலிட்டான். யுலிஸ்லீஸ் முதலியோர் குகையுள்பலவிடங்களில் ஓடி ஒளிந்துகொண்டனர். இதற்குள் இவன் குரலைக்கேட்டு விசாரிக்க வெளியில் வந்த இவன் போன்றவர்கள் கேட்ட கேள்விக்குப் பாலிபீமஸ் 'ஐயோ! ஆளில்லை பேராபத்தைக் கொண்டுவிட்டானே. குகையில் ஆளில்லை தேடுங்கள்' என்று ஓலமிட்டான். அதற்கு அவன் இனத்தார், 'ஆளில்லாது உனக்கு இப்படி வந்திருக்குமாயின் கடவுளே உன்னை இக்கோலமாக்கி இருக்கவேண்டும். இதைத் தடுக்க யாரால் முடியும்?' என்று கூறித் தம்மிடம் சென்றனர். இதற்குள் பாலிபீமஸ் கையில் வாயிற்கல் இடற, அதைத் திறந்துகொண்டு அவன் வாயிற்படியில் உட்கார்ந்துவிட்டான். காலை நேரமும் வர, ஆடுகள் வழக்கப்படி வெளியே போகத் தொடங்கிவிட்டன. அங்கிருந்து யாராவது வெளியே போகி



றார்களாவென்று ஆடுகளையும் வாயிலையும் அடிக்கடித் தடவிக் கொண்டிருந்தான் பாலிபீமஸ்.

யுலிஸ்லீஸ் யுக்தி குன்றிப்போய்விடவில்லை. அங்குள்ள ஆடுகளைப் பிடித்து, மும்மூன்றாக வரிசையாக நிறுத்திக்கட்டி, நடு ஆட்டின் வயிற்றிற்கு அடியில் பாலிபீமஸ் படுக்கையிலிருந்த சிறு கம்புகளால் ஊஞ்சல்போலச் செய்து தொங்கவிட்டு அதில் ஒவ்வொரு ஆளாகப் படுத்துக் கொள்ளச்செய்து, தானும் அவ்வாறே செய்தான். ஆடுகள் போகையில் ஆடுகளைத் தடவிப் பார்த்து அவைகளைப் போகவிட்டான் பாலிபீமஸ். யுலிஸ்லீஸ் இருந்த ஆடுகள் வர அவைகளைத்தடவுகையில் அவன்தலைமயிர்கூட பாலிபீமஸ் கையில்பட்டது. அவன் குருடாக விருந்ததால் அதுவும் பயன்படாமல் போய்விட்டது. வெளியில் வந்து வீண் பொழுதுபோக்காது, ஆடுகளையும் ஓட்டிக்கொண்டு இவர்கள் நாம் கப்பல்களிருக்குமிடம் சேர்ந்து பாய்விரித்து வெகு விரைவில் அக்கொடிய நாடு விட்டகலத் தொடங்கினர். தூரத்தில் போகும்பொழுது யுலிஸ்லீஸ் தன் விஷயங்களை உறக்கச் சொல்ல அவ்வூரார் பெரும்பாறைகளைஎடுத்துவீசினர். நல்லவேளையாய் அவைகள் கப்பல்கள் அருகில் விழ ஒருவித அபாயமுமின்றி இவர் தப்பி ஓடிவிட்டனர்.

## சிறுவர்களுக்கான பக்கங்கள்

### CHILDREN'S PAGES

யயாதிசரித்திரம்

4. தன்னிலைக்கு மீண்டேகிய சருக்கம்

தான்செய்த பெரும் புண்யங்களின் பலன்களை எல்லாம், பேரப்பிள்ளை ஆயுட்காலத்திற்குள்ளேயே இழந்து, அவைகளின் முடிவான ஆற்றலால் மஹா ஸாதுக்களாகிய அவர்களுக்கிடையிலேயே நழுவி விழப்பெற்ற யயாதி மஹாராஜனது அடங்கிவரும் திவ்ய ஒளியைக்கண்ட அஷ்டகன், தன் பாட்டன் என்று உணராது, முதலில் அவருடன் பேசத் தொடங்கினான்.

அஷ்டகன்:—யாரய்யா நீர்? மிகுந்த தேஜஸ்ஸுடன் விளங்குகிறீரே! வரவர! உமது ஒளி இந்த யௌவன நிலையிலேயே உமக்கிப்படிக் குறைந்து வருவானேன்? ஸூர்யனோ அல்லது வேறு ஒளிவிடும் கோளங்கள் ஏதோ விழுகின்றதா என்னவென்று எல்லோரும் வியப்படைகின்றனரே!

யயாதி:—(மிகுந்த வருத்தத்துடன்) நான் கர்வமிகுதியால், எல்லோரையும் துரும்பாகக் கூட மதியாமல் பேசியதால் என் பெரும் புண்யங்களை அநியாயமாயிழந்து திண்டாடித் தவித்துக்கொண்டு விழுகிறேன் இந்த பூமி என்ற நரகைநோக்கி. நான் உங்களைவிட வயதில் மூத்தவனாகையால் உங்களைக் கண்டதும் வணங்கவில்லை; மன்னியுங்கள்.

அ:—வயது முதிர்ச்சியைவிட அறிவு முதிர்ச்சியல்லவா சிறந்தது?

ய:—ஆம். ஆயினும் அதை மாத்திரம் முக்யமாகக்கொண்டு முன்னதைக் கவனியாமலேயிருந்துவிட்டால் வீண்கர்வத்திற்கு இடமேற்பட்டு, என்னைப்போலத் திடீரென்று அறிவு முதிர்ச்சியால் செய்த எல்லாப் புண்யங்களின் பலன்களை இழந்து தத்தளிக்கவேண்டியதுதான். நமக்கு வரும் ஸுக துக்கங்களெல்லாம் முன்செய்த வினையின் பயன், மீறமுடியாது, நீடித்தும் நில்லா, என்பதை உணர்ந்து சாஸ்திரங்கள் விதித்த நல்வழியே நடந்து பலிக்காத முன்வினைப் பதிவுகளையும், நம்மைக் கண்டபடி தொழிற்படத் தூண்டும் துர்வாஸனைகளையும் தலை எடுத்துத் தொழிலாகி விட்டுவொட்டாது, ஊக்கத்துடன் தடுத்து வருவதே வயது அறிவு இவைகளின் முதர்ச்சியின் நுட்ப பலனும். ஆகவே, கர்வத்திற் கிடமே கொடாது, இரண்டையும் நன்கு மதித்தே வரவேண்டும் நமக்கு நல்வழி திடப்பட.

அ:—தாங்கள் ஸுவர்கத்தில் அடைந்த ஸுகாதிகளை எடுத்துக் கூறவேண்டும்?

ய:—நான் இந்திரலோகம் முதல், ப்ரஹ்மலோகம்வரை சிலகாலம் உலாவிச் சாஸ்திரங்களில் விரிவாகக் காட்டியுள்ள திவ்ய ஸுகங்களை அனுபவித்துவந்தேன். திடீரென என் கர்வச் செருக்கால் ஒரு தருணத்தில் கீழே நழுவுவது எனக்குத் தெரிந்தது. முன்பின் எச்சரிக்கையே எனக்கில்லை. என் புண்யம் எல்லாம் ஆற்றலிழந்துவிட்டன திடீரென்று. எல்லோ

ரும் என்னை ஸ்வர்க்கத்தில் அவமதித்துத் தள்ளிவிட்டனர்.

அ:—இப்படிக்கூடத் திடீரென்று புண்யமெல்லாம் போய்விடுமா?

ய:—ஆம். ஒருவன் தான் செய்த புண்யங்களைத் தானே சொல்லிக்கொண்டுவிட்டால் எவ்வளவாயினும் அவை இருந்தவிடம் தெரியாமல் பறந்தோடிப் போய்விடும். பூமி என்ற நரகத்தில் பிறவி பெறும்படியான கொடிய நிலை அவனுக்கு வந்துவிடும். தற்புகழ்ச்சியின் பேராற்றல் இவ்வளவு!

அ:—மானிடரில் பெரும்பாலார் இறந்ததும், எந்நிலையை அடைகின்றனர்?

ய:—ஸாதாரண ஜனங்களில் பெரும்பாலாரும் இறந்து தமது முன்னுடல் அழிந்ததும், தம் முன் கர்மாக்களுக்கேற்ப, மறு பிறப்பை இங்கேயே பெறுகின்றனர். இவ்வாறு பெறுவதற்குள், சிலர் பூமியைச் சுற்றுமுள்ள வாயு மண்டலத்தில் நீர்த்துளிகளில், தமது கர்மாக்கேற்ற உடல் அன்னைவயிற்றில் அமையும் தருணம் வரும்வரையில் தம் கர்மபலத்திற்கு ஏற்றபடி, பலவிதமான காலங்கள் தங்கி உடலில்லாதும் தத்தளிப்பர்.

அ:—இப்படி எல்லாமிருந்து வருந்துபவர், எப்படி மறு உடலைப் பெறுகின்றனர்?

ய:—இந்த ஜீவர்கள் மழை வழி துளிகளாகத் தகுந்த தருணங்களில் பூமிக்கிறங்கிச் செடிகொடிகளுள் புகுந்து புருஷப்ராணிகளுள் அமைந்து அவர்கள்வழி அன்னைவயிற்றில் கர்ப்பரூபமாகி உயிர்ப்பிராணியாகச் சரீரத்துடன் வெளிவருவர். தமது கர்ம விசித்ரங்களுக்கேற்பத தாழ்ந்த ப்ராணி, மானிட முதலிய உடல்கள் ஏற்படும் ஜீவர்களுக்கு.

அ:—மனிதன் நற்கதியடைவது எதனுல்? வைராக்யத்தாலா? ஞானத்தாலா?

ய:—நற்கதியடைய ஏழு பாகமுள்ள வழியுண்டென்பர் பெரியோர். அவையாவன, வைராக்யம், தானம், சாந்தம், அடக்கம், பெருமை பாராட்டாமை, அபரிக்ரஹம், அஹிம்ஸை ஆகிய இவைகளே. இவைகளுள் வைராக்யமும் ஞானமும் அடக்கந்தான். ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரித்துப் பழகிவந்தால் பேராபத்துக்கூட வந்துவிடலாம். இவையெல்லாம் கர்வம் வந்திடப் பறந்துபோம். இதை எவ்வழியிலும் தலையெடுக்கவொட்டாமல் தடுத்துக்கொண்டே இருக்கவேண்டும். ஸாதுக்களை நிலைநாட்டும் பரம்பொருளையே தமக்கு ஆதாரமாக அறிந்து தெளிந்து அமர்ந்திருப்பதால் தான் மீளா நற்கதி முடிவில் ஒருவனுக்கு வரும்.

அ:—ஆச்ரம விஷயங்கள் பலவிதமாக வேதம் உணர்ந்தோரால் எடுத்தாளப்பட்டுள்ளனவே. அவைகளின் நுட்பம் என்ன?

ய:—ப்ரஹ்மசரியத்தில் குருவுக்கு முற்றிலும் ஈடுபட்டே சாஸ்திரீய வழிகளில் நடக்க முயலவேண்டும். கார்ஹஸ்தியத்தில் அவைகளில் தானே நடந்துகொண்டு தம்மைச் சேர்ந்தவர்களையும் அவ்வாறு நடக்கச் செய்ய முயலவேண்டும். வானப்ரஸ்தத்தில் முன் ஆச்ரம தர்மங்களை எல்லாம் விலக்கே இல்லாது முழுதும் எக்காலத்தும் விடாது பின்பற்ற முயலவேண்டும் ஒருவன். ஸந்யாஸத்தில் தனக்கென்று ஒன்றும் ஆதரவாகவே இல்லாது, முன் நற்றொழில்கள் எல்லாம் சென்று அடையும் கடவுளையே ஆதரமாகக் கொண்டு, நாள்போவதே தெரியாது நிச்சிந்தையாக அமர்ந்துவிடவேண்டும்.

அ:—முடிவான ஆச்ரமத்திலுள்ள ஸந்யாஸியின் சிறப்பு என்ன?

ய:—ஸந்யாஸி காட்டிலிருப்பினும் அவன் ஸித்தி விசேஷங்களால் எவ்வித உலக போகங்களையும் உண்டாக்கிக்கொள்ளக்கூடிய திறமையுடையவனுகவே இருப்பன். ஆனுல், அவைகளை ஒரு பொருட்டாகக்கூட மதியாமலே இருப்பன். நாட்டிலிருக்கும்படி நேரிட்டாலும், சுற்றுமுள்ள பொருள்களால் ஒருவித மாறுபாடும் அடையாது, காட்டிலிருப்பது போலவே இருப்பன். தபஸ், யோகம் இவைகளால் அவனுக்கு எல்லாம் ஸாதிக்கும் சக்தி ஏற்பட, அதன்வழி எல்லாமாகிய கடவுளுடன் இரண்டறக் கலந்தேயிருப்பன்.

அ:—யாருக்கு முதலில் முக்தி? யோகிக்கா அல்லது ஞானிக்கா?

ய:—ஞானிக்குத்தான் முதலில் எளிதில் முக்தி கைகூடும். யோகியாயிருந்தே ஞானியாகவேண்டும். ஆதலால், யோகி, ஞானம் பெற்றே முக்தி பெறுவன். இம்முடிவைப் பெறமுடியாது யோகி இறக்கும்படி நேரிட்டாலும், அடுத்த ஜன்மத்தில் விட்ட குறை வந்து தொட்டுக்கொள்ள, முன் விட்ட இடத்



திருந்தே முயற்சித்து அதிலேயோ அடுத்த ஜன்மங்களிலோ அவன் முக்திபெறுவன் என்பதற்கு ஸந்தேஹமேயில்லை. யோகத்தில் செய்யும் முயற்சியை மரணங்கூட வீணுக்கும் ஆற்றலுடையதல்ல.

அ:—இவ்வளவு அருமையான நுட்ப விஷயங்களை எடுத்துக்கூறும் உமக்கு இக்கதி வந்ததைக் கண்டால் என் மனம் வருந்துகிறதே!

ய:—நான் கர்வத்தால் புண்யமிழந்து தத்தளிக்கிறேன். இவ்வுலகில் பிறவியெடுக்கும்படி தேவதைகள் தூண்டுகின்றனர். இந்த ஸம்வாத முடிவில், புண்ய அழிவால் எனக்குப் பிறவி வந்துவிடும். ஆனுல் ஸத்துக்களுக்கிடையில் விழும்படி மாத்திரம் இந்திரன் அனுக்ரஹம் ஒன்று இருக்கிறது. துர்க்கதிக்கிடையில் இந்த ஒரு நற்கதி எனக்கு ஏற்பட்டது. தேவதைகள் உங்களைக் காட்ட, உமது யாகப்புகையைப்பற்றி இதுவரையில் வந்துவிட்டேன்.

அ:—திவ்ய புருஷா! நீர் ஒருவித அச்சத்தையும் அடையவேண்டாம். நாங்கள் செய்துள்ள ஸத்கர்மாக்களை எல்லாம் உமக்கு உதவும்படி செய்கின்ருேம். பிறவி ஏற்படாமலே இருக்க வேண்டிய ஏற்பாடுகள் கூடியவரையில் செய்கின்ருேம். எனக்கு என்ன திவ்யலோகங்கள் இனிமேல் வரப்போகின்றனவோ, அவைகளையெல்லாம் உமக்குத் தந்துவிட்டேன். நீர் விழாமல் நின்று, துக்கம் தீரும். நான் பிறவி பெறுவேன், அங்கு போவதில்லை.

ப்ரதர்தனன்:—என் தம்பி கூறியபடியே, நானும் என் திவ்யலோகங்களை உமக்குத் தந்தேன். விழாமல் நின்று துக்கம் தீரும். நான், அங்கு போகாது பிறவி பெறுவேன்.

ய:—அப்பா தர்மாத்மாக்களே! என் பரிதாபநிலையைக்கண்டு இப்படி நீங்கள் செய்துவிட்டீர்கள். நான் க்ஷத்ரியனல்லவா? ப்ராஹ்மணனைப்போல தானம் வாங்குவது என் தர்மமல்லவே! நான் உங்கள் கொடையை ஏற்கவே முடியாது.

வஸுமனஸ்:—நான் செய்துள்ள புண்யங்களின் பலனுன எல்லா புண்யலோக வாழ்க்கை ஆற்றலையும் உமக்குக் கொடுத்துவிடுகிறேன். எனக்கு அவைகள் வேண்டியதில்லை. நான் இங்கேயே மறுபடி பிறவிபெறத் தயாராகவிருக்கிறேன். உமக்கு நான் கொடுப்பதை தானமாக வாங்க மனம் ஒப்பவில்லையாகில், ஏதாவது ஒரு துரும்பையாவது எனக்கு விலையாகக்கொடுத்து என் புண்யங்களை வாங்கிக்கொள்ளும்; தயங்கவேண்டாம். விழாது அங்கேயே நில்லும். மேலேயும் கிளம்பிப் போகலாம்.

சிபி:—எனக்குப் பரம்முடிவான மோக்ஷம் கூட வேண்டாம். அது வரக்கூடிய தன்மைகள். இறுதியாக எந்தப் புண்ய நிலைகளும் காரியங்களும் என்னிடமிருந்தாலும், எல்லாம் உமது பொருட்டு அர்ப்பணம் செய்துவிடுகிறேன். இவ்வளவு தர்மாத்மாவான நீர் ஒளியிழந்து திண்டாடுவதாவது நாங்கள் பார்த்துக்கொண்டு புண்யஞ்செய்ய முயலுவதாவது? நீர் நற்கதி பெற்ருல்தான் எங்களுக்கு மனம் தர்மத்தில் தயங்காது திடமாக இருக்கும். நாங்கள் மனப்பூர்வமாகக் கனிந்து கொடுப்பதைப் பெறமாட்டேன் என்னலாகாது; தயவுசெய்யவேண்டும்.

ய:—அப்பா குழந்தைகளே! என் கொடிய நிலையைக்கண்டு பரிதவித்து நீங்கள் என் தர்மநிலையை நோக்காது, இவ்வளவையும் கொட்டிவிட்டீர்கள். உங்களுக்கு இச்செயலாலேயே மீளா நற்கதி வந்துவிடும். நான் நீங்கள் கொடுத்ததை ஏற்கவேண்டியதும் அவசியமில்லை. அப்படிச் செய்தால் என் தர்மப்படி எனக்கு இழிவு வருமே ஒழிய, நற்கதி வாராது. மீண்டும் மீண்டும் கனிவு மொழிகளைக்கூறி, என் மனதைக் கரைத்து அகாரியஞ்செய்யத் தூண்டவேண்டாம். உங்கள் நல்லெண்ணமே போதும்; உங்களிடையில் நான் பிறவி பெற்ருல், எளிதில் நேராக நான் நற்கதி பெறுவேன் என்பது திண்ணம். இதற்குமேல் நீங்கள் யாதொன்றும் செய்வது எனக்கு மேன்மையைத் தாராது. நான் செய்த புண்ய பலன்களே எனக்கு உபயோகப்படாமல் போய்விட்டனவே; கட்டிக்கொடுத்த சோறும், கற்றுக்கொடுத்த வித்தையும் எவ்வளவு நாள் உதவும்? மேலும் நான் தர்ம விரோதமாக உங்களிடமிருந்து பெறுபவைகளா எனக்கு மாறு நற்கதியைக் கொடுக்கும்! உங்களிடையில் வந்ததும், உங்கள் கனிவு மொழிகளாலேயே எனக்கு நற்கதி கிடைத்துவிட்டது என்ற திடம் வந்ததே போதும். இந்திரன் அனுக்ரஹமும் பலித்துவிட்டது. நீங்களும் கூடிய சீக்கிரத்

தில் மீளா நற்கதியடைவீர்கள் என்று மனப்பூர்வமாக நான் ஆசீர்வதிக்கின்றேன். என்னைத் தடுக்காமல் பிறவிபெற விழுவதற்கு இடங்கொடுங்கள்.

அ:—இப்பெரியவர் கூறுவதும் நியாயமாகத்தான் உள்ளது. நாம் என்ன செய்வது ?

ப்ர:—தானங்கொடுத்ததைத் திருப்பி வாங்குவது தர்மமா? நம்மால் அப்படிச் செய்ய முடியுமா?

வ:—அவரும் அதை ஏற்கமாட்டேன் என்று உதறிவிட்டார். நாமும் அதைப்பற்றிக் கருதுவதும் அழகன்று, என்னவாக முடியுமோ இதெல்லாம்! எல்லாம் ஈசன்பாரம்! அவர்தான் இந்த சிக்கை அறுக்கவேண்டும்.

சி:—நாம் மனப்பூர்வமாகத் தயங்காது இவ்வாறு செய்துவிட்டபடியால் இந்த மஹாபுருஷன் நாம் கொடுக்க வாங்கத்தகுந்தவனாகத்தான் இருத்தல்வேண்டும் என்று ஏதோ ஒரு தோற்றம் எனக்கு உண்டாகிறது. இதற்கேற்பவே, இவர் நாம் கொடுத்த தானத்தை ஏற்காவிடினும், இவரது வீழ்ச்சி நமது கொடைத்தடையால் தடைபட்டுவிட்டது. கீழே விழ இடந்தரும்படி அவர் கேட்பதைப் பாரும்; தமயன்மார்களே! இதனாலேயே நமது தானத்திற்குக் கடவுள் பலம் இருக்கிறது என்று தோற்றவில்லையா. நிதானித்துப் பார்ப்போம்; அவ்ஸரம் வேண்டாம்.

இவ்வாறு இந்த மஹாத்மாக்கள் நால்வரும், மேல் இன்னசெய்வது என்று தோற்றாது, ப்ரமித்து நிற்கையில், யயாதியும் தான் கீழ் நோக்கி வந்தவேகம் தடைபட்டு நின்றுவிட்டதைக்கண்டு 'நம்மிடமோ இப்படி நின்றுவிடுவதற்கு வேண்டிய புண்ணியமே இல்லை. எல்லாம் கர்வத்தால் போய்விட்டனவே! நாம் இங்குள்ள மஹாத்மாக்களிடத்திலிருந்து புதிய புண்யத்தைப் பெறவுமில்லை. அவர்கள் சொல்மாத்திரத்தில் இவ்வளவு சிறப்பு வந்துவிட்டதே! இதற்கு நமக்குத் தெரிந்ததாகக் காரணம் ஒன்றுமில்லையே!' என்று எண்ணமிட்டுக்கொண்டு அந்தரத்தில் நின்றுவிட்டான்.

இம்மாதிரி இருதிறத்தாரும் செயலற்றுவிட்ட தருணத்தில், தற்செயலாய் வனத்தில் ப்ரஹ்மசரியநிலையில் கடவுளிடமே ஈடுபட்டு நாள் கழித்துவந்த மாதவி, மானர் விருத்தியை அனுஷ்டித்துக்கொண்டு அங்கு வந்துசேர்ந்துவிட்டாள். தமது தாயைக் கண்டதும், நால்வரும் அடிபணிந்து, 'தாயே உனக்கு என்ன வேண்டும், கட்டளையிடு; அதன்படி நடக்கத் தயாராக விருக்கிறோம்' என்று விண்ணப்பம் செய்துகொண்டனர்.

மாதவி:—நீங்கள் யாகத்திற்கிடையில் ஏன் இப்படிச் செயலற்றிருக்கிறீர்கள்! சொல்லுங்கள்.

அஷ்டகன்:—அம்மா! அதோ மேலே பார்; ஒரு திவ்ய புருஷன் ஸ்வர்கத்திலிருந்து தன் புண்யம் எல்லாவற்றையும் தன் கர்வக் கொடுமையால் சீக்கிரம் இழந்து, இம்மானிட ஜன்மமாகிய நரகில் விழ வருகிறான். அவன் நிலையைக் கண்டு கனிந்து, நாங்கள் கொடுத்த எமது புண்யங்களை க்ஷத்ரிய முறைமை பாராட்டி வாங்கமாட்டேன் என்கின்றான். நாங்கள் வாங்கும்படி என்ன மன்றாடியும் கேட்கிறானில்லை. என்ன செய்வதென்று விழிக்கிறோம்.

சிபி:—இப்படி நாங்கள் செய்த தானத்தை அவன் வாங்காவிடினும், தானம் அவனைக் கீழே விழவொட்டாது, மேலேயே தடுத்து நிறுத்திவிட்டது. இதென்ன விந்தை என்ற ஆச்சரியமும் எங்களை ஒன்றும் தோன்றாது நிற்கச் செய்துவிட்டது.

மாதவி:—நீங்கள் செய்த தானத்தை வாங்க உரிமை அவனுக்கிருக்க வேண்டும். அதனால் தான் தர்மாத்மாவான உங்களுக்கு, க்ஷத்ரியனாயினும் அவனிடம் தானம் செய்யவேண்டியது என்ற ஸ்மிருதிக்கு மாறுபாடுபோல உள்ள எண்ணம் பிறந்தது. அவனும் அதை வாங்கத் தனக்கு உரிமையிருக்க, உணராது மறுத்துவிட்டான். இப்படியிருந்தும், இடையிலுள்ள உரிமையின் ஆற்றலால் அவன் வாங்காவிடினும், உங்கள் தானம் ஒருவாறு பலிக்கத் தொடங்கிவிட்டது. இந்த நுட்பத்தை அவனிடமிருந்து நேரே தெரிந்துகொள்ளலாம். (மேலுள்ள மஹா புருஷனை நோக்கி) ஹே! மிகுந்த ஒளியுடன் விளங்கிநிற்கும் பரம புருஷா! நீர் யார்? என் அருமைப் பிள்ளைகளின் குழப்பம் நீங்க ஒளியாது கூறிவிடும்.

யயாதி:—நான் ராஜருஷியாகிய யயாதி. இங்கு நான் வாழ்ந்தகாலத்தில் செய்த பெரும் புண்யங்களையெல்லாம் என் கொடிய கர்வத்தால் இழக்கநேர்ந்து, சீக்கிரம் இக்கதிக்கு வந்துவிட்



டேன். என்னை இம்மஹாத்மாக்கள் மானிட ஜன்மம் எடுத்து இழந்த புண்யத்தை மீண்டும் கைப்பற்று வண்ணம் தமது சக்தியால் இப்படித் தடுத்துவிட்டனர். என்றால் இவர்கள் புண்யங்களை தர்ம விரோதமாகப் பெற்று, அமைதியுடனிருக்க முடியாது. உனது குழந்தைகளை வீண் பிடிவாதம் பிடிக்காது தாம் கொடுத்தவைகளை மறுபடி ஏற்றுக் கொள்ளச் சொல்.

மாதவி:—(அடியற்ற மரம்போல யயாதி அடியில் விழுந்து) என்னருமைத் தந்தையே! உமது பெண்ணாகிய நானும், உமது அருமைப் பேரர்களாகிய இவர்களும் இருக்கையிலேயே உமக்கா இக்கதி வந்துவிட்டது! நாங்களிருக்கையில் நீர் இக்கொடிய உலகில் ஜன்மமெடுத்தா இழந்த புண்யத்தைக் கைப்பற்றவேண்டும். உமக்கு எதையும் கொடுக்க எமக்கு உரிமையுண்டு. உமக்கு எங்களிடமிருந்து எதையும் வாங்க உரிமையுண்டு. பார்த்தீர்களா பிள்ளைகளே! இந்த உறவில்லாவிட்டால், உங்களுக்குத் தான் க்ஷத்ரியனுக்கு தானம் செய்ய வேண்டும் என்ற ஸ்மிருதிவிரோதம் போன்ற எண்ணம் வருமா? வாங்காத தானம் உதறிவிட்டவனுக்குப் பயனைத்தான் தருமா? என்னப்பனே! நான் ப்ரஹ்மசரியம் அனுஷ்டித்துச் செய்த புண்யத்தையும் முன்னர் செய்த புண்யத்தையும் உமக்கு அர்ப்பணம் பண்ணுகிறேன் போகலாம் மேலான புவனங்களுக்கு!

பேரப் பிள்ளைகள் எல்லாம் தமது பாட்டனடி பணிந்து ஆனந்த பரவசராகினர். இப்படி யயாதி இவர்கள் புண்யங்களை ஏற்ற பின்னர் கூட, மேலே கிளம்பவில்லை. இதைக் கண்ணுற்ற சிபி இன்றைக்கு ஏதோ விசித்திரம் தான் நடக்கப் போகிறது. நிதானிப்போம் பரபரப்பின்றி, இன்று நமது தாயையும் தாதாவையும் காண்போம் என்று கனவிலாவது நினைத்தது உண்டா? என்றான்.

மாதவி:—தந்தையே! நீர் என்னை காலவர் என்ற மஹாருஷியிடம் அவர் குருதக்ஷிணைக்காக ஒப்புவித்தீரே! அவர் அனுக்ரஹத்தால் உண்டான பேரர்கள் இவர்கள். எல்லோரும் மஹாத்மாக்களாயினும், அவர்களுள் இந்த சிபியே மிகச் சிறந்தவன்.

யயாதி:—அப்படியா! இவர்கள் பேச்சுக்களிலிருந்து சிபியின் ஏற்றத்தை நானே தெரிந்துகொண்டேன், அவன் கொடுத்தவைகள், கொடுத்த ஆற்றல் ஆகிய இவைகளே அவன் ஏற்றத்தை விளக்கின. உன்னைப் போன்ற பெண்ணையும், இவர்களைப் போன்ற பேரர்களையும் பெற்ற எனக்கு என்ன குறை!

மாதவி:—என்றால் என்ன இருக்கிறது! உமது வம்சத்தில் பிறந்த ஆற்றலும், மஹாருஷியின் ஆற்றலும் அல்லவா இவ்வளவையும் செய்துவைத்தது! இதோ காலவ ருஷிகூட இங்கு தற்செயலாய் வருகிறாரே! உம்மைக் கண்டு தெரிந்துகொண்டு ஓடிவருகிறாரே! பாரும்.

காலவர்:—என்னப்பா யயாதி! உனக்கு இக்கதி வந்துவிட்டதா! பயப்படவேண்டாம். உன் பெண்ணும் பேரர்களும்தான் இவர்கள். இவர்கள் உதவியைப் பெற்றுக் கொள். என் தபோபலத்தில் எட்டில் ஒருபங்கைக்கொண்டு உன்னை அனுக்ரஹிக்கிறேன். ஏறலாம் ஸ்வர்க்கத்திற்கு. (உடனே யயாதி சற்றுக் கிளம்பினான்.)

மாதவி:—நாங்கள் எங்கள் புண்ணியங்கள் எல்லாவற்றையும் கொடுத்தும் யயாதி தடைபட்டுக் கீழேவிழாது நின்றானே ஒழிய, மேலே போகவில்லை மஹாருஷியே! அதேன்?

காலவர்:—யயாதி ஸ்வர்கத்திலிருந்து புண்யமிழந்து வருகிறான். அவனுக்குத் தெரிந்தவர்கள் எல்லோரும் அவனைக் கண்டறிந்து உயர்த்தினால்தான் அவன் உயருவன், நான் வரும் வரையில் அவன் நிற்கும்படியாயிற்று. இனி இவன் தாமதிக்கமாட்டான்; நமது புண்ய விசேஷங்களால் இவன் எளிதில் நற்கதி பெறுவன்.

ருஷி வாயை மூடுவதற்குள், ஆகாய வீதியில் அநேகம் திவ்ய விமானங்கள் வந்துவிட்டன. உடனே காலவர் அவைகளின் கணக்குகளைப் பார்த்து, 'ஏது! குடும்பத்தோடு நற்கதி வந்துவிட்டது உங்களுக்கு; ஏறலாம் எல்லோரும்!' என்றார். பின்னர் அவர்களிடமிருந்து விடைபெற்று, ருஷி தவம் செய்யச் சென்றார்.

இவர்கள் புறப்பட்டுப் போகையில் சிபியின் விமானம் எல்லாவற்றிற்கு முந்திப்போய் ஸ்வர்க்கம் புகுந்தது. அவன் சிறப்பை உணர்ந்திருந்த எல்லோருக்கும் ஈசாஞ்ஞையின் சிறப்பு நன்கு வெளிப்பட்டது. எல்லோரும் ஒழுங்காக ஸ்வர்க்கம் புகுந்து தமது கர்மாக்களுக்கேற்ற நன்னிலைகளில் அமர்ந்தனர்.

# குழந்தைகளின் பாதுகாப்பு

## THE CARE OF INFANTS

(274-ம் பக்கத் தொடர்ச்சி.)

பழக்கங்கள்:—குழந்தைகளுக்கு நற்பழக்கங்கள் இளம்பிராயம் முதற்கொண்டே கற்பிக்கப்படவேண்டும். "தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டில்" என்றது பழமொழி. பால்யத்தில் உண்டாகும் பழக்க வழக்கங்கள் ஆயுளளவும் இருக்கும். ஆதலால், ஒழுங்கான சில பழக்கங்களைக் குழந்தைகளுக்குச் சின்னஞ்சிறு வயதில் கற்பித்தல் அவசியமாகும். அக்குழந்தையின் பின்னை யௌவன காலத்தில் தோன்றும் குணவிசேஷங்கள் இந்தப் பழக்கங்களையே பொருத்திருக்கும்.

அழும்போதெல்லாம் குழந்தைக்குப் பால் கொடுப்பது கெட்டவழக்கம். குழந்தைக்குப் பசித்தாலும் பசிக்காவிட்டாலும், அதன் அழுகையை நிறுத்துவதற்காகப் பால் கொடுக்கும் வழக்கம் நின்றொழியவேண்டும். அதிகச்செல்வம் கொடுப்பதனால் கெட்டுப்போகாத குழந்தைகள், பசிக்கும்போதாவது, வலியிருக்கும் போதாவதுதான் அழும். காலாகாலங்களில் பால் கொடுத்துவந்தால், குழந்தை பசியினால் அழக் காரணமிராது. வலியினால் அழும்பக்ஷத்தில், வைத்தியருடைய உதவியைத் தேடவேண்டும். அப்படியின்றி, அடிக்கடி பால் கொடுத்தால், இன்னும் கெடுதலாகத்தான் முடியும். ஒழுங்கான பழக்கங்கள் கற்பிக்கப்படாத குழந்தை பிடிவாதமுள்ளதாயும் 'செல்'லமுள்ளதாயுமே வளரும். சரியான வழியில் குழந்தையை நடக்கும்படி செய்தால் பின்னால் அது ஒருபோதும் அவ்வழியினின்றும் விலகாது. நமது வீட்டுக் குழந்தைகளைத் தெருத்திண்ணையில் உட்கார்த்திவைத்தோ, தெருவீதியில் கொண்டுபோயோ வழியோடு போகும் நாய், பூனை, காக்கை இவைகளைக் காட்டி, அக்குழந்தைகளின் தொண்டையில் சோற்றைத் திணிப்பதில்லையா? ஒழுங்கானபடி வளர்க்கப்பட்ட குழந்தை, காலத்தில் சாப்பிடவந்து ருசியுடன் போஜனம் செய்யும். அப்படி உண்ணாமல்போனால், அக்குழந்தை பிடிவாதமுள்ளதாயோ, வியாதியுள்ளதாயோதான் இருக்கவேண்டும்.

குழந்தைகளுக்கு ஆசாரம் கொடுத்தல்:—இது (1) ஸ்தன்யபானம் செய்வித்தலும் (2) புட்டிப்பால் கொடுத்தலுமென இருவகைப்படும்:—

ஸ்தன்யபானம்.—ஒவ்வொரு குழந்தைக்கும் அதன் சொந்தத்தாயே ஸ்தன்யபானம் செய்விக்கவேண்டிய தவசியம். வியாதியாலோ, வேறு காரணங்களினாலோ அது சாத்தியமில்லாவிட்டால், தேகாரோக்கியமுள்ள ஒரு பால் தாதியை வைத்துக்கொள்ளலாம். பிறந்தபின், பத்து நாள்கள் வரையிலும் குழந்தைக்குச் சொந்தத் தாயே பால்கொடுக்க வேண்டியது முக்கியமானது. குழந்தைக்கு வியாதி வராமல் தடுக்கக்கூடிய அம்சங்கள், அப்போது தாய்ப்பாலில் இருப்பதாகத்தெரிகிறது. மேலும், இந்தப்பால் மலபந்தத்தைத் தடுக்கக்கூடியதுமானபடியால், ஆமணக்கெண்ணெய் கொடுக்கவேண்டிய அவசியமிராது போகும். தாய்ப்பாலுண்டு வளரும் குழந்தைகள், வெகு சீக்கிரத்திலும் நன்றாகவும் முதிர்ந்து வளரும். வயிற்று நோய்களால் அதிகமாக வாதைப்படமாட்டா. பூராவுமோ அல்லது இடைவிடாது கொஞ்சகாலமோ ஒரு தாய்க்குத் தன் குழந்தையை ஸ்தன்யபானம் செய்வித்து வளர்க்கச் சரிப்படாவிட்டால், தன்னால் கூடுமானவரை அவள் அப்படிச் செய்ய முயலவேண்டியது அவசியம். தாய்மார்களுடைய தேகக்கூறு, இப்படிச் செய்வதனால் பழைய நிலைமையை அடைகிறபடியால், அத்தாய்மார்கள் தங்களுடைய சொந்த நன்மையை உத்தேசித்தேனும் குழந்தைக்கு ஸ்தன்யபானம் செய்விப்பது அவசியமாகிறது. தன் குழந்தையை வளர்க்கும் விஷயத்தில் அவளுக்கு அப்போது பொறுப்பு ஏற்படும். அல்லாமலும், அவளுடைய தேகசுகமும் நன்றாகும்.

வியாதியடைந்த பசுவினிடமிருந்து நல்ல பாலும் நல்லகன்றுக்குட்டியும் கிடைப்பதில்லை. அதுபோல, தேகாரோக்கியமில்லாத தாயிடத்திலிருந்து நல்ல பாலும் ஆரோக்கியமுள்ள குழந்தையும் வரமாட்டா. பிறக்கப்போகும் குழந்தையின் நன்மையை உத்தேசித்து, தாய்மாருடைய தேகாரோக்கியத்தை அவளுடைய கர்ப்பத்திலிருந்தே கவனிக்கவேண்டியது அவசியம். புஷ்டியைக் கொடுக்கக்கூடிய ஆகாரங்களை அவள் யதேஷ்டமாய்ச் சாப்பிடவேண்டும், காபி, டீ முதலிய பானங்களைக் குடிக்கவே கூடாது. தாய்க்கு ஒத்துக்கொள்ளும் ஆகாரம் குழந்தைக்கும் ஒத்துக்கொள்ளும். மனத்தடுமாற்றம் முதலிய வாதனைகள் கெடுதியை யுண்டாக்கும். தொல்லைகளைக் கொடுக்கக்கூடிய வேலைகளைச் செய்யாமலிருப்பது நல்லது. ஆனால் நமது ஜனஸமூகவாழ்க்கையில் வேலை செய்து தீரவேண்டியது கட்டாயமாக விருப்பதால், பிரஸவித்த ஸ்திரீ, அதிக சிரமத்தைத் தரும் வேலைகளைச் செய்யாமலிருந்தால் போதுமானது. தாயின் ஸ்தனமும் அதன் காம்பும் சுத்தமாகவிருக்கவேண்டும். குழந்தைக்கு ஸ்தனம் கொடுத்தவுடனே, அக்காம்பைக் கழுவித் துடைக்கவேண்டும். வெந்நீரும் ஸோப்பும் இதற்கு மிகுந்த உபயோகமாகவிருக்கும்.

குழந்தை பிறந்தபின், நாலுமணி நேரத்துக்கு மேல் ஆறுமணி நேரத்துக்குள்ளும், தாய்க்குச் சிரமம் நீங்கியவுடனும், குழந்தைக்கு ஸ்தன்யபானம் செய்து வைக்கவேண்டும். முதன் மூன்று நாள்களுக்குத் தாய்ப்பாலைத்தவிர வேறெந்த ஆகாரமும் கொடுக்கக்கூடாது. தாய்க்குப் பால் சுரப்பதற்கு மூன்று நாளும், சிற்சில வேளைகளில், அதற்கு அதிகமாகவும் ஆகும். மூன்று நாள்களுக்குப் பிறகு, தாய்க்குப் பால் கொஞ்சமாக விருக்குமானால், பசுவின்பால், ஜலத்துடன் சிறிது சர்க்கரை கலந்த பால் இவைகளைக் குழந்தைக்குக் கொடுக்கலாம். இதை ஒன்றுவிட்டு ஒருதரம் மாறி மாறிக் கொடுக்கவேண்டியதோடு, தாய்க்குப் பால் சுரந்தவுடன் நிறுத்திவிடவும் வேண்டும்.

சாதாரணமான குழந்தை, பத்து நிமிஷம் முதல் இருபது நிமிஷம் வரையில் தாய்ப்பால் குடிக்கும். ஆரோக்கியமுள்ள குழந்தை, திருப்தியடையும் வரையிலும் குடிக்கும். அப்போது, தாய்மார் உட்கார்ந்துகொண்டிருக்க வேண்டியது. தாய்மார் நடக்கும்போதும், படுத்துக்கொண்டிருக்கும்போதும், குழந்தைகளைப் பால் குடிக்கச்செய்வது கெடுதலாகும். வாயில் முலைக்காம்புடன் குழந்தை தூங்கிப்போகும்படி விடக்கூடாது, பால் கொடுத்துக்கொண்டிருக்கும்போது, தாய் தூங்கிப்போவாளானால், அதனால் குழந்தையின் தொண்டை இறுகிப்போய் இறந்து விட்டாலும் விடும். பால் குடித்தவுடன், குழந்தையின் வாய் ஓரங்களைத் துடைப்பது நல்லது.

குழந்தைகளுக்குக் குறிப்பிட்ட காலத்தில் பால் கொடுக்கவேண்டும். அழும்போதெல்லாம் பால் கொடுப்பது கூடாது. அஜீர்ணத்தாலும் வயிற்று வலியாலும் குழந்தை அழக்கூடும். பால்குடிக்கக் குறிப்பிட்ட காலத்தில் குழந்தை தூங்கினால், அதை எழுப்பிப் பால் குடிக்கச் செய்யவேண்டும். பொதுப்படக் கூறுமிடத்து, கீழே விவரித்தபடி பால் கொடுக்கலாம்:—

| பிறந்தபின் | பகலில் | இரவில் | மொத்தம் |
|---|---|---|---|
| முதல் நாள் | ஆறுமணிக்கு ஒரு முறை | இரண்டு தரம் | 4+2 |
| இரண்டாம் நாள் | நாலுமணிக்கு ஒருமுறை | ஷை | 5+2 |
| மூன்றும் நாள் முதல், முதல் மாதம் முடிய | இரண்டுமணிக்கு ஒருதரம் | ஷை | 9+2 |
| இரண்டாம் மாதம் | 2½ மணிக்கொருதரம் | ஒரு தரம் | 8+1 |
| மூன்று மாதம் முதல் ஐந்து மாதவரையில் | 3-மணிக்கொருதரம் | ஷை | 7+1 |
| ஆறுமாதமுதல் | 4 மணிக்கொருதரம் | வேண்டாம் | 5 |

இந்த வரையறையில் பகல் என்பது காலை 5 மணி முதல் இரவு 10மணி வரையிலுள்ள காலமாம். ராத்திரியில் கடைசியாகப் பால் கொடுத்தபின், மற்றும் நாளில் கொடுப்பதற்கு இடையேயுள்ள காலம் நான்கு மணிக்குக் குறைந்தாக விருக்கவேண்டும்.

எவ்வளவு காலம் தாய்ப்பால் குடிக்கலாம்:—பிறந்தது முதல், ஒன்பது மாதங்கள் வரையில் இடைவிடாமல் குடிக்கலாம். அப்பால், தாய்க்குச் சரீர திடனும், ஆரோக்கியமும் இருந்து, பால் வற்றாவிட்டால் இன்னும் மூன்று மாதங்கள் வரையில் குடிக்கலாம். 12 மாதத்துக்கு மேல் தாய்ப்பால் குடிக்கவே கூடாது. குடித்தால், தலைவலி, சோகை, மந்தம் முதலியன நேரக்கூடும். பத்தாவது மாதத்திலிருந்தே பால் குடிப்பதைக் கொஞ்சம் கொஞ்சமாக விடச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால், குழந்தை பசுவின் பாலைக்குடித்து வளருவதற்குச் சவுகரிய முண்டாகும். குழந்தைக்கு இரண்டொரு பல் முளைக்கும் வரையிலும் வேறெந்த ஆகாரத்தையும் கொடுக்கவேகூடாது.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### தமயந்தி: (2) கனவு

[க
உள்ளம்போய் நாண்போய் உரைபோய் வரிநெடுங்
வெள்ளம்போய்வேகின்ற மென் தளிர்போல்—பிள்
புள்ளரிக்கு நாடன் திருமடந்தை பூவாளி (ளைமீன்
உள்ளரிக்கச் சோர்ந்தாள் உயிர்.

ஒருவர்மேல் ஆசை உண்டாய்விட்டால் அது தனக்குந் தெரியாமல் விருத்தியாவது ஸ்வபாவமாகும். அதிலும் ஆசை பதியும் இடம் மனோஹரமாயும் இன்பத்தை யுண்டாக்கக் கூடியதாயுமிருந்தால் அது மேன் மேலும் அதிகமாக விருத்தியாகா தெப்படி இருக்கமுடியும்? சிறுநாள் முதலே, நளனது பெருமை முதலியவைகளைப் பற்றிக் கேட்டு அவனிடம் அன்புகொண்டிருந்தாள்; அவளது ஆசைக்கனலை அன்னங்கள் வந்து விசிறி, ஜ்வலிக்கும்படியும் செய்து விட்டன; அவள் என்ன செய்வாள்? அன்னமுரைத்த நாள்முதல், அவள் மனம் நளன் என்னும் விக்ரஹத்திற்கே ஸமர்ப்பிக்கப்பட்டது; தன்னைப்பற்றிய நினைப்பின்றி அவள் விளங்கினாள்; அன்னமிறங்காமலிருந்தாள். நளனை நேராகக்கண்டிராவிட்டாலும் அவளது ஆசைநோய் வேகமாக அதிகமாய்க் கொண்டே இருந்தது. அவள் மேனி மெலிந்தது; உடம்பிளைத்தது; கண்கள் ஆழ்ந்தன; கைவளைகள் நெகிழ்ந்தன; முகத்தில் சிந்தனை மேலிட்டது பித்தங்கொண்டவள்போல அவள் முகத்தில் கவலைதோன்றியது. அவளது செயல்கள், வரவர மாறுபாடடைந்தன. சித்த ஸ்வாதீனமில்லையோ என்று ஸந்தேகிக்கும்படியாக அவள் நடந்தாள். படுக்கையில் படுக்காள், அவள் நித்திரையுமறியாள். கண்ணீர் அருவியோடி கண்ணிலிட்ட மையை முகமுழுதும் பரப்ப அவள் அழுவள்; நெடுமூச்சுவிடுவள். அழகிய பூவும், விசித்ரப் பொருட்களும், அவள்முன் அவள் தோழிகள் கொண்டுவந்தாலும் அவற்றைக் கண்ணெடுத்தும் பாராள்; நளனென்னும் நாமத்தையே ஜபித்து அவனது மனோவிக்ரஹத்தி லழுந்தித் தனது இளைப்பிலும் தனது அழகு ஒரு அழகுபெறவருந்தி விளங்கினாள்.

தமயந்தியின் தோழிகள் அவளது நிலையைத் தெரிந்துகொண்டு பீமராஜனுக்குத் தெரிவிப்பதே தமது கடமையென நிச்சயித்து, அவனுக்குரைத்தார். அவனும் தனது மகளது துயரத்தைப் போக்குவதெப்படி யென்று சிந்தைகொண்டான். வயதுநிறைந்து, உடம்பு திரண்டு, மேனி பளபளத்து விளங்கும் தனது பெண்ணின் காம உருவைக்கண்ட அந்த ராஜன், தமயந்தியின் உண்மை நிலையை ஒருவாறு ஊகித்தான்; அவளுக்கினி மணஞ் செய்வதே கடனென ஆலோசித்தான். பின் தனது பெரியோருடன் யோசித்துத் தமயந்திக்கு ஸ்வயம்வரம் ஏற்படுத்துவதாக நிச்சயித்து, ஐம்பத்தாறு அரசர்களுக்கும் "என் பெண்ணுக்கு ஸ்யம்வரம்; எல்லாமன்னரும், வீரரும் வந்து சேரவேண்டும்" என்று ஓலை விடுத்துத் தூதர்களை அனுப்பினான்.

இவ்விஷயம் தமயந்தி அறிந்தாள். அப்பொழுதும் அவள் கனவுநிலை ஒழியவில்லை. ஆயினுமவள் மனமுழுதும், நளனிடமே குடிகொண்டிருந்தது. சந்திரனும் தாமரையும் அவளுக்குச் சூரியனு முள்ளு மாகப்பட்டன. அவளது தோழிகள் செய்யும் சைத்யோபசாரம் எவையும் அவள் ஏற்கவில்லை. தனியாக இருக்க அவள் விரும்பினாள். ஆசைநோய் கொண்டவர், தம் ஆசைக்கேற்ற லக்ஷியமாகிய காதலர், குரூப அவதாரமானாலும், அவரை மன்மத விக்ரஹமாகப் போற்றுவது ஸஹஜம். அதிலும் தம் ஆசைக்குகந்த காதலர் நல்ல குணமும் அழகும் வீரமும் பொருந்தியிருந்தால் அவ்வாசை தலைக்கேறுவதும் அஸாத்தியமா? அதைத் தூண்டுவதற்கும் இடையே ஏற்படக்கூடிய தூதர்கள் ஏற்பட்டுவிட்டால் அவ்வாசை வரம்பு கடந்து விளங்குமென்பது நிச்சயம். இவ்வுண்மை தெரிந்தால் தமயந்தியின் மெய்மறந்த ஸ்வபாவம் ஓர் அதிசயமாகாது. இம்மயக்கத்தால் தமயந்தி தனக்கு நளன் என்னும் திகட்டாவமுதம் கிடைத்துவிட்டதென்றே நிச்சயித்துவிட்டாள்.

சகுந்தலை
ஆப்டோன் படங்களுடன் அணா 4
கடிதம் வரைந்த காதை, உள்ளங்கலந்த காதை, பெருமைபெற்ற காதை இவை அடங்கியிருப்பதுடன், காளிதாஸ மஹாகவி இயற்றிய அபிஞ்ஞான சாகுந்தலமெனும் நாடகத்தின் சுருக்கமும் கொண்டது. வேண்டுவோர் "விவேக போதினி" மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.



# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS OF THE WORLD

ஐரோப்பிய மஹாயுத்தம்

ஐரோப்பிய யுத்த ஸம்பந்தமாக நமக்கு நாளது மாதத்தில் கிடைத்திருக்கும் சங்கதிகள் திருப்தியைக் கொடுக்கின்றன. அற்ப ஜயத்தை யடைந்த பெருமையால் மனந்தடுமாறிய ஜெர்மன் சக்ரவர்த்தி, நம்மவர்கள், சண்டையை நிறுத்திவிட்டுச் சமாதானத்துக்கு வரும்பக்ஷத்தில், அதைக் கவனிப்பதாகக் கூறினாராம். என்ன தயாளகுணம்! நேசக்கக்ஷியார் இந்த வார்த்தையை முற்றிலும் புறக்கணித்தனரென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. ஜர்மனியருடைய முதுகெலும்பு ஒடிந்தால்தான் நம்மவர்கள் யுத்தத்தை நிறுத்துவார்கள்.

நிற்க, ஸப்மெரின் கொடுமையை எங்கும் தயா தாக்ஷண்யமின்றிக் காட்டுவதாக ஜர்மானியர் தெரிவித்திருக்கின்றனர். அது காரணமாக அமெரிக்காவுக்கும் ஜெர்மனிக்கும் சில தகரார்கள் ஏற்பட்டன. இருதிறத்தாருக்கும் சண்டை நேரக்கூடிய ஸ்திதியிலிருக்கிறது.

மேற்கரங்கத்தில் ஜர்மானியர் கைவசத்திலிருந்த அரண்கள் ஒவ்வொன்றாக நம்மவரால் பிடிபடுகின்றன. மெஸபொடோமியாவில் பிரிடிஷ் படைகள் ஜெயபேரிகை யடித்துக் கொண்டுபோகின்றன. இவ்விதமாகவே, இரு போர்முனையிலும் அதிருஷ்டம் இருப்பதை நோக்கும்போது, இவ்வருஷத்தில் சண்டை முடிவடையுமென விற்பன்னர்கள் சொல்வது உண்மையாகுமெனத் தோன்றுகிறது.

* * *

இந்திய ராணுவம்

போர்க்குச் சிப்பாய்கள் வேண்டியிருப்பது காரணமாக, இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர்கள் அனைவரும் சிற்சில நிபந்தனைகளுக்கும் விலக்குகளுக்கும் உட்பட்டுக் கட்டாயமாய் ராணுவத்தில் சேரவேண்டுமென்றும், இந்தியர்கள் இஷ்டமிருந்தால் சேரலாமென்றும் ஒரு சட்டம் பிறந்திருக்கிறது. இந்தியர்களுக்கு ராணுவத்தில், உயர்ந்த உத்தியோகங்களும் கொடுக்கப்படும் என்று ராஜப்பிரதிநிதியவர்கள் சொன்னதைக்கேட்டு, நம் நாடு முழுவதும் குதூகுலமடைகின்றது. படையெடுத்துப் போர்க்கோலம் பூண்டு, நமது தேச ரக்ஷணார்த்தமாகவும், சக்கரவர்த்தியவர்களுடைய கவுரவத்தையும் கண்ணியத்தையும் காப்பாற்றுவதற்காகவும் நம்மவரில் ஒவ்வொருவனும் முன்வரலாம் என்ற சுதந்திரம் கிடைத்ததற்கு எவன்தான் மனமாறச் சந்தோஷமடையமாட்டான்? இதுவரையில் நம்மைப் பிடித்திருந்த துக்கம் அகன்றது. பாரதவாஸிகள், இந்தச் சந்தர்ப்பத்தைக் கைநழுவ விடாது, ராணுவத்தில் சேர்ந்து, தமது உடல், பொருள், ஆவி என்ற மூன்றையும் ராஜ காரியத்தில் சமர்ப்பித்து, அழியாப் புகழை யடைவார்களென்பது நிச்சயம். இந்த நற்காரியத்தில் நேரக்கூடிய சுய நஷ்டங்களை அவர்கள் பொருள்படுத்தமாட்டார்களென்பது நமது திடமான கொள்கை.

* * *

ஒப்பந்தக் கூலி முறை

நமது நாட்டிலிருந்து வயிற்றுப் பிழைப்புக்காக, பிஜி, மலே தீவு முதலிய இடங்களுக்குக் கூலிக்காரர்கள் சிற்சில ஒப்பந்த முறைகளை யனுசரித்துப் போகின்றனர். அங்கு அவர்களுக்கு நேருகிற கஷ்ட நிஷ்டூரங்களைச் சகியாத ஸ்ரீமான்கள் வெகுவாகச் சிரமப்பட்டதின் பேரில், அவ்விதமான ஒப்பந்த முறையை ஒழித்துவிட வேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டு, இந்தியா மந்திரிக்கு எழுதினர். அவரிடமிருந்து கிடைத்த பதில் கடிதத்தின் ஸாராம்சம் என்னவெனில், மேற்கூறிய இடங்களுக்கு வேறு விதத்தில் கூலிக்காரர்கள் கிடைக்கிற வரையில் இப்போதைய ரீதி நடந்து தீர வேண்டியதுதான் என்பதாம். இதைக் கேட்ட நம்மவர்களுக்கு, மழைவிட்டும் தூவானம் விடவில்லையென்ற பழமொழிப்படி, துக்கம் வரக்கூடியது நியாயந்தான். மாகாணங்கள்தோறும், ஸ்திரீகளும் புமான்களும் கூட்டங்கூடி, இப்படிப்பட்ட ஒப்பந்தக் கூலி முறையை உடனேயே ஒழித்துவிடவேண்டுமென்று பேசுகின்றனர். நம்மவர்க்கு நற்காலம் பிறக்குமென்பதில் ஆக்ஷேபணையில்லை.

* * *

நமது நாட்டில், சர்க்கார் உத்தியோகங்கள் விஷயமாக என்னென்ன சீர்திருத்தங்கள் மாறுதல்கள் செய்யலாமென்று ஆலோசித்துச் சொல்லும்படி மூன்று வருஷங்களுக்கு முன்னால், இஸ்லிங்டன் பட்ட வர்த்தனர் தலைமையின்கீழ் ஒரு கமிஷன் ஏற்பட்டதை நேயர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

**ராஜாங்க உத்தியோக கமிஷன்**

அக்கமிஷன் மெம்பர்கள், எழுதியிருக்கும் ரிபோர்ட்டு இப்போது வெளியாகியிருக்கிறது. ஏதோ இரண்டொரு விஷயத்தில், இப்போதைக் காட்டிலும் இனிமேல், இந்தியர்களுக்கு உத்தியோக விஷயத்தில் சில சவுகரியங்கள் உண்டாகலாமாயினும், மொத்தத்தில் அந்த ரிபோர்ட்டு நம்மவர்களுக்கு மனத்தடுமாற்றத்தைக் கொடுக்கிறது. இந்திய ஸிவில் ஸர்விஸ் பரீக்ஷை, இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஏக காலத்தில் நடைபெற வேண்டுமென்பது இந்தியர்களின் கோரிக்கை. சம்பள விஷயத்தில் இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் வித்தியாசம் இருக்கக்கூடாது என்பது மற்றொன்று. இவையும் இவைபோன்ற பிறவும் இந்தியர்களுக்கு விரோதமாகவே தீர்மானிக்கப்பட்டுள்ளன. இந்த ரிபோர்ட்டு இந்தியர்களுக்குத் திருப்தியைக் கொடுக்கவில்லையெனவும், அதில் கண்டபடி தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவந்தால், இந்தியர்களுக்குச் சவுகரியங்கள் ஏற்படாவென்றும், அங்கங்கே கூட்டங்கள் கூடிப் பேசுகிறார்கள். ராஜப் பிரதிநிதியவர்களும், இந்தியா மந்திரியும் இவ்விஷயத்தைக் கவனித்து, ஜனங்களுக்கும் ஹிதமான காரியத்தைச் செய்யவேண்டுமென்பது நமது கோரிக்கை.

* * *

நாளது மாதத்தில், லண்டன் நகரத்தில் "கீழ்த்திசை ஆராய்ச்சிக் கலாசாலை" என்னும் நவீன கட்டடம் சக்கரவர்த்தியவர்களால் திறக்கப்பட்டது.

**கீழ்த்திசை யாராச்சிக் கலாசாலை**

இந்தியா, எகிப்து முதலிய கீழ் நாடுகளைப்பற்றிய விஷயங்கள் எல்லாவற்றையும் கற்றுத் தெரிந்துகொள்வதற்கு இங்கு சவுகரியம் ஏற்படும். அதன்மூலமாக அந்நாடுகளுக்கும், இங்கிலாந்துக்கும் உள்ள பரஸ்பர சினேகமும் அனுதாப உணர்ச்சியும் வரவர விருத்தியடையுமென்பதில் சந்தேகமேயில்லை. கீழ்த்திசை நாடுகளில், வியாபாரத்துக்காகவோ, உத்தியோகத்துக்காகவோ, தர்மப் பிரசாரத்துக்காகவோ போக உத்தேசிக்கிற ஒவ்வொரு ஆங்கிலேயருக்கும் இக்கலாசாலை பெரிதும் உபயோகமாக விருக்கும். நமது தமிழ் உள்பட சுமார் இருபது பாஷைகள் வரையில் இங்கு கற்பிக்கப்படும். கீழ்த்திசை நாகரீகத்தைக் காட்டக்கூடிய கிரந்தங்கள், சாஸ்திரங்கள் முதலியவற்றை இங்கு படிக்கலாம். இக்கலாசாலையின் உபயோகம், வரவர அதிகமாகி எல்லாருக்கும் அத்தியந்த நன்மையே பயக்குமென்பது நிச்சயம்,

* * *

சென்னை ராஜதானியில் அட்வகேட் ஜனரலாகவிருந்த கார்பெட் ஸ்ரீமான் தேக அசௌக்கிய நிமித்தம் இங்கிலாந்துக்குப் போனபோது, நமது பிரபல வக்கீல்களில் ஒருவரான ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாசய்யங்காரவர்களை அந்த ஸ்தானத்துக்கு நியமித்தனரென்பதை அபிமானிகள் மறந்திருக்கமாட்டார்கள்.

**புது அட்வகேட் ஜனரல்.**

கார்பெட் ஸ்ரீமானுக்கு அகால மிருத்யு நேரிட்டதின் காரணமாக, அய்யங்காரவர்கள் அந்தப் பதவிக்கு "காயமாகவே" நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்ற சங்கதி நமக்குச் சந்தோஷத்தைத் தருகின்றது. ஸ்ரீமான் அய்யங்காரவர்கள் உயர் குலத்துதித்தவர்; சட்ட விஷயங்களில், அபார ஞானமுடையவர். பொதுஜன வாழ்க்கை நலத்தில் மிகுந்த அனுதாபமும் அக்கரையுங் கொண்டவர். கவர்ன்மெண்டாருக்கு இவர் பரமோபகாரியாக விருப்பாரென்பதில் தடையில்லை. ஸ்ரீமான் அய்யங்காரவர்களுக்கு ஈச்வரன் அரோக திடகாத்திரத்தையும் இன்னும் உயர் பதவியையும் அளிக்கவேண்டுமென்பது நமது பிரார்த்தனை.

---

### இயற்கை அற்புதங்கள்

மழைக்கால்கள்; எரிமலைகள்; பூகம்பம்; வெந்நீர் ஊற்றுகள்; கானல் நீர், அதன் ரூபாந்தரங்கள்; வால் நக்ஷத்திரங்கள்; எரி நக்ஷத்திரங்கள்; பொறி நக்ஷத்திரங்கள்; வானவில்; நிழலும், கிரஹணங்களும்; ஹாலிவால் நக்ஷத்திரம் இவைகளைப்பற்றி படங்களுடன் எளிய நடையில் எழுதப்பெற்றது; துரைத்தனத்தார் அங்கீகரித்தது. விலை அணா 8. விவேக போதினி மானேஜருக்கெழுதிப்பெறலாம்.

# விவேக போதினி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 23 MAY 1917 MADRAS

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண் மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி IX } நள௵ மாசி௴ :: 1917-௵ மார்ச்சு௴ { பகுதி 9

## நல்லொழுக்கம்
### GOOD CONDUCT
#### பரோபகாரம்

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் இன்பமும் துன்பமும் கலந்து கலந்துதான் வரும். ஆகையால் ஒருவர்க்கொருவர் பல ஸமயங்களில் உதவவேண்டியதாகும். இவ்வாறு உதவுதல், காரணத்தோடும் பலனை உத்தேசித்தும் இருக்கலாம். இதைக்காட்டிலும் எல்லா உயிர்களிடத்தும் ஒரேவிதமாக அன்பு கொண்டு, பலனைக் கருதாது விளங்குவதே மிகச் சிறந்தது. இதற்கே பரோபகாரம் எனப் பெயர். பிறர்க்கு இன்பஞ் செய்வதே அதன் வழி. தன்னைத் திரணமாக நினைத்து, தன்னுயிரையும் கொடுத்துப் பிறரைக் காப்பது அதன் உன்னத நிலையாகும். அவ்விதம் நடந்த பெரியோர் அநேகர்; அவருள் சிபி என்னும் அரசர் ஒருவர்.

இவர் நமது இந்திய நாட்டில் மிகப்பழைய நாடாகக் கொண்டாடப்படும் கோசல நாட்டில் முற்காலத்தில் ராஜ்ய பரிபாலனஞ் செய்தவர்; தேவர்களுடைய கஷ்டங்களையெல்லாம் தொலைத்து, வீரப்பிரதாபத்துடன் விளங்கிவந்தவர். இவர் ஒரு பெரும்யாகம் செய்தார். அந்தச் சமயம் அங்கு வந்த இந்திரன் அக்னி என்னும் தேவர்கள், அவரது நல்ல குணத்தின் பெருமையைக் கண்டு, அவரைப்பரீக்ஷிக்க எண்ணங் கொண்டனர். உடனே அவரிருவரும் முறையே பருந்து புறா இவைகளின் உருவை எடுத்துக்கொண்டனர். பருந்தானது புறாவை வெகு ஆத்திரத்துடன் பற்றி உண்ண, கனவேகத்துடன் துரத்திக்கொண்டு வந்தது. அப்புறா நடுநடுங்கி யொடுங்கி, வாட்டமடைந்த வண்ணமாகச் சிபிச் சக்கரவர்த்தியின் சபையை அடைந்து "என் ஐயனே! அபயம், அபயம்! அடியேன் உன் அடைக்கலம். என்னைக் காப்பது உன் விரதம்" என்று வாய்விட்டலறி அவன் பாதத்தில் விழுந்து சரணுற்றது.

சிபிச்சக்கரவர்த்தியும் தனது கைகளால் அதைத் தடவிக்கொடுத்து, "நீ பயப்பட வேண்டாம்! உனக்குச் சிறிதும் துன்பம் வந்திடாது; இது ஸத்தியம்; வாட்டத்தை விட்டொழி" என்று இங்கித மொழிகளால் அதன் மனதைச் சமாதானப்படுத்தி, அதைத் தனது மார்புடன் அணைந்து அபயமளித்தார். இதற்குள் பருந்து இராஜஸபையை அடைந்து, 'அரசே! யான் துரத்திவந்த புறாவைச் சீக்கிரத்தில் விடும். ஒருவர் உணவை, உண்ணவிடாது தடுப்பது அரசர்க்குத் தகுமோ? நியாயமோ? தாங்கள் இவ்வாறு அடாது செய்வது தகாது!" எனக் கூறியது. அரசனும் "சரணமடைந்தவரைக் காட்டிக் கொடுப்பது தருமமா? அவ்வாறு செய்வது என்றால் ஒரு நாளும் முடியாது; நீ சொல்லிய விதம் என்னால் செய்யமுடியாது" என்று மறுத்தான்.

"என் ஐயனே! உங்களை எல்லோரும் தருமாவதாரமெனக் கொண்டாடுகின்றனர். நீங்களோ எனக்கு உணவில்லாது செய்யப் பார்க்கின்றீர். வலியார்கள் தவறு செய்தால், கேட்பார் கிடையாதுபோலும்!"

"உனது உணவைத் தடுக்க எனது விருப்பம் சிறிதும் இல்லை. உனக்கு உணவு எது கேட்டாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். இப்புறாவுக்குப் பதிலாக எதைக்கேட்பினும் கொடுக்காதிருக்கேன். மயங்காது உனக்கென்ன வேண்டுமோ கேட்பாய்!"

"எரியும் அனலில் நெய் சொரிந்தாற்போல என் பசிக்கனலைத் தாங்கள் உங்கள் மொழிகளால் வளர்க்கிறீர். 'இனித் தடைசெய்யாமல் அதைவிட்டு விட்டு, மறு வேலை பாரும்! எங்களுக்குப் புருவையுண்பது ஸகஜம்! அதைத் தடுப்பது உமது குலதர்மமா?"

"உனது பசிப்பொருளைத் தடுப்பதென் தருமமல்ல நிச்சயந்தான். அடைக்கலமடைந்தவரைக் காக்காதுவிடுவதும் அவ்விதமே தருமமாகாது. ஆகையினால் உனக்கு வேண்டிய பொருளைக் கேள். பிறர்க்குத் துன்பமுண்டாக்காமலும், உனதுயிர்க்குத் துயருண்டாக்காமலும் இருக்கும்படியான எவ்வுணவு கேட்பினும், யான் தரச் சித்தமாக இருக்கிறேன். தயவு செய்து இப்புருவை மாத்திரங் கேளாதிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்; தயவு செய்ய வேண்டும்."

"ஏன் ஐயா உமக்கு இவ்வளவு பிடிவாதம்? எங்களுக்கு மாம்ஸபக்ஷணஞ் செய்வது வழக்கமே. அது ஒரு நாளும் தவறாது. எங்களது பக்ஷி ஜாதி தர்மப்படி நான் செய்யும் வேலையைத் தடுப்பது உமக்குப் பெரும் பழியையே தரும். எனக்குப் பசியோ காதடைக்கின்றது. என் கண்கள் சுழல்கின்றன. யான் இம்மாதிரி கொஞ்ச நாழிகையிருந்தால், மரணமடைவது நிச்சயம்! அப்பொழுதென்னைக் கொலை செய்த பாவம் உம்மதேயாகும்! ஆலோசியும்—"

"நீ சொல்வதெல்லாஞ் சரிதான். ஆயினும் நான் அபயங் கொடுத்தது ஒரு நாளும் வீண் போகாது. உனக்குப் பசியானால் எதைக் கேட்பினுங் கொடுப்பேன். என் உடம்பையே சீவித் தரச்சொன்னாலும் அப்படியே செய்வேன்."

"அது எல்லாம் பச்சைப் பசும் பொய்; வெறும் புளுகு. யார் நம்புவார்கள்?"

"கோபிக்கக்கூடாது! நான் சொல்லும் விதம் நடவேனானால், என் தாயைக்கொன்ற பாபத்திற்காளாவேனாக!" என்று அரசன் கூறி, மீண்டும் யாவரும் வியக்கும்படி "அப்புருவின் இடைக்கிடையாக என் உடம்பின் சதையின் துண்டங்களை வெட்டித்தருவேன். அதை நீ உண்டு உன் பசியை மாற்றலாம். ஆகையால், தயவுசெய்து வேறு வார்த்தை சொல்லாமல், மறுக்காது ஒப்புக்கொள்ளும்" என்றான். அரசனது மொழியைக்கேட்ட ஸபையோர் "ஆ! ஆ!" என மூக்கின்மேல் வியப்புடன் விரலை வைத்துப் பிரமித்துக் கண்கொட்டாது விழித்துக்கிடந்தனர்.

அரசன் மொழிக்கு அப்புருந்து ஒருவாறு இணங்கியது. உடனே அவன் ஓர் துலை (தராசு) யைத் கொண்டுவரும்படி செய்து ஒரு தட்டில் அப்புருவையும், மறு தட்டில் அதற்கீடாகத் தனது சரீரத்திலிருந்து சதையையும் அறுத்து வைத்தான். அத்துண்டம் மிகப்பெரியதா யிருப்பினும், புரு இருந்த தட்டே கனத்துடன் தாழ்ந்து நின்றது. அரசன், மேலும் தன் சதையை அறுத்து அறுத்து எதிர்த்தட்டில் வைத்தான்; அப்பொழுதும் இரண்டு தட்டுக்களும் ஸமமாக வில்லை. மீண்டும் மீண்டும் அவ்வாறே செய்தான். புருவிருந்த தட்டு உயரவேயில்லை. கடைசியாக அரசன் தனது உடல் முழுதுமுள்ள சதையைத் தன்னால் முடிந்தமட்டும் எல்லாம் கொய்து வைத்தான்; அப்பொழுதும் அத்தட்டுக்கள் ஸமமடையவில்லை. இதைக்கண்ட அரசன் அப்புருவிற்குத் தன் சரீர முழுதையும் உணவாக்க விரும்பி அத்தட்டில் தானே ஏறி உட்கார்ந்தான்: அப்பொழுது தட்டுக்களிரண்டும் ஒரே ஸமமாக நின்றன.

இதைக்கண்ட மனிதர் தேவர் யாவரும் ஆச்சரியமடைந்தனர்; அரசனைக்கொண்டாடினர். பட்சிகளாயிருந்த தேவரிருவரும் தமது நிச்சயமான உருவுடன் தோன்றிச் சிபிச் சக்கரவர்த்தியின் பெருமையை நயந்து பல வரங்களையுங் கொடுத்து, ஆசீர்வதித்துச் சென்றனர். அவனது பிணிபட்ட உடம்பும் "சட்டியிலே பாதியும், சட்டுவத்திலே பாதியும், இட்ட கலத்தில் பாதியுமாக" இருந்த சிறுத்தொண்டன் குழந்தைபோல அவரது அருள் வெள்ளத்திற்பட்டு மேனி பொலிந்து முன்னினுஞ் சிறந்து விளங்கியது.

"பரோபகாரார்த்தம் இதம் சரீரம்," என்ற வாக்கிற்கிணங்கச் சிபிச் சக்கிரவர்த்தியைப் போல நடப்பதல்லவா பெருமை?

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு" —திருக்குறள்.

—மஹாபாரதம், ஆரண்யபர்வம்.



விவேக போதினி

தொகுதி. 9] நளஹூ மாசிமீ [பகுதி, 9

## வர்ணாச்ரம ஆக்ஷேப ஸமாதானம்

## VARNASRAMA OBJECTIONS ANSWERED

(9) 'முன்னீர் கூறியதிலிருந்து, ப்ராஹ்மணப் பிறவிவாய்ந்தவர்களைவிட மற்றவர்களுக்கு உண்மையான உபதேசஞ்செய்யும் ஆற்றலும், பெறும் ஆற்றலும் இல்லையென்று வெளியாகிறது. இப்படியிருக்க, எல்லாப் புராணங்களையும், இடையிடையே வேதவாக்கியங்களையும் எடுத்துரைப்பதற்கே வ்யாஸருடைய சிஷ்யராக அமைந்துள்ள ஸூதபுராணிகர் சூத்ரரோ, அல்லது ஸாரதி ஜாதியாரோ என்றல்லவா தோற்றுகிறது? இவர் மஹா ப்ராஹ்மணர்களான நைமிசாரண்ய ருஷிகளுக்கு எப்படி உபதேசம் செய்யலாம். மேலும், இவருடைய தாழ்ந்த பிறவியைக் கருதியே, இவர் சற்று அனாதரவாகவிருந்த ஸமயத்தில் பலராமர் இவரைக் கொன்றுவிட்டதாகக்கூடக் கதை இருக்கிறதே பாகவதத்தில். இவர் விஷயத்திற்கும், மூற்கூறிய வர்ணாச்ரமதர்ம உபதேச ஒழுங்கிற்கும் பொருத்தம் கூறுவது எப்படி?' என்ற ஆக்ஷேபணை இங்கு ஏற்படலாம்.

(i) ஸூதர் ஸாதாரண சூத்ரரும் அல்ல, ஸாரதி ஜாதியரும் அல்ல. இவருக்கு லோமஹர்ஷணர் என்ற ஒரு மறுபெயரும் உண்டு. வ்யாஸர் ஒருக்கால் ஒரு சூத்ரஸ்திரீயைக்கண்டபொழுது தம்முள் அப்பொழுது தங்கியிருந்த ஒரு புண்ய ஜீவனை லோகாநுக்ரஹத்திற்காக வெளிவிட எண்ணமுண்டாக, அதனால் அவருக்கு மயிர் சிலிர்த்தது. இதன்வழி அந்தச் சூத்ரஸ்திரீ, ஸூதரைப் பெற்றாள். ஸூதர், வ்யாஸரது ப்ரஹ்மசரிய ப்ரதிஷ்டைச் சிறப்பால் உண்டானதால், தாயின் ஜாதியைக் கொள்ளாது, தகப்பன் ஏற்றத்தையே கொண்டு ப்ராஹ்மணரேயானார். ஆகவே, இவர் உபதேசிப்பதில் தடை ஒன்றுமில்லை. (ii) பலராமர் ஸூதரைக்கொன்ற அவஸரத்தில் அவரது கோபாவேசமும், ஸூதர் அப்பொழுது சற்று மரியாதைக் குறைவாக இருந்ததுமே காரணம் (iii) பலராமர், ஸூதரைத் தாழ்ந்த ஜாதியில் பிறந்தவரென்று கூறியது அவர்செய்த அவமரியாதைக்கு ஒருகாரணம்போலக் கூறியதே ஒழிய வேறல்ல. (iv) மேலும், பலராமருக்கு கோபத்தில் ஸூதரைக் கொன்றதால் ப்ரஹ்மஹத்திதோஷம் வந்துவிட்டதாகவும் அதைத்தீர்த்துக்கொள்ள ஒரு வருஷம் அவர் தீர்த்தயாத்திரை செய்ததாகவும் பாகவதத்திலேயே காணப்படுகிறது. இவைகளால், ஸூதர் ப்ராஹ்மணர் என்பதற்கு என்ன தடை? இவர் ப்ராஹ்மணர்களுக்கு ஏன் உபதேசிக்கக்கூடாது?

(10) 'சங்கராசாரியஸ்வாமிகள் பறைய உருவாக வந்த கடவுளை, 'வழியைவிட்டு விலகு' என்றபொழுது, அவர்கேட்ட நுட்பமான கேள்விகளில் ஈடுபட்டு, மனீஷாபஞ்சகம் பாடியதில் 'அருமையாம் அந்தணன் நீசன்தானகிலும், அகில ஆசானென என் மனோநிச்சயம்,' 'அவன் பரப்ரஹ்ம நிச்சய உரமுடையானாகில்' என்றல்லவா ஒவ்வொரு ச்லோகத்திலும் முத்திரை வைத்துள்ளார்? ஆதலால், பிறவி வர்ணத்தை ஒதுக்கி, இந்த ச்லோகங்கள் குணவர்ணத்தை யல்லவா உறுதிப்படுத்துகின்றன?' என்பர் வேறு சிலர்.

இந்த விஷயத்தை ஆழ்ந்துபார்க்காத வரையில் இது பிறவிவர்ணத்திற்குப் பெருந்தடையாகவேதான் காணப்படும். (1) பிறவி வர்ணம் வெறும் கட்டுப்பாடு, அது ஞானிகளுக்கில்லை என்பவை உண்மையாயின், சங்கராசாரியாள் பறையனைக் கண்டதும் கனிவுடன் அணுகி, நன்மொழிகளாவது கூறிவிட்டிருத்தல் வேண்டும், அல்லது அவன் நெருங்கி வருவதைக் கவனியாமலாவது போய்விட்டிருத்தல் வேண்டும், அல்லது, இதன் முடிவிலாவது, பறையனை நெருங்கி ஆசாரியாள் பழகியதாகவாவது கதை ஏற்பட்டிருக்க வேண்டும். இப்படி இல்லாது, ஆசார்யாள் பறையனைக் கண்டதும், முதலில் 'விலகு' என்றதும், பின்னர் முடி

வில் அவனே கடவுளாகக் காணப்பட்டதும், பிறவி வர்ணத்தை ஒதுக்காம லிருப்பதோடுங் கூட வற்புறுத்தவும் செய்கின்றது (2) கடவுட்பறையன் ஆசாரியாளை எதிர்த்து வாதாடியதுபோல வாதாடும் எல்லா வர்ணத்தைச் சேர்ந்த எல்லோரையும் குருவென மதித்துவிடலாம் என்பதுதான் ஆசார்யாள் கருத்து என்றுகூறுவது அறியாமையல்லவா? (3) பின்னர் ஆசார்யாள் கருத்துத்தான் என்ன என்பது ஆய்ந்தோய்ந்து பாராது வெளிப்படாது என்பதுதான் உண்மை. எப்படிப்பட்டவனும் தாழ்ந்த ஜாதியாரிடம் பிறவி ஒழுங்குப்படி நடக்கவேண்டும். ஆனால் சிற்சில தருணங்களில் ப்ராஹ்மணர்களோ கடவுள் முதலிய தேவர்களோ ஒரு கார்யார்த்தமாகத்தாழ்ந்தவர் கோலத்துடன் நம்மை நோக்கி வரலாம். அப்பொழுது அவர்கள் கோலத்திற்கேற்ற தர்மத்தைத்தான் முதலில் கடைப்பிடிக்க வேண்டும். இதுபற்றியேதான், பறையனைக் கண்டதும் முதலில் 'விலகு' என்றார்கள் ஆசார்யாள். பின்னர் நடந்தேறுபவைகளால், வந்துள்ளவர் தோற்றமாத்திரத்தில் தாழ்ந்தவர், உண்மையில் அப்படி அல்லர் என்ற உணர்வு ஏற்படுமாயின், அவர்களைச் சிறந்த குருக்களாக மதிக்கலாம். ஆதலால் மேல்வர்ணத்திலுள்ள பெரியோர்கள் ப்ராஹ்மண அல்லது பறைய வேஷத்தில் வரினும், அவர்கள் உலகிற்கெல்லாம் தடையின்றிக் குருவேயாவர் என்பதுதான் ஆசார்யாள் கருத்து (4) பிறவியில், ப்ராஹ்மணவர்ணம் ஒழிந்த மற்றவர்களிடையில் பொதுவாக ப்ரஹ்ம ஞானமே இராது. அப்படி விதுரர் வியாதர் முதலியவர்களிடமிருந்ததுபோல, சில சிறப்பானவர்களிடம் காணப்படின் அவர்கள் குருக்களாக உபதேசம் பெறும் விஷயத்தில் மதிக்கத்தக்கவர்கள் அல்லர்; நேரே ஞானநிஷ்டையில் அப்பிறவியில் பழகவும் தக்கவர்களல்லர்; எல்லோராலும் மரியாதையாக நடத்தத் தக்கவர்கள் மாத்திரந்தான்: குருவழிபாடு யாராவது செய்ய முயன்றாலும் பெரியோர் சிலர், இவர் வர்ண நிலை உணராது ஞானோபதேசம் செய்யவந்தாலும், இந்தச் சாஸ்திரப் பிறவி வர்ணநுட்பம் உணர்ந்து அவர்கள் ஏற்கவே மாட்டார்கள். அப்படி யாராவது தகுந்தவர்போலக் காணப்படும் தாழ்ந்த வர்ணத்தார், யாரிடமிருந்தாவது வழிபாடு உபதேசம் இவைகளை ஏற்பார்களாகில், அவர்களுக்கு வைதிக உணர்வு இல்லவே இல்லை என்றும் கூறிவிடலாம். இவ்வாறில்லாது, மேலான ப்ரஹ்மஞானிகள் தமது மேல் வர்ண நிலையை மறைத்து வந்து, அவர்கள் தன்மை ஏதாவது நுட்பக்குறிகளால் உணரப்படின், அவர் வேஷம் எப்படியிருப்பினும், அவர் உண்மை நிலைப்படி குருவாக மதிக்கத் தக்கவரே. (5) ஆகவே ஆசார்யாள் கூறியதிலிருந்து, ப்ரஹ்மஞானம் எவ்வர்ணத்திலும் பொதுவாகஇருக்கக்கூடியது; அப்படி உடையவர்களை யெல்லாம் குருக்களாக மதிக்கலாம்; எதிர்த்து வாதம் செய்யும் தாழ்ந்த வர்ணத்தான் உயர்ந்தவன்; ஆதலால் வர்ணம், பிறவியைப் பற்றியதல்ல குணத்தைப் பற்றியதே; என்பவைகளான அரும்பெரும் பொருள்கள் ஏற்பட இடமேயில்லை. (6) ஆசார்யாள் விஷயத்தில் அவர் மனோநிலை தர்மம் பிரஹ்மம் (கர்மா, ஞானம்) இவைகளில் எப்படியுள்ளது என்பதை உலகிற்கு வெளிப்படுத்தப் பரமசிவம் பறையன் உருவுடன் வந்தார். முதலில் விலகு என்றதனால் ஆசார்யாள் கர்ம தர்மப்பிடிப்பும், பின்னர் வந்த பறையன் நுட்பம் கண்டு அவனைக் குருவாக மதித்ததால் அவரது ப்ரஹ்ம ஞான நிலையும் நன்கு வெளிப்படப் பறையன் கடவுளாக நின்று ஆசார்யாள் நிலை உலகில் நிலைபெற்றும் அத்வைதிகளிடம் நிற்க சந்திர மௌலீச்வர விக்ரஹத்தை அவர் பூஜைக்காக கொடுத்தருளி மறைந்தார். இந்த விஷயங்களில் வைதிகப் பிறவி வர்ண விரோதம் என்ன இருக்கிறது ? (7) இம்மாதிரி பிறவி வர்ண ஒழுங்குக்கு முரணாக விருப்பவை போலக் காணப்படும், ஸோமயாஜீமார நாயனார் சரித்திரம்போல உள்ளவைகளை இங்குக் காட்டியவாறு பொருள்படுத்திக் கொள்ளல் வேண்டும். வேதத்திற்கு முரணாக இருக்குமா புராணங்கள்?

(II) 'சங்கராசாரியர் தாம் எழுதிய விவேக சூடாமணியில் 3-ம் ச்லோகத்தில்:—

பேசிய அடைவையாவும் பெற்றிட வொணாததேனும்; ஈசன் நல் அருளினுலே யிசைவதாயருமையான; மாசிலா மநுஷத் தன்மை, மன்னிய முமுட்சுத்தன்மை; தேசிக ராஜன் ஸேவைத் திறமையின் மூன்றும்போதும்

என்று கூறியுள்ளார்.



'இதில் ப்ராஹ்மண வர்ணச் சிறப்பு ஒன்றையும் காணோமே. ஞானி எவ்வர்ணத்திலும் பொதுவாக இருக்க இடம் உண்டு என்றல்லவா காட்டி இந்த ச்லோகம் பிறவி வர்ணத்தை வேரறுக்கிறது. மானிடப் பிறவி, மோக்ஷ இச்சை, ஸத்குருலாபம் இவைதாம் போதும் என்றதனால் பிறவர்ண ஆற்றலுக்கு இடமே இல்லை' என்பர் சிலர்.

இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ள மொழிபெயர்ப்பு மிகுந்த பிழைகளுடையது. ஆதலால் முதலில் இவ்விஷயத்தை நாடிப் பின்னர் ஆசார்யாள் கருத்தைப் பற்றி ஆராய்வோம். மூலச்லோகம் பின்வருமாறு:—

துர்லபம் த்ரயமேவைதத் தேவாநுக்ரஹஹேதுகம்
மனுஷ்யத்வம், முமுக்ஷுத்வம், மஹா புருஷ
[ஸமாச்ரயம்

துர்லபம் என்ற சொல்லுக்கு பொருள் மிக முயன்று பெறக்கூடியது என்பதே. மூன்றும் போதும், முன் கூறியவைகள் யாவும், அடைய முடியாதவை என்று பொருள்படுத்த ச்லோகத்தில் ஆதாரமே இல்லை. இப்பெருங் குற்றங்கள் முன் காட்டிய செய்யுள் மொழிபெயர்ப்பில் அமைந்து விட்டபடியால், சங்கராசார்யாள் வாக்கு, வேத விரோதமாக உள்ளது என்ற கொடிய எண்ணத்தை அதுஉண்டாக்குகிறது. உண்மைப் பொருள் பின் வருமாறு.—

முன்னர் கூறியவைகளுள் கடவுள் கருணையாலேயே அமைய வேண்டியவை மூன்றும் மிகுந்த முயற்சியால் அமைய வேண்டியவை: அவையாவன:—மானிடப் பிறவி, மோக்ஷ ஆசை, பெரியோர் இணக்கம் ஆகிய இவைகளே.

ஆகவே, முற்கூறியவைகளை முன்னர் எடுத்துப் பார்த்து அவைகளுள் இங்குக் கூறப்பட்டவை மூன்றும் எங்கு எப்படி அமைந்துள்ளன என்பதை முதலில் உணரவேண்டும். அவைகள் பின்வருவன:—

1. பிராணிகள் பிறவி. 2. மானிடப் பிறவி. 3. ஆண் பிறவி. 4. ப்ராஹ்மணப் பிறவி. 5. கர்மானுஷ்டானப் பற்றுள்ள ப்ராஹ்மணப் பிறவி. 6 வேதப்பொருள் உணர்ந்து நடக்கும் ப்ராஹ்மணப் பிறவி. 7. ஆத்மானாத்மவிவேகப்ராஹ்மணப்பிறவி. 8. அனுபவ ப்ராஹ்மணப் பிறவி. 9. பரம் பொருளில் நிலைத்துவிடும் ப்ராஹ்மணப் பிறவி

இங்கெடுத்துக் காட்டிய 3-ம் ச்லோகத்தில் குறிக்கப்பட்டவைகள் தடித்த எழுத்தில் முன் அட்டவணையில் அமைக்கப்பட்டுள்ளன. ஆகவே, 3-ம் ச்லோகம் கூறுவது பின்வருவதே. 'முன் ச்லோகத்தில் முக்திக்குப் படியாக ஒன்பது பிறவி நிலைகள் காட்டப்பட்டுள்ளன. ஸரியான மனுஷ்யத்வம்வர, பல மானிடப் பிறவிகள் பல ஜாதியில் ஆகவேண்டும். முமுக்ஷுத்வமாகிய ஆத்மானாத்ம விவேகப் பிறவி ஸரிவர ஏற்பட, பல பிறவிகள் வேண்டும் அந்நிலையிலேயே. அப்படியே அனுபவம் உரைக்க வேண்டிய, பெரியோர் இணக்கம் ஏற்பட்டுள்ள பல பிறவிகள் வேண்டும் இவைகளுக்கு அடுத்தபடி காட்டியுள்ள நிலைகளை அடைய' என்பதுதான் இம்மூன்றாம் ச்லோகக் கருத்து. அதாவது, 'இங்குக் காட்டப்பட்ட ஒன்பது நிலைகளை மோக்ஷத்திற்குப் படிக்கட்டுக்களாகக்கொண்டால், முதல் படியில் தடையின்றி அடுத்தடுத்து ஏறி, மானிடப் பிறவிக்கு வரலாம். மானிடப் பிறவி வந்ததும், அதனுள் பல் நிலைகள் உண்டு. அதைப் பெரிய அகலப் படியாகக் கொள்ளலாம். அதைத் தாண்டி, உடனே எல்லோராலும் ப்ராஹ்மணப் பிறவிக்கு வரவே முடியாது. எப்படி அகலப்படியில், பல அடிகள் வைத்தே அடுத்த படியில் ஏறவேண்டுமோ, அப்படியே மானிடப் பிறவி பல ஏற்பட்டதன்பேரில்தான் ப்ராஹ்மணப் பிறவி வரும். இதன் விரிவை மஹாபாரதம் அனுசாஸன பர்வம், 3-4-5 அத்யாயங்களில் அடங்கியுள்ள மதங்கன் கதையில் காணலாம். இப்படியே முன் அட்டவணையில் காட்டியுள்ள 7-8-ம் படிகளும்' என்பதைக் குறிக்க வந்துள்ளது 3-ம் ச்லோகம். இம்மூன்றனுள் முதற்கூறிய மானிடத் தன்மை எல்லோருக்கும் பொது, பின்னர் கூறிய முமுக்ஷுத் தன்மை, பெரியோரிணக்கம் இரண்டும் ப்ராஹ்மணப் பிறவிக்கே சிறப்பானவை. ஆகவே, ப்ராஹ்மணப் பிறவி ஒழிந்த மற்றையவர்கள் நேரிட ப்ரஹ்ம வித்தைக்கு முயலுவதாகிய ஸத்குரு உபதேசாதிகளில் முனையவேகூடாது. ஆனால் பூர்வஜன்ம வாஸனையாக முமுக்ஷுத்வமும், ப்ரஹ்ம ஞானமும் இருக்கலாம். அவைகளைக்கொண்டு, அவர்கள் குருவாகவாவது நேரே ப்ரஹ்ம நிஷ்டை பழகவாவது அந்தப் பிறவியில் கூடாது. அதே பிறவியில்

தம் தர்மத்தைத் தவருது,'நமக்கு ப்ரஹ்மவித்தையில் நேரே முனையும் பிறவிக்கு இதுவே வழி' என்று அனுஷ்டித்து வேறுவித உலகப் பற்று, மேல் ஜாதிவிஷய வெறுப்பு இரண்டிற்கும் இடங்கொடாதிருந்தால் அடுத்த ஜன்மத்திலேயே மறு உலகாகியப்ரஹ்மலோகத்திலோ அல்லது இங்கேயோ ப்ராஹ்மணப்பிறவி ஏற்பட்டு அதிலேயேமுக்தி அவர்களுக்கு வரலாம் என்பதுதான் இந்த மூன்ரும் ச்லோகத்தில் அடங்கியுள்ள நுட்பப் பொருள். முன்னர் எடுத்துக்காட்டிய செய்யுள் மொழி பெயர்ப்பு இவ்வளவு குற்றமுடையதென்றும், இப்படி எல்லோரையும் தீயவழி நடக்கத் தூண்டும் என்றும் இதனுல்நன்குவிளங்கியிருக்கும்.ஆதலால் சங்கராசார்யாள் கூறியுள்ள விவேக சூடாமணி மூன்ரும் ச்லோகம் ப்ராஹ்மணப் பிறவிதான் முக்திக்கு நேரிட வைதிக வழியில் முயலும் ஆற்றலையுடைய பிறவி என்பதை நன்ருகக் காரணம் காட்டி வற்புறுத்துகிறது.

(12) 'பீஷ்மாசாரியர்,சாந்திபர்வத்தில்(அத். 188) ச்ருஷ்டிக்ரமம் கூறிவருங் காலத்தில், ஓரிடத்தில் 'எல்லோரும் முதலில் ப்ராஹ்மணர்களாகவே ஏற்பட்டனர். பின்னர், வரவர, ஜாதிபேதம் ஏற்பட்டது தீயநடத்தையால்' என்றே வெளிப்படையாகக் கூறுகிருரே. இதற்கிசையவேபல இடங்களிலும் சாஸ்திரங்களில் காணப்படுகிறதே' என்று ஆக்ஷேபிப்பர் வேறு சிலர்.

இதனுல், பிறவி வர்ணமாகிய வைதிக ஒழுங்கிற்கு யாதொரு பாதகமும் இல்லை. இங்குப் பீஷ்மரால் கூறப்பட்டது இவ்வுலகம் நீங்கலான மறு உலகமும், அவைகளிலுள்ள ஆதிகாரிக தேவதாதிகளும் தோன்றுங்கால், ஏற்படும் ஸ்ருஷ்டி. (19.ம் ச்லோகம் பார்க்க) இவர்கள் எல்லோரும் ப்ராஹ்மணர்களே. இவ்வுலக ச்ருஷ்டியில் பீஷ்மரே நான்கு வர்ணத்தைக் கூருமல் விடவில்லை. மேலும் வேத சாஸ்திரங்களில் சில இடங்களில் மறு உலகத்தவருக்கும் வர்ணபேதங்களுள்ளதுபோலக் கூறப்பட்டிருக்கலாம்: ஆனுல் அவர்களோடு அவ்வுலக வஸ்துக்களும் சேர்த்துக் கூறப்பட்டிருப்பதுகொண்டு, அது முக்யப் பொருளில் அல்லதுகௌணப் பொருளில்தான் அவ்வாறு உருவகப்படுத்தியுள்ளதே ஒழிய உண்மை அப்படியல்லவென்பதை உணர்ந்து தெளியவேண்டும்.

# வான சாஸ்திரம்

## LESSONS IN ASTRONOMY

### ப்ரஹஸ்பதி அல்லது வியாழன்

அங்காரகனுக்கு வெளியிலுள்ள கிரஹம் வியாழன். இதை ப்ரஹஸ்பதி அல்லது குருவென்றும் சொல்லுவதுண்டு. ஆனுல் அங்காரகனுக்கும் ப்ரஹஸ்பதிக்கும் இடையில் அநேக மிகச்சிறிய கிரஹங்கள் இருக்கின்றன. இவைகள் வெறுங்கண்ணுக்குப் புலப்படா. இவைகளில் மிகப்பெரியது குறுக்களவில் சுமார் 70-மைல்தானிருக்கிறது. இம்மாதிரியான கிரஹங்கள் நூற்றுக்கணக்காகக் காணப்படுகின்றன. வருஷாவ்ருஷம் இம்மாதிரியான அநேக புதிய கிரஹங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

இச்சிறு கிரஹங்களுக்குப் பின்னுலிருப்பது ப்ரஹஸ்பதி. எல்லாகிருஹங்களுள் இதே பெரியது. இதைக் கிரஹங்களுக்கு ராஜன் என்றே சொல்லலாம். இது இரவில் காணப்படும்போது எல்லா நட்சத்திரங்களையும்விடப் பிரகாசமாகக் காணப்படும். ஆகையால் இதைக் கண்டறிவது சுலபம். இது பூமியைப்போல் பதினென்று மடங்குகொண்டது. அதாவது குறுக்களவில் 87,400 மைலும், சுற்றளவில் 274,350 மைலுமுள்ளது. மொத்தப் பருமனில் 1,280 மடங்கு, பூமியைக்காட்டிலும் பெரியது. அதாவது, சூர்யனுடைய அளவில் ஏறக்குறைய ஆயிரத்தில் ஒரு பாகமுள்ளது.

வியாழன் தன்னைத்தானே வெகு வேகத்துடன் சுமார் பத்துமணி நேரத்திற்கு ஒருதரம் சுற்றுகிறது. ஆகையால் இதிலுள்ளவர்களுக்கு ஒரு தினமென்பது 5-மணி நேரம் பகலும், 5-மணி நேரம் இரவுமாகும். நமது தினத்தில் பாதிகூட இல்லை. நமக்கு ஒரு மாதம் ஆகும்போது, அவர்களுக்கு 72 தினங்களாகி விடும். இது சூர்யனிடத்திலிருந்து 480,500,000 மைல் தூரத்திலிருக்கிறது. இது சூர்யனை ஒரு தரம் சுற்றிவர, சுமார் 4350 தினங்களாகின்றன. நமது வருஷங்கள்போல் சுமார் 12 வருஷங்கள் ஆகின்றன. அதாவது அவர்களின் கணக்குப்பிரகாரம் 10,455 தினங்களாகின்றன. இதுதான் அவர்களுடைய வருஷம்! சூர்யனிடத்திலிருந்து நம்மைவிட



இது $5\frac{1}{4}$ மடங்கு தூரத்திலிருக்கிறது. ஆகையால் சூர்ய உஷ்ணமும் வெளிச்சமும் நமக்கு இருப்பதில் இருபத்தேழில் ஒரு பாகம் $\frac{1}{27}$ தானிருக்கும். இப்படியானுல் அங்கு அதிகக் குளிராகவே யிருக்கும்! இக்குளிரிலிருக்கும் மனிதர்களின் நடையுடை பாவனைகள் வேருயிருக்குமல்லவா?

ப்ரஹஸ்பதியைத் தூரத்ருஷ்டிக் கண்ணுடியால் பார்க்கும்போது, இது முழு உருண்டை வடிவமாயில்லாமல், பூமியைப்போல் இருதுருவங்களிலும் கொஞ்சம் தட்டையாகக் காணப்படுகிறது. அதன்மேல் அநேக கருமையான பட்டைகள் காணப்படுகின்றன. மற்றும் சிறிய களங்கங்களும், இன்னும் பலவித அடையாளங்களும் காணப்படுகின்றன. இந்தக்களங்கங்கள் முதலியவை நகரும் வேகத்திலிருந்துதான் ப்ரஹஸ்பதிசுற்றும் வேகத்தையும் கணக்கிடுகிருர்கள். இது இவ்வளவுவேகத்துடன் தன்னைத்தானே சுற்றுவதே இதன் துருவங்களில் இது தட்டையாயிருப்பதற்குக் காரணமாகின்றது. இதில் காணப்படும் கருப்புப் பட்டைகள்தான் இதன் நிலப்பாக மென்றும், பாக்கி வெண்மையான பாகங்கள் இதை மூடிக்கொண்டிருக்கும் மேகங்களென்றும் தெரியவருகின்றன. இதில் மேகங்களே இல்லாவிட்டால் எல்லாம் கருமையாகவே தெரியவேண்டும். அல்லாமலும்,இக்கருப்புப் பட்டைகள்அடிக்கடி இடம் மாறுவனவாகவும் தெரிகின்றன. ஆகையால் வெண்மையான பாகங்களாகிய மேகங்களால் மூடப்பட்ட பாகங்கள் அடிக்கடி வடிவம் மாறுவதையும் பார்க்கிருேம். மேகங்கள் அடிக்கடி அங்குமிங்கும் அசைந்து கொண்டிருக்க, இவ்வெண்மையான பாகங்களும், கருப்புப் பட்டைகளும் இடம் மாறி உருவம் மாறுகின்றன.

இதைத் தூரத்ருஷ்டிக் கண்ணுடியால் நாம் பார்க்கும்போது இதன் ஆகாய மண்டலத்தில் காற்றடிப்பதுபோலும், அதனுல் மேகங்கள் அங்குமிங்கும் ஓடுகின்றன போலும் நமக்குக் காணப்படுகின்றன.இதன் ஆகாய மண்டலமே ஓரே தத்தளிப்பாயும், குழப்பமாயும் இருப்பதாகக் காணப்படுகிறது. இதன் ஆகாயத்தில் மிகுந்த நீராவியும் காணப்படுகிறது.

இவைகளிலிருந்து, நம்மைப்போன்ற ஜீவராசிகள் வசிக்கக்கூடிய ஸ்திதியில் இது இருப்பதாகத் தெரியவில்லை. ஆனுல் வேறுவிதமான ஜீவராசிகள் இருக்கக்கூடும்.

சூர்யனைச் சுற்றிவரும் பாதைக்கு இது பூமியைப்போல் சாய்ந்திருக்கவில்லை. ஏறக்குறைய நேர் செங்குத்தாகவே இருக்கிறது. ஆகையால் ப்ரஹஸ்பதியில் பர்வ• காலங்களும், பலவித சீதோஷ்ணஸ்திதிகளுமில்லை. எப்பொழுதும் சீதோஷ்ண ஸ்திதி ஓரே ரீதியாயிருக்கும். அதிக வெயிலென்பதே கிடையாது. இதில் பனியும் பனிக்கட்டியும் இரா.

இது தன்னைத்தானே சுற்றுவதில் இன்னெரு விசேஷம் நமக்குத் தெரிகிறது. இதன் எல்லாப் பாகங்களும் ஓரே வேகத்துடன் சுற்றவில்லை. இதன் மத்தியரேகைக்குச் (Equator) சமீபத்தில் வேகம் அதிகம்.அங்குள்ள பாகங்கள் ஒரு செகண்டுக்கு 7 மைல் வேகத்துடன் சுற்றுகின்றன. அதாவது ஒரு தரம் சுற்ற, 9 மணி 50 நிமிஷம் 29 செகண்டுகள் ஆகின்றன. இந்த மத்திய ரேகையிலிருந்து வடக்கேயும் தெற்கேயும் போகப்போக வேகம் குறைகிறது. இதுகாரணம்பற்றியே, இதன் வாயுமண்டலத்தில் அவ்வளவு தத்தளிப்பு உண்டாகிறது. இம்மாதிரியே நமது பூமியிலும் இப்பாகங்களின் வேகத்தில் வித்தியாசமுண்டு, ஆனுல் இந்த வித்தியாசம் அதிகமில்லை. ப்ரஹஸ்பதி சுற்றும் வேகம் வரவரக் குறைவதாகத் தெரிகிறது. சுமார் முப்பது வருஷங்களுக்கு முன், இதன் மத்திய பாகங்கள் ஒருதரம் சுற்றிவர 9 மணி 49 நிமிஷம் 59 செகண்டுகள் பிடித்தது. இப்பொழுது அரை நிமிஷம் கூட ஆகிறது. இம்மாதிரியே பூமியும் வேகத்தில் குறைவதாகத்தெரிகிறது. இப்படிச் சுற்றும் இந்த வஸ்துக்கள், வேகம் குறைந்து எப்பொழுது நிலைக்கு வருமோ? இவைகளின் நிலை எங்கிருக்கிறதோ?

இதற்கு ஐந்து உபகிரஹங்கள் இருக்கின்றன. அவைகளுள் நான்கே பெரியவை; ஆகையால் முக்கியமானவை. இந்நான்கும் ஓரே தினத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. ப்ரஹஸ்பதியைத் தூரதிருஷ்டிக் கண்ணுடியால் பார்க்கும்போது, இவைகள் நன்ருகக் காணப்படும். இந்த உபகிரஹங்கள், ப்ரஹஸ்பதியை வெகு சீக்கிரத்தில் சுற்றிவருகின்றன. ஆகையால் ஒரு தினத்திற்குள் இவை இடம் மாறு

(இதன் தொடர்ச்சி 316-ம் பக்கம்.)

# குழந்தைகளின் பாதுகாப்பு

## THE CARE OF INFANTS

(305-ம் பக்கத் தொடர்ச்சி)

பால் கொடுப்பதால் தாயின் தேகாரோக்கியம் குறையுமென்று நினைப்பது பிழையாகும். ஆனால், தாய்க்கு க்ஷயரோகம் முதலிய வியாதிகள் இருக்குமானால், குழந்தை தாய்ப்பால் குடிக்காமலிருக்கவேண்டும். குறைவாகத் தாய்க்குப்பால் சுரக்குமானால், குழந்தையின் தேகதிடன் குறையலாம். சற்றுநேரம்குழந்தை சுறுசுறுப்பாய் பாலைக்குடித்துவிட்டு, முலைக்காம்பை விட்டுவிட்டு அழுமானால், தாய்க்குப் பால் நல்லதாயினும்அதிகமாக இல்லையென்பது தெரியவரும். வெகு நாழிகை குடிக்குமானால், பால் அதிகமாயினும் நல்லதல்லவென்பது தெரியவரும். வயிற்றுவலி, தூக்கத்தில் அடிக்கடி விழித்துக்கொள்ளல், சிடுசிடுத்து அழுதல், அடிக்கடி மலப்பிரவர்த்தியாதல் இவையெல்லாம் பாலில் அதிகமான 'ப்ரோடின்' என்ற வஸ்து இருப்பதாகக்கொள்ளவேண்டும். குழந்தையின் தேகஸ்திதியைப் பார்த்து, பாலின் குணத்தை யறியலாம்.

குழந்தை நன்றாக விளங்குவதற்கு அடையாளங்களாவன:—தேகதிடன் அதிகமாதல்; பாலுண்டவுடன் திருப்தியடைதல்; வயிற்றுக் கோளாறுகள்இல்லாதிருத்தல்; சாதாரணமான மலப்பிரவிர்த்தி; பொதுவாகத் திருப்தி யடைதல்; நல்ல தூக்கம் இவைகளாம்.

பால்தாதி:—ஏதாவதொரு காரணத்தால், குழந்தைக்கு அதன்தாயே பால்கொடுக்கச் சக்தியற்றவளாக விருந்தால், தேகாரோக்கியமுள்ள பால்தாதி ஒருத்தியை நியமிப்பது நலம். அவளுக்கு 25-வயதுக்கு மேலும் 35-க்குள்ளும் இருக்கவேண்டும். நல்ல யோக்கியதையும், திடசரீரமும், பாலுண்டுவளரும் ஒரு சொந்தக்குழந்தையும் அவளுக்கு இருக்கவேண்டியது அவசியம். இவ்விஷயங்களில் டாக்டர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து அதன்படி நடப்பது நலம். என்றாலும், தாதிவைப்பது, பணச்செலவாக்குவதோடு, நம் நாட்டில் அதிகமாக அனுஷ்டிக்கப்படாததுமாகும்.

செயற்கைப்பால் கொடுத்தல்:—இவ்விஷயத்தில் தாய்ப்பாலுக்குப் பதிலாகவோ, அதனுடன் கூடவோ, குழந்தைக்குக் கொடுக்கப்படும் எல்லாவித ஆகாரப்பொருள்களும் அடங்கும். இப்படிப்பட்ட ஆகாரங்களில், முதலாவது, பசுவின் பாலாகும். பசுவின் பால், சாதாரணமாய் எல்லாவிடங்களிலும் சுலபமாய்க்கிடைக்கும்; புட்டிப்பாலைக்காட்டிலும் மலிவாகவும் வாங்கலாம். சென்னைபோன்ற பட்டணங்களில், சுத்தமான பசுவின்பால் கிடைப்பது துர்லபம். ஆனால் அவ்விஷயத்தைப்பற்றி நாம் இங்கே கவனிக்கவில்லை.

குழந்தைக்குக் கொடுக்கப்படும் பால், சுத்தமானதாயும், ஆரோக்யமுள்ள பசுவினிடமிருந்து கறக்கப்பட்டதாயுமிருக்கவேண்டும். கறக்குமுன்னால், பசுவின் முலைக்காம்புகளை நன்றாய்க் கழுவித் துடைக்கவேண்டும். கறக்கிறவனுடைய கைகள் சுத்தமாகவும், பால்பாத்திரங்கள் வெந்நீரில் போட்டு எடுக்கப்பட்டனவாயுமிருக்கவேண்டும். பாலை ஊற்றிவைக்கும் பாத்திரங்களுக்கு, தூசிவிழாதபடி, மூடிகள் இருக்கவேண்டும். எப்போதும், புதிதான பாலையே குழந்தைக்குக் கொடுக்கவேண்டும். கறந்தபின் 12-மணி நேரம் வைக்கப்பட்டிருக்கும் பாலை, ஒருபோதும் குழந்தைக்குக் கொடுக்கக்கூடாது. கொடுக்கு முன்னால், பாலைச் சூடவைத்துக்கொடுப்பது நல்லது.

சாதாரணமாக, பசுவின் பால் குழந்தைக்குச் சற்று தகாததாகவிருக்குமாதலால், அந்த்

---

(315-ம் பக்கத் தொடர்ச்சி)

வதையும் நாம் பார்க்கலாம். ப்ரஹஸ்பதியிலுள்ள ஜீவராசிகள் மாதரக் கணக்குகளை எப்படிக் கணக்கிடுகின்றனவோ! இவையெல்லாம் ஆச்சரியமே!

| உபகிரஹம். | ப்ரஹஸ்பதியிலிருந்துள்ள தூரம். | இதைச் சுற்ற பிடிக்கும் காலம். |
|---|---|---|
| புதிதாகக்கண்டு பிடிக்கப்பட்ட ஐந்தாவது உபகிரஹம். | 124,000 மைல் | 11-மணி. |
| முதல்உபகிரஹம் | 266,000 ,, | 1-நாள் 18-மணி. |
| இரண்டாவது,, | 422,840 ,, | 3-நாள் 13-மணி. |
| மூன்றாவது ,, | 674,560 ,, | 7-நாள் 4-மணி. |
| நான்காவது ,, | 1,186,680 ,, | 16நாள் 16-மணி. |



வேண்டியவளவு கொதிக்கும் ஜலம்விட்டு, விளாவிக் கொடுக்கவேண்டும். பிறந்த பின் ஆறுமாசம்வரையில் 4 பங்கு ஜலத்துடன் ஒரு பங்கு பால் கலந்து கொடுக்கலாம். ஏழாவது வாரம் முதல் 12-ம் வாரம்வரையில் 3 பங்கு ஜலமும் ஒரு பங்குபாலும் கலக்கவேண்டும். 13-ம் வாரமுதல் 18-ம் வாரம் வரையில், இரண்டு பங்கு ஜலமும் ஒரு பங்கு பாலும் கொடுக்கவேண்டும். அப்பால் ஒன்பது மாதம் வரை, பாலும் ஜலமும் சமமாக விருக்கலாம். ஒன்பது மாதங்களுக்குமேல், ஜலக்கலப்பில்லாத பால் குழந்தைக்கு ஒத்துக்கொள்ளும்.

ஆகாரம் கலப்பதில் கீழே விவரித்திருக்கும் கலப்புப்பொருள்கள் பொருத்தமானவையாகவிருக்கும்:—

பிறந்த முதல் மாதத்தில்

| | முதல் வாரம் | இரண்டாம் வாரம் | மூன்றாம் வாரம் | நான்காம் வாரம் |
|---|---|---|---|---|
| கொதிக்கும் பால் | 2 | 3 | 4 | 5 |
| கொதிக்கும்ஜலம் | 5 | 6 | 7 | 8 |
| ஏடு | 1 | 1 | 1 | 1 |
| சுண்ணாம்பு ஜலம் | 1 | 1 | 1 | 1 |
| சர்க்கரை | ½ | ½ | ½ | ½ |

மேலேகாட்டிய அளவு (Tea spoon) தேக்கரண்டியின் அளவாகும். மொத்த அளவு ஒரு வேளை ஆகார அளவாகும். பகலில் இரண்டு மணிக்கொரு தரமும், இரவில் இரண்டுதரமும் குழந்தைக்கு ஆகாரம் கொடுபட வேண்டும்.

முதல் மாதத்துக்கு அப்பால், ஆகாரம்

| | இரண்டாம் மாதம் | 3-ம் மாதம் முதல் 6-ம் மாதம் வரையில் | 6-ம் மாதம் முதல் 9-ம் மாதம் வரையில் |
|---|---|---|---|
| கொதிக்கும் பால் | 1 அவுன்ஸ் | 1½ முதல் 2 | 2½ முதல் 3 |
| கொதிக்கும் ஜலம் | 1 ,, | 1½ முதல் 2 | 2½ முதல் 3 |
| ஏடு | 1 தேக்கரண்டி | 2 முதல் 4 | 2 முதல் 4 |
| சுண்ணாம்பு ஜலம் | 3 ,, | 4 | 4 |
| சர்க்கரை | 1 ,, | 1 முதல் 2 | 2 |
| பகலில் எவ்வளவு தரம் | 2½ மணிக்கொரு தரமாக 8 தரம் | 3 மணிக்கொரு தரமாக 7 தரம் | 3 அல்லது 4 மணிக்கொரு தரமாக:—6-7 தரம் |
| இரவில் | 1 ,, | 1 ,, | 2 ,, |

முதலிலிருந்தே ஏடு கொடுக்கக் கூடாது. ஜலம் கலந்த பால் சரியாக ஜீரணமானால், கொஞ்சம் கொஞ்சமாக ஏடு சேர்க்கலாம். நல்ல ஏடு அகப்படா விட்டால், பசுவின் வெண்ணெயில் அரைக் கரண்டியாவது, காட் லிவர் ஆயிலில் 10 துளியாவது, ஒலிவை எண்ணெயில் (Olive Oil) 10 துளியாவது, நல்ல நெய்யாவது பதிலுக்குச் சேர்க்கலாம். பெர்துப்படச் சொல்லுமிடத்து, பசுவின் பால் எல்லாக் குழந்தைகளுக்கும் ஒத்துக் கொள்ளும்.

எச்சரிக்கை:—இப்படி, ஜலம் கலந்த பசுவின் பாலை, குழந்தைகளுக்குக் கொடுப்பதில் கீழே விவரிக்கிற விஷயங்களைக் கவனிக்க வேண்டியது அவசியம்:—

1. மலத்தில் தயிர் தெரியுமானால், பச்சைப் பால், அதிகமென்பது வெளியாகும். ஆதலால், இதைக் குறைத்துக் காலக்கிரமத்தில் அதிகமாக்க வேண்டும்.

2. புளிப்பு நாற்றமுள்ள மலம், அதிகமான சர்க்கரையும் கொழுப்புமிருப்பதைக் காட்டும். ஆதலால் சர்க்கரையைக் குறைக்கவோ நிறுத்தவோ வேண்டும்.

3. வெளுப்பாயும் கெட்ட நாற்றமுமாயுமுள்ள மலம் அதிகக் கொழுப்பையும் ஏட்டையும் தெரிவிக்கும். ஆதலால், இவைகளை 3,4 நாள்களுக்கு நிறுத்திவைத்துப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்க்கவேண்டும்.

4. ஆகாரம் உட்கொண்ட உடனே குழந்தை வாந்தி பண்ணுமானால், அது மிதமிஞ்சிய

ஆகாரத்தையோ, இறுகிய துணியையோ, குழந்தையை அதிகமாகத் தூக்கிக்கொண்டு போவதையோ, காட்டும்.

5. சாப்பிட்டபின் ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்தில், புளித்துப்போய்க் கட்டி தட்டிய பாலோ, ஜலமோ, வாந்தியாகுமானால் அது பாலில் அதிகமான கொழுப்பு இருப்பதைக் காட்டும்.

6. கொடுக்கும் ஆகாரத்தைக் கொண்டு, குழந்தை திருப்தியடையாவிட்டால், முதலில் அவ்வாகாரத்தை அதிகமாக்கி, அப்பால் அதன் சத்தை ஜாஸ்திப்படுத்த வேண்டும்.

7. அடிக்கடி ஆகாரத்தை மாற்றுவது குழந்தைக்குத் தீங்கை யுண்டுபண்ணும்.

8. குழந்தைக்கு வயிற்றுவலி யுண்டாகக் கூடியது ஸகஜம். அஜீர்ணத்தாலோ, பாலில் அதிகமான தயிர் அல்லது சத்து இருப்பதினாலோ, தாயாருடைய தேகசிரமம், மனத்துயரம், சீரல்லாத ஆகாரம் இவைகளினாலோ வயிற்றுவலி யுண்டாகலாம். அது உண்டானால், குழந்தையின் தலையைத் தூக்கி வைத்துக்கொண்டு, வெந்நீரை, ஒரு கரண்டியைக்கொண்டோ, பாட்டிலி லிருந்தோ கொடுப்பதனால், நிற்கும். உஷ்ணமான பிளானல் துணியை வயிற்றின்மேல் போடலாம். மலப்பிரவர்த்தி யாகும்படியும் செய்யலாம். அப்போது, குழந்தைக்கு வாற் கோதுமைக் கஞ்சிமட்டுந் தான் ஆகாரமாகக் கொடுக்க வேண்டும்.

ஆகாரம் கொடுக்கும் விஷயத்தில் அதிக ஜாக்கிரதை வேண்டிய தவசியம்; கிரமமும், அளவும் தவறக்கூடாது. பால் சர்க்கரை முதலிய பொருள்களைக் கையினாலும் தொடக் கூடாது. அவைகளின்மீது தூசி விழாமலும், ஈ முதலியன உட்காராமலும் மூடி வைக்க வேண்டும். பொதுவாகக் குழந்தைக்குப் பொறுக்கக்கூடிய சூட்டுடனேயே ஆகாரத்தைக் கொடுக்கலாம். ஆறிப்போன ஆகாரத்தைக் கொடாமலிருப்பது உத்தமம். ஆகாரம் கொடுப்பதற்கு, "அல்லன்பரி" (Allenbury) பாட்டிலை உபயோகிக்கலாம்; அல்லது கிண்ணத்தையும் கரண்டியையும் உபயோகிக்கலாம். பாட்டிலை உபயோகிப்பதனால், மிதமிஞ்சிய ஆகாரம் உட்செல்வதற்கு மார்க்கமில்லை. ஆகாரம் கொடுத்தவுடன், எல்லாப் பாத்திரங்களையும் நன்றாய்க் கழுவி வைக்கவேண்டும். குழந்தையின் படுக்கையும் துணிகளும் வெகு சுத்தமாக இருக்க வேண்டும். தாய்மாரும், தாதிமாரும் அவ்விதமே சுத்தமாக இருக்க வேண்டுமென்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

வாற்கோதுமைக் கஞ்சிசெய்யுமுறை:—ஒரு கரண்டி வாற்கோதுமையை, 20-அவுன்ஸ்ஜலத்தில்போட்டு, அரைமணிநேரம் பொங்கவிட்டு, வடிக்கட்டிக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு தரத்துக்கும் புதிது புதிதாகத்தான் தயார் செய்யவேண்டும். சுண்ணாம்புத் தண்ணீருக்கு: இரண்டு அவுன்ஸ் நீற்ற சுண்ணாம்பை, ஒரு காலன் வடிக்கட்டின ஜலத்தில்போட்டு, குலுக்கி, படியவைத்து, மேல் ஜலத்தை இறுத்து, பச்சைவர்ணமுள்ள சீஸாவில் எடுத்துவைத்துக்கொள்ளலாம்.

கடைகளில் விற்கப்படும் ஆகாரப்பொருள்களை ஒருபோதும் சுதாவில் உபயோகிக்கக் கூடாது. குழந்தைக்கு ஜீரணமாகாத சத்துக்கள் அவைகளில் உள்ளன. அப்படிப்பட்ட ஆகாரங்களை உண்பதினால் குழந்தைகள் புஷ்டியடைந்து வளருமென்று விளம்பரம் செய்வதெல்லாம் நம்பத்தகுந்தனவல்ல. அவ்வாகாரங்களினால் குழந்தைகளுக்குக் கணச்சூடு, கரப்பான் முதலியன உண்டாகின்றன. ஆனால், இவைகள் முற்றிலும் உபயோகமற்றனவென்று நாம் சொல்லவில்லை. திடீரென்று சிற்சில வேளைகளிலும், வைத்தியர்களுடைய சொற்படியும் உபயோகிக்கலாம். என்றாலும், அதற்கு ஓர் அளவு உண்டு. அதை மீறிப்போகக்கூடாது. அப்படிப்பட்ட ஆகாரத்தைக் கொடுக்குமுன்னர், தகுந்த வைத்தியரைக் கேட்டுக் கொடுப்பது மிகவும் நலம்

---

*The Hon'ble Mr. Justice T. V. Seshagiri Ayyar*:—The subjects dealt with are of consuming interest to the reading public. I gladly acknowledge the valuable services rendered to the cause by publications like the "Viveka Bodhini" *I have taken the Journal ever since its first number was published: and I can speak to the good work it has done.* The revival of interest in Tamil has been the work of many men who have suffered not a little pecuniary sacrifice. Mr. Kuppuswami Ayyar is among the number. He has the satisfaction of knowing that his journal has the appreciation of many thoughtful men. The present number will in a way be a record of the many activities which the "Viveka Bodhini" had encouraged during the period of its existence. I have therefore great pleasure in commending the Journal and the silent good work that is being done by the Editor to the public.



## HON'BLE DEWAN BAHADUR P. RAJAGOPALA ACHARIAR, C.I.E.

## கனம் திவான் பஹதூர் பி. ராஜகோபால ஆசாரியார் அவர்கள்

### படிப்பு

சென்னை நிர்வாஹ ஸபையின் அங்கத்தினராகக் கனம் திவான் பஹதூர் பி. இராஜகோபாலாசாரியார் நியமிக்கப்பட்டது யாவர்க்கும் ஸந்தோஷமுண்டாக்கும். இவர் 1862-ம் வருஷம் செங்கற்பட்டு ஜில்லாவில் பெருங்கீழூர் என்னும் கிராமத்தில் உயர்ந்த குலத்தில் பிறந்தவர். இவர் தந்தை டிப்டிகலெக்டர் பதவியிலிருந்தவர். ராஜகோபால ஆசாரியார்க்கு முதலிலிருந்தே நல்ல படிப்புக் கற்பிக்கப்பட்டது. சென்னை ராஜாங்க கலாசாலையிற் படித்து அவர் 1876 வருஷம் பி. ஏ. டிக்ரி பெற்றார். பிறகு 1882 வருஷம் எம்.ஏ. பரிட்சையிலும், 1884 வருஷம் பி. எல். பரிட்சையிலுந் தேறினர்.

### முதல் உத்தியோகம்

அக்காலம் இந்தியர், ஸிவில் ஸர்விஸ் பரீட்சையில் தேற இடமில்லை. ஆதலால் பொது ஜனங்கள் இந்தியர்க்கும் அதை இடந்தரச் செய்யவேண்டுமென்று செய்த இயக்கத்தால், ஸ்டாட்யூடுவரி ஸிவில் ஸர்விஸ் என்ற புதிய வகுப்பு உத்தியோகம் உண்டாக்கப்பட்டது. அதற்காக நடந்த போட்டிப் பரீட்சையில் நமதாசாரியார் முதன்மையாக வந்தும், மூன்றாவதாக வந்தவர்க்குக் கவர்ன்மெண்டாரால் ஸிவில் ஸர்விஸ் உத்தியோகம் கொடுக்கப்பட்டது. ஆனால் ஆசாரியாருக்கு டிப்டி கலெக்டர் உத்தியோகம் 1886 வருஷம் கிடைத்தது. அப்போது அவர் சேலம் ஜில்லா, நாமக்கல் தாலூக்காவில் நடந்த கலகத்தின் விஷயமாகக் காட்டிய திறனைக்கண்டு கவர்ன்மெண்டார் மெச்சி, அவரை 1888 வருஷம் அஸிஸ்டண்ட் கலெக்டராகச் செய்தனர்.

### கோச்சி திவான்

இதன் பிறகு, அவர் பல விடங்களில் உதவிக் கலெக்டராகச் சென்று, அங்கெல்லாஞ் சிறப்புடனும் நற்பெயருடனும் விளங்கினர். இவரது வேலைத்திறனைக்கேட்ட கொச்சி நாட்டரசரது வேண்டுகோளுக்கிணங்கி, 1896 வருஷம் அவரை அந்நாட்டுத் திவானாக விளங்கப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஸம்மதித்தனர். இவ்வேலையில் அவர் வெகு ஊக்கத்துடன் விளங்கி, அந்நாட்டு ராஜாங்கத்தின் திரவிய நிலைமையையும் நிர்வாக நிலைமையையும் வரவரப் படிப்படியாக ஏறச் செய்தனர்; அந்த ஸமஸ்தானத்தை எவ்விதமும் முன்னுக்கு வரும்படி செய்தனர்..

### ஐக்கிய சங்க ரேஜிஸ்ட்ரார்

1902-ம்வருஷம் அவர் மீண்டும் பிரிட்டிஷ் ஸர்விஸிற்குத் திரும்பினர். சில காலம் அவர் சேலம் ஜில்லா ஜட்ஜாக விருந்ததும், கர்நூல் ஜில்லா கலெக்டராக மாற்றப் பெற்றனர். இவ்வேலையிலிரண்டு வருஷம் வேலைபார்த்து வந்தனர். அதன் பிறகு, ஜனங்களுடைய வறுமையைக் குறைக்க எண்ணி, கவர்ன்மெண்டார் ஐக்கிய நாணயச் சங்கங்களைப் புதிதாக ஏற்படுத்தி, அவைகளை விருத்தியாக்கவேண்டிய மிக்க பொறுப்பைக் கவனிக்கும்படியாகக் கோஆபரேடிவ் சங்கங்களின்ரேஜிஸ்ட்ரார்என்னும் பதவியையும் உண்டாக்கினர். இப்பதவிக்கு இராஜகோபாலாசாரியர் நியமக்கப்பட்டனர். இந்த உத்தியோகத்தைக் காரணமாகக் கொண்டு அவர் மூன்று வருஷங்களுக்குமேற்பட தமது தாய் நாட்டின் ஏழைக்குடிகளும், பாமர ஜனங்களும், குறைந்த வருமானமுடையவரும், ஸ்வல்ப ஜீவனக்காரரும் தங்கள் தங்கள் ஸ்திதியிலிருந்து, ஷை சங்கங்களை விருத்தி பண்ணி எங்கும் பரவும்படி செய்து, அவ்வவரது வாழ்க்கையில் சிக்கனமேற்படுத்தித் தேச க்ஷேமத்திற்கிடம் தரும்படி செய்தனர். ஷை கூட்டுறவு விஷயத்தில் சர்க்கார் உதவியில்லாமலே ஜனங்கள் தீவிரமான விருத்தியடையும்படி தூண்டியதற்கு ஆசாரியாரது உத்ஸாகமே காரணமென்பது எங்கும் பிரஸித்தம்.

### திருவாங்கூர் திவான்

கோஆபரேடிவ் ரெஜிஸ்ட்ராராக ஆசாரியார் சில வருஷமிருந்ததும், நல்ல மதியூகம் வல்லவரைத் தமது ஸமஸ்தானத் திவானாக்க விருப்பங்கொண்ட கனம் திருவாங்கூர் மஹாராஜா அவர்கள், நமது ஆசாரியாரைத் தமது ஸமஸ்தான உத்தியோகத்தில் சில காலமுழைக்கும்படி அனுமதி தரவேண்டுமென்ற வேண்டுகோளுக்குச் சென்னை கவர்ன்மெண்

டார் இணங்கினர். 1907 வருஷம் ஆசாரியார் திருவாங்கூருக்குத் திவானாகச் சென்றார். இப்பதவியில் அவர் ஆறு வருஷமிருந்தனர். அப்போதவர் அடங்காத்தீரத்துடன் ராஜநிர்வாஹ தந்திரத்தைக் கைக்கொண்டாண்டு வந்தனர்: இராஜ்யத்தின் வருமானத்தை உயர்த்தப் பல முறைகளை அவர் ஏற்படுத்தினர். சிலவற்றில் அவரது சீர்திருத்தங்கள் ஜனங்களுக்கு அஸமாதான உண்டாக்கினதுண்டு; முக்கியமாக ஊட்டுப் புரைகளின் செலவைக் குறைத்ததேயாகும். ஆனால் அவர் அவ்வாறு செய்தது பொது நன்மையையும், நாட்டுச் செல்வத்தையுயர்த்தவும், உத்தேசித்துச் செய்ததேயாகும். மேலும், அதிகாரிகள் தம் இஷ்டப்படி நடப்பதைத்தடுக்கவேண்டிய முறைகளேற்படுத்தி, அவர்கள் மிக்க நெறியுடனும் பக்ஷபாதமில்லாமலும் வேலை பார்த்துவரும்படி செய்து, அந்த ஸமஸ்தானத்து ராஜாங்கத்தை நல்ல வழியில் ஏற்றம் அடையும்படியும் அவர் செய்தனர்.

### ஜுடிஷியல் கார்யதர்சி

1907-ஆம் ஆசாரியாரது கார்ய நிர்வாஹத்தை யுத்தேசித்துக் கவர்ன்மெண்டார் அவர்க்குத் திவான் பஹதூர் என்னும் பட்டமளித்தனர்; 1909ஆம் ஸி. ஐ. ஈ. என்னும் கௌரதா பட்டமும் கொடுத்தனர். இதற்குள் ஆசாரியாரது திருவாங்கூர் திவான்பதவியின் நிர்வாஹகால முடிவடைந்ததால், அவர் மீண்டும் பிரிட்டிஷ் ஸர்விஸில் கலெக்டராகவரும்படி நேர்ந்தது. ஆனால் 1913ஆம் சென்னை ராஜாங்கஆபீஸைப் புதியவிதமாகப் பிரித்ததின் நிமித்தமாக அவ்வாபீஸ் ஜுடிஷியல் பாகத்தின் காரியதர்சிப் பதவியை இந்தியர்க்குக் கொடுப்பதென்றும் நிச்சயித்திருந்தபடியால், அப்பதவிக்குக் கனம் ஆசாரியார் நியமிக்கப்பட்டனர்: இந்த ஸ்தானத்தை அவர் பெறுவதற்கு, அவரது ஸாமர்த்தியம், சாதுரியம் முதலியவற்றைக் கண்டு மிக மகிழ்ந்திருந்த நமது கவர்னர் கனம் பெண்ட்லண்ட் பிரபுவின் பேரன்பே காரணம். இப்பதவியில் ஆசாரியார் அவர்கள் அடங்கா உத்ஸாகத்துடன் வேலைசெய்ததை யாவரு மறிவர். இவ்வேலையிலிருக்கும்போது அவர் லீவு வாங்கிக்கொண்டு 1915ஆம் சீமைக்குப்போய் வரும்படி நேர்ந்தது. அவ்வாறு வரும்பொழுது இவர் வந்த கப்பல், ஜர்மானியக் கடற்கொள்ளைப் பிசாசுகளின் தீவாயிலகப்பட்டுச் சுக்கல் சுக்கலாக்கப்பட்டது. ஆயினும் ஆசாரியர், ஜீவியப்படகுகளின் மூலமாகக்காக்கப்பட்டதற்கு நாம் ஸந்தோஷிப்பதல்லாமல் கடவுளது பெருங் கருணையையும் கொண்டாடாதிருக்க முடியாது.

### இந்திய நிர்வாஹ மெம்பர்

கனம் சிவஸ்வாமிஐயர், நிர்வாஹகால ஒழுங்குப்படி தமது வேலையை விட்டு விலகியதும், ஆசாரியார் அவர்கள் இந்திய நிர்வாக மெம்பராக்கப்பட்டனரென முன்னமேயே சொல்லியிருக்கிறோம். இப்பதவியில் அவர்க்கு இருவித லாபமுண்டு. இந்தியராக இருப்பதால் பொது ஜனங்களின் கஷ்ட நிஷ்டூரங்கள்முற்றும் அவ்வவர் எண்ணும் விதமவரறிவர். மற்றும் படிப்படியாக இராஜ்ய வேலைகளில் உழைக்கும் அதிகாரிகளின் குற்றங்குறைகள், ஏற்றத்தாழ்வுகள் எல்லாமும் அவரறிவர். ஆகையால் இவ்விரண்டு அனுபவஞான கரங்களின் உதவியால், ஜனங்களது பொது நன்மைக் குழைத்து, நாட்டிற்கும் ஆள்கைக்கும் பிணைத்தபொருத்தம்போல இஸைசந்தொழுகி, தேச க்ஷேமமென்னும் பாரகனத்தைப் பொதுமன வெளியில் மேலேற்றமடையும்படி செய்ய இராஜ்ய பாரத்தார்க்குப் பெருந்துணையாக இருக்க, கடவுள் அவர்க்கு நல்வாழ்க்கையும் மனமுந் தந்தாள்வரென மனமார வேண்டுகின்றனம். ஆசாரியார் அவரது ஸமதிருஷ்டியும், உயர்ந்த மனோபாவமும், அசைக்க முடியாத நிஷ்பக்ஷபாதமும், நம்மவரது படிப்பு விஷயத்திலும் மற்றைய விஷயத்திலும் அவர் கொண்ட அவாவும் அவரது பெருமையின் முன்தோற்றங்களாகும்.

---

**Hon'ble Mr. P. Ramanathan, Colombo.**— * * I have always thought highly of the work done by you and your colleagues in this Monthly Magazine. *The articles appearing in it are carefully considered and written in simple and chaste Thamil.* National ideals and duties of speaking and writing Thamil without any admixture of foreign terms and foreign modes of thought are consistently held up to your readers. Just as cultured Europeans desire to speak and write their respective language with purity, we Thamils should speak and write our language without thinking in English and translating into Thamil the idioms and other turns of expression appropriate to the English. * * I wish you success and prosperity in your endeavour to enlighten and uplift the people.



## திருமலை நாயகன் கட்டடங்கள்

## ARCHITECTURAL WORKS OF TIRUMAL NAIK



திருமலைநாயகரும், அவரது பத்தினிகளும்

கி.பி. 1623-ம் வருஷம் முதல் 1649-ம் வருஷம் வரை, நாயக வம்சச் செங்கோலோச்சி வந்த திருமலைநாயகனின்சரித்திரத்தில் பெரும்பாலும் நமதுமனதைக் கவர்வது அவன்கட்டிவைத்த கட்டட வேலைகளாம். சரித்திரக்காரர்கள் அவனுடைய அரசாட்சியின் நேர்மையைப் பற்றியும், அவன் குண விசேஷத்தைப் பற்றியும், அவனுடைய சாமர்த்தியத்தைப் பற்றியும் பலவாறு அபிப்பிராயங்கள் கொடுத்துவந்த போதிலும், சிற்பசாஸ்திரத்தின் ஏற்றத்தை நன்குணர்ந்து, அதற்கு முதன்மையானவும் கண்ணியமானவும் ஒரு ஸ்தானம் கொடுத்து, அதை நன்கு ஆதரித்து வந்தானென்று அனைவரும் ஆக்ஷேபணையின்றி ஒப்புக் கொண்டிருக்கின்றனர்.

நாயக வம்ச மன்னருக்குள் திருமலை நாயகனின் அரசாட்சியானது சற்றுப் பெரியதென்றே கூறலாம். அந்த அரசாட்சியில் விசேஷ சம்பவங்கள் நடந்தேறின. ஒவ்வொரு சம்பவமும் விசேஷித்த விநோதமும் குதூஹலமும் பொருந்தியது. அவற்றுள் முதலாவது, இது வரை நாயக வம்சத்து இராசதானியாயிருந்த திருசிராப்பள்ளியைவிட்டு மதுரையைத் தலைநகராக்கிக்கொண்டதாம். ஒவ்வொரு ஸம்பவத்துக்கும் ஒரு காரணமும் அந்தக் காரணத்தைத் திருஷ்டாந்தப்படுத்த ஓர் உபாக்கியானமும் இருப்பது போல், இந்த விஷயத்துக்கும் ஓர் காரணம் ஏற்பட்டு அதைப்பற்றியோர் கதையும் கூறப்படுகிறது. திருமலை நாயகனின் சகோதரனான முத்துவீரன் காலகதியடையலும், திருமலைநாயகன் பட்டாபிஷேகஞ் செய்துகொள்ளவேண்டித் திருசிராப்பள்ளியிலிருந்து மதுரைக்குச் சென்றுகொண்டிருந்தான். திருமலைக்கு நெடுநாளாய் ஜலதோஷ உபத்திரவமுண்டு. ஸ்ரீரங்க க்ஷேத்ரத்திலுள்ள வைஷ்ணவக் கடவுளாகிய ரங்கநாதனும் திருவானைக்காவிலுள்ள சைவக்கடவுளாகிய ஜம்புநாதனும் அவ்வினையைத் தீர்க்கக் கிருபை புரியவில்லை. அந்த நோய் நாளடைவில் முற்றி, திருமலையின் உயிருக்கே ஆபத்தாய் முடியும் போலிருந்தது. இப்பொழுது தான் அவன் மதுரையை நோக்கிப் பிரயாணஞ் செய்து கொண்டிருந்தது. ஒருநாள் அவன் திண்டுக்கல்லில் தண்டிறங்கியிருக்கையில், அன்றிரவு கனவில் சொக்க நாதரும் மீனாக்ஷியும் பிராம்மணத் தம்பதிகளாகத் தோன்றி, கொஞ்சம் வெண்ணீற்றை அவன் தேகத்தில் தடவி, அவன் முன்னோர் வழக்கத்தை விட்டு மதுரையையே தன் தலை நகராகக் கொள்ளும் பக்ஷத்தில் அவன் வியாதி தீருமென்று கூறிச் சென்றனர். திருமலை நடந்த வர்த்தமானத்தை உடனே தன் மந்திரிகளிடத்தில் புகன்று, அவர்கள் ஆலோசனையின் பேரில் அவ்வாறே செய்வதெனப் பிரதிஜ்ஞை செய்தான். மறுநாட்காலை அவன் தந்ததாவனம் செய்ய, அதன் மூலமாய் அவனை அவஸ்தைப்படுத்திய நோய் நிவாரணமாயிற்று.

இது முதற்கொண்டு, தான் விரும்பிய நகரின்மீது திருமலை நாயகனுக்குப் பிரேமை அதிகமாயிற்று. எவ்வாறு பெற்றோர் தன் பிள்ளைகளை அன்புடனும் ஆர்வத்துடனும் பேணுவரோ, அவ்வாறே அவன் தன் தலைநகரைக் கருதிவந்தான்; தான் ஜன்மமெடுத்ததே அதற்காகவென்றும் எண்ணினான். அது அவனுக்குக் கட்டியணைக்கும் குழவிபோலும், இன்பமளிக்கும் இல்லம்

போலும் விளங்கிற்று. அது பலமடைந்தால், தான் பலமடைவதாயும், அது பிரகாசித்தால் தான் ஆநந்தமடைவதாயும், அது விருந்திக்கு வந்தால், தான் க்ஷேமமடைவதாயும் கருதினான். வஸித்தால் மதுரைப்பதியில் வஸிக்க வேண்டும், சுவாஸித்தால் மதுரைக் காற்றைச் சுவாஸிக்கவேண்டும் என்று எண்ணினான். வருஷம் ஆக ஆக, தன் அருமை நகரின்மீது அவன் உள்ளம் முழுதும் சென்றது. ஆனது பற்றி அதன் விஷயமாகச் செலவழித்த அவன் திரவியமும் அவ்ன் ஊக்கமும் அக்ஷயமாயிருந்ததென்பது ஆச்சரியத்தை விளைவிக்காது. தன் ராஜ்யத்தின் பலத்தையும், தன் சிம்மாஸனத்தின் பெருமையையுமே தன் நகருக்கு அடைக்கலமாக வைத்த அவனுக்கு அதை அழகுபடுத்துவதிலும், பலப்படுத்துவதிலும், சிறப்புறச் செய்வதிலுமே கண்ணுங் கருத்துஞ் சென்றிருந்தன. தன் ராஜ்யத்தின் தீர்வை வருமானத்தினின்றும் ஒரு தம்பிடி மிகுந்தாலும் அதை மதுரைக்கென்றே செலவிடுவான். தன் ராஜ்ய விசாரணைபோக மிகுந்த நேரம் அரை விநாடியாயினும் அதைத் தன் நகரின் விஷயமாய்ச் செலவழிப்பான். ஆதல்பற்றி அந்நகரின் ஒவ்வொரு மூலையிலும் திருமலைநாயகனின் கட்டடங்களும், மற்றும் அவன் விரும்பிய பொருள்களும் மலிந்தன. தனக்குப் பலம், தனம், கௌரவம் இவைகளை அளித்த தேவிக்குத் தன் நன்றியின் அறிகுறியாக அவளுடைய ஆபரணங்கள், உடை, வாகனம் மற்றைச் செலவுகளுக்குமாக ஐந்து லக்ஷம் பொன் செலவு செய்வதாய்ப் பிரதிஞ்ஞை செய்தான். அம்பாளுக்காக அழகியதோர் அரியணையும், சுந்தரேசுவர மூர்த்திக்காகக் கறுப்புச் சலவைக்கல் ஆஸனமும், ரத்தினங்களிழைக்கப்பெற்ற மற்றோர் ஆஸனமும், ஒரு தந்தத்தேரும் செய்துவிடுத்தான். அதற்குப் பிறகு, தன் கீர்த்தியைத் தென்னாடு முழுதும் நிலை நிறுத்தி, தன் பெயரை ஒவ்வொரு குடும்பத்திலும் வீட்டுப் பெயராகக் கருதும்படி செய்த தன் திருப்பணி வேலைகளை ஆரம்பித்தான். அவையாவன:—சிறந்த கோயில்களும், அழகிய கோட்டைகளும், பலத்த அரண்மனைகளுமேயாம். அவன் மீனாக்ஷியின் ஆலயத்தைப் பழுதுபார்த்து, புதுமண்டபத்தைக் கட்டி, தெப்பக்குளத்தையும் வெட்டுவித்து, கோயிலில் நித்திய நைமித்திக பூஜைகள் நடக்குமாறு காரியஸ்தர்களையும் நியமித்து அதற்குத் தகுந்த ஏற்பாடுகளையும் செய்தான். மீனாக்ஷிசுந்தரேச்வரருடைய கல்யாணம் நடந்தேருவதற்கென்று தன் சொந்த ஐவேஜியினின்றும் திரவியம் கொடுத்தானும். நித்தியப்படி செலவுக்காக, தன் பகுதியில் நூற்றில் ஒரு பாகமான 44,000 பொன்னை மானியமாக விடுத்தானும். இதுவும் தவிர, நூறு கிராமங்களைத் தீர்வையினின்றும் நீக்கி, அவற்றின் வரும்படியிலிருந்து கோயிலின் உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் முதலியன கொடுப்பதற்கும், ஏழை எளியவருக்குத் தானதருமஞ் செய்வதற்கும் ஏற்பாடு செய்தானும். இவையெல்லாம் தவிர, அவன் ஸ்வாமி தரிசனம் செய்யும் ஒவ்வொரு தடவையும் அபிஷேகத்துக்கென்று, ஆயிரம் பொன் விகிதம் காணிக்கை ஸமர்ப்பித்து வந்தான். தன் அதிநுட்பமான பக்தியின் காரணம்பற்றி, அவன் ஒவ்வொரு உத்ஸவத்தையும் வெகு ஆடம்பரத்துடனும் விமர்சையுடனும் செய்து வருமாறு கண்டிப்பாய் உத்தரவுசெய்து வந்தான். இவ்விதமான தூயகருமஞ் செய்து முடிப்பதில் அவன் ஊக்கம் சலிப்பற்றிருந்தது. பக்திவிசுவாஸம் நிறைந்த இம்மன்னன் ஒவ்வொருநாளும் சிற்பிகளும் மற்றைக் கைத்தொழிலாளிகளும் வேலை செய்யுமிடத்துக்கு நேரிற்சென்று அவர்களுடைய சிரமத்துக்குத் தக்கவாறு பரிசளிப்பான். இங்ஙனம் பக்தியோடுங்கூடிய வித்தையிலும், தைவீகம் பொருந்திய அழகிலும் இவ்வளவு அபிமானங் கொண்டதோர் மன்னனை இதுவரைக் கண்டதில்லை; இனிக்காண்டலு மரிதேயாம். இவ்வாறே ஸகல கலைகளிலும் இவ்வளவு கவிமாண்புடைத்த வரசனைச் சந்தித்தலு மரிது. திருமலையின் கண்ணுக்கு எது பரிசுத்தமாயிருக்கிறதோ, அது அழகுள்ளதா யிருக்க வேண்டுமென்றும், எது வனப்புடைத்ததோ அது தைவீகமா யிருக்கவேண்டுமென்றும் நோக்கம். சாதாரணமானதோர் ஆலயத்தை ஆலயமெனக் கருதான். சித்திர வேலைப்பாடற்ற கட்டடத்தைக் கட்டடமெனவும் நினையான். அதாவது, தான் துதிக்கும் தெய்வத்தின் வாஸஸ்தானம் அழகுபெற வமைந்திருத்தலே

(இதன் தொடர்ச்சி 323-ம் பக்கம் பார்க்க.)



# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### S. S. L. C. 1912

III. Translate:—

A pious Brahman made a vow that on a certain day he would sacrifice a sheep, and on the appointed morning he went forth to buy one. There lived in his neighbourhood three rogues who knew of his vow and laid a scheme for profiting by it. The first met him and said, "O Brahman, wilt thou buy a sheep? I have one fit for sacrifice." "It is for that very purpose", said the holy man, "that I come forth this day." Then the imposter opened a bag and brought out of it an unclean beast, an ugly dog, lame and blind. Thereon the Brahman cried out, "Wretch, who touchest things impure and utterest things untrue, callest thou that cur a sheep?" "Truly", answered the other. "It is a sheep of the finest fleece and of the sweetest flesh. O Brahman, it will be an offering most acceptable to the gods." "Friend," said the Brahman, "either thou or I must be blind." Just then one of the accomplices came up. "Praised be the gods" said this second rogue, "that I have been saved the trouble of going to the market for a sheep; this is such a sheep as I wanted. For how much wilt thou sell it?" When the Brahman heard this, his mind waved to and fro, like one swinging in the air at a holy festival. "Sir", said he to the new comer, 'take heed what thou dost; this is no sheep, but an unclean cur." 'O Brahman,' said the new comer, 'thou art drunk or mad'. At this time the third confederate drew near. 'Let us ask this man', said the Brahman, 'what the creature is and I will stand by what he shall say.' To this the others agreed; and the Brahman called out, 'O stranger, what dost thou call this beast?' 'Surely, O Brahman,' said the knave 'it is a fine sheep.' Then the Brahman said, 'Surely the Gods have taken away my senses'; and he asked pardon of him who carried the dog and bought it for a measure of rice and a pot of ghee and offered it up to the gods, who, being wroth at this unclean sacrifice, smote him with a sore disease in all his joints.

தெய்வபக்தியுடைய அந்தணனொருவன் ஒரு குறிப்பிட்ட நாள், ஒரு ஆட்டைப் பலிகொடுப்பதாக நோன்பெடுத்திருந்தான். அதற்காக, அக்குறிப்பிட்ட நாட்காலையில், ஆடொன்று வாங்கப் புறப்பட்டான். இவன் நோன்பை, அருகே இருந்த மூன்று திருடர் நன்குணர்ந்து, அதனால் பயனடைவதற்குத் தகுந்த சூழ்ச்சி ஒன்று அவர் செய்திருந்தனர். முதல்திருடன் எதிர்ப்பட்டு, 'ஆடுவாங்கவா போகிறீர்? ப்ராஹ்மணா! என்னிடம் பலிக்குத்தகுந்த ஆடொன்றுள்ளது' என்று கூறினான். 'அந்தக் காரியமாகவேதான், நான் இன்று வெளிப்பட்டேன்!' என்றான் அவ்வந்தணன். உடனே அந்தச் சூதன் ஒருசாக்கை அவிழ்த்து, உள்ளே இருந்து நொண்டியாயும் குருடாயுமிருந்த அசுத்த விலங்காகிய குரூபமான கள்ள நாய் ஒன்றை வெளியில் எடுத்தான். 'அசுசியானவைகளைத் தொட்டுக்கொண்டு பொய்யும்உரைக்கும்பாபி! இந்தக் கள்ள நாயையா ஆடென்கின்றாய்?' என்று உடனே கூக்குரலிட்டான் ப்ராஹ்மணன்.

'உண்மையாகத்தான் கூறுகிறேன், இது சிறந்த கம்பிளிமயிரடர்ந்ததும், இனிப்பான சதைப்பற்றுடையதுமான ஆடுதான். தேவர்களுக்குத் தகுந்த பலிதான் இது ப்ராஹமணா!' என்று தயங்காது உரைத்தான் அந்தத் திருடன். 'அப்பா தோழா! ஒன்று நீயாவது அல்லது நானாவது குருடாயிருக்கவேண்டும்' என்று மறுமொழி கூறினான் ப்ராஹ்மணன்.

(322-ம் பக்கத்தொடர்ச்சி)

தன் பக்திக்கு உதாரணமென நினைப்பான். சிற்பிகளே அவனுக்கு அத்தியந்த நண்பர்கள். ஆலயங்கட்டுவோரைத் தன் ஆன்மாவை ஈடேற்றுபவராயும், தன் ஆநந்தத்தை விருத்தி செய்பவராயும் கருதுவான். அவர்களைப் பக்ஷத்துடனும் வியப்புடனும் பராமரித்து வந்ததுந் தவிர, அவர்களுடைய தொழிலிலும் க்ஷேமத்திலும் விசேஷ அன்பு பாராட்டுவான். இதற்குப் பலனாக, தென்னிந்தியாவின் கீர்த்தியை எண்டிசையும் பரவச்செய்பவன் போன்று, அநேக கட்டடங்களால், நிறப்பினான்.

உடனே இவன் உடந்தைக்காரருள் ஒருவன் அங்கு வந்துசேர்ந்தான். 'தேவர்கள் சிறப்பை என்னென்றுரைப்பேன்! சந்தைக்கு ஆடுவாங்கப்போகவேண்டிய தொந்தரவு நீங்கிற்றே எனக்கு. எனக்கு இப்படிப்பட்ட ஆடுதான்வேண்டும். எவ்வளவிற்கு இதை விற்கப்போகிறாய்?' என்று அவன் களிப்புடன் கேட்டான். இதைக்கேட்டதும், வேதியன் மனம், திருவிழாக்களில் அந்தரத்திலாடும் கழைக்கூத்தரைப்போல, முன்னும் பின்னுமாக ஊசலாடத்தொடங்கியது. புதிதாய் வந்தவனைநோக்கி, 'ஐயா! நீர் செய்வதை ஆய்ந்து ஓய்ந்து செய்யும். இது ஆடல்ல; அசுத்தமான நாய்' என்று எச்சரிக்கைசெய்தான் ப்ராஹ்மணன். அதற்குப் புதிதாய் வந்தவன், 'அடா ப்ராஹ்மணா! உனக்குக் குடிவெறியாவது பித்தாவது தானிருக்கவேண்டும்' என்று உதறி எறிந்து பேசிவிட்டான்.

இத்தருணத்தில் மூன்றாம்பங்காளி நெருங்கிவந்தான். இவனைக் கண்டதும், ப்ராஹ்மணன், 'இந்த ஆளைக் கேட்டுப்பார்ப்போம் இந்த ப்ராணி இன்னதென்று. அவன் சொற்படி நடக்க நான் தயார்தான்' என்றுஇணங்கிவிட்டான். மற்றவர்களும் இதற்கு இசைய, 'ஓய் புதியவரே! இதென்ன விலங்கு?' என்று மூன்றாமவனைக் கூவி யழைத்துக்கேட்டான் அந்தணன். அத்திருடன் 'ஓய் ஐயரே! இது நல்ல ஆடுதான் உண்மையாகப் பார்க்குமிடத்து' என்று கூறி முடித்தான். தேவர்கள் தன் பொறிகளைக் குலைத்துவிட்டனர்போலும் என்று தனக்குள் மதித்து, நாய்கொண்டுவந்தவனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, ப்ராஹ்மணன் ஒருபடி அரிசியையும், ஒரு கலயம் நெய்யையும் கொடுத்து அதை வாங்கி, தேவதைகளுக்கு ஸமர்ப்பித்தான். இந்த அசுத்த வழிபாட்டால் சினங்கொண்ட தேவர்கள் கொடிய கீல்வாயு நோயால் அவனை வதைத்தனர்.

---

# விநோத விஷயங்கள்

# Curious facts

போர்முனையில் அபூர்வமான சாகஸச் செயலுக்கு "விக்டோரியா க்ராஸ்" என்னும் பதக்கம் அளிக்கப்படுவதை அபிமானிகள் அறிவார்கள். அப்படிப் பெறுபவர்களுக்கு ஆயுள் வரையில் வருஷா வருஷம் பத்துப்பவுன் அதாவது, நூற்றைம்பது ரூபா பென்ஷன் கொடுக்கப்படும்.

* * *

நித்திரைக்காலத்தில் நாம் கனவு காண்கிறோமல்லவா? அயர்ந்து நித்திரை போகுங் காலத்தில் கனவு உண்டாவதில்லை யென்றும், அரை விழியுந் தூக்கமுமாக விருக்கும்போதுதான் கனவு காண்பதென்றும் சாஸ்திரக்ஞர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். அநேக நாள்களில் நடந்ததாகக் காணும் சம்பவத்தையுடைய கனவுகள், ஒரு விநாடிக்குமேல் இருப்பதில்லையாம். ஒரு விநாடிக்கு மேற்பட்ட கனவு இருக்குமானால், நமக்கு அது காரணமாக மரணம் ஏற்படுமென்கின்றனர். கனவுக்குப் பொருளில்லையென்று சிலரும், பின்வரும் காரியங்களை அவை காட்டுகின்றனவென்று சிலரும் அபிப்பிராயப்படுகின்றனர்.

* * *

இங்கிலாந்திலுள்ள "சாமான்ய சபை" (பார்லிமெண்டு)க்குச்சக்கரவர்த்தியின் தூதன் வரும்போது, அவனெதிரில் கதவைச் சார்த்திவிடுவார்கள். அவன் மூன்றுதடவை கதவைத் தட்டி, மூன்று தரம் தலைவணங்கின பிறகு தான் கதவு திறக்கப்படும். இதனால், சாமான்ய சபையாருக்கு முன்னுள்ளிருந்த செல்வாக்கு வெளியாகிறது.

* * *

சிப்பாய்களின் சம்பளம் நாடுகள் தோறும் வேறுபடுகின்றது. கனடா சிப்பாய்க்கு நாளொன்றுக்கு $4\frac{1}{2}$ அணா சம்பளம்; இங்கிலாந்து சிப்பாய்க்கு 12 அணா; இதாலியனுக்கு 10 அணா; பிரஞ்சுக்காரனுக்கு $2\frac{3}{4}$ அணா; ஜெப்பானியனுக்கு $1\frac{1}{4}$ அணா; ருஷியனுக்கு 1 அணா; ஆஸ்டிரியனுக்கு $1\frac{1}{4}$ அணா; துருக்கியனுக்கு $1\frac{1}{2}$ அணா; ஜர்மனுக்கு $1\frac{1}{4}$ அணா.



# மாதவீகங்கணம்

## மூன்றாம் பாகம்

### அத்யாயம்—1

### பாணிக்ரஹணம்

ஸ்திரீ ஜாதியினுடைய மனதில் குடிகொள்ளும் ஆவல்களுள் முக்யமானது யாது? உலகத்திலுள்ள பெண்டுகளெல்லாம் கண்ணுங் கருத்துமா யிருப்பது எதன்மீது? ப்ரதி ஸ்த்ரீயும் தன் கணவன், காதலன் அல்லது தனது நண்பன் இவர்களுடைய மனதைத் தன்வசப்படுத்தி அவர்களைத் தன் கைக்கீழ் அடக்கியாள எவ்வளவோ முயல்கின்றனள். ஓர் ஆண்மகனுடைய மனதைக் கவர்வதென்றால், அவள் எதற்கும் அஞ்சாள்; எதைக்கண்டும் பின்வாங்கமாட்டாள்; ப்ராணனைத் துரும்பென எண்ணி ப்ரயாஸைப்படுவாள். ஸகலவித உபாயங்களாலும் அவனைத் தன் வசப்படுத்த ப்ரயத்னப்படுவாள். தன் எண்ணம் நிறைவேறவேண்டியதற்கான ஸாகஸங்கள் அனைத்தையும் செய்து தீருவாள். முடிவில் மனுஷ்ய யத்தனத்தால் ஆகக்கூடிய மார்க்கமொன்றையும் குறைவாய் விடமாட்டாள். அவனைச் சித்ரஹிம்ஸைசெய்தாலும் பொறுத்திருப்பள்; ஆனால் அவனைவிட்டுப் பிரிந்து அகல்வதென்றால் கணமேனும் தரிக்கமாட்டாள். கொடிய நெஞ்சனாயிருந்தாலும் அவன் தன்னைமாத்ரம் லக்ஷயஞ்செய்து தன்மீது பராமுகமாயிராதிருப்பானாயின், அதுவே அவளுக்குக் கோடி வராகன். அவளைப் பொருட்படுத்தாது, அலக்ஷயஞ்செய்யத் தலைப்பட்டால் அவளர்த்தந்தான். பெண் ஜாதியின் விசித்ரமான குணநிசயம் இவ்வாறாகும். எப்படிக் கொடிகள் வலிவாயிருக்கக் கொடிக்கூந்தல்கள் சிருஷ்டிக்கப்பட்டனவோ, அப்படியே ஈசுவரன் ஸ்த்ரீகளிடம் இந்தக் குணநிசயத்தைக் கற்பித்திருக்கின்றார். பால்யந்தொட்டுத்தன்கஷ்டஸுகங்களுக்கெல்லாம் வலிவான ஆதரவாய் எண்ணிப் பற்றிக்கொண்டிருந்த பழைய நாள் வைரந்தீர்ந்த மரமானது இப்போது சிறிதுசிறிதாய்த் தன் மனமெனும் கொடியின் பந்தத்தினின்று விடுபடுவதை நவகுமாரருடைய மனைவியாம் க்ற்பரசி உணர்ந்தாள். வாய்விட்டுச் சொல்லமாட்டாமல் நெஞ்சம்புண்ணாகி ஏங்கித்தலைப்பட்டாள். அவளோ ஸாமாந்ய ஸ்திரீயல்லள்; தான் சக்தியற்றுத் திடமற்றுத் தூர நிற்கவேண்டிவந்த நிலைமையைக்கண்டு மனம் விண்டாள். கஞ்சுகமில்லாக் கூடாயிற்று அவளது மனம். வைரம் தீர்ந்த மரத்தினூடே புடைவைத்து அதன் வலிவைத் தினேதினே உரிஞ்சிவரும் புழுவைக் கண்ணெதிரே கண்டு கொண்டிருந்தாள். இருந்தென்ன, அதனை மரத்தினின்றும் அப்புறப்படுத்திக் கீழே எறிந்து, காலால் ஓரே நசுக்காய் நசுக்கும் ஆற்றல் அவளிடம் இல்லை. ஆதலால் வாயைக் கெட்டியாய் மூடிக்கொண்டு மனோவேதனைக்கு ஆளாகி மனம் அழுந்தி அதே சிந்தையாய்த் தேகம் உருகலானாள்.

அவள் உலகவின்பங்கள் யாவற்றையும் துறந்துவிட்டபோதிலும், ஒரு பந்தம் மாத்ரம் இன்னும் அவளைவிட்டு அகன்றபாடில்லை. அதைப்பற்றியே அவள் அஹோராத்ரம் சிந்தனையாயிருந்தாள். ஸகஜந்தானே! பெண்ணென்றால் பேயுமிரங்கும் என்பது அனைவருக்குந் தெரிந்த உண்மையன்றோ? அதுவும் பெற்ற மனமென்றால் எப்படியிருக்கும்! அவளுடையபெண் இப்போது அழகிய யுவதியாய் விளங்கினள். அச்சிறுமி, கள்ளங்கபடு அறியாத களங்கமற்ற குழந்தை. முகத்தைப் பார்த்தால், இன்னும் அந்தக் குழந்தை முகமே ப்ரகாசித்துக்கொண்டிருந்தது. உலகமே இன்னதென்று அறியாத கன்னிகை. இப்பேர்ப்பட்ட பரிசுத்த ரத்னத்தைத் தகுந்த இடத்தில் சேர்ப்பிக்காமல் தன்னந்தனியாய் விட்டுப்போக, பெற்ற மனம் எவ்வாறு துணியும்? வீரநகர தேவிபுர விஷயங்களை அவள் காதில்போட்டுப் பல தினங்களாயின, சில மாஸங்களாக அவைகள் என்ன ஸ்திதியிலிருக்கின்றன என்பதைக்கூட அவள் கவனித்ததில்லை. ஆனால் அழகிற் சிறந்த நரேந்த்ரனும் குழந்தை ஹேமலதையும் ஒன்றுகூடித் தன்னண்டை விளையாடும்போது அவளுக்கு இரண்டு ஜமீன்களையும் ஒன்று சேர்த்துவைக்கவேண்டுமென்ற பழைய எண்ணம் மறுபடியும் உண்டாயிற்று. இந்தக் கோரிக்கையை ஊர்ஜிதப்படுத்தும் பொருட்டே

அவள் தன் மகள் பக்வவயது அடைந்தபின்னரும் அவ்விளைஞனுடன் உரையாடுவதைத் தடுக்காமலிருந்தாள்.

தேவிபுரத்திலிருந்து ஸிரீஷை வரவழைத்து, அவனை ஹேமலதை நரேந்த்ரன் இவர்களுடன் இருக்கும்படிக்குச் செய்த ஏற்பாட்டைக் கண்ட நவகுமாரரின் மனைவி, கோகுலதாஸின் அந்தரங்க யோசனைகளை நொடிப்பொழுதில் உணர்ந்தாள். அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை; திக்ப்ரமை யடைந்தாள். எங்குமிராத கோபமும் ஆத்திரமும் உண்டாயிற்று. அவள் மனம் புழுப்போலத் துடித்தது. பொறுமை யென்னுங்குணம் ஸ்த்ரீகளுக்கோர் அரிய தூரத்ருஷ்டியைக் கொடுக்கிறது. அப்போது புருஷனது அறிவுக்கு எட்டாத அநேக விஷயங்கள், அவர்களுக்குக் கைக்கண்ணாடிபோல் புலப்படுகின்றன.

கோகுலதாஸின் எண்ணங்களும் ஏற்பாடுகளும் ஒவ்வொன்றாய் வெளிவர வெளிவர, அம்மாதரசியின் திடசித்தம் தினேதினே பிடிவாதங் கொள்ளலாயிற்று. தன் சொந்த குடும்ப வ்யவஹாரங்கள், வீட்டு வ்யவஹாரங்களில் தானே தனியரசு புரிபவள். அப்படியிருக்க, அவ்விஷயங்களில் அந்நியன் வந்து எப்படித் தலையிடலாம்? நவகுமாரருக்கே அவ்வளவு அதிகாரம் கிடையாதே; கோகுலதாஸின் அதிகப்ரஸங்கத்துக்கு அவ்வளவு எளிதில் இடங்கொடுப்பளோ? கேவலம் பிச்சைக்காரப் பையன், அவனுக்கா அவள் தன் மகளை மணம் புரிவிப்பள்!

அவளுடைய திடசித்தத்தையும் தீர்ந்த ஆலோசனையையும் கண்டு, நவகுமாரர் பின் வாங்கிவிட்டார். எதிர்த்து ஒன்றும் பதில் சொல்ல அவரால் ஸாத்யப்படவில்லை. "நானும் என் நாட்களில் எத்தனையோ ஸ்வபேதார்களைப் பார்த்திருக்கிறேன். எத்தனையோ வீரதீர ஸேனாதிபதிகளையும் கண்டிருக்கிறேன். வாஸ்தவந்தான். ஆனால், அப்பப்பா, இவளைப்போன்ற ஒரே திடசித்தமுள்ளவர்களைக் கண்டதேயில்லை" என்று நவகுமாரர் தன்க்குள்ளே சொல்லிக்கொண்டார். ஆரம்பத்தில் கோகுலதாஸ்கூடச் சிறிது தயங்கினான். அந்த மயக்கமென்ன, நவகுமாரருடைய மயக்கம் போன்றதா, க்ஷணத்தில் தோன்றி க்ஷணத்திலேயே மறைந்துவிட்டது. "உலகம் தலைகீழ் புரண்டாலும் ஸரி, தேவிபுர ஜமீன்மாத்ரம் வீரநகரத்தைச் சேராது என்பது திண்ணம்" என்று கங்கணங் கட்டிக்கொண்டான் கோகுலதாஸ். அற்பமும் சில ஸமயங்களில் அநர்த்தத்துக்கிடமாகிறது. படகுப் பந்தயத்தின்போது நடந்த ஓர் அற்ப விஷயம் வீரநகரத்துக்குக் கேடாயும், தேவிபுரத்துக்கு அநுகூலமாயும் முடிந்தது. ஹேமலதையின் தாயார் பொறுமைசாலிதான். பொறுமை யென்றால், எல்லாவற்றிலும் பொறுமையுடன் இருந்துவிட ஸாத்யப்படுகிறதா? அதுவும் அன்பாய்ப் பெற்றெடுத்துச் சீராட்டி வளர்த்த ஒரே மகளை, அதுவும் ராஜகுமாரியவள்—கேவலம் தெருவில் போகிறவனுக்குக் கல்யாணம்செய்து கொடுத்துவிடு என்றால் யார்தான் ஸம்மதித்துவிடுவார்கள்? ஹேமலதையின் தாயாருக்கு அடங்காக் கோபம் வந்துவிட்டது. பல்லை நறநறவென்று கடித்தாள். என்ன செய்தாலென்ன? கூண்டில் அகப்பட்டபுலி முட்டி முறண்டிக்கொண்டாலும் என்னபயன்? படகுப் பந்தய விஷயத்தை ப்ரமாதமாக்கிவிட்டார்கள். தன் கணவனைக் கொல்ல யத்தனித்த துஷ்டனுக்கு எவ்வாறு ஒருத்தி தன்மகளை மணம்புரிவிக்கக் கருதுவாள் என்று உலகம் சொல்லிற்று.

ஹேமலதையின்தாயார்அபஜயமடைந்தாள். ஆனால்யுத்தம் தர்மயுத்தமா? அவள் விதியின் வலியால் தோல்வியடைந்தனளே யொழிய, மனிதனுடைய ஸாமர்த்யத்தாலன்று. ஸரி, விஷயம் தன்னை மிஞ்சிப்போய்விட்டதென்று அவள் மனம் விண்டு, தன் கோரிக்கையைக் கைசோரவிட்டாள். அவள் ஸ்வபாவமாகவே உலகத்தில் அதிகப் பற்றுடையவ ளல்லள்; ஆனால் அவள்கூடத்தன்குழந்தைவிஷயமாய்ச் சிறிது அஞ்ஞானம் வைத்திருந்தாள். அந்த அஞ்ஞானம் கூட அவளுக்குக் கூடாதெனத் தெய்வம் மறுத்துவிட்டது. பெண்ணென்னும் பந்தங்கூட அவளை விட்டகன்றது. நல்ல உயர்குலத்தில் பிறந்த சீமாட்டியென, அவள் கண்யமாயும் கம்பீரமாயும் தேவிபுரத்தில் விளங்கிவந்தாள். இருந்தாலும், அவள் மனது தேவிபுரத்திலுமில்லை, வீரநகரத்துமில்லை. இனி இவ்வுலக விஷயங்களில் ஒன்றிலுமே அவள் அக்கரைப் படவில்லை. போகிற வழிக்குப் புண்யம் தேடிக்கொள்வதிலும், பகவானிடத்திலுமே அவளுடைய மனம், நோக்கம், கருத்து யாவும் லயிக்கலாயிற்று.



விவாஹம் ஸமீபித்துவிட்டது. கலியாண கார்யம் அதிக சுறுசுறுப்பாய் நடந்து வந்தது. நகரத்தை நாலாபக்கங்களிலும் அலங்கரிக்கத் தொடங்கினார்கள். தெருக்களிலெல்லாம் கொடிகளும் புஷ்பதோரணங்களும் காற்றில் அசையலாயின. ப்ரதி வீதிகளிலும், ஸங்கீத கச்சேரிகளுக்காக மண்டபங்கள் அமைக்கப்பட்டன. வாழை, கமுகு முதலிய மரங்கள் வீதிகளின் இருமருங்கிலும் நாட்டப்பட்டன. ஊர்கோலத்துக்கு வேண்டிய ஸகல ஏற்பாடுகளையும் செவ்வனே இரண்டு நாள் முன்னரே செய்துவிட்டார்கள். ஏழை எளியவர்களுக்காகப் போஜன ஸாமக்ரியைகள் ஏராளமாய் வந்து கொண்டிருந்தன. அவர்களுக்காக வஸ்திரங்கள், மூட்டை மூட்டையாய் வந்திறங்கிக்கொண்டிருந்தன. தெருக்களும், பொது ஸத்ரங்களும், மைதானங்களும் ஏழைகள் ஸந்தர்ப்பணைக்காக நன்றாய்ச் சுத்தஞ்செய்து ஜலம் தெளிக்கப்பட்டிருந்தன.

கல்யாணத்துக்கு நாலுநாள் முன்னரே பிடித்து, நகரெங்கும் வாத்ய கோஷமும், பறையொலியும் அமர்க்களமா யிருந்தது. சுற்றுப்பக்கத்து க்ராமாந்தரங்களிலிருந்து ராஜ விவாஹ வைபவத்தைக் கண்ணுறும்பொருட்டுக் கணக்கற்ற ஜனங்கள் நகரத்தை நோக்கி வந்தபடியே யிருந்தனர். வந்தவர்கள் அனைவருக்கும், அன்னதானம், வஸ்த்ரதானம், ஸ்வர்ணதானம் முதலிய தானங்கள் ஏராளமாய்க் கொடுக்கப்பட்டன.

அஸ்தமனமாயிற்று. விலையுயர்ந்த பட்டுப் பீதாம்பரங்கள், நறுமணமுள்ள பல்வேறு புஷ்பமாலைகள் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்ட விலையுயர்ந்ததொரு தங்கப் பல்லக்கில் மருமகனாகிய ஸிரீஷ், மணக்கோலத்துடன் ஊர்வலம் வந்தான். புதிய கல்யாணப் பிள்ளையைப் பார்க்கவேண்டி, பல்லாயிர ஜனங்கள் பற்பல விடங்களில் கும்பலாய்க் கூடியிருந்தனர். அநேக வாத்யங்கள் ஏக காலத்தில் கோஷிக்க, அனைவரும் மணமகன் வருகிறானென்று கழுத்தைநெறித்துக்கொண்டு பார்க்கலாயினர். கல்யாணப்பெண் வீட்டில் தடபுடலாயிருந்தது. கலியாண வீட்டுத் தடபுடல், இவ்வாறிருக்குமென்று நம் நண்பர்கள் எல்லோரும் அறிவார்களாதலின், இங்கே அதை விவரிக்கவேண்டிய அவசியமில்லை.

தேவிபுர வீரநகர ப்ரபுக்களும், இன்னும் பல கனவான்களும் கல்யாண மண்டபத்தில் வந்து கூடியிருந்தனர். ஹோமம் வளர்க்கப்பட்டது. அந்த அக்னிக்கு முன்னர், ஹேமலதை மணமகனுக்கெதிராய் அத்தேச ஸம்ப்ரதாயப்படி முகத்தை ஒரு மெல்லிய பட்டு வஸ்த்ரத்தால் மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். நவகுமாரரும் மந்த்ர பூர்வமாய்த் தன் புத்ரியை ஸிரீஷனுக்குக் கன்னிகாதானமாய்க் கொடுத்துவிட்டார். மணமகன் தன் மனைவியின் கரத்தைப் பற்றியபோது இருவருடைய உடல்களும் சிறிதே கூச்சத்தால் நடுங்கின.

"நவகுமாரருடைய புத்ரியாகிய இந்த ஸர்வாபரண அலங்கார பூஷிதையாம் ஹேமலதையை நீ உன் தர்மபத்னியாக அங்கீகரிக்கின்றாயா?"

"க்ருஹஸ்வாமி! நான் அவளை என் பத்தினியாக அங்கீகரிக்கின்றேன்" என்றான் ஸிரீஷன்.

ஹேமலதையின் முகத்திரை எடுக்கப்பட்டது. புரோகிதர் ஹேமலதையைக் கணவனுடையமுகத்தை நிமிர்ந்து பார்க்கும்படி சொன்னார். ஹேமலதை ஸரியாய் நிமிர்ந்து பார்க்காமல், லஜ்ஜையால் கடைக்கண்ணால் ஸிரீஷனைப் பார்த்தாள். கடைக்கண் பார்வையாயினும் இருவருடைய கண்களுக்கும் ஒன்றுகலந்தது. உடனே ஹேமலதை தலைகுனிந்தாள். அவளுடைய கன்னங்கள், இந்த நூதனக்கிளர்ச்சியால் சிவந்தன. வெகு காலமாய்க் காதலித்திருந்த அந்த இனிய அழகிய இளங்கொடி தன்னுடையதாகி, மன்மத பாணங்களை நிகர்த்த அவ்வழகிய கரும் விழிகள், தனது விழிகளை ஸந்தித்த தருணத்தில், எப்போதும் தன்னடக்கமுள்ள ஸிரீஷனுக்குக்கூட, தேகத்தில் ஒருவித நூதன உணர்ச்சியுண்டாயிற்றென்பதில் ஆச்சர்ய மொன்றுமில்லை.

இதர மந்திர தந்திரங்கள் யாவும் ஸரிவர நடந்தேறின. மணமகள் சிறிது அன்னத்தை அக்னியிலிட்டாள். அக்னி கொழுந்துவிட்டெரியலாயிற்று. ஸப்தபதியுமாயிற்று. முடியும் போட்டாய்விட்டது. கல்யாணச் சடங்குகள்

பூர்த்தியாயின. தம்பதிகளிருவரும் கல்யாண மண்டபத்தினின்று, நலங்கு ஊஞ்சல் மண்டபம் சென்றனர்.

ஸதிபதிகள் அவ்விடம் சென்றதும், அவர்களைச்சுற்றிச் சிறு பெண்களும் பெரியவர்களுமாகப் பல ஸ்த்ரீகள் கூடிக்கொண்டார்கள். கல்யாணப் பிள்ளைக்கும், பெண்ணின் வீட்டார்களுக்கும் அநேக பரிஹாஸவார்த்தைகள் நடந்தன. அந்த ஸமயத்தில் ஸ்த்ரீகள் மணமகனிடம் புருஷனென்ற மரியாதை வைக்காமல், பலவாறாக அவனை ஏளனஞ் செய்யலாயினர். பெண்ணகத்துச் சிறுமிகளும், அவளுடைய விளையாட்டுத் தோழிகளும் தங்களுடைய ஸ்நேஹிதையை அபகரித்துப்போக வந்திருக்கும் இளைஞனை; பொய்த் தூஷணைகள் பல செய்து, அவனைக் கல்லாக் கசடனென்றும், சிறு பெண்ணை ஏமாற்றிய மோசக்காரனென்றும் கூறிக்கொண்டு, வேடிக்கையாய்க் காலங் கழித்தனர். தேவிபுர, வீரநகர பரஸ்பர விரோத விஷயமாகவும் வேடிக்கை வார்த்தைகள் இரண்டொருவர் பேசலாயினர். இவ்வாறு ஸிரீஷன், இரண்டு வீட்டார்களாலும் போதுமானவளவு நன்றாய் ஏசப்பட்டான். இவனை நாவெடுக்க விடாமல் அவர்கள் வார்த்தைமேல் வார்த்தையாய்ப் படபடவென்று சரமாரியாய்ப் பொழியலாயினர். ஸிரீஷனும் புன்னகையுடன் அவர்களுடைய பரிஹாஸமொழிகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தான். ஹேமலதை களைத்து அயர்ந்து, ஊஞ்சலின் சங்கிலியின்மீது சாய்ந்து தூங்கிவிட்டாள். அவளை யாரும் கவனிக்கவில்லை. ஸிரீஷனை மாத்ரம், கண்ணைக்கொட்டவிடவில்லை. அவனுடைய காதுகள் செவிடாய்ப் போயினவென்றாலும் அவன் எல்லாவற்றையும், புன்சிரிப்புடன் கேட்டுக்கொண்டிருந்தான். அருணோதயமாயிற்று; அப்போதும் அந்தத்துஷ்டச்சிறுமிகள் ஸிரீஷனை ஊஞ்சலின்று எழுந்திருக்கவிடவில்லை. கடைசியில் நன்றாய் ஸூர்யோதயமாகிவிட்டது; நவகுமாரர் அவ்விடம் வந்தார்; அப்போதுதான் ஸ்த்ரீகள் தர்பார் கலைந்தது.

புரோகிதர்கள் வந்து, மிகுந்த அதாவது சேஷ ஹோமங்களை நடத்திவைத்தனர். நவகுமாரரும் அவருடைய மனைவியும் தங்களுடையபுத்ரியும் தற்காலம்ஸிரீஷனுடைய மனைவியுமாகிய ஹேமலதையண்டை நின்றார்கள்.

“ஸிரீஷ், இந்தச் சிறு குழந்தையை நாங்கள் எவ்வளவோ பரிவாய் வளர்த்து வந்தோம். இதுவரைக்கும் அவள் எங்களுடைய குழந்தையாயிருந்தனள். இன்று முதற்கொண்டு, அவள் உன்னுடைய மனைவியாய்விட்டாள். அவளை அன்பாயும் ப்ரிவுடனும் ‘ஆதரித்துவருவாய் என்று நாங்கள் நம்புகிறோம். அவளும் உனது நற்குணத்துக்கேற்ற ஸத்ஸ்த்ரீயாய் ஒழுகுவாளென்பதற்கு ஸந்தேஹமில்லை” என்று சொல்லும்போதே நவகுமாரர், அவருடைய மனைவி இவர்களுடைய கண்களில் நீர் ததும்பிற்று. தங்கள் குழந்தையை ஸரியான வரனுக்கு விவாஹம் செய்துகொடுத்துவிட்டோம். இனி அவள் தன்கணவனுடன் மனமொப்பி இல்லறம் நடத்துவதைக் கண்டு களிக்கலாம். அவளைப்பற்றி இனி நமக்குக் கவலையில்லையென்ற எண்ணம் ஒரு பக்கமிருந்தாலும், குழந்தை பிறந்தது தொட்டு அதை எவ்வளவோ செல்வமாயும் சீராயும் வளர்த்துவந்து அதைவிட்டு இப்போது பிரியவேண்டிவந்த விஷயத்தைக் குறித்து கண்ணிலிருந்து நீர் விடாமல் எவராலிருக்க முடியும்? குழந்தை பிறந்தால், ‘பெண்ணு பிறந்தது’ என்று சலிக்கும் இந்நாட்களில்கூட, விவாஹ காலத்தில் பெண்ணைக் கன்னிகாதானம் செய்து கொடுக்கும்போது, பிரிவாற்றாமல் பெற்றோர் கண்ணினின்று நீர் விடுவதை ஸகஜமாய்க் காணலாம். நவகுமாரர் இந்த அற்பத்தையெல்லாம் கண்டு கோழைப்படுபவர் அல்லர். கூட, ஹேமலதையும் ஸிரீஷனும் தன் அரண்மனையில்தான் இருக்கப்போகிறார்கள்; அவர்கள் வேற்றூர் செல்லப்போவதில்லை யென்பதும் தெரியும் அவருக்கு. இருந்தாலும் மனிதனுடைய இயற்கை குணம் எங்கே போய்விடும்? அவர்கூடத் தன் ஏக புத்ரியாகிய ஹேமலதையை ஸிரீஷனுக்குக் கொடுக்கும்போது கண்களில் நீர் ததும்ப, விசனம் நெஞ்சையடைக்க எடுத்ததைச் சொல்லி முடிக்கமுடியாமல் வாய் குழறி நின்றார்.

அவருடைய மனைவியோ, அவ்வாறல்லாம் அவரைப்போல் ஒன்றையும் வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. அவள் ஊழின் வலியைக்கண்டு, தன் வலி பயனற்றதென்று தன் மனதை எப்போதே அடக்கிவிட்டாள். இப்போது அவள் தன் கடமையை நன்கு



உணர்ந்தாள். எல்லாம் விதியின் மகிமை, ப்ராப்தம். நம்மால் ஆவது ஒன்றுமில்லை; வீணில் மனதை ஏன் புண்படுத்திக்கொண்டு மனோவேதனைக்கு உள்ளாகவேண்டும் என்று ஆராய்ந்து தெளிந்து, கேவலம் பரம ஏழையாகிய ஒரு சிறுவன், ராஜவம்சத்திலுதித்த கன்னிகையை—அதுவும் தான் பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்தகுழந்தையைப்—பாணிக்ரஹணம் செய்துகொள்வதைக்கண்டு பார்வையினாலாவது, வாயினாலாவது, நடத்தையினாலாவது ஒருவித மனக்கோணலும் காட்டிக்கொள்ளாமல் கற்பதுமையைப்போல் முகக்குறி மாறாமல், எல்லாவற்றையும் செய்துகொண்டிருந்தாள். நல்ல புத்திசாலிகளினுடைய தன்மை இதுதானே. அவள் விவாஹத்திற்குப் பல தினங்கள் முதற்கொண்டே, கல்யாண காரியங்களையெல்லாம் செவ்வனே மேல்பார்த்து வந்தாள். விவாஹ காலத்திலுங்கூட அவ்வாறே கற்சிலையைப்போல், ஒரே தன்மையாய்ச் செய்யவேண்டிய சடங்குகளையெல்லாம் செய்தாள். இவ்விவாஹத்தைப் பற்றி அவள் முழு அபிப்ராயம் கொண்டவளில்லை என்பது ஒருவருக்காவது தெரியும்படி அவள் இடங்கொடுக்கவில்லை. அவள் முகத்தைச் சற்றுகூடச் சுளித்துக்கொள்ளவில்லை. கல்யாணச்சடங்குகள் யாவும் முடிந்துவிட்டன. ஹேமலதையும் ஸிரீஷன் பக்கம் போய் நின்றாள். நவகுமாரரும் அவருடைய மனைவியும் தம்பதிகளை ஆசீர்வதித்தனர். எத்தனையோ நாட்களாய், எவ்வளவோ கஷ்டப்பட்டு உள்ளே அடக்கிவைத்திருந்த அவளுடைய மனக்குறை அப்போது அவளையும் அறியாமலே வெளி வரலாயிற்று. நவகுமாரருடைய மனைவியின் கண்கள், மேலேஎங்கேயோ பார்க்க, நெடிய ஒரு பெருமூச்செறிந்துவிட்டு உள்ளே சென்றாள். அதுகூட இராமல் போய்விடுமா?

ஒரு வாரமாயிற்று. கல்யாணச் சந்தடியெல்லாம் ஒருவாறு ஓய்ந்தது. ஹேமலதையும் பழையபடி தன் வீட்டுவேலைகளைப் பார்க்கத் தொடங்கினாள். அப்போது ஒருநாள் காலை, ஹேமலதையின் தாயார் வீட்டுச் சாவிகளைக் கையிலெடுத்துக்கொண்டு வந்து, அவளைப் பார்த்து, “குழந்தாய், உனக்கு வீட்டு வ்யவஹாரங்களைப் பார்த்துக்கொள்ளப் போதுமானயுக்த வயது வந்துவிட்டது. உன் தகப்பனாருக்கு வேண்டிய ஸுச்ருஷையெல்லாம் குறைவில்லாமல் செய்துகொண்டு, உன் புருஷருடைய மனம் கோணாமல் அவருக்கு த்ருப்தியுண்டாகும்படி நடந்துகொண்டு, பந்துமித்ரர்களைக் கைவிடாமல் பக்ஷமாய் ஆதரித்துவருவது உனது கடமையாகும். உன்னைஅடுத்திருப்பவர்களையும், உன்கீழ் ஊழியஞ் செய்பவர்களையும் ஒருபோதும் கடிந்துகொள்ளாமல் அவர்களுக்கு ஒரு தாயாரைப்போல், சாந்தமாயும் பக்ஷமாயும் இருப்பது நலம். இவ்வுலகத்தில் எனக்கு ஏற்பட்ட வாழ்நாட்கள் ஏறக்குறைய முடிவுக்கு வந்துவிட்டன. இவ்வுலகில் என் வேலையை நான்செய்து முடித்தாயிற்று. இனி அதிக காலம் நான் ஜீவித்திருக்கமாட்டேன். இனிமேல் இந்த ப்ராணன், சரீரத்தைவிட்டு அகலும்தினம் வரைக்கும், பகவத் ப்ரியமான கைங்கர்யங்களில் என் காலத்தைக் கழிக்க வேண்டுமென்று உத்தேசித்திருக்கிறேன். ஈசுவரனுடைய க்ருபையால் உனக்கு ஸகல ஸம்பத்துகளுமுண்டாகி, புத்ர பௌத்ரர்களுடன் நீ நல்லவளென்று பெயரெடுத்து நீடூழிகாலம் வாழ்ந்திருக்கவேண்டும்” என்று ஆசீர்வதித்து அவளிடம் வீட்டுவேலை மேற்பார்வையை ஒப்புவித்தாள்.

ஹேமலதை கண்களில் ஜலம் ததும்பலாயிற்று. தாயாரைவிட்டுப் பிரிய மனம் வராமல் அவளைத் தன்னுடனிருக்கும்படி பல முறை வேண்டிக்கொண்டாள். அவள் ஒரே பிடிவாதமாய் இருக்கமாட்டேனென்று சொல்லிவிட்டாள். ஹேமலதை, தாயாரைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு தேம்பித்தேம்பி அழலானாள்.

அன்றையதினம் தொடங்கி, நவகுமாரருடைய மனைவி ஸம்ஸார விரக்தையாய் விட்டனள். காலைமாலை இரண்டு வேளைகளிலும், கோயில்சென்று ஸ்வாமியைத் துதிப்பதே தொழிலாகக் கொண்டாள். கோயிலிலிருந்து வந்து, சிறிது ஆகாரம் உட்கொண்டுவிட்டு, மீதிவேளை யெல்லாம் கூடத்து மூலையொன்றில் உட்கார்ந்து ஜபம்செய்த வண்ணமாயிருந்து வந்தாள்.

---

அத்யாயம்—2

பழைய நினைவும், பதிபக்தியும்

குழந்தை ப்ராயம் முதற்கொண்டு ஹேமலதை வீரீஷனைத் தன் விளையாட்டுத் தோழனாக நேசித்து வந்தாள். இப்போதோ ஹேமலதை நல்ல யுவதி; வீரீஷனும் யௌவன புருஷன்; இருவரும் தம்பதிகள்; விளையாட்டு நேசத்துக்குப் பதிலாக இப்போது அவர்களுக்குள் காதலென்னும் புதிய நேசம் ஏற்பட்டது. வீரீஷனுடைய நற்குண நன்னடத்தைகளை ஒவ்வொன்றாகக் கண்டு, ஹேமலதை ஸந்தோஷப்படலானாள். தெளிந்த சாந்தத்துடன் புன்னகை தவழும் முகத்தின் பின்னால் நல்ல சித்த உறுதிப்பாடும், உள்ளத்தில் கொண்ட விஷயத்தைக் கைவிடாத மனோதிடமும் குடிகொண்டிருப்பதை அவள் சீக்ரம் க்ரஹித்துக் கொண்டாள். அவனுடைய ஸத்யம் தவறாத நெறியையும், கள்ளங்கபடற்ற குணத்தையும் கண்டு அவள் அகமகிழ்ந்தாள். ஆயுள் முழுவதும் தனது உயிர்த்துணைவனாகக் கடவுளால் நியமிக்கப்பட்டுப் பெற்றோர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஸத்யஸந்தனும் வீரீஷனை ஹேமலதை தெய்வமாகப் பூஜித்துவந்தாள்.

வங்காளத்து ஜமீன்கள் எல்லாவற்றுள்ளும், சக்தியிலும் செல்வத்திலும் கீர்த்தியிலும் சிறந்து விளங்குவதான ஜமீனுக்குரிமை கொண்டாடுபவளாகிய ஹேமலதை உயர்குலத்தில் பிறந்து உயர்குலத்தாருடன் வளர்ந்து வந்த ஒரு சிறுவனுக்கு மாலையிட்டாள். அவள் தன் கணவன் ஏழையாயிருந்தவன் என்பதைப்பற்றிக் கனவிலும் கருதவில்லை. குணமிருக்க, அவள் பணத்தைப்பற்றிக் கடுகளவும் சிந்திக்கவில்லை. இத்தகைய ஸத்ய ஹரிச்சந்திரனும், ஸர்குணக்குன்றும், பூஜ்யதைக்கருகனுமான புருஷன் தனக்குக் கிடைத்தது, தன் பூர்வ கர்மபலனெனக் கருதி, அக்கணவன் மனம் கோணாதபடி த்ருப்திகரமாய் இல்லறத்தை நடத்திவந்தாள் ஹேமலதைக் கட்டழகி.

சதிபதிகளிருவரும் அந்யோந்ய தம்பதிகளாகக் காலம் கழித்துவந்தனர். சில வருஷங்களாயின. நவகுமாரர் தினேதினே விருத்தாப்பியம் அதிகரிக்கலானார். ராஜ கார்யங்களை அவர் முன்போல் கவனமாய்ப் பார்த்துவர ஸாத்யமில்லை. மஹா புத்திசாலியாகிய வீரீஷன், ஜமீன் விஷயங்களில் தினேதினே சதுரனாகி வந்தான். கடைசியில், நவகுமாரர் ஜமீன் விஷயத்தைப்பற்றிக் கவனிப்பதையே விட்டுவிட்டார். வீரீஷனே ஸர்வ வ்யவஹாரங்களுக்கும் பொறுப்பாளியானான். நிஷ்கபடியான ஹேமலதையும் பெரிய மனுஷியாகி, வீட்டு அலுவல்களையெல்லாம் செவ்வனே பார்த்து வந்தாள். வீட்டிலுள்ளவர்கள் யாவரும் அவளுடைய இனிய மொழிகளையும், மந்தஹாஸம் தவழும் வதனத்தையும், கருணைபொழியும் கண்களையும் கண்டு, அவளைத் தம் தாயெனப் பாவித்து நேசித்துவந்தனர். வீட்டு வேலைகளெல்லாம் ஒழிந்ததும், ஹேமலதை தன் புருஷன் பக்கம்போய் உட்கார்ந்துகொண்டு, தனது மாதுர்ய வசனங்களாலும், பதிபக்தி மர்யாதைகளாலும், உபசாரங்களாலும் அவனுடைய ஆயாஸத்தையும் மனக்கவலைகளையும் மாற்றி வருவாள்.

நல்ல பதிவ்ரதா சிரோமணியவள்; அதைப்பற்றிக் கிஞ்சித்தும் ஸந்தேஹமில்லை. வீரீஷனே தெய்வமெனக் கருதியவள். அவனை அந்தரங்க சுத்தியுடன் நேசித்துப் பூஜித்து வந்தாள். இருந்தாலும், அவளுடைய மனதில் ஓர் எண்ணம் அடிக்கடிவந்து தோன்றிய வண்ணமாயிருந்தது. தனது குழந்தைப் பருவத்தில் தன்னுடைய ஆப்தமித்ரனாயிருந்து, தான் யுவதிதசையை யடையுந்தருணத்தில் தன்னை விட்டகன்ற அவஸரமும் ஆத்ரமுமுடைய படபடப்பான இளைஞனின் ஞாபகம் அவளை விட்டு அகலவில்லை. நரேந்த்ரனுடைய ப்ரகாசமான முகமும், விசால நேத்ரங்களும், ஆண்மையான பார்வையும், வீர தேஜஸும் இப்போது அவள் மனக்கண்ணாடியில் ப்ரதிபலிக்க, அவற்றினின்றும் அவள், குழந்தைப் பருவத்தில் புலப்படாத நூதன அர்த்தங்களை க்ரஹிக்கலானாள். நல்ல ராஜவம்சத்தில் பிறந்த அவ்விளங்குமரனுக்குப் பால்யத்தில் உண்டான கஷ்டநஷ்ட தௌர்ப்பாக்யங்களையும் அவற்றையெல்லாம் அவன் பொறுமையுடன் அனுபவித்துக் கடைசியில் அரிய தைர்யத்துடன் அவைகளின்மீது வெற்றிகொண்டதையும் நினைத்து அவள் பெருமூச்செறிந்தாள். வீரநகரத்தில், உத்யானவனத்து ஆலயத்தின் அருகே, கண்களில் ஜலம் ததும்ப, அவன் இரண்டொரு வார்த்தைகளைக் குழறிவிட்டுத்



தன்னை விட்டுப்பிரிந்து சென்றதை நினைத்துக் கொள்ளும் தோறும், அவளுடைய முகம் சிறிது மேகங்கொண்டது. இவற்றையெல்லாம் அடிக்கடி அவள் தன்கணவனிடம் சொல்லிக் கொண்டிருப்பளோ?

இவ்வகையான நினைவுகள் அடிக்கடி வந்து கொண்டிருந்தபோதிலும், ஹேமலதை சிந்தையில்கூடத் தன் பாதிவ்ருத்யத்துக்கு லோபம் செய்யவில்லை. பதிபக்தியிலும், பதிவிசுவாஸத்திலும் அவள் என்றைக்கும் ஒரே சீராக இருந்துவந்தாள். நரேந்த்ரன் வீரநகரத்தில், நல்ல ஸ்திதியில் ஸந்தோஷமாயிருந்துகொண்டிருந்தால், அவள் அவனை அடிக்கடித் தேவிபுரத்துக்கு வரவழைத்துத் தன் கணவனும் தானுமாய்ப் பால்யத்தில்போல அவனுடன் ஸ்நேஹபாவமாய் உரையாடிக் கொண்டிருப்பாள். ஆனால் அவன் தன் ஜமீனையிழந்து நாடோடியாய் ஊரெல்லாம் அலைந்துதிரிந்து கடைசியாய்ப் போர்த்தொழில் மேற்கொண்டு, ப்ரதிநிமிஷமும் தன் உயிரை மாய்த்துக்கொள்ளும் நிலைமையில் அவன் பட்ட கஷ்டங்கள் சொல்லிமுடியாது. இவற்றையெல்லாம் உணர்ந்த ஹேமலதையின் மனம் மிகவும் கலங்கியது. தூரதேசங்களில் அவன் புரியும் ஸாகஸங்களைப்பற்றிக் கேட்பதில் அவள் மனதில் ஒருபக்கம் கஷ்டமும், இன்னொருபக்கம் ஒருவித இஷ்டமும், ஆவலும் உண்டாயின. நரேந்த்ரனுடைய தற்கால சரித்ரத்தைக் கேட்கும்போதெல்லாம் அவள் பால்யத்தில் தாங்களிருந்த நிலைமையைப்பற்றி நினைத்துக்கொள்வாள்.

"அக்கா. ராஜமஹலினின்று ஏதாவது விசேஷம் உண்டா? அதற்கப்புறம் ஏதாவது ஸமாசாரம் தெரியவந்ததா?" என்று ஹேமலதை சைவலினியைக் கேட்டாள்.

"ஹேமலதே. பாதுஷாவின் ஸைந்யங்கள் ஆப்கானியர்களுடன் அமர்புரிவதற்காக மறுபடியும் தக்ஷிணம் சென்றிருப்பதாக வீரீஷனுக்குஸமாசாரம் வந்தது. நமது நரேந்த்ரனும், உடன் சென்றிருக்கின்றனனாம். கவலைப்படவேண்டிய அவசியமே கிடையாது. எப்போதும் போலவே பாதுஷாவின் ஸைந்யங்கள் வெற்றிகொள்ளும். நரேந்த்ரனும், வீரக்கழல் புனைந்து ஜயபேரிகையுடன் திரும்பிவருவான். அவனைப்பற்றி நாம் பயப்படவேண்டியதில்லை."

ஹேமலதையின் முகம் வெளுத்துப்போயிற்று. அவளாலேயும் அடக்கமுடியாமல் அவள் கண்களினின்று நீர் சிந்தலாயிற்று.

சைவலினி அவளைப்பார்த்து "ஹேமலதே. வாஸ்தவந்தான். அந்த வீர இளைஞன் ஊரையிழந்து, பந்து மித்ரர்கள் துணையற்றுப் பரதேசிபோல் அலைந்து திரிவதைக் கேட்டால் எல்லோருக்கும் பரிதாபகரமாய்த்தானிருக்கிறது" என்றாள்.

ஹேமலதையின் கண்களினின்று நாலைந்து துளிகள் அதிவேகமாய்ச் சிந்தின. அதைத் துடைத்து, முகத்தை வேறொரு பக்கம் திருப்பிக்கொண்டு, ஹேமலதை மௌனமாயிருந்தாள்.

"ஹேமலதே. அழாதே. வெகு சீக்ரத்தில் நமக்கு இந்தத் துக்கம் நீங்கும். சண்டைகள் சீக்ரம் ஓய்ந்துவிடும், நரேந்த்ரனும் உடனே வீரநகரத்துக்குத் திரும்புவானென்று என் ஸஹோதரன் சொல்லுகிறான். வீரீஷன், நரேந்த்ரனைத் தன்னுடன் பிறந்தவனைப்போல் நேசித்துவருகிறானென்பது உனக்குத் தெரியாத விஷயமன்று. அவனை மறுபடியும், அவனுடைய பாட்டனார் ஸ்திதிக்குக் கொண்டுவந்து பார்க்கவேண்டுமென்று அவன் தீர்மானித்திருக்கிறான். அவன் விஷயமாய் இவன் அதிகக் கவலையெடுத்துக்கொண்டிருக்கிறான்" என்று சைவலினி கூறினாள்.

"அக்கா, தங்களுடைய ஸஹோதரரைவிட பெருந்தன்மை அதிகமாயுள்ள மனிதரைக் காண்பதரிது. அவர் அவ்வாறே செய்துமுடிப்பாரென்பதற்கு ஐயமில்லை. இத்தகைய புண்ய புருஷரை யடைய நான் என்ன பாக்யம் செய்திருந்தேனோ? என்னுடைய பாக்யமன்று, பகவானுடைய க்ருபைதான் என்று சொல்லவேண்டும்" என்றாள் ஹேமலதை.

"ஹேமலதே, இத்தனை வருஷங்கள் கழித்து ஊருக்குத் திரும்பிவரும்போது அவன் அதிக ஸந்தோஷத்துடன் வருவான். நாமெல்லோரும் அவனை வரவழைத்து உபசரிப்போம். உன் பால்ய நேசனுக்கு ஏற்ற மனைவியைத் தேடிவைப்பது உன்னுடைய கடமையாகும்" என்றாள் சைவலினி.

"திரும்பிவந்தபின்னர், என்னால் இயன்ற மட்டும் நான் அவனுடைய வாழ்நாட்களை

ஸுகமுறச் செய்வேன்" என்று ஹேமலதை கூறினாள்.

"ஹேமலதே, நாம் வீரநகரத்திலிருந்தபோது அவன் நம்மைக் குளத்தங்கரைக்கு அழைத்துப்போய் தன் குடும்ப சரிதங்களைச் சொல்லுவானே அது ஞாபகமிருக்கிறதா உனக்கு? அந்த ஸமயங்களில் தன் குடும்பத்தின் பெருமைகளைப்பற்றிப் பேசும்போது அவனுடைய கண்களில் பெருகின ஜலத்தையும், முகத்தில் தோன்றிய ப்ரகாசத்தையும் இன்னும் நான் மறக்கவில்லை."

ஹேமலதை பதிலொன்றும் சொல்லவில்லை. அவளுக்கு அந்தக் கண்ணீரும், அந்த வீரதீர வார்த்தைகளும் நன்றாய் ஞாபகமிருந்தது.

"அதற்கு அப்புறம் அந்தப் படகுப் பந்தயமும், அகஸ்மாத்தாய் நேர்ந்த அந்தத் துர்ஸம்பவமும் உண்டாயின. அதற்குப் பின்னர், நாம் அவனைக் காணவேயில்லை. நம்மிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் ஊரைவிட்டுப் போய்விட்டானே! போவதற்குமுன் நம்மை வந்து பார்த்துவிட்டுச் செல்லலாகாதா?"

"சைவலினி, ராஜமஹல் செல்வதற்குமுன் அவர் வந்திருந்தார்."

"நான் பார்க்கவில்லையே, நீ பார்த்தாயா?"

"அவன் போகும்போது வழியில் என்னைப் பார்த்துவிட்டுச் சென்றான். நாழிகையாயிற்று: அக்கா, என் நாதர் நமக்காகக் காத்திருப்பார். நாம் போவோம்; வாரும்."

சைவலினி இளம்பிராயத்திலேயே கணவனையிழந்துவிட்டாள். ஆதலால், அவள் கல்யாண ஸுகம் இன்னதென்பதே அறியாதவள். நமது பரதநாட்டில் விதவைகளின் கதி துயரத்துக் கிடமானதாயிருக்கிறது. மாடுபோல் உழைப்பதே அவர்களுடைய தொழிலாகிறது. அவர்கள் இவ்வுலகவின்பங்கள் ஒன்றையும் அறியாதவர்கள். அவர்களுக்கு இவ்வுலகவாழ்க்கையில் பற்று, ஸுகம் ஒன்றுமிராமல் போகிறது. இவ்வளவு துன்பங்களுக்கிடையிலும், நமது ஹிந்துகுடும்பங்களில் அவர்களுக்கும் ஓர் அலுவல் ஏற்படுகிறது. சீராய் நடந்துவரும் குடும்பங்களில் அவர்களுக்குப் பூஜ்யதையான ஸ்தானம் ஏற்படுகிறது. தங்களுடைய நெருங்கின பந்துக்கள் வீடுகளில், அதாவது தமயன், தகப்பனார், தங்கை இவர்களுடைய குடும்பங்களின் வீட்டு வ்யவஹாரங்களில் ஸர்வாதிகாரத்தையும் இவர்களே செலுத்திவருகிறார்கள். தனக்கே ஒரு பிள்ளை யென்றில்லாத விதவை, தன் சுற்றத்தார்களுடைய குழந்தைகளை வளர்த்து, தகப்பனார், தாயார், உடன்பிறந்தார் இவர்களுக்காக உழைத்து, வீட்டுவேலைகள், வீட்டுச்செலவுகள் யாவற்றையும் ஸரியாய்ப் பார்த்துக்கொண்டு வருகிறாள். அவ்வீடுகளில் அவளைக் கேட்காமல் மற்றவர்கள் ஒரு காரியத்தையும் நடத்துகிறதில்லை. விடியற்காலையிலெழுந்து இரவு பன்னிரண்டு மணிவரைக்கும் ஓயாமல் ஏதாவது வேலைசெய்துகொண்டிருப்பாள். அவளைப்போல் ஸ்வயநலம் பாராட்டாமல் பரோபகாரத்திலேயே காலங்கழிக்கும் மக்கள், இவ்வுலகத்திலேயே கிடையாது. மற்றவர்களுக்காக உழைப்பதிலேயே அவள் தன் ஆயுள் முழுமையும் கழிக்கிறாள். ஓழிந்த வேளைகளில் தெய்வத்தைத் துதித்து வருகிறாள். அதுவே அவளுடைய காரியம். அதுவே அவளுக்கு ஆனந்தம். ஏதாவது வேலைசெய்துகொண்டிருக்கும்போதுகூட, அவள் வாய் ஏதாவது சுலோகங்களை முணுமுணுத்துக்கொண்டேயிருக்கும். அவளுடைய கருத்தெல்லாம் தெய்வத்தினிடமே பொருந்திவிடுகிறது. ஆஹாரஸுகங்களை அவள் பொருட்படுத்துவதேயில்லை. அநேகமாய் அவர்களுக்கு ஒரேவேளை அன்னம்தான். இரவில், ஏதாவது பழம், காய் எடுத்துக்கொண்டால் கொள்வாள். இல்லாவிட்டால் அதுவும் கிடையாது. அவளைப்போல் பட்டினிகள் எவரும் இருக்கமாட்டார்கள். மொத்தத்தில் அவளுக்குத் தேகமென்ற ஆசையே ஒழிந்துவிடுகிறது. நமது தலைவிதி, பூர்வஜன்மத்தில் செய்தபூஜை, பகவத் ஸங்கல்பமென்று மனதைத் தேற்றிக்கொண்டு, இந்த ஜன்மத்திலாவது நல்ல பூஜையைச் செய்து நல்ல வழியைத் தேடிக்கொள்வோமென்று, அவள் மனம் நொந்துகொள்ளாமல், ஒருவித த்ருப்தியுடன் தன் வாழ்நாட்களைப் பிறருடைய கைங்கர்யங்களிலேயே கழித்து வருகிறாள். வீட்டிலுள்ளோர் அனைவரும், அவள்மீது அநுதாபங்கொண்டு அவள் மனம் நோகாமல் அவளை மர்யாதையாய் நடத்தி வருகிறார்கள். நாளடைவில், அவளிடம் யாவருக்கும் ஒருவித அன்பும் பக்தியும் ஏற்பட்டுவிடுகிறது. அவளுக்கு இருப்பது ஒரே குறை



தான். அந்தக் குறை தீராக்குறை யாதலால் மனதைத் தேற்றிக்கொண்டு விடுகிறாள். வேறு யாதொரு மனோவேதனையுமில்லாமல், அவள் மற்ற ஜனங்களைவிட வெகுகாலம் வரைக்கும் ஜீவித்திருக்கிறாள்.

சைவலினி மஹா சாந்தகுண முடையவள். தன்னயம் என்பதே சிறிது மிராதவள். எப்போதும் அன்புடனே வார்த்தையாடுவள். எக்காரியத்தையும் தீர ஆலோசித்துச் செய்யத் தொடங்கும் இயல்பினள். குழந்தைப் பருவத்திலேயே ஹிரீஷன், சைவலினி இருவரும் பெற்றோர்களைப் பறிகொடுத்துவிட்டார்கள். அது முதற்கொண்டு சைவலினியோ ஹிரீஷனை யெடுத்து வளர்த்துவந்தாள். ஹிரீஷனுக்கு இப்போது நல்ல உயர்பதவி வந்தும், அவன் தன் தமக்கையைத் தெய்வமாகக் கருதி அவளிடம் அதிக மர்யாதையாயிருந்தான். வீட்டு வ்யவாஹாரங்களாயினும் ஸரி, ராஜவ்யவஹாரங்களாயினும் ஸரி, அவளுடன் கலந்து யோசிக்காமல் அவன் ஒன்றும் செய்வதில்லை. அவளும், ஹிரீஷன் ஹேமலதை இருவரையும் ப்ராணனாக நேசித்துவந்தாள். வீட்டில் சமையல்காரர்கள் பலரிருந்தும், ஹிரீஷனுக்குத் தன் தமக்கையேதான் சமைத்துப்போடவேண்டும். ஹிரீஷன் தன் மந்த்ரிகளுடன் வந்து அப்போதைக்கப்போது ஜமீன் விஷயங்களில் தன் தமக்கையின் அபிப்ராயத்தைக் கேட்டுச் செல்வான். ஹேமலதையும் ஹிரீஷனும் சைவலினியும் ஒன்றாய் உட்கார்ந்துகொண்டு வெகுநேரம் வார்த்தையாடிக்கொண்டிருப்பார்கள். ஜமீன் வ்யவஹாரங்களைக் குறித்து அவர்கள் பேசும்போது ஹேமலதை கவனமாய்க் கேட்டிக்கொண்டிருப்பாள். ஹேமலதையும் ஹிரீஷனும் படுக்கைக்குப் போன பிறகு, ஜமீன்தார்வீட்டில் நிறைந்திருந்த சுற்றத்தார்கள் ஒருவர் தவறாமல் போஜனஞ்செய்தார்களா என்று கவனித்துவிட்டுச் சைவலினி நல்ல நிசிக்கு ஸரியாய்ச் சிறிது ஆகாரம் உட்கொண்டு படுத்துக்கொள்வாள்.

**M. S. H. Thompson Esq., Inspector of European & Training Schools** writes about the Viveka Bodhini.—* * interesting Magazine. * * written in simple but good Tamil.



# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### II. நகுஷன் சரித்திரம்

### 1. வேத நுட்பம் கேட்ட சருக்கம்

யயாதியின் தகப்பனார் நகுஷன். இந் நகுஷன் தர்மாத்மாதான். ஆனால் இவனுக்கு விஷயப் பற்றுமாத்திரம் அதிகமாக உண்டு. இதனால், இவன் அரசாட்சி ஒரு வழியிலும் மனுநெறிக்கு முரணாகப் போகவில்லை. இவன் ராஜ்ய காரியம் கவனிக்க வேண்டிய காலங்கள் நீங்கலான மற்றைய வேளைகளை, விஷய ஸுகாநுபவத்திலும் அது சாஸ்திரவரம்பு மீறாது வந்தமைவதற்கு வேண்டிய வைதிக கர்மாக்களான யாக, தபஸ் விருதாதிகளை அனுஷ்டிப்பதிலும், செலவிட்டுவந்தான். இப்படியிருக்கையில், வேத நுட்பந்தான் இன்னது என்று கேட்கும் நற்றருணம் இவனுக்கு வாய்ந்தது.

ஒருநாள் ப்ரஹ்மாவே நேரிட நகுஷனிடம் அதிதியாக வந்து சேர்ந்தார். அப்பொழுது, சாஸ்திரவிதிப்படி, நகுஷன் கோமேதவழியில் அவரை வழிபட எண்ணி, ஒரு பசுவைக் கொணர்ந்து மந்திரங்களை முன்னிட்டு அதைக் கொல்ல முயற்சிகள் செய்தான். யூபஸ்தம்பத்தில் கட்டுண்டிருந்த இந்தப் பசுவின் அருகில் கபிலபகவான் வந்துபார்த்து அதன் கொடிய நிலையைக்கண்டு பரிதவித்து 'ஐயோ, வேதமே! இப்படியெல்லாம் கொடியகொலை ஸாதாரணமாக நடத்த இடங்கொடுத்து விட்டாயே!' என்று கூறிப் பெருமூச் செறிந்தார். அதே தருணத்தில், அந்தப்பசுவுள் ஸ்யுமரச்மி என்ற ருஷி புகுந்துகொண்டு, 'வாயை மூடும் ஐயா கபிலரே! என்ன வேதநுட்பம் தெரியாதவராகப் பிதற்றுகிறீரே!' என்றுஎதிர்த்துவாதாடத் தொடங்கினார். ப்ரஹ்மாவும் நகுஷனும் இதைக் கேட்டுக்கொண்டே இருந்தனர்.

கபிலபகவான்:—ஏனையா? என் சொற்களைப் பிதற்றல் என்கிறீரே?

ஸ்யுமரச்மி:—நீர் கூறுகிறபடி வேதம் குற்றங்கூறத் தகுந்ததானால், பெரியோர்கள் எல்லோரும் அதை ஈச்வரன் வாக்கென்றும் ருஷிகளால் கேட்டறியப்பட்டது என்றும் கொண்டாட இடமில்லையே! மூச்சுக் காற்றுப்போல

இயற்கையாகவும் ஒருவிதப் பயனையும் கருதப்படாதும், குறைவின் நாக்கே இல்லாத பரம் பொருளிடமிருந்து வந்த இந்த வேதம் யஞ்ஞ யாகாதிகர்மாக்களைச் சிறப்பித்துக் கூற, நீர் மாத்திரம் அதையே ஆதாரமாகக்கொண்டு, வேதத்தைக் குற்றங்கூறுநீரே! உமது மொழிகளை என்னென்று எடுத்துக் கூறுவது?

க:—நான் வேதத்தைக் குற்றங்கூறவில்லை. அதில் அதிகாரிகள் ஏற்றத் தாழ்விற் கேற்ப, பலவித கர்மாக்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கும் இயற்கையைக்கொண்டே வைதிகர்கள் விடாது கொடிய காரியங்கள் செய்யும் நிலைக்கு வந்துவிடும்படி யாகிவிட்டதே என்று மாத்திரம் பரிதவித்தேன். இதைத்தவிர வேறொன்றும் இல்லை.

ஸ்யு:—இதென்ன? வேதம் பலவித்மாகக் கூறியிருக்குமா என்ன? எல்லாவற்றிற்கும் நோக்கம் ஒன்ருக இருப்பதால், எப்படி ஒன்று மற்றொன்றுக்கு முரணாக இருக்கும்! தகுந்த கர்மாக்களைத் தானே சிறப்பித்து வைதிகர்களை நற்கதியை அணுகச் செய்யவேண்டும் என்பதுதான் வேதங்களின் நோக்கம்!

க:—வேதங்களில் வர்ணாச்ரம தர்மங்களுக்கு ஏற்றபடி கர்மாக்கள் கூறப்பட்டுள்ளன. சிலவிடங்களில் கர்மாக்களைச் செய் என்றும், வேறு சிலவிடங்களில் கர்மாக்களை செய்யாதே என்றும் அதில் காணப்படும். இவைகளுள் எது தாழ்ந்தது எது ஏற்றமானதென்று தீர்மானிப்பது மிகக்கடினம். எல்லாவற்றையும் ஆய்ந்தோய்ந்து பார்த்தால், அடையவேண்டிய பரமமுடிவானமோக்ஷத்திற்கு ஒருவித கர்மாவும் உதவியாக விராது. அஹிம்ஸை, ஒன்றை ஒருவிதமான வருத்தத்துக்கும் கூடியவரையில் உள்ளாக்காதிருக்க வரவர முயலுவதே, சிறந்த தர்மம்; இதைவிடச்சிறந்ததர்மம் ச்ருதியாலும், யுக்தியாலும், அனுபவத்தாலும் கண்டறிய முடியாது. ஆகவே, யாகத்தைச் செய்து, வீணாக ஆட்டைக் கொன்று வருத்துவதில் என்ன பலன் கண்டுவிட்டீர் நீர்?

ஸ்யு:—ஸ்வர்க்கம்பெற யாகஞ்செய் என்றல்லவா சுருதிகள் கூறும்? மேல் ஏற்படும்பலனது சிறப்பைக் கோராது எப்படி ஜனங்களால் வீணாக அஹிம்ஸையை மாத்திரம் கைக்கொள்ளமுடியும்? பசு பக்ஷியாதிகள் யாகத்தில் உபயோகப்பட்டு மேன்மைபெறவேதான் ஏற்பட்டவை. இதற்கேற்பவே, ச்ருதியும் ஸ்தாவர ஜங்கமாதிப் பொருள்கள் யாகத்திற்கு அங்கங்கள் என்று கூறும். அவற்றில், ப்ராணிகளை யாகாதி கர்மாக்களுடனேதான் வெளிப்படுத்தினார் ப்ரஹ்மா என்றுள்ளது. தகுந்த ப்ராணிகளைத் தேடியெடுத்து யாகம் செய்தால், அதில் உபயோகப்படும் எல்லா விதப்பொருள்களுக்கும் பல் பிறவியில் அடையவேண்டிய சிறப்பு அடுத்த பிறவியிலேயே ஏற்பட்டுவிடும். யாகமின்றி மேன்மைபெற அவைகளுக்கு வேறு வழியே இல்லை. ஆகவே, யாகம் நடைபெறுவதால் அதில் ஸம்பந்தப்பட்டவை எல்லாம் ஒன்றை ஒன்று மேன்மைப் படுத்திக்கொள்ளுகின்றன. வேதம் அதன் போக்கு எல்லாவற்றையும் நன்கு உணர்ந்த ப்ராஹ்மணனையே இந்த யாகம், பொருத்தது. அவனால் இது நடைபெற்றால்தான் எல்லாம் நற்கதிபெறும். ஒன்றுக்கும் கெடுதி வாராது, தானும், ஸுகம் பெறமுயலும் இந்த ப்ராஹ்மணனை ஸ்மிருதிகள் மைத்ரன் (உலகத்திற்கு உறவானவன்) என்றல்லவா அழைக்கும்? இப்படியிருக்க, நீர் வைதிககர்மாக்களில் தோற்ற மாத்திரத்தில் உள்ள வருத்தத்தைக் கண்டு அவைகளை முற்றிலும் பழித்துவிடலாமா?

க:—வைதிக கர்மாக்களை, அவைகளால் ஏற்படும் கொடுமைகளைக்கூட நோக்காது நடத்த வேண்டுமா?

ஸ்யு:—என்ன? ஹிம்ஸை! ஹிம்ஸை! என்று பெரும் பாடுபடுத்துகிறீரே! உலகில் ஹிம்ஸையே இல்லாது எதுதான் முடியும்? தோற்றத்தில் ஹிம்ஸைபோ விருப்பவை; ஆராய்ச்சியின்பேரில் ஸரிப்பட்டு விடுவதில்லையா? கட்டியை அறுப்பது ஹிம்ஸைதானே. அது, குணப்படுவதைக் கருதி அப்படிச் செய்வதே, என்பதால் அதுவே அஹிம்ஸையை விடச் சிறந்ததாகிவிடவில்லையா? ஆகவே, ஹிம்ஸை அஹிம்ஸை இவைகளை நமது புத்திக்குத் தோன்றியவாறு மதித்து ஹிம்ஸை போன்றவை கலந்துள்ள வைதிக கர்மாக்களை இகழ்ந்து விடலாமா?

க:—அப்படியானால் வேதங்கள் கர்மாக்களைச் செய்யாதே என்று கூறுவானேன்?

ஸ்யு:—மானிடர்கள் மனோ நிலையை நோக்கிக் கர்ம காண்டத்தில், வேதம் கர்மாக்களை



அவைகள் தரக்கூடிய விஷய ஸுக ஏற்றத்தையும் காட்டி, விதித்துள்ளது. அப்படி அவைகளில் முயல்பவர்கள் அவைகளுக்குக் காட்டப்பட்டுள்ள பலன்களின் எல்லைகளைக் கண்டதும் அவைகளில் வெறுப்புவந்து கர்மாக்களை விட்டுவிட எண்ணலாம். அவர்களை நோக்கி 'உங்கள் வர்ணாச்ரம நிலைகளுக்கு ஏற்ப, தகுந்த கர்மாக்களைத் தகுந்தபடி விட்டு விலகுங்கள்; உம் எண்ணம்போல ஒரே அடியாக அவைகளை நீக்கிவிடாதேயுங்கள் என்று எச்சரித்தது வேதம். மேலும் கர்மாவை விடு என்றுவேதம், கர்மாக்கள்செய்பவர்களைப்பார்த்துக் கூறியதா, அல்லது கர்மாக்களே இல்லாதவர்களைப் பார்த்துப்புதிய கர்மாக்களுள் புக வேண்டாம் என்று கூறியதா? வேதம் விதித்துள்ள கர்மாக்களில் கட்டுப்பட்டு ஒழுகாதவரை நோக்கி, வேதம் கர்மாவை விலக்க வேண்டியது அனாவச்யம். இதற்கு முகாந்தரங்கள்: (1) அவர்களிடம் வைதிக ஒழுக்கமே இல்லை விலக்குவதற்கு (2) கர்மாவை விலக்கு என்ற வேத ஒழுங்குப்படி கட்டுப்பட்டு நடக்கவேண்டியதும் அனாவசியம் அவர்களுக்கு, என்பவைகளே. ஆகவே, வைதிக கர்மானுஷ்டான பரர்களை நோக்கி வேதம் இவ்வாறு விலக்கியிருக்கவேண்டும். இப்படியானால், அவர்களை எப்படிக் கர்மாக்களைவிலக்கச் சொல்லியது வேதம்? கர்மாக்களையே செய்ய வேண்டியதில்லை என்பது வேதத்தின் கருத்தானால், அதை முதலில் விதிக்கவேண்டியதேயில்லை. முதலில் விதித்து, அவைகளின்படி நடப்பவர்களை நோக்கிக் கர்மாக்களை விலக்குவதால் அவைகளை எம்முகாந்தரத்தைக் கொண்டு முன்னர் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டதோ அவ்வாறு செய்வதே விலக்கப்பட்டதாகும். ஸ்வர்காதி விஷய ஸுகங்களைக் கருதாது விட்டு, நம்மை ஈடேற்ற வந்த கடவுள் கட்டளைகள் கர்மாக்கள் ஆதலால் அவைகளைப் பின்பற்றுவது ஈசன் வழிபாடு என்ற நோக்கத்துடன் கர்மாக்களை ஒருவன் செய்யவேண்டும் என்பதே வேதங்கள் கர்மாக்கள்செய்யாதே என்பதன் உண்மைப்பொருள்.

க:—கர்மாக்களை மாத்திரம் விலக்கிவிட்டு வேதம் நில்லாது, வேறு ஹிம்ஸைகளே இல்லாத க்ருச்ர சாந்திராயண ஜபாதி தபஸ்ஸுகளையும் வேதம் விதித்துள்ளதே. கர்மாக்கள் செய்தே தீரவேண்டுமானால் இவைகளுக்குக் கதி என்ன?

ஸ்யு:—உலகில் வர்ணாச்ரமங்கள் வேற்றுமையைப் போலவே, பணமுள்ள நிலை பணமில்லாத நிலை என்ற இரண்டு வேற்றுமைகள் உண்டு. இவ்விருதிறத்தாரும், யாகம் தபஸ் இவைகளைத் தமது ஆற்றலுக்கு ஏற்பச் செய்ய வேண்டும். ஆனால், பணச்செலவு மிகுந்துள்ள யாகங்கள் பணக்காரனுக்கும், அவை ஒன்றுமேயில்லாத தபஸுக்கள் ஏழைகளுக்கும் சிறப்பானவை. இதுபற்றியே, யாகாதிகளைச் செய்யாத தனவானையும், தபஸ்ஸு செய்யாத ஏழையையும்கல்லைக்கட்டி கடல் நடுவிலிறக்கி விடவேண்டும் என்று மறைவழி கூறும் ஸ்மிருதிகள். எதிர் ஏழைக்கும் பணம் ஏற்பட்டு விடுமானால், யாகாதிகளே அவைகளை நல்வழியில் செலவிடும் போக்குகள். ஆகவே, யாகாதி கர்மாக்களை விட்டு, தபஸை மாத்திரம் ஒருவன் பின்பற்றவேண்டும் என்பது வேதநோக்கமல்ல. இரண்டுவித கர்மாக்களையும் ஒவ்வொருவனும் தன் ஆற்றலுக்கு ஏற்ப, பின்பற்றவேண்டும் என்பதே அதன் கருத்து.

க:—வானப்ரஸ்த ஸந்யாஸிகள் யாகாதி கர்மாக்களையே விட்டு ஸுகதுக்கங்களைத்தாண்டி ஆனந்தமாக உலாவவில்லையா? அவர்களை வேதம் துதிக்கவில்லையா? இப்படியிருக்கக் கர்மா செய்தே தீரவேண்டும் என்பது வேத நோக்கம் என்று எப்படிக் கூறுவது?

ஸ்யு:— வானப்ரஸ்த ஸந்யாஸிகளுக்கு முன் ஆச்ரம கர்மாக்கள் நீக்கப்பட்டனவே ஒழிய, அவர்களுக்குக் கர்மாக்கள் இல்லாமல் போகவில்லை. அவர்களும் தம் ஆச்ரம கர்மாக்களை விட்டவர்களல்லர். மேலும் அவர்களுக்கு க்ரஹஸ்தர்கள் ஆதரவு முக்யமாக விருப்பதால் அவர்கள் ஓங்கிச் செழிக்கக்கூடக் கிருஹஸ்தன் தன் தர்மங்களான யாக தபஸ்ஸுகளைச் செய்யவேண்டியதுதான். முக்திநிலையை அணுகுவதற்கும், அணுகியவர்கள் நிலைப்பதற்கும் யாகாதிதபஸ்ஸுக்கள்வேண்டியதே. யாகாதி ஹோமப்புகைவழியே புண்ய ஜீவர்கள் ஸ்வர்கத்திலிருந்து புண்யபலன் ஓய்ந்ததும் வந்து இங்குப்பிறக்க இடம் ஏற்படும். ஆகவே யாகாதி கர்மாக்கள் முதலில் விஷய ஆசையை அதிகப்படுத்துவனவாயும், ஹிம்ஸையுடன்

கலந்தனவாயும் காணப்பட்டபோதிலும், யஜமானனுக்குப் புண்ய சிந்தையை வளர்த்து ஸங்யாஸாதி பெரியோர்கள் அனுக்ரஹத்திற்குவழியுண்டாக்கிப் புண்யவான்களே அவன் குலத்தில் வந்து பிறக்கும்படி செய்யும். இவனுக்குக் கர்பாதானம் முதல், அக்னிப்ரதானம் வரையில், எல்லாம் வைதிக மந்திரத்தை முன்னிட்டு, வேதவிதிப்படி நடக்க வேண்டியபடியால் எல்லாம் கடவுள் வழி பாடாகவே முடியும். ஆதலால் வைதிக கர்மாக்களை, ஹிம்ஸையையும் மேல் ஆச்ரமத்தார் அவைகளில்லாதிருக்கிறார்களே என்ற ஆத்திரத்தையும் முன்னிட்டு விடும், கிருஹஸ்தன் கடவுளை அணுகவே முடியாது. நற்கதி எப்படித்தான் அவனுக்கு வரும்! கபிலரே! வீணாக வேதத்தை ஒரு விதத்திலும் குற்றங் கூறவேண்டாம்.

---

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### தமயந்தி: (2) கனவு

ஆனாலும் ஸ்வயம்வரத்தில் நளனைக்கண்டு எவ்விதம் மாலையிடுவது என்றவள் சிந்தித்துக் கொண்டிருந்தாள். அதை நினைக்கும்போது அவளுக்குத் தெரியாமலே ஒரு திகில் உண்டாகியது. அதை எண்ண எண்ண, உள்ளம் பதைப்பள். அவ்வாறெண்ணும்பொழுது, தன் பக்கம் தன் காதலன் வந்து "கவலையுறேல்" என்று இன்பமொழி உரைத்ததாகவும் எண்ணுவள். ஒருக்கால் தன்னெண்ணம் எங்கு முடியாது விடுமோ என மனம் ஊசலாட மயங்கியுமிருப்பள்.

மற்றந்த நளனும் காதல் எழுப்பிய கற்பனை, கருத்தில் தமயந்தி யுருவைப் பிரதிபலித்துக் காட்ட, அவளது காம உருவைக் கருத்திலிருத்தி, மனமயங்கி, இன்பக் கனவிலாழ்ந்து, இவ்வுலகத்தை மறந்து, கலங்கி விளங்கினான். அவ்வன்னங்கள் மீண்டுவந்து நடந்த விஷயங்களை சொல்லக் கேட்டதும்,

கேட்ட செவிவழியே கேளா துணர்வோட
ஓட்டை மனத்தோ டுயிர்தாங்கி—மீட்டுங்
குழியிற் படுகரிபோற் கோமான் கிடந்தான்
தழலிற் படுதளிர்போற் சாய்ந்து.

தனது மனத்தைத் தமயந்தி கொள்ளை கொள்ள, பார்ப்பவர்க்கு வெட்ட வெளியைப் பார்த்துப் பிரமிக்கும் பித்தன்போல் நளன் காணப்பட்டான்; ஆசை நோயால்வரும் அனர்த்தம் மற்றெப்படி இருக்கும்?

### 3. மனச்செம்மை

"தீராத காமத் தழலைத்தன் செம்மையெனும்
நீரா லவித்துக் கொடுநின்று—வாராத
பொன்னாடர் ஏவலுடன் போந்தவா சொல்லித்தன்
நன்னாடுஞ் சொன்னான் நளன்"

"வெப்பு நோயர் நீரின் மூழ்கின் வெம்மையாறு மேகொலாம்?" என்றவாறு சுரம் வந்தவர்கள் நீரில் ஸ்நாநம் செய்தால் அச்சுரம் எங்காவது போகுமா? இம்மாதிரியே தமயந்திக்கும் நளனுக்கு முண்டான மன ஒத்துமையினால் ஏற்பட்ட காமவிகாரங்களை வேறாக எண்ணிச் செய்த சைத்யோபசாரங்கள் எல்லாம் வீணாயின. வீமராஜனும் தனது மகளது நிலையையும் அவளது வயதையும் எண்ணி அவளுக்கு மணஞ் செய்விக்க நினைத்துச் சுயம்வரம் ஏற்படுத்த மனங்கொண்டு மற்றையதேச மன்னர்களுக்கு ஓலை விடுத்தான்.

நிற்க. தேவலோகத்தில் ஒரு விசேஷம் நடந்தது. நாரதர், பர்வதர் என்னும் தேவ ரிஷிகள், பூலோகமெங்கும் ஸஞ்சரித்து, இந்திரலோகமடைந்தனர். அங்குத் தன் மாளிகையையடைந்த அவரை, இந்திரன் மரியாதை செய்து, க்ஷேம விசாரஞ்செய்து, "உத்தம வீரர்களாகிய, உலகில் அரசாளும் மன்னர்கள் இப்பொழுது இங்கு வருவதே இல்லை. அவர் எங்குச் சென்றனர்? விருந்தாக வந்தென்னை யவர் சந்தோஷ முண்டாக்காதிருக்கும்படி அவர் எங்குப் போய்விட்டனர்?" என்று கேட்டான். "அதற்குக் காரணமுண்டு. விதர்ப்ப நாட்டரசன் மகள் தமயந்தி நல்ல அழகி; வெகு உத்தமி. அவளுடைய ஸ்வயம்வரம் சீக்கிரத்தில் நடக்கப்போகிறது. அதை நாடி, அரசரெல்லாம் அங்குச் செல்கின்றனர்" என்று பதிலுரைத்தார். இவ்வாறு சொல்லும் பொழுதங்கு அக்கினி பகவானை முன்னிட்டுக் கொண்டு லோகபாலர்கள் அவ்வினிய மொழிகளைக் கேட்டுக்கொண்டே வந்தனர். இந்திர



னுடன் அவரும் அம்முனிவரது இன்பந்தரக் கூடியமொழிகளைக் கேட்டதும், "நாமும் அவ்விடம் போவோம்" என்று தமது விமானங்களில் ஏறி, விதர்ப்ப நாட்டை நாடி வரலானார்கள். அவ்வாறு அவர்கள் வரும் வழியில் பூலோக மன்மதனென்று யாவரும் மயங்கும்படி நளமகாராஜன் தனது தேரைக் கன வேகத்துடன் நடத்திவருவதைக் கண்டனர்; தமது விமானங்களை ஆகாயத்திலேயே நிறுத்திக் கீழேயிறங்கி வந்தனர்; நளனைக்கண்டு, பரீக்ஷிக்கும் எண்ணத்துடன், "உண்மைக்கும் புகழ்க்கும் உற்றிடமாய் விளங்கும் நளமன்னவனே! உம்மால் எமக்கோர் உபகாரம் ஆகவேண்டும். தயவுசெய்து எங்களுக்குத் தூதாகவேண்டும்" என்றவனை வேண்டினர். இதைக் கேட்டதும்,

"குறிப்பறிந் தீதலே கொடைமற் றின்னென
மறுத்தலே கேட்டபின் வழங்கல் ஆதலின்
பெறற்கரும் ஆவியும் பெட்பின் ஈகுவன்
திறப்பட யிவருளந் தெரிந்த தில்லையால்"

எனப் பலவிதம் எண்ணினான்; ஆனாலும், அவர் வேண்டுகோளை மறுக்க எண்ணம் பெறாதாகி "அப்படியே செய்கிறேன்? நீங்கள் யார்? உங்களுக்கென்ன செய்யவேண்டும்" என்று நளமகாராஜன் கேட்டான். "நான் இந்திரன்; அவர் அக்கி, வருணனன், யமன் என்னுந்தேவர்கள். நாங்கள் நால்வரும் தமயந்தி விஷயமாக வந்திருக்கிறோம். இவ்விஷயத்தை அந்தத் தமயந்தியிடஞ் சொல்லி, அவளை மணக்க விரும்பும் எங்களில் அவள் கணவனாக ஒருவரை வரிக்கும்படி அவளிடம் தெரிவிக்க வேண்டும்" என இந்திரன் பதில் சொன்னான். "போயும் போயும் என்னைத்தானா இக்காரியத்திற்குத் தூதாக அனுப்பவேண்டும்! எனக்கும் அவள்மேல் ஆசை; அவளுக்கும் என்னிடமப்படியே. என்னை இவ்வேலையில் அனுப்புவது உசிதமல்ல. என்னைக்கண்டதும் உங்கள் மேல் ஆசைகொள்வாளா?" என்று நளன் மறுத்துக்கேட்டான். "செய்வதாகச் சொல்லிப் பின் மறுப்பது தகுமா? நீ எப்படியாவது எங்களுக்கிந்த வேலை செய்ய வேண்டும்" என்று இந்திரன் மீண்டுஞ் சொன்னான். "காவலிலிருக்கும் அவளை யான் எப்படிக் காணமுடியும்? அந்தப்புரத்துள் போவதடுக்குமா?" என நளன் சொல்ல, "உன்னை யாருங் காணமுடியாது; நீ அந்தப்புரத்துள் போகலாம்; போ" என இந்திரன் கூற, "அப்படியே" என்று ஒப்புக்கொண்டு தமயந்தியின் மாளிகையை நளன் அடைந்தான்.

அங்குத் தோழிமாருடன் அழகிற் கழகு செய்யுந் திருமேனிவைபவத்துடன் தன் மனக்கோயிலில் சேமித்திருந்த காதல்விக்ரஹமாகிய தமயந்தி விளங்குவதை, தன் கண்ணாறக்கண்டான். அப்போது,

தேங்குவளை தன்னிலே செந்தா மரைமலரப்
பூங்குவளை தாமரைக்கே பூத்ததே—யாங்கு
மதுநோக்குந் தாரானும் வாணுதலுந் தம்மிற்
பொதுநோக் கெதிர்நோக்கும் போது.

ஆயினும் பெண்களது இயற்கை நாணத்தால் குனிந்து, தலை நிமிர நினைக்காளாகி "நீங்கள் யார்? எவ்வாறு நீங்கள் இவ்விடம் வந்தீர்கள்? காவலுடைய இம்மாளிகைக்குள் பிறரால் கவனிக்கமுடியாமல் எப்படி வரலானீர்கள்?" என அவனை மிகுவணக்கத்துடன் கேட்டாள்.

நளன்:—யான் தேவதூதன்; என் பெயர் நளன். உம்மை மணக்கத் தேவர்களாகிய இந்திரன், வருணன், அக்கி, யமன் ஆகிய இவர் வந்திருக்கின்றனர். தாங்கள் அவருள் ஒருவரை மணக்க வேண்டும் என்பது அவர் விருப்பம். சுபமங்கள முடையீர்! அவருள் எவரை மணக்க உமக்குப் பிரியம்? அவரது அனுக்ரஹத்தினால்தான் ஒருவரும் காணாதவிதம் இங்கு வந்தேன்; என்னை அவர் அனுப்பிய காரியமும் வீணாகாதென்று நம்புகிறேன். யான் சொன்னவற்றை நன்றாக யோசித்துப் பதில் கூறும்:

தமயந்தி:—தாங்கள் எவர் பொருட்டு வந்தீர்களோ அவர்க்கும் உமக்கும் அநந்த கோடி நமஸ்காரம்! தங்களைக் கண்டதும் ஒருபால் திகிலும், ஒருபால் அமைதியும் குதூஹலமும் அடைந்தேன். அவற்றின் உண்மை இப்பொழுதுதான் விளங்கிற்று. ஆயினும் எனக்குப் பயமில்லை. தாங்கள் என்னிடம் காதல் செலுத்தியதாக ஒப்புக்கொள்ளும்; தாங்கள் எதைக் கேட்பினுங் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். அன்னங்கள் சொன்னநாள் முதல், என் மனம் உம்மிடஞ்செல்ல, அன்னமிறங்காது இரங்குகின்றேன். தஞ்சமென்றடைந்

தோரைக் கைசோரவிடுதல் தங்களுக் கழகன்று!

நளன்:—லோகபாலர்கள் நேரிக வந்தும்மை வரிக்க விருக்க, கேவலம் என்னிடம், ஸாதாரண மனிதனிடம், ஆசைகொள்வது அழகா? நியாயமா? வலியவந்த சீதேவியை வேண்டாமென்று தள்ளுவாரு முண்டோ?

தமயந்தி:—அவ்வினிய பழமொழி எனக்குச் சிறிதும் பொருந்தாது. தஞ்சமென்று உம் பாதாரவிந்தங்களே பரம்பொருளெனநாடி வஞ்சனையற்ற மனத்துடன் யான் கூறுவன். தாங்கள் என்னைக் கைசோரவிட்டால், உமக்கென்று வைத்திருந்த உயிர் பிறரை யடையாதிருக்கச் செய்ய வழி எனக்குத் தெரியும். என் மீது கோபம் வேண்டாம்; என்னை ஒப்புக்கொண்டு காப்பாற்றும்.—

நளன்:—தாங்கள் தேவர்க்கு அபசாரமான மொழிகள் கூறுதல் அழகெனச்சொல்ல முடியாதாகுமன்றோ?

தமயந்தி:—அது எப்படியாயினும் எனக்கென்ன? என்னுயிர்க்குக் கடவுள் அவரல்ல; தாங்கள்தான். உம்மை முழுமனத்துடன் என்னுயிர்க் காதலன் எனக்கொண்டு, அந்த எண்ணங்கொண்டிருக்க, பிறரை, அவர் தேவராயிருந்தாலென்ன, அன்றி முழுமுதற் கடவுளாக இருந்தால்தான் என்ன, வரித்தல் யார் செயலாகும்? பாழும் பரத்தையர்போல், கேவலம் செல்வம், பதவி இவற்றை எண்ணியா உண்மைக்காதல் நிலைத்தது? தாங்களிவ்வாறுரைத்தல் என் மனத்துள் பெருங்கஷ்டம் விளைவிக்கின்றது. அப்படித் தாங்கள் என்னை மணக்க விரும்பீராஜல் நெருப்பு, நீர், விஷம் முதலியவற்றின் உதவியால் உமக்கு முன் வானுலகாண்டு அங்கு உம்மை மீண்டும் பெற பெருந்தவம் புரிவேன். இது உண்மை!

நளன்:—நான் உமது நண்பன்;—

தமயந்தி:—அந்தக் குளிர்ந்த மொழியை மீண்டுஞ் சொல்வீராக!

நளன்:—யான் சொல்வதைச் சிறிதுந் தடுக்காது கேட்டால் நன்மை தரும். தேவரை மணத்தல், பதவி மாத்திரமன்று; தெய்விகந் தரும். அதை விரும்பாது அல்பமானுஷனிடம் ஆசை கொள்வது எவர்க்கும் அடாது! அடாது!

தமயந்தி:—இம்மொழி உமக்கடாது! என் கண்ணீர் ஆறுகப் பெருகி, என்னைத்தங்களது ஸுந்தரவடிவைக் காணமுடியாது தடுக்குந்துயரத்தைக் கண்டும் உமது மனமி இளகவில்லை போலும்!

நளன்—எல்லாமுணர்ந்தும் நீ இவ்வாறு பேசுதல் என்னை ஏசுவதே ஒக்கும். தூதாக வந்தவன், வந்த காரியத்தைத் தன் காரியமாக முடிக்கலாமோ? நான் வந்த காரியம் என் காரியமானால் என் காரியமாகவே முடிக்கலாம். அவ்வாறு வரும்போது அப்படியேசெய்வேன்; அது ஸத்யம். தயவுசெய்துனக்கொரு மறுமொழி சொல்லியனுப்பும்.

இம்மொழிகளைக் கேட்ட தமயந்தி, பவழக் கொடியில் முத்தமரும்பியதென நகைத்து, கண்ணைக்கவிந்த நீரைக் காதல் நெருப்பவிக்க, பேசமுடியாதுவரண்ட தொண்டை ஆசையீரம் பாய்ந்து இளக, தனது மெல்லிய குரலில் சல்லியமில்லாது "என்னுயிரின் உயிரே! உமக்கு வந்தனம்! அநந்த கோடி நமஸ்காரம்! அத்தேவர்க்குமப்படியே! யான் உமக்கு ஒரு தீங்கும் வராது உம்மையே வரிப்பேன். தேவரும் தேவரீரும் இருக்கும் அந்தச் சுயம்வர மண்டபத்தில் அவரெதிரிலேயே உம்மை மணந்தால் உமக்கெப்படிக் குற்றமேற்படும். இந்த உபாயம் முன்னமே தோன்றாது போயிற்றே! தேவதைகள் தரும வழியை விட்டுப் போகார்கள். நான் தங்களை அவர் முன்னிலையிலேயே வரிப்பதாகச் சொன்னதாக அவரிடஞ் சொல்லும்" என்றுமிக்கவணக்கத்துடன் சொல்லித் தனக்கும் தன் புகழ்க்கும் காதலுக்கும் கறை ஏற்படாத வண்ணம் பதிலுரைக்க, நளன் தேவரை நாடிப் புறப்பட்டான்.

அவனை வழிகொண்டுவிடக் காதல் எழுப்பிய எண்ணத்தை, நாணந்தடுக்க, உள்ளந்தடுமாறி, மூடாக்கண்கள் அந்நளனையே தொடர, கண்ணிலார் மயங்கி நிற்பதுபோல் தமயந்தி, படத்திலெழுதிய பாவையென மயங்கிக்கிடந்தாள்.


## இந்திய ஸ்திரீ ரத்னங்கள்!

| | | |
|---|---|---|
| திரௌபதி | அணா | 8 |
| ருக்மிணி | ,, | 6 |
| சகுந்தலை | ,, | 4 |

மானேஜர், விவேக போதினி
மயிலாப்பூர், சென்னை.




# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS OF THE WORLD

**இந்திய ராஜாங்க அரசிறை**

நாளது மாதத் தொடக்கத்தில் ராஜப்பிரதிநிதி யவர்களுடைய சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்ட 1917-18-ம் வருஷத்திய அரசிறை விஷயமான கணக்குச்சில முக்கியமான அம்சங்களை வெளியிடுகின்றது. இப்போது ஐரோப்பாவில் நடக்கும் கடும்யுத்தம் காரணமாகச் செலவாகும் தொகைக்கு நமது இந்திய கஜானாவிலிருந்து நூற்றைம்பது கோடி ரூபா இனம் கொடுப்பதாகத் தீர்மானித்திருக்கின்றனர். இந்தத்தொகை அதிகமாகத் தோன்றினாலும், யுத்தத்தில் இரண்டுவாரச்செலவுக்ுத்தான் இது போதுமானதாக விருக்கும். இதற்கு ஒருவாறு ஈடாக; சீமையிலிருந்து நம் நாட்டுக்கு வரவழைக்கப்படும் வஸ்திரங்களின் மீது விதிக்கப்பட்ட இறக்குமதிவரி இருமடங்காக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதனால் சீமைச் சரக்குகள் இறக்குமதியாவது குறைந்து, உள்நாட்டுச் சரக்குகள் விருத்தியடையக் காரணமுண்டு. அதற்காக நாமெல்லோரும் அத்தியந்த சந்தோஷ சித்தர்களாக இருக்கிறோம். இன்னும் அதிகமான வரும்படியைப் பெறுவதற்காக வருமான வரியைச் சிற்சில சந்தர்ப்பங்களில் உயர்த்தியும், சில தீர்வைகளை அதிகமாக்கியும் சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. யுத்தம் சீக்கிரத்தில் முடிய வேண்டுமென்பதற்குப் பண உதவிசெய்ய, சர்க்காரார், ஜனங்களிடமிருந்து ஏராளமான தொகை கடன்வாங்க நிச்சயித்திருக்கின்றனர். சொற்ப வரும்படியுள்ளவன்கூட, தன்னாலான வரையில் கடன்கொடுத்து உதவிசெய்யும் சந்தர்ப்பத்தை யடையவேண்டியதற்கு, தபாலாபீசு மூலமாகச் சில சவுகரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. உதாரணமாக ரூ. 7-12-0 கொடுத்து, தபாலாபீசுமூலமாக ஒரு பத்திரம் பெற்றுக்கொண்டால், ஐந்து வருஷங்கள் கழித்து அப்பத்திரத்துக்குப் பதிலாக ரூ. 10 பெறலாம். இடையே பணம் வேண்டுமானாலும், பெற்றுக்கொள்ளலாம். இந்தச் சந்தர்ப்பத்தைக் கைவிடாது நம்மவரில் பெரும்பாலார் கவர்ன்மெண்டாருக்குக் கடன்கொடுத்து, யுத்தம் சீக்கிரத்தில் முடிவடையும் வழியைத் தேடவேண்டியது அவசியம்.

* * *

**லோகல் முனிஸிபல் சங்கம்**

சென்னை ராஜதானியிலுள்ள லோகல் போர்டுகள் முனிஸிபாலிடிகளின் அபிவிருத்தியை உத்தேசித்துச் சில ஏற்பாடுகள் செய்யமுடியுமா என்று கவனிக்கும்பொருட்டு இந்த மாதத்தில் சென்னையில் ஒரு மஹாஸபை கூடியது. கனம் கவர்னர் அவர்கள் விஜயம் செய்து, ஸபையை ஆரம்பம் செய்ததே இந்தக் காரியத்துக்கு நற்குறியாகும். லோகல் போர்டுகளிலும், முனிஸிபாலிடிகளிலும் அனுபவம் நிறைந்த பிரபலர்கள் வியாசங்கள் எழுதிப்படித்தனர். மஹாஸபையார் தீர்மானித்த சில விஷயங்களைக் குறிப்பிடுகிறோம். 'லோகல் முனிஸிபல் சங்கம்' என்ற ஸபை ஏற்படவேண்டும்; பணச்செலவு விஷயத்தில் அதிகமாகச் சுதந்தரங்கள் கொடுக்கப்படவேண்டும்; ஜில்லா போர்டுக்கு உத்தியோகஸ்தரல்லாதவர்களையே உப-பிரஸிடெண்டாக நியமித்தல் வேண்டும்; கிராமங்கள்தோறும் பஞ்சாயத்துக்கள் ஏற்பட்டு, அதனதன் நிர்வாகங்களைக் கவனிக்கச் சுதந்தரமும் சவுகரியமும் பெறவேண்டும்; பிரதமக் கல்வி விஷயமாக, போர்டாருக்கு அதிகமான சுதந்தரங்கள் கொடுபடவேண்டும்;—என்பனவாம். இந்த மஹாஸபையார் தீர்மானித்த விஷயங்களையெல்லாம் நமது கவர்ன்மெண்டார் அங்கீகரித்து, சீக்கிரத்தில் அமுலுக்குக் கொண்டுவருவாரென்றே நாம் எதிர் பார்க்கிறோம்.

* * *

**ஐரோப்பிய மஹாயுத்தம்**

இந்த யுத்தத்தில் மேற்கரங்கத்திலும் கிழக்கரங்கத்திலும் நேசப்படைகள் வெற்றிபெற்றே வருகின்றன. மேற்கரங்கத்தில், ஜர்மானியர் கொஞ்சம் கொஞ்சமாகப் பின்னடைந்து போகின்றனர். அநேக நகரங்களும் கிராமங்களும் ஆங்கிலேயர் வசமும் பிரஞ்சுக்காரர் வசமுமாயின. இவ்விஷயம் நமக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்றாலும், கிழக்கரங்கத்தில் நமது இந்திய சேனை

கள் செய்த அளவிடமுடியாப்பெருஞ்செயலைக் கேட்க நாம் கட்டுக் கடங்காக் களிப்புக்காளாகிறோம். சென்ற வருஷத்தில் "குட்" என்ற இடத்தில் இச்சேனைக்கு நேர்ந்த விடத்தை அபிமானிகள் மறந்திருக்க மாட்டார்கள். கொஞ்சம் கொஞ்சமாக நமது குதிரைப்படைகளும் காலாட்படைகளும் முன்சென்று, துருக்கச் சேனைகளை வெருட்டிக் கடைசியாக, பாக்தாத் என்னும் புராதன பெருங்காவற் பட்டணத்தைப் பிடித்துவிட்டன. இவ்வெற்றி வெகு முக்கியமானது. பெர்லினிலிருந்து பாக்தாத்வரைக்கும் இருப்புப்பாதை போட்டு, துருக்கி ராஜ்யம் முழுதையும் தமது கைக்குள்ளாக்கிக் கொள்ளலாமென்று ஜெர்மானியர் மனோராஜ்யம் பண்ணிக்கொண்டிருந்தது கைகூடாமல் போய்விட்டது! ஜெர்மானியர் தங்களைத் துரோகம் பண்ணிவிட்டார்களென்று துருக்கியர்கள் இப்போது தெரிந்துகொண்டிருக்கிறார்கள். இப்படி, மேற்கிலும் கிழக்கிலும் சத்துருக்களுக்குத் தோல்வியுண்டானபோதிலும், அவர்கள் சமுத்திரத்தில் கப்பல்களை மூழ்குவிப்பதில் மட்டும் பின்னடையவில்லை. அமெரிக்கர்களின் கப்பல்களில் சில மூழ்கடிக்கப்பட்டன என்றாலும், அமெரிக்கர்கள் இதுவரையில் ஜர்மானியரோடு நேராக விரோதித்துக்கொண்டு சண்டைக்கு வரவில்லை.

* * *

ருஷிய ராஜ்ய மாறுபாடு.

திடீரென்று ருஷிய ராஜ்யத்தில் ராஜரீக மாறுபாடு உண்டானதற்கு, ஐரோப்பிய யுத்தம் தான் காரணம். சுயேச்சா சக்கரவர்த்தியாகிய "க்ஸார்," ஜெர்மனிக்கு அனுகூலரான சிலருடைய வசப்பட்டு, ஜனங்களுக்குப் பிரதிகூலமான காரியங்களைச் செய்தனர் என்ற அபிப்பிராயம் வரவர முதிர்ந்தது. தேச க்ஷேமத்துக்குப் பாடுபட்டவர்கள் தண்டிக்கப்பட்டனர். தேச விரோதிகள் ராஜ்ய நிர்வாகத்தைக் கைக்கொண்டனர். உணவு விஷயமாக நேர்ந்த ஒரு சில்லரைக் கலகத்தை வியாஜமாகக்கொண்டு, ஜனங்களும் சைனியங்களும் ஒன்று சேர்ந்து, 'டூமா' என்ற நிர்வாக ஸபைக்குச் சர்வாதிகாரத்தையும் கொடுத்து ஒரு நொடிப்போதில் எதிர்பாராத மாறுபாட்டையுண்டாக்கிவிட்டதை நோக்கும்போது நமக்கு ஆச்சரியமாகவிருக்கிறது. க்ஸார் சக்கரவர்த்திக்கு, ஸர்வாதிகாரத்தையும் பிறரிடம் கொடுத்துவிட்டுப் போவதைத் தவிர வேறு கதியில்லை. அவர், மனைவி மக்களுடன் ஊரைவிட்டுப் போய்விட்டார். இப்போது சர்வாதிகாரமும் "டூமா"வின் நிர்வாக ஸபையாரிடமிருக்கிறது. அவர்களுடைய நோக்கம், ஜெர்மனியுடன் கடும்போர் புரிந்து அதை முற்றிலும் முறியடிக்க வேண்டுமென்பதே. தேச க்ஷேமத்தின் பொருட்டுப் பாடுபட்டவர்கள் சிலர் சிறையிலிருந்தனர். அவர்கள் அனைவரும் விடுதலையடைந்தனர். இந்த ராஜரீக மாறுபாடு எப்படி முடியுமென்று நிச்சயிக்கமுடியாது. என்றாலும் புதிதாக உண்டான கவர்ன்மெண்டை, மற்றைய தேசங்களின் துரைத்தனத்தார் அங்கீகரித்துவிட்டனர்.

* * *

திருப்பதி அத்யாபக வழக்கு.

கட்சிப் பிரதி கட்சிகள் மலிந்த நமது சென்னை ராஜதானியில், வைஷ்ணவர்களுக்குள் தென்கலை வடகலைச் சண்டை இன்னும் மும்முரமாகவே நடந்து வருவதைக் காண நாம் விசனிக்கிறோம். கோயில்களில் பெறும் மரியாதைக் கிரமத்திலும், அங்கு அத்யாபகம் செய்யும் போதிலும் இவ்விதமான சண்டைகள் உண்டாகி, நியாய ஸ்தலங்கள்தோறும் ஊடாடிச் சீர்குலைகின்றன. இதில் நேரிடும் பணச் செலவைப்பற்றி எழுதவேண்டியதில்லை. **ஸ்ரீரங்கம்**, ஸ்ரீவில்லிபுத்தூர், திருவகீந்**திரபுரம், மன்னார்**குடி, காஞ்சிபுரம் முதலிய இடங்களில் இத்தகைய துர்த்தசையேற்பட்டிருப்பதை நாம் அறிவோம். சமீபத்தில் இவ்விஷயமான சண்டை திருப்பதிக் கோயிலில் உண்டாகி, மூன்று கோர்ட்டு வரையில் சென்றது. ஈசுவர ஸந்நிதானத்தில் எல்லாருக்கும் சமமான பாத்தியமும் சுதந்தரமும் உண்டென்பதை நமது ஸஹஜனங்கள் என்றைக்குத்தான் தெரிந்துகொண்டு அதற்கேற்ப நடக்கப்போகின்றனர்! மத வைராக்கியம் எப்போது ஒழியப்போகின்றது!



ஸ்ரீமான் ராவ் பஹதூர் ஏ. வி. பிரணதார்த்திஹர ஐயர், பி. ஏ., ஐ. எஸ். ஓ.
தென்னிந்திய வித்தியானுகூலன்.

# விவேகபோதினி

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி IX } நளஹு பங்குனிமீ :: 1917-ஹு ஏப்ரல்மீ { பகுதி 10

## நல்லொழுக்கம்

### GOOD CONDUCT

### உண்மையின் வன்மை

ஜனங்களது நன்மைக்கு முக்கிய ஆதாரமாய் இருப்பது உண்மை. உண்மையில்லாவிட்டால் உலகமே இருக்கமுடியாது. ஒருவரை ஒருவர் நட்பதற்கு அதுதான் காரணம். உண்மையைக் கைவிடாமல் காப்பாற்றுவதுதான் எவனுக்கும் பெருமை; அதைக் கைப்பற்றியவரொருநாளும் தாழ்மையடையார்; மற்றெல்லாப் பெருமையும் பெறுவர். அதற்கு ஹரிச்சந்திர மஹாராஜனே உதாரணம்.

ஹரிச்சந்திரன் ஸூரியவம்சத்தில் பிறந்த அரசன்; மஹா நெறிமான்; மநுநெறி தவறாது கோசல நாட்டை யாண்டுவந்தவன். அவன் உண்மையையே கைப்பிடித்து, யதார்த்தத்தை யுணர்ந்து எல்லார்க்கும் நன்மைசெய்து வந்ததால் அவனை ஸத்தியஸந்தன் என்றழைப்பது உலக வழக்கமாயிற்று. இப்பொழுதும் ஹரிச்சந்திரன் வீட்டிற் கடுத்த வீடு என்று பொய்யனை ஏளனம் செய்வது உலக ப்ரஸித்தமன்றோ?

சிறக, ஹரிச்சந்திரன் பொய் சொல்வதில்லை என்று கொண்டிருந்த மன உறுதியைப் பற்றித் தேவ ஸபையில் வாத முண்டாயது. அப்போது வஸிஷ்டரென்னும் தேவமுனிவர் தமது சிஷ்யனாகிய ஹரிச்சந்திரன் ஒருபொழுதும் பொய் சொல்லான் என்று உறுதியாகச் சொன்னார். விசுவாமித்திர ரென்னும் மற்றொரு முனிவர், அவனைப் பொய்யனாக்கி விடுவதாகச் சபதஞ் செய்தார். பின் அவ்வரசனிடம் வந்து, யாகத்திற்காகப் பொருளுதவி கேட்டார். அவன் கொடுக்க, அதை அவனிடமே வைத்துப் போனார். அதன்பின் தமது தபோ மகிமையால், அவர் இரண்டு நாட்டியப் பெண்களை உண்டாக்கி, அவர்களை அரசன் ஸபையில் நர்த்தனஞ் செய்யும்படிசெய்து, அவனை மணக்கும்படி அவர்களை வேண்டும்படிசெய்தும் அதற்கவன் இணங்கவில்லை. ஆகையால், அப்பெண்கள் மீண்டு வந்து, முனிவரிடம் நடந்ததைச் சொன்னார்கள். முனிவர் கோபங்கொண்டு ஓடிவந்து, ஸபையிலிருக்கும் ஹரிச்சந்திரனை எட்டியுதைத்தார். பிறகு, அவனது ராஜ்யத்தைத் தனக்குக் கொடுத்துவிடும்படி அவனைக் கேட்டார். அவன் அப்படியே செய்து தனது மனைவி மக்களுடன் காட்டிற்குப் போகும்போது, தாம் அவனிடம் முன் வைத்திருந்த பொருளைக் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தினார்.

மிகவாட்டமடைந்த மனத்துடன் அரசன், தான் காசிக்குப் போய்ப் பொருள் சேகரித்துத் தருவதாக ஒப்புக்கொண்டான். அவ்வாறு பெறுவதற்கு, அவனுடனே நக்ஷத்ரிகன் என்னும் ஒரு தூதனை அவர்க்கு வழி முழுதும் அநேக கஷ்டங்களை உண்டாக்கும்படி சொல்லியனுப்பினார். அவனும் வழிமுழுதும் அவர்க்குப் பலவித கஷ்டங்களை உண்டாக்கினான்; முனிவரும் தமது தபோபலத்தால் பலவித மாயா வழிகளில் அவர்க்குத் தம்மால் செய்ய முடியுமான துன்பங்களை எல்லாஞ் செய்தனர். பின் காசியை யடைந்ததும், அரசன் பொருள் சேகரிக்க முடியாமையால், தனது கற்பிற் சிறந்த மனைவியையும், செல்வக் குழந்தையையும் ஒரு பிராமணனுக்கு விற்றுப் பொருளைக் கொடுத்தான். நக்ஷத்ரிகன் தனது கூலிக்குப்பணம் சேர்ந்ததென்று சொல்லி, முனிவர் பணத்தைக் கொடுக்கும்

படி, கண்ணில் விரல் வைத்தாட்டினான். அரசன் ஒன்றுந்தோன்றாது தயங்கி மயங்கித் தன்னை யார்க்கேனும் விற்று அப்பொருளைப் பெறும்படி நக்ஷத்ரிகனிடம் தலைமேல்குவித்த கையனாகி வேண்டிக்கொண்டான். பின் அவ்வரசனை மயானங் காக்கும் பறையனுக்கடிமையாக்கி, முனிவர்க்குக் கொடுக்கவேண்டிய பொருளைப் பெற்றுக்கொண்டு, "நீயே பெரியோன்; நீயே ஸத்தியஸந்தன்; உனக்கொரு நாளும் தாழ்மை வாராது" என்று வாழ்த்தி, முனிவரது ஆணையால் தான் செய்த கொடுமையை மன்னிக்கும்படி வேண்டினான்; பின் செலவு பெற்றுப் போனான்.

இவ்வாறு அரசனையும் அரசியையும் மகனையும் பிரித்தது போதாதென்று, முனிவர் மேலுமெண்ணினார். அரசன் மகன், தான் அடிமையாக விருந்த பிராஹ்மணர்க்காகக் காட்டில் சென்று தருப்பை கொய்யப்போக, அங்கு முனிவர் மாயையால் தோன்றிய பாம்பு கடிக்க, அவன் அங்கே இறந்துவிழுந்தான். ஸமாசாரத்தை உணர்ந்த அரசி, தான் அடிமையாக விருந்த ப்ராஹ்மணரைப் பலவிதத்திலும் தனது ஊழியத்தால் ஸந்தோஷப்படுத்தி, காட்டில் இறந்துகிடக்கும் மகனைக் காணும்படி செலவு கொடுத்தருளக் காலில் விழுந்து வேண்டினாள். பின் வீட்டு வேலைகளானதும், உத்தரவுபெற்று, இரவில் தன் மகனைத் தேடக் காட்டிற்குப்போனாள். அங்கு இறந்து கிடந்த மகனைத் தோளில் போட்டுக்கொண்டு மயானத்திலெரிக்க எடுத்துச்சென்றாள். அவ்விடம் சென்றதும், எரிபடாது அங்கு விழுந்திருந்த கட்டைகளைப் பொறுக்கி அடுக்கி அதன்மேல் தன் மகனது சவத்தை இட்டுக் கொளுத்த யத்தனிக்கையில், காவல்காரன் வந்து அவள் அவ்வாறு செய்வதைத் தடுத்தான்; வாய்க்கரிசியும் மயானக் கட்டணமும் கொடுத்தால்தான் கொளுத்த முடியுமென்றும் சொன்னான். அரசி தனது ஏழ்மையை எடுத்துச் சொன்னாள். அக்காவல்காரனாக விளங்கிய ஹரிச்சந்திரன், இறந்தது தனது மகனென்று பேசியவற்றால் அறிந்தான். தன் தலைவன், வாக்கரிசியைத் தன் கூலிக்காக எடுத்துக் கொள்ள அநுமதிகொடுத்திருந்ததால், அரசியை மயானக் கட்டணத்தைமட்டும், சம்பாதித்து வரச்சொன்னான்.

அவளும், தனது கணவனது நிலையையும் நெறியையும் உணர்ந்து, கட்டணத்தைச் சம்பாதித்துவரச் சிந்தைகொண்டு, வந்துகொண்டிருந்தாள். அப்போது விச்வாமித்ரர், தமது மாயையால் அவ்வூர் அரசன் மகனைக் கொலையுண்டு அக்காட்டில் கிடக்கும்படி செய்தார். வருபவள் கண்ணில் அக்குழந்தை பட்டதும், அது தன் குழந்தையோவென்று ஸந்தேஹித்துக் குனிந்து பார்த்தாள். அப்போதவளைக் காவல்காரர்கள் கொலைக்குற்றஞ் சாட்ட, அரசனிடம் கொண்டுசென்றனர். அங்கு அவளே கொலைசெய்ததாகத் தீர்மானிக்கப்பட்டு, வீரபாஹு என்னும் கொலையாளியிடம் வெட்டி விடும்படி அவள் ஒப்புவிக்கப் பட்டனள். இவனே ஹரிச்சந்திரனை அடிமையாக அடைந்த பறையன். தனது அடிமையாகிய ஹரிச்சந்திரனிடம், அவள் தலையை வாங்கும்படி ஆணையிட்டு ஒப்புவித்தான். நடந்ததை முற்றும் ஹரிச்சந்திரன் தன் மனைவியாகிய அச் சந்திரமதியிடமிருந்து உணர்ந்தானாயினும், ஸத்தியம் தலைகாக்குமென்ற நம்பிக்கையுடனேயே இருந்தான்.

இச்சமயம் விசுவாமித்ரர் அங்கு ஓடி வந்தார். "என்னிடம் உனது ராஜ்யத்தை ஒப்புவிக்கவில்லையென்று சொல். அது போதும். இந்தக் கஷ்டங்களெல்லாம் ஸூர்யனைக் கண்ட பனிபோல் பறக்கும்படிச் செய்துவிடுவேன்" என்று வெகு இரக்கம் கொண்டவர்போல ஹரிச்சந்திரனிடம் சொன்னார். சற்றும் சளைக்காது, ஹரிச்சந்திரன், "பதியையிழந்தேன்; பாழுங்காட்டையடைந்தேன்; படைத்த மனைவியை விற்றேன்; பாலனையுந் துறந்தேன்; பறையனுக்கடிமையுமானேன்; தாலிகட்டிய கையாலேயே தலையைத் துணிக்கவுந் துணிந்தேன்; என்னினும் கீழ்த்தசையடைந்தவர் உலகத்திலெவருமிருக்கமுடியாது. எனக்கென்ன இருக்கிறது? இருப்பது ஒன்று; அது வாய்மை. அதையுந் தொலைத்துவிடவேண்டுமோ? இம்மூவுலகையும் கொடுத்தாலும், எந்த ஆபத்து வந்தாலும், நான் அதைக் கைவிடேன். ஆதலால் தாங்கள் வருந்துவது வீணே" என்று பதில் சொன்னார். முனிவரும் மனங்கலங்கி, சிந்தை நொந்து, வந்தவழியே நடந்தார்.

(இதன் தொடர்ச்சி 348-ம் பக்கம்.)



விவேக போதினி

தொகுதி.9] நளவருஷ பங்குனிமீ [பகுதி.10

## வர்ணாச்ரம ஆக்ஷேப ஸமாதானம்

## VARNASRAMA OBJECTIONS ANSWERED

(12) பீஷ்மர் சாந்திபர்வத்தில் ஜாதி பேதம் ஏற்படக்காரணமாகக் கூறிய தீய நடத்தை என்ற தொடருள் பல சாஸ்திர ரஹஸ்யங்கள் அடங்கியுள்ளன. இத்தொடர், பிறவி பெறும் ஜீவரது பூர்வஜன்ம கர்மாக்களால் அவர்களுக்கேற்பட்டுள்ள பாபகர்மவாஸனைப் பதிவுகளையே குறிக்கும். ஆகவே, ஜாதி பேதம், இவ்வுலக ஸ்ருஷ்டியில் ஏற்பட, பீஷ்மர் கூறும் காரணங்கள் பிறவிவர்ண ஆதாரமாகச் சாஸ்திரங்களில் காணப்படுபவைகளுக்கு ஒரு வழியிலும் முரணாக இல்லை. மேலும் பீஷ்மர் கூறும் ஜாதிபேதகாரணம், இக்காலத்தில் நாற் பெரும் வர்ணங்களுள் காணப்படும் பல உட்பிரிவுகளுக்கும் தகுந்த முகாந்தரமாகும். ஆகவே, பீஷ்மர் வாக்கில் இந்த ஸந்தர்ப்பத்தில் வைதிகப் பிறவி வர்ண பேதத்திற்கு விரோதமாக ஒரு சொல்லும் வந்து விடவில்லையென்று தேறி, நாம் இவ்விஷயத்தில் தெளியவேண்டும்.

(13) இதுவரையில் கூறி வந்ததிலிருந்து, ப்ராஹ்மண வர்ணத்துள் அடங்கிய அதிகாரிகளுக்கே ப்ரஹ்மவித்யையை உபதேசிக்கவும், அதைக் கேட்டவாறு நேராக அநுஷ்டிக்கவும் ஆற்றல் உண்டு, மற்றவர்களுக்கு இல்லையென்று வெளியாகியிருக்கும், இது சாஸ்திர முடிவுக்கு இசையாது என்று சிலருக்குத் தோற்றலாம். 'சாஸ்திரப்படி ப்ராஹ்மணன், க்ஷத்ரியன், வைச்யன் ஆகிய மூன்று வர்ணத்தாரும் த்விஜர்கள்; இவர்களுக்கு வேதம் ஓதல் ப்ரஹ்மோபதேசம் பெறல், இவைகளுக்கு அதிகாரம் உண்டு. சூத்ரருக்கு இது இல்லை என்பது, ஸ்மிருதி, ப்ரஹ்மஸூத்ர அபசூத்ராதிகரணம் இவைகளால் வெளிப்படை. இப்படியிருக்க, ப்ராஹ்மணனுக்கு மாத்திரந்தான், ப்ரஹ்ம வித்யையில் அதிகாரம் என்று எப்படிக் கூறலாம்?' என்பவர் அவர். 'ப்ருஹதாரண்யகாதி உபநிஷத்துக்களில் அநேகவிடங்களில். ப்ராஹ்மணர்கள் கர்மா, தபஸ் முதலியவைகளால் இப் பரம்பொருளை அறிய முயல்வர் என்றே காணப்படுகிறது. இதில் க்ஷத்ரிய வைச்யர்களையும் சேர்த்துப் பொருள்படுத்தலாமென்றால் முடியாது. ஆகவே, சாஸ்திரங்களிலேயே, பல அபிப்ராய மிருக்கிறது போலக் காணப்படுகிறது இவ்விஷயத்தில்' என்ற மேல்சங்கையும் ஏற்படலாம். இதற்கு ஸ்ரீ சங்கராசார்யாள் சிஷ்யர்களுள் ஒருவரான ஸுரேச்வராசார்யாள், தாம் எழுதிய ப்ருஹதாரண்யக விருத்தியில் தகுந்த ஸமாதானம் பின்வருமாறு கூறுகிறார். ப்ரஹ்மவித்யையில், உபதேசம் கேட்பதற்கும், கேட்டபடி நேரே முற்றிலும் அநுஷ்டிப்பதற்கும் 'ப்ராஹ்மணர்களுக்கே சிறப்பான அதிகாரம். இந்த வர்ணத்திற்கு மாத்திரந்தான் முடிவான ஆச்ரமமான ஸந்யாஸம் ஏற்கும் ஆற்றலிருப்பதே இதற்கு முக்ய காரணம். மற்றைய இரண்டு த்விஜ வர்ணத்தாருக்கும் இதில் பொது அதிகாரம். ப்ரஹ்மோபதேசம் அவர் ஏற்கலாம்; ஆனால் அவர்கள் வர்ணதர்மப்படி ஸந்யாஸத்தில் அவர்களுக்கு அதிகாரமில்லையாதலால், கேட்டபடி முழு வைதிக ஆற்றலுடன் அதைப்பின்பற்ற அந்தப் பிறவியில் அவர்களால் முடியாது'. இதனால்தான், ப்ராஹ்மண வர்ணத்திற்கே ப்ரஹ்மவித்தையில் முழு அதிகாரம் என்று இதுவரையில் கூறிவந்தது.

(14) இக்காலத்தில் பரவிநிற்கும் அவைதிக அத்வைத வேதாந்தத்தில் பற்றுள்ள சிலர், 'ப்ராஹ்மண ஜாதிக்கு ஏற்றம் எதனால்? எல்லாம் ப்ரஹ்மம் என்பதல்லவா பரம முடிவு? இதில் நிலைக்க ஜாதிபேதம் எதற்கு? ஜாதி பேதந்தான் இருக்க இடமேது? வேதாந்த ஞான நுட்பம் மனதில் நிலைபெறும்வரையில் தான் இந்த ஜாதி, கட்டுப்பாடாக விருப்பது. ஞானம் வந்தவர்களில் ஜாதிபேதம் அனாவசியம், இல்லவும் இல்லை. இப்படியிருக்க, ப்ராஹ்மணன் எப்படி உயர்ந்த வர்ணத்தான

வன்? என்று ஆழ்ந்து ஆராய்ந்து ஆக்ஷே
பிப்பர்:-

(i) இவர்களை நோக்கி, 'நீங்கள், எல்லாம்
ப்ரஹ்மம் என்பது எதை முன்னிட்டு?
தேஹாதிதோற்றங்களை முன்னிட்டா அல்லது
எல்லாவற்றிலும் பரவிநிற்கும் சைதந்யத்தை
முன்னிட்டா?' என்று, ஒருகேள்வி கேட்க
லாம். சைதந்யத்தை முன்னிட்டு என்று
கொண்டால், எந்த வர்ணத்தானிடமும் இது
ஒரேபடித்தாய்த்தான் உள்ளது; ஏற்றத்தாழ்வு
என்று, இறுமாப்பு, பொருமைகளை முன்
னிட்ட வாக்குவாதத்திற்கே இடமில்லை. என்ன
வேற்றுமை வெளியிலிருப்பினும், ஆத்மாவின்
ஒன்றான நிலைக்கு ஒருவிதத் தாக்கும் ஏற்
படாது. ஆதலால், ப்ராஹ்மணன் எப்படிச்
சிறந்தவன் என்று எப்பொழுதும் கேட்க
இடமில்லை. இது வீண்வாதமாகத்தான் முடி
யும். தேஹாதித் தோற்றங்களை முன்னிட்டு
என்றால், அவைகளில் என்றும் பேதமே உள்
ளது. ஆகையால், ஏன் பேதமுள்ளது என்று
கேட்டுமுடியாது. ஆகவே, இக்காலத்தவர் ஆத்
மாவின் ஏகத்தன்மையைத் தோற்றங்களின்
வேற்றுமைகளுடன் குழப்பிக்கொண்டுதான்
இவ்வாறு பேசுகின்றனர். இவைகளைப் பகுத்
துணர்ந்தால், இக்கால வேதாந்திகளின் கேள்
விக்கே இடமில்லை. (ii) வஸ்து ஒன்றேயாயி
னும், அதன் உபயோகங்களில் பேதம் பல
இருக்கலாம் என்பதற்கு உதாரணமில்லாமல்
போகவில்லை. வைரம், கரியம் (எழுதுகோல்
மத்தியிலிருக்கும் குறிபோடும் வஸ்து), அடுப்
புக்கரி எல்லாம் ஒரே வஸ்துதான். எல்லா
வற்றையும் நெருப்பிலிட்டு எரித்தால், ஒரே
வித வஸ்துக்கள்தாம் உண்டாகும். இப்படி
யிருப்பினும், இவைகளின் உபயோகம் வெவ்
வேறுதான்: ஏற்றத்தாழ்வும் உண்டு. ஒன்
றற்குச் சாணையைத்தாங்கி ஒளிவிடும் தன்மை
யுண்டு. மற்றவைகள், சாணையில் பொடிப்
பொடியாகி விடும். அவ்வவைகளுக்கு ஏற்ற
வேலைப்பாடுகளைத்தான் அவ்வவைகள் ஏற்
கும் திறனுடையவை. (iii) வஸ்துக்கள்
தோற்றமாத்திரத்தில் ஒன்றுபோலக் காணப்
படினும், உள்ளபடி ஆராயுமிடத்து, அவைக
ளின் இயற்கையில் பல வேறுபாடுகள் உடை
யனவாக விருக்கலாம். கண்ணாடித்துண்டு,
வைரம், பளிங்குக் கற்கள் முதலியன ஒன்
றாக ஏற்படினும், அவைகள் ஏற்கும் வே
லைப்பாட்டால் பல வேறுபட்ட வஸ்துக்
கள் என்று கண்டுகொள்ளலாம். (iv) ஒரே
வகுப்பைச் சேர்ந்த பல வஸ்துக்களுக்குப்
பலவித ஏற்றத் தாழ்வான தன்மைகளும்
இருக்கலாம். ப்ராணிகளில், பசுக்களைக் கட்
டிப் பழக்கி உபயோககர மாக்கலாம்; மற்
றைய ப்ராணிகளை அப்படி முற்றிலும் செய்ய
இயலாது. செடிகொடிகளிலும் இவ்வேற்றுமை
உண்டு. உழுது பயிர் செய்தால்தான், நெல்
முதலியவை விளைந்து ஓங்கும். காட்டா
மணக்கு, சப்பாத்தி முதலியவைகளுக்கு
இவை வேண்டியதில்லை; அவை அவ்வளவு
உபயோகமுடையவையும் அல்ல. துளஸி முத
லியவை அனுசாரங்களால் பட்டுக்கூடப்
போய்விடும் இயற்கையுள்ளவை. (v) இப்படி
ஒன்றேயாய் உள்ள பலவற்றிலும், ஒன்று
போலக் காணப்படும் பலவற்றிலும், பலவித
வேற்றுமை ஏற்றத்தாழ்வுகள், ஒருவித முரா
ணும் இன்றி இயற்கையி லமைந்துகிடப்பது
போல, மானிடர்களுள்ளும், அந்தர்யாமியான
ஆத்மா ஒன்றேயாயினும், தேஹ அமைப்புக்க
ளான கால்கைரத்தம் முதலிய அங்க அமைப்பு
களில் தோற்றமாத்திர ஒற்றுமை காணப்படி
னும், வைதிக வழிப்படி ஸம்ஸ்காரங்கள் ஏற்
றுச் சிறப்புற்று விளங்கி மோக்ஷத்தை அணு
கும் ஆற்றலில் பிறவி மாத்திரமாக ஏற்பட்
டுள்ள தேஹேந்திரிய மனங்களின் சக்தி மாறு
பாட்டால் பல வேறு மாறுபாடுகளிருக்கவே
இருக்கின்றன. இவைகட்குத்தான் வர்ணாச்ரம
பேதம் என்று பெயர். ஆகவே வர்ணாச்ரம
பேதத்தைத் தரும், ஆத்மாவுடன் பொருந்
தும், சரீரங்கள் வெறும் ஸாதனங்களே. பூர்வ
புண்ய பாபவசங்களால் அவை உயர்ந்தனவாக
வும் தாழ்ந்தனவாகவும் அமையலாம். இதற்
காக ஒருவரை ஒருவர் வெருண்டு நோக்கி,
சண்டையிடுவதில் பயனில்லை. தத்தமக்கு ஏற்
பட்ட தேஹங்களில் அமையப்பெற்ற ஸம்ஸ்
காரம் ஏற்கும் ஆற்றலுக்கேற்ப அவரவர் தம்
வைதிக கர்மாக்களைப் பின்பற்றி, மேலானவர்
வரம்புள் மீறிச் செல்லாமலும், தாழ்ந்தவர்க
ளைக் கண்டு இறுமாந்து கர்வப்படாமலும்,
நடந்துகொள்ளவேண்டும். இப்படி ஸரிவரச்
செய்யும் ஒருவனுக்கு அடுத்த பிறவியில்,
இங்கோ லோகாந்தரத்திலோ ப்ராஹ்மணப்



பிறவியே தொடர்ந்து வரும். ப்ராஹ்மணாதி
சரீரங்கள், ஆத்மா இருந்து வேலை செய்து
தன்னிலையை அணுக முயலுமிடம். ப்ராஹ்
மண சரீரத்தில் இம்முயற்சிக்கு முற்றிலும்
இசைந்தவையான பலவித கரணங்கள் இருக்
கின்றன; மற்றைய சரீரங்களில் அவை இல்லை.
மோக்ஷத்திற்கு முக்யமாக வேண்டிய வைதிக
கர்மத்யானாதிகளை ப்ராஹ்மண உடலொழிந்த
மற்றவைகள் தாங்காது அழிந்துவிடும். இதை
அனுபவத்தில் கண்டுகொள்ள முயலும்
துணிவுடையவர் செய்தும் பார்க்கலாம்.
அப்படிப் பண்ணிப்பார்த்துக் கஷ்டப்படுவதை
விட, அதனால் வரும்கேட்டைச் சற்று ஊஹித்
துணர முயன்று விலகலாம். தாழ்ந்த வர்
ணத்தார் மேலான உடல் பெற்றவர் தொழி
லைப் பின் பற்றி முயலுகையில், அம்முயற்சி
முதிரும்பொழுது, மோக்ஷ வழியில் கொண்டு
அவர்களைச் செலுத்தவே மாட்டாது. 'இவ்வ
ளவு ஆற்றலுடைய நாம் எப்படி ப்ராஹ்ம
ணனைவிடத் தாழ்ந்தவன், அவன் எப்படி
நம்மை விட உயர்ந்தவன்?' என்ற எண்
ணத்தை மாத்திரந்தான் இது வளரச் செய்
யும். இதைவிட்டு, அவனை ஒரு அடிகூட
மேலேபோக அவன் அசாஸ்திரீய முயற்சி
கள் இடந்தரா. பிறவித்தன்மை, தகுந்த
முயற்சியாலும் உடல் மாற்றத்தாலுந்தான்
மாறவேண்டும். யாராவது வரம்புமீறி முயலும்
தாழ்ந்த வர்ணத்தானுக்கு ப்ராஹ்மண வந்
தனை வழிபாடுகள் செய்தால், தன்னிலையை
ஒளித்து நிற்கும் கொடிய நிலையும் 'ஏது நாம்
ப்ராஹ்மணர்களை மிஞ்சிவிட்டாற் போலிருக்
கிறது' என்ற கொடிய எண்ணமுந்தான் ஏற்
படும். இம்மாதிரி நிலைகளுக்கு இடம் வாரா
மலே இருப்பதற்குத்தான் தர்மவ்யாதர், விது
ரர் ஆகிய இவர்கள் எப்படி நடந்துகொண்டி
ருக்கிறார்கள் என்பதை முன்னரே விஸ்தரித்
தாகிவிட்டது. (vii) ஆதலால் எல்லா வரு
ணத்தாரும் ப்ராஹ்மண சரீரம் பெற்று, மோ
க்ஷத்திற்கு முயலும் ஆற்றல் பெறவேண்டி
யிருப்பதலாலும், ப்ராஹ்மண சரீரமுடைய
வன் அதிலிருந்தே மோக்ஷம்பெற நேரே முய
லும் ஆற்றலுடனிருப்பதாலும் ப்ராஹ்மண
சரீரம் உயர்ந்தது. மற்றைய மூன்று வர்ணத்தா
ருககும் இச்சரீரம் எளிதில் கைகூட ப்ராஹ்
மண வழிபாடு, தம் கர்மானுஷ்டம் முத
லிய வைதிக வழியிருப்பதால், வைதிகப்
பிறவி அடுத்த படியில் சிறந்தது" என்று
நமது சாஸ்திரங்கள் முறையிடும்.

(15). 'இது வரையில் கூறியபடி ப்ராஹ்
மண உடல் சிறந்ததானால், ப்ராஹ்மணர்
களுக்கு வீண் கர்வமும், மற்றையவர்களுக்கு
பொறாமையும் தானே வளர்ந்துவரும். இத
னால் ஒரு நன்மையும் ஏற்பட இடமில்லையே.
இதனாலா மோக்ஷ ப்ராப்தி முடிவில் ஏற்படப்
போகிறது' என்று பலர் சங்கிக்கலாம்.

உலக விஷயங்களின் இயற்கையே இப்படி
யிருப்பதால், அவைகளால் ஏற்படக்கூடிய
நன்மைகளைப் பின்பற்றித் தீமைகளை விட்டு
விலக முயலுவதே புத்திமான்கள் செய்ய
வேண்டிய காரியமே ஒழிய, அதற்காக அவை
களை முற்றிலும் ஒழித்துவிடலாகாது. இப்
படிச் செய்ய முயலுபவன், ஆள்மேல் அமர்ந்
துள்ள கொசுவை அடிக்கப்போய், ஆளையே
அடித்துக்கொன்றவனுக்குத்தான் நிகர். உதா
ரணமாக, இக்காலத்துப் படிப்பை எடுத்துக்
கொள்ளுவோம், உலக விஷய இயற்கையை
விளக்க. இக்காலத்தில் பெரிய பரீக்ஷைகள்
எல்லாம் தேறிய ஒருவனிடம், 'நான் இவ்
வளவு தேறி இவ்வளவு திறமையுடனிருப்ப
வன்' என்ற கர்வம் இருக்கக்கூடாதா? அது
பெரும்பாலும் படித்திராத தாய் தந்தையர்முத
லிய பெரியோர்களைத் துரும்பாக மதித்து அவ
மதிக்கச் செய்கிறது என்பதைக்கொண்டு அந்
தப் படிப்பையே பின்பற்றாதிருந்து விடுவது
மூடத்தனமல்லவா? இக்காலத்துப் படிப்பின்
ஸாரத்தையும் உணரவேண்டும்; அதனால் ஏற்
படக்கூடிய கொடுமைகளும் நம்மிடம் குடி
கொள்ளாது ஒழுகவும் வேண்டும். இதல்
லவா புத்திமான் கடமை? இப்படியே
தான், உலகில் சிறந்தவை என்று மதிக்கப்
படும் விஷயங்களின் கதியும். ஆதலால்
ப்ராஹ்மணனுக்குத்தான் உயர்ந்தவன் என்ற
உணர்வு இருக்கத்தான் வேண்டும் கஷ்ட
மான வைதிகவழியில் தாழாது நடப்பதற்கு.
'புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா' என்ற
படி 'நான் ப்ராஹ்மணன், கண்டபடி ருசி
யான பதார்த்தங்களை கடை, தகாதவிடம்
ஆகிய இவைகளில், கண்டதும் அவைகளைத்
தின்றுவிடுவதா? மோக்ஷத்திற்கு முரணில்லா
வழிகளில் அல்லவா கஷ்டம் கருதாது நான்

நடக்கவேண்டும்!" என்ற பிடிப்பு, இறுமாப்பு இல்லாது எப்படி வரும். இதை, மற்றைய வர்ணத்தார் அவமதிப்பு முதலிய கொடிய நிலைக்குப் போகவொட்டாது மாற்றித் தடுத்து நிறுத்தவேண்டும்., ஆதலால், வர்ணாச்ரம தர்மத்திலிருந்து வரும் கேடெல்லாம் அதைச் சேர்ந்தவர் மயக்கத்தாலேயே ஒழிய இயற்கையில் அதில் யாதொரு குற்றங் குறையுமில்லை. அதை வைதிகர்கள் தயங்காது பின்பற்றலாம்.

(16) நிராலம்ப உபநிஷத்து 'ஜாதி யாது? என்று கேட்டுக்கொண்டு, "ஜாதியானது தோலுக்குமில்லை, ரக்தத்திற்குமில்லை, மாம்ஸத்திற்குமில்லை, எலும்பிற்குமில்லை. ஆத்மாவுக்கு ஜாதியில்லை. ஜாதியானது வ்யவஹாரத்தின்பொருட்டுக் கற்பிக்கப்பட்டிருக்கிறது என்று பதில் கூறுகிறது. இதனால் வைதிகப் பிறவி ஜாதிபேதம் தாக்கப்படாதா' என்று சங்கிப்பர் பலர்.

இம்மாதிரிச் சங்கிப்பதற்கு யாதொரு இடமும் இந்த உபநிஷத் வாக்கியத்தில் இல்லை. (i) வ்யவஹாரம் என்ற சொல்லுக்கு முன் காட்டியபடி சங்கிப்பவர் உலக வ்யவஹாரமாகிய வயிற்றுப் பிழைப்புத்தொழில் என்று கொண்டு, தொழிலால் ஜாதி என்று நிலைநாட்டமுயலலாம். ஆனால் உபநிஷத் ஒழுங்குப்படி வ்யவஹாரம் என்ற சொல்லுக்கு இப்பொருளே இல்லை! இப்பொருளையும் ஒரு சிறுபாகத்தில் அடக்கி முழுத்திவிடும் பெரிய பொருள்தான் அதற்கு உண்டு. அந்தப் பொருள், இந்தச் சொல்லின் உபநிஷத் எதிர் மறைச் சொல்லைக் கூறிய உடன் விளங்கிவிடும். அந்த எதிர் மறைச்சொல், பாரமார்த்திகம் என்பதே. ஆகவே, வ்யவஹாரம் என்பது உணர்பவன், உணர்வு, உணரப்படும் பொருள் ஆகிய மூன்றைப் பொருத்ததாக நடைபெறும்: எல்லா ஜீவனது நிலைகளாகிய விழிப்பு, கனவு, உறக்கம், மரணம் லோகாந்தரம் எல்லாம் இதில் சேர்ந்ததே. அதாவது அத்வைத நிலையாகிய பரமமுக்தி வரையிலுள்ள எல்லாநிலைகளுமே. இதில் இக்காலத்து நாகரீகத்தார் பொருள் எங்கு மறைந்துள்ளது என்று எப்படித் தேடினாலும் அகப்படாதே! (ii) மேலும் இவ்வுபநிஷத் 'கற்பிக்கப்பட்டிருக்கிறது' என்று கூறுகிறதே. இதை யார் கற்பித்தது என்ற 'கேள்வி பிறக்காதா? வேதாந்த ஒழுங்குபடி உலகவிஷய வேற்றுமை, உறவு, ஸம்பந்தம் எல்லாம் கற்பிதமே; இவைகளைக்கற்பித்தவர்தாம்,ஜாதியையும் கற்பித்திருத்தல் வேண்டும். மாணிடர் அல்லது அவர்கள் ஸமூகங்கள் இதைக் கற்பிக்க இடமேயில்லை. வேதாந்த மரியாதைப்படி கற்பிதம் என்பது மோக்ஷ நிலை வரை இருப்பதாகவே தோற்றி, மோக்ஷ நிலையில் இல்லாமல் போவதே ஒழிய வெறும் பொய், இல்லாதது, என்பதேயல்ல. (iii) ஆகவே, உலகம், அதன் வேற்றுமை, பந்தம், மோக்ஷம், வேதாந்தம் ஆகிய இவை எவ்வளவு ஸத்யமோ அவ்வளவு ஸத்யம் ஜாதிபேதமும் என்பதே இவ்வுபநிஷத்தின் கருத்து. பாரமார்த்திகம் நீங்கலான மற்றைய நிலைகளில் இன்னதென்று குறித்துக்கூறப்படா அநிர்வசனீயத் தன்மையுடனிருக்கும் மற்றைய ப்ரபஞ்ச விஷயங்களைப்போன்ற உண்மையே பிறவி ஜாதிபேதம், என்ற வைதிக முடிவை, ஒதுக்கிவைக்க எந்தச் சாஸ்திர ஆராய்ச்சியாலும் முடியாது.

ஆதலால், ஜாதிவர்ணாச்ரம வைதிக தர்மத்தை எந்த ஒழுங்கான வழியிலும் குற்றங்கூறி ஒதுக்கமுடியாது. சாஸ்திரீய ஒழுங்குக்கு மீறி, அதைத் தாக்கித் தகர்க்கக் கருதுபவர் சொற்களை, நாம் தகுந்த ஸந்தேஹங்களென்று மதிக்காமல் உதறிவிடவேண்டியதே.

கூத்தில் கோமாளி புகுந்ததுபோல, சிலர் வேடிக்கையாகப் பின்வருமாறு ஆக்ஷேபிக்கலாம். 'நமது ருஷிகள் கலிகாலக் கொடுமையால் ஜாதிபேதம் நிலைகுலைந்து சீரழியும் என்று கூறியுள்ளார். நாம் அதை நிலைநிறுத்த முயன்று,அவர்கள் சொற்களைப் பொய்யாக்குவது அழகா? அவர்கள் சொல்லியவைகளுக்கு மீறாது ஜாதி விஷய அபிப்ராயங்களை உபேக்ஷிப்பதல்லவா அழகு' என்பர். ருஷிகள் கூறியமொழிகள் உத்தரவுகளல்ல: நாம் பின்பற்றித் தவறாது ஒழுகக் கூறியவைகளல்ல. நாம் கெட்டுப் போகாதிருப்பதற்குக் கூறிய எச்சரிக்கைகள். பொதுவாக ஜாதிதர்ம விஷய நோக்கம் பெரும்பாலார்க்கும் இக்காலத்தில் விளங்காதாயினும், சிறுபாலாரான வைதிக ஆஸ்திகர்கள். இக்காலக்கொடுமையில் சிக்சித்



தத்தளித்துப் போகாதிருக்க, இக்கால ஆக்ஷேபங்களை எடுத்து ஸமாதானம் செய்யவேண்டியதும் அவசியம். ருஷிகள் கூறியபடி விஷயம் விளங்காது இக்காலக் கொடுமையில் பலர் முழுகுவராயினும், சிலர் இவ்வித ஆராய்ச்சியால் ருஷிகள் வாக்கியங்களை எச்சரிக்கையாகக்கொண்டு கடைத்தேறவும் இடமுண்டு. 'வழியில் திருடர் உண்டு; போனால் அடிபடுவாய்' என்று பெரியவரொருவர் கூறினால், அவ்வழி சென்று அடிபட்டுப் பெரியவர் வாக்கை உண்மையாக்க எவன் தான் முயல்வன்? ஆகவே நம்மால் கூடியவரையில் இக்காலத்திலும், ஜாதி தர்மங்களைப் பின்பற்ற முயன்றுவரவேண்டும். விவேகிகள், எதைக் கொண்டும் இவைகளைக்கைசோர விடவே கூடாது. ஓம் தத் ஸத்.

## துகாராம்

## TUKARAM

வங்காளக் கவிச் சிரேஷ்டரான ரவிந்தீரநாத டாகூரைப்பற்றிய பிரஸ்தாபமே இப்போது வெகு பலமாகக் கேட்கிறது. ஐரோப்பியர்கள் அவருக்கு "நோபல்" ஸம்மானம் செய்து கொண்டாடினார்கள். இருந்தாலும், அவர் நமது நாட்டிலிருந்த பூர்வ கவிகளைக் காட்டிலும் சிறந்தவர் என்பது நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. உதாரணமாக மகாராஷ்டிர கவியான துகாராம் என்பவரை எடுத்துக் கொள்வோம். அவரது பக்தி, பாட்டின் ஸரளம், வாக்கு அழகு முதலியவை ஒவ்வொரு பாட்டிலும் மிக்குத் தோன்றுகின்றன. மாடு மேய்க்கும் இடையர்கள் அவரது பாட்டைப் பாடிக்கொண்டிருக்கின்றனர். பண்டரிபுரத்துக்குப் போகும் பக்தர்கள் பாடுவதும் அவர் பாட்டையே.

பூனாவுக்குச் சமீபமான தேஹு என்ற குக்கிராமத்தில் துகாராம் கி. பி. 1608-ல் ஜனனமானார். அவரது முன்னோர்கள் வியாபாரம் செய்த சூத்திர ஜாதியாரானாலும், பக்தி சிரத்தையில் சிறந்தவர்கள். அவர்களுக்குப் பண்டரிநாதனான விடோபா குலதெய்வம். துகாராமுக்குப் பண்டரிநாதனைத் தவிர வேறு தெய்வமுமில்லை ; துணையுமில்லை.

கி. பி. 1629ல் மகாராஷ்டிர தேசத்தில் கொடிய பஞ்சம் நேர்ந்தது. துகாராமுடைய பெற்றோர்கள் மனைவி மகன் இவர்கள் இறந்தனர். துக்கம் தாங்கமுடியவில்லை. போதாக்குறைக்கு ஆகாரத்துக்கு வேண்டியவை அகப்படவில்லை. பண்டரிநாதனே துணையென,அவரை நோக்கித் துகாராம் உள்ளங் கசிந்து கதறினார். பக்தர்களைப் பூஜிப்பதிலும்,ஸத்கதாகாலக்ஷேபம் செய்வதிலும், பலபேர்களோடு கூடி, நாம ஸங்கீர்த்தனம் பண்ணுவதிலுமே அவர் பொழுதைச் செலவிட்டார். இது காரணமாக, இவருக்குக் குடும்பப்பற்று விடத்தொடங்கியது. பஞ்சம் தெளிந்ததும், துகாராம் மறு கல்யாணம் செய்துகொண்டார். என்றாலும், பக்திமேலீட்டால் கிருகக்காரியங்களைப் பார்ப்பதில்லை. காலையில் எழுந்து, விடோபாவை வந்தனை செய்துவிட்டு, "பந்தார" என்ற குன்றுக்குச் சென்று சமாதியிலிருப்பார். இளையாளாக வாழ்க்கைப்பட்ட மனைவி வெகுவாகக் கோபித்துக் கொண்டாள். என்றாலும், அவளையும் இவர் தம்வழிக்குக் கொண்டுவந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில், விடோபா வந்து தம்மைப் பற்றிப் பாடும்படி கட்டளையிட்டதாகத் துகாராம் கனவுகண்டார். இருநூறு வருஷங்களுக்கு முன்னால் வங்காளத்தில் இருந்த சைதன்ய ஸ்வாமியை இவர் குருவாகக்கொண்டு, பகவானுடைய குணாதிசயங்களைப் பாடத்தொடங்கினர். நாமதேவ் என்னும் பக்தரும் துகாராமுக்குக் கனவில்தோன்றி ஒரு நூறு கோடி பாடல்களைப்பாடும்படி கட்டளையிட்டதாகவும் கர்ணபரம்பரைச் செய்தி உலாவுகிறது. இவரது பாடல்களில் பெரும்பாலும் கண்ணபிரானுடைய லீலைகளைப்பற்றியவையாக வுள்ளன. ஜாரசோர சிகாமணியான கண்ணனுடைய குணானுபவத்தில் ஈடுபடாத பக்தர் யாவரிருக்கின்றனர்? துகாராம் ஒரு தத்துவ சாஸ்திரியன்று. என்றாலும், அவருடைய பாடல்கள் மனோவாக்குக் கெட்டாத பகவானுடைய செயல்களின் தத்துவத்தைக் குறித்தவையாகவேயுள்ளன.

இராமனாகவும் கிருஷ்ணனாகவும் அவதாரம் செய்த பகவானையே தூஷித்து விரோதித்த

பாபிகள் இருந்தன ரென்றால், துகாராம் விஷயத்தில் சிற்சிலர் விரோதிகளாக இருந்தனர் என்பதில் ஆச்சரியமில்லை. இவருடைய புகழ் நெடுந்தூரம் பரவியது. சிஷ்யர்கள் வர வர அதிகரித்தனர். மகா கணபதியின் சந்ததியார்களான குருக்கள் இவரோடு உடனிருந்து உண்டனர். இவைகளைக் கண்டதும், பிராம்மணர்களுக்குப் பொறாமை உண்டாயிற்று. மாம்பாஜி என்ற ஒருவன், இவரைக் கட்டிப் பிடித்து அருகேயிருந்த கள்ளி வேலியில் போட்டுவிட்டான். ராமேசுவர பட்டன் என்ற மற்றொருவன், இவரைக் கட்டிக் கொணரச் செய்து, "சூத்திரனை நீ, வேதத்தின் பொருளை எப்படிப் பிறர்க்கு உபதேசிக்கலாம்?" என்று கேட்டான். "எனக்கு ஒன்றுமே தெரியாது; நான் சொல்வதெல்லாம் விடோபா சொல்லிக் கொடுத்ததுதான்" என்று துகாராம் பதில் சொன்னார். பட்டனுக்குக் கோபம் வந்தது. துகாராமுடைய பாடல்களை ஆற்றில் போட்டுவிடும்படி கட்டளையிட்டான். அப்படியேசெய்ய, துக்காராம், மிகுந்த துக்கத்தினால் அன்னாகாரமின்றிக் கோவிலில் கிடந்தனர். பகவான் இவரது வேண்டுகோளுக்கு இரங்கினர். ஆற்றோடு போன பாடல்கள் திரும்பிவந்து, துகாராம் கையில் கிடைத்தன. மாம்பாஜியும் ராமேசுவரபட்டனும் அபராதத்தை மன்னிக்க வேண்டுமென்று கேட்டு, சிஷ்யர்களாயினர்.

துகாராமின் கீர்த்தியைக் கேட்ட சத்திரபதி சிவாஜி, இவரைத் தமது அரண்மனைக்கு வரும்படி வேண்டினான். நமது நாட்டிலிருந்த ஸங்கீத வித்வான் தியாகையரவர்கள்போலவே துகாராமும் ராஜஸபைக்குப் போக மறுத்து, சிவாஜிக்குச் சில உபதேசமொழிகளை யனுப்பினர். பிறகு, உலக பந்தத்தை அறுத்துவிட்டதன்றி, இவ்வுலக வாழ்க்கையையுமே விட வேண்டிய காலம் வந்ததும், "கிழிந்த வேஷ்டி உருவாவதில்லை; சமுத்திரத்துக்குப் போன ஆற்று வெள்ளம் திரும்புவதில்லை; துகாராம் போகிறான், திரும்பமாட்டான்" என்று பாடித் தமது மண்ணுடம்பை நீத்து, அழியாப் புகழை நிலைநிறுத்திப் போயினர்.

மலர்மிசை யேகினான் மாணடி தாழ்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்—திருக்குறள்.

(342-ம் பக்கத் தொடர்ச்சி.)

சந்திரமதி தலையைத் துணித்தலைக்காண, மயானத்தில் காசி நகரத்து ஜனங்களெல்லாம் கூடினர். அப்போது ஹரிச்சந்திரன், ஸர்வ தெய்வங்களையும் பிரார்த்தித்துத் தன் மனைவியின் தலையை, தர்மவழிக்குக் கட்டுப்பட்டுத்துணிக்கச் சித்தமாயிருந்தான். அவன் மனைவியும், அவன் பாதாரவிந்தங்களில் பதிந்து எழுந்து, சிந்தை கலங்காது, மயங்காது, தயங்காது, உடனே தனது சிரத்தைத் துணிக்கும்படி பிரார்த்தித்தாள். அவனு மவ்வாறே செய்ய, ஓங்கிய கத்தி அவள் கழுத்தில் பூமாலையாக விழுந்தது. இதைக் கண்டதும், தனது ஸத்தியமும், தன் மனைவியின் கற்பும் உண்மையானால் அக்கத்தி தனது மனைவியின் சிரத்தைத் துணிக்குமாக என்று சொல்லி மீண்டும் கத்தியை ஓங்கினான். அப்போதுபரபரப்புடன் திரிமூர்த்திகளும் ஓடிவந்து அக்கத்தியைப் பிடித்துத்தடுத்தனர்.

ஹரிச்சந்திரன் மயங்கிக்கிடந்தான்; சந்திரமதி, குனிந்த தலை நிமிராதிருந்தாள். ஆனால் அப்போது அச்சுடுகாடு ஸ்வர்க்கமாக மாறியது; மற்று அங்கிருந்த தகாத பொருளெல்லாம், பெரியோர்களீக மதிக்கும்பொருளாக மாறின. இதையெல்லாம் கண்ட ஜனங்கள் சந்திரமதியின் பெருமையையும், ஹரிச்சந்திரனது உண்மை நிலையையுங் கொண்டாடினர். விச்வாமித்ர முனிவரும், முன் தாம் தேவஸபையில் ஒப்புக்கொண்டபடி தமது தவத்திற் பாதியை அவனுக்குக் கொடுத்து ராஜ்யத்தையுமீண்டு மடையும்படியுஞ் செய்தனர். தேவரருளால் இறந்த குழந்தைகளும் பிழைத்தன.

காசி ராஜன் முதலியோர்கடவுளாணையை முன்னிட்டு, ஹரிச்சந்திரனை அயோத்திக்கு அழைத்துப்போய் மீண்டும் பட்டாபிஷேகஞ் செய்வித்தனர். அவன் அங்கு அநேக நாள் பிரஜைகளின் ஸுகத்தையே நாடி ஆண்டு வந்தான். அவனைப்போல், ஸத்யத்தினால் பெருமை யடைவதல்லவா மனிதனாய்ப் பிறந்தவனுக்குப் பெருமை?

உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்—திருக்குறள்.

—மஹாபாரதம், ஆரண்ய பருவம்.



## மலேரியா என்னும் விஷஜ்வரம்

## MALARIA

இந்தியாவில் மலேரியா:—உஷ்ண ப்ரதேசங்களில், மலேரியா என்னும் விஷஜ்வரம் மற்ற வியாதிகளைக் காட்டிலும் விசேஷித்துப் பரவி வருகிறது. அந்த ஜ்வரத்தினால் மனிதர்க்கு மரணம் உடனே நேரிடாமற் போனபோதிலும், அந்நோவால் பீடிக்கப்பட்டு வருந்துபவர்களின் சங்கியை அதிகரித்துக்கொண்டு வருகிறது. நம் இந்தியா தேசத்தில் மட்டும், ராஜாங்கத்தாரின் கணக்கின்படிக்கே வருஷம் ஒன்றுக்கு மலேரியா ஜ்வரத்தால் ஆயிரத்துக்கு ஐந்து பேர்கள் வீதம் மரணம் அடைகிறார்கள்என்றால்,வருஷம் ஒன்றுக்குச் சராசரிக்கு இந்தியா முழுவதிலும் 1,130,000 பேர்கள் அந்த ஜ்வரத்துக்கு இரையாகிறார்கள். மற்றத் தொத்து வியாதிகளைப்போல் அல்லாமல், இந்த ஜ்வரம் ஓரிடத்தில் பரவ ஆரம்பித்தால், அவ்விடத்திலேயே குடிகொண்டுவிடுகிறது. செழிப்பான இடங்களில் விவசாயம் ஆரம்பிக்கிற காலத்தில், இந்த வியாதியும் செழிக்க ஆரம்பிக்கிறது. ஆனால், வைத்தியர்களுடைய ஆராய்ச்சிகளுக்கும், மருந்துகளுக்கும்பிடிபடாமல் ஜனங்களை வருத்தும் சில தொத்து நோய்களைப்போலன்றி, இந்த ஜ்வரம் வைத்தியர்களுடைய ஆராய்ச்சிக்கும், சிகித்ஸைக்கும் கட்டுப்பட்டுவிட்டதும் ஜனங்களுடைய நல்லதிர்ஷ்டந்தான் என்று சொல்லவேண்டும்.


மலேரியாசுரக் கிருமிகள்

மலேரியாவின் பூர்வ சரித்திரம்:—மலேரியா ஜ்வரம் சமீபகாலத்தில் திடீரென்று கிளம்பிய வியாதியல்ல. க்ரீஸ், இடாலியா முதலிய தேசங்களில் சுமார் இரண்டாயிர வருஷங்களுக்கு முன்னமே இது குடிகொண்டிருந்ததாகத் தெரியவருகிறது. அந்த வியாதியைப்பற்றிய பரிசோதனைப் பரீக்ஷைகள் சுமார் 20 வருஷங்களுக்கு முன்னால்தான் ஆரம்பம். ஆனால் 1640-ம் வருஷத்தில் "கொயினா" என்று சாதாரணமாய் ஜனங்கள் இப்போது வழங்குகிற "க்வினீன்" (Quinine) எடுக்கப்படுகிற "சின்கோனா" பட்டையை அமெரிக்கா கண்டத்து பெரு(Peru)தேசத்து ராஜப்பிரதிநிதியின் மனையாட்டியாகிய (Countess d'El Cinchon) சின்கன் பெருமாட்டி, தான் வருந்திய ஜ்வரத்துக்கு மருந்தாக உபயோகித்துக் குணமடைந்த தன் காரணமாக ஷை பட்டையை ஐரோப்பாவுக்கு அனுப்பிவைத்ததாகவும், ஆனால் 1820 வருஷத்தில்தான் ஷை பட்டையிலிருந்து 'க்வினீன்'என்கிற மருந்து எடுக்கப்பட்டதாகவும், நீடித்த ஆராய்ச்சிசெய்து மலேரியாஜ்வரத்தின் அம்சங்கள் எல்லாவற்றையும் கண்டுபிடித்த (Sir Ronald Ross) ராஸ் என்னும் வைத்திய சிரோமணி எழுதி வைத்திருக்கிறார். அவருடைய ஆராய்ச்சிகளின் பலனாக இப்பொழுது மலேரியா ஜ்வரத்தைப் பற்றிய எல்லா விஷயங்களும் ஜனங்களுக்குத் தெரியவந்திருக்கிறது.

மலேரியாவுக்குரித்தான இடம்:—சாதாரணமாக அந்த ஜ்வரம் உஷ்ண ப்ரதேசங்களிலெல்லாம் வியாபித்திருக்கிறது. கோடை காலத்தில், மழை பெய்தபின் நீர்ப்பிடிப்பினால் ஈரங்காத்திருக்கிற பூமிகளின் சமீபத்தில் மிகுதியும் உண்டாகிறது.

மலேரியாப் பூச்சிகள் பரவும் விதம்:—கண்ணுக்குப் புலப்படாமல் அணுப்பிரமாணமாயிருக்கிற ஆயிரக்கணக்கான பூச்சிகள் மனிதருடைய இரத்தத்தில் வந்துசேருவதினால் ஷை வியாதி உண்டாகிறது.

இப்பூச்சிகள் நம்முடைய இரத்தத்துக்குள் போய்ச் சேரும்படி செய்கிறது, நம்முடைய கண்களுக்குப் புலப்படக்கூடிய ஒரு வகைக் கொசு என்று பரிசோதனை மூலமாய்க் கண்டுபிடிக்கப்பட்டு, எல்லோராலும் இப்போது ஒப்புக்கொள்ளப்பட்டு மிருக்கிறது. "அனோபிலிஸ்" (Anopheles) என்று சொல்லப்படும் இந்தக் கொசு, மனிதர்களைக் கடித்து இரத்தத்தைக் குடித்து வளருகிற தன்மையுடையது. மலேரியா ஜ்வரத்தில் வருந்தும் ஒருவனைக் கடித்து இரத்தத்தை உறியும்போது அவ்விரத்தத்திலுள்ள ஷை ஜ்வரத்துக்குக்காரணமான பூச்சிகளையும்அதுகுடித்துவிடுகிறது. இப்பூச்சிகள் கொசுவின் வயிற்றுக்குள் புகுந்தவுடன், சில மாறுதல்களை யடைந்து, அக்கொசுவின் தொண்டைக்குத் திரும்பிவந்து

சேருகின்றன. அக்கொசு மறுபடி இன்னொருவனைக் கடித்து இரத்தம் குடிக்கும்போது, ஷை பூச்சிகளை அம்மனிதனுடைய இரத்தக் குழாய்களில் செலுத்திவிடுகின்றது. அப்படிச் செலுத்தப்பட்ட பூச்சிகள் முதலில் சில நூறுகளாய்மட்டு மிருந்தாலும், செலுத்தப்பட்ட சில நாட்களுக்கெல்லாம், விருத்தியடைந்து ஆயிரக்கோடிக் கணக்காகக் குஞ்சு பொரித்து விடுகின்றன. மனிதருடைய இரத்தக் கால்வாய்களில் செலுத்தப்பட்ட ஒவ்வொரு மலேரியாப் பூச்சியும் ஒவ்வொரு சிவப்புகார்பஸ்ல் (Red Corpuscle) என்று சொல்லப்பட்ட இரத்தரேணுவில் நுழைந்து, அதையே புசித்துக்கொழுத்து வளருகிறது. நன்றாய்க் கொழுத்தவுடன் அந்தப் பூச்சி ஆயிரக் கணக்காகக் குஞ்சு பொரிக்கிறது. ஒவ்வொரு குஞ்சும், மறுபடி முற்கூறிய மாதிரியே ஒவ்வொரு இரத்தரேணுவில் நுழைந்து, வளர்ந்து கொழுத்தவுடன் குஞ்சு பொரிக்கிறது என்றால், ஒரு மலேரியாப் பூச்சியைத் தன் இரத்தத்தில் வரவேற்ற மனிதன், வெகு சீக்கிரத்தில் தன் இரத்தரேணுக்களின் சத்துமுழுவதையும் உறிந்துவிடக்கூடிய எவ்வளவு கோடி பூச்சிகளைத் தன் உடம்பில் வளரச் செய்து கொள்ளுவானென்று இதைப் படிப்பவர்களே தெரிந்து கொள்ளலாம்.

மலேரியாஜ்வரம் உண்டாகிற விதம்:—முதலில் கொசுக்கடியால் இரத்தத்தில் புகுந்த பூச்சிகள் எல்லாம், ஒரே சமயத்தில் குஞ்சு பொரிக்க வாரம்பிக்கின்றன. இந்தக் குஞ்சுகள் பொரிக்கப்பட்டு இரத்த ஓட்டத்தில் கலக்கிற சமயத்தில்தான் குளிருடன் ஜ்வரமும் ஆரம்பிக்கிறது. இந்தப் பூச்சிகளால் விடுவிக்கப்பட்ட விஷம், இரத்தத்தில் சம்பந்தமடைவதால்தான் ஜ்வரம் உண்டாகிறதென்பது வைத்திய சாஸ்திரிகளின் துணிபு. அந்த விஷமானது மறுபடி நம்முடைய சரீரத்தைவிட்டு, வியர்வை, மூத்திரம் முதலியவை வழியாக வெளிப்போந்த பிறகு, ஜ்வரமும் விடுகிறது. சாதாரணமாகச் சுமார் ஆறுமணி நேரத்துக்குமேல் நாற்பது மணி நேரத்துக்குள் அவ்விஷம் தேகத்தைவிட்டு வெளியாகிறது. இந்த நாற்பது மணிநேரத்துக்குள்ளேயே ஷை பூச்சிகளுடைய இரண்டாவது தலைமுறைச் சந்ததிகள் வெளிப்பட்டுவிட்டால், புதிதாக விஷம் இரத்தத்தில் கலக்கவிடப்பட்டு, ஜ்வரம் விடாமல் அடிக்கிறது.

ஜ்வரக்கட்டி:—இந்தப்பூச்சிகள், ஜ்வரத்தை உண்டாக்குவதுடன் மருந்து முதலியவைகளால் கண்டிக்கப்படாவிட்டால், இரத்தமில்லாமை அதாவது சோகை (anæmia) ஜ்வரக்கட்டி (Enlarged spleen) முதலிய கொடிய ரோகங்களையும் உண்டாக்கிப் பிராண ஹானியையும் விளைவிக்கும்.

மூன்று விதமான பூச்சிகள்:—இப்பூச்சிகளிலும் குறைந்தது மூன்று விதம் இருக்கிறதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

(1) மூன்று நாளைக்கொருதரம் குஞ்சு பொரித்து மூன்று நாளைக்கொருதரம் முறைக்காய்ச்சல் உண்டாக்குகிற (Quartan) பூச்சி. (நாலாமுறை ஜ்வரம்)

(2) ஒன்று விட்டொரு நாள் குஞ்சு பொரித்து, முறை ஜ்வரம் உண்டாக்குகிற (Tertian) பூச்சி. (மூன்றும்முறை ஜ்வரம்)

(3) தினசரிக் குஞ்சுபொரித்து, மனிதரைத் தினந்தோறும் வருத்துகிற ஜ்வரத்தின் (Malignant) பூச்சி. (விடா முறை ஜ்வரம்)

மேற்கூறிய ஜ்வரங்களில் யாதாமொன்றில் வருந்துகிற ஒருவனுடைய இரத்தத்தில் ஒரு துளி எடுத்து ஆரோக்கியமாயும், திடமாயுமிருக்கிற மற்றொருவன் இரத்தத்தில் ஊசி வழியாகக் குத்தி (Injection) ஏற்றினால், பிற்கூறியவனும் வெகு சீக்கிரத்தில் அதே ஜ்வரத்தினால் வருந்துவதைப் பார்க்கலாம்.

ஆகையால் இந்த ஜ்வரம் ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவுந்தன்மையது. ஆனால், அப்படிப் பரவச்செய்ய, மத்தியில் அனாபிலிஸ் (anopheles) என்ற கொசு இருந்தே தீரவேண்டும்.

அனாபிலீஸ் (Anopheles) என்னும் கொசு.—கொசுக்களில் பலவித மிருப்பினும், இந்தக் கொசுவைக் கண்டுபிடிப்பது எளிது. இந்தக் கொசுவினுடைய சிறு குஞ்சுகள் (larvæ) புல், கோரை, நாணல், இன்னும் ஜலத்தில் வளருகிற செடிகள் இவைகளின் அருகில் ஓடுகிற அல்லது தேங்கியிருக்கிற ஜலங்களில் வளரும். சாக்கடைகளிலும், மழை ஜலம் தேங்கியிருக்கிற புல்தரையிலும், மண் வெட்டி



எடுக்கப்பட்ட பள்ளங்களிலும், தோட்டங்களுக்கு ஜலம் பாய்ச்சுவதற்காகக் கட்டப்பட்டிருக்கும் சிறு தொட்டிகளிலும், ஜலத்தைத் தேக்கி நிற்க வைத்துக்கொள்ளக் கூடிய அனாஸ் (Pine apple) செடி, தாழஞ்செடி, மரப்பொந்துகள் இவைகளிலும் ஷை கொசு முட்டையிடுவதினால், குஞ்சுகள் பொரிக்கப்பட்டு வளரும். இந்தக் கொசுவின் குஞ்சுகள் (இதர கொசுவின் குஞ்சுகளைப் போலன்றி) ஜலத்தில் ஒரு சிறு குச்சியைப் போட்டால் எப்படி மிதக்குமோ, அப்படி மிதந்து கொண்டிருக்கும். மற்ற கொசுக்களின் குஞ்சுகளோ, தங்கள் வாலை ஜல மட்டத்தில் வைத்துக்கொண்டு தலை கீழாகத் தொங்கும். சற்றுக் கவனித்துப் பார்த்தால், வித்தியாசம் எவர்க்கும் எளிதிற் கண்ணுக்கு எதிரிலேயே புலப்படும். "அனாபிலிஸ்" பெருங் கொசுவுக்கும், இதர கொசுக்களுக்குமே வித்தியாசமுண்டு. இந்த மலேரியாக் கொசு, கறுப்பும் வெளுப்பும் கலந்த கட்டங்கட்டமாக இருக்கும். இதனுடைய சிறகுகளில் முன்பக்கத்தில் மூன்று அல்லது நான்கு கறுப்புப் புள்ளிகள் இருப்பதனாலும், இதைக் கண்டுபிடிப்பது எளிது. இதன்றியும், இக்கொசு சுவற்றில் உட்கார்ந்திருக்கும்போது, இதனுடைய தலைமட்டும் சுவற்றில் படுமேயொழிய, வாலைத் தூக்கிக் கொண்டிருப்பதனாற்போலவே வைத்துக் கொண்டிருப்பதினின்றும் கண்டுகொள்ளலாம். இந்தக் கொசு மனிதரைக் கடிப்பது பெரும்பாலும் இரவிலும் அஸ்தமன வேளையிலுந்தான்.

மலேரியாவுக்குச் சிகித்சை:—இந்த ஜ்வரத்திற்கு மருந்து "க்வினீன்" என்பது இப்போது உலக ப்ரசித்தம். மலேரியா ஜ்வரத்தில் கஷ்டப்படுகிறவர்கள் வைத்தியர்களிடம் கேட்டுக்கொண்டு தினசரி, வேளைக்கு ஐந்து கிரெயின் (5 Grains) வீதம் இரண்டு அல்லது மூன்றுவேளை சாப்பிடவேண்டும். மலேரியாஜ்வரம் விசேஷமாகப் பீடிக்கிற ஊர்களிலிருப்பவர்களும், அங்கே வேலையினிமித்தம் போகவேண்டியிருப்பவர்களும், ஜ்வரம் வருவதற்கு முந்தியே, தினசரி 5 கிரெயின் வீதம் சில காலம் சாப்பிடுவது மிகவும் அவசியம். அது காரணமாகவே, நம்முடைய இராஜாங்கத்தார் அந்த மருந்தை எல்லாருக்கும் உபயோகமாகும்படி வெகு சுவல்பக் கிரயத்துக்கு விற்பனைக்குத் தயாராகவைத்திருக்கிறார்கள்.

ஷை "குவினீன்" பொட்டலங்கள் இந்தராஜதானியின் முக்கிய பட்டணமாகிய சென்னையைத் தவிர்த்த மற்றைய தபாலாபீஸ்களில் விற்பனை செய்யப்படும். சென்னையில் க்வினீன் எளிதில் மலிவாகக்கிடைப்பதினால் தபாலாபீஸில் விற்பனை செய்யப்படுவதில்லை.

ஷை ஜ்வரம் அணுகவொட்டாமல் தடுக்க ஏற்பாடுகள்:—எப்பொழுது இந்த ஜ்வரத்தைப் பற்றிய விவரங்கள் நன்றாக ஆராய்ச்சி செய்யப்பட்டுப் போய்விட்டனவோ, அப்பொழுதே நாம் அதைத் தடுக்க முயற்சிசெய்வது அவசியம் என்றும் சுலபம் என்றும் ஏற்பட்டு விட்டது. முக்கியமாக நாம் கவனிக்கவேண்டிய முறைகளாவன:

(1) வீட்டைச்சுற்றி ஜலந்தேங்காமல் செய்யவேண்டும்.

(2) அப்படிச்செய்ய முடியாமற்போன காலங்களில், தேங்கிநிற்கிற ஜலத்தில் (கெரோஸினாயில்) மண்ணெண்ணெயைஊற்றிக்கொசுக் குஞ்சுகளைச் சாகடிக்கவேண்டும்.

(3) கொசுவலைகள் வாங்கி உபயோகப்படுத்தக்கூடியவர்கள் கட்டாயம் வாங்கி உபயோகப்படுத்தவேண்டும்.

(4) முடியாதவர்கள், (காலணாவுக்குக் கிடைக்கும்) ஒரு சிறு பனை ஓலை விசிறியைக் கையோடு வைத்துக்கொண்டு உபயோகிப்பதில் கொஞ்சம் குணம் அடைவார்கள்.

(5) கொசு ஜாஸ்தியாயிருக்கிற வீடுகளில், சாம்பிராணி, கந்தகம், கற்பூரம் முதலியவைகளைக் கொளுத்துவதினால் அநேகம் கொசுக்கள் இறக்கும்.

## தேடாத செல்வம்

இது ஸ்ரீசைலர் இயற்றியது. ஆண் பெண் இருபாலாரும் எளிதில் அறியும் வண்ணம் எளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. தற்காலத்து வெளிவரும் அநேக கதைப் புத்தகங்கள் போன்றிராமல் உலக நடையைப் பெரும்பாலும் தழுவி எல்லாவகுப்பினருக்கும் அறிவூட்டக்கூடியது. பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு மிகவும் உபயோக முள்ளது. சோம்பலின் தீமையும், சூதாட்டத்தின் முடிவும், லாட்டரி சீட்டின் சூதுகளும், வீண் வம்பளப்போர் அடையும் கதியும், பொறுமையின் பெருமையும், அதிர்ஷ்ட விசித்திரத்தின் அமைப்பும் செவ்வனே கதைப்போக்கிலேயே ஹாஸ்யமான பாஷையில் வர்ணிக்கப்பட்டுள்ளன. விலை அணா 3.

# வான சாஸ்திரம்

## LESSONS IN ASTRONOMY

### சனி

எல்லாக் கிரஹங்களிலும் மிகக்கெடுதல்களை விளைவிக்கின்ற கிரஹம் சனி யென்று எல்லோரும் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். நாம் பிறரைத் திட்டும்போதுகூட, "அடே, சனியே தொலேடா" என்று சொல்லுவதுண்டு. இப்படிச் சாதாரணமாக ஜனங்களால் வெறுக்கப்பட்ட இக்கிரஹம் நம்மிடத்திலிருந்து வெகு தூரத்திலிருக்கிறது. ப்ரஹஸ்பதி உள்ள தூரத்தைப்போல் இரண்டு மடங்கு தூரத்தில் இருக்கிறது. நமக்கும் ப்ரஹஸ்பதிக்கும் உள்ள தூரம் 388,000,000 மைல். ஆனால் சனி 788,000,000 மைல் தூரத்திலிருக்கிறது. அதாவது, சூர்யனிடத்திலிருந்து ஏறக்குறைய 881,000,000, மைல் தூரத்திலிருக்கிறது. நமது வெறுங் கண்ணுக்குத் தெரியக்கூடிய கிரஹங்களுள் இதுதான் மிகவும் மெதுவாய் அசைகிறது. இது தன்னைத் தானே ஒரு தரம் சுற்ற, பத்தேகால் மணி நேரம் பிடிக்கிறது: ஆகையால் இதற்கும் ப்ரஹஸ்பதியைப்போல், ஏறக்குறைய 5 மணி நேரம் பகலும், 5 மணி நேரம் இரவுமாயிருக்கும். இது சூர்யனைச் சுற்றிவரும் பாதை மிகப் பெரியது. இது ஒரு தரம் சூர்யனைச் சுற்றிவர, 10,759 தினங்கள் ஆகின்றன. அதாவது சுமார் 29½ வருஷங்கள் ஆகின்றன. சனியிலுள்ளவர்களுக்கு இதுதான் ஒரு வருஷமல்லவா? இந்தக் கிரஹத்தின் வருஷத்தில் அதன் தினங்கள் எவ்வளவு இருக்கவேண்டும்? சுமார் 25,220 தினங்கள் இருக்கவேண்டும். இப்படியிருந்தால் தேதிக் கணக்குகள் எப்படி வைத்துக்கொள்ளுகிறது! சூர்யனைச் சுற்றிவரும் பாதைக்குப் பூமியைப்போல் சனியும் சாய்ந்திருக்கிறது. ஆகையால் அங்கும் பருவ காலங்கள் இருக்கவேண்டும். பருவ காலங்கள் நமக்கு நான்கல்லவா? ஒவ்வொரு காலமும் சுமார் மூன்று மாதங்கள். ஆனால் அங்கு ஒவ்வொரு பருவ காலமும் சுமார் 7½ வருஷமிருக்கவேண்டும்!

இது சூர்யனிடத்திலிருந்து பூமியைவிடச் சுமார் 9½ மடங்கு தூரத்திலிருப்பதால், இதன்மேல் படும் சூர்ய உஷ்ணமும் வெளிச்சமும், பூமியில் படுவதில் (1/90) 90 மடங்கு குறைச்சலாயிருக்கும். இது பூமியைவிட 9½ மடங்கு பெரியது. இதைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்க்கும்போது, ப்ரஹஸ்பதியைப்போல் இதுவும் இரு துருவங்களிலும் தட்டையாகக் காணப்படுகிறது. முற்றிலும் உருண்டையான கோளமாயில்லை. இதன் அகலம் அல்லது கிழக்கு மேற்கில் குறுக்களவு 69,750 மைல். இதன் உயரம் அல்லது வடக்குத் தெற்கில் குறுக்களவு 68,200 மைல். ஆகையால் ப்ரஹஸ்பதியைவிடத் தட்டையானகோளம். அல்லாமலும், எல்லாக்கிரஹங்களையும்விடத் தட்டையானகோளம். பருமனில் பூமியைவிட 719 மடங்கு பெரியது.

இதைத் தூரத்ருஷ்டிக்கண்ணாடியால் பார்க்கும்போது ப்ரஹஸ்பதியில் காணப்பட்டது போல், இதிலும் அநேகம் கறுப்புப் பட்டைகளும், களங்கங்களும் காணப்படுகின்றன. ஆனால் ப்ரஹஸ்பதியின் பட்டைகளைவிட இவை கொஞ்சம் மங்கலாகவும், அகலமாகவும் காணப்படுகின்றன. இவை மேகங்கள் சஞ்சரிப்பதால் உண்டாகும் தோற்றங்களென்று முன்னமேயே பார்த்தோம்.

இதைத் தூரக் கண்ணாடியால் பார்க்கும்போது இதைச் சுற்றியிருக்கும் விநோதமான கிரீடம்போன்ற வளையம் நமக்கு ஆச்சரியத்தை உண்டாக்கும். இம்மாதிரியான கிரீடம் வேறெந்தக் கிரஹத்திற்கும் இல்லை. இந்த வளையம் மிகவும் நேர்த்தியாகச் சனியின் மத்திய பாகத்திற்குக் கொஞ்சம் மேலே காணப்படுகிறது.

இவ்வளையத்தின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்குள்ள குறுக்களவு 176,000 மைலிருந்த போதிலும், இதன் அகலம் 62 மைலும், கனம் அல்லது உயரம் 180 மைலும் தான். இந்த மோதிரம் மூன்று பாகங்களாகக் காணப்படுகின்றது. இம்மூன்று பாகங்களுள் மத்தியிலிருப்பதுதான் மிகப் பிரகாசமானது. வெளியிலிருப்பது இதைவிடக்கொஞ்சம் மங்கலானது. உட்பக்கம் இருக்கும் பாகம் கொஞ்சம் கறுப்பாகக் காணப்படுகிறது. இப்பாகந்தான் சனிக்குச் சமீபத்திலிருக்கிறது.

இந்த வட்டம் அல்லது வளையம் என்னவாயிருக்கக்கூடும்? மிகச்சிறிய அநேகம் பிரகாச



மான உபகிரஹங்களின் தொகுதியென்றே தோன்றுகிறது. ஆனால் அதிக சக்தியுள்ள தூரதிருஷ்டிக் கண்ணாடிக்குக்கூட இதில் ஒன்றும் மிகத்தெளிவாகக் காணப்படவில்லை. இதைத் தவிர, சனிக்கு எட்டு உபகிரஹங்கள் உண்டு. நமக்கு வெகு தூரத்திலிருப்பதால் அவைகள் சாதாரண தூரதிருஷ்டிக் கண்ணாடிக்குக்கூடப் புலப்படா. அதிக சக்தியுள்ளக் கண்ணாடியால் பார்க்கலாம். இதைப்போலவும் பிரஹஸ்பதியைப் போலவும் பல உபகிரஹங்களையுடைய கிரஹங்களுக்கு எப்படி சாந்திரமான மாதங்களைக் கணக்கிடுகிறது?

### சனியின் உபகிரஹங்கள்

| உபகிரஹம் | சனியிலிருந்துள்ள தூரம் | இதைச் சுற்ற பிடிக்கும் காலம் | | |
|---|---|---|---|---|
| | | நாள் | மணி | நி |
| முதல் உபகிரஹம் | 128,340 மைல் | ,, | 22 | 37 |
| இரண்டாவது ,, | 159,712 ,, | 1 | 8 | 53 |
| மூன்றாவது ,, | 203,856 ,, | 1 | 21 | 18 |
| நான்காவது ,, | 261,144 ,, | 2 | 17 | 41 |
| ஐந்தாவது ,, | 364,808 ,, | 4 | 12 | 25 |
| ஆறாவது ,, | 845,680 ,, | 15 | 22 | 41 |
| ஏழாவது ,, | 1,023,000 ,, | 21 | 6 | 39 |
| எட்டாவது ,, | 2,457,680 ,, | 79 | 7 | 54 |

### யுரேனஸ்

சுமார் 235 வருஷங்களுக்குமுன் சனிக்குப் பிறகு, சூர்யனைச் சுற்றிவரும் வேறு கிரஹங்கள் இருந்ததாக மனிதர்களுக்குத் தெரியவில்லை. 1781-ம் வருஷத்தில் ஒரு ஐரோப்பிய வானசாஸ்திரி ஆகாயத்தைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்த்துக் கொண்டிருக்கும்போது, புதிதான ஒரு நட்சத்திரம் அவர் கண்ணுக்குத் தென்பட்டது. உடனே அவர் மேலும்மேலும் அதிக சக்தியுள்ளக் கண்ணாடிகளால் பார்க்க, இது மேலும் மேலும் பெரிதாகவும், வரவரச் சமீபத்திலும் தென்பட்டது. நாம் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்க்கும்போது நமது கிரஹங்கள் மாத்திரமே பெரிதாகக் காணப்படுமே தவிர, வைரங்கள் போல் ஜ்வலிக்கும் நட்சத்திரங்கள் கொஞ்சம் அதிகப் பிரகாசத்துடன் காணப்பட்ட போதிலும் பெரிதாகவும், சமீபத்திலும் காணப்படா. இந்த நட்சத்திரங்கள் கணக்குக் கெட்டாத தூரத்திலிருக்கின்றன. ஆகையால் இப்பொழுது நமக்குத் தெரிந்தவரையில் உபயோகிக்கும் எல்லாவற்றிலும் மிகச் சக்தியையுடைய கண்ணாடியால் பார்த்தாலும் அவைகள் முன் மாதிரியே காணப்படுகின்றனவேயல்லாமல், பெரியனவாகவாவது, சமீபத்திலாவது காணப்படவில்லை.

ஆகையால்தான் நட்சத்திரங்களின் அமைப்பைப் பற்றியாவது, அவைகள் எப்படிப்பட்டவையென்பதைப்பற்றியாவது நாம் ஒன்றும் நிச்சயமாகச் சொல்லமுடியாது. அவைகளைப் பற்றிய விஷயங்களெல்லாம் கணிதத்தாலும் ஊகத்தாலும் அறியப்பட்டவையேயாம்.

ஆகையால் 1781-ம் வருஷத்தில் அந்த வானசாஸ்திரி பார்த்த நட்சத்திரம் ஒரு கிரகம் என்று தெரிந்தது. இது வெறுங் கண்ணுக்குப் புலப்படாத ஒரு சிறிய நட்சத்திரம் போல் வானமண்டலத்தில் விளங்கிவருகிறது.

இது சூர்யனிடத்திலிருந்து சுமார் 1,75,50 லக்ஷ மைல் தூரத்திலிருக்கிறது. வெறுங் கண்ணுக்குச் சனிக்குக்கூட பூமி தெரியாது. ப்ரஹஸ்பதி வரையில்தான் பூமி தெரியும். ஆகையால் இந்த யுரேனஸுக்குப் பூமியிருப்பதே தெரியுமோ தெரியாதோ! அதிலிருப்பவர்களுக்கு வெறுங்கண்ணால் பார்த்தால் இது தெரியவே தெரியாது. அவர்கள் தூரதிருஷ்டிக் கண்ணாடியை வைத்துக்கொண்டு நாமிருப்பதைக் கண்டறிந்திருக்கிறார்களோ, இல்லையோ! இதன் குறுக்களவு 34,200 மைலென்று கணக்கிடப்படுகிறது. அதாவது பூமியின் அளவைவிட நான்கு மடங்குக்கு மேலே பெரியது. சனியையும் வியாழனையும்விடச் சின்னதாயிருந்தாலும், பூமி, அங்காரகன், வெள்ளி, புதன் இந்நான்கையும் ஒன்றுசேர்த்தாலும் இதன் அளவுக்குச் சரியாகா. இதில் வாயுமண்டலம் இருப்பதாயும், ஆனால் இதிலுள்ள வஸ்துக்கள் நமது வாயு மண்டலத்திலுள்ள வஸ்துக்களைப்போ லல்லாமல் வேறு மாதிரியாயிருப்பதாயும் அநேக பரீட்சைகளால் தெரிகிறது.

இது ஒருதரம் சூர்யனைச் சுற்றிவர, சுமார் 84 வருஷங்கள் அல்லது 36,688 நாட்கள் ஆகின்றன. இதுதான் இதற்கு ஒருவருஷமல்லவா? எப்படித் தினங்களைக் கணக்கிடுவது? அதி

லுள்ளவர்கள் நம்மைப்போலிருந்தால் அவர்கள் கணக்குப் பிரகாரம், ஒரு வருஷமே ஜீவிப்பார்களா! இவ்வளவு தூரத்திலிருக்கும் இதன்மேல் படும் சூர்ய வெளிச்சமும் உஷ்ணமும், பூமியில் படுவதில் முந்நூற்றில் ஒருபங்கு (1/300) தானிருக்கும். சூர்யன் இதற்கு ஒரு பெரிய நட்சத்திரம்போல் காணப்படுமேயல்லாமல், நமக்குத் தோன்றுவதுபோல் இவ்வளவு பிரகாசமாயும் பெரிதாயும் காணப்படாது. இந்தக் கிரஹத்தில் எவ்வளவு இருட்டாயும் குளிராயும் இருக்கவேண்டும்! இவ்வளவு குளிரிலும் இருட்டிலும் எம்மாதிரியான ஜீவராசிகள் வசிக்கின்றனவோ! துர்பாக்கியசாலிகளான நமக்கு அங்குபோய்ப் பார்ப்பதற்கு வேண்டிய ஸாதனங்களைக் கண்டு பிடிக்கத் தெரியவில்லையே! இக்காட்சிகளை நாம் எப்பொழுது கண்டு ஆனந்திப்போம்!

இக்கிரஹம் தன்னைத்தானே சுற்றுவதாகத் தெரிகிறது. ஆனால் மற்றைய கிரஹங்களைப் போல் மேற்கிலிருந்து கிழக்குப் பக்கமாகச் சுற்றாமல், தென். வடலாகச் சுற்றுகிறது. இதற்கும் நான்கு உபக்கிரஹங்கள் இருக்கின்றன. இதைப்போல் இதன் உபக்கிரஹங்களும் இதைத் தென் வடலாகச் சுற்றுகின்றன. இதன் சமீபத்திலுள்ள உபகிரஹம் இதிலிருந்து 121,520 மைல் தூரத்திலிருக்கிறது. ஏறக்குறைய 2 நாள் 12-மணியில் இதை ஒரு தரம் சுற்றுகிறது. இதிலிருந்து வெகு தூரத்திலிருக்கும் உபகிரஹம் 372,000 மைல் தூரத்திலிருக்கிறது. இது சுமார் 13 நாள் 11-மணியில் இதன் கிரஹத்தை ஒருதரம் சுற்றுகிறது. மற்றைய இரண்டு உபகிரஹங்களும் இவையிரண்டிற்கும் இடையிலிருக்கின்றன.

---

## பூதத்வ போதினி

**(துரைத்தனத்தார் அங்கீகரித்தது)**

நாமிருக்கும் பூமியின் தத்வங்களை அறியாதிருப்பது பெரும்பேதமையேயன்றோ! பூமியின் தத்துவங்களைச் சரியாக அறியவேண்டுமாயின் மிஸ்டர். சுப்பிரமணிய ஐயரவர்களால் இனியசெந்தமிழ் நடையில் எழுதப்பட்டு 30 படங்களால் நன்றாக விளக்கப்பட்டிருக்கும் பூதத்வ போதினி என்னும் நூலினை வாங்கி வாசித்தறியவும். அதில் அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இப்புத்தகம் எலிமெண்டரி ஸ்கூல் மாணாக்கர்களுக்குக்கூட உபயோகப்படும்படி எழுதப்பட்டிருக்கிறது. விலை அணா 8.

# தமிழர்க்கு ஓர் விண்ணப்பம்

## AN APPEAL TO THE TAMILS

இவ்வுலகின்கண் விரும்பப்பட்டவைகளில் அறம், பொருள் இன்பமாகிய மூன்றும் யாவருக்கும் இன்றியமையாதனவாகும். இவைகளில் 'பொருளே சிறந்ததென்றும், அது நற்றுறைகளா னீட்டியதாயின் அதனால் இம்மையிலறமும் இருமையிலின்பமும் தானே கைகூடுமென்றும் ஆன்றோர் உரைப்பர். இக்கருத்தமைத்தன்றோ தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும்,

"அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்"

என்றும் 'பொருளில்லார்க் கிவ்வுலகில்லை' யென்றும் கூறியது? இன்னும் துறவறம் பூண்ட திருத்தக்க தேவரும் இதனுடைய பெருமையைத் தெளிவாக, பின் வருமாறு விரித்துக்காட்டுவர்.

'வென்றியாக்கலும் மேதகவாக்கலுங்
குன்றினார்களைக் குன்றெனவாக்கலு
மன்றியுங்கல்வி யோடழகாக்கலும்
பொன்றுஞ்சாகத்தினாய்! பொருள்செய்யுமே'—
'பொன்னினாகும் பொருபடையப்படை
தன்னினாகுந்தரணி தரணியிற்
பின்னையாகும் பெரும்பொருளப்பொருள்
துன்னுங்காலைத் துன்னாதனவில்லையே.'—

ஆனதால் இம்மண்ணுலகில் மானிடராய்ப் பிறந்து உயிர் நீங்குமளவும் பொருளைத்தேட வேண்டுமென்பது வெள்ளிடை விலங்கல் போலறியக்கிடக்கின்றது.

இப்பெற்றித்தாய பொருளைச் சேகரிக்கும் வழிகள் பலவுளவென்றும், இவைகளையெல்லாமிக்காலத்து நன்றாய்த் தெரிந்தவர்கள் ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களுந்தாமென்றும் சிறுவர்களுமறிந்த விஷயம். அவர்களுடைய பெருத்த ஐசுவரியமும், நாகரிகமும் ஆட்சியும் அதை வற்புறுத்தும்.

இத்துணை மேன்மை அவர்களுக்கு எவ்வாறுண்டாயிற்றென்று சற்று ஆராய்வாம். இற்றைக்கு முன்னூறு ஆண்டுகளுக்குமுன், அவர்கள் நம்மைக்காட்டிலும் தாழ்ந்த நிலைமையிலிருந்தனரென்று சரித்திரவாயிலா யறிகின்றோம். அக்காலத்திலவர்கள் நாடோறும் அணிந்துகொள்ளும் வஸ்திரங்கள்கூட நமது தேயத்திலிருந்து போனதாகக் காணப்



படுகின்றது. நம் முன்னோர்களுக்குப் பொருளைச் சம்பாதிக்கும் துறைகள் தெரியாமலிருக்கவில்லை. 'திரைகடலோடியுந் திரவியந் தேடு' என்ற ஔவையார் வசனத்தை யறியாத குழந்தைகளுண்டோ? அக்காலத்தில் எத்தேசத்தர்களைக் காட்டிலும் இந்துக்களே நன்றாயறிந்தவராயினும், அவர்களின் சந்ததியார்களாகிய நாம் இக்காலத்திற்கேற்ப அப்பெயரை விருத்திசெய்யாது தாழ்ந்த பதவியையடைந்திருக்கின்றோமல்லவா? ஐரோப்பியர்களோ, சிறுகச் சிறுக நாளடைவில் சீர்படுத்திக்கொண்டும் நூதனமாக அரிய பெரிய துறைகளைக் கண்டுபிடித்தும் அவைகளாலளவற்ற திரவியத்தைச் சம்பாதித்தும் மேன்மையடைந்து நமக்குக்கனவிலுமெட்டாத தூரத்திலிப்பொழுது இருக்கின்றார்கள். நாமோ மூன்று சதாப்ததிற்குமுன்னரி எந்நிலைமையிலிருந்தோமோ அதனினும் தாழ்ந்தநிலைமையில் இன்றும் இருக்கின்றோம். அதனால் நமக்கு நேர்ந்த துன்பங்கள் பலவற்றையும் விரித்துரைக்க நம் திறமன்று: அவரவர்களுக்கே ஒருவாறு அது விளங்கும்.

இந்தியர் ஆத்மதத்துவத்தையும் வீடு பேற்றிற்கு அனுகரணமான சாதனங்களையுமே கவனித்து வந்தனரென்றும், ஐரோப்பியரோ மறுமையைச் சற்றுமெண்ணாது இவ்வுலக வாழ்க்கையே சாசுவதமென்று அதற்கு அனுகூலமானவற்றையே பெருக்கி வந்தனரென்றும், அபூர்வ வைராக்கியத்தாற் சிலர் சொல்வதுண்டு. இது நமக்குச் சரியான நியாயமாய்த் தோற்றவில்லை. என்னில், சுவர் வைத்தல்லவா சித்திரமெழுதுவது? ஆனதால் இகத்திற்கும் பரத்திற்கும் உபயோகமானவற்றைத் தேடுவதற்கு, முதலில் உடம்பும் பிறகு பொருளும் முக்கிய காரணமாயுள்ளவை. அன்றியும் 'இமையோர் தேஎத்தும் எறி கடல் வரைப்பினும்' அறம் பொருளின் நுகர்ச்சி இல்லாததோர் காலமின்றென்று மகருஷி தோல்காப்பியனார் மதமாதலின் நடுவணதாகிய பொருள் தேவர்களுக்கும் அவசியமானதென்று அறிந்துகொள்ளலாம்.

மேலும் இத்தமிழ்நாட்டைத் தவிர்த்து மற்றத் தேசங்களில் தத்துவ ஞானிகளும் முமுக்ஷுக்களுமாகிய மகான்களில்லையா? எண்ணிறந்த வண்டங்களினூடே இப்பூமண்டலம் ஓரணுப்போன்றது. நமது தமிழ் நாடோ, அவ்வணுவிற்குள் ஓர் பரமாணு. தமிழ் மன்பதையுமவ்வாறே. அவர் பயிலும் தமிழோ பன்னூறு பாடைகளிலொன்று. இவைகள் யாவற்றையும் படைத்துப் பரிபாலித்து வரும் பரமபிதாவுக்கு யாண்டும் யாவற்றுமொன்றே. ஆதலாலவர் உண்டாக்கிய மொழிகளில் ஆரியமும் தமிழுமொழிய வேறில்லையென்றும், அவருகந்து திருவிளையாடல்களை நடாத்திய நாடு ஆரியாவர்த்தமும் தமிழகமுமென்றும், அவருண்மைப் பொருளை வெளியிட்டருளியது வடமொழி தென்மொழிகளிற்றானென்றும், அவர் சிவன் விஷ்ணுவடிவாய் மாத்திரம் வெளிப்பட்டாரென்றும், அவரது பரமகாருணியத்திற்குப் பாத்திரமானவர்கள் நாயன்மாரும் ஆழ்வார் முதலான நமது தேயத்து ஆன்றோர்களென்றும் சொல்லுவது எல்லாம்வல்ல பரமபிதாவின் அகண்ட நற்குண நற்செயல்களுக்கு இழுக்கான கூற்றன்றோ? ஆனதால் நிஜபக்தியுள்ள பெரியோர்கள் ஒன்றையுமிகழச் செய்யார்.

இது நிற்க, ஓர் சாதியாரை மேன்மைப் படுத்துவது அவரது நுண்ணறிவே. இது அவர்களியற்றிய பூமி சாஸ்திரம், வான சாஸ்திரம், தாவர சாஸ்திரம், கணித சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம், வைத்தியசாஸ்திரம் முதலானவைகளில் நன்கு விளங்கும். ஒரு நொடியில் நூறு காவதம் செல்லும் மின் தபாலையும், ஒரு நாழிகைப்பொழுதில் இரண்டு காவதமோடும் தூம சகடங்களையும், ஆகாயத்திற்பட்சிபோற் பறக்கும் கப்பல்களையும், மனிதர்களைப் போற் பேசும் யந்திரங்களையும், இன்னும் பல விதமான அற்புதச் செய்கைகளையும் இக்காலத்தில் நாம் பார்க்கவில்லையா? இவைகள் கட்டுவித்தையல்ல. இவைகளெல்லாம் நம் முன்னோர்களுமறிவார் என்றும், 'கமனகுளிகை' 'மயிற்பொறி,' முதலான தொடர் மொழிகளையுடனே சொல்லி இராமாயணம், சிந்தாமணி, பாரதம் முதலான நூல்களையும் மேற்கோளாக வெடுத்துக் காட்டி நமது வாயை யடக்குவர் சில சுவதேசாபிமானிகள். இது உண்மையான சரித்திரவாராய்ச்சியின்மையாலன்றோ? நமது பூர்வீகர்கள் எவ்விதத்தாலும் குறைவிலர், புத்தியிற் சேஷசாயிகள், அவர்களுரைத்ததே தேவவாக்கியம், அதை ஐயுறுவதே அதி

பாதகம்என்றவெண்ணம்,அவர்வழித்தோன்றலாகிய நம்மிடம் முற்றக் குடிகொண்டிருப்பதால் மற்றச் சாதியார்களைப்போல் முன்னுக்கு வரவிடமில்லாது, புத்தியும் மழுங்கிப்போயிற்றென்னலாம்.

ஆனதாலிப்பொழுதாகிலும்மேன்மைபெற விரும்புவோமாகில் காலதாமதமின்றி அறிவைப்பெருக்கி நூதன விஷயங்களைக் கற்று அவைகளைப் பழக்கத்திற்கொண்டுவர முயற்சி செய்யவேண்டும். இம்முயற்சிக்கு விசாரணையும், விசாரணைக்குச் சந்தேகமுமே முதற்காரணம். சந்தேகம் பிறவாவிடில் விசாரணையில்லை. விசாரணையற்றால் அறிவு மழுங்கும். அறிவு மழுங்கினால் க்ஷேமமில்லை. முன்னோர்களிடமிருந்து தாம் தெரிந்துகொண்டவையே போதுமென்றும், அவர்கள் சொன்னதே தாரகம் என்ற நம்பிக்கையிற் பிடிவாதமாயிருப்போர் தங்கள் பெரியவர்கள் சொன்னவைகளில் எது உண்மை, எது பொய்யென்று விசாரிக்கக் கனவிலும் நினையார். இவர்களிடம் ஒரு புதிய செய்தியைச் சொன்னால், அது தங்கள் முன்னோர்களிடமிருந்து பெற்றுத் தாமனுசரித்துவந்த கொள்கைக்கு முரணாயில் அதை வியப்புடனும் வெறுப்புடனும் கேட்கின்றார்கள். அதை அங்கீகரிக்கவு மாட்டார்கள். புத்தி விசாரமிவர்களுக்கு எங்கிருந்து வரும்?

ஒரு கிராமத்தில் வாந்திபேதி புகுந்துவிட்டால் ஓர் அணங்கின் கோபத்தால் நேரிட்டதென்று நினைத்து மாரியம்மன் முதலான கிராம தேவதைகளுக்கு ஆடுவெட்டிப் பூசை போட்டுச் சாந்திசெய்வர். ஐரோப்பியரோ, அதன் முதற்காரணத்தைக் கண்டுபிடித்து அதைப் பற்றறுக்க முயலுவர்.

தமிழர்கள் தங்கள் முன்னோர் வழக்குகளையும் செய்திகளையும் புண்ணிய பாபத்திற்குள் ஒடுக்கி அவைகளெக்காரணத்தாலுண்டாயின, சில எதற்காக விலக்கப்பட்டுப் பாவச் செய்கைகளாயின, சில எதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுப் புண்ணிய காரியங்களாயினவென்றும் கிஞ்சித்தேனும் விசாரிப்பதில்லை. புண்ணியமென்றால் என்ன? பாபமென்றாலென்ன? ஒரு காலத்திலோர் இனத்தாருக்குப் புண்ணியமாயுள்ளன மற்றோர்காலத்து வேறு சாதியாருக்குப் பாபமாகத் தோன்றும். கீழ்நாட்டுப் பிராமணர்களுக்கு பிரௌடா விவகம் பாவமாகத் தோன்றும். நம்பூரியந்தணர்க்கும் இதர ஜாதியாருக்கும் அற்றன்று. வாயினால் விளக்கையூதி யணைப்பது பாவமென்றும், குளத்தில் ஸ்நானஞ்செய்யுங்கால் ஓர் கை மண்ணையெடுத்து வெளியே போடுவது புண்ணியமென்றும் சொல்வதுண்டு. இரவில் தீபமின்றி யுண்பதும், அந்திவேளையி லுண்பதும் இவை சுகாதாரத்தையும் பொதுஜனானுகூலத்தையும் உத்தேசித்த கட்டுப்பாடுகள், பின்னர் பாவபுண்ணியங்களாயின. இவ்வாறே மற்றவைகளும், பாவமென்பார் நம்மவர்.

ஆரியத்தி லுள்ளவைபோல் தென்மொழியில் தர்க்க சாஸ்திரம், கணிதசாஸ்திரம் முதலான அருமையான நூல்கள் பூர்வகாலத்திலிருந்தனவென்று நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. வாஸ்தவமான சரித்திரங்களோ இரண்டு பாஷைகளிலும் கிடையா. தமிழில் இயல் இசை நாடகங்கள் மாத்திர மிருந்தனவென்றும், பின்னர் கூறிய விரண்டும் இக்காலத்தில் அருமையாய்ப்போயினவென்றும் தெரிய வருகின்றன. பாவினங்களாலமைந்த இயற்றமிழ்ப் பனுவல்கள் மட்டும் நமக்கு வந்துள்ளன. கத்தியரூபமான நூல்கள் ஒன்றுமில்லை. கதைகளும், நிகண்டுகளும், இலக்கணங்களும், புராணங்களும் மற்றெவ்வித காப்பியங்களும் புதிய ரூபமாகவே யுள்ளன.

நாகரீகங் குன்றியவர்களும், தீவர புத்தியில்லாதவர்களும் இலேசாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளக்கூடியது செவிக்கினிமையான பாக்களால் தொடுக்கப்பட்ட நூல்களாம். ஞாபகசக்தியும் கற்பனைசக்தியும் மிகுதியுள்ளவர்களுக்குச் சூக்ஷ்மபுத்தியும் ஆலோசனைச் சக்தியும் கொஞ்சம் குறைவாகவே யிருக்கும். இதுபற்றியே அந்தாதித் தொடைகளும் எதுகைமோனை நிரம்பிய செய்யுள்களும் தமிழில் அதிகமாய்ப் பரவிவிட்டன. இவைகளில் பிரத்தியக்ஷானுபோகத்துக்கு ஒவ்வாத மனோரதமான கற்பனைகளையும் காணலாம். துறைக் கவிகளு மனேகம் விரவியுள்ளன. இவைகளைக் கற்றும் கேட்டும் பாடியும் விண்காலம் கழியாது பொருளீட்டற்குத் துறைகள் பல தோன்றிய விக்காலத்தில் தீவர புத்தியையும் விடாமுயற்சியையும் நம்மவர் அதிகரிப்பர் என்று நம்புகிறோம். (தொடரும்.)



## மாதவீகங்கணம்

(329-ம் பக்கத் தொடர்ச்சி.)

குழந்தையாயிருக்கும்போதே சைவலினி ராமாயணம், பாரதம், புராண இதிஹாஸாதிகளிலுள்ள கதைகளைக் கேட்டிருக்கிறாள். சிறு பெண்ணாயிருக்கும்போது அவள் ப்ரதிதினமும் ஆலயத்துக்குச் சென்று, அழகிய நறுமண மலர்கள் கொண்டு ஸ்வாமியைப் பூஜிப்பது வழக்கம். பெரியவளானபோது அவள் இதர ஸ்த்ரீகளுக்கும் சிறுவர்களுக்கும் தான் பால்யத்தில் கேட்டுள்ளதும் பின்னாடிப் படித்துள்ளதுமான பற்பல புராண கதைகளை வெகு அழகாய் எடுத்துச் சொல்லிவந்தாள். அவளுக்கும் அவளுடைய கதைகளைக் கர்ணாம்ருதமாய்க் கேட்கும் இதர ஸ்த்ரீகளுக்கும் தங்கள் காலத்திலுள்ள வீரசூரர்கள் செய்யும்ஸாகஸங்களைவிட ராமாயண பாரதக்கதைகளே அதிக ரஸமுடையனவாயிருந்தன. இக்காலத்திலும்கூட நமது இந்தியாவில் ஸ்த்ரீ புருஷர்கள் பாரதக் கதைகளையும் ராமாயண சரிதையையுமே அதிக ஆவலுடன் கேட்பவர்களாயிருக்கிறார்கள். அவைகளனைத்தும் நமது ஹிந்துக்களுக்குத் தற்கால ஸம்பவங்களைக் காட்டிலும் அதிக உண்மையுடையனவாகத் தோற்றுகின்றன. இதற்குக் காரணம் அந்தப் பாரத ராமாயணங்களை இயற்றிய நூலாசிரியர்களுடைய அரிய ஸாமர்த்யமும் சொல்வன்மையுமே என்பது சொல்லாமலே விளங்கும். சைவலினி ஸதா தெய்வத்தைப்பற்றியே நினைத்துக் கொண்டிருப்பவள். ஈசுவரன் அந்தர்யாமியாய்த் 'தான் செய்யும் ஸகல கார்யங்களையும் பார்த்துக்கொண்டிருக்கிறா'ரென அவள் பூர்ணமாய் நம்பியிருந்தாள். கதைகள் சொல்லும்போது சைவலினி சில வேளை மெய்ம்மறந்து போய்விடுவாள். அப்போது சுற்றியிருப்பவர்கள் எல்லோரும் அவளைத் தெய்விகத் தன்மை பொருந்தியவளெனக் கருதி நிச்சப்தமாயிருப்பார்கள். அம்மெய்ம்மறந்த நிலையிலேயே சில ஸமயங்களில் அவள் ஆனந்த பாஷ்பஞ்சொரிவதைக் கண்டு அவளை நமஸ்கரிப்பவர்களும் சிலர் உண்டு.

வீட்டிலுள்ள குழந்தைகளுக்கெல்லாம் சைவலினியைக் கண்டால் பரம ஸந்தோஷம். எவ்வளவு அழுதுகொண்டிருந்தாலும் குழந்தைகள் அவள் முகத்தைக் கண்டவுடன் அழுகையை நிறுத்திவிட்டுச் சிரித்துக் கூச்சலிட்டுக்கொண்டே அவளண்டை ஓடிவந்து, அவளை அப்புறம் அடியெடுத்து வைக்கவொட்டாமல் கால்களைக் கட்டிக்கொண்டுவிடும். கொஞ்சம் வயது முதிர்ந்த குழந்தைகள் அவளை ப்ரதி ஸாயந்தரமும் கதைகள் சொல்லும்படி ப்ராணனை பிய்த்தெடுத்து விடும். அவள் கதை சொல்ல உட்கார்ந்துவிட்டால், எல்லாக் குழந்தைகளும் ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டு அவளுக்குக் கிட்டே உட்காரவேண்டுமென்று அமர்க்களம் செய்யும். மனிதர்களைக் கண்டவுடன் அவர்களுடைய பார்வையினின்றும் வாய்ப் பேச்சுக்களினின்றும் அவர்கள் தங்கள்மீது அன்புடையவர்களா அல்லவா என்னும் விஷயத்தைச் சிறு குழந்தைகள் ஓர் அரிய சக்தியால் வெகு எளிதில் கண்டுகொண்டுவிடுகின்றன. இவ்விஷயத்தில் குழந்தைகளையொத்தன வாயில்லா இதர ஜீவராசிகளுள் சில. ஸாயந்தரம் கேட்டதுடன் த்ருப்தியடையாமல், குழந்தைகள் இரவு சாப்பிட்டானவுடன் சைவலினியைப் புடவையைப்பிடித்து நாலைந்தாய்ச் சமையலறையினின்று இழுத்துக்கொண்டுவந்து உட்காரவைத்து மறுபடியும் அக்கதைகளைச் சொல்லும்படி தொந்தரவு செய்யும். குழந்தைகள் கேட்டால், மாட்டேனென்று சொல்ல எவரால் முடியும்? சைவலினியும் ஸந்தோஷமாய்க் கதை சொல்லுகிறேனென்று ஆரம்பித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்லுமுன், குழந்தைகள் ஒவ்வொன்றாய் அவள் மடியிலேயே படுத்துக்கொண்டு தூங்க ஆரம்பித்துவிடும்.

ஆனால் எத்தனை பேர்தான் கதை கேட்டாலும், சைவலினி கதைகளை ஹேமலதையைப்போல் காதுகொடுத்து ஒரு வார்த்தை விடாமல் கவனமாய்க் கேட்பவர்கள் ஒருவருங் கிடையாது. நமது புராண இதிஹாஸாதிகளில் செறிந்து கிடக்கும் பதிவ்ரதா சிரோமணிகளின் ஜீவ்ய சரிதைகளையும் அவர்களுடைய புண்ய கதைகளையும் கேட்பதில் ஹேமலதைக்கு அத்யந்த ப்ரியம். அவ்வித பதிவ்ரதா ஸ்த்ரீகளின் ஒழுக்கம், நடத்தை முதலியவற்றைக் கேட்பதில் ஹேமலதை அவ்வளவு அத்யந்த ப்ரியமும் அளவற்ற

ஆனந்தமும் கொள்வதற்குக் காரணம் யாது? அவளுடைய ப்ராண நாதரின் ஒப்புயர்வற்ற நற்குணமா? அத்தகைய புருஷருடைய மனம் கோணாமல் அவருடைய நற்குணத்துக்கேற்ற யோக்யதையுடன் தான் நடந்துகொண்டு, அவரைப் பூர்ணஹ்ருதயத்துடன் நேசித்து அவருடைய அன்பிற்குப் பாத்ரமாகவேண்டுமென்ற கோரிக்கையா, எது வாயிருந்தாலென்ன? ஹேமலதையும் கேட்பதற்குச் சலிப்பதில்லை. சைவலினியும் அவள் கேட்கும் போதெல்லாம் இவ்வுலகில் எத்தேசத்து ஸாஹித்யங்கள், க்ரந்தங்களிலும் காணப்படாத அரிய பெரிய குணங்களுடையவர்களாகிப் பதிவிசுவாஸத்தின்பொருட்டு நினைப்பதற்குக்கூடப் பஹீரென்னும்படியான பல கஷ்டங்களை யனுபவித்தும் தங்களுடைய ஸன்மார்க்க நெறியினின்றும் எள்ளளவும் பிறழாத உத்தமோத்தமிகளாய் விளங்கும் ஸீதை, ஸாவித்ரி, தமயந்தி முதலிய இந்த நடுநாயகங்களின் வரலாறுகளைத் தடைகூறாமல் எடுத்து விவரிக்கப் பின்வாங்குவதில்லை.

சைவலினியின் இனிய ப்ரஸங்கங்கள் முடிவெய்தியவுடன் தன் அந்தரங்க நண்பர்கள்கூட ஒருபோதும் அறியாத ஒரு மனோ வ்யாகுலத்துடன் ஹேமலதை தன் கணவனுடைய சயனக்ருஹம் சென்று யாதுமறியாமல் தூங்கிக்கொண்டிருக்கும் ஸிரீஷன் பக்கமாய் நமஸ்கரித்து "இவ்வுலகில் நானும் ஸீதை ஸாவித்ரி தமயந்தி முதலியவர்களைப்போல் மனோ வாக்குக் காயம் எல்லாவற்றிலும் என் நாதருடைய தர்ம பத்னியாயிருக்கும்படி ஈசுவரன் அருள்புரியவேண்டும். வாழ்விலும் சாவிலும், ஸுகத்திலும், துக்கத்திலும், ஸம்பத்திலும் தரித்ரத்திலும், எல்லாக் காலத்திலும் நான் அவரையே பின்பற்றி நிற்பேனாக" என்று குலதெய்வத்துக்கு வேண்டிக்கொள்வாள்.

## அத்யாயம் 3

சில தினங்களாக ஜமீன்தாரர் வீட்டில் உற்சாகம் ஸந்தோஷம் ஒன்றுமிராமலிருந்தது. அரண்மனையில் எல்லோரும் கவலையும் துக்கமுமுடையவரானார்கள். ஹேமலதை வீட்டு வ்யவஹாரங்களைக் கவனிப்பதையே விட்டுவிட்டாள்; சைவலினியின் புராணகதைகளும் நின்றிருந்தன; வீட்டில் சிறுவர்களும் முன்போல் கூச்சலிட்டு அமர்க்களம் செய்வதையொழித்தார்கள். அரண்மனை முழுவதும் ஜனஸஞ்சார மற்றதுபோல் காணப்பட்டது. எல்லோரும் சிந்தாக்ராந்தர்களானார்கள். ஹேமலதையின் தாயார்கூடத்தன்கூடத்து மூலையையும் ஜபமாலையும் விட்டிருந்தாள். நவகுமாரரைப்போன்ற ஒரு பெரிய ஜமீன்தாரர் படுகிடையாகக் கிடக்கிறார்; பிழைத்தால் புனர்ஜன்மம் என்னும் ஸ்திதியிலிருக்கும்போது வீட்டில் யாருக்குத்தான் எந்த வேலையின்மேல் புத்தி செல்லும்?

ஆதி நாளையில் அவர் கஷ்ட ஸுகம் பாராமல் தேகத்தைச் செருப்பாய்த் தேய்த்தவர். சரீரம் நல்ல கட்டுச் சரீரம். இரும்பால் ஆயிருந்தால்தானென்ன? எதற்கும் ஒரு மிதமில்லையா? நவகுமாரர் தன் தேகஸ்திதியைக் கவனிக்காமலே உழைத்துவிட்டார். கடைசியில் தேவிபுரம் வந்தவுடன் அவர் அஸௌக்யமடைந்தார். அதுமுதற்கொண்டு தேகம் குணப்படாமல் தினேதினே ஈனஸ்திதியடைந்து வந்தது; அப்போதுகூட அவர் சும்மா விருக்கவில்லை. வ்ழக்கப்படியே சிரமம் பாராமல் உழைத்துவந்தார். கூட தேவிபுரத்தைத் திரும்ப அடைந்துவிட்டோம் என்ற ஸந்தோஷமோ, கர்வமோ மேலிட அவர் தனக்குப் பால்யதசை திரும்பிவிட்டதென்றெண்ணிச் சிறிது கேளிக்கை, கூத்துகளில் புத்தியைச் செலுத்தினார். ஓய்வு இன்னதென்பதே அறியாதவர். வீட்டிலாவது, பெண்டு பிள்ளைகளுடன் கலந்துபேசி அவர்களோடு பழகிக் குடும்ப ஸுகம் இத்தன்மையதென்பதும் அவர் அறிந்திருக்கவில்லை. இப்போதோ தேவிபுரம்கைக்கு வந்துஊர்ஜிதமாய்விட்டது. இனிச் செய்வதற்கொன்றும் வேலையில்லை. காலம் கழிவதெப்படி? விருந்துகள், வேடிக்கைகள், தமாஷாகள், ஆட்டங்கள், கூத்துகள் இவைகளில் புத்தி ப்ரவேசித்தது. தன் வயதையாவது, தேக நிலைமையையாவது அவர் கவனிக்கவேயில்லை. இவர் கவனிக்காவிட்டாலென்ன! நடக்கவேண்டியது நிற்குமா? எத்தனை நாட்கள்தான் தேகம் ஈடுகொடுக்கும்? இரண்டொரு வருஷங்களுக்கெல்லாம் ஆள் கீழே விழுந்தார்; அதுமுதற்கொண்டு பாயும் படுக்கையுந்தான். வ்யாதியும் பரபரவென்று தீவிரமாய் வளர்ந்தது. ரக்தம் சுண்டி முகம் வெளுத்துக் கண்கள்



குழிந்தன. கைதேர்ந்த ஸமஸ்தான வைத்யர்கள் இனி ஒரு மருந்தும் ஸரிப்படாது, வைத்ய பலத்தில் பிழைக்கக்கூடும் என்ற நம்பிக்கை இனிக் கிடையாது. ஜாதகத்தைப் பார்க்கலாம் என்றமட்டும் சொல்லிவிட்டார்கள்.

ஹேமலதையின் விவாஹமுதல் ஸம்ஸாரத்தை விட்டுப்பிரிந்து தனியாடை யுடுத்துத் தவம் செய்துகொண்டிருந்த நவகுமாரருடைய மனைவி இப்போது இரவும் பகலும் அவருடைய படுக்கை யண்டையிலிருந்து, கண்கொட்டாமல் அவருக்கு சுச்ருஷை செய்யத் தலைப்பட்டாள். இரண்டொரு வருஷங்களுக்குமுன் திடகாத்திராயிருந்த தன் கணவன் இப்போது இந்நிலைமையிலிருப்பதைக் கண்டு ஹேமலதையின் தாயார் மனம் விண்டாள். சதிபதிகளிருவரும் நல்ல ஸத்யகுண ஸம்பன்னர்கள்; பெருந்தன்மையும் தகைமையும் உடையவர்கள்; நல்ல திடசித்தர்கள். ஒற்றுமைக் குணங்கள் இத்தனையிருந்தும் இரண்டொரு முக்யவிஷயங்களில் அவர்களுக்குள் பொருத்த மில்லாமலிருந்தது தாம்பத்ய ஸுகத்துக்கோர் ஹானியாய் முடிந்தது. கடைசிமட்டும் அக்குடும்பத்தில் இல்லற இன்பம் இல்லாமற் போய்விட்டது. வீணையின் கம்பிகளில் ஒன்று அறுந்தாலும் அது சப்திக்குமா? அவள் நவகுமாரரிடம் என்றைக்கும் அத்யந்த நேசம் வைத்திருந்தாள். அவளுடைய பூர்ணஹ்ருதயமும் அவரையே நாடியிருந்தது. கஷ்ட நஷ்டங்கள் ஒன்றின்மேலொன்றாக வந்த காலத்தில் அவள் பலவாறு அவருடைய மனதை ஸமாதானப்படுத்தி, ஸமயத்தில் தக்க யுக்தி யோசனைகள் கூறி உதவிபுரிந்துவந்தாள். நவகுமாரருக்குக் கோகுல்தாஸ் முதல்மந்த்ரியும் தன் மனைவி இரண்டாவது மந்த்ரியுமாகவிருந்தார்கள். ஊராரெல்லாரும் அவளை மஹா புத்திசாலியெனச் சொல்லிவந்ததில் சிறிதும் தப்பில்லை. கூட, அவளைப்போன்ற தெய்வ நம்பிக்கையும், தெய்வபக்தியு முடையவர்கள் கிடைப்பதரிது. எவ்வளவு இருந்தாலென்ன? குற்றங்குறைகளை மறப்பது அல்லது க்ஷமிப்பது என்ற ஒரு குணம் மாத்ரம் அவளிடம் இராமல் போய்விட்டது. பிறர் செய்த குற்றங் குறைகளும், அவர்கள் காட்டிய அற்பசொற்ப அவமதிப்புகளுங்கூட அவளுடைய மனதில் ஆழ வேரூன்றின. அவள் மனப்படி கார்யங்கள் நடவாவிட்டால் அது அவளுக்கு அதிக வருத்தத்தை உண்டுபண்ணும். அந்த வருத்தம் அசையாமல், அவள் மனதில் அப்படியே நிலைத்துவிடும். இப்பேர்ப்பட்ட குணமுடையவர்களுக்குக் கல்யாணம், பிள்ளை, பெண்கள், குடும்பமென்பதொன்றும் கூடாது. வெளிக்குப் பார்ப்பவர்களுக்கு, இருந்தால் ஜமீன்தாரரும் அவருடைய மனைவியும்போல் ஒரு குறையுமில்லாம லிருக்கவேண்டும் என்று தோன்ற, உள்ளே ஒற்றுமையும் அந்யோந்யமுமின்றி ஒருவருக்கொருவர் காதவழிக்கப்பால் காட்டிலிருப்பவர்களைப்போ லிருப்பது என்ன பரிதாபம்!

ஸமயமறிந்து தண்டித்தும், மன்னித்தும், அதிகாரத்தைச் செலுத்தியும் நல்லதனமாய்ப் புத்தியுரைத்தும், பலவழியாகத் தன் ஸாமர்த்யத்தால் குடும்பத்தில் சண்டை, சச்சரவு, மனஸ்தாபங்களின்றி யடக்கியாளும் ஸ்த்ரீயே வீட்டுக்கோர் அணிகலம். அவள் வீட்டில் எப்போதும் லக்ஷ்மி குடியிருப்பாள். அந்த வீட்டில்தான் குடும்பஸுகமும், மனஸ்ஸந்துஷ்டியும் பொருந்தியிருக்கும். க்ஷமிக்கும் குணத்தையே தழுவி நடப்பதும் உசிதமன்று; அல்லது தண்டிக்கும் முறையையே அநுஸரிப்பதும் ஸரியாகாது. இரண்டும் கலந்திருப்பதே க்ஷேமத்துக்கும் மனவமைதிக்கும் பொருந்தியதாகும். புருஷன் என்ன குற்றம் செய்தாலும் வாய்திறவாமல் ஸதா பொறுத்துக்கொண்டே அவனைச் சீர்திருத்த முயலாமலிருந்தால், அப்பேர்ப்பட்ட புருஷன் அநேகமாய்ச் சீக்ரத்தில் கல்நெஞ்சனாகிறான்; அல்லது, அப்படிக்கிராமல் அற்பத்தையும் மனதில்கொண்டு முணுமுணுத்த வண்ணமாயிருந்தால் அந்தக் குடும்பம் மற்றவர்களுக்குக் கடும்புலிவாழுங் காடாகின்றது. இவ்வாறு தண்டிப்பதும் மன்னிப்பதும் இரண்டையும் ஸமயாஸமயங்களுக்குத் தக்கவாறு உபயோகப்படுத்தாமல் ஒன்று தண்டித்தலையேயாவது அல்லது மன்னித்தலையேயாவது பின்பற்றி நடந்தால், அவ்வீடு கொடுங்கோல்மன்னன் நாட்டையாவது, கடும்புலி வாழும் காட்டையாவது ஒத்ததாகின்றது. முன் சொன்ன ப்ரகாரம் ஸாமபேததானதண்ட சதுர்வித உபா

யங்களையும் ப்ரயோஹித்துத் தன் ஸாமர்த்யத்தாலும் அதிகாரத்தாலும் செல்வாக்காலும் ஸம்ஸாரத்தை அமரிக்கையாக நடத்திவரும் ஸ்த்ரீயை நம்மவர் "க்ருஹலக்ஷ்மி" என்ற பெயரிட்டழைக்கிறார்கள். அவள் கண்டிப்பாள், தண்டிப்பாள், ஆனால் பலமுறை அவள் மன்னிப்பாள்; அவள் தனியரசுபோல் சிற்சில ஸமயங்களில் அதிகாரம் செய்வாள், இருந்தாலும் மொத்தத்தில் அவ்வீட்டில் த்ருப்தியும் அன்புமே குடிகொண்டிருக்கும். அக்குடும்பத்திலுள்ளவர்கள் அனைவரும் அவளைக் கண்டால் அஞ்சுவார்கள். அஞ்சினாலும் அவர்கள் அவளிடம் அன்பும் பக்தியும் பூண்டொழுகுவார்கள். அக்குடும்பத்தில் பொறாமை, அசூயை, பேராசை, தன் நலம் ஒன்றும் காணப்படாது. சிறுவர்களும் சிறுமிகளும் பெரியோர்களிடத்தில் பக்தியும் ஒருவரிடமொருவர் அன்புங்கொண்டு நடக்கிறார்கள். இவ்வளவுக்கும் காரணம் அந்த "க்ருஹலக்ஷ்மி" அல்லது " இல்லாள் " என்பவளே.

இல்லாளகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயின்—இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்.

நவகுமாரருடைய மனைவி இப்போது ஸதா அவர் பக்கமே இருந்துவந்தாள். ஆதலால் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். வ்யாதியஸ்தர் இனி பிழைத்தெழுந்திருக்கப் போகிறார் என்ற நம்பிக்கை அடியோடு போய்விட்டது. நவகுமாரருக்கும் இவ்விஷயம் தெரியலாயிற்று. அப்போது அவ்வறையில், ஒருவரை யொருவர் பார்க்கும்போதெல்லாம் ஜமீன்தாருக்கும் அவருடைய பத்னிக்கும் பழைய ஞாபகங்கள் பல, மனதுக்கு வந்தன. அவைகள் இத்தன்மையனவென்பது சொல்லாமலே விளங்கும். இரண்டுபேரும் ஒருவர் மனதிலுள்ளதை மற்றொருவர் எளிதில் அறிந்துகொண்டார்கள். ஒருவராவது ஒருவார்த்தைகூட வாய்திறந்து பேசவில்லை. ப்ரதிதினமும் அந்த பதிவ்ரதா சிரோமணி அவருடைய படுக்கையை உதறிப்போட்டு வேண்டிய சுச்ருஷைகளெல்லாம் செய்துவந்தனள். வெகுகாலமாக ஒரு துளி ஜலங்கூட விட்டறியாத அவளுடைய கண்களில், இப்போது தன் புருஷன் ரத்தம்சுண்டி நேகம் வெளுத்து அஸ்தியாய் இளைத்துப் போய்ப் பார்ப்பதற்குப் பரிதாபமான நிலையிலிருப்பதைக் காணும்போதெல்லாம் நீர் ததும்பிக் கங்காபவானியாய்ப் பெருகலாயிற்று. மனிதர்களுடைய இயற்கை, 'ஒருபோது இல்லாவிட்டாலும் ஒருபோதாவது வெளிக்கு வந்துதான் தீரவேண்டும்; வராமலிருக்க முடியாது. சில தினங்கள் கழிந்தன. வ்யாதி சொஸ்தமாகவில்லை. ஆனால் அம்மாதுசிரோமணியின் சுச்ருஷைமாத்ரம் குறையவில்லை. இவ்வாறு இராப்பகல் ஓயாமல் தூக்கமின்றித் தன் தேகஸ்திதியை வெகு அக்கறையாய்க் கவனித்து வந்ததைக்கண்டு நவகுமாரர் தன் பத்னியிடம் அதிக அன்புகொள்ளலானார். அம்மாது சிரோமணியின் குணத்தையும் அவளுடைய தன்மையையும் தாம் இதுகாறும் உள்ளவாறு அறியாமல், அவள் மனதைப் புண்படச் செய்தோமே என்று அவர் பச்சாத்தாபப்பட்டார். தன் மனைவியின் முகத்தை அடிக்கடி ஏக்கத்துடன் ஏறிட்டுப் பார்க்கலானார். நவகுமாரருக்கும், அவருடைய மனைவிக்குப்போலவே இதுகாறும் உள்ளடங்கியிருந்த இயற்கைக் குணம் இப்போது வெளிவந்தது. பரஸ்பரம் ஒருவர் குணத்தை மற்றொருவர் அறியலாயினர்; அவர்களுடைய மனம் ஒன்றுபட்டது. அடிக்கடி ஒருவரையொருவர் பார்த்துக்கழிந்ததை நினைத்துக் கண்ணீர் விட்டார்கள். இதுவரைக்கும் தாங்கள் உண்மையை அறியாமல் போய்விட்டோமே என்று வருத்தப்படலாயினர். இனியாவது, இருக்குமட்டும் சிலநாள் பர்யந்தம் அநுகூல தம்பதிகளாயிருந்து ப்ராணனை விடவேண்டுமென்று ஈச்வரனை ப்ரார்த்தித்தார்கள்.

தாயாரும் இவ்வுலக வ்யாபாரங்களில் தலையிட்டுக்கொள்ளாதவளாய் விட்டாள்; தகப்பனாரும் இனி பிழைத்திருப்பாரென்ற தைர்யம் போய்விட்டது. குழந்தை ஹேமலதைக்கு வேறென்ன துக்கம் வேண்டும்? வயது அதிகமாக ஆகவில்லை. இன்னும் கொஞ்சகாலம் பெற்றோர்கள் அவளுடனிருப்பது எவ்வளவு நலமாயிருக்கும்? வைத்யர்கள் நவகுமாரரைப் பற்றி நம்பிக்கை கைவிட்டவுடன் இதுவரைக்கும் எவ்வளவோ சிரமப்பட்டும் அடக்கிவைத்திருந்த ஹேமலதையின் மனவருத்தம் வெளிவரலாயிற்று. தாயாரைப்போல் வாய்விட்டு



அரற்றாமல் உள்ளேயே மனம்அழுந்தும் தன்மையளல்லள் ஹேமலதை. அடிக்கடி தகப்பனார் பக்கம் உட்கார்ந்து விம்மிவிம்மி வாயைமூடிக்கொண்டு அழலானாள். அவள் தகப்பனாரிடம் அதிக அன்பும் பக்தியும்வைத்தவள். ஆதலால் அவளுக்கு அவருடைய குற்றங்குறைகள் தெரிய இடமில்லாமல் போயிற்று. தன்னை அதிக செல்வமாய்ச் சீராட்டி யாதரித்துவந்த தன் தகப்பனாரைப்போன்ற பக்ஷமும் அன்புமுள்ள தகப்பனார் கிடைப்பதரிது என்று அவள் எண்ணினாள். அவருடைய தேகவலிமையையும் மனோதீரத்தையும், கீர்த்தியையும் கண்டு அவள் வியந்தாள். தாயாரின் மார்பின்மீது சாய்ந்துகொண்டு, தகப்பனாரின் முகத்தைப் பார்த்தவண்ணமாய்க் கண்ணீர் விடுவாள். தன்னைவிட்டு ஒரு க்ஷணமும் பிரியாமல் தன்னுடனேயிருந்துவந்த ஒருமனிதர் அதுவும் தன் தகப்பனாரே தன்னைவிட்டு ஒரேதரமாய்ப் பிரிந்து அகல்ச்செல்வது நடக்கக்கூடிய கார்யமாக அவளுக்குப் புலப்படவில்லை. வைத்யர்கள் சொல்வதெல்லாம் பொய், தன்னைவிட்டுத் தன் தகப்பனார் அப்புறம் செல்லமாட்டாரென்று அவளுக்குத் தோன்றியது. இருந்தாலும், அவள் என்னமோ அழுகையை நிறுத்த ஸாத்யப்படவில்லை. அடிக்கடி அவளுக்குத் துக்கம் அதிகரித்துவிடும், கண்களில் நீர் ஆறாய்ப் பெருகத்தொடங்கும். வ்யாதியஸ்தர் எதிரில் கண்ணீர்விட்டு அவரை அதைர்யப்படும்படி செய்யலாகாதென்று ஹேமலதை அறையினின்றும் வெளியே சென்று, ஏகாந்தமான ஓரிடத்தில் உட்கார்ந்து தன் துக்கம் தீர அழுதுவிட்டு வருவாள்.

ஸிரீஷனும் நவகுமாரர் படுத்திருந்த அறைக்கு அடிக்கடி வந்து அவரைத் தேற்றுவிப்பான். அவருக்கு வேண்டிய ஸௌகர்யங்கள் யாவற்றையும் தாமதமில்லாமல் செய்துவந்தான். அயல் நாடுகளிலிருந்து ப்ரபல வைத்யர்கள் பலரை வரவழைத்துப் பார்க்கச் சொன்னான். அந்த வைத்யர்கள் கொடுத்த மருந்தை, வேளை தவறாமல் தானே தன் கையால் அவருக்குக் கொடுத்துவந்தான். கஞ்சி முதலியவற்றைத் தானே மேல்பார்த்து, தன்னெதிரில் செய்யச் சொல்லி அவருக்குக் கொடுப்பான். ஹேமலதை அறியாதவள்; அவளுக்கு அழத்தான் தெரியும்; அழுது அழுது அவளுக்குப் பசியெல்லாம் அடங்கிப்போய்விடும். அப்போது சைவலிநியும் ஸிரீஷனுமாய் அவளுக்கு ஸமாதானம் கூறி, சிறிது சாப்பிடச் சொல்வார்கள். ஹேமலதையின் தாயார் அடிக்கடித் தனக்கொன்றும் ஆகாரம் வேண்டாமென்று மறுத்துவிடுவாள். அப்போது ஸிரீஷன் வந்து நிர்ப்பந்தஞ்செய்ய ஒப்புக்கு 'சாப்பிட்டேன்' என்று பேர் வைப்பாள். ஹேமலதையின் தாயாருக்கு ஸிரீஷனிடம் அதிக ப்ரீதி கிடையாது. ஆனால் இப்பேர்ப்பட்ட ஸமயங்களில், அதாவது உற்றார் உறவினர்கள் சாந்தருவாயில் இருக்கும்போது, எப்பேர்ப்பட்ட வெறுப்பும் விரோதமும், கர்வமும் எல்லாம் பறந்துபோய் விடுகின்றன, ஜன்ம விரோதிகள்கூடத் தம் சத்ருத்வத்தையொழித்துவிடுகிறார்கள். மனோவ்யாகுலத்தாலும் ராப்பகல் கண்விழித்ததாலும் உண்டாகிய ச்ரமத்தில் ஹேமலதையின் தாயாருக்குப் பழைய விரோதங்களையும். அசூயைகளையும், பாராட்ட ஒழிவில்லை. 'பிச்சைக்காரப் பயல்' என்று ஸிரீஷனை அலக்ஷ்யஞ்செய்த நாட்களெல்லாம் போயின.

அவளுடைய பெருமைகளும், கர்வங்களும் அடியோடு தொலைந்துபோயின. இப்போது, தான் அநாதரவாகும் தருணத்திலிருக்கும்போது, அந்த ஸிரீஷனே தனக்குத் தேற்றரவு கூறி, தன்னிடம் அதிக பக்ஷமாயிருந்துவந்தான். அவனே இப்போது அவளுக்குப் புத்ரனினும் சிறந்த துணையாய் விளங்கினான். ஹிந்து ஸ்த்ரீகளுக்குக் கோடை இடிக்கு ஸமானமான துன்பம் தனக்கு நேரிடுங்காலத்தில் நவகுமாரரின் மனைவி தன் மருமகனையே நம்பியிருந்தாள்.

இரவும் பகலும் அவன் பட்ட கஷ்டம், சொந்தப் பிள்ளைகூடப் பட்டிருக்கமாட்டான். சைவலிநியும் ஸிரீஷனைப்போலவே உழைத்து வந்தாள். அர்த்த ராத்ரியில் நவகுமாரர் தூங்கிக் கொண்டிருக்கும் ஸமயம்பார்த்து அவருடைய மனைவியை யழைத்து அன்னபானாதிகள் கொடுத்து அவளுக்குப் பதிலாய்த் தான் காவலிருந்து அவளைத் தூங்கச் செய்தவன் ஸிரீஷனே. தகுந்த வைத்யர்களைத் தருவித்து அவர்கள் சொன்ன வகையில் அநு

வளவு தவறாமல் மருந்துகளை இரவும் பகலும் விழித்திருந்து கொடுத்துவந்தவனும் விரீஷனே. இவ்வாறு வித்யாஸம் பாராட்டாமல் தன் மாமனார், மாமி இவர்களுக்காக மனப்பூர்வமாய் உழைத்துவந்த சிறுவனுடைய குணத்தை, தான் முன்னமே உணராமல் அகாரணமாய் வெறுத்து வந்தோமே என்று ஹேமலதையின் தாயார் பலமுறை பச்சாத்தாபப்படலானாள். தன் கனனெஞ்சத்தைக் கண்டு மனம் வருத்தப்படுவாள். அடிக்கடி விரீஷன், சைவலிநி இருவரையும் பக்கத்திலழைத்து "நான் உங்களை என் ஹேமலதையைப்போலவே பாவிக்கிறேன். அவளைப்போல் நீங்களும் என் குழந்தைகள்தான் என்பதற்கு ஸந்தேஹமேயில்லை" என்று பலமுறை சொல்லத் தொடங்கினாள்.

இப்பேர்ப்பட்ட ஸந்தர்ப்பங்களில், அதாவது வீட்டில் பிணியும் துக்கமும் உண்டாயிருக்கும்போது, அவ்வீட்டிலுள்ள சிறியோர் பெரியோர் அனைவரும் அறிந்துகொள்ளும் விஷயங்கள் அநேகம் உண்டு. சில வேளை அத்தருணங்களில் மனிதர்களுடைய குணங்கள் அடியோடு மாறுவதுமுண்டு. விரீஷன் ராப்பகல், பாராமல் தன் தகப்பனாருக்கு சுசுருஷை செய்துவருவதைக்கண்டு ஹேமலதைக்குத் தன் கணவனிடம் அதிக அன்பும், பக்தியுமுண்டாயிற்று. சதிபதிகள் ஒருவரையொருவர் முன்னிலும் அதிகமாய் நேசிக்கலானார்கள். அவனுடைய தயாள குணத்தையும் பெருந்தன்மையையும் கண்டு ஹேமலதை மனம் பூரித்தாள். விரீஷனுடைய மலர்ந்த முகத்தையும், கருணைபொழியும் விழிகளையும் பார்த்துப் பார்த்து மகிழலானாள். விரீஷனின் மனத்தூய்மையும் அகத்தினழகும் அவளுக்கு இப்போதுதான் உள்ளபடி தெரியவந்தது. அவள் மனோ வருத்தத்தால் சோர்வடைந்திருக்கும்போது விரீஷன் அவளை மெதுமாய்த் தன் பக்கமழைத்துத் தேறுதல் கூறி முத்தமிடுவான். அப்போது அவள் தன் தலையை அவன் மார்பின்மேல் சாய்த்துக்கொண்டு அவன் முகத்தைப் பார்த்தபடியே தன் துக்கத்தை மறந்திருப்பாள்.

பட்டபாடும் செய்த வைத்யமும் பயனில்லாமற்போயின. நவகுமாரரின் அந்த்யகாலம் ஸமீபித்தது. சிறிதுகாலமாய் ஒரே நிலைமையிலிருந்த வியாதியும் நாளுக்கு நாள் அதிகரிக்கலாயிற்று; தேக பலமும் குன்றிக்கொண்டே வந்தது. மாரிகாலம், ஒரு நாள் அருணோதய காலம். நவகுமாரர் ஒருவித கஷ்டமுமில்லாமல் பரலோகஞ் சென்றார். அதுவரைக்கும் நிச்சப்தமாயிருந்த அறையினின்று ஒரே காலத்தில் ஓவென்ற அழுகைக் குரல் பலமாய்க் கிளம்பியது. ஜமீன்தாரர் மரண ஸமாசாரம் நொடியில் ஊரெல்லாம் பரவியது.

நவகுமாரருடைய மரணம் அநாயாஸ மரணமாயினும் எதிர்பாராத மரணமல்ல. ஆகையால் எல்லாம் தயாராகவே யிருந்தது. ஸத்ரீகளெல்லாம் ஓவென்று கதறி யழுது, கீழே புரண்டுகொண்டிருக்க, ப்ரேதத்தை வீதிக்குக் கொண்டுவந்தார்கள். அரண்மனையிலிருந்து கங்காதீரம் வெகுதூரம். எவ்வளவு தூரமாயிருந்தாலும் தூக்கிக்கொண்டுசெல்ல, நீ, நானென்று சுற்றத்தார்களெல்லாம் முன்வந்தனர். விரீஷனும், இன்னும் ஜமீன்தாரரின் உற்றார் உறவினர்கள் பலரும் ஸ்வாமியைக் குறித்துப் பஜனைசெய்துகொண்டேசென்றனர். அவர்கள் சென்ற ப்ரதிக்ராமங்களிலும், குடிகள் தெருவில்வந்து ஜமீன்தாரருடைய மரணத்தைப்பற்றி விசனப்படலாயினர். ஸூர்யன் உச்சிக்கு வந்துவிட்டான்; இன்னும் பாதிவழி மாளவில்லை. ப்ரேதத்தை ஒரு மரத்தடியில் வைத்துவிட்டு, எல்லோரும் சிறிது இளைப்பாறினார்கள். கங்காநதி கண்ணுக்குத் தென்படுவதற்குள் நன்றாய் இருட்டிவிட்டது. உரத்த குரலாய் ஸ்வாமியைப் பஜனைசெய்துகொண்டே ப்ரேதத்தைக் கங்கை யாற்றங்கரையில் வைத்தனர்.

முன்னரே ஆட்கள் சென்று, ஸகல ஏற்பாடுகளையும் தயாராய்ச் செய்துவைத்திருந்தார்கள். நல்ல நறுமணம் வீசும் சந்தனக் கட்டைகள் நன்றாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. புரோஹிதர்களும் கர்த்தாவும் மந்த்ரங்களை உச்சரித்துக்கொண்டே சவத்தைக் காஷ்டத்தின்மீது வைத்தார்கள். உடனே சுற்றியிருந்தவர்கள் பக்கத்திருந்த சந்தனக்கட்டைகளை ப்ரேதத்தின்மீது அடுக்கிஅதன்மேல் நெய்யை நிறையக் கொட்டினார்கள். தீயும் வைக்கப்பட்டது. சற்றுக்கெல்லாம் காஷ்டமும் கொழுந்துவிட் டெரியலாயிற்று. வெகு சீக்ரத்தில் ப்ரேதமும் தஹனமாய்விட்டது.



அஸ்திகளையெல்லாம் பொறுக்கிக் கங்காநதியில் போட்டுவிட்டு, எல்லோரும் அப்புண்ய தீர்த்தத்திலேயே ஸ்நானஞ்செய்தார்கள். அன்றிரவு வழியில் ஒரு க்ராமத்தில் தங்கியிருந்து மறுநாள் காலை, எல்லோரும் பாழ்வீடெனத் தோன்றும் தேவிபுர அரண்மனை சேர்ந்தார்கள்.

சிலநாள் பர்யந்தம், மரணத்து அறிகுறியாக விரீஷனும் இன்னும் ஜமீன்தாரரைச் சேர்ந்த இதர பந்துக்களும் கழுத்தில் ஒரு வெள்ளை வஸ்த்ரந்தரித்து, காலில் பாதரக்ஷையின்றி இருந்தார்கள். அக்காலங்களில் தர்ப்பாஸனத்தின்மீதுதான் உட்கார வேண்டுமாதலால், ஒவ்வொருவரும் எங்கு சென்றாலும், கூடக் கையில் ஒரு தர்ப்பாஸனம் எடுத்துச்சென்றனர். வீட்டிலும் பக்ஷியவகைகள், அந்நிய பதார்த்தங்கள் முதலியன விலக்கப்பட்டிருந்தன. ப்ரதிதினமும் காலை, மாலை வேளைகளில் ஸ்த்ரீகள் ஸம்ப்ரதாயப்படி அழுதுகொண்டு வந்தனர். ஹேமலதை, மனம்விண்ட அவளுடைய தாயார், இவர்களிருவருடைய துக்கத்தைச் சொல்லத் தரமன்று. தகப்பனாரை இழந்தவள் ஒருவள்; மற்றொருவள் கணவனைப் பறிகொடுத்தவள். ப்ரதி ஸாயந்திரமும் விளக்கு வைத்துவிட்டுவர அறைக்குட் செல்லும்போதெல்லாம் ஹேமலதை விம்மிவிம்மி அழுவாள். இறந்தவருக்காகவோ, அல்லது இருப்பவர்களுக்கு உண்டான கஷ்டத்தைக் குறித்தோ வீட்டிலுள்ள இதர ஸ்த்ரீகளும் தாயார், பெண் இவர்கள் அழும்போது, கூடத் தாங்களும் அழுதார்கள்.

குறித்த தினங்கள் கடந்தவுடன், மரணமடைந்தவருடைய அந்தஸ்துக்கேற்றபடி சிராத்தாதி க்ரியைகள் நடைபெற்றன. பொருட்செலவு ஏராளமாய் ஆயிற்று. தேவிபுரத்துக் குல புரோஹிதர்கள் வந்திருந்து, சிராத்தாதிகளை நடப்பித்தனர். சுற்றுப்பக்கத்து க்ராமங்களிலுள்ள ப்ராஹ்மணர்களும் வீரநகரத்தினின்றும் சில ப்ராஹ்மணர்களும் வரவழைக்கப்பட்டிருந்தார்கள். இவர்கள் தவிர, இன்னும் சுற்றுப்பக்கங்களிலிருந்த எண்ணிறந்த ஜனங்களுக்கும் அன்னமிடப்பட்டது. எல்லோருக்கும் வஸ்த்ரதானம் கிடைத்தது. புரோஹிதர்களுக்கும் இதர ப்ராஹ்மணர்களுக்கும் நல்ல வரும்படி கிடைத்தது. கிராத்தாதி ஸகல க்ரியைகளும் அதிக விமர்சையாய் நடைபெற்றன. இத்தனை தான தர்மங்களையும், இவ்வளவு பெருமையாய் நடத்தியவன் விரீஷனே. ப்ரதி மனிதனையும் அழைத்து, அவனவனுடைய ஸ்திதியைப் பரிவுடன் விசாரித்து, அவரவர்களுக்கேற்ப தக்ஷிணைகள் கொடுத்தனுப்பினான். அனைவரும் த்ருப்தியடைந்தனர். பழைய ஜமீன்தாரர் இறந்த துக்கத்தைக்கூடச் சிறிது மறந்து, வந்தவர்களெல்லோரும் தேவிபுரத்துப் புதிய ஜமீன்தாரரை ஆசீர்வதித்துச் சென்றனர்.

எல்லாத் தான தருமங்களும் முடிவதற்கு அஸ்தமனமாய் விட்டது. அப்புறம், விரீஷன் உள்ளே வந்து மாமியாரை நமஸ்கரித்து "அம்மா, நான் ஒரு பாழுங்குடிசையில் ஒரு பரம ஏழைக்குப் புத்ரனாய்ப் பிறந்தவன். என் பூர்வஜன்ம புண்யம், தாங்கள் என்மீது தயைகொண்டு, என்னையும் ஒரு ஆளாக்கி நல்ல உயர்பதவிக்குக்கொண்டுவந்து கடைசியாகத் தங்களுடைய சிறந்த புத்ரியையும் எனக்கு மணம்புரிவித்து என்னைத் தங்களுடைய சொந்த மகனாக்கிக் கொண்டீர்கள். தாயே, தங்கள் ஆசீர்வாதம் எனக்கு இருக்கவேண்டும். கூட, தாங்களும் எனக்கு அடிக்கடிப் புத்திமதி சொல்லி வரவேண்டும். இரண்டும் இருந்தால், நான் இந்த வம்சத்துப் பெருமையும் கீர்த்தியும் சிறிதும் குறையாமல் பாதுகாத்துவருவேன் என்பதற்கு ஸந்தேஹம் கிடையாது" என்றான்.

நவகுமாரரின் மனைவி பூர்ணஹ்ருதயத்துடன் விரீஷனை உள்ளன்புடன் நோக்கி, "அப்பா, என் மகனே, இப்பூவுலகத்துச் செல்வத்தைவிடச்சிறந்த செல்வங்கள்உண்டு; ஸர்வேசுவரன் உனக்கு அச்செல்வங்களைக் கடாக்ஷித்திருக்கிறார். உன்னை இந்த உன்னத பதவிக்குக் கொண்டுவந்தவர் எவரோ, அவரே உனக்குத் துணையாயிருப்பார். தென்னம்பிள்ளை வைத்தவன், தண்ணீர் வார்க்காமற் போகமாட்டான். எதற்கும், அவரையே நீ நம்பியிரு. பலனின் பொறுப்பை அவர்மீது போட்டுவிட்டு, நீ உன் கடமையை ஸரிவரச் செய்துவா. கடவுள் க்ருபையால் உனக்குப் பேரும் புகழும், சீரும் சிறப்பும், நீண்ட ஆயுளும் உண்டாகவேண்டும். எனக்கோ வயதாய்விட்டது. இன்னும் இம்மண்ணுலகில்

நான் இருப்பது கொஞ்ச காலந்தான். இனி என் நாதன் எங்கு சென்றாரோ, அவ்விடத்துக்கே என்னையும் கொண்டு சேர்ப்பிக்கும்படி பகவானை ப்ரார்த்திப்பதுதான் எனது தொழிலாகும். அதற்கேற்றவிடம் மதுராபுரிதான். இன்னும் சில நாட்களுக்கெல்லாம் நான் அவ்விடம் செல்வேன். ஹேமலதையும் நீயுமாக புத்ர பௌத்ராதி ஸம்பத்துகளடைந்து ஸுக ஜீவிகளாய் நீடூழிகாலம் வாழ்ந்திருக்கவேண்டும்" என்று ஆசீர்வதித்தாள்.

ராத்ரி வெகு நாழிகையாயிற்று. ஸிரீஷன் படுக்கையறைக்குச் சென்றான். அங்கே ஹேமலதை விசனத்தில் மூழ்கினவளாய் எண்ணமிட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். பல மாதங்களாயின அவர்கள் இவ்விதம் ஏகாந்தமாயிருந்து. தன் மனைவி துக்கத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்டு, ஸிரீஷன் சற்றுநேரம் அகல உட்கார்ந்திருந்தான், அப்புறம் அருகே அழைத்துப் பக்கத்தில் உட்காரவைத்து, அவள் தலையைத் தன் புஜத்தின்மீது சாய்த்துக்கொண்டு நெற்றியில் முத்தமிட்டான்.

"ஹேமலதே, குழந்தை ப்ராயம் முதற்கொண்டு உன்னை நேசித்துவந்தேன். பிறகு நான் உன்னை என் மனைவியாகக் காதலிக்கும் காலம் வந்தது. நம்மைச் சேர்த்துவித்த புண்ய புருஷர் காலமாய்விட்டார். அவர் ஞாபகார்த்தமாக இப்போது நான் உன்னை முன்னிலும் பதின்மடங்கு அதிகமாகக் காதலிக்கிறேன். நாம் உயிருடனிருக்குமட்டும், பூர்ண மன ஹ்ருதயத்துடன் அந்தரங்க சுத்தியாய் ஒருவரையொருவர் காதலித்து அநுகூல தம்பதிகளாயிருந்து வரவேண்டும்."

இதைக் கேட்டவுடன், சற்றும் தாமதிக்காமல் "ஹேமலதை, நாதா நான், என்றைக்கும் தங்களுடைய உண்மைப் பத்னியாக நடந்து வருவேன். இது ஸத்யம்" என்றாள்.

ஸிரீஷன் அவளை முத்தமிட்டுக்கொண்டே, "ஹேமலதா. நீ கல்யாணகால முதற்கொண்டே, அவ்வாறுதான் இருந்துவருகிறாய். ஆனால் நான் உனக்குச் சொல்லவேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது. அந்த விஷயத்தில்தான், உனது மனோதிடமும் புத்திசாலித்தனமும் தெரியவேண்டும். கண்மணீ, நரேந்த்ரனைப்பற்றி உன்னிடம் இதுவரைக்கும் நான் சொல்லாமல் மறைத்துவைத்திருக்கும் விஷயம் ஒன்றுண்டு" என்று சொல்லும்போது ஹேமலதையின் முகம் மாறியது. அவள் மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது.

"தெற்கே ஆப்காநியர்களுடன் போர்புரியச்சென்ற சேனையுடன் நரேந்த்ரன் சென்றான். சக்ரவர்த்தியவர்களுடைய ஸைந்யம் தோல்வியடைந்தது. அந்தப் பெரும் போரில் நரேந்த்ரனுக்குப் பலத்த காயம் பட்டதாம்."

இவ்வாறு துன்பம் உண்டாகக்கூடுமென்று அவள் முன்னமேயே பயந்திருந்தாள். அதைப்பற்றி அவள் அடிக்கடி சிந்தித்துக் கொண்டிருந்தாள். கடைசியில் அவள் பயந்தபடியே ஸம்பவிக்கலாயிற்று. ஸிரீஷன் சொன்னதைக்கேட்டு ஒரு பெருமூச்செறிந்து ஹேமலதை தன் முகத்தை அவன் மார்பில் மறைத்துக்கொண்டு கண்ணீர் விட்டாள்.

"கண்மணீ, பால்யம் முதற்கொண்டு நரேந்த்ரனை நீ ஸஹோதரனாக நினைத்து நேசித்து வருவது எனக்குத் தெரியும். ஆதலால் ஸஹோதரன் காயப்பட்டானென்பதைக் கேட்டு எப்படி அழாமலிருக்க முடியும்? நானும் அவனை என்னுடன் பிறந்தவனாக எண்ணி நேசித்து அவனுக்காக உழைத்து வருகிறேன்."

வெகு நேரம் வரைக்கும் ஒருவருடன் ஒருவர் பேசவில்லை. இருவரும் துக்காக்ராந்தர்களாய் எண்ணமிட்டுக்கொண்டிருந்தார்கள். நவகுமாரர், வ்யாதியாய்ப் பாயில் படுத்திருக்கும்போது நரேந்த்ரன் காயம்பட்ட செய்தி ஸிரீஷனுக்குத் தெரியும். அந்த ஸமயத்தில் ஸமாசாரத்தைச் சொன்னால், ஏற்கெனவே தகப்பனாரைக் குறித்துத் துக்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஹேமலதை, பின்னும் வருந்துவாளென்று இதுவரைக்கும் சொல்லாமலிருந்தான். இப்போது அவ்விஷயத்தைச் சொன்னவுடன் ஹேமலதை கண் காணாத தேசம் சென்றிருக்கும் தன் போர்வீர நண்பனைக் குறித்துக் கண்ணீர் விடுவதை, ஸிரீஷன் ஒரு பெரிதாய் நினைக்கவில்லை.

"கண்மணீ, நரேந்த்ரனுக்கு ஒருவித அபாயமும் உண்டாகாது. கடவுள் அவனைக் காப்பாற்றுவார். அவருடைய உதவியைக்கொண்டு நானும் அவன் விஷயமாய் என் கடமையை



நிறைவேற்றுவேன். உன் தந்தை வைத்துவிட்டுச் சென்ற இந்த ஜமீனுக்கு அதிகாரி நான்; எனது மனைவியாகிய நீ, தேவிபுரத்து ராணியாவாய். நாமிருவரும் வீரநகர விஷயமாய்ச் செய்யவேண்டிய கடமைகள் சிலவுள."

இம்மொழிகளைக் கேட்டவுடன் ஹேமலதை தன் துக்கத்தை யொழித்தாள், மனம் வருந்திக்கொண்டிருந்த ஹேமலதைக்கு ஸிரீஷன் வார்த்தைகள் அம்ருதமாயிருந்தன. ஸத்யஸந்தனான ஸிரீஷன் சொல்லைக்கேட்டு, ஹேமலதைக்குப் புத்துயிரும், புது தைர்யமுமுண்டாயின. தன் கண்களைத் துடைத்துக்கொண்டு, அந்த வள்ளலின் முகத்தை உற்று நோக்கலானாள். அவன், சொன்ன சொல் தவறானென்று அவள் எண்ணினாள். அப்போது அவனைத் தெய்வமாக நினைத்து அவனை நமஸ்கரிக்கலாமா என்றமட்டும் அவனிடம் அன்பும் பக்தியுமுண்டாயின.

"ஹேமலதே, உண்மையில் கடவுள் ஒருபோதும் நரேந்த்ரனைக் கைவிடமாட்டார். அவன் மஹா தைர்யசாலி: சூரன். அவனுடைய சொத்தை வேறெவருமடையமாட்டார். அதற்கு அதிகாரி அவன்தான். அவன் விஷயமாய் நான் செய்யவேண்டிய கடமையொன்றுண்டு. உனக்கு நரேந்த்ரன் வெகு நாளாகத் தெரியும்; அவனும் உன்னை ஸஹோதரியாகப் பாவித்து நேசித்து வருகிறான். உன் வார்த்தையை அவன் ஒருபோதும் தட்டமாட்டான். ஆதலால் என் கடமையை நிறைவேற்றுவதில் நீயும் என்னுடன் ஒத்து உழைக்கவேண்டும். உன்னுடைய உதவி இன்றியமையாதது. உன் தாயாருடன் நாமெல்லோரும் மதுராபுரிக்குப் போகப்போகிறோம். அங்கு நாம் நரேந்த்ரனை ஸந்திப்போம். ஹேமலதே, அப்போதுதான் உனது உதவி எனக்குத் தேவை. அவனைத் திரும்ப ஊருக்கு அழைத்து வருவது உனது கடமையாகும். அதைச் செய்துமுடிக்கிறேன் என்று உறுதி வாக்குக் கொடு" எனக் கேட்டான் ஸிரீஷன்.

ஹேமலதை "நாதா, என் கடமையை நான் அறிவேன். தங்களுடைய தர்மபத்னியாகவும், நரேந்த்ரனுடைய உண்மையான ஸஹோதரியாகவும் எனது கடமையைச் செய்துமுடிக்கப் பகவான் எனக்குப் போதுமான திடம் தருவாராக" என்று ப்ரார்த்தித்தாள்.



# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### S. S. L. C. 1912 (*Continued.*)

I. Write a short essay on (one of) the following:—

(*a*) The use of holidays.

**விடுமுறை நாட்களின் உபயோகங்கள்**

*விடுமுறை நாட்களின் தன்மை—பொது உபயோகம்—சிறப்பான உபயோகங்கள்—முடிவுரை.*

விடுமுறை நாள் என்ற சொல்லுக்கு, ஒவ்வொருவனும் ஒழுங்காக, வயிற்றுப்பிழைப்புக்காயினும் அல்லது வேறு எதற்காயினும், தொழிற்படும் போக்கிலிருந்து விடுபட்டிருக்கும் நாள் என்பது பொருள். இந்தப் பொருளில் பலவிதத் தன்மைகள் அடங்கியுள்ளன. முதலாவது, தொழிலாளிகளும் மாணவர்களும் தாம் ஒழுங்காக நடத்திவரும் தொழில். படிப்பு இவைகளிலிருந்து விலகியிருக்கும் நாள்கள், ஒரு வகுப்பான விடுமுறை நாள்கள். இவைகளில்தான் வாரந்தோறும் வரும் சனி ஞாயிறு என்ற கிழமைகள், வருஷா வருஷம் வரும் இரண்டொருமாதம் முதலிய பள்ளியில் விடும் ஒழிவு நாட்கள் அடங்கும். இரண்டாவது, ஏதாவது ஒருவிதமான படிப்பு முதலியனவும்கூடாது, என்று விலக்கப்பட்ட நாட்கள் அவையாவன:—கிறிஸ்தவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை, துருக்கர்களுக்கு வெள்ளிகிழமை, நம்மவர்களுக்கு ஏற்பட்டுள்ள பர்வ நாட்கள், அவைகளுக்கு அடுத்த நாட்களான பாட்டிமை என்ற பிரதமை, அஷ்டமி, நவமி, பெரியோர்கள் சிறப்பு மரணதினங்கள் முதலியன ஆகிய இவைகளே. மூன்றாவது, ஒருவன் நடத்தவேண்டியதான கர்மாக்களுக்காகவோ அல்லது பலர்கூடி அனுபவிக்கவேண்டிய திருவிழாக்களுக்காகவோ ஏற்படும் விடுமுறை நாட்கள். இவைகளுள் ஏகாதசி, சிராத்தம், கோயிற்றிருவிழாநாட்கள், வருஷாந்தர பூஜை முதலியன சேரும். இவ்வாறு மூன்று விதமாகக் காணப்படும் விடுமுறை நாட்களில் முதல்வகுப்பான வெறும் ஓய்வு விடுமுறைநாள் தான் முக்யமாக நாகரீகம் மிகுந்து விஷயப் பற்று நிலைத்த இக்காலத்தவர்களால் நன்கு மதிக்கப்படுகிறது.

விடுமுறை நாட்கள் எவ்வகைப் பட்டிருப்பினும், அவைகளில் கூடியவரையில் மற்றைய நாட்களில் நாம் பின்பற்றும் வேலை ஒழுங்கைப் பின்பற்றாது, அவைகளைச் செலவிட முயலவேண்டும். இதனால் பலர் விடுமுறை நாட்களில் வரம்பைக் கவனியாது உலக விஷய ஸங்கங்களில் ஈடுபட்டுவிடவேண்டும் என்று அபிப்ராயப்பட்டு அப்படியே தமது வாழ்நாட்களை வீணாக்குவதற்கு வேண்டிய கொடிய பழக்கங்களில் மூழ்கி நிற்பர். இது வெறும் கண்மூடித்தனந்தான். இந்தக் கொடுமையை, இக்காலத்து நாகரீகம் நாளுக்குநாள் திடப்படுத்தி நம்மைத் தத்தளிக்க விடுகிறது. விடுமுறை நாட்களை உபயோகிக்கும் விதம் நன்குணர்ந்து, அறிவுடையோர் இக்கொடுமையைவிட்டு விலக முயலவேண்டும். விடுமுறை நாட்களில் ஸாதாரண வேலை ஒழுங்கைப் பின்பற்றி நிற்கவேண்டாம் என்பதனால், அதையே மறந்துவிடவேண்டும் என்று கொண்டுவிடக்கூடாது. நமது ஸௌகரியம்போல மற்றைய விடுமுறை நாட்களின் தொழில்களைச் செய்தபின்னர், பொழுதும் தேஹஆற்றலுமிருந்தால் ஸாதாரண ஒழுங்கை ஒருவாறு பின்பற்றுவதில் குற்றம் ஒன்றுமில்லை. மற்றைய நாட்களில் நமது தொழிலின் ஸௌகரியப்படி நமது மற்றைய விஷயங்களை ஒழுங்குபடுத்த வேண்டும்: விடுமுறை நாட்களிலோ நமது சௌகரியப்படி தினவேலையை இசைக்கவேண்டும். இதை மறக்கும் இக்காலத்தவர் தம் வாணாளை வீணாக்கும் கொடியநிலைக்கு வருவர்.

இனி விடுமுறை நாட்களின் தன்மைக்கு ஏற்ப அவைகளை உபயோகிக்கும் வழிகளை எடுத்தாராய்வோம். முதலாவது வகையான களைப்பு நீக்கும் விடுமுறைநாட்களில் முக்யமாக நமது மற்றையநாள் வேலைகளால் ஏற்பட்ட, களைப்பைத் தீர்ப்பதற்கு வேண்டிய வரம்புமீறா விளையாட்டு, தேஹப்பயிற்சி, மனக்கிளர்ச்சி உண்டாக்கும் படிப்பு இவைகளையும், இடையே சிற்சில காலங்களில் நமது ஸாதாரண வேலை விஷயங்களையும் ஒருவாறு கைப்பற்றல் வேண்டும். ஒரேஅடியாக நமது வாழ்க்கைத் தொழிலையே மறந்து, விஷய ஸங்க மாத்திரத்தில் மூழ்கிக்கிடக்கலாகாது. நாம் இவ்விடுமுறை நாட்களில் மனதின் டிப்பைத் தளர்த்தி, அதற்கு ஆற்றல் மிகுந்துநிற்கும் திறனைத் தரவேண்டியது. இந்நாட்களில் வீண் விஷயானுபவத்தில் மாத்திரம் பொழுதுபோக்குவது, நமது வேலை விஷயத்தில் ஒருவிதப் பிடிப்புக் குறைவை மனதில் உண்டாக்கிவிடும். இதற்கு இடம் தாராது, ஒழுங்காக ஒருவித ஸ்வதந்திரத்திற்கும் தடையின்றி நாம் இவ்விடுமுறை நாட்களைக் கழிக்க முயலவேண்டும். இரண்டாவது வகுப்பைச்சேர்ந்த, தொழிலே விலக்கப்பட்ட நாட்களில் அவ்வந் நாட்களுக்குத் தகுந்தவை என்று சாஸ்திரங்களில் எடுத்துக்காட்டப்படுபவைகளைக் கூடியவரையில் பின்பற்றி நடக்கவேண்டும். இவைகளில் விளையாட்டு முதலிய விஷயானுபவங்களைக் கொண்டுவந்து கலந்து, கங்கைக்குப்போன கடாவின் கதையாகச் செய்துவிடவே கூடாது. அனத்யயன தினங்கள் என்று நமக்கு ஏற்பட்டுள்ள பர்வாதி நாட்களில் அவைகளுக்கென்று சிறப்பாக ஏற்பட்டுள்ள தர்ப்பணாதி கர்மாக்கள், ஜபங்கள், புராணம் கேட்டல், தெரிந்தவைகளை ஆராய்தல் முதலியவைகளைச் செய்யலாம். அன்று விலக்கவேண்டியவையான வேதாத்யயனம், புதுப்படிப்பில் முயலுவது முதலியவைகளை நிறுத்தவேண்டும். இப்படியேதான் கிறிஸ்தவர்களுக்கும் துலுக்கர்களுக்கும்: அவரவர்கள் மதநூற்களில்கண்டபடி அவரவர்கள்நடத்தவேண்டும். பெரியோர்கள் சிறப்பு, மரணம் முதலியவைகளைப்பற்றிவரும் விடுமுறை நாட்களில், நமது ஸாதாரண வேலைகளை விலக்கி அவைகளுக்கு இணங்கியவைகளையே பின்பற்றல்வேண்டும். மஹாராஜாவின் மகுடாபிஷேக காலங்களில், வீட்டை அலங்கரித்தல் தகுந்த உடை முதலியவைகளை ஏற்று, அன்று ஏற்படக்கூடிய கூட்டங்களில் சேர்ந்து ஒழுகுதல், புராணங்களில் காணப்படும் மகுடாபிஷேக பாகங்களை வாசித்தல் விருந்துண்ணல் முதலியவைகளில் பொழுதைச்செலவிடலாம். ராஜாவின் மரண காலங்களில் புண்யகதைகேட்டல், அவன் ஆத்மாவின் நற்கதிக்கு ஏற்பட்டுள்ள தொழில்கள் ஆகிய இவைகளில் முயலலாம். மூன்றாவதான புண்ய தின விடுமுறைகளில் கண்டபடி விஷயானுபவங்களில் முனைய இடமிருந்தாலும், அவைகளில் ஈடுபடாது செய்யவேண்டிய கடமைகளையும் பின்பற்றவேண்டிய ஒழுங்குகளையும் மறவாது கைப்பற்றி நிற்கவேண்டும்.



அவிழ்த்துவிட்டதும் கழுதை எடுத்துவிட்டதாம் ஓட்டம் என்ற கதையாக விடுமுறை நாள் கிடைத்ததும், முன்செய்துவந்த தொழில் ஒழுங்கால் நமக்கு ஏற்பட்டுள்ள நற்குண நற்செய்கைகளையும் கெடுத்துக்கொள்ளும்படி, அவைகளை வரம்புமீறிக் கண்மூடித்தனமான விஷய சுகானுபவத்திலாவது அல்லது வீண் சோம்பேறித்தனத்திலாவது எக்காலும் செலவிடவே கூடாது. இப்படி வீணாக விடுமுறைநாட்களைத் தாறுமாறாகச் செலவழிப்பதுதான் இக்காலத்திற் கேற்ற கோலமாகி விட்டது. இதற்கு அறிவுடையோர் ஒருநாளும் இடங்கொடுக்காது, விடுமுறை நாட்களில் லௌகீகத் தொழிலைக் குறைத்தும், வைதிகத் தொழிலை ஏற்றியும் பழகிவந்து; ஸாதாரண நாட்களிலும் நமது வாழ்க்கைத் தொழிலான மோக்ஷம்பெற முயலுவதை. மறவாவண்ணம் அவ்விடுமுறை நாட்களை ஸரிவர உபயோகித்துவர எப்பொழுதும் முயன்றுகொண்டேயிருத்தல்வேண்டும்.

## சிறுவர்களுக்கான பக்கங்கள்

## Children's pages

### II. நகுஷன் சரித்திரம்

#### 1. வேத நுட்பம் கேட்ட சருக்கம்.

கபிலபகவான்:—வைதிக கர்மாக்கள் விஷயத்தையும், வைதிக தபஸ் விஷயத்தையும் நன்றாகச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். நீர் சொல்வது உண்மையேயாயினும், உமது சொற்களின் முழுப்பொருளை நீர் உணராது பேசுகிறீர்போலத் தோற்றுகிறது. நான் வேதத்தைக் குற்றங் கூறுதிருக்கையிலேயே அப்படிச் செய்ததாகக் கொண்டீர். ஆதலால் நீர் என் கருத்தையும் உணரவில்லை; உமது கருத்தும், உமது சொல்லின் உட்கருத்தை நாடவில்லை.

நான் சொல்லவந்ததை முதலில் கூறுகிறேன். கர்மாக்களைச் செய்யக் கூடாதென்பது என் பக்ஷமல்ல. ஆனால் வைதிக யாகங்களைப்பற்றி முழுதும் உணர்ந்து, தவறாது செய்வது கடினம். அப்படி, அவைகள் பலன்களில் மயங்கிச் செய்தாலும், வரும் பயனும் நீடித்து நிற்பது என்பதில்லை. நீரே கூறியபடி, ஏழைகளால் அவைகளை அனுஷ்டிக்கவே முடியாது. அவைகளையெல்லாம் எல்லோரும் அனுஷ்டித்தே தீரவேண்டியது என்பதும் வேதத்தின் கருத்தல்ல. மனதிற்கு விஷயஸங்கங்களிலிருந்து வெறுப்பு உள்ளபடி ஏற்பட்டு அவைகளிலிருந்து திரும்பும் நிலை வரும்படி செய்யவே அவைகள் ஏற்பட்டுள்ளன. பலன்வழி கர்மாக்களைப்பற்றி நடத்துவதைவிட்டு, அவைகளால் உண்டாகக்கூடிய மன அடக்கத்தைக் கருதி அவைகளைப் பின்பற்றுவதே வேத நோக்கத்தில் உள்ளபடி ஒருவனைக்கொண்டு சேர்க்கும். இக்கருத்துடன் வேதகர்மாக்களை நோக்குங்கால், பொதுவாக ப்ராணி ஹிம்ஸையுடன் கலந்துள்ள யாகாதிகளைவிட அவைகளே இல்லாது நேரே மனதை அடக்கும்படியான சாதுர்மாஸ்யாதி தபஸ்ஸங்களிலேயே ப்ராஹமணன் மனம் பாயவேண்டும். இதனால் யாகமே தாழ்ந்தது, செய்யாது ஒழிக்கவேண்டும், என்ற வெறுப்பையும் கொள்ளலாகாது: யாகஞ்செய்ய முடியாவிடில், அவைகளைப்பற்றி வீண்கவலையும் கொண்டு, மற்றைய தபஸ்ஸங்களில் முயலாது இருந்துவிடவும் கூடாது. இவ்வளவுதான் நான் கூறவந்தது.

மேலும் நீர் வைதிக கர்மாக்களை, அவைகளில் ஏற்படும் கொடுமையைக்கூட மதித்து ஓதுங்காது, செய்யவேண்டும் பணக்காரர்: அப்படியே தபஸை ஏழைகளும் கைப்பற்றவேண்டுமென்றீர். இது உண்மைதான். யாகம் நடவாமைக்குப் பல முகாந்தரங்கள் ஏற்படலாம். எல்லாம் கால மாறுபாட்டால் ஏற்படும் மனிதரது யோக்யதா மாறுபாட்டையே பொருத்தது. வைதிகஞானக் குறைவு, தகுந்த பசு தேடச் சக்தியற்றுப்போதல், மனக்குழப்பம் இவைகள் ஏற்பட யாகம் செய்யமுடியாமல் போய்விடலாம். இவர்களுக்கும் வேதம் தபஸை விதித்தது. இவர்கள் யாகம் செய்ய முடியவில்லையென்று வருந்திவீணாகத் தபஸையும் கைசோரவிடாதிருப்பதற்கே கர்மா செய்ய வேண்டாம் என்றும் ஒருவாறு கூறியது வேதம்.

நீர்தான் கர்மாக்களைச் செய்யவேண்டுமென்று பல முகாந்தரங்களால் வற்புறுத்தினீர். அவைகளின் முடிவு இன்னது என்று உமக்கு நன்றாக விளங்கவில்லையென்பது நிச்சயம். எப்பொழுதும் கர்மாக்களைச் செய்துகொண்டே இருப்பதுதான் முடிவா? மேல் அதனால் ஏற்படுவது ஒன்றுமில்லையா? நீர் கூறியதிலிருந்து இதைவிட வேறு முடிவு இருப்பதாகத் தோற்றவில்லை. இது யுக்திக்குப் பொருந்தா முடிவு. தேஹேந்திரியாதிகள், வைதிககர்மாவை நடத்துங்கால் மனம் எப்படி இருக்கவேண்டும்; அந்நிலையை இக்கர்மாக்கள் உண்டாக்குவது எப்படி—என்பவை முதலிய வைதிக கர்ம நோக்கம் உமக்கு எடுத்துக்கூறினால் விளங்கிவிடும். ஆனால் உமக்கு இவ்விஷயத்தில் அறியாமை குடிகொண்டிருக்கவில்லையா?

ஸ்யூமரச்மி:—கபிலபகவானே! நீர் கூறியதெல்லாம் ஸரிதான். நீர் கூறியதிலிருந்து, நீர் வைதிககர்ம அனுதரவுபண்ணி ஏதோ ஒருமுடிவைக் காட்டவந்ததுபோலக் காணப்பட்டது. அதனால் உம்மைப் பழித்தேன். யாகாதி கர்மாக்களைப் பண்ணும் விதத்தில் காலம், அதிகாரி, இடம், பொருள், ஏவல் இவைகளை நோக்கி ஸ்வர்க்க ஆசையின்றி மனத் தூய்மையைக் கருதிச் செய்யலாம்; ஆனால், எப்பொழுதும் தபஸ்ஸுகள் எல்லா வைதிகர்களாலும் விடாமல் செய்யப்படவேண்டும் என்றும், யாகாதி அனுதரவு ஒரு வழியிலும் இல்லாது அவைகளிடம் தபஸ்ஸுக்கு முரணான, வீண்பற்றும் இல்லாது ஒருவன் நடந்துகொள்ளவேண்டுமென்றும் நீர் ஒப்புக்கொண்டுவிட்டீர். ஆனால், எனக்கு இந்தக்கர்மாக்களை நடத்துவதனால் ஏற்படக்கூடிய மாறாது வளரும் பலன் இன்னது என்று மாத்திரம் தெரியாது. ஸ்வர்க்கம்போய், புண்ய வேகமிருக்கும்வரையில், மேலான தேவலோக விஷய ஸுகம் அனுபவித்து, பின்னர் இங்கு மறுபிறப்படைந்து யாகாதி புண்ய கர்மாக்களில் முனைவதுதான் பலன் என்பது என் எண்ணம். வேதநுட்பம் வேறு ஏதாவது உண்டானால், எனக்கு எடுத்துக் காட்டவேண்டும். அதை அனுகச்செய்யும் மன அடக்கம் என்பதன் தன்மை என்னவென்றும் விளக்கவேண்டும்.

க:—கர்மாக்களால் ஏற்படும் ஸ்வர்க்க ஸுகானுபவம் ஒருபுறமிருக்க, அவைகளால் மனதுக்கு ஏற்படும் அடக்கமே வேதநோக்கமான மோக்ஷவழிக்கு மிக உபயோகமானது. ஸ்வர்க்க ஸுகானுபமும் நாளடைவில் இந்த அடக்கத்தையே விருத்திபண்ணும்: இந்த அடக்கத்தின் தன்மையை உணர்ந்துவிட்டால் ஸ்வர்க்க ஸுகானுபவமில்லாமலே கர்மானுஷ்டான விதத்தாலேயே இங்கே ஏற்பட்டுவிடும் மன அடக்கம் என்ற பலன். கைகால்கள், வாய், வயிறு, குறி இவைகள் ஜீவனுக்கு ஏற்பட்ட நான்கு வழிகள். இவைகள் வழி சாஸ்திரவரம்பு மீறி, விஷய ஸுகங்களில் ஈடுபடவேண்டுமென்ற எண்ணம் பிறவாதபடி மனம் இயற்கையில் அடங்கி அமைந்திருக்கச் செய்வதே மன அடக்கம் எனப்படும். சூதாடாமை, பிறர் பொருள் கவராமை, பிறரை வருத்தாமை, தாழ்ந்தவருக்கு வைதிககர்மாக்கள் செய்துவைக்காமை ஆகிய இவைகளே கைகால்களுக்கு ஏற்பட்ட தபஸ். குற்றங்கூறாமை, பயனிலாச்சொற் கூறாமை, பழிபொய் முதலிய சொற்கூறாமை, உண்மையையே பொதுவாக ஸுகம், ஆவசியகம், அளவுகளையும் கருதிச் சுருங்கக்கூறுவது ஆகிய இவைகளே வாக்தபஸ். உண்ணமலிராமை, வரம்பு மீறி உண்ணாமை, வீணாசை இல்லாது நல்லோருடன் உண்பது, வேண்டிய அளவு உண்ணுவது, ஆகிய இவைகளே வயிற்றுத் தவம். தன் மனை நீத்துப் பிறன் மனை விரும்பாமை, காலம்மீறி ஸுகியாமை, மனைவியைவிட்டு வெளிப்படாமை, இவைகளே ஸுக விஷய தபஸ். இவைகள் ஸரிவர ஒருவனிடம் அமைவதற்கே வேதம் யாகாதி தவங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்த நுட்பம் உணராது, எவ்வளவு காலம் கர்மாக்களில் முயன்றாலும் பயன்படாது. இது உள்ளவனுக்குக் கர்மாக்களின் பலன்களில் மனம் போகவேண்டியதில்லை.

ஸ்யூ:—ஆனால் இந்த மன அடக்க நிலையிலிருப்பவன் தகுந்த காலங்களில் தகுந்த வைதிககர்மாக்களை விடவும்மாட்டான். அவன் செய்வதெல்லாம் இக்கர்மாக்கள் மாத்திரமாகத்தானிருக்கும். வேறு கலப்பே இராது. செய்யும் மனோ நிலையில் மாத்திரந்தான் வேற்றுமையாயிருக்கும். யாகம் நடத்தக்கூடிய பணம், யோக்யதை ஆகிய இவைகளிருக்குங்கால் அவன் ஒருக்காலும் யாகங்கள் ஹிம்ஸையென்று கருதி அவைகளை வெறுத்துத் தவத்தைக் கைக்கொள்ளமாட்டான். இதில் உமக்கு அபிப்ராய பேதமில்லாவிடில் ஸரிதான். மேலும் மானிடர்களால் ஒருவித கர்மாவும் (மனம், வாக்குக் காயவழியாவது) செய்யாது ஒரு க்ஷணங்கூடப் போக்கமுடியாது. இப்படி கர்மா செய்தே தீரவேண்டிய கட்டுத் தளர்ந்து, நீர் காட்டிய மன அடக்கம் ஏற்படச் செய்யவேண்டிய கர்மாக்களே, பெரியோர்களிடம் இயற்கையாக அமைந்து அவர் மனோ நிலையை ஒரு வழியிலும் தாக்காது நடைபெறும், யாகாதி வைதிக கர்மாக்கள். நீர் கூறியபடி நாளடைவில் மாறிவிடும் கர்ம பலன்களைக் கருதாது கர்மா நடைபெறலாம். வைதிக கர்மாக்களே குற்றமுள்ளவையென் ஒருக்காலும் எவனாலும் விடத்தக்கவைகளல்ல. இவைகளைவிட்டுப் பின்னர் ஏதோ மோக்ஷம் வரப்போகிறதென்பது வீண் மயக்கந்தான்: விட்டால் நரகந்தான் வரும்.

க:—உமது வைதிகர்மப் பிடிப்பு வியக்கத்தக்கதே. கர்மாக்கள் விஷய வைதிக விதிகள் ஒன்றும் பயனற்றவைகளேயல்ல. அவைகளைக்கொண்டு முற்கூறிய மன அடக்க வழியான யோகவழி, கர்மாக்கள் நடத்தினால்தான் மேலுள்ள மோக்ஷமென்னும் எங்கும் கடவுளையே காணும் நிலை ஏற்படும் என்பதே நான் கூறவந்தது. கடவுளைப்பற்றிக் கருதாது உமது கர்மப்பிடிப்பான ஆஸ்திக மாத்திரமாக இருந்தால் வைராக்யம் மாத்திரந்தான் உண்டாகும்; மேலே போகவே முடியாது. கெட்டவைகளையும் அறவேவிட்டு நல்லவைகளால் ஏற்படக்கூடிய ஸுகப்பற்றையும் அறவேவிட்டு நல்ல வழியில் நடந்து இவைகள் கொண்டு சேர்க்கும் பரம்பொருளை யோக வழியாகத்தான் நாடவேண்டும்.

ஸ்யூ:—நீர் கூறுவதுபோல கர்மாக்களை ஒதுக்கித் தன்னால் அணுக்கூட ஹிம்ஸை இல்லாது புண்யபலத்தில் பற்றை முற்றிலும் விட்டு கடவுளை நாடுவது ஸந்யாஸ தர்மம். கிருஹஸ்தன் இப்படிச் செய்யமுடியாது. இவ் விஷயங்களில் வைதிக கர்மாக்களை, அவைகளுடன் பொருத்திக்காட்டப்படும் ஸ்வர்க்காதி ஸுக ஆசைவிட்டு, அனுஷ்டித்து தன் தர்மமாகிய தானம், வேதாத்யயனம், யாகம், கர்ப்பாதானம், கபடமில்லாமை இவைகளைப் பின்பற்றித்தான் தீரவேண்டும். இவைகளால் ஏற்படும் தேவதா ப்ரீதி ஸந்யாஸிக்கு அவன் தர்ம அனுஷ்டானத்தாலேயே ஏற்படுமாயினும், கிருஹஸ்த தர்மத்தில் நற்கதியடைய முடியாதவனு, ஸந்யாஸதர்மத்தை அனுஷ்டித்துக் கடவுளைக் கண்டுவிடமுடியும்? இப்படிக் கர்மாக்களை ஸரிவர அனுஷ்டித்துத் தேறிவரும் ஒருவன் உணரவேண்டியதாக ஞானகாண்டத்தில் வேதங்கூறுவது யாது?



# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### தமயந்தி: (4) காதற்றவம்

மையிட்ட கண்ணருவி வார வலைசோரக்
கையிற் சபோல தலம்வைத்து—மெய்வருந்தித்
தேனிருந்த பூங்கணையே தீயாகத் தேமொழியாள்
தானிருந்து செய்தாள் தவம்.

நளன் மீண்டும் தேவரிடம் போகத் திரும்பியதும், தமயந்தி அவனைப் பின் தொடர்ந்து செல்ல எண்ணினாள். ஆனால் அவளுடைய இயற்கை நாணந்தடுக்கத் தாமரையில் தாமரை மலர்ந்ததென்று சொல்லும்படி, தனது இரண்டு கரங்களுள் தனது முகத்தை வைத்துக்கொண்டு, அவன் போகும் வழியையே நோக்கிக்கொண்டிருந்தாள். நெடுநேரம் அவள் அவ்வாறே பார்த்ததுபார்த்த வண்ணமாகவிருந்தாள். இதுவரை அவள் நளனது அழகின் மிகுதியைக் காதால் மாத்திரங்கேட்டதுண்டு. இப்பொழுதவனை நேரிலேயே கண்டதும், அவள் தன்னையுமறந்தாள்; 'இவ்வபூர்வப் பொருள் நமக்குக் கிடைக்குமோ?' என்று ஸந்தேஹம் குடிகொள்ள எண்ணமிட்டுக்கொண்டிருந்தாள். "என்னிடம் அந்தத் தேவர்களுக்குக் கிருபையிராது போமோ?" என்று சிலவேளையில் சிந்தையில் மனங்குழம்புவள்; அத்துயரமேலீட்டால் அனல் வீச நெட்டுயிர்ப்பு விடுவள். இடையிடையே அந்நளனது திருமேனியின் அமைப்பை நினைத்து ஈடுபட்டு மெய்ம்மயங்கி விளங்குவள்; "தெய்வத்திற்கென்னிடம் அருளில்லாமல் போகாது" என்று தன்னைத்தானே தேற்றிக் கொள்வள்.

சிலவேளைகளில் அவளுக்குத் தனக்குந் தோன்றாமல் வெறுப்புண்டாகும். "மணந்தால் அம்மஹா புருஷனை மணக்கவேண்டும்;

இல்லாவிட்டால், இருப்பதிலும் இறப்பதே நலம்'' என்று தன் கண்களில் தாரைதாரையாக மையிட்ட நீர் தடையற்று ஓட எண்ணமிடுவள்; சில வேளைகளில் அவள் மனத்தடுமாற்றத்தினால் உளம் நடுங்குவள். அப்பொழுது உடல் முழுதும் வியர்த்துச் சோர்வள்; உயிர் விட்டவர்போல மதிமயங்கிக் கீழே விழுவள். பின் தானே எழுவள். நாலாபக்கங்களிலும் பார்த்துத் தனது செயலை யாராவது கவனிக்கிறார்களோ என்று ஸந்தேஹத்துடன் பார்ப்பள். பயப்பட்டவர்க்குப் பழுதையும் பாம்பெனத் தோன்றுமென்று சொல்வார்கள். தமயந்திக்குத் தனது தோட்டத்திருந்த மரமெல்லாம் ஜீவதசையுடன் விளங்குவனபோலவும், அவை தன்னைப் பார்க்கின்றனவென்றும் தோன்ற, அவள் பயந்து வெட்கித் தலை குனிந்து விளங்குவள்.

நிற்க. காவல் நிறைந்து விளங்கிய அவ்வந்தப்புரத்தைவிட்டுத் தேவரிடம் வரப் புறப்பட்ட நளன், தள்ளாடித்தள்ளாடிக் கள்ளுண்டு நடை மெலிந்தாரைப்போல நடந்தான். ஆயினும் தனது கடமை தூண்ட, வேகத்துடன் நடப்பான். இடையே தமயந்தியின் அழகிய உருவம் கண்ணெதிரே தோன்றுவதாக எண்ணியெண்ணி அவன் தயங்கித் தயங்கி மயக்கத்துடன் நடப்பான். ஆயினும், மெல்லமெல்ல நடந்து தேவரை அவன் அடைந்தான். அங்கு அவர் தனது வரவை ஆவலுடன் காத்திருப்பதையும் கண்டான். தலையால் வணங்கி அந்நளன் "பெரியோர்களே! தமது உத்தரவைத் தலைமேற்கொண்டு அப்பெருங் காவலுடன் விளங்கும் தமயந்தியின் மாளிகையுள் சென்றேன்; அவளையும் கண்டேன். உமது மகிமையால் என்னை வேறு யாரும் கவனிக்க முடியவில்லை. அவளிடம் உமது அருமை பெருமை எல்லாவற்றையும் நன்றாக எடுத்துரைத்தேன்; உம்மில் எவரையேனும் ஒருவரை மணக்கும்படி கட்டாயப்படுத்தினேன். அவளுக்கேதோ சித்தஸ்வாதீனம் இல்லைபோலும்! நான் சொல்லுவதை அவள் ஒப்பாது, என்ன புத்திமோசமோ, அவள் என்னையே வரிப்பதாகச் சொன்னாள்; ஸ்வயம்வர மண்டபத்தில் உமது முன்னிலையிலேயே என்னை மாலையிடுவதாகவுஞ் சொன்னாள். நான் என்ன சொல்லியும் அவள் கேட்கவில்லை. செவிடன் காதில் சங்கூதினாற்போலப் பயனற்றுத் திரும்பும்படியான நிலைமை எனக்கு ஏற்பட்டதை நினைத்து நினைத்து வருந்துகிறேன். தேவர்களது விருப்பத்தைப் பூர்த்திசெய்யமுடியாத என் தௌர்பாக்ய நிலையை எண்ணும்போது எனக்கே வெறுப்புண்டாகிறது'' என்று சொன்னான்.

ஆனால் தேவர்கள் நளனது உண்மை நிலையை உணர்ந்தவராதலால் அவனைக் கொண்டாடி வாழ்த்தினர்; அநேக வரங்களையுங் கொடுத்தனர்.

*அங்கி அமுதநீர் அம்பு அணியாடை [யறப்*
*யெங்குநீ வேண்டினைமற் றவ்விடத்தே—சங்கை*
*பெற்று யெனவருண னுகண் டலன்தருமன்*
*மற்றோனு மீந்தார் வரம்.*

வரமெல்லாம் பெற்ற நளன், மெல்ல மெல்லத் தேவருருவம் தன் முன்னின்று விலகக் காணக் காண, அவன் மனத்துள் தமயந்தியின் உருவம் மெல்லமெல்ல எதிர் வரத் தோன்றியது. அவளை மாளிகையில் கண்ட போது, ஸத்குணமென்னும் அங்குசத்தால், அடக்கப்பட்டிருந்த காதல், ஸ்வேச்சையுடன் ஆடங்கமில்லாமல் இரட்டித்த வேகத்துடன் அவனை இப்போது தாக்கியது. புஷ்பபாணனது லேசான கணைகள் அவனது திரண்ட தோளிலும் மார்பிலும் ஊடுருவிப் பாய்ந்து, அவனது புத்தியைக் கவர்ந்து சென்றன. தனது வீரமுஞ் செயலும் அற்று, அவன் பல விதத்திலும் சிந்தைக் காளானான். அவளோடு தான் பேசியதும், அவள் தன்னோடு பேசியதும் ஆகிய செயல்களை மனத்திலிருந்து ஒழிக்க நினைக்கும் நினைப்பே அவற்றை மீண்டும் மீண்டும் அவன் மனத்துள் தோன்றச்செய்யும். அந்தோ பாபம்! அவன் நிலை பரிதாபமானது! அவள் சொல்லிய மொழிகளை மறுத்ததால் ஒரு வேளை தன்னையவள் வெறுத்தாளோ என்று ஏங்குவன்; பின் அவள் சொன்ன நன் மொழிகளை நினைத்துத் தன்னைத் தானே தேற்றிக்கொள்வன்.

"விண்ணோர் விடுதூ துவிளம் புதலால்
பெண்ணா ரமிர்தே பிழைசெய் தனனோ
எண்ணா துறுமிந் திரஜா லமெனக்
கண்ணா டுபுகுந் துகரந் தனையே"

என இம்மாதிரியான பலவித ஆசை மொழிகளில் பாய்ந்து மயங்கிக்கிடப்பன்.

(இதன் தொடர்ச்சி 372-ம் பக்கம்.)



# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS OF THE WORLD

ஐரோப்பிய மஹா யுத்தம்

சென்ற மாதத்தில் இவ்விஷயமாக எழுதிய போது, ஜர்மானியருடைய அதிக்கிரமத்தைச் சகியாத அமெரிக்கர்களும் சண்டையில் கைகலப்பார்கள் என்று சொன்னபடியே நிகழ்ந்துவிட்டது. ஐரோப்பிய யுத்த களத்துக்கு அமெரிக்க சைன்யம் வந்து போர் புரிவதற்குச் சற்றுத் தாமதம் ஆனாலும், அமெரிக்கர்கள், மற்றைய நேசப்பான்மைக் கட்சியாருக்கு ஏராளமான பணம் கடன் கொடுப்பதற்கு முன் வந்திருக்கின்றனர். இதனால் அவர்களுடைய கை வெகுவாக வலுவடையும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அமெரிக்கர்களுடைய உதவி கிடைத்ததற்கு, ஆங்கிலேயர்களும், பிரஞ்சுக்காரரும் அடையும் சந்தோஷத்துக்கு அளவில்லை.

ஐரோப்பிய ரணகளத்தில், ஜெர்மானியருக்குத் தோல்விமேல் தோல்வியாகவே வந்துகொண்டிருக்கின்றது. அவர்களுடைய சைன்யங்கள் பலவிடங்களில் முறியடிக்கப்பட்டன. இதன்காரணமாக, அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் பின்னடைகின்றனர். சென்ற சிலநாளாக வரும் தந்திச் சமாசாரங்கள் நமக்குக் கலப்பில்லாத உவகையைத் தருகின்றன. கீழரங்கத்தில் துருக்கர் சைன்யம் சின்னா பின்னமாகின்றது. அவர்களுடைய அரண்கள் ஒவ்வொன்றாய் ஆங்கிலேயப் படைகள் கைவசமாகின்றன.

* * *

யுத்தக் கடன்

ஐரோப்பிய மஹா யுத்தச் செலவுக்கு வேண்டிய பணம் பெரும்பொருட்டுக் கவர்ன்மெண்டார் ஜனங்களிடமிருந்து ஏராளமான தொகை கடன் வாங்குகிறார்கள் என்று முன் சொன்னோம். கடன் தொகைக்கு நூற்றுக்கு 5½ வீதம் வட்டி கொடுப்பது, கடன் கொடுப்போருக்கு நல்ல லாபமென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. பாங்கிகளிலோ, பூஸ்திதியிலோ பணத்தைப் போடுவதினால் இதற்கு மேலான வட்டி கிடைப்பது துர்லபம். ஆதலால் ஜனங்கள் விசேஷமாகக் கவர்ன்மெண்டாருக்குக் கடன் கொடுத்துதவுவார்கள் என்றே நாம் எதிர்பார்க்கிறோம். இது வரையில், இந்தியா முழுவதிலுமிருந்து கையொப்பமான கடன் தொகை, பதினைந்து கோடி ரூபாவுக்கு மேலாகியிருக்கிறது. செல்வவான்கள் மலிந்த பம்பாய் ராஜதானியிலிருந்து, ஆறு கோடிக்கு மேலும், வங்காளத்திலிருந்து கிட்டத்தட்ட ஐந்து கோடியும் கிடைத்திருக்கிறது. நமது சென்னையிலிருந்து எழுபத்தைந்து லக்ஷம் தான் கையொப்பமாயிருக்கிறது. இப்படி நமது ராஜதானி, கையொப்ப விஷயத்தில் மூன்றாவது ஸ்தானத்தை யடைந்திருப்பதைக் கண்டு நாம் துக்கிக்கிறோம். வங்காளத்துக்குச் சமானமாகவோ, அதை அடுத்தோ அது கூடிய சீக்கிரத்தில் வந்துவிடுமென எதிர்பார்க்கிறோம். நகரத்தார்களும், மற்றைய வியாபாரிகளும், மூலதனம் படைத்தவர்களும் இந்தச் சந்தர்ப்பத்தைக் கைவிடக்கூடாது என்று நாம் பன்முறையும் வற்புறுத்துவோம்.

* * *

பருத்திவரி வாக்குவாதம்

இங்கிலாந்திலிருந்து நம் நாட்டுக்கு வரும் பருத்தி சரக்குகளின்மீது விதிக்கப்பட்ட வரி, இருமடங்காக்கப்பட்டதை முன்னமேயே குறிப்பிட்டிருக்கிறோம். இதனால் கொஞ்சம் நஷ்டமடையக்கூடிய ஆங்கிலேய வியாபாரிகளுடைய தூண்டுதலின்பேரில் கிளம்பிய வாக்குவாதம் வெகு பலமாகக் கேட்கிறது. இந்தியா காரியதர்சியவர்களைச் சில வியாபாரிகள் நேரில் கண்டு பேசினர். பார்லிமெண்டு ஸபைகளிலும் இவ்விஷயமாக ஆலோசனை நடந்தது. 'இதுவரையில் இந்தியாவுக்குப் பிரதிகூலமாயும், இங்கிலாந்துக்கு அனுகூலமாயும் இருந்த இவ்விஷயத்தை நாம் ரத்துசெய்தது நம்மால் இந்தியாவுக்குக் கிடைக்கவேண்டிய நியாயங்களில் ஒன்று' என்று இந்தியா காரியதர்சியவர்கள் பேசியது நமக்கு அத்தியந்த திருப்தியையும் சந்தோஷத்தையும் கொடுக்கின்றது. பார்லிமெண்டில் நடந்த வாக்குவாதத்தில், மாஜிமந்திரியான ஸ்ரீமான் ஆஸ்குவித், 'யுத்தம் நின்ற பிறகு, ஆங்கிலேய ஸார்வபௌம வியாபார விஷயமாக நடக்கப்போகும் ஆலோசனையின்போது, இவ்விஷயத்தைப்பற்றிப் புனராலோசனை செய்யலாம்' என்ற அபிப்பிராயத்தை வெளியிட்டனர். இதை மற்ற

வர்களும் ஒப்பியபடியால், ஒருவாறு வாக்கு வாதம் நின்றொழிந்தது. அக்காலத்தில், நமது இந்திய பிரதிநிதிகள் தேச க்ஷேமத்தைக் கவனித்துக் காரியங்களை நடத்துவார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

* * *

ஒப்பந்தக் கூலி முறையும் இந்திய ஸ்ரீமதிகளும்

ஒப்பந்தக்கூலி முறைக்குக் கட்டுப்பட்டு அந்நிய நாடுகளில் போய் உழைக்கும் இந்தியர்களுடைய துர்த்தசையை ஒழித்துவிடுவதாகக் கவர்ன்மெண்டார் வாக்களித்ததையொட்டி, நமது நாட்டில் முதன்மையான ஸ்ரீமதிகளில் சிலர், கனம் ராஜப்பிரதிநிதியவர்களை நேரில் கண்டு பேசி வந்தனர். நமது ஸ்ரீமதிகள், ராஜ காரியத்திலும் மற்றைய விஷயத்திலும் ஏனோ தானோ என்றிருப்பதைவிட்டு, தங்களுடைய ஸஹோதரிகளுடைய துக்கத்திலீடுபட்டு, இவ்வாறு பகிரங்கமாய் முன்வந்தது இதுதான் முதல் தடவையாகும். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலெல்லாம் ஸ்ரீமதிகளுடைய அபிப்பிராயமும் அவர்களுடைய உதவியும்இருக்குமானால் எடுத்த காரியங்கள் இனிதாய் முடியுமென்பதைச் சொல்லவேண்டுமோ? ப்ரஸ்தாப விஷயத்தில் ராஜப்பிரதிநிதியவர்கள், இவர்களை வெகுவாக அன்புடன் வரவேற்று, அனுதாபமான பதில்கூறி விடை கொடுத்தனுப்பினர். இப்படிப்பட்ட காரியத்துக்கு நாமெல்லோரும் பேருவகை கொள்ளவேண்டியவராக விருக்கிறோம். நமது சென்னை ராஜதானியிலிருந்து சென்ற ஸ்ரீமதிகள், கனம். வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரிகளுடைய பார்யையும், கனம். கே. வி. ரங்கஸாமி ஐயங்காரவர்களுடைய பார்யையுமாவர்.

* * *

பஞ்சாப் மாகாணத்தில் கட்டாயப் படிப்பு

பிரதமக் கல்வியை இலவசமாகவும் கட்டாயமாகவும் செய்ய வேண்டுமென்று நமது ஜன ஸமூகத்தலைவர்கள் மன்றாடிக் கேட்டுக்கொண்டிருப்பது அபிமானிகள் அறிந்திருக்கக்கூடிய விஷயம். சம்பளம் குறைவாக ஏற்பட்டிருப்பதைக் கொண்டு இலவசக்கல்விக்கு ஒருவாறு சௌகரியம் ஏற்பட்டதெனக் கருதலாம். ஆனால் கட்டாயப்படிப்புக்கு இன்னும் சௌகரியங்கள் ஏற்படவில்லை. இந்தச்சமயத்தில், பஞ்சாப் மாகாணத்திய லெப்டினண்ட் கவர்னர் அவர்கள் அந்த மாகாணத்தில் சிற்சில விடங்களில் கட்டாயப்படிப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்போவதாகத் தெரிவித்திருக்கின்றனரென்பதைக் கேட்க நமக்குச் சந்தோஷமுண்டாகிறது. இந்தப் புண்யத்தைக் கட்டிக்கொண்ட உத்தமர்களில் பஞ்சாப் லெப்டினண்ட் கவர்னர் ஒருவராவர். மற்றைய மாகாணங்களிலும் இவ்விஷயம் பின் பற்றப்படுமென எதிர்பார்க்கிறோம்.

* * *

கல்கத்தா ஸர்வகலாசாலைப்பரீக்ஷை

சென்ற மார்ச்சுமாதத்தில் கல்கத்தா ஸர்வகலாசாலையார் நடத்திய 'மெட்ரிகுலேஷன்' பரீக்ஷைக் கேள்விகள், பரீக்ஷா காலத்துக்கு முன்னால் எப்படியோ வெளியான காரணத்தைக்கொண்டு, அவர்கள் மறுபடியும் ஒரு பரீக்ஷை நடத்தத் தீர்மானித்திருக்கின்றனர். இந்தத் துர்த்தசை, சுமார் 18-19 வருஷங்களுக்கு முன்னால், இச்சென்னையிலும் நிகழ்ந்தது. பரீக்ஷைக்குப் படிக்கும் மாணாக்கர்களுடைய தேக மனோ சிரமங்களுக்கு நாம் பெரிதும் வருந்துகிறோம். கேவலம் பரீக்ஷையையே பிரதானமாகக் கருதும் வரையில், இந்தச் சீர்கேடு இருந்துதான் தீரும். ஞானபிவிருத்தியை மட்டும் பிரதானமாகக் கருதும் சந்தர்ப்பங்களில் மாணாக்கர்களுக்கு இப்படிப்பட்ட அநீதபுத்தி போகக் காரணமிராது. என்றாலும் அந்த நன்னாள் நமது நாட்டுக்கு எப்போது வரப்போகிறதோ அறியோம்.

* * *

(370-ம் பக்கத்தொடர்ச்சி.)

மற்றந்தத் தமயந்தியும் காதல் நோய் கவிந்து விளங்க, மனந்தளர்ந்து, ஸ்வயம்வரம் என்று வருமோ என நாட்களை எண்ணி எண்ணிக் கழித்துவந்தாள். ஆகக் காதலரிருவரும், தமது சேர்க்கை நாளை நினைந்து நினைந்து, உள்ளமழிந்து, சந்திரனது அமிர்த கிரண அனலிற் குளித்து, பேசமுடியாது தயங்கி மயங்கி, ஊண் உறக்கமில்லாமல், ஒரே மனத்தராகி, வரும் காட்சியை உத்தேசித்து; கனவிற் பாய்ந்து, காதற்றவத்தில் கருத்தூன்றி விளங்கினார்கள்.

"வேனில்வேள் பகழியார் மயக்க வல்லரே?"



மதுரை தமிழ்ச்சங்க உப அக்கிராசனாதிபதியும்
தமிழ் அபிவிருத்தியில் சிரத்தை எடுத்து வருபவருமான
ஸ்ரீமான் சா. ரும. மு. சித. பெத்தாச்சி செட்டியார்


# விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி IX } பிங்களஸு. சித்திரைமீ :: 1917-ஸு மேமீ { பகுதி 11


## பகலெழும் பெருமை

## THE SUNRISE

[ஸ்ரீமான் வீ. சேஷகிரி சாஸ்திரி, பீ. ஏ.]

மங்கின தாரகை; வெங்குளிர் இரிய
எழுந்தது கீழ்த்திசை செழுங்கதிர்ச் செவ்வான்,
மைக்குலக் காட்டின்றீ புக்கதென் றொளிர;
இரவடர் மையிருள் வெருவி வெங்கிட்டு.
வரைக்குகை யொளிக்க விரைந்தொழிந்தது; வெம்
பனிப்படா முடுத்தயார் கணவன் புருக்கப்
பொற்கோலன் களத்திட்ட பொன்னெனச்சிவனும்;
பச்சை போர்த்துப் படர்மர வினஞ்செறீஇ
நச்சும்பூங் கொத்துடன் நறவங் கான்றன;
இளங்காற் றெழும்பி இன்மணங் கமழ்ந்தது;
பனிநீர் குளித்த பாவன தருக்கள்
இனன்தன் வரவை யெதிர்பார்த் திருந்த;
கோழியுங் குயிலும் ஆழிச் சங்கமும்
கட்டிய முரைத்துக் கவினிசை பாடின;
'வாழி நாள் வருக!'வென் றுடிய மயிற்குழாமும்.
பன்வணம் பதிந்த படர்வான் இளக்கப்
புன்னிருட் குலங்கிழித்து முன்னீ ருண்டு
பாற்கடல் வந்த பருமணி யென்ன,
கீர்த்தியின் குணபாற் கிளம்பி,
வானமும் உலகுந்தன் மேனியின் மயங்கப்
பொற்கதிர் வீசிப் பொலிந்தனன் பொழுதோன்.
சாலவுங் களித்துச் சாற்றரு மோகைவாய்ந்து,
ஞாலங் குளித்து நகைத்ததவ் வொளியின்.
குவளைக் கரத்தாற் கூப்பிப் பதுமவாய்ப்
பவள மலரப் படர்பனி யீரடிப்
பூமழை பொழிந்து புத்தேள் பிலிற்றிப்
பூமி அங்கம் புளக முற்றது,
தும்பிக ளாடின; சுரும்பர் பாடின;—அக்கால்,
அம்பர மெங்கும் அளாஅய்க்
குங்கும மேனியன் கொக்கரித் தனன், தன்
தண்ணளி கறந்து தனியுயிர்க் கெல்லாம்.
பனியிட ருற்ற பாழ்ங்கடுங் காற்றூஉம்
தனிமையுஞ் சாந்தமுந் தான் பெற்றது. அதாஅன்றி
மயக்கமும் கீழ்மையு மாய்ந்தன; உலகின்
கொடிய விலங்குருங் கொலைத் தொழி லொழிந்து
இடந்தெரி யாஅ தடர்ப் பொந் தொளிந்தன;
தடநீர்த் திவலையின் தண்கதி ரெரித்துத்
தடதட ஓடித் துடித்தன அருவிதாம்
ஒளிகடற் குளித்தெழீஇ ஓகை பாடின.
இளமையுஞ் சாந்தமும் இன்பமும் உவகையுங்
கிளைத்துல காளக் கேண்மை கொண்டன.
கண்டன கண்கள்; விண்டன!—கதிரோன்
சுடரான் காந்தம் படரத் தம்பித்
துடர்பர வசமா யுணர்ச்சியின் பாய்ந்து
"கால மளக்குங் கதிரோன் வரவீது!
மூல முதற்பொருள் வரவின் பெருக்கைக்
காண்பதூஉம்!—
ஆமோ?—மனமதற் காமோ?
ஏமாஅந் திருக்கும் இதயந் திரண்டக்
கோமான் வரவைக் கொளும்பே றுறுமோ!"
எனவாங்கு
கனவி னெழீஇக் கலங்குறீஇ
மனம தொடுங்கி மயங்கின வுயிரே!

# விவேக போதினி

தொ. 9] பிங்களஹு சித்திரைமீ [ப. 11


## மனச்செம்மை

## EQUANIMITY OF MIND

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந் தொ[ருபாற்]
கோடாமை சான்றோர்க் கணி"—திருக்குறள்.

உலகில் ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு ஆவலுண்டு. அதைப் பெற, ஊக்கமும் முயற்சியும் அத்யாவசியகம். அவற்றையாளும்போது மனத்தை நல் வழியில் செலுத்தவேண்டியது இன்றியமையாததாகும். அப்பொழுது அதைப்படுகுழிகளில் வீழ்ந்து மயக்கமடையாதிருக்கச் செய்யவேண்டியது சிறந்த கடமை. இதற்கு நன்மை தீமை, இன்பதுன்பம் இவற்றை நன்குணர்ந்து நடக்கக்கூடிய ஞானமும், கஷ்ட நிலைகளிலும் தாழ்ந்த வழிகளிற் செல்லாத மனவன்மையும், எவற்றையும் ஒரேவிதமாகப் பேதமில்லாது கவனிக்கும் நடு நிலையும் இன்றியமையா. துலவின் கோல் போலத் தனது நிலையைச் சமமாக்கிக்கொண்ட பின்னரே, பிறரை, அவரது ஏற்றத் தாழ்வைச் சற்றுங் கவனியாது, சமமாக்கும் பெருமை அப்போதுதான் வரும். தன் நிலையைச் சமமாக்க முயலும்போதுதான் பெருந் தொந்தரைகள் உண்டாகும்; அநேக தர்ம ஸங்கடங்கள் இடையூருக இடையே வரும். அவ்வக்காலங்களில் மனதைச் சிறிதும் அசையவிடாது, தனது தர்மத்தை, ஆசார வழிகளை விடாது, கோட்பாடுகளின் நிலையைத் தவிர்க்காது. தனக்கும், தனது நாட்டிற்கும், பொது உலகிற்கும், ஒரேவிதமாகத் தோன்றும்படி, குன்றின் மேலிட்ட விளக்கைப்போல, பேதாபேதமில்லாமல், எல்லார்க்கும் உபயோகமாக ஒழுகுவதே மனச்செம்மை யென்பதாகும். இதைக் கைப்பிடித்து ஒழுகும் காலங்களில், பெற்ருேர், உற்ருேர், கற்ருேர், மற்ருேர் அனைவரும், ஒழுக்கம் இழக்க வழியியற்ற வழியாவர். ஆயினும், அவரிடம் கடமை முரணுது, ஒழுக்கமும் விடாது நடப்பதே மனத்தின் வழி. இதனையே தர்ம கர்மமென்று சொல்லலாம். இவ்வாறு ஒழுகிய பெரியோர் அநேகர்: அவர் இராமர், பீஷ்மர், விகர்ணர், விதுரர் முதலானவர். இராமசரிதம் உலகப்பிரசித்தம். பீஷ்மர் வைபவம் இங்கு எடுத்துக் காட்டப்படும்.

பீஷ்மர் என்ற பெயர் நடத்தையால் வந்த சிறப்புப் பெயரே ஆகும். அவரது உண்மைப் பெயர் காங்கேயன். சந்தனுவரசனுக்குக் கங்கையிடம் தோன்றியதால் இவர்க்கு இப்பெயர் வந்தது. பூர்வஜன்மத்தில் இவர் அஷ்டவஸுக்களில் ஒருவர். காமதேனுவைத் திருடியதற்காக அவர்க்கு மனிதனுகப் பிறக்க நேர்ந்தது. கங்கை வேருெரு சாப காரணமாகப் பூமியில் பிறக்க நேர்ந்தது. கங்காதேவி, ஒரு மங்கையுருவாக வந்துகொண்டிருக்கும்போது, சந்தனு அவளைக்கண்டு காதல் கொண்டான்; அவளைத் தன்னை மணக்கும்படி வேண்டினுன். ஆனுல் அவள் சில கட்டுப்பாடுகளின் மேல் அவனை மணக்க ஒப்பினுள். அவ்வாறு செய்துகொண்ட ஏற்பாட்டின்படி காங்கேயன் பிறந்ததும், அக்குழந்தையை, முன் தான் பெற்ற பிள்ளைகளைப்போல, கங்கையில் எறிய முயற்சித்தாள்; பொறுமையைத் துறந்த சந்தனு, அக்குழந்தையைக் கொல்லாது காக்க வேண்டி மன்ருடினுன். உடனே முன் ஏற்பாட்டின்படி கங்கை தனது குழந்தையுடன் கங்காநதியிற் கலந்துமறைந்தாள். அப்போது அவள் சாபமொழிந்துவிட்டது.

பிள்ளையையும் மனைவியையும் துறந்த அரசன், கண்ணும் கண்ணீருமாகக் கிடந்தான். பன்னிரண்டு வருஷங்கள் கடந்தன. ஒரு நாள் கங்காநதியோரமாக வேட்டையாட அவன் வந்தான். அங்கு நதியின் ஜலம், அளவும் வேகமும் குறைந்திருந்தது. இதைக் கண்ட அரசன் சுற்றிப்பார்க்கையில், பன்னிராண்டு பாலகன், பாண அணையிட்டு, அக்கங்கையின் பெருக்கைச் சுருக்கிக் குறுக்கி விளையாடுவதைக் கண்டு, புத்திரசோக மீதூற மயங்கி நின்ருன். "அரசே! உன் கவலை



யொழி. இச்சிறுவன், உனக்கென்னிடம் தோன்றிய எட்டாவது குமரன். தனுர்வேத முழுதும் அவனுக்குப் பயில்வித்துள்ளேன். இந்நேரோட்டம்போல் அடங்கா ஒழுக்கம் கைக்கொண்டு, அவன் விளங்குவன். இவனே உன் குலதனம். இவனைப் பெறுதி!" என்று சொல்லிக் கங்காதேவி அவன் முன் தோன்றி, மைந்தனைத் தந்து மறைந்தனள். 'பழந்தன மிழந்தன படைத்ததென' அரசன் போன உயிர் மீண்டும் பெற்றவன்போலச் சிறுவனைத் தழுவி அணைந்து தன்னிடம் எடுத்துச் சென்ருன்.

அஸ்தினுபுரத்து இளவரசாகக் காங்கேயன் முடிசூட்டப் பெற்றதும், அரசன் தனது இயற்கைவழிகளிற் காலத்தைப்போக்க ஆரம்பித்தான். மனத்துயரங்களெல்லாம் ஒன்ருென்ருக மாற, அவன் மனம் அமைதியுற்றது. ஒரு நாள் வேட்டையாடிக் கொண்டே யமுநாநதிக்கரை யோரம் வந்தான். அப்போது ஘மகமெகென மலர்வாஸனை காற்றை முழுதும் கவிந்து விளங்கியது. பூச்செடிகளாவது, கொடிகளாவது அவன் கண்ணெதிரில் ஒன்றுமிருக்கவில்லை; ஒரு சிறு படகில் ஒரு பெண் துடுப்புகளை வீசிக்கொண்டு, அதை நடத்திக்கொண்டிருந்ததை அவன் கண்டான்; அவள்தான் அந்த வாஸனைக்குக் காரணமா யிருக்கவேண்டுமென்றும் அவன் மனத்திற் கொண்டான். அப்பெண்ணைக் கண்ணுற்றதும், அவனுக்குத் தனக்குந் தெரியாமல் காதல் ஓங்கியது. மண்ணிற் கிடந்த மாணிக்கம்போல, அவளது மெல்லிய உடலும், அழகு திரண்ட வடிவமும், காமதேவனது சேமநிதியிற் கிடந்த உத்தம சாயலும் அவன் மனதை முற்றுங்கவர்ந்தன. மானமும் வீரமும் காமம் கவர, கூச்சங் கடந்து அவன் வாய்விட்டு அவளைத் தனது மனைவியாக விரும்பினுன்.

இலஜ்ஜையுடன் அவள் "எனக்கொன்றும் தெரியாது. என் தந்தை தாஸராஜர் இங்குதான் இருக்கிருர். அவரை நீங்கள் கேட்டுக்கொள்ளும்" என்று கூறினுள். அரசன் அவ்வோடத்திலேயே ஏறி, அவளுடன் அவள் தந்தையை அடைந்து, தனது விருப்பத்தை வெளியிட்டான்.

"மஹாப்ரபோ! உங்கள் வார்த்தைக்கு அந்யதா கிடையாது. ஆனுல் ஒரு விஷயம் சொல்லத் தயங்குகிறேன்; சொல்லாமலிருக்கவுமுடியாது. ஏற்கெனவே உமக்குப் பட்டத்திற்கொரு பிள்ளை உண்டு. என் பெண் வயிற்றுப் பிள்ளைக்கென்ன உண்டென்ற ஸந்தேஹந்தான் என்னைக் கொஞ்சம் மயக்குகிறது. அதற்கொரு வழிசெய்தால், வேறு ஆக்ஷேபணை எனக்குக் கிடையாது. தாங்கள் சொல்வதற்கு இரண்டிருக்க முடியாது. ஆனுல் பெண் விஷயம். ஒரு நாளில் போவதல்ல..பல நாள் ஸமாசாரம். நான் இவ்வாறு கூறியது வளர்த்தவன் கடமையேயாகும். என்னை மன்னிக்க வேண்டும்" என்று அந்தத் தாஸராஜன் சொல்லக்கேட்டு, அரசன் படகிற் கண்ட ஸத்யவதியிடத்துக் கொண்ட காதல், தன் மகனிடங் கொண்ட வாத்ஸல்யம் என்னும் இரண்டு சுழல்களால் அசைக்கப்பட்டுத் திகைத்துத் தன்னூர் மீண்டடைந்து சிந்தை நொந்து நைந்து கிடந்தான்.

காமமும் பிள்ளைமேல் கருத்தும் போராடப் பொறுக்காத மன்னன், ஏக்கங்கொண்டான்; செய்வதின்னவென்று அறியாது மயங்கினுன்; கவலை மேலுற்றுச் சொல்லமுடியாத் துயருக்காளாகித் தன் பள்ளியறையை அடைந்து படுக்கையிற் கிடந்து நெஞ்சம் அழியலானுன்.

தர்மகர்ம நிலையின் வைபவத்தை முற்றுங் கற்ற பீஷ்மர், தந்தையின் துயரத்தை ஒருவாறு உணர்ந்தார். ஆனுல் அதன் காரணமின்னதென அவரால் அறியமுடியவில்லை. தந்தையிடமிருந்து உணரமுடியாத விஷயத்தை அவனது தேர்ப்பாகன் மூலமாகக் கண்டுகொண்டார். தந்தையின் தர்ம ஸங்கடத்தையும் அவர் படும் துயரத்தையும் முற்று மறிந்து, உடனே தாஸராஜன் இருக்குமிடத்தை அடைந்து, தமது தந்தையின் விருப்பத்தைப் பூர்த்திசெய்ய எண்ணங்கொண்டு அவனிடஞ் சென்ருர். தாஸராஜன் அவரை வரவேற்றுபசரித்தான்.

பீஷ்மரும் பரபரப்புடன் "அரசே! உன் பெண்ணை என் தகப்பனுருக்குக் கொடுப்பதில் தயங்காதே. எனக்கு இவ்வரசு வேண்டாம். என் சிற்ருய் பெற்றமக்கள் ஆள்வதே, யான் ஆள்வதாகும். இது ஸத்யம். இனித தாமதியாது, உடனே என் தந்தையின் விருப்பத்

தைப் பூர்த்திசெய்யப் பிரார்த்திக்கிறேன்" என்று தமது மெய்ம்மொழி மனத்தால் ஒப்பித் தாஸராஜனிடம் சொன்னார்.

"ஆம்! அது நிஜமே! உமது அகத்தை முகமே கண்ணாடிபோற் காட்டுகிறது. ஆனால் உமக்குப் பிறக்கும் பிள்ளைகளும் அவ்வாறே நடப்பதற்கு ஒப்புவரென்பது எப்படி முடியும்?—" என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே பீஷ்மர்:

"விரத முற்றிய ஆறு அனைவருங் கேண்மின்!
மெய் உயிர் வீடும் அன்றளவும்
சரத முற்றிய மெய்த்தாதுவும் மூதைத்
தழலுடன் மீதெழுந் தகைத்தே
இரதமுற்றிய சொன் 'மகப்பெறு தவருக்கு
இல்லை' என்று இயம்பும் நன்கதியும்
சுரத முற்றிய என் தந்தைதன் பொருட்டால்
பெறுவல் என்றின்னதுஞ் சொன்னான்.

'என் தந்தையின் துயரத்தை யொழிப்பதே எனது தருமம்; எவ்வித கஷ்டங்கள் வரினும் கணிசியாது செய்வதே அதன் பெருமை. இன்றுமுதல், யான் ஊர்த்வரேதஸ்ஸுடன் விளங்குவேனாக! என் உயிருள்ளளவும், இந்த ஆசந்திர சூரிய ஸாக்ஷியாக நான் நித்தியபிரஹ்மசாரி விரதம் பூண்டேன். யான் விவாஹஞ் செய்துகொள்ளேன். தாஸராஜ! உமக்கு யான் தாஸன். கங்கையல்ல என்னை ஈன்றவள். உனது மகளே என்னைப் பெற்ற தாய். நீ என் பாட்டன். இனி வாட்டமில்லாமல், என தகப்பனாருக்கு உன் பெண்ணைக் கொடுத்துக் கலியாணஞ் செய்விப்பாயாக! க்ஷணமும் தாமதியாதே! சீக்ரம்! சீக்ரம்!" என்று மார்பைத் தட்டிக்கொண்டு ஒழுக்க விழுப்பத்துடன், முந்திவந்து அண்டம் பிளக்க அடங்கா ஆவலுடன் கூறிய பீஷ்மரது வீரசபதத்தையும் வாக்கையுங் கேட்டு, அடங்காக் காற்றும் அடங்கிநின்றது. "ஹா! ஹா!" என்று தேவரும் வியந்தனர்; "இவனே பீஷ்மன்; இவனே தேவவ்ரதன்" என மும்முறையுங்கூறிக் களித்து நடித்துப் பூமாரி பெய்தனர்.

தனது தாழ்மையையும், அரசன் மகனது மேன்மையையுங் கண்டு நடுங்கிய தாஸராஜன், 'உன்னைப் பெற்றவன்தான் மகனைப்பெற்றவன்.

"மகன் தந்தைக் காற்று முதவி, 'இவன் தந்தை என்னோற்றான் கொல்?' என்னுஞ் சொல்."

அல்லவா?' என நாக்குழறச் சொல்லி, தான் வளர்த்த பெண்ணைச் சந்தனுவுக்குக் கையில் கையைவைத்தளித்தான். அரசனும் காதலனையும் காதலியையும் இறுகத் தழுவி, இணையற்ற இன்பமடைந்தான். தனக்கென்று அவனது வாழ்க்கையின் ஸுகத்தை முற்று வெறுத்து, நைஷ்டிகப் பிரஹ்மசாரி விரதம் பூண்ட தீரகுமாரனை ஏறயிறங்கப்பார்த்துக் "கங்கைநீர் பயந்த களங்கமற்ற மணியே! என்ன பிரமாதம் எனக்குத் தெரியாமல் விளைத்துவிட்டாய்! போனது போனதே! பேசுவதில் என்ன பயன்? நீ பூண்ட விரதத்தைக் காப்பாற்றும் ஆற்றல் உனக்கு உண்டென்பது திண்ணம். தந்தையின் அந்தரங்க எண்ணத்தையும் கஷ்டத்தையும் ஆராய்ந்து செய்த உனது பிதிர் கைங்கரியம் ஒரு நாளும் வீண்போகாது. உனது அன்பை மெச்சினேன். தந்தையை வயோதிகத்தில் மைந்தர் காப்பது உலக வழக்கு. வயதில் மக்களைக் காப்பது தந்தையின் தருமம். இளமையினும் என்னைக் காக்கும்படியான பெருமை உனதாயிற்று. உனக்கோர் வரந்தருவேன். அது உனக்குப் பின்காலத்தில் உதவும்; நன்னிலையையும் தரும். ஸ்வச்சந்த மரண சக்தி உனக்கு வரும்படியாக நான் அளிக்கிறேன். அதனால் நீ இஷ்டப்படும்போது உனக்கு மரணம் ஏற்படும். மற்று, யமனது படர்களால் உன்னைத் தொந்தரை செய்யமுடியாது. இது உனது சபதத்திற்கும் உதவியாகவும் இருக்கலாம்" என்று கொண்டாடி அவனைப் பன்முறையுந் தழுவித் தழுவி இன்பமடைந்தான். மக்கண் மெய்தீண்டல் உடற்கு இன்பமன்றோ?

* * *

பீஷ்மர் தமது தந்தையுடன் இராஜ்யபார விஷயத்திலீடுபட்டுத் தனது விரதத்தையும் தழுவி வந்தனர். ஸத்யவதி சந்தனுவுடன் ராஜபோக முழுதும் துய்த்து வந்தாள். இவளுக்கு இரண்டு புத்திரர்கள் உண்டாயினர். அவர் சித்திராங்கதன், விசித்திரவீரியன் என்பவர். சிலநாளானதும், சந்தனு காலமானான். சித்திராங்கதன் இளம்வயதிலேயே ஒரு கந்தர்வனால் கொலையுண்டான். மற்றிருந்த விசித்திரவீரியனுக்கு ராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்வித்துப் பீஷ்மர் மந்திரிபோல் உதவிசெய்து வந்தார்.



இதற்குள் காசிராஜன் தனது மூன்று பெண்களுக்கும் ஸ்வயம்வரம் ஏற்படுத்தினான். அதற்குப் பீஷ்மரும் சென்று அவ்வரசனது மூன்று பெண்களாகிய அம்பை, அம்பிகை, அம்பாலிகை என்னும் மூவரையும் க்ஷத்திரியத் தருமவழிக் கவர்ந்துவந்தனர். இம்மூவரையும் விசித்திரவீரியனுக்குக் கல்யாணஞ் செய்விக்கவே அவர் அவ்வாறு செய்தனர். ஆனால் அவருள் அம்பை என்பவள், சால்வனென்னும் அரசனை முன்னதாகவே மனத்தால் கணவனாக வரித்திருந்ததால், அவளை அவனிடம் போகவிடுவது தருமமென்றும் போக விடைதரவேண்டுமென்றும் பீஷ்மரை வேண்டிக் கொண்டாள். அவரும் அதற்கொப்பினார். ஆனால் சால்வன் அவளைக் கண்டதும் 'உனக்கென்னிடம் மனக்காதல் இருப்பது மெய்யே. ஆயினும் க்ஷத்ரிய தருமப்படி ஸ்வயம்வரத்தில் பீஷ்மரால் அபகரிக்கப்பட்டதால், அவரையே சேரத்தக்கவள். அவரே உனது பர்த்தா. கன்யைகளுக்கு யாவரும் கணவராக வரலாம்; மனத்திலும் வரிக்கலாம். உனக்கு ஸ்வயம்வரம் ஏற்பட்டு, அக்கலம் நீங்கிவிட்டபடியால், உன்னை யான் அடைவது அதர்மம்; அசாஸ்திரீயம். அது என்னால் முடியாது. நீ பீஷ்மரை அடைவதே உனக்குக் கடமை; அதுவே உனது தருமம்" என்று கூறி அவளைப் பீஷ்மரிடம் திரும்பிப் போகும்படி சொன்னான்.

"சிறுவயதில் பெண்கள் தந்தை மொழியையும், மணமானதும் மணவாளன் மொழியையுந் தவறாது நடப்பது தருமமாகும். தந்தை வைத்த ஸ்வயம்வரத்திலிருந்து தனது வீரச் செயலால் கவர்ந்ததால் நாம் பீஷ்மரது உடைமை யானோம்" என்று எண்ணிக்கொண்டே பீஷ்மரை அடைந்து, தன்னை மணக்கும்படி கேட்டாள். வலியவந்து தன்னை மணக்கும்படி அவள் விரும்பினும், பீஷ்மர் அதற்குச் சிறிதும் ஒப்பவில்லை.

விரதானுஷ்டானத்திற்கு இயற்கையிலேற்படும் இடையூறுகள் அனந்தம். ஆயினுமவற்றைப் பரீக்ஷார்த்தம் ஏற்படும் ஸம்பவங்களெனக்கொண்டு, மனமயங்காது, அனுஷ்டான விரதத்தைக் கைவிடாது காத்தலே, கீழ்மையை விட்டு மேன்மையிலேற்றும் ஏணியெனச் சொல்லலாம். மனோரம்யமாகவும், கேவலம் விருப்பத்தின் பெருக்கை விருத்தி செய்பனவாகவும், ஏற்படும் விஷய ஸுகங்களை, நிலையென நாடாது, மனதை வெருட்டி மயக்கவந்த சூழ்ச்சிகளாக அவற்றைப்பாவித்துணர்ந்து, மனதை அடக்கியாள்வதே ஆண்மையாகும். அவ்வாறிழைக்கும்போதுதான் ஸ்வதர்ம ஸித்தி ஏற்படும். நித்ய பிரஹ்மசாரி விரதத்தைப்பூண்ட பீஷ்மருக்கு அம்பையின் நிலை, பெரிய தர்ம ஸங்கடமாயிற்று. ஒருபால் மனத்தால் வரித்த கணவன் கை சோரவிட்டான்; ஒருபால் தருமப்படி பெற்றவனும் கைசோரவிட்டான்; அவள்என் செய்வள்? பரிதாபம்! ஆயினும் மனிதனுக்கு வாக்கு ஒன்றோ இரண்டா? அம்பையை மனைவியாக வரிப்பது தெருவிலிருக்கும் பொன்னைத் தனதென்று கொள்வதைப் போன்றதல்லவா அவர்க்கு? அம்பையின் கஷ்ட நிலையையும் அவரறிவர்; தமது வீர சபதத்தையும் அவர் மறந்திலர். அவர் நிலையில், ஸாதாரண லோக வியவஹாரங்களில் செல்லும் மனம், காம மயக்கத்தால் விரதத்தைக் காற்றிற் பறக்க விட்டிருக்கும். வாக்கு மனமுமொத்தபீஷ்மர் சற்று யோசித்தார்.

"இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்
கிடும்பை படாஅ தவர்."

ஆகையால் மனஞ்சிறிதும் மயங்கக் காரணமில்லை. எனக்கு என் தருமமே பிரதானம். அதைக் காப்பதில் கஷ்டங்கள் எது ஏற்படினும் உள்ளம் நடுங்காது, ஊக்கத்துடன் உழைப்பதே உண்மை நிலையாகும்' என்று இவ்விதம் பலமுறை யோசித்து அம்பையின் விருப்பத்தை மறுத்தார். சால்வனாலும் பீஷ்மராலும் கைவிடப்பட்டு, இருவிதத்திலுங் கெட்ட அம்பை பீஷ்மரிடந் தீராப்பகை கொண்டாள்.

உடனே அவள் கடுங் கோபத்துடன் பலவிடஞ்சென்று அலைந்தாள். கடைசியாக, க்ஷத்ரிய வைரியான பரசுராமரிடம் அடைந்தாள்; தனது நிலையைச்சொல்லி அலறினாள்; பீஷ்மரைக் கொன்றுவிடும்படி வேண்டினாள். ஆனால் அவர் "காங்கேயன் என்னிடம் படித்தவன்; நல்ல குரு பக்தியுடையவன்; என் சொல்லைத் தட்டான்; உன்னை மணக்கும்படி நான் சொன்

னால், அவன் நிச்சயமாகச் செய்து கொள்வான் என்று நம்புகிறேன். பயப்படவேண்டாம்" என்றவளைச் சமாதானப்படுத்திப் பீஷ்மரை அடைந்து அம்பையை மணக்கும்படி தன்னால் முடிந்தவரையுஞ் சொன்னார். பீஷ்மர் தமது குருவுக்குச் செய்யவேண்டிய மரியாதைகள் ஒன்றும் விடாது இரட்டிப்பாகச் செய்தாலும், "முனி புங்கவ! என் மும்மலங் கழிக்கவந்த மூலவின்பப் பொருளே! குருமொழி தவறேல் என்பது தர்ம வாக்கியம்; அது குருகுலவாஸஞ் செய்யும் பிரஹ்மசாரிக்குப் பொருந்தும். என் போன்ற நித்ய பிரஹ்மசாரி விரதம் பூண்டவரை அது கட்டுப்படுத்தாது. விரதங்கொண்டவர் அவ்விரதத்தை எக்காலத்தும் கைப்பிடித்தொழுக வேண்டும்.

அந்தக் கரண மடங்கத் துறப்பதுவே
யெந்தத் துறவினுநன் றெந்தாய் பராபரமே!

ஆக, என் ஐயனே! உமது ஆணையைத் தலையால்செய்ய எனக்கு மனமுண்டாயினும், இச்சமயம் எனது பிரதிஞ்ஞை குருவாக்யத்தை ஏற்றலுக்குப் பெருமிடையூறாக நிற்கின்றது' என்று விநயமாக எடுத்துச் சொல்லி விசனித்தார்.

பரசுராமர் கோபங் கொண்டனர்; "குரு வார்த்தை கேளாத சிறுவா! வா சண்டைக்கு! ஒரு கை பார்ப்போம்" என்று அட்டஹாஸஞ் செய்து, பீஷ்மரைத் தன்னுடன் போர்செய்யும்படி அழைத்தார். என்ன பரிதாப நிலைமை! குரு வார்த்தையைக் கேட்டால் தன் விரத பங்கம்; கேளாவிட்டால் குருவுடன் சண்டை செய்யவேண்டும். ஆயினுமென்னை? அவ்வவர் தமது தருமத்தைச் செய்வதுதானே கடமை? பீஷ்மர் சிறிதும் மயங்காது, பரசுராமரது பாதாரவிந்தங்களில் விழுந்து நமஸ்கரித்து "ஐயா! நீங்கள் குருமுறையால் என் பிதா. உம்மிடம் போரிடலடாது. ஆயினும் தர்மத்தை விடுவதும் இயலாது. உமது கையால் மரணமடைவதெனக்குப் பெருமை" என்று சொல்லி அவருடன் போர்செய்ய ஆரம்பித்தனர். முழு ஆவேசத்துடனும் பரசுராமர் போரிட்டார். குற்றமொன்று மறியாத பீஷ்மர் சற்றுஞ் சளைக்காமலே அவருடன் சிறிதும் பின்வாங்காது யுத்தஞ் செய்தார்; 'நான் உங்களது பிரஹ்மண்யத்தைப் போக்க எண்ணங்கொண்டேன் அல்லன்; உமது க்ஷத்ரிய வைபவத்தைப் பாழாக்கச் சிறிதும் தயங்காது யுத்தஞ் செய்வேன்' என்று சொல்லிக் கொண்டே செய்தார். வரவரப் பரசுராமரது கை தாழ ஆரம்பித்தது. பத்துநாள் படுபோர் நடந்தது. மொத்தத்தில் பரசுராமர் தோல்வியடைந்தனர். ஆயினும் பீஷ்மர், தமது குருவின் பாதங்களில் வீழ்ந்து, தன்னை மன்னிக்கும்படி வேண்டினர். இதுவன்றோ பெருமை!

இதைக்கண்ட பரசுராமர் "அப்பா! நீயே என் அன்பிற் குரியவன். உனது பெருமையே பெருமை! உன் விரதம் ஒருநாளும் குறைவுறாது. செருக்கற்றுத் தனது தருமத்தை நடத்தும் தீரமே மனத்திற்குப் பெருமை. என்னை அபஜயமடைந்ததற்காக அவமானப் படுத்தாது கௌரவித்த உன்னிடம் யான் வெறுப்பு எவ்வாறு அடையமுடியும்?" என்று பீஷ்மரைக் கொண்டாடினர். பின் அம்பையை நோக்கி "பெண்ணே! நான் ஒப்புக்கொண்டவிதம் என்னால் முடிந்தவரையும் உனக்காகப் பீஷ்மனுடன் யுத்தஞ்செய்தேன், அவனை என்னால் ஜயிக்கமுடியவில்லை. என் செய்வது? விதி வலிது! இனி உன் இஷ்டப்படி எங்கேவேண்டுமானாலும் போகலாம்; உன்னைக் காப்பாற்ற இவ்வுலகில் இனி ஒருவருங் கிடையாதென்பதை மாத்ரம் நன்கு அறிவாயாக!" என்றுசொல்லி எச்சரித்துவிட்டுக் காட்டிற்குத் தவஞ் செய்யச் சென்றார்.

அம்பையும் நெடுநாள் தவஞ்செய்து, பல விசித்ர காரணங்களால், பாஞ்சால தேசத்தரசனுக்குச் சிகண்டி என்னும் மகனாக மாறி விளங்கினாள். அவன் பீஷ்மனைக் கொல்லும் நிமித்தம், த்ரோணர் என்னும் தனுர்வேதத்தில் வல்ல முனிவரிடம் படைத்தொழில் முற்றும் கற்று விளங்கினான்.

* * *

விசித்திரவீர்யன் தனது புதுமணப்பெருக்கில் ஈடுபட்டு, அம்பிகை அம்பாலிகை இவரிருவரிடம் இணைபிரியாது விளங்கிவந்தான். இவ்வாறு ஏழு வருடங்கள் கடந்திருக்கும். இதற்குள், அவன் க்ஷய வியாதிக்காளாகித் தேஹம் நழுவும்படி நேர்ந்துவிட்டது.



அம்பிகை அம்பாலிகை இருவரும் மலடிகளாக இருந்தனர். ஸத்யவதிக்கு அது பெருந்துயரம். நாட்டையாளத்தக்க ஸந்ததியில்லாமையை எண்ணி எண்ணி வருந்தினாள். பீஷ்மரை அவரிருவருக்கும், பூர்வ தர்ம வழிப்படி, ஸந்ததியுண்டாக்கும்படி, பல முன் வழக்க ஒழுக்கங்களை எடுத்துச்சொல்லி, வேண்டினாள்; 'காசிராஜன் பெண்களுக்கும் ஸந்ததி வேண்டுமென்ற பேராவலுண்டு; எனக்கும் அப்படியே. வம்சவிருத்தியை நாடி அவரிடம் புத்திரோத்பத்தி செய்வது தருமமே. அதற்கு யானே ஆணை தருகிறேன். அவரை மணந்து இந்நாட்டை ஆள்வதே பேரின்பம்" என்றவள் மேலும் மேலும் எடுத்துச் சொன்னாள்.

"உமது மொழி உண்மையே. உமது தந்தை தாஸராஜன் முன், அடியேன் விவாஹத்தைப் பற்றிச் செய்த சபதம் உமக்குத் தெரிந்ததேயாகும். உம்மை என் தந்தை மணக்கும் பொருட்டுக் கன்யா சுல்கத்திற்காகச் செய்ததல்லவா அது? அதைத் தவறுவது எப்படி முடியும்? மூவுலகையும் ஒருங்கே கொடுத்தாலும் அதற்கொப்பேன். இவ்வுலகம் நிலைமாறினும், மாறும்; இயற்கைப் பொருள்கள் தமது குணத்தை இழக்கினும் இழக்கும்; வானஜோதிகள் வழி தவறிச் சென்றாலும் செல்லும்—தேவவிருதன் ஸத்தியத்தைக் கை சோரவிடான். இது உண்மை! இது உண்மை!" என்று பீஷ்மர் மறுத்துரைத்தார்.

"ஆபத் தர்ம அநுஷ்டானத்தை விடுவது அழகாகாது" என்று அவர் சிறூய் அதிவிநயமாகச் சொல்லியும், பீஷ்மர் "க்ஷத்ரியன் ஸத்திய வழியை விட்டோடினால், அவன் குலமே அழிவுற்றுவிடும். ஆகையால், தாம் செய்வதடாது" என்று மேலும் கண்டிப்பாகச் சொன்னார்.

பீஷ்மரைப்போல மண்ணாசையையும் பெண்ணாசையையும் ஒழிப்பதல்லவா தர்ம கர்ம ப்ரபாவம்? வலியவந்த ஸ்ரீதேவியை வெறுத்தும், கிட்டிய ராஜ்யபாரத்தைத் துச்சமெனக் கழித்தும், தனது விரதத்தை எவ்வித ஸங்கடங்களிலும், நயவஞ்சக மாயா ஸ[illegible]கங்களால் மயங்காது, குறைபட விடாது, குன்றிலிட்ட விளக்கெனக் காட்டுவதல்லவா பெருமை?

# தமிழருக்கு ஓர் விண்ணப்பம்
## AN APPEAL TO THE TAMILS

[ஸ்ரீமான், எம். ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள் எம். ஏ.]

(356-பக்கத் தொடர்ச்சி.)

சே[illegible]லும் நிகண்டு, நன்னூல், காரிகை, நைடதம், அஷ்டபிரபந்தம். இரண்டொரு புராணம் முதலியவைகளை மனப்பாடம் செய்து, சாரமற்ற கவிகளைப் பாடிக்கொண்டும், கர்ணகடூரமான வசனங்களை யெழுதிக்கொண்டும், நாவலரென்றும், பாவலரென்றும், கவிச்சிங்கமென்றும் சொல்லிக்கொண்டு இறுமாப்படைந்து, தற்கால நிலைமையை யறியாதவர்களாய்க் காலங்கழிக்கின்றனர் சிலர். பின்வரும்பாடலால் அவர்களது கர்வம் வெளியாகும்.—'கவிப்புலவரைக், காதங்கறுத்துச் செறுப்பிட்டடித்துக் கதுப்பிற்புடைத்து வெற்றிக், கல்லணையினோடு கொடிய கடிவாள மிட்டேறு கவி காளமேக நானே." இவ்வாறகங்காரம் பிடித்த தமிழ்ப் பண்டிதர்கள், தங்களாசான் கற்றுக் கொடுத்தவைகளுக் கதிகம் கற்க விரும்பார்; இங்கிதமறியார்; காலத்திற்கேற்ப நடவார்: வீண்வாதிற் கிடுப்புக் கட்டுவார். புத்திவிசாலமில்லாத இவர்களுக்குப் பொருளும் பெருந்தன்மையும் எங்கே வரும்? இவர்கள் கொஞ்சமேனும் ஆங்கிலம் முதலிய பிறபாஷைகளைக் கற்று, அவைகளிலுள்ள அபாரமான விஷயங்களை யாராய்ந்து சீரடைந்தாலொழிய, மற்ற கனவான்களைப் பார்த்து ஏங்கித் தயங்கி, சரஸ்வதியும் இலக்குமியும் ஒன்று சேர்வதில்லையென்று பறையடித்துக் கொண்டிருப்பது அறியாமையன்றோ? தமிழ்ப் பாடல்களையொழியச் சரித்திரம், கணிதம், தத்துவம், ரஸாயனம் உள்ளிட்ட நூல்கள் பிற பாஷைகளிலிருக்கின்றனவே. தமிழர்களும் அவைகளைக் கற்று மற்ற சாதியார்களைப்போல் ஏன் தேர்ச்சி யடையக்கூடாது?

இவைகளிலெல்லாம் பிரதானமானது சரித்திரம். அஃதாவது நமது முன்னோர்களைப் பற்றியும், அவர் நாகரீகம், நடையுடை பாவனைகளைப்பற்றியும், உண்மையான செய்திகளை அறிந்துகொள்ளக் கருவியா யிருப்பதோர் நூலாம். அவைகளை நன்றாய் அறிந்து கொண்டாற்றான் செவ்வையாய் நமது ஏற்றத்தாழ்ச்சிகளைச் சீர்தூக்கி இக்காலத்து நிலைமைக்குத் தக்கபடி வேண்டியதிருத்தப்பாடுகளைச்செய்து

கொள்ள முடியும். ஓர் மனிதன், பிறந்த நாள் முதல் வருடந்தோறும் எப்படி வளர்ந்து கொண்டு வருகின்றானோ, அவ்வாறே ஒவ்வொரு பாஷையும் மதமும், வித்தையும், இன்னும் யாவத்தும் ஒவ்வொரு காலங்களிற்றோன்றியும், வளர்ந்தும், நசித்தும் வந்தனவென்று சரித்திர வாராய்ச்சியிற் கண்டது. இவ்வுலகில் ஒன்றும் நிலைபெற்றிருந்ததில்லையாதலால் கால நிருபணம் எவற்றிற்கும் முக்கியமானதாயிற்று. அது புரண்டுபோயின், உண்மையை யறிய முடியாது.

நம்முன்னோர்கள் சரித்திரத்தால் பாத்திற்குபயோகமில்லை யென்றும், அது அழிந்து போகக்கூடிய பொருள்களைப் பற்றியதென்றும் கருதி, அதைத் திக்கரித்து விட்டதுடன் சிலவற்றின் காலங்களை மாற்றியும் சிலவற்றை முற்றும் ஒழித்தும் விட்டனர் போலும். என்றாலும் (1) கர்ண பரம்பரையாய் வந்துள்ள கதைகளிலும், (2) புராணங்களிலும், (3) தமிழ் நூல்களிலும், (4) சிலாதாம்ர சாசனங்களிலும் காலங்கள் ஒருவாறு விளங்கும். இவைகளுடன் (5) பாஷையும், (6) மதமும் நாளாவட்டத்தில் சிறிது வேறுபட்டுக்கொண்டு வந்ததும் ஆராயத் தக்கது. இவைகள் ஒவ்வொன்றையும் தனித்துக் கவனிப்பாம்.

தமிழிலக்கியங்களைப்பற்றியும் ஆசிரியர்களைப் பற்றியும், மதங்களைப்பற்றியும், ஊர்களைப் பற்றியும், தெய்வங்களைப்பற்றியும் பற்பல அதிசயமான விஷயங்கள் கர்ணபரம்பரையாய் நமக்கு வந்திருக்கின்றன. அவைகளை முற்றும் நம்புவது இக்காலத்தில் அசாத்தியமானதாயிருக்கும். ஏனெனில், ஒரு செய்கையை நேரில் பார்த்தவன் ஒன்று சொல்ல, அதைக் கேட்டவன் தன் புத்திக்கு எட்டியமட்டும் நூதன விஷயங்களை அத்துடன் சேர்த்தும் நடந்ததைக் குறைத்தும் சொல்வது வழக்கம். அதைப் பின்னும் காணலாம். இப்படியிருக்க நீர் செய்தே ஆயிரமாண்டுகளுக்கு முன் நடந்த சம்பவங்கள் குறைந்தபக்ஷம் நாற்பது தலை முறை வழியாய் மதசம்பந்தமான விவாதங்களில் தலையிட்டுக்கொண்டு காலங்கழித்த பண்டிதர் பாமரர் இவர்களுடைய செவிகளில் பட்டுவரும் சங்கதிகளில் எவ்வளவு உண்மையிருக்குமென்று அவரவர்களே அறிந்துகொள்ளலாம். குடச்சாம்பலைப் பெண்ணாக்கியதும், முதலை விழுங்கிய பிள்ளையை வரவழைத்ததும், இன்னுமற்ற அற்புதச் செயல்களும் இவ்வாறு நமக்குக் கிடைத்துள்ள விஷயங்கள். இவைகளிற் சில ஏடுகளிலுமேறிவிட்டன.

இவைகளைத் தவிரப் புராண கதைகளும் அனேக முள. புராணமென்றாற் பழமை. ஆதியிலித்தகைய கதைகள் வடமொழியிற்றானுள்ளன. இவை பொதுவான பெரும் புராணங்களும், ஒவ்வொரு தலமான்மியத்தை விளக்கிக்காட்டும் தலபுராணங்களுமென இருவகைத்து. இவைகள் ஆரியர்களாலுண்டாக்கப்பட்டனவென்று யாவரு மறிவார். பதினெண் புராணங்களுண்டான காலம் கி. பி. ஏழாம் சதாப்தத்திற்கு முன்னென்பர். தலபுராணங்களெல்லாம் அக்காலத்துக்குப் பிறகுதானுண்டாயின.

பதினெண் புராணங்கள் பௌத்த, ஜைன, சைவ, வைணவ மதங்கள் ஒன்றோடொன்று போர்செய்து கொண்டிருக்குங் காலங்களில் பின்னையயிரண்டிலும் ஜனங்களுக்கு நம்பிக்கை பிறந்து அவைகளைக் கைப்பற்றும்படி மகா ருஷிகளும் பிராமணர்களும் தங்கள் தங்கள் தெய்வங்களைச் சிறப்பித்து எழுதிய பழங் கதைகளாகும். இவைகளுக்கு நேரான புராணங்கள் சாக்கியத்திலும் சமணத்திலும் உண்டென்பர். இவைகளில், சில அரசர்களின் பெயர்களையும் அவர்காலத்துச் செய்திகளையும் வரையப்பட்டிருப்பதைக் காணலாம். தலபுராணங்கள் மேற்சொல்லிய புராணங்களுக் கனுசரணையாய்ப் பிராமணர் வசித்த ஊர்களையும் அவ்வூர்களிலவர் வழிபட்டுவந்த கடவுள்களையும் சிறப்பித்து முதன்முதல் வடமொழியில் எழுதிவைத்த கதைகளாம். பிராமணர்கள் வசிக்காத ஊர்களில் சிவன் விஷ்ணுமுதலிய வைதீக கடவுள்களுக்கு ஸ்ரீகோயில்களும் புராண கதைகளுமில்லை. வெகுகாலத்திற்குப் பிற்பாடு தான் சிவப்பிரகாச சுவாமிகள் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை இவர்களைப்போன்ற சில தமிழ்ப்பண்டிதர்கள் தோன்றி வடமொழிப் புராணங்களைத் தமிழில் பாடினர்.

மேற்கண்ட புராணங்கள் இரண்டொரு உண்மைச் செய்திகளை நடு நாயகமாகவைத்து மனமும் நாவன்மையும் போந்தபடி தங்கள் நாட்டையும், நகரையும, ஆற்றையும், அரசனை



யும், சிறப்பித்துப் பாடப்பட்ட நூல்களாகலான் அவைகளினுண்மையைத்தருவித் தேடுவது பெருத்த கஷ்டமாகும். மேலுமிவைகளைச் சாமானியர்கள் ஐயுறுவண்ணம் வியாசர் முதலான முக்காலமுமுணர்ந்த மகா ரிஷிகளின் மேலும் அமரர்மீதும் சுமத்திட்டனர்.

அத்தன்மையதன்று பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான பழைய தமிழ்நூல்கள். இவைகளில் தமிழ்நாட்டு மூவேந்தர்களின் பெயர்களையும் செய்திகளையும் அக்காலத்து வழக்கம் முதலிய அருமையானவிஷயங்களையும்காணலாம். ஆனாலிவைகளின் காலம் சரியாய்த் தெரியக்கூடாமையாலும், ஒரே பெயருள்ள அரசர்கள் பலரிருந்தமையாலும், அவர்களின் உறவு முறைகள் குறிக்கப்படாமையாலும், புலவர்களும் பலரிருந்தமையாலும், அக்காலத்து நூல்களின் காலமும் ஆசிரியர்களின் காலமும் வேறெவ்வித ஆதாரமுமின்றி வரையறுத்துச் சொல்ல முடியாததா யிருக்கின்றது.

நமது நாட்டில் பெருத்த உத்தியோகம் வகித்துவந்த சூயலாசிரியர் நம்மவரைப்பற்றி எழுதுவது யாதெனில்:—'அவர்கள் பூர்வீக அரசர்கள் என்ன செய்தார்கள், யார்யாருக்கு நன்கொடை யளித்தனர், எங்கெந்த ஆலயங்களுக்குத் திருப்பணிகள்செய்து திருவிளையாட்டங்கள் விட்டனர் என்பதை விசாரிப்பதேயில்லை. அன்று ஊண் கழிப்பதும் பிற்றைநாட் செய்யவேண்டுவதைக் கவனிப்பதையும் தவிர மற்றொன்றையு மெண்ணுவதில்லை. சென்ற நாட்களெல்லாம் அவர்களுக்கு 'ஓர் பெருத்த சூன்யமாம்.' இவ்வித சித்தமுடையவர்களா சிலா லிகிதங்களையும் தாமிரசாசனங்களையும் தேடிப்பார்த்து நம்முன்னோர்களின் அரிய செயல்களை யறிந்துகொள்ளப் போகின்றார்கள்? அறிந்து கொண்டனராகில் காலத்தைப்பற்றி வீண்வாதங்கள் நடத்த இடங்கொடார்; கர்ண பரம்பரையாய்வந்த கட்டுக்கதைகளையும் நம்பமாட்டார். புராணங்களையும், ஆன்றோரெழுதிவைத்த கதைகளையும், இலக்கியங்களையும், நம்புவதைக்காட்டிலும் சிலா லிகிதங்கள் பிறரால் எளிதாய் மாற்றவாவது புரட்டவாவது சாத்தியப்படாத தாகையால் அவைகளையுண்மையென்று கொள்வதே உத்தமமாகும். இவ்வித வாராய்ச்சியினாற்றான் சூளாமணி, திருவாசகம், திருவிசைப்பா, நன்னூல் முதலான பனுவல்களின் காலம் இப்பொழுது தெளிவாய்த்தீர்மானிக்கப்பட்டதென்று சொல்வதற்குத் தடையொன்றுமில்லை. சூளாமணி யோர் சமணகாப்பியம்; இதன் சிறப்புப்பாயிரத்தில் சேந்தன் என்ற ஓர் பாண்டிய னவைக்களத்து இது அரங்கேறியதென்று தெரியவருகின்றது. நூற்பொருளால் சமணகாலத்ததென்றும், ஜயந்தன் அல்லது செழியன் சேந்தன் என்ற பெயராலும் அவ்வரசன் தகப்பன் சூளாமணி யென்ற பட்டப்பெயரால் வழங்கியதாலும், இந்நூலின் காலம் சுமார் கி.பி. 650-என்று தாமிர சாசனத்தினால் விளங்கியதாகச் சொல்லலாம். அதே சாசனத்தைக்கொண்டு திருவாசகத்தின் காலம், சுமார் கி.பி. 850க்குப் பின்னதென்றும் ஆனதால் மாணிக்கவாசக சுவாமிகள் நாயன்மார்களுக்கு வெகுகாலம் பின்னானவரென்றும் உறுதியாய்ச் சாதிக்கலாம். மற்ற நூல்களையும் இவ்வாறே ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

ஒருவாறு தமிழ் நாட்டின்கண் தொன்று தொட்டு வழங்கிய மதங்களின் சரிதத்தால், நூல்களின் காலங்களைத் தோராயமாய்க் குறிக்கவும் கூடும். என்னில் ஓர் சமயக் கொள்கைகளை விளக்கிக் காட்டாத தமிழ் இலக்கியமொன்றுமில்லை. நமக்குத் தெரிந்தமட்டில், முதலூழியில் அதாவது கி.பி. 450க்கு முன் பிராமணம் அல்லது பிரமன், விஷ்ணு, சிவன் இந்திரன் முதலான கடவுள்களுக்கும், பின்னர் முருகனுக்கும் ஸ்ரீ கோயில்களும் திருவிழாக்களும் ஏற்பட்டனவென்றும், அப்பால் சாக்கியரும் சமணரும் பரவினரென்றும் ஆழ்வார் நாயன்மார் காலங்களில் வைஷ்ணவமும் சைவமும் தலைகிளம்பி மற்ற மதங்களைக் கண்டிக்க, சாக்கியம் அழிந்தும் சமணம் நலிந்தும்போக, முன்னையவிரண்டும் நிலைபெற்றனவென்றும், இக்காலத்தில்தான் விநாயகன் அல்லது மூத்தபிள்ளையாருக்குக் கோயிலேற்பட்டதென்றும் காலக்கிரமத்தை வரையறுத்துச் சொல்லக்கூடும்.

இவ்வுலகில் எப்பொருட்கும் தோன்றல், வளர்தல், அழிவு என்ற மூன்று விகாரங்களுண்டென்று முன்னரே காட்டியிருக்கின்றோம். இது ஒவ்வொரு பாஷைக்கும் உண்டு. நன்னூலாரும் இதற்கிசையவே 'பழையன

கழிதலு புதியன புகுதலும், வழுவல கால வகையினனே' என்றார். அகத்திய மிறந்திட்டது. தொல்காப்பியமும், வீர சோழியமும் அருமையாய்ப் பண்டிதர்கள் அகத்தில் மட்டும் வளர்ந்து வருகின்றன. சங்கத்தமிழுக்கும் பிற்காலத்துத் தமிழுக்கும் இலக்கண வேறுபாடுகள் சிற்சில ஏற்பட்டுவிட்டன. பதப்பொருள்களும் இவ்வாறே மாறின. 'வெற்றி'என்ற பொருளில் 'ஆடு' என்ற பதத்தையும், 'நினைத்தல்'என்ற பொருளில் 'செத்தல்'என்ற மொழியையும், இக்காலத்தார் உபயோகிப்பதில்லை. 'ஓலை,' 'மரக்கால்' முதலான கிளவிகளின் பொருளை உய்த்துணரத்தக்கது. ஆனதால் ஒரு நூலின் வந்துள்ள தமிழிலக்கணப் பிரயோகங்களையும், பதங்களையும் ஆராய்ந்து பார்க்கில் அந்நூல் எக்காலத்தது என்று ஒருவாறு சொல்லவும் கூடும். இதற்குப் பாஷா சரித்திரத்தில் 'மிக்க தேர்ச்சி வேண்டுமென்பதையும், தமிழ் ஒன்றையே கற்றவர்களுக்கு இவ்வாராய்ச்சிப் பலிதப்படமாட்டாதென்றும் நாம் சொல்லவேண்டியதில்லை!

ஆனதுபற்றி, ஓர் தமிழ் நூலின் காலத்தையாராயப்புகுமிடத்துத்தனக்கு முன்னதாகவே அதைப்பற்றியுள்ள அபிப்பிராயங்களைத் தூரக் கட்டிவைத்துவிட்டு, மேலேகாட்டிய ஆறு கருவிகளையும் ஆதாரமாய்க்கொண்டு மனக்கோண லில்லாது, தனது நுண்ணறிவைச் செலுத்திப் பார்த்தால், உள்ளது உள்ளவாறே புலப்படும். இதற்கு விசாலமான மனதும் உண்மையைக் காணவேண்டுமென்ற ஊக்கமும்வேண்டியதென்றும், இவ்விதம்ஒவ்வொரு நூலையு மாராய்ச்சி செய்தாலொழிய தமிழிலக்கிய சரித்திரம் எழுதமுடியாதென்றும், இது தமிழையே கற்றும் பிறர் மதங்களைக் கொஞ்சமும்அறியாது, ஸ்வமத துரந்தரராயுள்ள பண்டிதர்களுக்குக் கொஞ்சமும் இயலாத காரியமென்றும் ஈண்டு நாம் எடுத்துக் காட்ட வேண்டுவதில்லை.

---

**சந்தா நேயர்களுக்கு**

நம் நேயர்கள் தாங்கள் எழுதும் கடிதங்களையும், அனுப்பும் மணியார்டர்களையும், மானேஜர், 'விவேக போதினி' மயிலாப்பூர், என்ற விலாஸத்திற்கே அனுப்பவேண்டும். திருவல்லிக்கேணி என்று விலாஸமெழுதி அனுப்புவதில் வீண் தாமதம் ஏற்படுகிறது.

# கூட்டுறவுக் கல்வி

## CO-OPERATIVE BASIS OF EDUCATION

[ஸ்ரீமான் எம். நடேசையரவர்கள், பீ. ஏ., எல். டி.]

கூட்டுறவானது ஜனங்கள் எளிதில் கடன் வாங்குவதற்கும் கடன் கொடுப்பதற்கும் முக்கிய சாதனமாகவிருக்கிறதென்பது எல்லோருக்கும் நன்றாய்த் தெரிந்த விஷயம். வியவசாய அபிவிர்த்திக்கும், கூட்டுறவே முக்கிய சாதனமாயிருக்கிறதென்பதை அறிந்த கிருஷிகர்களில் சிலர், சமீபத்தில் ஏற்படுத்தப்பட்ட வியவசாய கூட்டுறவுச்சபை அல்லது கிருஷிச் சங்கத்தின் மெம்பர்களாயிருக்கின்றனர். கூட்டுறவானது மேற்கூறிய காரியங்களுக்கு மாத்திரமேயன்றி தனித்த ஒருவரால் நிறைவேற்ற இயலாத எக்காரியத்திற்கும் ஏற்ற சாதனமாகும். பலர்' கூடினால் பொருள்கூடும்; பொருள் கூடினால் கூடாத காரியமும் கூடுமென்ற பெரியோர் வாக்கும் தொன்றுதொட்டு வழங்கிவருகிறது. தற்காலத்தில் மிகுந்த நாகரீகமடைந்த இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்களிலுள்ள ஜனங்கள், தாங்கள் யத்தனிக்கும் காரியம் அனைத்தையும் பெரும்பாலும் கூட்டுறவினாலேயே சாதித்து வருகிறார்கள். கல்விப்பயிற்சியானது நாட்டிலுள்ள ஜனங்களெல்லோருக்கும் இன்றியமையாதது. இக்கல்விப்பயிற்சிக்கும், கூட்டுறவே முக்கிய ஆதாரமாயிருக்கிறதென்பதை விளக்கிக்காட்டுவதே இவ்வியாசத்தின் குறிப்பு.

உலகத்தில் மானிடராய்ப்பிறந்த ஒவ்வொருவரும் தம் கடமைகளைச் சரிவரச்செய்து வாழ்க்கையில் ஜயம் பெறுவதற்கு மூன்று முக்கிய சாதனங்கள் வேண்டும். அவை யாவன :—நற்றேகம், நன்ஞானம், நற்குணம். இவற்றுள் நற்றேகமென்பது யத்தனிக்கும் காரியம் அனைத்தையும் திருந்தச்செய்வதற்கு வேண்டிய தேகவலிமை. நன்ஞானமென்பது ஆத்மஞானமும் தத்வஞானமு மாத்திரமேயல்ல.' இரண்டும் இரண்டும், நான்கு என்று கூட்டிச்சொல்லத்தெரிந்திருப்பதும் தன்பெயரைத் தானே எழுதத் தெரிந்திருப்பதும், தனக்கு வந்த கடிதத்தைத் தானே படிக்கத்தெரிந்திருப்பதும் நன்ஞானம்தான். பின்னும் நாம்



உட்கொள்ளும் காற்றானது, எப்படி நமக்கு ப்ராணாதாரமாயிருக்கிறதென்பதையும், நாம் பயிர்செய்யும் செடிக்கு ஏன் வெயிலும் வெளிச்சமும் வேண்டியிருக்கிறதென்பதையும் தெரிந்திருப்பதும் நன்ஞானமாம். இதுவுமன்றி, தற்காலத்தில் கல்வியில் தேர்ச்சிபெற்ற வித்வான்கள் பலராலும் சாஸ்திர பரிசீலனைகள் செய்யப்பட்டு நூதனமாய்க்கண்டுபிடிக்கப்பட்டுள்ள நமது வாழ்க்கைக்கு உபயோகமான பல விஷயங்களைத் தெரிந்துகொள்ளுவதும் நன்ஞானமேயாகும். நற்குணமென்பது செய்யத்தகும் காரியங்களில் நல்லவை தீயவைகளைப் பகுத்தறிந்து நல்லவைகளைக் கைக்கொண்டு தீயவைகளைத் தள்ளும் குணமேயாம். இம்முப்பயன்களையும் கொடுக்கக்கூடியது கல்வி.

கல்விப் பயிற்சிக்கும் கூட்டுறவு முக்கியமானது. இக்கூட்டுறவு கல்விப் பயிற்சியின் விஷயத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்குள் இருக்கவேண்டும். கல்விப்பயிற்சியில் சம்பந்தப்பட்டவர்கள் யாவர் என்னலாம்? கல்வியைக் கற்போர் மாணாக்கர். கற்றுக்கொடுப்போர் உபாத்தியாயர். இவ்விருவர்களுக்கும் வேண்டிய சாதனங்களைச் செய்துகொடுப்போர் துரைத்தனத்தாரும், பெற்றோரும், குடிகளுமேயாம். இவர்களுக்குள் உள்ள கூட்டுறவு நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டு இங்கு கூறப்படும்.

முதலாவது:—துரைத்தனத்தாருக்கும் குடிகளுக்குமுள்ள கூட்டுறவு.—இக்கூட்டுறவானது கல்வியை நாட்டில் நன்றாய் வேரூன்றச் செய்து செழிப்பாக வளர்ப்பதற்கு இன்றியமையாதது. கல்வியின் பயன்களை நன்குணர்ந்த இந்தியாவிலுள்ள துரைத்தனத்தார், கல்விப் பயிற்சியை நாடெங்கும் பரவச்செய்வதற்காகப் பலவித கலாசாலைகளையும் தொழிற்சாலைகளையும் ஏராளமான பணச்செலவிட்டு ஏற்படுத்தியிருக்கின்றனர். அவற்றுள் எவ்விடத்திலுள்ளோருக்கும் எத்தொழில் செய்வோருக்கும் இன்றியமையாததான ப்ரதம பாடசாலைக் கல்வியைச்சம்பளமில்லாமல்கற்பிக்கச்சில துரைத்தனத்தார் ஏற்பாடு செய்திருக்கின்றனர். நமது ராஜ்யத்திலும் அப்படியே கல்வி அபிவிர்த்தியில் மிக்க ஆவலுள்ள பரோடா துரைத்தனத்தார் இக்கல்விப் பயிற்சியைக் கட்டாயப் பயிற்சியாகவும் செய்திருக்கிறார்கள். என்றாலும், துரைத்தனத்தார்களின் பிரயத்தனத்திற்குத் தக்கபடி நாட்டில் கல்வி அபிவிருத்தி இல்லை. ஏனென்றால், ஒரு மனிதன் குதிரையைத் தண்ணீர்காட்டக்குளத்திற்குக்கொண்டுபோகலாம். குதிரையைத்தண்ணீர்குடிக்கச்செய்வதுபத்து மனிதர்களாலு மியலாது. ஆகையால் குடிகள் தங்களுக்குத்தானே கல்விப்பயன்களையடைய ஆவல்கொண்டாலொழிய கல்வி அபிவிருத்தியாகமாட்டாது. பொதுஜனநன்மையைக் கோரும் துரைத்தனத்தார் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பதே தங்கள் கடமைகளுள் முதற் கடமையாகக் கொள்ளுவாராயின், பிள்ளைகளைப் பெற்றோருக்கு அக்கடமை முதற் கடமை ஆகமாட்டாதோ? பணத்தைச் செலவிட்டுப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தாவிட்டாலும் ஏற்பட்ட பள்ளிக்கூடங்களுக்குப் பிள்ளைகளை அனுப்பாமலிருப்பது பெற்றோர்கள் செய்யும் பெரும் பாவம். நாட்டிலுள்ள ஜனங்கள் எல்லோரும் கல்வியாலாகும் பயன்களை நன்குணர்ந்து பள்ளிக்கூடங்களுக்குப் பிள்ளைகளை மனப்பூர்த்தியோடு அனுப்புவாராயின், அதுவே அவர்கள் துரைத்தனத்தாருக்குச் செய்யும் பேருதவியாகும். பின்னும் கல்வி கற்பிக்கும் கடமையை, தங்கள் முதற் கடமையாகவுங்கொண்டு, தாங்களே பொருட்செலவு செய்து, பாடசாலைகளை ஏற்படுத்துவாராயின், கல்வியின் அபிவிர்த்திக்கு விசேஷ இடமுண்டு. கானாடுகாத்தான் தனிகர்களுள் ஒருவரான அண்ணாமலை செட்டியாரவர்கள் மதுரைக் கலாசாலை சம்ரக்ஷணார்த்தம் மூன்று லட்ச ரூபாய் அளித்திருக்கும் சமாசாரம் எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனால் ஏகதேசத்தில் இத்தொகையை அளிப்பதற்கு ஒருவரால் எக்காலத்திலுமியலாது. ஜனங்கள் கூட்டுறவினாலே இதிலும் பதின்மடங்கான தொகையை எளிதில் சேர்க்கலாம். ஆகையால் ஜனங்களும் தங்கள் கூட்டுதவியால் துரைத்தனத்தாரைப்போல்பள்ளிக்கூடங்களை விசேஷமாக ஏற்படுத்துவாராயின் நாடெங்கும் கல்வி பரவுமென்பதற்குச் சந்தேகமில்லை.

இரண்டாவது :— உபாத்தியாயர்களுக்கும் பெற்றோர்களுக்குமுள்ள கூட்டுறவு.— முற்காலத்தில் கல்வி கற்பதற்காகப் பெற்றோர் பிள்ளைகளைக் குருவினிடம்அனுப்பிவந்தார்கள். பிள்ளைகளும் குருவை அடைந்து, குரு குலவாசிகளாகவிருந்து, கல்வி கற்றுவந்தனர்.

கல்வி கற்குந்தோறும் அவர்களுக்குக் குடும்ப வாசனையே இல்லை. கற்கவேண்டியவைகளை எல்லாம் கற்றபின், குருவிடம் அனுக்கிரகம் பெற்று, பெற்றோரில்லம் வந்து சேர்வார்கள். இதனால் அவர்கள் கல்விப் பயனை முற்றிலும் அடைந்தவர்களாகவே யிருந்தனர். தற்காலத்திலோ பிள்ளைகள் குடும்பவாசிகளாக இருந்தே கல்வி கற்றுவருகின்றனர். கல்வி கற்பதற்காக அவர்கள் உபாத்தியாயர்களுடன் கூடிக் கழிக்கும் காலம் 4 அல்லது 5 மணி நேரந்தான். மிகுதியான நேரமெல்லாம் தங்கள் வீடுகளிலேயே பெற்றோருடன் கூடிக் கழிக்கின்றனர். இந்நிலைமையில் பெற்றோர்களின் கூட்டுறவில்லாமல் உபாத்தியாயர் பிள்ளைகளுக்குத் தற்கால போதனாமுறைப்படி கல்வி கற்பிப்பது அசாத்தியமான காரியம். பிள்ளைகளின் மூளைக்கும் ஐம்புலன்களுக்கும் அதிக உபாதி யன்னியில் கல்வி கற்பிக்க வேண்டுவதே தற்காலத்திய போதனாமுறை. இதை அனுசரித்தே கல்விச்சாலைகளும் சட்ட திட்டங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் படித்துவருவதோடுகூட, வீடுகளிலும் படித்துவருவதால் பெற்றோர் மேற்கூறிய விஷயங்களைத் தாங்களும் தெரிந்து, பிள்ளைகள் சௌகரியமாய்ப் படிப்பதற்கு வேண்டிய சாதனங்களைச் செய்து கொடுக்கவேண்டும். வீட்டில் போதுமான வெளிச்சமில்லாத விடத்தில் உட்கார்ந்து படிக்கும் பிள்ளைகள் பலர். இரவில் வெகு நேரம்படிக்கும் பிள்ளைகள் பலர். புகைக் கம்மலோடு கூடிய விளக்கடியில் உட்கார்ந்து படிக்கும் பிள்ளைகள் பலர். குளிக்காமல் படிக்கும் பிள்ளைகள் பலர். துவைக்காத துணிகட்டிப் படிக்கும் பிள்ளைகள் பலர். இவர்களுக்கு ஞானம் ஒருவாறு ஏற்பட்டாலும் அல்லது ஏற்படாமற் போனாலும், நோயும் பலக்குறைவும் கட்டாயம் ஏற்படும். இவைகளெல்லாவற்றையும் பெற்றோரின் கூட்டுறவின்றி உபாத்தியாயர் ஒருவரே தனித்துக்கவனித்துத் திருத்துவது சாத்தியமன்று.

மூன்றாவது:—உபாத்தியாயர்களுக்கும் மாணாக்கர்களுக்குமுள்ள கூட்டுறவு.—கல்விப் பயனைக்கோரும் விஷயத்தில் கல்வி கற்பிக்கும் உபாத்தியாயரும் கல்வியைக் கற்கும் மாணாக்கரும் ஒரு நோக்கமுடையவர்களா யிருக்க வேண்டும். கல்விப் பயன்களானவை நற்றேகம் நன்ஞானம் நன்னடக்கையென்று ஏற்கனவே கூறப்பட்டிருக்கின்றன. என்றாலும் பிரகிருதத்தில் கல்வி கற்கும் பிள்ளைகளில் பெரும்பாலார் துரைத்தனத்தாரிடம் உத்தியோகம் பெற நோக்கமுடையவர்களாயும் பலர் தாங்கள் அடையும் கல்வித்தேர்ச்சியை முன்னிட்டுக் கல்யாணப் பரிசுகள் பெற நோக்கமுடையவர்களாயும், கல்வி கற்று வருகின்றனர். விவசாயம் வர்த்தகம் முதலிய தொழிற்சாலைகளில் படிக்கும் பிள்ளைகளும் இப்படியே. இவர்கள் கலாசாலைப் பரீக்ஷைகளில் தேர்ச்சியடைந்து தக்க வெகுமதிகள் பெறக்கூடிய திறமையுடையவர்களா யிருந்தபோதிலும், இவர்கள் கற்கும் கல்வி, கல்வியாகமாட்டாது. கல்விப்பயிர்ச்சியின் முக்கிய பயன்களும் இவர்கட்கு ஏற்படா. இவர்கள் கல்வி கற்றபின், தேகம் மெலிந்தவராயும், மனமொடிந்தவராயும், ஊக்கமுணர்வில்லாதவராயும் காலம் கழிப்பதுமன்றி, கல்வியாலாகும்அற்பப்பயனைப் பெரும் பயனாகக் கொண்டவராய், தங்கள் பிரயத்தனத்திற்கேற்ற பயனைப் பெறாதவராய் மனமுருகி மாளுவார்கள். தற்காலத்தில் நாகரீகமடைந்த ஜப்பான் முதலிய அயல் நாட்டிலுள்ள பள்ளிப்பிள்ளைகள் கல்வியின் முக்கிய பயன்களையே கோரி, கல்வி கற்று வருகிறாராதலின், திடகாத்திரம், மனோ தைரியம், ஊக்கம், ஆராய்ச்சி முதலிய இக்குணங்களை அடைந்தவர்களாய்ச் செய்யும் கருமத்தைத் திருந்தச்செய்து சிறப்புடன் வாழ்ந்து வருகிறார்கள். ஆகையால் இந்நாட்டிலும் கல்விப்பயனைச் கோரும் விஷயத்தில் கல்வி கற்போர் கற்பிப்போர் ஆகிய இருவரும் ஒரு நோக்க முடையவர்களாயிருக்கவேண்டும். பின்னும் இவ்விருவரும், தங்களில் ஒருவரை ஒருவர் நன்றாய் அறிந்துகொண்டு தங்களுக்குள் அந்யோந்யத்தைப் பலப்படுத்திக்கொள்ள, கல்வி கற்கும் நேரம் தவிர வேறு நேரங்களில் கூடிக் கலக்கவேண்டும். தற்கால முறைமைப்படி பிள்ளைகளுக்குக் கல்வியைத் தெளிவாய்க் கற்பிப்பதற்குக்குறிப்பிட்டநேரமும் குறிப்பிட்ட இடமும் போதாது. சொல்லிக் கற்பிக்கவேண்டியவைகள் பலவுள. செய்து கற்பிக்கவேண்டியவைகளும் பற்பலவுள. இவ்வழிகளையெல்லாம் அனுசரித்துப் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்துக் கொடுப்பதற்கு இவ்விருவருடைய கூட்டுறவுமில்லாமல் சரிப்படமாட்டாது.



நான்காவது:—மாணாக்கர்கள் தம்முள் கூட்டுறவு.—இக்கூட்டுறவானது மாணாக்கர்களின் தேகப்பயிற்சிக்கு முக்கியமானது. மாணாக்கர்கள் பலர், தேகப்பயிற்சிக்காகத் தண்டா, டிரில் (drill) முதலியகசரத்துகளைச் செய்துவந்தாலும், அப்பயிற்சியானது உத்ஸாகத்தின்மேல் ஏற்படுகிறதில்லை. பாண்டி, உப்புக்கோடு, பச்சைக்குதிரை, பேப்பந்து, பூப்பந்து, கம்பாலடிக்கும் பந்து, காலாலுதைக்கும் பந்து ஆகிய இவ்விளையாட்டுகள், பிள்ளைகளுக்கு உத்ஸாகத்தையும் தேகப்பயிற்சியையும் கொடுக்கின்றன. இந்த விளையாட்டுகளிலும் கூட்டுறவு அவசியமானது. இக்கூட்டு விளையாட்டுகளுக்கென்றே அநேக சங்கங்கள், தற்காலத்தில், ஏற்பட்டிருக்கின்றன. இச்சங்கங்கள் விளையாட்டை முன்னிட்டு ஏற்பட்டிருந்தாலும், மாணாக்கர்களுக்குள் நேசத்தையும் அந்யோந்யத்தையும் உண்டாக்கி நாளடைவில் கூட்டுறவாலாகும் பயன்களனைத்தையும் அவர்கள் நன்குணரும்படி செய்கிறது. ஞானவிர்த்திக்கும் இக்கூட்டுறவே ஒரு முக்கிய சாதனமாயிருக்கிறது. பலவித துறைகளில் மாணாக்கர் தம் ஞானத்தை விருத்திசெய்துகொள்ள பலவித ஞான சங்கங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இச்சங்கங்களானது ஒருவருக்குத் தெரியாத விஷயத்தை மற்றொருவரிடம் தெரிந்துகொள்வதற்கும், தெரிந்த விஷயத்தைத் தெளிவாய்ச் சொல்லுவதற்கும் உபயோக முள்ளவைகளாயிருக்கின்றன. நற்குணப்பயிற்சிக்கும் இக்கூட்டுறவு முக்கியமே. பள்ளியில் படிக்கும் மாணாக்கர்களில் நற்குணமுடையவர்கள் சிலர்; தீக்குணமுடையவர்கள் சிலர். நற்குண முடையோர் தீக்குணமுடையோருடன் சேரார். தீக்குண முடையோர் நற்குண முடையோரின் ஸத்ஸங்கத்தால் நற்குணமுடையவர்களாகவே ஆகிறார்கள். கூட்டுறவே இப்பெரும்பயனை அவர்களுக்கு அளிக்கிறது. மேலும் இக்கூட்டுறவால், ஈகை, இரக்கம், பச்சாத்தாபம், தயை தாக்ஷிண்யம் முதலிய அரிய குணங்களும் மாணாக்கர்களுக்கு ஏற்படுகின்றன. இவ்வித குணங்களால், மாணாக்கர்களுக்குத் தங்களில் ஒருவருக்கு ஒருவர் உதவிசெய்துகொள்ளுவதிலும் தாங்களெல்லோரும் கூடிப் பிறர்களுக்கு உதவிசெய்வதிலும் நோக்கம் ஏற்படுகிறது. இவ்விதமான உதவி மாணாக்கர்களால் ஜனங்களுக்கு மேன்மேல் ஏற்படவேண்டுமென்றே தற்காலத்தில் பல பொதுஜன சகாய சங்கங்கள் நாட்டில் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

கூட்டுறவாலாகும் கல்விப்பயிற்சியின் பயன்களை முற்றிலும் எடுத்துரைப்பது இவ்வியாசத்தின் கருத்தல்ல. கூட்டுறவு, கல்விப்பயிற்சிக்கு எப்படி இன்றியமையாததென்றும், அக்கூட்டுறவாலாகும் கல்விப்பயிற்சியின் சில முக்கிய பயன்களும் இங்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன.

## வான சாஸ்திரம்

### LESSONS IN ASTRONOMY

### நேப்தியூன்

இக்காலத்தில் நமக்குத் தெரிந்தவரையில் சூர்யனைச் சுற்றிவரும் கிரஹங்களில் **நேப்தியூனே** கடைசி. இதைக் கண்ணாடியால் பார்க்கும் முன்னமேயே, பல வானசாஸ்திரிகள் கணிதங்களின் மூலமாய் இம்மாதிரி கிரஹம் ஒன்றிருக்கவேண்டுமென்று அறிந்திருந்தார்கள். எல்லா வஸ்துக்களும் ஒன்றையொன்று இழுத்துக் கொண்டிருக்கின்றன வென்றும், இம்மாதிரியே நட்சத்திர மண்டலத்திலுள்ள கிரஹ நட்சத்திரங்களும் ஒன்றையொன்று இழுக்கின்றனவென்றும், வஸ்துக்களின் தத்வங்களை, அறிந்தவர்கள் முடிவுசெய்திருக்கிறார்கள். இப்பிணையால்தான், இந்தக் கிரஹ நட்சத்திரங்களும் இவைகளின் பளுவால் ஒன்றின்மேலொன்று விழாமலிருக்கின்றன வென்றும் நம்புகிறோம். இம்மாதிரியே பெரிய வஸ்துக்கள் சிறிய வஸ்துக்களைத் தங்களிடத்தில்இழுத்துக்கொள்ளுமென்றும், இந்தச்சக்தியால் மேலே எறியப்பட்ட எல்லா வஸ்துக்களையும் பூமி தன்னிடம் இழுத்துக்கொள்ளுகிறதென்பதும் நமது கொள்கை.

வெகு காலமாய் யுரேனஸ் கிரஹத்தின் நடத்தைகளைக் கவனித்த வானசாஸ்திரிகள் அதன் வேகத்தில் சில வேறுபாடுகளிருக்கக் கண்டார்கள். அது சூர்யனைச் சுற்றிவரும் பாதையில் சில விடங்களில் கொஞ்சம் வேகமாயும், சில விடங்களில் அதிக வேகமாயும் போகக்கண்டார்கள். இதற்குக் கார

ணம், வேறொரு கிரஹம் இதை இழுக்கும் சக்தியேயென்று நிச்சயித்தார்கள். இக்கணிதங்களாலேயே அக்கிரஹத்தின் இருப்பிடத்தையும், அதன் அளவையும், அது சுற்றும் வேகத்தையும் கணக்கிட்டார்கள்.

பிறகு அம்மாதிரியே 1846-ம் வருஷத்தில் அக்கிரஹம் முதல் முதல் பார்க்கப்பட்டது. அதுதான் நேப்தியூன். அவர்கள் முன் கணக்கிட்டப் பிரகாரமே, ஏறக்குறைய அதே தூரத்திலிருந்தது.

அது சூர்யனிடத்திலிருந்து சுமார் 2,480,000,000 மைல் தூரத்திலிருக்கிறது. அதாவது நம்மைவிடச்சுமார் 30 மடங்கு தூரத்திலிருக்கிறது. ஆகையால் இதன்மேல் விழும் சூர்ய வெளிச்சமும், உஷ்ணமும் நமக்கிருப்பதில் (1/900) 900-இல் ஒரு பாகந்தானிருக்கும். எவ்வளவு குளிராயும், இருட்டாயுமிருக்கும்! இது வெறுங்கண்ணுக்குப் புலப்படாது என்று சொல்லவேண்டியதில்லை. தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்க்கும்போது கொஞ்சம் நீலவர்ணமாகக் காணப்படும். இது அளவில் யுரேனஸ் போன்றது. குறுக்களவில் பூமியைப்போல் நான்கு மடங்கு கொண்டது. சுமார் 29,900 மைலுள்ளது. சூர்யனைச் சுற்றிவரும் இதன் பாதை மிகப்பெரியது. இது சூர்யனை ஒரு தரம் சுற்றிவர 164 வருஷம் 9 மாதம் அல்லது 60,126 தினங்கள் ஆகின்றன. இந்தக் காலந்தான் இதற்கு ஒரு வருஷமல்லவா? பூமி ஒரு செகண்டுக்குச் சுமார் $18\frac{1}{4}$ மைல் போகிறது. ஆனால் இது மிகவும் மெதுவாகச் செல்லுகின்றது. ஒரு செகண்டுக்கு, $3\frac{1}{4}$ மைல் தூரந்தான் போகிறது.

இது வெகு தூரத்திலிருப்பதால் இதைப்பற்றின மற்றைய விஷயங்கள் ஒன்றும் தெரியவில்லை. ஆனால் இதிலும் வாயுமண்டலமிருப்பதாயும், அம்மண்டலம் யுரேனஸின் மண்டலத்தைப் போலிருப்பதாயும் தெரிகிறது. இதற்கு ஒரு உபகிரஹமும் இருப்பதாகத் தெரிகிறது. இந்த உபகிரஹத்தைப்பற்றின வேறு விஷயங்கள் தெளிவாகத் தெரியவில்லை.

இத்துடன் நமக்கு இதுவரையில் தெரிந்த கிரஹங்கள் முடிகின்றன. இன்னும் எவ்வளவு கிரஹங்களிருக்கின்றனவோ, யாரறிவார்கள்! இன்னும் அதிக சக்தியுள்ள தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் செய்யப்பட்டால் வேறு கிரஹங்கள் காணப்படலாம்.

## சூர்யன்

நாம் இதுவரையில் நமது சகோதரகிரஹங்களைப்பற்றிக் கவனித்தோம். இவைகளெல்லாம், ராஜாதிபதியாகிய சூர்யனைச் சுற்றிவருவதாயும் பார்த்தோம். நமது நட்சத்திர மண்டலத்திலுள்ள எல்லா வஸ்துக்களையும்விட மிகப் பெரிதாயும், அதிகக் காந்தியுடனும் பிரகாசிக்கின்ற சூர்யனைப்பற்றி இனியாகிலும் கவனிக்க வேண்டியது நியாயம். உண்மையில் இதைப் பற்றித்தான் முதல் முதலில் படித்திருக்க வேண்டும். இயற்கையின் அற்புத சிருஷ்டிப் பொருளாகிய இதை நாம் பார்க்கும்போது நமது ஆனந்தத்திற்கு அளவில்லை. இதுவரையில் நாம் பார்த்தவைகளுக்கும் இதற்கும் அநேக வித்தியாசங்கள் உண்டு. அவைகளைப் போல் இது ஒரு குளிர்ந்த வஸ்துவல்ல. அவைகள் இருண்ட வஸ்துக்கள். ஆகையால் அவைகளுக்கு, சொந்தமான பிரகாசமில்லை. சூர்ய வெளிச்சத்தைப் பிரதிபிம்பிக்கச் செய்வதால் அவை கொஞ்சம் பிரகாசமாகக் காணப்படுகின்றன. இந்த விஷயத்தைச் சந்திரனைப் பற்றிப் பார்க்கும்போது கூறியிருக்கிறோம். எப்படிச் சந்திரன்மேல் படும் சூர்ய வெளிச்சத்தைப் பூமி மறைக்க, சந்திர கிரஹணம் உண்டாகிறதோ, அம்மாதிரியே நாம் பார்த்த கிரஹங்களுக்கும் கிரஹணங்கள் உண்டு.

ஆகையால் நமக்கு வருகிற வெளிச்சத்திற்கும், இதைச் சுற்றிவரும் கிரஹங்களின் பிரகாசத்திற்கும் சூர்யனே உற்பத்தி ஸ்தானமாயிருக்கிறது. அதாவது இது ஒரு பெரிய எரியும் பந்து போன்ற வஸ்துவாயிருக்கவேண்டும். இல்லாவிட்டால், இதனிடத்திலிருந்து 930 லட்சம் மைல் தூரத்திலிருக்கும் நமக்கு இது இவ்வளவு வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் கொடுக்கமுடியாது. இதன் உஷ்ணத்தின் அளவை நம்மால் நினைக்கக்கூட முடியாது. காலையிலும் மாலையிலும் சிவந்த நிறத்துடனும், மத்தியான வேளையில் சுத்த வெண்ணிறத்தோடும் காணப்படும் இச்சூர்யன், நாமிதுவரையிலும் பார்த்த கிரஹங்களைப் போல் கடின பதார்த்தமாயிராமல், முற்றிலும் ஆவி ரூபமாயிருத்தல் வேண்டுமென்று தெரிகிறது. நாம் வசிக்கும் கடின பதார்த்தமான, பூமி முற்றிலும் ஆவி ரூபமான கோளமாயிருந்தால் எவ்வளவு உஷ்ணமாயிருக்க வேண்டும்! குறுக்களவில் பூமியைப்போல் சுமார் 109 மடங்குப் பெரிதாயுள்ள இச்சூர்யன் ஓராவி ரூபமான கோளமாயிருந்தால், இது எவ்வளவு சூடாயிருத்தல் வேண்டும்! நம்மால் அளவிடக்கூடுமா? அல்லது இந்த அளவை நமது மனதால் உத்தேசிக்கக் கூடுமா? ஆகையால்தான் இச்சூர்யன் தன்னிடத்திலிருக்கும் சொந்த வெளிச்சத்தினாலேயே இப்படிப் பிரகாசிக்கின்றது.

எல்லாக் கிரஹங்களையும் ஒன்று சேர்த்து ஒரு கோளமாகச் செய்தாலும், சூர்யன் இப்பந்தைவிடச்சுமார் 500 மடங்கு பெரியது. இது நமது பூமியைப்போல் பருமனில் 1,280,000 மடங்குள்ளது. இவ்வளவு பெரிதாயிருந்தும், வெகு தூரத்திலிருப்பதால்தான் இது ஒரு சிறு சக்கரம்போல் காணப்படுகிறது. இது இருக்கும் தூரத்தைக் கவனித்தால் இதன் அளவின் மஹிமை விளங்கும்.

இதைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்க்கும்போது மிக ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். இதன் பிரகாசத்தால் கண் கூசும். கண்ணுக்குக் கெடுதல்களும் உண்டாகும். ஆகையால் இதை வெறுங்கண்ணால் நாம் பார்க்கும்போது கூட, புகைக் கண்ணாடியால் பார்ப்பது வழக்கம். முக்கியமாகச் சூர்ய கிரஹணத்தைப் பார்க்கும்போது இக்கண்ணாடியை நாம் உபயோகிப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இம்மாதிரியே, தூரதிருஷ்டிக் கண்ணாடியிலும் நமது கண்ணுக்குக்கெடுதல்கள் உண்டாகாதபடி தகுந்த ஏற்பாடுகள் இருக்கவேண்டும்.

இதைக் கண்ணாடியால் பார்த்ததால் இதன் உடல் முழுவதும் ஒரே மாதிரியாகக் காணப்படவில்லை. ஒரு கருமையான வஸ்துவில் வெண்மையான வஸ்து நெருக்கமாகத் தூவப்பட்டாற்போல் தெரிகிறது. இதன்மேல் அநேக வெள்ளைப் புள்ளிகளும் கோடுகளும் நிறைந்திருக்கின்றன. சிற்சில சமயங்களில் சூர்யனில் கறுப்புப் பிம்பங்கள் தோன்றுகின்றன. இப்பிம்பங்களில் சில பெரியனவாயும், சில சிறியனவாயுமிருக்கின்றன. மிகப் பெரிதாயிருந்தால், நமது வெறுங்கண்ணுக்குக்கூட புகையேற்றப்பட்டக் கண்ணாடியால் பார்க்கும்போது இவை நமக்குத் தெரியும். இவைகளுக்குச் சூர்ய களங்கங்கள் என்று பெயர். இவை நமது கண்ணுக்குக் கறுப்பாகக் காணப்பட்ட போதிலும் இருட்டான பாகங்கள் அல்ல. உண்மையில் பூர்ண சந்திர வெளிச்சத்தை விட இந்தப் பாகங்கள் சுமார் 2000 மடங்கு பிரகாசமானவை. ஆனால் சூர்யனுடைய மற்றைய் பாகங்களைவிட இவை மங்கலானவை. இவைகளைத் தூரதிருஷ்டிக்கண்ணாடியால் பார்க்கும்போது, இவை இரண்டு பாகங்களாகக் காணப்படுகின்றன. மத்தியில் மிகக் கறுப்பாயும், இதைச் சுற்றிலும் கொஞ்சம் குறைந்த கறுப்பு நிறமாயும் காணப்படுகின்றன. இக்களங்கங்கள் நமக்குச் சிறிதாகக் காணப்பட்டபோதிலும் உண்மையில் மிகப் பெரியவை; சிற்சில சமயங்களில் பூமியைப் போல் ஐந்து முதல் பத்து மடங்கு அளவுள்ளவை. இவைகள், எப்பொழுதும் சூர்யனில் அழியாமல் இருப்பவையல்ல. இவைகள் உண்டாகிப் பெரிதாகின்றன; மறுபடி சில நாட்களில் வரவரச் சிறிதாகி மறைகின்றன; சில களங்கங்கள் சில நாட்களில் மறைகின்றன. மற்றும் சில கொஞ்சம் மாதங்கள் வரையில் மறையாமலிருக்கின்றன. இவை என்னவென்றும் எப்படி உண்டாகின்றனவென்றும் நிச்சயமாகத் தெரியவில்லை; சூர்யனாகிய ஆவி கோளத்தில் பல காரணங்களால் ஆவி அங்குமிங்கும் அசைவதால் உண்டாகும் பள்ளங்கள் என்று நம்புகிறோம்! அதாவது இவை ஆவி குறைந்த பாகங்கள்.

---

# அம்புஜா

(துப்பறியும் ஒரு சிறிய கதை)

கதாநாயகியின் கொலையைக் கண்டுபிடிக்க வரும் துப்பறிபவரது சாமர்த்தியங்களும், அவரது தீரச்செய்கைகளும், ராஜாமணி என்பவளின் கொடுந் தொழில்களும், அவை வெளிப்பட்டதனால் தற்கொலை அவன் புரிந்துகொள்வதும், படிக்கப்படிக்க ஆனந்தமாயிருக்கும். எளிய தமிழ்நடையில் எழுதப்பெற்றது. விலை அணா 2.

# ராஜ்ய பரிபாலனம்

## FORMS OF GOVERNMENT

### இந்தியா ஆபீஸ்

இதில் மொத்தம் பதின்மூன்று மெம்பர்கள். இந்தியா சம்பந்தமான விஷயங்களைக் கவனிக்கவேண்டியது இவர்களின் பொறுப்பு. இதில் இந்தியா செக்ரெடேரியும், அவருக்கு உதவியாயிருந்து வேலைபார்த்து வரும், பன்னிரண்டு மெம்பர்களும் இருக்கிறார்கள். இந்தியா செக்ரெடேரி பார்லிமெண்டாருக்கு இந்தியாவில் கவர்ன்மெண்டார் செய்யும் காரியங்களுக்கு உத்தரவாதம் சொல்லவேண்டும். இதர பன்னிரண்டு மெம்பர்களில் பத்துபேர் இந்தியாவில் வெகுகாலமாக வேலைபார்த்து, இந்தியாவின் நிலைமையைப்பற்றிச் செம்மையாய் அறிந்திருக்கும் ஆங்கில உத்தியோகஸ்தர்களா யிருக்கவேண்டும். மீதி இரண்டுபேர் இந்தியர்களா யிருக்கவேண்டும். இவ்விந்தியாக் கவுன்ஸிலைப்பற்றிப் பின்னால் இந்தியா கவர்மெண்டைப்பற்றிக் கூறும்போது விவரித்துச் சொல்லுவோம்.

குடியேற்ற நாடுகள் சம்பந்தமான விஷயங்களைக் கவனிக்கும் ஆபீஸ் (Colonial Office):—இவ்விஷயங்களைப் பார்த்துவரும் மந்திரியைத்தான் கலோனியல் செக்ரெடேரி-ஆப்-ஸ்டேட் என்பது. இங்கிலாந்தின் குடியேற்ற நாடுகளில் அரசாட்சிசெய்யும் கவர்னர்கள், இவர் அதிகாரத்திற்குக் கீழிருந்து வேலைபார்த்து வருகிறார்கள்.

**போக்கிஷ இலாகா (Treasury Board):**— இராஜாங்கத்தின் வரவுசெலவு கணக்குகளை விசாரணைசெய்து, அவை சம்பந்தமான காரியங்களைப் பார்வையிட்டுவருவது முக்கியமான காரியம். ஏனென்றால், ஒவ்வொரு நாட்டிலும், இராஜாங்க காரியங்கள் சரிவர நடக்க பணம் மூலாதாரமா யிருக்கிறது. ஆகவே, இங்கிலாந்தில் வரவுசெலவு கணக்குகளைப் பார்ப்பதற்கு ஒரு போர்டு உண்டு. அதுதான் பொக்கிஷபோர்டு (Treasury Board) எனப்படும். முன்சொன்ன இராணுவ போர்டைப்போல், இப்போர்டுக்கு முதல் லார்டும், இன்னும் அவருக்கு உதவியாயிருந்து வேலைபார்த்துவரும் வேறு சில லார்டுகளும் உண்டு. இங்கிலாந்தின் பிரதான மந்திரிதான் இப்போர்டின் முதல் லார்டு. ஆயினும் பொக்கிஷ இலாகாவேலைகளைப் பார்த்து வருபவர்கள் மேற்கூறிய லார்டுகள் அல்ல. அவ்வேலைகளைப் பார்ப்பவர் சான்ஸெல்லர் ஆவ்-தி-எக்ஸ்செகர், அவருடன் கூட இருந்து வேலைபார்க்கும் செக்ரெடேரிகளுமே. இச் சான்ஸலர்தான் பார்லிமெண்டு கூடும்போது அச்சபையோர்க்குப் பட்ஜட் (Budget) அதாவது வரும் வருஷத்திய வரவுசெலவு ஜாப்தாவை எடுத்துரைப்பது. இந்த ஜாப்தா எவ்வாறு தயார் செய்யப்பட்டு வருகிறது என்பதைச் சற்றுக் கவனிப்போம். முன் ஓரிடத்தில் சொல்லியபடி பணம் சம்பந்தமான விஷயங்களைக் 'காமன்ஸ்' சபையார்க்குத்தான் முதன்முதல் தெரியப்படுத்தவேண்டும். அப்படிப் பட்ஜட்டைச் சான்ஸலர் காமன்ஸ் சபையில் கொண்டுவருமுன், அப்பட்ஜட்டில் கண்டிருக்கும் விஷயங்களைப்பற்றி டிரஷரி ஆபீஸில் நடக்கும் காரியங்கள் பல.

ஒவ்வொரு டிபார்ட்மெண்டாரும் தங்களுக்கு ஒருவருஷத்திற்கு வேண்டிய பணத்திற்கு ஒரு குறிப்பு (Estimate) தயார்செய்து, செப்டெம்பர் மாதத்தில் டிரஷரி ஆபீஸுக்கு அனுப்பவேண்டும். இப்படி ஒவ்வொரு டிபார்ட்மெண்டாராலும், தயார்செய்து அனுப்பப்பட்ட எஸ்டிமேட்டுகளைச் சான்ஸலர் செம்மையாகத் தனித்தனி விஷயமாய் எடுத்துப் பார்வையிட்டு, வேண்டிய மாறுதல்களைச் செய்து, டிரஷரி சிப்பந்திகளால் தயார் செய்தனுப்பப்பட்டு அந்த வருஷத்தில் ஏற்படக்கூடிய வருமானக்கணக்கை அத்துடன் சேர்த்து, வரும் வருஷத்திய வரவு செலவு கணக்காகிய பட்ஜட்டைத் தயார் செய்வார். இப்படித் தயார்செய்வதில் செலவுக்குமேல் வரவு ஏற்பட்டால் வரிகளைக் குறைக்கச் சான்ஸலர் ஏற்பாடு செய்யலாம். வரவுக்குமேல் செலவு ஏற்பட்டால், அவ்வருஷம் ஏற்படும் நஷ்டத்தைப் பூர்த்திசெய்ய வரிகளை அதிகப்படுத்தவோ அல்லது கடன்வாங்கவோ சான்ஸலர் செய்யலாம். ஆனாலும் சான்ஸலர் காபினெட் மெம்பர்களைக் கூட்டி அவர்களிடத்தில் ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் ஆலோசனைசெய்து, அவர்கள் சம்மதத்தைப்பெற்று, பிறகு காமன்ஸ் சபைக்குக் கொண்டுவரவேண்டும்



# மாதவீ கங்கணம்

### அத்யாயம்—4

### அமைச்சனும் அவன் யஜமானியும்

(365-ம் பக்கத் தொடர்ச்சி.)

இருவரும்—நவகுமாருடைய மனைவியும் கோகுலதாஸும்—கடைசியில் ஸந்தித்தனர். நவகுமாருடைய மரணத்தைக் குறித்துக் கோகுலதாஸைப்போல் அவ்வளவு விசனமடைந்தவர் வேறெவருமில்லை. அரசன் அமைச்சன் இருவர்களுடைய சரித்ரமும் ஒன்றுடனொன்று சிக்கிக்கொண்டிருந்தது; ஒன்றையறியாமல் மற்றொன்றைத் தெரிந்துகொள்வது அஸாத்யம். இருவருடைய ஸுக துக்கங்கள் யாவும் ஒன்றே; நவகுமாரர் தன் நாட்டையிழந்து துன்பப்பட்டபோது, கோகுலதாஸும் அவருடன்சென்று அவருடைய துன்பங்களைத் தானும் அனுபவித்தார். இவ்வளவு துன்பங்களுக்கிடையில், இழந்த ஜமீனைத் திரும்பிப்பெறக் கோகுலதாஸ் பட்டபாடு எல்லோருக்கும் தெரியும். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். கோகுலதாஸ் வ்ரதம் நிறைவேறியது. நவகுமாரர் தன் ஜமீனைத் திரும்பப்பெற்றார். கோகுலதாஸின் எண்ணங்களும் செயல்களும் அதனுடன் த்ருப்தியடைந்து நிற்கவில்லை. யஜமானருக்கு வேறொரு லாபம் செய்துவைக்க அவர் ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தார். அவ்விஷயமான ப்ரயத்னங்களெல்லாம் அநேகமாய் முடிந்துவிட்டன. ஜயம் வெகு சீக்ரத்திலிருந்தது; கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை என்றவாறு, நவகுமாரர் கடைசி க்ஷணத்தில் மோசஞ்செய்துவிட்டார். வேலை பூர்த்தியாகும் தருவாயில், ஆயுதம் ஒடிந்துவிழிக்கும் தொழில்காரனை யொத்தார் கோகுலதாஸ். அவர் நவகுமாருடைய மரணத்தைக் குறித்து மனப்பூர்வமாய்த் துக்கப்பட்டார். கோகுலதாஸுக்குப் பெண்டுபிள்ளைகள் கிடையாது. அவர்கள் போயிருந்தாலுங்கூட அவர் அவ்வளவு துக்கப்பட்டிருக்கமாட்டார். அவருக்கு மனைவி, மக்கள், குடும்பம் யாவும் நவகுமாரரும் தேவிபுரத்து ராஜகுடும்பமுமே. ஈவு, இரக்கம், பக்ஷம், பரிதாபம் ஒன்றுமுணராத கல்நெஞ்சர் அவர்; இருந்தாலும், அந்த யஜமான ஊழியத்தில் நாய்போ லுழைத்து வந்தார்; நாய்போலவே அவர் நாற்பதுவருஷ காலமாக ஒரு நிமிஷமாவது தன் யஜமானரை விட்டுப் பிரிந்ததில்லை. தேவிபுரத்துக்கே தன் ஆத்மா, சரீரம் யாவற்றையும் அர்ப்பணம் செய்திருந்தார். வெளியார் அனைவரும் நவகுமாருடைய துக்கம், பாசாங்கென சாதித்தனர். அவர்களுக்கு உண்மை என்ன தெரியும்? அவர் பிள்ளை பிறந்து கண்ணினின்று ஜலம்விட்டது, நவகுமாரரது மரணத்தின் போதுதான்.

ப்ரேதத்துடன் கங்காநதிக்குச் சென்று அங்கே க்ரியைகள் முடிந்தவுடன் ஸ்நானஞ்செய்துவிட்டுக் காலுக்குப் பாதரக்ஷையின்றியே அவர் ஊர்வந்து சேர்ந்தார்; ஸிரீஷனுடனிருந்து, இறந்தோர்க்குரிய இதர காரியங்களையெல்லாம் நடத்திவைத்தார். சிராத்தாதிகளெல்லாம் முடிந்து, ஸிரீஷன் ஜமீனுக்கு யஜமானனாய் ஸ்தானம் வஹித்தபோது, கோகுலதாஸ் அவனைத் தன் தலைவனாக அங்கீகரித்து, மேலே நடக்கவேண்டிய விஷயங்களுக்கு அவனுடைய கட்டளைகளை எதிர்பார்க்கலானார்.

காலக்ரமத்தில் கட்டளைகளும் பிறந்தன. இனி இவ்வுலகத்துக்கும் தனக்கும் யாதொரு பந்தமுமில்லை, தான் போகும் வழிக்கு ஏதாவது புண்யம் தேடிக் கொள்ளவேண்டும் என்று நினைத்து நவகுமாருடைய மனைவி, யமுனாநதி தீரத்திலுள்ள மதுராபுரி சென்று, எஞ்சிய தன் ஆயுளைப் பகவத் கைங்கர்யத்தில் கழிக்கவேண்டுமென்றாள். ஸிரீஷன், ஹேமலதை, சைவலிநி மூவரும் அவளுடன்சென்று மதுராபுரியில் அவளுக்கு ஸரியான விடுதி முதலிய ஸௌகர்யங்கள் அமைத்துவைத்துத் திரும்பவேண்டுமென்று ஏற்பாடாயிற்று. ப்ரயாணத்துக்கு வேண்டிய ஸந்நாகங்கள் செய்வது கோகுலதாஸின் பொறுப்பாயிற்று. ராஜமஹல் வரைக்கும் வந்து, தங்களை வழிவிட்டு ஊருக்குத் திரும்பித் தான் மறுபடியும் ஊர் வந்து சேரும்வரையில், ஜமீன் வ்யவஹாரங்களைக் கவனித்துவரும்படி ஸிரீஷன் கோகுலதாஸுக்குக் கட்டளையிட்டான்.

கோகுலதாஸ் பதிலொன்றும் சொல்லாமல் அப்படியே செய்வதாக ஒத்துக்கொண்டார். ப்ரயாணத்துக்கு வேண்டியனயாவும் தயாராய் விட்டது. ஸமஸ்தான புரோஹிதர் வைத்த

முகூர்த்தம் இன்னும் வரவில்லை. அந்த நாளுக்காக எல்லோரும் காத்திருந்தனர். நவகுமாருடைய மனைவி தேவிபுரத்தைவிட்டு அகல்வதற்குமுன், தான் அவளை ஒருமுறை கண்டு சில வார்த்தைகள் பேசி அவளுடைய ஆசீர்வாதத்தையும் பெறுவதற்கு விரும்புவதாகக் கோகுலதாஸ் செய்தி சொல்லியனுப்பினர்.

இருவரும்—நவகுமாருடைய மனைவியும் கோகுலதாஸும்—கடைசியில் ஸந்தித்தனர். ஆனால் முன் முறைகளில் போலன்று. அவர்களுடைய அஹங்காரங்களெல்லாம் அடங்கிவிட்டன. அவர்களுடைய தீர எண்ணங்களெல்லாம் விதிவசப்பட்டு, ஒருவாறாக முடிவுக்கு வந்துவிட்டன. அவர்களுடைய அந்த்ய காலமும் நெருங்கியது. எல்லாவிதத்திலும் தற்போதைய ஸந்திப்பு நூதன ஸந்திப்பே. பூர்வத்தில் இருவரும் போட்டியிட்டுக்கொண்டு எவ்வளவோ ஏற்பாடுகளெல்லாம் செய்தனர்; எத்தனையோ முறை மனஸ்தாபப்பட்டனர்; பல முறையும் ஒவ்வொருவரும் தத்தம் மனதிலேயே திடப்ரதிஜ்ஞைகள் செய்து கொண்டனர். எவர் பக்கம் ஜயமோ, எவர் பக்கம் தோல்வியோ, எல்லாம் முடிவெய்திவிட்டன். கோகுலதாஸ் வந்து தலைகுனிந்து வணங்கியபோது, அம்மாது சிரோமணி தன் கோபதாபங்கள் யாவற்றையும் அறவே மறந்துவிட்டு, நயவசனங்கூறி அவரை ஆசீர்வதித்தனள். காஷாய உடை தரித்துத் துறவியாய் விளங்கும் அவ்வயோதிக மாது தன்னை ஆசீர்வதித்தபோது, ஒரு க்ஷண நேரம் கோகுலதாஸ், தான் அவளுக்கு த்ரோஹம் புரிந்ததாக நினைத்தார். தான் சிறு பையனாய்த் திக்கற்றுத் தெருவில் திரிந்தபோது, தன்மீது தயைகொண்டு தன்னை அழைத்து அப்புண்யவதி ஆதரித்த காலம் கோகுலதாஸுக்கு ஞாபகம் வந்தது. டில்லி சக்ரவர்த்தியவர்களைக் கண்டு கூட கோகுலதாஸ் அதிகமாய் மனம் வணங்கியதில்லை. அப்பேர்ப்பட்டவர் இத்தருணம் புன்னகை புரியும் அந்நரைமயிர் ஸந்யாஸினி முன், ந்யாயாதிபதி முன் குற்றவாளியென, மனம் அழுந்தினர்.

"ஸம்ஸார பந்தத்தினின்றும் விடுபட்டு உலகத்தைத் துறந்து தாயார் மதுராபுரி செல்கிறாள் போலும்!" என்று கோகுலதாஸ் அதிவிநயமாய்க் கேட்டார்.

"அப்படித்தான் உத்தேசித்திருக்கிறேன். நம் உத்தேசம் என்ன, மனுஷ்ய கார்யம். தெய்வம் என்ன என்ன நினைத்திருக்கிறதோ?"

"அம்மையின் அந்த்ய கால விருப்பத்துக்கு ஒருவித குறைவும் ஏற்படாது. ஸர்வேச்வரன் அம்மையின் மனோபீஷ்டத்தை நிறைவேற்றி வைப்பார். அவருடைய பாதாரவிந்தங்களில் திவ்யஸேவை செய்துகொண்டு பரமானந்தமாயிருக்கலாம். மஹாபாபிகளாகிய நாங்கள்தான், இந்த ஸம்ஸார ஸாகரத்தில் ஆழ்ந்து கரையேற வழிதெரியாமல் தத்தளிக்க வேண்டியவர்கள். தாயார் நித்யானந்த ஸுகம் அனுபவித்துக் கொண்டிருக்கும் போது, குழந்தைகளாகிய நாங்கள் தாயாரின் பிரிவை யாற்றாது அஜ்ஞானத்தால் வருந்திக் கொண்டிருப்போம்."

"கோகுலதாஸ், உலக வ்யாபாரங்களுக்குச் சற்றும் பயன்படாத இந்தக் கிழவி போய்விட்டதைப்பற்றிப் பலர் வருத்தப்படமாட்டார். காலவகையினால் பழையன கழிதலும், புதியன புகுதலும் ஸஹஜமே. சீக்ரத்தில் என் புதல்வி, தன் க்ருஹக்ருத்யத்தில் ஆழ்ந்து விடுவாள். ஸிரீஷனும் ராஜவம்சத்துக் கீர்த்தியைப் பாதுகாக்கு நிமித்தம் ஜமீன் விஷயமாய் உழைக்கத் தலைப்பட்டுவிடுவான்."

"தாயாரின் வாக்கு ப்ரகாரமே எல்லாம் நடக்கும்."

"ப்ரயாண ஏற்பாடுகளெல்லாம் ஆயிற்றா, கோகுலதாஸ்?"

"ஸகல ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன. எல்லாம் தயாராயிருக்கின்றன. ராஜமஹல் வரைக்கும் செல்ல இரண்டு பல்லக்குகளும், ஆட்களும் ஸித்தமாய்விட்டன. அங்கே இரண்டு படகுகள் அதற்கு வேண்டிய மாலுமிகளுடன் ஏற்பாடாயிருக்கின்றன. படகிலேயே மதுரை சென்றுவிடலாம். வழிக்குத் துணையாய் இருபது போர்வீரர்கள், உடன்வர ஸித்தமாயிருக்கிறார்கள்."

"நிரம்பவும் த்ருப்தி, கோகுலதாஸ்! நீர் என்றைக்கும் தேவிபுரத்தாருக்கும் எனக்கும் அதிக நம்பிக்கையான ஊழியராயிருக்கிறீர் என்று சொல்லவும் வேண்டுமா?"

நவகுமாரரின் மனைவி ப்ரீதியாய்க் கூறிய மொழிகளாயினும், அவைகளைக் கேட்டுக் கோகுலதாஸுக்குக் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கலாயிற்று. 'எனக்கும் அதிக......ஊழியராய்..." என்பதைக் கேட்டவுடன் அவருடைய முகவிலாஸம் சிறிது மாறிற்று. "கோகுலதாஸ், நான் வழியில் வாரணாசியில் சிறிது தாமதிப்பதாக உத்தேசம். கங்கமாதா வடமுகமாக ப்ரவஹிக்கும் அப்புண்ய க்ஷேத்ரத்தில் திருக்கோயில் கொண்டருளும் ஸ்ரீ விச்வநாதரைத் தரிசித்துச் செல்வது உத்தமமன்றோ?"

"அம்மையின் கருத்துகளை யான் முன்னமே அறிவேன். ஆதலால் அந்த க்ஷேத்ரத்தில் தங்கியிருப்பதற்கு வேண்டிய ஜாகை முதலிய ஸௌகர்யங்களெல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறேன். படகுக்காரர்களும் தாங்கள் இருக்கு மட்டும் அங்கே காத்திருப்பார்கள்."

"நீல நிறமான யமுனாநதி கங்காநதியுடன் கலக்குமிடமாகிய ப்ரயாகையிலும் இறங்கி நீராடவேண்டும். அவ்விடத்தில் ஸ்நானம் செய்பவர்களுக்கு அதிக புண்யமுண்டாம். அந்த ஸ்நானத்துக்கு விசேஷமான புண்ய காலம் ஒன்றுண்டு. அதற்குள் அவ்விடம் போய்ச் சேரவேண்டும்."

"அங்கேகூட ஜாகை ஏற்பாடாயிருக்கிறது. வங்காளத்திலிருந்து செல்பவர்களுக்கு அந்த ஊர் அதிக தேக ஸௌக்யத்தைக் கொடுக்கிறதாம். நம்மூர் சதுப்பு பூமி; ப்ரயாகையிலோ இவ்வளவு நீர் நிலைகளும் சதுப்பு பூமியும் கிடையாது. காற்றுக்கூடச் சிறிது வரட்டுக் காற்றாயிருக்கும். ஜமீன்தாரர் கீழேபடுத்தது முதற்கொண்டு நமது புதிய ஜமீன்தாரர் ஸிரீஷருக்கு அதிக அலைச்சல். ஆனால் உடம்பு ரொம்பவும் இளைத்துப்போயிருக்கிறது. சிறிது காலம் வெளியூர் போய்வருவது உத்தமம்."

"நீர் சொல்வது ரொம்பவும் ஸரி, ஸிரீஷன் உடம்பு இளைத்திருப்பது வாஸ்தவமே. அவன் தன் தேகத்தைப்பார்த்துக்கொள்ளவேண்டும். என்னுடன் மதுராபுரி வரைக்கும் வந்துவிட்டு வருவது அவனுடைய தேகத்துக்கு அதிக அநுகூலமாயிருக்குமென்பதில் ஆக்ஷேபமில்லை. ஊரைவிட்டுச் சென்றால் ஜமீனை யார் மேல்பார்த்து வருவது என்ற கவலைக்கும் இடமில்லை. ஸத்ய ஸந்தராகிய அமைச்சரே! தாங்களிருக்க ஸிரீஷனுக்கு என்ன குறை? கோகுலதாஸ், இந்த ஜமீன் விஷயத்தில் என்றைக்கும் ஒரே சீராகத் தாங்கள் நம்பிக்கையாய் உழைத்து வருகிறீர். உங்கள் பார்வையில் ஜமீனை விட்டுச் செல்வதில் யாருக்குத்தான் என்ன ஆக்ஷேபம்?"

நவகுமாரரின் மனைவி கடைசியாய்ச் சொன்ன வார்த்தைகளைக் கேட்டுக் கோகுலதாஸ், "என்ன நயமொழி, என்ன ஹிதவார்த்தை, இந்தப் பாழும் சாதுர்ய வார்த்தைகளால் தான் இவள் சத்துருக்களைக்கூட வசியப்படுத்திவிடுகிறாள். இவளுடைய கணவன் வார்த்தைமேல் வார்த்தையாய் இடைவிடாமல் சரமாரியாய்த் தூஷிக்கும்போதுகூட நான் அவருக்கு இளைத்தகில்லை. எல்லாம் இடி இடித்து மழைபெய்து ஓயட்டுமென்று சும்மா விருந்து கடைசியில் என் கார்யத்தைச் சாதிப்பேன். அப்பேர்பட்டவனிடங்கூட இந்த ஸ்திரீயின் நயமொழிகள் கூரான அம்புகளைப் போல் மனதில் பாய்ந்து பதிகின்றன" என்று மனதுக்குள்ளேயே நினைத்தார்.

"இந்த யமுனா நதீதீரத்திலுள்ள நாடு அதிக ரமணீயமானதாம். ப்ரதிக்ராமங்களிலும் புராதன பாடல்பெற்ற ஆலயங்கள் பல இருக்கின்றனவாம். அவ்வாலயங்களுக்கு வரும் ஜனங்களின் தொகை எண்ணுதற்கு அரியதாம். அத்தேசத்தவர்களுடைய பாஷையும் வேறாம்; நடையுடை பாவனைகளும் வேறாம். ஆயினும், அவர்களுடைய கோயில்களுக்குள் எல்லோரும் சென்று ஸ்வாமியை வணங்கலாம் என்று சொல்லுகிறார்கள்."

"வட இந்தியா முழுவதும், காலஞ்சென்ற நமது ஜமீன்தார் நவகுமாரரை அறியாதவர் கிடையாது. அவரிடம் அவர்களுக்கு அதிக மர்யாதை. அவருடைய மனைவி மக்களென்றால் அனைவரும் அன்பு பாராட்டி வேண்டிய உபசாரங்களெல்லாம் செய்வார்கள் என்பதற்குத் தடையில்லை."

"ப்ரயாகைக்கும் நமது பாதுஷா சக்ரவர்த்திப் பெருமான் வசிக்கும் நகரத்துக்கும் அதிக தூரமாமே? அந்நகரின் பெயரென்ன?"

"அந்நகரின் பெயர் ஆக்ரா. போய் வந்தவர்கள் சொல்லுகிறார்கள், அந்நகரைப் போன்ற திவ்ய நகர் இந்த உலகிலேயே காண்பதரிதாம். அந்நகரின் அமைப்பும், வனப்பும், அவ்விடமுள்ள மாடமாளிகை கோபுரங்களின் அழகும் மனிதனால் எடுத்துரைக்கத் தரமன்று எனப் பலர் எனக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆக்ரா நகரத்துப் பெரிய வ்யாபாரிகள் சிலர் தேவிபுரத்தில் தங்களுடைய கடைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் மூலமாய்த் தங்களுக்கு ஆக்ராவில் தகுந்ததொரு விடுதி ஏற்பாடு செய்திருக்கிறேன்."

"நாம் அங்கே பகவத் க்ருபையால் ஸௌக்யமாய்ப் போய்ச் சேரவேண்டும். பாதுஷாவையும் அவருடைய மாளிகை, அந்தப்புரம் முதலியவற்றையும் பார்க்க வேண்டுமென்று விரீஷன் அடிக்கடிச் சொல்லி வருகிறான். ஹேமலதையும் ராணியார், பேகங்கள் இவர்களுடைய ஸலவைக்கல் மாளிகைகளையும் அந்தப்புர நந்தவனங்களையும் பார்க்க ப்ரியப்படுகிறாள்."

"ஸகஜந்தானே; அவர்களிஷ்டப்படியே பார்த்து மகிழட்டும். சக்ரவர்த்திப் பெருமான் அவர்களே ராஜா மான்ஸிங் மூலமாய் நமது பூர்வ ஜமீன்தாரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாராதலால், அவருடைய குடும்பத்தாரைக் கண்டு பேசுவதில் அவர் அதிக விருப்பங் கொள்வார்."

"கோகுலதாஸ், எனக்கு மர்யாதை கௌரவம் ஒன்றும் வேண்டாம். நான் போவது மதுராபுரிக்கு. உத்தேசம் ஸந்யாஸினியாய்க் காலங்கழிப்பது. எனக்கென்ன மர்யாதை வேண்டியிருக்கிறது? ஏதோ ஆக்ராவும் வழியிலிருக்கிறது. ரொம்பகாலமாய்க் கண்காணாமல் போய்விட்ட ராஜகுமாரன் நரேந்த்ரனைப் பற்றித் தலைநகரில் விசாரித்தால் ஏதாவது விஷயம் தெரியக் கூடுமென்று விரீஷனும் எண்ணுகிறான். அதை யுத்தேசித்து ஆக்ராவில் தங்கவேண்டியிருக்கிறதே யொழிய, சாகக்கிடக்கும் எனக்கு அங்கே வேறென்ன வேலையிருக்கிறது?"

"ஓஹோ! நரேந்த்ரனைப்பற்றிப் பேச்சு எடுத்துவிட்டாளா? இவள் ஏதோ கள்ள எண்ணம் கொண்டிருக்கிறாள். நாம் ஜாக்ரதையாயிருக்கவேண்டும். இத்தனை காலம் இவளுடன் மல்லிட்டு இன்றைக்குப் பின் வாங்கிவிடுவேனா?" என்று தீரப்படுத்திக் கொண்டார் கோகுலதாஸ்.

"கோகுலதாஸ், ஒன்பது வருஷமாகவில்லையா, பாவம், அந்த வீரதீர வாலிபன் தேசத்தை யிழந்து தேசாந்த்ரியாய்ப் புறப்பட்டு? கஷ்டம்! கஷ்டம்!"

"ஸரி, இனி நம் வேலையைப் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான்" என்று நினைத்துக் கோகுலதாஸ் ஆடு நனைந்துபோகிறதே என்று அந்தரங்க துக்கத்துடன் அழுத ஓநாயைப்போல், "அம்மா, ஒன்றிரண்டு வருஷமல்ல. ஒன்பது வருஷம் பூர்த்தியாய் ஆயிற்று. நானும் அக்குழந்தைக்காக அழுதழுது கண்ணும், உலர்ந்துபோய்விட்டது. யஜமானர், புத்ரனில்லாத குறையைக்கூட மறந்து அவ்வாலிபனைத் தம் சொந்தப் புத்திரனாகப் பாவித்து வந்தார். வாலிபத்தனம் சிறிது துடுக்கு; நரேந்த்ரனுக்கும் வீரநகரத்துக்கர்வமும் அகம்பாவமும் சிறிது இருந்தன" என்று அதிக வணக்கமாய்ப் பதில் சொன்னார். உடன்பிறந்தானுடனேயே பிறந்தகத்து ஜம்பம் பேசும் தன்மையர்களாயிற்றே ஸ்த்ரீகள். வெளியார்ப் பிறந்தகத்தைப்பற்றித் தூஷித்தால் பொறுப்பார்களா? நவகுமாரருடைய மனைவிக்கு ஆக்ரோஷம் உண்டாய்விட்டது. "கோகுலதாஸ்! அதிசயமா அந்தப் பெருமையும் அகம்பாவமுமிருப்பது? அவன் பிறந்த குலமென்ன? வம்சமென்ன? கடுகு செத்தாலும் காரம்போமா?" என்றாள் அவ்வீர நகரத்துக் குமாரி. சற்றுப் பொறுத்து "அகம்பாவம் ஆகாது என்பது வாஸ்தவந்தான். அக்குழந்தை படாதபாடும் பட்டாய்விட்டதே" என்று வணங்கி விட்டாள்.

இதுதான் ஸமயமென்று கோகுலதாஸ் ஆரம்பித்துவிட்டார். "ராஜாமான்ஸிங் அவனிடம் அதிக அன்பு பாராட்டிய போதிலும், அவனென்னமோ வேண்டிய மட்டும் அனுபவித்தாயிற்று. நமது யஜமானருடைய ப்ராணனுக்கே உலைவைக்க முயன்ற அச்சிறுவனை ராஜாமான்ஸிங் தவிர வேறொருவராயிருந்தால் ஒருக்காலும் மன்னித்திருக்க மாட்டார்."

"எப்பேர்ப்பட்ட ஹீனமான செயல்களைக்கூட மன்னித்துவிடும் பெருந்தன்மையுள்ள தெய்வம், அறியாத்தனத்தாலும் பால்யத்தாலும் ஏற்பட்ட குற்றத்தையும் பாவத்தையும் மன்னிக்காமல் போய்விடுமோ? இன்றைக்கோ நாளைக்கோ என்றிருக்கும் நிலைமையில்கூட யாருக்கென்ன தீங்கு செய்யலாம்; எவர் பொருளை யபகரிக்கலாம்; எந்தக் குடும்பத்தை வேறுபடுத்தி வைக்கலாமென்று துராலோசனைகள் செய்து சூழ்ச்சி செய்யும் நம்மைப் போன்ற கிழங்கள்கூட அவருடைய தயையையும் காருண்யத்தையும் எதிர்பார்த்து நிற்கிறோம்" என்று சாந்தமாய் விடை பகர்ந்தாள் நவகுமாரருடைய மனைவி.

கோகுலதாஸுக்கு ஏன் வாயைத்திறந்தோமென்று ஆய்விட்டது.

"ஸரி, போது போகிறது. இந்த விஷயங்களைப்பற்றியெல்லாம் வீண்வார்த்தை பேசிக்கொண்டிருக்க எனக்கு இஷ்டமுமில்லை, ஸாவகாசமுமில்லை. நரேந்த்ரன் விஷயமாகவும் அவன் பாட்டனார் ஜமீன் விஷயமாகவும் விரீஷன் உம்முடன் இரண்டொரு வார்த்தை பேசவேண்டியிருந்தாலிருக்கும். அவைகளைப் பற்றி நானேன் கவலைப்படவேண்டும். ஆக்ராவுக்கும் மதுராவுக்கும் எவ்வளவு தூரம்? எத்தனை தினங்களிற் செல்லலாம்? அதைச் சொல்லும். என் ஆவி, உயிர் எல்லாம் அங்கேயே இருக்கிறது. அந்த க்ஷேத்ரத்தைக் கண்ணால் கண்டபின் ப்ராணனை விடவேண்டுமென்றிருக்கிறேன். ஸர்வேசுவரன் என் மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்துவைக்க வேண்டும்."

"தாயே, ஆக்ராவிலிருந்து மதுராபுரிக்கு அதிக தூரமில்லை. படகில் சென்றால் ஒரு நாளில் போய்ச் சேரலாம்."

"அப்படியானால், என் கோலத்துக்கேற்ப எனக்கு யமுனா நதிக்கரையில் ஒரு சிறிய வீடு ஏற்பாடு செய்யும். அங்கேயிருந்து ப்ரதி தினமும் ஸூர்யோதய காலத்தில் நதியில் தீர்த்தமாடிக் கோயில்கள் சென்று பகவானைப் பூஜைசெய்து இவ்வுலக வ்யாபாரங்களில் மனதைச் செலுத்தி அவஸ்தைப்படாமல் நிம்மதியாய்க் காலங் கழிப்பேன்."

"தாயாரின் கோரிக்கை யனைத்தும் கைகூடும். எங்களை விட்டு வெகு தூரம் சென்றாலும் அம்மை, நிம்மதியாய், நோய் நொடியின்றிப் பகவத்பாதாரவிந்தங்களில் தொண்டு புரிந்து காலங்கழிக்க வேண்டும்."

"கோகுலதாஸ், இன்னுமொரு வார்த்தை. நீர் சிறுபையனாயிருந்ததும் எனக்குத் தெரியும்; நீர் வயது வந்து தேவிபுர ஜமீன் மந்த்ரியாயிருந்ததையும் நான் அறிவேன். அநேக ஆண்டுகாலம் உமக்கு நான் அன்னமிட்டிருக்கிறேன். இதோ இன்னும் சிறிதுக்கெல்லாம் உம்மைவிட்டுப் போகப் போகிறேன். இதுதான் நாம் கடைசி முறையாய் ஸந்திப்பது. நான் சென்ற பின்னர், என்னிடம் நீர் த்வேஷமில்லாதிருக்க வேண்டுமென்று நான் கோருகிறேன். நம் ஸமாசாரம் கொடாகண்டன், விடாகண்டன் ஸமாசாரம். அகாரணமாய்ப் பல தடவை நாம் ஒருவர்மீது ஒருவர் கோபங் கொண்டிருக்கிறோம். சில தடவைகளில் பரஸ்பர த்வேஷமும் விரோதமும் உண்டாயிருக்கின்றன. நாம் எல்லாவற்றையும் இன்றுடன் மறந்து விடவேண்டும். இப்பூவுலகில் நாம் இனி ஸந்திக்கமாட்டோம். பகவானுடன் சாந்தியடையுமுன் நம் ஸஹோதர ஸஹோதரிகளுடன் ஸமாதானஞ் செய்துகொள்வது இன்றியமையாதது. என் வாழ்நாட்களில் நீர் எனக்கு விளைவித்ததாக நான் கருதியிருக்கக்கூடிய குற்றங்கள் கெடுதிகள் யாவற்றையும் நான் மனப்பூர்வமாய் மன்னித்து விடுகிறேன். இவ்வாறே பகவானும் நான் செய்துள்ள குற்றங்குறைகளை மன்னித்து விடுவாரென்ப் பூரணமாய் நம்புகிறேன். மகனே, ஈசுவரன் உன்னை ஆசீர்வதிப்பாராக"

அவள் கண்களினின்று நீர்த்துளிகள் சலசலவென்று உதிர்ந்தன: வார்த்தை முடிந்தது. கண்களைத் துடைத்துக்கொண்டாள். கோகுலதாஸுக்கு அந்தப் புனிதஸ்த்ரீயிடம் என்றுமில்லாத ஒரு வித பயபக்தி உண்டாயிற்று; மயிர்க் கூச்செறிந்தார்; அவள்முன் ஸாஷ்டாங்கமாய் நமஸ்காரஞ்செய்தார். மறுபடியும் ஒருமுறை ஆசிகூறி எழுந்திருக்கச்சொன்னாள். கோகுலதாஸும் எழுந்து, நெற்றியிலரும்பியிருந்த ஜலத்தைத் துடைத்துக்கொண்டு தன் உண்மை நிலை யறிந்தவராய் எண்ணமிட்டுக்கொண்டே மௌனமாய் வீட்டுக்குச் சென்றார்.

**பீமலா அல்லது திவான் மகள்**

**மிஸ்டர் ஆர்.பி. குழந்தைசாமிப்பிள்ளை, பி.ஏ., எல்.டி, இயற்றியது.**—வாசிப்பவர் மனங்களிக்கச் செய்யும்படியானதும், புத்தி புகட்டும்படியானதுமான சரித்திர ஸம்பந்தமான நாவல். விலை அணா 6.

**விலாஸம்:—மானேஜர், 'விவேக போதினி' மயிலாப்பூர், சென்னை.**

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### S. S. L. C—1912 (*Continued*).

I. Write a short essay on *one* of the following:—

(*a*) The use of holidays (*already done*)
(*b*) *Asoka* (*taken up here*)
(*c*) Irrigation tanks (*in the next*)

II. Write a short account of *one* of the following:—

(*a*) *How Troy was taken* (*taken up here*)
(*b*) *How well Horatius kept the bridge in the brave days of old* (*taken up here*)
(*c*) A recent event of general interest (*in the next*).

### I (*b*). அசோகன்

*பொதுவிஷயங்கள் — முதற்செயல்கள் — கல்வேலைப்பாடுகளின் தன்மை — பௌத்தமதப் பிடிப்பு — அரசாண்டவிதம் — பௌத்தமதம் பரவச்செய்த ஏற்பாடுகள், பயன் — ஸம்பந்தமான கதைகள்.*

சற்றேறக்குறைய 2190 வருஷங்களுக்கு முன்னர், ஸுமார் 41 வருஷங்கள் மிகச் சிறப்புற்று நம்பரதகண்டத்தின் மிகுதியான பாகங்களை ஒரு குடைக்கீழ் அரசாண்டுவந்த ஒரு பெரிய அரசன் அசோகன் என்பவன். இவன் மௌர்ய ராஜ வம்சத்தை ஓங்கும்படி செய்த சந்திரகுப்த மஹாராஜனது பேரன். இவனுக்கு அசோக வர்த்தனன் என்ற பெயரும் உண்டு. இவன் முன்னோர்களிடமிருந்தே மைஸூருள்பட வடக்கேயுள்ள இந்தியாவின் பாகங்களும், மேற்கேயுள்ள சில நாடுகளும் இவன் அரசாட்சிக்குள் வந்து சேர்ந்தன. இவன் அரசுரிமைக்கு வந்த மூன்று வருஷத்திற்குப் பின்னர்தான், முடி சூட்டிக்கொண்டான். இதற்குப்பின் எட்டு வருஷமானதும் கலிங்க தேசத்தின்மேல் இவன் படையெடுத்து அதையும் தன் ஆட்சிக்குட்படுத்த முயன்றான். இதில் பெரும் போருண்டாகிக் கலிங்க நாட்டார் வெகு திடமாக இவனை எதிர்த்ததால், அவர்களுள் பலர் மாண்டுபோகும்படியும், பலர் அடிமைகளாகி விடும்படியும் நேர்ந்தது. இதைக் கண்ணுற்றதும் இவனுக்கு அடங்கா அனுதாபம் மேலிட, அது முதல் சண்டைக்கே போவதில்லை என்று சபதம் செய்துகொண்டு, தன்னால் கலிங்க தேசத்தார்களுக்கு நேர்ந்த ஆபத்துகளை எண்ணி மன முருகியதை அவன் எழுத்து மூலமாகவும் வெளியிட்டான்.

இது முதல், பௌத்த மதத்தில் பிடிப்பு இவனுக்கு ஏற்பட்டு இது வரவர மிகுந்துகொண்டே வந்தது. இதனால் இவன் (1) கொல்லாமையை முன்னிட்ட ஜீவகாருண்யம், (2) எல்லோரிடத்தும் மரியாதையாக விருத்தல், (3) நேர்மை, (4) பிறர் மதங்களைப் பழியாமை, ஆகிய இந்நான்கு விஷயங்களையும் ஆதாரமாகக்கொண்ட 14 தாக்கீதுகளை ஏற்படுத்தி அவைகளைக் கற்றூண்கள், ஸ்தூபங்கள் என்ற பெரிய உருண்டையான கட்டிடங்களை முதலிய கல்வேலைப்பாடுகளில், என்றும் அழியாது செதுக்கித் தன் ராஜ்யங்களில் பற்பல விடங்களில் அமைத்து வெளியிட்டான். தான் கலிங்கதேச விஷயமாகப் பட்டபாடுகளையும் இவைகளில் ஒன்றில் அவன் வெளியிட்டிருந்தான். இம்மாதிரியான கற்கம்பங்கள் முதலிய இருக்கும் இடங்களே அசோகன் ராஜ்ய எல்லைகள் என ஒருவாறு மதிக்கலாம்.

இவன் ராஜ்யம் ஆளத் தொடங்கி, 21 வருஷங்களுக்குப் பின் இவனுக்குப் பௌத்தமதப் பிடிப்பு திடப்பட இவன் ராஜ்யத்தில் ப்ராணிகளைக் கொல்லக்கூடாது என்ற தாக்கீதும் செய்து, தன் ஆட்சிக்கு வெளிப்பட்டவர்களிடத்தும், நாகரீகமற்ற ஜாதியார்களிடத்தும் இதைப் பரவி ஓங்கும்படி செய்யவேண்டிய ஏற்பாடுகள் தன் கீழதிகாரிகள் வழியாக இவன் செய்தான்: வேட்டையாடப் போவதையும் அரண்மனையில், தன் உணவிக்காகச் செய்து வந்த கொலைகளையும் திடமாக நிறுத்திவிட்டான். பௌத்தர்களுக்கு மிகச் சிறந்ததாகவுள்ள புண்ய ஸ்தலங்களுக்கெல்லாம் தீர்த்த யாத்திரையாகப் புறப்பட்டு ஆங்காங்கே கற்றூண் முதலியவைகளில் தாக்கீதுகள் செதுக்கி நட்டுவைத்துக்கொண்டு வந்தான் இவ்வரசன். இந்தக் கற்றூண் உத்தரவுகளிலிருந்தேதான் அசோகனது அரசாட்சிச் சிறப்பை நாம் இக்காலத்தில் நன்குணரமுடியும்.

அசோகன் தன் பெரிய ராஜ்யத்தை நான்கு சிற்றரசுகளாக்கி, அவைகளில் தன் பிள்ளைகளுக்காவது தன் நெருங்கிய உறவினர்களுக்காவது முடிசூட்டிவைத்தான். தன் அருகாமையிலுள்ள பாகங்களை இவைகளிலிருந்து பிரித்து, தன் கீழ் உத்யோகஸ்தர்களைக்கொண்டு தானே நேரே ஆண்டு வந்தான். ராஜ்யம் ஆளுவதற்கு வேண்டிய வரும்படி விஷயம், பட்டாள விஷயம், நிலவிஷயம், நீர்ப்பாசன விஷயம் இவைகளை ஒழுங்குபடி பற்பல சிறு உத்யோகஸ்தர்களிடம் பிரித்துவைத்து, எல்லாம் சரிவர நிறைவேறிவரும்படியான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதுவன்றி, ஜனங்களுடைய பொது நடவடிக்கைகள் நன்னடக்கை விஷயங்கள் இவைகள், கற்றூண் முதலியவைகளில் செதுக்கிக் காட்டியுள்ளபடி நடந்தேறுவதற்காக மேல்பார்வைக்காரர்களைத் தனியாக ஏற்படுத்தி, அசோகன் இவர்களை அரசாட்சி உத்தியோகஸ்தர்களுடன் இசைந்து தொழிற்படும்படி அமைத்திருந்தான். பெண்கள் ஒழுக்கங்கள் விஷயமாகப் பெண் உத்யோகஸ்தர்களும் இருந்தனர். எவரிடத்தும் பொது நன்மைகள் விஷயத்தில் கடுமையாகத் தன் உத்தரவுகளைத் தாக்காது, பசுமரத்தாணி போல் நயவழியாக அவைகளை வற்புறுத்த வேண்டுமென்று தன் உத்யோகஸ்தர்கள் எல்லோருக்கும் ஒரே பொது உத்தரவு கொடுத்திருந்தான். இதன்படி கலிங்கதேசத்தில் ஒருக்கால் நடவாமலிருந்த காலத்தில், தன் மேல், உத்தரவு, துயரம் இவைகளை ஒரு கற்றூணில் செதுக்கிக்கூட அவன் நாட்டும்படியாயிற்று. இப்படி எவ்வெத் தருணங்களில் எவ்வழியில் அரசாட்சியை ஜனங்களுக்கு இன்பம் பயக்கும்படி செய்யவேண்டுமோ, அவ்வழிகளில் சோம்பலில்லாது அவன் முயன்று வந்தான்; ஜனங்களின் குறைகளைக் கேட்டுத் தீர்ப்பதற்குத் தான் எப்பொழுதும் ஆயத்தமாக விருப்பதாகவும், அப்படியே தன் கீழ் உள்ளவர்களும் மிகக்கனிவுடன் இருக்க வேண்டுமென்பதை எழுத்து வழியாகவும், தன் நடத்தை வழியாகவும் எல்லோர் மனதிலும் பதியும்படி செய்தான்.

அசோகன் இவ்வாறு ஜனங்கள் நன்மையைக் கருதியே ஆண்டுவருகையில் எல்லோருக்கும் புத்தமதத்தைத் தெரிவித்து, தன் பிடிப்பையும் காட்டி அவர்களை மிகுந்த நய வழிகளால் சீர்திருத்தவேண்டும் என்ற பேராவல் அவனுக்கு உண்டாயிற்று. இதை ஒருவாறு காட்டவே, முன் காட்டப்பட்ட கல்மேலுள்ள உத்தரவுகளில் ப்ரியதாஸன் என்றே அசோகன் கையொப்பமிட்டிருந்தான். சிற்சில கற்றூண் உத்தரவுகளிலும் தன் புத்த மதப் பிடிப்பை நேராகவும் இவன் வெளியிட்டிருந்தான். இவை போதாவென்று பௌத்த ஸங்கப் பெரியோர்களைக்கூட்டி மத விஷய ப்ரஸங்கங்களுக்கு ஏற்பாடுகளும் செய்திருந்தான். தானும் பௌத்த ஸந்யாஸத்தை மேற்கொண்டான். பௌத்தமதத் தேர்ச்சியுடையவர்களைச் சுற்றுமுள்ள, சீனம், லங்கை, க்ரீஸ் முதலிய தூரமான தேசங்களுக்குங்கூட அனுப்பி, புத்தமதத்தைப் பலருக்குள் பரவும்படி செய்தான். பலர் பௌத்தர்களாகவும் மாறி மேன்மை பெற்றனர். இம்மதம் ஹிந்து மதத்தின் சில பாகங்களை மாத்திரம் வெளியிடுவதால், தனியாக இந்நாட்டில் நிலைக்க விடம்பெறாததாயிற்று; ஆனால் வெளிநாடுகளில் ஓங்கிப் பரவி, இன்றுந் தழைத்துலாவி வருகிறது.

பல ஜனங்களால் நன்கு மதிக்கப்பட்ட சிறப்பையுடைய பெரியோர்களைப்பற்றி நாளடைவில் விநோதமான பல கதைகள் ஏற்படும் என்ற ஒழுங்கிற்கேற்ப, அசோகனைப்பற்றிப் பல கதைகள் ஏற்பட்டுள்ளன. இக்கதைகள் எல்லாம் உண்மையாகவே இருக்குமென நம்ப வேண்டியதில்லை. இத்தகைய சிறந்த கதைகள் ஏற்படுவதற்கு வேண்டிய பொது அளவுக்கு மிஞ்சிய பேருற்றல் அசோகனிடமிருந்ததென்பதற்கு ஸந்தேகமில்லை. இக்கதைகள் பரதகண்டக் கதைகள் என்றும், லங்கைக் கதைகள் என்றும் இருவகுப்பாகப் பிரிக்கக் கூடியவைகளாக விருக்கும். பரதகண்டக் கதைகளைவிட லங்கைக் கதைகள், மிக விநோதமாகவும் புத்தமதச் சார்பாகவும் காணப்படும். அசோகன் பின்பற்றிய பௌத்த மதம் லங்கையில் வேரூன்றியதால், அங்கு முதலில்பௌத்தர்களானவர்கள் அவனை நன்கு மதித்திருந்தனர். பரத கண்டத்திலோ அசோகனது திறமை விஷயத்தில் நல்ல மதிப்பும் அவன் மத விஷயத்தில் பொதுவான மரியாதையும் மாத்திரம் இருந்தபடியால், பரத கண்டக்கதைகள் லங்கைக் கதைகளைப்போல ஒரு சார்பாகவும் வியக்கத்தக்கவைகளாகவும் இரா. எப்படியிருந்தபோதிலும், அசோகன் அரசாண்டுவந்த வழிகளால், அவன் க்ஷத்ரிய தர்மப்படி ஒழுங்கு தவறாது, புராணங்களில்

காட்டப்பட்ட அரசர்களைப்போல, செங்கோல் செலுத்தி, நம் பரதகண்டம் செழித்தோங்கும்படி செய்து, பிற்காலத்தவர்கள் பின்பற்றி நன்மையடையக்கூடிய பல வழிகளைக் காட்டியுள்ளான் என்பதை எவராலும் தடுத்துக் கூற முடியாது.

## II. (a) ட்ராய் பிடிபட்டவிதம்

*காரணம்—சண்டை நடந்தவிதம்—பிடிக்கயுக்தி உணர்ந்தவிதம்—தந்திரம் செய்த விதம்—அது நிறைவேறிய விதம்—ட்ராய் அழிந்த விதம்.*

ஐரோப்பா கண்டத்திலுள்ள க்ரீஸ் என்னும் தேசத்தில் ஸ்பார்ட்டா என்ற மாகாணம் ஒன்றுண்டு. அதில் முன் காலத்தில் மினிலேயஸ் என்பவன் அரசாண்டுவந்தான். அவனுக்கு அழகிற்சிறந்த ஹெலன் என்ற ஒரு மனைவி யிருந்தாள். இவர்களைப்பார்க்க, கீழ்புறத்திலிருந்த ட்ராய் என்ற பட்டணத்தரசன் மகன் பாரிஸ் என்பவன் வந்தான். அவன் ஹெலனை மயக்கித் தனக்கு மனைவியாகும்படி செய்து, அவளைத் தன்னூருக்கு அழைத்துப் போய்விட்டான். உடனே க்ரீஸ் தேசத்தார் எல்லோரும், இதைஒரு பெரிய அவமதிப்பாகக் கொண்டு, பெரிய கப்பற்படை சேர்த்து ட்ராயை நோக்கிச் சண்டைக்குப் புறப்பட்டனர். இதில் பெரிய யுத்த வீரர்களும் சேர்ந்தனர். ட்ராயை அணுகியதும் மினிலேயஸ், புத்திசாலியான யுலிஸ்ஸீஸ் என்ற வீரனுடன், பட்டணத்துள்புகுந்து ஆண்டினார் என்ற கிழவன் வீட்டில் தங்கியிருந்து ஹெலனைத் திருப்பிக் கொடுத்துவிட்டால் சண்டை தொடங்குவதில்லையென்று எவ்வளவோ ஸமாதானம் செய்யப்பார்த்தனன். ஹெலனின் அழகில் ஈடுபட்டிருந்த ட்ராய் நகரத்தார், போருக்கே தயாராயினர். இரண்டு க்ரீஸ்வீரர்களும் ஆண்டினாரது காப்பில் அபாயமின்றி இருந்து வெளியேறிச் சண்டை தொடங்கினர்.

கப்பற்போரும் நிலப்போரும் ஸுமார் 10 வருஷம் நடந்தது. இருவர் பக்கங்களிலும் பல சிறந்த வீரர்கள் இறந்தனர். வெற்றி ஒருவருக்கும் வந்தபாடில்லை. உடனே ட்ராய் தேசத்தார் தமது பட்டணக்கதவுகளை அடைத்து உள்ளே விலகிப்போய்விட்டனர். கப்பலிலிருந்த க்ரீஸ் நாட்டாருக்கு இன்ன செய்வதென்று ஒன்றும் தோன்றவில்லை. நீண்டகாலம் செய்த போரால் சலிப்பும் களைப்பும் எல்லோருக்கும் ஏற்பட்டன. வெற்றிபெறாது, இவ்வளவு நாள் செய்த போரை விட்டுப்போக அவர்களுக்கு மனமும் வரவில்லை.

இப்படியிருக்கையில், ஒரு புருவை ஒரு வல்லூறு துறத்திவருவதை க்ரீஸ்தேசப் பூசாரி ஒருவன் கண்டான். அப்புரு ஒருபாறையின் பிளவுள்சென்று ஒளிந்தது. வல்லூற்றிற்கு உள்ளேபோக முடியவில்லை. உடனே அது அருகாமையிலிருந்த செடிகொடி இலைகளுள் மறைந்துகொண்டது. கொஞ்ச நாழிகை கழித்து, புரு தலையை நீட்டியது. வல்லூற்றின் சச்சரவே இல்லாதிருந்தது. புரு மெதுவாக வெளியில் தைர்யமாகவந்து உலாவியது. அடுத்த க்ஷணத்தில் வல்லூறு அதன்மேல் பாய்ந்து கொன்று தின்றுவிட்டது. இதைக் கண்ட பூசாரிக்கு ட்ராய் நகரத்தாரை இம்மாதிரியான சூழ்ச்சியால்தான் மாய்க்கவேண்டும் என்று ஒரு எண்ணம் உண்டாக, அதை அவன் முக்ய வீரர்களிடம் தெரிவித்தான். புத்திசாலியான யுலிஸ்ஸீஸ் இவ்விஷயத்தை ஆராய்ந்து பார்த்து, ஒரு தீர்மானத்திற்கு வந்து, அதை மற்றவர்களிடம் எடுத்துக் கூறினான். 'இது மிக இழிவான தொழில். சூழ்ச்சியாலா வீரர்களை மாய்ப்பது?' என்று வாதாடினர் இருவீரர்கள். 'வேறு வழி இந்தக் கொடிய தருணத்தில் இல்லை' என்று அவர்களுக்கும் விளக்கி, யுலிஸ்ஸீஸ் தன் ஆராய்ச்சிக்கு அவர்களை இணங்கும்படி செய்தான்.

உடனே யுலிஸ்ஸீஸ், நுட்ப வேலையில் தேர்ந்த ஈபியஸ் என்ற தச்சனைக்கொண்டு காட்டில் சாய்ந்துள்ள மரங்கள் பலவற்றை உபயோகித்து, பெரிய மரக்குதிரை ஒன்று செய்து, அதற்குச் சகடையிட்டுநிறுத்தி, அதன் வயிற்றில் வெளியே திறக்கக்கூடிய கதவுடைய பெரிய வழிவிட்டு, படைக் கலங்களுடன் போர் வீரறிற் சிறந்தவர்களை ஏணியிட்டு அதனுள் நிறைய ஏறச் செய்தான். பின்னர் தாம் இருவரும், ஸைநான் என்றவனும் நீங்கலான மற்றவர்களை கப்பலேற்றி அருகாமையில் மறைவிலுள்ள தீவண்டை இருந்து, மலைமேல் விளக்கு இரவில் தெரிந்ததும், ட்ராயை வந்து தாக்கும்படி ஏற்பாடு செய்தான். க்ரீஸ் நாட்டார் போகத் தலைப்பட்டதும், ஸைநானை வெளியிலிருந்து தாம் போய்விட்டதாக நம்பிக்கை வரும்படி ட்ராய் நாட்டாருக்குக் கூறும்படி தாக்கீது செய்துவிட்டு, யுலிஸ்ஸீஸும் ஈபியஸும் குதிரை வயிற்றுள் புகுந்து, ஏணியை உள்ளே இழுத்துக்கொண்டு அடிக்கதவையும் உட்பூட்டிட்டுக்கொண்டனர். போன க்ரீஸ் நாட்டார், தமது கூடார முதலியவைகளைக் கொளுத்திவிட்டுப் போயிருந்தனர்.

இரவு முழுவதும் க்ரீஸ்தேசத்தார் படைவீடுகள் எரிவதைக் கண்ணுற்ற ட்ராய் நகரத்தார், காலையில் கடற்கரை வந்துபார்க்க, பெரிய மரக்குதிரையை மாத்திரந்தான் கண்டனர். இதன் தன்மையும் யுணராது, மேல் இன்னசெய்வது என்றும் தெரியாது, தயங்கி நின்ற அவர்கள், ஸைநானைக் கண்டுவிட்டனர். அரசன் முன்னிலையில் ஸைநான் கூறலுற்றான்: 'க்ரீஸ் நாட்டார் போர்செய்து ஊருக்குத் திரும்பிப்போய்விட்டனர். தாம் அபாயமின்றி ஊர்போய்ச் சேருவதற்காக இக்குதிரையைத் தமது தெய்வத்தின் திருப்திக்காகச் செய்து, என்னையும் நரபலிகொடுக்க முயன்றனர். நான் திமிரிக்கொண்டு காட்டில் ஒளிந்துகொண்டேன். நல்ல வேளையாக் ஒழிந்தார்களே எனக்கு யமன் போலிருந்தவர்கள்' என்று பெருமூச்செரிந்து மயங்கினான் ஸைநான். கடவுளுக்கு என்று அமைத்த குதிரையை அனாதரவு செய்யலாகாது என்று ட்ராய் நாட்டார், அதைத் தம்மூருள் இழுத்துச் செல்ல முயன்றனர். பெரிய வாயிலுள் அது நுழையாதது கண்டு, அதையும் இடித்துத் திறந்தும் விட்டனர். உள்ளே போகையில், நடக்கப்போகிறவைகளைக்கண்டறிந்துகூறியும், கேட்போர் நம்பாதிருக்கும்படியான ஆற்றல் பெற்ற ராஜகுமாரியான காஸ்ஸண்ட்ரா எதிர்பட்டு 'இக்குதிரையுள்ளிருக்கிறது உங்கள் அழிவு. எனக்குத் தெரிகிறதே! இதை வெட்டிக் குத்திப்பார்த்துவிட்டு உள்ளே கொண்டு போங்கள்' என்று மன்றாடினாள். என்ன சொல்லியும், இவள் வெறிபிடித்துப் பிதற்றுபவள் என்றே நகைத்தனர் எல்லோரும். பின்னர் அவர்கள் மரக்குதிரையை நகர மத்தியிலிருந்த உட்கோட்டையில் கொண்டுசேர்த்துவிட்டு, க்ரீஸ் நாட்டார் பயம் ஒழிந்ததற்காக அன்று பெரிய திருவிழாக் கொண்டாடினர். ட்ராய் நகரத்தார் எல்லோரும், இரவில் குடிமயக்கத்தாலும் திருவிழாக் களைப்பாலும் அயர்ந்து தூங்கிவிட்டனர்.

இவர்களோடு இணங்கி விளையாடிவந்த ஸைநான், நடுநிசியில் மலைமேலேறி பெருநெருப்பு மூட்டினான். இதைக் கண்டதும், மறைவில் தீவருகிலிருந்த க்ரீஸ் நாட்டார் கப்பலை ஓட்டிக்கொண்டுவந்து, ட்ராயுள் எளிதில் புகுந்துவிட்டனர். குதிரை வயிற்றுக் கதவு, ஸைநான் செய்த ஓசையால் திறக்கப்பட, குதிரையுள்ளிருந்த வீரர்கள் வெளியில் இறங்கி, ஊரை அழிக்கத் தொடங்கிவிட்டனர். எல்லோரும் சேர்ந்து ட்ராய் நகரத்தாரை அழித்து வருகையில், மினிலேயஸ் ஹெலனைத் தேடி அவள் குற்றத்தை மன்னித்து அவளை அபாயமற்றவிடம் கொண்டுசேர்த்தான். இதைத் திடீரென்று உணர்ந்த ட்ராய் நகரத்தார், குடிமயக்கம், பயம், தூக்கக் கலக்கம் இவைகளால் அரைத்துணிபோனவிடங்கூடத் தெரியாது, அங்குமிங்கும் நோக்கமற்று ஓடி, க்ரீஸ் நாட்டார் வாளுக்கிரையாயினர். புருஷர்களை எல்லாம் கொன்றுவிட்டு க்ரீஸ் நாட்டார், அவ்வூர்ப் பெண்டுபிள்ளைகளை எல்லாம் அடிமைகளாக்கிவிட்டனர். ட்ராய் நகரத்தில் நெருப்பும்வைத்து அது பரவி வருகையில், ராஜனையும் அணுகிக் கொன்றுவிட்டு ஊரைச் சாம்பலாக்கினர். ஆனால் பத்து வருஷத்திற்கு முன் அவர்களுக்குப் பேருதவிபுரிந்த ஆண்டினாருக்குக் கைம்மாறாக அவன் வீட்டையும் உறவினர்கள் முதலியோரையும் மாத்திரம் அவர்கள் மனமுருகிக் காத்தனர். இப்படி ட்ராயை அழித்துவிட்டு, ஆண்டினாருக்குத் தகுந்த மரியாதைகள் செய்து, ஹெலனைக் கூட்டிக்கொண்டு இவ்விஜய வீர ஜாதியார் க்ரீஸ் நாடு போகத் தலைப்பட்டனர்.

## II. (b) பண்டைக் காலத்தில் துணிச்சல் மிகுந்த ஹோரேஷஸ் பாலங்காத்த பான்மை

*முன் நடந்தவைகள்—பாலம் காக்க முயலுவது—பாலம் காத்த சிறப்பு—பின் நடந்தவைகள்.*

முன் காலத்தில் ரோமாபுரியில் அரசாண்டுவந்த இறுமாப்பு மிகுந்த அரசனொருவன், சிறந்த ஒரு கனவான் மனைவியைக் கற்பழித்துவிட்டான். இதைக் காரணமாகக்கொண்டு ரோம் நாட்டார், உறவினர்கள் உள்பட அரசனை நாடு நீக்கிவிட்டு, தம் நாட்டைக் குடியர

சாக்கிவிட்டனர். துறத்தப்பட்ட அரசன், அருகாமையிலிருந்த பெரிய அரசனிடம் தனக்கு நேர்ந்த கொடுமையை எடுத்துக்கூறி, தன் நாடு தனக்கு வரவேண்டிய முயற்சி செய்யும்படி பணிந்து கேட்டுக்கொண்டான். அவன் அவ்வாறு உதவுவதாக வாக்களித்து, தன் சிற்றரசர்களையும் பெரும்படைகளையும் சேர்த்துக்கொண்டு ரோமாபுரியை நோக்கிப் படையெடுத்து வந்தான். இவன் வரும் வழிகளில் எல்லாவற்றையும், சுட்டுக் கொட்டை பரப்பிக்கொண்டு வர, முடிவில் ரோம் அருகில் ஓடும் **டைபர்** என்ற ஆற்றின் எதிர்க்கரையிலுள்ளசிறுபட்டணத்தையும் கைப்பற்றிவிட்டான். அப்பொழுது இவனை எதிர்க்கத் திறமில்லாத ரோம்நாட்டார், என்ன செய்வது என்று ஸபைகூடி ஆராய்ந்துபார்த்து, எதிரிகள் ரோமுள் புகாவண்ணம் ஆற்றுப் பாலத்தை இடித்து விடவேண்டுமென்று தீர்மானித்தனர். எதிர்க்கரைப் பட்டணம் பிடிபட்டுவிட்டது என்ற ஸமாசாரம் கேள்விப்பட்டதும், பாலத்தை வெட்டிச் சாய்ப்பதற்குள் எதிரிகள் அதனுள் புகுந்துவிடுவார்கள்போல அவர்களுக்குத் தோன்றியது. 'ரோம் காக்கப்பட வேண்டுமாகில், பாலம் உடைபடவேண்டும்: அதற்குள் பாலத்துள் எதிரிகள் புகுந்துவிட்டால் நம் நகரத்தின் கதி என்னவாகுமோ!' என்று அதிகாரிகள் எல்லோரும் பரிதவித்தனர்.

இத்தருணத்தில் பாலக்கதவுக் காவலனான **ஹொரேஷஸ்** எழுந்து, 'நாட்டுக்காக மடிவதைவிட வேறு புகழுடைய சாவுண்டோ! என்னுயிரைத் துரும்பாக மதித்து, இந் நெருக்கமான பாலத்தில் எதிரிகளை நுழையவொட்டாது, இருவர் உதவியால் நான் தடுத்து நிறுத்திவிடுகிறேன், நீங்கள் பாலத்தை இடித்துச் சாய்க்கும்வரையில். சீக்கிரமாகப் பாலம் வெட்டிச் சாய்க்கும் தொழிலை நடத்துங்கள்: இந்த நெருக்கமான பாலமுனையில் தைர்யமான மூவர், பெரியபடையை அணுகவொட்டாமலே அடித்துவிடலாம்! என்னுடன் வருபவர் இருவர் யாவர்?' என்று கர்ச்சித்தான். **லார்ஷியஸ் ஹெர்மினியஸ்** என்ற இருவரும் ஹொரேஷஸின் இருபுறத்திலுமிருந்து பாலங்காக்கப் புறப்பட்டனர். நகரத்தார் கோடரி, உலக்கைகள், கட்டப்பாறைகள் முதலியவைகளை எடுத்துக்கொண்டு பாலத்தை இடித்துத் தகர்க்கத் தொடங்கிவிட்டனர். மனமழியா மூவரும் பாலத்தலையில் உருவின கத்தியும் கையுமாகக் காவல் செய்யக் கேடயங்களுடன் வந்து நின்றுவிட்டனர்.

இதற்குள் எதிரிகள் பட்டாளங்கள், பாலத்தலைக்குவந்து நெருங்கிவிட, எல்லோரும் துணிவான மூவரையும் கண்ணுற்றனர். ஒழுங்குமீறாது, சண்டையிடுவதிலேயே கருத்தாகவிருந்த அக்காலத்தவர் ஒரேஅடியாக இம்மூவர்மேல் விழுந்து தாக்கவில்லை. இவர்களுக்கு நிகரான மூவர் தனிப்பட்டு வெளியே வந்து சண்டை தொடங்கினர். லார்ஷியஸ், ஒருவனை ஒரேஅடியாக அடித்து, ஆற்றுள் தள்ளினான். ஹெர்மினியஸ் ஒருவனைப் பல்வரையில் மண்டையைப்பிளந்து வீழ்த்தினான். ஹொரேஷஸ் ஒரேஅடியில் முக்யமானவனை மூட்டை உருட்டுவதுபோலக் கீழே அடித்து உருட்டிவிட்டான். பின்னர், வேறு மூவர், ஸேனையிலிருந்து வெளிப்பட்டு வந்து எதிர்த்தனர். இவர்களும் பாலங்காப்பவர்கள் பலத்திற்கு ஈடுகொடுக்கமுடியாமல் இறக்கும்படி நேர்ந்தது. மிகுந்த கொக்கரிப்போடு வந்த எதிரிகளிடம் ஓசைகள் எல்லாம் அடங்கிவிட்டன. பால முனையிலிருந்து ஆறு ஈட்டி தூரத்தில் பெரும்படை, மேல் அசையமாட்டாது தயங்கி நின்றுவிட்டது. சற்று நிதானம் ஏற்பட்டதும், எல்லோரும் '**ஆஸ்டர்** வந்தால்தான் முடியும். அவனுக்கு வழிவிடுங்கள்' என்று கூக்குரலிட்டனர். உடனே இடையிலே பெரியவழி ஏற்பட ஆஸ்டர் 'என்னை எதிர்த்து நிற்பவரும் உண்டோ!' என்று வீரியம் பேசிக்கொண்டே வந்து குதித்தனன். தன் கனத்த கத்தியை இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு, தன்னால் இயன்றமட்டும் மேலே சுழற்றி ஹொரேஷஸ் மண்டைமேல் ஒரேபோடாகப் போட்டான்! தன் கேடயத்தாலும் கத்தியாலும் அந்தக் கத்தி வேகத்தை வெகு லாகவமாக மாற்றினான் ஹொரேஷஸ். அது மண்டைமேல் விழாமல் ஒதுக்கப்பட்டபோதிலும், அது முற்றிலும் விலகிப்போகாது அவன் வலது தொடையைச் சிதைத்துக்கொண்டு போய்விட்டது. இப்படி ஹொரேஷஸ் ரக்தம் வெளிப்பட்டதும், எதிரிகள் மகிழ்ந்து ஜயகோஷஞ் செய்தனர். தன் இடது



புறமிருந்த **ஹெர்மினியஸ்**மேல் ஹொரேஷஸ் சற்றுச் சாய்ந்துகொடுத்திருந்து காயம்பட்ட காட்டுப்பூனைபோலப் போர் வெறியில் ஆஸ்டர் கொறவளைமேல் ஒரே பாய்ச்சலாகத் திடீரென்று பாய்ந்து, அழுத்தமாக அவனைத் தன் கத்தியால் குத்தினான். கத்தி, அவன் பற்கள், மண்டையோடு, தலை பெட்டி முதலியவைகளையும் தாண்டி ஒரு சாண் பின்புறத்தில் வெளிவந்து காணப்பட்டது. பின்னர், தன் இடது காலை ஹொரேஷஸ், ஆஸ்டர் நெஞ்சில் அழுத்தமாக ஊன்றிக்கொண்டு, மூன்று நான்கு தரம் முக்கி முறுகி இழுத்தான்: முடிவில்தான் கத்தியை உருவி எடுக்க முடிந்தது. உடனே எதிரிகளை நோக்கி 'வீரர்காள்! உமக்கிங்குள்ள விருந்தின் ஆற்றலைக் கண்டீர்களா? உண்ணும் ஆவலுடையோர் ஒவ்வொருவரும் முன் வரலாம்' என்று கர்ஜித்தான் ஹொரேஷஸ். வேடிக்கையாக முயல் வேட்டைக்குப்போய்ப்புதரடித்து வருகையில் சிறு பிள்ளைகள் திடீரென்று, ரக்தம் எலும்புகளுக்கிடையில் கரடி வீற்றிருக்கும் இருட்குகைவாயிலை வந்தடைந்தால் எப்படி மருண்டு மயங்குவரோ, அவ்வாறே செயலற்று அசைவற்று நின்றுவிட்டனர் எதிரிகள். கற்பழித்த கொடுங்கோன் மன்னன் மாத்திரம், மும்முறை ரோமைப்பார்த்தான்; மாய்ந்து கிடப்பவரைக் கண்ணுற்றான்; வெறிகொண்டவன்போல முன்னோடி வந்தான்; பயந்து பின்வாங்கி ஓடினான்; இதற்குள் பாலம் உடைக்கப்பட்டுத் தொத்தி ஆடிக்கொண்டிருக்கும் நிலையை அடைந்தது. எல்லோரும் மயக்கமற்ற மூவரையும் தாமதியாது வந்துவிடும்படி கூக்குரலிட்டனர். ஹொரேஷஸ் மெய்மறந்து எதிரிகளையே அணுகவொட்டாது பார்த்துக்கொண்டிருந்துவிட்டான். அபாய ஸமயத்தில் அவனுடன் வந்த இருவரும் அவன் நொண்டி நிலையையும் மறந்து, தத்தம் பாட்டைப் பார்த்துக்கொண்டு திரும்பிவிட்டனர். வரும் வழியில், அவர்கள் கால் வைத்த இடமெல்லாம் நொருங்கி உதிருவதைக்கண்டு, வெகு ஸாவதானமாக அவர்கள் ரோம் கரையை அடைந்தனர். உடனே பாலம் பெரிய அணைபோல ஆற்றுள் பேரொலிசெய்துகொண்டு குறுக்கே விழுந்தது.

இந்தக் குழப்பம் அடங்கி, பாலம் இழுபட்டுக் கடல் நோக்கிப் போகத் தொடங்கியதும், ஹொரேஷஸ் மாத்திரம் தனித்துவிட்டான் எதிர்க்கரையில் என்று தெரிந்தது. ஒருபுறம் ஆழமான ஆறு; மறுபுறம் கொடிய எதிரிகள். 'அகப்பட்டுக் கொண்டாயே ஆத்திரக்காரா! அடித்து நொறுக்குங்கள் அவனை' என்று கூக்குரலிட்டான் கொடுங்கோன் மன்னன். 'அடிபணிந்து என்னிடம் அடைக்கலம்புகுந்துவிடு' என்று வழிவிட்டான் உதவிக்குவந்த எதிரியரசன். இவர்கள் சொற்களை ஒரு பொருட்டாகக்கூட மதியாது, ஆற்றின்புறம் ஹொரேஷஸ் திரும்பிக்கொண்டு, நதிதேவதையை மனமாற த்யானித்து வணங்கித் தன் உயிரை அதற்கு ஒப்புவித்துவிட்டுக் ஆற்றுள் குதித்துவிட்டான். இருபுறத்தாரும் துயரம் களிப்புஇவைகளுக்குஇடங்கொடுக்கமுடியாமல் ப்ரமைபிடித்தவர்போல மேல் நடக்கப்போவதைக் கண்கொட்டாது பார்க்கத் தொடங்கிவிட்டனர். முதல் தரம் ஹொரேஷஸ் தலை, தண்ணீரின் மேல் கிளம்பியதும் இருதிறத்தாரும் ஜயகோஷமே செய்யும்படி யாகிவிட்டது. சண்டை செய்து சலித்து, காயம்பட்டு அலுத்து, மேலுள்ள கவசத்தின் கனத்தால் வெலு வெலுத்து, ஆற்றுப் பெருக்கால் குலைந்து திண்டாடியும் ஹொரேஷஸ் உள்ளத் துணிவால் நீந்தி அக்கரை சேர்ந்தான். 'படுபாவி இவனில்லாவிடில்' இதற்குள் ரோம் கைவசப்பட்டிருக்குமே,' என்று குமுறினான் கொடுங்கோன்மன்னன். 'பாவம்! பிழைத்துப் போகட்டும், இப்படிப் போர் முனையில் துணிந்து நின்றவன் இதுவரையில் இல்லை' என்று மெச்சிக்கொண்டான் உதவிக்குவந்த அரசன். அக்கரையில் எல்லோரும் ஹொரேஷஸை ஏந்தித் தூக்கினர். பலர் ஆனந்தக் கண்ணீருக்கிடையில், அவன் ரோமுள் புகுந்தான். அவனுக்கு வேண்டுமான அளவு நிலங்கள் விடப்பட்டன. ஊரார், ஹொரேஷஸ்போன்ற ஒற்றைக்காலில் நொண்டிக்கொண்டிருக்கும் பதுமைசெய்து, நாற் சந்தியான ஒரு பொது இடத்தில் அமைத்து, அதனடியில் துணிச்சல் மிகுந்த அக்காலத்தில் அவன் பாலங்காத்த பெருமையை எடுத்துப் பொன் எழுத்துக்களால் செதுக்கி வைத்தனர். அன்றுமுதல், துணிச்சல் முதலிய ஆண்மைக் குணங்களுக்கு ஹொரேஷஸ் பெயரே பழமொழியாக வந்துவிட்டது.

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

**CHILDREN'S PAGES**

நகுஷன் சரித்ரம்

(369-ம் பக்கத் தொடர்ச்சி)

கபிலபகவான்:—வேதத்தில் கூறப்படும் பரம்பொருள் இரண்டு வழியாகக் காட்டப்பட்டுள்ளது. அவையாவன:—சப்தப்ரஹ்மம், பரப்ரஹ்மம் என்பவைதான். இவைகளுள் சப்தப்ரஹ்ம வழிதான் பரப்ரஹ்மத்தை அணுகிஅமர முடியும். சப்தப்ரஹ்மம் கர்பாதாநுதி கர்மாக்களில் உபயோகப்படும், கர்மாக்களைச் செய்யித் தூண்டும் இயற்கையுடைய மந்தரரூபமாக உள்ளது. இவைகளின் பயன் சித்தசுத்திதான். இதன்வழி ஒழுங்காக முக்தி கைகூடும். அந்த முக்தியில் உள்ளபடி, அமர சித்த சுத்தி உடையவனுக்கு வேதம் பரப்ரஹ்மத்தை வாக்கிற் கெட்டியவரை, பெரியோர் அநுபவரூபமாகவும், குருசிஷ்ய ஸம்வாதரூபமாகவும், கர்மாக்களில் ஏவும் இயற்கையில்லாத மந்திரரூபமாகவும் எடுத்து வெளியிடும். இதைத்தான் புத்திமான் முக்யமாகக் கடைப்பிடிக்கவேண்டும்.

ஸ்யூமிரச்மி:—சித்தசுத்தி என்று கூறுகிறீரே அதன் ஸ்வரூபம் என்ன?

க:—முன் காட்டப்பட்ட சப்தப்ரஹ்மப் பழக்கத்தால் ப்ராஹ்மணர்களுக்கு உண்டாகும் மனதின் சுத்தந்தான் இது. இந்த மனத்தூய்மைக்கு அடையாளம் ஒவ்வொருவன் மனதுள்ளேயே அவனவனுக்கு மாத்திரந்தான் நன்றாகக் காணப்படும். அவையாவன:—எதிர்பாராதிருத்தல், உலக விஷய வெறுப்பு, ஆசையின்மை, விருப்பு வெறுப்புக்களில் இழுபடாதிருத்தல், யாகாதி வைதிக கர்மாக்களைக் கடமையெனக் கருதிச் செய்தல், விதிப்படி தானம் கொடுத்தல், யோகத்தில் நிலைத்தல், நல்லொழுக்கம், மயக்கமில்லா வைதிக உணர்வு, பாபத்திலேயே மனம் செல்லாமை ஆகிய இவைகளே. வேதாதி சாஸ்திரங்களில் காணப்படும் ப்ராயச்சித்தங்களின் ஆவசியகமே இவர்களுக்கு இராது. புத்தியின் இயற்கைத்தொழில், வஸ்துவை உள்ளபடி தீர்மானித்துணர்வது, அதன் குணம், தர்மம், ஞானம், வைராக்யம், ஐச்வர்யம், இவைகள் ஸாதாரண ஜனங்களிடம் பல ஜன்ம விஷய உழற்சியால் மறைபட்டுள்ளன. இந்த மறைப்புக்களை விலகச்செய்து, புத்தி தன் தன்மையில் நிலைத்துவிடும்படி செய்வதுதான் சித்த சுத்திவர வைதிக கர்மாக்களால் முயல்வது என்பது. இந்த ஒரே நோக்கமுடைய வைதிக கர்மாக்கள்தான் வர்ணாச்ரம நிலைகளுக்கேற்ப பலவகைப் படுத்தப்பட்டுள்ளன.

ஸ்யூ:—இதென்ன வைதிக கர்மாக்கள் சித்த சுத்திக்கு மாத்திரந்தான் என்று ஒதுக்கி விட்டீரே! சித்தசுத்தி வந்ததும், இவைகளைப் பயனற்றவையாகத் தள்ளிவிடவேண்டியது தானோ! நன்றாக இருக்கிறது உமது வேதப் பிடிப்பு! வேதத்தின் ஒரு பாகத்தைப் பின்பற்றுவது மற்றையவைகளை உதறி எறிந்து விடுவதோ?

க:—வேதரஹஸ்யமான முடிவுகளைக் கூறியவுடன் எல்லோருக்கும் இந்த ஆக்ஷேபந்தான் படும். நல்லவேளையாக நான் கூறிவந்த வேத நுட்பத்தில் உள்ள படுகுழியை எடுத்துக் காட்டி எனக்கு எச்சரிக்கை செய்தீர். முன்னர் காட்டப்பட்ட சித்தசுத்தி வந்த பெரியோர்களது தேஹேந்திரியாதிகள் முன் பழக்க பலத்தால் இயற்கையாகத் தகுந்த தர்மங்களில் பாய்ந்தோடும்; ஒழுங்கு ஒரு நாளும் மீறாமலே இருக்கும்: அவர் மனதில் ஏற்பட்டுள்ள, கர்மாக்களுக்கு அப்பாற்பட்ட முக்திவிஷய ஆசைக்கும் இவை ஒருவிதத்திலும் தடையாகவிரா. இப்படிப்பட்ட கர்மாக்களைத்தான் வர்ணாச்ரம நிலைகளுக்கேற்ப் வேதம் வைதிகர்களுக்கு விதிக்கின்றது அவ்ர்களும் பெரியோர் நிலைக்கு ஒழுங்காகவந்து அமர. இந்த நுட்பம் உணர்ந்தே வைதிக கர்மாக்களைப் புத்திமான்கள் அநுஷ்டிப்பார்கள்; அவைகளை விட ஒருநாளும் கனவிலும் கருதார்கள். ஆதலால் சித்த சுத்தி விஷயத்தில் வைதிக கர்மநஷ்டம் வரும் என்ற பயமே உமக்கு வேண்டாம்.

ஸ்யூ:—நீர் கூறும் சித்த சுத்திக்காகக் கர்மா என்ற நுட்பமும், கர்மாக்களுக்கு அப்பாற்பட்ட முக்திவிருப்பம் ஞானகாண்டப்பொருள் என்ற நுட்பமும், இவைகள் தன்மையுணர்ந்து கர்மாநுஷ்டானம் நடைபெறவேண்டும் என்ற நுட்பமும், முடிவில் ஒருவனுக்கு வைதிக கர்மாக்களிலுள்ள பிடிப்பைத் தளர்த்தி



விடுமே ஒழிய, அவனை ஸரிவர மோக்ஷம் அணுகச் செய்யாது. உமது வாக்குப்படியே சப்தப்ரஹ்ம நிலைப்பு ஏற்பட்டாலல்லவா, ஒருவனுக்கு பரப்ரஹ்ம நெருக்கம் ஏற்பட இடம் உண்டு. உமது நுட்ப வ்யவஹாரம் தொடக்கத்திலேயே சப்தப்ரஹ்மப் பிடிப்பைத் தளர்த்திவிடும்போலிருக்கிறது. எனக்குத் தோற்றுகிறவரையில் 'சித்த சுத்திவரையில் கர்மா, பின் அது தங்கி நிற்கும்' என்ற உமது ஆராய்ச்சி விஷயம் ஒருவேளை ஸந்யாஸிகளுக்குத் தகுந்ததாக விருக்கலாம். அவர்களுக்கு வெளி கர்மாக்கள் குறைவாகவிருப்பதால் அவர்கள் விஷயத்தில் உட்கர்மாக்களாகிய த்யாநாதிகளை நோக்குமிடத்து உமது நுட்பவிசாரம் அபாயகரமானது, வைதிகவழிப் பிடிப்பை அவர்களுக்கும் தளர்த்தி அவர்களைத் தவிக்கவிட்டுவிடும். ஆதலால் மற்றவர்களை உமது ஆராய்ச்சி படுகுழியில் வீழ்த்துமென்று கூறவும் வேண்டுமா.

க:—நீர் எப்படித்தான் ஒருவன் கர்மாக்களைப் பின்பற்றவேண்டும் என்கின்றீர்?

ஸ்யூ:—இந்தக் கர்மாக்களை ஏற்படுத்தியது ஈச்வரனே, நமக்கு நீர் கூறுவதான முடிவான மோக்ஷ நிலை கைகூடுவதற்காக. இக்கர்மாக்களை அவனது ஆராதனையாகக் கருதி நாம் செய்யவேண்டும். இதில் ஸம்பந்தப்படும் எல்லா ஸ்தாவர ஜங்கமங்களுக்கும் கடவுள் ஒழுங்குப்படி நற்கதியுண்டு. இவ்வாறு கர்மாநுஷ்டானம் செய்து, ஒழிந்த வேளைகளில் த்யானங்களை விதித்துள்ள ஒழுங்குப்படி கர்மாக்களின் ஆஞ்ஞா கர்த்தாவான கடவுளை அணுகி அவன் மாத்திரமாக இருக்க முயலவேண்டும் நம்மையும் மற்றவைகளையும் மறந்து. இப்படிச் செய்து தேர்ச்சியடைந்து வருங்கால், கர்மாநுஷ்டானம் ஒழிந்த காலங்களில் கடவுள் மாத்திரமாகவே சிலகாலம் நிலைத்துவிடும் ஆற்றல் நமக்கு வரும். இந்த ஆற்றலை நிலைத்துக்கொள்வதில் பழகுவது, கர்மாநுஷ்டானம் செய்து மிகுந்த காலங்களில் நமது தொழிலாகிவிடும். ஆகவே கர்மாநுஷ்டானத்தின் ஆஞ்ஞா கர்த்தாவான கடவுள் மாத்திரமாக விருப்பதே முக்கியமாதலால், கர்மாநுஷ்டானம் எந்நிலையில் போனாலும் ஒருவனாலும் தள்ளப்படமாட்டாது. அது நடைபெறும் பொழுதே கடவுள் நெருக்கமும் ஏற்படும். பழக்க பலத்தால் உமது சித்தசுத்தி விஷயம், முக்தி நாட்டத்தை, வைதிக கர்மா தடுக்காது நிகழும் விஷயம், எல்லாம் இங்கு கூறிய முக்திப்பொருளான கடவுள் ஸம்பந்தத்தால் தாமே அமையக் கூடியவை. இந்தக் கடவுள் பொருத்தத்தைக் கருதாது, நீர் கூறியபடி நுட்பவிசாரம் மாத்திரம் செய்வது வெறும் நாஸ்திகமே. ஸாத்யம் கைகூடிவிட்டால், ஸாதனத்தின் விலக்கமாகிய பாபந்தான் உமது ஆராய்ச்சியின் பயனாகிவிட, உமது வழிச்செல்பவனுக்குச் சப்தப்ரஹ்மப் பிடிப்பே ஒருவேளை விட்டுப்போனாலும் போய்விடும். கீழ் வித்தைகள், எப்படி மேல் வித்தைகள் கற்றவிடம் இயற்கையாகவே அமைந்துகிடந்து விலகாமலே நின்றுவிடுமோ, அதுபோல வைதிக ஸாதனமான கர்மத்யாநாதிகள் முக்திப்பொருளாகிய கடவுள் ஸம்பந்தப்பட்டிருப்பவைதான்: முக்தர்களையும் விட்டுவிலகா, அவர்களுக்கும் அவைகளை விலக்கக் கனவிலும் கருத்துதிக்க இடமே இல்லை. இக்கருத்தைப் பின்பற்றி, வேத நுட்பம் ஆராய்ந்தால் தான் நமக்கு நிலைக்கும், இல்லாவிடில், உமது ஆராய்ச்சியில் முழுகி மாயும்படி செய்துவிடும் நம்மை எல்லாம். ஆதலால் நீர் கூறும் முக்தி, கர்மாக்களுக்கு அப்பாற்பட்டதாயினும், கர்மாக்களை நாம் கடைத்தேறும்பொருட்டு உத்தரவாக வேதங்களில் அமைத்துள்ள கடவுளை விட்டுக்கூட அப்பாற்பட்டு நிற்பதோ! வரம்பு மீறி கேட்போர்களைப் படுகுழியில் தள்ளாது ஜாக்கிரதையாக வேத நுட்பம் பேசும் கபிலரே!

க:—நீ சப்தப்ரஹ்ம விஷய நுட்பத்தையும் அதற்கும் பரப்ரஹ்மத்திற்குமுள்ள பொருத்தத்தையும் நன்கு உணர்ந்திருக்கிறாய். உன் விஷயத்தில் நான் பேசுவதுபோலக் கடவுளை ஒதுக்கி வேத நுட்பம் பேசினால் அதிகக் கொடுமை ஏற்படாது. முற்கூறிய சித்தசுத்தி நிலையில் வைராக்யந்தான் முக்யம் முக்திக்கு நேர் ஸாதனமான ஞானத்தைத் திடப்படுத்த. இந்த வைராக்யம் வர்ணாச்ரம தர்மங்களுடன் கலந்தே நான் வேதங்களில் காணப்படும். இதனால் வைதிக ஒழுங்குகளுக்கெல்லாம் மோக்ஷத்திலேயேதான் நோக்கம். இதை நன்குணர்ந்து, ஸரியாக இதைப் பின்பற்றி ஒழுகுபவன் முக்தியை எளிதில் பெறுவன்.

ஸ்யூ:—சாஸ்திரீய வரம்பு மீறாது விஷய ஸுகத்தில் முனைபவர், தானம் செய்வோர், யாகம் செய்வோர், வேத அத்யயனம் செய்வோர், ஸந்யாஸம் பின்பற்றுவோர், ஆகிய இவர்களுள் யார் மேலான சிறந்த நற்கதி பெறுவர்.

க:—நீர் முற்கூறிய விஷயங்களின் முக்யாம்சங்களுடன் கிருஹஸ்தாச்ரமிகளாக விருப்பவர்களே மிகச்சிறந்தவர்கள். ஆனால் அவர்களுக்கு நிஜ ஸந்யாஸிக்கு வரும் நிலைக்கு அடுத்ததாயும், கூடிய சீக்கிரத்தில் முடிவாக ஸந்யாஸிகளுக்கே வரும் நிலை எளிதில் கைகூடுவதாயுமுள்ள மிகச் சிறந்த நிலைதான் கூடும். ஆகவே பரம முக்தி நிலைக்கு அடுத்த கீழ்ப்படிவரையில் அவர்கள் போய்விடலாம். அங்கு ஒரு சிறு வைதிக முயற்சி அவர்களிடம் நிகழ்ந்தபின்னர்தான் அவர்களுக்கு மீளா நிலை கைகூடும்.

ஸ்யூ:—தேர்ந்த க்ருஹஸ்தர்களுக்கும் ஸந்யாஸிகளுக்கும் ஏற்படும் முடிவில் பேதமே இல்லையென்று சாஸ்திரங்கள் கோஷிக்கின்றனவே. ஏற்றத்தாழ்வில்லா இவ்விருதிறத்தார்களுள் நீர் ஏன் நுட்பமான பேதம் காட்டுகிறீர்?

க:—ஞானம் முக்யமான ஸந்யாஸ முடிவான பரமமுக்திக்கும், கர்மா முக்கியமான கிருஹஸ்த முடிவிற்கும் உள்ள மிகுந்த நெருக்கத்தையும், வேறு இடையூறுகள் குறுக்கிட இடமேயில்லாது கிருஹஸ்தர் பரம முடிவும் முக்திக்கே எளிதில் கொண்டுசேர்க்கும் ஆற்றலோடிருப்பதையுமே, சாஸ்திரங்கள் வேற்றுமையே இல்லை என்பதாக எடுத்துரைக்கும். பூர்ணமான சித்தசுத்தி நிலைக்கு மேல் ஏற்படும் மன ஒழிவில்லாது முக்தி கைகூடவேமாட்டாது. கர்மா, உபாஸனை, ஞானம் இவைகளின் பொருத்தம் நன்குணர்ந்தும் இவைகளுக்கு ஒருவிதத்திலும் முரணாகவே இல்லாத முக்தி நுட்பம் உமக்குத் தெரியாதிருந்ததால் இவ்வளவு தூரம் நான் உம்முடன் வாதாடினேன். இந்திரிய நிக்ரஹம், திதிக்ஷை, உபரதி இவைகள் கர்மாக்களால் ஏற்பட்டால்தான் ஒருவன் முக்தியைப் பற்றி நினைக்கத்தகுந்தவனாவன். இவைகளையே நீரே விளக்கமாக எடுத்துக் காட்டிவிட்டீர். கர்ம உபாஸனா ஞானஸம்பந்த ப்ரஹ்மமான முக்திப்பொருளை ஒழுங்காக அணுக நீர் ஸரீவிரக் கர்மா முதலியவைகளைச் செய்யும்.

ஸ்யூ:—உண்மை இப்படியிருக்க, இங்கு நகுஷன் செய்யமுயன்ற கோமேதத்தை ஏன் பழித்துக்கூறி வேதத்தையும் நொந்துகொண்டீர்?

க:—இந்த நுட்பம் உணராது யாகம் செய்பவர்களுக்கும் ' யாகமுடிவான மோக்ஷத்திற்கும் எவ்வளவு தூரம்! அவன் யாகம் வெறுங்கொலைதானே! அந்தப் பசுவுக்குத்தான் என்ன சிறந்த கதி வரப்போகிறதென்று பரிதவித்துக் கூறினேன்.

ஸ்யூ:—அரசன் மூடமாக வேதத்தை நம்பிச் செய்தால் பயனில்லாது போய்விடுமா? உமக்கேன் இவ்வளவு பதட்டம்?

க:—யாகமுடிவாக மோக்ஷமிருக்க அதைச் செய்து மிகத்தாழ்ந்த பதவி ஸம்பாதிக்கும்படியாகிறதே என்பதுதான் என் துக்கம்.

ஸ்யூ:—இவ்வாறு செய்பவர்கள் மிக உயர்ந்த நிலைக்கு இப்பொழுதே வரத் தகுந்தவராகாவிடினும் கெட்டுப்போகமாட்டார்களே! நாளடைவில் நீர்கூறும் முடிவுக்கும் வருவார்களே இப்படிச் செய்துவந்தால். உமக்கேன் இவ்விஷயத்தில் இவ்வளவு நுட்பமான துக்கம்.

க:—இது நிச்சயமானால் எனக்குத் துக்கம் வருமா? நாம் விளக்கிய வேதநுட்ப உணர்வு ஏற்பட்டாலன்றி யாகம் பலிக்காது திடமாக. இந்த உணர்வு வருவதற்குமுன் யாகம் செய்பவர் எத்தனை தடைகள் வாய்ப்பட்டுத் தத்தளிக்கவேண்டும் என்பதே என்னை இவ்வாறு வாய் விட்டலறும்படி செய்துவிட்டது.

'நாம் கூறியதை அரசனுணர்ந்து இந்த யாகம் செய்வானாயின் யாதொரு கேடும் வாராது' என்று கூறிக்கொண்டே பசுவை விட்டு விலகினார் ஸ்யூமரச்மி. கபிலரும் போய்விட்டார். நகுஷனுக்கு இவர்கள் வாதாடிய நுட்பங்கள் விளங்காவிடினும், யாகம் கடவுள் வழிபாடு என்ற பொது எண்ணம் ஏற்பட்டது. ப்ரஹ்மாவை அவன் மிகுந்த பக்தியுடன் வழிபட்டான் கோமேத வழியில். பிரஹ்மா போனதும், நகுஷனுக்கு விஷயப்பற்று வந்து மூடிக்கொண்டது: வேத நுட்ப உணர்வு மழுங்கிவிட்டது.



# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### தமயந்தி : (5) ஸ்வயம்வரம்

*விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்*
*கண்ணகன் ஞாலங் களிகூர—மண்ணரசர்*
*வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்*
*பொன்மாலை சூட்டினாள் பொன்.*

நல்ல நாளில் ஸ்வயம்வரம் நடத்த வீமராஜன் எண்ணினான். எல்லா மன்னர்களும் அப்போது வரும்படியாக அவன் தூது விடுத்திருந்தான். இதற்குள் நாள் நெருங்கவே, நகர அலங்காரத்திற்காக மங்கல முரசம் முழக்கும்படி செய்தான். அந்தச் சத்தத்தைக் கேட்டதும், நகரத்தில் இருந்தவரெல்லோரும் மிக்க ஆநந்த மடைந்தனர். வீதிகளிலெல்லாம் பந்தர்களிட்டுப் பாக்கு மரமும், வாழையுங் கரும்பும் தெருத்தோறும் நட்டனர்; காற்றில் சூரியனை யளாவி வீசும்படி பெரும் கொடிகளை யுயர்த்தினர்; தெருக்களிலெல்லாம் தோரணமாலைகள் கட்டினர்; தெருவெல்லாம் விளக்கி அசுத்த மொழித்து, மங்களமாகத் தோன்றச் செய்தனர்; அவ்விடம் வரும் ஜனப் பெருக்கில் தூசு எழாதிருக்க எங்கும் நீர் தெளித்துக் காற்றில் மணங்குலாவி விளையாடச் செய்தனர்; மங்கல விளக்குகள், பூரண கும்பங்கள், பொற்பாலிகைகள் இவைகளை ஆங்காங்கு அமைத்தனர்; வாஸனைப் பொடியைத் தெருவெங்கும் தெளித்தனர்.

மற்று வெளி நாட்டிலிருந்து வரும் மன்னர் கூட்டங்களும், மற்றவர் கூட்டங்களும், ஊர் முழுதும் நிறைந்தன. தேர், குதிரை முதலிய அங்கங்களையுடைய பெருஞ்சேனைகள் அநேகமாயிரம் புதிதுபுதிதாக வந்தவண்ணமாகவே இருந்தன. வண்டியில் வருவாரும், பல்லக்கில் வருவாரும், குதிரை முதலியவற்றின்மேலும் விரஹனைகளின்மேலும் வருவாரும், பதசாரியாக வருவாருமான கூட்டங்கள் நிறைந்து ஊரில் எள்போட்டால் எள்விழ இடமில்லாமல் ஜனங்கள் நெருக்குண்டன.

நிற்க, ஊரிலிருப்பவர் உத்ஸாக நிறைவால் புதிய வஸ்திரமணிவர்; மாலை தரிப்பர்; நெற்றியில் பொட்டிட்டுக் களிப்பர். பெண்பாலார், ஆடையாபரணங்களை யணிந்து, மதங்கொண்ட யானைபோலத் தருக்கி விளங்குவர்; கண்ணில் மையிட்டு, பார்ப்பார் மனதைக் கவர்வர்; கைவளையல்களும் கால் நூபுரங்களும் வரவைத் தெரிவிக்க மெல்ல மெல்ல நடப்பர்; ஊரெங்கும் அகிற்புகையிட்டு மனங் களிப்பர்; தலையில் பல வர்ண மலரணிந்து மகிழ்வர். நிற்க, சிலர் அன்னசாலை வைத்துப் பசிப்பிணிக்கு மருந்து கொடுப்பர்; சிலர் வந்தவர்க்கு வழிகாட்டுவர்; சிலர் கூட்டங்களை ஒழுங்குபடுத்தி நடமாட்டம் நன்கு நடக்கச் செய்வர்; சிலர் வீமராஜனது பெரும்புகழை எடுத்துப் பாடுவர், கொண்டாடுவர்; சிலர் தமயந்தியின் பாதாதிகேச அமைப்பைப் பண்புடன் எடுத்துரைத்து 'அவளை யடையும் பாக்கியம் யாரதோ?' என்பர்; சிலர் அவளது குணங்களைச் சொல்லித் துதிப்பர்.

ஊரில் இவ்வகையாக ஜனங்கள் நடக்கும் ஸமயத்தில், நாலா பக்கங்களிலும் மங்கள வாத்தியம் முழங்கும். அதே ஸமயத்தில் மாளிகைகளிலெல்லாம் பெண்கள் வீணை வாசிப்பார்கள்; தமது மெல்லிய குரலை எழுப்பி அவ் வீணாநாதத்தில் மயங்கப்பாடுவார்கள்; கூட்டங் கூட்டமாகக் கூடிக் குரவை யாடுவார்கள்; சோபனம் பாடுவார்கள். மற்று வேதியர்கள் ஸ்வஸ்தி வாசனங்கூறி, ஸ்வயம்வர காலத்தை அளவிட்டு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

வீமராஜன் தனது செல்வப் புதல்வியின் ஸ்வயம்வரத்தை நடத்த பெரிய மண்டபமொன்று சமைத்தான். நவரத்னங்களாலும் பொன்னாலும் மணியாலும் இழைக்கப்பட்ட அம்மண்டபத்தில் வந்த மன்னர்களுக்கெல்லாம் ஆஸனம் அவ்வவர் பதவிக்குத் தகுந்தபடி அமைக்கப்பட்டிருந்தன. அம் மண்டபம் அநேக சிங்கார தோரணங்களாலும், அழகிய கொடிகளாலும், பலவித சித்ரங்களாலும், பலவுருவப் பிரதிமைகளாலும் சிங்காரிக்கப் பட்டிருந்தது. அதன் வைரமிழைத்த படிகளை ஏறி, மன்னர் அனைவரும் தமக்கென்றிடப்பட்டிருந்த ஆஸனங்களில் அமர்ந்தனர். அப்பொழுது அந்த மண்டபம் தமயந்தியின் முக சந்திர உதயத்தை எதிர்பார்த்து அரசர்களது கண்களாகிய நட்சத்திரங்கள் மழுங்காது பிரகாசிக்கும் வானம்

போலிருந்தது. அந்த ராஜஹம்ஸத்தின் வரவை யுத்தேசித்துக் கண்களாகிய தாமரை மலர் பூத்த் வீரநீர் நிறைந்த் தடாகமென்றும் அதைச் சொல்லலாம்.

சூரியோதயமாகிச் சற்று நேரமிருக்கும். அரசப் புலிகள் நிறைந்த அந்தச் சபையில் நளனென்னும் ராஜசிங்கம் நிற்பயமாக நடந்து, நடுவே இடப்பட்டிருந்த பெருஞ் சிங்காதனத் தமர்ந்தான். அப்போது அவனது அழகின் வளனைக்கண்ட மன்னர் யாவரும் அவனையே பார்த்தவண்ணமாக மயங்கினர். அதேஸமயத்தில் இந்திராதி நான்கு தேவரும் நளனது உருவையே தாமும் கொண்டு அந்நளன் பக்கத்திருந்த நான்கு ஆஸனங்களில் அமர்ந்தனர்.

இதற்குள் கட்டியக்காரன் பராக்கு எச்சரித்த வண்ணமாக இருக்கும்பொழுதே, தனது கேசமண்டலத்திடையே வளைத்துப் புதைந்திருந்த நெற்றியில் திலகமணிந்து, ராஜஸமுத்ரத்திடையே உதிக்கும் காமமதி என்று சொல்லும்படி, அங்கு மெல்லமெல்லத் தனது பாதஸரங்களும், கைவளையல்களும் கீதமொலிக்க, முக மண்டலத்தைச் சற்றே வெளித் தோன்றத்தமயந்தி விளங்கினள். அவளது வரவையுணர்ந்தயாவர் கண்களும், காந்த மிழுக்கவோடும் எஃகுத்துண்டுகளென அவளிடமே ஓடின. ஆயினும் அவளது கண்விழிகளில் அவை பிரதிபலிக்க இடமில்லாமலே இருந்தது. அவைநிலத்தைநோக்கின வண்ணமாகவே இருந்தன. தன்னுடன் வந்த தாதியர் மன்னரது பெயரையும் பெருமையையும் பேசி நடக்க, அவள் அவரோடு அச்சபையில் நடந்த வண்ணமாகவே இருந்தாள். அவ்வாறு நடந்து அவள் நளனிருக்குமிடத்தை அடைந்ததும், அங்கு ஐந்துபேரை நள உருவத்துடன்காண, மனந்தயங்கினாள்; சற்றுத் தனக்குள் அவ்விடம் நின்றவண்ணமாகவே சிந்தித்தாள்; அது தேவரது பரீட்சையோ என ஸந்தேகித்தாள்! நளனுருவுடன் விளங்குபவர் தன்னைப் பரீட்சிக்கும் நிமித்தமாக அவ்வாறு தேவர்களேயாக விருக்கவேண்டுமென்றும் நிச்சயித்தாள்.

இவ்வாறெண்ணங் கொண்டதும், அவள் கைகூப்பி "என் வாக்காலும் மனத்தாலும் உமக்கு அநந்த கோடி நமஸ்காரம்! அன்னங்கள் சொன்னநாள் முதல், நளனையே என் கணவனாக வரித்தேன், அது ஸத்யம். நான் வேறு புருஷனைக் கருதினேனில்லை. தேவர்கள் ஒருநாளும் தவறானவழியில் செல்பவர் அல்லவே! அவர்க்கு எனது உண்மை நிலை நன்றாகத் தெரியும். என்து கற்புநிலை ஸத்யமானால் அதே நளனை நான் அறியும்படியாகத் தேவர்கள் எனக்குக் காட்டட்டும். அடைந்தோரைக் காப்பதற்குக் கங்கணங்கட்டியவர் என்னைக் கைவிடாரென நம்புகிறேன்" என்று தேவரைத் துதித்தாள். மனங்கனிந்த தேவரும் தமது நிஜ உருவத்தை அடைந்தனர். உடனே அவள்,

'இன்னரிச் சிலம்பு செம்பொற் கிண்கிணி யார்ப்ப [வேகி
மன்னவர் மனமும் கண்ணும் வண்டெனத் தொட [ர்ந்து வீழக்
கொங்குலை வயிர வொள்வாள் நிடதர்கோன் குவ [வுத் தோண்மேல்
பொன்னரி மாலை சூட்டிப் பூங்குழல் வணங்கி [நின்றாள்

**எலிப்புலி.**—தஞ்சாவூர் அரண்மனைச் சாகிப்மார்களில் ஒருவருக்கு நாட்டுப் புறத்தில் நிலம் இருந்தது. அந்நிலத்தில் வாயிதாமட்டும் ஒழுங்காகச் செலுத்தி வந்தார். நிலத்தைப் பயிரிடும் குடியானவன் ஒரு பெரிய மலையாள பகவதி; பலே கைக்காரன்; ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லிவிட்டு நிலவரும்படியில் பெரும்பாகம் சாப்பிட்டு வந்தான். ஒரு வருஷம் குடியானவனுக்கு வழக்கத்தை விட அதிக செலவு நேரிட்டது. எஜமானனுக்குக் கொஞ்சம் செலுத்தி வந்த குத்தகை நெல்லையும் அந்தச் சாக்கில் கொடுக்காமல் ஏய்த்துவிட என்ன இசைவு செய்யலாம் என்று யோசித்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்றான். எஜமானன் குடியானவனுக்குக் காசா சாப்பாடு போடச் சொல்லி, காசாவிடையம் கொடுக்கச் சொல்லிப் பிறகு பேட்டி தந்தார். "குடியானவரே, ஏன் இந்தச் சால் நெல் அளக்கவில்லை?" என்று கிட்டத்தில் இருந்த கணக்குப் பிள்ளை கேட்டான். நன்றி கெட்ட களவாணிப்பயலான அந்தக் குடியானவன், "மகாப்பிரபு! நெல்லையெல்லாம் எலி தின்றுவிட்டது" என்றான். பிரபு, "எலி எப்படி இருக்கும்?" என்றார். அங்கே கூட்டில் அடைத்து வைத்திருந்த புலியைக் காட்டி, "இது மாதிரி இருக்கும்" என்றான். இரக்கமுள்ள சாகிப் கேட்டுக் கவலையடைந்தார். உடனே "ஐயோ, இத்தைப் பெரிய பிராணிகள் தின்க ஆரம்பித்தால் என்ன மீரும்? நல்லது உமக்குக் குத்தகை நெல் மாப்புச் செய்தோம்" என்ற உத்தரவாயிற்று.



# பிரபஞ்ச வர்த்தமானம்.

## THE NEWS OF THE WORLD

தமிழ் இலக்கியங்களுக்குச் சிரோபூஷணம் போல விளங்கும் "திருக்குறள்" ஆசிரியராகிய திருவள்ளுவ நாயனாருடைய ஞாபகார்த்தமாக அடுத்துவரும் ஜூன் மாதம்

**திருவள்ளுவர் ஜன்ம தினக் கொண்டாட்டம்**

நான்காந் தேதியன்று மயிலாப்பூரில் திருவள்ளுவ நாயனார் கோவிலில் ஒரு விசேஷக் கொண்டாட்டம் நிகழப் போவதாகக்கேட்கும் அபிமானிகள் அனைவரும் நம்மைப்போலவே சந்தோஷ சித்தர்களாக விருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இக்கொண்டாட்டம் இனி வருஷா வருஷமும் நடைபெறுவதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. நாயனார் காலம் இற்றைக்குச் சுமார் பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்னராயினும், அவரது அருமைத் திருக்குறளாலேயே அவரது மெய்க்கீர்த்தி இன்னும் இவ்வுலகில் பரவிவருகிறது. கௌடில்யருடைய **அர்த்தசாஸ்திரம்,** வாத்ஸ்யாயனருடைய **காமஸூத்ரம், சுக்ரநீதி** முதலிய ஆர்ய கிரந்தங்களுக்குச் சரிசமானமாகச் சொல்லக்கூடிய திருக்குறளின் மகிமையையும், அக்குறளாசிரியருடைய அழகிய ஜீவிய வாழ்க்கையையும் பற்றிய வியாசங்கள், இக்கொண்டாட்ட தினங்களில் படிக்கப்படும். பாட பேதங்களும் உரை பேதங்களும், ஆராய்ச்சி விஷயங்களுமடங்கிய புதிய பதிப்புக் குறள் ஒன்றை வெளியிடுவதாகவும் உத்தேசித்திருக்கின்றனர். இங்கிலீஷ், பிரஞ்சு, லத்தீன் முதலிய ஐரோப்பிய பாஷைகளில் இத்திருக்குறள் முன்னமேயே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஸம்ஸ்கிருதத்திலும் ஒரு பாகம் வெளிவந்ததை நாமறிவோம். இவ்வளவு அருமைவாய்ந்த நாயனாருடைய தினக்கொண்டாட்டம் இதற்கு முன்னால் பிரபலமாக நிகழாமலிருந்தது நமது அசிரத்தையைக் காட்டிற்று. இனி அவ்வசை நமக்குக் கிடைக்காது.

* * *

பம்பாய் மாகாணத்தில்ஜனப்பிரதிநிதிகளாய்ச் சட்டசபையில் ஸ்தானம் பெற்றிருக்கும் கனவான்கள் அனைவரும் ராஜ்ய விஷயங்களில் ஒத்துழைப்பதற்காக ஒரு ஏற்பாடு செய்து

**பம்பாய் ஜனப் பிரதிநிதிகளின் ஸங்கம்.**

கொண்டிருக்கிறதாகக் கேட்கிறோம். பிரதிநிதிகள்ஒன்றுகூடி விஷயங்களை முன்னமேயே நன்றாய் ஆலோசித்துக்கொள்ளவும், ஜனங்களுக்கு இருக்கும் குறைபாடுகளை எவ்வாறு ராஜாங்கத்தாருக்குத் தெரியப்படுத்தலாம் என்று தீர்மானிக்கவும், இவ்வேற்பாடு வெகு சவுகரியமாகவிருக்கும். இந்திய ஸேவக ஸங்கக் கட்டிடத்தில், இந்தப் பிரதிநிதிகளின் ஸங்கம் கூடும். இதில் எல்லாப் பிரதிநிதி மெம்பர்களும் சர்க்காரால் நியமனம்பெற்ற கனவான்களில் இருவரும் ஏற்கெனவே சேர்ந்துவிட்டனரெனவும் தெரிகிறது. மற்றைய மாகாணங்களிலும் இப்படிப்பட்ட ஸங்கங்களும் ஏற்பாடுகளும் சீக்கிரத்திலுண்டாக எதிர்பார்க்கலாம்.

* * *

நமது சென்னை ராஜதானியில் தீபாவளிப்

**வங்காள சாஸ்திரீய கைத் தொழிற் சங்கம்**

பண்டிகை தோறும், ஜாதீய மூலதனமென்று பணம் வசூலிக்கப்படுவதையும், அப்பணத்தால், தொழிற் கல்வியைக் கற்றுக்கொள்ள விரும்பும் வித்யார்த்திகளுக்கு மாதநிவேதனம் கொடுக்கப்படுவதையும் அபிமானிகள் அறிந்திருப்பார்கள். இதேமாதிரியான ஏற்பாடொன்று வங்காளத்தில் சென்ற 12 வருஷங்களாக நடைபெற்று வருகிறது. இதுவரையில் 156 வித்யார்த்திகள் அயல்நாடுகளுக்குச்சென்று தொழிற் கல்வி கற்றுக்கொண்டு திரும்பி வந்திருக்கின்றனர். அவர்களில் 140 பேர் நல்ல உத்தியோகங்களில் அமர்ந்திருக்கின்றனர். சிலர், மட்பாண்டம் செய்தல், தோல் பதனிடுதல், அச்சு மை செய்தல், தரிநெசவு, சாயம்போடல், சுருட்டு, பென்ஸில், மெழுகுவர்த்தி, தகடுகள், கத்தி, நெருப்புப் பெட்டி, பிஸ்கோத்து, சீப்பு, பாய், தகரம், சர்க்கரை, பொத்தான், செங்கல் முதலிய பொருள்களைச் செய்தல் ஆகிய தொழில்களில் இறங்கியிருக்கின்றனர். இந்த அரிய வேலைகளைக் கேட்டு எவர்தாம் திருப்திப்படமாட்டார்கள்? நமது மாகாணத்திலும் நிவேதனம்பெற்ற வித்யார்த்திகள் தங்களால் ஆனவரையில் கைத்தொழில்களை விருத்திசெய்து

வருகின்றனர். என்றாலும், வங்காளத்தாரை
எட்டிப்பிடிக்க நமக்கு இன்னும் எவ்வளவோ
காலம் பிடிக்கும்போ லிருக்கிறது. நமது வித்
யார்த்திகள் வங்காளிகளைக் காட்டிலும் ஒரு
விதத்திலும் குறைந்தவர்கள் அல்லர். நமக்கு
வேண்டியதெல்லாம் மூன்றெழுத்தாலான
ஒரே ஒரு பொருள்—**பணம்.**

* * *

*போபால் நாட்டில் மதுபானச்சட்டம்*

பம்பாய் ராஜதானியைச் சேர்ந்த **போபால்**
சமஸ்தானத்தை வெகு அபூர்வ சாமர்த்தியத்
துடன் ஆண்டுவரும் முகம்ம
திய ராணியார், மதுபான
விஷயமாக ஒரு சட்டமிட்டி
ருக்கின்றனர். அதன்படி, அந்
நாட்டில் ஒருவன் கள்ளைக்
குடித்து மயங்கிக் கிடந்தாலும், கள்ளை வைத்
துக் கொண்டிருந்தாலும், கள்ளுக் கடையில்
இருந்தாலும் சரியே, அவன் முகம்மதியனாக
விருக்கும் பக்ஷத்தில், விசாரணைக் குள்ளாகி,
குற்றம் ருசுவானால், தண்டனை பெறக்கூடிய
வனாவான். முகம்மதியர்களுக்கு, அவர்களு
டைய தர்ம கிரந்தமான குரானில் மது
பானம் முற்றிலும் விலக்கப் பட்டுள்ளது.
அதுபற்றியேதான் இப்படிப்பட்ட சட்டம்
பிறந்ததுபோலும். இச்சட்டத்துக்கு, முகம்
மதியரல்லாதவர்களையும் உட்படுத்தியிருந்
தால், ராணியவர்களுடைய மெய்க்கீர்த்தி இன்
னும் சோபிதமாகும். ஹிந்துக்கள், கிறிஸ்த
வர்கள் முதலிய பிறமார்க்கத்தினருடைய
கிரந்தங்களும் மதுபானத்தை விலக்கியே
யிருக்கின்றன. மேற்கூறிய சட்டத்தை மற்
றைய சுதேச ராஜ்யங்களும் பின்பற்றுவார்க
ளென நம்புகிறோம்.

* * *

*சென்னையில் சில புதிய நியமனங்கள்*

நமது ராஜதானியில் இந்தியர்களுக்
கென்று பிரத்யேகப்படுத்தி
வைக்கப்பட்ட கலெக்டர்
ஸ்தானங்கள் இரண்டிலிருந்து
மூன்றுக்கு உயர்த்தப்பட்டி
ருக்கிறது. என்றாலும், இவ்விஷயத்தில் நாம்
சந்தோஷப்படக்கூடிய அம்சம் ஒன்றுமில்லை.
ஏனெனில், ஆரம்பமானதுமுதல், இந்தியர்
களே தலைமை ஸ்தானம் வகித்துவந்த ஐக்
கிய நாணயச்சங்க ரிஜிஸ்ட்ரார் பதவி, இக்
போது இந்திய ஸிவில் ஸர்வீஸ்காரருக்குக்
கொடுபட்டுவிட்டது. ஆகவே இந்த ஏற்பாட்டி
னால் இந்தியர்களுக்கு லாபம் ஒன்றுமில்லை.

நிற்க, சென்னை போர்டு மெம்பர்களில் ஒரு
வராக கனம் அலீஸ் உத்தீன் கான் பகதூர்
அவர்கள் நியமனம்பெற்றதைக் கேட்கச் சந்
தோஷப்படுகின்றனம். இதுவரையில் அந்தப்
பதவிக்கு இந்தியர்களே அருகரல்லர் என்ற
எண்ணமிருந்தது. கான் பகதூர் அவர்
களுடைய சாமர்த்தியத்தையும் அபார சக்தி
யையும்பற்றி அடிக்கடி நாம் கேள்விப்பட்டி
ருக்கிறோம். ஆகவே, அவர் தமது தாற்
காலிக உத்தியோகத்தை நிர்வகிக்கும் மாதிரி
யால், போர்டுமெம்பர் ஸ்தானம் ஒன்று சாசு
வ்தமாகவே இந்தியரொருவருக்குக் கொடுக்க
படுமென்று நாம் நிச்சயமாய் எதிர்பார்க்கலாம்.

* * *

*குருசிஷ்ய அன்யோன்யம்*

நமது பள்ளிக்கூடங்களில், உபாத்தியாயர்
களும் பிள்ளைகளும் பாடநேரங்களில் தவிர
மற்றைய வேளைகளில் ஒருவரையொருவர் சந்
திப்பது துர்லபமாக விருக்கிறது. இந்த துர்த்
தசையை நிவர்த்திக்கக்கூடிய
ஏற்பாடுகள் சிலவுள. என்றா
லும் அனேக சங்கடங்களால்
அவ்வேற்பாடுகளைச் செய்யக் கூடவில்லை. உபா
த்தியாயர்களுக்கும் மாணாக்கர்களுக்கும் அன்
யோன்யம் ஏற்பட்டிருக்குமானால் மாணாக்கர்
களுக்கு அளவில்லாத நன்மைகள் உண்டா
கும். இதற்கென்று, இப்போது சென்னை கவ
ர்ன்மெண்டார் ஒரு உத்திரவிட்டிருக்கின்ற
னர். அதன்படி ஒவ்வொரு கவர்ன்மெண்டு
காலேஜில் படிக்கும் மாணாக்கனும், அவனவனு
டைய பாடங்களைப் போதிக்கும் உபன்யாஸகர்
பார்வையில் இருக்கவேண்டுமென்றும், வார
மொரு முறை, அவ்வுபன்யாஸகர் தம்முடைய
மேற்பார்வையில் இருக்கும் பிள்ளைகளைக்
கூட்டி வைத்துக்கொண்டு, அவர்களுடைய
படிப்பு, சௌக்கியம், சௌகரியம் முதலிய
விஷயங்களை நேருக்கு நேராகத் தெரிந்து
கொள்ளவேண்டுமென்றும் ஏற்பாடாகியிருக்
கிறது. இதனால் மிகுந்த நன்மையுண்டாகு
மென்பது நமது தீர்ந்த சித்தாந்தம். உபன்
யாஸகர்கள், இந்த உத்தரவு ஏற்பட்டதின்
நன்னோக்கத்தை யறிந்து, அந்தரங்க அனு
தாபத்துடன் பிள்ளைகளைக் கவனித்து வர
வேண்டுமென்பதே நமது கோரிக்கை.



காலஞ்சென்ற ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜி

BY COURTESY OF THE "SWADESA MITRAN"

# விவேகபோதினி

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்" is not printed here; the masthead motto reads:

" எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி IX } பிங்கள ஹு வைகாசி மீ ::, 1917-ஹு. ஜூன் மீ { பகுதி 12

## மாலை மதியம்

## THE MOON RISE

1. மேகந் தனைக்காய்ச்சி வெண்கரத்தாற் பிழியுல
காகந் தனைத்தழுவி யன்பினொடு—போக
விடைகொள்வான் போல விளங்கினனோ ராழி
நடைகொள்வான் ஞால நயந்து.

2. பச்சைக் கொடியின் பதும மலர்ந்ததென
அச்சங் கடங்கா வாண்மையான்-இச்சையுடன்
அந்தரை மாதுக்கென் றன்போ டணிந்திட்ட
சிந்துரப்பொட் டானான் செவந்து.

3. அஞ்சுடரோன் ஆட்சி அழிந்து சுடரிழப்ப
மஞ்சடர்ந்து ஞாலமதிமயங்க—வஞ்சனையென்
பௌவத் திரைபொங்கப் போந்ததகல் வானத்
செவ்வந்தி மாலை செழித்து. [துச்

4. வானைத் தகர்த்து வினைத்திடிக்குங் கார்க்குல
[மென்
சேனை யெதிர்தாக்கச் சேர்ந்தெழீஇ-மீனுதிரக்
கூதிரரவ் பிளந்துகொட்டமிட்டுக் கூவியம்பர்
வீதி கடித்த விகங்கம்.

5. அஞ்சிறகர் அந்தரத் தார்த்தெழீஇ யானந்தங்
கொஞ்சக் குரலையிட்டுக் கொக்கரித்துப்—
[பஞ்சரஞ்சேர்ந்
தந்தியிசை யெழிப்பு மாற்றிளந்தென் காற்றின்
முந்து யிசைக்க முயங்கி.

6. இந்திரவில் யாழின் எழினி நரம்பிசைத்துக்
கந்தரம் பாடிக்களமுழக்க—அந்தரமின்
ஆடி யொளியெரிக்க அந்திக் கனல்மயங்கக்
கூடி...தால் தென்றல் குளிர்ந்து.

7. மாலைக் குருதியுடை வையந் தனைப்போர்ப்ப
வேலையிருள் சூழ்ந்து வினைபரப்பச்—சிலமுதல்
குணமறையக் குத்திரமுங் கோளுங் கலந்தா
வணமறைய வந்த திருள். [ளும்

8. மாலைக் குமரி மயக்க வளிவீசி
வேலைகுளித் தோதி விரித்தென்ன—ஞாலம்
அழுந்தத் துயருள் அவலமர சாள
எழுந்ததே எங்கும் இரா.

9. கொலைகளவு காம குடிமயக்கப் பௌவத்
தலைக் கடைய வதிர்ந்து—தலைமுழுதும்
நெஞ்சு மனமு நினைவு மிருண்டிரிய
நஞ்சமென நாடிற் றிரா.

10. ஆரிருளை மின்னும் அலையெரித்துக்கர்ச்சித்துக்
கூரிடவென் றுர்ப்பப்புள் கூட்டிலெங்கும்—
[மாருதமும்
மாற்றெறு மின்மினியா மாதீபம் வைப்பநோக்
தோற்றினவான் விண்மீன் தொடர்ந்து. [கத்

11. கமர்ந்தநிலஞ் சேர்ந்தொன்றத் தண்ணென்
[கதிரின்
அமர்ந்த வமுத மருந்தாட்டி-மதர்த்தெழுந்து
புல்லிருளைக் கல்லிப் பிறைவானிற் போந்ததே
அல்லறனை வீக்கி யமர்ந்து.

12. இரிந்த மனங்கிளைக்க ஏத்தெடுப்பத் தென்றல்
பரிந்தசுவர்க் கோழிபாண் பாடப்—பரவை
முரசதிர மின்கொடியார் மொய்ம்முகின்
[மாவின்
பரந்த நிலாநிதயஞ் சிந்திவரப் பாந்தள்
பருந்தண் மணித்தீப மேந்தப் பவனி
வருஞ்சேண் மதிய வரசு.

விவேக போதினி

தொ. 9] பிங்கள௵ வைகாசி௴ [ப. 12

## மனச்செம்மை

### EQUANIMITY OF MIND

உண்மையிலீடுபட்டு வாழ்தல், மனத்தைத் தவறான வழிகளிற் செல்லவிடாது ஒழுகல், பிழைப்பைத் தெய்விகமாக எண்ணல் முதலான நல்ல குணங்கள் விளங்கும் இடங்களில் ஒரு நாளும் தவறான நடை ஏற்படாது. ஒவ்வொரு காரியத்தையுஞ் சீர்தூக்கிச் செய்வதே அத்தகையாரியற்கை. அவ்வாறே பீஷ்மரை அவர் சிற்றாயாகிய ஸத்தியவதி தனது குமாரனாகிய விசித்ரவீர்யனுடைய பார்யைகளை மணந்து, அவர்க்குச் சந்தான மேற்படுத்தும்படி தூண்டிய மொழிகள் பீஷ்மர்காதில் ஏறவில்லை. அவர் மறுத்தார்; சத்தியவதிக்குக் கன்யா பர்வத்தில் பராசரர் என்னும் முனிவரது அனுக்ரஹத்தினாற் பிறந்த ஸ்ரீ வேதவ்யாசர் என்னும் முனிபுங்கவரது கிருபையினால் தன் உடன் பிறந்தவன் மனைவியர்க்குச் சந்தான மேற்படுத்தலாம் என்று சொன்னார்; அவ்வாறு செய்வதால், தான் கொண்ட விரதமும் கெடாது, ராஜ வம்சமுமழியாது விளங்கும் எனவுஞ் சொன்னார்.

பீஷ்மரது மொழிகள் ஸத்யவதிக்கு உண்மையாகவே பட்டன; பீஷ்மரது கர்மயோக நிலைக்கு அனுகூலமாகவும் ஏற்பட்டன. வேதவியாசரது அனுக்ரஹத்தினால் அம்பையிடம் பிறவிக் குருடனான த்ருதராஷ்டிரனும், அம்பாலிகையிடம் பாண்டு படர்ந்த தேகத்துடன் பாண்டு என்னும் மன்னனும் தோன்றினார். இதை அறிந்த ஸத்யவதி கவலையுற்று மறுமுறை அம்பிகையை வியாஸரது அனுக்ரஹத்திற்குப் "பாத்திர மாகும்படி சொன்னாள். ஆனால், அவள் தான் ஒப்பியவிதம் செய்யாது, தனது வேலைக்காரியை அனுப்பினாள்: அவளிடம் மஹானாகிய விதுரர் தோன்றினார். இம்மூவரது பால பருவகாலத்தில் பீஷ்மரே ராஜ்ய நிர்வாஹத்தைச் செய்துவந்தனர்.

காலக்ரமத்தில் பாண்டுவுக்கு ஐந்து மைந்தர்கள் பிறந்தனர்; அவர்க்குப் பாண்டவரெனப் பெயர். பாண்டு அவர் பிறந்த சில நாட்களுக்கெல்லாம் இறக்கும்படி நேர்ந்தது. த்ருதராஷ்டிரனுக்கு நூறு மைந்தர்கள் தோன்றினர்; அவரே கௌரவர். பாண்டவரும் கௌரவரும் இளம் வயதில் துரோணாசாரியரிடம் தனுர்வேதங்கற்றனர். ஆனால் கல்வியேற்றத்தில் பாண்டவர் முந்திவந்தனர். கௌரவர் எப்பொழுதும் பங்காளிக் காய்ச்சல் நிறைந்து விளங்கினர். நல்லது விளைத்தால் நல்லது விளையும், அல்லது விளைத்தால் அதுவே விளையும் என்றபடி பாண்டவர் தர்மத்திலேயே சிந்தையுடையவராயும், கௌரவர் அதர்மவழியி லேற்றமுடையவராயும்விளங்கினர். போதாக்குறைக்குக் குலத்தைக் கெடுக்குங் கோடரிக் காம்பென அவர்க்குச் சகுனி என்னும் நல்ல அம்மான் கிடைத்தான். அவனது உபதேசத்தால் அவர்க்கெங்கும் காமாலைப் பார்வை யுண்டாகியது.

காலக்ரமத்தில் நியாயப்படி பாண்டவருள் மூத்தவராகிய தருமர் இராஜ்ய பட்டாபிஷேகத்திற் குரியவரானபடியால் அவர்க்கு இளவரசுப்பட்டம் மேற்படுத்தும்படி யாகியது. இது சகுனியின் தூண்டுகோலால் கௌரவருள் முதல்வனாகிய துரியோதனன் முதலானவர்கட்குக் கடுப்பை யுண்டாக்கியது; தமது தந்தையிடம் தமக்குப் பட்டங்கட்டக் கேட்கும்படி தூண்டினார் பிறகு பாண்டவரைத் தனது மாய சூழ்ச்சிகளால் கொல்லத் துரியோதனன் யத்தனித்தான்; அவை பலிக்காமல் போயின. இதற்குள் பாண்டவர்க்கு விவாஹம் ஏற்பட அவர்க்கு இந்திரப்பிரஸ்தத்தில் பட்டாபிஷேகஞ் செய்விக்கப் பட்டது. அப்போதவர் இந்திய நாட்டு மன்னரை எல்லாம் வென்று, இராஜஸூயம் என்னும் பெரும் யாகஞ் செய்தார். அதற்குக் கௌரவாதியரும் வரவேற்கப்பட்டிருந்தனர்.



இவர் மீண்டும் தமது நகரடைந்ததும் பொறாமைக் கடலில் குளித்துப் பாண்டவரது செல்வாக்கை எவ்வாறொழிப்பதென்றெண்ணமிட்டுக் கொண்டிருந்தனர். சகுனியின் ஆதரவை முன்னிட்டு, தர்மர் முதலியோரைத் தனது நாட்டிற்கு வேடிக்கையாகத் தருவித்து அவருடன் விளையாட்டாக வினை செய்ய வாரம்பித்தான் துரியோதனன்; தர்மர் சூதாட்டிற் கழைத்தால் மறுக்கார் ஆகையால் அவருடன் அவ்விளையாட்டில் மிக்கவல்லவனாகிய தனதம்மான் சகுனியை ஆடவைத்துத் தன் காரியத்தைச் சாதிக்க எண்ணினான். அவ்வாறே சூதாட்டம் நடந்தது. அதில் தர்மர் பந்தயமாகத் தனது நாடு முழுதும் தோற்றுத்தம்மையுந் தோற்றுப் பின் ஆடுபவரது வழக்குக்குட்பட்டுத் தன் மனைவியையும் பந்தயமாக வைத்துத் தோற்றனர். இவ்வாட்டமுடிவில், தீண்டாளாகி இருந்த அவரது மனைவி திரௌபதி சபை நடுவிழுக்கப்பட்டு வந்தனள். தனது அலங்கோல நிலையைக் கூறி அச்சபைமுன் அவள் கதறினாள். பீஷ்மரை நோக்கித் தனது நிலையைக் கண்டு கனியும்படி வேண்டினாள். ஆனால் அவர் அதற்கு என்ன செய்வதென்று மயங்கினர்; மதிமயக்கத்தில் ஏங்கிக் கிடந்தனர்.

தருமா தருமத்தை நன்குணர்ந்த பீஷ்மர் இவ்வாறொழுகுவது தகுமா? தர்மகர்மத்தில் ஈடுபட்டவர் மயக்கமடைய முடியுமோ? 'கௌரவர் கொடியவர்; அவர் செயல் கொடியது, அடாது,' எனவும், 'பாண்டவர் தருமவழியே நடப்பவர்' எனவும் அறிந்தவர். இராஜஸ்பையிலே "ஹே! பிரபுக்களே! உங்களுக்கு அநந்தகோடி நமஸ்காரம்! எனக்கு ஒரு ஸந்தேஹம்.

"மன் தோற்றனன்வெஞ் சூதாகில்
வழக்காற் கொண்மின் மன்னவயின்
முன் தோற்றனனோ என்னை யுந்தான்
முன்னே யிசைந்து தனைத்தோற்ற
பின் தோற்றனனோ கரியாகப்
பெரியோ ருண்மை பேசுக !"

இதை எனக்கு நீங்கள் சொல்ல வேண்டும். நான் எப்படியும் அடிமையாகத் தரும சாஸ்திரம் இடந்தராது. முதலில் பந்தயம் வைத்தவர் என்னைத் தோற்றாரானால், என்னை அவர் பந்தயம் வைப்பதற்கு அதிகாரமில்லை; அவ்வாறு செய்வது தவறு; என்னை அச்செயல் பாத்தியப் படுத்தாது. தரும சாஸ்திரவழியே நடக்கும் என் நாதன் ஒருநாளும் அவ்வாறு செய்திராரென்பது நிச்சயம். தான் தோற்ற பின் தோற்பதற்கு அவர்க்கு ஸ்வதந்திரங் கிடையாது. ஸ்வதந்திர மற்றவர் எவ்வாறு ஸ்வதந்திரமாள முடியும்? என்னை எப்படிப் பந்தயம் வைக்க முடியும்?" என அதிநுட்பமான கேள்வியைக் கேட்டாள். அம்மொழிகளுக்குத் தக்க ஸமாதானம் பீஷ்மரால் ஏன் சொல்லமுடியவில்லை? மனதை ஆளமுடியாத மயக்கமாயிருக் கூடுமென்றோ? இல்லாவிடில்,

"தன்னே ரில்லா நெறித் தருமன்
தனவென் றுரைக்கத் தக்கவெல்லாம்
முன்னே தோற்றுத் தங்களையும்
முறையே தோற்று முடிவுற்றான்
சொன்னீர் தனக்குத் தான்பிறர்க்குத்
தொண்டாய் விட்டுச் சுரிகுழலைப்
பின்னே தோற்க உரிமையினன்
பெறுமே என்று பேசீரே"

என்று சேற்றிற் பிறந்த செந்தாமரையைப் போல, அத்துஷ்ட கௌரவ. கூட்டத்துள் தோன்றிய விகர்ணன் என்னும் நெறிமான் கூறியமொழிகள் அவர் மனத்திலுதித்திருக்கக் கூடாதா? பீஷ்மரது மனம் தர்மநிச்சயம் தெரியாது குழம்பியிருந்தது என்பது திண்ணம். அதனால்தான் அவர் திரௌபதியை நோக்கி "ஆமாம்! ஏழை பந்தயம் வைக்க முடியாதுதான்; ஆனால் மனைவி கணவனுக்குச் சொந்தம்; தருமரோ அதர்ம வழியிற் போகார்; தம்மைத் தோற்ற பின்னே உன்னைத் தோற்றார். சூதாடிய சகுனி அக்ஷவித்தையில் வல்லவன்; ஆயினும் அவன் மோசத்துடன் ஆடியிருப்பான் எனச் சொல்ல முடியுமோ? ஆகையினால் உனக்கு என்ன விடையளிப்பதென்று மயங்குகிறேன். தர்மவழியை எளிதில் உணரமுடியுமா?" என்று கூறினர்.

இவ்வாறு பீஷ்மருக்குண்டான மனக்குழப்பம் துரியோதனாதியருக்கே ஸாதகமாக இருந்தது. இதனால்தான் துரியோதனாதியர், மேலும் அடங்காக் கொடுமையுடன் திரௌபதியை நடுச்சபையிலிழுத்து மான பங்கஞ் செய்யும்படி நேர்ந்தது. ஆனால் பீஷ்மர் அவ்வாறு செய்ய உட்பட்டார் எனச் சொல்லக் கூடாது; அது அவர்க்குத் தவறு என்று பட்ட

போதிலும் தருமத்தின் வழி எவ்வழி செல்ல வேண்டுமென்ற ஸந்தேஹமே அவரை விடவில்லை; அதைத் தேர்ந்துணர மனவலி அவர்க்கில்லாது போனது போலும்! இதற்கு இரு காரணமிருக்கும்; மனக்குழப்ப மொன்று; கௌரவரை வழிக்குக் கொண்டுவந்துவிடலாம் என்ற நல்லெண்ணம் மற்றொன்று. இவ்விரண்டாவது ஆவல் துரியோதனாதியரிடம் பற்றுக் கொண்டிருக்கவும், அவர் இவரை அலக்ஷயஞ் செய்யும்படியாகவும் செய்தன. இதனாலே சூதுமுடிந்து பாண்டவர் காட்டிற்குப் போகும்படி ஏற்பட்டு, கால நிர்ணயப்படி மீண்டு வந்து, தமது நாட்டைக் கேட்டபோதும், அவரைத் துரியோதனன் பக்கமே ஸஹாயஞ் செய்யும்படி செய்தது. இல்லாவிடில் விதுரரைப்போல வில்லை யொடித்துப் போட்டுவிட்டு விலகியிராரா? ஆனைக்கும் அடி சறுக்குமன்றோ? மனிதனாகப் பிறந்தவன் சிறுகுற்றமொன்று மில்லாமலிருப்பது முண்டோ?

ஆனால் பீஷ்மர் இவ்வாறு தரும விஷயத்தில் மயக்கமடைய சிறந்த காரணங்களுண்டு: முக்யமாக இவ்விவாதங்களெல்லாம் குடும்பக் கலகம் என்பதவர் நம்பிக்கை; அது தானே ஸரியாய் விடலாமென்று அவர் எண்ணிய தொன்று. மற்றொன்று சோற்றுக் கடனைத் தாம் நடந்து புகழடைய அவர் கொண்ட ஆசை. இது நிஷ்காமமென்று சொல்ல முடியுமா? துரியோதனன் குடிகளை நன்கோம்பி வந்ததால் ராஜ தருமம் தவறாது நடந்ததும், குடிகளுக்கவன் நல்ல அரசனாக விளங்கியது மூன்றாவதாகும்; இராஜாவின் இஷ்டப்படி நடக்கவேண்டிய பொது தர்மமும் ஒரு காரணமாயிருக்கலாம். தம்மை யழிக்க வந்துள்ள சிகண்டி, பாண்டவரிடமிருப்பதால், அவர் பக்கஞ் சேராதிருக்க வேண்டுமென்ற எண்ணமு மிருந்தாலிருக்கலாம்.

பாண்டவர்க்குக் கௌரவர் அவரது நாட்டை விடாமையால், இருதிறத்தார்க்கும் யுத்தம் ஏற்பட்டது. மேற்சொன்ன சோற்றுக்கடன் கழிக்குமெண்ணமே அவரை அக்காலம் துரியோதனாதியரிடம் சேரச்செய்தது. ஆனால் அவர் பாண்டவரிடம் வெறுப்புக்கொண்டவரல்ல. அவர்க்குப் பாண்டவர் தருமவான்கள், தீயவழியிற் செல்லாதவர், துரியோதனன் செய்ததடாது என்பவை எல்லாம் நன்குதெரியும். அதனாலே தான் அவர் மனமுழுதும் பாண்டவரிடமே இருந்தது; உதவி முழுதும் கௌரவர்க்கே கிடைத்தது; ஆனால் இது நீடித்திருக்கவில்லை.

யுத்தம் ஏற்பட்டதும் தர்மர் பீஷ்மரை நமஸ்கரித்துத் தனக்குச் சகாயம் செய்யும்படி கேட்டார். பீஷ்மர் "யுத்தத்தில் ஸஹாயந் தவிர்த்து, வேறு எதைக் கேட்டாலும் யான் சித்தம்; செல்வச் செருக்கிலாழ்ந்த துரியோதனனுடைய சோற்றுக்கயிற்றால் கட்டப்பட்டவனாகையால் யான் அப்படி நிச்சயித்திருக்கிறேன். உண்ட வீட்டிற்கு இரண்டெண்ணுவது அடாதல்லவா?" என்று பதில் சொல்லி "நீ தருமவான், ஜயம் இந்த யுத்தத்தில் உன் பக்கத்தார்க்கே கிடைக்கும்" என்று அனுக்ரஹித்தார். அவ்வாறே துரியோதனன் அவரை அவனது சேனைத்தலைவராக இருக்கச் சொல்லி வேண்டியபோது, "உன்னிடமே எனக்கு அதிகப் பழக்கமானபடியால் உன்னை விட்டிருக்க என் மனம் ஒப்பாது. பாண்டவர் தருமவழியிற் செல்பவர்; நீ கேவலம் அதர்மவான்; அதில் ஸந்தேகமில்லை. பாண்டவர்க்கு நான் சிறிதும் தேஹஸஹாயஞ் செய்யேன்; யான் சோற்றுக் கடனை யுத்தேசித்துக் கடைசிவரையும் உனக்கே என்னுடலை அர்ப்பணஞ் செய்வேன். ஆனால் என் மனம் தருமாத்மாக்களுக்கே ஜயமேற்படும்படிக் கோரும்; ஆகையால் நான் பாண்டவரை மாத்திரம் யுத்தத்தில் கொல்லேன். உன்னைப்போல அவரும் எனது 'செல்வப்' பேரர்களே; அதிலும் தர்மாத்மாக்கள்.

"நச்சுமர மாமெனினும் வைத்த மரமென்றே
அச்சமுறு கின்றனன் அழிக்க வரிதென்றே"

என்று கொடிய மகனைப் பற்றியே சொன்னால், எனதன்பிற்கும் ஆசைக்கும் ஏற்ற பாண்டவரை என் கையால் ஒருநாளும் கொல்லேன். அதனால் அவர்க்கு ஏதேனும் மறைவாக உதவி செய்வேன் என்றும் மயங்க வேண்டாம்" என்று எச்சரித்தனர்; அவரது தருமசிந்தையை இம்மொழிகள் உள்ளங்கை நெல்லிக்கனியெனக் காட்டுமன்றோ?



## பாஷாபிமானம்

## LOVE OF MOTHER TONGUE

[ஸ்ரீமான் S. பஞ்சாபகேசய்யரவர்கள்.]

நாகரீகம் முதிர முதிர, நடையுடை பாவனைகளும் பழக்க வழக்கங்களும் மாறுபாடடைந்திருக்கும் இந்நாட்டில் தமிழ் முதலான தேச பாஷைகள் சீர்குலைந்திருப்பதற்கு நாம் அறியாமையாலும் கவனக்குறைவாலும் இகழ்ந்தமையே காரணம். ராஜபாஷையாகிய ஆங்கிலமே வியாபகமடைந்து விளங்குகின்றது. வீட்டிலும் நாட்டிலும் வழங்கும் பாஷைகளை நாம் அவமதித்து இகழ்ந்துவிட்டதைப்போல் வேறு எந்நாட்டிலும் எந்தப் பாஷையும் இகழப்படவில்லை. தற்காலம் பலர் இவ்விஷயமாகத் உழைத்து, தேசபாஷைகளை அபிவிருத்தி செய்வதற்கு முயற்சிகள் செய்துவருகின்றனர். ஆயினும், இப்பொழுது தமிழ் முதலான பாஷைகள் இருக்கும் நிலைமையை உத்தேசிக்க இம்முயற்சிகள் எள்ளளவேயாகும்.

சென்ற 1913 ல் திவான் பஹதூர் சுவாமிக்கண்ணு பிள்ளையவர்கள் தமது கான்வொகேஷன் (Convocation Address) பிரஸங்கத்தில் "நம்முடைய தேசபாஷைகளை அபிவிருத்தி செய்துதான் நாம் கல்வியில் தேர்ச்சியடையவேண்டும். நம் தேசத்திற்கு வேறு வழியில்லை" என்று நன்கெடுத்துரைத்தார். ராஜ பாஷையாகிய ஆங்கிலத்தில் தேர்ச்சியடைவது இன்றியமையாததே. அவற்றில் அரிய கிரந்தங்கள் இருப்பதால், அவைகளைப் படிக்க அறிவு விருத்தியாகும் என்பது நிச்சயம். ஆயினும், நாம் தேசபாஷைகளை இகழவா வேண்டும்? சிலர், வயிறே பெரியதென்றெண்ணி ஆங்கிலத்தையே சிரமேற்கொண்டு வீடுகளிலுங்கூட ஆங்கிலமே பேசுகின்றனர். பெண்களுக்கும் ஆங்கிலப் படிப்பையே முக்கியமாய்க் கற்றுக் கொடுக்கின்றனர். பெண்களுக்குக் கல்வி கற்பித்தல் அத்தியாவசியமானாலும், தேச பாஷைகளை விடுத்து, ஆங்கிலத்தையா அப்பியசிக்கவேண்டும்! தமிழ் பாஷையை எடுத்துக்கொள்வோம். அதில் இராமாயணம், மஹாபாரதம் முதலான நூல்களில்லையா? இவைகளில் அடங்கியிருக்கும் உயர்ந்த நீதிகளும், மேலான போதனைகளும் வேறெந்த நூல்களிலும் இல்லையெனக் கூசாது கூறலாம். நமது நூல்களின் பெருமை, அவைகளை ஆராய்ச்சி செய்தவற்கன்றோ தெரியும். திவான் பஹதூர் சுவாமிக்கண்ணு பிள்ளையவர்கள் தமது மேற்கூறிய உபந்யாசத்தில் "டாக்டர் ஜீ. யூ. போப் என்பவர் 'தமிழில் பாண்டித்தியம் அடைவது வறுமைக்கு நேர் வழியாம்' என்றெழுதியிருக்கின்றார்" என்றார். நமது தமிழின் அருமையை அந்நியர் உணர்ந்து நமக்கெடுத்துக் காட்டவேண்டி வந்ததென்றால், நமது குறைவைச் சொல்லவும் வேண்டுமோ! தமிழின் அருமையையும் பெருமையையும்பற்றி ஒரு பெரியவர் பின் வருமாறு எழுதியிருக்கின்றனர்.

"தேசாபிமானமும் பாஷாபிமானமு மில்லாது, தமிழையும் தமிழ் வித்வான்களையும் இகழ்பவர்கள், திருவள்ளுவருடைய குறளை ஜென்மாந்திரத்திலும் பார்த்திருப்பார்களா? கம்பனுடைய கற்பனையைக் கனவிலும் கேட்டிருப்பார்களா? நாலடியார் செய்தவர்களுடைய காலடியையாவது கண்டிருப்பார்களா? ஔவையாருடைய நீதிநூலைச் செவ்வையாக அறிவார்களா?.....". இது முற்றிலும் பொருந்தும். இப்படியே நான் ஒவ்வொரு பாஷையின் புகழும். வங்காளத்தில் ஸர் ரவீந்தரநாத டாகூர் (Sir Rabinbranath Tagore) அவர்களால் எழுதப்பட்ட கவிகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டவுடன், அவரது புகழும் அக்கவிகளின் மேன்மையும் உலகெங்கும் பரவி ஓங்கியிருப்பது யாவரும் நன்கறிந்த விஷயமே. இப்பெரியோரின் கவிகள், முதன்முதல் வங்காள பாஷையில் எழுதப்பட்டன. இப்பாஷையை யுணர்ந்தோர் அவைகளைப் படிப்பதென்றால் அவைகளின் மேன்மை பதின் மடங்காகி விளங்குமென்றுரைக்கவும் வேண்டுமோ?

ஆதலால் ஒவ்வொருவரும் இவ்விஷயத்தில் உழைத்தல் இன்றியமையாதது. தேசபாஷை தாய்பாஷையுமன்றோ. நாம்பிறந்ததும் வளர்ந்ததும் நம்மைச்சீராட்டித் தாலாட்டியதும் தேச பாஷையாகிய தாய் பாஷையிலன்றோ! ஆகவே, இதை இகழ்வது "மாதா வயிறெரிய மஹேச்வர பூஜைசெய்வதுபோல்" ஆகுமே! ஆனதால் சகலரும் இதனைத்தையும் சிரமேற்கொண்டு, தங்கள் தேசபாஷைகளை இகழாது புகழ்பெறச் செய்வாராகில், அவர் தம் பெருமையோங்கி தேசமும் க்ஷேமமடையுமன்றோ?

# வான சாஸ்திரம்

## LESSONS IN ASTRONOMY

### சூரியன்

இக்களங்கங்கள் நமக்கு முக்கியமானவை. இவைகளால் சூரியனைப்பற்றிய சில விஷயங்களை அறிகிறோம். இவைகளை நாம் கவனித்துக்கொண்டே வந்தால், இவைகள் அசைவதாகக் காணப்படுகின்றன. சூரியனுடைய கிழக்குக் கோடியில் காணப்படும் ஒரு களங்கம் சுமார் 14 தினங்களில் அதன் மேற்குக் கோடிக்கு நகர்ந்துபோகின்றது. பிறகு இது நமது கண்ணுக்குத் தெரிவதில்லை. மறுபடி 13 அல்லது 14 தினங்கள் கழித்து, முதல் காணப்பட்ட கிழக்குக்கோடியில், திரும்பவும் காணப்படுகிறது. இம்மாதிரி சில களங்கங்கள்தான் காணப்படும். மற்றைய களங்கங்கள், இப்படி முதல் காணப்பட்ட இடத்தில் மறுபடி வரப் பிடிக்கும் சுமார் 27 தினங்களில் அழிந்து மறைந்துவிடும். இக்களங்கங்கள் சுழலுவதால், சூரியனும் பூமியைப்போல் தன்னைத்தானே சுற்றுகிறதென்று தெரிகிறது. பூமி எப்பக்கமாகச் சுற்றுகிறதோ, அப்பக்கமாகவே இதுவும் சுற்றுகிறது. சூரியன் ஒருதரம் சுற்றி வருவதற்குள், பூமி அதே மார்க்கத்தில் கொஞ்சம் நகரும். ஆகையால் பூமி சுற்றாமலிருந்தால் எவ்வளவு தினங்களில் இக்களங்கங்கள் நமக்கு மறைந்துவிடுமோ, அதைவிடக் கொஞ்சம் நாட்கள் அதிகமாகவே நமக்குத் தெரிந்து பிறகு மறையும். இப்பொழுது இவை 27 தினங்களில் ஒருதரம் சுற்றிவருவதாகத் தெரிகின்றன. ஆனால் உண்மையில் இன்னும் சீக்கிரமாகவே இவை சுற்றி வரவேண்டும். அதாவது சூரியன் ஒருதரம் தன்னைத்தானே சுற்ற சுமார் $25\frac{1}{3}$ தினங்கள் பிடிக்கின்றனவென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. சூரியனுடைய எல்லாப் பாகங்களும் ஒரே ரீதியாய் ஒரே வேகத்துடன் சுற்றவில்லை. இதன் மத்திய பாகம் அதிக வேகமாயும், வரவரத் துருவங்களுக்குச் சமீபத்திலுள்ள பாகங்கள் கொஞ்சம் மெதுவாயும் சுற்றுகின்றன.

சூரிய களங்கங்கள் விசேஷமாகச் சூரியனின் மத்திய பாகத்தில் காணப்படுகின்றனவேயல்லாமல், துருவங்களுக்குச் சமீபத்தில் காணப்படவில்லை. இவை சில வருஷங்களில் அதிகமாயும், சில வருஷங்களில் குறைந்தும் காணப்படுகின்றன. இவை 1893-ம் வருஷத்தில் விசேஷமாகக் காணப்பட்டன: 1889-ம் வருஷத்திலும், 1901-ம் வருஷத்திலும் மிகக் குறைவாயிருந்தன. இவை சுமார் 12 வருஷங்களுக்குப் பிறகு மிகக் குறைந்து, மறுபடி 12 வருஷங்களுள் அதிகரிப்பதாக நாம் கொள்ளலாம்.

சூரியனில் இரண்டு பாகங்கள் காணப்படுகின்றன. மிகவும் பிரகாசமான மத்திய பாகம் ஒன்று. இதைச் சுற்றிலுமுள்ள சற்றுச் சிவந்த நிறத்தோடுகூடிய கொஞ்சம் மங்கலான பாகம் மற்றொன்று. இந்த இரண்டாவது பாகம் சாதாரண தினங்களில் நமது கண்ணுக்குத் தூரதிருஷ்டிக் கண்ணாடியின் வழியாகக் கூட நன்றாகத் தெரியாது. முழுச் சூரிய கிரஹணம் உண்டாகும் காலங்களில் இது நன்றாய்த் தெரியும். இதைச் சூரியனின் கிரீட காந்தி என்று சொல்லுவது வழக்கம். இப்பாகத்தில் புயல்காற்று வீசுவதுபோல் ஆவி அங்குமிங்கும் அசைந்துகொண்டேயிருக்கும். சில சமயங்களில் இந்த ஆவி கொதித்துப் புடைத்து மேலே கிளம்புவதுமுண்டு. ஒரு செகண்டுக்குச் சுமார் 100 அல்லது 120 மைல் வேகத்துடன் சூரியனுடைய பரப்பிலிருந்து 150,000 அல்லது 180,000 மைல் தூரம் வரையில் இந்த ஆவி கிளம்புவதுண்டு. இவைகளுக்கு சூர்ய புடைப்புகள் என்று பெயர்.

இவை நமது எரிமலைகளை ஒத்திருந்தபோதிலும், இவைகளின் வேகத்தையும் உயரத்தையும் கவனித்தால், இவைகளுக்கும் எரிமலைகளுக்கும் உவமையே இல்லை. இப்புடைப்புகள் கொஞ்சநேரத்திற்கெல்லாம் அடங்கி, மறுபடி சூரியனில் விழுந்து மறைகின்றன. இவை சூரியனிலுள்ள ஆவிமோதிக்கொள்ளும் அதிர்ச்சியால் மேலே கிளம்பலாமென்று உத்தேசிக்கப்படுகிறது.

இச்சூரியனின் உஷ்ணம் அளவில்லாமலிருக்கவேண்டுமென்று பார்த்தோம். இதன் அளவைப்பற்றி ஒரு சுமாரான எண்ணம் வேண்டுமல்லவா? நமது பூமியைப்போல் சுமார் 15 லட்சம் பூமிகளை யெடுத்து, அவைகளின்மேல் 15 மைல் உயரத்திற்கு நிலக்கரியை எல்லாவற்றிலும் முழுவதும் பரப்பிவிட்டு, இந்த நிலக்கரியையெல்லாம் ஓர் அற்புத மின்சார சக்தியால் ஒரே சமயத்தில் கொளுத்தி விடுவோம். இப்பொழுது இந்த 15 மைல் ஆழமுள்ள நிலக்கரிமுழுவதும் இந்த 15 லட்சம் பூமியிலும் ஒரே சமயத்தில் எரியும்போது எவ்வளவு உஷ்ணம் உண்டாகுமோ அவ்வளவு உஷ்ணம் சூர்யனில் இருக்கிறதென்று சொல்லலாம்! இக்கணக்கு மனதில் பதியுமா? பதியவில்லை என்பது நிச்சயம்! ஏதோ நமது மனதுக்கு எட்டாததாயிருக்கிறது! 'குருடனை ராஜனைப்போல் விழி' யென்றால் என் செய்வான்? சூர்யனின் மேற்பரப்பில் சுமார் 7000 டிகிரி உஷ்ணமிருப்பதாகக் கணக்கிடுகிறார்கள். தண்ணீர் ஆவியாக, 100 டிகிரி உஷ்ணந்தான் வேண்டும். நமக்குத் தெரிந்த எல்லாவஸ்துக்களும் சூர்யனின் உஷ்ணத்தில் 10-இல் ஒரு பாகத்திலேயே ஆவியாகின்றன. இச்சூர்யனின் உட்பாகத்தில் உஷ்ணம் இன்னும் அதிகமாகவே யிருக்கவேண்டும்.

இவ்வளவு விசித்திரமான கோளமாகிய சூர்யன் நம்மிடத்திலிருந்து வெகு தூரத்திலிருக்கிறது. நாம் நமது பூமியிலிருந்து புறப்பட்டு ஒரு விமானத்தில் ஏறிக்கொண்டு, இரவும் பகலும் இடைவிடாமல் ஒரு மணிக்கு 60 மைல் தூரமாகப் போய்க்கொண்டேயிருந்தால், சுமார் 180 வருஷத்தில் சூர்யனை அடையலாம்! ஒருக்கால் அம்மாதிரி விமானம் நம்மால் செய்யமுடிந்தாலும் முடியும். ஆனால் 180 வருஷம் ஜீவிக்கும் முறையைத் தேடவேண்டும்! இவைகளையெல்லாம் கவனிக்கும்போது நமது ஆயுள் காலம் கேவலம் அற்பம் என்று நன்றாகத் தெரிகிறது.

தங்கள் தங்கள் உபகிரஹங்களோடு அநேக கிரஹங்கள் இச்சூர்யனைச் சுற்றி வருகின்றன என்று பார்த்தோம். இக்கிரஹங்களில் பூமியொன்று அல்லவா? இந்தப் பெரிய சூர்யகுடும்பத்தில் நாம் எவ்வளவு அற்ப அங்கத்தினர்களாயிருக்கவேண்டும்! இதை யறியாமல் வீண் கர்வத்தையும், பொய்யான ஸ்திதிகளையும் அடைகிறோம். என்ன பரிதாபம்!

கடைசியாக, நமது சூர்யனைப்பற்றி ஒரு விஷயம் கவனிக்கவேண்டும். ஆகாயத்தில் எவ்வளவோ நட்சத்திரங்கள் காணப்படுகின்றன. நாம் அவைகளைக் கவனிப்பதேயில்லை. நமக்குச் சூர்யனே வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் கொடுப்பதால் நாம் அவனையே விரும்புகிறோம். அவன் உதித்ததும், சந்தோஷிக்கிறோம். அப்பொழுதுதான் எல்லோரும் மனக்கவலைகளிலிருந்து நீங்குகிறார்கள். ஆனால் உண்மையில் ஒவ்வொரு நட்சத்திரமும் சூர்யனைப்போல், வெவ்வேறு கிரஹங்களின் குடும்பத்திற்குத் தலைவனென்றும்; இம்மாதிரியே சூர்யனும் ஒரு நட்சத்திரம் என்றும் வானசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். நாமிருக்கும் குடும்பத்திற்கு அதிபதி சூர்யன். இவன் நமக்கு எல்லாநட்சத்திரங்களையும்விட சமீபத்திலிருப்பதால் இவ்வளவு பிரகாசமாயும், பெரிதாயும் காணப்படுகிறான். மற்றைய நட்சத்திரங்களும்இச்சூர்யனைப் போன்றவை. மிகப்பெரிய உஷ்ண கோளங்கள்; ஆனால் சூர்யனைப்பார்க்கிலும் கணக்கில்லாத தூரத்திலிருப்பதால் நமக்கு இவ்வளவு சிறியனவாகக் காணப்படுகின்றன. இந்த நட்சத்திரங்களுக்கும் அவைகளைச் சுற்றி வரும் கிரஹங்களுண்டு. அவைகளிலும் நம்மைப்போன்ற ஜீவராசிகளிருக்கக்கூடும்! நாம் அறியாதது அளவற்றது என்று இந்த நட்சத்திர மண்டலமே நமக்குத் தெளிவாகத் தெரிவிக்கின்றது. இவ்வளவு சூர்ய குடும்பங்களான நட்சத்திரங்களாலாகிய இப்பிரபஞ்சத்தில் நாம் எந்தமூலை? மனிதர்களாகிய நாமே சகல ஜீவராசிகளிலும் மிகத் தெரிந்தவர்களென்றும், எல்லா வஸ்துக்களையும் நாம் அடக்கியாளவேண்டுமென்றும் பிரயத்தினப்படுகிறோமே! நம்முடைய உண்மையான நிலைமையை நாம் அறிந்தோமில்லை. உண்மையில் இந்த விஸ்வரூபத்துடன் கூடிய அகிலத்தில் நாம் மிக நுட்பமான அணுக்களே!

### வால் நட்சத்திரங்கள்

நாம் சூர்யகுடும்பத்தின் நிரந்தரவாசிகளாகிய கிரஹங்களையும், அவைகளின் உபகிரஹங்களையும்பற்றிப் பார்த்தாய்விட்டது. இப்பொழுது இக்குடும்பத்தைவிட்டு, இம்மாதிரியான வேறு குடும்பங்களுக்கு அதிபதிகளாகிய நட்சத்திரங்களைப்பற்றிக் கவனிப்பதற்குமுன், இக்குடும்பத்திற்கு விருந்தாளிகள்போல் சிற்சில சமயங்களில் வரும் சிலவற்றைப்பற்றி நாம் கவனிப்போம்.

1910-ம் வருஷத்தில் ஆகாயத்தில் ஒரு பெரிய நட்சத்திரம் தன்னுடையபிரகாசமான நீண்ட வாலுடன் தோன்றியதை நாம் மறக்கவில்லை. எவ்வளவு பிரகாசமான வால்! தேவேந்திரனால் விடப்பட்ட ஓர் ஆகாசவாணம்போல் இந்த நட்சத்திரம் பிரகாசித்தது. இதற்கு **வால் நட்சத்திரம்** அல்லது **தூமகேது** என்று பெயர். இம்மாதிரி வால் நட்சத்திரங்களை, நாம் அடிக்கடி பார்ப்பதில்லை. இவை அடிக்கடி நமது குடும்பத்திற்கு வருவதுமில்லை. சில வால் நட்சத்திரங்கள் தங்களுடைய சிறிய உருவத்தால் நமது வெறுங்கண்ணுக்குப் புலப்படுவதில்லை. தூரதிருஷ்டிக்கண்ணாடிக்குப் புலப்படும். வெறுங்கண்ணுக்குப் புலப்படும்வால்நட்சத்திரங்கள் கொஞ்சந்தான் நமது குடும்பத்திற்குள் வருகின்றன. இந்த வால் நட்சத்திரங்கள் எவ்வளவு துரதிர்ஷ்டமானவை! எப்பொழுதும் இவைகளைக் கண்டு ஜனங்கள் நடுங்குகிறார்கள்! ஏதாவது தீங்குகளை இவை கொண்டுவருவனவாக ஜனங்கள் நினைக்கிறார்கள். இவைகளைச் சாபமிடாதவரில்லை. அரசர்களின் மரணத்தையாவது, ராஜ்யங்களில் கலகங்களையாவது, தேசத்தில் சண்டைகளையாவது இவை முன்னறிவிக்கின்றனவாக நம்புகிறார்கள். ஏன் இப்பழிக்கு இவை உள்ளாயினவென்று நமக்குத் தெரியவில்லை! இந்த நட்சத்திரங்களைக் கண்டவுடன், முற்காலத்து அரசர்கள் ஜோதிஷர்களை ஆலோசித்து, அநேக தான தர்மங்களைச் செய்தனரெனத் தெரியவருகிறது.

இவைகளில் சில, கிரமமாய் கணக்கான வருஷங்களுக்கு ஒருதரம் சூர்யனைச் சுற்றி வருகின்றன. சில, சூர்யனிடத்தில் ஒருதரம் வந்துவிட்டு மறுபடி திரும்பாமல் போகின்றன. ஆனால் எல்லாம் சூர்யனைச் சுற்றிவருகின்றனவென்றே தோன்றுகிறது. சில வால் நட்சத்திரங்களைப்பற்றி மட்டுமே நமக்குத் தெரிந்திருக்கிறது. இவைகளின் பாதையும், இவை சுற்றும் வேகமும், ஒருதரம் சூர்யனைச் சுற்றிவரப் பிடிக்கும் காலமும் கணக்கிடப்பட்டிருக்கின்றன. மற்றையவைகளைப்பற்றிய விஷயங்கள் நமக்கு இன்னும் நன்றாகத் தெரியவில்லை. ஆகையால் இவைகள் சூர்யனிடம் ஒருதரம் வந்துவிட்டு மறுபடி திரும்பாமல் போகின்றனவென்று சொல்லுகிறார்கள்போலும். இதுவரையில் சுமார் 20 வால் நட்சத்திரங்களைப்பற்றிய விஷயங்களையே வானசாஸ்திரிகள் கணக்கிட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வால் நட்சத்திரங்கள் சாதாரணமாய் அவைகளை முதல் முதல் அறிந்த வான சாஸ்திரிகளின் பெயரால் வழங்குகின்றன. இப்பொழுது 1910-ம் வருஷத்தில் நாம் பார்த்தது **ஹாலி வால் நட்சத்திரம்.** இது மிகப் பெரியது. இதன் பாதை மற்றைய வால் நட்சத்திரங்களின் பாதைகளைப்போல், நீண்டு குறுகிய முட்டை வடிவமாயிருக்கிறது. இது 1531, 1607, 1682, 1759, 1835 முதலிய வருஷங்களில் காணப்பட்டது. அதாவது, சுமார் 76 வருஷங்களுக்கு ஒருதரம் காணப்படுகிறது. நாம் பார்க்கும் வருஷங்களைத் தவிர, மற்றைய காலங்களில் இவை எங்கு போகின்றனவோ நமக்குத் தெரியவில்லை. இந்த **ஹாலி** நட்சத்திரத்தின் வேகம், இது நமது கிரஹங்கள் இருக்கும் தூரத்தில் இருக்கும்போது, அந்தந்த கிரஹங்களின் வேகத்தைப்போல் $1\frac{1}{2}$ மடங்குள்ளது. அதாவது சூர்யனிலிருந்து பூமியிருக்கும் தூரத்திலிருக்கும்போது பூமியின் வேகத்தை (செகண்டுக்கு 18 மைல்)ப்போல் $1\frac{1}{2}$ மடங்குள்ளது. அதாவது செகண்டுக்கு சுமார் 25 மைல் வேகம்.

இவைகள் மற்றைய கிரஹங்களைப்போல் வெளிச்சத்தை மறைக்கும் மந்தமான வஸ்துக்கள் அல்ல. இவைகளின் வால் வழியாக, நாம் நட்சத்திரம் முதலியவைகளைப் பார்க்கலாம். இவைகளில் இரண்டு தெளிவான பாகங்கள் காணப்படுகின்றன. மிகப் பிரகாசமான தலையொன்று, சற்று மங்கலான அகண்டு நீண்ட வால் மற்றொன்று. இந்த வால் எப்பொழுதும் சூர்யனுக்கு எதிர்ப் பக்கத்தில் தெரிகின்றது. வால் நட்சத்திரம் சூர்யனிடத்திலிருந்து வெகு தூரத்திலிருக்கும்போது, அதன் வால் மிகச் சிறியதாயிருக்கும். சூர்யனிடம் வர வர, வால் நீண்டுகொண்டே வருகிறது. பிறகு திரும்பிப் போகப்போக, வால் சுருங்கிக்கொண்டே வருகிறது. ஆகையால் இதன் வாலுக்குச் சூர்யனே காரணம். சூர்யனிடம் இது வரவர, இதன்மேல்படும் உஷ்ணம் அதிகரிக்கின்றது. இந்த உஷ்ணத்தால் இதைச் சுற்றிலுமுள்ள ஆவி பெரிதாகி, சூர்யனுக்கு எதிர்ப்பக்கத்தில் ஒதுங்குகின்றது. ஆகையால்தான் இதன் வால் சூர்யனுக்கு எதிர்ப்பக்கத்தில் காணப்படுகிறது.



நமது வெறுங்கண்ணுக்குப் புலப்படாமல் தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலமாய் நமக்குத் தெரிகிற தூமகேதுக்களில் சிலவற்றிற்கு, சூர்யனுக்குச் சமீபத்தில் வரும்போதுகூட, வால் தெரிவதேயில்லை. இவைகள் சற்று மங்கலான நட்சத்திரங்கள்போல் உருண்டையாயும், முட்டை வடிவமாயும் காணப்படுகின்றன. இவைகள் கொஞ்ச நாட்களுக்குத்தான் நமக்குக் காணப்படுகின்றன. வாலுடன் நமக்குத் தெரியும் தூமகேதுகளுக்குப் பற்பல வடிவங்களுண்டு. சிலவற்றின் வால், பிளவுபட்டு விசிறிபோலவும், பட்சிகளின் சிறகுபோலவும் காணப்படுவதுண்டு. 1744-ம் வருஷத்தில் காணப்பட்ட தூமகேது ஆறு வால்களுடன் காணப்பட்டதாம். இல வால் நட்சத்திரங்கள் மிகப் பிரகாசமாயிருப்பதால் பகலில் கூடத் தெரிவதுண்டு. இம்மாதிரி 1843-ம் வருஷத்தில் தோன்றிய தூமகேது அவ்வருஷம் பிப்ரவரி மாதம் 28-ம் தேதியன்று பகலில் சூர்யனோடு பிரகாசிக்கக் காணப்பட்டது. வந்த நட்சத்திரத்தின் வால் ஏறக்குறைய 185,000,000மைல் தூரம் நீண்டிருந்ததாகக் கணக்கிடப்பட்டது. இதிலிருந்து தூமகேதுக்களின் வால்கள் எவ்வளவு நீளமுள்ளவையென்று அறிந்துகொள்ளலாம்.

இந்த வால்நட்சத்திரங்களின் பாதைகளும், மற்றைய கிரஹங்களின் பாதைகளும் மிகப் பெரியனவாகையால், இந்த நட்சத்திரங்களும் கிரஹங்களும் ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ளுவதில்லை. இதுவரையில் இம்மாதிரி சம்பவிக்கவில்லை. ஆகையால் அப்படி நேரிடுவது அசாத்தியம் என்றே சொல்லலாம். 1910-ம் வருஷத்ில்கூட ஹாலி நட்சத்திரம் பூமிக்குச் சமீபத்தில் வரப்போகிறதென்றும், அதனால் அபாயங்கள் நேரிடப்போகின்றனவென்றும் ஜனங்கள் சொல்லிக்கொண்டேயிருந்தார்கள். ஏதோ அதிர்ஷ்டவசத்தால் நாம் தப்பிப் பிழைத்தோம்போலும்! ஆனால் சில சமயங்களில் பூமி இந்த நட்சத்திரங்களின் வால்களின் வழியாகச் சுற்றிப் போவதுண்டு. அதேமாதிரிதான் 1910-ம் வருஷத்திலும் பூமி ஹாலி நட்சத்திரத்தின் வாலில் புகுந்து சென்றது. ஆனால் அதைப் பற்றி நாம் கவனிக்கவுமில்லை; நமக்கு யாதொரு கெடுதலும் உண்டாகவுமில்லை. இப்படியே 1861-ம் வருஷம் ஜூன் மாதத்தில் பூமி அவ்வருஷத்துத் தூமகேதுவின் வழியாகச்சென்றது. அப்பொழுதும் யாதொரு கெடுதலும் நேரிட்டதாகத் தெரியவில்லை. ஆகையால் இந்த வால்நட்சத்திரங்களால் நமக்கு யாதொரு தீங்கும் உண்டாகாதென்று சொல்லக்கூடும். ஸர்வலோக சஞ்சாரிகளான இவைகள் இரக்கமற்று நமக்குத் தீங்கைக் கொண்டுவரா. இவைகள் இப் பிரபஞ்சத்தில் எந்தெந்த லோகங்களுக்குப் போய்வருகின்றனவோ? இவைகளுக்கு அந்த லோகங்களைப் பற்றியெல்லாம் தெரிந்திருக்குமல்லவா? இவைகளுக்குத் தெரிந்த விஷயங்களை நமக்கு யார் சொல்லக்கூடும்!

---

# ராஜ்ய பரிபாலனம்

## FORMS OF GOVERNMENT

388-ம் பக்கத் தொடர்ச்சி

பிறகு சப்ளை கம்மிட்டி (Supply Committee), கம்மிட்டி ஆவ் வேஸ் அண்ட் மீன்ஸ் (Committe of Ways and Means) ஆகிய இரண்டு கம்மிட்டிகளால் இக்கணக்குப் பரிசோதனை செய்யப்பட்டு, அக்கம்மிட்டியார்களால் அங்கீகரிக்கப்பட்ட அபிப்பிராயங்களை, எந்தெந்தத் தொகை எந்தெந்த விஷயத்திற்கு ஏற்பட்டதோ அதேமாதிரி பணத்தைச் செலவு செய்யவேண்டுமென்று சொல்லப்பட்ட மசோதாவாகக் காமன்ஸ் சபையாரால் அங்கீகாரம் செய்யப்படுகிறது.

**7. உள் நாட்டு விஷயங்களைக் கவனிக்கும் இலாகா (Home Office):—**

உள் நாட்டுச் செக்ரெடெரி அதாவது இங்கிலாந்தில் நடக்கும் அரசாட்சி சம்பந்தமான காரியங்களைப் பார்த்துவரும் இலாகா. பார்லி

மெண்டாருக்கு இவ்விஷயமாய் உத்திரவாதம் சொல்லவேண்டிய மந்திரிதான் உள் நாட்டுச் செக்ரெடெரி எனப்படுவார். அரசன் சம்பந்தப்பட்ட விஷயங்கள் யாவையும் கவனிப்பதும், அரசனுக்கு வரப்பட்ட கடிதங்களை வாங்குவதும், அவைகளுக்குப் பதில் எழுதுவதும், இவர் காரியம். மேலும் அரசனிருந்து நடத்தும் ஒவ்வொரு சடங்கும் இவர் மூலமாய் ஏற்படவேண்டும். அப்படி நடக்கும் சடங்கு ஒவ்வொன்றிலும், இவர் ஆஜராக விருக்கவேண்டும். இன்னும் நாட்டில் அமைதியும்,ஒழுங்கும் இருக்க இவர் ஏற்பாடு செய்யவேண்டியது. இங்கிலாந்தில் அமைதியையும், ஒழுங்கையும் நிலைநிறுத்தி, ஜனங்களைச் சரியாகப் பாதுகாக்கும்பொருட்டுத் தகுந்த அதிகாரிகளையும், போலீசையும் ஏற்பாடு செய்யவேண்டியது இவரது வேலை. மேலும் மரணதண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளின் பொருட்டு, ஷை தண்டனையை மாற்றத்தகுந்த முகாந்திரங்களை அரசனுக்கு எடுத்துக் காட்டுதல் முதலான காரியங்களை இவர் செய்து வருகிறார். தவிர ஊழியக்காரர்கள் விஷயமாய் என்னென்ன சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டுமோ அவைகளெல்லாம் இவர் கவனிக்கவேண்டிய விஷயங்கள். கைத்தொழிற்சாலை, எளியவர் தொழிற்சாலை இவை சம்பந்தமாய் ஏற்பட்டிருக்கும் சட்டத்தின்படி வேலைக்காரர்கள் ஷை தொழிற்சாலைகளில் வேலை செய்துவருகின்றார்களா என்பதைப் பரிசோதனை செய்ய மேல்விசாரணைக்காரர்களை— இன்ஸ்பெக்டர்களை— நியமனம் செய்து, அவர்களை, ஜனங்கள் வேலை செய்யும் கனிகள்,அதாவது உலோகங்களின் உற்பத்தி ஸ்தானங்கள்,தொழிற்சாலைகள் முதலிய இடங்களில் ஒரு வேலைக்காரனுக்கும் அவன் யஜமானனுக்கும் ஏற்படக்கூடிய சண்டைகளை விலக்குவதும், ஊரில் எளியவர்களுக்கு வேலை செய்வதற்குரிய தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றனவா என்பதை விசாரணை செய்வதும் பிராணிகளை ஜனங்கள் தொந்தரை செய்யாமலிருக்கின்றார்களா என்பதைப் பார்ப்பதும், ஆகிய இவைபோன்ற காரியங்களை இவர் கவனித்து வருகிறார்கள். மேற்கூறிய விஷயங்களை ஸ்காதலாந்தில் இவருக்குப் பதிலாகப் பார்த்து வருபவர் ஸ்காத்லாந்து செக்ரெடெரியே. ஸ்காத்லாந்தில் கல்வி விஷயங்களையும், லோகல் கவர்ன்மெண்ட் விஷயங்களையும், இவர் பார்த்துவருகிறார்.

அயர்லாந்து விஷயங்களைக் கவனிக்க இரண்டு அதிகாரிகள் உண்டு. அவர்களை 'அயர்லாந்து லார்டு லெப்டினெண்ட்' என்றும், 'அயர்லாந்து சீப் செக்ரெடெரி' என்றும் கூறுவார்கள். அயர்லாந்து லார்டு லெப்டினெண்ட் அரசனுக்குப் பதிலாக அயர்லாந்தில் அரசாட்சி செய்துவருகிறார். இவர் அயர்லாந்தின் உள்நாட்டு விஷயங்களைக் கவனித்து வரவேண்டும். இவருக்கு உதவியாகவிருந்து வேலை பார்ப்பவர்தான் 'அயர்லாந்து சீப் செக்ரெடெரி' (Chief Secretary for Ireland).

8. போஸ்டு, தந்தி இலாகா:—

தபால், தந்தி, போஸ்டல், சேவிங்ஸ் பாங்கி முதலான விஷயங்களைப் பார்த்துவரும் மந்திரி 'போஸ்டுமாஸ்டர் ஜெனரல் என்பவர். (Post Master General).

9. வியாபார போர்டு (The Board of Trade):—

இந்தப் போர்டானது பல பிரிவுகளை யுடையது. அவையாவன:—

1. ரெயில் பாதை முதலியவைகளைக் கவனிக்கும் பிரிவு (Railway Department).

2. கடலுக்குரிய பிரிவு (Marine Department).

3. கப்பலில் உத்தியோகம் செய்யும் ஜனங்களின் பொருட்டு ஏற்படும் பணத்தை விசாரணை செய்யும் பிரிவு (Financial Department)

4. துறைமுக விஷயங்களைப் பார்த்துவரும் பிரிவு (Harbour Department).

5. வியாபாரம் முதலிய விஷயங்களைப் பட்டியாய் எழுதும் பிரிவு — (Statistical Department).

6. கூலியாட்களின் நிலைமையை விசாரணை செய்யும் பிரிவு (Labour Department).

7. வியாபாரத்தில் உபயோகப்பட்டு வரும் அளவு சம்பந்தமான கருவிகளைப் பரிசோதிக்கும் பிரிவு (The Standards Department).

1. ரெயில்வே முதலிய விஷயங்களை கவனிக்கும் பிரிவு:—



ரெயில்வே, டிராம்வே முதலியவைகளை இப்பிரிவைச் சேர்ந்தவர்கள் கவனித்து வரவேண்டும். புதிதாக ஏற்படும் ரெயில்வே டிராம்வே கம்பெனிகள் இவர்களின் உத்திரவன்னியில் ரெயில்பாதை போடவோ,டிராம் பாதை போடவோ முடியாது. ஏற்கெனவே இருக்கும் மேற்படி கம்பெனியார்களின் விதிகளை மாற்றவும், அக்கம்பெனிகளின் வரவு செலவு முதலிய கணக்குகளை அடிக்கடி தணிக்கைசெய்யவும் இவர்களுக்கு அதிகாரமுண்டு.

2 கடல் சம்பந்தமான விஷயங்களைப் பார்க்கும் பிரிவு:—

கப்பல்களைத் தணிக்கை செய்வதும், அவைகள் கடல் மார்க்கமாய்ச் செல்லத்தகுந்த நிலைமையில் இருக்கின்றனவா என்பதைப் பார்ப்பதும், கப்பல்கள் சட்டப்பிரகாரம் அளவுகளை உடையனவா என்று விசாரணைசெய்வதும், அப்படி ஏற்பட்ட அளவுகளுக்குச் சரியாகக் கட்டப்பட்ட கப்பல்களைப் பதிவு செய்வதுமாகிய காரியங்களை இவர்கள் பார்க்கவேண்டும்.

3. பினான்ஷியல் டிபார்ட்மெண்ட்:—

கப்பல்களில் உத்தியோகம் பெற்று வேலை பார்த்துவரும் மாலுமிகள் முதலிய ஜனங்கள் நன்மையின்பொருட்டு, அநேக நிதிகளை (Fund) ஏற்படுத்தி ஷை நிதிகள் சரியாக நடத்தப்பட்டு வருகின்றனவா என்றவிஷயங்களைப் பார்வையிட்டு வருபவர்கள் பினான்ஷியல் டிபார்ட்மெண்டார்களே.

4. கப்பல்கள் தங்கும் துறைமுகம், கப்பல்களுக்கு ஸ்தலங்கள் தெரியும்படி துறைமுகத்தில் வைத்திருக்கும் உயரமான விளக்குக் கூண்டுகள் (Lighthouse) இவைகளைக் கவனித்துவரும் பிரிவைத்தான் ஹார்பர் டிபார்ட்மெண்ட் என்றழைப்பது.

5. ஸ்டாடிஸ்டிகல் டிபார்ட்மெண்ட்:—

இவர்களின் வேலை என்னவென்றால் நாட்டிலுள்ள ஜனங்கள் வியாபாரம், கைத்தொழில் வகையரா விஷயங்களை அறிந்துகொள்ள அடிக்கடி பத்திரிகை, கெஜட் இவை மூலமாய் மேற்படி ஜனங்களுக்கு வியாபாரம் கைத்தொழில் விஷயமாய்ச் சமாசாரங்களை வெளியிடுவது.

6. தொழிலாளிகளின் கூலி முதலியவைகளை விசாரித்துவர லேபர் டிபார்ட்மெண்ட் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

7. ஸடாண்டார்ட்ஸ் டிபார்ட்மெண்ட்:—

வியாபாரிகளும் இன்னும் இதர ஜனங்களும் சரியான்படி, படிக்கட்டு, திராசு முதலிய அளவுக்கருவிகளை விதிப்படி உபயோகிக்கிறார்களாவென்று பார்த்துவருவது இப்பிரிவினர்களின்வேலை. இன்னும் இவர்கள் கீழ்வரும் விஷயங்களையும் பார்த்துவருகிறார்கள். அவை யாவன:—லைப் அஷ்யூரன்ஸ் (Life Assurance) கம்பெனிகளின் வரவு செலவு கணக்குகளைப் பரிசோதனை செய்தல், ஊர்களுக்கு ஜலம்,காற்று,மின்சாரம் இவைகளைக்கொண்டு தெருக்களுக்கு விளக்குப்போடுதல் ஆகிய வசதிகளை உண்டாக்குதல்.

10. விவசாயபோர்டு:—

இப்போர்டின் பிரசிடெண்டும் அவர்க்கு உதவியாயிருந்து வேலைபார்த்துவரும் இதர மெம்பர்களும் நில சம்பந்தமான விஷயங்களைப் பார்த்துவருகிறார்கள். வியவசாயத்தை விருத்திசெய்து, குடிகள் வேண்டும் நிலங்களை அவர்களுக்குக் கொடுத்து, வேண்டிய உதவிகளைச்செய்யவேண்டும். மேலும் (Ordanance Survey) ஆர்டனன்ஸ் ஸர்வே என்று சொல்லப்பட்ட பூமியின் எல்லை முதலியவைகளை அளவிடுதல் இவர்களால்தயார்செய்யப்படுவன.

11. கல்வி போர்டு:—

மற்ற போர்டார்களைப் போலவே இப்போர்டு மெம்பர்கள் பிரிவி கவுன்ஸலைச் சேர்ந்தவர்களாயினும், நாட்டில் கல்வி விஷயங்களைப் பார்த்துக் கல்வியபிவிருத்திக்கு வேண்டிய சாதனங்களை இவர்கள் ஏற்படுத்த வேண்டும். முக்கியமாய்ப் போதனு முறை, பள்ளிக்கூடங்கள், உபாத்தியாயர்கள், பள்ளிக்கூடங்களுக்குச் சர்க்கார்கொடுக்கும் கிராண்ட் (Grant) ஆகிய இத்தகைய விஷயங்கள் சம்பந்தமாய்ப் பிரதிவருஷமும் சட்டங்களை (Code of Regulations) ஏற்படுத்தி, அச்சட்டங்களின் பிரகாரம் பள்ளிக்கூடங்கள் நடத்தப்பட்டு வருகின்றனவா என்பதைப் பார்த்து விசாரணை உத்தியோகஸ்தர்களையும் நியமிக்கவேண்டும். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் எவ்வளவு கிராண்ட் கொடுக்கவேண்டும் என்ற விஷயத்தை இப்போர்டார் தீர்மானம் செய்வதானது ஷை பள்ளிக்கூடங்களைப் பார்த்துவரும் ஸ்கூல் இன்ஸ்பெக்டர்களின் ரிபோர்ட்டை அனுசரித்தேயிருக்கும்.

12. லோகல் கவர்ன்மெண்ட் போர்டு:— இங்கிலிஷ் காபினெட்டைச்சேர்ந்தசில மெம்பர்களும், வேறு சில பெரிய கனவான்களும் இப்போர்டிலிருக்கிறார்கள். இப்போர்டார், ஏழைகள் ரக்ஷணார்த்தமாய் ஏற்பட்டிருக்கும் சட்டங்களையும் (Poor Laws), பொது ஜன சௌக்ய விஷயமாய்(Public Health) ஏற்பட்டிருக்கும் விதிகளையும் அந்தந்த இடங்களில் சரிவர அமுலுக்குக் கொண்டுவரும்பொருட்டு நியமனம் செய்யப்பட்டு வேலை பார்த்து வரும் கவுன்சில்கள் அல்லது உத்தியோகஸ்தர்களின் வேலையைத் தணிக்கை செய்து வருகிறார்கள். மேற்கூறிய விஷயங்களைக் கவனித்துவர அந்தந்த விடங்களில் கவுன்சில்களை (Local councils) ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவைகளைத்தான் "லோகல் க்வர்ன்மெண்ட்" என்பது.

13. ஸ்காத்லாந்து செக்ரிடெரி ஸ்காத்லாந்து விஷயங்களைக் கவனித்து வருகிறார்.

14. அயர்லார்ந்து லார்டு லெப்டினண்ட் அதன் சீப்செக்ரிடெரி இவர்களிருவரும் அயர்லாந்தில் இராஜீய நிர்வாகம் செய்து வருகிறார்கள்.

---

# ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜி

## SRIMAN DADABHAI NAOROJI

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

என்றவாறு தேசத்தி விருப்பவர்களுடைய சுகதுக்கங்களுக்குப் பாத்தியப்பட்டவராகிஅவரது கஷ்டத்தைப்போக்கி, சுகத்திற்கிடமுண்டாக்கி, தமது சௌகர்யங்களை நீக்கியும் உழைப்பதே பெரியோர் இயல்பு. அத்தகைய பெரியோர்கள், தமது சிறந்த புத்தியையும் யுக்தியையும் நாட்டின் அபிவிருத்திக்காக உபயோகப்படுத்தி, தேச ஸேவைக்கே கங்கணங்கட்டிக் கொண்டிருப்பர். அத்தகையாரது செயலினாற்றான் தேசத்திற்குப்பலவித நன்மையுண்டாகும். 'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டாய் எல்லோர்க்கும் பெய்யும் மழை' என்றவாறு தேசக்காப்பிற்காகக் கங்கணங் கட்டிக்கொண்டு நன்மனத்துடன் ஊக்கமும் முயற்சியும் பொலியத் தியாகத்தை மேற்கொண்டு உழைப்பவரது செயலினாற்றான் உலகத்திலிருக்கும் பலருக்கும் உயர்ந்த சுகங்கள் ஏற்படுகின்றன. இதற்கு இம்மாதம் காலஞ்சென்ற ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜியவர்களே நிதர்சனமாகும்.

### கல்வி கற்றல்

இவ்"விந்திய மஹாபுருஷர்" 1825-ம் வரு, செப்டம்பர் மீ 4உ ஒரு ஏழை பார்ஸி குடும்பத்தில் பம்பாயில் பிறந்தவர். நான்காவது வயதில் தமது தந்தையை இழந்ததும், தமது தாயினுடைய கண் பார்வையின்கீழ், கல்வி வெகு கவனமாகக் கற்பிக்கப்பட்டனர். இப்போது எல்பின்ஸ்டன் காலேஜ் என்றழைக்கப்படும் 'எல்பின்ஸ்டன் இன்ஸ்டிடியூஷ'னில் புண உதவிபெற்ற மாணாக்கராய்ப் படித்து 1845-ம் வரு பம்பாயில் படிக்கக்கூடிய உயர்தரக் கல்வியைப்பெற்றுச் சிறப்புடன் தேறினர். நௌரோஜி அவர்களின் புத்திவன்மை, சக்தி, கல்வி விருப்பம் முதலிய நற்குணங்களைக்கண்டு, அக்காலம் பம்பாய் சீப் ஜஸ்டிஸாகவிருந்த ஸர் எஸ்கின்பேர்ரி என்பவர் அவரைப் பாரிஸ்டர் பரிக்ஷைக்குப் படிக்கச் சீமைக்கனுப்ப உத்தேசித்தனர்; பல காரணங்களால் அது நிறைவேறவில்லை.

### சீமை சென்றது

1850-ம் வரு நௌரோஜியார் எல்பின்ஸ்டன் காலேஜில் ஒரு போதகராக ஏற்படுத்தப்பட்டனர். 1854-ம் வரு அதில் ஒரு முக்கிய போதகராக நியமிக்கப்பட்டும், அப்பதவியில் அவர் நெடுநாள் இருக்கவில்லை. 1856-ம் வரு அவர் ஒரு சிறந்த கம்பெனியின் ஏஜண்டாக வேலை பார்க்க லண்டனுக்குப் புறப்பட்டுப்போனார். ஆனால் அவர் சீமைக்குப் புறப்படு முன், பம்பாயிலிருந்தகாலத்திலேயே நாட்டிற்குபயோகமான பல காரியங்கள் செய்திருந்தனர். பம்பாயில் முதன் முதல், பெண் பாடசாலை ஸ்தாபித்தவர் அவரே. சமுதாய நன்மைக்கென்று பல சங்கங்களையும் ஸ்தாபித்திருந்தனர். இவர் சீமை சென்றதும் தமது நாட்டை மறந்தனரில்லை; இந்திய ராஜீய முற்போக்கை நாடி உழைக்க ஆரம்பித்தனர். ஸிவில் ஸர்விஸுக்காக நடத்தப்படும் போட்டிப்பரிக்ஷைக்கு இந்தியர்களை விடாத அந்தக் காலத்தில், அவ்வாறிருப்பதை யொழிக்க இவர் விடாமுயற்சியுடன் 1893-ம் வரு வரை உழைத்தனர். கடைசியில் பார்லிமெண்டார், போட்டிப் பரீக்ஷைகள் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் நடத்தப்பட வேண்டுமென்று தீர்மானித்ததற்கு இவரே காரணம்.



### லண்டன் இந்தியன் ஸோஸைடி

சீமைக்குச் சென்றதும், அநேக காலம் அங்கேயிருந்ததனால், இந்திய விஷயங்களை ஆங்கிலப் பொது ஜனங்களுக்கு எல்லா வழிகளிலும் எடுத்துச் சொல்லுதல் அவர் பொறுப்பாயிருந்தது. ஆங்கில தேசமுழுதும் சுற்றுப்பிரயாணம் செய்து பல விடங்களிலும் பிரசங்கித்து ஆங்கிலேயர்களை இந்தியவிஷயங்களைப்பற்றிக் கவனிக்குமாறு வற்புறுத்தினர். இவ்வித எண்ணத்துடன் லண்டன் இந்தியன் ஸோஸைடி என்ற ஒரு சபையையும் அங்கு ஸ்தாபித்தார்.

### வியாபார நஷ்டம்.

நிற்க, 1862-ம் வரு நௌரோஜியார் தாமிருந்த கம்பெனியைவிட்டுத் தனி வியாபாரம் அங்கேயே நடத்த ஆரம்பித்தனர். அவ்வாறு நடத்தும்போது ஒரு ஹிந்து கனவானுக்குப் பண உதவி செய்து, தமது வியாபாரத்திற்கே வினை தேடிக்கொண்டனர். ஆனால் அவரது பெருமையும், பிரதாபமும் நாடறிந்த விஷயம். ஆதலால் கடன்காரர்கள் அவரைத் தொந்தரை செய்யவில்லை. மிகச் சிறப்பு வாய்ந்த இங்கிலாந்து பாங்கியின் கவர்னரும் நௌரோஜியாரது சிறந்த குணத்தைப் பாராட்டி அவர்க்கு அக்காலம் கடிதம் எழுதினர். நண்பர்களது ஆதரவினால் அவர் கடன்காரர்களைத் திருப்திசெய்து 1869-ம் வரு தமது தாய் நாட்டிற்குத் திரும்பினார்.

பம்பாயில் வந்திறங்கியதும் ஜனங்களெல்லோரும் ஆனந்த வெள்ள ஆரவாரத்துடன் அவரை நல்வர வேற்றனர். ஆனால் அவர் மீண்டும் சிறிது காலத்திலேயே சீமைக்குச் செல்ல வேண்டியதாயிற்று.

### வரவு சிலவு கமிட்டிமுன் சாக்ஷியம்

இந்திய நாட்டு வரவு செலவு விஷயத்தைப் பற்றி விசாரணை செய்யப் பார்லிமெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட கமிட்டியின் முன்பு அவர் சாக்ஷியம் கொடுத்தபோது, தாதாபாய் நௌரோஜியார் இந்திய தேசத்து ஏழ்மைத்தன்மையை விஸ்தாரமாகப் பல முகாந்தரங்களுடன் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்துக் காட்டினார்; ஸராஸரி, இந்தியன் ஒவ்வொருவனுக்கும் வருஷ வருமானம் ரூபாய்கள் இருபது கிடைப்பதே அரிதென்று காட்டினர்; ஆங்கிலேயர்கள் அதை அப்பொழுது ஒப்புக்கொள்ளாவிடினும், அதன் உண்மையைப் பிறகு ஆராய்ச்சியாலாறிந்தது அவரது அறிவின் பெருக்கைக் காட்டும். இது நடைபெற்றதும், அவர் பிரசங்கங்கள் மூலமாயும், பத்திரிகைகள் வாயிலாகவும் இந்தியர் நிலையையும், அவர் ஆளப்படும் வழியையும் இங்கிலாந்திலிருந்துகொண்டே ஆங்கிலேய ஜனங்களுக்கு எடுத்துரைத்த வண்ணமாகவே இருந்தனர்.

### பரோடா திவான்

நிற்க, நமது தேசத்துப் பரோடா ஸமஸ்தானம் மிக எளிய நிலையிலிருந்தபடியால் நௌரோஜியார் அந்த ஸமஸ்தானத்துத் திவானாக நியமிக்கப்பட்டனர். இவ்வேலையில் அவர் அத்யத்புதமாக நடந்துகொண்டனர். ஸமஸ்தானத்தைப் பல விதங்களிலும் ஓங்கும்படி செய்தனர். அவ்விடம் பிரிடிஷ் ரெஸிடெண்டாகவிருந்த மிஸ்டர் பேயருக்கு இவரிடம் பிடிப்பில்லா விடினும், சிறந்த ஆங்கில தந்திரிகளாகிய ஸாலிஸ்பரி பிரபு முதலிய பெரியோர்கள் அவரது பெரும் செயல்களை மெச்சினர் என்பதை யாவரும் அறிவர். ஆனால் இப்பதவியில் அவர் வெகு நாள் இருக்கவில்லை. கொஞ்ச காலத்திற்குள்ளாகவே தமது வேலையை ராஜிநாமா கொடுத்துவிட்டுப் பம்பாயிலேயே சில வருஷங்களிருந்தனர்.

### பார்லிமெண்ட் மெம்பர்

நிற்க, இந்திய தேசத்திற்காக இங்கிருந்து வேலை செய்வதைக் காட்டிலும் சீமையிலிருந்துகொண்டு அதிகமாகச் செய்யலாமென்ற எண்ணத்துடன் அவர் 1885-ம் வரு மறுபடியும் சீமைக்குச் சென்றனர். அங்கு சென்றதும், தன்னைச் சாமான்ய ஜனங்களால் பார்லிமெண்டின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்க வேலை செய்தனர். இதில் அவர் கொண்ட ஊக்கம் எவர்க்கும் உண்டாகாது. ஐரோப்பியனல்லாத ஒருவனைத் தேர்ந்தெடுக்கும்படி அவர் உழைத்தது அதிசயமன்றோ? 1883-ம் வரு ஹோல்கேகரன் என்ற வட்டத்

திற்குப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட அவர் அபேக்ஷகராக நின்றார். அவ்வருஷம் அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லையாயினும், 1892-ம் ஆண்டு வரை காத்திருந்து, ஸென்ட்ரல் பின்ஸ்பரி என்ற வட்டத்திற்குப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பெற்று, காமன்ஸ் என்னும் ஆங்கில ராஜாங்கப் பொதுஜன ஸபையில் முதன் முதல் இந்தியராக ஸ்தானம் வகித்தனர். அவ்வாறிருந்த காலத்தில், அவ்வங்கத்தினர்களது, இந்தியாவைப்பற்றிய அஞ்ஞானத்தைத் தமது அறிவினாலும், வாக்சாதுர்யத்தினாலும் சிறிது சிறிதாக ஒழித்து, ஆங்கிலப் பொது ஜனங்களை நமது விஷயங்களைச் சிறிதேனும் கவனிக்கச் செய்தனர். இதன் பலனாக இந்திய விஷயங்களைப்பற்றி விசாரணை செய்ய, பார்லிமெண்டாரால் பற்பல கமிட்டிகள் நியமிக்கப்பட்டு அவற்றின் ஒவ்வொன்றின் முன்னும் நௌரோஜியார் சாக்ஷியம் கொடுக்கும்படி நேர்ந்தது.

காங்கிரஸ் தலைமை

தாதாபாய் தமது தேச ஸேவையால் யாவர் மனத்தையும் கவர்ந்துவந்தனர். தமது தேசத்தை விருத்தி செய்ய நல்லெண்ணத்துடன் உழைத்த மிஸ்டர் ஹ்யூம் முதலிய பெரியோருடன் கூடி, இந்திய தேசீய மஹாநாட்டின் ஏற்பாட்டிற்கு ஆதாரமாயிருந்தனர். அவரது ஆர்வப்பொலிவே அவரை 1886 ஆண்டு அதன் அக்ராஸனம் பெறும்படி ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குக் காரணம். இவ்வுன்னத பதவிக்கு மீண்டும் 1892-ம் வருஷம் சிறிதும் அபிப்பிராய பேதமின்றி எல்லா ஜனங்களாலும் ஏகோபித்துத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சீமையிலிருந்து அவர் அதற்காக வந்தபோது அவர் வரவேற்பு முதலியவற்றைப்பற்றி நாம் விரிவாகக் கூறுவது மிகையாகும். அதன் பெருக்கை ஸர்வில்லியம் ஹண்டர் என்பவர் லண்டன் நகரத்து டைம்ஸ் பத்திரிகையில் விஸ்தரித்திருக்கின்றனர். தாதாபாய் நௌரோஜியார் ஜன சம்மதத்தின் உவகையின் பெருக்கினாலேயே மீண்டும் 1906-ம் வருஷம் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மஹா ஸபையின் அக்கிராஸனத்தை வகிக்க நேர்ந்தது. அக்கால் அவர் செய்த பிரசங்கமே தற்காலத்திய ராஜீயகிளர்ச்சிக்கு மூலாதாரமாக விளங்குகிறது.

பார்லிமேண்ட் மேம்பராக மறுபிரயத்னம்

மீண்டும் சீமை சென்றதும் அவர் பார்லிமெண்ட் மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட 1895-ம் வருஷம் அபேக்ஷகராக நின்றார். ஆனால் அவர் பிரயத்தனம் பலிக்கவில்லை. தோல்வி யுற்றதும், காங்கிரஸ் ஸபையினால் பிரசுரிக்கப்படும் இந்தியா என்னும் பத்திரிகையில் இந்தியர்களுக்குப் புத்திமதியாகத் தமது தோல்வியின் காரணத்தை முன்னிட்டு ஒரு கடிதம் எழுதினர். அதில் இந்தியர்கள் ஜயாபஜயத்தைக் கவனியாது, மனம் சளைக்காது பொது ஜனங்களுக்கும் ராஜ்யபாரத்துக்கும் இசைந்த பொருத்தம் ஓங்கி விளங்கும்படி ஒவ்வொரு மனிதனும் உழைக்கவேண்டுமென்பதைவெகுகண்டிப்பாக அவர் காட்டியுள்ளார்.

வேறு வேலைகள்

இவர் அநேக நற்காரியங்களை இவரது ஜீவிய காலமாகிய 92-வருஷங்களுள் செய்துள்ளனர். ஐந்தில் ஐம்பதில் என்றவாறு விருத்தாப்பியத்தினால் மனந்தளராது ஊக்கம் குன்றாது இவர்போல் உழைப்பது அரிது. ஆங்கிலர்களாலும் இந்தியர்களாலும் ஒருங்கே பாராட்டப் படுவதல்லாமல், 1905-ம் வருஷம் ஆம்ஸ்டர்டாம் என்னும் பட்டணத்தில் நடந்த ஸர்வதேச அபேதவாத கான்பரன்ஸில் இந்தியப் பிரதிநிதியாகச் சென்று இந்திய தேச நிலையையும் ஆட்சி முறையையும் வந்திருந்த பல நாட்டுப் பிரதிநிதிகள் முன்பாக எடுத்து விவரித்து அவரைப் பிரமையில் ஆழ்த்தினர். இது ஓர் அதிசயம் ஆகாது. அவர் இதற்கு முன் 1902-ம் வருஷத்தில் பிரசுரித்த "இந்தியாவின் ஏழ்மைத்தனமும் பிரிடிஷாரின் தன்மைக்கொவ்வாத ஆட்சியும்" என்னும் நூலே இதைக்காட்டிலும் அதிகமாகப் பேசும். இந்நூல் இந்தியாவின் உண்மை நிலையை உணர உழைக்கும் ஒவ்வொருவனுக்கும் இன்றியாமையாதது.

வயோதிகப் பருவம்

1906-ம் வருஷம் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் மஹா ஸபையின் அக்கிராஸனத்தை வகித்தது முதல், அவர் தமது தேக நிலைமையை உத்தேசித்து, தமது ஜன்மதேசத்திலேயே இருக்க விரும்பினர். பம்பாய் ராஜதானியில் வார்ஸோவா என்னுமிடத்தில் தமது எஞ்சிய ஜீவிய காலத்தை ஸாவதானமாக, ஆயினும் உயிருள்ளளவும் தேச விஷயங்களை எள்முனையும் விடாது கவனித்தே, காலத்தைக் கழித்துவந்தனர். இத்தகைய தேச ஸேவை எல்லோருக்கும் கிடைக்குமா?

முடிவுரை

பிறந்தது முதல், சிறிதும் குன்றாது, நிலைநின்ற தேசபக்தியுடன் நமது நாட்டின் அபிவிருத்தியை யுத்தேசித்து, பல்வழிகளிலும் கஷ்டப்பட்டு, மிக்க ஊக்கத்துடன், உடல் பொருள் ஆவி எவற்றையும் கணிசியாது, வயோதிக நிலையிலும், அங்கம் மெலிந்து அலண்ட நாளிலும், தேசக்ஷேமக்கப்பல் தட்டித் தவறிக் கொடுங்கற் பாறைகளின்மீது மோதி உடையாது விளங்க, தமது பாரபுத்தியைச் சிந்தையுடன் ஆண்டு, அதைச் செம்மைவழியிற்செலுத்தும் மாலுமியாகி, தனதுயிர் உடல் விட்டொழியும்வரை நன்குழைத்து 'இந்திய நாட்டுப் பெரிய கிழவன்' எனப்பெயர்கொண்டு இமயமுதல் கன்னிவரையுள்ள மூலைமுடுக்குகளிலும் புகழ்தவழ்ந்து விளங்கித் தற்காலத் தேச முற்போக்கிற்காகச் செய்யுமுறைகளுக்குப் பீடங்கிட வழிதந்த மூலபுருஷர் நல்லஸமயத்தில் நம்மைக் கைவிட்டகன்றனராயினும் அவரது அனுபவ போதனையும் வழியும் இந்நாட்டின் க்ஷேமத்தை ஓங்கச்செய்யும் கலங்கலைர விளக்கமாக விளங்கி, இந்நாட்டின் விருத்தி நிலத்தில், தர்மவழிக் கடலில் நீந்தி, அது முந்தும்படி செய்வதல்லாமல், பகலவன் பதத்தைப் பாடிச்சென்ற அவரது அந்தர சரீரத்தில், நம்மை யாதரிக்கக் கிருபாவீக்ஷணஞ் செய்வாரென்பதும் ஸத்தியம். சென்ற உயிரின் திறத்தை மற்றும் புகழ்வதும் வேண்டுமென்? அது ஸாகமேபெறுக! ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

# தொழிற் சிறப்பு
# Dignity of Labour

தொழில் என்றால் என்ன? இதை யறியாது தொழில் செய்யப் புகுவோமாயின் விபரீதாவஸ்தைகள் நேரிடுமென்பதில் கொஞ்சமேனும் ஐயமில்லை. அவைபற்றியே தொழிலென்பதை நன்காராய்ந்தறிய வேண்டும். தொழிலால்தான் தர்மம் குறைவரச் செய்யப்படும். தர்மத்தினால் இம்மையிற் சுகமும், மறுமையிற் ஆனந்தமும் கிடைக்கும்.

இவ்வுலகின்கண் எல்லோராலும் எப்பொழுதும் தொழில் செய்யப்பட்டே வருகின்றது. தொழில் செய்யாது ஒரு கணமும் எவராலும் இருத்தல் முடியாது. ஆயுங்கால், செய்வதெல்லாம் தொழில் நான்கினில் அடக்கமுள்ளது. உழவன் பயிரிட்டுப் பயிரை அறுத்தலும், ஒருங்கு சேர்த்தப் பொருள்களைக் கொண்டு வர்த்தகன் வியாபாரஞ் செய்தலும், மானிடர்களுக்குக் கொலை, களவு நேர்ந்திடாவண்ணம் புஜபராக்ரமத்தால் ரக்ஷித்தலும், ஜனங்கள் ஈடேறுமாறு வித்தையைப் பரவச் செய்தலும் அன்றி வேறேதெனும் தொழில் உண்டோ? அதாவது தொழில் எந்த உருவம் கொண்டாலும் அவ்வுருவத்தின் உயிர் இந்நான்கினுள் ஒன்றாகத்தான் இருக்கவேண்டும்.

அவ்வவனுக்கு எந்தெந்தத் தொழில் உரிமை என்பது அவ்வவனது பிறப்பினாலும், சுபாவத்தினாலும், பயிற்சியினாலும் ஏற்படும்; எத்தொழில் செய்யினும் செய்யலாம்; அதனால் மேன்மையனென்றும், தாழ்மையனென்றும் ஒருவனை ஒருவன் தொழிலைக்கொண்டே அறிவுடையோர் சொல்லார். தொழில் எவ்வண்ணம் ஒருவனால் செய்யப்படுகிறதென்பதைத் தான் கவனிப்பார்கள் அறிவுள்ளோர்.

தொழில் சரிவரச் செய்வது எங்ஙனம்? தொழில் குற்றமறச் செய்வதற்கு, நியாய மார்க்கத்தைத் தெரிந்தறிய வேண்டும். நியாயமறிதலோ எளிதல்ல. அறிவுடையோர் இயற்றிய நூற்களினின்றும், மேலோர் நன்னடக்கையினின்றும், பரம்பரையாய்த் தொடரும் வழக்கத்தினின்றும் அறிதல் வேண்டும். ஆயுள் நாளோ சில, கல்வியோ கரையில, என்பதையறிந்து, ஒருவன் மெய்வருத்தம்பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது, தனது தர்மத்தை ஆராய்ந்தறிய வேண்டும். 'சென்ற

நாளெல்லாம் சிறு விரல் வைத்து எண்ணலாம். 'நின்றநாள் யாருக்கும் உணர்வது அரிது' ஆகையால் நாம் கூடிய சீக்கிரத்தில் தர்மங் கற்று அநுஸரிக்கவேண்டும்.

இவ்வாறு ஆய்தலின் பயனென்னவென்றால் 'நீ' என்பதையும், 'நான்' என்பதையும் நீக்கி, 'நாம்' என்பதை மனதில் பதித்து, காரியஞ் செய்வதாகும். அதாவது அன்பை மனச் சிங்காதனத்தி னேற்றி, அழுக்காற்றை மனோ ராஜ்யத்தினின்று துறத்தல் வேண்டும். அன்பு இன்றேல், இவ்வுலகம் சடமாகுமென்பதற்கு ஐயமோ? முதாவது தன் சுகத்தையே பாராட்டாது உலக சுகத்தை அதிகரிக்க நாளுக்கு நாள் முயற்சி செய்து கொண்டே வரவேண்டும். தற்காலம் அடைவது அற்பமாய் இருந்தாலும், நாளடைவில் அமோகமாய் அன்பு பெருகும். எப்படியெனின். 'பலதுளி பெருவெள்ளமாக வில்லையோ?' இவ்வாறு இவ்வுலகில் ஒருவன் மேலோனாக இருக்க, உள் அன்பு, தீரங்கொண்டு நடப்பானாயின் கடைசியில் காரியசித்தியடைவான் என்பது திண்ணம்.

---

# விநோத விஷயங்கள்

# Curious Facts

ஜுரத்துக்கு "கொய்னா" கைகண்ட மருந்து. அது கி. பி. 1535-ல் கண்டு பிடிக்கப்பட்டது. பெரு தேசத்தின் ராஜப்பிரதிநிதியின் மனைவிக்கு நேர்ந்த ஜுரத்தைக் குணப்படுத்தியதுதான் அது பிரபலமடைந்தற்குக் காரணம். கி. பி. 1639-ல் அது ஐரோப்பாவுக்குக் கொண்டுவரப்பட்டது. ஜெஸூட் பாதிரியாரால் அது தேச முழுவதிலும் பரவச் செய்யப்பட்டது. அது உண்டாகும் "சின்கோனா" மரம், இந்தியா, ஜெமய்க்கா, நியூஜீலண்ட் பிரதேசங்களில் செழிப்பாய் வளருகிறது.

* * *

ரோமன் கதோலிக் வகுப்பாரின் பரமாசாரியரான "போப்"பின் வஸ்திரங்கள் எண்ணிறந்தனவும் விலை யுயர்ந்தனவுமாம். அவைகள் மூன்று பெரிய அறைகளில் பத்திரப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நாளுக்கும் அதற்கென்று ஏற்பட்ட ஆடையுண்டு. கையுறை செய்வதற்காக ஆடுகளை வளர்க்கும் ஒரு குடும்பத்தார்க்குப் பிரத்தியேகமான சுதந்தரங்களுள்ளன. போப்புக்கு ராஜ்யாதிகாரம் இல்லாது போனதுமுதல் அனேக விலையுயர்ந்த ஆடைகளை அணிவதற்குச் சந்தர்ப்பமில்லாது போயிற்று. என்றாலும் அவைகள் ஜாக்கிரதையாகவே பாதுகாக்கப்படுகின்றன.

* * *

மீன்கள் எவ்வளவு வேகமாகப் போகின்றனவென்பது பலர்க்குத் தெரியாமலிருக்கலாம். டால்பின், பார்பாய்ஸ் என்னும் மீன்கள் மணி ஒன்றுக்கு 17 அல்லது 18 மைல் தூரம் போகுமாம். பானிடோ என்ற மீன் மணிக்கு 40மைல் போகும். திமிங்கிலம் சாதாரணமாக 4 அல்லது 5 மைல் போகுமானாலும், கோப மூட்டப்பட்டால் 17 மைல் போகுமாம். சில நீர்ப்பாம்புகள் கனவேகமாகச் செல்கின்றன.

* * *

ஐரோப்பாவில் பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்வோர்களுக்கு ஏராளமான சம்மானம் செய்யப்படுகிறது. யுத்த விஷயமாக எழுதிவரும் ஒருவருக்கு, 800 வார்த்தைகளுக்கு 20 பவுன், அதாவது 300 ரூபா கொடுக்கப் படுகிறது. "டிட்-பிட்ஸ்" என்னும் பத்திரிகையில் ஒரு தொடர்ச்சிக் கதைக்கு, 1000 பவுன், அதாவது 15,000 ரூபா கொடுபட்டது.

* * *

காலஞ்சென்ற கிச்சனர் பிரபு பிரசங்கம் செய்யும்போதெல்லாம் எழுதியே படிப்பது வழக்கம். கொஞ்சம்கூடக் கூசாமல் சட்டைப் பையினின்றும் தாம் எழுதியுள்ள விஷயத்தை எடுத்துப்படித்துவிட்டு உட்கார்ந்து விடுவார்.

* * *



# மாதவீகங்கணம்

## அத்தியாம்-5

### அரசனும் அமைச்சனும்; பணிவு

(393-ம் பக்கத் தொடர்ச்சி.)

மேல் அத்யாயத்திற் கூறிய ஸம்பாஷணை நடந்து மூன்று தினங்களாயின. இன்னும் அதை நினைத்துக்கொண்டால் கோகுல்தாஸுக்கு மனதுக்குக் கஷ்டமாயிருந்தது.

"இந்த ஸ்த்ரீ ஒப்புயர்வற்ற அழகையுடையவளாய் நல்ல யௌவன தசையிலிருந்த போதும் நான் பார்த்திருக்கிறேன். பின்னுடி எதிரியைப் பின்னடையச் செய்யும்படியான ஸாமர்த்யத்துடனும் சாதுர்யத்துடனும் நான் ஜாண் வெட்டுமுன் அவள் முழம் வெட்டிக் கொண்டுவந்த நாளிலும் நான் இவளை அறிவேன். இருந்தாலும் இவளுக்கு இவ்வளவு ஸாமர்த்யம் இருக்குமென்று நான் கனவில் கூட நினைத்ததில்லை. என்ன வாக்குச் சாதுர்யம்! என் மனதையே நிலைதடுமாறச் செய்தனளே. இவளுக்கு எங்கிருந்து வந்தன இவ்வளவு வசீகரமான வார்த்தைகள்! உலகத்தையே துறந்துவிட்ட ஸந்யாஸினி இவள். இந்த உலகமல்ல, இதைப்போல் பத்து உலகம் ஒன்று சேர்ந்தாலும் எதிர்க்கும்படியான தைர்யமும் வல்லமையுமுடைய என்னையே மதிமயங்கச் செய்தனளே. என் கொட்டத்தையெல்லாம் ஒரு நொடியில் அடக்கிவிட்டனள். நாவெடுத்து மறுமொழி சொல்ல ஸாத்யமில்லாத படி கீழ்ப்படிய வேண்டியதாயிற்று என் ஸ்திதி. ஏதோ நமக்கு நல்லவேளை, இவளுக்கு ஏகாந்தமாய்ப் போய்விட வேண்டுமென்று புத்தி தோன்றியது. இவள் இங்கே இருந்தால் நமது கோரிக்கை கோரிக்கையாகவேதான் நின்றுவிடும். தேவிபுரம் பண்ணினபுண்ணியந் தான் இவளை மதுரைக்கு விரட்டியது. இனிப் பதினாயிரம் முறைதான் கூப்பிட்டனுப்பினாலும் நான் அவளிடம்போகமாட்டேன். இந்தக் கிழம் என்ன வேண்டுமென்றாலும் பிதற்றட்டும்; என்ன கனவுவேண்டுமானாலும் காணட்டும். இதன் கையிலாயிருக்கிறது தேவிபுரம், இதன் இஷ்டப்ரகாரம் நடக்க? ஆகட்டும்.

"ஆனால் இன்னும் அரைமணிக்கெல்லாம் நமது குட்டி யஜமானர் பேட்டியைக் காண வேண்டுமே. யஜமானரா அவர், பேஷ் நன்றாயிருக்கிறது! சோற்றுக்குக் கதியில்லாமல் தெருத்தெருவாய் அலைந்துதிரிந்துகொண்டிருந்த பையனை ஐயோ பாவமென்றுஅழைத்து வந்துஆரண்மனையில் ஒண்டவைத்த நாள் ஞாபகமிருக்கிறதா அவனுக்கு. கடைசியில் நவகுமாரருடைய பெண்ணும் பதவியும் யாரால் அவனுக்குக் கிடைத்தது தெரியுமா அந்த மூடப்பயலுக்கு? அவனுடைய குடுமி என்கையில் வசமாய் அகப்பட்டிருக்கிறது. நான் போட்டிருக்கும் விலங்கை முறிக்கமுடியுமா? என் கையிலகப்பட்ட பதுமையைப்போல், நான் எழுந்திரு என்றால் எழுந்து, உட்கார் என்றால் உட்கார்ந்து வரவேண்டாமா? என்னமோ என்னிடம் சில விஷயங்கள் சொல்லிவிட்டுப் போகவேண்டுமாம். எனக்கு இவன் சொல்ல வேண்டியது என்ன இருக்கிறது? எப்பேர்ப்பட்ட நவகுமாரரே கோகுலதாஸுக்குப் புத்தி சொன்னதில்லையாம். அப்படியிருக்க, நேற்றுப் பையன் இவன். "இவன் நமக்கு விஷயங்கள் சொல்லப்போகிறானாம்? ஆனால் இந்தப்பையனிடம் சிறிது ஜாக்ரதையாகத்தான் இருக்க வேண்டும். நவகுமாரர் எவ்வளவு கோபித்துக் கொண்டு அமர்க்களம் செய்தாலும், உள்ளே ஒன்றும் வைத்துக்கொள்ள மாட்டார். எல்லாவற்றையும் வாயைவிட்டுக் கொட்டிவிடுவார். ஆனால் இந்தப் பையன் ஒன்றையும் வாயைவிட்டுச் சொல்லுவதில்லை; எல்லாவற்றையும் மனதுக்குள்ளேயே வைத்துக்கொள்கிறது. அவன்மேல் ஒரு கண் வைத்துக்கொண்டுதான் இருக்கவேண்டும். இருந்தாலும் நீ என்முன் எம்மாத்ரம்? மலையை விழுங்கிய மஹாதேவனுக்கு உரல் ஒரு வரவு செலவா? உன்னாலானது சற்றுக்கத்திப்பார்க்கலாம்; அதற்குமேல் ஒன்றும் சாயாது. கோகுலதாஸ் இருக்குமட்டும் இரண்டு ஜமீனுக்கும் அவர்தான் யஜமானர். அவருக்குப் பிற்பாடு என்னமோ?"

இவ்வாறாகக் கோகுலதாஸ் தன் ஸாமர்த்யத்தைத் தானே புகழ்ந்து புகழ்ந்து மனோராஜ்யம் செய்துகொண்டிருந்தபோது, சிரீஷன் உள்ளேவந்தான். இரண்டு விளக்கெண்ணெய்த் தீபங்கள் அறையில் எரிந்துகொண்டிருந்தன. தரையின்மேல் ஒரு சுமை கடிதங்களும் கணக்குப் புஸ்தகங்களும விழுந்திருந்தன. கோகுல

தாஸ் கதவண்டை சென்றுத் தாளிட்டு விட்டு ரொம்ப வணக்கமாய் ஙிரீஷனே உட்காரச் சொல்லிவிட்டுத் தான் சிறிது தூரத்தில் நின்றுகொண்டிருந்தார்.

"கோகுலதாஸ், கிட்டே வந்து உட்காரும். இந்த நாட்டின் நலித்தைக் கோரி அதன் பொருட்டே உழைப்பதில் தன் வாழ்நாட்களைக் கழிக்கும் ஆப்த மித்ரராக நான் உம்மைக் கருதுகின்றேனேயொழிய, உம்மை நான் ஊழியனெனச் சற்றேனும் கருதவில்லை. நான் ஏழையாயிருந்த காலத்தில், என்மீது தயைகொண்டு என்னை அன்பாய் ஆதரித்தீர்; நான் அநாதையாயிருந்தகாலத்தில் நீர்தான் எனக்கு உற்ற துணையாயினீர். நான் தங்களுக்கு இவ்வாழ்வில் எவ்வளவோ கடமைப் பட்டிருக்கிறேன். தங்களிடம் என்றும் பக்தியுடையவனாகவே யிருப்பேன். ஒருபோதும் செய்த நன்றி மறந்து நிற்பவனாகேன்."

"யஜமானரே, நான் என்ன செய்துவிட்டேன்? நம்மால் என்ன ஆகிறது? எல்லாம் மேலேயிருப்பவனுடைய செயல். உமது நல் அதிர்ஷ்டம் உம்மை இந்த உன்னத பதவிக்குக் கொண்டுவந்தது. உமது நற்குணத்தைக் கண்டு வியந்து, நவகுமாரர் உம்மிடம் அபிமானங்கொண்டு இந்த ஸ்தானத்துக்கு உம்மை உயர்த்தினார். இவ்விஷயத்தில் இந்த அற்ப ஊழியன் செய்த சொற்ப உதவி யாதாவதுளதாயின், அது என் பெரியோர்கள் அந்தக்கரண சுத்தியாய் உழைத்துவரும் இந்த ராஜ்யத்தின் நன்மையை உத்தேசித்து நானும் பால்யம் முதல் செய்துவரும் எனது கடமையேயாகும். வேறொன்றும் அதிகமாய் நான் செய்துவிடவில்லை."

"கோகுலதாஸ், உமது புத்ரனுக்கு யுக்த வயது வந்து அவன் உமது வேலையை யொத்துக்கொள்ளும் வரைக்கும் நீர் உயிரோடிருந்து இந்த ஸமஸ்தானத்து வ்யவஹாரங்களை என்றைக்கும்போல் பார்த்து வருவீரென நம்புகிறேன்."

"இந்யவசனங்களைக் கேட்க எனக்கு அதிக ஸந்தோஷம் உண்டாகிறது. கடவுள் யஜமானரவர்களுக்குத் தீர்க்க ஆயுளும், திடகாத்ரமும் அளித்து ஆசீர்வதிப்பாராக. இந்த வீட்டு உப்பை நெடுநாளாய் உண்டு வளர்ந்தவன் நான். என்னைப்போலவே எனது மகனும் உயிருடனிருந்து இந்த ஸமஸ்தானத்துக்காக உழைத்துவர வேண்டுமென்பது தான் என்னுடைய கோரிக்கையும்."

"கோகுலதாஸ், அவ்வாறேயாகும் நிமது கோரிக்கையும். தடபுடலாய் வாக்குதத்தங்கள் செய்துவிடுவது என்னுடைய ஸ்வபாவமன்று. குறையச்சொல்லி நிறைய அளப்பதே சிறந்ததாகும். உம் விஷயமாய் ஒன்று மாத்ரம் நான் தீரமாய் வாக்குத் தானஞ் செய்வேன். உமது மகனைப் பார்த்தால் மஹா புத்திசாலியெனத் தோற்றுகிறது. தகப்பனார் பெயரை முன்னுக்குக் கொண்டுவருவானென்பதில் ஸந்தேஹமில்லை. உமது மகனிடம் அன்பு காட்டி அவனை உயர்பதவிக்குக் கொண்டு வந்து அதன் மூலமாய் நான் உமக்குப் பட்டிருக்கும் கடமையை நிறைவேற்றலாமென்றெண்ணியிருக்கிறேன். இதில் எள்ளளவேனும் பிழையாய்ப் போகாது"

ஙிரீஷன் இவ்வாறு மனப்பூர்வமாய்க் கூறிய மொழிகளைக் கேட்டுக் கல்நெஞ்சினுகிய கோகுலதாஸ்கூட ஸந்தோஷமுற்று வந்தனம் புரிந்து பின்வருமாறு பேசலானான்.

"யஜமானரே, எங்கள் குலத்தில் பிறந்த என் குமாரன் எப்போதும் தன் மூதாதைகள் சென்றவழியே செல்வான். அவன் ஒருபோதும் தேவிபுரத்துக்குத் தான் செய்ய வேண்டிய கடமையை மறக்கமாட்டான். நாங்கள் மிகவும் ஸாமாந்ய மனிதர்கள். இருந்தாலும் நாங்கள் எப்போதும் நன்றியுடையவர்கள். நாங்கள் ஊழியஞ்செய்யும் குடும்பத்தினருக்காக எப்போதும் திரிகரண சுத்தியாய் ஸ்வயநயம் பாராமல் உழைத்துவருபவர்கள்."

"கோகுலதாஸ், யாவும் நான் அறிவேன். பற்பல கஷ்ட ஸுகங்கள், ஜயாபஜயங்களுக்கிடையிலும் நீர் காலஞ்சென்ற எனது மாமனார் விஷயமாய் நாற்பது வருஷகாலமாய் நம்பிக்கையாய் உழைத்து வந்ததை நான் அறியேனோ?

"உண்மையே, எங்கள் நாட்களில் நாங்கள் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள் கண்டிருக்கிறோம். ஆனால் கடைசியில் பகவான் நமது பக்கமிருந்து எல்லாவற்றையும் ஒரு சுபமான முடிவுக்குக் கொண்டுவரும்படி அநுக்ரஹித்தார். நவகுமாரர் தம் அந்த்ய காலத்தில் ஆதியில் போலவே திரும்பவும் தேவிபுரத்துக்கு அதிபதியாகத் தம் ப்ராணனை விட்டார்."

"கோகுலதாஸ், நீர் செய்த பகீரத ப்ரயத்னங்களின் பலனாய் இந்நாட்டு ஸார்வபௌமரான சக்ரவர்த்தியவர்களுடையவும் அவரது ப்ரதிநிதியவர்களுடையவும் நல்லபிப்ராயத்தைப் பெற்று நவகுமாரர் தேவிபுரத்தை மாத்ரமேயன்றி வீரநகரத்து கார்ய நிர்வாதிகாரத்தையும் பெற்றனர். உமது உதவியில்லாமல்போனால் நவகுமாரர் திரும்பவும் தமது பூர்வஸ்திதியை அடைந்திருக்கமாட்டார் என்பது திண்ணம்."

"அவரன்றி யோரணுவும் அசையாது. அவருடைய க்ருபையால்தான் நமது ப்ரயத்னங்கள் ஜயம் பெற்றன. நான் என்னலான ஸ்வல்ப கஷ்டத்தைப்பட்டேன். எனது யஜமானர் தம் பூர்வஸ்திதியைத் திரும்பப் பெற்றுக் களித்ததைக் கண்ட நான் இனி நிம்மதியாய் ஸந்துஷ்ட மனதுடன் ப்ராணனை விடுவேன்."

"இப்போது என்மீது விழுந்த பாரத்தை ஸரியானபடி நிர்வஹிக்க நீரும் என்னுடனிருந்து உதவி செய்து வரவேண்டுமென்பது எனது கோரிக்கை. தேவிபுரத்துக் குடிகளின் நன்மையின்பொருட்டு நீர் நீடுழிகாலம் உயிர்த்திருந்து உழைத்துவரும்படி ஈசுவரன் அருள் புரிவாராக."

"கடந்த சில வருஷங்களாக நமது ஜமீனில் நல்ல விளைவு. நாடெங்கும் ஸுபிக்ஷமாயிருக்கிறது. குடிகளனைவரும் செழித்து த்ருப்தியடைந்திருக்கிறார்கள். ஸகல தீர்வைகளும் பாக்கியின்றி வசூலாய் விட்டன. காலஞ்சென்ற நமது யஜமானரவர்களின் உத்தர க்ரியைகள் விஷயமாய் ஏராளமான பணம் செலவாயும் இன்னும் கஜானா நிறைய த்ரவ்யம் குவிந்து கிடக்கிறது. கணக்குகள் அனைத்தும் தயாராயிருக்கின்றன. யஜமானரவர்கள் எப்போது வேண்டுமானாலும் பரிசோதனை செய்யலாம்" என்று கோகுலதாஸ் தரையின்மீது ஒழுங்காய் அடுக்கப்பட்டிருக்கும் கணக்குப் புஸ்தகங்களையும் ரசீது தஸ்தாவேஜுகளையும் காண்பித்தார்.

"கணக்குப் பரிசோதனைக்காக அன்று நான் உம்மை இன்றிரவு பார்க்கவேண்டுமென்றது. அவைகளையெல்லாம் என் யாத்ரை முடிந்து நான் திரும்பிவந்தபின் சாவகாசமாய்ப் பார்த்துக்கொள்ளலாம். பார்க்காவிட்டாலும் ப்ரமாதமொன்றுமில்லை. இந்த நாற்பது வருஷகாலமாகக் கோகுலதாஸ் கணக்கில் எப்போதாகிலும் ஒரு முறையாவது தப்பு ஏற்பட்டதுண்டா? வேறு சில விஷயங்களைப் பற்றி நான் கவலையாயிருக்கிறேன். அவற்றின் விஷயமாக உம்மை ஆலோசிக்க வேண்டி நான் இவ்விடம் வந்தேன்.

ஙிரீஷன் சொல்லப்போகிற விஷயம் கோகுலதாஸுக்கா தெரியாது! இருந்தாலும், யஜமானர் வாயினின்றே எல்லாம் வரட்டுமென்று கோகுலதாஸ் வாய்பொத்தி மௌனமாய் நின்றனர்.

"சக்ரவர்த்தியவர்களுடைய ப்ரதிநிதியின் பார்வையின்கீழ் வீரநகர ஸமஸ்தானம் விருத்தியடையவில்லையென நான் கேள்விப்பட்டேன், நிஜந்தானா?

"ஆம் நிஜந்தான் யஜமானரே."

"ஒன்பது வருஷங்களுக்குமுன் நாம் அவ்விடத்தை விட்டு வரும்போது இருந்ததைக் காட்டிலும் இப்போது கடன் அதிகமாயிருக்கிறதாமே?"

"ஆமாம். அதிகமாய்த்தானிருக்கிறதாம்"

"ப்ரதிநிதியவர்கள் மிகவும் பயந்திருக்கிறாராம். மாகாணத்துக் கானங்கோ கடனைப் பைசல் செய்யும் விஷயமாய் ஏற்பாடுகள் செய்திருக்கிறாராமே."

"யஜமானரே! ஸமஸ்தானத்தி லிருந்து வரவேண்டிய பகுதி, பாக்கியாய் நிற்கும் காலத்தில், கானங்கோ அவர்கள் மேலதிகாரிகள் உத்தரவுப்படி செய்யவேண்டிய நடவடிக்கைகளைச் செய்வார்."

"நடவடிக்கை எவ்வித நடவடிக்கை? விற்பனையா?"

"மாமூல் அவ்வாறுதான்."

"அப்படியானல், முந்நூறு வருஷகாலமாக ஒன்றுக்கொன்றாக இருந்துவந்த இரண்டு ஜமீன்களிலொன்று நசித்துவிடும்போலும்!

"முந்நூறு வருஷ காலமாக பரஸ்பர விரோத பாவத்துடன் மல்லிட்டுக்கொண்டு வந்த இரண்டு ஜமீன்களில் ஏதாவது ஒன்று நசிக்கவேண்டியதுதான். ஒன்றுதான் செழித்திருக்கக்கூடும்."

"நான் புகலிடமாகக்கொண்டு வ்ருத்திக்கு வந்து ஸந்தோஷமுற்றிருந்த இடமாகிய வீர நகர ஸமஸ்தானம் அந்நியர் கைவசப்பட்டுப் பராதீனமாகவா போய்விடும்?"

"வீரநகர ஸமஸ்தானம் விற்பனைக்கு வரும் என்ற மட்டும் ஐயமில்லை. ஆனால் அந்நியர் வசப்படவேண்டிய அவசியமில்லையே!"

"எனது பால்ய நண்பன் நரேந்த்ரன் நாடோடியாகவா திரியவேண்டிவரும்?"

"நரேந்த்ரநாத் ராஜாமான்ஸிங் அவர்களுடைய உத்தியோகத்திலிருக்கிறான். அவர் தான் அவன் செய்த குற்றத்தையும் மன்னித்திருக்கிறார். அவர் அவனுக்குத் தகுந்த வெகுமதி செய்வார்."

ஸிரீஷன் சில நிமிஷங்கள் பர்யந்தம் மௌனமாயிருந்தார். கோகுலதாஸ் வெகு தந்த்ரமாய் விஷயத்தைவிட்டுப் பேசாமல் பதில் சொல்லி வந்தார். ஆனால் ஸிரீஷனே கோகுலதாஸின் அந்தரங்க அபிப்ராயத்தை அறிய ஆவலாயிருந்தான். அவனுக்குக் காலதாமதஞ் செய்வதில் இஷ்டமில்லை. இரண்டிலொன்று உடனே தெரியவேண்டுமென்று ஸிரீஷன், "கோகுலதாஸ் என்ன, நீர் அர்த்தம் புரியாமல் ஸாமர்த்யமாய்ப் பேசிவருகிறீர். உம்மை நான் ஆப்தமித்ரராகக் கருதியிருந்தேன்."

"ப்ரபூ, என்றைக்கும் நான் தங்களுக்கு நம்பிக்கையான ஊழியன்."

அப்படியானால் மெய்ந் நண்பரைப்போல விடை கூறும். ஏன் வீரநகரம் அவ்வளவு கடன்படவேண்டும்? பாக்கியேன் அவ்வளவு நிற்கவேண்டும்? தேவிபுரம்போலவே வீரநகரமும் ஸுபிக்ஷமாய்த்தான் இருந்து வந்தது; நல்ல விளைவு, நல்ல மாசூல், குடிகளும் ஸமாதானமடைந்து ராஜபக்தியுடையவர்களாயிருக்கிறார்கள். அப்படியிருக்க, ஏராளமான பணம் வ்ரயமாயும் இன்னும் நமது பொக்கஷம் நிறைந்திருப்பதேன்? வீரநகரம் மாத்ரம் பக்கிரியாயிருப்பதற்கென்ன காரணம்?"

"ப்ரபூ, ராஜாமான்ஸிங் அவர்கள் வீரநகரத்தை என் பார்வையின்கீழ் விடவில்லை. யஜமானரே, சக்ரவர்த்தி யவர்களுடைய ஏஜண்டைக் கேட்டால் யாவும் விளங்கும்."

ஸிரீஷன் ஸாவதானமாய் மனவுறுதியான குரலாய் "கோகுலதாஸ், வீரநகரத்தில் ஏன் தீர்வை வசூல்க்கப்படவில்லை. நீர் அறிவீரா?" எனக்கேட்டான். ஸிரீஷனுடைய மனோநிலையை நன்குணர்ந்தார் கோகுலதாஸ்.

"குடியானவர்கள் ஏஜண்டுக்கு விரோதமாய்விட்டனர். குடித்தனக்காரர்கள் ஒன்று சேர்ந்து எதிர்த்து கலகங்கள் விளைவித்தனர்."

"என்னுடைய ஜமீனிலிருந்து மனிதர்கள் சிலர் வீரநகரம் சென்று அங்குள்ள குடிகளை எதிர்க்கச் சொல்லி, ஒன்றுசேர்ந்து கலகங்கள் உண்டுபண்ணித் தீர்வையைச் செலுத்த வேண்டாமென்று போதித்து வருவதை நீர் அறிவீரா?"

"நான் அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்." என்று சிறிதும் அஞ்சாமல் உறுதியாய் விடைபகர்ந்தார்.

"ஜமீன் சீக்ரம் என் வசமாகும். நீங்கள் சக்ரவர்த்தியவர்களுடைய ஏஜண்டுக்குப் பணம் செலுத்தவேண்டிய அவசியமில்லையென என் மனிதர்கள் ரஹஸ்யமாய்ச் சொல்லிவருகிறார்களென்பது வாஸ்தவந்தானா! அவ்வாறு என் காதில் பலதடவைகளில் விழுந்திருக்கிறது."

இனி உண்மையை ஒளிப்பதால் ஒருவித பயனுமில்லையென க்ஷணத்தில் க்ரஹித்த கோகுலதாஸ், சற்றும் பின்வாங்காமல் "யஜமானரே, முற்றிலும் உண்மைதான்" என்று பதில் சொன்னார்.

"எல்லாவற்றையும் தாள் நேரில் பார்த்து, ஏற்பாடுகள் செய்து நடத்திவரும் தேவிபுரத்து மதியூக மந்த்ரி யறியாமலா எனது மனிதர்கள் அவ்வாறு செய்தார்கள்?"

"நமது மனிதர்கள் என்னுடைய உத்தரவின்பேரில்தான் அவ்வாறு செய்து வருகிறார்கள்" என்று சற்றும் தயங்காமல் யோசிக்காமல் ஒரே உறுதியாய்ச் சொன்னார் கோகுலதாஸ்.

மறுபடியும் ஸிரீஷன் ஒன்றும் பேசாமல் ப்ரமித்து நின்றுவிட்டான். யஜமானர், ஊழியர் இருவரும் இனி மறைபொருளாய்ப் பேசுவதால் பயனில்லை. விஷயங்களைச் சற்று விட்டு விவரமாய்ப் பேசினால்தான் ப்ரயோஜனமுண்டு என்றெண்ணினார்கள்.

"கோகுலதாஸ், விளக்கு மங்கலாயிருக்கிறது. சற்று நொந்து. நம்முடைய ஸமாசாரம் சீக்ரத்தில் முடியாது. சற்று நேரம் சாவகாசமாய்ப் பேசவேண்டியிருக்கும்."



கோகுலதாஸ் விளக்கைப் ப்ரகாசப்படுத்தினார்.

"அப்படியானால் வீரநகரத்தில் பணம் வசூலாகாதிருக்கும்படி நாம் பெரிய ப்ரயத்தனங்களெல்லாம் செய்து கடைசியில் நமது கோரிக்கையையும் ஒருவாறாகப் பூர்த்திசெய்துகொண்டோம் என்று திட்டமாய்ச் சொல்லலாம் அல்லவா?"

"ஆம், சொல்லலாம்."

"என்ன உத்தேசத்துடன் நாம் இவ்வளவு சிரமப்பட்டோம், கோகுலதாஸ்?"

"கடன்திகப்பட்டு ஜமீனை ஏலம்போடுவிக்க வேண்டுமென்ற நோக்கந்தான்."

"ஆமாம், கானங்கோ வேறு ஏற்பாடுகள் செய்துவிட்டாரோ?"

"கானங்கோ ஏலம்போடத் தீர்மானித்துவிட்டார்."

"கோகுலதாஸ், அவ்விஷயம் உமக்கு எப்படித் தெரியும்?"

"கானங்கோ விடமிருந்து வந்த கடிதமொன்றினால். அக்கடிதத்தைத் தங்களுக்கு நான் முன்னமே காண்பித்திருக்க வேண்டும். ஆனால் இடையில் நேர்ந்த சில அஸந்தர்ப்பங்களால் யஜமானருக்குக் காண்பிக்க ஸமயம் இதுவரைக்கும் நேரவில்லை."

அதிக பத்ரமாய்க் காப்பாற்றிவந்த அக்கடிதத்தை மெதுவாய்ப் பிரித்துக் கோகுலதாஸ் ஸிரீஷன்முன் வைத்தார். தமது புது ஜமீன்தாரர் அதைப் படித்துவிட்டு மௌனமாய் இருந்தார்.

"இந்த விற்பனை விளம்பரம் பகிரங்கமாய் விட்டதா?"

"இன்னுமில்லை, ப்ரபூ"

அப்படியானால் இந்த விளம்பரம் தேவிபுரத்துக்கு மாத்ரம் இவ்வளவு சீக்ரமாய்த் தெரிய வேண்டிய காரணமென்ன?"

"யஜமானரே, தேவிபுரத்திலிருந்து ராஜமஹாலுக்குச் சென்றிருக்கும் பணம் வ்யர்த்தமாகவா அனுப்பப்பட்டது? எல்லாம் வெள்ளி, தங்க நாணயங்களின் மஹிமை. ராஜமஹால் கச்சேரியில் நமக்குச் சிறிது அந்தஸ்தும் செல்வாக்கும் உண்டு. நமது சொல்லுக்கும், யோசனைக்கும் அவ்விடத்தில் நல்லமதிப்பு உண்டு."

"சர்க்கார் பகுதி செலுத்துவதற்கு ஸரியான உபாயம் வீரநகரத்தை ஏலங்கூறுவதுதான் என்று சொல்லி அந்த ஆலோசனைக்குத் துணையாகச் சிறிது ஸ்வர்ண தானமும் நாம் செய்திருக்கிறோம், அல்லவா?"

"ஆம், வேண்டியவளவு வாய்க்கரிசி போட்டிருக்கிறோம்."

"ஆமாம், வீரநகரம் ஏலத்துக்கு வருவதால் நாம் அடையும் லாபமென்ன?"

"லாபமென்ன? ஏலத்தில் நாமும் வாங்குபவர்களில் ஒருவராக நிற்போம். அவ்வாறுதான் காலஞ்சென்ற நமது ஜமீன்தார் அபிப்ராயப்பட்டிருந்தார்."

சற்று நல்ல காற்றிலிருந்து தான் கேட்டனவற்றை யெல்லாம் சிந்தித்து அதைக்குறித்து யோசனை செய்யவேண்டி ஸிரீஷன் எழுந்து அறையைவிட்டு மெதுவாய் வெளியே சென்றான். இவ்வளவு காலம் தனக்குத் தெரியவிடாமல் அந்தரங்கத்தில் நடத்திவந்த குடிகெடுக்கும் யோசனைகள், ஏற்பாடுகள் யாவும் இப்போது வெட்ட வெளிச்சமாய்ப் பகிரங்கமாய் விட்டது. ஆழங்கண்டறிய முடியாத சதியோசனைக்காரனாகிய கோகுலதாஸ் பல வருஷங்களாகப் பிறர் அறியா வீரநகரத்துக்குக் குழிபறித்து வந்திருக்கிறார். தம் மனிதர்களை யனுப்பி வீரநகரத்துக் குடிகளைக் கலகம் விளைவிக்கும்படிக்கும், ஏஜண்டை எதிர்த்துப் பணம் கட்டாமல் வீண்வம்பு செய்யும்படிக்கும் ஏவி வந்தனர். கானங்கோ கச்சேரிக்குச் சென்று, ஜமீனை ஏலத்துக்குக்கொண்டு வரவேண்டுவதற்கான ஸகல ஏற்பாடுகளையும் செய்துவிட்டார். கடைசியில் அந்த ஜமீனை உள்ளாளவின்பேரில் ஸ்வல்ப விலைக்கு ஏலத்திலெடுத்து தேவிபுரத்துடன் சேர்த்துவிட வேண்டுமென்று திடகங்கணங் கட்டிக்கொண்டார். அதிக தந்திரமாய்த் தான் செய்துவந்த மோசவழிகளுக்கெல்லாம் நவகுமாரரை வெகு எளிதில் சம்மதிக்கும்படி செய்துவிட்டார்.

இனித் தாமதித்தால் கார்யம் மிஞ்சிவிடும் என்றறிந்தான் ஸிரீஷன். கோகுலதாஸ் ஏற்பாடுகளின்படி ஜமீன், ஒரு மாஸத்துக்குள் ஏலத்துக்கு வந்துவிடும். ஸிரீஷன் யாத்திரைகளைப் பூர்த்திசெய்துகொண்டு திரும்புவதற்குள் ஸகல நடவடிக்கைகளும் முடிந்து அவன் தேவிபுர வீரநகர ஜமீன்களுக்கு அதிபதியாய் விடுவான்.

அந்தக் குடிகெடுக்கும் சதியோசனைக்காரன் தான் ஹரீஷனைத் தற்காலமிருக்கும் உன்னத பதவிக்குக் கொண்டுவந்தான்; அவனே இப்போதும் ஹரீஷனை வீரநகரத்துக்கு அதிபதியாக்கிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பான் என்பதற்கு ஸந்தேஹமில்லை.

கோகுலதாஸின் யோசனைகள், ஏற்பாடுகள் அனைத்தும் ஹரீஷனுக்குக் கேட்பதற்குக்கூடக் கர்ணகடூரமாயிருந்தது. இந்த விஷயமாய் ஹரீஷன் கோகுலதாஸினிடம் அதிக வெறுப்படைந்தான். எனினும், அத்தேவிபுரத்து ஊழியனின் ராஜ விசுவாசத்தையும் யஜமானஸேவையையுங் கண்டு ஹரீஷன் ஆச்சரியப்பட்டான். நாற்பது ஆண்டுகளாய் அவ்வயோதிகன் செய்துவந்த ஆலோசனைகள், ஏற்பாடுகள், அவனுடைய மதியூகம், எடுத்த கார்யத்தைப் பிறர் அறியாமல் செய்துகொண்டே வந்து கடைசியில் ஜயமடையும் அவனது ஆற்றல் அனைத்தையும்பற்றி யோசிக்கலானான் ஹரீஷன். கோகுலதாஸின் செய்கைகள் எவ்வளவுதான் தர்ம விரோதமானவையாயிருப்பினும், ஒரு விஷயம் மாத்ரம் யாவரும் ஒத்துக்கொள்ளவேண்டும். அதாவது இவ்வளவு ஏற்பாடுகளிலும் ஸ்வய நன்மை யென்பதை அவன் சிறிதும் பாராட்டவில்லை. எல்லாம் தேவிபுரத்து ராஜ குடும்பத்து வ்ருத்தியையும் கீர்த்தியையுமே உத்தேசித்துச் செய்யப்பட்டவை. ஒன்றிலாவது கோகுலதாஸுக்குச் சிஞ்சித்து லாபங்கூட இல்லை: யஜமானனின் ஊதியத்துக்காக மானைத் துரத்திப் பிடிக்கும் நல்ல ஜாதி வேட்டைநாயைப்போல் கோகுலதாஸ் ஸ்வப்ரயோஜனத்தைச் சிறிதுங் கருதாமல் உழைத்துவந்தார்.

ஹரீஷன் தாழ்வாரத்தில் உலாவிக்கொண்டிருந்தான். அரைமணியாயிற்று: நரேந்த்ரன் திரும்பவும் அறைக்குட் புகுந்தான்.

ஹரீஷனுடைய ஸ்வபாவத்தை நன்றாயறிந்தவனாதலால் கோகுலதாஸ் அவனுடைய ஆலோசனைகளைத் தடைசெய்யவில்லை. உள்ளேயே உட்கார்ந்து கணக்குகளைப் பார்த்துக்கொண்டிருந்தான். யஜமானர் அறைக்குள் நுழைந்தவுடன் அவர் எழுந்து நின்றார்.

“கோகுலதாஸ், இவ்வளவு நேரம் உம்மைக் கார்க்க வைத்தேன், மன்னிக்கவேண்டும். நான் ஜமீன்தாரர் உத்யோகத்துக்குப் புதியவன். ஆதலால் எல்லாவற்றையும் சற்று நிதானமாய் யோசித்தே செய்யவேண்டியிருக்கிறது.”

“எனக்கென்ன கார்யம் தள்ளிப்போகிறது? யஜமானரை எதிர்பார்த்து நிற்பவன் யான். யஜமானரே கார்த்திருக்கும்போது எனக்கு மாத்திரம் என்ன அவஸரம்? வேண்டுமானால் இரவுமுழுவதும் கார்த்திருப்பதில் எனக்கு ஓர் ஆக்ஷேபமுமில்லை.”

நீர் ஒரு பெரிய கார்யத்தை உத்தேசித்து அதற்காக எவ்வளவோ ப்ரயாஸப்பட்டு எத்தனையோ முயற்சிகளெல்லாம் செய்து வந்திருக்கிறீர். உமக்குத் தெரியாததொன்றுமில்லை. நான் கேட்பதற்கு ஸரியாய் விடை கூறும். வீரநகர ஸமஸ்தானத்துப் பாக்கித் தொகை எவ்வளவு?

“ப்ரபூ, பாக்கி ஒரு வருஷ இரண்டு வருஷப் பாக்கியன்று. பல வருஷங்களாக மேலே மேலே சேர்ந்து போயிருக்கிறது. மொத்தத் தொகை ஸராஸரி ஒரு லக்ஷத்துக்காகும்.”

“நாம் வீரநகரத்தை ஏலத்தில் எடுப்பதாயிருந்தால் லக்ஷம்ரூபாய் க்ரயத்தொகை ராஜமஹல் பொக்கசத்துக்குச் செலுத்தவேண்டுமல்லவா?”

“யஜமானரே, லக்ஷத்துக்குமேலே செலுத்தவேண்டிவரும். ஒரு பெரிய ஜமீன் ஒரு கையினின்று மற்றொரு கை மாறுவதாயிருந்தால் எத்தனை சில்லரைச் செலவுகள் இருக்கின்றன! எல்லாம் கூடி, இரண்டு மூன்று லக்ஷத்துக்கு வந்துவிடும். ஆனால் எவ்வளவு கொடுத்தாலும் வீரநகரம் பொறும்” என்று கூறும்போது கோகுலதாஸின் குரூரமான கண்களில் ஒருவித ப்ரகாசம் தோன்றிற்று.

“அவ்வளவு பணம் நமது கஜானாவிலிருக்குமா?”

“அதற்காகத் தாங்கள் கவலைப்படவேண்டாம். நமது பொக்கசம் ஸம்பூர்ணமாயிருக்கிறது. வாய்திறந்து ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் கடன் லக்ஷக்கணக்காய்ப் பெயரும். கடைத்தெருவில் கடும்வட்டிவாங்கி சௌகார்கள் நன்றாய்க் கொழுத்திருக்கிறார்கள். நமது தேவிபுர ஸமஸ்தானத்தீர்வையின்மேல் கடன் கொடுக்க அவர்கள் நான், நீ யென்று போட்டி போட்டுக்கொண்டு பணத்தைக் கொண்டு வந்து கொட்டுவார்கள்.”



“அவர்களைக் கேட்டுக் கடன் ஏற்பாடு செய்யச் சாவகாசமிருக்கிறதா?”

“அவர்களுடன் எல்லாம் பேசி முடித்தாயிற்று. நமக்கு வேண்டியவளவு தொகை கொடுத்துதவும்படி அவர்கள் ராஜமஹலிலிருக்கும் தத்தம் கடைகளுக்கு எழுதிவிட்டனர். நாம் திரும்பிவந்து சிறிது சிறிதாய் அவர்களுக்குப் பணத்தைத் திருப்பிவிடலாம்.’

“அப்பா, உம்மை வெல்வது கடினம். உமக்கு இணைகூற ஒருவருங் கிடையாது. என்ன முன் யோசனை! என்ன முன் ஏற்பாடு! ஸகல ஏற்பாடுகளும் குறைவின்றிச் செய்துவிட்டீர்!”

“ஆம், எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன. ஒன்றுதான் குறை. யஜமானரவர்கள் உத்தரவுதான் தேவை. அது ராஜமஹல் சென்று நடக்கலாம். ஆனால் யஜமானரவர்கள் எல்லா விஷயங்களையும் நான் சொல்வதற்குமுன்னமே அறிந்துகொண்டார். ஸம்மதம் தானே? ஒன்றும் தடையில்லையே?”

ஹரீஷன் தான் கூறும் ப்ரதி மொழியையும் தீர ஆலோசித்து “கோகுலதாஸ், நமது சொந்த கஜானாவினின்றே—”

“யஜமானரே, தெரிந்து கொண்டேன், தெரிந்துகொண்டேன். உம்மை நான் இளம் ப்ராயம்முதல் அறிவேன். நீர் வயதில் சிறியவராயினும் யோசனையில் மஹா சதுரர்” என்று கோகுலதாஸ் திடீரெனத் தோன்றிய ஸந்தோஷத்தினால் கூக்குரலிட்டார். கோகுலதாஸ் ஸாதாரணமாய் எப்போதும் அதிக ஸந்தோஷமுடையவராகக் காட்டிக் கொள்வதில்லை. ஆனால் இப்போது ஹரீஷன் சொன்னதைக் கேட்பதனால் உண்டான ஸந்தோஷத்தை அவரால்கூட அடக்கமுடியவில்லை

ஹரீஷன் கோகுலதாஸின் மனோ நிலைமையையும் தேக நிலைமையையும் கவனிக்காமலே “கோகுலதாஸ், நம் சொந்த கஜானாவினின்றே பாக்கித்தொகை முழுவதையும் செலுத்தி வீரநகரம் ஏலத்துக்கு வராத முயற்சிகளை நாம் செய்யவேண்டும். வீரநகரத்தை விடுவித்து நரேந்த்ரநாதனுக்குத் தன் பித்ரார்ஜித சொத்தாகிய அந்த ஜமீனைச் சேர்ப்பிக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

கோகுலதாஸ் இடிவிழுந்தவன் போலானான். அவனுக்கு ஒன்றுந் தோன்றவில்லை. சற்றுமுன்னிருந்த குதூகலமெல்லாம்போய் முகம் வெண்டாமரையாய் வெளுத்தது. தான் கஷ்டப்பட்டுப் பரிபாலித்து வ்ருத்திக்குக் கொண்டுவந்த தனது சொத்தைக் காக்கு நிமித்தம் நரேந்த்ரனுடைய பாட்டனார் மங்கிய வெளிச்சமான அவ்வறையில் அந்த க்ஷணம் ஒரு பிசாசு ரூபமாய்த் தோன்றியிருந்தாலுங்கூடக் கோகுலதாஸ் அவ்வளவு தயங்கியிருக்கமாட்டார். புன்சிரிப்பெல்லாம் பறந்து போயிற்று. கண்கள் சிவந்தன, உதடு துடித்தது, பற்களை நறநறவென்று கடித்தார், முகம் சூல்கொண்ட மேகம்போல் இருண்டது. ஹரீஷன்கூடச் சிறிது மனம் தளர்ந்தான். க்ஷணத்துக்கெல்லாம் கோகுலதாஸ் தன் புருவத்தைத் துடைத்துக்கொண்டு கோபத்தை யொருவாறு உள்ளடக்கி இன்னும் பார்க்கலாமென்ற தைர்யத்துடன் நிதானமாய்ப் பேசலானார்.

“நரேந்த்ரநாதன் இந்த ஒன்பது வருஷகாலமாய்த் தன் உயிரைத் துரும்பாகப் பாவித்து மஹா வீரதீர சௌர்யத்துடன் சக்ரவர்த்தியவர்களுக்காகப் போர்புரிந்து வருகிறான். அப்படி உழைப்பவர்களைச் சக்ரவர்த்தி மெச்சி அவர்களுக்குப் பெரிய ஜாகீர்கள் கொடுத்து ஆதரிப்பார். பெரிய பெரிய ஜாகீர்களைப் பெறவிருக்கும்போது நரேந்த்ரன் இந்த அற்ப ஜமீனுக்காக இவ்வளவு தூரம் வங்காளம் ஓடிவரப்போகிறானா?”

“உம்மைவிட நான் நன்கறிவேன் நரேந்த்ரநாதனை. தன் பித்ரார்ஜித ஜமீனைத் திரஸ்கரித்துப் பிற ஜாகீர் எவ்வளவு பெரியதாயினும் வளமுடையதாயினும் அதனை அவன் நாடமாட்டான். என்றைக்கிருந்தாலும் அவன் இவ்விடமே வந்துசேருவான்.”

“வாஸ்தவந்தான். அவ்வளவு பற்றுடையவனாயிருந்தால் இப்போதைக்கு ஒன்பது ஆண்டுகளாயிற்றே. ஒருதரமாவது தன் ஜமீனின் க்ஷேமாதிசயங்களைப்பற்றி விசாரித்திருக்க மாட்டானா? அவன் ஏதாவது காரணங்களைக் கண்டு, வீரநகரத்தை வெறுத்துத் திரும்பிவர உத்தேசமில்லாதவனாயிருக்கலாம்.”

“கோகுலதாஸ், மறைபொருளாகப் பேசிவாக்குச் சாதுர்யத்தைக் காண்பிக்க ஸமயம் இதுவன்று. உம்முடைய மனதில் உள்ளதை உள்ளபடி சொல்லும்.”

"யஜமானர் மனம் வருந்துமென்ற பயமில்லா விட்டால் நான் எல்லாவற்றையும் வெளிப்படையாய்ப் பேசிவிடுவேன். இப்போது நீங்கள் உத்தரவு செய்வதால் அவ்வாறே உள்ளதையெல்லாம் உள்ளவாறு சொல்லிவிடுகிறேன். பால்யனா யிருக்கும்போதே அவன் ஹேமலதையின்மீது அன்பாயும் காதலாயுமிருந்தான். காதலிருந்த பொருள் கையை விட்டுப் போய் விட்டது. காத்திருந்தவன் பெண்ணை நேற்று வந்தவன் கொண்டு போனானென்ற கதையாயிற்று. ஆதலால் இனி வீரநகரம் வர, அவன் அவ்வளவு ஆவலாயிருக்க மாட்டான். தான் நாடியிருந்த பெண்ணை யாவது, அவளை மணம் புரிந்தவரையாவது காண அவன் சிறிதும் இஷ்டப்படமாட்டான். எவன்தான் ஸம்மதப் படுவான்? இதற்கு முன் பல வாலிபர்கள் இவ்வாறு நாடோடிகளாய்ப் போய்விட்டிருக்கின்றனர். நரேந்த்ரன் மாத்ரம் திரும்பிவரப் போகிறானா?"

'இம்மொழிகள் ஸிரீஷனுக்கு அருவருப்பாயிருந்தன. கோகுலதாஸ் வேண்டுமென்றே ஸிரீஷன் மனது புண்படப் பேசினான் இனி ஸிரீஷனுடன் நயமாய் வார்த்தையாடுவது பயனற்ற கார்யம். அவனுடன் நேருக்கு நேர் பதில் சொல்லிப் போராடுவதுதான் யுக்தம் என்றுணர்ந்த கோகுலதாஸ், வீரநகரத்தைக் கைப்பற்றும்பொருட்டு அவசியமானால் யஜமானரைக்கூடக் கொன்றுவிடலாம் என்ற மட்டும் தைர்யங்கொண்டு சண்டைக் காரம்பித்துவிட்டான்.

ஸிரீஷன் முகம் சிவந்தது. கோபம் மேலிட, ஆத்ர முண்டாயிற்று. எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு சாந்தமாய்ப் பேசலானான்.

"தான் ஒரு சிறு பெண்ணாயிருந்தபோது தன்னை மணம்புரிய விரும்பிய நண்பனை வரவேற்றுபசரிக்கும் விதத்தை என் மனைவி நன்கறிவாள். கோகுலதாஸ், எங்கள் குடும்ப வ்யவஹாரங்களில் தாங்கள் அநாவசியமாய் அதிகக் கவலை யெடுத்துக்கொள்ளவேண்டாம். அவ்விஷயமாய் நீர் எனக்குப் புத்தி சொல்ல வரவேண்டாம். வேறு விசேஷ காரணங்கள் ஏதாவது இருந்தால் சொல்லலாம்."

"வேறு காரணங்களைப்பற்றி யோசிக்க வேண்டிய தேவையேயில்லை. நரேந்த்ரன் உயிருடனிருக்கிறானா இல்லையா என்ற விஷயமே தெரியாதிருக்க, மேல் விஷயங்களைப்பற்றி யோசிப்பதேன்? அவனைப்பற்றி ஆக்ராவிலிருந்து நான் கடைசியாய் அறிந்த ஸமாசாரம் என்னவென்றால் பலநாள்வரைக்கும் அவன் ப்ரஞ்ஞை தப்பிக்கிடந்தனனாம். அரண்மனை வைத்யர்கள் அவன் பிழைப்பது அரிது என்று திட்டமாய்ச் சொல்லிவிட்டார்களாம்."

மறுபடியும் இருவரும் சற்றுநேரம் பேசாமலிருந்தார்கள். ஸிரீஷன் கண்ணினின்று பெருகிய நீர்த்துளியைத் துடைத்துவிட்டுப் பொறுமையுடன் உறுதிப்பாடாய் பதில் சொன்னான்.

"ஆதிநாட்களில் எவ்வளவோ கஷ்டங்களெல்லாம் அனுபவித்தாயிற்று. உற்றாருறவினர்கள்போய், நாடுபோய் நகரம்போய் ஊரூராய்த் திரிந்து படவேண்டிய வருத்தங்களெல்லாம் பட்டாயிற்று. அகதிக்குத் தெய்வமே துணை. கடவுள் அவன் விஷயத்தில் கருணை புரிவாரென்பது நிச்சயம். தெய்வ ஸங்கல்பத்தால் அப்படி ஒரு வேளை அவன் யுத்தத்தில் பட்ட காயங்களினால் மரணமடைந்திருந்தாலும் வீரநகரம் அவனுடைய உறவினர்களதாகுமேயொழிய தேவிபுரத்தானுக்கு ஒருபோதும் கிட்டாது."

"ப்ரபூ, காலஞ்சென்ற நமது தேவிபுரத்து அதிபதியவர்கள் வீரநகரத்தை யடையவேண்டுமென்று பெரிதும் விரும்பிக்கொண்டிருந்தார். புதிய யஜமானர் தன் பிதாவின் அந்த்யகால கோரிக்கையை நிறைவேற்றாதிருப்பது தர்மமாகுமா?"

"எனது மாமனார் மரணம் நிச்சயமென்றறிந்து படுத்திடையாயிருந்த காலத்தில் நீர் அவரைப் பார்த்தீரா?"

"நான் பார்த்தேன். என் மனம் விண்டது. நல்ல வயது காலத்தில் அவர் நம்மைவிட்டு அகன்றதைக் கண்டு என் வயிறு பகீரென்றது."

"அவர் அத்தருணம் வீரநகர விஷயமாய் உம்மிடம் ஏதாவது சொன்னாரா?"

"இல்லை, அக்காலத்தில் அவரது எண்ணங்களெல்லாம் கடவுளை நாடிச் சென்றிருந்தன. தன் அந்த்ய காலத்தில் அவர் ஈசனைத் துதித்த வண்ணமாகவே யிருந்தார்."

"அவ்வாறு தன் மரண காலத்தில் ஸ்வாமியைத் துதித்துக்கொண் டிருந்தபோது நான் ஒரு திக்கற்ற வாலிபனை மோசம் செய்தோமென்ற எண்ணம் அவருக்கு உதித்திருந்தால் அவர் திருப்தியடைந்து நிம்மதியாய்ப் பரலோகம் சென்றிருப்பார் என்று நீர் சொல்வீரா?"

கோகுலதாஸ் தலை குனிந்து, ஆனால் தைர்யத்தை மாத்ரம் விடாமல், "நான் பேதை, மஹாபாபி, நமது யஜமானர் சீர்தருவாயில் என்ன எண்ணினாரோ நான் அறிகிலேன். நான் சொன்னதெல்லாம் அவர் தன் ஆயுள் முழுவதும் அபேக்ஷித்திருந்ததைத் தங்களுக்குத் தெரிவித்தேனே யொழிய பிறிதொன்றுமில்லை."

"கோகுலதாஸ், அப்படியானால் நான் சொல்லுகிறேன் கேளும். அவர் மரண கால எண்ணங்களைப்பற்றி, சாவதற்கு முதல்நாள் சாயங்காலம் எனது மாமி தன் கணவனார் படுக்கை பக்கம் உட்கார்ந்து பகவானைத் துதி செய்தபோது, அவரும் தன் மனைவியுடன் சேர்ந்து பகவத்யானம்செய்தனர். அப்போது நரேந்த்ரனுடைய நாமதேயம் வரண்டு கிடக்கும் அவர் வாயினின்று வெளியாயிற்று. தான் அந்த நிரபராதிக்கு ஏதாவது தீங்கிழைத்திருந்தால் அத்தீங்கை நினைத்துப் பச்சாத்தாபப்பட்டு அதற்காக ஈசுவரன் தன்னை மன்னித்தருளவேண்டுமென்று ப்ரார்த்தித்தார். கோகுலதாஸ், மரண காலத்தில் என் மனதைப் பரிதவிக்கச் செய்விக்கும் படியான கார்ய மொன்றையும் நான் செய்ய உடன்படமாட்டேன்."

யுத்தம் முடிவெய்தியது. ஸிரீஷன் தன் மாமியார் படைவீட்டிலிருந்து ஆயுதங்களைக் கொண்டு மல்லுக் கெழுந்தார். அவ்வித அஸ்த்ரங்களுக் கெதிரில் கோகுலதாஸ் வலியற்றவரானார். அவர் தனக்குள்ளேயே "கடைசியில் அம்மாதரசிபக்கம்தான் ஜயலக்ஷ்மி துணையிருந்தாள். அவள் ஒரே பிடியாய்ப் பிடித்துக் கடைசியில் வீரநகரத்தைக் காப்பாற்றுவித்தாள். நான் தோல்வியடைந்தவனானேன். அவளைப் போன்றவளுடன் மல்லிட்டு வெற்றிபுரிவது அஸாத்யமென நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் அறிந்திருந்தால் நான் இவ்விஷயத்தில் தலையிட்டுக் கொண்டே யிருக்கமாட்டேன்" என்று சொல்லிக் கொண்டான்.

"என்ன, கோகுலதாஸ், வாய்பொத்தியிருக்கிறீர்? நான் சொல்வது ஸரியெனப்படுகிறதா உமக்கு?"

"ப்ரபூ, தங்கள் தீர்மானங்களை ஸரி தப்பென்று சொல்ல நான் அருகனல்லேன். என் தலை நரைக்கும் வரையில், நான் என் புத்திக்குத் தோன்றியவாறு உழைத்து விட்டேன். இனி இவ்வயோதிகனின் ஊழியம் தேவையில்லாவிட்டால், உத்தரவு கொடுத்தால் கடைசி காலத்தை நிம்மதியாய்க் கழித்துக் கொண்டிருப்பேன்."

"உம்மைத் தேவையில்லையென்று தள்ளிவிட்டால் அப்புறம் என்னால் என்ன முடியும். உம்மை நான் என்றைக்கும் நண்பராகக் கருதியிருப்பவன். உம் உதவியை நாடி நான் இன்றைக்கு இங்கு வந்தேன். நீர் என்னுடன் ராஜமஹலுக்கு வரவேண்டும். அவ்விடம் சென்று வீரநகர ஸமஸ்தானத்துப் பாக்கியைக் கச்சேரிக்குச் செலுத்திவிடவேண்டும். பாக்கித் தொகை பூர்த்தியாய் வசூலானவுடன், ஜமீனைத் திரும்ப நரேந்த்ரன் வசமாக்கக் கானங்கோ விடம் அநுமதி பெறவேண்டும். நான் வங்காளத்தை விட்டுத் தூரதேசஞ் சென்றிருக்கும் காலத்தில் நீரே வீரநகர தேவிபுர மிரண்டையும் பரிபாலித்துவர வேண்டும். என்றைக்கும் யஜமானத்ரோஹமென்பதையே யறியாதவராகிய நீர் நம்பிக்கையாய் உழைத்துவருவீரென நான் நம்புகிறேன்."

கோகுலதாஸ் பதிலுரைக்கவில்லை. நாற்பது ஆண்டுகளாக எண்ணிய எண்ணங்களும் செய்த சூழ்ச்சிகளும் பகலவனைக் கண்ட பனிபோல் மறைந்துவிட்டன. தேவிபுர ராஜகுடும்பத்தின் உயர்வைக்கோரிச் செய்த ஏற்பாடுகளெல்லாம் கேவலம் ஆகாயக் கோட்டையாய் முடிந்தன. அவருடைய மனம் புழுப் போலத் துடித்தது. தான் சீராய்ச் செல்வமாய்ப் பெற்றெடுத்த குழந்தை மரணமடைவதைக் கண்டு மனம் விள்ளாதவர் யாவர்? ஒருபோதும் ஒருவரும் கண்டிராதபடி கோகுலதாஸின் வற்றியுலர்ந்திருக்கும் முகத்தில் கண்ணீர் ப்ரவஹித்தது.

"கோகுலதாஸ், இரவு அதிக நேரமாகிறது. வாய்திறந்து பேசும். உம்மைப்போல் நம்பிக்கையாய் உழைத்துவந்த ப்ராணி இந்தத் தேவிபுரத்தில் வேறெவருங் கிடையாது. 'ஆங்கு கொட்டியுமாம்பலும் நெய்தலும் போலவே' என்றவாறு நீர் இக்குடும்பத்தாருக்குக் கஷ்டங்

கள் ஒன்றின்மேலொன்றாய் வந்தகாலத்தில் விட்டுப் பிரியாமல் உடல் பிரியா நிழல் போலிருந்து உழைத்து வந்தீர். உம்மிடமின்றி வேறெவரிடமும் எனக்கு நம்பிக்கை கிடையாது. உம்மைப்போல் எனக்கு வேறெவர் உதவி புரிந்திருக்கிறார்கள்? உம்மாலன்றோ நான் இந்த ஸ்தானத்துக்கு வந்தது? நீரே எனக்கு ஏற்ற நண்பர். வாய் விட்டுப் பேசும். நான் உயிருள்ளமட்டும் உம்மையே நம்பி உம்மிடமே ஸகல அலுவல்களையும் ஒப்புவிக்கிறேன். நவகுமாரரைப் போலவே, நானும் உம்மிடம் நடந்து கொள்வேன்."

"ப்ரபூ, இவ்வாறு என் முயற்சிகளெல்லாம் விழலுக்கிறைத்த நீராகி வ்யர்த்தமாய்ப்போய், நான் கொண்ட கோரிக்கைகளெல்லாம் அவலமாய்ப் போகுமென்று நான் கனவுகூடக் கண்டதில்லை. இத்தகைய இடையூறுகள் நேருமென்று நான் ஒரு போதும் நினைத்ததில்லை. யஜமானரவர்களுடைய குணத்தை நன்கறிவேன். தனது மூதாதைகள் பரம்பரையாய் உழைத்துவந்த தேவிபுரத்து ராஜ குடும்பத்துக்குக் கோகுலதாஸ் மாத்ரம் அந்த்ய காலத்தில் நம்பிக்கை த்ரோஹம் செய்வாரென்பது சற்றும் ஏற்காது. உமது ஆக்ஞையின்படியே நான் உழைத்துவருகிறேன். தெய்வம் என் குற்றங்களை மன்னித்தருளுமென்று நான் நம்புகிறேன்."

"கோகுலதாஸ், கடவுளது திருவருள் ப்ரஸாதம் நமக்கு இருக்கவேண்டும். நாம் இன்னும் இவ்வாழ்வில் செய்யவேண்டிய கார்யங்கள் பலவிருக்கின்றன."

ஸ்ரீஷன் அவரிடம் அன்பு பாராட்டி அவரைப்பிரியமாய் ஆலிங்கனம் செய்துகொண்டு அவ்வறையை விட்டகன்றான். கோகுலதாஸ் மாத்ரம் அறைக்குள் தனியாயிருந்தார். அவருக்கு இரவெல்லாம் தூக்கம் பிடிக்கவில்லை. விளக்குகள் அவிந்து போயின. கதிரவன் கிரணங்கள் சாளரங்கள் வழியாய் உட்ப்ரவேசித்தன. கோகுலதாஸ் கவலைகொண்ட முகத்தினராய்த் தென்பட்டனர்.

---

"உலகம் பலவிதம்" ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தில் பிரீதி கொள்ளுகிறார்கள். எல்லோருடைய இஷ்டப்படி நடப்பது ஸாத்தியமல்ல. ஆயினும் ஒவ்வொருவருக்கும் பிரீதியாக நடந்தாலன்றி நல்லவனென்ற பெயர் எடுக்கமுடியாது.

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### S. S. L. C. 1912 (*Concluded*).

I. Write a short essay on (any one of) the following (*c*) Irrigation tanks.

II. Write a short account of (one of) the following:—

(*c*) 'A recent event of general interest.

### II (*c*) பொதுப்பற்றிற் கிடமான புதிய ஸம்பவம்.

### டில்லியில் நடந்த முடிசூட்டுக் கொலுக் கொண்டாட்டம்.

நடந்த காலம் — இடம் முதலியன — (கொலுவுக்கு) முன்னர் நடந்தவை — (கொலுநாள்) அன்று நடந்தவை—பின் நடந்தவைகள்.

டில்லி முடிசூட்டுக் கொலுக் கொண்டாட்டங்கள் 1911-ஆம் டிசம்பர்மீ 7-ம் தேதி முதல் 15 தேதி வரையில் (வியாழக்கிழமை முதல்—வெள்ளிக்கிழமையுள்பட) ஒன்பது நாள் நடைபெற்றன. இதில் முடிசூட்டுக் கொலு நடந்த நாள் டிசம்பர் 12-ம் தேதியாகிய செவ்வாய்கிழமை யன்றுதான். இது நடந்தேறிய இடம் டில்லி பட்டணத்துள் அல்ல; அதன் வடபுறத்திலுள்ள பரம்பின் வடபுற அடிவாரத்தில் இக்கொலுக் கொண்டாட்டத்திற்கென்றே அமைக்கப்பட்டிருந்த கூடாரப்பட்டணத்திற்கு எதிரிலுள்ள பெரிய மைதானத்தில்தான். முடிசூட்டுக் கொலு நடந்தேறுவதற்குப் பல மாதங்களுக்கு முன்னரே இப்படிப்பட்ட கொலு நடைபெறவேண்டுமென்று தீர்மானித்தது முதல் இந்த முடிசூட்டுக் கூடாரப்பட்டணமும், அதற்கு எதிரில் முடிசூட்டுக் கொலு மண்டபமும் தயார் செய்யப்பட்டுவந்தன. அந்தக் கொலுவுக்கு வந்து கூடின திரளான ஜனங்கள் சிற்றரசர்கள் முதலியவர்கள், கொலு நாட்கள் முடிய இருந்து போவதற்கு வேண்டிய இடம் டில்லி பட்டணத்துள் இராது என்று மதித்தே இவ்வாறு செய்யப்பட்டது, இராஜ ப்ரதிநிதி முதலியவர்கள் ஏற்பாட்டின்பேரில்.

மேற் குறித்த டிசம்பர்மீ 7-ம் தேதி வியாழக்கிழமையன்று நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியும், மேரி மஹாராணியாரும் தமது பரிவாரங்களால் சூழப்பட்டுத் தமது அதிகார கோலாஹலத்துடன் முடிசூட்டுக் கொலுவிற்காக டில்லி நகரத்துள் புகுந்தனர், யமுனை என்ற புண்ய நதியின் மேலிடப்பட்ட பாலத்தின் வழியாக. உடனே இடிமுழக்கம்போன்ற ஒலிகளையுடைய வெடிகள் தீர்த்தனர். இவர்கள் டில்லிக்கோட்டையுள் புகுந்து அங்கு சிபாய்க்கலக காலத்தில் நம் நாட்டைக் காத்துத் துரைத்தனத்தாருக்கு ஒப்புவித்ததில் உதவிய போர் வீரர்கள் நம் நாட்டுச் சிற்றரசர்கள் இவர்களை ஒழுங்குப்படி வரவேற்றனர். அங்கு சக்ரவர்த்தி குதிரையின் மீதேறிக்கொண்டு புறப்பட அரசர் ஊர் கோலம் கிளம்பியது கோட்டையுள்ளிருந்து. இதில் காணப்பட்ட நடையுடைபாவனைகளின் ஆடம்பரம் உலகில் எங்கும் இல்லை என்றே கூறிவிடலாம். கோட்டைக்குள் இவர்கள் நிச்சப்தமாக வரவேற்கப்பட்டிருந்ததற்கு நேர் மாறாக இவர்கள் வெளிப்பட்டதும் அங்குள்ளவர்களான ஜனங்கள் குழந்தைகள் முதலிய எல்லோரும் ஜயகோஷம் செய்து தமது சக்ரவர்த்தியை வரவேற்கத் தலைப்பட்டனர். இந்த ஊர்கோலம் டில்லியில் முக்யமான இடங்கள் தெருக்கள் வழியாக ஜனங்கள் ஆனந்த கோஷங்களுக்கிடையில்போய், டில்லியை விட்டு வடபுறம் வெளியேறி, எதிரே இருந்த பரம்பின்மேல் ஏறிச் சென்று அதன் உச்சியிலிடப்பட்டிருந்த சிறந்த பந்தலில் நிலைபெற்றது. இங்குதான் இராஜ ப்ரதிநிதியின் வரவேற்கும் அறிக்கை வாசிக்கப்பட்டது. இதற்குச் சக்ரவர்த்தி பதில் தகுந்தபடி கொடுத்த உடன், ஊர் கோலம் கிளம்பி வடபுறம் இறங்கி அரசனை அவருக்காக ஏற்படுத்தப்பட்ட கூடார விடுதியில் கொண்டு சேர்த்துவிட, எல்லோரும் தத்தம் கூடாரவிடம் சேர்ந்தனர். இப்படி இறங்குகையில் தான் எல்லாச் சிற்றரசர்களும் முன் ஏற்பாட்டின்படி தத்தம் கொடி குடை முதலியவைகளை விரித்துத் தம் ஆடம்பர ஆரவாரங்களை வெளிக்காட்டிச் சிறப்பித்தது. சக்ரவர்த்தி முதலியோர் தமது விடுதிகளில் அமர்ந்ததும், துரைத்தனத்தார் கொடி உயரப் பறக்கத் தொடங்கியது. இந்த வியாழக்கிழமை முதல், முடிசூட்டுக் கொலு நாளான செவ்வாய்க்கிழமை வரை எல்லோரும் தத்தமக்கு இசைந்தவாறு கோலாஹலமாய்ப் பொழுது போக்கிக்கொண்டு வந்தனர்.

1911ஆம் டிசம்பர் மாதம் 12-ம் தேதி செவ்வாய்க் கிழமையாகிய கொலு நாளன்று காலை, டில்லியைச் சுற்றுமுள்ள இடங்களிலிருந்து திரள் திரளாக ஜனங்கள் வந்து கொலு மண்டபம் அமைத்துள்ள மைதானத்தில் தமக்கு ஏற்படுத்தப்பட்ட விடங்களில் கூடிவிட்டனர். கொலுச்சாலை அந்த மைதானத்தில் இரண்டு பாகமாகப் பிரித்து அமைக்கப் பட்டிருந்தது; ஒன்று வடபுறம் பார்த்ததாயும் ஸுமார் 1200 அடி முனைக் குறுக்களவுடன் கூடிய அரை வட்ட உருவமாகவும் மேல் தட்டிகளால் நிழலாக்கப் பட்டதாயும் இருந்தது. இதனுள் நடுவில் படிகளால் சுற்றிலும் அலங்கரிக்கப்பட்டும் இரண்டு ஸிம்மாஸனங்களுடன் கூடிய மேடை அமைக்கப் பட்டிருந்தது. இந்த அரை வட்டத்திற்கெதிரே மேற் கட்டி இல்லாததாயும் ஸுமார் அரைமைல் முனைக்குறுக்களவுள்ளதாயும் இருந்த அரைவட்டம் ஸாதாரண ஜனங்கள் கூடி நின்று பார்ப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது. இவ்விருசாலைகளுக்கும் பொதுவான நடுவிடத்தில் முன் காட்டியதை விட உயர்ந்த மேடை ஸிம்மாஸனங்களுடன் அமைக்கப்பட்டிருந்தது. ஸுமார் பகல் 11 மணிக்கு வாத்திய கோஷந் தொடங்கிற்று. சக்ரவர்த்தி ஊர்கோலம் புறப்பட்டு வந்ததும் பேரொலிகளுடன் கூடிய வெடிகள் முழங்கின. கொஞ்ச நாழிகைக்குள் சக்ரவர்த்தியும் மஹாராணியாரும் ஜனங்களது பெரும் கோஷத்திற் கிடையில் இராஜ ப்ரதிநிதியால் வரவேற்கப்பட்டு உள்ளே இருந்த தாழ்ந்த மேடை ஸிம்மாஸனங்களில் வந்து அமர்ந்தனர். அவர்களின் உத்தரவின்பேரில் முடிசூட்டுக்கொலு தொடங்கியது. உடனே வாத்யங்கள் ஒருங்கு கூடி பேரொலிசெய்து படிப்படியாக அமர்ந்தன. கம்பீரமான நிச்சப்தத்திற்கு இடையில், சக்ரவர்த்தி வெகு கம்பீரமாக எழுந்து இவைகளால் தமக்கு உண்டான மகிழ்ச்சியைச் சுருக்கமாகத் தெரிவித்தனர். நம் நாட்டை எவருக்கும் ஒரு விதக் குறைவும் ஏற்படாது நெறிப்படி ஆண்டு வருவதாகவும் வாக்களித்தனர். இதன் பின் சிற்றரசர் வழிபாடு தொடங்கியது. ராஜப்ரதிநிதி, அவர் பரிவார அதிகாரிகள், சிற்றரசர்கள் ஸுமார் 6[illegible] பெயர்கள் எல்லோரும்

சக்ரவர்த்தியைஅன்புவணக்கத்துடன்அணுகி எதிரில் வணங்கிவிட்டு அப்படியே மெதுவாக மறுப்புறம் ஒதுங்கினர். ஸுமார் ஒரு மணி நேரத்தில் இச்சடங்கு முடிவுபெறப் பின்னர் சக்ரவர்த்தி குடிகளுக்குக் காட்சி கொடுக்கும் சடங்கு தொடங்கியது. இதுவரையில் நடந்தவை உள்ளிருந்த தாழ்ந்த மேடையில் நடந்ததால் வெளியில் கூடி இருந்தவர்களுக்குஇவை முற்றிலும் விளங்கவில்லை. இப்பொழுது சக்ரவர்த்தியும் மஹாராணியாரும் முன்னே இருந்த உயர்ந்த மேடையில் கொண்டு சேர்க்கப்பட அங்கிருந்த ஸிம்மாஸனங்களில் வெகு கம்பீரமாக அமர்ந்தனர். தமக்குக் காட்சி கொடுக்க வேண்டுமென்றே வெகு தூரம் தம் கஷ்டங்களைக் கவனியாது வந்தமர்ந்துள்ள தமது சக்ரவர்த்தியை நேரிடக்கண்டு குடிகள் எல்லோரும் ஆனந்தக் களிப்பென்னும் கடலில் மூழ்கி விட்டனர். இங்கு விளம்பரக்காரர் இராஜ விளம்பரத்தைப் பல பாஷைகளில் பலர் அறிய வெளியிட்டனர். இது முடிந்ததும், எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செய்ய இந்திய சக்ரவர்த்தித் தன்மையை நேரிடச் சடங்குபடி இந்தியர்கள் எதிரில் ஏற்றுவிளங்கிய மன்னன் சிறப்பிற்காக இடிமுழக்கம்போன்ற 101 வேட்டுக்கள் விடப்பட்டன. இக்கோலாஹலங்கள் அடங்கியதும், சக்ரவர்த்தியும் மஹாராணியாரும் தாழ்ந்த மேடையில் அமர்ந்தனர். உடனே சக்ரவர்த்தி எழுந்து எல்லோரும், 'என்ன புதுமை எவ்வளவு தகுதியானது!! என்று வியந்து ஏற்றுக்கொள்ளும்படி, இந்தக் கொலுக்கொண்டாட்டத்தின் சிறப்பு என்றும் உங்கள் மனதில் பதிந்தே கிடப்பதற்காக இவ்விந்தியாவின் தலைமை நகர் இன்றுமுதல் இந்த டில்லியாகவே இருக்கட்டும்; கல்கத்தாவிலிருந்து எல்லாம் இங்கே வந்தமர்ந்து விடட்டும்' என்று உத்தரவு செய்து முடித்தார். இத்துடன் முடிந்தது முடிசூட்டுக் கொலு. இந்த நாளில் உலகில் துரைத்தனத்தார் ஸம்பந்தமுடைய எல்லாபட்டணங்களிலும் ஊர்களிலும் இந்தக் கொலுக் கொண்டாட்டம் வெகு சிறப்பாக நடைபெற்றது. அந்த நடுப்பகல் நேரத்தில் டில்லியில் விளம்பரக்காரர் வெளியிட்டதான, அரசன் இந்தச் சக்ரவர்த்தித் தன்மை நேரிட ஏற்ற விஷயம், முதலியவைகள் முன் காட்டப்பட்ட ஒவ்வொரு பட்டணத்திலும் தகுந்த அதிகாரிகள் வழி அங்குள்ள குடிகளுக்கு வெளியிடப்பட்டது. அன்றிரவு பாண வேடிக்கை தீபோத்ஸவம் முதலிய எல்லாம் ஸரிவரச் சிறப்பாக நடந்தேறின.

அடுத்த நாள் 13-ம் தேதி புதன்கிழமை எல்லா ஜாதியாரும் சக்ரவர்த்தியின் வரவை தத்தமக்குரிய ஊர்கோலம் கடவுள் வழிபாடு முதலியவைகளால் சிறப்பித்துக் கொண்டாடுவதற்கே ஏற்பட்டிருந்தது. ஹிந்துக்கள் கோலாஹலத்துடன் யமுனைக்கரையை அணுகி அங்கு சக்ரவர்த்தியின் சிறப்பு ஓங்கி வளருவதற்காகக் கடவுள் வழிபாடுகள் நடத்தினர். துலுக்கர்கள் டில்லி மசூதியுள் ஜபம் செய்தனர். ஸிக் ஜாதியார் தமது **கிரந்தம்** என்ற வேதத்தை நடுவில் வைத்துச் சுற்றியிருந்து கடவுளை வணங்கினர். எல்லாக் கூட்டங்களும்வெளிப்பட்டுச் சக்ரவர்த்திக்கூட்டம் அமர்ந்திருந்த இடம் வந்து அதனுடன் கலந்து பொதுவாகக் கடவுள் வழிபாடு செய்து ஒரே மனதுடன் வணங்கின அரசன் சிறப்பைக் கருதி. இவை டில்லிக் கோட்டைக்கும் யமுனைக்கரைக்கும் இடையில் நடைபெற்றன. அன்று பிற்பகலில் சக்ரவர்த்தியும் மஹாராணியாரும் கோட்டைக்கீழ்புறம் கைபிடிச் சுவரண்டை வந்து எதிரே கூடியுள்ள எல்லோருக்கும் காட்சி கொடுத்தனர். எல்லோரும் ஜயகோஷம் செய்து அன்று முழுவதையும் களியாட்டுக்களிலேயே கழித்துவிட்டனர். மறுநாள் வியாழக்கிழமை 14-ம் தேதி பட்டாளக் காட்சி மேற்பார்வை நடைபெற்றது. இதில் பாதிக்கு மேல் நம் நாட்டுப் போர்வீரர்களாகவே இருந்தனர். ஏறக்குறைய ஒரு மைல் நீளத்திற்கு இரண்டு பத்தியாக நிறுத்தி வைத்திருந்த சேனைகளை அரசர் குதிரை ஸவாரியில் சுற்றிப் பார்த்துவிட்டு, தான் வீற்றிருக்க ஏற்பட்டிருந்த பந்தலில் வந்து நின்றார். உடனே காலாள், பீரங்கிப்படை, குதிரைப்படை ஒட்டகப்படை யானைப்படை எல்லாம் அரசர் முன் வந்து, மறுபுறம் ஒதுங்கிப் போகத் தொடங்கியது. இப்படைகளின் சிற்சில வகுப்பார் தமது இராணுவத்திறத்தை, ஒழுங்கு மாற்றம் பலவித நடைகள் முதலியவைகளால் வெளிப்படுத்தினர் அரசன் முன்னிலையில். கடைசிநாளான டிசம்பர் 15-ம்



தேதியன்று தலைமை நகரான டில்லி அமைப்பதற்கு வேண்டிய அடிவாரக்கல் ஒழுங்குப்படி சக்ரவர்த்தியாலேயே பொருத்தப்பட்டது. ராஜப்ரதிநிதியைச் சேர்ந்த ஆலோசனை ஸபையார் கூடாரங்களுக்கிடையில் இந்தக் கல் பதிக்கப்பட்டது. இதனடியில், நன்கு அடைத்த பெட்டி ஒன்றில் இக்காலத்தில் துரைத்தனத்தார் நாடுகளில் வழங்கி வரும் நாணயங்களில் ஒவ்வொன்றும் கொலுவிஷயவிளக்கப் புத்தமும் ஆகிய இவை வைக்கப்பட்டிருந்தன. இந்த விடமாகிய, முன்னுள்ள டில்லிக்குச் சற்று வடபுறத்தில் தலைமை நகரான புதிய டில்லி அமைக்கப்பட்டது. இங்கு இன்றும் ராஜப்ரதிநிதி வீற்றிருந்து நம்நாட்டை அரசாண்டு வருகிறார். இம்முடிசூட்டுக் கோலாஹலத்திற்கு நிகர் உலகில் வேறு ஒன்றும் இதுவரையில் நடந்தேறியதேயில்லை.

## I (c). பாசனக்குளங்கள்

*பாசனப் பொதுவிஷயங்கள் - பாசனக்குளவகைகள் - உதவும் வழிகள் இவ்விஷய உயர்வின் எல்லை - உபாயங்கள் - முடிவுரை.*

மானிடர்கள் தமக்குத் தேவையானவைகளைத் தேடமுயன்று, அவைகளை மேல்ஏற்படக்கூடிய கஷ்டகாலங்களில் உதவும்படி சேர்த்துவைத்துக்கொள்ளுதலென்ற எண்ணத்துடன் தொழிற்பட்டு வந்தகாலம் முதல், பயிரிடுதல் அதற்குத் தண்ணீர்பாய்ச்சுவதற்கு வேண்டிய நீர்நிலைகள் கால்வாய்கள் முதலியவைகளை அமைத்துக் கொள்ளுதல் என்ற வேலைகளில் முனைந்தேயிருக்கின்றனர். நீர்பாய்ச்சும் விஷயத்தில் மழையையே நம்பிக்கொண்டிருக்கும் முழுச் சோம்பேறிகள் சிலர் உண்டு. அருகில் உள்ள ஆற்றுவெள்ளத்தையே மாத்திரம் நம்பி நிற்கும் அரைச்சோம்பேறிகள் சிலர் உண்டு. இவ்வாறின்றி மழையாலோ ஆற்றாலோ தண்ணீர்ஏராளமாகக் கிடைக்கும்பொழுது, அவைகளை வரட்சிக்காலங்களில் உதவுமாறு குளம் முதலிய நீர் நிலைகளை முன்னரே ஏற்படுத்தித் திரட்டிக்கொள்ளும் உழைப்பாளிகளும் பலர் நம்முள் உண்டு. ஆகவே பாசன விஷயங்களில் ஸமய ஸஞ்ஜீவிபோல உதவி, மானிடர்களைவிடாமுயற்சிக்குத் தயாராக்கும் தன்மையுடையவை பாசனக்குளங்களே.

தண்ணீர்பாய்ச்சுவதற்குப் பெரிய ஊன்றுகோலாக உள்ள குளங்கள் பலவகைப்படும். பெரிய ஏரிகள், பெரிய குளங்கள், ஊர்க்குளங்கள், குட்டைகள் முதலியவைகளே இதில் காணப்படும் பாகுபாடுகள். இவைகளில் ஜலம் மழையால் நேரே வந்தும் தேங்கலாம், அருகாமையிலுள்ள ஆறுகள் நேராகவாவது வாய்க்கால்கள்வழியாவது வந்துபாய்ந்து தேங்கலாம்; அல்லது அருகாமையிலுள்ள பெரிய ஏரிகளிலிருந்துசிறுகுட்டைகளாகவும்ஜலம் தேங்கலாம். எவ்வழியில் இந்நீர்நிலைகள் ஏற்பட்டிருக்குமாயினும் இவைகள் ஸரிவர நிறைந்து உதவுவதற்குமானிடர்கள்முயற்சி முற்றிலும்வேண்டும். இப்படி ஏற்படக்கூடிய ஏரிகளுள் முக்யமாக நாம் கவனிக்கவேண்டிய ஒருவகையுண்டு. அவை ஆறுகளில் உற்பத்தி இடத்தருகில் ஏற்படுத்தப்படுபவை. இவைகள் மிகுந்த உயரத்தில் அமைவதால் தண்ணீர் வெகு வேகத்தோடு கீழே பறித்துக்கொண்டு போகப்பார்க்கும். மிகுந்த முயற்சியின்பேரில் இவைகளின் கரைகள் பலமாகப் போட்டிருத்தல்வேண்டும். இதற்கு உதாரணமாகத் திருவாங்கூர் ஸம்ஸ்தானத்தில் பெரியாற்றில் ஏற்பட்டுள்ள ஏரியை எடுத்துக்கொள்ளலாம். ஓடும் ஆறுகளையும் ஏரிகுளங்களைப் போலவாக்கிப் பாய்ச்சலுக்கு உபயோகப்படுத்துவதும் உண்டு. காவிரி என்ற ஆறு இவ்வாறு பாசனக்குளத்தைப் போலவே குறுக்கு அணைகளால் உபயோகப்படுத்தப்பட்டுவருவதால்தான், அதன் தண்ணீர் கடல் சென்று, மழைக்காலமல்லாத மற்றையநாள்களில் எட்டுவதேயில்லை. எப்படியாவது தண்ணீரை ஒருவழியில் அதுபோன வழி பயன்றற்றுப்போக விடாது மானிட முயற்சியால் பாய்ச்சலுக்கு உதவும்படிசெய்யும் வேலைப்பாடுகளையெல்லாம் பாசனக்குளங்கள் என்ற தொடருள் அடக்கலாம்.

இவ்வாறு மிகுந்தமுயற்சியால் தேக்கப்பட்ட தண்ணீர்களையுடைய பாசனக்குளங்களின் உபயோகங்களைப்பற்றிச் சற்று ஆராய்வோம். இவைகளின் பெயரிலிருந்தே இவை பொதுவாகப் பயிர்களுக்கு உதவியைப் புரிவன என்று தெரியவரும். இவைகளுக்கு வடிவு கால்வாய்கள் ஏற்படுத்தி, அவை வழித்தண்ணீர் தன்படிவெளியேறிப்பயனற்றுப்போகாதபடி அடைத்திருக்கும் சீப்புக்களை அவைகளில் அமைத்துக் கரையுடன் பலமாகச் சேர்த்துக் கட்டிக் கூடியவரையில் வெகு தூரமுள்ள

வயல்களுக்கும் இந்நீர் நிலையின் தண்ணீர் சென்று பாய்ந்து அதைச் செழிக்கச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யலாம். கடற்கரையில்லா ஊர்களுக்கு இப்படிப்பட்ட குளங்களே கடலைப்போன்ற நன்மையையும் பயக்கும். இவைகளால் வெட்ட வெளியாக நல்ல சுத்தவாயு தங்கும் இடம் ஏற்படும். அதுவும் தண்ணீர்மேல் உலாவுவதால் ஊரில் குளிர்ந்த காற்றாகப் பாய்ந்து பொது வெப்பத்தைத் தணிக்கும். ஊரார்கள் உல்லாஸமாக வந்து உலாவுதற்குத் தகுந்த விடமும் ஆகும் இந்நீர் நிலைகள். ஜனங்கள் குடிப்புக் குளிப்புக்களுக்கும் இவை பயன்படும் என்று கூறவும் வேண்டுமோ? இவைகளோடு ஆறுகள், முதற் கிளம்பும் இடங்களில் அமைந்துள்ள நீர் நிலைகளுக்கு வேறு பயனும் உண்டு. அவ்விடங்களின் அருகாமையிலுள்ள வரண்ட ஆறுகளிலும் தண்ணீர் ஒழுங்காக ஓடும்படி அங்கிருந்து திருப்பிவிடலாம். முன் காட்டப்பட்ட பெரியாறு உற்பத்திக் குளம், தண்ணீரே இல்லாமல் வெகு காலத்திற்கு முன்னர் முதல் இருந்துகொண்டிருந்த வைகை ஆற்றில் திருப்பப்பட அதில் தண்ணீர் ஒழுங்காக அளவு பெருகி வருகிறது இப்பொழுதும். இதனால் மதுரை ஜில்லாவில் சாகுபடிக்கு வராது தரிசாகக் கிடந்த நிலங்கள் எல்லாம் செழித்து ஓங்கிவிட்டன. ஆற்றை ஏரிபோல அணையிட்டு உபயோகப்படுத்தும் இடங்களில் சிறு குளம் போன்ற நீர் நிலைகளாலேதான் ஆற்று நீரின் முழு உபயோகத்தை எப்பொழுதும் அடையமுடியும். வைகை ஆற்றில் தண்ணீரில்லாது வருந்திய மதுரை நாட்டார் இவ்வழியைப் பின்பற்றியே ஆற்று நீரைக் கடல் காணவொட்டாது தடுத்துக் கடலை அணுகும்பொழுது ஒரு பெரிய குளத்திலேயே தேக்கி நிறுத்திவிட்டனர். இதனால் குள வழிப்பாசனத்தின் சிறப்பு நன்கு விளங்கும். ஆற்றுப்பாசனத்திற்கும் குளத்துப்பாசன வழி இன்றியமையாததே.

இப்படிக் குளவழிப் பாசன விஷயம் நம் சென்னை ராஜதானியில் தேர்ச்சிபெற்றது போல வேறெங்கும் தேர்ச்சி பெறவில்லை. ஸிந்து நதி, கங்காநதிக்கரைகளில் இப்படியுள்ள பாசனவழியே தெரியாது. வருஷம் முழுவதும் வற்றாத ஆறுகள், கரைகளிலுள்ளவையாதலால் அங்கு இவ்வழியின் பெருமை விளங்கக்காரணமே இல்லை. இதனால் ஜனங்கள் பொதுவாக ஊக்கக் குறைவுடன் ஆற்றையே நம்பிக்கொண்டு வீண் பொழுது போக்கும் தன்மையராகவிருப்பர். இப்படியிருப்பினும் ஆற்றை அணைகளாற்றடுத்துக் குளம்போல உபயோகப்படுத்தி வாய்க்கால்வழிச்செலுத்திப்பயிரிடும் வழிகளால் மதுரை ஜில்லாவைப்போல் பல இடங்களும் இந்நதிக்கரையில் செழித்துள்ளன.

பாசனக் குளங்களுள் சிறியவைகளாவது, அதிக நீர் தேங்க இடமில்லாதவைகளாவது, அல்லது வருவாய்களில் குறைவுள்ளவைகளாவது வற்றிவிடலாம். அப்படி வற்ற மழை இன்மை காரணமாகவும் இருக்கலாம். இப்படி வந்துவிட்டால் பேராபத்துத்தான். ஆற்றுக்கால் குளங்களுக்கு இக்கதி வர இடமிராது: அருகாமையில் மழையில்லாவிடினும் ஆற்றின் உற்பத்தியான மலைப்பாங்கில் ஏற்படும் மழையால் அவை வற்றாமலிருக்கலாம். அதிகமழைகளாலும் பாசனக் குளங்கள் பேராபத்துக்களாகமுடியும். அப்படியாகாவண்ணம் கரைகள் பலமாகவும் பெரியவடிகால்கள் ஸரியாகத் தரிசுகளை நோக்கியும் அமைக்கப்படல் வேண்டும். என்ன செய்தென்ன! மானிடமுயற்சியின் எல்லையிது! நாற் பெரும் பூதங்களான நீர் தீ காற்று மண் முதலியன முனைந்தால் மானிட முயற்சி எதிர் நிற்குமா? இப்படி இயற்கை ஆற்றலே முனைந்து எதிர்க்காமலிருக்கும் வரையில் குளப்பாசனங்களுக்கு நிகர் வேறு எவ்வழியான பாசனமும் இல்லை.

முற்கூறிய ஆபத்துக்கள் எல்லாம் பொதுவாக வானம் பார்த்த குளங்களுக்குத்தான் வரும். அதிக நீர்ப்பெருக்கிற்கும் அறநீர் வற்றுவதற்கும் ஆற்றலே இல்லா ஸாதாரண ஜீவநதிக் கால்வாய்களால் ஏற்படும் குளங்களுக்கு பெரிய இவ்வாபத்துக்கள் நேரிட்வே மாட்டா. இம்மாதிரியான பெரிது நன்மை குளங்களில் இருப்பதால் குளம் வெட்டுதல் பெரிய புண்யச் செயலென நமது சாஸ்திரங்களே மிகுந்த பெருமையாக இதைப் பாராட்டிக் கூறும்.

"நாளைவரும் பலாக்காய்க்கு இன்றுவரும் களாக்காய் நல்லது": இனி எப்போதோ ஒரு பெரிய லாபம் கிடைக்கப்போகிறதென்று இப்போது கிடைக்கும் சிறிய லாபத்தைக் கெடுத்துக்கொள்வது பிசகு.



# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### 2. நகுஷன் சரித்திரம்

2. பசுவின் சிறப்புணர்ந்த சருக்கம்

கபிலருக்கும் ஸ்யூமரச்மிக்கும் நடந்தவேத நுட்ப விஷய வாக்குவாதத்தை நன்றாகக்கேட்டிருந்தும், நகுஷமஹாராஜனுக்கு, வைதிக கர்மாக்களுக்கு வேதங்களிலேயே காட்டப்பட்டுள்ள லோகாந்தர விஷய ஸுக ஏற்றங்களான பலன்களில் வெறுப்பு ஏற்படாது, அந்தப் பலன்களையே நன்றாகப் பெற மிக முயற்சித்து வந்தான், வைதிக ஒழுங்கை முன்னைவிட மிகுந்த ஆவலுடன் பின்பற்றி. இதனால் இவன் அரசாட்சி முதலிய உலகப் பொதுநடவடிக்கைகள் முன்னைவிடப் பலமடங்கு ஒழுங்காகவும், பொது நன்மையை ஆழ்ந்து கருதியும் நடத்தப்பட்டன. இப்படிச் செய்வது க்ஷத்ரிய தர்மம் என்றும் இதை நன்றாகப் பின்பற்றி ஒழுகினால்ஸ்வர்க்காதி புவனங்களில் நீடித்த சிறந்த விஷய ஸுகங்களைத் திகட்டாது நித்ய யௌவனத்துடன் அனுபவிக்கலாம் என்றும் வேத சாஸ்திரங்களில் கண்டிருக்கிறபடியால் இவைகளை நகுஷராஜன் விடாமுயற்சியுடன் பின்பற்றி நிற்கலானான். ந்யாயம் தீர்ப்பது முதலிய நுட்பமான தருணங்களிலும் இந்தப் பேராவலாலேயே நடுநிலையிலிருந்து வழக்குக்கள் தீர்த்துவந்தான். இதனால் உலகம் நல்ல க்ஷேமத்தை அடைந்ததே ஒழிய, உலக அனுபவ ஸத்கர்மானுஷ்டானங்களால், வேதங்களின் முடிவான நோக்கமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ள மோக்ஷத்திற்கு நேர்வழியான ஞானப்படியில் அடியெடுத்து வைக்கக்கூட இந்த நகுஷராஜனுக்கு ஆற்றல் இன்னும் வந்தபாடில்லை. இவ்வாறு வேத சாஸ்திர நெறியைக் கொஞ்சங்கூடத் தவறாது இருப்பவர்களுக்கெல்லாம் **ஸுகிருதிகள்** என்ற பொதுப்பெயர் உண்டு. இவர்களுள் நகுஷன்போல விஷய ஸுகத்தில் வேதவிதிக்கு விரோதமான ஒரு வித முயற்சியும் இல்லாத வேதப்பிடிப்புடையவர்களுக்குத்தான் நமது சாஸ்திரங்களில் **விஷயிகள், மந்தர்கள், அஞ்ஞானிகள், கர்மஸங்கிகள்** முதலிய பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வுலக விஷயஸுகமே சதம், பிறருக்கு எவ்வளவு வருத்தம் தருவதாகவிருந்தாலும், சாஸ்திரங்களுக்கு எவ்வளவு முரணான வழிகளில் அவை கிட்டுபவைகளாகவிருந்தாலும், அவைகளை எப்படியாவது பெற்று ஸுகத்தில் கண் கால் தலை தெரியாது முழுகிவிடவேண்டும் என்று கருதும் பாமரர்கள்தாம் இவ்விஷயிகள் முதலிய சாஸ்த்ரீயப் பெயர்களுக்கு இலக்கு என்று அறியாமையால் மதித்து நமது சாஸ்திரங்களுக்குப் பொய்ப்பொருள் கூறித் திண்டாடவேகூடாது வைதிகர்களாகிய நாம். இங்கு கூறப்பட்ட வைதிக விஷயிகள் வெறும் லௌகீக ஸுகம் மாத்திரம் கருதி நன்னடக்கையில் நிலைபெற முயலுபவர்களான இக்கால நாகரீக ஸத்துக்களைவிட, கோடிப் பங்கு ஸத்துக்களாகவும் ஸன்மார்க்கப் பற்றுடையவர்களாகவும் இருப்பவர்கள். மோக்ஷவழியில் எளிதில் முயல முடியாவிடினும் வெகு நாளுக்குப் பின்னராவது அவ்வழியில் இவர்கள் வந்து சேராமல் போகமாட்டார்கள். இவர்களுக்குப் பல ஆபத்துக்களும் பெரியோர்கள் கூட்டுறவும் ஏற்பட்டுவரும். பெரியோர்கள் கூட்டுறவால் இவர்களுக்கு மனம் சுத்தப்படும். இவ்வாறு சுத்தப்பட முன் சருக்கத்தில் ஒரு தருணம் நகுஷனுக்குக் கிடைத்ததாகக் காட்டப்பட்டும், அவன் மனம் மோக்ஷவழியை அணுகுவதற்கு வேண்டிய பரிசுத்த நிலையை அடையவில்லை. நகுஷன் கரையேற வேறு பெரியோர்கள் கூட்டுறவு கிடைத்த விஷயத்தை இங்கு எடுத்துக் காட்டுவோம்.

நகுஷன் ஒருநாள் தன் ந்யாய ஸபையில் வழக்குக்கள் தீர்த்துக்கொண்டிருக்கையில் சில செம்படவர்கள் ஓடோடியும் வந்து தமக்கு வந்துள்ள கஷ்டநிலையைக் கூறி வாய்விட்டுக் கதறத் தொடங்கினர் :—

"மஹாராஜாவே! நாங்கள் எங்கள் கூட்டத்தவர்களோடுங் கூட, மிகுந்த கவனத்துடன் நல்ல வேளைபார்த்து, இன்று பெரிய வலைகளை எடுத்துக்கொண்டு கங்கா, யமுனா ஸங்கமமான ப்ரயாகையின் முனையில் வந்துசேர்ந்து, வெகு தூரம் வரையில் பரந்து விழும்படி வலை வீசினோம். பின்னர், தகுந்த தருணத்தில் வலைகளை எல்லோரும் சேர்ந்து இழுத்துப் பார்த்தோம். அவைகளை இழுக்கும்பொழுது வெகு கஷ்டமாக இருந்தது. ஒரு வேளை நமக்குச்

சிறந்த ஏராளமான மீன் குவியலோ அல்லது விலையுயர்ந்த பெரிய மீன்களில் பலவோதாம் கிடைத்துவிட்டன என்ற மகிழ்ச்சியால் பன்மடங்கு ஊக்கத்தோடு வலைகளை இழுத்துத் தள்ளிக் கொண்டுவந்தோம். எங்களுக்கு ஊக்கங் குறைந்த சிற்சில நேரங்களில் இடையிடையே 'ஒரு வேளை நமது துர் அதிர்ஷ்டத்தால் பெரும்பாறைகள் போன்ற உபயோகமற்ற வஸ்துக்கள்தாம் வலையில் சிக்கி இவ்வளவு திண்டாடும்படி செய்கின்றனவோ?' என்றும் ஐயுற்று அயர்ந்து நின்றுவிட்டோம். புறப்பட்ட வேளையின் அநுகூலத்தைக் கருதித் தேர்ந்து மறுபடியும் இழுத்தோம். இப்படியாகச் சற்று முன்புதான் வலையில் சிக்கிய சரக்கை வெளிப்படுத்தினோம்.

"அதில் மீன்குவியல்கள் ஏராளமாக இருந்தன. 'நாம் இன்று நரிமுகத்தில்தான் விழித்தோம்' என்று கரை புரண்ட களிப்புடன் எல்லோருமாகச் சேர்ந்து அந்தக் குவியல்களைப் பங்கு போட்டுக்கொள்ளப் பிரித்துவைத்துப்பார்த்தோம். அதனுள் எங்களுக்கு மிகுந்த கஷ்டத்தை உண்டாக்கியதன் காரணமாகக் காணப்பட்ட வஸ்து ஒன்று தென்பட்டது. அது ஒரே பச்சையான பாசிக் கொத்தால் மூடப்பட்ட மனிதன் அளவில் காணப்பட்டது. மனிதன் அங்கம் முதலியன ஒன்றும் முதலில் எங்களுக்குப் புலப்படவில்லை. அதன்மேல் பல வெண்மையான கிளிஞ்சல் புழுக்கள் தமது கிளிஞ்சற் கூட்டுடன் ஒட்டிக்கொண்டிருந்தன. புஷ்பங்களுடன் கூடிய அடர்ந்த புஷ்பக்கொடிப்புதரைப் போல அது காணப்பட்டது. அதிலுள்ள கிளிஞ்சல்களை எடுத்துப் பாகம் போட்டுக் கொண்டு விட்டுப் பச்சையான பாசிக் கொத்துக்களை விலக்கிப் பார்ப்பமோ! செம்பட்டையான சடைகள் முதலியவைகளுடனும் திவ்ய தேஜஸ்ஸுடனும்கூடிய முகத்துடன் நிஷ்டையில் மெய்ம்மறந்திருந்த ரிஷியின் உருவம் தென்பட்டது.

"பதறிப் போய்விட்டோம் எல்லோரும்! இதற்குள் ருஷியும் விழித்துக்கொண்டு விட்டார். அவர் நிஷ்டையை நாங்கள் இப்படிக் கலைத்துவிட்டதற்கு எங்கே அவர் எங்களைச் சபித்துவிடுவரோ என்ற பெரும் திகில் எல்லோருக்கும் வந்துவிடக் கண்ணுங்கண்ணீருமாக நாங்கள் அவர் பாதத்தில் அடியற்ற மரம் போலச் சாய்ந்து, மன்னிக்கும்படி முறையிட்டுக் கொண்டோம். முனிவர் மிகுந்த அமைதியுடன் எங்களை நோக்கி அபயம் அளித்துத் தேற்றினார். பின்னர் 'தாங்கள் எழுந்து விரும்பின இடத்துக்குப் போகலாம்' என்று மிகப் பணிவுடன் அவரிடம் நாங்கள் விண்ணப்பம் செய்து கொண்டோம். அதற்கு அவர், 'அப்பா! நீங்கள் என் விஷயத்தில் மிகுந்த ஸங்கடங்களை உண்டாக்கிவிட்டீர்கள். அவைகளைத் தீர்த்துக் கொண்டல்லவா நான் இவ்விடத்தைவிட்டு நகருவேன்' என்று விடை கொடுத்தார். 'நாங்கள் செய்தது பிழை. என்ன தண்டனைக்கு வேண்டுமானாலும் உட்படுகிறோம். எங்களைச் சாந்தமாய் அனுக்ரஹிக்கவேண்டும். வாய் விட்டுக் கூறுங்கள் உமது எண்ணங்களை; நாம் அவைகளை நிறைவேற்றக் காத்துக்கிடக்கிறோம்' என்று கூறி அடி பணிந்தோம், ருஷி கூறலுற்றார்:—

"அப்பா! செம்படவர்களே! நீங்கள் உங்கள் தர்மப்படிதான் நடந்தீர்கள். அதனால் என் நிஷ்டை கலைந்ததென்ற கோபமே எனக்கு இல்லை. நான் பல வருஷங்களுக்கு முன் உத்வாஸம் என்ற விருதத்தை அனுஷ்டித்துத் தவம்செய்ய இந்தப் புண்ய தீர்த்தமான கங்கா யமுனாஸங்கமமுனையில் மூழ்கி உலக உணர்வே இல்லாது வெகுகாலம் இருந்தேன். இடையிடையே உலக உணர்வு ஏற்பட்ட காலத்தில் இந்த மீன்கள் எல்லாம் என்னை ஏதோ அவைகளுக்குச்சிறந்த ஆதாரம் என்று கருதி என்னை விட்டுவிலகாது கூடிக்கொண்டே வேறெங்கும்போகாமலே நின்றுவிட்டன. கிளிஞ்சல்களும் அப்படியே என்னைக் கண்டுமகிழ்ந்து நின்றுவிட்டன. என்னைக் கதியாக அடைந்த அவைகளுக்கு ப்ராணாபத்து இப்படி ஒரே காலத்தில் என்னால் வந்துவிட்டதே என்ற துயரம் ஒரு பக்கம்பாதிக்கிறது. அதை ஒருவாறு என் தவச்சிறப்பால் நீக்கிக்கொள்ள வழிதேடினும், வேறு ஸங்கடம் ஒன்று இப்பொழுது வந்துள்ளதே! நீங்கள் இன்று காலை முதல், வெகு கஷ்டப்பட்டு என்னை இழுத்ததற்குத் தகுந்த பலனடையமுடியாமல் போகிறதே என்ற எண்ணம் உண்டாகிவிட்டது. என்னைச் சரணமடைந்த மீன்கள் உயிர்விட்டு உங்களுக்கு உதவிய அளவுகூட என்னால் உங்கள் கஷ்டத்



திற்குத் தகுந்தபலன் கொடுக்கமுடியவில்லையே என்பது என்னை வருத்துகிறது. நான் எப்படி உங்கள் கஷ்டத்தை வீணாக்கிவிட்டுத் தவத்திற்கு ஓடுவேன். இந்த மீன்கள் எப்படி உங்கள் சொத்தோ அப்படியேதான் நானும். எனக்குத் தகுந்த விலையைக்கொடுத்து யாரைக் கொண்டாவது என்னை மீட்கும்படி ஏற்பாடு செய்தால் நான் இங்குவிட்டு அசையக் கருதுவேன். போகலாம் தகுந்த ஆள்பார்க்க.' என் தவத்தை வீணாகக் கலைத்துக்கொண்டு இங்கு வீண்பொழுது போக்கவேண்டாம் என்று இவ்வாறு உறுதியாக ரிஷி உத்தரவளித்தார். "எங்களுக்குச் செம்படவத் தொழிலிலேயே இதனால் வெறுப்புண்டாக, ஒன்றும் மேல் ஓடாது, உங்களிடம் வந்தோம், மஹாராஜனே! எங்கள் கவலையைக் கிருபைகூர்ந்து தீர்த்தருள வேண்டும்" என்று தண்டனிட்டுக் கதறினர் செம்படவர்கள்.

இந்த வியப்பான கதை கூறப்பட்டு வருகையிலேயே ரிஷியைத் தர்சித்துக் கிருதார்த்தனாக வேண்டுமென்ற பரபரப்பு அரசனுக்கு உண்டாக, 'இது எப்பொழுது முடியப்போகிறது' என்று எதிர்பார்த்துக்கொண்டேயிருந்தான். முடிந்ததும், தமது புரோஹிதர்கள் முதலியோர், ரிஷி வழிபாட்டிற்குவேண்டிய பொருள்கள், இவர்களுடன் நகுஷ மஹாராஜன் செம்படவர்களால் வழிகாட்டப்பட்டு ப்ராயாகை முனையை நோக்கிப் புறப்பட்டான். போகும் வழியில், புரோஹிதரை நோக்கி 'உத்வாஸத்தின் தன்மையை எடுத்து விளக்க வேண்டும்' என்று கேட்டான். அதற்கு அவர் கூறலுற்றார்: 'வெகு நாளைக்கு முன்னர் இந்த ஸ்தலத்தில் ப்ருகு வம்சத்தில் பிறந்த ச்யவன ரிஷி இந்த உத்வாஸவிருதத்திற்கு ஸங்கல்பம் செய்துகொண்டு இறங்கிவிட்டதாகக் கேள்வி. அவராகத்தான் இவர் இருக்கவேண்டும். ஸத்ரம் முதலிய யாகங்கள்போல 12 வருஷத்திற்கு மேல்பட்டு நடக்கவேண்டிய விருதம் இது. இதில் முனைபவருக்குக் கர்வம், கோபம், ஸுகதுக்கம் முதலிய த்வந்த்வங்கள் மழுங்கிக்கொண்டே இருக்கவேண்டும். சிறந்த தபோவலிமையும் வேண்டும். இவையில்லாவிடில், கங்காயமுனா வேகங்களைச்சேருமிடத்து ஒரு பொருட்டாகவே மதியாது ஆச்ரமத்தில் இயற்கையாக அசையாதிருப்பதுபோல இருக்கவும் முடியாது. நீரில் வாழும்படியான தீங்கிழைக்கா மீன் முதலியவைகளுக்கு மிகுந்த ஹிதமான வஸ்துபோலவும், கொடியவையான முதலை முதலியவை கண்டு நடுங்கும் வஸ்து போலவும் இருக்கவும் முடியாது. இப்படியெல்லாம் இருக்கமுடிந்தால்தான் இந்த உத்வாஸம் ஸரிவரக் கைகூடும். தேகத்தின் தற்காலத் தன்மையைப்போல நீருள் தமது தபோவலிமையால் நிற்கவாவது, படுக்கவாவது, உட்காரவாவது செய்துகொண்டே தவத்தைத் தகுந்தபடி செய்யவேண்டும். இவ்வாறு செய்து தேறிவிட்டால், தேஹத்தைவிட்டு ஆத்மா தனியாகவிருப்பது என்னும் உணர்வு எளிதில் ஏற்பட இடமுண்டு. நாம் காணப்போவது ச்யவனராகத்தானிருக்கவேண்டும்' என்றார் புரோஹிதர்.

இதற்குள் ரிஷியின் ஸந்நிதானம் எல்லோரும் வந்து சேர்ந்துவிட்டனர். அந்த ச்யவன ரிஷிக்கு விதிப்படி உபசாரங்கள் செய்துவிட்டு, அவர் விருப்பம் இன்னது என்று உணர அவரை நகுஷன் நேரிட்டுக் கேட்டான் வணக்கத்துடன். அதற்கு ரிஷி 'மீன் பிடித்து உயிர் வாழ்வதையே தர்மமாகக்கொண்ட செம்படவர்கள் இன்றுபட்ட வருத்தத்திற்குக் கணக்கே இல்லை. மீனை விலைகொடுத்து வாங்குவதுபோல என்னையும் யாராவது தகுந்த விலை கொடுத்துத்தான் மீட்கவேண்டும், செம்படவர் முயற்சிக்கூலி நஷ்டம் வாராமலிருக்க' என்று கூறினார். அரசன் புரோஹிதரை நோக்க அவர் விலை விஷயத்தை ரிஷியையே கேட்டுவிடலாம் என்று குறிகாட்டினார். அரசன் ரிஷியை நோக்கி, 'உமக்குத் தகுந்த விலை இன்னது என்று நீரே கூறிவிட்டால் அதைக் கொடுத்து உம்மை மீட்க நான் தயார்' என்று ரிஷியை வணங்கினான் அரசன். 'எனக்கு விலை நானே கூறுவது என்பது முடியாத காரியம். வீண் தற்புகழ்ச்சிக்கு ஆளாக எனக்கு விருப்பமில்லை. நீ விலைகூறு. என் ஸம்மதம் அல்லது ஸம்மதமின்மை இவைகளை வேண்டுமானால் உனக்கு ஒளிக்காமல் கூறிவிடுகிறேன்' என்று கூறி ரிஷி வாயை மூடிக்கொண்டார். 'நூறாயிரம் பொன் கொடுத்துவிடுகிறேன்' என்றான் அரசன். 'எனக்கு மதிப்பு இவ்வளவுதான் ஒடுகிறதோ?' என்றார் ரிஷி. ரிஷியின் உத்தரவுப்படி மந்

திரிகளுடன் ஆலோசித்து, கோடி பொன் என்றான் அரசன். ரிஷி இசையாது ப்ராஹ்மணர்களுடன் சேர்ந்து மதிக்கச் சொன்னார். பாதி ராஜ்யம் அல்லது முழு ராஜ்யம் விலையாக இந்தத் தடவை மதிக்கப்பட்டது. இதற்கும் ரிஷி இணங்காது, ரிஷிகள் யாராவதிருந்தால் கேட்டுப் பார்க்கச் சொன்னார்.

நகுஷன், செம்படவர்களைப்போல, இன்னசெய்வதென்று விளங்காது விழித்து வருந்துகையில், அவர்களை நோக்கி கவயஜாதர் அல்லது கவிஜர் என்ற பசுவிடம் பிறந்தவர் என்று பொருள்படும் பெயருடன் கூடிய ரிஷி அணுகி வந்துகொண்டிருந்தார். அவரிடம் நகுஷன் விஷயங்களை எடுத்துக்கூற, கவயஜாதர் கூறுகிறார். 'திரிகரண சுத்தியாகத் தவம்செய்து ப்ராஹ்மண உடலெடுத்ததன் முழுப்பயனான, தவத்தின் முடிவைக்கண்ட ரிஷிகளுக்கு நிகரான விலை உலகில் ஒன்றைத் தவிர எதுவும் இல்லை. அதை உணர்ந்து நீ கொடுத்தால்தான் இந்த ருஷி திருப்தி பெறுவர். உன் குழப்பமும் நீங்கும். ப்ராஹ்மணர்களும் பசுக்களும்தான் இவ்வுலகில் மிகப் பரிசுத்தமானவை. இவ்விரு பொருள்களின் அபாயங்களை நீக்கி ஸுகப்படுத்தவே தான் பகவத் அவதாரங்கள்கூட உண்டாகின்றன. ப்ராஹ்மணனிடமிருந்த வைதிக கர்மாக்களுக்குரிய மந்திரங்களும், பசுக்களிடமிருந்து அவைகளில் உபயோகப்படும் நெய் முதலியபொருள்களும்உண்டாகின்றமையால் ஈசுவராராதனத்திற்கு இவ்விருவகைப் பொருள்களும் ஒரே மதிப்புடன் கூடியவைகள் தான். ஒரு பசுவைச் செம்படவர்களுக்குக் கொடுத்துவிட்டு ரிஷியை மீட்டுக்கொள்' என்றார் கவயஜாதர். உடனே அவன் அப்படியே செய்ய ச்யவனரும் இதற்கு இசைந்து தவத்திற்குப் புறப்படுவதாக எழுந்து அரசனை நோக்கிப் பசுக்களின் சிறப்பை எடுத்துப் பின்வருமாறு விளக்கினார் :—

'பசுக்களுக்கு நிகரான செல்வம் இவ்வுலகில் நான் கண்டதேயில்லை. அவைகளைப் போன்ற பரிசுத்த வஸ்துக்களும் உலகில் இல்லை. இவை லக்ஷ்மிக்கு ஆதாரமானவை. வைதிககர்மாக்கள் இவைகளையே பொறுத்துள்ளன. இவைகளைக் காத்துவந்தால் இவைகள் உலக விஷய ஸௌகரியங்களைக் கொடுப்பதோடுங்கூட மறுமையில் சிறந்த புண்ய பலனையும் கொடுக்கும். பசுக்களைத் தானம் செய்வதால் எல்லாப் பாபங்களும் நீங்கி நாம் சுத்தராகலாம். எவ்வூரில் பசுக் கூட்டங்கள் நிர்ப்பயமாக மூச்சுவிட்டுக்கொண்டு படுத்தல் உலாவுதல் முதலியவைகளைச் செய்யுமோ அவ்வூரின் சிறப்பு ஓங்கிக்கொண்டே வரும். மேல்லோக வாழ்க்கையையும் கொடுக்கத்தகுந்த ஆற்றல் பசுக்களுக்கு உண்டு. பசுக்களின் சிறப்பில் இவை மிகச் சிறு பாகம்தான். அவைகளின் ஏற்றத்தை முற்றிலும் எடுத்துரைக்க யாரால் முடியும்?' என்று கூறி முடித்தார் ச்யவனர்.

இவைகளையெல்லாம் கேட்டுவந்த செம்படவர்கள் தவத்திற்குப் புறப்படும் ச்யவனரை வணங்கி எழுந்து, 'ஐயனே எங்கள் மேல் கிருபை கூர்ந்து அனுக்ரஹிக்க வேண்டும். தாங்கள் அக்நிபோல ஜ்வலிக்கின்றீர். நாங்கள் இந்தப்பசுவை எங்கள் மேன்மையைக்கருதி உமக்குத் தானமாகக் கொடுக்கின்றோம். இதை மறுக்காது ஏற்றுக்கொள்ளும்; நாங்கள் பாவங்கள்நீங்கி பரிசுத்தராகவேண்டும் என்று உம்மையே அடைக்கலமாக வந்து அடைந்துள்ளோம்' என்று மன்றாடினார்கள். அதற்கு ரிஷி 'அப்பா செம்படவர்களே நீங்கள் ப்ராஹ்மணர்கள் பெருமையையும் பசுக்களின் சிறப்பையும் நன்குணர்ந்து செய்த இந்தக் கோதானத்தை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். என்னுடன் வெகுநாளாக உறவுடன் வாழ்ந்து வந்த மச்சங்களும் நீங்களும் இப்பொழுதே ஸ்வர்க்கம் புகுந்து நற்கதி பெறுவீர்களாக' என்று அநுக்ரஹித்தார். இவைகளைக்கண்டு வியந்து நின்ற நகுஷமஹாராஜனை நோக்கி இரண்டு ரிஷிகளும் வரம் அளிப்பதாகக் கூறினர். 'என்மனம் தர்மவழியை விட்டு விலகாமலே இருக்கவேண்டும்' என்று கேட்டுக்கொண்டான் அரசன். 'அப்படியே உனக்கு ஏற்படட்டும்' என்று ச்யவனர் தவதீக்ஷையை முடித்துக்கொண்டு தமது ஆச்ரமத்திற்கும், கவிஜர் தமது ஆச்ரமத்திற்கும் போகத்தலைப்பட்டனர். நகுஷன் மிகுந்த மனக்கிளர்ச்சியுடன் தனது ராஜ்யத்தில் முன்போலவே ஊக்கத்துடன் தனது தர்மத்தை ஸரிவர நடத்திக்கொண்டுவந்தான்.



# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### தமயந்தி : (6) மீட்சி

பொய்கையும் வாசப் பொழிலு மெழிலருவிச்
செய்குன்று மாறுந் திரிந்தாடித்—தையலுடன்
ஆறிரண்டாண் டெல்லை கழித்தான் அடையலரைக்
கூறிரண்டாக் கொல்யானைக் கோ.

மாலையிட்ட தமயந்தி நளன் காலில் வீழ்ந்து நமஸ்கரித்தாள். அவன் பாதத்தில் தனது உடல் பதிந்ததும், அவள் தனக்குந் தெரியாது உள்ளங்களித்தாள் ; பெறுத பேற்றைப் பெற்றவர் போலப் பிரமித்து நின்றாள் ; செய்வதின்னவெனத் தெரியாது தயங்கினாள் ; நெடுநாள் தவங்கொண்டு கண்ட காதற்பலத்தைக் கண்டு களித்தாள் ; பொது நோக்கு நோக்கி நளனது உருவைச் சற்றே கண்ணுற்காணக் கருதித் தனது காதோடு வாதிட்டு வளர்ந்த புருவங்கள் நடிக்க, அவனது அங்க லக்ஷண முழுவதையும் பருகினாள்; தான் நினைத்த காரிய முடிந்து நினைவை எண்ணி எண்ணி இன்பமடைவள் ;—அப்பொழுதவள் ஒரு இராஜஸபையிலிருப்பதாக எண்ணவே இல்லை. நளனும் காணாத பொருளைக் கண்டெடுத்தவன்போல, தமயந்தியின் முக விலாஸத்தை ஆசையுடன் கண்ணுற்றான். இரண்டு கண்களும் ஒன்றை மற்றொன்று ஸந்தித்தன ; ஸூர்யனெழும்ப மண்ணும் விண்ணும் ஒரே ஒளி வீசுவதுபோல அவரிருவர் மனத்தும் ஒரே எழுச்சி நிறைந்தது; அது அளவுக் கடங்காது விம்மி விம்மி விளங்கியது. மாலையிட்டுத் தன் மனத்தில் மாலையிட்ட தமயந்தியைக் கரத்தாற்பற்றி, உளம் பூரித்து, அவன் உவகை கொண்டான் ; சிந்தைமயங்கியவளை நோக்கிய வண்ணமாகவே எழுந்தான் ; அவள் கால் நூபுரங்கள் பாடுமினிய கீதத்திற்கிசைய அலகிடுவான்போல அடிவைத்து நடந்தான்.

மத்தகஜம்போல வரும் நளனது உத்தம உருவில், மின்னற்கொடி பூத்த மெல்லிய திருவென்னவந்த தமயந்தியின் வடிவ மயங்கி, இருமதியம் ஒருமிக்க எழும்பக் கண்டதென பீஷ்ம மஹாராஜன் வியப்புற்று, ஸந்தோஷக் கடலிற் குளித்தான். பின் நல்ல முகூர்த்தம் பார்த்து நளனுக்கும் தமயந்திக்கும் விதிவழிக் கலியாணஞ் செய்விக்க எண்ணங் கொண்டான். நல்ல சுபமுகூர்த்தத்தில் அவ்வரசன் பல விப்ரமணிகள் வேத[illegible]சைக்கவும், மங்கள மாதர் ஜயசோபனம் பாடவும், பதினெட்டு வித வாத்தியங்கள் பல்லிய முழங்கவும், தனது மகளையும் மருமகனையும் கல்யாண மண்டபத்திற்கு அழைத்துவந்தான் ; நளனிடம் தனது பெண்ணைத் தானஞ் செய்துகொடுக்க நல்லெண்ணங்கொண்டு,

"கமல மீதுசெங் காந்தள் அலர்ந்தெனக்
குமரன் அங்கையிற் கோல்வளை செங்கைவைத்
திமய மாதும் இறைவனும் போலவாழ்ந்
தமைதி ரென்ன அரும்புனல் நல்கினான்."

வீமராஜன் தனது மகளை நளனது கையில் அவள் கையை வைத்து நீர்விட்டுத் தாரை வார்த்து "இவள் இனி உன் பொருள்; உனது தருமத்திற்கு உரியவள்; இவளை நீ பெற்று இருகுலமும் புகழ் பெருக வாழ்க!" என்று கூறிக்கொடுத்தான் ; நளனும் தமயந்தியின் கரங்களைப்பற்றி மனைவியாக வரித்தான். பின் அக்கினி வலம் வந்து, பொரியிறைத்து, தமயந்தியின் பாதங்களைத் தன் கரத்தாற்பற்றி அம்மி மிதிக்கச்செய்து, தான் துருவனைக் கண்டு, அவளுக்கு அருந்ததி காட்டினான். உட்பொருளை முற்று முணர்ந்த தமயந்தி, தனது நாதனது எண்ணத்தை வெளியிடுபவள்போலத் தனது முகமண்டலத்தில் இளநகை தந்தாள். அவனும் அவளுள்ள முணர்ந்தவன்போலப் புன்சிரிப்புக்கொண்டான்.

மணமாயிற்று ; நளனும் தமயந்தியும் மணியும் ஒளியுமென்ன இணைபிரியாது, அநேக நாளாகத் தாம் காண விரும்பிய எண்ணங்களில் ஆழ்ந்து கிடந்தனர். நளனும் தனது மாமனாரது விருப்பத்தை முன்னிட்டுச் சிறிது காலம் அக்குண்டினபுரத்திலேயே இருந்தான். அக்கால் அவன் இளமையின் பயனைத் தமயந்தியிடம் பெற்று மனந்திகழ்ந்து விளங்க, காதலிருவரும் கருத்தொருமித்து இருந்தனர். சிறுநாள் தாம் ஒருவரை ஒருவர் காண விரும்பிச் செய்த காரியங்களை எண்ணி எண்ணி மனமயங்குவர் ; அதுவுஞ் செயலோ என நகைப்பர் ; கனவாக அவை விளங்க நினைத்து நினைத்து மேலும் நகைப்பர். மற்று,

ஒருவ ருடலி லொருவ ரொதுங்கி
யிருவ ரெனுந்தோற்ற மின்றிப்—பொருவெங்
கனற்கேயும் வேலானுங் காரிகையுஞ் சேர்ந்தார்
புனற்கேபுனற்கலந்தாற் போன்று.

னமினத்தோடு சேர்வது போலுமவர் சிறிது காலம் அவ்வூர் இருந்ததும் நளன் தன் மனைவியை நோக்கி, "இனி நமது ஊர் அடைவதே பெருமை; மற்றிடத்திருப்பது மதிப்புத் தராது. உனது எண்ணம் எப்படி?" என்றான். "உமது திருவுள்ளமெதுவோ அதுவே எனது; அதை எனது வாயாற் பெறுவதற்குக் கேட்டீர் போலும்!" என்றவள் பதிலுரைத்தாள். நளனும் தனது புரமாகிய மாவிந்த நகரமடைய எண்ணங்கொண்டான். ஏவலாள்கள் மூலமாக வீமராஜனுக்கதைத் தெரிவிக்க, அவர் தமது பெருமைக்குத் தக்க விதம் மரியாதையுடன் அவனுக்கு விடைகொடுத்தனர். தமயந்தியும் தனது தாய்தந்தையரிடம் விடைபெற்றுக் கணவனை அடைந்து வணங்கி நின்றாள்.

இதற்குள் வீமராசன் பல மரியாதையுடன் தனது மருகனையும் மகளையும் அநேக வரிசைகளுடன் மணித்தேரிலேற்றி, பல சேனைகள் புடை சூழ அனுப்பிக்கொடுத்தான். தமயந்தியும் தன் கண்களில் வெளிவந்த நீர்த்துளிகளைத் துடைத்துவிட்டுக் கணவனது தேரில் ஏறினாள். நளன் குதிரைகளின் கயிற்றைத் தொட்டதும் கடலலைபோலச்சேனைகள்நடக்க ஆரம்பித்தன. நளனும் தன் காதல் மனைவியைத் தழுவியணைந்து வழியிலிருந்த காட்சி முழுதையுங் காட்டிவந்தான்.

வரும் வழிகளில் நல்ல நீர்த்துறைகளில் ஆடி விளையாடினர். மலைக்குகைகளிலும் தங்கி இயற்கை யழகிலீடுபட்டிருந்தனர்; மற்றும் பலவிதமான ஸுகமுண்டு களித்தவர் கங்கைநீர்க் கரையை அடைந்தனர்; அங்கு தங்கி அவர் நீர் விளையாடல் புரிந்து மனங் களித்தனர். சில நாளானதும் தமது நாட்டை அடைந்தனர். அப்போதவரிடம் அன்புகொண்ட ஜனங்கள் நெடுந்தூரம் எதிர் வந்தழைத்தனர். அக்கால்,

பொருவருங் கங்கைநீர் நிறைத்துப் பூசார்
எரிமணிப் பொற்றசும் பேந்தி முன்வர
விரைகமழ் செழுந்தொடை வீமன் மாதொடும்
திருவளர் கோயிலிற் செல்வன் எய்தினான்.

அரசனுடைய வரவையுணர்ந்த ஊர் ஜனங்கள் கூட்டங் கூட்டமாகக் கூடிவந்து ராஜதம்பதிகளைக் கண்ணுறக் கண்டுகளித்து 'என்றைக்குமவர் இப்படியே இருக்க! ஈசனதற்கு அருள் தருவாராக!' என உறத்து வாழ்த்தினர். தேவதுந்துபி முழங்க, பலவித வாத்திய கோஷங்கள் சப்திக்க, நல்ல சுப ஸூசகமுடன் அரசனும் அரசியும் தமது கோயிலில் எழுந்தருளினர். ஊர் முழுதும் அன்று திருவிழா கொண்டாடியது. அரசனும் தனது பொக்கிஷச் சாலையைத் திறந்து ஜனங்களை, தமக்குள் வேண்டா மட்டும் நிதியைக் கொள்ளும்படி உத்தரவிட்டான். வரிகள் பலவற்றைச் சில வருஷங்கள் வரை வஸூல் செய்யாமலிருக்கும்படி தனது மந்திரிக்குக் கட்டளையிட்டான், மற்றும் ஜனங்களிடம் தான் கொண்ட அன்பைக் காட்டும்படியான பல செயல்களும் செய்தான்.

இவ்வாறு ஏற்பாடுகள் செய்ததும் அரசன் பல நாள் தனதரசியிடம் போகந்துய்த்துக் கிடந்தான்; ஆயினும், இராஜ்ய நிர்வாஹத்தில் சிறிதும் குறைவரா வண்ணமும் கவனித்து வந்தான்; ஸூர்யனைப்போல அவர்க்கு இதஞ்செய்து இரக்ஷித்து விளங்கினான். சில காலமானதும் தனது புகழைப் பரப்ப எண்ணங்கொண்டு பெரும் அச்வமேத யாகமொன்று செய்தான். மற்றும் பல சிறப்பான யாகங்களும் செய்வித்தான். செல்வமுற்றுமிருந்தாலும் ஸந்தான ஸம்பத்தில்லாமல் மனமலைவார் எத்தனை யுண்டு?

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும் மற்
றென்னுடைய ரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்.

சொன்ன கலையின் துறையனைத்துந் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தாம் இன்முகத்து—முன்னங்
குறுகுதலைக் கிண்கிணிக்கால் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி"

என மனமழியுங் குறை எத்தனைச் செல்வர் சொல்லமுடியாமல் உள்ளத்தேயே வைத்து மனங் குமுறுகின்றனர்? நளனுக்கு அக்குறையுஞ் சிறிது மில்லை. கடவுள் கிருபை அவனிடம் பரிபூர்ணமாக இருந்தது. அவனுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் பிறந்தன. மகன் பெயர் இந்திரசேனன்; பெண் பெயர் இந்திரசேனை. இவ்விருவரும் தமயந்திக்கும் நளனுக்கும் இரண்டு கண்களாக இருந்தனர்.

ஆகவே நளன் ஒருவிதக் குறையுமில்லாம